வெளியேற்றம்

யுவன் சந்திரசேகர்

வெளியேற்றம்

யுவன் சந்திரசேகர்

ஆசிரியரின் பிற நூல்கள்

நாவல்

- குள்ளச்சித்தன் சரித்திரம் (2002)
- பகடையாட்டம் (2004)
- கானல் நதி (2006)
- வெளியேற்றம் (2009)
- பயணக்கதை (2011)
- நினைவுதிர் காலம் (2013)

சிறுகதை

- ஒளிவிலகல் (2001)
- ஏற்கனவே (2003)
- கடல் கொண்ட நிலம் (2009)
- நீர்ப்பறவைகளின் தியானம் (2009)
- ஏமாறும் கலை (2012)

குறுங்கதை

- மணற்கேணி (2008)

கவிதை

- ஒற்றை உலகம் (1996)
- வேறொரு காலம் (1999)
- புகைச்சுவருக்கு அப்பால் (2002)
- கைமறதியாய் வைத்த நாள் (2005)
- தோற்றப் பிழை (2009)

(முதல் இரண்டு தொகுப்புகளும் ‘முதல் 74 கவிதைகள்’ என ஒரே நூலாக 2005 இல் வெளிவந்துள்ளன.)

மொழிபெயர்ப்பு

- பெயரற்ற யாத்ரீகள்ஜென் கவிதைகள் (2003)
- ஜிம் கார்பெட் : ‘எனது இந்தியா’ (2005)
- குதிரை வேட்டை நார்வீஜிய நாவல் (2013)

சமர்ப்பணம்

இந்த நாவலின் நிஜமான நாயகருக்கு

உள்ளே

ஊற்று
வாசல் தெளிப்பதற்காக
26.01.2006 - வியாழக்கிழமை - மாலை 6.30 மணி
புனல்
ஜனவரி, 1952
பிப்ரவரி, 1950
ஆகஸ்ட், 1960
ஏப்ரல், 1964
டிசம்பர், 1968
ஜூலை, 1972
ஏப்ரல், 1976
ஆகஸ்ட், 1980
மார்ச், 1984
மார்ச், 1989
ஜூலை, 1987
இடைமுகம்
27.1.2006 - வெள்ளிக்கிழமை - காலை 5.30 மணி
யாத்திரை
தங்கம்
ஹரிஹர சுப்ரமணியம்
மன்னாதி

சிவராமன்

ராமலிங்கம்

பால்பாண்டி

குற்றாலிங்கம்

வைரவன்

கோவர்த்தனம்

ஜய்ராம்

சங்கமம்

வாசல்

11.02.2006 - சனிக்கிழமை - காலை 6.30 மணி

பின்னுரை

இறுதிக் குறிப்புகள்

ஊற்று

...அது சரி, வயிற்றின் பரிமாணம் இது என்றால், கால் விரல்கள் எந்த ஊரில் இருக்கும். கூந்தல் நீண்டு கிடப்பது எங்கே?...

வாசல் தெளிப்பதற்காக

வாசல் தெளிப்பதற்காக எழுந்து வந்தாள் சித்ரா. முந்தைய இரவில் தூறல் விழுந்திருக்க வேண்டும். தரை ஏற்கெனவே ஈரமாக இருந்தது. கொட்டாங்கச்சியில் வைத்திருந்த கோலப்பொடியால் நாலாதிசையிலும் இரட்டைக்கோடுகளைக் கடனேயென்று இழுத்தபிறகு உருவான சிறு கட்டத்தில் கோலத்தின் சாயல் இருந்தது.

எதையுமே மனமொன்றிச் செய்யப் பிடிக்காத நாட்கள் இவை. வருடக்கணக்காக ஒரே விதமாய்க் கழியும் வாழ்க்கையின்மீது ஒருவிதமான சலிப்பு ஊறியிருக்கிறது... நாற்பது வயதைக் கடக்கும்போது பெண்கள் சந்திக்க நேரும் உடல் உளைச்சலின் பகுதிதான் இந்த மன உளைச்சலும் என்று பத்மாவதி டாக்டர் சொல்கிறாள். ஆனால், ஆண்களுக்குமே இந்தப் பிரச்னை இருக்கத்தான் செய்யுமோ என்னவோ. இவரும் இதே சலிப்பைப்பற்றித்தான் அடிக்கடி புகார் சொல்கிறார் இப்போதெல்லாம்...

ஆயிற்று, இந்த மனிதர் வரும் நேரமாகிவிட்டது. விடிவதற்குள் வந்துவிடுவேன் என்று சொல்லிப் போயிருக்கிறாரே. புது டிக்காச்ஷன் போட்டுவைக்க வேண்டும். 'கோவில் ஊர் என்றால் வரமாட்டோம்' என்று வழக்கம்போலக் குழந்தைகள் உறுதியாக மறுத்துவிட்டார்கள். இல்லாவிட்டால் எல்லாருமாகப் போயிருக்கலாம். இருக்கட்டும், ஒருதடவையாவது திருவண்ணாமலைக் கோயிலுக்குப் போகத்தான் வேண்டும்...

இவள் கோலம் போட்டு முடியும்வரை பொறுமையாக உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்தது அந்தக் கறுப்புப் பூனை. தெருவுக்குள் புதிதாக வந்திருக்கிறதுபோல. வேளைகெட்ட வேளைகளில் தட்டுப்படுகிறது. சமையலறை ஜன்னல்களை மிக ஜாக்கிரதையாக அடைத்துவிட்டுத்தான் அலுவலகம் செல்லவேண்டி வருகிறது. ஜன்னல் கம்பிகளின் இடைவெளியில் ஒரு பூனை நுழைந்து வருவதற்கு தாராளமாக இடம் இருக்கிறது... ஆனாலும், இந்தப் பூனையைச் சாயங்காலம் இருட்டிய பிறகு பார்க்கும்போது உண்டாகும் பயம், பகல்

பொழுதில் பார்க்கும்போது இருப்பதில்லை...

கோலத்தை முடித்து வீட்டுக்குள் நுழையத் திரும்பினாள். இவ்வளவு நேரமும் சும்மா உட்கார்ந்திருந்த பூனை, கர்ம சிரத்தையாக இவளுக்கும் வாசல்படிக்கும் இடையில் புகுந்து ஓடியது. பதறிப்போனாள் சித்ரா. வாசல் படியில் தடுக்கி விழத் தெரிந்தவள், சுதாரித்துக்கொண்டாள்.

கொட்டாங்கச்சி நிறைய இருந்த கோலப்பொடிதான் முழுசாகக் கொட்டிச் சிதறிவிட்டது.

'அட சனியனே' என்று கறுவியவாறு, பூனை போன திக்கில் வெறித்துப் பார்த்தாள். கொஞ்சதூரம் ஓடிவிட்டிருந்த அது தானும் நின்று இவளைத் திரும்பிப் பார்த்தது.

இவள் அலுவலகம் கிளம்பும்வரை சந்தானம் வரவில்லை. சாயங்காலம் வீடு திரும்பியபோதும் வந்திருக்கவில்லை. தெருவில் அடர்ந்திருந்த இருட்டை குழம்பிய மனத்துடன் வெறித்துக்கொண்டு வாசல்படியில் உட்கார்ந்திருந்தபோது, சித்ராவின் மனம் முழுக்க அந்தக் கறுப்புப்பூனை நிரம்பியது. காலையில் நின்று திரும்பிப்பார்த்த இடத்தில் இப்போதும் அது நிற்கிற மாதிரி பிரமை.

ஆனால், பிறகு எப்போதுமே அந்தப் பூனை தட்டுப்படவில்லை.

✠

26.01.2006 - வியாழக்கிழமை - மாலை 6.30 மணி

சா யங்காலம் முற்றி இரவாக உருமாறிக்கொண்டிருந்த வேளை. பயண அலுப்புத் தீரக் குளித்துவிட்டு விடுதியின் பால்கனியில் வந்து நின்றபோது கோயில் கோபுரமும், அதற்குப் பின்புலமாக ஓங்கிய மலையும் தெரிந்தன. இருள் போர்த்திய மலையின் உடம்புக்குள் ஏகப்பட்ட ரகசியங்கள் பொதிந்து கிடக்கின்றன என்று ஒரு கணம் தோன்றியது. மறுகணம், பிறப்பின் ரகசியத்தை வயிற்றுக்குள் பொதிந்து மல்லாந்து படுத்திருக்கும் நிறைகர்ப்பிணிபோலத் தென்பட்டது மலை. அது சரி, வயிற்றின் பரிமாணம் இது என்றால், கால் விரல்கள் எந்த ஊரில் இருக்கும். கூந்தல் நீண்டு கிடப்பது எங்கே?

சமீப காலமாகவே இப்படித்தான். பார்க்கிற கேட்கிற எல்லாவற்றிலும் ஏதோ மறைபொருளைத் தேடி மனம் சதா அல்லாடுகிறது. குறிப்பாக, போன வியாழக்கிழமை காலையிலிருந்து இந்த அல்லாட்டம் பல மடங்கு அதிகரித்துவிட்டது. அன்று என்னுடைய பிறந்த நாள். நாற்பத்தொன்பது முடிந்து ஐம்பதில் அடியெடுத்து வைத்தேன்.

ஈரமான முத்தம் நெற்றியில் பதியும் உணர்வு தட்டியதால்தான் கண்விழித்தேன். என் முகத்தோடு ஒருமுறை முகத்தைப் பதித்துவிட்டு விலகிக்கொண்டாள் சித்ரா. கட்டிலிலிருந்து காலைக் கீழே வைக்கிறேன், குதிகாலை ஊன்ற முடியாமல் சுரீர் என்று வலித்தது. சித்ராவிடம் சொன்னேன்.

குறும்பாகச் சிரித்தாள் அவள். ‘அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம், வயது முற்றும்போது, சம்போகத்தின் பின்விளைவுகள் முன்பு மாதிரி இன்பமான ஞாபகமாக மட்டும் மீந்து நிற்பதில்லை, உடம்பில் அயர்ச்சியாகவும் தங்குவது சகஜம்தான். முந்தைய இரவின் காரணமாக காலை நேரங்களில் அசதி உண்டாவது சில வருடங்களாகவே நடந்து வருகிற விஷயம்தான், அதிலும் மிக இளம் வயதிலேயே திருமணம் முடித்து நீண்டகால உடலுறவுச் சரித்திரம்கொண்ட உடம்பு என்பதால் இதில் ஆச்சரியப்படுவதற்கும் குறும்பாகச் சிரிப்பதற்குமேகூட எதுவும் இல்லை. ஆனாலும் இந்தக் குதிகால் வலி புதிதாக இருக்கிறது’ என்று

நீண்ட விளக்கத்தைப் படுக்கையிலிருந்து எழாமலே அவளுக்கு அளித்தேன்.

நீண்ட விளக்கங்களுமேகூட முதுமை தொடங்குவதன் அறிகுறியாக இருக்கலாம் இல்லையா?

அவள் முகம் மாறிவிட்டது. ஒருவிதமான தீவிரமும் தொடர்ந்து மிரட்சியும் தொற்றியேறின. எதிலிருந்தோ விடுபட முனையும் அவசரத்துடன் அறையைவிட்டு அகன்றாள். நிலைவாசலில் நின்று திரும்பிப் பார்த்து, சீக்கிரமாகக் குளித்துவிட்டுப் புதிய உடையை அணிந்துகொள்ளும்படி விநயமாகச் சொன்னாள். கோயிலுக்குப் போய்விட்டு வந்துதான் அவள் அலுவலகம் செல்ல வேண்டும்.

இம்மையில் நன்மைதருவார் கோயிலுக்குச் சென்று திரும்பும் வழியில், உடனடியாக குடும்ப டாக்டரிடம் உடம்பைக் காட்டிவிட வேண்டும் என்று என் காதருகில் உரத்துச் சொன்னாள். என் தோளைப் பிடித்திருந்த அவளது கை அழுந்துவதை உணர்ந்தேன். சர்க்கரைவியாதி ரத்த அழுத்தம் இருதயச் செயல்பாடு எல்லாவற்றையும் பரிசோதித்துவிட வேண்டுமாம். நாற்பது வயது முடிந்தவுடனே செய்திருக்க வேண்டியது, புத்தியில்லாமல் தள்ளிப் போட்டுவிட்டோம். கோளாறு ஒன்றும் இருக்காதுதான். இருந்தாலும் அதை ஒரு டாக்டர் வாயால் தெரிந்துகொள்வது உசிதம்தானே. எனக்கு மட்டுமில்லை, அவளுக்குமே பரிசோதனைகளைச் செய்து பார்த்துவிட வேண்டியதுதான். என்னைவிட மூன்று வயதுதானே குறைவு அவளுக்கு.

எந்த நிமிடமும் வண்டியை ஓரங்கட்டிவிட்டு அவளைத் திட்ட ஆரம்பித்துவிடுவேன் என்ற பயத்தில் படபடவென்றும் மிகுந்த முன்ஜாக்கிரதையுள்ள வாக்கியங்களாலும் அவள் பேசுவதைக் கேட்டபோது ஒரு கணம் அவள்மீது பச்சாதாபம் ஊறியது. கிட்டத்தட்ட இருபத்திச் சொச்சம் வருடங்களாகச் சேர்ந்து குடித்தனம் நடத்தியும் முன்கணிக்க முடியாத சுபாவம் கொண்ட கணவனுடன் பேசுவது சங்கடமான விஷயம்தானே.

ஒருவிதமான சுயவெறுப்பு ஊறியது. தனியாக இருக்கும்போது விவேகமான சிந்தனைகளுடனும், எதிரில் யாராவது இருந்துவிடும் பட்சத்தில் கனத்த சுய அபிமானத்துடனும் இருக்கும் என்னை நினைத்தால் எனக்கே அவமானமாகத்தான் இருக்கிறது. என்ன செய்ய?

அறைக்குள் திரும்பி கட்டிலில் அமர்ந்தேன். சித்ராவின் முகம் நிழலுருபோலக் கண்முன் தோன்றியது. மானசீகமாக ஒரு முத்தம்

கொடுத்தேன். உடம்பு தன்னிச்சையாகப் படுத்துக்கொண்டது. பயண அலுப்பு முழுக்கத் தீரவில்லை போலிருக்கிறது. கட்டிலில் விரித்த மெத்தை இதமாக இருந்தது.

விஸ்வநாதனின் பெண்ணுக்கு நாளைக் காலையில் திருமணம். இரவு நிம்மதியாகத் தங்கிவிட்டு, காலையில் முகூர்த்தம் முடிந்தபின், கோயிலுக்குச் சென்று தரிசனம் முடித்துவிட்டு, மதுரைக்கு பஸ்ஸேறுவதாகத் திட்டம். மதுரைக்குத் திரும்பியவுடன் வேறு ஆளாக இருக்கப்போகிறேன். பதட்டமும் முன்கோபமும் இல்லாத, மனைவியிடமும் குழந்தைகளிடமும் பாசத்தை மட்டுமே பொழிகிற, தொழில்ரீதியான அலைச்சலை அவமானமாக வரித்துக்கொள்ளாத, புதிய மனிதனாக.

அதுசரி, இப்போதுவரை தொடர்ந்து வந்திருக்கும் மனோபாவத்தின் விதை எப்போது விழுந்தது எனக்குள்?

...என்னைப் பற்றி சொல்லிக்கொள்வதற்கு அதிகம் இல்லை. சாதாரணமான மத்தியதரக் குடும்பத்தின் மூன்றாவது மற்றும் கடைசிக் குழந்தை. சோழவந்தானுக்கருகில் உள்ள இரும்பாடி கிராமத்தில்தான் பிறப்பு வளர்ப்பு எல்லாம். என்னுடைய பதினாலாவது வயதில் இறந்துபோன அப்பா, இரண்டு நல்ல காரியம் செய்திருந்தார். ஒன்று எனக்கு மூத்தவர்களாகப் பிறந்த சகோதரிகள் இருவரின் திருமணத்தையும் நடத்தி முடித்திருந்தார். இரண்டாவது, ஒன்றேகால் ஏக்கர் நஞ்சை நிலத்தை விட்டுச் சென்றிருந்தார். குத்தகைக்காரரான எலியன் என்ற முத்துத்தேவர் நாணயமானவர். அதனால் சாப்பாட்டுக்கு கவலையில்லை.

பள்ளியிறுதி முடித்த பிறகு, கல்லூரியில் சேர்க்க வசதியில்லாத குடும்பம். வாடிப்பட்டிப் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்தேன். நிரந்தர வேலை இல்லை அது. நிரந்தர ஊழியர்கள் நீண்டகால விடுப்பில் செல்லும்போது அவர்களுடைய இடத்தை நிரப்புவதற்கான தற்காலிக வேலை.

பெண் ஊழியர்கள், அதிலும் இளவயதுப் பெண்கள் அதிகம் பணிபுரிந்த அலுவலகம் என்பதால் பெரும்பாலும் வருடம் முழுவதும் வேலை கிடைக்கும். ஒருதடவை,

நம்ம சந்தானம்தான் நம்ம ஆஃபீஸ்லெ உள்ளவங்களுக்குப் புத்திர சந்தானம் பெருகக் காரணம்...

என்று டீக்கடையில் வைத்துச் சொல்லிவிட்டு, மற்றவர்கள் வெடித்துச்

சிரித்தவுடன்,

அட, நான் அந்த அர்த்தத்திலே சொல்லலேய்யா. இவன் வேலை தொடரணும்னு மனப்பூர்வமாக பகவான்கிட்டெ வேண்டிக்கிறானால்லியா... அதுனாலேங்குறேன்.

என்று விஷமமாகச் சிரித்தார் அனந்தசயனம். மறுமாதம் தோட்டக் கிணற்றில் நீச்சலடிக்கும்போது காக்கைவலிப்பு வந்து இறந்துபோனார்.

அவருடைய மனைவிக்கு இழப்பீடும், கணவர் பணிபுரிந்த அலுவலகத்தில் கருணை அடிப்படையில் வேலையும் கிடைப்பதற்கு ஏழெட்டு மாதங்கள் பிடித்தது. ஏகப்பட்ட கோப்புகள் இங்குமங்கும் போய்வந்தன. அதுவரை எனக்கும் வேலை நீட்டிப்பு கிடைத்தது. நிறைமாதக் கர்ப்பிணியாக மூச்சிரைத்துக்கொண்டு அழுதழுது சிவந்த கண்களும் பிரக்ஞையின்றி ஒழுக்கிய மூக்குமாக அந்த அம்மாள் பணியில் வந்து சேர்ந்தார். பதினைந்தே நாளில் பேறுகால விடுப்பில் போனார். மேலும் ஆறுமாதம் நீட்டிப்பு. மாதவன் சார் மனம் புழுங்கிச் சொன்னார்:

அந்தப் பாவிக்குக் கரிநாக்குய்யா. எந்த நேரத்திலே நம்ம சந்தானத்தைப் பத்தி கமெண்ட் அடிச்சானோ. இப்பொப் பாரு, அவன் பொண்டாட்டிக்கும் இந்தப் பயதான் சப்ஸ்ட்டூட்டா வந்திருக்கான்.

முத்துவேல் உடனடியாகப் பதிலளித்தார்:

பெரியவங்க சும்மாவா சொல்லி வச்சிருக்காங்க, 'ஒரு சொல் மெல்லும் ஒரு சொல் கொல்லும்'னு.

அன்றிரவு, வீட்டின் முன்னாலிருந்த நெல்லடிக்கும் சிமென்ட்டுக் களத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது என் அம்மாவும் முத்துவேலின் கருத்தை ஆமோதித்தாள். ஆகாயத்தில் அஸ்து தேவதை சதா பறந்துகொண்டிருக்குமாம். நாம் பேசுகிற ஒவ்வொரு வார்த்தைக்கும் அது 'அஸ்து' கொட்டுமாம். அதாவது, 'அப்படியே ஆகுக' என்று அர்த்தம்.

ஆக, நாம் பேசும் ஒவ்வொரு கணத்தையும் யாரோ உற்றுக் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள், தாம் முடிவு செய்தபடி ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் நீதி வழங்கவும் செய்கிறார்கள் என்றல்லவா ஆகிறது? சாதாரணமாக, பேசும் வார்த்தைகள் எல்லாவற்றையும் கண்காணித்துக்கொண்டே பேசுவது, கூடுமானவரை நல்ல வார்த்தைகளாகத் தேர்ந்தெடுத்துப் பேசுவது, முடிந்தவரை குறைவாகப் பேசுவது என்றெல்லாம் நான் பிரயாசைப்பட்டுப் பழகியதற்கு அந்த

நாள் ஒரு முக்கியமான காரணம் என்று அடிக்கடி தோன்றும் எனக்கு.

இப்படிப்பட்ட ஒருத்தனுக்கு அமைந்த உத்தியோகம் சதா பேசிக்கொண்டே இருப்பதாக அமைந்துவிட்டது எப்படிப்பட்ட வேடிக்கை, பாருங்கள். ஆனால், மேற்சொன்ன சங்கற்பங்கள் காரணமாக என் தொழிலில் நான் வெகுவேகமாக வளர்ந்து வந்தேன்.

மதுரையில் கிருஷ்ணாபுரம் காலனி தாண்டி புதிதாக வளர்ந்துவரும் கலை நகரில் சொந்தமாக ஒரு வீடு. பன்னிரண்டாம் வகுப்புப் படிக்கும் ஒரு பெண்ணும் எட்டாம் வகுப்புப் படிக்கும் ஒரு பையனுமாகக் குழந்தைகள். சீக்கிரமே கல்யாணம் ஆகியும் குழந்தைகள் வெகு தாமதமாகப் பிறந்தன என்பதைத் தவிர வேறு மனக்குறை கிடையாது. மணிமணியான குழந்தைகள் இரண்டும். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் எழுத்தராகப் பணிபுரியும் மனைவி. எவ்வளவு பணமுடை இருந்தாலும் லஞ்சம் வாங்காத சீலம் உள்ளவள். என் தாயாருக்குப் பிறகு, தாய்மையின் கரிசனத்தையும் வாஞ்சையின் வெதுவெதுப்பையும் தாராளமாக வழங்கி வருபவள்.

அவசரத் தேவைகளுக்கென்று வங்கிக் கணக்கில் இருபதாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் சேமிப்புத் தொகை. வாரத்தில் ஒருநாள் மீனாட்சியம்மன் கோயில். இரும்பாடி கிராமத்தில் நகர்ந்த வாழ்வைவிட எவ்வளவோ சௌகரியமாகத்தான் இருக்கிறது நடைமுறை. ஆனால், அங்கே இருந்த நிதானம் இல்லை. எந்நேரமும் பரபரப்பு. நாளின் ஒவ்வொரு கணமும் மின்னல் கீற்றுப்போல மின்னி விரைவது சற்றுத் தொந்தரவாகத்தான் இருக்கிறது. ஆனால், எதையுமே இழக்காமல் எல்லாவற்றையும் பெற விரும்புவதும் நியாயமில்லை அல்லவா?

தொழிலுக்கே உரித்தான தந்திரோபாயங்கள் தவிர, மனத்தாலும் சொல்லாலும் செயலாலும் யாருக்கும் தீங்கு இழைக்காமலேதான் இப்போதைய இடத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறேன். ஆனாலும், வாழ்நாள் முழுக்க அடக்கி வைத்த அவமானம் ஆத்திரம் வசவு வார்த்தைகளெல்லாம் என் மனைவியிடம் மட்டும் வெடித்துப் பாயும். தப்புதான், தெரிகிறது, என்றாலும் நமக்கும் ஒரு வடிகால் வேண்டாமா, சொல்லுங்கள்? தவிர, வெளிக்காட்ட முடியாத குறும்பையும் நகைச்சுவை உணர்வையும்கூட அவளிடம் மட்டும்தானே வெளிப்படுத்துகிறேன்?

இருபத்தோராம் வயதில் ஆயுள் காப்பீட்டுக்கழகத்தின் முழுநேர முகவராகச் சேர்ந்தேன். ஊர்ஊராக அலைந்து, ஏகப்பட்ட பேரைச்

சரிக்கட்டி, ஊர்ப்பட்ட பாலிஸிகள் சேர்த்த பிறகு, எழுத்துத் தேர்வும், நேர்முகமும் தேறி வளர்ச்சி அதிகாரியாகப் பதவி உயர்ந்தேன். அந்த நேரத்தில் லயன். திரு. லயனல் தேவராஜை நன்றியுடன் நினைத்துக்கொண்டேன். 1992ல் இறந்துபோன என் அம்மாவையும் நினைத்துக்கொண்டேன். அவர்கள் இருவரும் இல்லாவிட்டால் நான் இந்த அளவுக்கு வளர்ந்து வசதியானவனாகியிருக்க முடியுமா?

லயனல் ஸாருக்குக் கீழ்தான் நான் முதன்முதலாக முகவரானேன். ஸார் பெந்தெகொஸ்தே சபையைச் சேர்ந்தவர். அவரும் சரி, அவர் குடும்பத்தில் யாருமே சரி, நகைகள் அணிய மாட்டார்கள். வாசனைத் திரவியங்கள் பயன்படுத்த மாட்டார்கள். மருத்துவரிடம் செல்வதோ, மருந்துகள் அருந்துவதோ செய்ய மாட்டார்கள். குடும்ப ஆரோக்கியம் பிரமாதமாகத்தான் இருந்து வந்தது. இடுப்புக்குமேல் அச்சில் அடித்து வார்த்தது மாதிரிக் கச்சிதமான சதுரமாக இருப்பார் ஸார். முறுக்கு மீசையும் கூலிங் கிளாஸும் பளபளவென மெருகேற்றின கறுப்பு நிற ஷூஸும் அணிந்து புல்லட்டில் தடதடதடவென்று அவர் வரும் காட்சி என் கண்ணைவிட்டு என்றுமே அகன்றதில்லை.

லயனல் ஸார் பல நாள் சொல்லியிருக்கிறார் நள்ளிரவில் எழுந்து குடும்பத்தோடு ஜெபம் செய்ததாக. ஆனால், தூக்கம் விழித்த அலுப்பு அவரிடம் துளியும் தெரியாது. புலிவேட்டைக்குக் கிளம்புகிறவர் மாதிரி, பூமி அதிர உறுதியாக நடப்பார். இந்த உதாரணம் நானாகக் கண்டுபிடித்ததில்லை அவரை முதன்முதல் தடவை பார்த்ததும் வியந்த என் அம்மா சொன்னது.

நான் வேலைக்குச் சேர்ந்த முதல்நாளில் அவர் சொன்ன விஷயம்தான் இன்றுவரை என் தொழிலின் தாரக மந்திரமாய் விளங்கி வருகிறது.

சந்தானம், சோப்பு விக்கிறவன்கூட நம்மைவிட உசத்தியானவன்தான். அவன் ரெண்டு ரூவா வாங்குறானா, கொறைஞ்சது ஒரு ரூபா பெறுமானமுள்ள சோப்பைக் கையிலெ குடுத்துர்றான். நாம பாருங்க, எதையுமே குடுக்காமெ வாடிக்கையாளர்கிட்டெக் காசு வாங்கிர்றோம். பொருளா எதையும் குடுக்கிறதில்லையே. நாம குடுக்குறது வெறும் உத்தரவாதம்தானே. ஆக, ஒரு நம்பிக்கையை வித்துக் காசு பாக்குற தொழில் நம்மளது.

ஸார், அதான் அவங்க எறந்துபோனா பத்தாயிரக் கணக்குலெ பணம் குடுப்பமே?

பாத்திங்களா, எறந்துபோனாத்தானே குடுக்குறம். ஒரு ஆளெத் தேடிப்

போயி அவங்கிட்ட அவனோட சாவையே பத்திப் பேசுறது எவ்வளவு தர்மசங்கடமான விஷயம்? யாராவது மனப்பூர்வமாகக் கேட்டுக்கிற விரும்புவாங்களா...?

ஸார் சிரித்தார்.

...ஆனாலும், நம்ம தொழில் ஒருநாளும் மங்காது. காரணம் மரணபயம் இல்லாத மனுஷன் ஒருத்தன்கூடக் கிடையாது. இன்னும் விஞ்ஞானம் வளந்து வாழ்க்கையோட கெடுபிடிகள் கூடக்கூட இந்த பயம் அதிகமாகத்தான் ஆகுமேயொழிய, ஒரு நாளும் குறையாது. நம்ம தொழிலும் அமோகமா வளரத்தான் செய்யும்.

அதுவரை நான் என்னுடைய மரணத்தைப் பற்றி நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. இருபத்தோரு வயதில் மரணத்தைப்பற்றி எதற்காக நினைத்துப் பார்ப்பது? ஆனால், லயனல் ஸார் பேசிய பிறகு அன்று முழுவதும் ஒவ்வொரு கணமும் சாவைப் பற்றிய சிந்தனை இருந்துகொண்டேயிருந்தது.

வழக்கம்போல, ஸாருடனான உரையாடலை என் அம்மாவிடம் அன்று இரவு அடிபிறழாமல் ஒப்பித்தேன்.

அப்பிடி எல்லாம் கவலைப்படவேண்டியதில்லை. சாகணும்னு இருந்தா, கல்லுலெயும் சாவு புல்லுலெயும் சாவு. கோயிலுக்குப் போறோம், அர்ச்சனைத் தட்லெ காசு போடறோம், அர்ச்சகர் குடுக்கிற விபூதிக்கு விலையா அது. இல்லே அவர்தான் கையிலே ஒங்க பாலிஸி மாதிரி ஸர்ட்டிஃபிக்கேட் எதையாவது அச்சடிச்சுக் குடுக்கறாரா. ஏதோ நம்ம வயித்துப் பொழைப்புக்கு ஒரு உத்தியோகம் பார்க்கிறோம், யாருக்கும் கெடுதி செய்யாமெ நேர்மையா உழைச்சாப் போறும், மத்ததையெல்லாம் பகவான் பார்த்துக்குவான்.

என்று தெளிவாகச் சொன்னாள் அம்மா. பேச்சினூடே, லயனல் ஸார் சொன்ன இன்னொரு விஷயத்தையும் அம்மாவிடம் தெரிவித்தேன்.

ஸார் சொன்னது இதுதான்.

சந்தானம், இந்தச் சின்ன வயசிலே இவ்வளவு நிதானமும், பேச்சில் இனிமையும், சிந்தனையில் விவேகமும் கூடி வர்றது சாதாரண விஷயமில்லை. நீங்க கர்த்தருக்கு மிகவும் உகந்தவர் என்கிறதாலேதான் இதெல்லாம் கிடைச்சிருக்கு. ஒருநாள் எங்க திருச்சபைப் பிரார்த்தனைக்கு வாங்களேன்.

அம்மா வேகமாகப் பதில் சொன்னாள்.

அதெல்லாம் ஒண்ணும் வேண்டியதில்லே.

மேற்கொண்டு அந்த விஷயம் பற்றி, அதாவது நான் கர்த்தருக்கு உகந்தவன் என்பது பற்றி, ஏதாவது சொல்வாள் என்று எதிர்பார்த்தேன் கடவுளுக்குப் பிரியமானவனாய் இருப்பது சாமானிய விஷயமா என்ன? அம்மா எதுவுமே சொல்லவில்லை.

ஆனால், வீட்டுக்கு வரும் சகலருக்கும் காஃபி கொடுத்து உபசரிக்கும் அம்மா, இரும்பாடியில் உள்ள எங்கள் வீடுதேடி அதற்குப் பிறகு லயனல் ஸார் வந்த ஒரு சந்தர்ப்பத்திலும் 'காஃபி குடிக்கிறீங்களா' என்று விசாரித்ததுகூட இல்லை. இவ்வளவுக்கும், ஒருநாள்விட்டு ஒருநாள் ஸாருடைய புல்லட் தடதடத்தபடி எங்கள் வீட்டுக்கு வாசலில் வந்து நிற்கும். யார்யாரையெல்லாம் சென்று சந்திக்கலாம் என்பது பற்றி என்னுடன் விவாதிப்பார். தொழில்முறை ஆலோசனைகள் ஏகப்பட்டது சொல்வார்.

எது எப்படியோ, நான் கர்த்தருக்கு உகந்தவனோ இல்லையோ, பாலிஸிதாரர்களுக்கு மிகவும் உகந்தவனாகிவிட்டேன். இல்லாவிட்டால் இப்படியொரு வளர்ச்சியைச் சம்பாதித்திருக்க முடியாது.

ஆனால், என் தலைமுறை சந்தித்த வளர்ச்சி அது. இந்தத் தலைமுறையில் ஒருவர் என்னுடைய தொழிலில் நுழைந்து என்னளவு உயர்வது சற்றுக் கடினம்தான். எனக்குமே வருமானம் குறையவில்லையே தவிர, அது அதிகரித்து வந்த விகிதம் தேய ஆரம்பித்துவிட்டது.

தனியார் நிறுவனங்கள் பெருத்துவிட்டன. அரசாங்க உத்தியோகத்தை விடவும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. ஜனங்களும் பொருட்களை வாங்கிக் குவிக்கும் பெருவிருப்பத்தில் மூழ்கியிருக்கிறார்கள். நுகர்பொருட்களைக் காப்பீடு செய்வதில் உள்ள அக்கறை, ஆயுள் காப்பீட்டைவிட அதிகமாக இருக்கிறது. வருமானவரியிலிருந்து தப்பிப்பதற்காக மட்டுமே ஆயுள் காப்பீடு செய்கிறார்கள். அப்படியென்றால், மரணபயம் குறைந்துவிட்டது என்றுதானே அர்த்தம்?

'அப்படி நாம் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை' என்று மதுரை ரயில் நிலைய நடைமேடையில் அறிமுகமான தீர்த்தபதி சொன்னார்.

நாங்கள் இருவருமே வைகை எக்ஸ்ப்ரஸில் வரப்போகிற விருந்தாளிகளை வரவேற்கக் காத்திருந்தோம். இது நடந்து இரண்டு மூன்று மாதம் இருக்கலாம். அன்று ரயில் ஒன்றேகால் மணிநேரம்

தாமதமாக வந்துசேரும் என்று திரும்பத்திரும்ப அறிவித்துக்கொண்டிருந்தார்கள். பாண்டியன் எக்ஸ்ப்ரஸ் புறப்படும் நேரம். மொசமொசவென்று ஜனக்கூட்டம். யார் மீதும் இடித்துக்கொள்ளாமல் நாலைந்தடிகூட நடக்க முடியாது. தீர்த்தபதி தாமாகவே வந்து என்னிடம் பேசத் தொடங்கினார். அவருடைய குரல் என் காதோரம் கேட்டது.

> அசாத்தியமான கூட்டம் இல்லை...? இந்தியாவின் ஜனத்தொகை அதிகரித்து வருகிறது என்பது இனிமேலும் வெறும் புள்ளிவிபரம் கிடையாது. ஒவ்வொரு தனிமனிதனின் அனுபவமாகவும் ஆகத் தொடங்கிவிட்டது. கூட்டமும் நெரிசலும் நீண்ட வரிசைகளும் இல்லாத ஒரு ஸ்தலத்தையும் உங்களால் எனக்குக் காட்டமுடியாது.

நான் ஆமோதித்துப் புன்னகைத்தேன்.

இந்த மாதிரி முன்வந்து பேசும் அந்நியர்களை தாமாகவே வந்து தூண்டிலில் சிக்குகிறவர்கள் என்று என் மனம் உடனடியாக ஏற்றுக்கொள்ளும். கொஞ்சநேரம் பேசினால், ஒரு பாலிஸி எடுக்க ஒப்புதல் வாங்கிவிடலாம். அவர்கள் ஏற்கெனவே பாலிஸி எடுத்திருந்தாலும், அவர்கள் வருமானம் என்னவாக இருந்தாலும்,

> அடடே, அண்டர் இன்ஷ்யூர்டு. உங்கள் வருமானத்துக்கு இவ்வளவு தொகைவரை காப்பீடு செய்துகொள்ள முடியுமே.

என்று கொஞ்சங்கொஞ்சமாகக் கரைத்துவிட முடியும். தீர்த்தபதியின் ஆங்கிலம் வெகு நயமாக இருந்தது. வெளிநாட்டில் படித்துத் திரும்பியவர் மாதிரி. என் வியப்பைத் தெரிவித்தேன். தொழில் ரீதியான வியப்பு என்பதால் எப்போதுமே ஓரிரு மாத்திரைகள் அதிகமாகத்தான் இருக்கும். அவரைப்பற்றி விசாரித்தேன்.

தீர்த்தபதி வெளிநாட்டில் படித்தவர் கிடையாதாம். திருச்செங்கோட்டுக்காரர். அந்தக் காலத்திலேயே எஞ்ஜினீயரிங் படித்துவிட்டு, மதுரா கோட்ஸில் உயர் அதிகாரியாகப் பணிபுரிகிறார். திருமணம் செய்துகொள்ளவில்லை. பொதுவாக, மணமாகாதவர்கள் ஆயுள் காப்பீட்டில் அவ்வளவு ஆர்வம் செலுத்துவது கிடையாது. எனக்குள் சுரத்து இறங்கியது. என்றாலும், ரயில் வரும்வரை சும்மாயிருப்பதற்கு ஒரு பேச்சுத்துணையாயிற்றே.

இவ்வளவு ஜனங்கள் இருக்கும் இடத்தில் தொழில்கள் எவ்வளவு அமோகமாகப் பெருக வேண்டும்? குறிப்பாக, ஆயுள் காப்பீடு செய்பவர்கள் எண்ணிக்கையும் இதற்கேற்ற அளவில்

பெருகியிருக்கத்தானே வேண்டும்? ஜனங்களுக்கு மரணபயம் குறைந்துவிட்டதா என்ன?

சற்றுமுன் என் மனத்தில் ஓடிய சிந்தனையின் தொடர்ச்சியை அவரிடம் வார்த்தைகளாகக் கொட்டினேன். அப்போதுதான் தீர்த்தபதி சொன்னார்:

> அப்படி நாம் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. கோயில்களில் கூட்டம் கொஞ்சமும் குறையாமல்தானே இருக்கிறது?

நயமாகப் புன்னகைத்தார். ஆஹா, நியாயம்தானே.

> ...மனிதகுலத்துக்கு மொழி உருவான நாளிலிருந்தே குற்ற உணர்ச்சியும் உருவாகிவிட்டது. ஆனால், மொழியும் மொழிசார்ந்த விஷயங்களுமே மேல்மனம் சார்ந்தவைதான். மற்றபடி, மரணபயம் இல்லாத தனிநபர் எவரும் இருப்பதற்கு வாய்ப்பில்லை. அதற்காக, சதா சர்வகாலமும் சாகிறதைப் பற்றயே ஜனங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல வரவில்லை. மொழியின் தளத்திலான நடைமுறை விஷயங்களை மட்டும்தான் மேல்மனம் பார்த்துக்கொள்ளும். இறப்பு மாதிரியான பெரிய விஷயங்களை ஆழ்மனம்தான் கவனிக்கும். மற்றபடி, தான் இன்னும் பிறக்கவில்லை என்று நம்புகிறவனுக்குத்தான் இறப்பைப் பற்றி யோசனை இருக்காது.

முதல் தடவை சொன்னபோது அந்தக் கடைசி வாக்கியம் எனக்குப் புரியவில்லை. இரண்டாம்முறையும் சொல்லச் சொல்லிக் கேட்டேன். ஏதோ புரிந்த மாதிரி இருந்தது. தீர்த்தபதியிடம் அபாரமான நம்பிக்கை பிறந்தது. சமீபகாலமாக எனக்குள் புரண்டுகொண்டிருக்கும் துக்கம் ஒன்றை அவரிடம் பகிர்ந்துகொள்ளத் தீர்மானித்தேன்.

> தவறான காலத்தில் வந்து பிறந்துவிட்டோம் என்று சதா தோன்றிக்கொண்டே இருக்கிறது ஸார். ஒரு தலைமுறை முந்தியோ பிந்தியோ பிறந்திருந்தால் இவ்வளவு சிரமப்பட்டிருக்க மாட்டேன் என்று தோன்றுகிறது. நடுவாந்தரத்தில் வந்து மாட்டிக்கொண்டு விட்டேன். முந்தின தலைமுறை என்றால் பணம் பற்றியும் சாதனங்களால் வசதிபெறும் வாழ்க்கை பற்றியும் இவ்வளவு கனவுகள் இருந்திருக்காது. அடுத்த தலைமுறையானால், கம்ப்யூட்டர் மற்றும் தொடர்புமுறைத் தொழில்நுட்பத் துறைகளில் நுழைந்து லட்சங்களில் சம்பாதிக்கிறது. எங்களை மாதிரி ஆட்கள்தாம் இரண்டுங்கெட்டான்கள்.

தீர்த்தபதி இடைவெட்டினார்.

> நீங்கள் அவசரப்படுகிறீர்கள், மிஸ்டர். சந்தானம். இரண்டு விஷயங்களை நீங்கள் கவனிக்க வேண்டும். நீங்கள் சொல்லும் மனக்குறை இல்லாத ஒரு தலைமுறை எந்தக் காலத்திலும் இருந்திருக்க முடியாது என்றுதான் படுகிறது. இரண்டாவது, மனிதகுலமே குரங்குக்கும் எதிர்காலத்தில் வரவிருக்கிற அதிமனிதனுக்கும் இடையில் இணைப்புபோலத் தொடரும் நடுவாந்திர நிலைதான் என்று ஒரு கோட்பாடு இருக்கிறது.

‘இவர் என்ன, என்னுடைய தனிப்பட்ட பிரச்னையைச் சொன்னால், ஏதோ தத்துவம் பேசுகிறார்?’ என்று ஒருவித எரிச்சல் ஊறியது எனக்குள். தொடர்ந்து மேற்கத்தியத் தத்துவமும் அறிவியல் ஆராய்ச்சியும் சார்ந்து ஏகப்பட்ட விஷயங்கள் பேசிக்கொண்டே போனார். அவை அத்தனையுமே என் தலைக்கு ஓரங்குலம் மேலாகக் கடந்து சென்ற வாக்கியங்கள். ஓசை மட்டுமே கேட்டது. பொருள் எதையும் உருவாக்கிக்கொள்ள இயலாமல் என் மனம் அவஸ்தைப்பட்டது.

நல்லவேளை, வைகை எக்ஸ்ப்ரஸ்ஸின் தலைவிளக்கு தெரிந்தது. தீர்த்தபதி என் கையைப் பற்றிக் குலுக்கினார். எலும்பு நொறுங்குவது மாதிரி அவ்வளவு இறுக்கமான பிடி.

> உங்களோடு கழித்த பொழுது மிகவும் இனிமையாக இருந்தது. ஆனால், என்னால்தான் உங்களுக்கு உதவ இயலாமல் போகிறது. ஸாரி.

எனக்குப் புரியவில்லை.

> நான் ஏற்கெனவே சொன்னேனில்லையா, நான் மணமாகாதவன். ஆயுள் காப்பீட்டின் பலனைப் பெற்றுக்கொள்ள யாருமற்றவன். இல்லாவிட்டால், சந்தோஷமாக உங்களுக்கு ஒரு பிஸினெஸ் கொடுத்திருப்பேன்.

அவர் சிரித்துக்கொண்டுதான் சொன்னார். எனக்குக் கொஞ்சம் அவமானமாக இருந்தது. உடனடியாகத் தேற்றிக்கொண்டு,

> அட, அதெல்லாம் ஒரு விஷயமே இல்லை. உங்களை அடிக்கடி வந்து சந்திப்பேன் ஸார்.

என்று மட்டும் சொன்னேன்.

தீர்த்தபதி பேசி முடித்தபோது நான் உணர்ந்த அவமான உணர்ச்சி

எனக்குப் புதிதல்ல. தொழிலில் இறங்கிய ஆரம்ப நாட்களில், லயனல் ஸார் சொன்னாரென்று, கீழ்நாச்சிகுளத்தில் ஒரு பெருநிலக்கிழாரைப் பார்க்கப் போனேன். கழுத்து முழுக்க நகைகளும், தோள்வரை வளர்ந்த காது மடலில் பாம்படமும் அணிந்த அம்மாள்,

அவுக வயக்காட்டுக்குப் போயிருக்காகளே.

என்றாள். பிள்ளை அலைகிறானே என்று தன் இரட்டைவடம் சங்கிலியை விற்று அம்மா வாங்கித் தந்திருந்த ஸுவேகாவைப் பொட்டமடை நோக்கித் திருப்பினேன். கருப்பட்டி விலக்கிலிருந்து உள்நோக்கிச் செல்லும் வயல்பாதையில் கண்ணுக்கெட்டிய தூரம்வரை மேற்படியாருடைய நிலங்கள்தாம்.

பதில் வணக்கம் சொல்லி எதிரில் கிடந்த தென்னங்கிடுகைக் காட்டி உட்காரச் சொன்னார். வந்த விஷயத்தைச் சொன்னேன். வெற்றிலை நிரம்பிய வாயைக் கூட்டியவாறு பொறுமையாகக் கேட்டார். நான் பேசி முடித்ததும் எழுந்து தள்ளிச் சென்று காறி உமிழ்ந்தார். பணியாள் ஆயத்தமாக நீட்டிய எவர்சில்வர் செம்பை வாங்கி தீர்க்கமாகக் கொப்பளித்துத் துப்பினார்.

ஆழ்ந்த அவமான உணர்வும், அடக்க அடக்க முறியாமல் மேலெழும் எதிர்பார்ப்புமாக அமர்ந்திருந்தேன். திரும்பி வந்து தம்முடைய கிடுகில் சம்மணமிட்டு உட்கார்ந்துகொண்டார்.

...அதாவது, நாஞ் செத்துப்போனா எங் குடும்பத்துக்கு நீங்க காசு குடுக்குறேங்கிறீக?

அப்படியில்லீங்கய்யா. இப்பொ இருபது வருஷத்துக்கு ஒரு பாலிஸி நீங்க எடுக்கிறீங்க. மாதம் இம்புட்டுன்னு கட்டிக்கிட்டே வர்றீங்க. இருபதாவது வருஷம் முடிஞ்சதும் நீங்க கட்டினது மாதிரி கிட்டத்தட்ட ரெண்டு பங்கு உங்களுக்குக் கிடைக்கும். நடுவிலெ அசம்பாவிதம் எதுவும் நடந்துருச்சுன்னா...

அதென்னா தம்பி முளுங்குறீக. நெருப்புன்னு சொன்னா வாய் வெந்தா போயிரும். சும்மா சொல்லுங்க. இருவது வருசத்துக்குள்ளாற நான் மண்டையப் போட்டுட்டேண்டா, நாங் கட்டின காசையும் வட்டியையும் கொஞ்சம் கொசுறு சேத்து எங் குடும்பத்துக்குக் குடுத்துருவீக...

அவருடைய வேகமான பேச்சில் குறுக்கிட பயமாக இருந்தது.

...நாஞ் செத்தது பத்தாதுன்னு என் பொண்டு பிள்ளைக நீங்க

குடுக்கிற கடுதாசியை வேறெ தூக்கிக்கிட்டு அலையணும்.

அவர் சிரித்தார். நான் தலையாட்டும் கதிர்களைப் பார்த்துக்கொண்டு மௌனமாய் இருந்தேன்.

...இந்தா பாருங்க தம்பி, எங்க அப்பன் பாட்டன் சம்பாரிச்சது போக, நான் சம்பாரிச்சதையும் வச்சுக் கூறோட பொளைச்சா, எங் கொள்ளுப்பேரனோட கொள்ளுப்பேரன்கூட அவன் ஆயுசுக்கும் ஒக்காந்து சாப்பிடலாம். மூணு போகம் வெளையிற நிலத்தை வச்சுக் குப்பைகொட்டத் தெரியாதவன் கையிலே ரொக்கத்தைக் குடுத்தா மட்டும் வெளங்கவா செய்யும்...?

அவர் மறுபடியும் சிரித்தார்.

...இதெல்லாம் ஒங்களை மாதிரி மாசச் சம்பளக்காரவுகளுக்குத்தான் லாயக்கு தம்பி... அய்யிரு வீட்டுப் பிள்ளையா நீங்க?...

தலையசைத்தேன்.

...ங்கொப்பாரு என்னா துட்டா வச்சுட்டுப் போனாரு? நீங்க பொளைக்கலே? 'மேயப் போகுற மாட்டுக்குக் கொம்புலெ புல்லுக்கட்டா'ங்கும் எங்க அப்பத்தா. இதெல்லாம் போகட்டும்...

அடுத்து என்ன வெடி வந்து விழப்போகிறதோ என்று காத்திருந்தேன். அவர் என்னை ஆழமாகப் பார்த்துக்கொண்டு சொன்னார்.

...நானே செத்துப் போயிட்டதுக்கப்பறம், இருக்குறவுக என்ன ஆனா எனக்கென்னா தம்பி.

அவர் விழுந்துவிழுந்து சிரித்தார். கண்களில் நீர் கோத்துவிட்டது. பெருத்த ஆவலோடு வண்டியோட்டிக்கொண்டு வந்த அசட்டுத்தனத்தை நொந்தவாறு அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். சட்டென்று அவர் முகம் தீவிரமாகியது.

...பெறந்தவன் எல்லாம் ஒருநா சாகத்தான் போறான் தம்பி. இது தெரியாமெ ஒருத்தன் இருப்பானா? ஆனா, இந்தா செத்துறப் போறோம்னு ஒருத்தன் நெனைச்சுட்டான்னு வைங்க. அட, ஒங்க கணக்குப் பெரகாரம் இருவது வருசம் களிச்சுச் சாகப்போறோம்னே நெனைச்சுக்குறான்யா, ஒருவேளைச் சோறு உள்ளெ எறங்குமா? மனுசன் என்னா நெனைக்கிறான், 'இந்தா அவெஞ் செத்துட்டான், இந்தா இவெஞ் செத்துட்டான். அதுக்காண்டி என்னா, நான் மட்டும் என்னைக்குமே சாகமாட்டேன். இருந்துக்கிட்டே இருப்பேன்.' இந்த ஒரு நெனைப்புலதானெ ஒலகமே சுத்துது...?

அவர் மீண்டும் அமைதியானார். பணியாள் கொழுத்த இளநீர்க் காய்களைக் கொத்தாகக் கொண்டுவந்து எங்கள் அருகில் வைத்துச் சீவ ஆரம்பித்தான். அவர் தொண்டையைக் கனைத்துக்கொண்டார்.

...ஊரைத் தேடி வந்து ஆளையும் பாத்துப்புட்டீக. என் மகன் வயசு இருக்குமா ஒங்களுக்கு? நீங்க கேட்ட பிரகாரம் ஒரு... அது என்னாது... என்னவோ எடுக்கணும்ண்டீங்களே...

பாலிஸி.

என்று சுரத்திழந்த குரலில் தழைந்து சொன்னேன்.

அது ஒண்ணெ எடுத்துக்கிர்றேன். எவ்வளவு ரூவா கட்டணும் என்னா வெவரம்ங்கிறதையெல்லாம் எங் கணக்கப்பிள்ளைகிட்டச் சொல்லீருங்க. மாசாமாசம் நாவுகப்படுத்தித் துட்டெ வாங்கிக்கிர்றது ஒங்க பொறுப்பு. தவணை தவறிச்சுன்னா நாங்க பொணையில்லே. என்னா, திருப்திதானே...?

தலையை எப்படி ஆட்டுவது என்று குழப்பமாய் இருந்தது எனக்கு.

...எளனி சாப்புடுங்க. முத்து, தம்பிக்கு தோசெப்பதமா ரெண்டு வெட்டு...

இன்றுவரை அவர் முகம் மறக்கவில்லை.

நான் முதன்முறை பார்க்கும்போது அவர் ஐம்பதை நெருங்கிக் கொண்டிருந்தார். சரியாக இரண்டே வருஷம். உச்சந்தலையில் தென்னங்குலை விழுந்து மூர்ச்சையானார் ஒருநாள். நினைவிழந்து மதுரை டி வி எஸ் ஆஸ்பத்திரியில் நாலு நாள் படுக்கையில் கிடந்தார்.

துக்கத்துக்கு நானும் லயனல் ஸாரும் போயிருந்தோம். பிற்பாடு ஸெட்டில்மென்ட் தொகையைக் காசோலையாக எடுத்துக்கொண்டும் நாங்கள் இருவரும்தான் போனோம். அவருடைய சம்சாரமும் குழந்தைகளும் அதைக் கையால்கூடத் தொட மறுத்துவிட்டார்கள்.

அந்தா அந்த மேசெமேலே வச்சிருங்க.

என்று இறுக்கமாகச் சொன்னார் அந்த அம்மாள். உரிய இடங்களில் கையெழுத்து வாங்கிக்கொண்டு திரும்பினேன்...

அ ட, மணி ஒன்பதரையாகிவிட்டது. சாப்பாட்டுக் கடைகள் மூடியிருக்குமோ? பதட்டமாக எழுந்து முகம் கழுவிக்கொண்டேன். பக்கத்து அறைக் கதவு திறந்திருந்தது. அந்த அறையில் தங்கியிருந்தவர்

என்று நினைக்கிறேன், மாடியின் தடுப்புச் சுவரில் ஒரு காலை முட்டுக் கொடுத்து, மறு காலை மட்டும் ஊன்றி, முழங்கை இரண்டையும் சுவரில் பதித்து, தெருவை வெறித்துக்கொண்டு நின்றிருந்தார். தலைகீழாகப் புரட்டிய 'ட'னா போல.

சாப்பிட்டுவிட்டு, கோயிலைச் சுற்றிலும் கொஞ்ச நேரம் காலாற உலாத்திவிட்டு, சுமார் பதினொன்றரை மணிக்கு விடுதிக்குத் திரும்பியபோதும் அவர் அதே கோலத்தில் நின்றிருந்தார். தெருவை சும்மா வெறித்துக்கொண்டிருக்கவில்லை, யாருடைய வரவையோ எதிர்பார்த்துக் காத்திருக்கிறார் என்றுபட்டது எனக்கு.

நான் உற்றுக் கவனிப்பதைப் பொருட்படுத்தாமல், தெருவை உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தார் அவர்.

நாலாபுறம் நிரம்பிக் கனத்திருந்த இருட்டு எங்கள் இருவரையும் உற்றுக் கவனிக்கிற மாதிரி ஒருகணம் உணர்ந்தேன். ஏனோ, அடிவயிற்றில் பிசைகிற மாதிரி உணர்வு.

✠

புனல்

‘மனுஷ வாழ்க்கையிலே காரண காரியம் சொல்ல முடியாத விஷயங்கள் எவ்வளவு இருக்குங்கிறே வேதம்?...’

ஜனவரி, 1952

வே தம், இக்கட ரா.

அருகில் சென்றான் வேதமூர்த்தி. குருநாதரின் முன்னோர் தியாகராஜ ஸ்வாமிகளின் காலத்தில் ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டுக்குப் பெயர்ந்தவர்கள். வேதமூர்த்தி இவரிடம் வந்து சேர்ந்ததும் முதல் வேலையாகத் தெலுங்கு கற்றுக்கொடுத்தார். வேதத்துக்குத் தெலுங்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆனால், வெகுசரளமாக உரையாட முடியும். குரு தீவிரமான சந்தர்ப்பங்களில் எல்லாம் தெலுங்கில்தான் பேசுவார். தாய்மொழியில் பேசும்போதுதான் ஆத்மார்த்தத்தின் கடைக்கோடிவரை வெளிப்படும் என்று நினைத்தாரோ என்னவோ. குருவின் பாஷையில் தியாகராஜரின் கீர்த்தனம் போலவே அழகும் ஆழமும் இருக்கும்.

அவருடைய வாயிலிருந்து வார்த்தைகளுக்குச் சமமாகக் காற்றும் வெளியேறியது. பல சமயம் காற்று மட்டுமே வெளியேறியது. பற்கள் எதுவுமே உதிரவில்லை என்றாலும் தொண்டைக் குழிக்குள் உருளும் கோலிக்குண்டு பேச்சைச் சிதைத்து அனுப்பியது. அவருடன் வருடக் கணக்காக இருந்த காரணத்தால் பல வார்த்தைகளை யூகித்துப் புரிந்துகொள்ள முடியும் வேதமூர்த்திக்கு.

கருகித் தீய்ந்த விறகுக்கட்டை மாதிரி குருவின் நிறம். உலர்ந்து சுருங்கிய கருந் திராட்சைப் பதத்தில் முன்னங்கைச் சதை சுருக்கம் கண்டிருந்தது. நோயில் படுத்த பிறகு வெகுசீக்கிரம் தோல் சுருங்கிவிட்டது. ஒரு மாதத்துக்கு முன்னால் இளைஞனைப்போலத் திரிந்தவரா இவர் என்று பல நேரம் ஆச்சரியம் பொங்குகிறது. வந்திருக்கும் வியாதி அப்படி. கல்லீரல் முழுக்கப் பழுதுபட்டுவிட்டதாம். இங்லீஷ் மருத்துவம் கண்டுபிடித்துச் சொல்வதற்கு முன்னால், குருவே மிகச் சரியாகச் சொல்லிவிட்டார். பெரியாஸ்பத்திரி டாக்டர் அதை உறுதி செய்தார், அவ்வளவுதான்.

குருவின் வயதும் எண்பதுக்குமேல் ஆகிவிட்டதே. ‘இந்த வயதுக்குப் பிறகு வயதுதான் வியாதி’ என்று சிரித்துக்கொண்டே சொன்னார் குரு.

வரும் செவ்வாயோடு சரியாக மூன்று வாரம் முடிகிறது. அன்றுதான் அமாவாசை அல்லவா? கனத்த நாள். தாண்டுவது கடினம்தான். குருவின் கோவணம் சற்று விலகி இளம் அன்னாசி பருமனில் விதை ஒருக்களித்துத் தெரிந்தது. 'முக்கால் நூற்றாண்டு பிரம்மச்சரியத்தின் கனம்' என்று ஒரு வாக்கியம் உள்ளே ஓடியது. தானாகப் புன்னகைத்துக்கொண்டான் வேதமூர்த்தி.

உரத்துப்பெருமூச்சு விட்டார் கிழவர். அயர்ச்சி காரணமாக இடையில் சில நாட்கள் ஓய்ந்திருந்த தெலுங்கு சன்னமாக ரீங்கரிக்கத் தொடங்கியது.

...வே தம், என்னுடைய பூர்விகம் பற்றி அதிகம் சொன்னதில்லை அல்லவா? நீயும் கேட்டதில்லை. உத்தம சிஷ்யனாயிற்றே.

சந்யாசி, சொல்லாமல் பிரிந்து செல்ல வேண்டும் என்பதுதான் நியதி. இருந்தாலும், நான்கு வருஷங்கள் ஒன்றாகவே இருந்த ஒரு உடம்பையும் மனத்தையும் விட்டுச் செல்லும்போது சந்யாசத்துக்கும் அப்பால் சிறு சலனம் இருக்கத்தான் செய்கிறது. வேனிற்காலச் சிறுமழைக்குப் பிறகு தரையிலிருந்து கிளம்பும் வெக்கைபோல அடிமனத்தில் கொஞ்சம் தகிக்கிறது.

புதுக்கோட்டைப் பக்கம் ஒரு கிராமத்தில் நான் பிறந்தேன். தாத்தா எண்ணெய்ச் செக்கு வைத்திருந்தார். தாத்தாவின் முன்னோர்கள் வழியாக வந்து சேர்ந்த தொழில் அது. சொல்லிக்கொள்கிற மாதிரி சொத்து எதுவும் சேர்க்கவில்லை என்றாலும், சாப்பாட்டுக்குக் கஷ்டம் கிடையாது.

அந்த வம்சத்தில் அப்பாதான் முதன்முறையாக வேறு தொழிலில் இறங்கினவர். குழந்தைக்கு ஏதாவது வித்தை சொல்லிக் கொடுக்கவேண்டும் என்று பெரியவர்கள் ஆசைப்பட்டது வினையாக முடிந்துவிட்டது. அப்பா கால் ஆர்மோனியம் கற்றுக்கொண்டார். சிற்றூர்களிலும் பேரூர்களிலும் நடக்கும் பெரிய ஜமா நாடகங்களில் வாசிக்கவும் ஆரம்பித்தார். கிராமங்களில், கூத்துக்கு முகவீணை வாசிக்கப் போவார். டோலக்கும்கூட வாசிக்கத் தெரியும் அவருக்கு.

ஸ்பெஷல் நாடகம் என்ற ஒரு வகையே இன்னும் முன்னணிக்கு வந்திராத காலம் அது. சங்கரதாஸே என்னைவிட மூன்று வயதுதான் மூத்தவர்! அப்பாவுக்கு நாடகத்துடன் இருந்த பரிச்சயத்தை விடவும், அந்தக் காலத்திய நாடக உலகத்தைப் பீடித்திருந்த தீமைகளிடம் அதிகப் பழக்கம் உண்டானது.

எந்நேரமும் ஜவ்வாது மணம் இருக்கும் அவரிடம். சுற்றியுள்ள நாலைந்து ஜில்லாக்களில் அவர் தொடாத தாசிகள் அநேகமாகக் கிடையாது. எங்கள் வீட்டுக்கு உறவினர்கள் விஜயம் செய்வது குறைந்து வந்தது. ஒரு கட்டத்தில் அறுதியாக நின்றேவிட்டது. ஊர்ஊராகத் திரிந்துவிட்டு, எப்போதாவது வீட்டுக்கு வருவார் அப்பா. ஓரிரு நாட்கள் தங்குவார். மற்றபடி, குடும்பம் என்பது நானும் அம்மாவும் மட்டுமே என்று ஆகிவிட்டது. எனக்குத் தம்பி தங்கைகள் பிறக்காததில் ஏதோ சமிக்ஞை இருந்திருக்கிறது என்பது தெரியும் வயதில்லை எனக்கு.

பெரிய அளவில் கீர்த்தி அடைவதற்கு முன்னாலேயே வியாதியைச் சம்பாதித்துக்கொண்டார் அப்பா. கிட்டத்தட்ட இருபது வருடங்கள். வியாதியின் வேகம் அவரை மிகவும் சிடுசிடுப்பான மனிதராக ஆக்கியிருந்தது. எந்நேரமும் கோபம். எதற்கெடுத்தாலும் ஆத்திரம். எல்லார் மேலும் வன்மம். ஒருவேளை மற்றவர்கள் ஆரோக்கியமாக இருப்பதே தம்முடைய வியாதியைக் கேலி செய்வதற்காகத்தான் என்று நினைத்தாரோ என்னவோ.

கடைசி வருடங்களில் படுத்த படுக்கையானார். அந்த நாட்களில் அம்மா அனுபவித்த நரகத்தின் கொடுமையைச் சொல்லி மாளாது. இவள் கொண்டு நீட்டும் சாப்பாட்டுத் தட்டைச் சுவரில் விசிறியடிப்பார். ஒரு சீசா நிறைய மூத்திரம் பெய்து தருவார். இவள் கொண்டு கொட்டிவிட்டு வந்த மாத்திரத்தில் 'இன்னும் வருகிறது' என்று கூப்பிடுவார். அவர் போய் முடிக்கும் வரை அம்மா அருகிலேயே நிற்க வேண்டும். ஆனால் தீர்ந்துபோன குவளையிலிருந்து மூத்திரம் எப்படி வரும். அவருக்கே சலிப்பு வந்த பின் 'ஏனோ மூத்திரம் வரமாட்டேனென்கிறது' என்று அம்மாவைப் போகச் சொல்வார்.

அம்மா பேரழகி. வயதும் அதிகம் இல்லை. பால்ய விவாகம். அவளுடைய பதினைந்தாவது வயதில் நான் பிறந்துவிட்டேனாம். சுற்றியிருந்தவர்களுக்கெல்லாம் வயதாகிக்கொண்டே போக, அம்மா மட்டும் தன் வாலிபத்திலேயே தங்கிவிட்டாள். அந்நியர்கள் அவளைப் பார்த்தால், என்னுடைய சகோதரி என்றே நம்பிவிடுவார்கள். அப்பா அடிக்கும்போது, செக்கச்செவேலென்ற அம்மாவின் முகம் மேலும் சிவக்குமே தவிர, எதிர்த்து ஒரு வார்த்தை சொல்ல மாட்டாள். கட்டிலைவிட்டு விலகிச் செல்லக்கூட முயல மாட்டாள். அப்படி ஒரு பிறவி.

ஒருநாள் யதேச்சையாக அப்பாவின் அறைக்குள் நுழைகிறேன். அப்பா படுத்த நிலையிலேயே அம்மாவை ஆவேசமாகத் தாக்குகிறார்.

அடிவயிற்றில் ஓங்கி ஒரு குத்து. பிறப்புறுப்பில் விழுந்திருக்க வேண்டும். அம்மா நாடா மாதிரிச் சுருண்டாள். அப்பாவின் கவனம் என்மீது திரும்பியது. இந்த அவகாசத்தில் அம்மா எழுந்து கொல்லைப்புறம் போனாள்.

என்னை நோக்கிப் பாய்ந்த சொற்களில் ஒன்றைக்கூட உன்னிடம் என்னால் சொல்ல முடியாது, வேதம். நாக்குத் தீய்ந்துவிடும். ஏதோ பலவருஷ காலமாக மனப்பாடம் செய்து வைத்த மாதிரி அவ்வளவு சரளமாக வசவு வார்த்தைகளை உச்சமான கோபத்துடன் ஒப்பித்தார். அப்பா ஓய்ந்த பிறகு அம்மா என்ன ஆனாள் என்று பார்ப்பதற்காக நானும் கொல்லைப்புறம் போனேன்.

கிணற்றடியில், துவைக்கிற கல்லில் உட்கார்ந்து விசித்துக்கொண்டிருந்த அம்மா தலை நிமிர்ந்து என்னைப் பார்த்தாள். நெருங்கினேன். இடுப்பை வளைத்துத் தன்னோடு சேர்த்துக்கொண்டாள். நான் நின்றிருந்த கோணத்தில், மேலாக்கு விலகி அம்மாவின் மார்க்குவடு தெரிந்தது. அதில் புதிதாக உண்டாகியிருந்த ரத்தக் காயமும் தெரிந்தது. அரைச் சந்திர வடிவமாய் இருந்த புண்ணில் விபூதிபோல எதையோ அப்பியிருந்தாள் அம்மா.

என்னம்மா இது?

என்று பதறினேன். அம்மா நிதானமாகச் சொன்னாள்.

உங்கள் நைனா குடுத்த பரிசு...

வேகமாக உள்ளே செல்லத் திரும்பியவனை கையைப் பிடித்து நிறுத்தினாள்.

...கோபப்பட்டுப் பிரயோசனமில்லை தம்புடு. அப்புறம் அவரை மாதிரித்தான் நீயும் இருக்கிறாய் என்று ஆகிவிடும்.

அம்மா தீனமாகப் புன்னகைத்தாள். கண்களில் புதிதாகச் சொஞ்சம் நீர் கோத்தது.

...நீ பெரியவன்தான். உன்னிடம் சொன்னால் தப்பில்லை.

அம்மா கறிவேப்பிலை மரத்தை வெறித்தாள். நான் அவள் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

...வருஷக்கணக்காய்ப் பட்டினி கிடக்கிற மனுஷன். வாயையும் கையையும் கட்டி, அவர் முன்னால் சாப்பாட்டுத் தட்டையும் கொண்டுபோய் வைத்தால் ஆங்காரம் வரத்தானே செய்யும்.

அம்மாவின் முகம் மேலும் சிவந்தது. சட்டென்று எழுந்து கிணற்றை எட்டிப்பார்த்தாள். புடவைத் தலைப்பால் கண்ணைத் துடைத்துக்கொண்டாள்.

...மற்றவர்களுக்கும் வாயையும் கையையும் கட்டித்தானே போட்டிருக்கிறது. இதைத் தெரிந்துகொள்ளும் விவேகத்தைக்கூட மழுக்கிவிட்டது வியாதி. பாவம் அவரைச் சொல்லி என்ன குற்றம். நல்ல மனுஷர்தான். பாவம்...

என் புறம் திரும்பி என் தலையை வருடினாள்.

ம றுநாள் காலையில் அதே கிணற்றில் மிதந்தாள் அம்மா. கட்டிலோடு தூக்கிக்கொண்டுபோய்க் காட்டுகிறோம் என்று சொன்னபோது அப்பா அவளைப் பார்க்க மறுத்துவிட்டார். மாலைமாலையாய்க் கண்ணீர் பெருக்கிக்கொண்டு மௌனமாகப் படுத்திருந்த எலும்புக்கூட்டைப் பார்த்தபோது மனம் வெகுவாகத் தவித்தது. இறந்தவளுக்குச் சமமாக இவரும் ஆறுதலுக்குரியவர்தாம் என்று தோன்றியது.

அதற்கப்புறம் ஆறு மாதங்கள் உயிரோடிருந்தார். ஆனால், ஒருவரிடமும் ஒரு சொல்லும் பேசியதில்லை. எல்லாம் சைகைகள்தாம். அதுவும் அவசியப்பட்டால் மட்டும்.

இருந்த ஒரு வடிகாலும் தூர்ந்துவிட்ட பிறகு, ஊறும் ஆத்திரம் அத்தனையும் அவருக்குள்ளேயே கொதித்துக் குமைந்து கொண்டிருந்திருக்கும் என்று பிற்பாடு எனக்குத் தோன்றியது.

உயிர் பிரியும் தறுவாயில் அவர் அருகில் நின்றுகொண்டிருந்தேன். வியாதி பீடித்த பறவைபோலக் கமறிய குரலில் நாலைந்து தடவை சொன்னார்:

பங்கஜமு, நேனு ஒஸ்தானு பங்கஜமு. நேனு இப்புடு ஒஸ்தானு.

அவ்வளவுதான். அடங்கிவிட்டார்.

அந்த கிராமத்துக்கும் எனக்குமான பிறவித்தொடர்பு அறுதியாக அறுபட்டுவிட்டது. அவ்வளவு நாளும் எனக்குள் அடங்கிக் கிடந்த நாடோடி சுதந்திரமாக வெளியேறினான். கால்போன போக்கில் நடக்க ஆரம்பித்தான்.

தஞ்சாவூர் ஜில்லாவில் ஏதோ ஒரு கிராமத்தைச் சென்றடைந்தபோது, சாயங்காலப் பொழுது. கோயிலுக்கு முன்னால் உள்ள மந்தையில் பந்தல் போட்டு மஹாபாரதம் வாசித்துக்கொண்டிருந்தார்கள். பகல் முழுக்க நடந்து ஓய்ந்திருந்த கால்களுக்கு ஆசுவாசம் வேண்டி, கதைகேட்க

உட்கார்ந்தேன். உத்தராயணத்துக்காக அம்புப் படுக்கையில் பீஷ்மர் காத்திருக்கும் கட்டம் நடக்கிறது.

விரும்பியபோது மரணத்தை வரவழைத்துக்கொள்ளும் வரம் பெற்றவரில்லையா பிதாமகர்.

என்னுடைய அம்மாவும் தான் விரும்பியபோதுதான் இறந்தாள். ஆனால், பிதாமகரின் இறப்பு இயற்கையானது அல்லவா? எனக்குள் ஒரு கேள்வி உதித்தது. இறப்பு சம்பந்தமாக இப்படி ஒரு சாத்தியம் இருக்கிறது என்றால், பிறப்பின் விஷயமும் ஒருவேளை இதுதானோ? விரும்பித்தான் வந்து பிறக்கிறார்களோ சகலரும்? கண்ணில் விழுந்த மண் மாதிரி உறுத்த ஆரம்பித்தது இந்தக் கேள்வி.

உபரியாக ஒரு நூறு கேள்விகள் வந்து சேர்ந்தன. மரணத்தறுவாயில் அம்மாவிடம் பேசினாரே அப்பா. அவளை எந்த வடிவத்தில் கண்டார்? ஸ்தூல உடம்பு இல்லாவிட்டால், அவளை இன்னார் என்று எப்படி அடையாளம் தெரிந்தது? அவளிடம் 'இதோ வருகிறேன்' என்று சென்ற அப்பா எந்த இடத்தில் அவளுடன் சேர்ந்துகொள்வார்? அவர்கள் சந்தித்த பிறகு, விட்ட இடத்திலிருந்து அவர்கள் உறவு தொடருமா, புதிதாக ஆரம்பிக்குமா? பூமியில் இருந்த காலங்களில் செயல்பட அனுமதிக்காத இயலாமை, புதிய சந்திப்பில் என்ன செய்யும்? அப்படியென்றால், செயல்பாடு என்பது உடம்பு சார்ந்தது மட்டும் கிடையாதா? அப்பாவுடையது வெறும் மனக்குறளி மட்டும்தான் என்றால், உடம்புக்கும் மனத்துக்கும் அந்தக் கணத்தில் தொடர்பு அறுந்துவிட்டதா? உடம்பின் ஞாபகமும் மனத்தின் ஞாபகமும் வெவ்வேறா? உடம்பிலிருந்து மனத்தை மட்டும் விடுவித்துக்கொள்ள முடியுமா? உடம்பில் நிர்மாணமாகியிருக்கும் கால அடுக்குக்கும் மனத்தில் நிர்மாணமாகியிருப்பதற்கும் நேரடியான தொடர்பு கிடையாதா?

சட்டென்று, பூமியின்மேல் விரிந்து கிடக்கும் ஸ்தூல உலகம் தவிர்த்து வேறு பல உலகங்களும் ஸ்தாபிதமாகியிருக்கிற மாதிரியும் அவை ஒன்றின்மேல் ஒன்று படிந்து கிடக்கிற மாதிரியும் ஒரு பிரமை உண்டானது. இந்த உலகத்தை விட்டுவிட்டு வேறு ஒரு உலகத்துக்குள் புகுந்து பார்த்துவிட வேண்டும் என்றும் ஆசையாக இருந்தது. ஸ்தூல உலகத்துடன் பிணைக்கிற கயிறு அறுபடாமலே இதைச் செய்து பார்க்க வேண்டும்...

விட்டேற்றியாகத் திரியக் கிளம்பினேன் அல்லவா, என் தேசாடனத்துக்கு ஒரு புதிய குவிமுனையும் இலக்கும் உருவாகிவிட்ட

மாதிரி உணர்ந்தேன்.

ர யிலேறினேன். சேருமிடம் பற்றி எந்தத் திட்டமும் கிடையாது. அடுத்த வேளைச் சாப்பாடு பற்றியும் எந்த எதிர்பார்ப்பும் கிடையாது. அன்றையத் தேதிக்கு என்னிடமிருந்த சொத்துக்கள் மூன்றே மூன்று. கும்பகோணம் கோயில் கடையில் வாங்கிய ருத்திராட்ச மாலை. விபூதி நிரம்பிய சுருக்குப் பை. மாற்று உடையாக ஒரேயொரு காவி நிற வேட்டியும் ஜிப்பாவும் கொண்ட தோள் பை.

பயணச் சீட்டில்லாமல் பிரயாணம் செய்யும்போது சில இடைஞ்சல்கள் இருக்கத்தான் செய்தன. ஒரு ரயில் புறப்படும் இடத்தில் ஏறி, சேருமிடம்வரை தொடர்ந்து பிரயாணம் செய்வதற்கு உத்தரவாதம் கிடையாது. பெரும்பாலும் ரயிலின் தரையில்தான் உட்கார்ந்து பயணம் செய்யவேண்டும். அநேகமாகக் கழிவறைக்கு அருகில். பரிசோதகர் இறக்கிவிடும் இடம் கிட்டத்தட்ட அத்துவானக் காடாக இருக்க வாய்ப்புண்டு. அடுத்த ரயில் உடனடியாக வருமா என்று தெரியாது. ஜடாமுடியும் கசங்கிய ஆடையுமாகத் திரிகிறவனை தெருநாய்கள் ஏனோ வேண்டியவனாக நினைப்பதில்லை.

ஆனால், சந்யாசிகளுக்கும் தேசாந்திரிகளுக்கும் மிகப்பெரிய மரியாதை இருந்த நாட்கள் அவை. பெரும்பாலான பரிசோதகர்கள் இப்படி ஒரு ஆள் உட்கார்ந்திருக்கிறான் என்பதையே கவனிக்காத மாதிரித் தாண்டிச் சென்றுவிடுவார்கள். பயணச்சீட்டைக் கேட்டு வந்தவர்கள் வேதனை கவிந்த முகத்துடன் என்னிடம் விபூதி வாங்கிக்கொண்டு காலைத் தொட்டு வணங்கிச்சென்ற சந்தர்ப்பங்களும் உண்டு. கடமையுணர்ச்சி மிகுந்ததால் இறக்கிவிட்டவர்களும்கூட மரியாதைக்குறைவாக நடத்தியதில்லை.

சிறுவனாக இருந்தபோதே ஹிந்துஸ்தானி பாஷை கற்றுக் கொண்டிருந்தேன். சமஸ்கிருதம் வேறு தெரியுமில்லையா. தெரிந்த மனிதர்களிடம் இருந்த தெரியாத கதைகள் மாதிரியே, தெரியாத மனிதர்களிடம் இருந்த தெரிந்த கதைகளைக் கேட்டபடியும் பார்த்தபடியும் ஊர் ஊராகப் போய்க்கொண்டிருந்தேன். ரயிலுக்கு வெளியில் திறந்தவெளி விரிவதற்குச் சமானமாக எனக்கு உள்ளேயும் மாபெரும் மைதானம் விரிவதைப் பரவசமாக அனுபவித்தபடி என் பயணம் தொடர்ந்தது.

வெளியில் புலர்ந்து கிடக்கும் பிரபஞ்சத்துக்குச் சமானமாக உள்ளேயும் ஒன்று மலர்ந்திருக்கிறது வேதம். அதை வேடிக்கை பார்த்துத் தீர்க்க ஒரு ஆயுள் போதாது.

உடம்பும் மனமும் சோர்ந்த சமயத்தில், மத்தியப் பிரதேசத்தின் சம்பல் பகுதியில் ஒரு ஸாதுவிடம் சீடனாகச் சேர்ந்தேன். ஜனங்கள் 'ஸாது பாபா' என்று அவரை அழைத்தார்கள். காற்றிலிருந்து ஒரு பருத்த ருத்திராட்சத்தைப் பறித்தெடுத்து எனக்கு வழங்கினார் அவர். எலுமிச்சம்பழ பருமன் இருந்தது அது. பழைய மாலையைக் கழற்றிவிட்டு இதை மட்டும் கழுத்தில் கட்டிக்கொள்ளச் சொன்னார்.

வருடம் முழுக்க சஞ்சாரத்திலேயே இருப்பவர் அவர். ஒரு மாதம் மட்டும், ஆசிரமத்தில் தங்குவார். சிவலிங்கத்தையும், புஷ்பங்களையும், விபூதியையும், ருத்திராட்சத்தையும் அவர் வரவழைப்பதில் ஏதோ தந்திரம் இருக்கிறது என்றுதான் ஆரம்பத்தில் நம்பினேன்.

ஒருநாள் சாயங்காலம் நடக்கக் கிளம்பினார். நானும் உடன் நடந்தேன். பக்தகோடிகள் நாலைந்துபேர் சற்று இடைவெளிவிட்டுப் பின்தொடர்ந்தனர். தெருவில் பையன்கள் கோலி விளையாடிக் கொண்டிருந்தனர். பாபாவின் காலடியில் ஒரு கோலி உருண்டுவந்தது. சட்டென்று குனிந்து அதை எடுத்தார். தன் இரண்டு கைகளுக்குள்ளும் வைத்து மூடிக்கொண்டார். கோத்த கைகளால் காற்றில் ஒரு மானசீக வட்டம் போட்டார். கூடுபோல இருந்த உள்ளங்கைகளின் மேல்மூடியை லேசாக விலக்கி என்னை அதற்குள் பார்க்கச் சொன்னார்.

கோலிக்காய் பச்சைக்கிளியாய் மாறி இருந்தது. முட்டைக்குள்ளிருந்து எட்டிப்பார்க்கும் கிளிக்குஞ்சு மாதிரி அலகைப் பிரித்துக் காட்டியது. நான் மிரண்டேன். கோலியை எடுக்க வந்த சிறுவனையும் தமது கைக்குள் பார்க்கச் சொன்னார். அவன் பதறிப் பின்வாங்கினான். கைகளைப் பிரித்து கோலிக்காயைத் தரையில் உருட்டிவிட்டார். என் முதுகில் தட்டினார். எதுவும் நடக்காததுபோலத் தொடர்ந்து நடந்தார். சில கஜங்கள் சென்ற பிறகு, மௌனத்தின் இறுக்கம் தாளாமல் கேட்டேன்.

ஜீ, இதெப்படி? வாஸ்தவத்தில் அது கோலிக்காயா, கிளியா?

நீ பார்த்தது என்ன?

நான் இரண்டையும் பார்த்தேனே, அதனால்தானே குழப்பமாய் இருக்கிறது?

பாபா மனம்விட்டுச் சிரித்தார்.

எமது கைக்குள் கிளிக்குஞ்சு இருந்ததா, அல்லது கிளிக்குஞ்சு இருந்ததாக நீ பார்த்தாயா?

இரண்டுக்கும் பெரிய வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லையே.

பாபா மீண்டும் சிரித்தார். அமைதியாக நடந்தார். சட்டென்று ஆகாயத்தை நிமிர்ந்து பார்த்தார். கோடைக்காலச் சாயங்காலம். கிட்டத்தட்ட, நாம் பார்க்கும் எல்லா நிறங்களுமே கொஞ்சம் கொஞ்சம் தீற்றியிருந்தது. மேகங்கள் தன்னிச்சையாகக் கூடியும் விலகியும் கிடந்தன. தோகைவிரித்த மயில் வடிவமாக ஒரு மேகம் நகர்ந்தது. பாபா என்னை நோக்கிக் கேட்டார்.

அது என்ன?

மயில்.

நாம் 'மேகம்' என்கிறோம்.

நின்று மறுபடி சிரிக்க ஆரம்பித்துவிட்டார்.

கூடவே இருந்து, முன் தயாரிப்பு எதுவும் இல்லாமல்தான் அவற்றை வரவழைக்கிறார் என்பதைக் கண்கூடாகப் பார்த்தபிறகு, ஏதோ ஸித்தி கைவரப் பெற்ற மகான் என்பது புரிந்தது. அவருடன் இருந்த ஆறு வருடங்களில் இம்மாதிரி எத்தனையோ சம்பவங்கள். உச்சபட்சமாக, இன்னொன்று செய்தார் அவர். ஆசிரமத்தில் நாங்கள் இருவரும் மாத்திரம் இருந்தோம் அன்று.

பையா, வாசலில் யாரோ வந்திருக்கிறார்கள் போய்ப் பார்.

என்றார். வாசலுக்குச் சென்றேன்.

அங்கே என்ன பார்த்தேன் என்கிறாய் வேதம்? ஸாது பாபாவேதான் அங்கேயும் நின்றுகொண்டிருந்தார். என்னைப் பார்த்துச் சிரித்தார். அவசரமாக உள்ளே பார்த்தேன். உள்ளே பலகையில் அமர்ந்திருக்கும் பாபா என்னைப் பார்த்துச் சிரிக்கிறார். குழப்பமும் பீதியும் எனக்குள் ஊறி உடம்பு முழுவதும் வியர்வையாய் வழிந்தன. பேச்சு வராமல் தவித்தேன். அப்படியே பேசுவதென்றாலும், எந்த பாபாவிடம் பேசுவது? எந்த பாபா நிஜம், எது பிம்பம்?

நான் நின்றிருந்த கோணத்தில்தான் தெரிந்தது, உள்ளே அமர்ந்திருக்கும் பாபாவுக்கு நேரெதிரே, வந்த பாபா நிற்கிறார். காற்றைக் கண்ணாடித் திரையாக மாற்றும் வல்லமை பாபாவுக்கு இருக்கிறது என்று தோன்றியது. வந்தவரின் பிம்பம் சில நொடிகள்தாம் நீடித்தது. ஆனால், அதை பிம்பம் என்று சொல்வதுகூடத் தவறு என்று இப்போது உன்னிடம் சொல்லும்போதுதான் புரிகிறது. உள்ளே உட்கார்ந்திருந்தவரின் கண்ணாடிப் பிம்பம்தான் வெளியே இருந்தது

என்றால், அதுவும் உட்கார்ந்தல்லவா இருக்க வேண்டும்? அவர் நிற்கவல்லவா செய்தார்?

ஆக, காற்று திரைச்சீலையாகவில்லை. தனியொரு உலகமாக ஆகியிருக்கிறது. இந்த உலகத்தில் இருந்தவாறே, இன்னொரு உலகத்திலும் இதேநேரத்தில் இருக்க வல்லவர் போலும் பாபா.

தாமடைந்தவற்றையெல்லாம் எனக்கும் வழங்கச் சித்தமாகவே இருந்தார் அவர். எனக்கு விருப்பமில்லை. ஸித்திகளை அடைவது அல்ல என் உத்தேசம்.

இன்னொரு காரணமும் இருந்தது. நான் தனியாகத் திரியவேண்டும் என்ற இச்சையுடையவன். பாபாவோ கிட்டத்தட்ட சமஸ்தானம்போல ஆகிக்கொண்டு வந்தார். பக்தர்கள் எண்ணிக்கை பெருகி வந்தது. ஆசிரமத்தின் வருமானம் அதிகரித்துவிட்டது.

நான் சேர்ந்துகொண்டபோது பனங்கூரையிட்ட சிறு குடிசையாக இருந்த ஆசிரமம், காரைக் கட்டிடமாக மாறியது. ஸாது பாபாவின் ஆசிரமம் இருந்த கிராமம், சிறுகச்சிறுக ஒரு சிறுநகராகி வந்தது. குவியும் நிதியைக் கொண்டு, பள்ளிக்கூடமும் ஆஸ்பத்திரியும் கட்ட ஏற்பாடுகள் நடந்தன. அவரிடம் கேட்டேன்:

ஜீ, இதெல்லாம் என்ன...?

அவர் என்னை உறுத்துப் பார்த்தார்.

...நாம் எதை நோக்கிச் செல்கிறோம்?

நிதானமாக பதிலளித்தார்.

நம் கையில் என்ன இருக்கிறது? ஜனங்களுக்கு எது நடக்க வேண்டுமென்றிருக்கிறதோ, அது நம் மூலமாக நடக்கிறது. அவ்வளவுதான்.

எனக்கு அந்த பதில் போதவில்லை.

ஆனால், அவரை இந்தக் காலத்தில் பார்க்கிறோமே, கபட ஸாதுக்கள், அவர்களோட ஒப்பிட்டுப் பேசமுடியாது வேதம். அபூர்வமான தரிசனங்களையெல்லாம் சாதாரண வார்த்தைகளாலேயே வழங்கிவிடக்கூடியவர். ஒருதடவை எனக்கு ஒரு கதை சொன்னார். உண்மையில் அது கதை கிடையாது. மீனவனுக்கும் ஒரு ஞானிக்கும் நடந்த சம்பாஷணை.

எவ்வளவு வருஷமாக மீன் பிடிக்கிறாய் அப்பா?

அது இருக்குமே, பத்து நாற்பது வருஷம்.

இதுவரைக்கும் எவ்வளவு மீன் பிடித்திருப்பாய்?

அடேயப்பா, லட்சக்கணக்கில்.

சரி, சமுத்திரத்தில் கோடிக்கணக்கான மீன்கள் இருக்குமில்லையா?

ஆமாம்.

ஆட்கள் பிடித்தது, பெரிய மீன்கள் சாப்பிட்டது இதெல்லாம் போக, வயதாகிச் சாகும் மீன்களும் இருக்கத்தானே வேண்டும்?

ஆமாம் ஐயா.

அப்படிச் செத்து மிதக்கும் மீன்களைப் பார்த்ததுண்டா நீ?

இந்த இடத்தில் பாபா சிரிக்கத் தொடங்கினார். அவரைப்போல, மனத்தின் ஆழத்திலிருந்து சிரிப்பவர்களை அதற்கு முன்பும் பின்பும் வேறெப்போதும் நான் பார்த்தது கிடையாது வேதம். எந்நேரமும் விஷமத்துக்கும் விளையாட்டுக்கும் தயாராக இருக்கிற குறும்புச் சிறுவனின் சிரிப்பு போன்றது அது. எதிராளியிடம் வெகு சுலபமாகத் தொற்றிவிடக் கூடியது... இன்னொரு நாள் அவரிடம் கேட்டேன்.

ஜீ, இறந்தவர்கள் உலகம் ஒன்று இருக்கிறது என்றால், இன்னும் பிறக்காதவர்களும் அங்கே இருக்கத்தானே செய்வார்கள். அவர்கள் ஒருவரையொருவர் எவ்விதம் அடையாளம் காண்பார்கள்?

அவர் பதில் சொல்லவில்லை. சிரித்தார். இதுபோல, வேறு வேறு வார்த்தைகளில் எத்தனையோ முறை அவரிடம் கேட்டுப் பார்த்திருக்கிறேன். ஒன்று, சிரிப்பார். அல்லது என் கேள்வியே காதில் விழாததுமாதிரி அமைதியாக இருந்துவிடுவார். ஒரேயொரு தடவை சிரித்துக்கொண்டே சொன்னார்:

பையா, மனித இதயத்தைப் பற்றிய ஆராய்ச்சிகளெல்லாம் இயக்கம் நின்றுவிட்ட இதயத்தை அறுத்துப் பார்த்து நடப்பதுதான். ஓடிக்கொண்டிருக்கும் இதயத்தை அறுத்துப் பார்த்துக் கண்டறிய முடியுமா? அல்லது, ஒரு கனவைக் கண்டுகொண்டிருக்கும்போதே கண் விழித்து அடுத்தவரிடம் சொல்ல முடியுமா?

எனக்கு இந்தமாதிரியான பதில்கள் திருப்திகரமாய் இல்லை.

தவிர, அவரிடம் நான் வந்து சேர்ந்தபோது என் கைவசம் இருந்த கேள்வி மூட்டையிலிருந்து ஒன்றுகூட உதிராதிருப்பதும் நினைவு வந்தது. பாபா

விளையாட்டாகக் காட்டிவந்த இன்னொரு உலகம் அல்ல என் அக்கறை. அவர் காட்டிய மாற்று உலகம் நடப்பு உலகத்தின் பிரதிபோல, ஜடப்பொருளும் உயிர்ப்பொருளும் நிரம்பிய, சலனங்கள் மிகுந்த, இதே மாதிரி உலகம். நான் அறிய விரும்பியது, உடல்களின் நடமாட்டமற்ற வேறொரு சூட்சும உலகம் என்பதை பாபாவிடம் தெரிவித்தேன். அவர் சொன்னார்.

காலம் மற்றும் வெளியின் வேறொரு ரூபத்தைத் தரிசிக்கும் ஆவல் மட்டும்தான் எம்மைப் போன்றவர்களுக்கு இருக்கிறது. ஆனால், பையா, காலத்தையும் வெளியையும் கடந்து சென்று பார்க்கும் பேராசை இருக்கிறது உனக்கு. நாம் உனக்குப் பிரயோஜனமாக இருப்போம் என்று தோன்றவில்லை.

அவரிடம் உத்தரவும் விபூதியும் வாங்கிக்கொண்டு ஆசிரமத்தை விட்டு வெளியேறினேன்.

மை சூருக்கருகில் ஒரு முன்னாள் கல்லூரி ஆசிரியரிடம் சென்று சேர்ந்தேன். நிலைக்குச் சென்று சேரும்வரை தேர் ஓடித்தானே ஆகவேண்டும்? அவருடைய சொற்பொழிவு ஒன்றை யதேச்சையாகக் கேட்டேன். மாண்டூக்ய உபநிஷத்தும், ஆயுர்வேதத்தின் சாரமும் கலந்த ஓர் உரை அது. உடனே அவருடன் சென்றுவிட வேண்டும் என்று தோன்றிவிட்டது.

தீர்க்கமான கண்கள் அவருக்கு. சன்னமான தங்கக் கம்பியால் சட்டமிட்ட மூக்குக்கண்ணாடியும், ஒளிரும் ஆரஞ்சு நிறத்தில் ஜிப்பாவும், நடுவில் மட்டும் நரைத்து ஓரங்களில் கறுத்திருந்த நீள் தாடியும் அவருக்கு விசேஷமான சோபையை அளித்தன. தோள்பையில் எப்போதும் நாலைந்து புத்தகங்கள் வைத்திருப்பார். கீதையும், திலகர் எழுதிய கீதா ரகஸ்யமும் தவறாமல் இருக்கும். நம்மிடம் பேசும்போதும் ஆங்கிலத்தில்தான் பேசுவார்.

ஆறே வாரங்கள்தாம்.

ஸ்வாமிஜியின் நோக்கம், கடல் கடந்து சென்று ஆன்மிகப் பள்ளி ஆரம்பிப்பதும், வெள்ளைக்காரர்களுக்கு யோகாசனமும் கிழக்கத்திய மெய்யியலும் பயிற்றுவிப்பதுதானே தவிர, பௌதிக வாழ்வின் எல்லையாக மறைத்து நிற்கும் திரையைக் கீறிப் பார்ப்பது அல்ல என்பது புரிந்துவிட்டது.

‘புறநிலை தியானம்’ என்ற புதியவகை தியான முறையை உருவாக்குவதில் ஈடுபட்டிருந்தார் அவர். பொதுவாக, தியானமுறைகள்

பலவும் விழிகளை மூடித் தனக்குள் அமிழச் சொல்கின்றன அல்லவா?

இவர் உருவாக்கிய முறை திறந்த விழிகளுடன் தியானத்தில் ஆழ்வதைப் பயிலச் சொல்கிறது. இமைத் திரையில் காணும் பிம்பத்துக்குப் பதிலாக, பௌதிகமாகத் தென்படும் பிம்பத்தில் மனத்தைக் குவித்துக்கொள்ள வேண்டும். ஆரம்பக் கட்டத்தில், அமர்ந்த நிலையில் இப்படி ஒருமுகப்படுவது மிகவும் சிரமம்.

புதியவர்கள் குப்புறப் படுத்தும் இந்த தியானமுறையைப் பயிலலாம் என்று சொல்வார். தரைக்கு வெகு அருகில் இருக்கும் பார்வையால் பெரும் அளவில் அலைய முடியாது என்பது காரணம். புலன்கள் அனைத்தும் திறந்த நிலையில் புறவுலகிடமிருந்து தன்னை விலக்கிக்கொள்வது மூலம் தன்னையே மூன்றாம் மனிதனாகப் பார்க்கும் விவேகம் கைவரும் என்பது அவருடைய தத்துவம்.

என்னைத் தம்முடைய கண்டுபிடிப்பில் வித்தகனாக்கி, அமேரிக்காவிலோ இங்கிலாந்திலோ ஆசிரியராக நியமிப்பதில் தமக்கு ஆர்வம் உள்ளதாகத் தெரிவித்தார். எனக்கு ஆர்வமில்லை.

ஆறே வாரங்கள். அவர் கைவசம் ஒரு உள்ளங்கை அளவு மாவுதான் இருக்கிறது என்றும் நேரம் கிடைக்கும்போதெல்லாம் அதை மீண்டும் மீண்டும் அரைத்து, புளித்து நொதிக்க வைக்கிறார் என்றும், இதே ரீதியில் நுரைத்துக்கொண்டிருந்தால், அது வெகு சீக்கிரம் விஷமாக மாறும் என்றும் தோன்ற ஆரம்பித்தது. அவரை விட்டும் விலகினேன்.

அந்த சமயத்தில் நாங்கள் தர்மஸ்தலா என்ற இடத்தில் முகாமிட்டிருந்தோம். முன்னிரவில் அவருடைய முகாமிலிருந்து வெளியேறும்போது, இதுவரை நிறுவப்பட்ட சகல அமைப்புகளிலிருந்தும் வெளியேறுவதாகவும், இனி வெளியே என்று ஒரு ஸ்தலம் இல்லை என்றும், உந்துதல் அதிகரித்துவிட்டால் என்னிலிருந்து மட்டுமே வெளியேறுவதற்கிருக்கிறது என்றும் அழுத்தமாக உணர்ந்தேன். கர்நாடகத்தின் குளிர்காலம் இருளடர்ந்த தன் பசுமைக்குள்ளும் இதமான தண்மைக்குள்ளும் நடந்துவரும்படி என்னைக் கூப்பிட்டது.

கர்நாடகாவின் கர்க்கலாவுக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில்தான் என் போக்கை மிகத் தீவிரமாகத் திசை திருப்பிய மகானைச் சந்தித்தேன்.

வழக்கம்போல நடந்து நடந்து கால்கள் சோர்ந்தபோது, அந்த ஊரின் எல்லையை அடைந்திருந்தேன்.

மிகச் சிறிய கிராமம். ஊரின் பிரதான அம்சங்களாக இரண்டு

விஷயங்கள் உடனடியாகத் தட்டுப்பட்டன. ஒன்று, அந்த ஊரின் சுத்தம். இரண்டாவது, அந்த ஊரின் காற்றில் நிரம்பியிருந்த கோலாகலம். ஆரஞ்சு நிறக் கொடிகளும், தோரணங்களும் அங்கங்கே பறந்துகொண்டிருந்தன. மறுநாள் சமண முனிவர் ஒருவர் அங்கே வருகை தரவிருக்கிறார் என்று சொன்னார்கள்.

அங்கேயிருந்த புராதனமான கோயிலில் அன்னதானம் நடந்தது. ஜைனர்களுக்குத் தனிச் சாப்பாடு. பிறருக்கு வேறு சாப்பாடு. அன்றிரவு அங்கே தங்கினேன்.

மறுநாள் காலையில் விடிந்தபோது படர்ந்த வெளிச்சம் அன்றுவரை நான் அனுபவித்திராத ஒளிர்வுடன் இருந்தது. சொல்லத் தெரியாத சந்தோஷமும் துக்கமும் மாறிமாறிப் படர்ந்தன எனக்குள். பத்து நிமிஷம் மனம் வெகு உல்லாசமாக இருக்கும். காற்றில் ஏறிப்பறந்து விடலாம் என அவ்வளவு தினவாக இருக்கும்.

சட்டென்று எல்லாம் அடங்கிவிடும். தீராத ரணத்தால் அவதிப்படுகிறவன்போல வெகுவாகச் சோர்ந்துவிடும். கோயிலுக்கு எதிரிலிருந்த மாபெரும் குளத்தில் மூழ்கிப் பிராணனை விட்டுவிட வேண்டும் என்று தோன்றும்.

மனத்தில் ஏதோ ஒருவிதக் கூர்மை கூடிவிட்டது மாதிரி உணர்ந்தேன். எல்லாப்புறமும் திரும்பிக் கீறிக்கொண்டிருந்தது அது.

எழுந்து குளத்தை நோக்கி நடந்தேன். ஒருவருக்குப் பின்னால் ஒருவர் என்று ஒரு வரிசை மட்டுமே கொள்ளும் படகு நின்றிருந்தது. இருபதுபேர் வரை செல்லலாம். படகுக்காரனிடம் ‘என்னிடம் பணம் இல்லை, நானும் ஏறிக்கொள்ளலாமா’ என்று விசாரித்தேன். ‘இன்று முழுவதும் சவாரிக்கு யாரிடமும் காசு வாங்கப் போவதில்லை, கோயில் நிர்வாகம் மொத்தமாக ஒரு தொகை தருவதாகக் கூறிக் குத்தகைக்கு அமர்த்தியிருக்கிறது’ என்றான். ஏறி அமர்ந்துகொண்டேன். ஆட்கள் நிரம்பியதும் படகு கிளம்பியது.

நிச்சிந்தையாக மல்லாந்து கிடக்கும் நீர்ப்பரப்பை வகிர்ந்து முன்னேறுகிறது படகு. அது கீறிச்சென்ற கோடு உடனடியாக மறைவதையும், தன் உடம்பில் கீறிய அனுபவத்தை விழுங்கிவிட்டுப் பழைய நிலைக்குக் குளம் திரும்புவதையும் வேடிக்கை பார்த்துக்கொண்டே போனேன். தன்னுடைய ஆழம் முழுவதும் மர்மங்களை நிரப்பிக்கொண்டு சலனமின்றிக் கிடந்த குளத்தைப் பார்த்துத் தீரவில்லை எனக்கு.

நீர்ப்பரப்பின் மையத்தில் இருந்த கோயிலுக்கு இட்டுச் சென்றது படகு. நான்கு திசைகளையும் பார்த்தவாறு நான்கு கரும்பளிங்குத் தீர்த்தங்கரர்கள் நின்றிருந்தார்கள். அலங்காரம் எதுவுமின்றி நிறை அம்மணமாக நிற்கும் தீர்த்தங்கரர்களை விட்டுக் கண்களை அகற்றமுடியவில்லை. திருத்தமான சிற்பங்கள். ஒருவர் காலிடுக்கின் வழி, மறுவாசலில் நிற்கும் மற்றவரும், அவரையும் தாண்டி பார்வையெட்டும் தொலைவுவரை விரிந்த காட்சியில் மறுபுறம் இருந்த குன்றும், அதன் உச்சிக் கோயிலும் தென்பட்டன. பார்த்துக்கொண்டே நின்றேன். ஒரு சிறு கூட்டம் உதயமாகி எதிர்க்கரைக் கோயிலுக்குள் நுழைந்தது.

அவசரமாகப் படகுக்குத் திரும்பினேன். வரும்போது நகர்ந்ததை விட இப்போது படகு மந்தமாக நகர்வதாகப்பட்டது. கரையை நெருங்கும்போது புரிந்தது, மனத்தின் வேகம் அதிகமாய் இருப்பதுதான் காரணம் என்று.

கோயிலுக்குள் இருந்த சிறு திண்ணையில் முனிவர் அமர்ந்திருந்தார். கால்கள் ஸ்வஸ்திக் சின்னம்போலத் தரையில் படிந்திருக்க, முன்புறம் இருந்த கணக்குப்பிள்ளை மேஜையில் கைகளை ஊன்றி இருந்தார். அவருக்கு வலதுபுறம் ஒரு கிழவர் உட்கார்ந்து முனிவரின் பாதங்களைப் பிடித்துவிட்டார். கிழவரின் ஜிப்பாவில் இருந்த பொத்தான்களில் பதித்த உயர்ஜாதிக் கற்கள் அவருடைய கைகள் அசையும்போது மினுங்கின.

கிழவர் பிடித்துவிடுவது யாருடைய பாதங்களையோ என்ற பாவம் இருந்தது முனிவரின் முகத்தில். ஆனால், அந்த முகத்தைவிட்டுப் பார்வையை அகற்றவிடாத ஆகர்ஷ்ணமும் இருந்தது.

வயது இருபதிலிருந்து நாற்பதுக்குள் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். வெயிலிலும் மழையிலும் புடம் போடப்பட்ட உடம்பிலும் முகத்திலும் வயதை நிர்ணயம் செய்வதற்கான தடயம் எதுவுமே இல்லை. கிராப் தலையிலும் சீரற்று மண்டிய குறுந்தாடியிலும் அடர்ந்த சுருட்டை முடிகள் கருகருவென்றிருந்தன.

முன்புறம் சுமார் நாற்பது ஐம்பது பேர் உட்கார்ந்திருந்தார்கள். முக்காடிட்ட ஒரு பெண்மணி எழுந்து அவரிடம் ஏதோ சொன்னாள். அவள் அருகில் இருந்த சிறுவன் கையில் ஒரு பூவை வைத்துக்கொண்டு ஒவ்வொரு இதழாகப் பிய்த்து எறிந்துகொண்டிருந்தான். பத்து வயது இருக்கலாம் அவனுக்கு. கூர்ந்து கவனித்தபோது, அவன் சரியாகப் படிக்கமாட்டேனென்கிறான் என்று ஆதங்கப்படுகிறாள் தாயார் என்பதுபோலப் புரிந்தது.

குழந்தைகள் அப்படித்தான் இருப்பார்கள்.

என்று ஹிந்துஸ்தானியில் சொல்லிச் சிரித்தார் அவர். சிரிக்கும்போது அவரே குழந்தை மாதிரித்தான் இருந்தார். அடிக்கடி தலையைச் சொறிந்துகொண்டார். பித்தனின் கண்கள்போல ஓரிடத்தில் குவியாது சலிக்கிற, அபூர்வமான வெண்ணிறம் கொண்ட, விழிகள். அந்த அம்மாள் அவர் அருகில் சென்றாள். அவர் நீட்டிய வலது புறங்கையைத் தொட்டு வணங்கிவிட்டு, பின்பக்கமாகவே நகர்ந்து வந்து நின்றுகொண்டாள்.

கூடியிருந்தவர்களில் ஒவ்வொருவராக எழுந்து அவரவர் குறைகளையும் பிரார்த்தனைகளையும் சொல்லிவந்தார்கள். சிலர் அவருடைய பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டார்கள்.

கால்கள் மரத்துவிட்டதை உணர்ந்தேன். கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் நின்றுகொண்டிருந்திருக்கிறேன்.

அவர் எழுந்தார். என் வாழ்வின் போக்கை அதிரடியாக மாற்றியமைத்த தருணம் அது. திகம்பரர்களைப் பற்றி முன்னமே கேள்விப்பட்டதுண்டு. ஏன், சற்றுமுன் தீர்த்தங்கரர்களின் ஆளுயரச் சிலைகளைப் பர்ர்க்கத்தானே செய்தேன். நேரில் பார்க்க வாய்த்ததில்லை. இந்த முனிவர் ஒரு திகம்பரர் என்றும் நான் அறிந்திருக்கவில்லை, வேதம்.

நிறை அம்மணமாக ஒரு வாலிபன் ஜனக்கூட்டத்தின் முன்னால் எழுந்து நின்றபோது, பல வருஷங்களாக எனக்குள் நிர்மாணமாகியிருந்த மாபெரும் கட்டடம் ஒன்று சடசடவென்று நொறுங்கிச் சரிகிற மாதிரி இருந்தது. அடுத்த வேளைச் சாப்பாட்டையும், உறக்கத்தில்கூட வஸ்திரம் விலகிவிடாமல் காக்கும் கவனத்தையும் சற்றும் பிடிவிடாத மனத்தின்மீது அவமானம் பொங்கியது.

விதைகளின்மேல் சாதுவாகப் படுத்திருந்த உறுப்பையும் அதை மறைக்க முயன்று தோற்ற தேனடை வடிவ சுருள் முடிக் கற்றையையும் தேனீபோல என் பார்வை சுற்றிச்சுற்றி வந்தது.

உட்புறம் தாழிட்ட குளியலறைக்குள் இருக்கிற மாதிரி, அத்தனை ஜனங்களுக்கு மத்தியில், உள்ளும் புறமும் தனியாக, அதிசுதந்திரமாக இருக்கக் கிடைத்துவிட்டது அவருக்கு என்று தோன்றியது. அவருடைய முன்னிலையில், நான் இருக்கிறேன் என்ற உண்மை சுமக்கமுடியாத பாறாங்கல்போல என் தோள்களில் அழுத்தியது. எல்லாருக்கும், எல்லாவற்றுக்கும் நடுவில் இப்படிவந்து சிக்கிக்கொண்டுவிட்டோமே என்று எனக்கு ஏக்கம் பொங்கியது.

முனிவர் நகர்ந்தார். எனக்குள்ளிருந்து பொங்கிய உஷ்ணம் துரத்த,

ஓடிச்சென்று அவர் பாதங்களில் வீழ்ந்தேன். அவர் நின்றுவிட்டார். குமுறிக் குமுறி அழுதேன். வருஷக்கணக்காக நான் அலைந்து திரிந்து உடம்பிலும் மனத்திலும் சேகரித்திருந்த அலுப்பெல்லாம் அவர் காலடியில் நான் கிடந்தபோது கற்பூரம்போல ஆவியாகி, மெல்லிய இறகுபோல நான் எடையற்றவனாக மாறுவது புத்தம்புதிய அனுபவமாக இருந்தது.

அவர் குனிந்து என் தலையைத் தொட்டார். உச்சந்தலையில் பனிக்கட்டி ஒன்று தீண்டி விலகியதுபோலிருந்தது. எழுந்து நகர்ந்து அவருக்கு வழிவிட்டேன். அவர் நடந்து சென்று ஒரு தூணில் சாய்ந்து நின்றுகொண்டார். அவரைச் சுற்றிலும் நின்றுகொண்டிருந்தவர்களின்மீது படிந்து விலகிய பார்வை யாரையுமே பார்க்கவில்லை என்று தோன்றியது எனக்கு. அவர் தம்மைப் பார்க்கவில்லை என்பதால் பிறரையும் பார்ப்பதில்லை என்றும் தோன்றியது. எதிர்ப்படும் உயிர்ப்பொருட்களும், ஜடப்பொருட்களும் வெறும் திரைகள் என்றும் அவற்றை ஊடுருவிப் பார்க்கும் கதிர்வீச்சுதான் அவருடைய பார்வை என்றும் விதவிதமாகக் கற்பித்துக்கொண்டது என் மனம்.

ஆனால், விசிப்பு அடங்காத குழந்தை மாதிரித்தான் இருந்தேன். அடிவயிற்றில் கிளர்ந்த குமுறல் பின்னர் இரண்டு வாரங்கள்வரை நீடித்தது.

கோயிலைவிட்டு வெளியேறி, என் தோள்பையைக் குளத்தில் வீசினேன். உடைகளையும் கழற்றியெறிந்தேன். ஆனால், வேதம், கோவணத்தின்மீது கைவைத்தபோது தைரியம் போய்விட்டது...!

அ வரோடேயே கிளம்பிவிட்டீர்களோ?

அட, அட. அவர்களெல்லாம் மகான்கள் வேதம். பரப்பிரும்மம் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்களே, அது. நம்மை மாதிரிச் சாதாரணர்கள் அண்ட முடியாது. நெருப்பை ஈ மொய்க்க முடியுமா என்ன?

குரு சிரித்தார்.

...ஆ னால், திகம்பரரைத் தரிசித்துத் திரும்பிய பிறகு, மனத்தின் வெறுமை வெகுவாக அதிகரித்துவிட்டது. பல வருஷங்களுக்கு முன்னால் என் பெற்றோர் இறந்தவுடன் நான் எங்கிருந்து ஆரம்பித்தேனோ அதே இடத்துக்குத் திரும்ப வந்து சேர்ந்துவிட்ட மாதிரி

எனக்குள் ஒரு வெற்றிடம் உருவாகிவிட்டது. காரண காரியங்களுக்கு வெளியில் அபத்தமாக சஞ்சரிக்கிறவன் மாதிரி உணர்ந்தேன்.

இந்த நிலை அதிகநாள் நீடிக்கவில்லை. அருணாசலப் பிரதேசத்தில் ஒரு சுடுகாட்டுக்கு வெளியில் அவரைப் பார்த்தேன். உடம்பு முழுக்கச் சாம்பல் பூசிய பைராகி அவர். பைராகிகள் சுடுகாட்டைத் தவஸ்தலமாகக் கருதுகிறவர்கள் அல்லவா? கலைந்து அடைஅடையாகத் திரி கோத்த சடை, வருஷக்கணக்காக வெட்டப்படாது இஷ்டத்துக்கும் வளர்ந்து நீண்டு அழுக்குச் சேர்ந்த நகங்கள். கடைவாயில் சதா ஊறிக்கொண்டிருக்கும் எச்சில், ஓரிடத்தில் நிலைக்காது சுழன்றவாறிருக்கும் விழிகள். சுத்தம் செய்யப்பட்ட கபாலம் ஒன்றைக் கையில் வைத்திருந்தார்.

இந்தக் கோலத்துக்குச் சற்றும் பொருந்தாத சரிகைச் சால்வையை மேலுடம்பில் போர்த்தியிருந்தார். யாராவது அன்பளித்ததாக இருக்கும். சாயங்கால ஒளியில் சுவர்ணத்தகடு மாதிரி மின்னியது அது. நடையும் ராஜநடைதான். தன் உத்தரவுக்காகக் காத்திருக்கும் லட்சக்கணக்கான பரிவாரங்களின் மரியாதையை ஏற்றுக்கொள்கிற மாதிரி கம்பீரமாக நிமிர்ந்த நெஞ்சும் உயர்த்திய தலையும்.

சுடுகாட்டுக்குள் சென்றவரை மௌனமாகப் பின்தொடர்ந்தேன். எனக்குள் கொசுக்கள்போல சதா பறந்து அலைந்துகொண்டிருந்த கேள்விகள் அத்தனையும் தற்காலிகமாக உறைந்துவிட்ட மாதிரி ஒரு பிரமை. வெட்டியான்கள் இருவர் சேர்ந்து ஒரு பிரேதத்தை எரித்துக்கொண்டிருந்தார்கள். ஒருவன் இளைஞன். மற்றவர் வயோதிகர்.

கொழுந்துவிட்டு ஆளுயரம் எரிந்துகொண்டிருந்த சிதையின் கால்புறம் அரைப் பத்மாசன நிலையில் அமர்ந்தார். என்னையும் உட்காரச் சொல்லி சமிக்ஞை செய்தார். மறுப்பின்றி அமர்ந்தேன். எரிந்துகொண்டிருப்பது ஆண் உடம்பா, பெண்ணா என்று எனக்குள் ஒரு குறுகுறுப்பு உயர்ந்தது. ஓரிரு கணங்கள் நீடித்துவிட்டு, தானே அடங்கியது.

பைராகி தமது இரண்டு கைகளையும் நன்றாக நீட்டினார். ஒரே ஒரு தர்ப்பையை இரண்டு நுனிகளையும் கைக்கொன்றாகப் பிடித்தபடி எரியும் சவத்துக்கு நேரே பிடித்தார். ஜ்வாலையின் உயரத்தை அளக்க முனைகிறவர் மாதிரி. உரிய தருணத்தில் மேல்புறக் கையை விடுவித்துக்கொண்டு வாள்போல தர்ப்பையைச் சிதையின்மீது பாய்ச்ச இருக்கிறவர் மாதிரி.

எலும்புகள் படீர் படீரென்று வெடிக்கும் சப்தம். ரோமமும் எலும்புக்கூழும் பொசுங்கும் நாற்றம். திடீரென்று விறைப்புக் கொண்டு எழுந்த உடலத்தைக் கையிலிருந்த தடியால் ஒரு சாத்துச் சாத்தினான் அந்த இளம் வெட்டியான். நொறுங்கிப் பழைய நிலையில் கிடக்க மீண்டது அது. பைராகி குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்.

நீட்டிப் பிடித்திருந்த தர்ப்பையை நெருப்பில் வீசினார். வீடு திரும்பும் முன், மணிக்கணக்காக முனைந்து தான் கட்டிய மணல் வீட்டின்மேல் தானே ஏறிக் குதித்து நசிக்கும் சிறுவன் மாதிரி அப்படியொரு சந்தோஷம் பொங்கச் சிரித்துக்கொண்டே எழுந்தார். மயானத்தைவிட்டு வெளியேறும்போது அவருடைய நடையில் லேசாக ஒரு நாட்டியத் தன்மை கூடியிருந்ததைக் கண்டேன்.

அவர் போகுமிடமெல்லாம் கூடவே போய்க்கொண்டிருந்தேன். இத்தனைக்கும் எங்களுக்குள் ஒரு சொல்கூட பரிவர்த்தனை செய்துகொண்டதில்லை. முதல்நாள் சுடுகாட்டில் அமரச் சொல்லிச் சைகை செய்தாரே, அதைத் தவிர, என் முகத்தை அவர் பார்த்ததாகவே நினைவில்லை. ஒருவருக்கொருவர் சொல்லவோ கேட்கவோ விஷயமும் இல்லாத மாதிரித்தான் நானும் உணர்ந்தேன்.

கபால ஓட்டில் தாம் பெற்ற யாசகத்தில் எனக்கும் பங்கு தருவார். முதல் தடவை கடுமையான அருவருப்பு. விழுங்கவே முடியாமல் கஷ்டப்பட்டேன். பல பக்குவங்களின் கலவை ருசி. கண் முன்னால் தெரியும் எலும்புப் பாத்திரம். வாந்தி வெளியேறுமோ என்கிற அளவுக்குக் குமட்டியது. ஆனால், ஒரே ஒருவேளை மட்டும்தான். இரண்டாவது வேளையில் அது எனக்கொரு பொருட்டாகவே படவில்லை. இரண்டாவது வேளை எத்தனை நாள் கழித்து வந்தது என்கிறாய்? மிகச் சரியாகப் பதினைந்து நாள் கழித்து. அதுவரை நான் பசியே உணரவில்லை, வேதம்.

குளிர்காலம் தொடங்கியது. வட இந்தியாவின் குளிர்காலம்தான், உனக்குத் தெரியுமே. நான் வெறும் கோவணத்தோடு அலைகிறேன். பைராகி தான் பூசிக்கொள்கிற மாதிரி சுடுகாட்டுச் சாம்பலை எனக்கும் உடம்பு முழுவதும் பூசிவிடுவார். அம்மாவின் வயிற்றுக்குள் இருக்கிற மாதிரி ஒரு வெதுவெதுப்பு எந்நேரமும் இருந்துகொண்டே இருக்கும், வேதம். சாப்பாடும் அப்படித்தான். வயிற்றுக்குள் இருக்கும் சிசுவுக்கு அதன் பிரயத்தனம் இல்லாமலே சாப்பாடு உடம்புக்குள் வந்து சேர்கிற மாதிரித்தான். பசி என்ற உணர்வே தட்டாது.

அவரோடு முழுசாக ஒரு வருஷம் இருந்தபிறகு சிறுகச் சிறுக ஓரிரு

வார்த்தைகள் பேசத்தொடங்கினார்... பொறு. கவனம். சரி. ஆஹா என்கிற மாதிரி நாலைந்து சொற்களுக்குள் அடங்கிவிடும் அவருடைய கைவசம் இருந்த வார்த்தைகளின் பட்டியல். மற்றபடி, அவருடைய மௌனத்தின் உட்புறம் என்ன நிரம்பியிருந்தது என்று எனக்குத் தெரியாது. நான் எனக்குள் ஊறிப் பெருகும் கேள்விகளைச் சீராட்டியவாறு, விசுவாசமான செல்லப் பிராணி மாதிரி, பின் தொடர்வேன்.

ஓரிடத்தில் தங்காமல் போய்க்கொண்டேயிருப்போம். ஊர்களுக்குள் தங்கமாட்டோம். பெரும்பாலும், சுடுகாட்டுக் கூரைகள், பாழடைந்த கட்டடங்கள், ஆற்றோர மரத்தடிகள் என்று வெறிச்சோடிய இடங்களில்தான் இரவு படுக்கை. எரிந்தடங்கிய சிதையின்மீது சர்வசாதாரணமாக அவர் படுத்துறங்குவார். எனக்கு அந்தப் பக்குவம் கடைசிவரை கைவரவில்லை.

சிதிலமான கட்டடம் ஒன்றில் தங்கியிருந்தோம், ஒருமுறை. அதன் வாசலில் ஒரு நாய் செத்துக் கிடந்தது. நாங்கள் போய்ச்சேர்ந்தது முன்னிரவு நேரம். நாலைந்து அறைகள் கொண்ட செங்கல் கட்டடம் அது. மைய அறையின் ஒரு ஓரத்தில் மட்டும் கூரை ஒட்டிக்கொண்டிருந்தது. வழக்கத்துக்கு விரோதமாக, கூரைக்கு நேராகச் சென்று படுத்துக் கால்களை நன்கு நீட்டி மல்லாந்தார். கைகள் வயிற்றின்மீது கோத்தமாதிரிப் படிந்தன. கூரையை வெறித்துப் பார்த்துக்கொண்டே இருந்தவர், நிதானமாக இமைகளை மூடினார்.

அவருடைய சுவாசத்தில் விசித்திரமான ஒன்றை உணர்ந்தேன். காற்று உள்ளே போகாமல் வெளியேறிக்கொண்டு மட்டுமே இருந்தது. இதற்கேற்றாற்போல, வயிறு குழிந்துகொண்டே போனது. மூச்சு வெளியேறும் ஒலி நின்ற கணத்தில், வாசலில் கிடந்த நாய் எழுந்தது. உடம்பை நெட்டிச் சோம்பல் முறித்தது. பழைய நிலைக்குத் திரும்பி இரண்டு காதுகளையும் சடசடவென உலுக்கிக்கொண்டது. ஓடிவிட்டது.

மூன்று நாட்கள் அந்த உடம்பின் அருகிலேயே நிலைமாறாமல் காவலுக்கு உட்கார்ந்திருந்தேன். என்னுடைய உடம்பில் எந்த இடமும் மரத்துப்போகவில்லை, இயற்கை உபாதைகள் எதுவும் எழவில்லை என்பதை மட்டுமல்ல, பைராகியின் பூத உடம்புக்கு அருகில் வந்த எறும்புகள் மற்ற பூச்சிகளெல்லாம் நெருப்பை அண்டிய மாதிரிப் பதறி விலகுவதையும் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். அந்த இடம் முழுவதும் சண்பக மணம் நிரம்பியிருந்தது.

நாலாவது நாள் அதிகாலையில் நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டு

ஓடிவந்தது அந்த நாய். பழைய இடத்தில் பழையவிதமாகவே வீழ்ந்தது. இவர் கண்களைத் திறந்தார். என்னிடம் ஒரே ஒரு சொல் சொன்னார்:

பாக்கி.

தொடர்ந்து மானசீகமாக எதையோ அவர் எனக்குள் செலுத்த முயல்கிற மாதிரியும் நான் பிடிவாதமாகத் தடுத்து மறிக்கிற மாதிரியும் உணர்ந்தேன். இப்படிப் பலதடவைகள் நடந்திருக்கிறது.

கடைசியாக, காமரூபத்தில் இருந்தோம். பொது வழக்கில் அந்தப் பிராந்தியத்தை அஸ்ஸாம் என்றல்லவா சொல்கிறார்கள். பிரம்மபுத்ராவின் கரையில் வந்து சேர்ந்தோம்.

நாலைந்து நாட்களாகவே பைராகியின் நடையில் வேகம் குறைந்திருந்தது. ஆழத்தில் எதையோ ஆராய்கிறவர் மாதிரி ஒரு பாவனை. ரோமம் மண்டிய முகத்தில் புதியதொரு தீவிரம் வந்து சேர்ந்திருந்தது. சிரித்தறியாத முகம் அது, முன்பின் தெரியாதவர்கள் பார்த்தால் உயிர்பயம் தட்டிவிடும். அப்படியொரு முரட்டுக் கண்கள்.

வழக்கம்போலவே, நான் தன்னிச்சையாக ஏதேதோ யோசித்துக் கொண்டு நடந்தேன். இந்தப் பிரதேசத்துக்குக் 'காமரூபம்' என்று பெயர் வந்திருக்கிறதே, பூமண்டலம் முழுவதுமே காம ரூபம் தானே. 'காமம்' என்ற ஆதார வார்த்தை 'சரீரச் சேர்க்கைக்கு ஆசைப்படுவது' என்ற குறுகிய அர்த்தத்தைப் பாமர மனத்தில் எப்படி வேர் இறக்கியது? காம க்ரோத லோப மத மாச்சரியம் என்று பட்டியலிடுகிறார்களே, காமத்தை ஒழித்துவிட்டால் பின்னோடே எல்லாம் தொடர்ந்து ஆவியாகிவிடும் என்றறிந்து முதற்சொல்லாக அதை அமைத்தவன் எவ்வளவு பெரிய மேதை என்றெல்லாம் யோசித்துக்கொண்டே நடக்கிறேன்.

முற்பகல் வேளை. வற்றாத ஆற்றின் கரையிலுள்ள மரங்களிலும் ஒட்டிப் பரந்திருக்கும் வயல்களிலும் நீர்ப்பரப்பின் அலையாட்டத்திலும் உணக்கையாய்க் காய்ந்த குறுவெயிலிலும் ஒருவித சாந்தம் படர்ந்திருந்தது. தன்னுள் நுழைகிற எவரையும் சுலபமாகத் தொற்றிக்கொள்கிற சாந்தம். காலாதிகாலமாய் வேரூன்றியிருக்கிற, அருள்வதை மட்டுமே தன் இயல்பாகக் கொண்ட பெருங் கருணை ஒன்று வீற்றிருப்பது போன்ற சாந்தம்.

பரந்த ஒரு மரத்தினடியில் மெத்தென்று படர்ந்திருந்த புல்தரையில் நீட்டி நிமிர்ந்து படுத்தார் பைராகி. முன்பு ஒருமுறை அந்த நாய் மண்டபத்தில் படுத்தாரே, அதே விதமாக. ஒரேயொரு வித்தியாசம், கால் கட்டைவிரல்கள் இரண்டையும் ஒன்றிலொன்று பின்னிக்கொண்டார்.

விழிகளை மலர்த்தி என் முகத்தை நன்றாக உற்றுப் பார்த்தார். முன்பு ஒருபோதும் பார்த்திராத இதம் கொண்ட பார்வை. நான் சற்றுமுன் உணர்ந்த சாந்தம் மனிதக் கண்கள் வழியாக என்னை நோக்குகிறது என்று பட்டது எனக்கு. முதுகுத்தண்டில் ஒரு சில்லிப்பை உணர்ந்தேன்...

கண்களை இறுதியாக மூடிக்கொள்வதற்கு முன்னால் வழக்கம்போல ஒரு வார்த்தை சொன்னார் பைராகி:

அவ்வளவுதான்.

ஆனால், அவர் சொல்வதற்கு முன்னாலேயே எனக்கு அது தெரிந்திருந்தது, வேதம். மூன்றே முக்கால் நாழிகை அவரைப் பார்த்துக்கொண்டு, சலனமின்றி அருகில் அமர்ந்திருந்தேன். பனிக்கட்டிபோல நன்கு குளிர்ந்துவிட்ட உடம்பை பிரம்மபுத்ராவில் இழுத்து விடுத்தேன். நதியின் போக்கில் இழுபடத் தொடங்கியது அது. சிறு புள்ளியாகத் தென்படும்வரை மிதந்து சென்று, தொடுவானத்தில் புதைந்து காணாமல் போகும்வரை பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, என் போக்கில் தொடர்ந்தேன்.

நாலைந்து மைல் தொலைவு நடந்திருப்பேன். தன்னிச்சையின் வேகம் விசை கூட்டியிருந்தது என் நடையில். வெயிலின் உறைப்பு மட்டுப்படத் தொடங்கிய பிற்பகல். வலுத்து வீசிய காற்றில், மஞ்சள் நிற இலைகள் நாலைந்து மரத்திலிருந்து உதிர்ந்து இறக்கை அசைக்காத சின்னஞ்சிறு பட்சிகள்போலக் காற்றில் மிதந்து தரையில் சென்று படிந்தன.

சட்டென்று அந்த வெறுமை உறைத்தது. இவ்வளவு நாளும் எந்நேரமும் உடன் நடந்து வந்துகொண்டிருந்த இன்னொரு உடம்பு இப்போது இல்லை.

நின்றுவிட்டேன். அது ஓர் அறுவடைக்கால வயல்வெளி. ஈக்கள் பறந்தலைவதுபோல ஜனங்கள் சுறுசுறுப்பாக நடமாடிக் கொண்டிருந்தார்கள். ஒரு உடம்பு காலி செய்த இடத்தில் ஏகப்பட்ட உடம்புகளின் நடமாட்டம் மண்டியிருப்பது தெரிந்தது. முற்றிய கதிர்கள் தானியமாகவும் தாள்களாகவும் பிரித்து, தானியம் மட்டும் குப்பலாகச் சேகரமாகிக் கொண்டிருந்தது மாபெரும் மாந்திரீக உண்மையாய்த் தென்பட்டது. ‘சேர்த்துவைக்க எதுவும் இல்லாதபோது இழப்பு என்றும் ஒன்றும் கிடையாது’ என்று ஒரு வாக்கியம் உதித்தது எனக்குள்.

சுமார் நான்கு வருட காலம் அவருடனே இருந்து வந்திருக்கிறேன். அவருடைய பெயர் எனக்கத் தெரியாது என்பது பெரிய விஷயமில்லை, என்னுடைய பெயரையும் அவர் விசாரித்தறிந்தது கிடையாது. பெயரற்ற

இரண்டு வியக்திகள் சில காலம் சேர்ந்து திரிந்து வந்திருக்கின்றன. மேற்கொண்டு எதுவும் இல்லை.

நேரடியாகப் பார்த்தும், மானசீகமாகவும் அவரிடம் கற்றது எவ்வளவோ இருக்கும். அவரோடு இருந்தது எவ்வளவு முக்கியமான சம்பவமோ, அதே அளவுக்கு அது முக்கியத்துவம் எதுவுமே இல்லாதது என்றும் பட்டது. எனக்குள் வந்து சேர்ந்தாகவேண்டிய ஞானங்களும் அஞ்ஞானங்களும் ஏதோ ஒரு ரூபத்தில், ஏதோவொரு மார்க்கத்தில், வந்துசேரத்தான் செய்யும்.

அவ்வளவுதான், சில கணங்கள் குலைந்திருந்து சமநிலை எனக்குள் மீண்டும் குடியேறிவிட்டது. அனிச்சையாக நடந்து பழகிய கால்கள் என்னைச் சுமந்து நகர்ந்தன. அவர்தாம் கடைசி பின்னர் ஒரு குருவையும் ஏற்றுக்கொள்ள அவசியமில்லாதவனாகிவிட்டேன்.

ஸித்திகளைப் பொறுத்தவரை ஸாது பாபாவுக்குக் கொடுத்த அதே இடத்தைத்தான் பைராகிக்கும் நான் உள்ளூறக் கொடுத்திருந்தேன். ஆனால், அவருக்கும் இவருக்கும் இருந்த மிக முக்கியமான வேறுபாட்டையும் சொல்லத்தான் வேண்டும். இவர் முழுக்க முழுக்க வேறு உலக வாசி.

எனக்கு இருந்த விருப்பம் என்ன தெரியுமா, வேதம். இதுமாதிரியான ஸித்திகளெல்லாம் கைக்கொள்ளாமலே அந்த வேற்றுலகத்தை நான் தரிசிக்க வேண்டும். மனிதராய்ப் பிறந்த சகலருக்கும் இயலக்கூடிய விஷயமாய் அது இருக்க வேண்டும். இந்த ஒரு எண்ணமே போதுமானதாய் இருந்திருக்கும் போல பைராகி உத்தேசித்த பல சமாசாரங்களை எனக்குக் கற்பிக்க முடியாமல் போனதற்கு.

அவரிடம் குருகுலவாசம் செய்தபோது நான் கற்ற முக்கியமான பாடம் ஒன்று உண்டு. உயிர்ப்பொருள் ஒவ்வொன்றையும் பார்வைக்குத் தெரியாத ஒரு வலைப்பின்னல் உறை மாதிரி மூடியிருக்கிறது, வேதம். வலுவான காந்த சக்தி கொண்டது அது. ஒவ்வொரு உறைக்கு ஒவ்வொரு குணாம்சம். இரண்டு உயிரினம் நெருங்குகிறதா, காந்த மண்டலங்கள் இரண்டு நெருங்குகின்றன என்றுதான் அர்த்தம். சாதாரண காந்தத்தில் எதிர்ப்புலங்கள் ஒன்றையொன்று ஆகர்ஷிக்கவும், ஒத்த புலங்கள் ஒன்றையொன்று விலக்கவும் செய்யுமல்லவா? உயிர்களை மூடிய காந்த மண்டலங்கள் இதற்கு நேர் எதிரான குணபாவம் கொண்டவை. சிங்கமும் ஆடும் நெருங்குவதை யோசித்துப் பார்.

ஓரின உடம்பு கொண்ட உயிர்களின் காந்தப் புலங்கள் பெரும்பாலும் ஒரே தன்மை கொண்டவைதாம். மழையில் நனையும் ஆட்டு மந்தையைப் பார்த்திருக்கிறாயா? தாரைகளின் பொழிவுக்கும், காற்றின் குளிருக்கும் இதம் தேடி, ஒன்றையொன்று எப்படி நெருக்கிக்கொண்டு நிற்கும்?

ஆரம்பத்தில், பிறரைப் பார்க்கும்போது அவர்களை மூடியுள்ள உறையைப் பார்ப்பதில் பெரும் ஆர்வம் இருந்தது எனக்கு. சிறுகச் சிறுக என் கவனம் ஆட்டு மந்தையிடமிருந்து விலகி, மந்தை ஆடுகளை நனைக்கும் மழையின்மீது குவிய ஆரம்பித்தது. காலவெளி பேதமற்று சதா பொழிந்தவாறிருக்கும் அமிர்தவர்ஷினி அது, வேதம்.

என்றோ ஒரு நாளில், ஒரு தருணத்தில் மழையின்மீது படிந்திருந்த கவனம் சற்றே பிறழ்ந்து, எதிரிலுள்ள மனிதனின் காந்த மண்டலத்தில் ஆழ்ந்தது. அன்று நான் திருச்செந்தூர்க் கடற்கரையில் உட்கார்ந்திருந்தேன், வேதம். நான் பார்த்த மனிதப் பிறவியின் காந்தப்புலம் கண்கூசுமளவு பிரகாசமாக இருந்தது. சூரிய ஒளியில் பளபளக்கும் சமுத்திரத் தரைபோலப் பிரகாசித்தது அது.

கிழவரின் முன்னங்கையை இறுகப் பற்றினான் வேதமூர்த்தி. வழக்கமான வெதுவெதுப்பு சற்றுக் குறைந்திருந்த மாதிரிப் பட்டது. சதையை விட்டுப் பிரிந்துவிட்டமாதிரி மிகச் சன்னமாகவும் மிருதுவாகவும் இருந்தது சருமம். குறுக்கும் நெடுக்குமாக ஓடிய சுருக்கக் கோடுகள் வற்றி உலர்ந்த மாதிரி வறண்டிருந்தன. நிரந்தரமாக அவற்றில் கனன்றுகொண்டிருந்த எண்ணெய்ப் பளபளப்பு எங்கே போயிற்று?

...ஆ னால், நான் செய்த இரண்டு தவறுகளை நீ செய்ய வேண்டியதில்லை வேதம். ஒன்று, நான் பாரதம் முழுவதும் அலைந்து எதையோ கண்டெடுக்க முயன்றேன். குறிப்பாக உத்தர பாரதத்தில் நான் செல்லாத மாகாணம், செல்லாத ஜில்லா கிடையாது. அருணாசலப் பிரதேசம், நாகாலாந்திலிருந்து இந்தப் பக்கம் குஜராத்தின் கட்ச்வரை எல்லா இடங்களுக்கும் போயிருக்கிறேன்.

என் அலைச்சலின் போக்கைத் தீர்மானித்த குருநாதர்களைப் பற்றி இவ்வளவு விரிவாக உன்னிடம் சொன்னதில்லை. காரணம், என்னிடம் நீ வந்து சேர்ந்த சமயத்தில் உன் கண்களில் ஒரு அலைபாய்ச்சல் இருந்தது. என் தேசாடனத்தின் கதைகளைச் சொன்னால் நீயும் அதேவிதமாகத் திரியக் கிளம்பிவிடும் அபாயம் இருந்தது. அலைவதால்

கிடைக்கும் ஞானம் முக்கியமானதுதான். அதைவிட, ஒரே இடத்தில் இருந்தாலும் தனக்குள் மூழ்குவதால் ஒருவனுக்குக் கிடைக்கும் ஞானம் இன்னும் அதிகமான பெறுபலன் கொண்டது என்று நம்புகிறேன்.

எங்கெல்லாமோ அலைந்து திரிந்து கால்களும் மனமும் ஓய்ந்த பிறகுதான் இது புரிந்தது. வெளியே அலையும் அலைச்சலில் கிடைக்கும் பிரயோசனங்கள் குறைவு. வெளியில் விரிந்து கிடக்கும் உலகத்துக்கு ஈடாக உள்ளே ஒரு பிரபஞ்சம் விரிந்திருக்கிறது. அதில் தேடித் திரிந்தால் ஒருவேளை நாமெல்லாம் தேடுகிற சமாசாரம் கிடைத்துவிடுமோ என்னவோ.

இரண்டாவது, நான் தனியொருவனாகவே இருந்து என் தேட்டத்தை நகர்த்தியிருக்கிறேன். இதுவரை நான் கண்டறிந்ததெல்லாம், என் உடம்போடே மட்கிவிடப் போகிறது. அந்த அனுபவங்கள் வேறுமாதிரியானவை. காற்றுப்போலவோ, வெயில்போலவோ எல்லாருடனும் பகிர்ந்துகொள்ள முடியாது. என் உடம்புக்குள், என் அந்தரங்கத்துக்குள் நிகழ்ந்த ரசமாற்றங்கள் அவை. பிறருக்கு நிரூபித்தும் காட்டமுடியாது.

தடம் மிஞ்சாத பாதை அது. கருத்தாக மாற்றிச் சுவடிகளில் பதிப்பிக்கக்கூடியது அல்ல. அப்படி மட்டும் இயலுமானால், நூற்றுக்கணக்கான கிரந்தங்கள் நமக்குக் கிடைத்திருக்குமே.

ஆனால், இதே பாதையில் இன்னும் கொஞ்சப் பேரை ஈடுபடுத்தலாம். என்னுடைய அனுபவம்தான் மட்குமே தவிர, அந்த அனுபவமே மட்கிவிடாது பத்திரப்படுத்தலாம். நான் வாலிபனாகி விட்ட பிறகும், குழந்தைமை என்ற ஒன்றே உலகத்தில் இல்லாமல் போய்விடவில்லையே, அது மாதிரி.

நீ கொஞ்சப் பேரை சீடர்களாக வரித்துக்கொள்ளலாம். பிறர் மூலமாக உன் சித்தம் தொடர்வதை உறுதி செய்துகொள்ளலாம். அவர்களை எப்படி இனங் காண்பது என்று என்னைக் கேட்காதே. கண்களின் பாஷையும் நான் குறிப்பிட்ட காந்தப் புலத்தின் வீரியமும் அறியாத சிறுவனல்ல நீ.

உனக்கு நான் விடுத்துச் செல்லும் பணியொன்றும் இருக்கிறது.

பல்வேறு ஸித்திகளை எனக்கு வழங்க பைராகி முயன்றபோதும் தீர்மானமாக மறுத்து வந்திருக்கிறேன். ஏனோ, அவை பூமியின் இயல்புக்கு ஒவ்வாத தன்மை கொண்டவை என்றொரு அபிப்பிராயம் எனக்கு. ஆனால், அவரிடம் நான் கற்றுக்கொள்ள வேண்டும் என்று

மிகமிக ஆசைப்பட்ட ஸித்தி ஒன்று உண்டு.

விரும்பும் தறுவாயில் இயற்கை மரணத்தை வருவித்துக்கொள்ளும் கலையை நான் பயிலவில்லை. இறந்தவர்களின் உலகத்துக்குள் பிரக்ஞை தவறி நுழையும் மற்றவர்கள் மாதிரி இல்லாமல், புலனுணர்வு இருக்கும்போதே நுழைய வேண்டும் என்பது என் விருப்பம். தெரிந்தே கடக்கவேண்டும் அந்த நுழைவாசலை.

அதைத் தற்கொலை என்று பெயரிட முடியாது வேதம். ஏதோவொன்றிடமிருந்து தப்பிப்பதற்காக மேற்கொள்வதைத்தான் தற்கொலை என்று சொல்லத் தகும். முடிவற்று நீள்கிற பிரயாணத்தின் பகுதியாய் ஒரு வண்டியிலிருந்து இறங்கி வேறொரு வண்டியில் ஏறுவதை எதிர்மறையான விஷயமாய் எப்படிச் சொல்லலாம்.

அத்தனை பாணங்களும் அஸ்திரங்களும் சாய்க்க முடியாதவராகத்தானே பீஷ்மர் இருந்தார். தாம் இஷ்டப்பட்ட நாளில், இஷ்டப்பட்ட முகூர்த்தத்தில் இயற்கையான மரணம் எய்தினாரில்லையா. என் குருநாதரான பைராகி உறக்கம்போல மரணத்தை இழுத்துப் போர்த்திக்கொள்ளவில்லை? உயிரைத் தரித்த உடலமாக ஜனித்த யாருக்கும் இயலும் விஷயம் அது என்றுதான் படுகிறது. என்ன, அதற்கான அப்யாசங்கள் முக்கியம்.

நீ ஈடுபட்டு அதில் வெற்றிபெற வேண்டும் என்று ஆசீர்வதிக்கிறேன்...

கிழவருக்கு மூச்சுவாங்கியது. கண்கள் மூடிக்கொண்டன. சத்திரத்தின் திண்ணையில் அண்டபேரண்டம் முழுவதும் வந்து கால்நீட்டிப் படுத்திருப்பதுபோல ஒரு கணம் தோன்றியது வேதமூர்த்திக்கு. அந்த ஒரு கணத்தில் ஓசைகள் யாவும் அடங்கிக் கிடந்ததாகவும் பிரமை தட்டியது. அது பிரமைதானா, நிஜமா என்று சந்தேகித்தவாறே கிழவரின் கோவணத்தை நேர்செய்தான்.

என்றோ ஒரு நாளின் மத்தியான வெயிலில் திருச்செந்தூரின் கடற்கரை மணல் பரப்பில் கண்கள் கூச உட்கார்ந்திருந்தபோது தன்னை நெருங்கிய கறுப்பு உருவம் இப்போதும் தன்னை நோக்கி வந்துகொண்டே இருப்பதுபோலத் தோன்றியது. தலையை உதறிக் கண்களைக் கசக்கிக்கொண்டான்.

வேதமூர்த்தியின் திருமணம் நிகழ்ந்து முறிந்த நாள் அது. அன்று முழுவதும் வக்கீல் மாமாவின் நினைவு வந்துகொண்டேயிருந்ததும் நினைவு வருகிறது. அவர் சொல்லித் தராத, தானே தேடிப் படித்த, ஒரு பாட்டு இன்று ஆச்சரியகரமாக வக்கீல் மாமாவின் குரலில் காதுக்குள்

ஒலிக்கிற மாதிரி இருந்தது. வடலூர் ராமலிங்க வள்ளல் பாட்டு...

நினைத்து நினைத்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து
அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழுங் கண்ணீரதனால் உடம்பு
நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனேயென்று
வனைந்து வனைந்தேத்துதும் நாம் வம்மின் உலகியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ் சொல்கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந் தருணமிதுவே.

✠

பிப்ரவரி, 1950

உ ச்சிவேளையானாலும் கடற்கரையில் அவ்வளவாக வெயில் இல்லை. மணலில் பதிந்த புட்டத்தில் இதமான வெம்மைதான் ஏறுகிறது. மேல்மணலைப் புரட்டினால், அடிமணலில் ஈரப் பதம் இருக்கக்கூட வாய்ப்பிருக்கிறது. வரும் கோடை அவ்வளவு உக்கிரமாக இருக்காதென்று தோன்றுகிறது. தை பிறந்த பின்பும் நாலாம் ஜாமக் குளிர் குறையாமல்தான் இருக்கிறது.

சுற்றுமுற்றும் பார்வையை ஓட்டினான் வேதமூர்த்தி. கடற்கரை வெறிச்சோடிக் கிடந்தது. இரண்டு வாரங்களுக்கு முன்னால் கடலுக்குச் சமமாக ஜனங்களும் அலைமோதிய அதே இடமா இது என்று நினைத்துக்கொண்டான். அன்றைக்குத் ¬தைப்பூசம். சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஒழுங்காக இருந்திருந்தால், அந்த விசேஷ நாளில் நானும் உள்ளேயிருக்கும் பெருமானைத் தொட்டு அபிஷேகம் செய்திருப்பேன். ‘சந்தர்ப்பம், சூழ்நிலை’ என்று கனத்த வார்த்தைகள் எதற்கு, தகப்பனார் ஒருவர் மட்டும் ஒழுங்காக இருந்திருந்தால் போதுமே.

இவர் வந்தால் சந்நிதிக்குள் தாங்கள் வரமாட்டோம் என்று மற்ற முக்காணிகள் ஒன்றாகச் சேர்ந்து அறிவித்துவிட்டார்கள். தேவஸ்தானம் வேறு வழியில்லாமல் இவர்கள் குடும்பத்தைப் பிரஷ்டம் செய்துவிட்டது. அப்பா வழக்கமான சவடால்களும் தகிடுதத்தங்களும் கொண்டு போராடிப் பார்த்தார். ம்ஹூம். முருகனோ முக்காணிகளோ, ஜெயித்தது யாராய் இருந்தாலும், இவர் தோற்றுவிட்டார். ஆனால், உள்ளூர் பிராமணர்களை நூதனமாகப் பழிவாங்கினார். நிரந்தரமாகக் கொடுவாள் மீசை வைத்துக்கொண்டார். வார்த்தைக்கு வார்த்தை ‘ஆசாரமாவது, மயிராவது. எல்லாம் களவாணிப் பயக’ என்று சொல்ல ஆரம்பித்தார். இது நடந்தது இருபது வருஷங்களுக்கு முன்னால். அதாவது, வேதமூர்த்தி பிறப்பதற்கு முந்திய வருஷம்.

அதன்பிறகுதான் தாண்டவமும் உக்கிரமும் ஜாஸ்தியாகிவிட்டது என்று அம்மா சொல்வாள். அப்பாவை நினைக்கும்போதெல்லாம் அருவருப்பு ஊறுகிறது. இன்று காலையில் கூட...

தாலி கட்டற கைக்குத் தங்கத்தோடா போடணுமே ஓய்...

என்று விநயமாக அறிவித்தார். பெண்ணைப் பெற்றவர் அதிர்ந்தார்.

அண்ணா, என் சொத்துலெ பாதியெ வித்துத்தான் இந்தக் கல்யாணத்தெ நடத்தறேன். மேல்க்கொண்டு செலவு செய்யத் திராணியில்லேண்ணா. என்னெ விட்ருங்கோண்ணா.

பேர்பாதிதானே ஓய் செலவாயிருக்கு. நான் என்ன ஊரானுக்கா போடச் சொல்றேன்? ஒம்ம மாப்பிள்ளைக்குதானே போடறீர்?

இன்னும் ஒரு பொண்ணு பாக்கியிருக்காளேண்ணா. அவளுக்கும் நான் செய்ய வாண்டாமா சொல்லுங்கோ.

அப்போ, 'அந்த மாப்பிளை தாலிகட்டினாப் போறும், ஒம் பிள்ளை கட்ட வாண்டாண்டா'ங்கிறீர்?

அண்ணா அண்ணா... அச்சானியமாப் பேசாதீங்கோண்ணா. நின்ன நிலையிலெ தோடாவெக் கொண்டான்னா நான் எங்கேண்ணா போவேன்.

அதானே, 'நெனைச்ச ஒடனே நெருப்பிலே மூத்திரம் பேய்'ன்னா எப்பிடி?

அவர்கள் தரப்பு உறவினர் யாரோ குரல் விடுத்தார். முள்ளம்பன்றி சிலிர்த்துக்கொண்டு அவர்மீது பாய்ந்தது.

நீர் யாரு ஓய். நீரா என் சம்பந்தி? ஒம்மகிட்டெ எனக்கென்ன பேச்சுன்னேன். ஏதோ வந்தோமா, மூக்கு முட்டக் கொட்டிண்டோமா, வாலைச் சுருட்டிண்டு சூத்தெ மூடிண்டு போனமான்னு இருக்கணும்.

சம்பந்தி கிட்டத்தட்ட அழும் நிலைக்கு வந்துசேர்ந்தார்.

அண்ணா, அசங்கியமாப் பேசாதீங்கோண்ணா. அவர் என்னோட தாய்மாமா. என்னை வளர்த்தவரே அவர்தான். ஓய் மாமா, நீர் சித்தெச் சும்மாயிரும். நான் அவசியம் போடறெண்ணா. இப்போதைக்குத் தாலியெக் கட்டச் சொல்லுங்கோ. முகூர்த்த நேரம் ஓடறது.

அப்பிடி வாரும். ஒம்மெ ஒடனே போடும்னு சொன்னேனா நான். ஒத்துண்டாப் போறும். 'செழியநல்லூர் கிருஷ்ணமூர்த்தின்னா அரிச்சந்திரனுக்கு சமானம்' னுன்னா ஒங்க ஊர்க்காரா பேசிக்கறா. ஆனாலும், சொல்றேனேன்னு தப்பா நினைச்சுக்காதீரும் ஒமக்கு ஒறவுக்காரன் சரியா அமையலே ஓய். எல்லாம் தண்டச்சோத்து ராமன்கள்...

இந்தத் தரப்பு ஆட்கள் நாலைந்து பேர் சிரித்தார்கள். வேதமூர்த்தி மணப்பெண்ணுக்கு நிகராய்த் தானும் தலைகுனிந்து மணையில் அமர்ந்திருந்தான். பக்கத்தில் இருப்பவளின் கண்களை நேருக்கு நேர் பார்த்துவிடக்கூடாதே என்று பதட்டமாய் இருந்தான்.

அந்தப் பெண் வேறு காலையிலிருந்து சுணங்கித்தான் இருக்கிறாள். எதுவோ தெறித்து விழுந்துவிடக்கூடாது என்று மூடி இறுக்கியிருப்பவள் மாதிரிக் கீழுதட்டைப் பற்களால் அழுத்திக் கடித்தவண்ணம் இருந்தாள். முகம் கடுமையாய்ச் சிவந்திருந்தது.

அதிகாலை முகூர்த்தம் என்பதால் வெகுசீக்கிரமே எழுந்து விட்டதன் காரணமாக இருந்த கண் எரிச்சலோடு, ஊறும் கண்ணீரின் உறுத்தலும் சேர்ந்துகொண்டது. நல்லவேளை, ஹோமப் புகையும் மனப்புழுக்கமும் உருக்கி ஊற்றிய வியர்வை வேதமூர்த்தியின் முதுகிலும் முகத்திலும் தாரைகளாய் வழிந்தது. கண் கலங்குவது யாருக்கும் தெரிவதற்கில்லை.

என்ன மனுஷன் இவர்? இப்படி வயிற்றெரிச்சலின்மீது தன் மகனுக்கு வாழ்க்கையை ஆரம்பித்துத் தருவது நியாயமா என்றுகூட யோசிக்காத ஜன்மம்? ஆனால், நியாய அநியாயம் பார்க்கிற ஆள் என்றால் தாலிகட்டிக் குடித்தனம் நடத்தப் போகிறவனிடம் 'பெண்ணைப் பிடித்திருக்கிறதா' என்று ஒரு வார்த்தை கேட்டிருக்க மாட்டாரா?

தாலியைக் கட்டும்போது வேதமூர்த்தியின் கைகள் நடுங்கின. தாரை வார்ப்பதற்காக மணப்பெண்ணை மடியில் அமர்த்திக் கொண்டிருந்த மாமனார் இரண்டு கைகளையும் வேதமூர்த்தியைப் பார்த்துக் கூப்பினார். வழுக்கைத் தலையில் தொடங்கி முகம் முழுவதும் வழிவது வியர்வையா கண்ணீரா என்று நிதானிக்க முடியாமல் இருந்தது. உதடுகள் கோண, பளபளக்கும் விழிகளுடன் தன் வயதில் மூன்றில் ஒரு பங்குகூட நிரம்பாத ஒருவனைப் பார்த்து இறைஞ்சும் தீனரை உடலோடு அணைத்துக்கொண்டு ஆறுதலாக ஓரிரண்டு வார்த்தைகள் பேச ஆவலாய் இருந்தது. ம்ஹூம், ராட்சஸன் உடனடியாக ஏதாவது தப்பர்த்தம் செய்துகொள்வார்.

மணைக்கு அருகில் மரப்பாச்சி பொம்மை மாதிரி நின்றிருந்த அம்மாவைப் பார்த்தான் வேதமூர்த்தி. மகனின் மனத்தில் ஓடும் சிந்தனைகளை முகத்திலிருந்தே கண்டுபிடிக்க முனைவதுபோல உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த கண்களில் நிரம்பியிருந்தது பரிவா, ஆதங்கமா, ஆற்றாமையா, துயரமா, கருணையா என்று தீர்மானிக்க முடியவில்லை...

ச ற்றுத் தள்ளி மணலில் வந்து இறங்கிய காக்கை கழுத்தைச் சாய்த்து

இவனைக் கவனித்தது. வேறு திசைநோக்கி நாலைந்து சொற்கள் உதிர்த்தது. 'உச்சிவேளையில் இங்கே வந்து என்ன செய்துகொண்டிருக்கிறான் இந்த ஆள்?' என்று ஆளற்ற இடத்தில் நிரம்பியிருக்கும் ஏதோ ஒரு வியக்தியிடம் விசாரிப்பதுபோல் இருந்தது. சரியான பதில் கிடைக்கவில்லைபோல. சலிப்புத் தட்டிய மாதிரி உடனடியாக எழுந்து பறந்தது.

காக்கை போகும் திசையில் பார்வை பின்தொடர்ந்தது. தொலைவில், மணற்பரப்பின் விளிம்பில் நாலைந்து கடைகள் இருந்தன. ஒரு டீக்கடையின் முன்னால் இருந்த பெஞ்ச்சின் அருகில் சென்றதும் சட்டென்று காக்கையின் உருவம் விரிந்து படர்ந்த மாதிரி ஒரு மயக்கம். டீக்கடை பெஞ்சில் ஒரு கறுப்பு மனிதர் உட்கார்ந்திருந்தார்.

இடுப்பில் அணிந்த கோவணம் தவிர வேறு மறைப்பு இல்லாத அவருடைய உடம்பு கருங்கல்போலப் பளபளத்தது. இந்தப் பக்கத்துக் கோவணம் மாதிரி இல்லை வடக்கத்தி லங்கோடு.

அது மனித உருவமே அல்ல. பலகாலமாக எண்ணெய் முழுக்காட்டப்பட்ட கருங்கல் சிலை என்று ஒருகணமும், தன்னை வேவு பார்ப்பதற்காகப் பேய்கள் உலகத்திலிருந்து வந்து அமர்ந்து தன்னையே உறுத்துப் பார்த்துக்கொண்டிருக்கிற பூத உளவாளி என்று மறுகணமும் பிரமை தட்டியது வேதமூர்த்திக்கு. மறுப்பாகத் தலையை ஆட்டி அந்த எண்ணத்தை உதறினான்.

காக்காய் ஊடறுப்பதற்கு முன்னால் ஞாபகம் எங்கே அலைந்து கொண்டிருந்தது என்று மனம் சற்றுத் தேடியது. பிடி கிடைக்கவில்லை. வேறெங்கும் சிந்தையை ஊன்றிக்கொள்வதற்கும் எதுவும் இல்லை. தப்பிக்கும் மார்க்கத்தை அடைத்து நின்றிருக்கும் மானசீகச் சுவருக்கு அப்பால் செல்ல வழியில்லையே என்ற ஏக்கம் கனமாகப் பீடித்தது. ஆ! நினைவு வந்துவிட்டது. அம்மாவின் பார்வை...

சௌந்தரத்துக்கு அதிர்ந்து பேசக்கூட வராது. அவளுக்கு மட்டுமில்லை, அவள் குடும்பத்துக்கே பேச வராது வக்கீல் மாமாவைத் தவிர்த்து. நாகப்பட்டணத்தின் பழமையான குடும்பங்களில் ஒன்று அது. அவளுடைய தகப்பனார் அந்த ஜில்லாவின் வேத வித்துக்களில் ஒருவர். தினசரியும் ஹோமம் வளர்த்து, பிதுர் சிரார்த்தம் செய்து முடித்து, பிறகே தாம் உண்ணும் வழக்கம் உள்ளவர். வீட்டில் அவருக்கு மட்டும் தனிச் சமையல். மிளகாய், வெங்காயம், பூண்டு, சோம்பு இன்னும் காரட், பீட்ரூட், முள்ளங்கி, முருங்கை போன்ற மிலேச்சக் காய்கறிகள் எதுவும் இல்லாத பத்தியச் சமையல். அப்படிப்பட்ட மகானுபாவர் பெண்ணுக்கு

மாப்பிள்ளை தேடும்போது எப்படிப் பார்வை தவறினார் என்பதை யாரால் சொல்ல முடியும்?

தாழ்வாரத்தில் மரச் சாய்வுநாற்காலி ஒன்று நிரந்தரமாய்க் கிடக்கும். ராட்சஸர்கள் உட்காருவதற்கேற்ற பரிமாணம் கொண்டது. சாப்பாட்டுக்குப் பிறகு, கைவிசிறியோடு தாத்தா அதில் சென்று அமர்ந்துகொள்வார். கை விரல்களில் எந்நேரமும் ஒரு கணக்கு ஓடிக்கொண்டிருக்கும். அபூர்வமாகச் சிலநேரம் உதடு அசையும். குடும்பத்தின் ஆன்மாவில் ஆழமான வெட்டு விழுந்து இரண்டாகப் பிளந்த நாளிலும் அதே விதமாகச் சாய்வு நாற்காலியில் அமைதியாக அமர்ந்திருந்தார் தாத்தா. முகத்தில் மட்டும் சற்று இறுக்கம் சேர்ந்திருந்தது.

ஆயுட்கால மௌனவிரதம் பூண்டவர்போல ஓசையற்று இருக்கும் தாத்தா தெருவில் நடந்து சென்றால், கடந்து செல்பவர்கள் ஒரு கணம் நின்று செல்வார்கள். தாத்தாவின் வீட்டுக்கு வரும் அந்நியர்களில் பெரும்பாலானவர்கள் தாத்தாவை நமஸ்கரித்து அவரிடம் விபூதியும் ஆசீர்வாதமும் வாங்கிக்கொள்ள வருகிறவர்கள்.

வேதமூர்த்தியின் வீட்டு வாசலுக்கு வருகிறவர்கள் மண்ணைத் தூற்றி சாபம் வீசிச் செல்கிறவர்கள். பின்னே, ஒரு அவசரத்துக்கு சிறு தொகையைக் கடனாக வாங்கிவிட்டு வீட்டையோ, வாழ்வாதாரமான வயலையோ பத்திரம் எழுதித் தரவேண்டி வந்தால் மெச்சவா செய்வார்கள்? ஊர் பூராவும் சொத்துக்களையும், இப்படி ஒரு பெயரையும் சம்பாதித்தும் வேதமூர்த்தியின் தகப்பனாரிடம் லேவாதேவி செய்ய வருகிறவர்கள் எண்ணிக்கை குறைந்தபாடில்லை.

சதா சளசளத்துக்கொண்டே இருக்கும் தகப்பனாரும், மௌனத்துக்குள் நிரந்தரமாக அமிழ்ந்து கிடக்கும் தாத்தாவும் இரண்டு எதிரெதிர் துருவங்கள் என்று தோன்றும் வேதமூர்த்திக்கு. இவர்கள் எப்படி மாமனார் மருமகன் ஆனார்கள் என்பது விளங்கிக்கொள்ள முடியாத ஒரு சதிப் பின்னலேதான். இந்த ஏற்பாட்டைச் செய்து முடித்துவிட்டு, கேலியாக நகைத்துக்கொண்டிருக்கிறார்கள், கண்ணுக்குத் தெரியாத அந்த யாரோ...

தாத்தாவின் எட்டாம் தலைமுறை முத்தாத்தா வெகு விசேஷமான மனிதர். அவரைப் பற்றிப் பேசும்போதெல்லாம் அம்மாவின் கைகள் தாமாகக் கூப்பிக்கொள்ளும்.

வேதமூர்த்திக்குமே தாயாரின்வழி கேட்ட கதைகள் மூலமாக அந்த

முத்தாத்தாமீது அளவில்லாத பக்தி வந்து சேர்ந்திருந்தது. அவரைப்போல ஆகிவிடமாட்டோமா என்ற ரகசியக் கனவையும் கொஞ்சநாள் அடைகாத்துக் கொண்டிருந்தான். ஆனால், அப்பா இருக்கும் இடத்தில் கனவுகளுக்கு இடம் கிடையாது என்ன விதமான கனவாய் இருந்தாலும், யாருடையதாய் இருந்தாலும். நாலு பக்கமும் சக்கரத்துக்குப் பதிலாக அணா பைசாக்கள் கோத்த விநோத ரதம் அவருடையது...

சௌந்தரம் ஒரே பெண். மூன்று மூத்த சகோதரர்கள். சகோதரிமீதும், அவளுடைய ஒரே புதல்வன் வேதமூர்த்தியின் மீதும் மாமாக்கள் மூவருக்கும் அளவில்லாத அன்பு. அதிலும் கடைசி மாமா இவனை நடக்கவே விடமாட்டார். நாகப்பட்டணத்தையும் அதன் சுற்று வட்டாரங்களையும் குட்டி மாமாவின் தோளில் அமர்ந்து சுற்றிப் பார்த்திருக்கிறான் வேதம்.

மூத்த மாமா சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர். சுதந்திரத்துக்குப் பிறகு ஜில்லா போர்டு மெம்பரானார். அதுபோக, ஏதேதோ அமைப்புகளின் மேல்மட்ட அங்கத்தினராக இருக்கிறார். இரண்டாவது மாமா மதறாஸில் வக்கீலாகத் தொழில்புரிந்து வருகிறார். அவர் மட்டும்தான் பிறவியிலிருந்தே கொஞ்சம் கோபக்காரர் என்று அம்மா சொல்வாள். உள்ளூரிலேயே தமிழாசிரியராகப் பணிபுரிந்துவரும் மூன்றாவது மாமாவை விடவும் பட்டணத்து மாமாவுக்குத் தமிழ்ப் புலமை அதிகம்.

வேதமூர்த்திக்குப் பத்துப் பனிரண்டு வயதிருக்கும்போது வேதம் மூன்றாவது ஃபாரம் போகவிருந்தான் அவருக்கும் இவனுடைய அப்பாவுக்கும் மிகப் பெரிய தகராறு நடந்தது. அதையொட்டி அவருடைய மூஞ்சியில் தன் குடும்பம் விழிக்காது என்று சபதம் போட்டுவிட்டார் அப்பா. விளைவு, அதற்குப் பிறகு இரண்டாவது மாமாவை வேதமூர்த்தி பார்த்ததே கிடையாது.

அந்தச் சண்டை மிக நன்றாக நினைவிருக்கிறது. வாசல் திண்ணையில் உட்கார்ந்து ஏதோ ஆங்கிலப் புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தார் மாமா. அப்பாவுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. கணக்கு மட்டும்தான் வரும். மாகாணி மும்மாகாணி வீசம் என்று துல்லியமாகக் கணக்கு ஓடும். இல்லாவிட்டால் வட்டித் தொழில் இவ்வளவு அமோகமாக நடக்குமா? அவருக்கு படிப்பு வரவில்லை என்பது பெரிய விஷயமில்லை. படிக்கிறவர்களைக் கண்டால் சுத்தமாகப் பிடிக்காது என்பதுதான் பிரச்னை.

அன்று காற்றின் சுழியில் ஏதோ கோளாறு இருந்திருக்க வேண்டும். முற்பகலிலிருந்தே வீட்டில் நிலைமை சரியில்லை. சாதம் பரிமாறும்போது அகப்பை கைநழுவி எச்சில் இலையில் விழுந்துவிட்டதற்காக அம்மா 'தேவடியா முண்டை' என்று ஏச்சு வாங்கினாள். கைகழுவிக்கொண்டு முற்றத்துக்கு வந்த அப்பா, உள்ளூரில் மிகவும் மதிக்கப்படும் ஆசிரியரும், பாக்குத்துண்டு பல்லில் படாத சீலரும், திருமணமாகிக் குழந்தை பெற்றவருமான கடைசி மாமாவைக் கூப்பிட்டு ஒரு மட்டை பொடி வாங்கிவரச் சொன்னார். குடும்பம் அதிர்ந்தது. தாமும் பொடிபோடுகிறவரான இரண்டாவது மாமா,

எங்கிட்டெ நெறையா இருக்கு, இந்தாங்கோ மாப்ளே.

என்று நீட்டினார். அப்பா ஒரே அட்சரத்தில் பதில் தந்தார்:

தூ...

சின்ன மாமா உடனடியாகச் செருப்பை மாட்டிக்கொண்டு அடுத்த தெருப் பெட்டிக்கடையை நோக்கிப் போனார். வண்டிக்காரக் கலியமூர்த்தி,

ஆண்டே, நாம்போறேங் கொண்டாங்க.

என்று பதறிப் பின்தொடர்ந்ததைக் கவனிக்காத மாதிரிப் படுவேகமாகப் போனார் மாமா...

தெருவில் நாய்க்குட்டியுடன் விளையாடிக்கொண்டிருந்த வேதமூர்த்தியைத் திண்ணையில் உட்கார்ந்திருந்த வக்கீல் மாமா அழைத்தார். கையிலிருந்த புத்தகத்தைப் பக்கம் மாறாமல் விரல் செருகிப் பிடித்துக்கொண்டு,

தொங்கா, ஒனக்கு ஒளவையார் பாட்டு ரெண்டு சொல்லித் தரட்டுமா?

என்று கேட்டார். மாமா சொல்லித்தந்த பாடல்கள் அநேகம். திரிகடுகம், பழமொழி, நாலடியார் என்று பல்வேறு நூல்களிலிருந்து எவ்வளவோ தந்திருக்கிறார். குறிப்பாக காளமேகம் பாடல்கள். வேதமூர்த்திக்கு மிகவும் பிடித்தமான பாடல்கள். 'நாய்க்குட்டியுடனான விளையாட்டு மும்முரமாக நடக்கும்போது மாமா கூப்பிட்டிருக்க வேண்டாமே' என்று தோன்றினாலும், பாடல்கள்மீது உள்ள காதலால் ஓடிவந்து பக்கத்தில் அமர்ந்துகொண்டான் வேதமூர்த்தி.

இப்போது நினைத்துப் பார்க்கும்போது, மாமா அவ்வளவொன்றும்

களங்கமில்லாமல் கூப்பிட்டிருக்க மாட்டாரோ என்றும் தோன்றுகிறது. அன்றைக்கு அவர் சொல்லித்தந்த பாடல்கள் இரண்டுமே அப்பாவை சீண்டுவதற்காக ஏவப்பட்ட அஸ்திரங்கள் மாதிரித்தான் படுகின்றன. தவிர, இவன் வந்து திண்ணையில் அமர்வதற்கும் வீட்டுப் படிக்கட்டின் மறுதிண்ணையில் அப்பா வந்து உட்கார்வதற்கும் சரியாக இருந்தது. பிறகுதான் மாமா இவனைக் கூப்பிடவே செய்தாரோ என்றும் இந்த மத்தியானப் பொழுதில் சந்தேகம் வருகிறது... முதல் பாடலை ஆரம்பித்தார் மாமா.

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்
நாழி முகவாது நாநாழி தோழி
நிதியும் கணவனும் நேர்ப்படினும் தத்தம்
விதியின் பயனே பயன்.

மாமா மிகுந்த உற்சாகத்துடன் விளக்கம் சொன்னார். இப்போது அந்தக் காட்சியை மறுபடியும் மனத்தில் ஓட்டும்போது, ஏதோ தீர்க்கமான திட்டத்துடன்தான் மாமா அன்று செயல்பட்டிருக்கிறார் என்றும் தோன்றுகிறது. வழக்கத்தைவிடவும் உற்சாகமாக விளக்கினார் அன்று. ஒருவேளை, அப்பாவிடமிருந்து நிரந்தரமான சுதந்திரம் அடைய ஆசைப்பட்டாரோ என்னவோ...? இரண்டாவது பாடல், இன்னும் கனமாய் இருந்தது.

அற்றதலை போக அறாத தலை நான்கினையும்
பற்றித் திருகிப் பறியேனோ வற்றும்
மரமனையானுக் கிந்த மானை வகுத்திட்ட
பிரமனை யான் காணப் பெறின்?

பிரம்மாவின் ஒரு தலையை சிவபெருமான் கிள்ளியெறிந்த புராணக் கதையில் தொடங்கி நீண்ட விளக்கம் ஓடியது. அவ்வப்போது செருமிக்கொண்டதைத் தவிர, வேறு சலனமில்லாமல் அப்பா எதிர்த்திண்ணையில் அமர்ந்து கேட்டுக்கொண்டிருந்தார். மாமா முடிக்கும்வரை பொறுமையாக உட்கார்ந்திருந்தார். பேச்சை நிறுத்திவிட்டு, மாமா பொடிமட்டையை எடுத்து இடதுகைக் கட்டை விரலின் பின்புறத்தில் நாலு தட்டுத் தட்டிப் பிரித்ததும், அப்பா கூப்பிட்டார்.

வேதம் இங்கே வாலே.

இந்தத் திண்ணையிலிருந்து குதித்து தகப்பனின் திண்ணைக்கு ஓடினான் வேதம். அப்பாவின் கைவிரல்கள் ஏற்கெனவே ஒரு சிட்டிகைப்

பொடியை இறுக்கிச் சின்முத்திரை பிடித்திருந்தன.

படிச்ச நாய்க்கும் படிக்காத நாய்க்கும் ஒனக்கு வித்தியாசம் தெரியுமாலே...?

மறு திண்ணைக்கும் வீட்டுன் உள்புறத்துக்கும் எதிர்வரிசை வீடுகளுக்கும்கூடக் கேட்குமளவு உரத்த குரலில் வினவினார். சிறுவன் புரியாமல் விழித்துக்கொண்டு நின்றான்.

...படிக்காத நாய் கடிச்சுட்டு அதுபாட்டுக்குப் போயிண்டே இருக்கும். படிச்ச நாய் அப்படியில்லே. ரொம்ப நாகரிகமானது. கடிச்சுட்டு, 'ஸாரி'ன்னு சொல்லிட்டுப் போகும் ஒங்க வக்கீல் மாமா மாதிரி.

தன்னுடைய பிரமாதமான ஹாஸ்யத்துக்குத் தானே விழுந்து விழுந்து சிரித்தார். தேவைக்கும் அதிகமாகவே சிரிக்கிறார் என்று தோன்றியது இவனுக்கு.

மாமா திண்ணையை விட்டு சடாரென்று எழுந்தார். கையிலிருந்த புத்தகத்தைத் தரையில் விசிறியடித்தார். அடிவயிற்றிலிருந்து அப்பாவை நோக்கிக் கத்தினார். வீட்டுக்குள்ளிருந்தும் தெருவிலிருந்தும் ஆட்கள் ஓடிவந்து கூடினார்கள்.

சென்றமுறை வந்தபோது 'செருப்பால் அடிப்பேன்' என்று தன் தகப்பனாரைத் திட்டியதற்கும், இந்த முறை தன்னை 'நாய்' என்று சொன்னதற்கும் சேர்த்து மானநஷ்டக் கேஸ் போடப் போவதாகவும், அப்பாவை நடுத்தெருவுக்குக் கொண்டுவந்து நிறுத்தப் போவதாகவும் வக்கீல் சுந்தரராமய்யர் என்றால் யார் என்று பிறகு தெரியும் என்றும் மாமா சபதம் போட்டார்.

சாகும்வரை அவர் மூஞ்சியில் தம் குடும்பம் விழிக்காது என்று அப்பா சபதமிட்டார். இந்தச் சபதம் மட்டும் நிறைவேறியது... அந்தச் சண்டையும் அநாவசியமாக அம்மா ஒரு அறை வாங்கித்தான் முடிவடைந்தது. ஆத்திரத்தின் உச்சம் நோக்கிப் போய்க்கொண்டிருந்த வாக்குவாதத்தின் நடுவில் மாமா ஒரு வார்த்தையை விட்டுவிட்டார் மஹாலக்ஷ்மி மாதிரி இருக்கிற தன் தங்கையைக் கொடுமைப்படுத்துகிற மனுஷனுக்கு நரகம்தான் கிடைக்கும் என்று. அப்பா உடனடியாக பதில் கொடுத்தார்.

என் பொண்டாட்டி. நான் என்ன வேணாச் செய்வேன். ஊராம் பொண்டாட்டியைப் பத்தி அக்கறைப் படறியே? ஒனக்கு வெக்கமாயில்லை? நீ யென்ன அவளோடெ கள்ளப் புருஷனா?

சுற்றி நின்ற கூட்டம் விக்கித்துப் போனது. அந்த இடத்தில் நிற்பதற்கே அருவருப்பாய் உணர்ந்தவர்கள் மாதிரி சகலரும் கலைய ஆரம்பித்தார்கள். அப்பா உள்புறம் நோக்கிக் குரல் கொடுத்தார்.

சௌந்தரா... ஏடி சௌந்தரா.

அம்மா விரைந்தோடி வந்தபோது வாசல் படியில் கால் இடறியது. சமாளித்துக்கொண்டு அப்பாவின் எதிரில் வந்து நின்றாள்.

பாரும், சுந்தரராமய்யர்வாள், இவ என்னோடெ பொண்டாட்டி. நான் என்ன வேணாச் செய்வேன். எந்தத் தேவடியா மகனும் என்னை ஏன்னு கேக்க முடியாது.

என்று சொல்லிக்கொண்டே அம்மாவின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். குபுக்கென்று பொங்கிய கண்ணீருடன் ஸ்தலத்தைவிட்டு அகன்றார் மாமா. அம்மா கன்னத்தைப் பிடித்துக்கொண்டு தலைகுனிந்து நின்றிருந்தாள்...

பின்மதியத்தில் குடும்ப உறுப்பினர்கள் எல்லாரும் கூடி விவாதித்து ஒரு சமரசத் திட்டத்தை முன் வைத்தார்கள்:

குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் போய்ப் படிக்கிற படிப்பு போதும், வீட்டுப் பெரியவர்கள் யாரும் பாடம் சொல்லித்தர வேண்டியதில்லை.

நாகப்பட்டணத்தில் இருக்கிற ஏழெட்டு வீடுகளில் ஒன்றை சௌந்தரத்தின் பெயருக்கு எழுதி வைத்துவிட வேண்டியது. முன்னோர்கள் சொத்தில் பெண் வாரிசுகளுக்குப் பங்கு தருவது இந்தக் குடும்பவழக்கம் இல்லை என்றாலும் சௌந்தரம் இந்த வீட்டில் பிறந்த மஹாலக்ஷ்மி அல்லவா?

சாயங்காலம் மொத்தக் குடும்பமும் ஒன்றாகச் சென்று முத்தாத்தா அதிஷ்டானத்தில் விளக்கேற்றி வழிபட வேண்டியது.

மற்றபடி, நடந்ததை ஒரு துர்சொப்பனமாக எல்லாரும் மறந்துவிட வேண்டியது.

ஆளுக்கொரு பக்கம் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்த வக்கீல் மாமாவும், அப்பாவும் இந்தக் கட்டத்தில் தனித்தனியாக எழுந்து வெளியில் போனார்கள். வாசலில் மீண்டும் தகராறு வந்துவிடுமோ என்ற பதற்றத்துடன் பெரிய மாமாவும் வேகமாக எழுந்து பின்னோடு ஓடினார். இல்லை, அவர்கள் இருவரும் எதிரெதிர்த் திசையில் பிரிந்து சென்றுவிட்டார்கள்...

அன்று அதிஷ்டானத்தின் உட்புறம் வழக்கத்தைவிடவும் இருட்டு அதிகமாய் இருந்தது என்று இப்போது வேதமூர்த்திக்குத் தோன்றியது. சாயங்காலத்தின் அழுத்தம் தாளாமல் வாடித் துவண்டு தலை கவிழ்ந்திருந்தன வாசல் நந்தவனத்தின் செடிகொடிகள். சந்நிதியில் நின்ற உறவினர்கள் ஒருவர் பாக்கியில்லாமல் கண்ணீர்விட்டு அழுதார்கள்...

முத்தாத்தா அமானுஷ்யமானவர். இளம் வயதில் வீட்டைவிட்டு ஓடிவிட்டார். பிறகு முன்னூறு வருஷங்கள் கழித்து இளம் வாலிபனாக வீடு திரும்பினார். வம்ச சரித்திரத்தின் நுட்பமான தகவல்கள் பலவற்றை விவரித்துச் சொன்னார். இத்தனை காலமும் காசியில் வசித்ததாகச் சொன்னார்.

பிராயம் அடைந்திருந்த நடப்புத் தலைமுறை வாரிசுகள் காசியில் சென்று விசாரித்துத் திரும்பும்வரை, தெருக்கோடி சிவன் கோயிலில் அவரைத் தங்கவைப்பது என்றும், வேளை தவறாமல் வீட்டிலிருந்து சாப்பாடு கொடுத்தனுப்புவது என்றும் முடிவெடுத்தார்கள். பழங்கள் தவிர எதுவும் தாம் சாப்பிடுவதில்லை என்று மறுத்துவிட்டாராம் இளைஞராக இருந்த முத்தாத்தா.

காசிக்குச் சென்றவர்கள் பூரண திருப்தியுடன் திரும்பி வந்த நாள் மாலையில், சிவன் கோயில் பிரகாரத்தில் கண்மூடி அமர்ந்து பிராணாயாமம் செய்துகொண்டிருந்த தாத்தாவை யாரோ அரிவாளால் வெட்டித் தலையைத் துண்டித்துவிட்டார்கள். இன்றுவரையிலும் மர்மம் துலங்காத கொலை அது. அதைவிடவும் மர்மமான வேறொன்று நடந்ததாக அம்மா சொல்வாள்.

துண்டிக்கப்பட்டு விழுந்த தலையைத் தானே கையில் ஏந்திக்கொண்டு, கழுத்துப் பள்ளத்திலிருந்து பெருகும் ரத்தம் உடம்பெங்கும் அபிஷேகத் தீர்த்தம்போல வழிய, வீடுவரை நடந்து வந்தாராம் அந்தத் தாத்தா.

அதைவிடப் பெரிய அதிசயம், காசியில் சென்று விசாரிக்க வேண்டும் என்ற ஆலோசனை சொல்லிய இந்தக் குடும்பத்து ஆண்வாரிசு அதே சமயம் காக்கைவலிப்பு கண்டு இறந்து போனாராம்.

தாத்தாவைப் புதைத்த இடத்தில் இருக்கிறது அதிஷ்டானம். வேளை தவறாமல் பூஜை புனஸ்காரங்கள் உண்டு. என்றும் அணையாத நித்தியதீபம் உண்டு.

அதிஷ்டானத்துக்கு எல்லாரும் சென்றபோது வக்கீல்மாமாவும் வரவில்லை. அப்பாவும் வரவில்லை...

உச்சிகாலப் பூஜை தொடங்கிவிட்டது போல. கோயிலுக்குள்ளிருந்து ஆலாட்ச மணியின் ஒலி வெளியேறி வருகிறது. பிரகாரங்களில் தங்காமல் தாண்டி வந்து, கடற்கரையெங்கும் ஒரு கணம் விரவி, நேரே சமுத்திரத்தைப் பார்த்து விரைந்து, பின் கரைந்து காணாமல் போகிறது. அதற்குள் அடுத்த அலை வந்து நிரம்புகிறது. கடல் அலைகளுக்கும் மணியோசையின் அலைகளுக்கும் நடக்கும் ரகசிய யுத்தத்தில் சமுத்திரத்தின் கைதான் ஓங்கியிருக்கிறது என்று நினைத்துக்கொண்டான் வேதம்.

சட்டைப் பித்தானில் கோத்த தங்கச் சங்கிலியின் நுனியாகச் சட்டைப்பைக்குள் கிடந்த புதுக் கடிகாரத்தை எடுத்துப் பார்த்தான். மணி பனிரண்டரை. சட்டென்று எண்களும் முட்களும் மறைந்து புது மாமனாரின் பரிதாப முகம் கடிகாரத்தில் தோன்றியது. புதுக்கருக்கு மினுங்கும் கடிகாரத்தை அவசரமாகப் பைக்குள் மீண்டும் போட்டான். இந்த மனிதனின் குணக்கேடான சுபாவம்தான் ஜில்லா முழுக்கத் தெரியுமே, இவ்வளவு செலவும் அவமானமும் பட்டு இந்தக் குடும்பத்தில் எதற்காக அந்தப் பிராமணர் சம்பந்தம் செய்துகொள்ள வேண்டும்...?

பார்வை யதேச்சையாக டீக்கடைப் பக்கம் ஓடியபோது, அந்தக் கறுப்பு மனிதர் இன்னமும் தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதைக் கவனித்தான் வேதமூர்த்தி. தன்னைப் பார்க்கிறார் என்று ஏன் நினைக்க வேண்டும்? தன் திசையிலேயே, தனக்கும் பின்னால் உள்ள சமுத்திரத்தைப் பார்க்கிறாரோ என்னவோ? வைத்த கண் வாங்காமல் மணிக்கணக்காகப் பார்த்துக் கொண்டிருக்க யோக்யதை உள்ளதுதான் இந்தக் கடல்.

கடல்மீது பதிந்த பார்வையை மீட்டுக் கறுப்பு மனிதர்மீது மீண்டும் கிடத்தியபோது, அவர் எழுந்து மணற்பரப்பில் நடந்து வருவதைக் கண்டான் வேதமூர்த்தி. இனம் புரியாத உள்ளுணர்வு உந்திக் கிளப்ப, உடனடியாக எழுந்துவிட முனைந்தான். அந்த மனிதர் நெருங்குவதற்குள் இடத்தைக் காலி செய்துவிட வேண்டும்...

ம்ஹூம். மணலில் கால்கள் வேர் பிடித்துவிட்ட மாதிரி, சூட்சுமமான இரும்புக்குண்டுகளால் நங்கூரம் பாய்ச்சின மாதிரி... வெகுநேரம் உட்கார்ந்திருந்ததால் முழங்காலுக்குக் கீழே மரத்துவிட்டதோ? அந்தப் கிழவர் அருகில் நெருங்கும்வரை உணர்ச்சியே இல்லாதிருந்த கால்கள், அவர் எதிரில் வந்து நின்றபோது வழக்கம்போல சுவாதீனமாகியிருந்தன. எழுந்து நின்று, தன்னையறியாமல் கை கூப்பினான் வேதமூர்த்தி.

அவர் உள்ளங்கை மலர்த்தி ஆசீர்வதித்தார். எதிரில் உட்கார்ந்து கொண்டார். இவனையும் உட்காரச் சொல்லி சைகை காட்டினார். தொண்டையைச் செருமினார்.

என்ன, புதுமாப்பிள்ளை ஸார், மண்டபத்துக்குத் திரும்ப மனசு வரலையா இன்னும்?...

தலைகுனிந்து அமர்ந்திருந்தான் வேதமூர்த்தி.

...வெறும் மான அவமானத்துக்கே இப்பிடித் தலைகுனிஞ்சு உக்காந்திருக்கியே? வியாதியும் தொத்தினால் என்ன செய்வே?

அதிர்ந்துபோய்த் தலைநிமிர்ந்தான். என்ன சொல்கிறார் இவர்? அவருடைய கண்களைத் தொடர்ந்து பார்க்க முடியவில்லை. பளீரென்ற வெண்மை பளபளக்கும் விழிகள். கோலிக்காய்கள்போலத் திரண்டு நின்ற கருவிழிகளின் கூர்மையைத் தாங்க முடியவில்லை.

நீங்க சொல்றது புரியலே...

என்று தழைந்த குரலில் முனகினான். அந்நியர் கணீர்க்குரலில் தொடர்ந்தார்:

இவ்வளவு துட்டும் கொட்டி இப்பிடி ஊரறிஞ்ச துன்மார்க்கன் வீட்டில் கொண்டுவந்து பெண்ணைக் கொடுக்கிறான் ஒருத்தன் என்றால், சும்மாவா கொடுப்பான்...?

அட, ஆமாம். இது எனக்கு ஏன் தோன்றவில்லை...? வேதமூர்த்தி பதில் சொல்லாமல் தலைகுனிந்திருந்தான். சொல்ல ஆரம்பித்துவிட்டார்; எப்படியும் சொல்லி முடிக்கத்தான் செய்வார். அவராகவே சொல்லட்டும்.

...அந்தப் பெண்ணுக்கு க்ஷயம் இருக்கு அப்பனே.

என்னது...?

வேதமூர்த்தியின் குரல் நடுங்கியது. உடலெங்கும் ஒரு துடிப்பு சொடுக்கி ஓடி மறைந்தது. வந்தவர் சமுத்திரத்தின் திசையில் பார்வை செலுத்தியிருந்தார்.

...நிஜமாவா?

உன்னைத் தேடிவந்து பொய் சொல்ல எனக்கு ஏதானும் அவசியம் உண்டா...?

அவர் இன்னும் பார்வையைத் திருப்பவில்லை.

...அவளுக்கு ஆயுசே இன்னும் ஆறுமாசம்தான். கன்னிகையாய்த்

தன் பொண்ணு போய்ச் சேந்துறப்படாதேங்கிற கவலை தகப்பனுக்கு. எரியிற வீட்டில் பிடுங்கினவரைக்கும் லாபம்னு உன் தகப்பனார் நினைக்கிறார்.

அவர் சிரித்தார். விறுவிறுவென்று ஒரு வேகம் உடம்புக்குள் ஏறுவதை உணர்ந்தான் வேதமூர்த்தி. கையை ஊன்றி எழு எத்தனித்தான்.

இதைச் சும்மா விடப் போறதில்லே நான்.

என்ன செய்யப் போறே?

அவர் மறுபடியும் சிரித்தார். விறைத்த கால்கள் உடனடியாகத் துவண்டுவிட்ட மாதிரி மணலில் அழுந்தின. அந்த ராட்சஸனிடம் எப்படி நேருக்குநேராய்க் கேட்பது? சந்நதம் வந்த மாதிரி குதிப்பாரே, எப்படிச் சமாளிப்பது? பகல்பொழுது திடீரென்று நடுராத்திரியாகி விட்டதுபோலக் கண்களுக்குள் இருட்டுப் படிந்தது. மூன்று மணி நேரத்துக்கு முன்புதான் தாலியேற்றுக்கொண்ட அந்தப் பெண்ணை எப்படி முகம் பார்க்க? தலைக்குள் நூற்றுக்கணக்கில் நண்டுகள் குடைவதுபோல இருந்தது. நெருப்பில் இளகிக் கனிந்த இரும்பின்மீது சம்மட்டியால் அடிக்கிற மாதிரி அவர் அடுத்த கேள்வியை வீசினார்.

ஒரே ஒரு வியாதி தொத்தும்னவொடனே தெகைச்சுட்டியே. தலெமொறை தலெமொறையாய்த் தொத்திப் படரப்போற பாவத்தெச் சம்பாதிச்சு வச்சிருக்காரே உன் தகப்பனார். அதெ என்ன பண்ணப் போறே...?

அவரை நிமிர்ந்து பார்த்தான் வேதமூர்த்தி. தான் சொன்னதை விளக்குகிற மாதிரித் தொடர்ந்தார் அவர்.

...பின்னே? தஞ்சாவூரில் உஞ்சவிருத்தி செஞ்சு பிழைச்ச சோழியப் பரம்பரையில் பிறந்துவிட்டு, திருச்செந்தூரில் கோயில் ஊழியத்தில் வந்து உக்காந்த வம்சம் இல்லையா உங்களது? போன தலைமுறை வரைக்கும் பிக்ஷாண்டிகள். இப்போ லட்சாதிபதி ஆனது எப்பிடி? மனசு உவந்து யாராவது குடுத்த சொத்தா இதெல்லாம்? எத்தனை பேர் வயித்தெரிச்சல், எத்தனை சாபம்? உன்னை மாதிரி ஒருத்தனை ஒரு ராத்திரி நிம்மதியாத் தூங்கவிடுமா? அதுலெயும் போன பங்குனியிலே ஒரு பொம்மனாட்டி சாபம் குடுத்திருக்கா. பால்யத்துலேயே புருஷனைச் சீக்குக்குப் பறிகுடுத்த சின்னப் பொண்ணு அவ. அவளோடெ வீட்டெயும் காணியையும் மட்டும் பிடுங்கிக்கலே உன் தகப்பன். நாதியத்து நின்னவளை மிரட்டி... இவன் பொண்ணு வயசு அந்தக் கொழந்தைக்கி. உன் தாயாருக்குத் தெரியும், கேட்டுப் பார்.

உங்களுக்கு எப்பிடி இதெல்லாம் தெரியும்?

வேதமூர்த்தி அவரையே உறுத்துப் பார்த்தான்.

அதுவா...!

அவருடைய முகத்தில் இளக்கம் அரும்பியது. வசீகரமான பற்கள், லேசாக வெளித் தெரிந்தன.

...இருந்த இடத்திலே இருந்தே எல்லாத்தையும் தெரிஞ்சுக்கிறதுக்கு ஒரு மார்க்கம் இருக்கு அப்பனே... நூத்துக்கு நூறு தெரிஞ்சுக்க யாராலெயும் ஆகாது. ஆனா, கணிசமான அளவு பாத்துறலாம்...

அவர் முகத்தில் இயல்பாகப் படர்ந்திருந்த சிரிப்பில் சுழிப்பு அதிகரித்துவிட்ட மாதிரிப் பட்டது. கண்களில் ஆழமும் கூடிவிட்டது.கனவில் பேசுகிறவர் மாதிரி அவர் குரலில் தொலைவும் ரகசியமும் சேர்ந்திருந்தது.

...பாக்கறது எல்லாம் உபயோகப்படும்னு சொல்றதுக்கில்லே. ஆனா, சாதாரணப் பார்வைக்கிக் கிடைக்காத பேரானந்தம் உண்டு அதிலே. யார்ட்டெயும் விண்டு சொல்லிப் புரியவைக்க முடியாத ஆனந்தம். 'தாய் தன் மணாளனோடெ ஆடிய சுகத்தைத் தன் மகள்கிட்டெச் சொல்லமுடியுமா?'ன்னு கேக்கிறார் திருமூலர். அததுக்குன்னு சில பயிற்சிகள் இருக்கு. யாரும் கத்துக்கக் கூடியதுதான். ஒனக்கு விருப்பமா...?

சமுத்திரத்தின் திக்கில் படிந்திருந்த பார்வையை இவன் புறம் திருப்பினார் அவர். அந்தக் கண்களில் அபரிமிதமான கனிவு இருந்தது. அதைவிடவும் அவற்றில் பிரகாசித்த உண்மையின் வெளிச்சம்... வேதமூர்த்தி ஆமாமென்று தலையசைத்தான் வசியத்துக்கு ஆட்பட்டவன் மாதிரி.

...எல்லாத்தையும் விட்டுட்டு என்னோடெ வந்துறணும். முடியுமா?

நிரந்தரமாவா...?

ஆமா. என்னோட வர்றதுக்கு ஒரு அடி எடுத்து வச்சிட்டாலும் அதுக்குப் பிற்பாடு நீ பழைய வேதமூர்த்தி கிடையாது. சம்மதம்னாச் சொல்லு...

கிழவர் ஏதோ திட்டத்தோடுதான் வந்திருக்கிறார். அதன் பகுதியாகத்தான், புது மனைவிக்கு வியாதி என்று புளுகுகிறாரோ?

...சும்மா நீயாப் பொறப்புட்டு வந்தாப் பிரயோசனமில்லே.

நேத்திவரைக்கும்னா தாயார் சம்மதம் போதும். இன்னிக்குக் குடும்பஸ்தனாயிட்டியே, உன் பொண்டாட்டி சம்மதமும் வேணும். வாங்க முடியுமா உன்னாலே...?

தாலி கட்டிய அன்றே புருஷனைப் பிரிய எந்த மனைவி சம்மதிப்பாள்? இவர் போகாத ஊருக்கு வழி சொல்கிறார். அபத்தமாக நீண்டுகொண்டிருக்கிறது இந்த சம்பாஷணை என்று தோன்றியது. நேரமாகிவிட்டது. மண்டபத்துக்குத் திரும்பலாம்...

இவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருந்த மனிதரை, வந்து ஒருவேளை சாப்பிட்டுவிட்டுப் போங்கள் என்று அழைக்கலாமா? இவரை எந்த அளவு நம்புவது?

...நானும் உன்னோடெ மண்டபத்துக்கு வரேன். நான் சொன்னதெல்லாம் உண்மையான்னு உன் தாயார்ட்டெயும், அந்தப் பொண்ணு காயத்ரீட்டெயும் கேளு. ரெண்டுபேரும் அனுமதிச்சா மட்டும் என்னோடெ வா போதும். ரெண்டுபேர்லெ ஒர்த்தர் முகம் சுளிச்சாலும் நான் தள்ளிப் போயிர்றேன்.

மறுமொழி சொல்லாமல் எழுத்தான் வேதமூர்த்தி. பதிலை எதிர்பார்க்காதவர் மாதிரி அவரும் உடன் நடந்தார்.

வரும்போது இருந்ததைவிட நாலைந்து மடங்கு அதிகரித்துவிட்ட மாதிரி நீண்டு கிடந்தது கோயிலின் வெளிப்பிரகாரம். எங்கிருந்தோ இழுத்து வந்திருந்த வாழைப்பட்டையைக் கடித்து விழுங்க முயன்று கொண்டிருந்தது வறட்டுப் பசு ஒன்று. கும்பலாக உட்கார்ந்திருந்த காக்கைகளுக்கு நடுவில் ஓரிரு மைனாக்கள் தென்பட்டன. சந்தனம் அப்பிய புத்தம்புது மொட்டைத் தலையுடன் ஒரு சிறுவன் எதிர்த்திசையிலிருந்து ஓடிவந்தான். காக்கைக் கூட்டம் விதிர்ந்துப் பறந்தது.

என் மேலே உங்களுக்கென்ன இவ்வளவு அக்கறை?

தன்னையும் மீறி வேதமூர்த்தியின் குரலில் வழிந்த சந்தேகத்தையும் குரோதத்தையும் பொருட்படுத்தாதவர் மாதிரி நிதானமான குரலில் பதில் கேள்வி உதிர்த்தார்.

மனுஷ வாழ்க்கைலே காரண காரியம் சொல்ல முடியாத விஷயங்கள் எவ்வளவு இருக்குங்கிறே வேதம்?

ஒவ்வொரு காக்கையாக மீண்டும் வந்து அமரத் தொடங்கின. இருவருக்கும் இடையில் மறுபடி இறங்கிவிட்ட மௌனத்தை

ஆளுக்கொருபுறமாகப் பற்றி இழுத்துக்கொண்டு நடந்தார்கள்.

க டைசிப் பந்தியும் முடிந்து, வெறிச்சோடிக் கிடந்தது சத்திரம். வாசலில் போட்ட பந்தலுக்குச் சற்றுத்தள்ளி மலைமாதிரிக் குவிந்திருந்த எச்சில் இலைகளைத் தள்ளுவண்டியில் அள்ளிப் போட்டுக் கொண்டிருந்தார்கள் இரண்டுபேர். மூன்றாமவர் நீண்ட கோலுடன் அவர்களுக்குக் காவலாக நின்றுகொண்டிருந்தார். நாலைந்து நாய்கள் எட்ட நின்று அவர்களை நோக்கி உச்சஸ்தாயியில் குரைத்துக் கொண்டிருந்தன. பந்தலின் கூரையில் சாந்தமாக ஏழெட்டுக் காக்கைகள் வரிசை கட்டியிருந்தன. அவ்வப்போது ஏதாவது ஒன்று இடம் மாறி உட்கார்ந்தது.

பந்தலுக்குள் பரப்பியிருந்த மணலில் நாலைந்து குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தன. அவர்களில் ஒரு சிறுவன் வேதமூர்த்தியைப் பார்த்தவுடன்,

அத்திம்பேர்...

என்று ஓங்கிக் குரல் விடுத்துவிட்டு, விளையாட்டைத் தொடர்ந்தான். யாரென்றே தெரியவில்லை. பெண் வீட்டைச் சேர்ந்த பையனாய் இருப்பான்.

சத்திரத் திண்ணையில் நாயனக்காரர்களின் கோஷ்டி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. கோணலாய் உயர்த்திக் கட்டிய வேஷ்டியுடன், துள்ளித் துள்ளித் தவில் வாசித்த குள்ளர் விட்ட குறட்டை திண்ணை முழுவதும் நிரம்பி வழிந்தது. அவ்வளவு பெரிய சத்திரத்துக்குப் பொருத்தமில்லாமல் சிறியதாக இருந்த நிலைவாசலைத் தாண்டி உள்ளே நுழைந்தான் வேதமூர்த்தி. உடன் வந்த அந்நியக் கிழவர் பந்தலில் இருந்த பெஞ்ச்சில் உட்கார்ந்துகொண்டார். பந்தலுக்குள் பரப்பிய மணல் தரையில் சாவகாசமாக உட்கார்ந்திருந்த ஓரிருவர் அவரை வெறித்தார்கள். புதுமாப்பிள்ளையோடு வந்தவர் இல்லாவிட்டால் அந்தக் கோவணஸ்தரை 'போப்பா, போ...' என்று விரட்டியிருப்பார்கள்.

தாழ்வாரத்தில் நிரம்பிய இருட்டில் ஏகப்பட்ட செருப்புகள் ஜோடிமாறியும் புரண்டும் சிதறிக் கிடந்தன. காலை இடறிய ஒரு செருப்பைக் கெந்தி ஓரமாகத் தள்ளிவிட்டு திருமணம் நடந்த பெரிய ஹாலின் வெளிச்சத்துக்குள் நுழைந்தான். விருந்தினர்கள் அங்கங்கே படுத்திருந்தார்கள். தவழ்ந்து திரியும் குழந்தைக்குப் பொறுப்பாக இருந்த தாயார்க்காரி உயர்த்திச் செருகிய புடவையுடன் ஒரு தூணில் சாய்ந்து நின்றிருந்தாள். அவளை நெருங்கி,

காயத்ரி எங்கே இருக்கா?

என்றான் வேதமூர்த்தி. புடவையைச் சட்டெனத் தழையவிட்டபடி, உக்கிராண அறையின் பக்கமாய்க் கைகாட்டினாள் அவள்.

அறைக்குள் இவன் நுழைந்ததை முதலில் யாரும் கவனிக்கவில்லை. மூன்று தலையணைகளை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கி, பறந்து கொண்டிருப்பவள் மாதிரி இரண்டு கைகளையும் விரித்து, அவற்றின் மேல் மல்லாந்து கிடந்தாள் காயத்ரி. பக்கத்தில் அவளுடைய தாயார் அமர்ந்து மகளின் நெஞ்சை நீவிவிட்டுக்கொண்டிருந்தாள். கூடு தட்டிய நெஞ்சு. சற்றுத் தள்ளி ஒரு கோணி மூட்டையின்மீது கவிழ்ந்து கோழித் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார் காயத்ரியின் தகப்பனார்.

யதேச்சையாக முகத்தைத் திருப்பிப் பார்த்த மாமியார் பந்துபோலத் துள்ளியெழுந்தாள். ஒன்பது கஜம் புடவையின் முந்தானையை அவசரமாக இழுத்து விரித்து முதுகோடு போர்த்திக்கொண்டாள். கொசுவத்தைக் காலால் சரிப்படுத்திக்கொண்டு சுவரருகில் விரைந்து தலைகுனிந்து நின்றாள். சன்னமாக,

யத்தூ... எடி யத்தூ... உங்காத்துக்காரர் வந்திருக்கார் பார்...

என்றாள். இந்தச் சப்தம் போதுமானதாக இருந்தது மற்ற இருவருக்கும். உதறிக்கொண்டு எழுந்தார்கள்.

சுவரோரமாகச் சுருண்டு படுத்திருந்த கிழவியை இப்போதுதான் கவனித்தான் வேதமூர்த்தி. பொக்கை வாயை நன்கு பிளந்துகொண்டு உறங்கிய நார்மடிக் கிழவி. பஞ்சைப் பரப்பி ஒட்டிய மாதிரி வெளுத்த மொட்டைத்தலை, முக்காடு விலகியதால் விகாரமாகத் தெரிந்தது. வேதமூர்த்தி தொண்டையைச் செருமினான்.

காயத்ரியோடெ நான் கொஞ்சம் பேசணுமே.

இந்தோ, நாங்கள்லாம் வெளிலெ போயிர்றோம்...

என்று பதட்டமாகச் சொன்னார் மாமனார்.

...மங்களம், அத்தையை எழுப்பி வெளியிலே போய்ப் படுத்துக்கச் சொல்லு

என்று குழறினார்.

அதெல்லாம் ஒண்ணும் வாண்டாம். எல்லாரும் இங்கேயே இருக்கலாம்.

என்று அழுத்தமாகச் சொன்னான் வேதமூர்த்தி. அவரவரும் இருந்த இடத்திலேயே உறைந்தார்கள். காயத்ரியின் முகத்தை நேருக்கு நேராகப்

பார்த்தான். மூச்சு இரைத்து, முகம் சிவந்திருந்தது. சௌந்தரத்துக்கு ஏற்ற மருமகள்தான். கிள்ளியெடுக்கச் சதையில்லாத உடம்பு. இப்போதுதான் அவளை முதன்முறையாகச் சுதந்திரமாகப் பார்க்கிறோம் என்பது வேதமூர்த்திக்கு உறைத்தது. இதுவரை பார்த்ததெல்லாம் அந்த ராட்சஸன் முன்னிலையில்தான்...

உடம்பு சௌகரியமில்லாதவளா நீ?

நேரடியாக விழுந்த வாக்கியத்துக்கு அவள் மௌனமாகத் தலையை ஆட்டினாள். அவளுடைய அப்பா தயங்கின குரலில் சொன்னார்.

உங்க தகப்பனார்ட்டெ மொதல்லியே சொல்லியாச்சே. அதுக்கோசரம் இருபத்தைஞ்சு சவரன் அதிகம் போடச் சொன்னார். நானும் போட்டிருக்கேனே. உங்கள்ட்டெத் தகவல் சொல்லியாச்சு. நீங்களும் சம்மதிச்சுட்டேள் னு அவர் சொன்னாரே.

உச்சந்தலைக்கு ஏறியிருந்த ஆத்திரம் பாக்கியில்லாமல் அவிந்துபோனது. கடற்கரையிலிருந்து நடந்து வரும்போது யோசித்து யோசித்து உருவாக்கியிருந்த துடுக்கான வாக்கியங்கள் அத்தனையும் ஆவியாகிவிட்டன. 'இந்த மனிதர் என்ன செய்வார் பாவம்' என்று தோன்றியது.

அந்தப் பெண்ணின் உடம்பு நடுங்குவது வெறும் பார்வைக்கே தெரிந்தது. அவளையும், அவளைப் பெற்றவர்களையும் தன் விசாலமான மார்பில் ஒருசேர அணைத்துக்கொண்டு ஆறுதலாய் ஓரிரண்டு வார்த்தைகள் பேசுவதற்கு மனத்தின் ஒரு பகுதி ஆசைப்பட்டது.

இவ்வளவு பெரிய ரோகமும் இருபத்தஞ்சு சவரனும் ஒண்ணுக் கொண்ணு சமானமாகுமா மாமா? ரொம்ப முத்திடுத்தாமே?

பெரியவர் கைகளைக் கூப்பினார். மாமியார் விசும்பும் ஒலி கேட்டது. உறங்கும் கிழவியிடமிருந்து ஒலித்த வெகு சன்னமான குறட்டையைப் பூதாகாரமாக்கிக் காட்டிய நிசப்தம் நிலவியது அறைக்குள். வேதமூர்த்தி காயத்ரியை நோக்கிக் கேட்டான்:

'இப்பிடியே விட்டுட்டு வந்துடு'ன்னு ஒர்த்தர் கூப்பிடறார். நீ சம்மதிக்காமெ நான் போகமாட்டேன். இந்தக் கல்யாணப் பேச்சு ஆரம்பமான நாள்லேருந்து நீதான் பாத்திருப்பியே? என் தகப்பனாரோடெ போக்கெச் சகிச்சுண்டு ரொம்பநாள் என்னாலே குப்பைகொட்ட முடியாது. ஒனக்கும் ரொம்ப முத்தின நிலமையாமெ. என்ன சொல்றே, நான் போகட்டுமா?

மாப்ளே...

என்ற பெரியவரின் அரற்றலைக் கையமர்த்தியபடி நிமிர்ந்தாள் அந்தப் பெண். வேதமூர்த்தியின் கண்களோடு கலந்தது அவளுடைய பார்வை.

சாமியாராப் போப்பறேளா?

மூன்று நாலடிகள் தள்ளித்தான் நின்றிருந்தாள் என்றாலும், சகிக்க இயலாத துர்நாற்றம் பீறியது. அறை முழுவதும் அந்த நாற்றம் நிரம்பிவிட்டமாதிரி உணர்ந்தான்.

தெரியலே. அவர் கூப்பிடறார். எனக்கும் போயிடலாம்னு தோணறது.

தாராளமாப் போயிட்டு வாங்கோ.

யத்தூ...

என்று சற்று பலமாகவே அரற்றினார் பெரியவர். வேதமூர்த்தியின் முகத்தைவிட்டுப் பார்வையை விலக்காமலே கையை மட்டும் உதறினாள் காயத்ரி.

நிஜமாத்தான் சொல்றியா?

பின்னே. ராஜா மாதிரி இருக்கேள். தீர்க்காயுசா இருங்கோ. நான் இந்தோன்னு பொறப்புட்டுருவேன். போன மாசத்தைவிட இந்த மாசம் சிரமம் ஜாஸ்தியாத்தான் ஆயிருக்கு. இவாளெல்லாம் ரொம்ப வதைச்சுத்தான் இந்தக் கல்யாணத்துக்கே ஒப்புக்க வெச்சா.

முழுசாகப் பேசிய நாலைந்து வாக்கியங்கள் தாளாமல் இருமினாள். கடுமையாக மூச்சிரைத்தது.

யத்தூ...

அப்பா, நீ சும்மா இரு. வண்டிக்கி மாடு ஜோடி சேக்கறவன்கூட உன்னை மாதிரிப் பண்ண மாட்டான். என்னை ஒரு வார்த்தை கேட்டிருப்பியா நீ? இதோ பார், தாலி கட்டி முழுசா அஞ்சு மணிநேரம்கூட ஆகலை. எங்கிட்டெ சம்மதம் வாங்கிண்டு வெளியேறணும்னு வந்து நிக்கிறார் பார். நாளைக்கே நான் போய்ச் சேந்தாலும் இப்பிடியொரு மனுஷனோடெ பொண்டாட்டியாத்தான் போப்பறேன். அது போறும் எனக்கு. கல்லு மாதிரி இருக்கற ஒடம்பெக் கரைச்ச பாவம் எனக்கு வேண்டாம். நீங்க தாராளமாப் போயிட்டு வாங்கோ...

தொடர்ந்து இருமினாள். கண்கள் மிளகாய்ப்பழம்போலச் சிவந்து நீர்கோத்தன. இருமலின் ஒலி வழக்கத்தைவிட அதிகமாய் இருந்திருக்க வேண்டும். உறங்கிக்கொண்டிருந்த கிழவி பதறி எழுந்து உட்கார்ந்தாள். மாப்பிள்ளை வந்து அறை நடுவில் நிற்பதைப் பார்த்தவள் அவசரமாகப் புடவையை இழுத்துத் தலையை மூடிக்கொண்டாள்.

வேதமூர்த்தி இரண்டடி முன்னெடுத்து வைத்து காயத்ரியின் வலதுகையைப் பற்றினான். அவள் கண்களுக்குள் புதிதாக வந்து சேர்ந்திருந்த பிரகாசத்தைவிட்டுப் பார்வையை அகற்ற இயலாமல் பார்த்துக்கொண்டிருந்தான். மாமனார் நின்ற இடத்திலேயே சரிந்து, கோணியின்மீது உட்கார்ந்துவிட்டார். தலைகுனிந்திருந்தது, உடம்பு மௌனமாகக் குலுங்கியது. சுவரருகில் விசும்பல் ஒலி அதிகரித்திருந்தது.

...நீங்க பதிலுக்கு எனக்கொரு வரம் தருவேளா?

சொல்லு.

வேதமூர்த்தியின் குரல் கமறியது.

சரின்னு சொல்லுங்கோ.

சரி.

மிச்சமிருக்கற ஆயுஸ்காலம் நான் உங்க அம்மாகூட இருக்க அனுமதிக்கணும் நீங்க...

அந்த ராட்சஸனைப் பற்றித் தெரியாமல் உளறுகிறாளே இந்தப் பெண் என்று ஒரு கணம் தோன்றியது. ஆனால், நான் விலகிவிட்டால் அதிலும் இன்றைக்கே விலகிவிட்டால் அந்த மனிதனுடைய விஷப்பல் தானாக முறிந்துவிடும் என்றும் தோன்றியது.

...அவருக்கு வியாதி தொத்திடாம நான் ஜாக்கிரதையா நடந்துக்கறேன்.

பெற்றவர்கள் இருப்பதை அறியாதவன் மாதிரி அவளைத் தன்னுடன் இழுத்துக்கொண்டான். இவன் தோளில் முகம் பதித்து அவளும் இணைந்துகொண்டாள். ஓரிரு கணங்கள்தாம். மின்னல் தீண்டிய மாதிரி விலகினாள். வறண்ட குரலில்,

நாழியாறது. நீங்க பொறப்புடுங்கோ.

என்றாள். சரேலென்று வெளியேறினான் வேதமூர்த்தி. மாமனார் தன் தலையில் ஓங்கி ஓங்கி அறைந்துகொள்ளும் ஓசை முதுகுப்பக்கம் கேட்டது. அதற்குப் பின்னணி மாதிரி ஓங்கி உயர்ந்தது இருமல்.

அ ம்மா முந்தானையால் முகத்தை மூடிக்கொண்டு குமுறினாள்.

என்கிட்டேச் சொன்னதேயில்லையேம்மா நீ?

என்று வேதமூர்த்தி கேட்டான். சரிகை அடர்ந்த புடவைக்குப் பின்னால் மறைந்த முகம் தேம்பும் குரலில் பதிலளித்தது.

இதெல்லாம் பெத்த கொழந்தெகிட்டத் தாயார் சொல்லக்கூடிய விஷயமாடா அய்யா...?

உடம்பு தொடர்ந்து அதிர்ந்து குலுங்கியது. சற்று ஓய்ந்த பிறகு வெளிப்பட்ட முகம் பரிதாபமாக வெளுத்திருந்தது. உயிர் வறண்ட கண்களால் மகனை வெறித்துப் பார்த்தாள்.

சாயங்காலங்களில் புனுகும் ஜவ்வாதும் மணக்க சலவை உடை தரித்து வில்வண்டியில் புறப்படும் தகப்பனாரின் பிம்பம் குறுக்கே வந்துபோனது. கரணை கரணையாய்த் திரண்ட தசைகளுடன் பயில்வான் மாதிரி நிற்கும் வெற்றுடம்பின் சித்திரம் அதன்மீது படிந்து விலகியது. குச்சிக் கையால் இவன் தோளை எட்டிப் பிடித்துக்கொண்டு பேசினாள் அம்மா.

விடு. இதெல்லாம் உனக்கெதுக்கு? இன்னிக்கித்தான் சகலமும் ஆரமிக்கிறது உனக்கு. நீ பாட்டுக்கு இரு.

அவளுக்கும் வியாதியாமேம்மா?

புகார் கூறும் தொனியில் கேட்டான் வேதமூர்த்தி. ஒரு கணம் அதிர்ந்த பார்வையை உடனடியாக விலக்கி அறை வாசலைப் பார்த்தாள் அம்மா. யாரோ கடந்து செல்லும் நிழல் விலகியதும் பதிலுக்குக் கேட்டாள்.

இதை யார் சொன்னா உனக்கு?

அது கிடக்கட்டும். நிஜம்தானா அது? அவளுக்கு க்ஷயம் இருக்காமே?

முந்தானை மறுபடி முகத்துக்கு ஏறியது. முன்பைவிட அதிக விசையுடன் குலுங்கியது உடம்பு.

இதுவும் பெத்த பிள்ளைகிட்டெச் சொல்ல முடியாத விஷயமாம்மா?

என்னெக் கொல்லாதேடா வேதம். கொல்லாதே...

என்று தலையில் அடித்துக்கொண்டாள் சௌந்தரம். தனக்குள் கிறுகிறுவென்று ஒரு புடைப்பு உயர்வதை உணர்ந்தவாறு சலனமில்லாமல் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

...எனக்கே போனவாரம்தான் தெரியும். ஒங்கிட்டெச் சொன்னா, உன் கல்யாணத்தெப் பாக்க நான் உசிரோட இருக்கமாட்டேன்னு அந்தப் பிராமணன் மிரட்டினார். இன்னிக்கி நேத்தியா, பெறந்ததிலேர்ந்தே நான் கையாலாகாதவடா வேதம்... கையாலாகாதவ...

அடுத்த சுற்றுக் குமுறல் ஆரம்பித்தது. ஆனால், இது அதிக நேரம் நீடிக்கவில்லை.

...ஆனா, சாந்தி முகூர்த்தத்துக்கு முன்னாடி ஒங்கிட்டெச் சொல்றதாத்தான் இருந்தேன். தொத்திடாமெ இருக்கிறதுக்கு கோலப்ப பிள்ளெட்டெச் சொல்லி சூரணமும் வாங்கி வச்சிருக்கேன். அதுசரி, ஒனக்கு யார் சொன்னா இதெ?

அழுது வெளுத்திருந்த முகத்தில் பழைய சிவப்பு திரும்பிவிட்டது.

ஒர்த்தர் சொன்னார். முன்னெப்பின்னெத் தெரியாதவர்.

மகன் தன்மீதுள்ள கோபத்தால் இப்படிச் பேசுகிறான் என்று நினைத்தாள் தாயார். அவநம்பிக்கை அப்பட்டமாய்த் தெரிந்தது முகத்தில்.

...நிஜமாவே அந்நியர்தாம்மா. அவரெ நான் இதுவரைக்கும் பாத்ததேயில்லே. கடக்கரைலே யதேச்சையாச் சந்திச்சேன். ஆனா, அவர் இன்னொன்ணும் சொல்றார்...

சிறு இடைவெளி விட்டான். முன்பைவிட வெகுவாகத் தழைந்த குரலில், தயக்கமாய்த் தொடர்ந்தான்.

...இந்த வாழ்க்கையே வேணாம். என்னோட வந்துடுங்கறார்.

அம்மா அப்படி ஒரு பதில் சொல்வாள் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை வேதமூர்த்தி.

தாராளமாப் போயிடுய்யா. ஒன் மனசுக்கு நீ எங்கேயிருந்தாலும் சேஷமமாய் இருப்பே. என்னோடெ ஆசீர்வாதம் முழுக்க முழுக்க உண்டு உனக்கு. மொத்தத்தையும் இப்பிடியே விட்டுத் தலைமுழுகிட்டுப் போயிடு.

எங்கேடீ போகச் சொல்றே உன் செல்லப் பிள்ளையே?

என்றவாறு நிலைவாசலில் தென்பட்ட உருவத்தை இருவருமே எதிர்பார்த்திருக்கவில்லை என்பதால் அதிர்ந்தார்கள். வேதமூர்த்தி முதலில் சுதாரித்துக்கொண்டான். கனமாக எதுவும் நடந்துவிடக்கூடாதே

என்று பதறுகிறவள் மாதிரி சௌந்தரம் மகனின் வலதுகையை இறுக்கிப் பிடித்தாள். வெதுவெதுவென்று இருந்தது அவளது உள்ளங்கை.

வெ றுவாக்கலம் கெட்ட தாயழி, என் சொத்திலே ஒரு அம்மஞ்சல்லி கூடக் கிடையாதுலே ஒனக்கு. பூராவும் தர்மத்துக்குத்தான்... ஒழிஞ்சு போ.

தகப்பனார் கடைசியாக உதிர்த்த ஆசீர்வாதம் திரும்பத் திரும்ப காதில் ஒலித்தது. பஸ்ஸுக்குள் நிரம்பியிருந்த மண்ணெண்ணெய்ப் புகை மூச்சடைத்தது. நாசிக்கருகில் வலதுகையை உதறிக்கொண்டான் வேதமூர்த்தி.

அந்த அந்நியர் இப்போது அவர் மட்டும்தான் மிச்சம். அப்புறம் என்ன அந்நியர்? நிச்சிந்தையாக உறங்கிவிட்டார். இவன் தோளில் பதிந்தும் பதியாமலும் ஆடிக்கொண்டிருந்தது அவர் தலை. வெறுங்கையை வீசியபடி பஸ் ஸ்டாண்டுக்கு அவருடன் நடந்துவந்தபோது மனம் மிகப் பெரிய மைதானமாக விசாலமாகிவிட்ட மாதிரியும்; அதன் ஒவ்வொரு அங்குலமும் வெற்றுத் தரையாகிக் காலியாகக் கிடப்பதையும் உணர்ந்ததும்; தான் நடக்கவில்லை, பறக்கிறோம் என்று தோன்றியதும் இன்னொரு தடவை நினைவில் வந்தன.

பெரியவர் பஸ்ஸில் ஏறவே மாட்டாராம். தேசம் முழுக்க நடந்தே சுற்றியிருக்கிறார். இவன் வசதியான வீட்டுப் பிள்ளை, கல்யாணம் என்கிற மனப் பதட்டத்தில் வாரக்கணக்கில் தூங்காமல் கழித்திருப்பான், இன்று ஒருநாள் மட்டும் இவனுக்காக பஸ்ஸில் போகலாம் என்று சொல்லிக் கூட்டி வந்திருக்கிறார். நாளை மதுரையில் தங்கவிருக்கிறார்கள். அதற்கு அடுத்த நாளிலிருந்து இவனும் நடக்கப் பழகலாம்.

முதலில் திருப்புவனத்தில் சென்று புஷ்பவனநாதரை தரிசனம் செய்துவிட்டுத்தான் அடுத்த வேலை என்றார். 'அந்த ஊர் இருப்பது தஞ்சாவூர் ஜில்லாவில் அல்லவா?' என்று கேட்டான் வேதம்.

அது திருபுவனம். இது திருப்புவனம். ஆதியிலே திருப் பூவண்ணமா இருந்திருக்கலாம்.

என்று பதில் சொல்லிவிட்டுக் கண்களை மூடிக்கொண்டவர்தாம். அருப்புக்கோட்டையில் ஒருதடவை கண் திறந்து பார்த்தார். 'ஓஹோ' என்கிற மாதிரித் தலையாட்டிவிட்டு மறுபடி மூடிக்கொண்டுவிட்டார்.

சாயங்காலம் வேகமாக மங்கத் தொடங்கிவிட்டது. பஸ் விரைந்து கடக்கும் வயலில் வெண்ணிறப் போர்வைபோலப் பரந்து அமர்ந்திருந்த

கொக்குகள் ஏதோ சமிக்ஞை கிடைத்த மாதிரி ஒரே சமயத்தில் உயர்ந்து பறந்தன. சதா சர்வகாலமும் சேற்றில் நின்று இரைதேடும் அவை, இறக்கைகளின் வெண்மையை எப்படி இவ்வளவு கறாராகப் பேணுகின்றன என்று தனக்குள் ஒரு ஆச்சரியம் உதிப்பதையும், இதுமாதிரியானதொரு ஆச்சரியம் முதல் தடவையாகத் தனக்குள் உதிப்பதன் ஆச்சரியத்தையும் ஒருங்கே அனுபவித்தான் வேதமூர்த்தி.

இன்று முழுக்கப் பறவைகள் தன் கவனத்தில் பட்டுக்கொண்டே இருப்பதும் ஒரு உபரி ஆச்சரியம்தான்.

மெல்ல மெல்லக் கண் கிறங்குகிறது. தூக்கத்தின் கடைசி அலை தாக்கும் சமயத்தில், சிறு ஆற்றின் கரையில் ஈர வேஷ்டியை இருகைகளாலும் உயர்த்திப் பறக்கவிட்டவாறு தான் நடப்பதும், அது ஒளிரும் கூரை மாதிரிப் பின்னோக்கிப் பறந்தபடி உலர்வதும் தத்ரூபமான காட்சியாய்த் தென்பட்டன. தான் நடந்துவருவதை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த இளைஞனின் கண்களில் அவ்வளவு குரோதம் ஏன் இருந்தது என்பது சற்றும் புரியவில்லை வேதமூர்த்திக்கு. அவன் முகம் அடையாளம் தெரியவில்லை ஆனால், அதைக் கூர்ந்து பார்க்கவிடாமல் காயத்ரியின் முகம் குறுக்கே தோன்றித் தோன்றி மறைந்தது. நல்லவேளை, அவள் கண்களிலிருந்து பொங்கிய கண்ணீரில் அவளது முகம் கரைந்தே போனது...

தூக்கம் நிரந்தரமாய்க் கலைந்துவிட்டது.

✠

ஆகஸ்ட், 1960

நா கரிகத்தின் வாசனை இன்னும் நுழையாத ஊர் அது. ஆந்திர மாநிலம் முடிந்து மஹாராஷ்ட்ரம் ஆரம்பிக்கும் எல்லையில் நத்தைபோலக் கிடப்பது. ஊர் எல்லையில் ஓடும் கால்வாய் தழுவ, நிரந்தரமான துயிலில் அமிழ்ந்திருக்கும் அதன் பெயரை வரைபடங்களில் கண்டுபிடிப்பது மிகவும் கடினம்.

இன்றைய தேதியில், தமிழ்நாட்டில் அந்த ஊரின் பெயர் தெரிந்தவர்கள் இரண்டுபேர்தாம். ஒருவர் சதா வேறு உலகில் சஞ்சரிக்கிறவர். ஒரு ஊருக்கும் இன்னொரு ஊருக்கும், ஒரு ஆளுக்கும் இன்னொரு ஆளுக்கும், ஒரு நாளுக்கும் இன்னொரு நாளுக்கும், ஒரு பிறவிக்கும் இன்னொரு பிறவிக்கும் பேதமெதுவும் இல்லாததுபோல நடந்துகொள்கிறவர். அணுக்கமானவர்கள் அப்படித்தான் சொல்கிறார்கள்.

மற்றவர், ஜய்ராம். ஏனோ, அவருமே யாரிடமும் சொல்வதில்லையாம். வடக்கத்திப் பெயர்களோடு பின்னொட்டாக ஒரு குடும்பப் பெயர் இருக்குமல்லவா, குறிப்பாக, மராத்தியர் என்றால் போஸ்லே, பவார், சாத்தே, தேஷ்முக் இந்த மாதிரி, அதைக்கூட ஜய்ராம் குறிப்பிடுவதில்லை. இதை அவரே சொல்கிறார். யாருக்கும் வாக்கு எதுவும் கொடுத்திருக்கிறாரோ என்னவோ. சரி, அதைத் தெரிந்துகொண்டு மற்றவர்களுக்கு என்ன ஆகப் போகிறது?

தவிர, இவர் கிளம்பிய நாலைந்து வருடங்களில் குடும்பமே ஊர் பெயர்ந்துவிட்டது. தம்பி பக்கத்து ஜில்லாவுக்குக் கலெக்டராக வந்ததுவரை ஏதாவது ஒரு வழியில் தகவல் கிடைத்துக்கொண்டிருந்தது. பிறகு எல்லா வழிகளையும் கவனமாக அடைத்துவிட்டார் ஜய்ராம்.

ஜய்ராம் குடும்பம் மிகப் பெரியது. உடன்பிறந்தவர்களில் ஆண்கள் இரண்டு பேர், பெண்கள் நான்குபேர். இரண்டுபேர் மூத்தவர்கள். அண்ணனும் அக்காவும். கடைக்குட்டித் தங்கை ஐந்தாவது வகுப்புப் படித்துக்கொண்டிருந்தாள், வீட்டைவிட்டு ஜய்ராம் வெளியேறும்போது.

தாய், தகப்பன். இரண்டு பெரிய பன்றிகள், ஏழு குட்டிகள். ஒரு சேவல், நாலைந்து குஞ்சுகள். இவர்களை அண்டி வாழும் பழுப்பு நிற நாய் ஒன்று. மழைக்காலம் வந்துவிட்டால் இவ்வளவு பெரிய பட்டாளத்தை உள்ளே வைத்துப் பாதுகாக்க இடம் போதாமல் தகரக் கூரை கொண்ட அவர்களுடைய குடிசை சிரமப்படும்.

வாசலில் சிறு திறந்த வெளி. அதன் இடதுபுறம் நிரந்தரமாய்ச் சகதி தேங்கிய சதுப்பு. கறுப்பு நிறமாக இருக்கும், ஊருக்குள்ளிருந்து தெற்கு நோக்கி வரும், ஒரு சாக்கடை தற்காலிகமாகத் தேங்கி திசை திரும்பும் இடம் அது. வலதுபுறம் ஓங்கி உயர்ந்து படர்ந்திருக்கும் அரசமரம். அதன் அடியில் வெவ்வேறு அளவுகளில் தட்டைக் கற்கள் கிடக்கும். குழந்தைகள் உட்கார்ந்து பாடம் படிக்கவும், விளையாடவுமான இடம் அந்த மரத்தடி. தினசரிச் சமையல் நடப்பதும் அங்கே முக்கோணமாகக் கிடத்திய மூன்று கல் அடுப்பில்தான்.

சற்று அகலமாய் இருக்கும் அந்த இடம். பகல் பொழுதில் தாயார் உட்கார்ந்து திருகையில் மாவு அரைக்கவோ, தானியங்களைப் புடைத்துச் சுத்தம் செய்யவோ, பிற்பகலில் அலைந்து இடுப்பில் சுமந்த பிரம்புக் கூடையில் சேகரித்து வந்த பன்றிவிட்டைகளைக் காயப்போடவோ என்று ஏதாவது வேலைகள் செய்து கொண்டிருப்பாள். அப்பாவைவிடக் கடுமையான உழைப்பாளி அவள். அவருடைய மூத்த சகோதரியின் கடைசி மகள்.

இந்த இடம் மொத்தமும் ஊரார் மானியமாகக் கொடுத்திருப்பது. குடியமர்ந்து அனுபவிக்கலாம். விற்கவோ ஒத்திக்கு விடவோ கூடாது. தவிர, ஊராரைப் பகைத்துக்கொண்டால் உடனடியாகக் காலி செய்துவிட்டுப் போய்விட வேண்டும். வருடம் முழுவதும் பார்க்கும் வேலைக்குக் கூலி முன்பெல்லாம் தானியமாகக் கொடுத்து வந்தார்களாம். இப்போதெல்லாம் ஒவ்வொரு வீட்டுக்கும் மாதம் இவ்வளவு என்று கூலி நிர்ணயித்திருக்கிறார்கள். எல்லாம் அணாக் கணக்கில்தான்.

இதுபோக, முந்தைய நாள் உணவில் மீந்தவை, பழசாகிவிட்ட துணிமணிகள், விழாக் காலங்களில் தரும் இனாம் தொகைகள் போன்றவை உபரி வருமானங்கள். இவற்றுக்கான உபரி வேலைகளையும் ஊரார் வாங்கிக்கொள்வார்கள்.

எதிர்ப்புறம் சதுப்பை ஒட்டி சிறு தள்ளுவண்டிகள் இரண்டு நிற்கின்றன. எந்நேரமும் ஈ மொய்க்கும் வண்டிகள். ஊருக்குள் அத்தனை வீடுகளிலும் எடுப்புக் கக்கூஸ்தான். ஜய்ராமின் தாயார் அதிகாலையில்

எழுந்து வீடுவீடாகச் சென்று, உட்புறம் தகரம் பதித்த பிரம்புக்கூடையில் மலம் அள்ளி வருவாள். நிரம்பிய கூடையைக் குடிசையருகில் நிற்கும் வண்டியில் கவிழ்த்துவிட்டு, அடுத்த சுற்றுக்குப் போவாள்.

தகப்பனார் முதல் வண்டியைத் தொலைதூரம் தள்ளிக்கொண்டு ஓடி, அங்குள்ள கிடங்கில் காலி செய்துவிட்டு, பக்கத்திலுள்ள கால்வாயில் சுத்தம் செய்து திரும்பி வருவதற்குள் இரண்டாவது வண்டி நிரம்பியிருக்கும். இதுபோல ஏழு அல்லது எட்டுத் தடவைகள் அவர்கள் உழைத்து முடிப்பதற்குள் சூரியன் ஆமணக்குச் செடி உயரம் எழும்பியிருப்பான்.

இதன் பிறகு குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கும், அப்பா தெருக்கூட்டுவதற்கும் போவார்கள். பள்ளிக்கூடத்தில் தனியாக உட்கார வைப்பார்கள். பள்ளி மேற்படிப்புக்காக பலார்ஷாவுக்குப் போகும்போது, மற்றவர்களுக்குச் சமமாக பெஞ்ச்சில் உட்கார முடியும். ஆனால், தங்குவது, இவர்களுக்கென்று உள்ள தனி விடுதியில்தான்.

அப்பா ஆரோக்கியமான மனிதர். உடம்பின் ஆரோக்கியம் மட்டுமில்லை, மனத்தின் வைராக்கியமும் கெட்டிதான். பிடிவாதமான கொள்கைகள் உடையவர். உதாரணமாக, பஸ்தி [1] யில் உள்ள அவருடைய நண்பர்கள் பகல்பொழுதைக்கூட குடித்துக் கழிக்கும்போது இவர் சாராயத்தை மோந்துகூடப் பார்த்தவரில்லை. ஆரம்ப நாட்களில் கைனி [2] அதக்கிக்கொள்ளும் பழக்கம் இருந்ததாம். ஸாரே பாபு கண்டித்ததால், காலப்போக்கில் அதையும் விட்டுவிட்டார்.

மேட்டில் குடியிருக்கும் மிதுன் ஷிண்டேவின் குழந்தைகள் பகல் பொழுதில் சாக்கடைக் தண்ணீரைச் சல்லடையால் அரிப்பார்கள், பள்ளிக்கூடப் பையை ஓர் ஓரமாக வைத்துவிட்டு. இங்கே விஷயமே வேறு. மணியடிப்பதற்கு முக்கால் மணிநேரம் முன்னால் வீட்டை விட்டுக் கிளம்பவில்லை என்றால், அம்மாவின் பிரம்பு ஓங்கிப் பேச ஆரம்பித்துவிடும். தன் புருஷனுக்குக் குழந்தைகளை அதட்டவும் கண்டிக்கவும் துப்பு இல்லை என்ற ஆத்திரமாய்க் குமுறி முடியும்.

ஆனால், அம்மாவுக்கு மணி பார்க்கத் தெரியாது. யாரோ, இனாமாகக் கொடுத்த, உறங்கும்போதுகூட மணிக்கட்டைவிட்டுக் கழலாத, பழைய கைக்கடிகாரத்தில் அப்பாதான் நேரம் சொல்வார். குழந்தைகளை நேரத்துக்குக் கிளப்பிவிடுவதில் வெகு குறியாக இருப்பார். இன்னும் தயாராகாமல் சோம்பல் கொண்டாடும் குழந்தைகளை அம்மாவிடம் காட்டிக்கொடுப்பதும் அவர்தான். ஒருமுறை பூசை நடந்துவிட்டால், அடுத்த ஒரு மாதத்துக்குக்

கவலையில்லை. கடிகார முள்ளைவிடச் சுறுசுறுப்பாகிவிடுவார்கள் குழந்தைகள்.

ஆனாலும், அப்பாவின் சுறுசுறுப்பு மாதிரி வராது. தன்னையும் தன் மனைவியையும் தவிர தமது வாரிசுகள் யாரும் குலத் தொழிலில் இறங்கத் தேவையில்லை என்ற பிடிவாதத்துடன் பல பத்து வருடங்களாக ஓயாமல் உழைத்து வருகிறவர் அவர். என்னதான் ஆரோக்கியமும் உறுதியும் கொண்ட உடம்பு என்றாலும், தேய்மானம் சகஜம்தானே. சமீப காலமாக அடிக்கடி ஏதாவது தொந்தரவு வந்துவிடுகிறது. அவரால் இயலாமல் போகும் நாட்களில் இன்னும் சீக்கிரமே எழுந்து தாயார் தனியொருத்தியாகவே சமாளிப்பாள்.

இந்த நியமத்தில் சிறு தாமதம் ஏற்பட்டாலும், குடிசை தேடி வந்து அபூர்வமான கெட்ட வார்த்தைகளில் ஏசும் ஜனங்களைக் கொண்டது ஊர். சுமார் ஐநூறு வீடுகளை உள்ளடக்கியது.

அப்பா சுத்தம் செய்ய வண்டியைத் தள்ளிக்கொண்டு ஓடும் கால்வாய்க்கு எதிர்த்திசையில் இரண்டு மைல் தள்ளி ஒரு நதி ஓடுகிறது. அதிலிருந்து கிளை பிரிந்து செல்வதுதான் மேற்படிக் கால்வாய்.

நதிக்கரையில் கிடந்த பாறாங்கல்லில் ஐய்ராம் உட்கார்ந்திருந்தான். காலைப் பொழுதின் சாம்பல் நிறம் சிறுகச் சிறுக வெண்மையடைந்துகொண்டு வருகிறது. கரையோர மரங்களில் வந்து அடைந்திருந்த பறவைகள் கூட்டம் கூட்டமாக வெளியேறிக் கிளம்பிப் போயாகிவிட்டது. நதியின் பரப்பிலும், கரையிலும் துயரத்திற்கு ஒப்பான மௌனம் நிலவுகிறது.

சர்வகலாசாலை மீண்டும் திறப்பதற்கு இன்னும் மூன்று நாட்கள்தாம் இருக்கின்றன. வழக்கமாக லீவு முடிந்து திரும்பும் நாள் நெருங்கும்போது படிப்பு சம்பந்தமான புதிய திட்டங்கள் மனத்தில் உருவாகியிருக்கும். இந்தமுறை, திரும்பிப் போவது தொடர்பாகப் பெரும் மறுபரிசீலனை ஓடிக்கொண்டிருக்கிறது. காலைப் பொழுதின் குளுமையால் நிரம்பியிருந்த நீரில் திருப்தியாக மூழ்கி எழுந்தும் தலைக்குள் ஒரு வெக்கையை உணர்ந்தான் ஐயராம். காலையில் குளிக்கக் கிளம்பும் முன் நடந்த சம்பவம்தான் காரணம்.

மரத்தடிக்கு வந்து நின்ற பத்துப் பேரும் ஆளாளுக்குப் பேசினார்கள். ஆளுக்கொரு முழு வாக்கியமும், நாலைந்து வசவுகளும் என்று அவர்கள் பேசியதைச் சகித்துக்கொள்ள இரும்புக் காதுகள் வேண்டும்.

உன் மனைவியால் முடியவில்லை என்றால் சொல்லிவிடுப்ரபுராம்.

மஹாராஷ்ட்ரத்தில் பங்கி [3] களுக்குப் பஞ்சமில்லை.

பம்பாயிலெல்லாம் புதுவகைக் கக்கூஸ் வந்தாகிவிட்டது. மாடி வீடுகளிலெல்லாம் அந்தக் கக்கூஸ்தான். வீட்டுக்கு நூறு ரூபாய் போட்டால் போதும், உங்கள் பிழைப்பே நாறிப் போய்விடும். ஏற்பாடு செய்துவிடட்டுமா?

மாதாமாதம் கூலி வாங்க வரும்போது ஆரோக்கியம் நன்றாகத்தானே இருக்கிறது?

கூலியை நாளைக்கு வந்து வாங்கிக்கொள் என்று சொன்னால் மூஞ்சியைத் தூக்கவில்லை? வேலைக்கு மட்டும் ஏன் தாமதமாக வருகிறீர்கள்?

உங்கள் ஒரு குடும்பத்தில் ஒருத்தருக்கு உடம்பு சரியில்லை என்பதற்காக ஊரில் அத்தனைபேர் சுகாதாரமும் கெட வேண்டுமா?

பன்றிகளுக்குச் சமமாகப் பெற்றுப் போடத்தானே செய்திருக்கிறீர்கள்? அவர்களில் இரண்டுபேரை வேலைக்கு அனுப்ப வேண்டியதுதானே? பரம்பரைத் தொழிலைச் செய்வதில் இழிவு என்ன இருக்கிறது?

இந்த இடத்தில் அம்மா சிலிர்த்தெழுந்தாள். தன்னுடையவும், தன் புருஷனுடையவும் தாயார் மற்றும் சகோதரிகளை ஈனமான வார்த்தைகளில் திட்டும்போது பதிலெதுவும் சொல்லாமல் மௌனமாகக் கேட்டுக்கொண்டவள், வேகமாக இரண்டடி முன்னால் வைத்தாள்.

குழந்தைகளைப் பற்றிப் பேசாதீர்கள், எஜமானர்களே. உங்களுக்கு வேலை ஆகவேண்டும், அவ்வளவுதானே. இதோ நான் புறப்பட்டாயிற்று. ஏதோ இந்த மனிதர் முடியாமல் கிடக்கிறாரே என்று கைவைத்தியம் செய்யக் கிளம்பியதில் கொஞ்சம் தாமதமாகிவிட்டது. இனி இப்படி நடக்காது. ஆனால், நாங்களெல்லாம் பாவப்பட்டவர்கள் என்பதற்காக என்ன வேண்டுமென்றாலும் பேசலாம் என்று நினைத்துக்கொள்ளாதீர்கள். என்ன உலகமடா இது? உழைப்புக்கு மரியாதையில்லாத உலகம்.

இதை ஒரே மூச்சில் பேசி முடிக்க முடியவில்லை அவளால். உச்சஸ்தாயியில் தொடர்ந்து அலற முடியாமல் நெஞ்சு அடைத்ததும், துக்கத்தில் தொண்டை உடனடியாகக் கம்மிவிட்டதும், இவளைவிட உரத்த குரலில் ஊர் முக்கியஸ்தர்கள் விடுத்த ஏச்சுகளும் காரணம்.

அப்பா தலைகுனிந்து நின்றிருந்தார். அவரைச் சுற்றிலும்

கோழிக்குஞ்சுகள் மாதிரிப் பெண் குழந்தைகள் நால்வரும் நின்றனர். அக்கா அப்பாவின் கையை இறுகப் பற்றியிருந்தாள். இயற்கை அவளுக்குத் தனியாக ஒரு தீங்கு இழைத்திருந்தது. இருபத்தைந்து வயதாகியும் இன்னும் பருவமடையாத பெண் அவள்.

அண்ணன் வழக்கம்போலத் தலை நடுங்க, கூரையைத் தாங்கும் கழியைப் பிடித்தவாறு நின்றுகொண்டிருந்தான். அவனுடைய உடல் முழுக்க சதா ஒரு நடுக்கம் ஓடிக்கொண்டிருக்கும். நின்றால், நடந்தால், முழங்கால்கள் ஒன்றோடொன்று சதா மோதிக்கொள்ளும். கைவிரல்கள் தாள முடியாத குளிரில் சிக்கிய மாதிரி உதறும். உண்ண எடுத்த கவளம் ஓரங்குல உயரம் எழும்பிய மாத்திரத்தில் தட்டில் வீழ்ந்துவிடும். எல்லா வேளையும் தாயார் ஊட்டினால்தான் சாப்பாடு. எல்லா வேலைகளுக்கும் தாயார்தான் ஒத்தாசை புரியவேண்டும். இருபத்து மூன்று வயதுக் கைக்குழந்தை அவன். ஓரிரு வார்த்தைகள் பேசுவதற்குள் வாயில் எச்சில் நுரைத்து உடல் முழுக்க வியர்த்துவிடும். பிறந்ததிலிருந்தே பிரச்னையாம். பள்ளிக்கூடப் பக்கம் ஒதுங்கியதுகூடக் கிடையாது. என்ன நடக்கிறது என்று புரியாதவன்போல மலங்க மலங்க விழித்துக்கொண்டு நின்றிருந்தான்.

பட்டப்படிப்பு படிக்கும் தம்பி வீராவேசமாகக் கிளம்பினான். அவன் எல்லாவிதத்திலும் அம்மாவின் சாயல் கொண்டவன். 'இன்றைக்கு நான் போகிறேன், வேலை பார்க்க' என்று கிளம்பியவனை அம்மா கன்னத்தில் எட்டி அறைந்தாள்...

ஐய்ராம் தன் கன்னத்தைத் தடவிக்கொண்டான். அப்படி முன்வந்து தைரியமாக அறை வாங்கக்கூட துணிச்சல் இல்லாத ஜென்மமாகிவிட்டோமே என்று மனம் குமைந்தது. அப்பாவுக்கு நெருக்கமான பிள்ளை இவன். குடும்பத்தின் ஸீரியஸான பிரச்னைகளில் இவனுடன் கலந்துகொண்டுதான் முடிவெடுப்பார். அவருடைய சாத்வீகம் வியாதிமாதிரித் தன்னைத் தொற்றிவிட்டது என்று நினைத்துகொண்டான் ஐய்ராம். அப்பாவின் குரல் சன்னமானது. பல்வேறு விஷயங்கள் இவனிடம் பேசுவார்.

...நாம் செய்கிற தொழில் ஈனமானதோ, பாவகரமானதோ இல்லை, ஐய்ராம்... நான் விரும்பித்தான் செய்துவருகிறேன். ஒன்றுமே செய்யாமல் புளுகி தட்சணை பிடுங்கும் பண்டாவின் தொழிலைவிட எனது தொழில் யோக்கியமானது. என் குழந்தைகள் இந்த வேலைக்கு வர வேண்டியதில்லை என்பதும் என்னுடைய விருப்பம்தான். தன்னைவிட மேலான வருமானத்திலும், வசதியிலும் தன்

குழந்தைகளின் வாழ்க்கை அமைய வேண்டும் என்று ஒரு தகப்பன் நினைப்பது இயற்கைதானே?

...ஓயாமல் சுற்றுகிற ஒரு சக்கரம் இருக்கிறது ஐய்ராம். கீழ் ஆரத்தில் இருக்கிறோம் இப்போது. இதுவே மேல் ஆரமாக மாறுவதற்கு அதிக நாள் எடுக்காது. இந்த ஊரே மதிக்கிற குடும்பமாக நாம் ஆகியிருப்போம். அப்போதும் இதே பணிவுடன் இருப்பதற்கு கணேஸ் பக்வான் அருள்புரிய வேண்டும். தலைக்கனம் ஏறியதோ, தொலைந்தோம். அப்புறம் இந்த பிராமணர்களுக்கும் நமக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும்.

...மேட்டில் குடியிருக்கிறானே, அந்த மிதுன் ஷிண்டேவின் கைப்பையைப் பார்த்திருக்கிறாயா, குப்பை மாதிரிக் காகிதங்கள் சேர்ந்து வைத்திருக்கிறான். அவ்வளவும் சர்க்காருக்கு அவன் அனுப்பியிருக்கும் மனுக்களின் நகல்கள். ஒரு மனுவுக்காவது உருப்படியான பதில் வந்தது கிடையாது. எப்படி வரும்? மனுக்களிலும் சாதி வித்தியாசம் உண்டு என்று தெரியாத மடையன் அந்த மிதுன். பேதம் பார்க்காமல் நியாயமான பதில் தருவது ஒரே ஒரு சர்க்கார்தான் ஐய்ராம். கணேஸ் பக்வானின் சர்க்கார்.

...பிரச்னைகளைச் சமாளிப்பதற்கு ஆத்திரம் மட்டுமே ஒரே மார்க்கம் என்று ஏன் நினைக்க வேண்டும் ஐய்ராம்? நம் ஹஸாரே பாபுவைப் பார், அவர் குரல் உரத்துப் பேசுவதை எப்போதாவது கேட்டிருக்கிறோமா? அந்த மாதிரி மஹாத்மாக்களால்தான் பூமிக்கு இன்னமும் தவறாமல் மழை கிடைத்துக் கொண்டிருக்கிறது...

காலையில் வந்தவர்களுடன் ஹஸாரே பாபுவும் இருந்தார். ஒரு சொல்லும் பேசாமல் வேறெங்கோ பார்த்துக்கொண்டு நின்றிருந்தார். அவராக வந்திருக்க மாட்டார், பாவம். ஊர்க்காரர்கள் இழுத்து வந்திருப்பார்கள். ஊர் முக்கியஸ்தர் என்பதற்காக மட்டுமல்ல, இந்தக் குடும்பம் அவர் சொல்லுக்குக் கட்டுப்படும் என்பதற்காகக்கூட அல்ல, வந்த இடத்தில் ரசாபாசம் எதுவும் நிகழ்ந்துவிட்டால் போலீஸ்காரர்கள் நம்பக்கூடிய சாட்சி ஒன்று கைவசம் இருப்பது நல்லதுதானே என்பதற்காகத்தான்.

மற்றபடி, ஹஸாரே பாபு சொல்வதைக் கேட்டு நடக்கக்கூடிய குடும்பம் ஒன்றே ஒன்றுதான் ஊரில் இருக்கிறது. தோட்டி ப்ரபுராமின் குடும்பம். அதுவும்கூட ஊருக்கு வெளியில் இருக்கிற குடும்பம்.

இன்று சர்வகலாசாலையில் பட்டமேற்படிப்புவரை ஐய்ராம்

வந்திருக்கிறான் என்றால் ஹஸாரே பாபுதான் அதற்குக் காரணம். இவன் படிக்கவேண்டிய படிப்பு முதல், சேரவேண்டிய கலாசாலைவரை எல்லாவற்றையும் அவர்தான் முடிவுசெய்தார். படிப்புச் செலவுக்கும் விடுதிச் செலவுக்குமான உபகாரச் சம்பளம் முதல் தனியார்களின் பண உதவிவரை எல்லாமே அவருடைய ஏற்பாடுதான். இவனுக்கு மட்டுமல்ல, தம்பியின் படிப்புக்கும் அவ்வளவு ஏற்பாடுகளும் அவர்தான் செய்தார். அவனைக் கலெக்டராக்குவதாகப் பிரமாணம் எடுத்துக்கொண்டிருக்கிறாராம். ஜய்ராம்?

ம்ஹூம். இந்தப் பயல் உன்னை மாதிரி சாந்தஸ்வரூபி ப்ரபுராம். பேராசிரியர் வேலைக்குத்தான் லாயக்கு. அதனால்தானே இவன் தம்பியை மாதிரி வரலாறு படிக்கப் போடாமல், தத்துவம் படிக்க அனுப்பியிருக்கிறது இவனை?

என்று ஹஸாரே பாபு சிரித்தது பசுமையாக நினைவிருக்கிறது.

அப்பா சோர்வுற்று விடும் நாட்களில் மரத்தடியில் வந்து உட்கார்ந்து ஆறுதலும் ஆலோசனைகளும் சொல்லிக்கொண்டிருப்பார் பாபு. அம்மாவுக்கு அவர்மீது முழு நம்பிக்கை கிடையாது. என்னதான் இருந்தாலும், மேல் ஜாதிக்காரன், ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் புத்தியைக் காட்டத்தான் போகிறான் என்று அப்பாவிடம் அடிக்கடி பொருமுவாள். ஆனால், இதுவரை அவர் புத்தியைக் காட்டும் சந்தர்ப்பம் வராததாலும், உதவிகளை மட்டுமே செய்துவருகிறார் என்பதாலும் சகித்துக்கொள்கிறாள்.

ராதேஷ்யாம் மோஹன ஹஸாரே என்ற ஆர் எம் ஹஸாரே பாபு மஹாராஷ்ட்ரத்தின் பூமிதான இயக்க முன்னோடிகளில் ஒருவர். வார்தா ஆசிரமத்தில் இருந்தவர். மஹாத்மாவின் துர்மரணத்துக்குப் பின்னால் வினோபா பாவேயுடன் நெருக்கமானார். அம்பேத்கார் பாபுவுடன் நேரடிப் பரிச்சயம் கொண்டிருந்தவர். ராம் மனோகர் லோகியா, ஜெயப்பிரகாஷ் நாராயணன், என் ஜி கோரே என்று தேசிய அளவிலான முக்கியஸ்தர்கள் அனைவருக்கும் தெரிந்தவர். இன்றும் கிராமத்துக்கு வெளியில் கிழக்கு நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலையில் கார்கள் வந்து நிற்பதும், ஹஸாரே பாபுவை அழைத்துப் போக ஆட்கள் ஓடிவருவதும், இவர் காந்திக் குல்லாவைச் சரிசெய்தபடி தளர்ந்த நடையில் வந்து சேரும்வரை அந்தக் கார்கள் காத்துக் கிடந்துவிட்டுப் புறப்பட்டுப் போவதும் நடக்கத்தான் செய்கிறது. குறிப்பாக, தேர்தல் காலங்களில் இதெல்லாம் அடிக்கடி நடக்கும்.

சுதந்திரத்துக்குப் பின்னான ஆரம்ப நாட்களில் பாரதம் தன்

முகத்தை வெகுவேகமாக மாற்றிக்கொள்ளத் தொடங்கியதோ, அவருடைய இரண்டு மகன்கள் அடுத்தடுத்து மாரடைப்பால் காலமானதோ, அல்லது எண்பது வயதை நெருங்கிவிட்ட வயோதிகமோ எது காரணம் என்று தெரியவில்லை, கிராமத்தைவிட்டு வெளியில் செல்வதில்லை என்று சங்கல்பம் செய்துகொண்டு தங்கிவிட்டார் ஹஸாரே பாபு. தவிர, தேசிய அரசியலும் இவரைப் போன்றவர்களின் சேவை அவசியப்படாத ஒரு ரணவேகத்தில் பறந்துகொண்டிருக்கிறது...

அந்த இளைஞன் தண்ணீரை விட்டு வெளியில் வந்துவிட்டான். கையால் நன்கு கசக்கிப் பிழிந்த வெள்ளை வேஷ்டியைத் திரை மாதிரிப் பிடித்துக்கொண்டு நிற்கிறான். காற்றில் சலசலத்துப் பறக்கிறது அது, உலர்வதற்காக. கோவணத்துடன் நிற்கும் அவனது உடல் தங்கநிறமாக மினுங்குகிறது. மார்பின் குறுக்காக ஓடும் பூணூல்.

தன்னையும் மீறி ஒரு பெருமூச்சு வெளியேறியது ஜய்ராமிருந்து. ஹும். கொடுத்து வைத்தவன். என்னைவிட ஐந்தாறு வயது மூத்தவனாக இருப்பானா? மல வண்டியையும், குடிசை வாழ்வையும், பன்றிகளையும், அவை கிளறும் கறுப்புச் சகதியையும் அறியாமலே வாழ்வைத் தொடங்கும் அதிர்ஷ்டம் படைத்தவன்.

பிறப்பதற்கு முன்னாலேயே இதுவெல்லாம் தீர்மானமாகி விடுகிறதோ? யார் தீர்மானிப்பது? என்ன அடிப்படையில்? எதற்காக? குறைந்தபட்சம் மனிதக் கருவாக ஒரு பெண் வயிற்றில் உதிப்பதற்கு முன்னால் நானும் இவனும் ஒரே உலகத்தின் பிரஜைகளாகக்தானே இருந்திருப்போம், இப்போது இருக்கிற மாதிரி? இன்னார் வயிற்றில் பிறக்க வேண்டும், இன்ன ஜாதியில் பிறக்க வேண்டும் என்பதெல்லாம் அங்கேயே தீர்மானமாகி விடுகிறதோ? இதெல்லாம் அப்பா சொல்கிற அந்த கணேஸ் பகவானுக்குத் தெரிந்துதான் நடக்கிறதா? அல்லது அவருடைய மேற்பார்வையில்தான் நடக்கிறதோ?

அடுத்த பிறவியில் நான் இவனாகப் பிறக்க வேண்டும். சீச்சீ. என்ன யோசனை இது? அப்பா சொல்கிற மாதிரி, இந்தப் பிறப்பு அவமானகரமானது என்று நான் ஏன் எண்ண வேண்டும்? இதோ வேஷ்டியைக் காயப் போட்டுக்கொண்டு திமிராக நிற்கிறதே இந்தப் பிராமண நாய், இது நினைக்குமா அடுத்த பிறவியில் தான் தோட்டியாகப் பிறக்கவேண்டுமென்று? அப்பா அடிக்கடி சொல்வார், அவரவர் மலத்தை அவரவர் சுத்திகரிக்க வேண்டும் என்று திரும்பத் திரும்பக் கூறிவந்த, அதைத் தன் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்த மஹாத்மா காந்தி போன்ற விவேகிகளின் வார்த்தையைக் கேட்காத

சமூகம்தான் அவமானமாக உணர வேண்டும். தன்னை வருத்திப் பிறருக்காக உழைக்கிற நமக்கெதுக்கு வெட்கமும் கூச்சமும்...?

இதோ அந்த நாய் மேலேறி வருகிறது. வேஷ்டி முழுக்க உலர்ந்து விட்டதுபோல. உள்ளூர் நாய்போலத் தெரியவில்லையே. இப்போது பார், மேலே படாமல் ஒதுங்கிப் போகும் அது. தோட்டியின்மீது பட்டுவிட்டால் ஆசாரம் கெட்டுவிடுமல்லவா...

இல்லை, அந்த வாலிபன் நேரே ஜய்ராமை நோக்கித்தான் வந்தான். நெருங்கி வந்து ஜய்ராமின் தோளில் கையைப் பதித்தான்.

ஜய்ராம், உன் வீட்டுக்குப் போகலாமா...?

ஆள் தெரியாமல் விசாரிக்கிறானோ என்று சந்தேகம் தட்டியது. தான் இன்ன சாதி என்று தெரிந்தால் உடனடியாகத் தோளிலிருந்து கையை எடுத்துவிடுவானோ? ஆனால், அவன் கை பட்ட இடத்தில் கற்பூரம் பட்ட மாதிரிக் குளுமையை உணர்ந்தான் ஜய்ராம்.

குழப்பமாக இருக்கிறதல்லவா? போகும்போதே பேசிக்கொள்ளலாம் வா.

தலையசைப்பதைத் தவிர வேறு வழியில்லை இவனுக்கு. தன் பெயர் அவனுக்கு எப்படித் தெரியும் என்ற உடனடிச் சந்தேகத்திலிருந்து, பூணூல் அணிந்திருக்கிறானே தவிர, பிராமணன் கிடையாதோ, காயஸ்தாவாக இருப்பானோ என்ற அடிப்படைச் சந்தேகம்வரை ஒரு பட்டியல் வெகுவேகமாக ஓடி அடங்கியது.

பஸ்திக்குள் நுழைந்ததும் கண்கள் மொய்க்க ஆரம்பித்தன. திறந்த மார்பில் பூணூல் நெளிய வெறுங்காலுடன் வரும் புது இளைஞனை வேடிக்கை பார்க்கக் குடிசையை விட்டு வெளியில் வந்த பெண்கள் முக்காட்டைச் சரிசெய்து கொண்டார்கள். முகத்தினளவு விரிந்த விழிகள் எதையும் சந்திக்காமல் நேர்கோட்டில் நடந்தான் அவன். சமமான வேகத்தில் உடன் செல்லச் சற்றுச் சிரமமாகத்தான் இருந்தது ஜய்ராமுக்கு. பஸ்திக் குழந்தைகள் நாலைந்து ஓட்டமாகப் பின் தொடர்ந்தன.

பகல்நேரப் பணிக்குத் தெருக்கூட்டும் மாறுடனும், முறத்துடனும் கிளம்பிக்கொண்டிருந்த அப்பா நின்றார். மரத்தடியில் விளையாடிக் கொண்டிருந்த உடன்பிறப்புகள் ஓடி வந்து ஜய்ராமைச் சுற்றி நின்றார்கள். அடுப்பிலிருந்து பார்வையை இவர்கள் புறமாக நகர்த்தினாள் அம்மா. குடிசைச் சுவரோரமாக இருந்த திட்டில் உட்கார்ந்திருந்த அண்ணன் மட்டும், முன்பே தெரிந்தவன் மாதிரி,

வந்தவனை நோக்கிக் கைகூப்பினான்.

இவன் நேரே அவனிடம் சென்று தன் இரு கைகளாலும் அவனுடைய நடுங்கும் கைகளைப் பிடித்தான். ஒரு கணம் தலையாட்டம் நின்றது. பிறகு தொடர்ந்தது.

தயாராம்...

என்று இவன் கூப்பிட்டதும், அண்ணன் விசித்து விசித்து அழ ஆரம்பித்தான். அவனுடைய இடது கையின் நாடியை வலதுகையால் பிடித்துப் பார்க்கத் தொடங்கிய புதியவன், தனது இடதுகையால் அண்ணனின் முதுகில் ஆதுரமாகத் தட்டினான். நாடி பிடிபட்டுவிட்டது போல. தலையை ஆட்டிக்கொண்டு அப்பாவிடம் போனான்.

ப்ரபுராம்ஜீ, நீங்கள் உங்கள் வேலையைப் பார்க்கப் போகலாம். தயாராமுக்கு ஒரு சிறு சிகிச்சை தரலாம் என்று யோசிக்கிறேன். செய்யலாமில்லையா?

அப்பாவின் முகம் கடுமையாக வியர்த்திருந்தது. அவசரமாகத் தலையாட்டினார். இடத்தை விட்டு உடனடியாக நகரவும் தொடங்கினார். இதற்குள் கையைக் கழுவிவிட்டு, சேலைத் தலைப்பில் துடைத்தவாறு வந்த அம்மா புதியவனைக் கண்ணுக்குக் கண் பார்த்தாள்.

நீங்கள் யார்? என் மகனுக்கு எதற்காகச் சிகிச்சை தர வேண்டும்? அப்புறம் அவ்வளவு தா, இவ்வளவு தா என்று கேட்டால் எங்களிடம் ஒற்றை நயாபைசா கிடையாது. அதுசரி, நீங்கள் பிராமணர் மாதிரித் தெரிகிறீர்கள். எங்கள் பஸ்திக்கு எதற்காக வந்திருக்கிறீர்கள்? அதைச் சொல்லுங்கள் முதலில். ஏற்கெனவே ஊரார் ஏச்சுக்கு பதில் சொல்லி மாளவில்லை. மேற்கொண்டு கெட்ட பெயர் வாங்கிக் கொடுக்க வந்திருக்கிறீர்களா...? என்ன நியாயமடா இது. விலகி விலகிப் போனாலும் மேலே வந்து விழுந்து அபவாதம் உண்டுபண்ணுகிறார்களே?

என்று தனக்குத்தானே புலம்பி முடித்தாள்.

வந்தவன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். பிரியமாகச் சிரித்தான். அம்மா பேசத் தொடங்கியதும் அவள் முந்தானையைப் பற்றியபடி உரசிக்கொண்டு நின்ற கடைக்குட்டியைப் பார்த்து ஒரு புன்னகை. பிறகு அம்மாவைப் பார்த்துச் சொன்னான்:

எதுவும் கேட்க மாட்டேன், அம்மணி. உங்கள் பையனுக்கு சிகிச்சை தரும்படி உத்தரவு கிடைத்தது. வந்துவிட்டேன். அவ்வளவுதான்.

அடுப்பெரிக்க மூன்று பெரிய கற்கள் மட்டும் தயார் செய்து வையுங்கள். நான் போய்விட்டு ஒரு மணி நேரத்தில் வருகிறேன்...ஜய்ராம், நீயும் என்னுடன் வாயேன்.

அம்மா பதில் சொல்லாமல் நின்றாள்.

என்ன உத்தரவு, யார் கொடுத்தது, எதற்காக, இவன் என்ன சிகிச்சை தரப் போகிறான், உள்ளூர் ஆயுர்வேத வைத்தியர் முதல் பலார்ஷா பெரியாஸ்பத்திரித் தலைமை மருத்துவர்வரை ஒருத்தர் பாக்கியில்லாமல் கைவிட்ட கேஸாயிற்றே அண்ணன், அவனுக்கு இருப்பது பிறவிக் கோளாறாயிற்றே, இவன் என்ன செய்து குணப்படுத்தப் போகிறான் என்றெல்லாம் யோசித்தவாறு உடன் தொடர்ந்தான் ஜய்ராம்.

வந்தவனானால் எதுவுமே பேசாமல் நடந்தான். அவ்வப்போது வலதுகை விரலின் உட்கணுக்களில் கட்டைவிரலால் தொட்டு ஏதோ கணக்கைத் தொடர்ந்தான். உள்ளூற ஏதோ மந்திரம் சொல்லிக்கொண்டே போகிறான் என்று தோன்றியது.

பஸ்தியிலிருந்து ஊருக்குள் நுழையுமிடத்தில் புதர்கள் மண்டிய பகுதி ஒன்று உண்டு. ஊர்க்காரர்களில் பலரும் மலம் கழிக்க வரும் பகுதி அது. அதைத் தாண்டி, அரசாங்கப் புறம்போக்கு நிலம். மரங்களும் புதர்களும் அடர்ந்து காடு மாதிரி ஊரின் பக்கவாட்டில் நீண்டுகொண்டு செல்வது. அதன் ஆரம்பத்தில் சிறு வெற்றுவெளி இருக்கிறது. ஊருக்குள் இறந்து போகிற மாடுகளை மிதுன் ஷிண்டேவும் கூட்டாளிகளும் கொண்டுவந்து தோலுரிக்கிற, மற்ற நாட்களில் சாராயம் குடிக்கவும் தரையில் கோடு கிழித்துச் சூதாடவும் குழுமுகிற இடம் அது.

அதைத் தாண்டிய பிரதேசம் அவ்வளவு பாதுகாப்பானது இல்லை. வெறி பிடித்த நாய்கள் ஓரிரண்டு அங்கே திரிவதாய்ச் சொல்வார்கள். நாலைந்து ஓநாய்களும், நரிகளும்கூடத் திரிகின்றனவாம். பாம்புகள் சரளமாக நடமாடுகிற இடம்... அந்நியன் புதருக்கருகில் நின்றான்.

ஜய்ராம், நான் உள்ளே போய்க் கொஞ்சம் பச்சிலைகள் கொண்டு வருகிறேன். நீ ஊருக்குள் போ. விறகு மண்டியில், நன்கு காய்ந்த விறகுகள் நாலு ராத்தல் பொறுக்கி வை. நான் வந்து சேர்ந்து கொள்கிறேன்.

ஆணையிடும் தொனியில் அவன் பேசியது ஒருபுறம் எரிச்சலாக இருந்தாலும், மனத்தின் இன்னொரு பகுதி அவசர அவசரமாகச் சம்மதித்தது. வேஷ்டியை உயர்த்திக் கட்டிக்கொண்டு அவன் புதருக்குள்

நுழைவதை ஓரிரு கணங்கள் பார்த்துக்கொண்டு நின்றான் ஐய்ராம். பிறகு ஊருக்குள் நுழையும் பாதை நோக்கித் திரும்பினான். இரண்டு அடிகள் வைத்திருப்பான். சடாரென்று நின்றான்.

ஜீ...

என்று கூவினான். இதற்குள் வெற்றுவெளிக்குள் நுழைந்திருந்தான் அந்நியன். திரும்பிப் பார்த்தான்.

ஜாக்கிரதையாகப் போங்கள். உள்ளே வெறிநாய்கள் திரிகிறதாம்.

அவன் சிரித்தான்.

சரி, பார்த்துப் போகிறேன்.

விசுக்கென்று மரவரிசைக்கு ஊடே நுழைந்துவிட்டான்.

தள்ளுவண்டியில் அடுக்கிய விறகுக் குவியலின்மேல், ராட்சஸ டபரா வடிவ அண்டா ஒன்று இருந்தது. திருமண வீடுகளில் சமையலுக்குப் பயன்படும் பிரம்மாண்டமான அலுமினியப் பாத்திரம். முதன்முறை வேடிக்கை பார்க்க மொய்த்த கண்கள் இந்த முறையும் தவறாமல் வந்து உதித்தன. 'வண்டியை நான் மட்டும்தான் தள்ளி வருவேன்' என்று உறுதியாகத் தெரிவித்துவிட்டான் ஐய்ராம்.

வந்தவன்மீது இனம்புரியாத ஒரு நம்பிக்கை கணத்துக்குக் கணம் வளர்ந்து வந்தது. இவ்வளவுக்கும் அவன் வெகு சொற்பமாகத்தான் பேசினான். உள்ளூற ஏதோ உச்சாடனம் செய்துகொண்டிருப்பதற்குச் சான்றாக உதடுகளும் அவ்வப்போது அசைந்தன. பாதையில் சிறு மேடுகள் எதிர்ப்பட்டு, ஐய்ராம் சிரமப்படும் சமயங்களில் கைலாகு கொடுத்தானே தவிர, இருவரும் சேர்ந்து நடந்தபோதும், தனித்தனியாகத்தான் வந்தார்கள்.

அம்மா அடுப்புக்கற்கள் மூன்று தயார் செய்து வைத்திருந்தாள். அந்த இடத்தை சுத்தமாகப் பெருக்கி வைத்திருந்தாள். வந்தவன் கேட்டுக்கொண்ட பிரகாரம் அவளும் அக்காவும் ஆளுக்கு இரண்டு அலுமினியக் குடங்களுடன் மாறி மாறிக் கால்வாய்க்குச் சென்று நீர் சேந்தி வந்தார்கள். ஐய்ராமின் தம்பியும் ஒருமுறை போய் வந்தான்.

தன்னுடைய வழக்கமான திட்டில் மௌனமாக உட்கார்ந்து, அந்த அந்நியனையே கண் எடுக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான் அண்ணன். குடும்பத்திலேயே மிக ஒல்லியான உடல்வாகு கொண்டவன் அவன்தான். 'ஏழெட்டுச் சுள்ளிகளாக ஒடித்து ஒரு வத்திப்பெட்டிக்குள் அடக்கி விடலாம் என் மூத்தவனை' என்று அம்மா கேலி செய்வாள்.

மழையில் நனைந்த சிட்டுக்குருவி மாதிரி உட்கார்ந்திருந்தான்.

அவனுக்கு அருகில் கூரையைத் தாங்க ஊன்றிய கழியில் சாய்ந்து நின்றுகொண்டிருந்தான் ஜய்ராம். அவனுமே அந்நியனை உறுத்துப் பார்த்துக்கொண்டுதான் இருந்தான். தன்னுடைய மனத்தில் இயல்பான எண்ணங்கள் எதுவும் ஓடாமல் காலியாகிக்கொண்டே போகிறமாதிரி இருந்தது. பார்வையும் சிந்தனையும் அந்நியன்மீது குவிந்து, தனது உடம்பை விட்டுப் பத்தடி தொலைவில் விலகி நிற்கிற நிழலாகத் தன்னை உணரத் தொடங்கி, அது உறுதிப்பட்டுக்கொண்டே போனது.

அடுப்புக் கற்கள்மீது கிடத்திய அண்டாவில் நீர் சேகரமாகி வந்தது. எதிரில் கிழக்கு நோக்கிப் பத்மாசனத்தில் விறைப்பாக அமர்ந்திருந்தான் அந்நியன். கண்கள் மூடியிருந்தன. கைகள் இரண்டையும் தொடைகள்மீது மல்லாத்திப் படிய வைத்திருந்தான். விரல்கள் வெகு துரிதமாக அசைந்துகொண்டிருந்தன. முகத்தில் பழைய கனிவு முற்றாக விலகி இறுக்கம் கூடியிருந்தது. அபூர்வமாக ஓரிரு முறை திறந்து மூடிய விழிகளில் ரத்தச் சிவப்பு ஏறியிருந்தது.

அண்டா முக்கால்வாசி நிரம்பியதும் எழுந்தான். அடுப்பின் அருகில் சென்றான். இடுப்பில் செருகிய வேஷ்டிநுனியின் எதிர்ப்புறம் உருவாக்கிச் செருகியிருந்த மடிப்பிலிருந்து ஒரு பொட்டலமும் தீப்பெட்டியும் எடுத்தான். விறகு வண்டி மற்றும் அண்டா வாடகைக்கும், விறகுக்கும் அதே மடிப்பிலிருந்துதான் பணம் எடுத்துக் கொடுத்திருந்தான்.

பொட்டலத்துக்குள் கட்டிக் கற்பூரம் இருந்தது. கற்களுக்கிடையில் செருகி வைத்திருந்த விறகின்மீது கற்பூரத்தை வைத்துக் கொளுத்தினான். ஜய்ராம் பொறுக்கி எடுத்தவை. நன்கு காய்ந்து உலர்ந்தவை. வெகு சீக்கிரமே பற்றிக்கொண்டன. நெருப்புக் கொழுந்துகள் உயர்ந்தன.

அம்மா பற்றவைக்கும் அடுப்புக்கு மூன்று புறமும் மறைப்பாக ஒரு தகரம் உண்டு. அதையும் தாண்டி ஜ்வாலை காற்றுக்கு அலைபாயும். அந்நியன் ஏற்றிய நெருப்பின் நாக்குகள் தரையில் ஊன்றிய தகடுகள்போல ஸ்திரமாக நின்றன. தனக்குள் பயமும், அபரிமிதமான நம்பிக்கையும், காரணம் தெரியாத குதூகலமும் பின்னிப் பின்னிச் சுழல்வதை ஆனந்தமாக உணர்ந்தான் ஜய்ராம்.

தண்ணீர் தளதளக்கிறது. அந்நியன் எழுகிறான். அடுத்த பத்து நிமிடங்களுக்கு அவன் செய்த வேலைகளை விவரிப்பது கடினம். தேர்ந்த

நாட்டியக்காரன்போல, பாதங்களை விதவிதமாக ஊன்றியும், உள்ளங்கைகளை வெவ்வேறு திசைகளில் மலர்த்திக் காட்டியும் மூடியும், மூடிமூடித் திறந்த முஷ்டியாலும் உள்ளங்கையாலும் தொடைகளிலும் மார்பிலும் மறு முன்னங்கையிலும் பின் தலை மற்றும் முன் தலையிலும் ஓங்கித் தட்டிக்கொண்டும், சில வேளைகளில் வாய்விட்டு மந்திரங்களை உச்சரித்துக்கொண்டும் அவன் செய்த செயல்கள் எதுவுமே பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு விளங்காதவை.

ஆனால், அவனுடைய முகத்தில் பிரகாசம் அதிகரித்துக் கொண்டே போனது. கொதிக்கும் நீரின் தளதளக்கும் மேற்பரப்பும், அண்டாவை விழுங்கிற தாகத்துடன் விரிந்த தாமரை இதழ்கள் மாதிரிச் சூழ்ந்திருந்த நெருப்பு நுனிகளும், தோள் பையிலிருந்து அவன் எடுத்த பச்சிலைகளும், பொடிகள் வைத்திருந்த சிறுசிறு பொட்டலங்களும் அவன் வாய்விட்டு உச்சரித்த சொற்களுக்கு அநுசரணையான பதில் சொல்கிற மாதிரிப் பிரமை தட்டியது ஜய்ராமுக்கு.

பச்சிலைகளில் சிலவற்றை அப்படியே தண்ணீரில் போட்டான், அந்நியன். சிலவற்றைக் கசக்கிப் போட்டான். பொட்டலங்களைப் பிரித்துக் கொட்டினான். கொதிக்கும் நீரில் முழங்கைவரை செலுத்திக் கலக்கினான். நீர் ஒருவிதமான அரக்குக் குழம்பின் நிறத்துக்கு மாறியது.

வேடிக்கை பார்ப்பதற்காகக் கூடியவர்களை விரட்டி ஓய்ந்த அம்மா, பணி முடிந்து முகம் முழுக்கச் சோர்வுடன் திரும்பியிருந்த அப்பா, வழக்கமாகச் சளசளவென்று பேசிக்கொண்டே இருக்கும் குணமுடையவனும், இன்று காலைமுதல் தீர்க்கமான மௌனத்தில் ஆழ்ந்துவிட்டவனுமாகிய தம்பி, இந்தக் கிரியைகள் ஆரம்பித்தது முதலே கண்மூடிக் கிறங்கிவிட்டிருந்த சீக்காளி அண்ணன், பிரமித்த கண்களுடன் அந்த அந்நியன்மீது பார்வை பதித்திருந்த அக்கா, அவளைச் சூழ்ந்து நின்ற குட்டித் தம்பி தங்கைகள், தள்ளி நின்று வேடிக்கை பார்க்கிற பஸ்தி ஜனங்கள் என எல்லாருமே வசியத்துக்கு ஆளானவர்கள்போலச் சிலைத்திருந்தார்கள்.

செடியாக இருந்த நாளிலிருந்து இவர்கள் குடும்பத்தின் நிகழ்வுகளுக்கு மௌன சாட்சியாக நின்றிருக்கும் அரச மரத்துக்கும் அதே நிலைமைதான். ஓர் இலையைக்கூட அசைக்காது தியானத்தில் உறைந்துவிட்டிருந்தது.

அந்நியன் சடாரென்று அண்ணனை நோக்கித் திரும்பினான். வேகமாக அவன் அருகில் சென்றான். மடித்த கொடுங்கைகளில் அவனைத் தூக்கி ஏந்தினான். சென்றதைவிடவும் வேகமாகத்

திரும்பினான். அம்மாவும் அப்பாவும் மற்றவர்களும் பதறிப் பாய்வதற்கு முந்தின கணத்தில் அண்ணனைக் கொதிக்கும் நீருக்குள் அமிழ்த்தியிருந்தான்.

அம்மாவின் குரல் 'ஐயோ' என்று தீனமாக அலறியது. ஆனால், நிற்கும் இடத்தைவிட்டு நகர இயலாதவள்போல அல்லாடினாள். அவள் முகம் மிரட்சியினால் கோரமாகி இருந்தது. அப்பா நின்ற இடத்திலேயே வீழ்பவர் மாதிரி தடாலடியாக உட்கார்ந்தார். இவை யாவும் இமை கொட்டும் சுருக்கில் நடந்து முடிந்துவிட்டன.

மூழ்கிய தலையை உயர்த்திய அண்ணனின் முகத்தில் திரை மாதிரி வழிந்த நீருக்குப் பின்னால் ஒரு தெளிவு படர்ந்திருந்தது புலப்பட்டது. தலை ஆடாமல் நின்றது. அண்டாவின் விளிம்பை இரண்டு கைகளாலும் உறுதியாகப் பிடித்திருந்தான். குளிர்ந்த நீரில் உட்கார்ந்திருப்பவன், கூச்சம் தாங்காமல் சிரிக்கிற மாதிரி இவர்களைப் பார்த்துச் சிரித்தான்.

முக்கால் மணி நேரத்துக்கு முன்பிருந்த சூழ்நிலை இல்லை இப்போது. மரத்தடியில் சிலுசிலுவென்று காற்றடிக்கிறது. பஸ்தி ஜனங்கள் அனைவரும் அவரவர் வீடுகளுக்குத் திரும்பிவிட்டார்கள். நடுக்கம் முற்றாக ஓய்ந்து பிறரைப் போலவே சம்மணமிட்டு அமர்ந்திருந்த அண்ணனைச் சுற்றிக் குழுமிருந்தது குடும்பம்.

உரித்த கோழி மாதிரி வெளுத்திருந்தான் அவன். இப்போதுதான் கொஞ்சம் சாந்தமாக உட்கார்ந்திருக்கிறான். முதல் பத்துப் பதினைந்து நிமிடங்களுக்கு குடிசையின் உள்ளும் புறமும் இருந்த ஒவ்வொரு பொருளையும் ஓடிஓடித் தொட்டுப் பார்த்தான். ஒவ்வொருவரையும் பெயர் சொல்லிக் கூப்பிட்டான். இறுக்கி அணைத்துக்கொண்டான். கைகளில் இயல்பான வலிமை கூடியிருந்தது வெளிப்படையாகத் தெரிந்தது. இடையிடையே அந்நியனின் கால்களில் விழுந்து வணங்கி எழுந்தான். பிறகு விசித்தவாறே அடுத்தவரை அணைத்துக்கொள்ளப் பாய்ந்தான்.

அண்டாவிலிருந்து அண்ணனைத் தூக்கி வெளியில் எடுத்து, தானே தலை துவட்டி உடுப்பும் மாற்றிவிட்ட அந்நியன் 'நதிக்குச் சென்று வருகிறேன்' என்று சொல்லிப் போயிருக்கிறான். நடந்து முடிந்த கிரியையின் தொடர்ச்சியாகக் குளித்துவிட்டு வரப் போயிருப்பான் என்று இவர்களாக யூகித்துப் பேசிக்கொண்டார்கள். உடை மாற்றிவிடுமுன் அண்ணனின் உடம்பு முழுவதும் ஆவிபறக்க அவன் ஏதோ ஒரு தைலத்தைத் தேய்த்துவிட்டான். அந்தத் தருணத்தில் அவனுடைய முகபாவனையும், உடல்மொழியும் பெற்றெடுத்த

தாய்போன்று பெண்மையின் சாயல் கொண்டிருந்தன. தைலம் தடயமின்றி உலர்ந்துவிட்டது.

மற்றபடி, ஒருவருக்கொருவர் இயல்பாகப் பேசிக்கொள்ள இயலாதபடி ஒருவித மௌனமும் திகைப்பும் சகலரையும் மூடியிருந்தது. மற்றவர்கள் அமைதியாய் தத்தமக்குள் மூழ்கியிருக்க, அண்ணன் மட்டும் ஏதாவது பேசிக்கொண்டேயிருந்தான் வாய்க்குழறல் அறவே இன்றி.

அதோ, அந்த அந்நியன் தென்படுகிறான். அவனுக்குப் பின்னால் சற்றுத் தொலைவில், அண்டாவையும் தள்ளுவண்டியையும் திருப்பிக் கொடுத்துவிட்டு, தம்பி வருகிறான். குடும்பம் ஆணைக்குக் கட்டுப்பட்ட மாதிரி எழுந்து நின்றது. அண்ணன் வேகமாக ஓடிச் சென்று இன்னொரு தடவை அவன் காலில் விழுந்தான். அவன் குனிந்து,

எழுந்திரு தயாராம். அதுதான் எல்லாம் சரியாகிவிட்டதே.

என்று பரிவாகத் தோளில் தட்டினான். அண்ணன் எழுந்து நின்று விசும்பினான்.

ஈரம் முழுக்கக் காயாத வேஷ்டியுடன் மண் தரையில் உட்கார்ந்தான் அந்நியன். அம்மாதான் முதலில் பேசினாள்:

ஜீ, உங்களுக்கு ஏதாவது படைக்க வேண்டும் என்று ஆசையாயிருக்கிறது...

படையல் எல்லாம் இறந்தவர்களுக்கும் கடவுளுக்கும்தான் அம்மணி. மனிதர்களுக்கு உபசாரம் செய்யலாம், தவறில்லை...

சிரித்தான். அவன் பேச்சில் இவர்கள் பேசுகிற மராத்தியின் சாயல் அறவே இல்லை. சுத்தமான, அலங்கார, மராத்தி. அவனுமே மராத்தியன் மாதிரித் தெரியவில்லை, பார்வைக்கு.

...குழந்தை சென்று வாங்கி வந்தாளல்லவா, அந்தப்பாலைக் காய்ச்சி அதில் ஒரு சிட்டிகை மஞ்சள் தூள் சேர்த்துக் கொடுங்கள். குடிக்கிறேன்...

குட்டித் தங்கை சென்று பால் வாங்கி வந்தபோது இவன்தான் ஆற்றுக்குச் சென்றிருந்தானே? ஆச்சரியம் மறுபடியும் ஒரு குடை மாதிரி விரிந்தது ஐய்ராமின் மனத்துக்குள்.

...பிற இடங்களில் பாலைத் தவிர எதுவும் சாப்பிடுவதில்லை.

என்று முடித்தான்.

கண்ணாடித் தம்ளரில் அம்மா நீட்டிய மஞ்சள் நிறப் பாலை

நிதானமாக உயர்த்திக் குடித்தான். மிடறுகள் இறங்கும் தொண்டைக் குழியில் ஏறித் தாழ்ந்த கோலிக்காயை மற்றவர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஜய்ராம் நிதானமாக நடந்து, குடிசைக்குள் நுழைந்து, வேறு சட்டைக்கு மாறினான்.

ஜீ, நீங்கள் எங்களுக்குக் கடவுள் மாதிரி. இப்படி இவன் சொஸ்தமாவான் என்று தெரிந்தால் முன்னமே இவனைப் பள்ளியில் போட்டு எப்படியாவது படிக்க வைத்திருப்பேன்.

என்று இளகிய குரலில் சொன்னார் அப்பா.

நடக்கிற விஷயங்களில் எல்லாமே திட்டப்படி நடப்பது இல்லை ஐயா. முந்தாநாள் எனக்குத் தெரியாது, இன்றைக்கு நான் இப்படிச் செய்வேன் என்று.

அவனுடைய குரலும் சமமாக இளகியிருந்தது.

ஜீ, நானும் உங்களுடன் வந்துவிடலாமா?

தயக்கத்தோடு இடைவெட்டிய ஜய்ராமின் கேள்வியை முதலில் உணர்ந்தவள் அம்மாதான்.

மகனே...

என்று பதறி எழுந்தாள். அப்பா அவளைக் கையமர்த்த முயன்றார். மண் தரையில் உட்கார்ந்திருந்த அனைவரும் படுவேகமாக எழுந்தார்கள்.

உன் தாயார் தகப்பனார் சம்மதித்தால் வரலாம்.

அம்மா ஜய்ராமின் அருகில் வந்து அவன் கையை இறுக்கிப் பிடித்துக்கொண்டாள். அர்த்தமற்ற ஒலிகள் அவளிடமிருந்து பரபரப்பாக வெளியேறின. பீடிக்கப்பட்டவன்மாதிரி ஜயராம் ஒரே திசையில் பார்த்துக்கொண்டிருந்தான்.

அப்பா எழுந்தார். மனைவியின் அருகில் வந்து, மகனைப் பற்றியிருந்த அவளது கரத்தை மெல்ல விடுவித்தார்.

சாயா...

என்று அழைத்தவாறே, அவள் முதுகில் கைகொடுத்து நகர்த்திச் சென்றார். இருவரும் மரத்தின் மறுபுறம், பேச்சின் பொருள் விளங்காத தொலைவில் சென்று கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். மறுப்பாகத் தலையைத் தலையை ஆட்டிக்கொண்டிருந்தாள் அம்மா.

அப்பா பேசப்பேச அவள் தலை ஆடும் வேகம் குறைந்துகொண்டே வந்து ஒரு கட்டத்தில் ஓய்ந்தது. இருவரும் திரும்பி வந்தபோது, அம்மா முந்தானையால் முகத்தை மூடிக் குலுங்கியபடி வந்தாள். அப்பா எப்போதும்போல சிறு கூனலுடன் நடந்துவந்தார். தலை மட்டும் வழக்கத்தைவிடவும் விறைப்பாக உயர்ந்திருந்தது.

ஜய்ராம்...

பிதாஜீ...

நீ விரும்பியபடி செய்யலாம்... நானும் உன் அம்மாவும் மனப்பூர்வமாகச் சம்மதிக்கிறோம்...

உறுதியாகத்தான் ஆரம்பித்தார். ஆனாலும் இறுதிச் சொல்லில் குரல் கம்மிவிட்டது. எச்சில் விழுங்கிச் சமாளித்துக்கொண்டு தொடர்ந்தார்.

...போகும் வழியில் ஹஸாரே பாபுவிடம் தகவல் சொல்லி நமஸ்கரித்துவிட்டுப் போ.

என்றார். குரலைப் போலவே கண்களும் வெகுவாகக் கலங்கியிருந்தன.

நதியின் குறுக்கே ஒடுக்கமான சிறு மரப்பாலம் உள்ளது. இரண்டு மனிதர்கள் கைகோத்து நடக்கலாம், அல்லது ஒருவர் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு செல்லலாம் என்னுமளவு விசாலம் கொண்டது. அதன் வழியே மறுகரைக்குச் சென்றால், ரயில் நிலையம் வரும். பகல் நேரத்தில் ஓரிரு பாஸஞ்சர் வண்டிகள் நின்று செல்லும் சிறு நிலையம். ஆளரவமற்ற நடைமேடையில் ஒரு கோடியில் பரட்டையாகத் தலைவிரித்து நின்ற மரத்தில் மஞ்சள் நிறப் பூக்கள் அடர்ந்திருந்தன.

தொலைவிலிருந்து பார்க்கும்போது, இலைகளே இல்லாத மரம் என்று தோன்றியது. பூக்களின் மஞ்சள் பரப்பில், இவர்கள் இருவரும் நடந்து வந்த திக்கில் நெடுஞ்சாண்கிடையாகப் படுத்து நமஸ்கரித்து வழியனுப்பிய குடும்பத்தின் பிம்பம் வண்ணப்படம்போல ஒட்டிக் கிடந்தது. தலையை உதறி அந்தக் காட்சியை உதிர்க்க முயன்றான் ஜய்ராம். விலக மறுத்து அடம்பிடித்த காட்சியில், சிறு குழந்தை மாதிரி உதடு கோணி விசும்பிய அண்ணன் பிரதானமாக நின்றான். நச்சரிக்கும் காட்சியின் பிடிவாதத்தை மாற்றும்விதமாக, ஜய்ராம் சொல் விடுத்தான்:

ஜீ, உங்கள் பெயரை நான் கேட்டுக்கொள்ளவில்லையே...

வேதமூர்த்தி.

என்றான் அந்நியன். எங்கோ, பாதாளலோகத்திலிருந்து மேலேறி வருகிற மாதிரி, ரயிலின் கூக்குரல் கேட்டது.

✠

ஏப்ரல், 1964

வ யிரவன் தலைவாரிக்கொள்ள ஆரம்பித்தான். அது மிகப்பெரிய சடங்கு. மர பீரோவின் கதவில் பதித்த ஆளுயர நிலைக்கண்ணாடி முன் ஒரு முக்காலியில் அரைமணி நேரம் உட்கார்ந்து, கிட்டத்தட்ட ஒவ்வொரு முடியாய்ப் படிய வைக்கிற வேலை. முன்னுச்சியில் உள்ள சுழி எந்தப்புறமும் முடியைப் படியவிட மறுக்கும்.

சீப்பும் கைகளும் தலையை ஒரு இசைக்கருவிபோலக் கையாள்கின்றன. கண்ணாடியில் அசையும் பிம்பத்தில் பார்வை குவித்திருக்க, மனம் வேறெங்கோ பாய்ந்தது. அம்மா பெருமையாய்ச் சொல்வாள்:

ஊர்ல இருக்குற சண்டிக்காளை அம்புட்டும் சொன்னபடி கேட்டாலும் கேட்டுரும், எங்க வயிரவஞ் செட்டியாரு தலைமுடி மட்டும் வணங்காது.

வெண்மையான சோழிப்பற்கள் தெரியச் சிரிப்பாள். கன்னங்களை இடதுகை விரல்களால் பற்றிக்கொண்டு வலதுகையால் அழுத்தி வாரிவிட்டு, இரண்டு கைகளாலும் திருஷ்டி வழித்து விரல்களை முறித்துக்கொண்டே தவறாமல் சொல்வாள். வயிரவன் தானாகத் தலைவாரும் வயதை எட்டிய பிறகு, முக்காலியும் கண்ணாடியுமாய் அரைமணிநேரம் தோய ஆரம்பித்த பிறகு,

கொமரிப்பிள்ளெ கெட்டா கேடு. எம்புட்டு நேரம் அப்புச்சி தலை சீவுவெ?

என்று கடிந்துகொள்வாள். ஆனால், அது அம்மாவே மனம் நொந்து இருக்கும் சமயங்களில் மட்டும்தான். மற்றபடி, பெரும்பாலான நாட்களில், முதுகுக்குப் பின்னால் உட்கார்ந்து கறிகாய் அரிந்தபடி, இவன் தலை வாரும் அழகை ரசித்துக் கொண்டிருப்பாள்.

திடீரென்று இப்போதும் அம்மா பின்னால் நின்று பார்த்துக் கொண்டிருக்கிற மாதிரி முதுகில் குறுகுறுத்தது. ‘அடச்சே, செத்துப் போனவ இங்கெ கூடத்திலே வந்து பாக்குறாளாக்கும்’ என்று

தனக்குத்தானே முனகிக்கொண்டு வேலையைத் தொடர்ந்தான்.

ஓரிரு நிமிடங்கள் போயிருக்கும். உறுத்தல் அதிகமானது. வெறும் பிரமை மாதிரி இல்லை. நிஜமாகவே அம்மா பார்க்கிறாள் என்று அழுத்தமான உணர்வு. மனத்தின் வேகம் தாளாமல் தலையைத் திரும்பிய மாத்திரத்தில் வயிரவன் அதிர்ந்தான்.

இரண்டு வயது உண்ணாமலை நிலைப்படியருகில் உட்கார்ந்திருந்தாள். இவனையே உறுத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அம்மாவின் கண்கள்.

அதைவிடவும் உண்ணாமலை பொரியை எடுத்துத் தின்ற விதம். அம்மாவும் இதே மாதிரித்தான் தின்பாள். தேவகோட்டை பீமவிலாஸ் ஒரிஜினல் நெய்மிட்டாய்க்கடையில் வாங்கிய மசாலாக் கடலையும் நெய்க்கடலையும் அம்மாவுக்கு உயிர். ஒரு கொத்தாகப் பொட்டலத்திலிருந்து அள்ளி, ஒவ்வொரு கடலையாகத் தின்பாள். உண்ணாமலையும் கிண்ணத்திலிருந்து பொரியை அள்ளிக் கையில் வைத்துக்கொண்டு ஒவ்வொரு பருக்கையாய் வாயில் போட்டுக்கொள்கிறாள்.

வயிரவனுடைய உடம்பு ஒருமுறை விதிர்த்து அடங்கியது. சீவிக் கொண்டிருந்த கை தன்னிச்சையாய் அதிர்ந்ததில் ஏற்கெனவே படிந்திருந்த முடிகள் வெகுவாகக் கலைந்துவிட்டன. அடிவயிற்றில் உயர்ந்த பீதியை சமனப்படுத்தும் விதமாக, வள்ளி மதினியின் குரல் குறுக்கே புகுந்தது.

கொளுந்தனாரே, என்னா கோட்டையைப் பிடிக்கிற ரோசனெ? காப்பி எடுத்தாறவா?

அனிச்சையாகத் தலையாட்டினான். அம்மாவின் திதிக்காக லேனா அண்ணன் குடும்பத்தோடு நேற்றுக் காலையில் வந்திருக்கிறார். அவர்கள் மூவரும் வந்த பிறகு வீடு களைகொண்டு விட்டது. சதா பாத்திரங்கள் உருளும் ஓசையும், கேட்டுக்கொண்டேயிருக்கும் பேச்சுக் குரல்களும் அம்மா இருந்த நாட்களை மீண்டும் வீட்டுக்குள் கொண்டுவந்து சேர்த்துவிட்டன.

...அ ம்மா இறந்ததற்குப் பிறகு, அப்பச்சி உள்ளூரிலேயே தங்கிவிட்டார். இவனும் அவரும் மட்டும்தான் வீட்டில். வேலம்மை ஆச்சி தான் வைக்கும் குழம்பு, தொடுகறியை இவர்களுக்கும் கொண்டு தருவாள். மாதம் ஏதோ ஒரு தொகை அவளுக்குக் கொடுப்பதாக ஏற்பாடு. சோறு மட்டும் இவர்கள் வடித்துக் கொள்வார்கள்.

ஆச்சியின் சமையலுக்கும் அம்மாவின் சமையலுக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. அதிலும் ஆச்சி வைக்கிற புளிக்குழம்பு ஒரு துளி நாக்கில் பட்டதும் கண்ணில் நீர் வந்துவிடும். காரம் அதிகம் என்பதால் என்று அப்பச்சி நினைத்துக்கொள்வார். அம்மாதான் காரணம் என்று வயிரவனுக்கு மட்டும்தான் தெரியும்.

எதுக்கு இங்கிட்டுக் கெடந்து நொம்பலப் படுறீக? பேசாமெ எங்களோடெ தேவோட்டைக்கு வந்துற வேண்டியதுதானே?

என்று அண்ணனும் மதினியும் எவ்வளவோ வற்புறுத்தினார்கள்.

அவ அடங்கின வீட்டுல இருக்கிறதுதாம்பா எனக்கு ஆறுதல். ஒந் தம்பிய வேணும்னாக் கூட்டிக்கிட்டுப் போ. அவனுக்கும் படிக்க, கொள்ள வசதியா இருக்கும்.

என்று அப்பச்சி பிடிவாதமாக மறுத்துவிட்டார். தாங்கள் இங்கே குடிமாறி வந்துவிடுவதாக மாற்று யோசனை சொன்னார்கள். அப்பச்சி பதறிவிட்டார்.

யே அப்பச்சீ. அத மட்டும் சொல்லாதீக. போய்ச்சேந்த பாதகத்திக்கி என்னால பதில் சொல்லிக்கிற முடியாது.

‘அவதான் போய்ச்சேர்ந்துப்புட்டாளே, என்னாத்தெக் கேள்வி கேட்கப் போறா’ என்று யாரும் கேட்கவில்லை. ஆக, இந்த வீட்டில் அம்மா இன்னமும் இருக்கிறாள், நடப்பதையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறாள் என்பதில் யாருக்குமே எந்தச் சந்தேகமும் இல்லை என்றல்லவா ஆகிறது என்று வயிரவனுக்குத் தோன்றியது.

கஞ்சாச் சாமியாரோ வேறுவிதமாகச் சொன்னார்; அம்மா ஆகாயத்தில் இருப்பதாக...

எப்படியோ, இரண்டு ஆண்பிள்ளைகள் மட்டுமே வளையவந்த வீட்டில் இரண்டு ஜோடிக் கொலுசுகள் சதா ஒலிப்பதில் வீடு நிரம்பிவிட்ட மாதிரித் தளும்புகிறது மனம்.

போனவாரம் முழுக்கவே அம்மாவின் ஞாபகம் அடிக்கடி வந்து போனது. அடிமனத்தில் சதா நமைச்சலெடுத்துக் கொண்டிருந்ததன் காரணம், பஞ்சாங்கக்கார அய்யங்கார், போன வியாழக் கிழமையன்று பிள்ளையார் கோயில் மைதானத்தில் வைத்துச் செய்தி சொன்னபோது பிடிபட்டது.

தம்பி, லெச்சுமணன் கிட்டெத் தாக்கல் சொல்லீரு. ரஞ்சிதத்தோட திதி வாற பொதங்கிளமெ வருது.

என்றார் அவர். அம்மாதான் இவனுடைய உள்ளுணர்வில் முன்கூட்டியே வந்து நினைவூட்டியிருக்க வேண்டும்.

மதினி காபித் தம்ளரை ஜன்னல் கட்டையில் வைத்துவிட்டுப் போனாள். கருப்பட்டி மணம் இதமாக உயர்ந்தது. நடை உடை பாவனைகளில் மட்டுமில்லை, சமையலிலும் அம்மா கைப் பக்குவம் அப்படியே மதினியிடம் வந்து சேர்ந்திருக்கிறது. அம்மாவைப் போலவே தேவகோட்டையில் அக்கம்பக்கம் கொடுக்கல் வாங்கலும் செய்ய ஆரம்பித்திருக்கிறாள் என்று போன தடவை வந்தபோது அண்ணன் சொன்னார்.

கைச் செலவுக்கு ஒங்க அண்ணாரே எதிர்பாக்க வேணாம்ல.

என்றாள் மதினி. அம்மாவும் இதையேதான் சொல்வாள். 'ஒங்க அப்புச்சியெ' என்பாள் அவள்.

வள்ளி மதினியின் வளைகாப்பு முடிந்த இரவில் அம்மா வயிற்றுவலி என்று துடித்தாள். தேவகோட்டை மருத்துவமனையில் பரிசோதனைகள் எல்லாம் முடிந்து அம்மாவின் பித்தப்பையில் ஏதோ கட்டி வந்திருக்கிறது என்றார்கள். பிற்பாடு மதுரையில் அம்மா இறந்த மருத்துவமனையில் அது வெறும் கட்டியில்லை, புற்று என்று கண்டுபிடித்தார்கள். அம்மாவின் பத்தாம் நாள் காரியம் நடந்து சரியாகப் பதினேழாவது நாள் உண்ணாமலையைப் பெற்றெடுத்தாள் மதினி.

'ரஞ்சிதம் ஆச்சிதான் தன் பிரிய மருமகள் வயிற்றில் வந்து பிறந்திருக்கிறாள்' என்று ஊரே சொன்னது. பார்க்கிறவர்களெல்லாம் இப்படிச் சொல்லும்போது, வயிரவன் சிரித்துக்கொள்வான். அண்ணன் மகளின் முகத்தோடு முகம் வைத்து,

ஆத்தா, வகுறு பசிக்குது. கொஞ்சம் பால் குடேன்.

என்பான். அது 'ங்கா' என்னும். வள்ளி மதினி முகம் கூசிச் சிரிப்பாள். அண்ணன்,

போடா, கிறுக்கு மூதேவி.

என்று செல்லமாகக் கடிந்துகொள்வான்...

வயிரவன் தலையை உதறிக்கொண்டான். உண்ணாமலையைத் திரும்பிப் பார்த்தான். குழந்தையைத் தொடர்ந்து பார்க்க முடியாமல் அடிவயிற்றில் எதுவோ சுருட்டுகிற மாதிரி இருந்தது.

உண்ணாமலை எழுந்து இவனருகில் வந்தாள். முதுகில் பிரியமாகத்

தொட்டாள். இடது கையில் கிண்ணத்தில் இருந்த பொரியை இவனை நோக்கி நீட்டினாள். இவன் வேண்டாமென்று தலையசைத்தான். கண்ணுக்குக் கண் சந்தித்தபோது குழந்தையைப் பார்த்து இயல்பாய்ச் சிரிக்க முடியாமல் உள்ளே ஒரு படபடப்பு தொடர்ந்தது. அந்தக் கண்கள் குழந்தைக் கண்கள் மாதிரி இல்லை. விஷயம் நிரம்பி முற்றிய கண்கள்.

பொரி நிரம்பிப் புடைத்த கன்னங்களுடன் கண்களால் இவனைப் பார்த்துச் சிரித்தாள் உண்ணாமலை. வாசலுக்குப் போகத் திரும்பியவள், வயிரவன் முதுகில் ஓங்கித் தட்டிவிட்டுச் சென்றாள்.

வயிரவன் இரண்டாம் முறையாக அதிர்ந்தான். அம்மாவும் இதே மாதிரித்தான் தட்டுவாள்.

பி ள்ளையார் கோயில் எதிரிலுள்ள மைதானத்தில் குழந்தைகள் கும்மாளமடிக்கிறார்கள். கோடை விடுமுறையின் உச்சபட்சக் கொண்டாட்டம் மைதானமெங்கும் கோலாகலமாக விரவியிருக்கிறது.

கோயில் வாசல் சிதறுகல் அருகில் யாரும் கவனிக்காது விட்டு விட்ட ஒரு தேங்காய்ச் சில் கிடந்தது. அதற்குச் சற்றுத் தள்ளி பருப்பு முற்றாக உதிர்ந்த ஓட்டுத் துண்டு கிடந்தது. மைதானத்துக்கு விளிம்புகட்டிய மாதிரி, கொஞ்சம்போல நிரவிக் கிடந்த புல் தரையில் ஒரு எருமை சாவகாசமாகப் படுத்திருந்தது. அதன் வெகுளியான விழிகள் அர்த்தமற்று முறைக்க, வாய் யந்திரம்போல அசைபோட்டுக் கொண்டிருந்தது.

வயிரவன் ஆகாயத்தைப் பார்த்தான். தரையில் நிகழும் ஓசைப் பிரளயத்திற்கு நேர்மாறாக இதமான நிசப்தம் அங்கே பரவியிருந்தது. தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்கும்போது ஆகாயத்தின் நிசப்தம் மழைத்தாரைபோல இறங்கி தனக்குள் நிரம்புகிற மாதிரி உணர்ந்தான். மேல்வானம் இறங்குமிடத்தில் கனிந்த செந்நிறமும், கீழ்வானத்தில் இதமான இளநீலமும் ஆங்காங்கே சிதறிக்கிடந்த மேகப் பிசிறுகளின் வெண்மையும் என ஆகாயம் முழுவதும் ஒருவித சாந்தம் நிலவியது. கனிவு சாந்தம் இதம் என்றெல்லாம் வார்த்தைகள் ஊறும்போது அம்மாவின் ஞாபகம் வந்துவிடுகிறது.

ஏத்தா, நீ நெசம்ம்ம்மா எங்கேதான் இருக்கே?

என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். ஆகாயத்தில்தான் எங்காவது இருப்பாள் என்று நல்லதண்ணி ஊருணிக் கரையில் உட்கார்ந்திருந்தபோது அந்தச் சாமியார் சொன்னார்...

கரையேத்திட்டோம்னா சந்தோஷமாப் பார்த்திட்டுருப்பாக.

ஒளுங்கா திதி குடுக்காமெ சிலுப்பிக்கிட்டுத் திரிஞ்சம்னா புட்டத்திலெ ரெண்டு போடுவாக. அதுக்குப் பெறகுட்டு புட்டமே இருக்காது.

சாமியார் சிரித்தார். அடுத்த படியில் கை கட்டி உட்கார்ந்திருந்த வயிரவன் கேட்டான்.

அப்பன்னா செத்துப்போனவுகல்லாம் எங்கெ வசிப்பாக சாமீ?

ஆகாசத்திலேதான்.

வயிரவன் தன்னிச்சையாக ஆகாயத்தை நிமிர்ந்து பார்த்தான். சில நிமிடங்கள் இலக்கில்லாமல் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு பார்வை சமதளத்துக்குத் திரும்பியபோது, பக்கத்தில் சாமியார் உட்கார்ந்திருக்கிறார் என்பதை தர்மசங்கடமாக உணர்ந்தான். அவர் இவனையே பார்த்துக்கொண்டிருந்தார். முட்டைக் கண்களிலும் பழுப்பு நிறத் தாடி மீசைப் புதருக்குள் அசைந்த உதடுகளிலும் குறும்பு நெளிந்தது.

என்னா, யாராச்சும் தட்டுப்பட்டாகளா...?

வயிரவன் சிரித்தான். சரியாகப் பாடம் படிக்காத குழந்தையின் பாவம் முகத்தில்.

...ஆகாசம்னாலே மர்மம்னுதான் அர்த்தம் தம்பி. பூமியோட ரகசியமெல்லாம் விஞ்ஞானம் தலையெடுத்தவொடனே சாயம் போக ஆரமிச்சிருச்சி. 'பாதாள லோகம், நாகலோகம்ங்கிறதெல்லாம் வெறும் புருடா'ன்னுட்டான்க. இப்ப பூமியை ஒர்த்தன் கொடைஞ்சிக்கிட்டே போறான்னு வையி. மறுபக்கம் வெளியேறும்போதும் தரைதான் இருக்குமாம். சொல்லிக்கிர்றாக. ஆனா, ஆகாசத்துக்கு மறுபக்கம்னு ஒண்ணே கெடையாது தெரியுமில்லெ...?

வயிரவன் தலையாட்டினான்.

...தூல உடம்பைவிட்டு வெளியேறினவுடனே பார்வையைவிட்டு மறைஞ்சு சூச்சும ஒடம்பு எடுத்துருவாக. பிற்பாடு, அவுகளா முடிவு பண்ணி வேற ஒரு வயித்திலே வந்து பிறக்குந்தன்னியும் சூச்சுமமான கண்ணுக்கு மட்டும்தான் தெரிவாக.

அப்பிடியா சாமீ. திரும்பவும் வந்து பிறப்பாகளா?

பின்னே. அப்பிடியெல்லாம் திரும்பத் திரும்பப் பிறந்து லோல்படக் கூடாதுங்குறத்துக்காகத்தானெப்பா என்னெ மாதிரி சீவன்க காவியை எடுத்துக் கட்டுறோம்.

சாமியாரின் வார்த்தைகளை விடவும், அவர் பீடி குடிக்கும்போது லேசான கசப்புடனும் ஒருவிதமான கிறக்கத்துடனும் வரும் மணம் மிகவும் பிடித்திருந்தது. தாண்டிச் செல்லும்போது இந்தப் பீடி மணம் இழுத்ததால்தான் அவர் அருகில் உட்கார்ந்து பேச்சுக் கொடுத்ததே... வயிரவன் ஓரிருமுறை திருட்டுத்தனமாக சிகரெட் குடித்துப் பார்த்திருக்கிறான்தான். சாமியாரின் பீடி இன்னும் வசீகரமாக இருந்தது. ஆனால், வயதில் பெரியவரிடம், அதிலும் சற்றுமுன்தான் அறிமுகமானவரிடம், எப்படிக் கேட்பது.

அவர் பேசப் பேச தயக்கம் குறைந்துகொண்டே வந்து, ஒரு பீடி யாசிப்பதற்கான வாக்கியம் தீர்மானமாக மனத்தில் உருவாகி, மானசீகமாக ஒரு கை அவரை நோக்கி நீளத் தொடங்கும் சமயத்தில் ஊருணிக்கரையில் பெரிய அண்ணன் லெட்சுமணன் தென்பட்டார். சாமியாரையும் வயிரவனையும் ஊருணியிலுள்ள ஆம்பல் இலைகளையும் ஊருணித் தண்ணீரையுமே எரித்து விடுகிற மாதிரி இருந்தது அவருடைய பார்வை.

மௌனமாக எழுந்து தலையைக் குனிந்துகொண்டு படியேறி நகர்ந்தான் வயிரவன். சாமியாரிடம் 'போய்த்தாரேன்' என்று முனகிவிட்டாவது வந்திருக்கலாம். ஆனால், அண்ணன் காதில் விழுந்தால் கொன்றுவிடுவாரே...

மறுவாரம், சாமியாரைப் போலீஸ்காரர்கள் வந்து கைது செய்து கொண்டு போனார்கள். கஞ்சா வைத்திருந்தார் என்று உள்ளே தள்ளிவிட்டார்கள். அடுத்தநாள், அதே ஊருணிக் கரையில் தனியாக உட்கார்ந்திருந்தான் வயிரவன். சாமியார் ஓயாமல் பீடி குடிக்கிறவராயிற்றே, பாவம் பீடிக்கு எங்கே போவார் என்று கவலையாக இருந்தது. அதைவிடவும், ஆகாய ரசிகராயிற்றே, ஜெயிலுக்குள்ளிருக்கும்போது சாமியாருக்கு ஆகாயம் தெரியுமா என்பது இன்னும் பெரிய கவலையாக இருந்தது.

சாமியாரின் முகம் இன்னமும் அழுத்தமாக ஞாபகமிருக்கிறது. பெற்று வளர்த்த அம்மாவின் முகம் அளவுக்கே, ஒரே ஒரு தடவை பார்த்த சாமியாரின் முகமும் அழுத்தமாக ஞாபகத்தில் பதிந்திருக்கிறது. அவரைச் சந்தித்தபோது, அம்மா இறந்து மிகச் சரியாக ஒரு மாதம் ஆகியிருந்தது. இப்போது இன்னமும் இரண்டு வருடங்கள் ஓடியாகி விட்டது...

அடிவயிற்றில் ஒரு வேதனை உயர்ந்தது.

ஆத்தா, இன்னம் நீ பாத்துக்கிட்டிருக்கியா என்னெ?

என்று ஆகாயத்தைப் பார்த்துக் கேட்டான். அம்மாவின் முகம் ஒரு மேகத்தில் ஒட்டியிருந்ததாகப் பிரமை தட்டியது. அம்மாவுக்குப் பதிலாக அப்பச்சி இறந்திருந்தால் மனசில் இத்தனை தவிப்பு இருந்திருக்குமா என்று யோசனை ஓடியது. வாய்ப்புக் குறைவுதான். அவர் சாகவில்லை, மலேயாவில் எங்கேயோ இருக்கிறார் என்று மனம் சமாதானப்பட்டிருக்கும், ஒருவேளை. இந்த அம்மாதான் படுபாவி, விட்டுவிட்டுப் போய்விட்டாள். தலையை உலுக்கிக்கொண்டான்.

பூமிக்கி நெசமாவே நீ திரும்பி வருவியா, ஆத்தா? ஒன்னைத் தொடணும்போல இருக்கே ஆத்தா.

மனத்துக்குள் மறுகிய வார்த்தைகள் விசும்பலாக வெடித்தன...

இ ரண்டு வருடம் முழுசாக முடிந்தும் அம்மாவின் ஞாபகம் கனம் குறையாமல்தான் இருக்கிறது. வயிரவன் தலையை ஆட்டிக் கொண்டான். அதிலும் இந்தப் பஞ்சாங்கக்கார அய்யங்கார் வந்து சேதி சொன்னதிலிருந்து, நினைவில் மிதக்கிற முகம் ரொம்பத்தான் படுத்துகிறது. நாளை மக்யா நாள் திதி கொடுக்க நேற்றே லெட்சுமணன் அண்ணன் குடும்பத்தோடு ஊருக்கு வந்ததிலிருந்து இன்னும் அதிகமாகிவிட்டது.

உண்ணாமலையின் கண்கள் வேறு தொந்தரவு செய்கின்றன. அம்மாவைப் போலவேதான், சிரிக்காத கண்கள்.

அம்மா சிரித்து யாரும் பார்த்திருக்க மாட்டார்கள். ரஞ்சிதம் என்றாலே சிடுமூஞ்சி என்று பேர் வாங்கியிருந்தாள் அம்மா. வயிரவன் ஐந்தாவது குழந்தை. அக்காதான் மூத்தவள். மெய்யம்மை அக்காவை திருவாடானையில் கட்டிக்கொடுத்திருக்கிறது. கோவாப்பரேட்டிவ் பாங்கில் குமாஸ்தாவாக இருக்கிறார் அத்தான். அடுத்தது லெட்சுமணன் அண்ணன். வயிரவனுக்கு முந்தி இரண்டு காய் விழுந்ததாம். ஆறாவதாகப் பிறந்த அழகுசுந்தரம் சேக்காளிப் பயல்களோடு பெரிய கண்மாயில் நீச்சல் பழகுகிறேன் என்று போனவன் மூழ்கி இறந்து போனான். அப்போது அவனுக்கு ஆறு வயது. வயிரவனுக்கு எட்டு.

அதற்கப்புறம்தான் அம்மா மெலிய ஆரம்பித்தாள். வயிறும் மூடிவிட்டது. கல்லச்சுப் போலத் திரண்டிருந்த உடம்பில் சதையும் மினுக்கமும் தொடர்ந்து வற்ற ஆரம்பித்தது. சும்பிப்போன மார்பகங்கள் ரவிக்கைக்குள் ஆடும் வெற்றிலைப் பைகள்போலத் தொய்ந்தன. அம்மா கிழவியாகாமலே இறந்திருக்கலாமே, கடைசியாய் மிஞ்சின பிம்பம்

வாளிப்பானதாக இருந்திருக்கலாமே என்று அவளுடைய பத்தாவது நாள் காரியத்தில் ஈர வேட்டியுடன் உட்கார்ந்திருந்தபோது திரும்பத் திரும்பத் தோன்றியது வயிரவனுக்கு. குமுறிக்கொண்டேயிருந்தான்.

குழந்தையாக இருக்கும்போது இவனை அருகில் வைத்துக்கொண்டு அம்மா குளிப்பாள். மாரை இறுக்கிக் கட்டிய உள்பாவாடை நீரில் முழுக்க நனைந்து உடம்பில் ஒட்டியதும் மாரில் இரண்டு கறுப்பு வட்டங்கள் உதிக்கும். அவற்றைவிட்டுக் கண்ணை எடுக்க முடியாது.

என்னாடி சமத்தி, ஆத்தாளையே பாக்குறே. அந்த சோப்பெ எடு.

அந்த மஞ்சக் கிளங்கெ எடு.

துண்டெ எடுத்துக் குடுறீ கண்ணு.

என்று அம்மா வேலை ஏவிக்கொண்டே இருப்பாள்.

இவன் பார்வையை விலக்குவதற்கான உபாயமோ என்று இப்போது தோன்றுகிறது. வயிரவன் சிரித்துக்கொண்டான். ஒரே ஒருதரம் அம்மாவின் கவனத்தை மீறி, மோவாய்க்கட்டைக்கு அடியில் கவ்வி இடுக்கிய பாவாடை சற்றே இறங்கிவிட்டது. சரிந்திறங்கிய கல்லாமைகள் போன்ற திரட்சிகளை இப்போது நினைக்கும்போதும் அம்மாமேல் பிரியம் ஊறுகிறது. விரிந்த கண்களால் அவளைப் பார்த்துக்கொண்டிருந்த வயிரவனை தலையில் செல்லமாகக் குட்டி, தென்னந்தட்டி மறைப்புக்கு வெளியில் தள்ளிவிட்டாள். பிறகு ஒருநாளும் குளியல் மறைப்புக்குள் இவனைக் கூட்டிக்கொண்டு சென்றதில்லை. ஆனாலும், அன்றைக்கு அம்மாவின் முகத்தில் மலர்ந்த சிரிப்புக்கு ஈடே கிடையாது.

அதற்கப்புறமும் அம்மாவைத் தொடாமல் பேச முடிந்ததில்லை. கடைசிவரையிலும் இவன்தான் அருகில் இருந்தான். மதுரையில் ஒரு தனியார் மருத்துவமனையில் அம்மாவின் இறுதி மூச்சு அடங்கியது. ஒருமணிநேரம் முன்புவரையில் அம்மா அவ்வளவாகத் தெளிச்சியில்லாமல் பேசிக்கொண்டுதான் இருந்தாள். அவளை உயிரோடு ஊருக்குத் திரும்பிக் கொண்டுசெல்வதற்கான நம்பிக்கை மட்டும் குறைந்துகொண்டே வந்தது. மருத்துவர்கள் முதல்நாளே கையை விரித்துவிட்டார்கள்.

ஆனால், அம்மா ஓயாமல் பேசினாள். உரத்து எழுப்ப முடியாத குரலில் ஏதாவது கேட்டுக்கொண்டே இருந்தாள். துடிக்கும் உதடுகளுக்கருகில் காதைக் கொண்டுபோய் வைத்தால் உயிரின் ஆழத்திலிருந்து ஓசை கிளம்பி வந்தது.

வள்ளியம்மைக்குப் பேறுகாலம் ஆயிருச்சா...

ஒங்க அப்பச்சி வந்துட்டாகளா...

மேல்வீட்டுலெ இருக்குற மர அலமாரிச் சாவி என் தாலிக்கொடியிலெ கெடக்கா, பாத்துச் சொல்லு...

ஊளெமூக்குக் காந்திமதி நமக்கு ஐய்யாயிரம் தரோணும், மறக்காமெ வாங்கீரு...

எளையாத்தங்குடிக்காரி மாமியா தவறிப் போச்சாமில்லே...?

என்று கோர்வையாகச் சில சமயங்களில் பேசினாள். பெரும்பாலும்,

அந்தா எங்க அப்பச்சி கூப்புடுறாக. இந்த மட்டுக்கும் இப்பயாச்சும் சின்னாத்தா சொல்றதைக் கேக்காமெப் பெறப்புட்டு வந்தீகளே அப்பச்சி...

இந்த ஓடுகாலி மனுசனுக்கு வாக்கப்பட்டு நான் என்னா சொகத்தைக் கண்டேன். என் தாவந்தம் அந்த மனுசனைக் சும்மா விடாது. ஒத்த மரமா நின்னு பிள்ளை வளக்கத்தானா நான் இந்தப் பெறப்பு எடுத்தது...

யெப்பா, அளகு, இன்னம் ரெண்டு பணியாரம் வைக்கட்டா..?

இதென்னா இது, வேப்ப மரத்துலெ செகப்பு ரைட்டு எரியிது...?

அந்தா வந்துருச்சே வயிரவ சாமி. ஆத்தாடி, குதுரெ காலை இந்தத் தூக்குத் தூக்குதே. ஆம்பளைக் குதுரே போலருக்கே. இதென்னாடி கொடுமெ, இம்புட்டு வெடைச்சிருக்கே. ஏ ஆத்தா, ஒரு பாகம் நிகுளம் இருக்கும் போலவே. யாத்தாடி...

ஐயோ சாமி, என் உசிரெ எடுத்துக்கொ, என் வமுசத்தை நல்லா வாள வையி. எம் புள்ளைக தலையெடுத்து நிமுந்து நிக்யணும்...

என்று தொடர்பில்லாத வாக்கியங்களை உதிர்த்துக்கொண்டிருந்தாள்.

மெற்றாஸிலிருந்து ரயில் ஏறி மதுரை வந்திறங்கிய அப்பச்சி மருத்துவமனைக்கு வந்து சேரும்போது அம்மாவின் உயிர் அடங்கி இரண்டுமணி நேரம் ஆகியிருந்தது. அவர் தலையிலடித்துக்கொண்டு அழுதார்.

என் மொதல் போச்சே, என் மொதல் போச்சே.

என்று திரும்பத் திரும்பப் புலம்பினார்.

யெப்பா, வயிரவா, ஒங்காத்தா கடோசியா என்னதாண்டா சொன்னா?

என்று கேட்டார். வயிரவன் அவர் அருகில் சென்று,

நம்மல்லாம் ரொம்ப நல்லா இருப்போம், தனக்கு அமைஞ்ச மாதிரிக் குடும்பம் வேற யாருக்கும் அமஞ்சிறாது, தான் ரொம்ப யோகக்காரின்னு ஆத்தா சொல்லிச்சு அப்பச்சி. அப்பவே நெஞ்சு ஒரு மாதிரி அடைக்க ஆரமிச்சுருச்சு. நாம் பொயி நர்ஸம்மாவைக் கூட்டியாறதுக்குள்ளே பொசுக்குன்னு கண்ணெ மூடிருச்சு.

வழுக்கை தலை முழுவதும் வியர்த்து, மேல் துண்டின் நுனி முழுக்க ஈரமாகி, கண்கள் கடுமையாகச் சிவந்து அந்த இளங்கிழவர் உடம்பு நடுங்க நின்றபோது, சொல்ல முடியாத வாஞ்சை அவர் மீது ஊறியது. பெரிய அண்ணன் லெட்சுமணன் அவர் தோளை இறுக்கிப் பிடித்து,

அப்பச்சி, கலங்காதீக அப்பச்சி.

என்று தானும் அழுதார்.

அ ப்பச்சி சிறுவயதிலேயே மலேயா போய்விட்டார். இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை வருவார். ஊர் திரும்பும்போது இங்கே ஒரு நிலம் அல்லது வீடு இவர்கள் கணக்கில் சேர்ந்திருக்கும். புதுசாக வந்த தங்கச் சங்கிலியோ நெக்லஸோ வளையல்களோ அம்மாவின் உடம்பில் மினுங்கும். புத்தம் புதிய டெரிலின் சட்டைகளும், பளபளக்கும் பாவாடை சட்டைகளும் மர பீரோவில் குவியும்.

தினசரியும் விருந்துபோலச் சாப்பாடு. காலையில் ஆகாரத்துக்கு விதவிதமாகச் சட்னிகள். சாயங்காலத்தில் தவறாமல் புதுப்புது பலகாரங்கள். சீனிக் காப்பி. வலை பனியன் போட்டுக்கொண்டு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் அப்பச்சியின் அருகில் தரையில் சம்மணமிட்டு அமர்ந்து வெற்றிலை மடித்துக் கொடுப்பாள் அம்மா.

அந்த நாட்களில் வயிரவனுக்குத் தீராத சந்தேகமொன்று இருந்து வந்தது. இரவில் தன் அருகில் படுத்து இறுக்கிக் கட்டிக்கொண்டு தூங்கும் அம்மா, விடிகாலையில் அப்பச்சியின் அறையிலிருந்து எழுந்து வருவது எப்படி...? கலைந்து விரிந்து கிடக்கும் கூந்தலைக் கோடாலி முடிச்சுப் போட்டுக்கொண்டே எழுந்து வருவாள் அம்மா. சேலைத் தலைப்பு அநேகமாகக் குலைந்து கிடக்கும். சில நாட்கள் ரவிக்கைப் பித்தான்கள் ஏறுமாறாகப் போட்டிருப்பது தெரியும்.

ஆனால், அம்மாவின் முகம் மட்டும் வழக்கம்போல வறண்டே கிடக்கும்.

அவள் இயல்பாகச் சிரித்து வயிரவன் பார்த்ததேயில்லை. தன் குழந்தைகளிடம் பேசும்போது கொஞ்சம் கனிவாக இருக்கும் முகம், பெரியவர்களிடம், அதிலும் ஆண்களிடம் பேசும்போது இறுகிவிடும். அம்மா நல்ல கறுப்பு. இறுகும் முகம் கண் மை போல மேலும் கறுப்பாக ஆகிவிடும். இவ்வளவு சாமான்கள் வாங்கிக்கொண்டு ஊர் திரும்பும் அப்பச்சியிடம் அம்மா பேசும்போது, வேண்டாத விருந்தினருடன் பேசுகிற மாதிரி ஒட்டாத குரலில் ஏன் பேசுகிறாள் என்று கோபம் தட்டும். ஆனால், கேட்க முடியாது. மணிப் பிரம்புதான் பதில் சொல்லும்.

ஆனால், பிராயம் உயர்ந்தபோது, இச்சை இயல்பாக ஒரு வலைப்போலத் தன்மீது கவிந்தபோது, வயிரவன் அம்மாவின் வேறொரு ரகசியத்தை அறிந்தவனானான். ஒவ்வொரு முறையும் அப்பச்சி கப்பலேறிப் போன கொஞ்ச நாளில் அம்மாவின் வயிறு புடைக்க ஆரம்பிப்பதன் காரணமும் புரிய ஆரம்பித்தது.

ஒரு கல்யாண வீட்டில் சாப்பாட்டுப் பந்தியில் அருகில் உட்கார்ந்திருந்த வேலம்மை ஆச்சி அம்மாவிடம் சொன்னாள்.

ஒனக்கென்னா ரஞ்சிதா, ஒம் புருசன் கடல்கடந்து சம்பாரிச்சுட்டு வர்றான். ராசாத்தியா ஆயிட்டே. நம்ம சாதிசனத்திலே எம்புட்டுப் பேருக்கு இந்தக் குடுப்பினெ இருக்கு. அங்கிணெ சம்பாரிக்கிறதெயெல்லாம் கூத்தியா கையில ஒப்படைச்சிட்டு குண்டிவேட்டியோட திரும்புறவன்தானே பேர்பாதிப் பயக...

அப்பளம் கொண்டுவந்தவரை நிறுத்தி, இடது பக்கம் உட்கார்ந்திருந்த வயிரவனின் இலைக்கு ஒரு அப்பளம் போடும்படி சைகை காட்டி விட்டு, அம்மா ஆச்சியைத் திரும்பிப் பார்த்தாள்.

ஏத்தா, நான் என்னமோ வெறுங்களுத்தோட வந்த மாதிரில்லல பேசுறீக?

...பெரியகருப்பன் சின்ன வயசிலெயே கெட்டிக்காரப்பய. தெருவிலெ நடக்கும்போது தலையை நிமுத்த மாட்டானே. பொறுப்பான பய. கையும் மனசும் சுத்தம். காசு தானாச் சேருது.

அம்மாவின் குரல் கொஞ்சம் தடித்தது.

ஏட்டி, நான் என்னா தப்பாவா சொல்லீட்டென்? என்னாதான் நம்ம அப்பச்சி வீட்டுலேர்ந்து கொண்ணாந்தாலும் ஆமக்கன் சம்பாரிச்சுச் சேக்குற மாரி ஆகுமா?

நல்லாச் சேத்தாக. எல்லாம் கருவெ மரம் வளர்ற பூமி.

மண்ணைத்தான் அள்ளித் திங்கோணும்.

என்று அமர்ந்த குரலில் சொல்லிவிட்டு, ஆச்சிக்குக் கேட்காத குரலில்,

மண்ணைக் கட்டிக்கிட்டாத்தான் இத்தனை பிள்ளை பெத்துப் போடுதாக்கும்?

என்று வயிரவன் பக்கம் திரும்பி முனகினாள். இடதுகை வயிரவனின் தலையை அனிச்சையாக வருடியது. கண்கள் சட்டென்று சிவந்திருந்தன.

அம்மாவின் சுபாவமே அதுதான். நேரடியாகச் சொல்லும் ஒரு பதிலும், அதற்குள் அடங்காத உள் மடிப்பாய்ப் புழுங்கும் இன்னொரு பதிலும் கைவசம் வைத்திருப்பாள். இரண்டாவது பதிலை எதிராளிக்குக் கேட்காதவண்ணம் முணுமுணுப்பாள். பதில் சொன்ன மாதிரியும் ஆயிற்று, சண்டை என்று வராமல் தவிர்த்த மாதிரியும் ஆயிற்று.

இவ்வளவு கவனமாக இருந்தும் ஒருதடவை அம்மாவின் இரண்டாவது பதில் தன்னையறியாமல் உரத்துச் சிந்திவிட்டது. அப்பச்சியின் முகம் பரிதாபமாக மாறிய சந்தர்ப்பம் அது.

உள்ளூர்ப் பள்ளிக்கூடத்தில் தலைமையாசிரியராக இருந்த ஆறுமுகம் செட்டியாரின் மகள் வள்ளியம்மையை மூத்த அண்ணனுக்குக் கொடுக்க வந்தார்கள். செவிப் புனல்வாயில் எப்போதும் ஒரு எட்டணாவைச் செருகி வைத்துக்கொண்டு, ஏந்திய உதடுகளில் பாதி வாக்கியத்தை வழிய விட்டுவிட்டு, நாம் காத்திருக்கும் நேரத்தில் சாவகாசமாக வெற்றிலை எச்சிலை இரண்டு விரல்களுக்கு நடுவில் பீய்ச்சியடிப்பார் ஆறுமுகம் வாத்தியார். எப்போதுமே துடுக்காகப் பேசுகிறவர் அவர்... இவனைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்போன நாளில், அவர் கேலி செய்தது நன்றாக நினைவிருக்கிறது.

எலே, ஒம்பேரு வையிரவனாமுல்லே, ஒங்காத்தா சொல்லுறாக? இந்தா பாரு, இந்தப் பள்ளிக்கூடத்திலே நாந்தேன் வையிறவன். நீங்க எல்லாம் வசவு வாங்குறவன்க.

வெற்றிலைச் சிரிப்பைச் சிந்தினார். அம்மா, முகத்தில் சலனமேயில்லாமல் சொன்னாள்:

அவனுக்குச் சாமி பேரயில்ல விட்டிருக்கு. பெரியவுகளே இப்பிடிக்கூறுல்லாமெப் பேசுனா, சேக்காளிக அப்பறம் எப்பிடியெல்லாம் பேசுவான்?

ஆறுமுகம் வாத்தியார் வாயைப் பாவனையாகப் பொத்திக்கொண்டார்.

ஆறுமுகம் வாத்தியாரை அநேகம் பேருக்குப் பிடிக்காது. அவர் மகள் வள்ளியம்மை விஷயம் அப்படியில்லை. பார்த்த மாத்திரத்தில் யாருக்கும் மனசு ஒட்டிவிடும். அபூர்வமான மாநிறத்தில் தாராளமாக மஞ்சள் பூசிய முன்னங்கைகள் மற்றும் மேற்பாதங்களில் தகப்பனைவிட உயரமான ஆகிருதியில் வெள்ளியாய்த் துலங்கும் பற்களில் நெற்றி நிரம்பிய விபூதியின் மத்தியில் பொலியும் தாழம்பூக் குங்குமத்தில் வள்ளி ஐம்பொன்னால் செய்த உற்சவ விக்கிரகம்போல இருப்பாள். வயிரவனுக்கு நாலு வயது பெரியவள்.

நாள் தவறாமல் அம்மாவைப் பார்க்க வந்து 'அயித்தே, அயித்தே' என்று ஒட்டுதலாகப் பேசிக்கொண்டிருப்பாள். நெல் குத்தும்போது, அரிசி புடைக்கும்போது, மடியில் சார்த்திய பலகையில் கடுகு உருட்டிப் பதர் நீக்கும்போது, திருகையில் மாவு திரிக்கும்போது என்று அம்மாவுக்கு உற்ற துணையாக ஒத்தாசை செய்வாள். அக்கம் பக்கத்தவர்கள்,

ரஞ்சீ, மெய்யம்மெ ஒம் மகளாப் பெறந்ததுக்கு, இந்தக் குட்டி வள்ளியம்மெ வந்து பெறந்துருக்கலாம்.

என்று கேலி செய்வார்கள். அம்மா அமர்த்தலாகச் சிரித்துக் கொள்வாள். ஆறுமுகம் செட்டியாரும் அவருடைய சம்சாரமும் வெற்றிலைத் தாம்பாளத்துடன் படியேறி வந்தபோதும் அதே சிரிப்புத்தான் சிரித்தாள்.

புது ஜமுக்காளத்தில் அமர்ந்து, பெண்ணைப் பெற்றவர் நிதானமாக விஷயத்தைச் சொன்னார். அப்பச்சி வழக்கம்போல அம்மாவின் முகத்தைப் பார்த்தார். அம்மா சிரித்துக்கொண்டே சொன்னாள்:

அவுக அயித்தானை அவ கட்டிக்கிறப் போறா. இதிலெ நாம சொல்றதுக்கு என்ன இருக்கு? சீர் செனத்தி மட்டும் கொறையில்லாமெச் செஞ்சுருங்க. சாதிசனத்துலெ நாலுபேர் சிரிக்கிற மாதிரி ஆயிறப்புடாது. பெரியவுக நீங்க, ஒங்களுக்குத் தெரியாததா?

ஆறுமுகம் செட்டியாரின் முகம் மின்னல்நேரம் கூம்பி மறுபடி இயல்புநிலைக்கு மீண்டது. சற்றுக் குழம்பிய பாவத்துடன் தலையசைத்தார். அப்பச்சி உரையாடலைத் தொடர்ந்தார்:

கலியாணம் முடிஞ்சதும் லெச்சுமணனையும் பினாங்குக்குக் கூட்டிட்டுப் போயிறலாம்னு இருக்கேன். அங்கே நம்ம சனத்தோட கூடமாட இருந்து தொளில் பளகிக்கிட்டா, அப்பறம் சொந்தக் கால்லேயே நின்னு ஒரு மனுசனா ஆயிறலாமில்லியா?

அம்மா சடாரென்று எழுந்தாள். வாத்தியாரை நேராகப் பார்த்தாள்.

அய்யா, இவுக சொல்றதுலெ எனக்குச் சம்மதமில்லே. அவனெப் பெனாங்குக்கு அனுப்புறதுலெ எனக்கு இஸ்டமில்லே. அப்பிடி அவுக அப்பச்சி சொல்ற பிரகாரம்தான் நடக்கும்னா, நீங்க ஒங்க மகளுக்கு வேற எடம் பாத்துக்கிருங்க. அவ எந்தூருல யாருக்கு வாக்கப்பட்டாலும் எம் மருமவதேன். நான் அவளுக்கு அயித்தெதேன்...

அத்தனைபேரும் அதிர்ந்து போனார்கள். கூடத்தில் பெரும் நிசப்தம் கவிந்தது. கனத்த இடைவேளைக்குப் பிறகு, முனகும் அருகதை கொண்ட இரண்டாவது பதிலை உரத்துச் சொன்னாள் அம்மா.

...நாம் பட்ட கஸ்டத்தெ என் மருமகளும் பட வேண்டாம்.

பெரும் அந்தஸ்துடன் வாழ்கிற ரஞ்சிதம் ஆச்சி பட்ட கஷ்டம்தான் என்ன என்று யாரும் கேட்கவில்லை. புரிந்தது மாதிரியும், தங்களுக்கு இழைக்கப்பட்ட வெளித் தெரியாத அவமானத்தில் மறுகுகிற மாதிரியும் தலைகுனிந்து அமர்ந்திருந்தார்கள்.

அப்பச்சி தன் முடிவை மாற்றிக்கொண்டார். லெட்சுமணன் அண்ணனுக்கு தேவகோட்டையில் ஒரு காசுக்கடை வைத்துக் கொடுத்தார். வள்ளி மதினி இங்கே அம்மாவுக்கு ஒத்தாசையாய்க் கூட்டுக் குடும்பத்தில் வசிக்கட்டும் என்று அண்ணன் சொன்னார். தான் தினசரி தேவகோட்டை போய்வருவதாகச் சொன்னார். அம்மா மறுத்துவிட்டாள்.

எதுக்கப்புச்சி, காலையில கடையைத் தொறக்கும்போதே எப்படா கல்லாக் கட்டுவோம்னு சலிச்சுக்கிர்றதுக்கா? அதெல்லாம் புருசம் பொஞ்சாதின்னா ஒரே எடத்திலே இருக்கிறதுதேன் சிலாக்கியம்.

வள்ளயம்மை வழக்கம்போல வயிரவனையும் 'அயித்தான்' என்றே தொடர்ந்து அழைத்தாள். ஆனால், முன்போல் அவளை இவன் பேர் சொல்லி அழைக்கக்கூடாது, 'அண்ணமுண்டி' என்றுதான் அழைக்க வேண்டும் என்று அம்மா கறாராகச் சொல்லிவிட்டாள். வள்ளி மதினியும் லேசுப்பட்டவள் இல்லை நிறமும் உயரமும்தான் வித்தியாசப்பட்டதே தவிர, அம்மாவின் கண்ணாடிப் பிம்பம் மாதிரி ஆகிவிட்டாள். நடை, பேச்சு, சமையல் பக்குவம், நிதானம் எல்லாமே அச்சு அசல் அம்மாவேதான்...

இ ருட்டு நன்றாகக் கவிந்துவிட்டது. 'ரேகை தெரியாத இருட்டு' என்று சொல்வாள் அம்மா என்னமோ, கடிகாரத்தில் மணி பார்க்கிறதுபோல, அடிக்கடி ரேகையைப் பார்க்கிற அவசியம் இருக்கிற மாதிரி. சிரித்துக்கொண்டான். நாளை திதி கொடுக்க அய்யங்கார் வரும்போது

அவரிடம் கேட்க வேண்டும், இறந்தவர்கள் உலகத்தைப்பற்றி யாராவது புஸ்தகம் எழுதியிருக்கிறார்களா, அவரிடமே ஏதாவது புஸ்தகம் இருக்கிறதா என்று... ம்ஹூம். பஞ்சாங்கக்கார அய்யங்காருக்குத் தேங்காய் பச்சரிசி வாழைக்காய் இதைவிட்டால் வேறே எதுவும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. வேறு யாரிடமாவது கேட்டுப் பார்க்கலாம்.

வீட்டுக்குக் கிளம்பலாம். எழுந்துகொண்டான். கை அனிச்சையாகப் புட்டத்தைத் தட்டி, ஒட்டியிராத தூசியை உதிர்த்துவிட்டது. வீட்டு வாசலில் சென்று சேர்ந்தபோது கால்கள் சற்றுத் தயங்கின. உண்ணாமலை உறங்கிவிட்டிருந்தால் தேவலை. அவளுடைய கண்களைப் பார்ப்பதற்குத் தன்னிடம் திராணி மிச்சமில்லை என்று தோன்றியது.

நல்லவேளை, குழந்தை உறங்கியிருந்தாள். வீட்டில் மூர்க்கமான நிசப்தம் நிலவியது. தன்னுடைய அறைக்குள் சென்று சட்டையைக் கழற்றி ஜன்னலிலிருந்து எதிர்ச்சுவர் ஆணிவரை கட்டியிருந்த கொடியில் போட்டான். சட்டையிலிருந்து ஆவிபோலக் கிளம்பிய தன் வாசனையில் ஒரு கணம் மனம் லயித்தது. தாளித்துக் கொட்டும் மணம் ஆக்குப்புறையிலிருந்து எழுந்து வீடு முழுவதும் நிரம்பியது.

வாசலில் யாரோ வந்திருக்கிறார்கள். நாதாங்கியைத் திறக்கும் ஓசை கேட்டது. லேனா அண்ணன். வேஷ்டி நுனியை இடதுகையால் பிடித்துக்கொண்டு உள்ளே வந்தார். அப்பச்சி மாதிரியே விசுக்விசுக்கென்று நடை. ஆனால், அப்பச்சி அளவுக்கு நிதானமும் சாந்தமும் கிடையாது. எப்போது கோபம் தலைக்கேறும், கையிலிருக்கிற எது எதிராளியை நோக்கிப் பறக்கும் என்று யூகிக்கவே முடியாது. வள்ளி மதினியை நினைத்தால் சிலசமயம் பாவமாக இருக்கும். ஆனால் அவள் இந்தக் கோபத்தைப் பொருட்படுத்தவில்லை¬ என்றும், ஒருவிதத்தில் அதற்குப் பழகிவிட்டாள், இவளுடைய அனுமானத்தைத் தாண்டி அண்ணனின் கோபம் வேகம் கொள்வதற்கில்லை என்றும்கூடத் தோன்றும்.

அப்பச்சி மாதிரி அண்ணனுக்கு முழுவழுக்கை ஆகவில்லையே தவிர, முன்வழுக்கை வேகமாக ஏறத் தொடங்கிவிட்டது. இவருக்கு அப்பச்சி ஜாடை. இவர் மகளுக்கு அப்பச்சியின் சம்சாரம் ஜாடை. குழப்பம்தான், இல்லை? வயிரவனுக்கு சிரிப்பு வந்தது.

ஏலே, என்னா, தானாச் சிரிக்கிறே, கோட்டி எதுவும் புடிச்சிருச்சா...? அதென்னா, நேத்து எம்புளாய்மெண்டாபீஸ் போனயே, என்னா சொன்னாக?

பதிலை எதிர்பாராதவர்போலப் பின்முற்றத்துக்குப் போய்க் கால்களில் ரெண்டு சொம்பு நீர் ஊற்றிக் கழுவினார் அண்ணன். தொடர்ந்து அண்ணனைப் பார்க்கும்போது, சாமியாரும் நல்ல தண்ணி ஊருணிக் கரையும் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத பீடியும் ஒரே சமயத்தில் நினைவில் வந்தது. அதற்கப்புறம் எத்தனை பாக்கெட் சிகரெட் குடித்தாகிவிட்டது. இவருக்கு அதெல்லாம் தெரியவா செய்யும்...?

கொளுத்தனாரே, என்னா, எந்நேரமுமா ரோசனெ? இட்லி அவிச்சு வச்சிருக்கேன். வாங்க சாப்புடலாம்.

வள்ளி மதினியின் குரல் இடைவெட்டியது.

அப்பிச்சி சாப்புட்டாகளா?

என்று கேட்டுக்கொண்டே அண்ணன் கூடத்தில் வந்து சம்மணமிட்டு அமர்ந்தார். கூடத்தின் எதிர் ஓரத்தில் கிடந்த திவானில் சிறு மெத்தை விரித்து அதில் உண்ணாமலையை உறங்கப் பண்ணியிருந்தாள் மதினி. இடதுபக்கம் ஒருக்களித்துப் படுத்து வலதுகையைக் காதோடு உயர்த்தித் தலையை ஒட்டி வழிய விட்டிருந்தாள் உண்ணாமலை. நாற்காலியில் உட்கார்ந்த தினுசில் முன்னோக்கி மடங்கிய தொடைகளிலிருந்து முழங்கால் மடிந்து கீழ் நோக்கி வந்திருந்த முன்னங்கால்கள் ஒன்றையொன்று பின்னியிருந்தன.

வயிரவனின் முதுகுத்தண்டில் மறுபடியும் குறுகுறுப்பு ஓடியது. அம்மாவும் இதேமாதிரிதான் படுத்துக்கொள்வாள். அந்தவிதமாகப் படுத்திருக்கும்போது அவள் கைநீட்டி வயிரவனை அணைத்துக் கொள்ள முடியும். உடம்போடு பொருந்தி இவனால் கட்டிக்கொள்ள முடியாது. உண்ணாமலையின் அருகில் சென்று படுத்துக்கொண்டு, அவளைவிடவும் இளைய குழந்தையாகிவிட வேண்டும் என்று மனம் பரபரத்தது.

அப்பச்சி இன்னமும் சாப்பிட்டிருக்கவில்லை. இவர்கள் இருவரும் இலையின் முன் அமர்ந்ததும் அறையிலிருந்து வந்து சேர்ந்துகொண்டார். அவரும் அண்ணனும் ஏதோ பேசிக்கொண்டே சாப்பிட்டார்கள். காதில் விழும் பேச்சொலிக்கு எந்த அர்த்தமும் கோக்க முனையாமல் வேறு பக்கம் திரும்பியிருந்தது வயிரவனின் மனம்.

அம்மா இறந்த சமயத்தில்தான் கஞ்சாச்சாமியார் ஊருக்குள் வந்து சேர்ந்தார். அவர் இங்கே இருந்த நாலைந்து வாரங்களில் தினந்தோறும் அவருடன் உரையாடி வந்ததெல்லாம் மீண்டுமொருமுறை ஞாபகம் வந்தது.

திடீரென்று உடம்புக்குள் ஒரு மின் அலை உருவாகி நடுக்கமாக வெளிப்பட்டது. நிஜமாகவே அம்மாதான் உண்ணாமலையாக வந்து பிறந்திருக்கிறாளோ.

மீண்டும் ஒருதடவை உண்ணாமலையை உறுத்துப் பார்த்தான். ஊர்க்காரர்கள் சொல்லுவது சரிதானா அம்மா? நீதான் உண்ணாமலையாக வந்து பிறந்திருக்கிறாயா? அப்படியானால், ஆகாயத்தில் நீ இருக்க வாய்ப்பில்லை அல்லவா? நீ இல்லாத இடத்தைத்தான் நீ இருப்பதாக நினைத்து நான் வெறித்து வெறித்துப் பார்த்து வந்திருக்கிறேனா, கடந்த இரண்டு வருஷமாய்?

என்னா கொளுந்தனாரே, அதுக்குள்ளாறெ எந்திரிச்சிட்டீக? நாலு இட்லிதானே வச்சேன்?

அவென் எங்கெ ஒளுங்காச் சாப்புடுறான்? அவுக ஆத்தாளோடெ போச்சு எல்லாம். அவ இருந்தா அமுக்கி ஊட்டாத கொறையாச் சாப்புட வெப்பா... களுக்கெலும்பு எப்பிடித் தெரியுது பாரு.

என்று அப்பச்சி பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, கூடத்தை மறுபடி கடந்து, தன் அறைக்குள் சென்று புகுந்துகொண்டான்.

சாப்பிட்டு முடித்த அப்பச்சியும் அண்ணனும் முற்றத்தின் விளிம்பாக இருந்த குட்டித்திட்டில் உட்கார்ந்து பேச ஆரம்பித்தார்கள். அண்ணனை அப்பச்சி சமவயதுக்காரனாக நடத்தத் தொடங்கி வெகு நாளாகிறது. கல்யாணத்தையொட்டியே அண்ணனுக்கு இந்தப் பதவி உயர்வு கிடைத்துவிட்டது. அம்மாவின் மறைவுக்குப் பிறகு, அண்ணனைக் கேட்காமல் ஒரு துரும்பைக்கூட நகர்த்துவதில்லை அப்பச்சி. அண்ணனும் அநாவசிய அடக்கம் எதையும் காட்டுவதில்லை. ஒருக்களித்துச் சாத்திய கதவுக்குப் பின்னால் அவர்களது குரல்கள் வெகு தொலைவிலிருந்து, ஆனால் வெகு துல்லியமாக, கேட்டன.

ஏம்ப்பு, இந்தப் பயலுக்கு ஒரு ஏற்பாடு பண்ண வேணாமா?

நானே கேக்கணும்னிருந்தேன். இப்பிடிச் சும்மாச்சும்மா சாப்பிட்டுப்பிட்டு லயிப்ரயிலெ போயி ஒக்காந்தாக் கதெ நடக்குமா அப்பிச்சி?

அவன் என்னாதேன் சொல்றான்?

ஏதோ ஏளெட்டு எடத்துக்கு மனுப் போட்ருக்கான். வீட்டுல இருக்கிற நேரம் முளுக்க உத்தரத்தைப் பாத்துக்கிட்டு ஒக்காந்துருக்கான். அவுக ஆத்தா யாவுகம் ரெம்ப இருக்குற மாரித்தேன்

தெரியுது. என்னா இருந்தாலும் கடைக்குட்டியில்லப்பு?

அதுக்கோசரம்? எத்தனெ வருசமா? பால்குடி மறக்காத பிள்ளையா இவென்? எங்களுக்கெல்லாம் எங்க ஆத்தா ஒசத்தியில்லாயாக்கும்? நீங்க அவனுக்கு ரெம்பச் செல்லங் குடுக்கிறீக அப்பிச்சி. அவன் வயசிலெ நானெல்லாம் தொளில் பளக ஆரமிச்சுரலே?

நீயேதான் அவங்கிட்டப் பேசேன்... அது சரி, மேனாச் செட்டியார் வீட்டுல ஏதோ பிரச்னையாமில்லே?

வயிரவன் சிரித்துக்கொண்டான். அவ்வளவுதான். அப்பச்சி தடம் மாறிவிட்டார். இனி அண்ணன் இவனைப் பற்றி ஒரு சொல் பேசிவிடமுடியாது. அண்ணனுக்கும் இது புரியும். அத்துமீறாமலே தன் ஸ்தானத்திலிருந்து கொண்டு அப்பச்சியிடம் பேசுகிறவர் அவர்.

அவரு மகன் சோமசுந்தரத்துக்குப் போனவாரம் பக்கவாதம் வந்துருச்சு அப்பிச்சி. காரெக்குடி ஆஸ்பத்திரியிலெ கொண்டுபோய்ச் சேத்துருக்காக.

அதானே பாத்தேன். மேனாச் செட்டியாரு மூணாவது மகன்தானே அவென்?

ஆமப்பிச்சி.

இது நடக்குமுன்னு எனக்கு முன்னமே தெரியும் லெச்சுமணா.

என்னப்புச்சி சொல்றீக?

பின்னே? அந்தப் பய அஞ்சு அசலும் அவுக பாட்டனாரு மாதிரித்தேன். வளுக்கெ, ரோமக் கெட்டு, நடே, எளநரெ, எடுத்தெறிஞ்சு பேசுறது... மலயாவுக்குப் போன புதுசிலெ அவரும் நானும் ஒரே கடையிலேதானே நின்னோம்? அவரும் பக்கவாதத்திலெ கெடந்துதான் போயிச்சேந்தாரு. இவன் வயசிலே அவருக்கும் சீக்கு வந்திருச்சே? இந்தப் பயலெப் பாக்குறப்பவெல்லாம் எனக்கு அவரு யாவுகம்தான் வரும்... அதுசரி, என்னா தாவாவாம்?

மூத்தவிங்ய ரெண்டு பேரும் தம்பி பங்கையும் இப்பவே சமமாப் பங்கு பிரிச்சுறணும்ங்குறாங்யளாம். மேனா மனசு கலங்கிப் போயி இருக்காரு. 'இவிங்யளே ஆசுபத்திரியிலே போயி அவனெக் கொண்டுபோடுவாங்ய போலருக்கே அப்பிச்சீ'ன்னு ஏங்கிட்டெப் பொலம்புனாரு.

ஒங்காத்தா அடிக்கடி சொல்லுவாப்பு, 'பணம் ன்னாலே ஆள்

கொல்லீன்னுதேன் அருத்தம்'னு. அவ வளத்த மாதிரில்லாம் புள்ளெகளெ வளக்க எந்தப் பொம்பளையாலெயும் முடியாது. ஹூம். நம்மளுக்குக் குடுத்து வய்க்கலெயே...? சரி விடு. வீட்டுக்கு வீடு வாசப்படி. நீ போயி ஒறங்கு. வெடிகாலையிலெ அய்யங்காரு வந்துருவாரு.

ந ள்ளிரவில் விழிப்புத் தட்டியபோது, வயிற்றில் ஏதோ ஒரு அசவுகரியத்தை உணர்ந்தான் வயிரவன். மனம் தனக்குப் பிரியமான இடத்தில் மறுபடி சென்று நிலைகொண்டது. உண்ணாமலை அவளுடைய பாட்டி மாதிரி இருப்பதில் ஆச்சரியம் இல்லை போலிருக்கிறதே? மேனாச் செட்டியார் வீட்டிலும் இதே கதைதானாமே? சோமசுந்தரம் அஞ்சச்சும் அவருடைய தாத்தா மாதிரியே இருக்கிறாராமே.

தவிர, இது வெறும் மாதிரி விஷயம் மட்டும் இல்லையோ? இறந்தவர்களெல்லாம் இப்படித்தான் மறுபடி மறுபடி வந்து பிறந்து கொண்டிருக்கிறார்களா? ரூபமில்லாமல் எங்கேயோ இருந்துகொண்டு தங்கள் வாரிசுகளையும் அவர்களுடைய அந்தரங்கங்களையும் சதா கவனித்தவாறு இருக்கிறார்களா?

அப்படியானால், நான் யார் மாதிரி இருக்கிறேன். அல்லது, நான் நானே இல்லையோ? ஒருவேளை, விலாசம் தவறி வந்து, இந்தக் குடும்பத்துக்குச் சம்பந்தமில்லாத ஒருத்தர் நானாகப் பிறந்திருக்கவும் வாய்ப்பிருக்கிறதோ? இந்த ஊர் முழுவதுமே, ஏன், இந்த உலகம் முழுவதுமே, வெறும் நகல்கள்தாம் நடமாடிக் கொண்டிருக்கின்றனவா? அப்படியென்றால், முதன்முதலில் உலகம் ஆரம்பித்த நாளிலிருந்தே இதே ஜனத்தொகை இருப்பதாகத்தானே அர்த்தம். நம் ஊரின் ஆள் எண்ணிக்கை நாம் பார்க்க அதிகரித்துக்கொண்டு அல்லவா இருக்கிறது? இறந்தவர்கள் மட்டும்தான் மறுபடி பிறக்கிறார்கள் என்றால் எண்ணிக்கை எப்படிக் கூட முடியும்? அல்லது, ஒரே ஆள் வெவ்வேறு நபர்களாக ஒரே சமயத்தில் பிறந்துவிடுகிறாரா...?

மூச்சுத் திணறத் திணற உற்பத்தியான கேள்விகளின் தடத்தில் சென்றுகொண்டேயிருந்த வயிரவன். ஏதோ ஒரு முச்சந்தியில் பாதை தவறி, வந்த வழியும் மறந்து, செல்லுமிடம் பற்றிய உத்தேசமும் மறந்து, திகைப்புக்குள்ளும் உறக்கத்துக்குள்ளும் மூழ்கிக் காணாமல் போனான் அந்த வீட்டில் தான் கழிக்கும் கடைசி இரவு அது என்பதை அறியாமலே.

மறுநாள், நல்ல தண்ணி ஊருணியின் தெற்குக் கரையிலுள்ள நந்தவனம் சென்று சாங்கியங்களை முடித்துவிட்டு வீடு கிளம்பும்போது

மத்தியானம் கனத்திருந்தது. உடம்புச் சூட்டுக்கும் வெய்யிலுக்கும் இடுப்புத் துணி துளி ஈரமில்லாமல் காய்ந்துவிட்டது.

வீட்டை நோக்கி நடக்கும்போது, கோடைச் சூரியனை மேகம் மறைத்து உஷ்ணம் சற்று மங்கியிருந்தது. மோடம் போட்டது மாதிரி ஒரு அசட்டு வெளிச்சம். சட்டை போடாத உடம்பில் வியர்வை பொங்கி வழிந்தோடியது. புதுசாகப் போட்டிருந்த பூணூல் முதுகில் ஒட்டி உறுத்தியது. தலை குளித்துவிட்டுச் சீவாமல் பரட்டையாய் விட்டிருந்த தலையைக் கோதினான். ரோமப் புதருக்குள் ஓரிரு அட்சதை அரிசிகள் தட்டுப்பட்டன.

வாசல்படியில் உண்ணாமலை உட்கார்ந்து கொய்யாப்பழம் தின்றுகொண்டிருந்தாள். ரஞ்சிதம் ஆச்சியைப் போலவே, வலது உள்ளங்கை¬யில் பிடித்த கொய்யாத் துண்டின் விதைகளைக் கட்டை விரலால் நெம்பி உதறிவிட்டு, சதையை மட்டும் கவ்வி மென்றுகொண்டிருந்தாள். இடது கை பின்னந்தலையைச் சொறிந்துகொண்டிருந்தது.

அது உண்ணாமலை அல்ல. ரஞ்சிதம் ஆச்சியேதான்.

அந்த ஒரு காட்சி போதுமானதாக இருந்தது சட்டைப் பையில் இருந்த குறைந்தபட்சப் பணத்தோடும், உடுத்தியிருந்த துணியோடும், போகுமிடம் பற்றிய திட்டமெதும் இன்றியும் வயிரவன் பஸ்ஸேறுவதற்கு. இனி இந்த வீட்டில் இருந்தால், கிறுக்கே பிடித்துவிடும். அம்மாவைப் பற்றிய சந்தேகம் தீர்ப்பதற்கு உள்ளூரில் ஆள் இல்லாவிட்டால் என்ன, ஊர் உலகத்தில் எங்கேயாவது யாராவது கிடைக்காமலா போவார்கள்...?

இங்கே, திதி கொடுத்துவிட்டு வந்து, படைப்புச் சமையலை வயிறு முட்டச் சாப்பிட்டு விட்டு, குட்டித்தூக்கம் போடும் உத்தேசத்தில் கண்ணயர்ந்தவர்கள் விழித்தெழும்போது மணி ஐந்துக்கும் மேல் ஆகிவிட்டது.

தெருமேயப் போயிருக்கிறது என்று அவர்கள் நினைத்த கடைக்குட்டி அந்நேரம் காரைக்குடியில் இருந்தது. அது அமர்ந்திருந்த பேருந்து, நிலையத்தைவிட்டு வெளியேறிக்கொண்டிருந்தது.

இரவு முற்றிய பின்னும் வீடு திரும்பக் காணோமே என்ற பதட்டத்துடன் தகப்பனும் தமையனும் உறவினர்களும் பதட்டமாய்க் கிளம்பிய வேளையில் வயிரவன் திருச்சியைத் தாண்டிச் சென்றுவிட்டிருந்தான்.

மறுநாள் அதிகாலையில் 'அய்யோ, அய்யோ...' என்று சுவரில்

முட்டிக்கொண்டு அழுத பாட்டனாரை மலங்க மலங்கப் பார்த்தபடி தானும் அழ ஆரம்பித்தாள் குறைத்தூக்கம் கலைந்து விழித்த உண்ணாமலை.

✠

டிசம்பர், 1968

தி ண்டுக்கல் நகருக்குச் சென்றிருக்கிறீர்களா? மையப் பேருந்து நிலையத்திலிருந்து ரயில் நிலையம் நோக்கிச் செல்லும் வழியில் நாகல் நகர் என்று ஒரு பகுதி இருக்கிறது. மதுரையிலிருந்து வரும் பேருந்துகள் பேகம்பூர் தாண்டி நகருக்குள் நுழைந்ததும், இடைவழியில் பாறைக்குளம் என்ற நிறுத்தத்தில் நிற்கும். நாகல் நகர்ப் பகுதிக்குச் செல்பவர்களுக்காகத்தான்.

நாகல் நகருக்கென்று விசேஷமான சிடுக்குகள் எதுவும் கிடையாது. எல்லாச் சிறுநகர்களிலும் முதன்முதலாக உருவான பகுதிகள் மாதிரித்தான், உள்ளே ஏகப்பட்ட தெருக்களும், ஒடுக்கமான சந்துகளும், குறுக்குச் சந்துகளும் கொண்டது. பெரும்பாலும் கைத்தறி நெசவாளர்களே வசித்த பகுதி. இப்போது எப்படி இருக்கிறதென்று தெரியவில்லை. இது சுமார் ஐம்பது வருடப் பழைய கதை.

அந்த நாட்களில் அங்கே வசித்தவர்களில் அநேகர் ஸௌராஷ்ட்ரர்கள். குஜராத்தின் ஏதோ ஒரு பகுதியிலிருந்து தமிழ்நாட்டுக்கு எதற்கு வந்தார்கள், திண்டுக்கல்லில் ஒரு பிரிவினர் குடியமர்ந்த காரணம் என்ன, அதிலும் நாகல் நகரை அவர்கள் தேர்ந்தெடுத்ததன் உட்பொருள் என்ன என்பதற்கெல்லாம் யாராவது ஆராய்ச்சியாளர்தான் பதில்சொல்ல முடியும்.

நாகல் நகரில் சேலாங்கேணி குறுக்குத்தெரு என்று ஒன்று உண்டு. அங்கே ஒரு ஒண்டுக் குடித்தனத்தில் தன் பெற்றோருக்கு இரண்டாவது குழந்தையாக மன்னாதி பிறந்தான். அன்றன்றைய சாப்பாட்டுக்கே கஷ்டப்படுகிற குடும்பம். குழந்தைகள் எல்லாருமே சோனிகள். ஒருத்தருக்காவது ஆரோக்கியமான வளர்த்தி கிடையாது. ஆனால், பேர் சூட்டுவதில் மட்டும் பரம்பரை ராஜாக்கள் மாதிரித்தான். மன்னாதிக்கு நேரே இளைய தம்பிக்குச் சக்ரவர்த்தி என்று பெயர். அக்காவுக்கு மஹாராணி என்று பெயர். இவன் மன்னாதி மன்னன். கடைசித் தங்கை கோடீஸ்வரி.

ஆனால், அந்தக் குடும்பத்தை அறிந்தவர்கள் யாரும் கேலியாக ஒரு வார்த்தை சொன்னதில்லை. தஞ்சாவூரை ஆண்ட மராட்டிய மன்னரிடம் அவர்கள் மூதாதையரில் ஒருவர் பதக்கம் பெற்ற கதை இன்னமும் சமூகத்துக்குள் புழங்கி வருகிறது. மன்னர் பட்டுச் சேலைகளில் அதீதப் பிரியம் கொண்டவராம். அதை உடுத்திக் கொள்கிற யாரிடமும்கூட அபாரமான பிரியம் உண்டுதான். பட்டமகிஷிக்கு ஒரு புடவை நெய்ய ஆசைப்பட்டார். ஒருபுறம் புலியும் மறுபுறம் அன்னப்பறவையும் இருக்க வேண்டும். 'அரசவையில் வீற்றியிருக்கும்போது புலி, அந்தப்புரத்திற்கு உடுத்தி வந்தால் அன்னப்பறவை' என்று மன்னர் விளக்கினார். இழை கோத்து நெய்யத்தான் வேண்டுமாம், படங்களை அச்சடிக்கக் கூடாது.

மன்னாதியுடைய தாத்தாவின் தாத்தா செய்து முடித்தார். ஐந்து சவரன் கொண்ட பதக்கத்தைப் பரிசாக வழங்கினார் மன்னர். வம்சம் படியிறங்கி வந்த காலங்களில் பதக்கத்தைப் போக்கி விட்டார்கள். அதைக் கோத்திருந்த சிவப்புநிறப் பட்டு நாடா மட்டும் தகப்பனாரின் ட்ரங்க்குப் பெட்டியில் மிக பத்திரமாக இருக்கிறது. இதுபோலப் பல சின்னங்களும், கதைகளும் அப்பா வைத்திருந்தார். இரவு வேளைகளில் குழந்தைகள் சூழத் தெருவில் பாய்விரித்துப் படுத்துக்கொண்டு அந்தக் கதைகளைச் சொல்லுவார். தான் பார்த்த சினிமாக் கதைகளும் சொல்லுவார்.

பொதுவாக, அந்த சமூகத்தில் சிவாஜி கணேசனின் ரசிகர்கள் அதிகம். 'இந்த சமூகத்தில் பிறந்ததால்தான் நாங்கள் இப்படிக் கஷ்டப்படுகிறோம், ஜனனத்திலேயே சாபம் வாங்கிய சமூகம் இது' என்பது அப்பாவின் அபிப்பிராயம். தம்மைப்போன்ற கெட்டிக்காரர்களைக்கொண்ட ஒரு வம்சம் போயும் போயும் இப்படியொரு சமூகத்தில் உதித்ததற்கு ஏதோ கிரகக் கோளாறுதான் காரணம் என்றும் அவருக்கு நினைப்பு உண்டு. தாம் பிறந்த சமூகத்தின் மீதான வெறுப்பைத் தீவிரமாகத் தன் ஒவ்வொரு சங்கதியிலும் வெளிப்படுத்துவார். உதாரணமாக, இவர் எம்ஜீயார் ரசிகர்.

ஆனால், அப்பா சொல்வதை முழுக்கச் சரி என்று ஏற்றுக்கொள்ள முடியாது. இவர்கள்தாம் இப்படிக் கஷ்டப்படுகிறார்கள். அப்பாவின் உடன் பிறந்த சகோதரர் கும்பகோணத்தில் இருக்கிறார். சொந்தமாக நூறு தறிகள் ஓடுகின்றன. அத்தனையும் பட்டுத்தறிகள். 'ஒரே வயிற்றில் பிறந்த இரண்டு குழந்தைகளில் ஒன்று அமோகமாக பணச் செழிப்புடனும், மற்றது அடுத்தவேளைச் சாப்பாட்டுக்கே சிங்கியடிப்பதாகவும் இருப்பதற்கு ஜாதக விசேஷம்தான் காரணம்' என்று மன்னாதியின் அம்மா அடிக்கடி சொல்வாள். 'பூர்வ ஜென்மப் பலன்' என்று அம்மாவின் அம்மா சொல்வாள் அவள் உயிருடன்

இருந்தவரை.

அவர்களெல்லாம் கவனிக்காது விட்ட, அல்லது வெளிப்படையாகப் பேசாமல் விட்ட, இரண்டு அம்சங்களையும் நாம் கணக்கில் கொள்ள வேண்டும். ஒன்று, சித்தப்பாவுக்கு இரண்டு குழந்தைகள் மாத்திரமே. இரண்டாவது, சிறுவயதில் சித்தப்பா வீட்டைவிட்டு ஓடிப்போய் விட்டார். தாய்க்குடும்பத்துடன் மீண்டும் தொடர்பை நிறுவிக்கொண்டபோது, அவருக்கு நாற்பது வயதாகியிருந்தது. கும்பகோணத்தின் ஸௌராஷ்ட்ர சமூகப் பிரமுகர்களில் ஒருவராக, குறிப்பிடத்தக்க செல்வந்தர்களில் ஒருவராக உருவெடுத்திருந்தார். சித்தி பிறவிப் பணக்காரி. சித்தப்பாவுமே கெட்டிக்காரர். வியாபாரத்தின் நெளிவு சுளிவுகள் நன்கு தெரிந்தவர்.

எங்க சமூகத்துக்காரங்க ஏகப்பட்ட பேர் வயித்திலெ அடிக்காமெயா இந்த உசரம் கிடைச்சது? இப்பிடி அநியாயமாச் சம்பாரிச்ச பணமெல்லாம் நிலைச்சு நிக்காது. வந்த சுருக்கிலெயே திரும்பிப் போயிரும்...

என்று அப்பா சொல்வார். சித்தப்பாவின் மாளிகை வீடு தரை மட்டமாகி, காரையும் செங்கல்லும் குவிந்து கிடக்கும் சிதிலக்குப்பை முன்னால் சித்தப்பாவும் அவர் குடும்பமும் நின்று தலையில் அடித்துக்கொண்டு கதறுவது மாதிரி மன்னாதிக்குள் ஒரு சித்திரம் உருவாகும். இதெல்லாம் நாளையோ நாளை மறுநாளோ நடந்தேறி விடும் என்றும் தோன்றும்.

அப்படி எதுவும் நடக்கவில்லை. சித்தப்பாவின் அந்தஸ்து மேலும் மேலும் உயர்ந்துகொண்டுதான் போனது. அடுத்தமுறை சட்டமன்றத் தேர்தலில் நிற்பதற்கான முஸ்தீபுகளில் இறங்கியிருக்கிறார் என்றும் தகவல் எட்டியது. காங்கிரஸில் ஸிண்டிக்கேட் தலைவர்களுக்கும் புதியவர்களுக்கும் நடக்கும் இழுபறியில் இவர் இந்திராகாந்தியின் தரப்பைச் சேர்ந்தவர்.

சித்தப்பா வீட்டு விசேஷங்களில் இவர்களுக்குத் தவறாமல் அழைப்பு வருவதும், இயன்றவரை குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு மன்னாதியின் பெற்றோர் கும்பகோணம் செல்வதும், வந்து போவதற்கான செலவுக்கு சித்தப்பா பணம் தருவதும் தவறாமல் நடந்தன. சித்தப்பாவின் பெண் குழந்தைகள் இருவரும் பட்டுப் பாவாடை சட்டையோடும், விதவிதமான ஆபரணங்களோடும், இவர்கள் கிட்டத்தட்டக் கந்தைகளோடும் திரிவார்கள். அம்மாவின் சிவந்த உருண்டை முகம் அவமானத்தால் மேலும் சிவந்து இருக்கும் காட்சி பஸ்ஸேறும்போதே மன்னாதிக்குள் வந்து உட்கார்ந்துகொள்ளும்.

குடும்பத்தை நீங்கி இனம் தெரியாத இடம் நோக்கி ஓடத் தொடங்கியபோதும் அதே காட்சிதான் மன்னாதியின் மனத்தில் முழுக்க நிரம்பியது.

சித்தப்பாவின் குடும்பம் பற்றிய அப்பாவின் கணிப்புக்கு எந்த ஆதாரமும் இல்லை, வெறும் மனப் புகைச்சலில் வந்து விழுந்த ஆரூடம் அது என்று புரியும் வயதாகியபோது, அவன் ஒன்பதாம் வகுப்புடன் படிப்பை நிறுத்திவிட்டு, தறிக்குழிக்குள் இறங்கியிருந்தான்.

அந்தக் காலகட்டத்தில் ஒரு புதிய செய்தி ஏற்கெனவே குடும்பத்துக்குள் பல காலம் புழங்கி வந்த செய்தியாய்க்கூட இருக்கலாம். இவன் வயதுக்கு வந்துவிட்டான் என்பதால் இவன் முன்னிலையிலும் வெளிவர ஆரம்பித்திருக்கலாம் மன்னாதியின் காதில் விழுந்தது.

சித்தப்பாவின் இரண்டு குழந்தைகளும் அவருக்குப் பிறந்தவை அல்லவாம். இரட்டைக் குழந்தைகளான அவர்களை திருமணத்துக்கு முன்பாகவே வயிற்றில் தரித்திருந்தாள் சித்தி என்றொரு தகவல். பேச்சுவாக்கில் இதையும் அப்பாதான் குறிப்பிட்டார்.

சொந்தத் தம்பியின் மீது சாபத்திற்கொப்பான வாக்கியங்களையும் அவரைக் கேவலப்படுத்தும் விதமான அவதூறுகளையும் உதிர்க்க வைத்த பணத்தின்மீது மன்னாதிக்கு மரியாதை குறையத் தொடங்கிய காலகட்டம் அதுதான். பாலகிருஷ்ணனின் தத்துவங்களுக்கு அவன் அறிமுகமான காலகட்டமும் அதுவே. 'பணத்தால் வாங்க முடியாத சமாசாரங்களும் பூமியில் இருக்கத்தான் செய்கின்றன பசி, தூக்கம், இந்த மாதிரி' என்று பாலகிருஷ்ணன் ஒருமுறை எடுத்துச் சொன்னான். 'என்னா, சிரிக்கிறே, துட்டாலெ பசியெ அடக்க முடியும், கிளப்பிவிட முடியுமா...'

மற்றபடி, பணத்தின்மீது மன்னாதிக்கு ஆழ்ந்த வெறுப்பு உண்டாவதற்கு விசேஷமான காரணம் எதுவும் சொல்ல வேண்டியதில்லை. அந்தக் காரணங்களை அவன் தினசரி வாழ்ந்து கொண்டிருந்தான்.

எங்களை மாதிரி ஏழைங்க பணத்தைப் பத்தி சவடாலாப் பேசுறதும் ஆத்தாமையாலெதாண்டா மன்னாதி. ஈர்க்குச்சி மாதிரி இருக்கிறவன், 'நானெல்லாம் யாரையும் அடிச்சுக் கிடிச்சு வய்க்க மாட்டேன்'னு கவுரவமாச் சொல்லிக்கிர்ற மாதிரித்தான்.

என்று அவனது பால்யகால நண்பனும், சக தறிக்குழிக்காரனுமான பாலகிருஷ்ணன் சொல்லிச் சிரிப்பான்.

மன்னாதி ஐந்தாவது வகுப்புப் படிக்கும்போது, அவர்கள் தெரு

முனையில் ஒரு உடற்பயிற்சிக்கூடம் திறந்தார்கள். அதுவரை இந்தத் தெரு இளைஞர்கள் அபிராமியம்மன் கோயில் அருகில் இருந்த ஒரு கூடத்தில் சென்றுதான் பயிற்சி செய்வார்கள்.

பொதுவாகவே, அந்த சமூகத்தவருக்கு உடல் உழைப்பில் குறைச்சலில்லை. நாள் முழுவதும் கைகளையும் கால்களையும் விசையாக அசைத்துக்கொண்டிருந்தால்தானே சாப்பாடு? என்றாலும், பெரும்பாலானவர்கள் உடற்பயிற்சியில் ஈடுபடுவார்கள். ஆரோக்கியம் கெட்டால் தறிக்குழியை விட்டு வெளியேற வேண்டிவரும், பிழைப்பு விழுந்துவிடும், அதனால் உடலைப் பேணுவது அவசியம் என்ற பயம் ஆழ்மனத்தில் இருந்ததோ என்னவோ.

பீம்ஸேன் பயற்சிக்கூடத்தின் உரிமையாளர் சுப்பையர். பஜனை மடத்தின் நிர்வாகியான அதே கொண்டா சுப்பையர்தான். ரோஸ் கலரிலும், பச்சைக்கலரிலுமாக வீடுவீடாய் நோட்டீஸ் கொடுத்துக்கொண்டு போனார்கள். மாதக் கட்டணம் நாலணா. மன்னாதி அப்பாவிடம் சென்று கேட்டான். அவர் கறாராக மறுத்துவிட்டார்,

நாலணாவா? எங்களுக்கு ஒருவேளைச் சாப்பாடு.

‘மறுநாளிலிருந்து நானும் வருவேன் பார்’ என்று விளையாட்டுத் தோழர்களிடம் சவால் விட்டுவிட்டு வந்திருந்தானா, அப்பா இப்படிச் சொன்னதும் மன்னாதியின் மனம் வெகுவாகச் சுருங்கிவிட்டது. உள்ளங்கைக்குள் அடங்கிவிடும் நாலணா, பெரிதாக விரிந்துகொண்டேபோய், பாறைக்குளம் அளவு விஸ்தீரணமுள்ளதாகத் தோன்றியது.

பஜனைமடத்தில் மாட்டியிருக்கும் படத்திலுள்ள கிருஷ்ணர் படம் நினைவுவந்தது. நல்லவர்களை ஒழிப்பதற்காகவும், துஷ்டர்களைக் காப்பாற்றுவதற்காகவும் பகவான் கையில் வைத்திருப்பது வெறும் சக்கரம் இல்லை, மிகப்பெரிய நாலணா என்று கண்டுபிடித்தான்.

அதே அப்பா, ஒன்பதாவது வகுப்புக்குள் மன்னாதி நுழைந்தபோது தாமே முன்வந்து அவனை பீம்ஸேன் கழகத்துக்கு ஆனுப்புகிறேன் என்றார். அப்போது மாதக் கட்டணம் எட்டணா ஆகியிருந்தது. ஆனால் மன்னாதி சிறுவனாக இல்லை. மன்னாதிக்குள் அடங்கிக் கிடந்த ஆத்திரம் சீறிக் கிளம்பியது. வன்மமாய்த் தலையாட்டி மறுத்தான். அப்பாவும் அம்மாவும் விடவில்லை. வற்புறுத்திச் சேர்த்து விட்டார்கள்.

சித்தப்பா இவனைக் கும்பகோணத்துக்கு அனுப்பும்படி

சொல்லியிருந்தார். பட்டுத்தறியில் உட்கார்த்தி வேலை பழக்கிவிடுவதாகவும், இரண்டு வருடங்கள் தொழில் கற்றுக்கொண்டால், இவனும் ஒரு ஆள் என்று ஆகிவிடுவான் என்றும், இவனை வைத்துக் குடும்பம் நிமிர்ந்துவிடலாம் என்றும் பலவாறு எடுத்துச் சொன்னார். யோகம் மட்டுமிருந்தால், சித்தப்பாவைப் போலவே மன்னாதி லட்சாதிபதி ஆகவும் வாய்ப்பிருக்கிறது.

அப்பாவுக்கு இந்த ஆலோசனை உள்ளூறப் பிடித்திருந்திருக்கும். ஆனால், பணக்காரத் தம்பி ஏதோ தந்திரம் செய்கிறான் என்றும் சந்தேகம். ஆண் குழந்தை இல்லாதவன் என்பதால், தாங்கள் பெற்ற பிள்ளையைத் தங்களிடமிருந்து பிரிக்கப் பார்க்கிறான் தம்பி என்று அம்மாவிடம் சொன்னார். அம்மாவின் ஒன்றுவிட்ட மாமா காஞ்சிபுரத்தில் இருக்கிறார். அவரிடம் அனுப்பலாம் என்று முடிவெடுத்தார்கள்.

ஏதோ ஒரு விசேஷத்தில் சந்தித்தபோது, அந்த மாமாவிடம் தங்கள் விருப்பத்தைச் சொன்னாள் அம்மா.

சின்னப் பையன் ரொம்பக் கெச்சலா இருக்கான். கொஞ்சம் வளந்தபின்னாடி பாக்கலாம்.

என்று சொல்லிவிட்டார் அவர். புடலங்காயின் நுனியில் கல் கட்டி வளர்க்கிற மாதிரி மன்னாதியை வளர்ப்பதற்கு ஒரு உபாயமாகத்தான் மாதம் எட்டணா முதலீடு செய்ய முன்வந்தார் அப்பா.

உடற்பயிற்சிக் கூடத்தில் நுழைவதற்கே மன்னாதிக்குக் கூசியது. நாலணா கட்டணத்தில் சேர்ந்த அவனது சகாக்கள் இப்போது நிஜமாகவே பீமஸேனன்கள் ஆகியிருந்தார்கள். வெற்றுடம்போடு நிற்கும் அவர்கள் அருகில் ஈர்க்குச்சி மாதிரி நிற்பதற்கு இவனுக்கு அவமானமாக இருந்தது. ஒருவேளை, தான் ஆசைப்பட்ட நாளில் இங்கே வந்திருந்தால், சந்தோஷமாக இருந்திருக்குமோ என்னவோ.

இவர்கள் குடும்பத்தின் தத்ரூப நகல் மாதிரி இருந்த இன்னொரு குடும்பத்திலிருந்து வந்தவன்தான் பாலகிருஷ்ணன். மன்னாதி படிப்பை நிறுத்திய அதே சமயத்தில் அவனுடைய படிப்பையும் நிறுத்தினார்கள். பீம்ஸேன் கூடத்தில் சேரவந்த அதே நாளில் அவனும் வந்தான். இவனை மாதிரி நறுங்கலாத்தான் இருப்பான். அவனுக்கும் மன்னாதிக்கும் இருந்த ஒரே வித்தியாசம் பாலகிருஷ்ணனுடைய அம்மாவின் உறவினர் இருந்தது ஆரணியில்.

கர்லாக்கட்டையை எடுத்துச் சுழற்றுவது இருக்கட்டும், டம்ப்பெல்ஸை

முன்னங்கை பலத்தில் ஏந்தவே முடியவில்லை இவர்களால். முதல் நாள் பயிற்சி முடிந்து, பஜனை மடப் படியில் உட்கார்ந்து ஒரு கையால் மறு கையை அமுக்கிவிட்டுக்கொண்டிருந்தார்கள். உடம்பெங்கும் வலியும் வியர்வையும் நசநசத்திருந்தன. பாலகிருஷ்ணன் சொன்னான்.

நாங்க சாப்பிடற விதத்திலேயே பிரச்னை இருக்குடா மன்னாதி. சத்தான சாப்பாடு சாப்பிட்டாத்தான் சதை சேரும். அப்பறம் அதை இங்கே வந்து இறுக்கமாக்கலாம். நாங்க ரெண்டு வேளை சாப்பிடறதே பெரிசு. சத்துக்கு எங்கே போக?

என்று சிரித்தான். அவனிடம் மன்னாதிக்குப் பிடித்த விஷயமே அதுதான். 'இன்னும் ஐந்து நிமிஷத்தில் உன்னைத் தூக்கிலேற்றப் போகிறார்கள்' என்று அவனிடம் சொல்லிப் பாருங்கள். அப்போதும் சிரிப்பான். 'என்னடா, நான் சொன்னது விளங்கவில்லையா, அசட்டுப் பயலே, சிரிக்கிறாய்?' என்று அதட்டுங்கள், 'இருக்கட்டும்ண்ணா. அதான் இன்னும் அஞ்சு நிமிஷம் இருக்கே' என்று பதில் சொல்லிவிட்டு சிவாஜி பாடல் எதையாவது உரத்து முணுமுணுக்கத் தொடங்கிவிடுவான் 'உள்ளதைச் சொல்வேன், சொன்னதைச் செய்வேன், வேறொன்றும் தெரியாது...'

ஆனால், அவன் சொல்கிற ஒவ்வொரு விஷயமும், பிறந்தது முதலே இது சம்பந்தமாக அவன் தீர்க்கமாக யோசித்து வந்திருக்கிறான் என்று தோன்றச் செய்யும். இவர்கள் சாப்பாட்டுப் பழக்கம் பற்றி பாலகிருஷ்ணன் கூறியது முழுக்கச் சரிதான்.

முதலாவது, தினந்தோறும் மதியத்தில் ரசம் சோறு. லேசாக சீரகம் மணக்குமே தவிர, அது உப்பும் கொஞ்சம் உறைப்பும் சேர்ந்த வெந்நீர்தான். வெறும் பருக்கையை மென்று விழுங்கும் சிரமத்தைக் குறைப்பதற்காகக் கொதிக்க வைத்த திரவம். குழந்தைகளுக்கு லீவு நாளில் மட்டும்தான் மதியம் வீட்டில் சாப்பாடு. பள்ளிக்கூட நாள் என்றால் காலையில் போகும்போதே அலுமினியத் தட்டுடன்தான் போவார்கள்.

எல்லாருக்கும் காலையில் நீராகாரத்துடன் பழையது. பெரியவர்களுக்குப் பச்சை மிளகாயும், குழந்தைகளுக்கு ஊறுகாய்ப் பாக்கெட்டும். ஐந்தாம் வகுப்பு வந்தவுடனே பெரியவர்கள் பட்டியலில் சேர்த்துவிடுவார்கள். இரவில் மோர் சோறு.

அமாவாசை நாளில் மட்டும் அம்மா இட்லி அவிப்பாள். அன்றைக்குத் தேங்காய்ச் சட்டினியும் உண்டு. பொட்டுக்கடலையும் பட்டை மிளகாயும்

அதிகமாகவும், தேங்காய் குறைவாகவும் உள்ள சட்டினி. மழைக்கால அமாவாசை என்றால் அதுவும் இருக்காது. சாதாரணமாகவே ஏழைகளான இவர்கள், மழைக்காலங்களில் பஞ்சப் பராரிகள் ஆகிவிடுவார்கள். பாவு விரித்துச் சிடுக்கெடுக்கத் தெருவும் லாயக்காக இருக்காது சேறும் சகதியும் மலிந்திருக்கும். ஒழுகும் வீடுகளில் பாவுகள் நனையாமல் பாதுகாப்பதே பெரும்பாடு. தொழில் மந்தித்துவிடும். வருமானமும் சுணங்கும். சில நாட்கள் மூன்று வேளையும் நீராகாரம் சாப்பிடுகிற மாதிரி ஆகிவிடும்.

சனிக்கிழமை இரவில் மட்டும் சாப்பாடு ருசி கொள்ளும். ஆறு மணிக்கு முன்னால் பஜனை மடம் நிரம்பிவிடும். மிகச் சரியாக ஆறரை மணிக்கு கொண்டா சுப்பையரின் குரல் கணீரென்று தொடங்கும். 'அநாத நாதா தீன பந்தோ ராதே கோவிந்தா...' சுப்பையருக்கு சங்கீதக் குரல் இல்லை ஆனால் டோலக், ஜாலர், கஞ்சிரா, ஐராவதம் மாமா ஊரில் இருக்கும் நாட்களில் மிருதங்கம் இவற்றையெல்லாம் மீறி நாலு தெருவுக்குக் கேட்குமளவு உரத்த தொண்டை. 'ராõõõதே கோவிந்தா, பிருந்தாவனச் சந்த்ரா...' என்று தொடரும் குரல்களில் பஜ்ஜி ராஜப்பையர் குரல் ஓங்கித் தெரியும்.

அப்பா மிகச் சிறந்த பாடகர். குறிப்பாக, 'தில்லை அம்பல நடராஜா'வும் 'ராஜன் மஹராஜன், திருவேற்றியூர் மேவும் திருவாளர் த்யாக ... ராஜ'னும் அவர் பாடாமல் ஒரு பஜனையும் முடிந்ததில்லை 'கங்கை அணிந்தவா...' என்று அவர் எடுக்கும்போது, கேட்பவர் மனம் உருகும். தவறாமல் மன்னாதிக்கு மயிர்க்கூச்சலெடுக்கும். அதியற்புதமான குரல்.

பஜனை முடிந்தபிறகு, வந்திருக்கும் அத்தனை பேருக்கும் பொங்கலும், சுண்டலும் விநியோகமாகும். நெய் மணக்கும் பொங்கலும், பெருங்காயம் தூக்கலாக உள்ள சுண்டலும். ராதா கல்யாண மகோற்சவம் நடக்கும் போதும் சரி, கொண்டா சுப்பையரின் இல்லத்திலோ, அல்லது வசதி படைத்தவர்கள் வேறு யாருடைய வீட்டிலோ விசேஷம் ஏதாவது வந்துபோனது என்றாலும் சரி, அந்தச் சனிக்கிழமை வடை பாயசத்தோடு இலைபோட்டுச் சாப்பாடு நடக்கும்.

கடைசிப் பந்தி முடிய சில நாள் பத்தரை பதினொன்றுகூட ஆகிவிடும். அன்று மன்னாதியின் குடும்பம் நேரே வீடு திரும்ப வேண்டியதாகிவிடும். சுண்டல் நாட்களில், எல்லாருமாக இரண்டாவது ஆட்டம் சினிமாவுக்குப் போவார்கள்.

சிறு வயதில், பாதி பஜனை நடக்கும்போதே தாயாரின் மடியில் படுத்து உறங்கிவிடுவான் மன்னாதி. காலையில் எழுந்தவுடன் அவள் தனக்குப்

பொங்கலும் சுண்டலும் தரவில்லை என்று ஆர்ப்பாட்டம் செய்து அழுவான். பாடுகிறவர்களின் தாகசாந்திக்காக இடையில் விநியோகமான பானகத்தைக்கூட அப்பா இவனுக்குத்தான் குடிக்கக் கொடுத்தார் என்று அம்மா சமாதானம் சொல்வாள். அடங்க மாட்டான். இறுதியில், அம்மா கைக்கண்ணாடியை எடுத்து இவன் முகத்துக்கு நேரெ காட்டுவாள், மேலுதட்டின் மேல்புறமும் பக்கங்களிலும் பொங்கல் மிச்சங்கள் பொருக்குத் தட்டிக் காய்ந்திருக்கும். இவன் அழுகை அடங்கியவுடன் அக்கா கைகொட்டிப் பாடுவாள்.

அழுத பிள்ளே சிரிச்சுதாம்

கழுதப் பாலெக் குடிச்சுதாம்...

இவ்வளவு ரம்மியமான பஜனையும் ஒரு காரணம், மன்னாதிக்குப் பணத்தின்மீது வெறுப்பு உண்டானதற்கு.

ஒரு சனிக்கிழமை இலைபோட்டுச் சாப்பாடு. சுவர் மூலையில் பிரமாதமான இடம் பிடித்து உட்கார்ந்திருந்தான். பட்சணங்கள் பரிமாறும்போது இடதுகையால் வாங்கி வீட்டுக்குக் கொண்டுபோக பத்திரப்படுத்துவதற்கு வசதியாக இடதுபக்கமும் சுவர். இலையில் தண்ணீர் தெளித்து சுத்தமாக்கியாகிவிட்டது. கொண்டா சுப்பையரின் சம்சாரம் ஒரு சிறுவனைக் கூட்டி வந்தது. அவன் பட்டுச் சட்டை போட்டிருந்தான். மோதிரமெல்லாம்கூடப் போட்டிருந்தான்.

மன்னாதி, தங்கமில்லே, கொஞ்சம் எந்திரிச்சுக்கோ. தம்பி, அளுவுறான் பாரு. அடுத்த பந்தீலே மாமியே கொண்ணாந்து ஒன்னை ஒக்காத்திவுடுறேன்.

என்று சொல்லிக்கொண்டே, இவனது இடது அக்குளில் கை சொருகி எழுப்பிவிட்டுவிட்டது. அடுத்த பந்தியில் உட்கார்ந்து சாப்பிடாமல் வீடு திரும்ப முடியாது. அங்கே சோற்றுப்பானை காலியாக இருக்கும். வெளியே காத்துக்கொண்டு உட்கார்ந்திருந்த மன்னாதியின் பசியை உள்ளேயிருந்த வந்த பதார்த்தங்களின் நறுமணம் உக்கிரமாகக் கிளப்பிவிட்டது.

அடுத்த பந்தி ஆரம்பிக்கும்போது, காத்திருந்தவர்கள் பாய்ந்தார்கள். சுப்பையரின் சம்சாரம் மன்னாதியை மறந்து போயிருந்தாள். அவள் வந்து தன்னைக் கூட்டிப் போவாள் என்று காத்திருந்த மன்னாதியை அக்கா வந்து உலுக்கினாள்.

உள்ளெ வாடா தம்பி, நான் ஒனக்கு எடம் போட்டிருக்கேன்.

அன்று தின்ற மைசூர்ப்பாகுபோல கசப்பான ஒரு பண்டத்தை அதற்கப்புறம் என்றுமே தன் வாழ்நாளில் தின்றதில்லை மன்னாதி.

மறு சனிக்கிழமை எல்லாரும் பஜனைக்குக் கிளம்பியபோது, 'வர மாட்டேன்' என்று மறுத்தான். யாருடைய வற்புறுத்தலுக்கும் மசியாமல் விறைப்பாக நின்றவனின் தோளில் கைபோட்டு அப்பா நகர்த்திப் போனார். வாசலில் தனியாக நின்று, என்ன பிரச்னை என்று விசாரித்தார்.

முந்தைய சனிக்கிழமைக் கதையை விஸ்தாரமாகச் சொல்லி... இடையில் நாலைந்து தடவை கண்களைத் துடைத்துக் கொள்ளவும் எச்சில் முழுங்கவும் வேண்டி வந்தது முடிக்கும்போது,

நமக்கு அங்கெ வரவே பிடிக்கல்லேப்பா.

என்று விசும்பினான்.

பகவான் பிரசாதமில்லையா, அப்பிடியெல்லாம் சொல்லக்கூடாது தம்பு.

மன்னாதி விறைப்புக் குறையாமல் நின்றான். அப்பா இவன் காதருகில் குனிந்தார்.

மன்னாதி, நம்பளுக்கு மட்டும் அங்கே போறதுக்குப் பிடிச்சிருக்குன்னா நினைக்கிறே? எங்களுக்கு ஒருவேளைச் சாப்பாடு கிடைக்குதால்லியா? இல்லாட்டி, நெய்க்கும், பருப்புக்கும் ருசிக்கும் நாங்க எங்கே போறது?

வாரந்தவறாத பக்தியின் இன்னொரு பரிமாணம் மன்னாதிக்குப் புரிந்த தருணம் அது. அப்பா உடம்போடு சேர்த்து அணைத்து இறுக்கிக்கொண்டார்.

நீ பெரியவனாயி, எங்க ரெங்கஸாமி மாதிரிப் பெரிய பணக்காரனாயிட்டா, ஊரையே ஒக்காத்தி வெச்சு நாங்க சாப்பாடு போடமாட்டமா...?

ரங்கசாமிச் சித்தப்பாவை மதித்து ஒரு வாக்கியம் அப்பா பேசிய ஒரே சந்தர்ப்பம் அதுதான். சித்தப்பா மாதிரி ஒருநாளும் ஆகக்கூடாது என்ற வைராக்கியம் மன்னாதிக்குள் விழுந்த சந்தர்ப்பம். சாப்பாடு சம்பந்தமாக உருவான அவமான உணர்ச்சி கடப்பாறைபோலத் தொண்டைக்குள் இறங்கி நெஞ்சில் சொருகியது. இதையெல்லாம் ஒரு விஷயமாகவே கொள்ள வேண்டியதில்லை என்ற விவேகமெல்லாம் அறியாத வயது. என்ன, பின்னர் வாழ்நாள் முழுவதும் தனக்கான சாப்பாட்டைத் தன் கையாலேயே சமைத்துக்கொள்ளவிருக்கிறோம் என்பதும் அப்போது

தெரியாது.

அதே சந்தர்ப்பத்தில் இன்னொரு சந்தேகமும் ஆழமாக விழுந்தது. ஒரே தாய் வயிற்றில், ஒரே காலகட்டத்தில் பிறந்த குழந்தைகளில் ஒன்று மட்டும் அமோகமாகவும், மற்றது தரைமட்டமாகவும் வாழ நேர்ந்தது எதனாலே? மிக மிக ஆதாரமான ஏதோவொரு காரணம் இருக்கத்தான் வேண்டும். அதைத் தெரிந்துகொள்ள ஆவல் உண்டானது. தெரிந்துகொண்டு என்ன செய்யப்போகிறோம் என்று மன்னாதிக்கு அப்போதும் தெரியாது, இப்போதும் தெரியாது. ஆனால் ஆவல் மட்டும் வெகு காலம் கனன்றுகொண்டே இருந்தது.

இன்னும் அழுத்தமான வேறொரு சந்தேகம், ரங்கசாமிச் சித்தப்பாவும் கொண்டா சுப்பையரும் ஒரே மாதிரிப் பணக்காரர்கள்தானே, அப்பாவுக்கு சுப்பையருடன் ஒத்துப் போகிறது. சித்தப்பாவை மட்டும் கரிக்கிறாரே, ஏன்? நாலுவருஷம் கழித்து, குடும்பத்தைவிட்டு ஓடிவந்தும் சில வருஷங்களுக்கு இதெல்லாம் புரியாமல்தான் இருந்தது...

ஞா யிற்றுக்கிழமை விடிகாலையில் வீட்டைவிட்டுப் புறப்படத் திட்டமிட்டிருந்தான்.

குடும்பத்தின் இரண்டாவது குழந்தை மன்னாதி என்று முன்னமே சொல்லியாயிற்று, இல்லையா... மூத்த சகோதரி ஒருத்தியும், மன்னாதிக்குக் கீழே மூன்று பேரும் என நாலு பெண் குழந்தைகளும் இரண்டு தம்பிகளும் கொண்ட குடும்பம். அக்காவுக்குத் திருமணப் பேச்சு ஆரம்பித்திருந்த சமயம் அது.

சாதாரணமாக, எளிய முறையில், கல்யாணத்தை நடத்தும் உத்தேசம் யாருக்கும் இல்லை என்பது மன்னாதிக்கு அதிர்ச்சியாக இருந்தது. திருமணம் சம்பந்தமான செலவுகளைப் பற்றி மூத்தவர்கள் பேசும்போது அக்காவின் முகம் வெகுவாக மலரத் தொடங்கும். அதே விகிதத்தில் மன்னாதியின் மனம் கூம்பிக்கொண்டே போகும். செலவினங்களின் பட்டியலில், அவற்றின் வீச்சில், அப்பாவின் ட்ரங்க்குப் பெட்டிக்குள் இருந்த பட்டு நாடாவின் சிவப்பு நிறம் அழுத்தமாகப் பதிந்து கிடந்தது. அதைவிடவும், சித்தப்பாவின் முகம் பின்திரையாக இருந்ததைப் பின்னாட்களில் பார்க்க முடிந்தது மன்னாதியால்.

அக்காவையும் தங்கைகளையும் 'கரையேற்றுவ'தற்காக அப்படித்தான் தகப்பனார் அடிக்கடி சொல்வார் அப்பா வாங்கவிருக்கிற கடன்கள் நிச்சயம் அவர் காலத்துக்குள் தீராது. மன்னாதியின் தலையில் வந்து விடியும். அவற்றை அடைப்பதற்குள் தான் தறிக்குழிக்குள்ளேயே

சமாதியாகிவிடுவோம் என்று தோன்றியது.

தூங்கும்போதும், விழித்திருக்கும்போதும் ரூபாய் நோட்டுகளைத் தவிர மனத்தில் வேறு காட்சிகளே இல்லாத மாதிரி ஆனது.

இதற்கிடையில், தம்பியிடம் பண உதவி கேட்டு அப்பா தபால் போட்டார். மூன்றாம் பேருக்குத் தெரியாமல் இருக்க வேண்டும் என்பதற்காக மெனக்கெட்டு இன்லாண்ட் லெட்டரில் எழுதினார். நாலாவது நாளே பதில் வந்தது போஸ்ட் கார்டில், ரத்தினச் சுருக்கமான கடிதம்.

அண்ணாவுக்கு,

நமஸ்காரம். வீட்டில் யாவரும் ஸௌக்கியமா?

நாம்ப எல்லாருக்கும் சஹாயம் செய்துகொண்டேயிருந்தால், நம்பளுக்கு சஹாயம் செய்ய யார் இருக்கிறார்கள்?

அவரவர் கஷ்டம் அவரவருக்கு. என்னை எதிர்பார்த்து செலவைப் பெருக்கிக்கொள்ள வேண்டாம்.

அன்புடன்,
ரஸ்தஸமி.

சித்தப்பாவுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. குழந்தைகள் இருவரும் இங்லீஷ் படிப்புப் படித்தவர்கள். வாக்கியத்துக்கு இரண்டு பிழைகளுடன் எழுதப்பட்ட போஸ்ட் கார்டைக் கொடுத்தபோது தபால்காரர் முகத்தில் லேசான கேலி இருந்ததாகப் பிற்பாடு அப்பா கண்டுபிடித்துச் சொன்னார். நாலே வரிகள் கொண்ட அந்தக் கடுதாசியை வெகுநேரம் உன்னிப்பாகப் படித்துவிட்டு அம்மாவிடம் கொடுத்தார்.

அம்மாவுக்கு எழுத்துக் கூட்டிப் படிக்கத் தெரியும். 'உஷா மாய்' என்ற பெயரை நிறுத்தி நிதானமாக 'உஸா மரய்' என்று கையெழுத்துப் போடுவாள். கடுதாசியின் விஷயத்தை சீக்கிரமாகத் தெரிந்துகொள்ளும் ஆவல் போல, போஸ்ட் கார்டை மன்னாதியிடம் நீட்டினாள். இவனும் பெரிய ஆளாகிவிட்டானே, குடும்பத்தில்? மன்னாதி அக்காவிடம் தந்தான். அவள் கண்களில் குபுக்கென்று நீர் கோத்தது. அப்பாவிடம் கொடுத்தாள். வட்டம் பூர்த்தியாகிவிட்டது. வன்மம் நிரம்பிய குரலில் சொன்னார் அப்பா:

கலங்காதெ மஹா. அவனெ நம்பியா ஒன்னெப் பெத்தது? ப்ரபு

குடும்பக் கல்யாணம்னா என்னான்னு இவன்களுக்குக் காட்டிப்புட்டுத்தான் அடுத்த வேலெ. நீ அழாதெ கண்ணு...

தபால் அட்டையைச் சுக்குநூறாகக் கிழித்தார். முகம் கடுமையாகக் கன்றிச் சிவந்திருந்தது. கை நிறைய இருந்த காகிதக் குப்பையில் காறித் துப்பிவிட்டுக் காற்றில் வீசினார்.

தொடர்ந்து அப்பாவும் அம்மாவும் மாறிமாறிச் சித்தப்பாவின் குடும்பத்தை சபிக்கத் தொடங்கினார்கள். ஒரு அரைமணிநேரம் போலத் திட்டித் தீர்த்தபிறகு, பேச்சு சாவகாசமடைந்தது. நாலு தெரு தள்ளி உள்ள மைதானத்தில் ஒரு டூரிங் டாக்கீஸ் உண்டு. சனிக்கிழமைகளில் பஜனை மடத்துக்கு அடுத்தபடியாக குடும்பத்துக்கு மிகப்பெரிய ஆறுதலாய் இருந்து வந்த இடம். 'கூண்டுக்கிளி' போட்டிருந்தான். இரண்டாம் ஆட்டம் போவது என்று தீர்மானம் எடுத்தவுடன் சபை நிம்மதியாகக் கலைந்தது.

மன்னாதி படத்துக்கு வரவில்லை என்று தெரிவித்தான். ஆளற்ற வீட்டில், சர்க்கரைப் பொங்கலின் அவமானகரமான நெய்யும் பச்சைக் கற்பூரமும் நெஞ்சுவரை எதிர்த்து எதிர்த்து வரப் பொருமும் வயிற்றுடன் மோட்டுவளையைப் பார்த்துக்கொண்டு படுத்திருந்தபோது, மறுநாள் அதிகாலையில் வெளியேறுவது என்று முடிவெடுத்தான்.

வீட்டைத் துழாவத் தொடங்கினான். சுவாமி உண்டியலாகப் பயன்பட்ட தகர டப்பாவில் இருபத்திச் சொச்சம் ரூபாய் சில்லறைகள் கிடந்தன. பத்து ரூபாய் தனக்கு. மீதி குடும்பத்துக்கு. எப்படியும் இரண்டு மூன்று நாள் அல்லாடுவார்கள். சாப்பாட்டுக்கு உதவட்டும், பாவம்.

வ ரிசையாகப் படுத்திருந்தவர்கள்மீது மிதித்துவிடாமல் ஜாக்கிரதையாக நடந்து வெளியேறினான். நேரம் இரண்டு மணியைத் தாண்டியிருக்கலாம். படம் முடிந்து அவர்கள் வந்து படுத்து முக்கால் அல்லது ஒரு மணிநேரம் இருக்கும்.

இரண்டு அறைகள் மட்டும் கொண்ட வீடு. வாசல் கதவின் உள்த் தாழ்ப்பாளை வெளியிலிருந்து திறக்க இயலாதபடி கம்பிவலை அடித்திருக்கும். ஆகவே, வெளியிலிருந்து பூட்டவும் முடியாது. தாழிடாவிட்டாலும் தவறில்லை. திருட வருகிறவன் எடுத்துச் செல்ல எதுவும் இல்லாத வீடுதானே.

தெருவில் இறங்கி நடந்தான். வெறிச்சோடிக் கிடந்த தெருவில் இருட்டு திடவஸ்து மாதிரி கனத்துக் கிடந்தது. குப்பைத் தொட்டியருகில் படுத்திருந்த நாய் ஒன்று எழுந்து வேகமாக ஓடி வந்தது. மன்னாதியின்

முன்னங்காலை மோந்து பார்த்துவிட்டுப் பழைய இடத்துக்கு ஓடிப் படுத்துக்கொண்டது.

கோபால்ராமின் வீட்டைத் தாண்டும்போது, அவர்கள் போர்ஷனின் விளக்கு அழுது வடிவதையும், தறியின் கடக் சிர்ர்ர் கடக் என்ற ஒலி தாளம் தவறாது தொடர்ந்து கேட்பதையும் கவனித்தவாறு கடந்தான். ஒரு நிமிஷம் தறி ஒலி நின்று கோபால்ராம் இருமும் சப்தம் கேட்டது.

நெட்டுக்குத்தாக நடக்கும் பல்லிமாதிரித் தக்கையாக இருப்பார் கோபால்ராம். அவருக்குக் காசநோய் தொற்றியிருப்பதாக அம்மா அடிக்கடி சந்தேகம் தெரிவிப்பாள், அப்பாவிடம். கோபால்ராமின் குடும்பத்தில் அத்தனைபேருக்குமே ஏதாவது ஒரு தீராத வியாதி இருக்கிற மாதிரித்தான் உடல் அமைப்பு.

பூமியைவிட்டு நீங்குவதற்குள் போதுமான பணம் குடும்பத்துக்குச் சேர்த்துவைத்து விடவேண்டும் என்கிற ரகசிய முனைப்பு கோபால்ராம் இரவு பகலாக உழைப்பதில் வெளிப்படையாகத் தெரியும். இப்படிச் சம்பாதிக்கிற காசு சேரவும் செய்யாது. பாறைக்குளத்தில் இருக்கும் டாக்டர் பரமேஸ்வரன் ஆர் எம் ப்பி யிடம் வாரம் ஒருதடவையாவது போய்த் தட்சணை வைத்துவிட்டு வருவார்கள். கோபால்ராமின் குடும்பமும் பெரியது, இவர்களுடையது மாதிரி. குஞ்சும் குளுவானுமாக ஏகப்பட்ட குழந்தைகள் அவருக்கு.

இந்த சமூகத்தின், இந்தப் பகுதியின், இந்தத் தெருவின் முன்னுதாரணம் கோபால்ராம்தான் என்று மன்னாதிக்குத் தோன்றியது. இன்னொரு கோபால்ராம் ஆகிவிடாமல் தப்பிப்பதற்காகத்தான் வீட்டைவிட்டு இறங்கியிருக்கிறோம் என்று சமாதானமும் தோன்றியது. அபூர்வமான ஆறுதல் மனம் முழுக்க நிரம்பியது.

தெருவைவிட்டு வெளியேறிப் பேருந்துச் சாலையில் அடியெடுத்து வைத்தபோது, குளிர் அதிகரித்திருந்தமாதிரிப் பட்டது. எலும்புவரை நடுக்கும் குளிர். பத்துப் பதினைந்தடிக்குமேல் பார்வை நீள முடியாதபடி மஞ்சு இறங்கிக் கவிந்திருக்கிறது. ஒரு துண்டு எடுத்துத் தலைப்பாகைக் கட்டிக்கொண்டு வராமல் போனோமே என்று ஆதங்கப்பட்டான் மன்னாதி. ஆனால், நடையின் வேகம் மற்றும் மனத்தின் படபடப்பு இவற்றின் காரணமாக, சமாளிக்கக்கூடிய அளவில்தான் குளிர் தைக்கிறது என்றும் தோன்றியது.

நாகல் நகரின் மறுகோடியில் அவலச் சத்தத்துடன் ஒரு ரயில் புறப்படும் கூவல் கேட்டது. இரண்டரை மணி சுமாருக்கு தெற்கே போகும்

வண்டியொன்று நின்று செல்லும். ரயிலடிக்குப் போகலாமா என்று ஒரு கணம் யோசித்தான். ஏனோ தயக்கமாகவும் இருந்தது. வீட்டைவிட்டு ஓடுவது என்று தீர்மானித்தானே தவிர, எங்கே செல்வது எப்படிச் செல்வது என்று முன்னமே முடிவுசெய்துகொள்ளாத முட்டாள்தனத்தை நொந்துகொண்டான்.

சாலை விளக்குகள் விரட்டிய இடம் தவிர்த்து பிற பகுதிகளில் இருட்டு தீர்க்கமாக அமர்ந்திருந்தது. படுத்திருந்த நாலைந்து தெருநாய்களில் ஓரிரண்டு தலைதூக்கிப் பார்த்துவிட்டு, மீண்டும் கவிழ்ந்துகொண்டன. நாய்கள் தூங்கும் நேரம் என்ற ஒன்று உண்டாம். தொழில்முறைத் திருடர்கள் அந்த வேளையில்தான் களம் இறங்குவார்களாம். பாலகிருஷ்ணன் ஒருமுறை சொல்லியிருக்கிறான். இந்த நாய்களெல்லாம் தூக்கச் சடைவில் இருக்கிறதோ என்னமோ. அல்லது, இவன் உடம்பிலிருந்து கிளம்பிய வியர்வை வீச்சத்தில் பாதகமான அம்சம் எதுவும் தென்படாமல் இருந்திருக்கலாம்.

காற்றில் அவ்வளவு குளிர் நிரம்பியிருந்தாலும், மன்னாதிக்கு நன்றாக வியர்த்திருந்தது. நல்ல நடைப்பழக்கம் உள்ளவன்தான், என்றாலும் முழங்கால் முட்டியில் லேசான நோவு இருந்தது. மாற்றுத் துணியாக ஒரே ஒரு டிரவுசரும் சட்டையும் எடுத்து வைத்துக்கொண்டிருந்த துணிப்பை பாறாங்கல் மாதிரிக் கனத்தது. பதற்றம்தான் காரணம் என்று நினைத்துக்கொண்டான். வீட்டிலிருந்து கால் மணி நேரம் நடந்திருப்போமா. ஒரு கணம் நின்றான்.

மதுரை ரோட்டில் நடந்தே தொடரலாமா, பஸ் ஸ்டாண்டுப் பக்கம் சென்று ஒட்டன்சத்திரம் பழனி அல்லது திருச்சி, மதறாஸ் என்ற போகலாமா என்று சிறு குழப்பம். ம்ஹூம். பஸ்ஸேறி விரைவதுதான் நிஜமாகவே தப்பிக்கும் வழி. பஸ் ஸ்டாண்டை நோக்கி இன்னும் வேகமாக நடையை எட்டிப் போட்டான்...

...பு றப்படத் தயாராக உறுமிக்கொண்டிருந்தது ஒரு பஸ். நெற்றியில் சேலம் என்று எழுதியிருந்தது. பயணிகள் அதிகமில்லை. ஜன்னலோர இருக்கையே கிடைத்தது. இருக்கையில் சாய்ந்து உட்கார்ந்தவுடன், வீட்டிலிருந்து கிளம்பும்போது இருந்ததைவிடப் பலமடங்கு அதிகரித்தது படபடப்பு. பஸ்ஸுக்குள் சிதறலாக அங்கங்கே உட்கார்ந்திருந்த பயணிகளும், பஸ்ஸுக்கு வெளியில் நின்றிருந்தவர்களும் ஒரே குறியாகத் தன்னையே உறுத்துப் பார்க்கிற மாதிரி பிரமை தட்டியது மன்னாதிக்கு.

அதோ, பஸ் ஸ்டாண்டை விட்டு நடந்து வெளியேறுகிறாரே, அவர்

நாகல் நகர்க்காரரோ? இவனை சேலம் போகும் பஸ்ஸில் பார்த்ததாக வீட்டில் கோள்மூட்டுதற்காகத்தான் அவ்வளவு வேகமாகப் போகிறாரோ? குவளைத் தண்ணீரைத் தலைவழியாக ஊற்றின மாதிரிப் பொல்லென்று வியர்த்துவிட்டது. ஐயோ, வீட்டு ஜனங்கள் பஸ் ஸ்டாண்டுக்கு ஓடி வருவதற்குள் இந்த பஸ் புறப்பட்டுவிட்டால் தேவலையே...

நல்லவேளை, பஸ் கிளம்பிவிட்டது. மெயின்ரோட்டில் ஏறி வேகமெடுத்தது. மன்னாதியின் உள்ளே துரிதமாக ஓடிக்கொண்டிருந்த கடிகாரத்தின் வேகம் மட்டுப்பட்டது. குளிர் காற்று படு வேகமாக முகத்தில் அறைந்தபோது கொஞ்சம் கொஞ்சமாக சமனப்பட்டுக் கொண்டே வந்தான். ஏதோ ஒரு கட்டத்தில் தன்னையுமறியாமல் தூங்கியிருப்பான்போல.

விழிப்புத் தட்டியபோது பஸ் அப்போதுதான் நின்று என்ஜின் அணையும் உதறலை உணர்ந்தான். பலபலவென்று விடிந்துவிட்டது. கழிவறையை ஒட்டிய குழாயில் வாய்கொப்புளித்து முகம் அலம்பிக் கொண்டான். (‘புது ஊர்லெ போய் இறங்கினவொடனே நாங்களும் புது ஆள் ஆயிர்றோம் இல்லியா!’) பஸ்நிலையப் பரபரப்பின் விளிம்பைத் தாண்டி, இலக்கில்லாமல் நடந்து சென்றான். ஆளரவம் குறைவாக இருந்த ஒரு பகுதிக்கு வந்து சேர்ந்தான்.

பஸ்கள் கார்களின் உதிரிப் பாகங்களும் ரப்பர்ப் பொருட்களும் ஆணிகள் போல்ட்டுகள் மாதிரி இரும்புத் துண்டுகளும் பரவலாகச் சிதறிக்கிடந்த பகுதி அது. எல்லாவற்றின் மேலும், தரையின் புழுதியிலும்கூட, அழுக்கும் பயன்படுத்தப்பட்ட கிரீஸின் கருமையும் படிந்திருந்தன. பெரும்பாலான கடைகள் அடைத்துக் கிடந்தன. ராத்திரியின் மிச்சம் மாதிரிக் கறுப்பாக ஓடிக்கொண்டிருந்த (‘கிரீஸ் நதிங்க அது!’) சாக்கடைக் கால்வாய்மீது அமைந்த குட்டிப் பாலத்தைக் கடந்தான்.

தனக்குத்தானே ஏதோ கரகரத்துக்கொண்டிருந்த வால்வுரேடியோ பிதற்றும் டீக்கடை முன்னால் நின்றான். வாசலில் கிடந்த முக்காலியில் ஒரு கிழவர் உட்கார்ந்து பேப்பர் படித்துக்கொண்டிருந்தார். வாசலில் டீக்கடை. பின்னால் சிறு ஓட்டல். நாலைந்து பெஞ்சுகளும் மேஜைகளும் கிடந்த சற்றுப் பெரிய அறை.

ஈரத்துணியால் சாப்பாட்டு மேஜைகளைத் துடைத்துக் கொண்டிருந்தான் ஒரு சிறுவன். இவன் வயதுதான் இருக்கும். கீழே தரையில் உட்கார்ந்து வாழையிலைகளை அளவாக வெட்டிக்கொண்டிருந்தான் இன்னொரு

பையன். இருவருமே மன்னாதி மாதிரித்தான், நல்ல சிவப்பு நிறம்.

தனது வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் வேறு யாரோ, அல்லது வேறு ஏதோ தீர்மானித்தபடிதான் நடக்கிறதே தவிர, தானாக முடிவெடுத்து எதையுமே செய்வதற்கில்லை என்பது அந்த நாளை நினைக்கும்போதெல்லாம் மன்னாதிக்கு உறுதிப்படும்.

திரண்ட தோள்களோடும், மொசமொசவென்று ரோமம் அடர்ந்த மார்போடும் டீ ஆற்றிக்கொண்டிருந்த ஆளைக் கவனித்தான். புசுபுசுவென்ற மீசை கன்னத்தில் எலுமிச்சபழ அளவு பருத்திருந்த பந்துகளில் சென்று முடிந்தது.

டீ சாப்புடுறியா?

என்று கரகரத்த குரலில் கேட்டார். தலையாட்டினான். கண்ணாடிக் கிளாஸை நீட்டிய முன்னங்கையில் ரோமப் புதருக்கடியில் பெரிய படம் ஒன்று பச்சை குத்தியிருந்தது. அது என்ன படம் என்று இப்போது ஞாபகமில்லை. கிளாஸை இவனிடம் கொடுத்துவிட்டு அரையிடுக்கை வறட்வறட்டென்று சொறிந்துகொண்டார்.

என்னாப்பா, இங்கேயே வேலைக்கி இருந்துக்கிர்றியா...?

மன்னாதிக்கு ஆச்சரியத்தில் புரையேறியது.

...எப்பிடித் தெரியும்னு பாக்குறியா?

பேசாமல் இருந்தான்.

மொசப் பிடிக்கிற நாயி மூஞ்சியைப் பாத்தாத் தெரியாதா?

சிரித்தார்.

...மூணுவேளை சாப்பாடு போட்டு, மாசம் கையிலே இருபது ரூவா குடுத்துருவேன். இங்கேயே தங்கிக்கிறலாம். செவ்வாக்கிளமெ மதியத்துக்கு மேலெ அரைநாள் லீவு. தீவாளி பொங்கலுக்கு துணியெடுத்துத் தந்துருவேன். என்னா சொல்றே?

தன்னுடைய பிரச்னை இவ்வளவு உடனடியாகவும், சுலபமாகவும் தீரும் என்று மன்னாதி எதிர்பார்த்திருக்கவில்லை. சம்மதமாய்த் தலையாட்டினான்.

பையை உள்ளாறே வச்சிட்டு பின்னாலே போய்க் குளி.

என்றார். டீக் கிளாஸை மேடையில் வைத்துவிட்டு நகர்ந்தான்.

இந்தாடா.

அந்தக் குரல் அடிவயிற்றைக் கலக்கியது. நின்றான்.

எச்சிக் கிளாஸைக் களுவி வச்சிட்டுப் போ.

நியாயம்தானே. அவர் முதலாளியில்லையா. மன்னாதி கழுவி வைத்ததை பாய்லர் வெந்நீரில் இன்னொரு தடவை கழுவித் தமக்கு முன்னால் வைத்துக்கொண்டார்.

பி ன்புறம் செல்லும் வழியில் ஓட்டலின் சமையலறை இருந்தது. மரத்தூள் குவியலுக்கு அப்பால் இருந்த அடுப்பில் ராட்சத இட்லிக் கொப்பரை உட்கார்ந்திருந்தது. அதன் மூடியிலிருந்து லேசாக ஆவி கசிந்துகொண்டிருந்தது. எதிரில் தோசை அடுப்பை மூட்டிக்கொண்டிருந்த ஒல்லிக்குச்சிப் பெண்மணி இவனை நிமிர்ந்து பார்த்தாள்.

இவனளவுக்கே கெச்சலான பெண்மணி. நீலநிறக் கண்ணாடி வளையல்கள் அணிந்திருந்த கைகள் இரண்டும் அட்டைக் கறுப்பு நிறத்தில் சிறு மூங்கில் குழாய் பருமன் மட்டுமே இருந்தன. அவ்வளவு சோகமான பெண் முகம் ஒன்றைத் தன் வாழ்நாளில் மன்னாதி பார்த்ததே கிடையாது தன்னுடைய அம்மாவின் முகத்தையும் உள்ளிட்டுத்தான்.

சமையறையை அடுத்து இருபுறமும் இரண்டிரண்டு அறைகளைக்கொண்ட தாழ்வாரம். அது முடியும் இடத்தில் கிணற்றடியும் துவைக்கும் கல்லும் கொண்ட சிறு வெற்றிடம். கம்பிக் கொடியில் காயப்போட்ட துணிமணிகள். அவற்றைப் பார்க்கும்போது துவைத்தவை மாதிரியே தெரியவில்லை. வெறுமனே நீரில் அலசிப் போட்ட அழுக்குத் துணிகள்.

கொல்லையில் ஜட்டியுடன் நின்று குளித்துக்கொண்டிருந்தபோது, மீசைக்கார முதலாளி அங்கே வந்தார். இவன் குளிப்பதைச் சற்றுநேரம் நிதானமாய் வேடிக்கை பார்த்தார். குவளையில் நீருடன் மன்னாதி நிமிர்ந்தபோது அருகில் வேகமாக வந்தார்.

பொட்டலம் ரொம்பப் பெரிசா இருக்கேடா.

என்று இடதுகையால் அந்த இடத்தைத் தட்டினார். மன்னாதிக்குக் கூசியது. அவருடைய சிரிப்பைப் பார்க்க பயமாக இருந்தது. காரணமே புரியாமல் கண்களில் நீர் கோத்தது. முதலாளியானால், இதற்காகவே வந்தவர் மாதிரித் திரும்பிப் போய்விட்டார்.

கொடியில் கிடந்த துண்டை எடுத்துத் துவட்டிக் கொண்டிருந்தபோது, அந்தப் பெண்மணி கொல்லைப்புறம் வந்தாள்.

இவன் ஒருத்தன் நிற்பதையே உணராதவள் மாதிரி கிணற்றடியில் கிடந்த ஓரிரண்டு பாத்திரங்களை எடுத்துக்கொண்டு போனாள். அவ்வளவு சோகையான நடையையும் மன்னாதி தன் வாழ்நாளில் பார்த்தது கிடையாது.

ம தியச் சாப்பாட்டுக்குப் பிறகு கடைக்கு இடைவேளை. இரண்டு மணிநேரம் போலப் பூட்டியிருக்கும். உள்ளறையில் இருந்த கோரைப் பாயை விரித்து ஒரு தூக்கம் போட்டான். என்னென்னவோ கனவுகள் வந்து அரைகுறையாக முடிந்தன. ஒரு அரைக் கனவில் மீசைக்கார முதலாளி, கல்யாணத்துக்கு நிற்கும் இவனுடைய அக்காவின் மார்பில் தட்டி,

ஒண்ணுமே இல்லையேடி.

என்று சிரித்தார்...

அந்தப் பையன்களில் ஒருவன் வந்து எழுப்பினான். அவனுடைய வலது கன்னத்தில் வட்டமாய்க் கன்றிச் சிவந்திருந்ததைக் கவனித்தான் மன்னாதி. அந்தப் பையனின் கண்கள் இரண்டும் உள்ளடங்கிக் குழிக்குள் கிடந்தன. சீரில்லாத, மஞ்சள் பூத்த பற்கள்.

மொல்லாளி கூப்புடுறாரு.

முதலாளி நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அந்தப் பெண்மணி அவருக்குப் பின்னால் நின்றிருந்தாள். முதலாளி நிதானமாகக் கேட்டார்.

எந்தூருடா?

திண்டுக்கல்லு.

தொடர்ந்து நாலைந்து கேள்விகள். இவன் சொன்ன பதில்கள் அவர் மனத்தில் பதிந்திருக்குமா என்றே தெரியவில்லை. பதில் முடிவதற்கு முன்னால் அடுத்த கேள்வி வந்துவிடும்.

கையிலே காசு ஏதும் வச்சிருக்கியாடா?

அந்த அம்மாள் இல்லையென்று சொல்லும்படி அவசரமாய்ச் சைகை செய்தாள். மன்னாதி 'இல்லை' யென்று உண்மையைச் சொன்னான். அவர் பின்னால் தலைதிருப்பி.

தெலகோம், இந்தப் பயலெக் கூட்டிட்டுப் போயி ரெண்டு டவுசர், சட்டை வாங்கிக் குடுத்துக் கூட்டியாந்துரு.

சட்டைக்குள் கை நுழைத்து அக்குள்பையிலிருந்து இரண்டு ஐம்பது

ரூபாய்த் தாள்களைக் கொடுத்தார். பக்கத்தில் ஜன்னலில் இருந்த பர்ஸுக்குள் அதை வைத்துக்கொண்டாள் அந்த அம்மாள். வெயில் குறைந்து சாயங்காலம் நெருங்கியிருந்தது. கடையைத் திறக்கப் போனார் முதலாளி.

ஒ ருவருக்கொருவர் எதுவும் பேசிக்கொள்ளாமலே நடந்தார்கள். அந்த அம்மாளை ஓரிரு தடவைகள் பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தபோது இரண்டு முன்னங்கைகளிலும் சூட்டுத் தழும்புகள் மாதிரி ஏழெட்டு இருந்தன.

தறிக்குழிக்குள் இறங்கிய நாளிலேயே தான் பெரிய ஆண்பிள்ளையாகி விட்டதாக ஒரு நினைப்பு வந்து உட்கார்ந்திருந்தது மன்னாதிக்குள். நேற்றிரவு வீட்டைவிட்டு வெளியேற முடிவு செய்தவனும் அதே பெரிய மனிதன்தான். ஆனால், இப்போது இந்த அம்மாளுடன் நடக்கும்போது தான் மீண்டும் சிறுவன் ஆகிவிட்டமாதிரி உணர்ந்தான் மன்னாதி. வேறு தெருவுக்குள் நுழைந்ததும் அந்த அம்மாள் கேட்டாள்:

என்னா வயசுப்பா ஒனக்கு?

பதினாறு.

பார்த்தாச் சின்னப்பையன் மாதிரி இருக்கே...?

பேசாமல் நடந்தான்.

...ஐயிரு வீட்டாளுகளா?

இல்லே. சௌராஸ்ட்ர ப்ராமின்.

பட்டுணுக்காரவுளாக்கும். வீட்லெ தேடிவருவாகளா?

என்ன பதில் சொல்வது என்று திகைத்தான். தேடுவார்கள். இப்போதுகூட அழுதுகொண்டுதான் இருப்பார்கள். என்ன தடயத்தை வைத்து இந்த ஊரில் இந்தக் கடையில் வந்து கண்டுபிடிப்பார்கள்...?

காலையில் வந்திறங்கிய பஸ் ஸ்டாண்டு சமீபமாக வந்து சேர்ந்திருந்தார்கள் இருவரும்.

வேற எங்கெயாச்சும் ஓடீரு...

மன்னாதிக்குத் தூக்கிவாரிப் போட்டது. என்ன சொல்கிறாள் இந்த அம்மாள்? திரும்பி அவள் முகத்தைப் பார்த்தான்.

...இப்பிடியே ஓடீரு. இந்த ஆளு ஒன்னெச் சீரளிச்சிருவான்...

இவனுக்குப் புரியவில்லை. அந்த அம்மாளின் குரலில் இருந்த

கலக்கமும் கண்களில் இருந்த உண்மையும் ஒருவிதமான பீதியைக் கிளப்பியது.

...இப்பிடி இவன் பண்ணுற அக்குருமங்களாலதானெ என் வயித்தில வந்த புளுவெல்லாம் ஒடனெக்கொடனே உதுந்துருச்சு. நாசமாப் போறவன்...

இதைத் தனக்குச் சொல்லிக்கொள்கிற தொனியில்தான் சொன்னாள் அந்த அம்மாள். பஸ் ஸ்டாண்டுக்குள் நுழைந்திருந்தார்கள். விருத்தாசலம் என்று போட்டிருந்த பஸ்ஸுக்கருகில் மன்னாதியைக் கூட்டிக்கொண்டு போனாள். பஸ்ஸின் மறைப்புக்கு வந்தவுடன் கீழ்ப்பார்வையாகச் சுற்றும்முற்றும் பார்த்தாள். சட்டென்று தன் ரவிக்கைக்குள் கைவிட்டாள். ஐம்பது ரூபாய்த் தாளை எடுத்து இவனிடம் நீட்டினாள். பர்ஸிலிருந்து எடுக்கவில்லை அதை. தனியாக வைத்திருந்தாள் போல.

எங்கெயிருந்தாலும் நல்லா இரு. சாக்கிரதையாப் பொளைச்சுக்கோ.

இதுவரை இல்லாத விதத்தில் குரல் கம்மியது. கண்கள் மல்கியிருந்தது. தனக்கு மறுப்பதற்குச் சந்தர்ப்பமே தராமல் அவள் முடிவெடுத்து தன்னைச் செலுத்தியது ஏனோ மன்னாதிக்கு ஆறுதலாக இருந்தது. பஸ் படிக்கட்டில் ஏறும்போது, திரும்பிப் பார்த்து,

அவரு ஒங்களெச் சத்தம் போடமாட்டாராம்மா?

என்று கேட்டான்.

கெடக்கு களுதெ. இன்னம் ரெண்டு சூடு. வேறெ என்னாத்தெச் செஞ்சுருவான்? நீ நல்லா இரு தம்பீ.

என்றாள். தானும் பஸ்ஸுக்குள் ஏறி, இங்குமங்குமாக உட்கார்ந்திருந்த பிரயாணிகளை நோட்டம் பார்த்தாள். பஸ்ஸின் இடதுபக்கம் ஜன்னல் ஒன்றின் அருகில் அமர்ந்திருந்தவரைக் கொஞ்சம் ஊன்றிக் கவனித்தாள்.

வெளியில் பராக்குப் பார்த்துக்கொண்டிருந்தார் அவர். நடுவயதுக்காரர். நாற்பதுக்குப் பக்கம் இருக்கலாம். சட்டை போடாத உடம்பு. சல்லாத்துணி போன்ற மெல்லிய அங்கவஸ்திரத்தைப் போர்த்தியிருந்தார். நெற்றி முழுக்கப் படர்ந்திருந்த விபூதிப் பட்டை. அவர் அருகில் சென்று,

ஐயா, நீங்க விருத்தாசலமா போறீங்க?

என்று கேட்டாள். அவர் 'ஆமாம்' என்று தலையசைத்தார். வாசல்

படியருகில் தயங்கி நின்றுவிட்ட மன்னாதியை 'வா' என்று கையசைத்தாள். கிட்டெ சென்றதும் பெரியவரிடமிருந்து கிளம்பிய விபூதி மணம் குப்பென்று தாக்கியது. அந்த அம்மாள் அவரிடம் விநயமாகச் சொன்னாள்.

தம்பியைக் கொஞ்சம் பாத்துக்கங்க சாமி. நான் வர்றேன் ராசா. சூதானமாப் போயிட்டுவா.

என்று இவன் தோளைப் பற்றி அழுத்தி அவர் அருகில் அமர்த்தினாள். முதன்முறையாகத் தொடுகிறாள்!

ஒம் பேரென்னம்மா?

திலகம்.

அடுத்ததாகத் தன் பெயரைக் கேட்கப் போகிறார். அடடே, அந்த அம்மாளுக்கு இவன் பெயர் தெரியாதே. இல்லை, அவர் இவனைப் பொருட்படுத்திய மாதிரியே தெரியவில்லை. அவளை நோக்கி வலது உள்ளங்கையை உயர்த்திக் காட்டினார்.

நல்லாயிருப்பே நீ. எல்லாக் கஷ்டமும் விடிஞ்சுரும்.

புதியவரின் குரலில் அலாதியான கனிவு இருந்தது. சட்டென்று அவள் கண்கள் சுரந்து மினுமினுத்தன. பாவனையாக அவர் கால்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

இவனது முன்னங்கையைப் பற்றினாள். அவளுடைய உள்ளங்கை கடுமையாய் வியர்த்திருந்தது. கைபட்ட இடத்தில் சிலீரென்றது மன்னாதிக்கு. இவன் முகத்தை இருகைகளாலும் வழித்துத் தன் நெற்றிப்பொட்டுகளில் சொடுக்கிக்கொண்டாள். ஊறிய கண்ணில் முத்துக் கோத்தது. மின்னல் மாதிரித் திரும்பி இறங்கிப் போய்விட்டாள்.

அவள் போவதைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தான். உள்ளங்கையில் அவள் அழுத்திய ரூபாய்த் தாள் ஈரமாகக் கசகசத்தது.

வியர்வையின் ஈரம் இல்லை அது. பிரதிபலன் எதிர்பார்க்காத பிரியத்தின் ஈரம். மனித குலத்தையே ரட்சிக்கும் வல்லமை உண்டு அதற்கு என்று இன்றுவரை நம்புகிறார் மன்னாதி.

அதற்குப் பிறகு பல வருஷங்களுக்கு அந்த அம்மாள் மன்னாதியின் கனவுகளில் வந்து போய்க்கொண்டிருந்தாள். பின்னர் சிறுகச் சிறுக அந்த முகம் சுத்தமாக மறந்துபோய்விட்டது. அந்த ஈர்க்குச்சி முன்னங்கைகளில் இருந்த சூட்டுத் தழும்புகள் மட்டும் இன்னமும்

மறக்கவில்லை மன்னாதிக்கு.

✠

ஜூலை, 1972

நெல்லையப்பர் கோயிலுக்குள்ளிருந்து மேளச்சத்தம் வெளியேறி வந்தது. கோயில் வாசலில் நின்று செருப்பைக் கழற்றிவிட்டு ஒருமுறை இரண்டு கன்னங்களிலும் ஒத்திக்கொண்டான் குற்றாலிங்கம். மறுபடியும் செருப்பை மாட்டிக்கொண்டு நகர்ந்த மாத்திரத்தில் இருட்டுக்கடை அல்வா மணம் நாசியைத் தாக்கியது.

கடையில் வியாபாரம் சுறுசுறுப்பாக நடந்துகொண்டிருக்கிறது. பத்து இருபதுபேருக்குக் குறையாமல் நின்று வாழையிலையில் வைத்த அல்வாவை ருசித்துக்கொண்டிருந்தார்கள். அல்வா வைத்திருக்கும் எவர்சில்வர் அண்டா குற்றாலிங்கத்தின் மனக்கண் முன் எழுந்தது. அதன் முன்னால் அமர்ந்து அள்ளியள்ளித் தின்ன வேண்டும் என்று அவா பொங்கியது. வாய்நிறைய எச்சில் ஊறி கடைவாயில் ஒழுகியது.

பின்னந்தலையில் ஓங்கி அறைந்துகொண்டான். 'என்னா பொளப்பு இது, நாறப் பொளப்பு' என்று முனகிக்கொண்டான். அல்வா மணத்தைப் புறக்கணித்து விரையும் வாகனங்களையும், பாதசாரிகளையும் பார்த்தபோது அடிமனத்தில் பொறாமை பொங்கியது. 'குடுத்து வச்ச பய மக்க' என்று மீண்டும் முனகிக்கொண்டான்.

பார்வை தன்னிச்சையாக கோபுரத்தை நோக்கி உயர்ந்தது. 'அடக் கூறுகெட்ட ஆண்டவனே, ஏன் என்னை மட்டும் இப்பிடிப் படைச்சே?' என்று மொண்ணைக் கோபத்துடன் முறுமுறுத்தது மனம். சட்டென்று கண்களில் நீர் நிரம்பியது. தேர்முட்டியைக் கடந்து சுப்பையா பிள்ளை ஓட்டலைப் பார்த்து நடந்தான்.

அடிவயிற்றில் காட்டுத் தீ எழுந்து குடலையும் இரைப்பையையும் பொசுக்க ஆரம்பித்துவிட்டது. இன்னும் அரைமணிநேரம் சாப்பிடாமல் இருந்தால் பிராணன் போய்விடும். தோளில் கிடந்த சிவப்பு நிற ஈரிழைத் துண்டால் முகத்தை அழுத்தித் துடைத்துக்கொண்டான்.

தம்பீ வாரும். வருவீருன்னு அப்பா சொல்லீட்டுப் போனாரே...

என்று பாசம் பொங்க வரவேற்றார் முதலாளி. அடிக்குச்சி வைத்து வரைந்த மாதிரிக் கச்சிதமாக மூன்று கோடுகளாகத் திருநீறு பளிச்சிட்டது அவர் நெற்றியில்.

...இட்லி சொல்லீறவா?

என்றார். இவன் தலையசைத்தான். அவர் உள்பக்கம் திரும்பி,

எலே, ஆவடே, நம்ம தம்பி வந்திருக்கு. பொறவு ரெண்டு ஈடெ எடுத்துத் தனியா வச்சிரு.

என்று கூவினார். ஒரு ஈட்டுக்கு இருபத்தைந்து இட்லிகள்.

சாப்பிட்டுக்கொண்டிருந்த நாலைந்துபேர் திரும்பிப் பார்த்தார்கள். எல்லாமே புதிய முகங்கள். குற்றாலிங்கம் அவர்களையும் அவர்கள் முன்னால் கிடந்த எச்சில் இலைகளையும் வெறித்தான்.

கா ல்கள் தாமிரபரணியை நோக்கி நடந்தபோது, மனம் பின்னோக்கி விரைந்தது. ஆறாம் வகுப்புப் படிக்கும்போது இதே தேர்முட்டியில் ஒரு கூத்தாடியின் நிகழ்ச்சியைப் பார்த்த ஞாபகமும், அன்று இரவு அப்பாவிடம் பிரம்பால் வாங்கிய அடிகளும் தொடர்ந்து ஞாபகம் வந்தன.

...பள்ளிக்கூடம் விட்டு வீடு திரும்பும் வழியில் ஏதோ கூட்டம் நின்றுகொண்டிருக்கிறதே என்று இவன் தயங்கி நின்றான். மாதம் ஒருமுறை வந்து மருந்துக்கடை போடும் தாது வைத்தியரோ? அப்படியாய் இருந்தால் பெரியவர்கள் சத்தம்போட்டு விரட்டிவிடுவார்கள் குற்றாலத்தை.

சோப்பு டப்பாவில் ஆரம்பித்து டெரிலின் சட்டை பவானி ஜமக்காளம் என்று ஏலம் விடுகிறார்களோ? ஏலக்கடை என்றால், இன்னும் கொஞ்சம் இருட்டியபிறகுதானே போடுவான். காடா விளக்கு நாற்றமும் தட்டுப்படவில்லையே.

அல்லது பாம்பு கீரிச் சண்டையாய் இருக்குமோ. மை வைத்துக் கண்கட்டி வித்தை காட்டுகிறவனோ. உடுக்குச் சத்தம் கேட்கவில்லையே. ஆனால், அவர்களெல்லாம் என்றால், ஓயாமல் பேச்சுச் சத்தம் கேட்குமே. நிச்சயம் கழைக்கூத்தும் இல்லை மத்தளச் சத்தத்தைக் காணோம்.

இது வேறு ஏதோ போலிருக்கிறதே. சிலேட்டு வைத்த மஞ்சள் பையைக் கக்கத்தில் இடுக்கிக்கொண்டான். சுற்றிலும் நின்றவர்களின் இடுப்பில் தலையால் கெந்தி உள்நோக்கி நகர்ந்து முன் வரிசைக்குப் போனான்.

மனிதர்கள் நெருக்கிய வட்டத்தின் நடுவில் ஒரு முக்காலிமீது அந்த ஆள் உட்கார்ந்திருந்தான். எதையோ மென்றுகொண்டிருந்தான் ‘அடேங்கப்பா, சாப்புடுதவனையா இப்பிடி வேடிக்கெ பாக்காவொ?’

அவனைச் சுற்றிலும் தகர டப்பாக்கள். ஒரு நீள ட்யூப் லைட் கிடந்தது. எலிப்பொறி மாதிரி இருந்த சிறு கூண்டுக்குள் நாலைந்து பல்லிகளும், ஓணான்களும் இருப்பது தெரிந்தது. தரையில் அடித்த முளையில் ஒரு உடும்பு கட்டிக் கிடந்தது. பாதிவரை தண்ணீர் நிரப்பிய பெரிய கண்ணாடி சீசாவுக்குள் பச்சை நிறத்தில் ஏழெட்டுத் தவளைகள். டப்பாக்களை மறுபடியும் பார்த்தபோது குற்றாலிங்கத்தின் ஆச்சரியம் வெகுவாகக் கூடியது. ஆணிகளும் நட்டுகளும் திருகாணிகளும் இரும்பு வில்லைகளும் நிரம்பிய டப்பாக்கள்.

வித்தைக்காரன் கையில் பாதி உடைந்த குண்டுபல்பு இருந்தது. மென்றுகொண்டிருந்ததை விழுங்கிவிட்டு, பல்பை ஒரு கடி கடித்தான். அடப்பாவி. கண்ணாடியையா தின்கிறான்? அவன் பற்கள் கறமுற என்று மீண்டும் மெல்லத் தொடங்கின. குற்றாலிங்கத்துக்கு பயமாக இருந்தது. அதே சமயம் வாய் முழுக்க எச்சிலும் ஊறியது.

கறுத்த உடம்பில் வியர்வை பொங்கி வழிய வழிய அவன் தின்றுகொண்டேயிருந்தான். கிழிந்த சேலை உடுத்திய பெண்மணி ஒருத்தி கையில் தட்டுடன் கூட்டத்தை வலம் வரக் கிளம்பினாள். கூட்டம் கல்லெறிபட்டதுபோலக் கலையத் தலைப்பட்டது. வயசாளி ஒருத்தர் உரத்த குரலில் சொன்னார்:

ஏம்லே, இம்புட்டுத் தேரம் நிண்ணு வேடிக்கெ பாத்துட்டு, காசு கேக்க வாரான்னு கலையுதேளே. அவந்தானலே கண்ணாடியெத் திம்பான். அவம் பொஞ்சாதி புள்ளைக அரிசியும் பருப்புந்தானே தின்னாகணும். ஓடுதேளே. கஞ்சக்கூதிய.

என்றவாறு சட்டைப்பைக்குள் கைவிட்டார். கூட்டத்தில் இருந்த இளவட்டம் ஒருத்தன்.

பெருசு, என்னா ஓங்கிப் பேசுதேரு. வார்த்தையெ அளந்து விடும்.

என்று அதட்டினான். கூட்டத்தில் சிறு சலசலப்பு உயர்ந்தது. ஆனால், பெரியவர் சட்டைப் பையிலிருந்து எடுத்த இரண்டு ரூபாய்த்தாளை அவள் தட்டில் போட்டவுடன் அடங்கியது. தட்டில் தாராளமாகவே சில்லறைகள் சேர்ந்தன.

அன்று இரவு வீட்டில் கிடந்த பழைய மருந்து பாட்டிலை எடுத்துக்கொண்டு புறவாசலுக்குப் போனான் குற்றாலிங்கம். அதைத்

தரையில் மோதி உடைத்து ஒரு சில்லைத் தின்று பார்க்க முயன்று கொண்டிருந்தபோது அப்பா பார்த்துவிட்டார்.

ஆக்கங்கெட்ட மூதி, ஊர்ப்பட்ட வைத்தியமும் பார்த்து வடிச்சுக் கொட்டச் சம்பாரிச்சும் போடுதேன். ஏந் தலையிலே மண்ணள்ளிப் போடவா பாக்கே?

என்று ஏசியவாறு பிரம்பால் விளையாடித் தள்ளிவிட்டார். ராத்திரி அம்மாவைக் கட்டிக்கொண்டு படுத்திருந்தபோது, முதுகில் பிரம்பு வீறிய தடங்களை வருடி வருடிக் கண்ணீர் விட்டாள் அம்மா.

எ ன்னலே, குத்தாலம், ஒங்க அப்பனையும் ஆத்தாளையும் மதியம் களுகுமலெ பஸ்ட்டாண்டுலே பாத்தேன்?

'நகைக்சுவை முரசு' நல்லசிவம் தமிழய்யாவின் குரல் குறுக்கிட்டது. குற்றாலிங்கம் மீண்டான். அய்யா குளித்துவிட்டு வருகிறார். தோளில் தொங்கிய குற்றாலம் துண்டுக்கு அடியில், பழுப்பு நிறமாகிவிட்ட கோமணத்துணி கிடந்தது. நிரந்தரமாகச் சிட்டிகை கோத்த வலதுகை ஆள்காட்டி விரலும் கட்டைவிரலும். வழக்கமான அளவைவிடப் பெருத்த தலை. தள்ளுவண்டிக்காரன் விற்கிற மசிர் மிட்டாய் மாதிரி வெளுத்த தலை.

ஆமாங்கய்யா. ஒரு துட்டிக்குப் போயிருக்காவ.

நின்று பேசாமல் நடந்தான். இவரை பாம்பென்று தாண்டவும் முடியாது, பழுதையென்று மிதிக்கவும் முடியாது. தமிழில் நல்ல கெட்டிக்காரர். தமிழ்நாடு முழுவதும் போய் பட்டிமன்றம் வழக்காடு மன்றம் என்று பேசி வருகிறவர். கூட்டம் சிரிப்பதற்காகப் பேசிப் பழகியதாலோ என்னவோ, நகைச்சுவை என்ற பெயரில் குரூரமாக ஏதாவது பேசித் தொலைப்பார்.

பள்ளியிறுதி வகுப்பில், தமிழில் பள்ளியின் முதல் மாணவனாக குற்றாலம் தேறிய சந்தர்ப்பத்தில் அவர் கூறியது நினைவு வந்தது.

லே, ஒனக்கு வவுறு மட்டுந்தான் கெட்டின்னுல்லா நெனைச்சேன்? மண்டையும் கெட்டி போலருக்கே?

சுற்றி நின்றவர்கள் சிரித்தார்கள். அந்த நிமிடத்தில், தான் வாங்கிய மார்க்குகள் ஒவ்வொன்றையாக எடுத்து சூரிக்கத்திபோல அவர் வயிற்றில் சொருகிக் கொன்றுகொண்டேயிருக்க வேண்டும் என்று வெறி உண்டானது... அதைவிடவும், எட்டாம் வகுப்பில் அவர் சொன்ன உதாரணம் சதையில் முள் குத்திச் சீழ் பிடித்த ரணமாக

உறுத்திக்கொண்டிருக்கிறது.

அன்றைக்கு மணிமேகலை நடத்திக்கொண்டிருந்தார். காயசண்டிகை பற்றிச் சொன்னார். அப்போதுதான், பாம்பு நாக்கை நீட்டிக் காட்டுவதுபோல அந்த உதாரணம் வந்தது.

எலே, நம்மளே ரோட்டுலெ நடந்துபோறோம்... ரெண்டு பக்கமும் மரமா வளந்திருக்கு. ஒரு மாந்தோப்பு வருது. ஊராந் தோப்பு. காச்சுக் குலுங்குது மரமெல்லாம். ஊர்ப்பட்ட பளம். அதுல பாதி ஒதெப்பளம். சிலது ரோட்டுலெ உதுந்து கெடக்கு. நம்மல்லாம் என்னா செய்வோம்? உத்தமன்னா, உதுந்து கெடக்குற பளத்தை எடுத்து மடியிலெ கட்டிக்கிருவோம். கொஞ்சம் துணிஞ்ச கட்டெ, நம்ம ஒலகம் மாதிரின்னா, சுத்தும்முத்தும் பார்த்துட்டு மரத்துலெ ஒரு கல்லு விடுவான்... என்னலே, கல்லு விடுவீல்லா?

வகுப்பு சிரித்தது. உலகநாதன் வெட்கத்துடன் தலை குனிந்தான். அவன் வயசுக்கு, வளர்ந்த பெரியாம்பளை மாதிரி ஓங்குதாங்காக இருப்பான். மீசை வேறு தடித்திருந்தது. இதுபோலக் கொம்பு சீவிச் சீவியே அவனை முரடனாகத் தயார் செய்து வந்தார் தமிழய்யா. இவர் வட்டிக்கு விடும் பணத்தைத் தண்டல் செய்வதற்குக்கூடச் சில சமயம் அவனை அனுப்புவார் வகுப்புக்கு அன்று முழுக்க அவன் மட்டம்தான்.

நம்ம காயசண்டிகை விஷயமே வேற. இவ என்ன செய்வா? அந்த முழு மரத்தையும் சாப்பிட்டுறணும்னு ஆசெப்படுவா. ஒரு பளம் பாக்கியில்லாமெச் சாப்பிட்டுறணும். இது ஏதோ மாம்பளத்துமேல ஆசைன்னு தப்பாப் புரிஞ்சுக்கிறப் படாது. சாப்பிடுறதுமேல ஆசெ...

இதுவரை பிரச்னையில்லை. அடுத்த வாக்கியத்தில்தான் குற்றாலிங்கத்தின் வயிற்றில் நெருப்புப் பாய்ந்தது.

...நம்ம குத்தாலம் மாதிரி. இவனுக்குக் காயசண்டிகன்னு பேரு விடுவோமாலே...?

வகுப்பு பொலேரென்று சிரித்தது...

குற்றாலிங்கம் தலையை உதறிக்கொண்டான். ஆனால், அய்யாவைச் சொல்லிக் குற்றமில்லை. நான் அப்படித்தானே இருந்து வந்திருக்கிறேன். நினைவு தெரிந்த நாளாக என்னை ஆண்டுகொண்டிருப்பது பசி மட்டும்தான். ஒரு நாளில் அறுபது நாழிகையும் சாப்பிடுவதற்காகவே உண்டாக்கப்பட்டது என்பதுபோல சதா சாப்பிட்டுக்கொண்டிருக்கிறேன்.

தமிழய்யா இன்னொரு பட்டப்பெயரும் இவனுக்கு வைத்திருந்தார். விருகோதரன். மஹாபாரதத்தில் பீமனுக்கு இப்படி ஒரு பெயர் உண்டாம். ஓநாய் வயிறுடையவன் என்று அர்த்தமாம். எவ்வளவு சாப்பிட்டாலும் ஜீரணிக்கக்கூடியவன். ஆனால், வயிறு பெரிதாகப் புடைத்துத் தெரியாது. சாதாரண வயிறு மாதிரித்தான் இருக்கும்.

அந்த அளவு தாட்டியமான உடம்பு கிடையாதா, குற்றாலிங்கத்தைப் பார்க்கிறவர்களுக்கு, தீராப்பசிதான் மனித உருக்கொண்டு நடந்து போகிறது என்று தெரியாது. ஆரம்பத்தில் வீட்டிலும் இதை ஒரு விஷயமாக எடுத்துக்கொள்ளவில்லை. ஐந்து வயதுவரை தாயிடம் பால் குடித்துக்கொண்டிருந்தான். அவள் குனிந்து தரை தூர்த்துக்கொண்டே போவாள். இவன் நாய்க்குட்டி மாதிரி அண்ணாந்து இரண்டு கைகளாலும் தாயின் முலையைப் பிடித்து உறிஞ்சிக்கொண்டே போவான். பள்ளிக்கூடத்தில் போட்ட பிறகு, ரீஸஸ் இடைவேளையில் வீட்டுக்கு ஓடிவந்து அம்மாவிடம் இரண்டு மடக்கு குடித்துவிட்டு ஓடுவான்.

ஆறாவது வயதில், மூடிய கதவுக்குப் பின்னால் உட்கார்த்திச் சாப்பாடு போட ஆரம்பித்தாள். முறம் மாதிரிப் பெரிய தட்டு நிறையச் சாப்பாடு. இரண்டு மூன்று முறை தட்டை நிரப்ப வேண்டி வரும்.

வளர்ற பிள்ளெய. அப்பிடித்தான் சாப்புடும். கண்ணேறு பட்டுறப்புடாதுல்லா.

என்று அப்பாவிடம் காரணம் சொன்னாள். ஆனால், மூடிய கதவைத் தாண்டி இந்த விஷயம் வெளியில் கசிவதை அவளால் எதுவும் செய்ய முடியவில்லை. குடும்பத்தின் வேடிக்கையான சமாசாரங்களில் ஒன்றாக, காந்தி அத்தையே ஊர் முழுக்க டமாரம் அடித்து வந்தாள். வீட்டோடு இருப்பவள், சொந்த நாத்தனார், என்பதால் அம்மாவால் அவளை ஒன்றும் செய்ய முடியவில்லை. சின்ன வயதிலேயே வீடு திரும்பியவள் என்று அப்பாவுக்கும் தனது ஒரே தங்கச்சிமீது அளவிட முடியாத பிரியம்.

அளவும், சாப்பாட்டு வேளைகளின் எண்ணிக்கையும் வெகுவாகக் கூடியபோது, குடும்பத்தில் லேசாகப் பயம் தட்ட ஆரம்பித்தது. முதலில் கைவைத்தியமாக ஏதேதோ செய்து பார்த்தார்கள். இரண்டாவது கட்டமாக, வைத்தியர்களை நோக்கிப் படையெடுப்பு தொடங்கியது. ராமப்பன் வைத்தியர் நிமிஷத்துக்கொரு சூள் கொட்டியவாறு, அம்மா சொல்வது முழுவதையும் கேட்டார்.

இது புள்ளையளுக்கு இருக்கிறதுதாம்லா. ச்சு. நான் ஒரு பஸ்பம்

தாரன். ச்சு. ரண்டே நாள்ல செரியாயிரும்லா. ச்சு. இது எரெப்பூச்சி சேட்டெதாம்ங்கேன்? ச்சு...

என்று அறிவித்தார். அதாவது, வயிற்றுக்குள் ஒரு பூச்சி உட்கார்ந்துகொண்டு, குற்றாலிங்கம் சாப்பிடுவதையெல்லாம் தான் விழுங்கிக் செரித்துவிடுகிறதாம். பஸ்பத்தையும் ஆசையாய் விழுங்கிச் செரித்துவிட்டது பூச்சி.

இங்கிலீஷ் மருத்துவத்தின் கருவிகளும், யந்திரங்களும் குற்றாலிங்கத்தின் உடம்பை அக்கு வேறு ஆணி வேறாக அலசிப் பார்த்தன. உடம்பில் கோளாறு எதுவும் இல்லை, சாதாரண மனித உடம்புதான், சுரப்பிகளெல்லாம் தத்தம் வேலையைச் செவ்வனே செய்து வருகின்றன என்று தெரிவித்தன. இங்கிலீஷ் மருத்துவம் தோற்ற இடத்தில் வேறுவிதமான உள்ளூர் வைத்திய முறைகள் வந்து உட்கார்ந்தன. ம்ஹூம். எதுவும் பலிக்கவில்லை.

ஏழாம் வகுப்புக் கோடை விடுமுறையில் அம்பாசமுத்திரம் பக்கத்தில் ஒரு ஆசிரமத்தில் கொண்டுபோய் ஒரு மாதம் விடுவதாக ஏற்பாடு. இயற்கை உணவு மருத்துவம்.

மூன்று விதமான தோஷங்களால்தான் உடல் ஆரோக்கியம் கெடுகிறது. பித்தம், வாதம், சிலேட்டுமம். இதில் எந்த நாடியில் கோளாறு என்று பார்த்துவிட்டால் போதும். குணப்படுத்திவிடலாம். தவிர, சீக்கிரம் செரித்துவிடும் சாப்பாட்டைக் கொடுப்பதால்தான் உடனே பசியெடுத்து விடுகிறது. சுலபத்தில் செரிக்காத பொருட்களைக் கொடுப்பதுதான் முதல்கட்ட வைத்தியம் என்றார் சாமியார்.

மத்தியானச் சாப்பாட்டுக்கு தேங்காய் மட்டும்தான். பெரிய சாமியார் இவன் அருகில் உட்கார்ந்து கைப்படக் கீற்றுப் போட்டுக் கொடுப்பார். நாலே நாள். குற்றாலிங்கம் ஏங்கிப் போய்விட்டான். அப்பா வந்து வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போனார். சாமியார் மறுப்பேதும் சொல்லவில்லை. ஆசிரமக் காவல்காரன்தான் சிரித்துக்கொண்டே வாய் சிந்திவிட்டான்:

தம்பியோட மத்தியானச் சாப்பாட்டுக்கு மட்டுமே சாமி ஒரு தனீத் தென்னந்தோப்பு வாங்க வேண்டி வரும் போல.

அப்பா தீரவாசத்தின் தேர்ந்தெடுத்த வசவு வார்த்தைகள் அனைத்தையும் காவல்காரனின்மேல் எய்தார். அவன் கைவசம் மேற்கொண்டும் புதிய புதிய வார்த்தைகள் இருந்தன. கடைசியில் சாமியாரே வந்துதான் பிரித்துவிட வேண்டி வந்தது...

கு ற்றாலிங்கம் சிரித்துக்கொண்டான். லுங்கியைக் கழட்டிப்போட்டு கைக் கடிகாரத்தையும் மணிப் பர்ஸையும் அதனடியில் மறைத்து வைத்தான். ஜட்டியோடு நீருக்குள் இறங்கினான். சிறு சலசலப்புடன் ஓடிய தண்ணீர் தன் கடந்த காலம் முழுவதையும், அதன் புழுக்கம் முழுவதையும், ஒரே நொடியில் நனைத்துக் குளிர வைத்துவிட்ட மாதிரி இருந்தது.

தன் வதையின் சரித்திரம் இன்று முழுக்க ஞாபகம் வந்து கொண்டேயிருப்பதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அம்மா ஊரில் இல்லை. வெளியில் சாப்பிடுகிற மாதிரி நேரும் நாட்களிலெல்லாம் இப்படித்தான் ஒவ்வொன்றாக நினைவு வந்து தொலைக்கும்.

ஓடும் நீருக்குள் கழுத்துவரை அமிழ்ந்து உட்கார்ந்தான். தண்ணீருக்குள் கிடப்பது குற்றாலிங்கம் அல்ல, பசியால் நிரம்பிய இருபத்து நாலு வருடங்கள் என்று தோன்றியது. திரும்பவும் சிரிப்பு வந்தது. மனசு லேசாகிவிட்ட மாதிரி இருந்தது. ஒரு கணம்தான். மறுபடி வழக்கம்போலக் கனத்துவிட்டது.

ஆகாயத்தின் கீழ்க்கோடியில் அழுத்தமாகப் பரவியிருந்த சிவப்பு நிறம் மெல்ல வெளிற ஆரம்பித்தது. மேல் விளிம்பில் மஞ்சள் பூக்கத் தொடங்கியிருந்தது. எதிர்ப்பக்கம் நீலமும் கொஞ்சம் பச்சையும் இள ஊதா நிறமும். நடுவில் பிசிர்க்கொத்துகளாக வெண்மேகங்கள் அங்கங்கே மிதந்தன. ஓரிரு வாரங்களுக்கு முன்புதான் கோடையை முடித்துக்கொண்ட ஆகாயம்.

இப்படி ஏகப்பட்ட நிறங்கள் சிதறிக் கிடப்பதும் அவை ஒன்றைவிட்டு ஒன்று விலகியும் கலந்தும் வேடிக்கை காட்டுவதும், கடைசியில் எல்லாமாக ஒரு தார்ச்சட்டிக்குள் முங்கிக் காணாமல் போவதும் பார்க்கப் பார்க்கப் பொங்கும் குற்றாலிங்கத்துக்கு. ஆகாயத்தின் தார்ப்பரப்பு முழுக்க விபத்து நடந்த சாலையில் சிதறிய கண்ணாடிச் சில்லுகள் மாதிரி நட்சத்திரங்கள் உதிக்கும்போது மீண்டும் ஒருவிதமாக மனம் சுரந்து ததும்பும். கண்ணில் நீர் வழியாத குறையாய், சொல்லத் தெரியாத துக்கத்துடன் வெறித்துக்கொண்டிருப்பான்.

இருட்டு வலுத்து இறங்குகிறது. கீழ்க்கோடியில் சற்று அவசரமாக வந்து விட்ட நட்சத்திரம் ஒன்று மினுங்கியது.

...ஆலங்குளத்தில் ஒரு ஜோசியரைப் பார்க்கக் கூட்டிப் போனார்கள், அம்மாவும் அப்பாவும். காந்திமதி அத்தையையும் அழைத்துப்போனார்கள். அத்தைக்கு நாசூக்காகப் பேசத்

தெரியாதேயொழிய, மனசு சுத்தம். ரகசியம் காக்க முடியாதவள் பாவம். எந்நேரமும் பேசிக்கொண்டேயிருக்கும் வாய். சமாசாரங்களைக் கொட்டிக்கொண்டேயிருக்கும். ஓயாத சளசளப்பு. 'சோத்து மூட்டையில் பெருச்சாளியை வச்சுக் கட்டின மாதிரி' என்று சடைத்துக்கொண்டேதான் பெற்றவர்கள் அவளையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள் மூன்று பேராகப் போக வேண்டாம் என்று.
குற்றாலிங்கத்தின் காரணமாக முதல் சுற்று உறவினர்கள் அநேகரிடம் ஏதாவது ஒருவிதத்தில் பகை உண்டாகியிருந்தது. அத்தையைத் தவிர, வேறு தேர்வு கிடையாது.

பஸ்ஸில் அத்தையின் அருகில் உட்கார்ந்து வந்தான் குற்றாலிங்கம். அத்தையிடம் எந்நேரமும் மணக்கும் விபூதி மணம் இவனுக்கு ரொம்பப் பிடிக்கும். அவளும் இளம் வயதிலேயே அறுத்தவள், பாவம். குழந்தைகுட்டி கிடையாது. மருமக்கள்மீது அப்படியொரு வாஞ்சை. இவனை இறுக்கி அணைத்த வலதுகையை ஒரு கணமும் எடுக்காமலே ஆலங்குளம்வரை வந்தாள். அன்று வழக்கத்தைவிட மெத்தென்றிருந்தாள் அத்தை.

பிறந்ததிலிருந்து வெற்றிலை தவிர வேறொன்றும் சாப்பிட்டறியாதவர்போலக் காவியேறிய கற்கள் ஜோஸியருக்கு. குற்றாலிங்கத்தின் ஜாதகத்தை வெகுநேரம் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். அவ்வப்போது தலையை லேசாக ஆட்டிக்கொண்டார். திருப்தியானவர்போலத் தொண்டையைச் செருமிக்கொண்டு நிமிர்ந்தவர், குற்றாலிங்கத்தைப் பார்த்து முகம் மலர்ந்து சிரித்தார். பிதுங்கித் தொங்கும் புறாமுட்டைக் கண்கள். அவை உதிர்ந்து விழுந்துவிடாமல் தடுப்பதற்காக அணிந்த மூக்குக் கண்ணாடி நடு மூக்கில் அணை கட்டியிருந்தது. கண்ணாடிக்கு மேலாக இவனைக் கொஞ்ச நேரம் பார்த்துக்கொண்டேயிருந்தார் அடிமனசிலிருந்து வரும் பிரியமான புன்னகையுடன். இவர்கள் கேட்டுப்போனதை விட்டுவிட்டு வேறு ஏதேதோ கேள்விகள் கேட்டார்.

தம்பி எப்பிடிப் படிக்கான்?

நல்லா ஒறங்குதானா?

இருட்டுலெ போகப் பயப்புடுதானா?

ஒளுங்காப் படிமானமா நடந்துக்கிடுதானா?

வவுத்துலெ வலி கிலி எதுவும் சொல்லுதானா?

பிள்ளைக்கிப் பசியடங்கச் சோறு போடுதீயள்ளா? ஆஸ்தியிரிக்கு

தானே?

ஏம்லே தம்பி, ஒளுங்காச் சாமி கும்புடுதியாலே?

குற்றாலம் பவ்வியமாகத் தலையாட்டினான். இவனையே கொஞ்ச நேரம் உற்றுப் பார்த்துவிட்டு, கணக்குப்பிள்ளை மேசைமேல் விரித்து வைத்த ஜாதகத்தை மறுபடி ஆராய ஆரம்பித்தார்.

எல்லாம் நல்லாத்தானே இரிக்கு...

என்று தனக்குத்தானே முனகியவர், திடீரென்று,

களத்திர காரகன் சரியில்லையே.

என்று உரத்து முனகினார்.

இப்பிடிக் களத்துறவன் அது இதுன்னு சொன்னா எங்களை மாதிரிப் பாமரங்களுக்கு என்னாங்க சாமி புரியும்?

என்று கேட்டாள் அத்தை. ஜோசியர் சிரித்தார். அப்பா அத்தையை முறைத்தார். ஜோசியர் அப்பாவைப் பார்த்துக் கேட்டார்.

இவனைத் தவுத்து இன்னம் ரெண்டு பிள்ளயள் இருக்கோ ஒங்களுக்கு?

ஆமாங்க. இவன் தலைப்புள்ளெ. கீளே ஒரு பையனும், கடைசியா ஒரு பொட்டையும் இருக்காவ.

என்றாள் அம்மா.

பொறவென்ன... இது தங்கமான பிள்ளெம்மா. கெட்டிக்காரப் பிள்ளெ. குடுத்து வய்க்கணும்ல்லா, இப்பிடிப் பிள்ளெ பெறக்க. பாத்துப் பாத்துப் பண்ணின செலைக்கி, சட்டுனு தெரியாதபடி ஏதாவது ஒச்சத்தை விட்டு வைப்பாகளாம். திஸ்டி பட்டுறக்கூடாதுன்னு. அப்பிடி ஒரு சொல்லு உண்டும். பிரும்மா ஒங்க பிள்ளைக்கு விட்டு வச்ச ஒச்சமும் அது மாதிரித்தான். நீங்களாகச் சொல்லாட்டி, யாருக்குத் தெரியப் போகுது? மத்தபடி, கெட்டிக்காரப் பிள்ளெ. ஊருக்கே சோறூட்டுற சாதகம். தொட்டதெல்லாம் தொலங்குற கையி. வேறென்னாத்தெச் சொல்ல. இருபத்நாலு வயசுக்கு மேலெ எல்லாம் செரியாயிரும். எங்கிணெ இருந்தாலும் அமோகமா இருப்பான். அவ்வளவுதான். பிள்ளெ எம்புட்டுச் சாப்பிட்டாலும், கேக்குறதெச் செஞ்சு போடுங்க. போய்ட்டு வாங்க.

அப்பா ஜோசியரின் குடிலுக்கு வெளியில் கலப்பையை இழுத்துச்

சென்றுகொண்டிருந்த ஜோடி மாடுகளை வெறித்தார். பெரியவர்கள் நால்வரும் அமைதியாய் இருக்க, சுவரில் மாட்டியிருந்த தாடிக்காரரின் படத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான் குற்றாலிங்கம்.

வரைந்த படம்தான். பிரிபிரியாய்ச் சுற்றி கோபுரம் மாதிரி உயர்த்திக் கட்டிய ஜடாமுடி. கிழவரின் தலைக்குப் பின்னால் வெண்ணிற வட்டம் ஒளிர்ந்தது. இடது கையைத் தரையில் ஊன்றிய கவைக்கம்பில் படியவைத்திருந்தார். கை நுனியில் உத்திராட்ச மாலை ஒன்று தொங்கியது. வலது கையை ஆசீர்வதிப்பதுபோல வைத்திருந்தார். பக்கத்தில், கைப்பிடி வைத்த கெண்டி ஒன்றும், இரண்டு சுவடிக்கட்டுகளும் கிடந்தன. பின்னால் தொலைவில் குட்டியாய் ஒரு சிவலிங்கம் நின்றுகொண்டிருந்தது. பக்கவாட்டில் நின்றிருந்த மான் ஒன்று இவரையே கண் மலர்த்திப் பார்த்துக்கொண்டிருந்தது... அமைதியைக் கலைத்தார் அப்பா.

தச்சணை எவ்வளவுங்கய்யா?

அதெல்லாம் ஒண்ணும் வேணாம். இந்த சாதகத்தைப் பார்த்ததே போதும். நல்ல சுத்தமான சாதகம். செத்தெ நேரம் பொறுங்க. நான் இதை ஒரு நகல் எடுத்துக்கிட்டுத் தாரேன்.

மூவரும் ஒரே சமயத்தில் தலையாட்டினார்கள். முகங்கள் கூம்பியிருந்தன. பஸ்ஸுக்காகக் காத்திருந்தபோதும் சரி, திருநெல்வேலி வரும்வரையிலான பிரயாணத்திலும் சரி, யாரும் எதுவுமே பேசிக்கொள்ளவில்லை. இந்தமுறை குற்றாலிங்கத்தை அம்மா தன்னருகில் அமர்த்திக்கொண்டாள். உடம்போடு அடிக்கடி சேர்த்து இறுக்கிக்கொண்டாள். அம்மாவின் உடம்பு அத்தையளவு மெத்தென்றில்லாததோடு, அடிக்கடி குலுங்கி அடங்கவும் செய்தது...

போ தும். குளிர் இறங்க ஆரம்பிக்கிறது. லேசாகச் சாரல் போடுகிறது. குற்றாலத்தில் சீஸன் ஆரம்பித்து ஒரு வாரத்துக்கு மேலாகிவிட்டது. அருவியில் என்றால் எவ்வளவுநேரம் வேண்டுமானாலும் குளிக்கலாம். இங்கே அப்படியில்லை. கூட ஒரு பத்துநிமிஷம் முங்கிக் கிடந்தால் சட்டென்று தடுமன் பிடித்துவிடும்.

கரையேறித் தலையைத் துவட்டினான். தலையிலிருந்து உதிர்ந்த நீர்த்துளிகள் உடம்பில் பட்ட இடங்களில் குளிர் தொட்டது. அடங்காத குதிரை மாதிரி ஞாபகம் விடாமல் திமிறித் தொடர்ந்து ஓடியது.

...பள்ளிப்படிப்பு முடித்து இந்த எட்டு வருடமும், ஏற்ற இறக்கமில்லாமல், துடைத்து மெழுகிய தரை கணக்காக ஒரே சீராகத்தான் இருக்கிறது.

இருபத்துநாலு மணிநேரமும் பசி. சாப்பிட்டு முடித்துக் கைகழுவியவுடன் அடுத்த சாப்பாட்டைப் பற்றி யோசனை. வெந்தது வேகாதது, உப்பு உறைப்பு குறைவாய் இருப்பது கூடுதலாய் இருப்பது எதுவுமே கணக்கில்லை. சாப்பிடும் பதார்த்தமாய் இருக்கவேண்டும், வயிற்றுக்குள் போய்ச் சேரவேண்டும். அவ்வளவுதான்.

இவன் வயசுப் பையன்களெல்லாம் வாகையடி முக்கிலும், தாமிரபரணிக் கரையிலும், நெல்லையப்பர் கோயில் பிரகாரத்திலும், சாராள் டக்கர் வாசலிலும் வயசுப்பெண்களைப் பார்த்துப் பசியாறிக் கொண்டிருந்தபோது, சமைஞ்ச குமரிபோல வீட்டிலேயே முடங்கிக் கிடந்தான் குற்றாலிங்கம். ஆறேழு வேளைகள் சாப்பிட்டுத் தீர்த்தான். வீட்டில் ஒருவருக்கொருவர் பேசுவது குறைந்துவிட்டது. அம்மாவோ அப்பாவோ சிரிப்பதைப் பார்த்து வருஷக்கணக்காகிவிட்டது. உறவினர் வீட்டு விசேஷங்களுக்குப் போவதும் வெகுவாகக் குறைந்துவிட்டது. இன்றுகூட, கழுகுமலையில் இறந்தவர் அம்மாவின் சொந்த அக்கா புருஷன். இல்லாவிட்டால், போயிருக்க மாட்டார்கள்.

அம்மா வீட்டுக்குள் நடக்கும்போதே, மலையேறுவது மாதிரித் தளர்ந்துதான் நடக்கிறாள். உடம்பும் ரொம்பத் தாட்டியமாகிவிட்டது. ஓயாமல் கவலைப்பட்டாலும் உடம்பு பெருக்கத்தான் செய்யுமாமே. பாம்பு சீறுகிற மாதிரி மூச்சிறைத்துக்கொண்டு, இரவு படுக்கப் போகும்முன் ஒரு படி சோறு ஆக்கிவைத்துவிட்டு வருவாள் அம்மா.

குற்றாலிங்கத்துக்கு இரண்டாம் ஜாம முடிவில் முழிப்புத் தட்டும், திருட்டுப் பூனை மாதிரி சத்தம் எழாமல் நடந்து சென்று வெதுவெதுவென்று இருக்கும் சோற்றில் தயிர் ஊற்றிப் பிணைந்து சாப்பிடுவான். சில நாட்களில் பின்னோடே எழுந்து வந்து பரிமாறுவாள் காமாட்சி. அதெல்லாம் அவள் கல்யாணத்துக்கு முன். பிரசவத்துக்கு வந்திருந்த நாட்களிலும், வயிற்றைத் தூக்கிக்கொண்டு பின்னோடு எழுந்து வருவாள்.

தீரவாசத்தில் இருபத்தைந்து ஏக்கர் நிலத்தின் உடமையாளர் அப்பா. காமாட்சியின் திருமணத்தையொட்டி ஐந்து ஏக்கர் நிலத்தை விற்றார். திருமணமாகும்போது பதினெட்டு வயது அவளுக்கு. வயதுக்கு மீறின பொறுமையும் பிரியமும் வளர்த்தியும் உள்ளவள், பாவம்.

புருஷன் வீட்டாரோடு கிளம்பும்போது, ஒவ்வொருவரிடமும் விடை சொல்லி மறுகிக்கொண்டே வந்தாள். குற்றாலிங்கம் தாயின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தான். அம்மாவின் காதோடு,

அண்ணனெ நல்லாப் பாத்துக்கோங்கம்மா. அது வவுத்தெக் காயப்போட்டுறாதீய.

என்று குமுறினாள். அம்மாவின் காதோடு கிசுகிசுப்பாகச் சொன்னாள் என்றாலும், அருகில் நின்றிருந்த குற்றாலிங்கத்துக்குக் கேட்கத்தான் செய்தது. அண்ணனிடம் நகர்ந்து,

யண்ணே, யாரும் எதும் சொன்னாங்கன்னு மனசுலெ போட்டுக்கிறாதீய. எல்லாம் தானாச் சரியாயிரும். சோசியரு சொன்ன கெடுவுக்கு இன்னம் கொஞ்சகாலம்தானே இருக்கு... கலங்காதீயண்ணே. நான் வரட்டுமா?

என்று கண் மல்கினாள். தோளில் தட்டி வழியனுப்பினான் குற்றாலிங்கம்...

நடுவிலவன் கைலாசமும் குற்றாலிங்கத்தை மாதிரியே நல்ல படிப்பாளி. அவனை மதுரையில் காலேஜ் படிக்க வைப்பதற்காக இன்னொரு ஐந்து ஏக்கரைக் கிரயம் பண்ணினார் அப்பா. இவனையும் மதுரைக்கோ, மெற்றாசுக்கோ மேலே படிக்க அனுப்புகிறேன் என்று சொல்லத்தான் செய்தார். பள்ளியில் படித்து அவமானப்பட்டது போதும், கல்லூரிக்கும் சென்று, அதுவும் வெளியூர்க் கல்லூரியில் சென்று, மேலும் கூனிக் குறுகவேண்டாம் என்று மறுத்துவிட்டான் குற்றாலிங்கம்.

மேலெ படிக்க விருப்பமில்லை. வெவசாயத்தெப் பாத்துக்கிட்டு இங்கிணெயே இருந்துக்கிடுதேன்.

என்று சொல்லிவிட்டான். அடிமனத்தில் கிடந்த உண்மையான காரணம் வேறு. நிலத்தை விற்காமல் இவனைப் படிக்க அனுப்ப முடியாது அவரால். நிலம் என்ன சாமான்ய இடமா? அன்னம் விளைவிக்கிற புண்ணியஸ்தலம் அல்லவா? தவிர, இவன் சாப்பிடுகிற வேகத்துக்கு சொந்த நிலம் இல்லாவிட்டால் கட்டுப்படியாகுமா?

இத்தனை நாள் விவசாயத்தில் குடும்பம் நிம்மதியாகச் சாப்பிட்டதே தவிர, சேமிப்பு என்று எதுவும் கிடையாது. 'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குத்தான் மிஞ்சும்' என்று அப்பாவுக்காகவே சொல்லி வைத்திருக்கிறார்கள். எப்படியும் தம்பிக்காகவும் தங்கச்சிக்காகவும் விற்கத்தான் போகிறார். பாக்கி உள்ளதாவது மிஞ்சட்டுமே...

கைலாசம் நல்லபடியாய்ப் படித்துமுடித்து காந்திகிராமத்தில் காலேஜ் வாத்தியாராய் இருக்கிறான். போன பங்குனியில் சேர்ந்தான். இன்னும் மூன்று நாலு வருஷம் போனால் அவனுக்கும் ஒரு கல்யாணம் ஆகிவிடும். எல்லாரும் அடுத்தடுத்த கட்டங்களுக்கு

நகர்ந்துகொண்டிருக்கிறார்கள். தான் மட்டும் இருந்த இடத்திலேயே இருந்துகொண்டிருக்கிற மாதிரி உணர்ந்தான் குற்றாலிங்கம். மனம் கனத்தது.

சுரத்தேயில்லாமல் கைக்கடிகாரத்தை எடுத்துச் சட்டைப் பையில் போட்டுக்கொண்டான். ஏறுமாறாக இறுக்கியிருந்த லுங்கியை சரியாக உடுத்தியவாறு, சுழற்றிப்போட்ட ஜட்டியையும் தலை துவட்டிய துண்டையும் அலசுவதற்காக நீர்விளிம்பை நோக்கிச் சென்றான். முறுக்கி இரண்டு கைகளாலும் பிழிந்தபோது, வயிற்றில் அந்தக் காந்தல் புறப்பட்டது. சட்டைப் பையிலிருந்து கடிகாரத்தை எடுத்து மணி பார்த்தான், ஏழரை.

கெட. சித்தெ நேரம் காந்து... இன்னைக்கிச் செத்தாலும் சரி. இட்லிக்கடையைப் பாத்து ஓடுறதில்லே.

என்று தனக்குள் முனகிக்கொண்டான். நின்ற இடத்திலேயே வன்மமாக உட்கார்ந்தான்.

அப்பாவுடன் பேச்சு வார்த்தை முற்றாக முறிந்துபோன நாள் நினைவில் வந்தது. அன்றைக்கும் இப்படித்தான், வன்மமும் ஆத்திரமும் மனசு முழுக்க நிரம்பிக் கிடந்தது. ஆயிற்று, அது நடந்தும் ஆறேழு மாதம் இருக்குமே.

...அந்தக் காட்சி கண்ணுக்குள்ளே நிரந்தரமாகப் பதிந்து கிடக்கிறது. வாசலில் ஒரு குளுவச்சி வந்து நிற்கிறாள். குரலெடுத்துக் கூப்பாடு போடுகிறாள்.

சுற்றிலும் சிட்டுக்குருவிகள் மாதிரி நாலைந்து குழந்தைகள். போதாதென்று இடுப்பில் ஒன்று உட்கார்ந்து அவளுடைய மூடிய முந்தானைக்குள், ரவிக்கையில் முடிந்து வைத்திருந்த முலையைத் தொட்டுத்தொட்டு அடம் பிடித்துக்கொண்டிருந்தது. முந்தானையின் நுனியைச் சும்மாடாக மேலேற்றியிருந்தாள். அதன்மீது பிடிப்பில்லாமல் அமர்ந்திருந்த மண்பானையை நிலைநிறுத்துவதற்காக சன்னமாக ஆட்டம் கொடுத்த தலை.

வெற்றிலை குதப்பும் வாயைத் திறந்து 'யெம்மா...' என்று ஒரு குரல் விடுப்பாள். துணை நாயனங்கள் மாதிரி அந்தக் குழந்தைகளும் கத்தி ஓயும். பிஞ்சுக் குரல்கள்தான் ஓங்கிக் கேட்டன. கூடத்தில் ஈஸிச்சேரில் சாய்ந்து தினமலரில் மூழ்கியிருந்த அப்பா,

சவத்து மூதி கையிலெ ஒரு அஞ்சு காசெப் போட்டுத் தொரத்துலே, வாள் வாள் ங்கா.

என்று ஆணையிட்டார். திருநீற்றுச் சம்புடத்தில் கிடந்த நாலணாவை எடுத்துக்கொண்டு வாசலுக்குப் போன குற்றாலிங்கம் அவர்களைப் பார்த்த மாத்திரத்தில் பந்தடித்தமாதிரித் திரும்பினான்.

இவன் உள்ளே வந்த பிறகும் வாசலில் சத்தம் ஓயவில்லை என்பதைச் சற்று தாமதமாகத்தான் கவனித்தார் அப்பா. மூக்கின் நுனிக்குச் சரிந்திருந்த கண்ணாடியின் மேல்விளிம்புக்கும் மேலாகப் பார்வையைச் செலுத்தினார். சோறு வைத்த குண்டானுடன் நின்றிருந்தான் குற்றாலிங்கம்.

என்னலே செய்யுதே.

அவிய அஞ்சாறு உருப்படி நிக்கிதாவொ. அஞ்சு காசு எந்த மூலைக்கி? பிள்ளைய மொகரையிலே பசி அப்பியில்லா கெடக்கு.

ஏம்லே ஒனக்கென்ன கோட்டியா பிடிச்சிருக்கு? போறவ வாறவளுக்கெல்லாம் சோறுபோடவாலே, வெய்யில் மளேன்னு நான் களனியிலே போயி நிக்கேன்? அந்தக் குண்டானெக் கொண்டுபோயி உள்ளாறெ வையி...

வாசலிலிருந்து இன்னும் ஒருதடவை குரல்கள். குற்றாலிங்கம் நகராமல் அழுத்தமாக நின்றான்.

...ஏலே நீயென்ன செகுடா? ஓங்கிட்டத்தானே சொல்லுதேன். மீறி ஒரு அடி வச்சியோ, மொளங்காலெப் பேத்துருவன்.

சோற்றுக்குண்டானை ணங்கென்று தரையில் வைத்தான். இதற்குள் குளித்து முடித்து வந்திருந்த அம்மா ஈர மயிரின் நுனியில் அவசரமாக முடிச்சிட்டுக்கொண்டு இவர்களை நெருங்கினாள்.

பசிச்ச பிள்ளையளுக்குச் சோறுபோடக்கூட உரிமையில்லேன்னா, நான் எதுக்கு இந்த வீட்டுலெ இருக்கணும். இந்தானைக்கி இப்பிடியே எறங்கிக்கிடுதேன். பசின்னா என்னான்னு தெரிஞ்சவங்கன்னாத்தானே...

வாய்விட்டு உரத்து பதில் சொல்ல ஆரம்பித்து, கடைசிவாக்கியத்தை முனகலாக முடித்தான் குற்றாலிங்கம். அப்பாவின் வாயிலிருந்து வசவுகள் உதிரத் தொடங்கின. அந்த மூதி, இந்த மூதி, அந்த ஓளி, இந்த ஓளி... செய்வதறியாமல் இவன் கையைப் பிடித்துக்கொண்டு நின்றாள் அம்மா. கண்கள் இரண்டும் நிரம்பித் ததும்பின.

இதற்குள் வாசல் குரல்கள் ஓய்ந்துவிட்டன. பக்கத்தில் எங்கோ நின்று புதிதாய்ச் சத்தம் கொடுக்க ஆரம்பித்தது அந்தக் குடும்பம். வாசலை

நோக்கி நகர முயன்றவனை உடம்போடு சேர்த்து இறுக்கிக்கொண்டு மன்றாடினாள் அம்மா. அப்படியெல்லாம் அவள் அணைத்துக்கொண்டு வருடக்கணக்காகிவிட்டது. அவளுடைய பருத்த தேகமெங்கும் நடுக்கம் ஓடிக்கொண்டிருப்பதை இவனால் உணர முடிந்தது.

அப்பா ஓய்வதாயில்லை. பிலாக்கணம் வைக்கும் பெண்கள் மாதிரி நினைத்துநினைத்து ஏசிக்கொண்டிருந்தார் ஒருநேரம் கோபமாக, ஒருநேரம் ஆதங்கமாக, ஒருநேரம் குமுறலாக, ஒரு நேரம் அழுகையாக பிற்பகலில் அவர் வெளியே போகும்வரை.

குற்றாலிங்கம் பதில் ஏதும் பேசாமல் அன்று முழுவதும் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தான். அதிகபட்சம் இரண்டு மணிநேரம்தான் தாக்குப் பிடிக்க முடிந்தது. தற்காலிகமாகக் குளுவக் குடும்பத்தின் பெயர் எழுதி உடனடியாக அழிக்கப்பட்ட சோற்றைத் தின்றுதான் வயிறு அடங்கியது. மனம் மட்டும் அடங்கவேயில்லை. அதன்பிறகு, இன்றுவரை அப்பாவின் முகத்தை நேருக்குநேர் பார்க்கவும் இல்லை, ஒரு சொல் பேசவும் இல்லை.

நல்லவேளை, சம்பவம் நடந்த அன்று காந்தி அத்தை ஊரில் இல்லை. அவளுடைய முன்னாள் புகுந்தவீட்டில் யாருக்கோ கருமாதி என்று ஆழ்வார்குறிச்சிக்குப் போயிருந்தாள். இல்லாவிட்டால் திருநெல்வேலி ஊரே துக்கம் விசாரித்திருக்கும்.

என்னலே, ஒந் தகப்பனாருக்கும் ஒனக்கும் தகரால் முத்தீருச்சாமில்லா...

எ ழுந்தான். சுப்பையா பிள்ளை ஓட்டலைப் பார்த்து நடந்தான். வழக்கமான அவக்கை நடையில்லை. நிதானமான நடை அதென்னவோ, இன்று காலையிலிருந்தே சற்று மந்தமாகத்தான் இருக்கிறது சகலமும்.

ஓட்டல் வாசலை நெருங்கியபோது, ஏனோ நெல்லையப்பர் கோயில் நினைவு வந்தது. ஓட்டலைத் தவிர்த்துவிட்டு கோயிலை நோக்கிப் போனான். வாசலில் பூக்கடை வைத்திருக்கும் சிவகாமியக்காவிடம் செருப்பைக் கழற்றினான்.

சின்ன வயசிலிருந்து பார்க்கிறான், அன்றைக்கு என்ன வயசோ அதே வயசுதான் இன்றைக்கும் தெரிகிறது அக்காவின் முகத்திலும் உடம்பிலும். அநியாயத்துக்கு ஒல்லி, பூக்கட்டும் விரல்களில் அநியாய வேகம். எந்நேரமும் முகத்திலும் முன்னங்கையிலும் மேல்பாதத்திலும் அநியாய மஞ்சள். இதுதான் சிவாமியக்கா. எதிர் வரிசையில் ஆறு வீடு

தள்ளிக் குடியிருப்பவள். அம்மாவும் அப்பாவும் காமாட்சி விட்டுப்போன வெற்றிடத்தை இவளைக் கொண்டுதான் நிரப்பிக்கொள்கிறார்கள். அக்காவும், சும்மா சொல்லக் கூடாது, வேற்று வீட்டில் பிறந்தவள் மாதிரி நடந்துகொள்ள மாட்டாள். அம்பாசமுத்திரம் மதுரா கோட்ஸில் வேலை பார்க்கிற அவள் வீட்டுக்காரரும் அவளை மாதிரியே வெள்ளந்தியான மனிதர்தான்.

அனிச்சையாகச் சிரித்தபடி, அனிச்சையாகக் கைநீட்டி ஈரத்துணிகளை வாங்கிக்கொண்டாள் அக்கா. மடக்கு மேசைக்கு அடியில் இருந்த பிரம்புக்குடலையில் கிடந்த நார்களுக்கு மேலாகப் போட்டுவிட்டு, பூக்கட்டுவதைத் தொடர்ந்தாள். கோயிலுக்குள் நுழைந்தான். மணி எட்டாகிவிட்டது. உள்ளே போகிறவர்களைவிட, வெளியேறுகிறவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.

சுவாமி சந்நிதியில் கண்மூடி நின்றான். திறந்த கண்களில் விழுந்த லிங்கத்தின் பிம்பம் மூடிய இமைகளில் நீடித்து நின்று தேய்கிறவரை கண்கள் மூடியே இருந்தன. பக்கத்தில் நின்றவரின் சலனம் உணர்ந்து கண் திறந்தபோது இவனுக்கு நேரே நின்றார் அர்ச்சகர். கற்பூரத்தை ஒற்றிக்கொண்டு உள்ளங்கையில் வாங்கிய திருநீறுடன் நகர்ந்தான். ஒரு இணுக்கு வாயில் போட்டுக்கொண்டபோது திருநீறின் ருசி உடம்பு முழுக்கப் பரவுகிற மாதிரி பிரமை தட்டியது.

‘அம்பாள் சந்நிதிக்குப் போகலாமா, அல்லது வெளியேறலாமா’ என்று ஒரு கணம் மனம் தயங்கியது. ‘சீ களுதெ, சோத்து மணத்துக்காவத்தானே போணும் போணும்னு பறக்கே. கெட மூதி’ என்று தலையை உதறிக்கொண்டு அம்பாள் சந்நிதிக்குப் போனான்.

திருக்குளப் படிக்கட்டில் கொஞ்சநேரம் உட்கார்ந்திருந்தபோது வயிறு மொணமொணவென்று மணியடித்துக்கொண்டுதான் இருந்தது. வேண்டுமென்றே அதைக் கவனிக்காமல் இருக்கிற மாதிரி அடக்கிக்கொண்டான்.

கோயிலுக்குள் ஆழத்திலிருந்து குழப்பமாய்க் கிளம்பி வரும் ஒலிகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாய்ச் சீர்பிரித்துக் கேட்க முயன்றான். எதிர்ப் பிரகாரத்தில் நடந்து செல்கிறவர்கள் நிழல் உருவங்கள்போலத் தென்பட்டார்கள். ஒரே நிறமாக இருந்தவர்கள் பிரகார முக்குத் திரும்பி இந்தப் பக்கம் வந்தவுடன் விளக்கொளியில் வெவ்வேறு நிறம் கொள்வது கொஞ்ச நேரம் வேடிக்கை காட்டியது.

பின்புறம் பட்லர் இங்லீஷ் உரத்துக் கேட்டது. சிற்பம் பார்க்க வந்த

வெள்ளைக்காரத் தம்பதியுடன் பேசிக்கொண்டு நடக்கிறான் ராமசுப்பு. இந்தக் கோயிலுக்குள் விருதாவாகச் சுற்றி வந்தே நாலு காசு பார்த்துவிடுவான் தினசரி. கோயிலில் உள்ள ஒவ்வொரு மண்டபமும், ஒவ்வொரு சிற்பமும் அத்துப்படி. இவனோடுதான் பள்ளிக்கூடம் முடித்தவன். கொஞ்சம் கஷ்டப்பட்ட குடும்பம்.

க்ருஷ்ணாபுரம் டுமாரோ கோயிங்.

என்று உரத்துக் கேட்ட குரலுக்கு, அந்தப் பெண்மணி கொழகொழவென்று ஏதோ பதில் சொல்கிறாள். முதுகில் கனத்த மூட்டையுடனும் முழங்காலுடன் முடிந்துவிட்ட டவுசருடனும், இரண்டு கால் பருமன் உள்ள குதிரைச் சதையுடனும் நடந்து செல்கிற ஆண்பிள்ளை அவள் சொல்வதை ஆமோதிக்கிற மாதிரித் தலையாட்டிக்கொண்டு நடக்கிறான். ராமசுப்பு தனியாய்ச் சிக்கும்போது,

மக்கா, எப்பிடிலே இம்புட்டும் படிச்சே?

என்று நண்பர்கள் கேட்டால்,

வவுறு இரிக்கில்லடே...

என்று சிரிப்பான்.

எழுந்து மௌனமாக வெளியேறினான். சுப்பையா பிள்ளை ஓட்டல் இருந்த தெருவுக்குள் நுழைந்தவுடன் சட்டென்று திருநெல்வேலி ஊரே சாந்தமாகிவிட்ட மாதிரி ஒரு அமைதி கவிந்தது. எதிர்ச்சாரியிலிருந்த பொட்டலில் கிளம்ப மறுக்கும் சரக்கு வண்டியை நாலைந்துபேர் சேர்ந்து தள்ளிக்கொண்டிருந்தார்கள். ஓட்டலுக்குள், புகைபடிந்த குண்டு பல்பு பலவீனமாக எரிந்துகொண்டிருந்தது. வாசல்படிக்குச் சற்றுத் தள்ளி, ஓட்டல் வாசலை ஏக்கமாய்க் கவனித்தபடி நின்றிருந்த நாயின் கண்கள் மினுங்குவதைப் பார்த்தவாறு உள்ளே நுழைந்தான்.

ஆவடே...

என்று கூவினார் முதலாளி. அவர் நெற்றியிலிருந்த திருநீற்றுப் பட்டை சற்றும் கலையவோ, மங்கவோ இல்லை. சாயங்காலம் பார்த்த அதே கருக்கில் அலுங்காமல் இருந்தது.

ஓட்டுக்குள்ளிருந்து ஆமை நீட்டுவது மாதிரித் தலையை நீட்டிப் பார்த்த வழுக்கைத்தலை, மெல்ல நீண்டு முழு உடம்பானது. அவ்வளவு பருமனான ஆகிருதிக்கு ஆவுடையப்பன் அண்ணாச்சியின் முகமே சின்னதுதான் ஆமையின் தலை மாதிரி. அட்டைக்கரி நிறத்துக்கு நகர்ந்துகொண்டிருந்த அரை வேட்டியும், தோள்கள் இரண்டையும்

மறைத்த குற்றாலம் துண்டும் அணிந்த தடிமனான நடுவயது உருவம் வெளி வந்து குற்றாலிங்கத்தைப் பார்த்துப் பிரியமாய்ச் சிரித்தது.

உள்ளாறே வந்துர்றேளா தம்பீ?

என்று கேட்டார் ஆவுடை. எப்போதாவதுதான் இந்த ஓட்டலில் வந்து சாப்பிட வேண்டி வருகிறதா, ஒவ்வொரு தடவை வரும்போதும் ஆவுடை அண்ணாச்சிக்கு நாலைந்து வயது கூடிவிடுகிற விந்தையை வியந்தவாறு சுற்றுமுற்றும் பார்த்தான் குற்றாலிங்கம். ஈர பெஞ்ச்சுகளைத் தவிர வேறு பிரசன்னம் இல்லாதிருந்த நடு அறையை விட்டு வெக்கை புழுங்கும் சமையலறையில் உட்கார்ந்து எதற்காகச் சாப்பிடுவது? சாப்பிட்டு வெளியில் வரும்போது மீண்டும் குளிக்க வேண்டும்போல இருக்கும்.

இங்கிணயே இருந்துக்கிடுதேன். வேத்தாளு யாரும் இல்லேல்லா?

இலையைக் கழுவும்போது, வயிற்றுக்குள் பகபகவென நெருப்பு பற்றி உயர்ந்தது. ஆவுடை அண்ணாச்சி நாலே நாலு இட்லிகளை அகலமான ஒரு அலுமினியத் தட்டில் கொண்டு வந்தார். மற்ற கையில் எண்ணெயில் குழைத்த தோசைப்பொடி இருந்த கிண்ணம்.

ஓட்டலுக்குள் அந்நிய மனிதர் ஒருவர் நுழைந்தார். நாற்பத்திச் சொச்சம் வயதிருக்கலாம். நிதானமாக உள்ளே வந்தவர் காலியாக கிடக்கும் அத்தனை பெஞ்சுகளையும் விட்டுவிட்டு நேரே இவன் உட்கார்ந்திருந்த மேஜைக்கு மறுபுறம் வந்து உட்கார்ந்தார்.

தன்னையே அவர் உற்றுப் பார்ப்பது குற்றாலிங்கத்துக்குச் சற்றும் அசவுகரியமாய் இல்லை. ‘ஒரு அந்நியர் உறுத்துப் பார்ப்பது தனக்கு ஏன் இவ்வளவு பிடித்திருக்கிறது, உள்ளுக்குள் எதுவோ நிரம்புகிற மாதிரி இருக்கிறதே’ என்று ஆச்சரியமாய் யோசித்துக் கொண்டிருந்தான் குற்றாலிங்கம். ‘நல்லவேளை, அண்ணாச்சி சொல்படி சமையறையில் போய் உட்காரவில்லை’ என்று ஆறுதல் பட்டுக்கொண்டான்.

திடீரென்று தாழம்பூ மணம் பரவுகிற மாதிரி இருந்தது. எதிரில் இருப்பவர் ஸென்ட்டு எதுவும் பூசியிருக்கிறாரா என்ன. அழுது வழிந்த குண்டு பல்பின் பிரகாசம் சற்று அதிகரித்துவிட்டமாதிரியும் தோன்றியது.

ஆவுடை அண்ணாச்சி தாயார் மாதிரி. முகம் பார்த்து விளம்பக்கூடியவர். தட்டு நிறைய இட்லிகளுடன் வந்தவர், இன்னொரு ஆள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து சற்றுத் தயங்கினார். பிறகு தாமே தலையாட்டிக்கொண்டவாறு குற்றாலிங்கத்திடம் வந்தார்.

இரண்டு இட்லிகளை எடுத்து இவன் இலையில் வைக்கிறார். ஏனோ, அண்ணாச்சியின் முன்னங்கையிலிருந்து குற்றாலிங்கத்தின் பார்வை எதிரிலிருந்தவர் முகம் நோக்கி நகர்ந்து நிலைத்தது. அடுத்த இரண்டை எடுத்துக்கொண்டு இலையை நோக்கி இறங்கிய அண்ணாச்சியின் கையை அந்நியர் இறுக்கிப் பிடித்தார்.

போதும்.

என்று உறுதியான குரலில் சொன்னார். இதைச் சொல்லும்போது குற்றாலிங்கத்தின் கண்களுக்குள் அவரது பார்வை ஊடுருவியது. ஆவுடை அண்ணாச்சி சடாரென்று குரல் உயர்த்தினார்.

ஏலெ... கிறுக்குக் கூதிவுள்ளெ. எவம் வீட்டுச் சோத்துக்கு எவம்லே அண்ணாவி?

புதியவர் பதில் சொல்லவில்லை. குற்றாலிங்கமும் அவரும் நெடுநாள் பிரிந்திருந்த காதலார்கள்போல ஒருவரையொருவர் கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டேயிருந்தார்கள். குற்றாலிங்கத்தின் ஆதரவை எதிர்பார்த்திருந்த அண்ணாச்சி, அவன் இவர் பக்கமே திரும்பாதது பற்றி விசனமேறியவராக கல்லாவிலிருந்த முதலாளியை நோக்கி வேகமாகப் போனார்.

வீ ட்லெ ஒரு வார்த்தெ சொல்லிப்போட்டு வந்துருதேன். நாளெக் காலையிலே எங்க அம்மா வந்துரும்.

என்றான் குற்றாலிங்கம். நெல்லையப்பர் கோயிலின் குளப்படி சற்று முன்பு இருந்த மாதிரி இல்லை. தரையில் குமைந்திருந்த வெம்மை முற்றாக விலகி, புட்டத்தில் குளுமை தட்டியது.

அதெல்லாம் எதுக்கு? ஒரு வாரம் பத்துநாள்லே திரும்பி வந்துறத்தானே போறே?

அத்தனை நாட்களும் அம்மா என்ன பாடுபடுவாள் என்று ஒரு எண்ணம் குறுக்கே ஓடியது. அப்பாவும் ஆடித்தான் போவார். நேருக்கு நேர் பேசிக்கொள்வதில்லையே தவிர, சட்டையைக் கழற்றிக் கைகால் கழுவிவிட்டு அடுக்களை நிலையைத் தாண்டி நுழையும் போதே,

பய சாப்புட்டுட்டானாம்மா?

என்று நாள் தவறாமல் கேட்கிறவர்...

சாமியாரா ஆகச் சொல்லுதேளோ?

என்று கேட்டான். சிறுவயதில் என்றோ பார்த்த ஆலங்குளம்

ஜோஸியரின் முகம் புத்தம் புதியதாக நீர்ப்பரப்பில் ஒளிர்ந்து மறைந்தது. மற்றவர் சிரித்தார்.

சேச்சே. என்னெப் பாக்குறேல்ல. நானென்ன காவியும் கமண்டலமுமாவா இருக்கேன். ஒனக்கு இப்போப் பசியிருக்கா?

அதானே வெளங்காமக் கெடக்கேன். நானெல்லாம் என்னைக்கி அஞ்சாறு இட்லியோடெ நிப்பாட்டுனவன்? பாவம், சுப்பையா மொதலாளிக்கி இன்னைக்கு ரெண்டு ஈடு இட்லி மீந்து போச்சு, ஒங்க புண்ணியத்துலெ.

இருவரும் சிரித்தார்கள்.

இதே மாதிரி நிரந்தரமா இருக்கணுமால்லியா?

ஆமா. பின்னே.

அவசரமாய்ச் சொன்னான் குற்றாலிங்கம்.

அப்ப, அதுக்கு ஒரு விலெ குடுத்துத்தானே ஆகணும்...?

மௌனமாய் இருந்தான்.

...அதுதான் இந்த ஒருவாரம் பத்துநாள்.

நீங்க என்ன சொல்லுதியன்னு வெளங்க மாட்டங்குல்லா. ஒரு வாரமா, பத்து நாளா? ரெண்டும் சொல்லுதிய?

தெரிஞ்சாச் சொல்லிற மாட்டேனா, போகப் போகத்தானே தெரியும்?

அப்பிடீங்கேளோ?

பெரியவர் வேறு எங்கோ பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.

நினைவூட்டிக்கொள்பவன் மாதிரித் தன் சட்டைப்பையைத் தொட்டுப் பார்த்துக்கொண்டான் குற்றாலிங்கம்.

இந்தா, பாருங்க சாமீ. எம் பையிலே பதினேளு ரூவாதாம் இரிக்கு பாத்துக்கோங்க. உடுமாத்துத் துணி எதுவும் எடுத்துக்கிற வேணாமா?

அதெல்லாம் நீ எதுக்கு கவலெப்படுறே? எங்கூட வர்றதா இல்லையான்னு முடிவு மட்டும் நீ சொல்லு போதும்.

கோபுரத்தை அண்ணாந்து பார்த்தான். வயிற்றில் நிரந்தரமாய் இருந்துகொண்டிருக்கும் காந்தல் தடயமே இல்லாமல் காணாமல் போனது மனத்தில் வெகுவாகக் கனத்தது. அருகில் அமர்த்திருப்பவர்

சாதாரண மனிதரில்லை என்று உள்ளுக்குள் எதுவோ அடித்துச் சொன்னது. ‘பெத்தவியளுக்கு ஏடாகூடமா எதுனாச்சும் ஆயிருச்சின்னா? காலையிலே வந்தவொடனே ரெண்டுபேரும் நாண்டுக்கிடுவாளோ?’ என்று மனத்தின் ஒரு பாதியில் பீதியாக எழுந்த கேள்வியை, மறுபாதி எதிர்கொண்டது. ‘இன்னா இரிக்காருல்லா, இவரு பாத்துக்கிடுதாரு...பொறவென்னா?’

சரி சாமி. வாரேன். எல்லாம் ஒங்க பொறுப்பு, பாத்துக்கிடுங்க. போற வளியிலே, வீட்டுச் சாவியெ மட்டும் பக்கத்துலெ குடுத்துட்டு வந்துருதேன். நீங்க முக்குலெ நின்னுக்கிருங்க.

இருவரும் அமைதியானார்கள்.

நீர்ப்பரப்பில் விழுந்திருந்த குழல்விளக்கின் பிம்பம், சிற்றலையாட்டத்தில் நெளிந்து நீந்தும் வெண்ணிறப்பாம்பு மாதிரித் தென்பட்டது. அது சதா முன்னேறியவாறே, இருந்த இடத்தில் கிடப்பதை வெறித்தான் குற்றாலிங்கம்.

கௌம்புவமா?

என்று புதியவரின் குரல் எங்கோ அத்துவானத்திலிருந்து கேட்கிற மாதிரி ஒலித்தது. நெளிகிற பாம்பை ஒருமுறை ஆசைதீரப் பார்த்துவிட்டு எழுந்தான். விரைந்து நடக்கும் அவரைப் பின்தொடர்ந்தான்.

வீடுவரை செல்வதற்கு அவசியமில்லாமல் போய்விட்டது. மேஜையை அப்போதுதான் மடக்கிக்கொண்டிருந்த சிவகாமியக்கா கேள்வியெதுவும் கேட்காமல் வீட்டுச் சாவியை வாங்கிக்கொண்டாள். அந்நிய மனிதர் உடன் இல்லாவிட்டாலும் அக்கா எதுவும் கேட்டிருக்கமாட்டாள். பிறந்தது முதலே பேச இயலாதவள் அவள், காதும் கேட்காது.

✠

ஏப்ரல், 1976

ஆற்றுப் பாலத்தில் உட்கார்ந்திருந்தான் பால்பாண்டி. முதுகுப்பக்கம் தார்ச்சாலையில் எப்போதாவது லாரியோ மாட்டுவண்டியோ சைக்கிளோ செல்லும்போது புட்டத்தில் பாலத்தின் அதிர்வை உணர முடிந்தது. சிறிய பாலம்தான். வெள்ளைக்காரன் கட்டிக் கொடுத்ததாக ஊர்ப்பெரிசுகள் சொல்லும். சாயங்காலம் மயங்கிவரும் நேரத்தில் பாலத்தையும் ஆற்றையும் அதன் கரைகள் இரண்டிலும் தலைவிரித்து நிற்கும் மரங்களையும் தீர்மானமான நிசப்தமொன்று கவிந்து மூடுவதை மௌனமாக வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

இந்த வேளையில் பாலத்தில் அமர்ந்தது கிடையாது. முனியாண்டி கோயில் கிணற்றடியில் சென்று அமர்கிற நேரம் இது. அங்கே இந்த நேரத்துக்கு கூடடையும் பறவைகளின் கெச்சட்டம் ரகளையாக இருக்கும். குறிப்பாகக் கிளிகளின் ஒலி. அதைக் கேட்டுக்கொண்டு, ஒவ்வொரு சொட்டாக இருட்டு வீழ்வதைப் பார்த்துக்கொண்டு இருப்பதில் அலாதியான போதை உண்டு. உலகம் முழுக்கவே பறவைக் குரல்களால் நிறைந்துவிட்ட மாதிரியும், அதில் தான் முங்கி முங்கி எழுவது மாதிரியும் தோன்றும். தான் பேச முயன்றால் தனது தொண்டையிலிருந்தும் பறவைக் குரல்தான் வெளியேறும் என்றுகூடத் தோன்றும்.

ஆனால், கருமாதி முடியும்வரை கோயிலுக்குப் போகக் கூடாது என்று சொல்லிவிட்டார்கள். நேற்றே கருமாதி முடிந்தும் விட்டது. ஆனாலும், தினசரி வந்து பாலத்தில் அமர்ந்த பழக்கத்தில் கால்கள் தாமாக இங்கே இழுத்துவந்துவிட்டன. பால்பாண்டியின் மன ஆழத்திலிருந்து ஒரு பெருமூச்சு வெளியேறியது.

நீர் வரத்து நின்று ஒரு மாதமாகிவிட்ட ஆற்றில் மணல் பரந்து கிடந்தது. தொலைவில் ஊற்றிலிருந்து நீர் சேந்திக்கொண்டு போய்வரும் பெண்கள் நெட்டுக்குத்தாய் நடக்கும் கரப்பான் பூச்சிகள்போலத் தென்பட்டார்கள். அவர்களைத் தாண்டி வலப்புறமாகத் திரும்பி வாடிப்பட்டி நோக்கிச் செல்கிறது முல்லையாறு. ஆற்றின் வளைவுக்கு

அப்பால் வறண்டு கிடக்கும் வயல்கள். வயல்கள் முடியும் இடத்தில் சரக்கு ரயில் ஒன்று வரிசையாய்க் கோத்த அரக்குத் தீப்பெட்டிகள்போல ஓசையின்றி நகர்கிறது. மரவட்டை மாதிரி ஊர்ந்து நகர்ந்த வண்டி பார்வையிலிருந்து மறைந்ததும் மீண்டும் தொடுவானம் திறந்து கொண்டது.

மொட்டைத் தலையை வலதுகை தன்னிச்சையாக வருடியது. முதுகில் யாரோ தொட்டார்கள். திரும்பிப் பார்த்தான். சுப்பா நாயக்கர். இவருடைய வயலும் அப்பாவின் காவலில்தான் இருந்தது. கந்தசாமி சேர்வகாரரின் வயலுக்கு மேற்காலே உள்ள மூணு ஏக்கர்.

என்னப்பு, காவக்காரரு காலமாயிட்டாராமுல்ல?

ஆற்றை நோக்கித் தொங்கவிட்டிருந்த கால்களை அவசரமாக சாலையின் புறம் திருப்பி எழுந்து நின்றான் பால்பாண்டி. வேட்டியைச் சரிசெய்துகொண்டான்.

ஆமாங்கய்யா.

நல்ல மனுசன். சீக்கு வராமலே போயிச் சேந்துருக்கலாம். விதி யாரெ விடுது? நான் வெளியூரு போயிருந்தேன். காலைலதான் வந்தேன். வீட்டுல சொல்லிச்சு. நாளைக்கி விடியாலெ வந்து ஆத்தாளெப் பாக்குறேன்.

மௌனமாகத் தலையாட்டினான். அவர் நகர்ந்தார். ஆற்றின் கரையோடு மேல்நாச்சிகுளம் செல்லும் பாதையில் அவர் திரும்பி விந்தி விந்தி நடந்து செல்வதைப் பார்த்துக்கொண்டேயிருந்தான். நாயக்கருக்கு ஒரு காலைவிட மற்றது நீளம் குறைவு. பக்கவாட்டில் நன்கு ஆடியபடி அவர் நடந்து செல்லும்போது, உடம்பை இவ்வளவு ஆட்டினால் வலிக்காதா என்று எப்போதும் தோன்றும்.

சுப்பா நாயக்கரை மாதிரித்தான் கந்தசாமி சேர்வகாரரும். இரண்டு பேருமே அப்பாவைப் பண்ணையாள் என்று நினைத்ததில்லை. சிநேகிதர் மாதிரித்தான் நடத்துவார்கள். மூவருமாகச் சேர்ந்து சில சில்லறை வேலைகள் செய்திருக்கிறார்கள் என்று ஊருக்குள் எப்போதாவது யாராவது பேசிக்கொள்வது காதில் விழும். அதெல்லாம் இவர்களுடைய வாலிபத்தில்.

சேர்வகாரர் நல்ல மனிதர். இவர்களுக்கு மிச்சம் இருந்த கடைசிக் காணியை அவருக்குத்தான் விற்றது. நடைமுறை விலையைவிட நாலாயிரம் ரூபாய் அதிகம் கொடுத்து வாங்கிக்கொண்டார். அம்மா,

அதெல்லாம் எதுக்குங்க. உண்டான கிரயத்தைக் குடுங்க போதும். ஒங்க துட்டு எங்களுக்கென்னாத்துக்கு?

என்றாள். அவர் சொன்னார்.

குடுக்குறவன் சந்தோசமாக் குடுத்தாத்தான் வெளைச்சல் நல்லா இருக்கும் ராசம்மா.

வம்முச வம்முசமா உளுது பெளச்ச வயலெ என்னாண்டு சந்தோசமாக் குடுக்குறது.

அப்பிடியில்லத்தா, நெலமும் ஒடமஸ்தனுக்கு வாக்கப்படுற பொம்பளை மாருதித்தான். சந்தோசமா நம்மளோடு வந்து சேரலேண்டு வையி, ஊராம் பொண்டாட்டியோட குடுத்தனம் பண்ற மாருதி ஆயிரும். களுத்துலே அவன் கட்டின தாலி தொங்கும், வாள்க்கையெ நம்மோட நடத்துவா.

அவர் சிரித்தார்.

வேண்டாத பேச்செல்லாம் ஏன் பேசுறீக.

அம்மா முகத்தை நொடித்தாள். அப்பாவும் சேர்வகாரரும் சிரித்தார்கள்...

மறுபடி பாலத்தில் ஏறி உட்கார்ந்தான். ஆற்று மணலில் முன்பிருந்த பளபளப்பு இல்லை. இந்தச் சில நிமிடங்களில் வெளிச்சம் வேகமாக மங்கிவிட்டது. ஊற்றிலிருந்து பெண்களின் கடைசி வரிசை நீங்கி நகர்கிறது. உறைக்கிணறுபோல அகலமாகத் தோண்டிய ஊற்று தனியாகக் கிடந்ததைப் பார்க்க மனம் சங்கடமாக உணர்ந்தது.

வீடு திரும்பலாம். பாலத்திலிருந்து இறங்கி நடந்தான்.

ஊர்க்கோடியில் மட்டப்பாறை நோக்கிச் சாலை வளையுமிடத்தில் மாரியம்மன் கோயில் திடலுக்கு இடது பக்கம் இருந்த ஒற்றைக் கூரை வீடும், வாசலைச் சுற்றி இருந்த முள்கம்பி வேலியும் அதில் கிடந்த கிழிந்த துணித் துண்டும் ஏகாந்தமாக இருந்தன. வாசல் படலில் கைவைக்கும் முன் சற்றுத் தயங்கினான்.

வீட்டுக்குள் அம்மா பிலாக்கணம் வைப்பது சன்னமாகக் கேட்டது. பகல் முழுவதும் படுத்தே கிடந்தாள். தானாகப் பாடி அழுது கொள்வாள். படுத்த வாக்கிலேயே மூக்கைச் சிந்தி உதறுவாள். திடுமென்று எழுந்து உட்கார்ந்து மாரில் அறைந்துகொள்வாள். பிறகு மீண்டும் சுவரைப் பார்த்துப் படுக்கை. அடங்கிய குரலில் ஒப்பாரி.

கட்டெப் புளிய மரம் என்னெப் பெத்த ஆத்தா

கல்க்கண்டு காச்ச மரம்

கல்க்கண்டு தின்னமம்மா என்னெப் பெத்த ஆத்தா

களெ ஓய்ஞ்சு நிக்கிறமே...

படலைத் திறக்கும்போது கீல் சத்தமிட்டது. உள்ளேயிருந்து பூங்காவனத்தின் குரல் உரத்துக் கேட்டது.

அதாரு, வாசல்லே?

நாந்தாம்லா.

வீட்டுக்குள் வெளிச்சமூட்டுவதற்காக அரிக்கேன் விளக்கு போராடியது. இருட்டு தான் ஜெயித்த இடங்களிலெல்லாம் கனமாக அடர்ந்திருந்தது. ஊரிலுள்ள வீடுகளிலெல்லாம் மின்சாரம் இருக்கிறது.

கரண்டுக்குக் கட்டுற காசுக்கு எங்குட்டுப் போயிக் களவாங்க?

படிக்கிற பிள்ளெக எங்கிணெயும் படிச்சுக்கிரும்.

என்று அடித்துச் சொல்லிவிட்டார் அப்பா. மாரியம்மன் கோயில் வாசலில் இருந்த விளக்கடியில் படித்துத்தான் எஸ்ஸெஸ்ஸெல்லி எழுதினான் பால்பாண்டி.

நிலைவாசலுக்கு நேரெதிரில் மேசையில் நிறுத்திச் சுவரில் சாய்ந்த அப்பாவின் படத்தில் உருவம் துலக்கமின்றி நிழலாக இருந்தது. உள்ளறைக்குள் சென்று கொடியில் தொங்கிய துண்டை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டான். வழக்கம்போல, கோயில் வாசல் கிணற்றில் சென்று முகம் கைகால் கழுவிவரப் புறப்பட்டான். அதற்குள் உள்ளறையின் இருட்டு கண்களுக்குப் பழகிவிட்டது.

அம்மா சுவரோரமாகப் படுத்திருந்தாள். சாத்வீகமான பெண்மணி. அதிர்ந்து பேசி அறியாதவள். அப்பாவுடன் இவளை முடிச்சுப் போட்டது, தலையெழுத்தின் சதிதான். இருந்த நாள் முழுவதும் அடித்துத் துவைத்தெடுத்த மனிதனிடம் அவ்வளவு படிமானமாக இவள் வாழ்க்கை நடத்தியதற்கு இவள் பிறந்த குடும்பம்தான் காரணம். சரியாக விசாரிக்காமல் இந்த மனிதனுக்குக் கட்டிவைத்து விட்டார்கள்போல. பிற்பாடு இவரைப் பற்றித் தெரியவந்த நாள் முதலாய் 'வேணாம், அந்தக் களுதெப்பய. அத்து விட்டுப்புட்டு வந்துருத்தா' என்று பார்க்கும்போதெல்லாம் சொல்லிக்கொண்டேயிருந்த பெரியவர்களும் வரிசையாய்ப் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். இவள் 'புருசனைவிட்டு நகர மாட்டேன்' என்று உறுதியாக இருந்துவிட்டாள்.

பாவம். தோல் பெல்ட்டாலும், செருப்பாலும், காவல் கம்பாலும் எத்தனை அடி வாங்கியிருப்பாள். தலைமுடியைக் கொத்தாய்ப் பிடித்து அந்த மனிதன் சுவரில் மோதும்போதும் ஒரு சொல் எதிர்த்துப் பேச மாட்டாள்.

ஏத்தா இப்பிடிப் பொறுத்துப் போறே.

என்று பால்பாண்டி பலதடவை கேட்டிருக்கிறான்.

இப்பிடியெல்லாம் கேக்கக் கூடாதுப்பு. பாவம் ரவெ முளுக்க வயக்காட்டுலே அலையுதுல்ல. அந்த ஆத்தரத்தெ வேற யார்ட்டக் கொண்டி காட்டும்? நல்லா ராசாவாட்டாம் வாள வேண்டிய மனுசன். அவங்கப்பன் பாத்த பார்வெ. இப்பிடி ஆந்தெ மாரி அலையுது. நீ பச்சப்புள்ள. ஒனக்கு இதெல்லாம் சொன்னாப் புரியாது.

அம்மா சொல்வது சரிதான். அப்பாவின் தாத்தா மாடசாமித் தேவருக்கு ஊருக்குள் காரை வீடு இருந்தது. இருபது ஏக்கருக்குக் குறையாமல் வயல் இருந்தது. மூன்று போகம் விளையும் நஞ்சை. பாண்டியராஜபுரம் போகும் வழியில் இரண்டு தென்னந்தோப்புகள். இதெல்லாம் கேஸுக்காகச் செலவழித்ததுபோக மீந்தவை.

பூர்விகத்தில் விருதுநகருக்கு அருகே கள்ளிகுடி என்ற ஊரில்தான் வசித்து வந்திருக்கிறார். அங்கே யாரையோ கொலைசெய்துவிட்டாராம். குற்றம் ருசுவாகவில்லை என்று கோர்ட்டில் தீர்ப்புச் சொல்லி விட்டார்கள். இனி அந்த ஊர் வேண்டாம் என்று இங்கே வந்து குடியமர்ந்தாராம்.

விருதுபட்டிக்கார வக்யல்ட்ட பூர்வ செம்மத்திலெ வாங்குன கடனெத் தீத்துப்புட்டு இந்தூர்லெ வந்து ஒக்காந்தாம் மனுசன்.

என்று அப்பா ஒருநாள் குழந்தைகளுக்குக் கதையாகச் சொன்னார்.

சாயங்காலமாகிவிட்டால், சருவச் சட்டியில் கள் நிரப்பித் தம்ளரால் மொண்டு குடிப்பாராம். கையில் அரிவாளுடன் மந்தையில்போய் நின்றுகொண்டு ஒரே ஆட்டம் பாட்டம்தான். போகிற வருகிறவனையெல்லாம் வம்புக்கிழுப்பது.

நான் ஏளு கொலை செஞ்சு தப்பிச்சவண்டா.

என்று சவடால் பேசுவது. இப்படியே காலம் கழித்திருக்கிறார். சொத்து பத்து உள்ளவர் என்பதால் ஊர் சகித்துக்கொண்டது. அவர் இல்லாத இடங்களில்,

அவென் கள்ளிகுடி மாடசாமியில்லய்யா, கள்ளுகுடி மாடசாமி.

என்று புறணி பேசி ஆத்திரத்தைத் தணித்துக்கொள்ளுமாம்.

தேவருக்கு வினை அவருடைய மூத்த பையன் வடிவில் வந்து சேர்ந்தது. பால்பாண்டியின் அப்பாவுக்கு அப்பா. பாட்டனுக்குத் தெரியாத தேவடியாள் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் ஒருத்திகூட கிடையாது என்று ஊருக்குள் சொல்வார்கள்.

சொந்தமாக வில்வண்டி வைத்திருந்தார் அவர். உழவுக்குப் பயன்படுத்த முடியாத அளவுக்கு உயரமான ஜாதிக் காளைகள் ஒரு ஜோடி இருந்ததாம். வண்டிக்காரப் பிச்சையை வண்டியோட்டச் சொல்லிக் கிளம்பினால் வேறு ஏதோ சாதாரண வேலையாகச் செல்கிறார் என்று அர்த்தம். தாமாகவே ஓட்டிக்கொண்டு வெள்ளையும் சள்ளையுமாய்ப் புறப்பட்டால், சோழவந்தானிலோ நிலக்கோட்டையிலோ கூத்தியாள் வீட்டுக்குப் போகிறார் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

எங்காத்தா சின்ன வயசிலே போயிச் சேந்தது, இந்தாளுக்கு அவுத்துவிட்ட மாரி ஆயிருச்சு.

என்று அப்பா புலம்புவார். மாடசாமித் தேவர் மிச்சம் வைத்த நிலங்களும், தோப்புகளும் எவளெவள் உடம்பிலோ நெக்லசாகவும், சும்மலாகவும், தண்டட்டியாகவும், கொலுசாகவும் அலங்கரிக்கச் சென்றன.

சொத்தெல்லாம் தீர்ந்து வறுமைக்குள் குடும்பம் சறுக்கித் தரை சேர்ந்தபிறகும் ரொம்பகாலம் உயிருடனிருந்துதான் கொள்ளுப் பாட்டன் செத்தார். சவடால் மட்டும் மந்தையைவிட்டு நகர்ந்து, ஊர்க்கோடியில் அவர் போட்டுக்கொண்ட குடிசைக்குள் அடங்கிவிட்டது. அவர் சாகும்போது, பால்பாண்டிக்குப் பத்துவயது.

தாத்தா காலத்திலேயே கந்தசாமி சேர்வையிடம் காவக்காரராகச் சென்று சேர்ந்தார் அப்பா. கோபக்காரரே தவிர, நாணயமானவர் என்று பேரெடுத்தார். அக்கம்பக்கத்து வயல்களுக்கும் இவரையே காவல்காரராக நியமித்துக்கொண்டார்கள். அதற்குப் பொருத்தமான ஆள் என்று சதா நிரூபித்துக்கொண்டேயிருந்தார் அப்பா. இடுப்பில் கட்டிய தோல் பெல்ட்டில் எந்நேரமும் சூரிக்கத்தி செருகியிருப்பார். பேசிக்கொண்டேயிருக்கும்போது எப்போது காவல் கம்பு பேச ஆரம்பிக்கும் என்று தெரியாது. நாலைந்து சண்டைகளில் அரிவாள் வெட்டு போட்டு, ஜெயிலுக்கும் ஒரு தடவை போய் வந்திருக்கிறார். இதெல்லாம் 'காவக்காரர்' என்ற அந்தஸ்தை அதிகப்படுத்தவே செய்தன.

குழந்தைகள் பெரியவர்கள் ஆன பிறகு, ராக் காவலுக்குப் போகும்போது

சில நாட்கள் அம்மாவையும் கூட்டிச் சென்றுவிடுவார் அப்பா. அவர் ஆசையாய் வளர்த்த மாநிறக் கோம்பையனை இவர்களுக்குத் துணையாக விட்டுவிட்டுப் போவார். அது இரவு முழுக்க வாசலைச் சுற்றி வரும்.

அப்புராணிப் பொம்பளையாச்சே, இது போய்க் காவலுக்கு என்னத்தெ ஒத்தாசை செய்யும்.

என்று பாண்டியும் பூங்காவனமும் பேசிக்கொள்வார்கள். இன்னும் கொஞ்சம் பெரியவர்களான பிறகு அதன் பொருள் புரியத்தான் செய்தது. ஆனால், குழந்தைகள் அதைப் பற்றிப் பேசிக்கொள்வதை நிறுத்தியிருந்தார்கள்.

குழந்தைகள் பேசிக்கொள்ளாத இன்னொரு விஷயமும் உண்டு. மந்தையில் பலசரக்குக் கடை போட்டிருக்கும் செல்லக்கனி நாடாரின் மூத்த மகளை அப்பா இரண்டாந்தாரம் கட்டியிருக்கிறார் என்பதும், அவளுக்கு பால்பாண்டியின் வயசில் ஒரு மகன் இருக்கிறான் என்பதும். ஊருக்குள் சேர்மக்கனி எதிர்ப்படும்போது, பார்வையை விலக்கிக் கொள்வான் பால்பாண்டி...

அ ம்மா இந்த நேரத்தில் படுத்துக் கிடப்பவளே அல்ல. இழவுக்கு வந்த உறவினர்கள் கிளம்பிப் போனபிறகு வெறிச்சோடிவிட்ட வீட்டின் இறுக்கம் தாளாமல் படுத்திருக்கிறாள்... ஆக்குப்புரையிலிருந்து எட்டிப் பார்த்த பூங்காவனம்,

சோறு வைக்கட்டா?

என்றாள். அம்மா புரண்டு படுத்தாள்.

அப்பு, கைகாலெக் களுவிட்டு வந்துட்டியா?

ம்.

துன்னூறு பூசிக்கிட்டு அப்பன் படத்துக்கு வெளக்கேத்திப்புட்டுத்தான் சாப்பிடணும்.

பூங்காவனம் திருநீறு வைத்திருந்த மரவையைக் கொண்டுவந்து நீட்டினாள். விபூதியின் வாசனையை மீறி, விறகடுப்பின் நெருப்பு வாசனை அவளோடு வந்திருந்து மணந்தது. வேகமாய் எழுந்து வந்ததில் சரி செய்யாமல் விட்ட மாராப்பு. வளர்ந்திருந்த மார்பு ஒருக்களித்துத் தெரிந்தது.

பார்வையை அவசரமாய் விலக்கிக்கொண்டான் பால்பாண்டி. ‘பெரிய்ய

பிள்ளையாயிட்டா....' என்று உள்ளுக்குள் முனகிக்கொண்டான். இவனைவிட இரண்டு வயது சின்னவள். நாலைந்து வயது பெரியவள் மாதிரிப் பூரித்திருந்தாள்.

அப்பாவின் படத்துக்கு முன்னால் சென்று ஓரிரு கணங்கள் கண்மூடி நின்றான். அகல் விளக்கில் புதிய திரி போட்டுக் கொண்டு வந்தாள் பூங்காவனம். தீக்குச்சியை உரசியதும் அப்பாவின் முகம் சட்டென்று துலக்கமும் பொலிவும் கொண்டது. கட்டபொம்மன் படத்தில் வரும் சிவாஜிபோல தடித்த மீசை. நெரிந்த புருவங்கள். சதா கோபம் தங்கிய விழிகள். நேரில் எந்நேரமும் சிவந்திருக்கும். கறுப்பு வெள்ளைப் படம் என்பதால் சிவப்பு தெரியவில்லை. கடுகடுப்பு மட்டும் தெரிந்தது. வலது கன்னத்தில் மீசைக்குச் சற்றுக் கீழே, மரு போன்ற மச்சம்.

அப்பாவின் புகைப்படத்தில் மாட்டிய பூமாலை நன்கு வாடியிருப்பது அரையிருட்டிலும் தென்பட்டது. படத்திற்கு முன்பாக, நேற்றுக் காலையில் படையலாக வைத்தவை கலையாமல் இருந்தன. தேங்காய், வாழைப்பழச் சீப்பு, முழுக்க எரிந்து அடங்கிய ஊதுபத்திக் குச்சிகள் செருகிய ஒற்றை வாழைப்பழம், வெற்றிலையில் பரப்பிய விபூதி, அதன் மையத்தில் சூடம் எரிந்து அடங்கிய கறுப்புத்தடம், பீடிக்கட்டு, ஒரு முழு பாட்டில் சாராயம், மேசையின் நீளத்துக்குக் கிடத்தப்பட்டிருந்த வீச்சரிவாள். மேசையை ஒட்டிச் சுவரில் சார்த்திய காவல் கம்பு. மேசைக்கடியில் அப்பாவின் தோல்வார்ச் செருப்பு. அதன் அடிப்பகுதி முழுக்க ஆணிகளாக அடித்திருக்கும். தார்ச் சாலையில் நடந்தால் சரக் சரக் என்று சத்தம் கேட்கும். செருப்புக் காலால் மிதித்தே ஏகப்பட்ட பாம்புகளைக் கொன்றிருக்கிறார் அப்பா.

அப்பாவின் படத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டான். பூங்காவனம் விசித்தாள். அவளை இறுக்கி ஆறுதலாகத் தலையைத் தோளில் சாத்திக்கொள்ள வேண்டும் என்று தோன்றியது. அப்பா சத்தம் போடுவார். 'சமைஞ்ச புள்ளையெ என்னாடா தொட்டுப் பேசுறது. எந்தூரு வளக்கம் இது? ம்...?'

ம்...ம். அளுதுக்கிட்டு நிக்யாதே புள்ளெ. போனவுக போயிட்டாக. இருக்குறவுகளைப் பாக்க வேணாமா?

என்றவாறு எழுந்து உட்கார்ந்தாள் அம்மா. கண்ணைக் கசக்கிக்கொண்டே பூங்காவனம் அடுப்படியை நோக்கிச் சென்றாள்.

ராஜம்மா, ராஜம்மா...

வாசலில் பதட்டமாகக் குரல் கேட்டது. அர்ச்சகர் பெண்சாதி.

என்னாங்கம்மா?

அம்மா வாசலுக்குப் பாய்ந்தாள்.

வீட்டுக்குள்ளே பாம்பு வந்துருத்துடீ. சித்தே வந்து பாரேன்.

அம்மா உள்ளே வந்து மூலையில் சாத்தியிருந்த இன்னொரு காவல் கம்பை எடுத்துக்கொண்டு வேகமாகப் பின்தொடர்ந்தாள்.

ம ட்டப்பாறை வளைவில் ஊரின் கடைசி வீடாக இருப்பது இவர்கள் வீடு என்றால், இதற்கு முந்திய வீட்டில் பிள்ளையார் கோயில் அர்ச்சகர் குடியிருக்கிறார். வாடிப்பட்டியில் உள்ள ஒரு ஐயருக்குச் சொந்தமானது கோயில். பூஜைக்கும் பராமரிப்புக்குமாக அவர்கள் குடியிருக்கும் வீட்டைக் குடக்கூலியில்லாமல் கொடுத்திருக்கிறார். தவிர, ஊருக்குள் அவருக்கு இருக்கும் அரிசிமில்லில் கணக்கெழுதும் பொறுப்பும் அர்ச்சகருடையதுதான்.

ஒரே பெண் அவருக்கு. கோமதி. பூங்காவனம் வயது. இரண்டு பேரும் நெருங்கிய தோழிகள். ஒன்றாகவே படித்து வளர்ந்தார்கள். எட்டாம் வகுப்புவரை மட்டப்பாறையில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியில் போய்ப் படித்தார்கள். ஆறுமாத இடைவெளியில் வயதுக்கு வந்தார்கள். அதே இடைவெளியில் படிப்பையும் நிறுத்தினார்கள். ஒரே ஒரு வித்தியாசம், கோமதியைச் சுண்டினால் ரத்தம் வரும். பூங்காவனத்தைச் சுரண்டினால் வண்டி மை கசியும்.

இதைச் சொல்லி மூன்று பேரும் சிரித்துக்கொண்டிருந்தபோதுதான், அப்பா இவனைப் பிடரியில் அறைந்தார். 'பொட்டைப் புள்ளைககிட்ட என்னடா அரட்டெ....?'

யெண்ணே, சோத்தெத் தின்னு.

பூங்காவனம் அதட்டினாள். உருட்டிய கவளத்தை வாயை நோக்கி உயர்த்தியபோது பூங்காவனம் சொன்னாள்.

அண்ணே, சேர்வகாரரு வீட்டுலருந்து ஆள் வந்துச்சு.

பாதிவழியில் கையை நிறுத்திவிட்டுக் கேட்டான்.

என்னவாம்.

ஒன்னைய நாளைக்கிக் காலைல வந்து பாக்கச் சொன்னாராம்.

நான்தான் அன்னைக்கே சொல்லீட்டென்ல, இது நமக்கு ஒத்து வராதுண்டு....

வாய் நிறைய நிரம்பிய கவளம் ருசியாகப் பரவியது. ‘இந்தக் களுதை வெஞ்சனம் வைக்கிறது ஆத்தா கைப் பக்குவம் மாரியே இருக்கே’ என்று தோன்றியது. ‘இவ பொறுப்பு மட்டும் இல்லாட்டி, மருதை மாரி பெரிய ஊருக்குப் பெளப்பெத் தேடிப் போயிரலாம்...’

ஆத்தாகிட்டெத்தான் பேசிக்கிட்டுருந்தாரு.

என்னவாம்?

நீ வரலேண்டு சொன்னா, அந்தண்ணனை வேலைக்கி வச்சிருவாராம்.

எந்தண்ணனெ?

அதான் சேர்மக்கனி யண்ணனெ.

எடுத்த கவளத்தை தட்டில் வேகமாக வீசினான்.

அவன் என்னா ஒங்காத்தாளுக்குப் பெறந்தவனா. அவனெ அண்ணெங்கிண்ணெண்டு பேசாதலான்னு எம்புட்டு வாட்டி சொல்லீருக்கேன்.

பூங்காவனத்தின் கண்ணில் மளுக்கென்று நீர் கோத்தது. வலதுகை கண்ணை நோக்கி உயர்ந்தது. அந்தக் கணத்தில் தனக்குள் எதுவோ இளகுவதை உணர்ந்தான் பால்பாண்டி.

சரிலா...சரிலா... கண்ணைக் கசக்காதெ. நான்தான் எங்கிட்டுனாச்சும் வேலை தேடிப் போயிரப் போறேண்டு சொல்லிக்கிட்டே இருக்கேன்ல. போதும்த்தா, வம்முச வம்முசமா அருவாளையும் காவக்கம்பையும் தூக்கீட்டு அலையுறதா. அதான் எம்ளாய்மெண்டுல பதிஞ்சிருக்கம்ல. எங்கிட்டாச்சும் டவுனுப் பக்கம் போய் உக்காந்துர்றதெ விட்டுட்டு... அந்தாளு எவனை வேலைக்கி வச்சா நமக்கென்ன?

அப்பண்டா, ஏஞ் சக்காளத்திக்கிப் புருசனை விட்டுக்குடுத்தது பத்தாது, அவ பெத்த மகனுக்கு எம் புருசம் பாத்த உத்தியோகத்தெயும் குடுத்துறணும்ங்குறெ?

அம்மாவின் குரல் ஆங்காரமாய் இடைவெட்டியதும் திரும்பிப் பார்த்தார்கள் இருவரும். வாசல் திண்ணையில் உட்கார்ந்து ஒப்பு சொல்லி அழ ஆரம்பித்தாள் அம்மா. எச்சில் கையோடு எழுந்து வெளியில் வந்தான் பாண்டி.

ஆத்தா, அளுகாதத்தா.

உள்ளற வந்துனாச்சும் அளேன்.

என்று பின்னோடு வந்தாள் பூங்காவனம்.

அம்மா நிறுத்தவில்லை. புலம்புவது மட்டும் ஓய்ந்ததே தவிர, தொடர்ந்து ஊமை அழுகையாக அழுதுகொண்டிருந்தாள். மாலை மாலையாய்க் கண்ணீர் ஊற்றுவதும், முந்தானை நனைய நனையத் துடைத்துக்கொள்வதுமாக தன் ஏழுபிறவித் துக்கத்தை வெளியேற்றினாள். திடீரென்று ஞாபகம் வந்தவள்போல,

ஒனக்கு நான் என்னா கொறெ வச்சேன்? ஓஞ் செருப்பு மாரி நீ இளுத்த இளுப்புக்கெல்லாம் வரத்தானே செஞ்சேன்? காட்டுலேயும் மேட்டுலெயும் நீ பெணஞ்ச பெணப்புக்கெல்லாம் ஈடுகுடுத்தனா இல்லியா? அம்புட்டையும் வாங்கிக்கிட்டும், ஒனக்கு இன்னோரு நோணி கேட்டுருக்கு? நீ கெடந்தயே இந்த நாலு மாசம், அவளா வந்து பீ மூத்தரம் அள்ளுனா? இல்லெ, அவ பெத்த நாயி வந்து கொள்ளிபோட்டுச்சா...? நீயெல்லாம் நரகத்துக்குத்தாம் போயிருப்பே.

என்று காற்றை நோக்கித் தன் ஆத்திரத்தை வீசினாள்.

யாத்தா, அதேன் செத்துப்போன மனுசனுக்கு சாபம் வுடுறே. நீ வா சோத்தெத் தின்னு... விடியாலே நீராகாரம் குடிச்சதுண்ணே. இந்நேரம் வரைக்கும் பட்டினியாத்தாம் கெடந்துருக்கு. வெத்து வயிறு. அதேன் இந்த பொருமு பொருமுது.

என்று கண்ணீர் ஈரத்துடன் முறையிட்டாள் பூங்காவனம்.

சரித்தா. காலையிலே சேர்வகாரரெப் போயிப் பாக்குறேன். நீ அளுகாதே. எந்திரி. உள்ளாறெ வா.

என்றான் பால்பாண்டி. வெற்றியின் தள்ளாட்டத்துடன் திண்ணையை விட்டு எழுந்தாள் அம்மா. மூவரும் உள்ளே போகத் திரும்பியபோது, வாசல் இருட்டில் ஓர் உருவம் வந்து நின்றது.

பூங்கா... பூங்கா...

என்று மெல்லிய குரலில் அழைத்தது.

அர்ச்சகர் மகள் கோமதி. அவள் நின்றிருந்த இடத்தில் மட்டும் வெளிச்சம் பூத்துவிட்ட மாதிரி உணர்ந்தான் பாண்டி. செத்துப்போன மனுஷனுக்கு மட்டும்தான் இவர்கள் இருவரும் ஆண்பிள்ளை பெண்பிள்ளையாகத் தெரிந்தார்கள். மற்றபடி, கோமதிக்கும் பூங்காவனத்துக்கும் வித்தியாசம் தெரியாது இவனுக்கு. அவளும் இவனை அந்நியனாக நடத்தியதில்லை.

வயதுக்கு வந்த பிறகு சேர்ந்து விளையாட வருவதில்லை, தனியாக நின்று பேசுவதில்லை என்றாலும், பழைய பிரியமும் மரியாதையும் சற்றுத் தொலைவில் நின்றவாறு தொடரத்தான் செய்தன.

மாரியம்மன் கோயில் சாமி கும்பிடு நடக்கும்போது, பூசாரி அருள் வந்து அரிவாள்மீது நின்று சாமியாடுவார். அருள் இருக்கும்போது திருநீறு வாங்கக் கூட்டம் அலைமோதும். வெற்றி வீரனாகத் திரும்பும் பால்பாண்டி நீட்டும் உள்ளங்கையை அழுத்தி அம்மாவும் பூங்காவனமும் விபூதி எடுத்துக்கொள்ளும்போது, கோமதியும் அவள் தாயாரும் அதேவிதமாக எடுத்துக்கொள்வார் கள்.

சாமிகும்புடுக்கு ஊர்சாட்டி துட்டும் தானியமும் பிரிக்க ஆரம்பிக்கும்போதே ஏதாவது வலுச்சண்டை கிளப்பி, ஏற்பாடுகள் எதிலும் சாமி கொண்டாட்டத்திலும் கலந்து கொள்ளாமல் காவலுக்குப் போய்விடுவார் அப்பா.

கைய விட்டுத் துட்டுக்குடுக்க மாச்சப்பட்டுக்கிட்டுத்தான் இப்பிடி வெட்டிச் சண்டெ போடுது ஒங்கப்பென்.

என்று குழந்தைகளிடம் சொல்லிச் சிரிப்பாள் அம்மா... கோமதியிடம் பேசிவிட்டுத் திரும்பிய பூங்காவனம்.

ஆத்தா, கோமு கூத்துப் பாக்கக் கூப்புடுறா, போகட்டா?

என்றாள்.

கீழ்நாச்சிகுளம் பொட்டலில் தோல்பாவைக் கூத்துக்காரர்கள் டேராப் போட்டிருக்கிறார்கள். இன்றைக்கு ராமாயணக் கூத்து என்று காலையிலும் சாயங்காலமும் டமாரம் அடித்து அறிவித்துக்கொண்டு ஊர்பூராவும் வந்துவிட்டுப் போனார்கள். பத்துப் பைசா ஒரு டிக்கட்.

இருட்டீருச்சே. பொட்டெப்புள்ளெக என்னாண்டு தனியாப் போயிட்டு வருவீக?

அண்ணனெக் கூட்டீட்டுப் போறோம்.

ஆத்தா இங்கிணெ தனியாக் கெடக்குமேலா.

ஆமா, கொமரிப்புள்ளெ நானு.. தட்டு வண்டி கட்டியாந்து தூக்கீட்டுப் போயிருவான். நீ போப்பு. புள்ளைகளெ சூதானமாக் கூட்டிக்கிட்டு வா.

வீட்டுக்குள் சென்று அஞ்சறைப் பெட்டியிலிருந்து காசுகளை எடுத்துக் கொண்டாள் பூங்காவனம். வேட்டியை மாற்றி லுங்கி கட்டிக்கொண்டு

பால்பாண்டி கிளம்பி வெளியே வரும்போது,

வெறுங்கையாவா அப்பு போறே? அந்தக் கம்பெ எடுத்துக்கிறக் கூடாது? கையோடெ காவலுக்கு...

அதெல்லாம் ஒம் புருசனோடெ போகட்டும். எனக்கு வேணாம்.

என்னப்பு, சாயங்காலம்தானே சேர்வகாரரெப் பாக்கப் போயிர்றேண்டு சொன்ன?

அது வேலைக்கிச் சேந்தப்பறம்தானே? இப்ப எதுக்கு?

அம்மாவின் பதிலுக்குக் காத்திராமல் இறங்கி வேகமாக நடந்தான் எட்டி நடந்துகொண்டிருந்த சிநேகிதிகளைப் பிடிப்பதற்காக.

கீ ழ்நாச்சிகுளம் போய்ச் சேர்ந்தபோது ஏழரை மணியாகிவிட்டது. ஊர் மந்தையில் போட்டிருந்த டேரா முன்னால் ஏகப்பட்ட பேர் நின்றிருந்தார்கள். 'இன்னம் செத்தே நேரத்தில் ஆரமிச்சிருவான்' என்று நினைத்துக்கொண்டான் பால்பாண்டி. இவர்கள் அரங்கத்துக்குள் நுழையவும், திரையில் வெளிச்சம் படரவும் சரியாய் இருந்தது.

திரைக்குப் பின்னாலிருந்து ஒளிர்ந்த வெளிச்சத்தின் முன்னால் சுமார் எட்டடிக்கு எட்டடி வெட்டவெளி இருந்தது. திடீரென்று, கரகரத்த குரலில் ரிக்கார்டு பாட ஆரம்பித்தது. திரைக்குப் பக்கவாட்டிலிருந்து ஒரு குண்டுப்பெண் திடுதிடுவென்று அந்த வெட்டவெளிக்குள் ஓடிவந்து நின்றாள். பாவாடை தாவணி, முகத்தில் அழுத்தமாக ரோஸ் பவுடர் பூச்சு, காலில் கொஞ்சம் அடர்த்தியான கொத்துக்கள் கொண்ட கொலுசு, கை முழுக்கக் கண்ணாடி வளையல்கள். சபைக்கு வணக்கம் கூறும் அபிநயம் பிடித்துவிட்டு திங்குதிங்கென்று ஆட ஆரம்பித்தாள்.

ஆடை முழுதும் நனைய நனைய மழையடிக்குதடி...

சினிமாவில் பெண்கள் ஆடும்போது கிடைக்காத கிளுகிளுப்பு இந்தப் பெண்ணின் ஆட்டத்தில் இருந்தது. வியர்க்க வியர்க்க இரண்டு மூன்று பாட்டுகளுக்கு அவள் ஆடி முடித்து மறைந்ததும் பாவைக்கூத்து தொடங்கியது. வாலி வதம்.

நிகழ்ச்சி முடிந்ததும் கூட்டத்தை முந்திக்கொண்டு கோமதியும், பூங்காவனமும் வெளியேறினார்கள். 'இத்தனை நேரம் பொம்மைகளைப் பார்த்துக்கொண்டிருந்ததில் என்ன மிச்சம்' என்று யோசித்தவாறு சற்று இடைவெளிவிட்டுப் பின்தொடர்ந்தான் பால்பாண்டி. மந்தையைவிட்டு வெளியேறி கரட்டுப்பட்டிச் சாலையில் திரும்பும் இடத்தில் நாலைந்து பேர் நின்றிருந்தார்கள். தெருவிளக்கின் ஒளியில் அவர்களது உருவங்கள்

தெளிவாய்த் தெரிந்தன. முகங்களில் இருட்டாக நிழல் விழுந்திருந்தது. பேச்சுக் குரல்கள் மற்றும் அவர்கள் நின்றிருந்த தோரணையை வைத்து இளைஞர்கள் என்று யூகிக்க முடிந்தது. பெண்கள் இருவரும் கால்களைச் சற்று எட்டிப்போட்டு விரைவாக நடந்தார்கள்... அவர்களில் ஒருவன் உரத்துக் குரல் விடுத்தான்.

யே, இங்க பார்றா. கூத்துக்கு முன்னெ ஆடுன குட்டி இந்தா நடந்து வருது. ஏத்தா, உள்ளாறே மட்டும்தேன் ஆடுவியா? நாங்க காசு குடுத்தா ஆட மாட்டியாக்கும்?

அடுத்தவன் பதில் சொன்னான்.

ஆடுறது என்னா மாப்ளே. நீ அவ கேக்குற காசெக் குடு. நீ சொல்லுறதெல்லாம் செய்வா. என்னாத்தா, செய்வேல்ல?

அண்ணே, ஆள் பாத்துப் பேசுங்கண்ணே.

என்றான் பால்பாண்டி.

நீ யென்னாடா அவளுக்கு மாமாவா? ஆளெப் பாத்துட்டுத் தானெடா பேசுறாக. நாங்க என்னா குருட்டுக் கூதிகளா?

அண்ணே, வார்த்தையெ விடாதீங்கண்ணே...

அவர்கள் நின்றிருந்த இடத்தைப் பெண்கள் இருவரும் கடந்திருந்தார்கள். பால்பாண்டி வெகுவாக நெருங்கியிருந்தான். சாராயத்தின் வீச்சம் நெடியடித்தது.

...நாங்க கரட்டுப்பட்டிக்காரவுகண்ணே. கூத்துப் பாக்க வந்தவுக...

அப்ப நாங்க என்னா...

என்று எதுகையாக அவன் வீசிய வாக்கியத்தில் பால்பாண்டிக்குள் ரத்தம் உடனடியாகக் கொதிநிலையடைந்து அவன் சட்டையின் முன்பகுதியைக் கொத்தாகப் பிடித்தான்.

...அவளெச் சொன்னா ஒனக்கு ஏம்லா கோவம் வருது. நீ யென்னா அவளெ வச்சிருக்கியா? எனக்கு ஒன்னையும் தெரியும், ஒங்கப்பனையும் தெரியும்.

அவன் கால்கள் நிலையாக நிற்க மறுப்பதைக் கவனித்தான் பால்பாண்டி. இதற்குள் முகம் தெரியாது நின்றிருந்தவர்களில் ஒருவன் வந்து நிதானமாக இவன் கையை அவன் சட்டையிலிருந்து விடுவித்தான். சாந்தமான குரலில் சொன்னான்.

போங்க பிரதர். மப்புல இருக்காரு. ஸீரியஸா எடுத்துக்கிறாதீங்க. புள்ளெகளெ பத்தரமாக் கூட்டிட்டுப் போங்க.

ஆமா, காலைல நாங்க வாறோம். மெத்தையெ விரிச்சு பூப்போட்டு வையி. பக்கத்துல ஒரு வெளக்கெப் பிடிச்சுக்கிட்டு நிண்டாலும் செரிதான்.

விலக்கிவிட்டவன் வார்த்தைகளால் கொஞ்சம் கொதி இறங்கிய ரத்தம் சொளேரென்று உச்சந்தலைக்கு ஏறியது. வம்பிழுத்தவன் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான் பால்பாண்டி. இதுவரை மௌனமாக நின்றிருந்த மற்றவர்கள் இவனை நோக்கிப் பாய்ந்தார்கள்.

ஏக காலத்தில் நாலைந்து ஜோடிக் கைகள் மொத்தின. இலக்கில்லாமல் காற்றில் கைகள் இரண்டையும் வீசினான் பால்பாண்டி. முன்னர் விலக்கிவிட்டவன் இவனைச் சுற்றிச்சுற்றி வந்து பாதுகாக்க முயன்றான். சில அடிகளுக்கு அப்பால் இருந்து பெண்கள் இருவரும் அலறினார்கள். மந்தையில் இன்னும் முழுக்கக் கலையாமலிருந்த கூட்டத்திலிருந்து சிலர் இவர்களை நோக்கி ஓடி வந்தார்கள்.

தாக்கிய கைகள் தாமாகப் பின்வாங்கின. அவர்கள் எதிர்த்திசையில் சோழவந்தான் நோக்கி ஓடத் தொடங்கினார்கள். விலக்கிவிட்டவன் அந்தப் பதட்டத்திலும் பால்பாண்டியிடம்,

ஸாரி, ஸாரி பிரதர்.

என்று முனகிவிட்டு நண்பர்களைத் தொடர்ந்து ஓடினான். காக்க வந்த கூட்டம் நெருங்குவது பால்பாண்டியின் கவனத்தில் பட்டது. சிநேகிதிகள் இருவரையும்,

ஓடுங்கலா.

என்று அதட்டிவிட்டு அவர்கள் பின்னால் தானும் ஓடினான். சேவாங்கோவில் சுடுகாடுவரை ஓடி ஓய்ந்ததும் பின்னால் யாரும் தொடரவில்லை என்று உறுதிப்பட்டது. மூச்சிரைக்க நடக்கத் தொடங்கினார்கள். ஒருவருக்கொருவர் பேசாமலே நடந்தார்கள்.

பால்பாண்டி தன் முதுகில் கைகள் பதிந்த தடங்களை கையெட்டும்வரை நீட்டித் துடைக்க முயன்றான். வலியொன்றும் இல்லை. அய்யா அடிப்பதில் கால்பங்கு உறைப்பு இல்லை இந்தப் பயல்களின் கையில். ஆனால், அவர்கள் கைகள் பட்ட இடத்தில் கறைபோல அவமானம் பூசிய மாதிரி ஓர் உணர்வு. காவக்கம்பை எடுத்துக்கொண்டு போகச் சொன்ன அம்மாவின் பேச்சைக் கேட்டிருக்கலாம்.

விலக்கிவிட முயன்றவனின் முகம் ஞாபகம் வந்தது. அவனும் ஒரு மூன்று மாசம் சோழவந்தான் பள்ளியில் வந்து படித்தவன்தான். இவர்கள் சாதிக்காரன். பொதுத் தேர்வு எழுதவில்லை. அரைப் பரிட்சையுடன் நின்றுவிட்டான். வசதியான குடும்பம். மொக்கையனோ, வெள்ளையனோ பெயர் ஞாபகம் வரவில்லை. அவனும் இல்லாவிட்டால் இன்னும் ரணகளமாகியிருக்கும். என்னவெல்லாம் நடந்திருக்குமோ...

ஊர் எல்லை முனியாண்டி கோயில் ஸீரோ வாட் பல்பு தெரிந்தது.

யா ரோ தொட்டு உலுக்குகிற உணர்வு. பூங்காவனத்தின் குரல் எங்கேயோ தொலைவிலிருந்து திரும்பத் திரும்பக் கூப்பிட்டது.

யெண்ணே... யெண்ணே... முளிச்சுக்கண்ணே. எந்திரிண்ணே...

திரும்பிப் படுத்துக் கண்களைத் திறந்தால் கூசியது. விடிந்து வெகு நேரமாகிவிட்டது போலிருக்கிறது. புரண்டு படுத்தான்.

என்னலா?

ஐயர் வீட்டம்மா வந்து கூப்புடுது. வீட்டுக்குள்ளாறே அணில் கூடு கட்டியிருக்காம். வந்து பிரிச்சுப் போடச் சொல்லுது.

ஐயர் வீடு என்ற சொற்றொடரின் வழி மனத்துக்குள் திரண்ட சித்திரங்கள் முந்தைய இரவில் நிகழ்ந்த தகராறில் கொண்டு சேர்த்தன. விநோதமான கசப்பு அடித்தொண்டையில் ஊறியது. 'வர மாட்டேண்டு சொல்லு' என்று சொல்ல வாயெடுத்தவன்.

அப்பறமேட்டு வாரேண்டு சொல்லு.

என்று சொல்லி முடித்தான்.

அந்த அம்மாள் வீடு திரும்புவதற்குச் சற்று அவகாசம் கொடுத்து வெளியில் வந்தவன், வாசலில் நின்ற வேப்பமரத்திலிருந்து ஒரு குச்சியை ஒடித்துக் கடைவாயில் சவைத்துக் குச்சம் உருவாக்கியபடி திண்ணையில் உட்கார்ந்தான். இந்தப் பக்கம் நாலு அந்தப்பக்கம் நாலு என்று இழுத்திருப்பான், சோழவந்தான் ரோட்டிலிருந்து இவர்கள் வீட்டை நோக்கி யாரோ ஒரு பெண்பிள்ளை ஓடி வருவது தென்பட்டது. அட, கோமதி.

வெற்றுக் குடத்தைக் கையில் பிடித்தவாறு ஓடிவந்தாள். இவர்கள் வீட்டைக் கடக்கும்போது அவள் குமுறுவது தெரிந்தது. அவர்கள் வீட்டுக்குள் நுழையும்போதே குரலெடுத்து அலறுவது கேட்டது.

ஏலா, பூங்கா. அதென்னாண்டு போய்க் கேளு, போ.

என்று குரல் விடுத்தான். அவள் போனாள். பந்தடித்த மாதிரி வந்து விஷயம் சொன்னாள்.

அந்த இளைஞர்கள் முல்லையாற்றுப் பாலத்துக்கருகில் நிற்கிறார்களாம். நேற்றுத் தகராறு செய்தவன் இன்றைக்கும் குடித்துவிட்டு வந்திருக்கிறானாம். ஊற்றில் தண்ணீர் சேந்தப் போன கோமதியைக் கையைப் பிடித்து இழுத்து அசிங்க அசிங்கமாய்ப் பேசினானாம்... பால்பாண்டிக்கு இருளில் தன்மீது விழுந்த அடிகள் உடனடியாக உணர்வு வந்து, உடலெங்கும் ஒரு பரபரப்பு எழும்பியது. வீட்டுக்குள் நுழைந்து அரிவாளை எடுத்து இடுப்பில் செருகிக்கொண்டு வேகமாக வெளியேறினான். ஆக்குப்புரையிலிருந்து வெளியில் வந்த அம்மா,

எங்கப்பு இம்புட்டு வேகமா...

என்று கவலையாகக் கேட்டு முடிக்கும்போது சோழவந்தான் சாலையில் ஏறியிருந்தான்.

அதற்கப்புறம் நடந்த விஷயங்கள் வாழ்நாள் முழுவதும் தான் சுமந்து திரியப்போகிற அழுக்கு மூட்டை என்று அப்போது பால்பாண்டிக்குத் தெரியாது.

கோ னார் டீக்கடை முன்னால் வந்தபோது முல்லையாற்றுப் பாலம் துலக்கமாகத் தெரிந்தது. முந்தைய இரவு கீழ்நாச்சிகுளத்தின் இருள் தந்த தைரியத்தில் சலம்பியவன், வெளிச்சத்தால் தனக்கு ஒன்றும் பிரச்னையில்லை என்பதுபோல வந்திருந்தான். அவர்கள் யார்வசமும் ஒரு ஆயுதமும் இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. அவர்கள் நின்று சிரித்துக் கொண்டிருந்த இடத்தில் கரட்டுப்பட்டிக்காரர்கள் ஓரிருவர் நின்று வேடிக்கை பார்த்தார்களே தவிர, கண்டிக்கும் விதமாகவோ, கட்டுப்படுத்தும் விதமாகவோ கூட்டம் எதுவும் சேராதிருந்தது.

அப்படியென்றால், காவக்காரரின் குடும்பம் நிஜமாகவே அநாதையாகிவிட்டது என்றுதானே அர்த்தம். அர்ச்சகர் குடும்பத்தைக் கேட்கவே வேண்டாம். அவர்களும் ஊர்க்காரர்களுடன் ஒட்ட மாட்டார்கள், ஊர்க்காரர்களுக்கும் அவர்களைப் பிடிக்காது.

உலகத்திலுள்ள அத்தனைபேரும் சேர்ந்து தன்னையும் கோமதியையும் சேர்த்துக் கேவலமாகப் பேசிச் சிரிக்கிற மாதிரியும், அதற்கு உதவுகிற மாதிரித் தானும் அவளும் நெருக்கமாக நிற்கிற மாதிரியும் ஒரு காட்சி பால்பாண்டியின் மனக்கண்ணில் விரிந்தது. ‘எல்லாப் பயகளுக்கும்

இன்னைக்கி ஒரு புத்தி காட்டிற வேண்டியதுதான்' என்று சிலிர்த்துக்கொண்டான்.

பாலத்தை நோக்கியும், விஷம் தோய்ந்த ஒரு தருணத்தை நோக்கியும் கண்மண் தெரியாத வேகத்தில் நெருங்கியவனை,

வப்பாட்டிக்கி வக்காலத்து வாங்குறதுக்கு இந்தா வந்துட்டாண்டா அந்தத் தேவிடியா மகன்.

என்று கரகரத்த வாக்கியம் வரவேற்றது.

அ டுத்த பத்தாவது நிமிடத்தில் வயல்வரப்புகளின் வழியாக வாடிப்பட்டி நோக்கி ஓடிக்கொண்டிருந்தான் பால்பாண்டி, சேரும் இடம் குறித்துக் கடுகளவு தீர்மானமும் இன்றி.

பாலத்தருகில், மணிக்கட்டில் வெட்டுப்பட்டு உதிர்ந்த உள்ளங்கையின் விரல்கள் ஆகாயத்தை நோக்கி விறைத்திருந்தன தண்டு ஒடிந்த இடத்தில் சிவப்புநிறமாய்ப் பால்கசிந்த விசித்திரமலர் மாதிரி.

விலக்க வந்து வலதுகையை இழந்தவனை தாங்கள் வந்த வில் வண்டியில் போட்டுக்கொண்டு சோழவந்தானுக்கு விரைந்த நண்பர்களில், ஒருவன் மட்டும் அடிக்கடி தலையில் அடித்துக்கொண்டான். போதை சுத்தமாக இறங்கிவிட்ட முகத்தில் பெரும் பீதியும் குற்றவுணர்வும் வெள்ளையாகப் படிந்திருந்தன. மாநிலத்தில் புதிதாய் உதித்திருந்த அரசியல் கட்சியில், மாவட்ட முக்கியஸ்தரின் மகன் அவன்.

✠

ஆகஸ்ட், 1980

கு திரைவண்டி வந்து நின்றது. சொர்ணம் அத்தை இறங்கினாள். அப்பாவுடைய தகப்பனாருக்கு உடன்பிறந்த சகோதரி. அப்பாவின் வயதுதான் அவருடைய அத்தைக்கும். 'அந்தக் காலத்தில் இதெல்லாம் ரொம்ப சகஜம்' என்று சொல்லிச் சிரிப்பாள் மன்னி.

அத்தைக்கு முன்னதாக அவள் நெற்றியில் விளிம்பு குலைந்து படர்ந்திருந்த ஒரு ரூபாய் அகலக் குங்குமப் பொட்டு தனியாகத் தெறித்து ஓடிவந்தது மாதிரி இருந்தது. எழுபத்திச் சொச்சம் வயது இருக்கும். தளதளவென்று மிளகாய்ப் பழம்போல மினுங்குகிறாள். அத்தையின் குணமும் மிளகாய்தான். வெடுக் வெடுக்கென்று பேசுகிறவள். அவளைப் பார்த்தவுடனே சிவராமனின் அடிமனத்தில் எரிச்சல் மண்டும்.

இத்தனை வருடத்தாம்பத்தியத்துக்குப் பிறகும் புருஷக் கிழவர் இவள் கிழித்த கோட்டைத் தாண்டமாட்டார். அவர் இவளைவிடக் குறைந்தது பத்து வருடம் மூத்தவராய் இருப்பார்... பஞ்சுக்கொத்துபோல நரைத்திருந்த தலையைக் கலைத்துவிட்டுக் கொண்டாள் அத்தை.

வச்சு, இப்பிடிப் பண்ணிட்டியேடீம்மா.

என்று கூவிக்கொண்டு வந்தாள். சாதாரணமாகவே அத்தை பேசும்போது எண்ணெய் போடாத கீல்போலக் கேட்கும். சிவராமனைப் பார்த்து உச்சஸ்தாயியில் வீறிட்டாள்.

தாய்க்குத் தலைப்பிள்ளையா ஒன்னை வளத்தாளேடா சிவராமா. படுபாவி, இப்பிடிப் பண்ணிட்டாளே.

மன்னிக்குக் குழந்தை பிறக்கவில்லை. விதவிதமான வைத்திய முறைகளுக்குப்போய், கோயில் கோயிலாகப் போய், ஏகப்பட்ட விரதங்கள் இருந்தும் வயிறு கடைசிவரை திறக்கவில்லை. ஆனால், அதுபற்றிய புகார் எதுவும் இல்லாமலே வாழ்ந்து முடித்துவிட்டுக் கிளம்பிவிட்டாள். சதா மலர்ந்திருக்கும் முகத்தில் சிறு சுளிப்புகூட இருக்காது

எனக்கென்ன கொறை, அதான் சிவராமன் இருக்கானே. என் மூத்த பிள்ளை?

என்று சொல்லிவிட்டு அருகில் உட்கார்ந்திருப்பவனைத் தோளோடு இறுக்கிக் கட்டிக் கொள்வாள்...

அத்தையை உடம்போடு சேர்த்து அணைத்தபடி வீட்டுக்குள் அழைத்துச் சென்றான். அத்தையின் உடம்பு மிருதுவாக, வெதுவெதுவென்று இருந்தது. உடம்புக்குள் மின்னோட்டம்போல ஒரு நடுக்கம் உணரக் கிடைத்தது. இதுநாள்வரை அத்தை சம்பந்தமாக மனத்துக்குள் வளர்ந்து வந்திருந்த எதிர்மறையான எண்ணங்களெல்லாம் சட்டென்று எடையிழந்த மாதிரிப் பட்டது சிவராமனுக்கு.

நெடுஞ்சாண்கிடையாக மல்லாந்திருந்தாள் மன்னி. வழக்கமான புன்முறுவல் இல்லாதிருந்ததே தவிர, முகம் மலர்ந்துதான் இருந்தது. தலைமாட்டில் அகல் விளக்கும், கொத்தாக ஊதுபத்தியும் ஏற்றி வைத்திருந்தார்கள். சுற்றிலும் இருந்த நாலைந்து பெண்மணிகள் கிசுகிசுப்பாகத் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். அத்தை நுழைந்ததும் சட்டென்று பேச்சை நிறுத்தினார்கள்.

மன்னியை விட்டு நாலைந்தடி தள்ளி, தலையில் கைவைத்துச் சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்தார் அண்ணா. முகம் அண்ணாந்திருந்தது. இமைகள் மூடியிருந்தன. இதுவரை கழிந்த அத்தனை வருடங்களையும் உள்ளே நிதானமாக ஓட்டிப் பார்த்துக்கொண்டிருக்கிறாரோ என்னவோ. மன்னியை முழுப் பேர் சொல்லித்தான் அழைப்பார். ஒருநாளைக்கு ஆயிரம் தடவையாவது ‘வத்ஸலா, வத்ஸலா’ என்று கூப்பிட்டு மாளாது அவருக்கு. சாதுவான ஜீவன். அதிர்ந்துபேசத் தெரியாது, பாவம். இனி இந்த மனிதர் என்ன செய்வார்?

சட்டென்று அடிவயிற்றில் எதையோ செருகினாற்போல ஒரு உணர்வு. அண்ணாவைச் சீண்டுவதற்காக மன்னி குறும்பாகப் படுத்திருக்கிறாள் என்றும், விஷயம் தெரிந்த பிறகும் கொஞ்சம் ஜாஸ்தியாக பாவலா செய்கிறார் அண்ணா என்றும் தோன்றியது. குழந்தை சிவராமனுக்கு விளையாட்டுக் காட்டுகிறார்கள் இருவரும். சிவராமனின் கண்களுக்குள் உறுத்தியது. அவசரமாக வெளியேறி வந்தான். ஒரு சிகரெட் குடிக்கலாம்.

தொரை எங்கே போறார்?

படுத்திருந்த மன்னி எழுந்து உட்கார்ந்து கேட்டாள். திரும்பிப் பார்த்தான். அதே கோலத்தில் கிடந்தாள் மன்னி. தலையைக்

குலுக்கிக்கொண்டான்.

சவுண்டிகள் வந்து சேர்ந்திருந்தார்கள். இருவரில் இளையவர் பச்சை மூங்கிலை அரிவாளால் வெட்டிக்கொண்டிருந்தார். மற்றவர் கொச்சக் கயிற்றை அளவான துண்டுகளாக நறுக்கிக் கொண்டிருந்தார். அசைபோடுகிற மாதிரி அவர் குதப்பிய வெற்றிலைச்சாறு வாய் கொள்ளாமல் வெளியேறி இடது மோவாய் நோக்கி ஒரு சிவப்புக்கோடு இறங்கியிருந்தது. பக்கத்தில் புத்தம்புது மண் கலயத்தில் அடுப்புக்கரி கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. கொள்ளி கொண்டு செல்வதற்காகத் தணல் வளர்க்கிறார்கள். அவர்களுக்கு அருகில் குத்தவைத்து உட்கார்ந்து எரியும் கலயத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த கிழவன் சிவராமனைப் பார்த்ததும் நெருங்கி வந்தான்.

சாமி, அம்மா ஜட்காவுக்குக் கூலி குடுக்காம உள்ளெ போயிட்டாங்க.

ஓ, அத்தை வந்த குதிரை வண்டி இன்னும் நிற்கிறதே.

எவ்வளவுப்பா?

ரெண்டு ரூவாங்க.

பையிலிருந்து எடுத்துக்கொடுத்த ரூபாய்த்தாளை வாங்கும் கிழவனின் கை நடுங்குவதைக் கவனித்தான் சிவராமன். எண்பது வயதிருக்கலாம் கிழவனுக்கு.

பதினைந்து நாளைக்கு முன்னால் மன்னியை ஆஸ்பத்திரியில் சேர்த்ததிலிருந்து இது ஒரு பழக்கம் வந்து படிந்திருக்கிறது. எதிர்வருகிற எல்லாருக்கும் வயது மதிப்புப் போடச் சொல்கிறது.

மன்னிக்கு நாற்பத்தி மூன்றுதான். வண்டிக்காரக் கிழவனின் வயதில் கிட்டத்தட்ட சரிபாதி. அதற்குள் ஏன் போய்விட்டாள். ஆனால், மன்னியின் வம்சத்தில் எல்லாருமே இளம் வயதில் இறந்தவர்கள்தானாம். இரண்டாவதாக ஒரு பெண்ணைப் பெற்றுப்போட்டு விட்டு தாய்தகப்பன் இருவரும் வைசூரியில் போய்ச்சேர்ந்தார்கள். மன்னியின் தகப்பனுடைய ஒரே உடன்பிறப்பான சித்தப்பா ஒருத்தர் இவர்கள் இருவரையும் வளர்த்தார். அவர் திருமணம் செய்துகொள்ளாதவர். மன்னியின் அண்ணா ஆறாவது ஃபாரம் முடிப்பதற்காகக் காத்திருந்த மாதிரி அவரும் போய்ச் சேர்ந்தார். முழுக்க ஆட்கள் நிரம்பிய பேருந்து, முன்னால் போய்க்கொண்டிருந்த லாரியுடன் மோதியதில் ஒரே ஒரு பயணி மட்டும் இறந்தார். மன்னியின் சித்தப்பா.

மேலூர் ஒத்தக்கடை அருகே நடந்த அந்த விபத்தில் படுமோசமாக அடிபட்டுக் குற்றுயிரான பேருந்து ஓட்டுநர்கூடப் பிற்பாடு பிழைத்துவிட்டார். பிரம்மச்சாரியாக இருந்து தங்கைக்குத் திருமணம் செய்துவைத்த கையோடு தமையனும் காமாலை முற்றி இறந்து போனார். ஒருநாள் சாயங்காலம் வாயிற்படியில் உட்கார்ந்து முழுக் கதையையும் சொல்லி முடித்தாள் மன்னி.

ஏதோ சாபம் வாங்கின பரம்பரைடா அம்பீ.

ஒங்க அம்மா வழியிலே யாரும் கிடையாதா மன்னீ.

அப்பிடியெல்லாம் மனுஷா உண்டான்னே எனக்குத் தெரியாது...

மன்னி சிரித்தாள். மன்னியின் முன்னங்கையை இறுகப் பற்றிக்கொண்டான் சிவராமன்.

...அம்புட்டுத்தான். என்னோட எங்க ரங்கசமுத்திரம் வம்சமே ஒழிஞ்சிடுமோன்னு பயந்துண்டிருந்தேன். பகவானுக்கு என் வேதனை கேட்டுருத்து. இவ்வளவு பெரிய பிள்ளையை ரெடிமேடாக் குடுத்துட்டாரே.

சிவராமனின் தலையை இழுத்து நெஞ்சில் பதித்துக் கொண்டாள்...

சிவராமனுக்கு உடல் சிலிர்த்தது. அன்று உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த வாயிற்படிப்பக்கம் அனிச்சையாய்ப் பார்வை நகர்ந்தது. அதே இடத்தில் மன்னி நின்றுகொண்டிருந்தாள்.

என்னடா இது, காஃபி குடிக்காமெக் கடைக்கிப் போறே?

முகம் முழுக்கக் கேலி நிரம்பியிருந்தது. தாங்க முடியாமல் வேகமாகக் கடையை நோக்கி நடந்தான்.

சி கரெட் புகை விதவிதமான வடிவங்கள் கொள்வதையும் பிறகு அவை மாறிக் கலைவதையும் கடைசியாகக் காணாமல் போகும் சமயத்தில் புது வளையங்கள் வெளியேறி உருவாவதையும் கொஞ்ச நேரம் கவனித்துக்கொண்டிருந்தான். திரும்பவும் மன்னி வந்து நின்றாள். மறதியாகச் சட்டைப்பையில் கிடந்துவிட்ட தீப்பெட்டியைக் கையில் வைத்துக்கொண்டு நிற்கிறாள்.

மைனர் ஸார், இது என்ன, புதூசா?

சிவராமன் வெட்கத்தோடு தலைகுனிகிறான்.

பாக்குத்துண்டைக் கூட மோந்துபாக்காத ஜன்மத்துக்கு எப்பிடி ஒரு

தம்பி வந்து பொறந்திருக்கு பார்...

மன்னி சிரித்தாள். சிவராமனுக்கும் சிரிப்புத் தொற்றியது. இவன் தலையில் செல்லமாகக் குட்டிவிட்டு தீப்பெட்டியை மறுபடி சட்டைப்பையில் வைத்தாள்.

...ஆனா ரங்கஸாமி அய்யர் தம்பின்னா இதெல்லாம் பண்ண மாட்டான். வத்ஸலா பிள்ளையில்லையா. கொஞ்சம் அடங்காமெத்தான் திரியும். இரு இரு ஒருநாள் வாயிலே சூடு வைக்கறேன். ஒடம்பைக் கெடுத்துண்டு வந்து நிக்காதே கடங்காரா.

அந்தத் தீப்பெட்டிமீது மஞ்சள் நிறப் பின்னணியில் அச்சாகியிருந்த கருங்குயில் கண்முன்னால் எழும்பி வருகிறது. மன்னியின் சிரிப்பும்தான்... முழுக்கக் கரிந்திருந்த சிகரெட் துண்டு விரலைச் சுட்டது.

...சிவராமனைப் பிரசவிக்கும்போது அம்மா இறந்து விட்டாளாம். ஆறாவது வருடத்தில் அப்பாவும் மாரடைப்பால் இறந்து போனார். சொரசொரத்த நாலுநாள் தாடி நிரந்தரமாக இருக்கும் அப்பாவின் முகமும், எப்போதுமே கோபமாக இருப்பவரோ என்று தோன்றச் செய்யும் உரத்த குரலும் நினைவிருக்கத்தான் செய்கிறது. அப்பாவைக் காட்டுக்குத் தூக்கிச் சென்றபோது பெரியண்ணா இவனைத் தூக்கிக்கொண்டு போனதும், மறுநாள் அஸ்தி சேகரிக்கக் கிளம்பியபோது, 'சிவராமனைக் கூட்டிக்கொண்டு போக வேண்டாம், சின்னப்பையன், பார்த்தால் பயந்துக்குவான்' என்று இவனை விட்டுவிட்டுப் போய்விட்டதும்கூட ஞாபகமிருக்கிறது. பூணூல் போடாத பையன் என்பதால், பத்தாவது நாள் இவனுக்கு மட்டும் மொட்டை போட்டார்கள். தலை குளிர்ந்த கிளுகிளுப்புடன் சிரித்துக்கொண்டே ஓடிவந்த இவனை, விசாலம் அக்கா நெஞ்சோடு அணைத்துக்கொண்டு கதறினாள்...

பெற்றவர்கள் இரண்டுபேரும் மார்பளவுப் புகைப்படங்களாகச் சுவரில் தொங்கினார்கள். தலைப்பகுதியில் நெல்லிக்காய் பல்பும், பிளாஸ்டிக் மாலையுமாய் இருக்கும் புகைப்பட பிம்பங்களிடம் சிவராமனுக்கு எள்ளளவு ஒட்டுதலும் உண்டானதில்லை.

அவர்களை நினைத்து ஏங்கும்விதமாக மன்னியும் சிவராமனை நடத்தியதில்லை. சொந்தக்காரர்கள் கூடி, அப்பாவின் வருஷாப்தீகம் முடிவதற்குள் பெரியண்ணாவுக்குக் கல்யாணம் செய்து வைத்தார்கள்.

அடுத்த நாலே வருடங்களில் நாத்திகள் இருவருக்கும் வருடத்துக்கொருவராய்க் கல்யாணம் செய்து வைத்தாள் மன்னி. முதல்

தம்பி ராஜு பிரம்மச்சாரியாய் இருக்கப்போவதாகத் தீர்மானமாகச் சொல்லிவிட்டான். இசைத்தட்டு நிறுவனமொன்றில், விற்பனைப் பிரிவில் இருக்கிறான். அவனுக்கு அடுத்தவன் வெங்கடாசலமும் மெற்றாஸில்தான் வேலை பார்க்கிறான், ரயில்வேயில். இரண்டாவது அக்கா திருமணத்தின்போது சிவராமனுக்குப் பதினாலு வயது. கடைக்குட்டி சிவராமனைவிட அவள் ஐந்து வயது மூத்தவள். அவளுக்கும் முந்தின வருடமே வெங்குட்டு அண்ணாவுக்கும் கல்யாணமாகி மெற்றாஸில் குடியமர்ந்திருக்கிறான்.

பெரிய அக்கா விசாலம் பெங்களூரில் இருக்கிறாள். சின்னவள், சேலத்தில். எல்லாருக்கும் தந்தி போயிருக்கிறது. வெங்குட்டு அண்ணாவுமே மனைவி வகையில் யாருக்கோ திருமணம் என்று பாலக்காடு போயிருக்கிறான். உடனே கிளம்பி வருவதாக பதில் தந்தி கொடுத்து விட்டான்.

வாசலில் கிடந்த பெஞ்ச்சில் ராஜு அண்ணா உட்கார்ந்திருக்கிறான். லீவு போட்டுவிட்டு இரண்டு வாரமாய் இங்கேயே இருக்கிறான். மன்னியை ஆஸ்பத்திரியில் அனுமதித்த மறுநாள் வந்தவன். வருகிறவர்களெல்லாம் அவனிடம்தான் முதலில் துக்கம் கேட்கிறார்கள். சதா அழுது சிவந்த கண்களோடு கூன்போட்டு உட்கார்ந்திருக்கிறான். சட்டை போடாத உடம்பில் ஒரு துண்டு மட்டும்.

சகோதரர்கள் அனைவரிலும் ரோமக்கட்டு அவனுக்குத்தான் அதிகம். துண்டு மூடாத நெஞ்சு புதர் மாதிரி மண்டியிருக்கிறது. முன்னங்கைகளிலும், முதுகிலும்கூட அடர்ந்த ரோமம் அவனுக்கு. மன்னி அவனைக் 'கரடிக்குட்டி' என்று கேலி செய்வாள். அவன் பதிலே சொல்லமாட்டான். யாரிடமும் அதிகம் பேச மாட்டான்.

கடைசிவரை அவனைத்தான் மன்னியால் வளைக்க முடியாமல் போய்விட்டது. எவ்வளவோ பேசியும், திருமணம் செய்துகொள்ள மறுத்துவிட்டான். இந்த வம்சத்தில் இது சகஜம்தான். தலைமுறைக்கொருவர் பிரம்மச்சாரியாகவோ, சாமியாராகவோ இருந்திருக்கிறார்கள். எல்லாரிடமும் ஒற்றை வார்த்தைகளிலேயே பேசி முடித்துவிடும் ராஜு அண்ணா, மன்னியிடம் மட்டும் வாக்கியங்களாகப் பேசுவான்.

...இ து நடந்து நாலைந்து வருடம் இருக்கும். அந்த முறை அப்பாவின் சிரார்த்தத்துக்கு எல்லாருமே இருக்கிற மாதிரி ஆனது. பிள்ளைகள் எல்லா வருடமும் ஒன்றாகக் கூடித்தான் பிதுர்க்கடன் செய்வார்கள். அந்த வருடம் பெண்களும் விடுமுறையில் வந்திருந்தார்கள். திதி

நடக்கிற வீடு மாதிரியேயில்லை கல்யாணக் களையும் கலகலப்பும் நிரம்பிவிட்டன. புரோகிதர் வந்து சேர்ந்தவுடன் அசௌகரியமான மௌனம் பூண்டது வீடு.

சிரார்த்தம் முடிந்து, வைதீகர்கள் எல்லாரும் கிளம்பிப்போய், குடும்ப உறுப்பினர்களும் சாப்பிட்டான பிறகு வீடு பழைய நிலைக்குத் திரும்பியது. ஹோமப்புகையின் தீய்ந்த மணமும் ஒருவித சாவகாசமும் வீடு முழுக்க நிரம்பியிருந்தது. எல்லாருமாக வெற்றிலை போட்டுக்கொண்டு அமர்ந்திருந்தார்கள். வெங்குட்டு அண்ணா மன்னியிடம் சொன்னான்:

மன்னி, இந்த சிவாப் பயலை வேண்ணா, நான் மெற்றாஸ்லெ கொண்டுபோய்ப் படிக்க வைக்கட்டுமா?

அது எதுக்குப்பா, ராதாவும் உத்தியோகத்துக்குப் போறவள்...

அவள்ட்டேயும் கேட்டுண்டுதான் வந்திருக்கேன் மன்னி.

என்ன சொன்னா?

தாராளமாக் கூட்டிண்டு வாங்கோன்னுட்டா. நீ பார்த்துப் பண்ணி வச்சவ, வேறென்ன சொல்லுவா மன்னி!

அண்ணா சிரித்தான். மன்னியும் பெருமையாகச் சிரித்துக் கொண்டாள்.

அவ சொல்லுவ, நல்லவதான். ஆனா, ஒனக்கும் ரெண்டு கொழந்தைகள் இருக்கேப்பா. எதுக்கு வீண் சிரமம். வேற வழியில்லேன்னாப் பரவால்லே. அதான் நாங்க ரெண்டுபேரும் செயலா இருக்கோமே...?

அண்ணா பதில் சொல்லாமல் இருந்தான். மன்னி தொடர்ந்து கேட்டாள்:

...அப்பிடி மதுரையிலே இல்லாத விசேஷம் மெற்றாஸிலே என்ன இருக்கு?

இல்லே, அங்கெ நெறையாக் காலேஜ்கள் இருக்கு. இவனை ஒரு டாக்டராவோ இஞ்சினீயராவோ ஆக்கிப்பிடலாமேன்னுதான். நாங்கள்லாம்தான் வெறும் கிளார்க்குகளாப் போயிட்டோம். இத்தனைக்கும் இந்தாத்திலே படிப்புலெ யார் சோடை சொல்லுங்கோ.

நீ சொல்றதும் நியாயம்தான் வெங்குட்டு. இங்கே மதுரையில் படிச்சு யாருமே டாக்டராவோ இஞ்சினீயராவோ ஆகல்லேல்லியா?

எல்லாரும் சிரித்தார்கள். மன்னி எழுந்து சென்று வெற்றிலை வாயைக்

கொப்பளித்துவிட்டு வந்தாள். முகம் தீவிரமாகியிருந்தது. லேசாகச் சிவந்தும் இருந்தது.

இத பாரு வெங்குட்டு. என்னடா, மன்னி இப்பிடிப் பேசறாளேன்னு நினைக்காதே. நானோ, ராதாவோ, எவ்வளவுதான் ஆப்தமா இருந்தாலும் ஒண்ட வந்தவாதான். நீங்க அண்ணா தம்பிகள் ஒக்காந்து பேசி என்ன முடிவு எடுத்தாலும் சரி.

அண்ணா பதறினான்.

என்ன வார்த்தெ சொல்றே மன்னி? நீ சொல்றதெ விடவா எனக்கு? நான் இப்பிடிக் கேட்டேன்ங்கிறதையே மறந்துடு மன்னி. தப்புதான் மன்னி. இங்கேயே இந்தப் பய படிக்கட்டும். இப்பிடிச் சொல்லிட்டியே மன்னீ...

எழுந்து மன்னியை சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் பண்ணினான். இப்போது மன்னி பதறினாள்.

என் கண்ணே போ, ஏதுக்கு இப்பிடியெல்லாம் பண்ணறே. எங்கிட்டெ ஒக்காந்துக்கோ வா.

என்று அண்ணாவை உச்சி முகந்தாள். எல்லார் கண்களும் கசிந்திருந்தன. இவ்வளவும் யார்வீட்டிலோ நடக்கிறது என்கிற மாதிரி மௌனமாகக் கண்மூடி அமர்ந்திருந்தார் ரங்கண்ணா. இன்று மனைவியின் சடலத்துக்கு முன்னால் உட்கார்ந்திருக்கிறாரே, இதே மாதிரித்தான்.

ரங்கண்ணாவிடம் பாலிஸி மேட்டர்கள் பேச மாட்டார்கள் யாரும். 'ஒன்னோடெ உசிதம் போலச் செய்துக்கோப்பா' என்று ஒற்றை வரியில் பதில் வரும் அரைமணிநேரம் அந்தப் பிரச்னையை விளக்கி முடித்த பிறகு. அன்றைக்கு விஷயம் அந்த விதமாக முடிந்தபோது, ரங்கண்ணாவின் கண்களிலிருந்து நீர்த்தாரை இறங்கியது. கொஞ்ச நேரம் எல்லாரும் மௌனமாக இருந்தார்கள்.

ஆனா ஒண்ணுப்பா, என் வயித்திலே ஒரு பூச்சி தங்கியிருந்தாலும் இவனை நான் விட்டுக் குடுத்திருக்க மாட்டேன். இவன் என் வயத்திலே பெறந்திருக்க வேண்டியவன், வழிதவறி வேற வயித்துக்குப் போய்ட்டான்...

மன்னி குமுறினாள். சிவராமன் பெரிதாக அழத் தொடங்கினான். மடியில் கிடத்திய குழந்தையைத் தூங்கச் செய்வதற்காக ஓயாமல் ஆடிக்கொண்டிருந்த பெரியக்கா விசாலத்தின் வலது தொடை நின்றது.

புடவைத் தலைப்பால் முகத்தை ஒரு கணம் மூடித் திறந்தாள். எட்டி உட்கார்ந்திருந்தவனை மன்னியின் அருகில் போகச் சொல்லி சைகை காட்டினாள். சிவராமன் அமர்ந்தபடியே நகர்ந்தான். மன்னி இவனை உடம்போடு சேர்த்துக்கொண்டாள்.

...என்னிக்கிருந்தாலும், வழிச்சுவிட்ட தோசை எனக்கே எனக்குத்தான்.

இன்னும் பெரிதாகக் குமுறினாள். மன்னியின் புடவையில் சமையல் வாசனை, ஹோம வாசனை, திவச நாள் என்று சோப்புப் போட்டுக் குளிக்காததால் எழுந்த வியர்வைக் கவிச்சி எல்லாம் சேர்ந்து எழுந்த ஆவிக் கலவை மிகப் பெரிய இதமாக இருந்தது.

திடீரென்று ஒரு பெரிய விசும்பல் வெடித்தது. விடிந்ததிலிருந்து மௌனமாக இருந்த ராஜு அண்ணாதான். எல்லாரும் அவனைத் திரும்பிப்பார்த்தார்கள். ஏதோ இனம்புரியாமல் முனகிக்கொண்டு பெரிதாக அழுதான். மன்னி அவனருகில் எழுந்து சென்று அவன் தலையைக் கோதினாள்.

சில நிமிடங்கள் யாருமே பேசவில்லை. உட்கார்ந்திருந்த நிலையை மாற்றிக்கொள்ளவும் இல்லை. பிறகு ரங்கசாமி அண்ணாதான் முதலில் வாயைத் திறந்தார்:

வத்ஸலா, நேரமாச்சே, காபி கலக்கலே?

...அ டேயப்பா, எத்தனை வருடங்கள் ஓடிவிட்டன. ஆனால், மன்னி வெங்குட்டு அண்ணா சொன்னதை ஒரு சங்கல்பமாக எடுத்துக் கொண்டாள். சிவராமனோடு மன்றாடி, ஒழுங்காகப் படிக்கவைத்து, தியாகராஜர் இஞ்சினீயரிங் காலேஜில் சேர்த்தே விட்டாள். இதோ, ஸிவில் இஞ்சினீயராகி நிற்கிறான் சிவராமன்.

மன்னி 'தலைவலி தாங்கவில்லை' என்று சுவரில் முட்டிக்கொள்ளக் கிளம்புவதற்குச் சரியாக ஐந்து மணி நேரத்துக்கு முன்னால், இறுதி வருட ரிஸல்ட் வந்த ஆனந்தத்தில் மூழ்கியிருந்தது குடும்பம்.

அன்று காலையிலிருந்தே கடுமையான தலைவலி என்று படுத்துக் கிடந்த மன்னி, தெம்பைக் கூட்டிச் சேகரித்துக்கொண்டு எழுந்து பால்பாயசம் பண்ணினாள். அபூர்வமான தித்திப்பும் மணமும் கொண்டிருந்த பாயசத்தை இவனிடம் கொடுத்துவிட்டு நேரே கொல்லைப்புறம் சென்று ரத்தவாந்தி எடுத்தாள்.

குடும்ப டாக்டர் தணிகாசலம் ஆர் எம் ப்பி கடுமையாகத் திட்டிவிட்டார்.

குறைந்தது ஆறுமாதமாக உடம்பில் பிரச்னை இருந்திருக்கவேண்டுமே. அவள் கிராமாந்திரமான பெண்மணி. சொல்லத்தான் மாட்டாள். மற்றவர்களுக்குக் கஷ்டம் தருவானேன் என்று நினைக்கக்கூடியவள் இல்லையா அவள்? நானென்ன இன்றைக்கு நேற்றா பார்க்கிறேன் வத்ஸலாவை? இவ்வளவு வேகமாக இளைத்து வருகிறாளே, நடந்தால் மூச்சு வாங்குகிறாளே, சாப்பாடு சரியாகச் செல்லவில்லையே... இதையெல்லாம் கூட இருப்பவர்கள்தானே கவனித்து டாக்டரிடம் கூட்டி வரவேண்டும். பிறகு எதற்காக ஒரே கூரைக்குக் கீழ் மனிதர்கள் கூடி வசிப்பது? என்னப்பா ரங்கசாமி, இந்த விஷயத்திலுமா நீ இப்படி விட்டேற்றியாக இருப்பாய்? உங்கள் தகப்பனார் காலத்தில் அவரே என்னிடம் பலதடவை சொல்லி வருத்தப்பட்டிருக்கிறார். சாமியார் மாதிரி இருக்கிறானே இந்தப் பயல் என்று...

அரசாங்க மருத்துவமனைக்கு சிபாரிசுக் கடிதமும் கொடுத்து விட்டார். வீட்டில் வந்து முன்தயாரிப்புகளை முடித்துக்கொண்டு போகலாம் என்று திரும்பினார்கள்.

அப்பா சிரார்த்தத்தன்று தான் உட்கார்ந்திருந்த அதே இடத்தில் சென்று தளர்ந்து அமர்ந்தாள் மன்னி. அவள் வழக்கமாக உட்காரும் இடம் அது. சிவராமனைப் பார்த்து பலவீனமாகச் சிரித்தாள். 'இங்கே வா, கிட்டே' என்கிற மாதிரி சைகை செய்தாள். மன்னியின் அருகில் செல்லப் பயமாக இருந்தது. தயங்கித் தயங்கி முன்னகர்ந்தான்.

இந்த இடத்திலே உக்காந்துதான் பிரதிக்ஞை எடுத்துண்டேன். உன்னே இஞ்சினியர் ஆக்கிப் பாத்துட்டேன். இனிமே உன் சமத்து, என்ன?

நாலு வார்த்தை பேசுவதற்குள் கடுமையாக மூச்சு வாங்கியது.

...இதோ, அதே இடத்தில் அதே மாதிரி உட்கார்ந்திருக்கிறாள், மன்னி. இவனைப் பார்த்துக் கேலியாகச் சிரிக்கிறாள். 'வா, பக்கத்தில் வந்து உட்காரு' என்று சைகை செய்கிறாள். ஒரு கணம் கண்ணை மூடிக்கொண்டிருந்துவிட்டுத் திறந்தான் சிவராமன். ம்ஹூம், கிடந்த இடத்திலேயே கிடக்கிறாள் மன்னி.

என்னோடே மொதல் சம்பாத்தியத்தில் ஒனக்கு என்னென்னவோ வாங்கிக் குடுக்கணும்னு நெனைச்சிருந்தேனே மன்னீ.

தனக்குத்தானே வாய்விட்டுச் சொல்லிக்கொண்டான். நெஞ்சு முழுக்கக் கொடகொடவென்று நீர் நிரம்பிவிட்டமாதிரித் தோன்றியது...

இன்னொரு சிகரெட் குடுங்க.

கடைக்காரர் எடுத்து நீட்டினார். வீட்டுக் கணக்கில் எழுதிக்கொள்வார். ஆனால் இவர்கள் சிட்டையில் மொத்தமாக ஒரே தடவை 'ஜீனி' என்று கணக்கெழுத வேண்டும். இவன் சிகரெட் குடிக்கலாம். ஆனால், எத்தனை என்பதை மன்னிதான் முடிவெடுப்பாள். பிள்ளையை அவ்வளவு கட்டுப்பாடாக வளர்க்கிறாளாம். கல்லூரியில் நண்பர்களுடன் குடித்த திருட்டு சிகரெட்டுகள் நினைவு வந்து முள்ளாய் உறுத்தின.

பற்ற வைத்த சிகரெட்டை முழுசாகக் கீழே போட்டு நசுக்கித் தேய்த்தான். அடிவயிற்றிலிருந்து ஒரு அலை எழுந்து நெஞ்சுக்கு ஏறியது. அங்கே ஏற்கெனவே நிரம்பியிருந்த நீர்ப்பெருக்கில் ராட்சஸச் சுழல்கள் ஏற்பட்டுவிட்டமாதிரி நிலை தடுமாறியது. முகத்தில் விசித்திரமான குதுகுதுப்பை உணர்ந்தான்.

சு ப்பிரமணிய சிரௌதிகள் வந்துவிட்டார். சைக்கிளை எதிர்ச்சாரி வீட்டின் சுற்றுச்சுவரில் பதனமாகச் சார்த்தி வைத்துவிட்டு, வீட்டைப் பார்த்து மந்தமாக நடந்து வந்தார். அவருடைய நிதானம் பல நேரங்களில் எரிச்சலூட்டும். ரொம்ப வைதீகமானவர்.

வெங்குட்டு அண்ணாவின் மைத்துனர் கல்யாணம் காளஹஸ்தியில் நடந்தது. மணப்பெண்ணின் குடும்பத்தாருக்கு அப்படி ஒரு நேர்த்திக் கடன் இருந்ததாம். கல்யாணத்துக்கு மறுநாளுக்கு மறுநாள் அம்மாவுக்கு சிரார்த்தம். வெங்குட்டு அண்ணா தீர்மானமாகச் சொன்னான்:

அப்பிடி அவதி அவதியாய்ப் புறப்பட்டுப் போய் தெவசம் போட வேணாம். இந்தத் தடவை மெற்றாஸ்ல என்னோடெ வீட்டில் போடலாம்.

ஒன்னோட வீட்லெ நாங்க எதுக்காக தெவசம் போடறது?

என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் மன்னி.

ஸாரி, மன்னி. தெரியாமெ வந்துடுத்து வாய்லெ. இங்கே மெற்றாஸ்லெ நம்மாத்திலே போடலாம்னு சொன்னேன் மன்னி.

இதெச் சொல்லு. உத்தமமான முடிவு. நீ குடுத்தனம் நடத்தற எடத்தையும் அம்மா வந்து பாக்க வேணாமா?

மெற்றாஸில் வந்த சாஸ்திரிகள் நடுவயதுக்காரர். பத்து மணிக்கு வந்தார். பன்னிரண்டு மணிக்குக் கிளம்பிவிட்டார். அவ்வளவு வேகம். மந்திரங்கள் எதையும் விடவில்லை என்று அனுபவஸ்தரான ரங்கண்ணா ஒப்புதல் கொடுத்தார்.

சிரௌதிகள் அப்படியில்லை. செய்கிற ஒவ்வொன்றையும் விளக்கி காரணகாரியபூர்வமாய் நடத்த வேண்திதிடும் என்று நினைக்கிறவர். ரொம்ப ஆசாரம். கறாரான மனிதர். அந்த சாஸ்திரியைக் கண்டாலே சிவராமனுக்கு ஆகாது. வெளிப்படையாக மன்னி பயப்படுகிற ஒரே ஆள் அவர்தான்...

அந்த மனுஷன் வந்துட்டாலே எனக்குக் குலைநடுங்க ஆரமிச்சுர்றது விசாலம். இப்பிடியா படுத்தியெடுப்பர்? நின்னா, 'ஏன் நிக்கறாய்', ஒக்காந்தா, 'ஏன் ஒக்கார்றாய்?'ன்னு கேள்வி போடற மனுஷனை எப்பிடிச் சமாளிக்கறது சொல்லு? போறாததுக்கு, 'மாமியார் மாமனார்மேல அபிமானம் இல்லையா ஒனக்கு? இப்பிடி அபசாரத்து மேல அபசாரமாப் பண்றியே'ங்கறார். நான் பாத்தறியாத பெரியவாமேல எனக்கு என்ன துவேஷம் இருக்கும் சொல்லு. அந்த மனுஷருக்கு நாக்கிலே நரம்பே கிடையாது.

தலைப்பிரசவத்துக்கு வந்திருந்த பெரியக்காவிடம் சொல்லிப் புலம்பினாள் மன்னி. கேட்டுக்கொண்டிருந்த சிவராமன் தானும் ஓரிரு வாக்கியங்கள் பேசலாமா என்று யோசித்தான். மன்னி அதை விரும்பமாட்டாள். பெரியவர்கள் பேசும்போது சின்னவர்கள் குறுக்கிடக்கூடாது. பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த அக்கா ஆறுதலான குரலில் சொன்னாள்.

சாஸ்திரிகளை மாத்திற வேண்டியதுதானே மன்னி? நா வேணா ரங்கண்ணாட்டெச் சொல்லிப் பாக்கட்டுமா?

சீச்சி. அதெல்லாம் எதுக்கு? ஏதோ ஒங்கிட்டெச் சொல்லி ஆத்திண்டேன். அவ்வளவுதான். இவ்வளவு சிரத்தையாப் பண்ணி வைக்கிற வைதிகாள் இந்தக் காலத்திலே கிடைப்பாளா சொல்லு.

என்று விஷயத்தை முடித்துவிட்டாள் மன்னி. அதுதான் மன்னி...

புரோகிதரின் குரல் வழக்கம்போல ஓங்கி ஒலிக்கவில்லை. நிமிர்ந்த நடையிலும் சற்றுக் கூன் சேர்ந்த மாதிரிப் பட்டது. நேராக ரங்கசாமி அண்ணாவிடம் போனார். பக்கத்தில் உட்கார்ந்தார்.

ரங்கஸாமீ...

என்று கரகரத்த குரலில் அழைத்தவாறு, குத்தவைத்திருந்த முழங்காலைப் பற்றினார். அண்ணா கண் திறந்தார். அதீதமாய்ச் சிவந்திருந்தன கண்கள்.

ரத்தினத்தெத் தோத்துட்டியேடா...

என்றார் சிரௌதிகள். அண்ணா மேல்துண்டால் முகத்தை மூடிக்கொண்டார். உடம்பு அதிர்ந்து குலுங்கியது கொஞ்சநேரம். பிறகு அடங்கியது. மன்னியின் முகத்தையே கண்ணெடுக்காமல் பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தார் சிரௌதிகள். அடுக்களைக்குள் சென்றிருந்த சொர்ணம் அத்தை வெளியில் வந்தாள்.

என்ன ஓய் மணி சாஸ்திரி, என்ன காரியம் பண்ணிப்பிட்டா எங்க வச்சு, பாத்தீரா?

அத்தை தலையில் ஓங்கி ஓங்கி அடித்துக்கொண்டாள்.

நம்மளுக்கெல்லாம் வயசு கம்மின்னு நெனச்சுண்டுடுத்து போலருக்கு கொழந்தை. இன்னும் எத்தனை பேரைத் தூக்கிவிடப் போறேனோ சொர்ணம். சேதி கேட்டதிலேர்ந்து எனக்குக் கையும் ஓடலே, காலும் ஓடலே.

அத்தை உடம்பு குலுங்க அழுவதைக் கொஞ்சநேரம் வெறித்துக் கொண்டிருந்தார். அவள் வேகம் மெல்ல மெல்ல அடங்கிய பிறகு புடவைத் தலைப்பால் முகத்தை அழுத்திக் துடைத்துக்கொண்டாள். முகம் வெகுவாகக் கன்றிச் சிவந்திருந்தது. தொண்டையைச் செருமிக் கொண்டாள்.

சரி, சொல்லும், போனவ போயிட்டா. ஆக வேண்டியதை நாமதானே பாக்கணும். என்னெல்லாம் ரெடி பண்ணணும் சொல்லும்.

என்றாள்.

இருடீ, இரு. ஏன் அவக்கைப் படறே. வைத்தியன் வக்கீல் புரோகிதன் எல்லாம் மனசு சமாதானமா இருக்கறப்பதான் தொழில் செய்யணும்னு விதி இருக்கு. போய்ச் சேந்தவ என் பொண்ணாக்கும். நெஞ்செப் போட்டுப் பெசையறது எனக்கு. ஒக்காந்து ஒரு ஆவர்த்தி அழுதாத்தான் அடுத்ததை யோசிக்கவே முடியும்...

என்று சொல்லிக்கொண்டே வந்தவர் உதடுகள் கோண கன்னம் துடிக்க புருவங்கள் நெரிய மாரில் அறைந்துகொண்டு கதறத் தொடங்கினார். எட்டி நகர்ந்து, துணிக் கிழிசலால் கட்டைவிரல்கள் கோத்துக் கட்டப்பட்டிருந்த மன்னியின் கால்களை இரண்டு கைகளாலும் இறுகப் பிடித்துக்கொண்டு விசித்துவிசித்து அழுதார். சுற்றிலும் இருந்தவர்கள் அடுத்த சுற்று அழுகையில் இறங்கினார்கள்.

...வரும்போதெல்லாம் நமஸ்காரம் பண்ணுவியே கொழந்தே. இன்னிக்கி ஒன் காலைத் தொட்டு நான் கண்லெ ஒத்திக்க

வெச்சுட்டியேடீம்மா. என் மொதல் போச்சே வச்சூ... என் மொதல் போச்சே.

ரங்கசாமி அண்ணா தானும் நகர்ந்து சிரௌதிகளை உடம்போடு அணைத்துக்கொண்டார். அப்பா இருந்திருந்தால் இந்த சிரௌதிகள் வயதுதான் இருந்திருக்கும் அவருக்கு. இந்த மருமகள் இறந்ததற்கு அவருமே இதே மாதிரித்தான் கலங்கிப் போயிருப்பார்...

கிழவரின்மீது தனக்கிருந்த மனத்தாங்கல் எடை குறைகிற மாதிரி உணர்ந்தான் சிவராமன். அவருடைய தோளைத் தொட்டு ஆறுதல் சொல்லத் தோன்றியது. மன்னியை ஆஸ்பத்திரியிலிருந்து கொண்டுவந்ததிலிருந்து, பார்க்கும் எல்லாவற்றின்மீதும் பிரியம் அடக்க முடியாமல் பொங்குகிறது. மன்னியின் சூட்சுமமான பிரசன்னம்தான் காரணமோ? அப்படியானால் உடம்பால் மட்டும்தான் மன்னி இறந்திருக்கிறாள் என்றுதானே ஆகிறது? சாஸ்திரிகள் இப்போது குமுறுவதையும் அவள் பார்த்துக்கொண்டிருக்கிறாளோ? அல்லது, இவருடைய உள் அந்தரங்கம் இதுதான் என்று அவளுக்கு முன்பே தெரிந்திருந்ததோ...?

நிலைப்படியின் அருகில் ஏதோ சலனம் தென்பட்டது. மன்னிதான் மூங்கில் கழிமாதிரி செங்குத்தாக நின்றுகொண்டிருந்தாள். கையில் காஃபித் தம்ளரும் டபராவும்.

மாமா, இந்தாங்கோ, ஒரு வாய் காஃபியைக் குடிச்சுட்டுப் பேசுங்கோ. இதாரு இது, நடுக்கூடத்திலே படுத்துண்டு அழிச்சாட்டியம் பண்றது?

கை கால் கட்டைவிரல்கள் துணிக் கிழிசலால் கட்டப்பட்டுக் கிடக்கும் தன்னுடைய உடம்பைப் பார்த்துத்தான் சொல்கிறாள் மன்னி. சிவராமன் தலையை உலுக்கிக்கொண்டான்... சாஸ்திரியின் குரல் காதுக்கு வெகு அருகில் உரத்துக் கேட்டது.

சொல்லுப்பா ரங்கஸாமி, வெங்குட்டுவும் விசாலமும் எப்போ வரா? எப்பிடி வரா?

சுப்ரமணிய சிரௌதிகள் தொழிலைத் தொடங்கிவிட்டார். விரட்டுவதற்குத்தான் அவருக்கு இன்று ஆளில்லை, பாவம். என்ன செய்யப் போகிறாரோ?

கிரமப்படி, ஆம்படையான் இருக்கும்போது அவன்தான் பண்ணணும். இல்லே, சிவராமனைப் பிள்ளே பிள்ளேன்னு அவ வார்த்தைக்கு வார்த்தெ சொல்லுவ. இவன் பண்றதும் சிலாக்கியம்தான்.

சின்ன வயசுக்காரா காரியம் பண்றதுலே இன்னொரு அனுகூலமும் இருக்கு ரங்கஸாமி. ரொம்ப காலத்துக்குத் தட்டில்லாம எள்ளும் ஜலமும் கெடைக்கும் ஒன் ஆம்படையாளுக்கு.

என்று சொல்லிவிட்டு வேறுபுறம் திரும்பி வெறித்தார் சாஸ்திரி. அவருக்குள் இன்னமும் சமனப்படாமல் இருக்கும் துடிப்பு குரலில் வெளிப்பட்டுச் சொட்டியது.

சாஸ்திரி சொன்ன மந்திரத்தைத் திருப்பிச் சொன்னபடி அண்ணாவின் கையிலிருந்து தர்ப்பையை வாங்கிக்கொண்டு குளிக்கக் கிளம்பினான் சிவராமன். வாசலில் பெரும் கதறல் ஒன்று கேட்டது. வெங்குட்டு அண்ணா. ஷூக் கால்களோடு மன்னியின் காலடியில் குழந்தை மாதிரி விழுந்து புரண்டான். கோத்துக் கட்டிய பாதங்களில் தன் முகத்தை வைத்துத் தேய்த்தான். 'மன்னி, மன்னி' என்று திரும்பத் திரும்பப் புலம்பினான்... மன்னி எழுந்து உட்கார்ந்து அவன் தலையைத் தடவி ஆறுதல் சொன்னாள்...

இது மாதிரி நீயும் நன்னா ஒரு பாட்டம் அழுது தீத்துடு சிவராமா. இல்லேன்னா நெஞ்சை அடைச்சுடும். கார்த்தாலேர்ந்து பிரமை பிடிச்சவனாட்டம் இருக்கியாமே.

என்று ராதா மன்னி இவன் தோளைத் தொட்டு ஆறுதல் சொன்னாள். மன்னி ஏற்கெனவே நல்ல சிவப்பு. வரும் வழியெல்லாம் அழுதுகொண்டு வந்தாளோ என்னவோ, நுனி மூக்கு விகாரமாகச் சிவந்திருந்தது. கண்களிலும் அசாத்தியச் சிவப்பு.

நான் எதற்காக அழவேண்டும்? காலையிலிருந்து, தான் படுத்திருக்கும் நேரம் போக மற்ற நேரங்களில் மன்னி என்னுடன் பேசிக்கொண்டேதானே இருக்கிறாள்? துக்கம் கேட்க வந்த யாரோ அழைக்க ராதா மன்னி நகர்ந்தாள்... குளியலறை வாசலில் வத்ஸலா மன்னி நின்றுகொண்டிருந்தாள்.

பார்றா கண்ணு, வெந்நீர் விளாவி வச்சிருக்கேன். சூடு சரியா இருக்கோ பாரு...

ஹாலில் பயங்கரமான அலறல் கேட்டது. விசாலம் அக்காவின் குரல்.

ம றுநாள் வைகையில் கரைப்பதற்கு அஸ்தி சேகரிப்பதற்காகக் காட்டுக்குப் போனார்கள். நேற்று மன்னியாய் இருந்தவள் இன்று சாம்பல் மேடாக மாறியிருந்தாள். நீண்ட குச்சியால் தலை வயிறு கீழ்உடம்பு என்று மூன்று வட்டங்கள் போட்டு ஒவ்வொரு வட்டமாகக் கிளறி எலும்பு மிச்சங்களை எடுத்து மண் கலயத்தில் உள்ள பாலில்

சேகரிக்கச் சொன்னார் சாஸ்திரி. இளஞ்சூட்டுடன் இருந்த எலும்புத் துண்டுகளைத் தொட்டு எடுக்கும்போது சிவராமனின் கை நடுங்கியது.

மன்னி நேற்றுப் பிரேத ரூபமாக இருந்தாள் அல்லவா. இப்போது பூத ரூபமாக ஆகியிருக்கிறாளாம். பிதுர்லோகத்தில் அவளைப் பொறுப்பாகக் கொண்டு சேர்ப்பது சிவராமனின் பொறுப்பு. அங்கே சென்று சேர்ந்தபிறகு அவள் பூதவுருவை நீங்கி ஆவியுரு எடுத்துவிடுவாள் என்று விளக்கினார் சாஸ்திரி.

அவர் கூறிய அனைத்தையும் சிரத்தையாகச் செய்தான் சிவராமன். அண்ணன்மார் மூன்றுபேரும் குமுறிக் குமுறி அழுதார்கள். சிவராமன் சிறு சலனமுமில்லாமல் சாஸ்திரியைப் பின்தொடர்ந்து வைகையாற்றுக்குள் இறங்கிப் போனான். ஈரவேஷ்டியின் கீழ் விளிம்பில் சுடுகாட்டு மண் ஒட்டி அழுக்காகியிருந்தது. இயல்பாக விலகி வழிவிடாமல், நடக்கும்போது வேஷ்டி தடுக்கியது.

முழங்காலளவு தண்ணீர் சிறு ஓடைபோல ஒழுகிக்கொண்டிருந்த வைகையில் தலை முழுகிவிட்டு நிமிர்ந்தான். கரையில் ரங்கசாமி அண்ணா மாரில் அறைந்துகொண்டு நின்றிருந்தார். எதற்காக இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்கிறார் இவர்? இப்போது என்ன நடந்துவிட்டது? வீட்டுக்குத் திரும்பிப் போனால், செம்பில் தண்ணீர் வைத்துக்கொண்டு காத்து நிற்கப் போகிறாள் இவர் சம்சாரம்.

அம்பாஸிடர் காரில் நெருக்கியடித்துக்கொண்டு எட்டுப்பேர் ஏறிக்கொண்டார்கள். சிவராமனை ரங்கசாமி அண்ணா தன் மடியில் ஏற்றிக்கொண்டார். அவருடைய வயிற்றிலும் தொடையிலும் நெஞ்சிலும் உள்ளூற ஒரு துடிப்பு ஓயாமல் ஓடிக்கொண்டிருந்தது.

சிவராமன் யூகித்தது சரிதான். வத்ஸலா மன்னி வாசலில் காத்துக் கொண்டு நின்றிருந்தாள். கையில் தண்ணீர்ச்செம்பு. ஒருவருமே அவளைக் கவனிக்கவில்லை. பிளாஸ்டிக் வாளியில் இருந்த தண்ணீரைக் கோரிக் காலில் ஊற்றிக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தார்கள். சிவராமனும் பின்பற்றினான்.

சொர்ணம் அத்தை ஹாலில் உட்கார்ந்திருந்தாள். இரவு முழுக்க ஏதோ அனத்திக்கொண்டே படுத்திருந்தாள். உறக்கமற்று வெளிறிய முகத்தில் சோபை இன்னமும் கூடிவிட்டிருந்தது. வெற்று நெற்றி பளிங்காக மினுங்கியது. கிழவி பிறவி அழகி. விரித்துக் கிடந்த சாண் நீளக் கூந்தலைச் சிறு முடிச்சாக மாற்றியபடி,

விசாலம், எல்லாருக்கும் காஃபி எடு. மணி சாஸ்திரி, உக்காரும்

ஓய்...

என்றாள். சரியாக இருந்த புடவையைச் சரிசெய்துகொண்டே,

...சொல்லும். அடுத்து என்ன செய்யணும். நாள்க் கணக்குப்படி வாங்கவேண்டிய சாமான்கள் லிஷ்ட்டு குடும். டீவியெஸ் தோப்பிலே நீரே ஏற்பாடு பண்ணிர்றீரா, சவண்டிக்கி?

அட, இருடி. இவ ஒருத்தி, கால்லெ வெந்நீரெ விட்டுண்டு பறக்கறா... நான் கொஞ்சம் மூச்சுவிட்டுக்கறேன்.

விட்டுக்கும் விட்டுக்கும். மூச்சு விட முடியும்போதே விட்டுண்டுர்றதுதான் நல்லது?

ஓரே இரவில் துக்கமெல்லாம் வடிந்து தன் நிலைக்குத் திரும்பிவிட்டாள் அத்தை என்று தோன்றியது.

காஃபி குடித்து முடித்தானதும், சாஸ்திரி தொண்டையைச் செருமிக்கொண்டார். வெங்குட்டு அண்ணா எழுதுபலகையில் தாளும், பேனாவும் எடுத்துக்கொண்டு பக்கத்தில் உட்கார்ந்தான். விதவிதமான பட்டியல்கள் ஓட ஆரம்பித்தன.

தான சாமான்கள் பட்டியலை ஆரம்பிப்பதற்கு முன்னால் சிறு விளக்கம் சொன்னார் சாஸ்திரி. பூத ரூபமாய் இருக்கும் மன்னி, பிதுர்லோகம் போகும் வழி அவ்வளவு சௌகரியமானதில்லையாம். நெருப்பு நதி, ஜலப் பிரவாகம், இருட்டு மண்டலம் என்று அவள் தாண்டியாகவேண்டிய படலங்கள் அநேகம். அதற்கு அவளுக்கு உதவுவதற்காக, நீர்ச் செம்பு, செருப்பு, குடை, விசிறி, பசுமாடு, அகல் விளக்கு என்று ஏகப்பட்ட தானங்கள் செய்தாக வேண்டும். மன்னியின் சார்பாக வாங்கிக்கொள்வதற்கு அந்தணர்களை சாஸ்திரியே ஏற்பாடு செய்துவிடுவார். பசுமாட்டைப் பொறுத்தவரை நெருங்கிய உறவினர்கள் வாங்கிக்கொண்டால் உத்தமம். இந்த நாட்களில் பெரும்பாலும் யாரும் வாங்கிக்கொள்ள முன்வருவதில்லையே. இறந்தவர்கள் செய்த பாவங்களின் இருப்புத்தொகை முழுவதும் பசு தானம் பெற்றவர்களின் கணக்கில் வரவாகி விடுகிறது என்பதுதான் காரணம்.

...அதெ விடும். பசுமாட்டைக் கட்டித் தீவனம் போட்டுச் சாணியள்றதுக்கு யாராலே ஆகும்? இல்லெ, யார்வீட்டுலயானும் மாடு கட்டறதுக்கு இடம் இருக்கா? மனுஷா இருந்து சமைச்சுச் சாப்படறதுக்கே இடம் போறலே... என்ன சொல்றீர்?

என்று சிரித்தாள் அத்தை. அவளுடைய முதுகுப் பக்கம் நின்று கொண்டிருந்த வத்ஸலா மன்னி, 'ம், பாத்துக்கோ' என்று கேலியாக உதட்டைப் பிதுக்கி முகத்தை வெட்டினாள் ஒரு கணம். அத்தையைப் பொருட்படுத்தாமல் சாஸ்திரி தொடர்ந்தார்.

தவிர, இதெல்லாம் அவாவா வசதியைப் பொறுத்த விஷயம்தான் ரங்கஸாமீ... இருக்கறவன் எல்லா தானமும் குடுத்துடுவான். இல்லாதவன்...? அவனைச் சேந்தவா மட்டும் காலாகாலத்துக்கும் பூதமாவே இருந்துற முடியுமா...?

எல்லாரும் சாஸ்திரியின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

...அதுக்கும் வழி வச்சிருக்கா பெரியவா. பசுமாடும் வெள்ளி விளக்கும் வாங்கித் தர சௌகர்யப்படலையா. பணமாக் குடுக்கலாம். அவ்வளவு பணம் கெடையாதா. வெத்தலை பாக்குலே பதினோரு ரூவா வச்சிக் குடு. அய்யா, அதுவும் முடியாதா, வெறும் வெத்தலை பாக்கை வச்சிக் குடு. வெத்தலை பாக்குக்கும் வழியில்லாமெ தரித்திரம் பிடுங்கறதா? ஆத்மார்த்தமா நாலு சொட்டு கண்ணீர் விட்டாலே போறும். போய்ச் சேந்த ஜீவனுக்காக எல்லா தானமும் குடுத்த புண்ணியம் வந்து சேந்துடும் உனக்கு. அட, கண்ணுல ஜலமும் தானா வரமாட்டேங்கறதா...

சிவராமனின் பக்கம் சாஸ்திரியின் பார்வை திரும்பியது. எல்லார் கவனமும் இவன்மேல் படிந்தது.

...ஒரு முள்ச்செடியை இறுக்கிக் கட்டிக்கோ. வலி தாங்காமே ரெண்டு சொட்டுக் கண்ணீர் ஊறாதா. அதெ வச்சிண்டு பிதுர் லோகத்துக்குப் போயிடலாங்கறது ஐதீகம். கேள்றா அம்பீ, எல்லாருக்கும் சேத்துத்தான் வத்ஸலா போய்ட்டா. இப்பிடி பிரமை பிடிச்ச மாதிரி உக்காந்திருந்தா நெஞ்சை அடைச்சுரும் பாத்துக்கோ. ஏம்மா, விசாலம், நீயாவது ஒந் தம்பிக்கு எடுத்துச் சொல்லப் படாதா...?

சிவராமன் மௌனமாக எழுந்து வாசலுக்குப் போனான். இருந்துகொண்டே இருப்பவளை, பத்து நிமிஷத்துக்கொருதரம் எதிரில் வந்து பேசிக்கொண்டிருப்பவளை, செத்துப்போய்விட்டாள் என்று நினைத்து எப்படி அழுவது? அவள்தான் இருக்கிறாளே...? சாஸ்திரியின் குரல் பின்னால் தொடர்ந்தது. நிலையருகில் நின்று திரும்பிக் கவனித்தான் சிவராமன்.

விசாலம், பத்தா நாள் சாப்பாட்டுச் செலவு பொண்கொழந்தைகளோடது. ஒம்பதாம் நாள் பந்துக்களுக்கெல்லாம்

பட்சணம் போடணும். அந்தச் செலவும் ஒங்களுதுதான். பாத்துக்கோ. ரங்கஸாமீ, மேல்க்கொண்டு சந்தேகம் ஏதும் இருந்தா, ஆள் அனுப்பு சொல்லி விடறேன். அதுக்கும் மேலே சந்தேகம் வந்ததுன்னு வச்சிக்கோ...

சாஸ்திரியின் முகத்தில் பழைய விஷமம் வந்துவிட்டது. சொர்ணம் அத்தையின் பக்கம் பார்த்துக்கொண்டு சொன்னார்:

...எங்களுக்கெல்லாம் மேல்ப்பட்ட ஒரு கனபாடிகள் இங்கேயே இருக்கா. அவள்ட்டெக் கேட்டுத் தெரிஞ்சுக்கோ.

ஆமா, சந்தேகத்தெ என்ட்டெக் கேளு. தட்சணையை மட்டும் மணி சாஸ்திரிகளுக்குக் குடுத்துடு.

என்று முடித்தாள் அத்தை. எல்லாரும் சிரித்தார்கள். ரங்கசாமி அண்ணாவுமே புன்னகைத்தார். 'அடப் பாவிகளா!' என்று நினைத்துக் கொண்டான் சிவராமன். அவ்வளவு துக்கமும், அழுகையும், அவ்வளவுதானா?

அ டுத்த பத்து நாட்களும் அதே வேகத்தில் ஓடிக் கடந்தன. வீடு எந்நேரமும் கசகசவென்று ஆட்கள் நிரம்பி இருந்தது. அவ்வப்போது யாராவது ஓரிரு சொட்டுக் கண்ணீர் உகுத்தார்கள் மறு நிமிஷம் சமனமாகி இயல்புநிலைக்குத் திரும்பினார்கள். சற்று நேரம் கழித்துக் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்கள்.

ஆறாவது நாள் காரியத்துக்குப் போய்விட்டுத் திரும்பின பிறகு, பல்கலைக்கழகத்தில் சென்று கோர்ஸ் கம்ப்ளீஷன் ஸர்ட்டிஃபிக்கேட் வாங்கி வந்தான் சிவராமன். மாலை சூட்டி மேஜைமீது வைத்திருந்த மன்னியின் படத்துக்கு முன்னால் வைத்து நமஸ்கரிக்கச் சொன்னாள் விசாலம் அக்கா. சிவராமன் உடனடியாகச் செய்தான்.

ஆனால், மற்றவர்களுக்கெல்லாம் புகைப்படச் சட்டகத்துக்குள் சிறைப்பட்டிருந்த வத்ஸலா மன்னி, சிவராமனுக்கு மட்டும் வீடு முழுவதும் சரளமாக நடமாடிக்கொண்டிருந்தாள். இவ்வளவு மனிதர்களுக்கும் மத்தியில் ஓயாமல் தலைகாட்டி அபிப்பிராயங்கள் உதிர்த்துக்கொண்டும் ஆறுதல் வழங்கிக்கொண்டும் இருந்த வத்ஸலா மன்னியுடன் நிதானமாகத் தானும் நாலு வார்த்தை பேசுவதற்குத் தனிமை இல்லையே என்று சிவராமன் ஏங்கினான். அதைவிடவும், சதா தொட்டுத்தொட்டுப் பேசும் மன்னி, தொடவியலாத தொலைவில் இருந்தபடியே பேசுவது இன்னும் பெரிய ஏக்கமாக இருந்தது.

பதிமூன்றாவது நாள் சுபஸ்வீகாரம் நடந்தது. எல்லாருமே

கோடித்துணிகள் போட்டுக்கொண்டு, கல்யாணச் சாப்பாடு சாப்பிட்டு... வீடு நிஜமாகவே கல்யாண வீடுமாதிரிக் கலகலப்பாக இருந்தது. மன்னி விட்டுச் சென்ற வெற்றிடம் பற்றி ஓரிரு வார்த்தைகள் பேசிவிட்டு வேறென்னென்னவோ பேசிச் சிரித்துக்கொண்டிருந்தார்கள் சகலரும்.

எல்லாவற்றிலும் பங்கெடுத்தவாறே, உள்ளூறப் புழுங்கினான் சிவராமன். அடிக்கொருதடவை மன்னி காட்சியளித்து இவனை சமனப்படுத்த முயன்றுகொண்டிருந்தாள். சூட்சும உருவமாக அவள் இருந்துகொண்டிருப்பது வெறும் பிரமைதானோ என்ற சந்தேகத்துக்கு முதல்தடவையாக சிவராமனைக் கொண்டு சேர்த்த சம்பவம் மத்தியானம் மூன்று மணி சுமாருக்கு நடந்தது.

அதை இவன் நேரடியாகப் பார்க்கவில்லை. சொர்ணம் அத்தையை ஜட்கா வண்டி பிடித்து ஏற்றியனுப்பப் போயிருந்தான். அத்தை வெற்றிலை மென்ற வாய் முழுக்கச் சிரிப்புடன் எல்லாரிடமும் விடைபெற்றுக்கொண்டாள். அவளுடைய பையை சிவராமன் எடுத்துக் கொண்டான். வைரத்தோட்டை தன் புடவை முந்தானையால் துடைத்தவாறே செருப்பை மாட்டிக்கொண்டு அத்தை படியிறங்கிய காட்சி இன்றுவரை சிவராமனுக்கு மறக்கவில்லை. அன்று ஜட்கா கிடைக்காமல் வெகுநேரம் காத்திருந்ததும் மறக்கவில்லை.

அன்று வியாழக்கிழமை. அடுத்த வியாழக்கிழமைப் பொழுது அத்தைக்கு விடியவேயில்லை என்பதும், அந்த வாரச் சனிக்கிழமை இரவு தூங்கப் போனவள் உறக்கத்திலேயே காலமாகிவிட்டாள் என்பதும் ஆறுவருடம் கழித்துத்தான் சிவராமனுக்குத் தெரியவந்தது. அப்போது சிவராமன் சொந்தமாகத் தொழில் நடத்த ஆரம்பித்திருந்தான். மதறாஸின் கட்டட நிபுணர்களில் ஒருவனாக மாறுவதற்கான ஏணியில் விரைந்து ஏறிக்கொண்டிருந்தான்.

வாடிக்கையாளர் ஒருவர் தம் கட்டட வரைபடத்தைப் பெருமாள் பாதத்தில் வைத்து வாங்க வேண்டும் என்று சிவராமனை ஸ்ரீரங்கம் அழைத்து வந்திருந்தார். மிகத் தற்செயலாகத் தாயார் சந்நிதியில் சந்திக்கநேர்ந்த ரமணி சொன்ன நாலைந்து செய்திகளில் சொர்ணம் அத்தையின் மரணமும் ஒன்று. அவளுக்குக் கர்மம் பண்ணிக் கரையேற்றிவிட்ட சுப்பிரமணிய சிரௌதிகளும் காலமாகிவிட்டாராம். ரமணி, சிரௌதிகளின் கடைசி மகன்.

ரங்கசாமி அண்ணா வலதுபுறம் பக்கவாதம் தாக்கிப் படுக்கையில் கிடக்கிறார் என்ற செய்தியும், ராஜு அண்ணா எங்கோ கண்காணாமல் போய்விட்டான் என்பதும்கூட ரமணி சொல்லித்தான் தெரியும்.

வாடிக்கையாளரிடம் விடைபெற்றுக்கொண்டு, கொடிமங்கலத்தில் சென்று ரங்கசாமி அண்ணாவைப் பார்க்க மதுரைக்கு பஸ்ஸேறினான் சிவராமன். பயணம் முழுக்க அண்ணாவும் மன்னியும் நிரம்பியிருந்த நெஞ்சு அபாரமாய்க் கனத்தது.

அதிகாலை நான்குமணிக்குக் கதவைத் திறந்துவிட்டு அனுப்பியபோது அண்ணா வலதுகையை ஆட்டிக்கொண்டே நின்ற சித்திரம் கண்முன்னால் நிற்கிறது.

இ வனும் அண்ணாவும் மட்டும் மீந்திருந்த வீட்டில் அந்த இரவு முழுவதும் கண்கொட்டாமல் ஹாலில் படுத்திருந்தான் சிவராமன். மூன்று மணிக்கு எழுந்து பல் துலக்கினான். உடைமாற்றிக்கொண்டான். நாலைந்து உடைகளை ஒரு தோள்பையில் அடைத்தான். சான்றிதழ்கள் வைத்திருந்த ஃபைலையும் ஞாபகமாக எடுத்துக்கொண்டான்.

பூனைபோல் அடிவைத்து நடந்து நிலைவாசல் கம்பிக்கதவில் கை வைக்கிறான். படுக்கையறைக் கதவு திறந்தது. பகீரென்றது. இரண்டு கைகளையும் நீட்டிக்கொண்டு ரங்கசாமி அண்ணா நிற்கிறார். அந்தக் கைகளுக்குள் நுழைந்துகொண்டு விசித்து விசித்து அழுதான் சிவராமன். அண்ணாவின் உடம்பும் குலுங்குவதை உணர முடிந்தது. சில கணங்கள்தாம். அண்ணாதான் முதலில் சமனப்பட்டார்.

கைச்செலவுக்குக் காசிருக்காப்பா.

அண்ணா...

சிவராமன் மறுகினான்.

நீ எடுத்த முடிவுதாம்ப்பா சரி. இந்தப் பசங்ககிட்டேயெல்லாம் நீ போயி நிக்க வேண்டாம். இதெல்லாம் மண் குதிரைகள். நானுமே ராத்திரிப்பூராத் தூங்கலே. நீ சின்னப்பையன். நினைச்சவொடனே கெளம்பிடலாம். எனக்கு இன்னும் வேலைகள் இருக்கே. இந்த வீட்டுக்கு ஒரு ஏற்பாடு பண்ணணும். உத்தியோகம் பாத்தது போறும்னு எழுதிக் குடுக்கணும். இன்னும் ஒருவாரம் பத்து நாள்தான். நானும் கொடிமங்கலத்துக்குப் போயிடுவேன். வைகையாத்தைப் பாத்துண்டே மிச்சக் காலத்தைக் கழிச்சுடுவேன்...

அண்ணா, ஸாரிண்ணா. நானும் ஒங்ககூடயே இருந்துடறேண்ணா.

என்று பலவீனமாகச் சொல்லிவிட்டு விசும்பினான் சிவராமன்.

தப்பு, தப்பு. இப்பிடி நெனைக்கறதே தப்பு. முன்வச்ச காலைப் பின்வைக்காதே. எங்கெ போயிடப் போறோம், சொல்லு. அதெல்லாம் நீ

பெரிய ஆளா வருவே. தப்புவழிக்கிப் போறவனாவா ஒங்க மன்னி வளத்திருக்கா. எங்கேருந்தாலும் அமோகமா இருப்பே... உதயத்துக்கு முன்னாடி பொறப்புட்டா நாள்கெழமெ நேரம் எல்லாம் பாக்கவேணாம். இரு, ஒரு நிமிஷம்...

படுக்கையறை அலமாரியைத் திறந்தார். கைக்கு வந்த தொகையை எடுத்து ஒரு காகித உறையில் போட்டார். சிவராமனின் கையில் திணித்தார்.

...இந்தா, அண்ணா மன்னியோடெ ஆசீர்வாதம். தைரியமாக் கிளம்பு.

வாசலுக்கு வந்து கையசைத்துக்கொண்டு நின்றார் சிவராமன் தெருமுனையில் திரும்பும்வரை.

பிற்பாடு மதறாஸ் வந்து, தன் என்ஜினீயரிங் வகுப்புத் தோழனின் அறையில் உட்கார்ந்துதான் அந்தக் காகித உறையைப் பிரித்துப் பார்த்தான் சிவராமன். நூறு ரூபாய்க் கட்டு. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பதாம் வருடத்தின் பத்தாயிரம் ரூபாய்.

பல வருடங்களாகக் கண்முன்னால் தொடர்ந்து ஆடிக்கொண்டிருந்த அந்த வலதுகைதான் இப்போது விளங்காமல் கிடக்கிறதாம். வத்ஸலா மன்னியின் சுபஸ்வீகார தினம், புதைபாடுகளிலிருந்து மீண்டெழுந்தது.

அ த்தையை வழியனுப்பக் கிளம்பும்போது இல்லாத அமைதி, திரும்பி வந்தபோது கவிந்திருந்தது வீட்டில். அடுக்களையில் இருந்த விசாலம் அக்காவிடம் ஒரு காஃபி கேட்பதற்காக நெருங்கினான் சிவராமன். எரியும் அடுப்பில், பொங்கும் பதத்திற்கு வந்திருந்த பால்பாத்திரத்தை வெறித்துக்கொண்டு நின்றவள் திரும்பிப் பார்த்தபோது கண்கள் ரத்தமாகச் சிவந்திருந்தன. கண்ணீர் முட்டி நின்றது. சிவராமனை இறுக்கிக் கட்டிக்கொண்டு ஹோவென்று கதறினாள்.

ஏதோ வாய்த்தகராறு ஆரம்பித்து முற்றி அடிதடியாகி ராஜு அண்ணாவும் வெங்குட்டு அண்ணாவும் நடுக்கூடத்தில் கட்டி உருண்டார்களாம். பிரம்மச்சாரி கொடுத்த உதையில் குடும்பஸ்தனுக்குப் பலமான அடி. வலது கண்ணின் கீழ்ப்புறம் வீங்கி, கருரத்தம் கட்டிவிட்டது. பிரித்துவிடப்போன ரங்கசாமி அண்ணாவுக்கும் முகத்தில் அடி. உதடு கிழிந்திருக்கிறது. ராதா மன்னியும் வெங்குட்டு அண்ணாவும் குழந்தைகளை அழைத்துக்கொண்டு உடனடியாக வீட்டைவிட்டுப் போய்விட்டார்கள். அவர்கள் இந்தப் பக்கம், ஆனையூர் பஸ்ஸ்டாப்புக்குப் போனதால் சிவராமன் பார்த்திருக்க வாய்ப்பில்லை.

அவ ஒருத்தி போய்ச் சேரணும்னு காத்திருந்த மாதிரி ரௌடித்தனம் பண்ணிட்டான்களேடா சிவா. இன்னிமே எந்த தைரியத்திலே பொறந்தாத்துக்கு வருவேன் நான்?

என்று சொல்லிப் பெரிதாக அழுதாள் அக்கா.

மணைப்பலகையைத் தலைக்கு வைத்துக்கொண்டு கூடத்தில் படுத்திருந்த மன்னியின் பிம்பம் மௌனமாக வடித்த கண்ணீர் அதன் காது மடல் நோக்கி வழிந்தது. அது தனக்கு மட்டும் தெரிவது, வேறு எதிலும் தலையிடக் கையாலாகாத வெறும் பிம்பம், என்பது வலியாக உறைத்தது சிவராமனுக்கு. வெறும் அரைமணிநேரத்தில் இது யாருடைய குடும்பமோ ஆகிவிட்டதை நம்ப முடியாமல் மனம் தவித்தது.

ஆக, சர்ட்டிஃபிக்கேட்களை எடுத்துக்கொண்டு தன்னோடு மதறாஸுக்கு வரும்படியும், அங்கே நல்ல வேலையாகத் தேடித் தருகிறேன் என்றும் அழைத்திருந்த வெங்குட்டு அண்ணா இவனிடம் சொல்லிக் கொள்ளாமலே புறப்பட்டுவிட்டான்...

சி வராமனுடைய வற்புறுத்தலுக்கு இணங்கி, இறுதி நாட்களில் ஆழ்வார்ப்பேட்டை வீட்டில் வந்து தங்கினார் ரங்கசாமி அண்ணா. ஒருவருடத்துக்கும் குறைவான காலம்தான். அவர் காலமானபோது வெங்கடாசலத்துக்கு ஃபோனில் தகவல் சொன்னான் இவன். அவன் உச்சுக் கொட்டிவிட்டு, 'இன்னும் ஒரு மணிநேரத்தில் வந்து விடுகிறேன்' என்றான். தாம்பரத்திலிருந்து வர வேண்டியவன். காட்டுக்குக் கிளம்பும்வரை வரவில்லை. திரும்பத் திரும்பக் கூப்பிட்டபோது, மறுமுனையில் டெலிஃபோனை எடுக்க ஆளில்லை.

வரலேன்னாப் போறான். விட்டுரு. நீ ஆகவேண்டிய காரியத்தைப் பாரு.

என்று விஷயத்தை முடித்துவிட்டாள் விசாலம் அக்கா. அதற்கு முந்திய வருடமே, ராஜு அண்ணா ஜாடையில் இருந்த ஒரு சாமியாரை ராமேஸ்வரத்தில் பார்த்ததாக யாரோ சொல்லியிருந்தார்கள்.

அவ்வளவுதான். சூட்சுமமாகப் பிணைத்துவைத்திருந்த சிறு நூல் அறுபடுவதற்காகக் காத்திருந்தார்கள் போல எல்லாரும். சிதறின சுள்ளிக்கட்டு மாதிரி ஆகிவிட்டது குடும்பம். விசாலம் அக்கா பார்க்கும்போதெல்லாம் ஒருதடவையாவது சொல்லி அழுவாள்.

...ஒருமுறை பொங்கல் சமயத்தில் மதறாஸில் சிவராமன் வீட்டுக்கு வந்திருந்தாள் அவள். மாட்டுப் பொங்கலன்று அதிகாலையில் மொட்டை மாடியில் கனுப் பிடி வைக்கப் போனார்கள் வீட்டுப் பெண்கள்.

மற்றவர்கள் வேடிக்கை பார்ப்பதற்காகப் பின்தொடர்ந்தார்கள். கைப்பிடிச் சுவரில் நாலைந்து காக்கைகள் ஏற்கெனவே வந்து அமர்ந்திருந்தன. மனிதர்கள் வருகையைப் பார்த்து சற்று நகர்ந்து உட்கார்ந்தன.

மஞ்சள் பிசைந்த சாதம், குங்குமம் பிசைந்த சிவப்புச் சாதம், தயிர் சாதம், வெறும் வெள்ளைச் சாதம், பழைய பொங்கல், கரும்புத்துண்டு, இவற்றைப் பாத்திரத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து, கோலத்தின்மீது விரித்த பசுமஞ்சள் இலையில் படைக்கும்போது விசாலம் அக்கா விம்மி விம்மி அழுதாள். படைக்கும்போது உதடுபிரியாமல் சொல்லவேண்டிய வேண்டுதலை உரத்துச் சொல்லித் தேம்பினாள்:

காக்காப்பிடி வைச்சேன்

கனுப்பிடி வைச்சேன்

காக்காய்க்கெல்லாம் கல்யாணம் கல்யாணம்

காக்காக்கூடு கலைஞ்சாலும் என் கூடு

கலையாமல் பாத்துக்கோ பகவானே...

பிறந்தகம் நன்றாக இருக்கவேண்டும் என்பதற்கான பிரார்த்தனை அது. அருகில் நின்றிருந்த வசந்தா ஆறுதலாக விசாலம் அக்காவின் தலையைக் கோதிவிட்டாள். அவள் முதுகைக் கட்டிக்கொண்டு ஸ்ரீவத்ஸன்,

அத்தே, அழாதேத்தே.

என்று மழலையில் கெஞ்சினான். வத்ஸலா மன்னியின் ஞாபகமாக வைஷ்ணவப் பெயர் சுமந்த ஸ்ரீவத்ஸன் சிவராமனின் ஒரே குழந்தை.

✠

மார்ச், 1984

ஒ ரு காலத்தில் மிகவும் பிரபலமான லாட்ஜ் அது. மதுரை வட்டாரத்தில் படப்பிடிப்புக்காக சினிமா நட்சத்திரங்கள் வரும்போது அங்கேயிருந்துதான் சாப்பாடு போகுமாம். தமிழகத்தின் பெரும் பிரமுகர்கள் பலரும் அங்கே வந்து தங்குவதைத்தான் விரும்புவார்கள். அறைகள் அவ்வளவு சுத்தமாகவும் வசதியாகவும் இருக்குமாம். தரைத்தளத்தில் உள்ள உணவு விடுதியில் எந்த நேரத்தில் சாப்பிடப் போனாலும் கால்மணி நேரத்துக்குக் குறையாமல் காத்திருந்த பிறகுதான் உட்கார இடம் கிடைக்கும் என்று பெரிசுகள் சொல்வார்கள்.

இப்போதும் பிரபலமாய்த்தான் இருக்கிறது. வேறு காரணங்களுக்காக. சுகாதாரக் குறைவு என்று கொஞ்சநாள் மாநகராட்சி சீல் வைத்திருந்தது. லாட்ஜ் உரிமையாளர் ஆளுங்கட்சியிலிருந்து எதிர்க்கட்சிக்கு மாறியதுதான் காரணம் என்று ஊருக்குள் பேசிக்கொண்டார்கள். இல்லாவிட்டாலும், அடிக்கடி போலீஸ் ரெய்டு நடக்கிற இடம்தான் அது. பத்திரிகைகளில் செய்தி வரும். 'மதுரையின் பாரம்பரியமிக்க விடுதியில் அழகிகள் கைது' என்று செய்தி போடுவார்கள். விடுதியின் பெயர் எந்த இடத்திலும் வராமல் பார்த்துக்கொள்வதற்கு விடுதி முதலாளியின் அரசியல் தொடர்புகளும் ஒரு காரணம்.

இங்கேதான் அந்த வைத்தியர் மாதாமாதம் வந்து தங்குகிறார். ஒவ்வொரு மாதமும் இருபத்தேழாம் தேதி. நூற்றியொன்றாம் எண் அறை. இந்த இரண்டும் மாறவே மாறாது. அவர் கொடுக்கும் மருந்துகளிலும் பெரும் மாற்றம் கிடையாது என்றும், எல்லா வியாதிக்குமான சிகிச்சையை அநேகமாக இரண்டு மூன்று மருந்துகளாலேயே சமாளித்து வருகிறார் என்றும், புத்தியுள்ளவன் இந்த மாதிரி இடங்களுக்குப் போகமாட்டான் என்றும் சண்முகம் பலதடவை எச்சரித்திருக்கிறான். அதையும் மீறித்தான் வரவேண்டியதாகி விட்டது. என்ன, அறிவுரை சொன்னவன் என்பதால், சண்முகத்துக்கும் தெரியாமல் வர நேர்ந்தது.

இத்தனைக்கும், மணியைவிட சண்முகத்திடம்தான் இவனுக்கு நெருக்கம்

அதிகம். சண்முகம் பீடி தவிர வேறு பழக்கங்கள் இல்லாதவன். வருடம் ஒருதடவை சபரிமலைக்கும், பழனிமலைக்கு நடைப் பயணமும் செல்வான். மூன்று பேரும் சேர்ந்துதான் தரகு வியாபாரம் செய்கிறார்கள். மாட்டுத் தரகும் வீட்டுத் தரகும். சண்முகம் அவன் தனியாக முடிக்கும் வியாபாரத்தில்கூட ராமலிங்கத்துக்குப் பங்கு கொடுத்துவிடுவான். மணி அப்படிப்பட்டவன் இல்லை. சேர்ந்து முடிக்கிறவற்றில்கூட, நியாயமான பங்கு கொடுக்கிறானா என்பதற்கு உத்தரவாதம் இல்லை. ஆனால், மணி நல்ல நண்பன். காசு விஷயத்தில் கொஞ்சம் முன்னே பின்னே இருந்தாலும், நட்புக்காக உயிரைக் கொடுக்கக்கூடியவன்.

தவிர, இப்போது வந்திருக்கிறதே வியாதி, இதுமாதிரி விவகாரங்களில் சண்முகத்தால் பிரயோசனமில்லை. மணிதான் அனுபவஸ்தன். 'இன்ன மாதிரி ஒரு சிரமம் இருக்கு மாப்ளே' என்று சொன்னவுடனே மணி பளிச்சென்று கேட்டான்:

புதூர் கோகிலாகிட்டெப் போனயா?

இவன் இல்லையென்று தலையாட்டினான். வந்திருக்கும் வியாதியின் மூலகாரணத்தைக் கண்டுபிடிக்காமல் ஓய்வதில்லை என்று தீர்மானம் செய்தவன் மாதிரி மணி பெயர்களாகக் கொட்டிக்கொண்டே போனான். ஆழ்வார்புரம் தங்கம்மா, மேலமடை சாலாட்சி, வசந்தநகர் பங்கசம் என்று அவன் சொல்லச் சொல்ல, மதுரைக்குள் தான் இன்னும் பாக்காத சரக்குகள் இத்தனை இருக்கிறதா என்று வியப்பும் இதுகளையெல்லாம் இனி எங்கே போய்ப் பார்க்கப் போகிறோம் என்ற ஏக்கமும் ஒருசேர ராமலிங்கத்தைத் தாக்கின.

'பெரியாஸ்பத்திரிக்கு மட்டும் கட்டாயம் போகாதே' என்று எச்சரித்தான் மணி. அங்கே வி டி பகுதியில் இருக்கும் ஆண் நர்ஸுகள் ரொம்ப அவமரியாதையாக நடத்துவார்களாம். ஆட்களைக் கூப்பிடுவதே 'தேவிடியாப் பயலே' என்றுதானாம். டாக்டர் பார்த்த பிறகு குறியைச் சுத்தம் செய்து மருந்துபோட்டுக்கொள்வதற்குள் உயிர் போய்ப்போய்த் திரும்புமாம். ஸைக்கிள் சக்கரப் போக்ஸுக் கம்பி நுனியில் பஞ்சு சுற்றி அதை உறுப்புக்குள் நுழைத்துத் திருகிச் சுத்தம் செய்வார்களாம்.

ஒனக்கெப்பிடி இம்புட்டு வெவரம் தெரியும்?

என்று விசாரித்தான் ராமலிங்கம்.

அட, நம்ப அனுப்பானடி ராசு இந்தச் சீக்கு வந்துதானெப்பா நாண்டுகிட்டுச் செத்தான்...?

என்றான் மணி. சுருக்கென்றது. சண்டாளன், என்ன வார்த்தை சொல்கிறான். நம் கதியும் அதுதானோ. இவ்வளவு சீக்கிரமே போய்ச்சேர வேண்டிவருமோ? பாவிகளா, இன்னம் ஏகப்பட்ட வருஷம் பாக்கியிருக்கிறதே. அதைவிட இதைப் பார், இந்த மணி நாய், நான் போன பெண்பிள்ளைகள், அதைத் தவிர நான் போகாத ஏகப்பட்ட பெண்பிள்ளைகளிடமும் போயிருக்கிறது, இதோ எதிரில் கல்லுக்குண்டாய் உட்கார்ந்து பீடி பிடிக்கிறது... அடித் தொண்டையில் ஒருவிதமாக நமைச்சலெடுத்தது...

...அதுலெருந்துதானப்பா எங்கிட்டுப் போனாலும் ஒறையெ டவுசர்ப் பையிலேயே வச்சிக்கிட்டுத் திரியுறது?

சிரித்தான். கீழ்வரிசை ஓட்டைப் பல் விகாரமாகத் தெரிந்தது. மணிப்பயல் சொல்லித்தான் இந்த வைத்தியரைப் பார்க்க வந்தது. சண்முகத்துக்குத் தெரிந்தால் வைவான் என்பதால் அவனிடம் சொல்லவில்லை. விஜயாவிடமும் சொல்லாமல்தான் வந்திருக்கிறான்.

அதுசரி, ஊருக்கெல்லாம் தெரியப்படுத்துகிற மாதிரி இடத்திலா பிரச்னை வந்திருக்கிறது? விடுதியின் வாசலில் உள்ள பெட்டிக்கடையை நோக்கிப் போனான் ராமலிங்கம். ஒரு சிகரெட் வாங்கிப் பற்றவைத்தான். இப்போதுகூடத் திரும்பிப் போய்விடலாம். ஆனால், இரவில் அரையிடுக்குகளில் உண்டாகும் தாள முடியாத அரிப்புக்கும், அதிகாலையில் சிறுநீர் பிரியும்போது வேரில் ஏற்படும் அசாத்தியமான கடுப்புக்கும் விடிவு? அதைவிடத் தொடை ஆரம்பிக்குமிடத்தில் நிரந்தரமாக இருந்துகொண்டிருக்கும் வலி?

கலையும் புகையைக் கொஞ்சநேரம் கவனித்தான்... புகைப்படலத்துக்குள் உருவான சித்திரத்தில் ஒட்டுமொத்த மதுரை நகரமும் ராமலிங்கத்தின் வியாதியையும் அது வந்திருக்கும் இடத்தையும் வேடிக்கை பார்ப்பதற்காகக் கூடியிருந்தார்கள். நடுவில் அமைக்கப்பட்ட பிரம்மாண்ட மேடையில் இவனை அம்மணமாய் நிறுத்தியிருக்கிறார், விளம்பரத்தில் புகைப்படமாய் இருந்த வைத்தியர். தமது கையிலுள்ள நீண்ட பிரம்பால் இவனை நகர்த்தியும் சுழற்றியும் பிறப்புறுப்பில் தட்டியும் ஜனங்களுக்குக் காட்டி விளக்கிறார். விதையில் பிரம்பு தட்டும்போது வலி உயிர்போகிறது...

சிகரெட் கையைச் சுட்டது. அவசரமாய்க் கீழே போட்டுக் காலால் தேய்த்து நசுக்கினான். விடுதியை நோக்கிக் கிளம்பினான்.

வியாதியைக் கொடுக்கும் அழகிகளும், அதே வியாதியை

சொஸ்தப்படுத்தும் வைத்தியரும் அடுத்தடுத்த அறைகளில் தொழில் நடத்துவது ஒரு விசித்திரம்தானே. ராமலிங்கம் சிரித்துக்கொண்டான். ஒரு காலத்தில் அழகிகளில் ஒருத்தியாய் இருந்து திடீரென்று இறந்துபோன தாயின் முகம் நினைவு வந்தது. சிரிப்பதற்காகப் பிரிந்த உதடுகள் மீண்டும் கூடும் வழியில் பாதியில் உறைய, ஒருவித அசட்டு உணர்வு மனம் முழுவதும் நிரம்பியது.

அப்பு, ரோட்டெப் பாத்து நட. வீணா அடிபட்டுச் சாகாதே.

என்று எச்சரித்துவிட்டுக் கடந்துபோனான் ஒரு ரிக்ஷாக்காரன். ஹாண்டில்பாரிலிருந்து கிளம்பி ரிக்ஷாவின் ஆசனத்துக்கடியில் சென்று முடிந்த கயிற்றை இழுத்து ரீங்காரமில்லாத கிண்ண மணியை ஒலித்துப் பெரும் இரைச்சலெழுப்பிப் போனவன் மேல வெளிவீதியில் இடதுபுறம் பஸ் ஸ்டாண்டை நோக்கித் திரும்பும்வரை பார்வையால் தொடர்ந்துவிட்டு, ஒருமுறை அடித்தொண்டையிலிருந்து காறித் துப்பிவிட்டு, விடுதி வளாகத்துக்குள் நுழைந்தான்.

வைத்தியரின் அறையை நோக்கி நடந்தான். வாசலில் ஸ்டூல் போட்டு உட்கார்ந்திருந்த கிழவன் இவனைப் பார்த்து, 'உள்ளே போய் உட்கார்' என்று இடது புறங்கையால் சைகை செய்தான். அவன் முகத்தில் ஒருவிதமான அருவருப்பு நிஜமாகவே தெரிந்ததா, இல்லை தனக்குத்தான் அப்படித் தோன்றுகிறதா என்று குழம்பியவாறு உள்ளே சென்று அமர்ந்தான் ராமலிங்கம். ஏகமாகத் துருவேறியிருந்த நாற்காலியில் உட்காரச் சற்று அருவருப்பாய் இருந்தது. ஆனால், எவ்வளவு நேரம்தான் நிற்பது? உட்காரும்போது தொடையிடுக்கில் கடுமையான வலி.

சற்றுப் பெரிய அளவிலான அறைதான் அது. நடுவில் அடர்நீலத்திரை படுதாபோலத் தொங்கி அறையை இரண்டாகப் பிரித்தது. குழல் விளக்கு எரிந்தும் பிரகாசம் இல்லாத அறை. திரைக்கு மறுபுறம் திடீரென்று பேச்சுக் குரல்கள் கேட்டன. அடங்கிய குரலில் பேசிய ஆண்குரலுக்கு உரத்து பதில் சொன்ன கீச்சுக் குரலில் சற்றும் தாட்சண்யம் இல்லை.

...அதெல்லாம் ஆடுன காலத்திலே தெரிஞ்சிருக்கணும். கோயில் மணிகூட பூசை நேரத்துலதானெ ஆடுது. நாம்ப இருபத்துநாலு மணிநேரமும் ஆட்டிக்கிட்டு அலெஞ்சா இப்பிடித்தான் ஏடாகூடமா எதுனாச்சியும் வந்து சேரும். இன்னமேலாவது பொத்திக்கிட்டுக் கிடந்தாலே பாதி கொணமாயிரும். மீதிக்கு என் மருந்து வேலெ பாக்கும். என்னா, புரியிதா?

எதிராளியின் குரல் கேட்கவில்லை. தலையசைத்து பதில் சொல்லியிருப்பான். சில நிமிடங்கள் பெரும் அமைதியில் கடந்த பிறகு, அந்த ஆள் திரைக்கு வெளியில் வந்தான். நடுவயதுக்காரன். தலை அநியாயத்துக்கு நரை கண்டிருந்தது. ராமலிங்கத்தின் முகத்தைப் பார்க்காமலே தலைகுனிந்தவாறு அந்த அறையைவிட்டு வெளியேறினான். கால்களைச் சற்று அகட்டி வைத்து நடக்கிறானோ என்று தோன்றியது.

உள்ளே கேட்டுக்கொண்டிருந்த பேச்சுக் குரல்களும் ஓய்ந்த பிறகு, அந்த அறையில் மயான அமைதி நிலவியது. திரைத் தடுப்பின் இரண்டு புறங்களுக்குமாக நடுவில் தொங்கிய கூரைவிசிறி அவ்வப்போது கிறீச்சிடும் சப்தம் மட்டும் கேட்டது. புகைபடிந்தது போலத் தென்பட்ட சுவர்களும், அழுக்குப் படிந்த குழல்விளக்கால் ஓட்ட முடியாத இருட்டும், அடர்நீலத் திரையும் அந்த அறைக்கு உருவாக்கிக் கொடுத்த அமானுஷ்யத்தில் சில கணங்கள் குவிந்திருந்த கவனம் கலைந்தபோது, வேறு யுகத்தில் மாதிரி வெகு தூரத்தில் சாலையில் வாகன ஒலிகள் கேட்டன.

திரைக்கு மறுபுறம் வாஷ்பேஸினில் நீர் விழும் ஒலி. கைகழுவும் சப்தம். கதவு திறக்கும் கீல் ஒலி. கழிவறைக் கதவு போல. பீங்கான் கோப்பையில் நீர்த்தாரை வீழும் ஒலி. பின்னர், பெரிதாகக் குழாய் திறந்து தண்ணீர் பாயும் ஓசை.

திரைக்கு மறு ஓரத்தில் ஒரு முகம் எட்டிப் பார்த்தது. முழுக்க மழித்ததுபோல வழுக்கை விழுந்த தலை. கம்பிவளையக் கண்ணாடி. கழுவிய உருளைக் கிழங்குபோல மழுமழுவென்ற மேலுதடும் மோவாயும். புருவங்கள் முழுமையாக நரைத்திருந்தன. விளம்பரப் படங்களில் கருகருவென்ற முடியுடன் இருந்த இளமையான முகத்தின் தொலைதூரச் சாயலுடன் இருந்த கிழட்டு முகம், தனக்குப் பொருந்தாத குரலில் உரத்துப் பேசியது.

கொஞ்ச நேரம் பொறு.

அது தன்னை ஒருமையில் அழைத்தது காரணமாக ஒரு கையாலாகாத கோபம் உயர்ந்தது. அவரை உறுத்துப் பார்த்தான். சலனமேயில்லாத முகத்துடன் அவர் தொடர்ந்தார்.

...சாப்புட்டுட்டுக் கூப்புடுறேன்.

விருட்டெனத் தலையைப் படுதாவுக்குள் இழுத்துக்கொண்டார். நிமிட நேரம் தோன்றி மறைந்த முகத்தில் நிரந்தரமாகப் படிந்திருந்த விரசம்

மட்டும் படுதாவுக்கு வெளியில் இன்னமும் நீட்டிக்கொண்டிருப்பதாகத் தோன்றியது ராமலிங்கத்துக்கு.

...அ வள் மட்டும் ஒழுங்காக இருந்திருந்தால் இந்த மாதிரி இடத்திலெல்லாம் வந்து உட்கார வேண்டிய அவசியமே யில்லை. ஆனால், அவளைச் சொல்லியும் குற்றமில்லை.

காமாச்சியக்கா என்னா வேணுமுன்னா தொளிலுக்கு வந்தா? கட்டுனவன் விட்டுப்புட்டு ஓடீட்டான். அப்பிடி ஒரு ஆம்பளையெ நம்பி வீட்டெ விட்டு ஓடியாரலாமா? பதினாறு வயசிலெ வெளியே வந்தா. பதினேளு வயசிலெ நீ வேறெ வவுத்தெ வுட்டு உதுந்துட்டே. பெளைக்க வளி வேணாமா? அவளெ மாருதிப் பொம்பளைகெல்லாம் நல்ல வசதியான வீட்லெ குடும்பஸ்தியா இருக்க லாயக்கானவுக. தலையெளுத்து இங்கெ கொண்ணாந்து தள்ளிருச்சு...

என்று லெச்சுமியக்கா இவன் தாயாரின் கருமாதி அன்று சாயங்காலம் சொல்லி அழுதது. என்னதான் சொன்னாலும் அம்மா சம்பந்தமாக இவனுக்கு இருக்கும் ஞாபகங்கள் வேறுவிதமானவை.

...சாணம் மெழுகிய மண்தரையில் விரிப்பு எதுவும் இல்லாமல் கயிற்றுக் கட்டிலுக்கு அடியில் இவன் உருண்டிருக்கிறான். லேசாய்க் கலைந்த தூக்கம். மிருகத்தின் குரலோசைபோல விட்டுவிட்டுக் கேட்கும் உறுமல் ஒலி. கட்டிலின் மூங்கில் சட்டகம் கனம் தாங்காமல் கிறீச்சிடுகிறது. எழுந்து பார்க்கவேண்டும் போலவும் இருக்கிறது. எழுவதற்குப் பயமாகவும் இருக்கிறது. வலி தாங்காத பெரும் முனகல் குரலொன்றுடன் கட்டில் ஒலிகள் யாவும் நின்று போகின்றன. அம்மாவின் குரல் அது.

ஒருக்களித்துப் படுத்திருக்கும் ராமலிங்கத்துக்கு சினிமாத் திரை போலச் செவ்வகமாய்த் தெரியும் காட்சியில் அம்மாவின் வெற்றுக் கால்கள் இறங்கித் தரையில் நிற்கின்றன. வாளிப்பான குதிரைச் சதையின்மீது தலைவழியாய்ச் செருகப்பட்ட அழுக்குப் பாவாடை விழுந்து மூடுகிறது. வாசல் திரையைத் திறந்துகொண்டு, லுங்கி அணிந்த கால்கள் வெளியேறுகின்றன. கீழே விழுந்த ரூபாய்த் தாளைப் பொறுக்குவதற்காகக் குனிந்த அம்மா இவனைப் பார்த்துச் சிரிக்கிறாள்.

முளிச்சிட்டிருக்கியா கண்ணு?

இவன் சலனமில்லாமல் படுத்திருக்கிறான்.

வெளியெ வா. ஆத்தா காசு தாரேன். பன்னு வாங்கித் தின்னு. ஓடியா.

வரப் பிடிக்காமல் தொடர்ந்து படுத்திருப்பவனை அம்மா கையால் பற்றி இழுக்கிறாள். ஐஸ்கட்டி மாதிரிக் குளிர்ந்திருக்கிறது அம்மாவின் உள்ளங்கை.

...சித்திரைத் திருவிழா. எதிர்சேவைக் கூட்டத்தில் இவன் கையைப் பிடித்துக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக அலைகிறாள் அம்மா. பிறந்ததிலிருந்தே அம்மாவுடன் இதேபோலக் கூட்டத்துக்குள் அலைந்து திரிகிற மாதிரியும், அம்மாவிடம் இப்போது மணக்கும் ரெமி பவுடர் வாசனை எப்போதுமே அவளிடம் இருந்து வந்திருப்பதாகவும், இதுவரை பகலையே தான் பார்த்தது கிடையாது, இந்த ராத்திரியும் முடியவே போவதில்லை என்றும் விதவிதமாகக் கற்பனை செய்து கொள்கிறான் ராமலிங்கம். அவ்வளவு பெரிய கூட்டத்தில் அம்மாவும் தானும் மாத்திரம் நடந்து செல்கிற மாதிரித் தோன்றுகிறது. அம்மாவின் உடம்போடு நெருக்கமாக உரசியபடி நடக்கிறான்.

திடீரென்று யாரோ ஒரு ஆண்பிள்ளையுடன் நின்று பேசுகிறாள் அம்மா. தெரியாத ஆள்தான். கூட்டத்தில் எதிரே வந்தவன். அம்மாமீது வேகமாக இடித்துவிட்டான். அவனை நிறுத்தி விசாரிக்கிறாள் அம்மா. திருவிழாக் கூட்டத்தின் ஓசையும், இவர்கள் பேசியது கிசுகிசுப்பான குரலில் என்பதாலும் அவர்கள் என்ன பேசிக்கொண்டார்கள் என்று ராமலிங்கத்துக்குக் கேட்கவில்லை. அவர்களும் ஓரிரு சொற்கள்தாம் பேசிக்கொண்டார்கள். அந்த ஆள் பையிலிருந்து சில்லறை எடுத்து ராமலிங்கத்துக்கு ஒரு பலூனும் ஒரு பீப்பியும் வாங்கித் தருகிறான். அம்மாவை இவனிடமிருந்து பறித்துக்கொண்டு போகிறான்.

கண்ணு, இங்கிணையே வெளாடிட்டு இரு. ஆத்தா இந்தா வந்துர்றேன்.

என்று குனிந்து இவன் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு நடக்கிறாள் அம்மா. பார்வையிலிருந்து அவர்கள் மறைந்ததும் பலூனை அமுக்கி உடைக்கிறான் ராமலிங்கம். மூங்கில் பீப்பியைத் தரையில் போட்டு மிதித்து நொறுக்குகிறான்.

...கரூரில் காவிரிக்கரை ஓரமாக உள்ள பள்ளிக்கூடம். ஆதரவற்ற குழந்தைகளுக்கான விடுதியும் கொண்டது. முன்புறம் உள்ள மைதானத்தின் விளிம்பில் சுற்றுச்சுவர்க் கதவுக்கு எட்டினாற்போல், தலை விரித்து நின்றிருக்கும் வேப்பமரம்.

யம்மா. நானும் ஒங்கூட வந்துர்றம்மா. என்னய இங்கெ விட்டுப்புட்டுப் போகாதம்மா.

என்று ராமலிங்கம் விசிக்கிறான்.

வேணாங் கண்ணு. மருதையிலே இருந்தா நீ உருப்பட மாட்டெ. சேருவாரோட சேந்து கெட்டுப் போயிருவ. ஆறே வருசம்தானே, இந்தான்னு ஓடீரும்.

என்று சொல்லிவிட்டு வேறுபுறம் திரும்பிக்கொள்கிறாள். பார்வையைத் திருப்பாமலே, இடுப்பில் செருகிய சுருக்குப்பையைத் திறந்து இருபது ரூபாய் நோட்டை வெளியில் எடுக்கிறாள்.

இந்தா, சேப்புக்குள்ளாறெ பத்தரமா வச்சிக்க. பன்னு கின்னு வாங்கித் தின்னு.

என்று இவனிடம் கொடுக்கும்போது அம்மாவின் கண்கள் ரத்தமாய்ச் சிவந்திருக்கின்றன. ரூபாய் நோட்டு இவன் அடிவயிற்றில் கிளம்பியிருந்த குமுறலைத் தணிக்கிறது.

...ஒன்பதாவது வகுப்பு முழுப்பரிட்சை லீவு. திண்ணையில் சும்மா உட்கார்ந்திருந்தான். இந்த வருஷமும் பாஸாகாவிட்டால் சைக்கிள் ரிக்ஷா வாங்கிக் கொடுத்துவிடப் போவதாகச் சொல்லியிருக்கிறாள் அம்மா. ஏற்கெனவே எட்டாங்கிளாஸ் இரண்டு வருஷம் படித்தாகிவிட்டது. மண்டைக்குள் ஏறாத சனியனை என்ன செய்வது. இதுவும் இரண்டு வருஷமோ, மூன்று வருஷமோ. சைக்கிள் ரிக்ஷா இழுப்பதில் சிரமம் ஒன்றுமில்லை. சோணைமுத்தண்ணன் ஹாண்டில்பாரைப் பிடிக்கும் நேக்கெல்லாம் சொல்லிக் கொடுத்திருக்கிறது. கெண்டைக்கால் சதையில் கொஞ்சம் வலி ஏறுகிறது. ஒருவாரம் போலத் தொடர்ந்து ஓட்டினால், சதை இறுகி நல்லாப் பளகிருமாம்; வெறும் பதினாறு வயது உடம்பில்லை. பெரியாம்பளை கணக்காய் வளர்ந்துவிட்டது. மீசைகூடக் கொஞ்சம் அடர்ந்திருக்கிறது. என்ன, சிநேகிதர்கள் எவனாவது ரோட்டில் பார்த்தால் அவமானமாக இருக்கும். அதுக்கென்ன செய்வது, படிப்புத்தான் வர மாட்டேனென்கிறதே.

அகலமாகிவிட்ட தோள்பட்டையின் இருபுறங்களையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டான் ராமலிங்கம். பருத்த முன்னங்கைகளில் வந்து நின்றது பார்வை. அம்மா அடிக்கடி சொல்வாள். 'அவுக அப்பனை அப்பிடியே உரிச்சு வச்சிருக்காம் பாரு, ஒண்ணு போட்டு ரெண்டு எடுத்தாப்புல. அந்த ஒடம்பெப் பாத்து ரொங்கித்தானே நாஞ் சண்டாளி ஓடியாந்தேன். இங்கெ பார்றா லிங்கம், அந்தக் களவாணிப் பயலெ மாரி எதுனாச்சிம் ஏடாகூடமாச் செஞ்சு வச்செ, நா அப்பறம்

பொல்லாதவளாயிருவேன். ஒளுங்கா மொறையா நடந்துக்கிறணும். என்னா?'

மத்தியானம் மூன்று மணி இருக்கும். அம்மா யாரோ தெரிந்த வாடிக்கையாளர்கள் இருவருடன் மூணாறு புறப்பட்டுப் போயிருக்கிறாள். சந்துக்குள் ஈக்குஞ்சு நடமாட்டமில்லை. வழக்கமாக இந்த நேரத்துக்குப் பச்சைக்கலர் லூனாவை ஒட்டிக்கொண்டு வந்துசேரும் மல்வேட்டிக்காரரைக்கூடக் காணோம். அவர் கலெக்டராபீஸில் வேலை பார்க்கிறாராம். லெச்சுமியக்கா வீட்டில் மதியம் சாப்பிட வருவார். அவர்கள் இருவரும் புருசன் பொஞ்சாதியாக வாழ்க்கை நடத்துவதாக சந்துக்குள் ஒரு பேச்சு உண்டு. மேலுதட்டின் கீழ்ப்பகுதியில் சன்னமான கோடு இழுத்தது போன்ற மீசை அந்த ஆளுக்கு. சட்டைக் காலரில் கர்ச்சீப் செருகியிருப்பார். அவரைப் பார்த்தாலே எரிச்சலடைவான் ராமலிங்கம்.

அக்னி நட்சந்திரம் நடு வாரம். வெக்கை பொருபொருவென்று அனத்துகிறது. வியர்வை பொங்கி நாறுகிறது. உள்ளுக்குள் ஏதோ சலனப்பட்டுத் திரும்பிப் பார்த்தான். பக்கத்து வீட்டுத் திண்ணையில் விஜயகுமாரி இவனைப் பார்த்துக்கொண்டு நிற்கிறாள். பார்வைகள் சந்தித்ததும் கையசைத்துக் கூப்பிடுகிறாள். பக்கத்துவீடும் நீலமேகம் முதலாளியுடையதுதான். கடந்த சில மாதங்களாக அங்கே குடி வந்திருக்கிறாள் விஜயகுமாரி.

இவனைவிட ஏழெட்டு வயது பெரியவளாய் இருக்கலாம். நல்ல சிவப்பு நிற நீண்ட மூக்கு வலது புறமாகச் சற்றுக் கோணியிருக்கும். காதுமடல்கள் மிக அகலமானவை. ஈர்க்குச்சி மாதிரி ஒல்லியான உடம்பின் மேல்பகுதி முழுக்க நிறைந்த முலைகள். எப்படித்தான் சுமந்துகொண்டு நடக்கிறாளோ என்று மலைப்பாக இருக்கும். எம்மெஸ் ராஜேஸ்வரியின் பாடல்களை அப்படியே அச்சாகப் பாடக்கூடியவள். பேசும்போது உள்ள சாதாரணக் குரல், பாடும்போது மழலைக் குரலாக மாறிவிடும். சும்மா இருக்கிற நேரங்களில் சந்துக்குள் இருக்கும் சிநேகிதிகள் மத்தியில் உட்கார்ந்து ஏகப்பட்ட பாட்டுக்கள் பாடுவாள். 'ஓ ரசிக்கும் சீமானே...' 'தாரா தாரா வந்தாரா...' 'பொன்னான வாழ்வே மண்ணாகிப் போமா...' அவள் பாடி முடித்து ரொம்ப நேரத்துக்கு அந்தக் குரல் காதுக்குள்ளேயே சுற்றிச்சுற்றி வரும்.

வாடிக்கையாளர்கள் பலரும் அவளுடைய குரலுக்கு மயங்கித்தான் திரும்பத் திரும்ப வருகிறார்கள் என்றும், வருகிறவர்களெல்லாம் அவளைப் பாடச் சொல்லியும் கேட்பார்கள் என்றும் லெச்சுமியக்கா

ஒருநாள் மத்தியானம் அம்மாவிடம் சொல்லிக்கொண்டிருந்தாள்.

நாலாவது தடவையாக அவளது வலதுகை அசைந்ததும் கட்டுப்பாட்டை இழந்து எழுந்து போனான். படியேறி வந்தவனை உள்ளே கிடந்த கட்டிலில் உட்காரச் சொன்னாள் விஜயகுமாரி. அவளுடைய முகத்தைப் பார்த்துப் பேசவிடாமல் கண்ணில் வந்து குத்திய முலைகள் தொந்தரவு செய்தன.

சாப்பிட்டியா?

'இல்லை' என்று அவள் நெஞ்சைப் பார்த்து தலையசைத்தான். இப்போது என்னவோ, பேசும்போது அவளுடைய குரல் கிணுகிணுவென்று இருக்கிறது. அந்த அறையின் வலதுகோடியில் உள்ள நுழைவாசலுக்குள் நுழைந்துவிட்டுத் திரும்புகிறாள். கையில் அலுமினியத் தட்டு. மீன் குழம்பின் மணம் பிரமாதமாக இருக்கிறது. அவித்த முட்டை இரண்டு, முட்டைக்கோஸையும் பெரிய வெங்காயத்தையும் சேர்ந்து வதக்கிய பொரியல். இதுபோக, பொரித்த அப்பளப்பூ ஒரு கொத்து. அநியாய ருசி. உருட்டி உருட்டி விழுங்கினான்.

சும்மாப் பிளேட்டுலெயே களுவு.

எச்சில் தட்டை எடுத்துக்கொண்டு அவள் உள்ளே சென்று வருவதற்குள் மீண்டும் கட்டில் விளிம்பில் உட்கார்ந்திருந்தான் ராமலிங்கம். எதிரே வந்து நிற்பவளின் முலைகளிலிருந்து பார்வையை அகற்ற முடியாமல் தவிக்கிறான். உடம்பெங்கும் ஒரு விறைப்பு ஏறுகிறது.

இந்தா. கையெத் தொடெ...

முந்தானையை விலக்கி நுனியை நீட்டுகிறாள். முழுவடிவத்தையும் பார்த்ததில் ராமலிங்கத்துக்கு மூச்சு முட்டுகிறது.

...அதென்னா, அப்பிடி மொறைக்கிறே? இது வேணுமாக்கும்?

என்று நெருங்கி வந்து இவன் முகத்தை மாரோடு இறுக்கிக் கொள்கிறாள். மெத்தென்று இருக்கிறது. மணக்கிறது. அம்மாவிடம் உள்ள மணம் இல்லை இது. வீட்டுக்குள் வந்ததுமே பிறையில் குட்டிக்கூரா பவுடர் டப்பாவும், ஸ்நோ டப்பியும் இருப்பதைக் கவனித்திருந்தான். விஜயகுமாரி இவனை மெதுவாகக் கட்டிலில் கிடத்தினாள். மல்லாந்து கிடத்தினாள். மல்லாந்து கிடந்தவனின் முகத்தைப் பார்த்துக்கொண்டே கைகள் இரண்டையும் முதுகுப்புறம் கொண்டுசென்று ரவிக்கைக் கொக்கிகளைக் கழற்றினாள். திரும்பி உட்கார்ந்து கடைசிக் கொக்கியை இவனைக் கழற்றச் சொன்னாள்.

சட்டென்று இவன் புறம் திரும்பி,

இந்தா சாப்புடு.

என்று இவனோடு சேர்ந்து கட்டிலில் சரிந்தாள். ஏதேதோ பிதற்றியவாறு அவள் செய்த ஒவ்வொன்றும் ராமலிங்கத்துக்குப் புதிதாகவும், இன்னும் இன்னும் என்று தூண்டுவதாகவும் இருந்தது. ஏதோ ஒரு கட்டத்தில், மூச்சுத் திணறி, வலியும் அதிகரித்து, போதும் என்று விலக எண்ணியவனை,

இன்னைக்கி ஒன்னெக் கன்னி களிக்காமெ விடமாட்டண்டா.

என்று சிரித்தபடி அவள் ஜெயித்தாள்.

கொஞ்ச நேரம் கழிந்து இவன் காதருகில் 'புதுப் பெண்ணின் மனசெத் தொட்டுப் போறவரே, உங்க எண்ணத்தெச் சொல்லிவிட்டுப் போங்க...' என்று சன்னமாகப் பாடினாள். அந்த வேளை நீண்டுகொண்டே போகவேண்டும் என்று ஆசையாக இருந்தது ராமலிங்கத்துக்கு.

...மறுநாளைக்கு மறுநாள் காலை சுமார் எட்டுமணி இருக்கும். திண்ணையில் உறங்கிக்கொண்டிருந்த ராமலிங்கம் பயங்கரமான கூச்சல் கேட்டு விழித்தான்.

வெளியே வாடி, அவுசாரி முண்டெ. ஏம் மடியிலேயேவா கையெ வய்க்கிறே?

என்று விஜயகுமாரியின் வீட்டு வாசலில் நின்று அம்மா அலறினாள். அவள் வாசல் படியில் வந்து நின்று பதிலுக்குக் கத்தினாள். கூட்டம் சேர்ந்துவிட்டது. இருவரும் ஒருவர் கூந்தலை ஒருவர் பற்றி மல்லுக்கட்டி உருண்டார்கள்.

மத்தியானப் பொழுதுதானே, அவள் வீட்டுக்குள் இவன் நுழைந்து திரும்பியதை யாரும் பார்த்திருக்க மாட்டார்கள் என்றுதான் நினைத்துக்கொண்டிருந்தான் ராமலிங்கம். யாரோ பார்த்திருக்கிறார்கள் போலிருக்கிறது. அந்த வாரக் கடைசியில், பழங்கானத்தம் ஜெகதா தியேட்டர் சமீபமாக இடம் மாறிச் சென்றுவிட்டாள் விஜயகுமாரி.

அப்புறம் இரண்டே வருஷங்கள்தாம். அம்மா மூச்சு நின்றுவிட்டது. அந்த இரண்டு வருடங்களிலும்கூட, அம்மாவுக்குத் தெரியாமல் வாரம் ஒரு முறையாவது அவளைப் போய்ப் பார்க்காமல் இருந்ததில்லை ராமலிங்கம். பத்து வருடங்கள் கழித்து, இன்னமும் விஜயா புதிதாகத்தான் இருக்கிறாள். இவனைப் புருஷன் மாதிரித்தான் நடத்தவும் செய்கிறாள்.

...பெரியாஸ்பத்திரியிலிருந்து அம்மாவின் உடம்பைக் கொண்டு வந்த வேன் சந்துக்குள் நுழையாது என்று சொல்லிவிட்டார்கள். சாதாரண மூச்சுத் திணறல் என்று ஆஸ்பத்திரிக்குப் போனவள். தவறான ஊசி எதையோ போட்டுவிட்டார்கள். அரைமணிநேரம் துடியாய்த் துடித்துவிட்டு உயிர் அடங்கிவிட்டது. சந்துக்காரர்கள் கொஞ்சநேரம் தாவாப் பண்ணிப் பார்த்தார்கள். முதலாளி வந்து எல்லாரையும் கையமர்த்திவிட்டார். பின்னே, சத்தம் அதிகமானால், போலீஸ் கேஸாகும். வீணாக அங்கே அலைந்து இங்கே அலைந்து தொழில்தான் கெட்டுப்போகும். வேறு ஒரு பிரயோசனமும் இருக்காது. சொல்லிக்கொள்கிற மாதிரித் தொழிலா செய்கிறோம்?

ஆக, தானே நடந்துசென்று வெளிச்சீட்டு வாங்கிக் காத்திருந்து ஊசி போடும் இடத்திலும் வரிசையில் நின்று எமனிடம் தன்னை ஒப்புக்கொடுத்தாள் அம்மா.

பிணப்பரிசோதனைக்காகக் கிழிக்கப்பட்ட உடம்பை வெள்ளைத் துணியால் உறைமாதிரி மூடி அனுப்பியிருந்தார்கள். ஆஸ்பத்திரி வேனிலிருந்து ஐந்தாறு பேராகத் தூக்கிக்கொண்டு வந்தார்கள் அம்மாவை. வாசலில் தயாராக இருந்த தேரில் வைத்தார்கள். ஆஸ்பத்திரி மரணம் என்பதால் வீட்டுக்குள் கொண்டுவரக் கூடாதாம்.

அம்மாவின் நெற்றியில் ஒட்டுவதற்காக ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்துக் கொடுத்த நீலமேகம் முதலாளியின் கை நடுங்குவதைக் கவனித்தான் ராமலிங்கம். பிரம்மாண்டமான தேர் கட்டி, புஷ்ப அலங்காரம் செய்வதற்கான செலவு உள்பட, இழவுச் செலவுகளையும் இழவுக்கு வந்தவர்களின் சாப்பாடு மற்றும் சாராயச் செலவையும் அவர் ஒருத்தராகவே முன் நின்று செய்தார்.

அவருக்குப் பொன்முட்டையிட்ட வாத்துக்களில் ஒருத்தியல்லவா காமாட்சி. அவள் இல்லையென்று தெரிந்தால் வேறு வீடுகளுக்குள் நுழையாமல் திரும்பிவிடுகிறவர்களை ராமலிங்கமே பார்த்திருக்கிறான். தூங்குகிற மாதிரி சாந்தம் இருந்தது அம்மாவின் முகத்தில். இவன் காரணமாக விஜயகுமாரியுடன் சண்டையிட்ட அந்த ஒரு சந்தர்ப்பம் தவிர அம்மாவின் குரல் உயர்ந்து ராமலிங்கம் கேட்டதே கிடையாது.

இழவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்திருந்த விஜயா, தேர் அருகில் உட்கார்ந்து மாரிலும் வயிற்றிலும் ஓங்கி ஓங்கி அறைந்து கொண்டு கதறினாள். பாட்டுப் பாட்டாக ஒப்பாரி சொல்லி இரங்கினாள்.

பாக்கு பழுத்த பாக்கு நீ பெத்த

பாலகனும் சின்னவந்தான்

பாக்கு முத்தித் தோப்பாக என் ஆத்தா

பரலோகம் போயிட்டயே...

மூக்கைச் சிந்திச் சேலையில் துடைத்துக்கொண்டாள்.

ஒன்னோட ராமலிங்கத்தெக் காமாச்சியக்கா அநாதையா விட்டுட்டுப் போயிட்டாளேடி விசயா...

என்று அருகிலிருந்து ஒப்பாரி வைத்தது லெச்சுமியக்கா. சனிப்பிணம் தனியாகப் போகக்கூடாது என்பதால் தேரின் முன்புறம் ஒரு கோழியைக் கட்டியிருந்தார்கள். அது படபடவென இறகடித்து உயர்ந்து தடுக்கித் தடுக்கி விழுவதை வெறித்துக்கொண்டு நின்றிருந்தான் ராமலிங்கம்.

கருமாதிக் காரியங்களெல்லாம் முடிந்து வீடுகூடியவுடன், தன்னோடு வந்து இருக்கும்படிச் சொல்லி விட்டாள் விஜயா. அதுதான் நல்லது என்று லெச்சுமியக்காவும் அபிப்பிராயப்பட்டது. அகலமாக ஓடை மாதிரி நகரும் சாக்கடைக்கருகில் விஜயாவின் குடிசை. பழங்கானத்தத்தில் கொசுக்கடி அதிகம். கூடவே வந்து இருக்கத் தொடங்கியதும் விஜயா விரைவிலேயே சலித்துப் போனாள். கொசுக்கடியைக் காரணம் சொல்லி, வீடு திரும்புவதைத் தவிர்க்க ஆரம்பித்தான். இவன் நடத்தையில் ஏற்பட்ட வித்தியாசத்தைக் கண்டுபிடித்துவிட்டாள் விஜயா. கெட்டிக்காரி.

யார் கிட்டவும் போ. எம்புட்டு வாட்டியும் போ. போறதுக்குக் காசு வேணும்னாலும் நாந் தாறேன். ஆனா, ஒனக்கு வீடு மட்டும் இதுதான். ஒன்னைய நெனச்சுத்தான் நான் உசிரெ வச்சிக்கிட்டிருப்பேன். அதெ மட்டும் நல்லாத் தெரிஞ்சுக்கோ. நீ மட்டும் என்னெய விட்டுப் போனேண்டு வையி, இருக்கவே இருக்கு அரளி வெதெ, இல்லாட்டி ஊமத்தங்கா. அரெச்சுக் குடிச்சிட்டு நாம் பாட்டுக்கு மல்லாந்துருவேன்...

என்று கறாராகச் சொல்லிவிட்டாள். அந்த நேரம் அவள் முகம்தான் எவ்வளவு அழகாய் இருந்தது!

அவள் கைச்சாப்பாட்டுக்குப் பழகிவிட்ட நாக்கு, வேறெங்கும் சாப்பிடச் சம்மதியாது. தனது வாடிக்கையாளனான மாட்டுத்தரகன் மணியிடம் இவனை அறிமுகப்படுத்தி வைத்தாள் விஜயா.

‘சம்பாரிச்சுப்போட நா ஒருத்தி இருக்கும்போது, அது எதுக்கு ரிக்சா மிதிச்சுக் கஸ்டப்படணும்?’ என்று அவள் கண்ணீருடன் சொன்னதை ராமலிங்கம் மறந்தாலும், மணி மறக்கவில்லை. ஒரு மடக்கு சாராயம்

உள்ளே இறங்கியதும், ‘எப்பிடிப் பிள்ளெடா அது, எப்பிடிப் பிள்ளெடா அது’ என்று புலம்பிக்கொண்டேயிருப்பான். அதன் பிறகு, விஜயாவைத் தங்கச்சீ என்று அழைக்க ஆரம்பித்தான். அவனுடைய போக்கும் வரத்தும் வாசலோடு நின்றுவிட்டது.

...ஆச்சு இவளோடெ வந்தும் விளையாட்டுப்போல பத்து வருசம் ஓடீருச்சே...

எ ன்னா ரோசனே? ராசாங்கம் எதெயும் பிடிச்சுறக்கிடிச்சிறப்போறெ. போ போ. வைத்தியர் கூப்புடுறாரு.

காவல்காரக் கிழவன் தோளைத் தொட்டு உலுக்கினான். தலையை உதறிச் சுதாரித்துக்கொண்டான் ராமலிங்கம். தயங்கித் தயங்கி திரைக்கு மறுபுறம் சென்று நின்றான்.

அவு...

என்று கிறீச்சிட்டது வைத்தியரின் குரல். லுங்கியை வழித்து ஏற்றுவதா, இடுப்பிலிருந்து இறக்குவதா, பிரச்னைக்குரிய இடத்தைப் பார்க்காமல் அவர் எப்படி வைத்தியம் செய்வார், என்றெல்லாம் சற்றுக் குழம்பிய ராமலிங்கம் சட்டென்று தெளிவடைந்தான். லுங்கியை வேகமாக உயர்த்தினான்.

...போறவ வர்றவகிட்டெயெல்லாம் காட்டுனதுதானே. வைத்தியங்கிட்டக் காட்டுறதுக்கு மட்டும் கூசுதாக்கும்...?

வேறு இடம், வேறு ஆள் என்றால் உடனடியாக அறைந்திருப்பான். வைத்தியக் கிழவனுடைய திமிரின் முன்னால் கையாலாகாதவனாக உணர்ந்தான் ராமலிங்கம். கோணி ஊசியைவிடச் சற்று நீளமான கம்பி மேஜையில் கிடந்தது. அதை எடுத்தார் வைத்தியர். தொடையிடுக்கில் பூ இதழ் மாதிரிப் படர்ந்திருந்த தேமலில் அதன் நுனியை வைத்து அழுத்தினார். வலி சுரீர் என்றது. ராமலிங்கம் பல்லை இறுகக் கடித்துக்கொண்டான்.

...பரவால்லெ. நீர் எதுவும் கோக்கலே. போதும் போதும் மூடு.

என்றார் வைத்தியர். திடீரென்று எதையோ கவனித்தவர் மாதிரி,

பொறு பொறு.

என்றவர், வலதுபுறம் இடுப்பிலிருந்து தொடை பிரிந்திறங்கும் இடத்தில் நெறி கட்டிப் புடைத்திருந்ததைப் பார்த்தார். ராமலிங்கமுமே அப்போதுதான் அதைக் கவனிக்கிறான். லேசாக அமுக்கினார். வலி

சுள்ளென்றது.

பதவலை கட்டியிருக்கே. அந்தச் சனியனேதான். ஒனக்கு என்னாடா வயசு?

திடீரென்று ஏன் தன்னை அடாபுடா என்கிறார் என்ற ஆச்சரியமும், தலைக்கேறிய ஆத்திரமும் அடங்காமலே,

இருபத்தெட்டு.

என்றான்.

கால் பகுதி வாள்க்கெகூட வாளலே. அதுக்குள்ளே இதெச் சம்பாரிச்சுட்டியே. கெட்டிக்காரந்தான். மூடு மூடு. அதென்னா எச்சிபிசனா. மூடு.

லுங்கியைக் கீழே இழுத்துவிட்டான்.

நான் மருந்து தாரேன். ஒரு மண்டலம் சாப்புட்டுட்டு திரும்ப வந்து பாரு. அசால்ட்டா விட்டே, அம்புட்டுத்தான். ஆறே மாசம். தத்தனேரிக்கி டிக்கட் வாங்கீருவே. தாளி எத்தனெ வயசிலடா இதெயெல்லாம் ஆரமிக்கிறீங்க? ம்...?

ராமலிங்கம் பதில் பேசாமல் இருந்தான்

‘ஆறே மாசம்’ என்ற உச்சரிப்பு மனம் முழுக்க மண்டி நிரம்பியது சில கணங்கள். பிறகு அதுவும் சடாரென்று நின்றது. பெருத்த ஓசையோடு ஓடிக்கொண்டிருந்த யந்திரம் திடுமென நின்றுபோன மாதிரி மனத்துக்குள் ஒரு அமைதி படர்ந்துவிட்டது. எல்லாமே முடிந்துபோன மாதிரி, அடிவயிறு முழுக்கக் காலியாகி வெற்றிடமாகி விட்ட மாதிரி உணர்ந்தான்.

...ஒரு மண்டலம் மருந்து தொளாயிரம் ரூவா. காசு கொண்ணாந்திருக்கியா?

இல்லையென்று தலையசைத்தான்.

இப்போதைக்கி ஒருவாரத்துக்குத் தர்றேன். அடுத்த வாரம் இதே கிளமெ திண்டுக்கல்லுலே இருப்பேன். சொச்சத்தே அங்கெ வந்து வாங்கிக்கிர்றியா...?

சம்மதமாய்த் தலையசைத்தான்.

ஒரு வார மருந்துக்கு நூத்தம்பது ஆகும் வச்சிருக்கியா.

நூறு ரூவாதாங்கய்யா கொண்ணாந்திருக்கேன்.

நூறு ரூவாயெ வச்சு என்னத்தெ நொட்டுறது? பத்து ரூவாய்க்கும் அஞ்சு ரூவாய்க்கும் போய்ப் பளகினாக்கெ இப்பிடித்தான். வைத்தியங்கிட்டெ வரும்போதும் கை சுருங்கீரும். சரி அதெக்குடு. நான் மருந்து தர்றேன். திண்டுக்கல் வரும்போது பாக்கிப் பணத்தெக் கொண்டாந்துறணும். சரியா?

‘அதெ அப்பொப் பார்துக்கிறலாம்’ என்று நினைத்துக்கொண்டவாறு தலையசைத்தான். வைத்தியர் எழுந்து கை கழுவப் போனார். உடம்பின் மேல்பாகத்துக்குப் பொருத்தமின்றி, மிகப் பெரிய குடுக்கைபோல இருந்த அவருடைய புட்டம் ஆடிஆடி நகர்வதை வெறித்தான் ராமலிங்கம். அண்டிராயர்ப் பையில் இன்னும் மூணு நூறு ரூபாய்த் தாள் இருப்பதை அவரிடம் தெரிவிக்காதது நல்லதாய்ப் போயிற்று என்று மனம் சமாதானப் பட்டுக்கொண்டது.

அவர் கொடுத்த மருந்துடன் வெளியில் வரும்போது, நல்லவேளை, நோயாளிகள் வேறு யாரும் காத்திருக்கவில்லை. அந்த ஆள் சத்தம் போட்டதை மற்றவர்கள் கேட்கவில்லை என்பது ராமலிங்கத்துக்கு ஆறுதலாக இருந்தது.

ப ழங்கானத்தம் தாண்டி, பசுமலை தாண்டி, திருப்பரங்குன்றம் தாண்டி, திருநகர் தாண்டி, கப்பலூர் தாண்டி நடந்து வந்துகொண்டிருந்தான். இலக்கேயற்ற நடை. தொழிலுக்காகவும், பெண்களுக்காகவும் மைல் கணக்காக நடந்த கால்கள் என்பதால் நடையும் தொலைவும் ஒரு பொருட்டாகவேயில்லை. முன்னால் நீண்டு கொண்டிருக்கும் தார்ச்சாலையைத் தவிர வெறேதையும் கணக்கிலெடுக்காமல் உடன் வந்துகொண்டிருந்த மனம் முழுக்க முழுக்க வெறுமையாக இருந்தது.

பார்வையில்லாத ஈ மாதிரி, அந்த ஆறுமாசக் கெடு மட்டும் சுற்றிச் சுற்றி வந்து தொந்தரவு செய்தது. ஆறு மாசம்தானாமே. ஞாபகங்களின் ஓட்டம் நின்றுவிட்டது. கண்ணுக்கு முன்னால் தெரிகிறவற்றை மட்டும் சுரணையேயில்லாமல் பார்த்துக்கொண்டிருந்தது மனம்.

வைத்தியரைப் பார்ப்பதற்காகக் காத்திருந்தபோது மனத்தில் ஓடிய சித்திரங்களெல்லாம் நிழற்படங்கள் மாதிரி உறைந்துவிட்டன. யாருக்கோ எப்போதோ நிகழ்ந்தவைபோல அந்நியமாக இருந்தன.

திருமங்கலமும் தாண்டியாகிவிட்டது. காலையிலிருந்து எதுவும் சாப்பிடாத வயிற்றில் சிறு நமைச்சல்கூடக் கிளம்பாது மந்தித்திருந்தது. கடுமையாக வியர்த்து உடம்பு நாறுகிறது. கால்கள் சோர்வதை உணர்ந்து நின்றான். உடம்பின் கனம் அதிகரித்துவிட்ட மாதிரியும், பளு

தாங்காமல் முழங்கால்கள் துவள்வது மாதிரியும், பார்வைக்கெட்டிய தூரம் அரைவெயிலின் சோகை தட்டியிருப்பது மாதிரியும் தோன்றியது. சாலையோர மரத்தடியில் உட்கார்ந்தான்.

பார்வை தானாக அலைந்தது. இந்தக் கோடிமுதல் அந்தக் கோடிவரை ஆளரவமற்ற அத்துவானத்தில் தனியாக நின்றிருந்த கைகாட்டி மரம் கண்ணில் பட்டது. இவன் பார்க்கிற சமயத்தில் அதன் ஒற்றைக் கை உயர்ந்தது ஆகாயத்தின்மீது புகார் சொல்கிற மாதிரி.

ராமலிங்கம் அந்தக் கணத்தில் முடிவெடுத்தான். உடனே எழுந்து விறுவிறுவெனத் தண்டவாளத்தை நோக்கி நடந்தான்.

கைகாட்டி பார்வைக்குத்தான் கிட்டத்தில் தெரிந்தது. ரயில் பாதையை நெருங்க கால்மணிநேரம் நடக்க வேண்டியிருந்தது. தண்டவாளங்களுக்கிடையில் நின்று ஒரு வெள்ளாடு மேய்ந்துகொண்டிருந்தது. ராமலிங்கத்தை ஒருமுறை நிமிர்ந்து பார்த்துவிட்டு, கர்ம சிரத்தையாகத் தன் வேலையைத் தொடர்ந்தது.

வெகுதொலைவில், கண்காணாத் தொலைவில், ரயில் பிளிறுகிற ஓலம் கேட்டது. தனக்கான வேளை வந்துவிட்டது என்று சமிக்ஞை கிடைத்த மாதிரி உள்ளே ஒரு சலனத்தை உணர்ந்தான் ராமலிங்கம். அந்த ரயில் இவனுக்காகவேதான் வருகிறது. இவனை விடுவிப்பதற்காக. உடலைப் பிளந்து உயிரை வெளியில் பாய வைத்துவிடும் அது. ரயில் சக்கரங்களில் சதைத் துண்டுகளோடு ஒட்டிக்கொண்டு ஓடப்போகும் உயிருக்குப் பெண்வியாதி தொற்றுவதற்கில்லை. சீக்குப் பிடித்த முண்டம் இங்கேயே கிடந்து அழுகட்டும்.

ரயில்தான் இன்னும் பார்வைக்குள் வரவில்லையே தவிர, அது ஓவென்று அலறி விடுத்த சன்னமான புகைக்கொத்து ஆகாயத்தில் எழுந்து பரவிக் கலைவதைக் கண்டான். நெஞ்சுக்கூட்டுக்குள் எழுந்த படபடப்பு சற்று வேகம் அதிகரித்துவிட்ட மாதிரி இருந்தது. உடலெங்கும் பரபரப்பு ஊறியது. மனமும் உடம்பும் சிறுகச் சிறுகத் தயாராகின்றன... விஜயகுமாரியின் வெளேரென்று உள்ளடங்கிய பல்வரிசையும், இவனுக்கென்றே தனியாக வைத்திருந்த புன்சிரிப்பும் சரிந்து தொய்யத் தொடங்கிவிட்ட மகா முலைகளும், துணி மறைத்த இடங்களில் வெளுத்துக் கிடக்கும் தோலும், மனம் முழுக்க நிரம்பின...

என்னெய மன்னிச்சுருத்தா. வேற வளி தெரியலே.

என்று முனகிக்கொண்டான். அந்த அப்பிராணிக்கும் இந்த வியாதியைக் கொடுத்திருக்கிறேனோ என்னவோ... ஐயோ...

என்ஜினின் முகம் தென்பட்டது. புள்ளியாகத் தொலைவில் தெரிந்த சிவப்பு சிறுகச் சிறுக விளிம்பு விரிவடையும் சதுரமாகப் பெருத்துவந்தது. ரயில் பற்றிய பிரக்ஞையே இல்லாத மாதிரி ஆடு சாவகாசமாகப் புல் தின்றுகொண்டிருக்கிறது. சாதாரணமாக மிருகங்களுக்கு இருக்கக்கூடிய உள்ளுணர்வுகூட இல்லாத ஜன்மமாய் இருக்கிறதே. காது கேட்காத ஆடோ?

அல்லது, அல்லது அதுவும் இவனைப்போல, வாழ்வது சம்பந்தமாக ஒரு முடிவெடுத்துவிட்டதோ? ஆடுகளின் உலகத்தில் வெறியும் கூத்தியாள்களும் பிரியமும் அநாதைகளும் தொழிலும் பங்காளிகளும் வியாதிகளும் வைத்தியரும் வாழும் ஆசையும் சாவு பயமும் உண்டா?

ஆனால், இந்த இடத்தில், இதே இடத்தில், சாவதற்கு முந்தின நிமிடம்வரை புல் தின்ன விரும்பும் ஒரு வெள்ளாடும், காலையிலிருந்து சாப்பிடாமலிருந்தும் பசியென்ற உணர்வே உதிக்காத ஒரு மனிதனும் சாவைப் பகிர்ந்துகொள்ளப் போகிறார்கள்...

ராமலிங்கத்தின் யோசனை அபத்தமானது என்பதை மறு கணமே அந்த ஆடு உணர்த்தியது. ரயிலின் தடதடப்பு தண்டவாளத்தில் அதிர்வதை உணர்ந்ததுபோல அதன் உடம்பு விதிர்த்தது. படுவேகமாக வெளியில் பாய்ந்தது. தண்டவாள ஓரத்தில் பின்னங்கால் தடுக்கி விழுந்து அரக்கப்பரக்க எழுந்து ஓடியது. ரயில் இன்னும் குறைந்தது நூறு கஜ தூரத்தில் இருக்கிறது.

அழுந்த மூடியிருந்த இமைகள் அந்த ஒரு கணத்தில் விரியத் திறந்த மாதிரி உணர்ந்தான் ராமலிங்கம். நாலைந்தடிகள் பின்வாங்கி, ரயில் நிம்மதியாகக் கடந்து செல்ல உதவினான். தன்னுள் அசட்டுத்தனம் நிரம்பி வழிவதுமாதிரி உணர்ந்தான்.

ரயில் மறைத்து நீங்கிய வெட்டவெளியில் எதிர்ப்புறம் நின்றிருந்த ஆடும் இவனும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு நின்றிருந்தார்கள். தாங்கள் பகிர்ந்துகொள்வது சாவை அல்ல, வாழ்வை. இந்தக் கட்டாந்தரை, மேற்புறம் மட்டும் பளபளவென்று வெண்மை பூத்திருக்கும் தண்டவாளங்கள், அவற்றுக்கிடையில் குவிந்து கிடக்கிற கருங்கல் ஜல்லி, முற்றிய பகல்வேளையின் வெக்கை, தார்ச்சாலையில் குளம் மாதிரி அலையடித்துக் கிளம்பும் ஆவி, வெற்றுக் கண்களுக்கு அநியாயமாகக் கூசும் ஆகாயம், கையை மறுபடி இறக்கிவிட்ட கைகாட்டி மரம் எல்லாமே இன்னும் இருக்கிறது.

தனக்குள் கட்டியாக இருந்த ஏதோவொன்று மெழுகுபோல இளக

ஆரம்பிப்பதை ராமலிங்கம் உணர்ந்தான். சாவின் நுழைவாசலில் இருந்து தன்னை மீண்டும் வாழ்வதற்கு இழுத்துவந்த அந்தப் பழுப்பு நிற ஆட்டைத் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருந்தபோது இதுநாள்வரை அவன் அறிந்திராத ஒரு உணர்வு ஊறியது.

வெறும் நன்றியுணர்ச்சி அல்ல அது. உடம்பு குளிர அந்த ஆட்டை அணைத்து இறுக்கிக்கொள்ளும் வேட்கை. ரோமம் அடர்ந்த அதன் உடலெங்கும் முத்தமிடத் தோன்றியது. பெண்ணுடல் தவிர்த்து வேறொரு உடம்பைக் கட்டியணைக்க வேண்டும் என்ற உணர்ச்சி வாழ்நாளிலேயே முதல் தடவையாக ராமலிங்கத்துக்குள் ஊறுகிறது. கொஞ்சங்கொஞ்சமாக லேசாகி வந்திருந்த நெஞ்சில் இப்போது மீண்டும் கனம் ஏறியது. ஆனால், இது வேறுவிதமான கனம். கண்களுக்குள் ஏதோ சுரக்கிற மாதிரி உறுத்தியது.

முன்னால் நகர்ந்தான். அந்த ஆடு ரயிலிடமிருந்து போலவே இவனிடமிருந்தும் தப்பி ஓடியது.

தா ர்ச்சாலையில் சென்று சேர்வதற்காகத் திரும்பி நடக்கத் தொடங்கினான். திருமங்கலத்துக்குப் போய் கண்ணுக்குத் தட்டுப்படும் முதல் டீக்கடையில் ஒரு டீ குடிக்க வேண்டும். அப்புறம் ஒரு சிஸர்ஸ். பிறகு யோசித்துக்கொள்ளலாம், அடுத்துச் செய்யவேண்டிய காரியங்களை.

சாலையில் ஏறுமிடத்தில், முன்னர் தான் உட்கார்ந்திருந்த மரத்தடியில், ஒருவர் இருந்ததைப் பார்த்தான் ராமலிங்கம். இவன் அருகில் நெருங்கும்போது அவர் எழுவதையும், எதற்கோ ஆயத்தமானவர் போலக் காத்து நிற்பதையும் கண்டான்.

✠

மார்ச், 1989

வெயில் சுள்ளென்று ஏறிவிட்டது. கும்பகோணம் ரயில் நிலையம் சந்தடி அடங்கி இருந்தது. கனக்க ஆரம்பித்துவிட்ட பகல் பொழுதின் வெறுமைக்குள் நாலைந்து காகங்கள் பறந்து திரிந்தன. அவற்றின் பார்வையில் படாமல் அவசரமாய்த் தண்டவாளங்களின் அடியில் குறுக்கும் மறுக்கும் ஓடித் திரிந்தன சில பெருச்சாளிகள். பல வருடங்களாகச் சேர்ந்து வந்திருந்த அசுத்தம் கான்க்ரீட் ரயில் பாதையில் படிந்திருந்தது.

பார்வையை நடைமேடைக்குத் திருப்பினார் பெரியவர். சற்றுத் தள்ளி, சுமார் பத்தடி சுற்றளவுக்குப் பரந்திருந்த சாமான்களின்மீது கவனம் குவிந்தது. ஏதோ கல்யாண கோஷ்டி போல. பதினோரு மணிப் பாஸஞ்சரில் போகிறவர்களாக இருக்கும். அவ்வளவு மூட்டை முடிச்சுகளுக்கும் காவலாக ஓர் ஓரமாய் உட்காந்திருந்தவன் சிறு பையன். பதிநாலு பதினைந்து வயதிருக்கலாம். புதிய ட்ரங்க்குப்பெட்டி ஒன்றின்மேல் அமர்ந்திருந்தான்.

ஒல்லியான பையன். முற்றாத முகம். மோவாயில் மட்டும் மச்சம்போலக் குச்சமாக வளர்ந்திருந்த முடி. பிடரிவரை வழிந்த கேசம். நடுவகிடு எடுத்திருந்தான். அடர்த்தியான புருவங்கள். வயதானவர்கள் போடும் முரட்டுக் கதர்த்துணியில் சட்டை வெண்மை மங்கிப் பழுப்படைந்திருந்தது. தான் அமர்ந்திருந்த ட்ரங்க்குப் பெட்டியை அவ்வப்போது தொட்டுப் பார்த்துக்கொண்டான். நாலாபுறமும் முகத்தைத் திருப்பிக்கொண்டேயிருந்தான். கண்களை அடிக்கடி கசக்கிக்கொண்டான். தானாகச் சிரித்துகொண்டான். ஓரிரு வாக்கியங்கள் பேசிக்கொள்ளவும் செய்தான்.

நடைமேடையின் மறுகோடியில் தென்பட்ட கிழவி விறுவிறுவென நடந்து வந்தாள். சாமான் குவியலைக் கடந்தவள், ஏதோ ஞாபகம் வந்தவள் மாதிரி நின்றாள். அந்தப் பையனிடம் தணிந்த குரலில் ஏதோ கேட்டாள். அவள் முகத்தைப் பார்க்காமல் வேறு திசையைப் பார்த்தபடி பதில் சொன்னான் பையன். குரல் வந்த திக்கை நோக்கிச் செவியைத்

திருப்பியிருந்தான்.

உரையாடல் கேட்காத தொலைவில் இருந்தது பெரியவர் அமர்ந்திருந்த பெஞ்ச். அந்தக் கிழவி பையனிடமிருந்து நகர்ந்தாள். சாமான் பரப்பின் விளிம்பில் இருந்த மூட்டை ஒன்றைப் பிரிக்க முயன்றாள். பிறகு என்ன நினைத்தாளோ, ஒரு கையில் அந்த மூட்டையையும், மறுகையில் ஒரு சிறு தகரப் பெட்டியையும் எடுத்துக்கொண்டாள். பெரியவர் வேகமாக எழுந்தார். அவளை நோக்கி நடந்தார்.

நீங்க யாரும்மா?

நீங்க யாரு?

அவள் குரலில் துளியும் கலக்கமில்லை.

இந்தப் பையனோட தாய்மாமா.

அவள் கையிலிருந்த பொருட்களை சற்று உட்புறமாகத் தள்ளி வைத்தாள்.

தம்பி ஒத்தையிலெ உக்காந்திருக்கானே, சாமான்களெ யாரும் தூக்கிட்டு ஓடீறப்படாதேன்னு உள்ளே தள்ளி வச்சேன்...வர்றேங்க.

பெரியவரின் பதிலை எதிர்பார்க்காமல் வந்த வழியே திரும்பி அவசரமாக நடந்து போனாள். விசுக்விசுக்கென்ற அவள் நடையைப் பார்த்துக்கொண்டே நின்றார் பெரியவர். பையன் குரல் கேட்டது.

மாமா, மாமா...

சொல்லுப்பா.

அந்தப் பாட்டி போயிட்டாங்களா?

ஓ.

பசிக்கறது, காசு குடுன்னு கேட்டாங்க. எங்கிட்டெக் காசு இல்லேன்னேன். இங்க நாலைஞ்சு மூட்டை கட்டுச்சாதம் இருக்குமே. ஒண்ணைப் பிரிச்சு ஒரு பொட்டலத்தை எடுத்துக்கச் சொல்லலாம்னு நெனைச்சேன். பாவம், போயிட்டாங்கங்கறீங்களே... இது மொதல்லியே தோணியிருக்கப்படாதா எனக்கு?

இன்னும் உடையாத கீச்சுக் குரலில் படபடவென்று பேசும் சிறுவனை முகத்தருகில் நெருங்கி வாஞ்சையுடன் பார்த்தார் பெரியவர். தழைந்த குரலில் கேட்டார்.

ஏன் கண்ணா, பார்க்க முடியாதில்லையா ஒனக்கு?

ஆமா மாமா. நாலு வருஷமாச்சு பார்வெ சுத்தமாப் போயி.

அடடே. அதுக்கு முன்னாடி பார்வை இருந்ததா?

இருந்ததே. நான் பள்ளிக்கூடமெல்லாம் போனேனே. அஞ்சாம் கிளாஸ் படிக்கும்போது அறுதியாப் போயிடுத்து. அதுவரைக்கும் எல்லாமே சித்தெ மங்கலா இருக்கும். வைத்தியர்ட்டப் போனப்போ, 'கொஞ்சம் மின்னாடியே வந்திருந்தா சொஸ்தப்படுத்தியிருக்கலாம்'ன்னார்.

போயிருக்கலாமே, பின்னே?

எனக்குப் பார்வை சரியில்லேங்கறதே எனக்குத் தெரியாதே. எல்லாருக்குமே அப்பிடித்தான் கண்ணு தெரியும்னு நெனைச்சிண்டிருந்தேன்.

சற்றும் வருத்தமில்லாது, யாருக்கோ நேர்ந்த எதையோ சொல்கிற குரலில் சிறுவனின் தொனியேயில்லை. எல்லாவற்றையும் பார்த்து முடித்த நூற்றுக் கிழவன் மாதிரி இருந்தது.

உன்னாலே பார்க்க முடியாது ங்கறே. உன்னைப் போயி இவ்வளவு சாமான்களுக்குக் காவல் வச்சிட்டுப் போயிருக்காங்களே?

இல்லே மாமா. வக்கீல்மாமாவோடெ சொந்தக்காரர் ஒருத்தரையும் விட்டுட்டுப் போயிருக்காங்க. அவர் பொடிமட்டை வர்ற வழியிலே எங்கியோ விழுந்துடுத்தாம். வேறே வாங்கப் போயிருக்கார்.

கொஞ்சநேரம் இருவரும் பேசாமல் இருந்தார்கள். முற்பகல் முற்றி வருவதன் சங்கேதமாக ஊமைவெயிலில் கடுமை வெகுவாகக் கூடியிருக்கிறது. இப்போது இருக்கிற வெக்கை இதே மாதிரித் தொடர்ந்தால் மாலையில் மழைவர வாய்ப்பிருக்கிறது. ரயில்வே காண்ட்டீனில் மதிய உணவு தயாராகிறது. தாளிக்கிற மணம் நடை மேடை முழுவதும் உலவி நீள்கிறது.

மாமா... மாமா...

இருக்கேண்டா கண்ணா? பொடிமட்டை வாங்கப் போனவர் வர்றவரைக்கும் இருக்கேன்.

நீங்க இருக்கீங்கன்னு தெரியும் மாமா. ஒண்ணு சொல்றதுக்காகக் கூப்பிட்டேன்.

நான் இருக்கேன்னு எப்பிடித் தெரியும்?

நீங்க வந்தப்போ ஹவாய்ச் செருப்புச் சத்தம் கேட்டது. திரும்பிப் போற சத்தம் கேக்கலியே!

பெரியவர் முகத்தில் புன்முறுவல் மலர்ந்தது.

அட, கெட்டிக்காரனா இருக்கியே.

நான் படிச்ச ஸ்கூல் ஹச்செம்மும் இப்பிடியேதான் மாமா சொல்வார். நாலு வருஷத்துக்கு மின்னாடி பார்வை மட்டும் போகலேன்னா, அவரே என்னெப் பெரிய பெரிய படிப்பெல்லாம் படிக்க வைக்கறேன்னு ப்ராமிஸ் பண்ணியிருந்தார். அதுதான் அத்தனையும் போயிடுத்தே...

அது சரி, நீ வேறெ என்னமோ சொல்ல வந்தியே கண்ணா?

ஆமா. நீங்க தாடி வச்சிருக்கீங்க. சரியா?

அடடே. உனக்கு எப்பிடித் தெரியும்?

நீங்க வந்த உடனே என் முகத்துக்கிட்டே வந்து பாத்தீங்களா?

ஆமா.

அப்பொ ஒரு வாசனை வந்தது.. ரோம வாசனை.

ம்.

முகத்திலே மொசமொசன்னு தாடி இருந்ததுன்னாத்தான் அப்பிடி ஒரு ஈரமுடி வாசனை ஆம்பளைகள் கிட்டெ இருக்கும். இப்பொ வெயில் வேற ஜாஸ்தியா இருக்கா. தாவாங்கட்டெயெல்லாம் வேர்த்திருக்குமே.

சபாஷ்...

பையனின் முதுகில் தட்டினார். பையன் முகத்தைப் பெருமையாக வைத்துக் கொண்டான்.

... நீ மஹா கெட்டிக்காரன் கண்ணா.

தேங்ஸ் மாமா.

இன்னும் என்னைப் பத்தி என்னவெல்லாம் தெரியறது, சொல்லு பாப்பம்.

பையன் சிரித்தான்.

தோணத் தோணத் சொல்லறேன் மாமா...

இருவரும் சிரித்தார்கள்.

...ஆனா, ஒண்ணு மாமா. பார்வை போனதுக்கப்பறம், காதும் மூக்கும் ரொம்ப ஷார்ப்பா ஆயிடுத்து எனக்கு.

அது நீ சொல்லாமலே தெரியறதே கண்ணா.

நீங்க என்னைக் கண்ணான்னு கூப்பிடறது எனக்குப் பிடிச்சிருக்கு. ஆனா, நீங்க என் பேரை ஏன் மாமா இன்னும் கேக்கலே?

பெரியவர் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்.

அதுக்கும் ஏதாவது காரணம் கண்டுபிடிச்சிருக்கையோ?

சொன்னாச் சிரிப்பீங்க.

இல்லே, சொல்லு.

புதுசாப் பாக்கறவங்ககிட்டெத்தானே பேர் கேக்கணும். நாம ரெண்டுபேரும் ரொம்ப வருஷமாக் கூடவே இருந்த மாதிரி எனக்கொரு ஃபீலிங். ஒருவேளை ஒங்களுக்கும் அதே மாதிரி ஃபீலிங்கோ என்னமோ, அதுனாலெதான் பேர் கேக்கலியோ?ன்னு தோணினது.

இவ்வளவு நாள் இல்லாட்டாப் போறது, இனிமே என்கூடவே இருந்துர்றியா?

என்ன மாமா சொல்றீங்க?!

வியப்பின் வெளிச்சம் படிந்த முகத்தில் குழந்தைத்தனம் வெகுவாக அதிகரித்துவிட்டது. புருவங்கள் அவசரமாக உயர்ந்து நெரிந்தன. நிலையத்தைவிட்டுத் தண்டவாளம் வெளியேறும் திசையில் அவனது பார்வையற்ற விழிகள் நிலைத்தன.

ஒனக்குப் படிக்கணும்னு ஆசையிருக்கில்லையா? நீ மேல்க்கொண்டு மேல்க்கொண்டு கத்துக்கறதுக்கு நான் கியாரண்ட்டி. அதுபோக, உனக்குப் பார்வையை மறுபடி வரவைக்கவும் முயற்சி பண்ணலாம். என் கூடவே வந்துர்றியா? ஆனா, அதுக்கப்பறம் என்னோடெயே இருந்துறணும். சரியா? என்ன சொல்லறே?

பையன் மௌனமானான். பெரியவர் அவன் முகத்தையும் நிலையத்தின் நுழைவாயிலை நோக்கி வரும் பாதையையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்தார். நடுவயதைத் தாண்டிய ஒருவர் பாதையின் ஆரம்பத்தில் தென்பட்டார். வேஷ்டியின் இடதுநுனியை இழுத்து அக்குளில் இறுக்கிக் கொண்டிருந்தார். தாம்பூலத்தை மென்றுகொண்டே வரும் அவர்தான் இந்தப் பையனின் சக காவலாளியாக இருக்கவேண்டும்.

அம்மா ரொம்பத் தனியாயிடுவாளே மாமா...

வெறுமனே அலைந்த விழிகளை இமைகள் சில கணங்கள் மூடியிருந்தன. ஒரு முடிவுக்கு வந்தவன் மாதிரி தலையை ஆட்டிக்கொண்டு மீண்டும் பேசினான்.

...இப்பொ மட்டும் என்னாலே என்ன பிரயோஜனம்? இன்னும் அவளுக்கு வயசாக ஆக, நான் வெறும் சுமைதான்... உங்களோடே வந்துர்றேன் மாமா. ஆனா, ரெண்டு விஷயம்...

சொல்லு.

ஒண்ணு, நான் வந்தா ஒங்களுக்கும் சுமைதானே. என்னாலே ஒரு வேலையும் செய்ய முடியாதே.

பாதையில் தென்பட்ட மனிதர் நிலையத்துக்குள் நுழைகிறார். வேஷ்டியை உயர்த்தி மடித்து டப்பாக் கட்டுக் கட்டிவிட்டார் இப்போது.

அந்தக் கவலையை நான்னா படணும். நீ ரெண்டாவது விஷயத்தைச் சொல்லு.

ரெண்டாவது, எங்கம்மா சம்மதிச்சாத்தான் நான் வருவேன்.

அம்மாகிட்டெ நான் பேசிக்கறேன். ஒங்க ஊர் பேரென்ன?

மாயவரம் பக்கத்திலே திருப்பனந்தாள். வக்கீல் மஹாதேவய்யர் வீடுன்னு கேட்டாச் சொல்வா. அங்கெதான் எங்கம்மா சமையல் வேலைக்கி இருக்கா. அவ பேரு ருக்குமணி. என் பேரு ஹரிஹர சுப்ரமணியம். ஹரின்னு கூப்பிடுவா எல்லாரும்...

நான் புதன்கிழமை வரேன். நீ தகவல் ஒண்ணும் சொல்லிவைக்க வேணாம். நான் நேர்லெ வந்து பேசிக்கறேன்.

அந்த மனிதர் இவர்களை நெருங்கினார். மூடிய வலதுகையில் பொடிமட்டை துருத்திக்கொண்டிருந்தது. நடைமேடையின் விளிம்புவரை எட்டிச் சென்று, விரிந்த இரண்டு விரல்களின் இடைவெளியினூடாக ரத்தநிற எச்சிலைப் பீய்ச்சினார்.

...ஒரு பொடிமட்டை வாங்க ரெண்டு ஃபர்லாங் நடக்க வேண்டியதாய்டுத்து. கும்மாணம் முந்தி மாதிரி இல்லே. ரொம்ப மாறியாச்சு...

என்றார் பெரியவரின் முகத்தைப் பார்த்து. பெரியவர் லேசாகச் சிரித்துக்கொண்டே நகர்ந்தார். முன்னர் தாம் உட்கார்ந்திருந்த

சிமெண்ட்டு பெஞ்ச்சை நோக்கி நிதானமாக நடந்தார்.

...ஏண்டா அம்பீ, இப்பிடியொரு அசமஞ்சமா இருக்கியேடா. முன்னப் பின்னத் தெரியாதவாளை நிக்க வைச்சுப் பேசிண்டிருக்கையே, இவ்வளவு சாமான் இருக்கு, ஏதானும் ஒண்ணைக் கையிலெ தூக்கிண்டு போயிட்டா என்ன செய்வாய்? அசமஞ்சம்... அசமஞ்சம்...

வந்தவர் தணிந்த குரலில் கண்டிப்பதும், பையன் மறுமொழி சொல்லாமல் சிரிக்கும் ஒலியும் பெரியவரைப் பின்தொடர்ந்தன.

தி ருப்பனந்தாளில் பேருந்து நின்றது. ஓடும்போதைவிட நிற்கும்போது உறுமல் ஜாஸ்தியாக இருந்தது. வயதான வண்டி. உடம்பில் உதறலும் கொஞ்சம் அதிகம்தான். நாலைந்து வர்ணங்களில் சாயம் பூசிய கோழிக்குஞ்சுகள் நிரம்பிய பெரிய வட்டக் கூடையொன்று சக்கர வசமாக இறங்கியது. ஒன்றின்மேலொன்று வீழ்ந்த குஞ்சுகள் வீச்வீச்சென்று அலறின. தொடர்ந்து பெரியவர் இறங்கினார். இரண்டே பிரயாணிகள்தாம். ஏறுவதற்கு யாருமில்லை. பேருந்து கிளம்பி நகர்ந்து வேகமெடுத்தது. அது காலிசெய்த இடத்தில் சுழித்துக்கொண்டு பெரும் புழுதிப் படலம் உயர்ந்தது.

எதிர் வரிசைக் கடைக்காரன் வக்கீல் அய்யர் வீட்டுக்கு வழி சொன்னான். நேரே கிழக்கே பத்து நிமிஷம் நடந்து சோத்துக்கைப் பக்கம் நாலாவது முடுக்கில் திரும்பினால் கல்லெறி தூரத்தில் இருக்கிறது வக்கீல் வசிக்கும் தெரு.

சாந்தம் நிரம்பிய தெரு. தேய்மானத்தை மௌனமாக சகித்துக் கொண்டிருந்தது. ஒரு வீட்டின் சுவராவது பளிச்சென்று இல்லை. மொத்தமாக அறுபது எழுபது வீடுகள் இருக்கலாம். மறுமுனையில் வயல்வெளி தென்பட்டது. சில வீடுகளுக்கு இடையில் குட்டிச் சுவர்களும், வெட்டவெளியும் தெரிந்தன பல் உதிர்ந்த இடம் மாதிரி. அங்கெல்லாம் எருக்கஞ்செடிகளும், கந்தல் துணிகள் உள்ளிட்ட குப்பைகளும் மண்டியிருந்தன. தம்முடைய வக்கீல் மாமா சொல்லித் தந்த ஔவையார் பாட்டு ஒன்றில் எருக்கஞ்செடி வருமே? என்று பெரியவருக்குள் எழுந்த கேள்வி, பதிலை எதிர்பார்த்துச் சில கணங்கள் ஒற்றைக் காலில் நின்றது. அதற்குள் வீடு வந்துவிட்டது...

திருமணத்தை முன்னிட்டு வாசலில் போட்டிருந்த பந்தல் இன்னும் பிரிக்காமல் இருந்தது. சருகுப் பதத்துக்கு நகரத் தொடங்கிவிட்ட மாவிலைத் தோரணம். கம்பி அழிக்கு மறுபுறம் உள்த்திண்ணையில் உட்கார்ந்து ஜெபமாலை உருட்டிக்கொண்டிருந்த நார்மடிக் கிழவி

ஆள்நடமாற்றமேயற்ற தெருவைக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். வெய்யில் கொஞ்சம் கொஞ்சமாகக் கனத்துவருவதை வேடிக்கை பார்க்கிறாளோ என்னவோ...

இங்கெ வக்கீல் மஹாதேவய்யர்...

இந்த வீடுதான். உள்ளெ வாங்கோ.

பொக்கைவாய்க்குப் பொருந்தாத கணீர்க் குரல். நெஞ்சுப்புறமும் முன்னந்தலையிலும் நார்மடியைச் சரிசெய்து கொண்டாள் கிழவி. தலையின் வெண்படலம் உடனடியாக மறைந்தது. கனிந்து சரிந்த முலைத் திரட்சியின் பருமன் மறைய மறுத்தது.

உள்ளேயிருந்து ஒரு நிழல் வெளியே வந்து திண்ணையில் நின்றது. அந்தப் பையன் ஹரிஹரனின் ஜாடை அப்படியே இருந்த முகம். ஆனால், பையனிடம் நிலவிய சகஜபாவமும் மலர்ச்சியும் சற்றும் இல்லாது, கடுகடுத்திருக்கிறது.

இங்க ருக்மணியம்மாள் ன்னு...

நாந்தான். என்ன வேணும்?

ஹரி சம்பந்தமாக் கொஞ்சம் பேசணுமே ஒங்க கிட்டெ.

கண்ணு டாக்டரா நீங்க? பொட்டெக் கண்ணெச் சரிபண்ணிடுவேளா? என்னமோ, பகவான் கண் தெறந்தான்னா இந்த ருக்குவுக்கு ஒரு நிம்மதி. பொம்மண்டாட்டிலேயும் கம்மண்டாட்டின்னா இவொ, என்னெ மாதிரி.

என்றாள் திண்ணைக் கிழவி. ருக்மணியம்மாள் அவளைப் பொசுக்குவது மாதிரி வெறித்தாள். நாலைந்து படிகள் இறங்கித் தெருவுக்கு வந்தாள்.

மாமி, எங்க ஆகம் வரைக்கும் போய்ட்டு வந்துர்றேன். கேட்டாச் சொல்லுங்கோ... நீங்க என்னோடெ வாங்கோ. என்ன பேசணும் ஒங்களுக்கு?

என்றவாறு விசுக்கென்று நகர்ந்தாள்.

நீங்க பேசறது ராஜாங்க ரகசியமாக்கும்? என் காதுலெ விழுந்தாக் குடிமுழுகிடும். போ போ. உச்சந்தலைலே பகவான் செருப்பாலெ அடிச்சும் ஒனக்கு புத்தி வரலையே. கடங்கார முண்டே...

கிழவி ஆங்காரமாக உரத்துச் சொன்னதைக் காதில் வாங்காதவள் மாதிரி நடந்தாள். நாலைந்து வீடுகள் தள்ளி எதிர்ச்சாரியில் இருந்த ஒரு

ஓட்டுவீட்டுக்குள் நுழைந்தாள். வாசல் கூரையைத் தாங்கி நின்ற கறுநிறத் தூண் உளுத்துப் போயிருந்தது. கறுத்துப்போன முன்வரிசை ஓடுகளில் ஓரிரண்டு பிறழ்ந்திருந்தன.

வீட்டுக்குள் நிலவிய இருள் கண்ணுக்குப் பழகுவதற்குச் சில கணங்கள் பிடித்தன. அதற்குள் ருக்மணியம்மாள் விளக்கைப் போட்டாள். ரேழியில் சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்த ஹரிஹரன் நிமிர்ந்தான். இலக்கில்லாமல் திரிந்த விழிகளின்மேல் புருவங்கள் உயர்ந்தன.

வாங்கோ மாமா.

ஒனக்கு இவரை முன்னாடியே தெரியுமா?

என்று தாயார் கோபமாகக் கேட்டாள்.

ஓ. முந்தாநா கும்மோணம் ஸ்டேஷன்லெ பாத்தேனே.

பேசி வச்சிண்டுதான் வந்திருக்காரா? இத்தனெ நாழி எங்கிட்டே சொல்லலியே தர்த்திரமே?

மாமாதாம்மா ஒங்கிட்டெச் சொல்லிவைக்க வேணாம்னிருந்தார். பெரியவா சொன்னாத் தட்டக்கூடாதுன்னு சொல்லியிருக்கேல்லியா? என்ன மாமா...

ஹரிஹரன் சிரித்தான்.

அதென்ன, வாய்க்குவாய் மாமா போட்டாறது. ஒங்கம்மைக்கு ஒடப்பெறந்தானா?

அப்பிடித்தான் இருந்துட்டுப் போறதும்மா.

என்று பெரியவர் முதன்முறையாக வாய்திறந்தார். ருக்மணியம்மாள் அனலாகப் பார்த்தாள்.

நான் பெறந்த வயித்திலே பெறந்தவாள்லாம் ஒபகாரம் பண்ணி ஓய்ஞ்சு போயிட்டா, பாவம். நீங்க ஒர்த்தர் பாக்கி. நீங்க வந்த விஷயத்தெச் சொல்லுங்கோ. எனக்குத் தலைக்குமேலே வேலெ கிடக்கு. போட்டது போட்டபடி எறங்கி வந்துட்டேன் அந்த மொட்டெக் கழுகு அதகளம் பண்ணுமேன்னு. இஞ்ச நின்னுண்டிருக்க நாழியில்லே. சொல்லுங்கோ...

ஒங்க பிள்ளெயே என்னோடெ கூட்டிண்டு போயிடலாம்னு..

தாராளமாக் கூட்டிண்டு போங்கோ. யாரு வேணாம்னா...

ஹரியின் முகம் பெரிதாக மலர்ந்தது. மலர்ச்சிக்கு அடியில் விரிந்திருந்த

ஆச்சரியத்தை உறுத்துப் பார்த்தார் பெரியவர்.

...சம்பளம் ஏதாவது குடுப்பேளா? இல்லே, சாப்பாடும் இருக்க எடமும் மட்டும்தானா...?

பெரியவர் மௌனமாக இருந்தார்.

...ஏதுக்குச் சொல்றேன்னா, தஞ்சாவூர்லேருந்து இப்பிடித்தான் ஒர்த்தர் வந்து கேட்டார். நாற்காலிக்கி வயர் பின்னச் சொல்லித் தருவாளாம். மாசம் எம்பளது ரூபா தருவாளாம். சாப்பாடு தங்கல் எல்லாம் நாம பாத்துக்கணுமாம். கட்டுமா சொல்லுங்கோ. பிறத்தியார் ஒத்தாசெ இல்லாம நடமாடற பிள்ளையையா பெத்து வச்சிருக்கேன்?

நான் வேலைக்கிக் கூப்பிடலே.

பின்னே?

இப்போது ருக்மணியம்மாள் ஆச்சரியப்பட்டாள்.

என்னோடெ அவன் இருக்கட்டும்னு கூப்பிட்டேன்.

இருந்து என்ன செய்யப்போறானோ?

நான் கொஞ்சம் பூஜை புனஸ்காரமெல்லாம் செய்வேன். அவனுக்கும் அதெல்லாம் கத்துக்குடுக்கலாம்னுதான்...

சாமியாரா நீங்க?

இல்லேம்மா.

அதானே. காவி இல்லையேன்னு பாத்தேன்...

வெயில் படர்ந்த தெருவையும் தன் மகனையும் மாறி மாறி வெறித்தாள் அந்த அம்மாள். பெரியவரின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். நின்ற இடத்திலிருந்து ஓரடி முன்னால் வந்தாள்.

...அப்புறம் நாளைப்பின்னே வந்து பணம் குடு, அது இதுன்னு தொந்தரவு பண்ண மாட்டேளே?

மாட்டேம்மா.

திரும்பக் கொண்ணந்து விட்டுற மாட்டேளே?

நிச்சயமா மாட்டேம்மா.

வீட்டின் முன் வாசலில் வந்து இறங்கிய காக்காய் அக்கறையாக ஏதோ சங்கதி சொன்னது சுருக்கமாய்த்தான். பிறகு எழுந்து பறந்தது.

...கூட்டிண்டு போங்கோ.

பெரியவர் ஹரியை நோக்கி நகர்ந்தார். அவனுடைய உச்சந்தலையில் வலதுகையைப் பதித்தார்.

மாமா...

அவனுடைய குரலில் அபூர்வமான நெகிழ்ச்சி இருந்தது. முதுகுப்புறம் ருக்மணியம்மாளின் குரல் கேட்டது.

நீங்க எந்த ஊருக்குப் போணம்?

திருவண்ணாமலைக்கி.

ஒரு மணிக்கி மாயவரம் வண்டி ஒண்ணு இருக்கு. பத்து நிமிஷம் முன்னெப் பின்னெ வரும். கூட்டம் அதிகமிருக்காது. அதுலே போனா, கும்மாணத்திலேர்ந்து வர்ற ரெண்டரை மணி மெற்றாஸ் வண்டியெப் பிடிச்சிறலாம்.

ஓ.

இப்பொ மணி பன்னண்டரை ஆறது.

ம்.

பொறப்புட்டாச் சரியா இருக்கும். சாப்புட்டுட்டுப் போறேளா? வக்கீலாத்திலெ சொல்லி ஏற்பாடு பண்ணறேன்.

அதெல்லாம் வேணாம்மா. நாங்க பார்த்துக்கறோம்.

அப்பொக் கிளம்புங்கோ...

ரேழியை ஒட்டிய அறைக்குள் சென்று இரண்டே நிமிஷத்தில் திரும்பினாள். அழுக்கடைந்த, மஞ்சள்நிற, நகைக்கடைப் பை ஒன்று கையில் இருந்தது. பெரியவரிடம் நீட்டினாள்.

...மாத்துத் துணி ரெண்டு இருக்கு. ஹரிஹரய்யரோட ஆஸ்தி இவ்வளவுதான். இந்தாங்கோ.

சற்றுத் தயங்கினார் பெரியவர். பிறகு தலையை ஆட்டியவாறு பெற்றுக்கொண்டார்.

ஹரி, அம்மாகிட்டெ ஆசீர்வாதம் வாங்கிக்கோ.

பெரியவர் சொன்னவுடனே பையன் ஆயத்தமானான். அவன் எதிரில் வந்து நின்றாள் தாயார்.

இஞ்ச நிக்கறேன்.

என்று யாரோ அந்நியரிடம் சொல்கிற மாதிரி சொன்னாள். ஹரிஹரன் நெடுஞ்சாண்கிடையாக அவள் முன்பு ஓரிரு கணங்கள் கிடந்தான். அவளுடைய பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டான். கோணல்மாணலாக வளர்ந்திருந்த நகங்களில் கறைபோல அழுக்குச் சேர்ந்திருந்த பாதங்கள். கட்டை விரல்கள் இரண்டும் மற்ற விரல்களுடன் விரோதம் கொண்ட மாதிரி விலகித் திரும்பியிருந்தன.

இருவரும் இறங்கி நடந்தார்கள். பின்னால் வீட்டுக்கதவை வெறுமனே தாழிட்டுவிட்டு ருக்மணியம்மாளும் கிளம்பினாள். வக்கீல் வீட்டு அழிக்கதவை அவள் திறக்கிற சத்தம் கேட்டது. தெருமுனை திரும்புகிறவரை அமைதியாய் இருந்த ஹரிஹரன் வாய் திறந்தான்.

நாம தெரு திரும்பற வரைக்கும் நின்னு பார்க்கவாவது செஞ்சிருக்கலாம் அம்மா. இல்லே மாமா...?

அதுதான் வேலை ஜாஸ்தியிருக்குன்னாளே...

பெரியவர் லேசாகச் சிரித்தார். பையனின் இடதுகையைப் பற்றியிருந்த பிடியை மெல்ல இறுக்கினார்.

...பார்வை இருந்தப்பல்லாம் அடிக்கடி கட்டிப்பா மாமா. எனக்கு ஒண்ணுன்னா சட்டுன்னு அழுதுடுவா. இப்பொ ஒரேயடியா அனுப்பறா. கலங்கவே இல்லே பாருங்கோ. அத்தனை கேள்வி ஒங்களைக் கேட்டாளே. என்னை வந்து பாக்கலாமான்னு கேட்டாளா மாமா? அவ்வளவு பெரிய பாரமா இருந்துருக்கேன் நான்...

பையன் குரல் கமறியது. பற்றியிருந்த கையை எடுத்துப் பையனின் தோள்மீது போட்டுக்கொண்டார் பெரியவர். பதில் பேசாமல் நடந்தார்.

பே ருந்து நிறுத்தத்தில் இவர்கள் இருவர் மட்டும்தான். ஓரிரண்டு லாரிகள் போனதைத் தவிர வேறு வாகனங்களே கிடையாது. வெறிச்சோடிய சாலையில் உஷ்ணம் தளதளத்தது. பங்குனி ஆரம்பத்திலேயே இந்தப் போடுபோடுகிறது வெயில். சாலை விளிம்பின் புழுதிப் பரப்பில் படுத்திருந்த சினைமாடு சாவகாசமாய் அசை போட்டுக்கொண்டிருந்தது. நிறுத்தத்தைக் கடந்த பழுப்பு நிறத் தெருநாய் இவர்கள் அருகில் ஒரு கணம் நின்று உற்றுப் பார்த்துவிட்டுப் போனது.

சட்டென்று ஔவையின் பாட்டு ஞாபகம் வந்துவிட்டது. 'வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே' என்று ஆரம்பிக்கும் பாட்டு. 'பாதாளமூலி படருமே' என்று மனம் தொடர்ந்தபோது சாலையில்

தொலைவில் ஒரு பெண்ணுருவம் தென்பட்டது.

ருக்மணியம்மாள். ஹரிஹரனைப் பார்த்தார் பெரியவர். தாயார் வரும் அதே திசையில்தான் முகம் திருப்பியிருந்தான் அவன்.

அருகில் அவள் வந்து சேர்ந்தபோது உடம்பு முழுக்கச் சேர்ந்து மூச்சுவிடுவது மாதிரி இறைத்தது. வேகமாக நடந்து வந்திருக்கிறாள்போல.

இப்...பிடி...த்தான்... சித்...தெ... எட்டி... நட...ந்தா மூச்...சிரைக்...கறது இப்...பல்லாம்.

மெல்ல. மெல்ல. ஆசுவாசமாகுங்கோ.

நமக்குப் பின்னாடி இவனை யாரு பாத்துப்பான்னு ராப்பகலாக் கவலைப் பட்டுண்டிருந்தேன். பகவான் உங்களை அனுப்பிச்சிட்டார். கோடிப் புண்ணியம் உங்களுக்கு.

அதெல்லாம் பெரிய வார்த்தெம்மா.

பின்னே... தங்கமான பிள்ளை இது. லேசிலே கிடைக்காது. துளிக் கல்மிஷமில்லாத பிள்ளே. இப்பிடி ஒரு கொறை வரலேன்னா இந்த ஊரையே தாங்கியிருப்பன். அவ்வளவு கெட்டிக்காரன்...

அவள் குரல் தழுதழுத்தது. மகனின் தலையில் கையை வைத்து, அடர்ந்திருந்த சிகையை விரல்களால் அளைந்தாள்.

...எனக்குக் குடுப்பினை இல்லே. என்ன சொல்ல? இவ அப்பா இருந்தாரே, அழிச்சா ரெண்டாள் செய்யலாம். ஆஜானுபாகுன்னா ஆஜானுபாகு. சொக்கத் தங்கம் மாதிரி நெறம். அதே மாதிரி கொணம். கோப்ரட்டீலே கணக்கெழுதினார். கை அவ்வளவு சுத்தம். நாந்தான் குடுப்பினை இல்லாத ஜென்மமாச்சே. ஒண்ணேகால் வருஷம்தான் எனக்கு வாய்ச்சது. நாலைஞ்சு நாள் காச்சல்னு படுத்தார். ஆறா நாள் பேதியாச்சு. ஏழா நாள் ஆளே இல்லே. ஆனா, எனக்கு மொதநாளே அறிகுறி தெரிஞ்சாச்சு பாத்துக்கங்கோ...

அவள் விரல்கள் மகனின் முகத்தை வருட இறங்கியிருந்தன.

...சாந்தி முகூர்த்த அறைலே வச்சிருந்த குத்துவெளக்கு சரிஞ்சிருக்கு. மெத்தைலே பத்திண்டுடுத்து. ஏதோ தீயற வாசனை வருதேன்னு எழுந்து பாக்கறேன்... கால்மாட்டிலெ மொள்ளமா எரிஞ்சிண்டிருக்கு. 'தெய்வமே'ன்னு பதறிண்டே அதை அணைச்சுட்டேன். மறுநாள் கார்த்தாலே மாமியார்க்காரி கேட்டாள்னா என்ன சொல்றது?

இப்பிடியா, கருகியேவா ஆரமிக்கும் ஒரு பொம்மண்டாட்டிக்கி? மொதல் கருகல் முத்திலும் கருகல்ன்னு...இந்தோ, மிச்சமிருந்த மொதலையும் இழந்தாச்சு. வேற வழி என்ன இருக்கு சொல்லுங்கோ.

சடாரென்று மகனைத் தன் உடம்போடு இறுக்கிக்கொண்டாள். முகத்தை அவனுடைய உச்சந்தலையில் பதித்துக்கொண்டாள். குரலெழாமல் விசும்பினாள். உடம்பு குலுங்கியது. ஹரிஹரனின் விழிகள் மூடியிருந்தன. இமை நுனியில் ஒரு நீர்முத்துத் தெரிந்தது. முகத்தில் அபாரமான நிறைவு ததும்பியது. உதடுகள் புன்னகையால் விரிந்திருந்தன.

பெரியவர் முகத்தை வேறுபுறம் திருப்பினார். நீளமாய்க் கிடந்த சாலையின் மறுகோடியில் பேருந்து வருவது தெரிந்தது.

ருக்மணியம்மாளும் அதைப் பார்த்தாள். மகனைவிட்டு அவசரமாக விலகினாள். புடவையின் முன்புற மடிப்பிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்தாள். கொழகொழவென்றிருந்த காகிதப் பொட்டலத்தின் ஓர் ஓரத்தில் வாழையிலையின் பச்சை நிறம் நீட்டிக் கொண்டிருந்தது.

...தயிர்சாதம் கொஞ்சம் கொண்டுவந்தேன். ரெண்டுபேருமாச் சாப்பிட்டுக்கங்கோ.

என்றபடி மஞ்சள்பையில் மேல்புறம் அதைத் திணித்தாள். பையன் தாயாரின் பாதத்தைத் தொடக் குனிந்தான்.

...க்ஷேமமா இருடா அம்பீ... அண்ணா, க்ஷேமலாபத்துக்கு அப்பப்பொக் கடுதாசி போடுங்கோ, முடிஞ்சா. ருக்குமணி, மேல்பார்வை வக்கீல்னு போட்டாலே கைக்குக் கெடைச்சிரும்.

அவசியம் போடறேம்மா. தோணும்போதெல்லாம் நீங்க வந்தே பார்க்கலாம். முடியாதபோது, ஒரு கார்டு போட்டாக் கூட்டிண்டு வந்தும் காட்டறேன்.

ஒங்களுக்குக் கோயில்தாண்ணா கட்டணும்.

தாயார் குமுறினாள். பேருந்து வந்து நின்று பெருமூச்சு விட்டது. மாயவரம் செல்லும் வண்டி.

✠

ஜூலை, 1987

1

தலைமைச் சாமியாரின் அஸ்தியை பெஸன்ட் நகர் கடலில் கரைத்து விட்டுத் திரும்பியபோது, மடம் தனக்குத் தொடர்பில்லாத கட்டடமாகத் தோன்றியது கோவர்த்தனத்துக்கு. கிட்டத்தட்ட ஒரு வருடம் முழுசாகத் தங்கியிருந்தும் உணர்வுபூர்வமான பிணைப்பு எதையும் தராத கட்டடத்தின் இளமஞ்சள் நிறச் சுவர்களை வெறித்தபடி கொஞ்சநேரம் நின்றார்.

பிறகு, நிர்வாகிகளிடம் விடைபெறக் கிளம்பினார். யாருக்கும் ஆட்சேபமில்லை. இதை முன்னமே எதிர்பார்த்திருந்தவர்கள் மாதிரி உடனடியாக விடைகொடுத்தார்கள் வழக்கமாக முகத்தில் உறைந்திருக்கும் இறுக்கத்தைக் கொஞ்சமும் இளக்கிக்கொள்ளாமல்தான். சாமியார்களாயிற்றே, உணர்ச்சிகளை வெளிப்படுத்தலாமா? என்றாலும், ஏற்கெனவே நிறுவப்பட்டிருக்கும் அதிகார வரிசையில் இடைப் படி ஒன்றில் புகுந்துவிடும் வாய்ப்புள்ள ஒருவன் விலகிக்கொள்கிறான் என்பதில் உள்ளூற ஒரு ஆறுதல் இருக்கத்தான் செய்திருக்கும்.

தோள்பை ஊசலாட, ஹவாய்ச் செருப்பு சீரான ஓசையெழுப்ப, வெளியேறினார் கோவர்த்தனம். தன்னிச்சையாக நடந்து சென்ற கால்கள் வடசென்னையின் புறநகர்ப்பகுதி ஒன்றில் கொண்டு சேர்ந்தன. நெடுஞ்சாலையின் பக்கவாட்டிலிருந்த தெருவோரக் கடையில் தேநீர் சொல்லிவிட்டு பெஞ்ச்சில் அமர்ந்தார். திட்டம் எதுவுமற்ற மனம் துப்புரவாகக் காலியாக இருந்தது.

எதிரில் கடல் அலைகள் சுதந்திரமாய் உயர்ந்து மறிகின்றன. உயரும்போது வெண்ணிறமும், அமிழ்ந்த பிறகு பழைய நீலமும் என நிறம் மாறிமாறி விளையாடும் அலைகளின் பகல்நேர வீச்சு சற்றுக் குறைவாகத்தான் இருந்தது. வெகு தொலைவில் நங்கூரமிட்டு நின்ற

நாலைந்து கப்பல்கள். சிதறலாக உயர்ந்து தாழ்ந்த படகுகளும், விசைப்படகுகளும். இருவேறு நீலச்சாயைகளின் இடையில் சரி பாதியாக வெட்டிச் செல்லும் கடைக்கோடு மட்டும் இல்லாவிட்டால், பிரம்மாண்டமானதொரு நீலநிறக் கோளத்தின் உட்புறம் சிறைப்பட்ட மாதிரித்தான் உணர்வு ஏற்படும்.

இதுபோன்று, திசையறியாத் தருணங்களை எதிர்கொள்ளும் சமயங்களில், மனம் தனக்குப் பிடித்தமான அந்த நாளில் சென்று கவிந்துகொள்ளும். ஒன்பது வருடங்களுக்கு முந்திய நாள். பள்ளியிறுதி வகுப்பின் தேர்வு முடிவுகள் வெளியான புதன்கிழமைக்கு அடுத்த புதன்கிழமை. சுதந்திரத்தின் முதல் ருசியை அருந்தக் கிடைத்த நாள். ஒரு வகையில், இன்றைய கோவர்த்தனம் தொப்புள்கொடிப் பிணைப்பு அறுந்து தரையில் தன்னிச்சையாகக் கால் ஊன்றி நின்ற நாள். அந்த நாளின் ஒவ்வொரு கணமும் அழுத்தமாகப் பதிவுகொண்டிருக்கின்றன. ஒவ்வொரு ஓசையும், வெளிச்சத்தின் ஒவ்வொரு சாயையும், வெயில் ஓய்ந்த மணலின் கவிச்சியும்...

வை கையில் நீர்வரத்து அறுதியாக நின்றுவிட்டிருந்த சமயம் அது. சிறு நாடாபோல ஒழுக்கிய நீரோட்டத்தின் விளிம்பில் நாலைந்து மைனாக்கள் அமர்ந்திருந்தன. சற்றுத் தள்ளி ஒற்றையாய் நின்றிருந்த கொக்கு. பெரும் தபஸ்வி மாதிரி ஒரே இடத்தில் பார்வை செலுத்தி உறைந்திருந்தது. நீரோடிய தடத்தில் உலர்ந்து கிடந்த வெண்மணல் பரப்பின்மீது எண்ணெய்ப்படலம்போல இருள் இறங்கத் தொடங்கிய பிறகு, சுற்றிலுமுள்ள வெளிச்சத்தில் ஒருவித ஒளிர்வு கூடியிருந்தது.

சட்டைப்பையில் கிடந்த உப்புக்கடலையை ஒவ்வொன்றாக எடுத்து மென்றான் கோவர்த்தனம். நன்றாக உதட்டில் படுகிறவிதமாகக் கடலையை வாயில் போட்டுக்கொள்வான். ஏழெட்டுக் கடலைகளை மென்று விழுங்கிய பிறகு உதடுகளை நாக்கால் துழாவி, அவற்றில் படிந்திருக்கும் உப்பை மட்டும் ருசித்துக்கொள்வான். சந்தோஷமான தருணங்கள் மிகக் குறைவாய் உள்ள வாழ்க்கையா, கிடைத்ததை நீட்டித்துக்கொண்டே போகும் வெறி எப்போதுமே உண்டு அவனிடம். வாய்ப்புக் கிடைத்தால் இந்தச் சாயங்காலத்தையும் அப்படி நீட்டித்துக்கொண்டே போய்விடலாம்.

விடுதி மாணவர்கள் ஆறரை மணிக்குமேல் வெளியில் திரிய அனுமதி இல்லை. கோவர்த்தனத்துடையது, இரண்டாம் மாடியின் ஒரு கோடியில் உள்ள அறை. ஜன்னலைத் திறந்தால் நிச்சிந்தையாய்க் கிடக்கும் வைகைப் படுகை பார்வையில் படும். கோடைக்காலங்களில்

தாமதமாகத்தான் இருள் கவியும். உள்ளூர்ச் சிறுவர்களின் விளையாட்டுக் கூச்சலும் ஓட்டபாட்டமும் ஏங்க வைக்கும். அலகை மட்டும் வெளியே நீட்டக் கிடைத்த கூண்டுப் பறவைபோல உணர்வான்.

சென்ற புதன்கிழமை காலை பொதுத் தேர்வு முடிவுகள் வெளியாயின. நாளையும் புதன்கிழமைதான். நாளைமுதல் கோவர்த்தனம் விடுதிவாசி கிடையாது. பிறந்ததிலிருந்து முதன்முறையாகக் கிடைத்த சுதந்திரத்தின் முதல் துளியே அலாதியான ருசியுடன் இருந்தது.

மனம் முழுக்க ஒருவிதத் துள்ளலும், அச்சமும் கலவையாக நிரம்பி இருந்தது. நாளைக்குச் சாயங்காலம் இந்த வைகையாறு, இந்த வேளை, இருட்டு இறங்கும் இந்தத் தென்னைமரக் கூட்டம், கரை மரங்களில் வந்து அடையும் பறவைகளின் ரகளையொலி, கரையில் சாலையைத் தாண்டி முகமற்ற ராட்சஸன்போல ஓங்கி உயர்ந்து நிற்கும் விடுதிக் கட்டிடம், விடுமுறை நாட்களிலும் நேராநேரத்துக்கு மணியடித்து வேலைகளும், அளவு சாப்பாடும் என்று துரத்தித் துரத்தி அழுத்தும் நியமங்கள்... எதுவுமே கிடையாது. ஆனால், என்ன காத்திருக்கிறது என்பதுதான் தெரியவில்லை.

கட்டவிழ்த்துவிட்ட கன்றுக்குட்டி மாதிரி இஷ்டத்துக்கும் துள்ளி மறிந்தது மனம். 'விடுதியை விட்டும், இந்த ஆசிரமத்தை விட்டும் வெளியேறி விலகிவிட வேண்டும்' என்ற வெறி எதனால் எழுந்தது என்று ஒரு கேள்வி கன்றின் கழுத்துக் கயிறுபோலக் கூடவே கிடந்து அல்லாடியது. நினைவு தெரிந்த நாளாகக் கைகளில் ஏந்தி வளர்த்துவிட்ட ஆசிரமத்தைச் சிறையாக உணர வைத்தது எது? ஞாபகத்தில் சிக்கிய நாட்களிலெல்லாம் கால் பதித்து மீண்டது கன்றுக்குட்டி... வெளியேறும் முடிவு உறுதிப்பட்ட நாளில் பிடிவாதமாகக் காலைப் பரத்திக்கொண்டு சண்டித்தனம் செய்தது...

பொ துப் பரிட்சைக்கு முன்பாக விடுதி முழுவதுமே பாடப் புத்தகங்களுக்குள் அமிழ்ந்திருந்த பிப்ரவரி மாதத்தின் ஒரு நாள் அது...

மாணவர்களை ஆசீர்வதிப்பதற்காகத் தலைமைச் சாமியார் வருகிறார் என்று அறிவிப்புப் பலகையில் ஒட்டியிருந்த தாள் சொன்னது. தேசிய அளவில் பெரும்புகழையும், ஏகப்பட்ட அவதூறுகளையும் சம்பாதித்த சேவை அமைப்பின் அகில இந்தியப் பொறுப்பாளர்களில் ஒருவர் அவர். அமைப்பு தமிழ்நாட்டில் நடத்துகிற கல்வி நிறுவனங்கள் அத்தனைக்கும் தாளாளர் இவர்தாம். ஸப்யஸாச்சி முக்கர்ஜி என்று பெயர்.

கொட்டை எழுத்தில், ஓவியம் தீட்டும் தூரிகையால் எழுதப்பட்ட

சொற்கள் விளிம்பில் மை கலைந்திருந்தன. இந்த பெயர் புதுசில்லை. விடுதியின் ஒவ்வொரு அறையிலும் சாமியாரின் முகம் புகைப்படமாகத் தொங்குகிறது. சாமி வங்காளத்திலிருந்து வந்தவர். தமிழ் பிரமாதமாகப் பேசுவார். பெரும்பாலான வார்த்தைகளை வங்காளிச் சாயலில் உச்சரிப்பதையும், லேசான மங்கோலிய ஜாடையுடன் எண்ணெய் மினுங்கும் தாமிர நிற முகத்தையும் தவிர்த்துவிட்டால் சாமி தமிழ் நாட்டில் பிறக்காதவர் என்பதற்கு ஒரு தடயமும் இல்லை.

ஸப்யஸாச்சி என்பது அர்ஜுனனின் ஏகப்பட்ட பெயர்களில் ஒன்றாம். நீதிபோதனை வகுப்பில் பாரதக் கதை சொன்ன சிவராஜ் அண்ணா கூறினார். ஆசிரியர்களை 'அண்ணா' என்றுதான் குறிப்பிட வேண்டும், அழைக்கவும் வேண்டும். சிவராஜ் அண்ணா பெரிய சாமியாரின் பெயரை வேறுமாதிரி உச்சரித்தார். ஸவ்யசாசி முகர்ஜி. 'இரண்டு கைகளாலும் அஸ்திரம் விடக்கூடியவன்' என்று பொருளாம்... அன்றைக்கு விடுதி அறைக்கு வந்திருந்த தேனூர்க்கார ராஜகோபால் கேலியாய்ச் சொன்னான்:

அப்பண்டா, நாம சோத்துக்கையால செய்யுறத சாமி ரெண்டு கையாலயும் செய்வாரு?

என்று சொல்லிக்கொண்டே வலதுகையை இடுப்புப் பகுதிக்கு முன்புறம் நேரே வைத்துக்கொண்டு முன்னும் பின்னுமாக ஆட்டிக் காட்டினான்.

பாடம் படிக்கவென்று வராந்தாவில் கூடியிருந்தவர்கள் ஓசையெழாமல் குலுங்கிச் சிரித்தார்கள். அப்படியும் ஓரிருவர் சிரிப்பு வெளியில் சிந்தத்தான் செய்தது. இந்த இடத்தின் காற்றில் விஷமம் நிரம்பியிருக்கிறது, எப்படியும் தண்டனை வாங்கிக்கொடுக்கும் என்று உள்ளுணர்ந்தவன் மாதிரி கோவர்த்தனம் அவசரமாக எழுந்து அந்த இடத்தை விட்டு விலகினான். நூலகம் பூட்டியிருந்தாலும், அதன் தாழ்வாரத்தில் உள்ள விளக்கு பிரகாசமாக எரியும்.

போனவாரம்வரை காற்றில் விரவியிருந்த சன்னமான குளிர் நீங்கிவிட்டது வரவிருக்கும் கோடைக்கு முன்னறிவிப்பு மாதிரி. நிதானமாக நூலகம் நோக்கி நடந்தான். வராந்தாவில் ஒரு டம்ளர் விழுந்து களகளகளவென்று உருளும் ஒலி கேட்டது. என்னவோ தெரியவில்லை, இன்றைக்குக் கோலாகலம் சற்று அதிகமாக இருக்கிறது. குறைந்தது நாலைந்துபேராவது தண்டனை வாங்கத்தான் போகிறார்கள், நிச்சயம். அல்லது, வெளிமாணவர்கள் நாளையிலிருந்து விடுதிக்கு வரக்கூடாதென்று மறுபடி சட்டம் பிறக்கலாம்.

சட்டம் சரியென்றுதான் பல சமயங்களில் தோன்றுகிறது. வெளி மாணவர்கள் வருவதில் விடுதி மாணவர்களின் அந்தரங்கம் சற்று சேதப்படத்தான் செய்கிறது. அவர்களின் நடத்தையிலும் பேச்சுக் குரலிலும் உள்ள சுதந்திரம் கொஞ்சம் அதிகம். தவிர, விடுதி மாணவர்களைப்போல அவர்களை இஷ்டத்துக்கு நடத்த முடியாது கேள்வி கேட்க ஆள்படை உண்டு அவர்களுக்கு. அவர்களோடு சேர்ந்துதான் விடுதி மாணவர்கள் கெட்டுப்போகிறார்கள் என்று குருகுல நிர்வாகத்தின் பொதுவான அபிப்பிராயம்.

பதினோராம் வகுப்புப் பொதுத் தேர்வு நெருங்குவதால் விடுதியிலுள்ள, கோவர்த்தனம் மாதிரியான, கெட்டிக்கார மாணவர்களிடம் பாடம் கேட்டுக்கொள்வதற்காக இந்தப் பதினைந்து நாட்களுக்கு விதி விலக்கிக்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால், யாரும் கோவர்த்தனத்தை அணுகி சந்தேகம் தீர்த்துக்கொள்ள மாட்டார்கள். அவன் யாருடனும் நெருங்கமாட்டான், யாரையும் நெருங்கவிடவும் மாட்டான். அவனைப்போலத் தனியாகத் திரிகிறவனை குருகுல நிர்வாகத்துக்கு மிகவும் பிடிக்கும். படிப்பை முடித்துவிட்டு, குருகுலத்திலேயே ஐக்கியமாகும் சாத்தியம் உள்ள மாணவன் அல்லவா...?

ஆக, இன்றிலிருந்து யாரும் விடுதிக்குள் வரலாம். ஏழரைமணி தியான வேளை வரும்வரை இருந்து படிக்கலாம். மற்றபடி, விடுதிக்குள் டே ஸ்காலர் மாணவர்கள் பிரவேசிக்கக் கூடாது.

விடுதியில் ஏகப்பட்ட கூடாதுகள். குண்டூசி விழும் சப்தம்கூடக் கேட்கக்கூடாது. ஒன்பதரை மணிக்குமேல் அறைகளில் விளக்கெரியக் கூடாது. உள்ளாடைகளை வராந்தாவிலுள்ள கொடியில் காயப்போடக்கூடாது. உணவறையில் பதார்த்தங்கள் சிந்தக் கூடாது. பிரார்த்தனை முடிவதற்கு முன்னால் சாப்பாட்டுத் தட்டைக் கண் திறந்து பார்க்கக் கூடாது. சாப்பிட்ட தட்டு முகம் பார்க்கும் அளவு சுத்தமாக இருக்கிற மாதிரிச் சாப்பிட வேண்டும். எதையும் மீதம் வைக்கவோ எறியவோ கூடாது. ஒரே ஒரு வகுப்பு மூத்த மாணவனைக்கூட பெயர் சொல்லி அழைக்கக் கூடாது. 'அண்ணா' என்றுதான் அழைக்க வேண்டும். விடுதி மாணவர்கள் தோள் கோத்து நடக்கக் கூடாது. உடல்நலம் சரியில்லாது போனால் மட்டுமே தாமதமாக எழலாம். மற்றபடி அதிகாலையில் மணி அடிக்கும்போது எழுந்திருந்து அடுத்த ஐந்தாவது நிமிடம் மைதானத்தில் பரேடுக்கு ஓட வேண்டும்.

இதில் ஏதாவது தவறினால் கிடைக்கும் தண்டனைகள் தாள முடியாதவை. கனத்த, நீளமான பலகை ஒன்றைத் தலையில்

சுமந்துகொண்டு மணிக்கணக்காக நிற்பது முதல், இரண்டு முழு நாள்கள் கட்டாய உபவாசம்வரை. சமுத்திரம்போல விரிந்திருக்கும் விளையாட்டு மைதானத்தைச் சுற்றி இருபத்தைந்து சுற்றுகள் ஓடவேண்டும் என்று ஆறாம் ஏழாம் வகுப்புப் பையன்கள் உடல்கொள்ளாத தண்டனைக்கு ஆளாவார்கள்.

இதையெல்லாம் விடக் கொடுமையானது நீதிபோதனை வகுப்புகள்தாம். அலாதியான நீதி புகட்டும் வகுப்புகள். அந்த வகுப்புகள் மட்டும் மரத்தடியில்தான் நடக்கும். கவனம் சிதறுவதற்கு மிகவும் வாகான இடம். ஆனால், அப்படி சாவதானமாக இருந்துவிட முடியாது. எப்போது யாரை என்ன கேள்வி கேட்பார்கள் என்று தெரியாது.

இப்படித்தான், ஒருநாள் வன்மீகதாஸ் அண்ணா பாடம் எடுக்கிறார். பிள்ளையார் சதுர்த்தி வரவிருந்த சமயம் அது. அதையொட்டிய கதை ஒன்றைச் சொல்கிறார் அண்ணா. மரத்தடியில் இறுக்கமான அமைதி நிலவியது. சுற்றுப்புறத்தில் அதற்கு நேரெதிராக ரம்மியமான சீதோஷ்ணம். ஆகஸ்ட் மாதத்தின் குளுமையான முற்பகல். அண்ணா சொல்கிறார்...

இப்போ நாம பூசை செய்யணும்னா நாலைஞ்சு வாழைப்பழம், ரெண்டு தேங்கா, அஞ்சாறு ஊதுபத்தி, ஏழெட்டுச் சூடம், ஒரு கைப்பிடி சாம்பிராணி, ஒரு மாலை, உதிரிப் பூ கொஞ்சம்னு வைச்சுப் பூசை செய்வோமா இல்லியா? நம்ம விநாயகர் கொஞ்சம் ஸ்பெசலான ஆளு. அவருக்கு நான் சொன்னதெல்லாம் வைச்சு, மேல்க்கொண்டு அவல், பொரி, அப்பம் இதெல்லாம் வய்க்கணும். இதுபோக, கொளுக்கட்டையும் வய்க்கணும். உருண்டை உருண்டையா மோதகம் பிடிச்சு வய்க்கணும். எல்லாமே நெறைய நெறைய வய்க்கணும். யானெ வயிறால்லியா? எலே, ராசகோவால், எடுமைமாடு வயசாச்சு, இதுவரைக்கும் காக்காயே பாத்தது கிடையாதா நீ? எந்திரி, பூசைலே எத்தனை ஊதுபத்தி வைப்போம்?

இயல்பாக எழுந்து நின்ற தேனூர்க்கார ராஜகோபால் இந்த முறையும் சரியான பதில் சொல்லத் தவறியதால் இயல்பாகத் தண்டனை அனுபவிக்கப் போனான். மரத்தடியின் நிழல் விளிம்புக்கு வெளியே நல்லவேளை, இன்றைக்கு வெயில் அதிகமில்லை பருக்கைக் கற்கள் மலிந்த மைதானத்தில், அந்த வகுப்பு முடியும்வரை முட்டிபோட்டு நிற்கவேண்டும். அப்போதும்கூட, நீங்கள் வேறு ஏதாவது வேடிக்கை பார்த்துவிட முடியாது. அண்ணாக்கள் கேள்வி கேட்பார்கள். உரிய பதில் சொல்லாவிட்டால் பலகையையும் சுமந்துகொண்டு

முட்டிப்போடவேண்டும்.

சில நேரம் ஆசிரியர்கள் புகட்டும் நீதியைவிடத் தண்டனை தேவலை என்றும் தோன்றும். அதிலும் சிவராஜ் அண்ணா. வேதனையே தெரியாமல் தோலைக் கிழித்துச் சதையைப் பிய்த்தெடுக்கும் அபூர்வ ஊசி அவர். பிரமாதமாக ஆங்கிலம் பேசுகிறவர்.
நீதிபோதனைக்கென்றே பிறந்தவர். ஒருநாள் வகுப்பில் சிவராஜ் அண்ணா போதனையின் ஊடாகச் சொன்னார்:

வெளிமாணவர்கள் இருக்கட்டும், விடுதி மாணவர்கள் கணக்கில் கொள்ள வேண்டியது ஒன்று இருக்கிறது. நம் விடுதியில் முந்நூற்றியிருபது பேர் இருக்கிறார்கள். இவர்களில் அறுபத்தேழுபேர் பள்ளியிறுதி படிக்கிறவர்கள். அவர்களில் நாற்பது பேர் பிரம்மச்சாரிகளாக தீட்சை வாங்கினால் போதும். இப்படி வருஷத்துக்கு நாற்பது பிரம்மச்சாரிகளை இந்தப் பள்ளிக்கூடம் வெளியில் அனுப்பினால் பத்தே வருஷத்தில் பாரதம் முழுவதும் இதேபோலப் பள்ளிகள் வெற்றிகரமாக நடக்கத் தொடங்கிவிடும்.

கோவர்த்தனம் பயந்தான். சிவராஜ் அண்ணா ஆசிரியர் மட்டுமில்லை, விடுதிக்கும் அவர்தாம் பொறுப்பாளர். இதுமாதிரிப் பள்ளியின் முக்கியஸ்தர்கள் போகிறபோக்கில் சொன்ன பல விஷயங்களைப் பிற்பாடு கட்டாயமாக அமுல்படுத்தியிருக்கிறார்கள். தன்னையும் சாமியாராக ஆக்கிவிடுவார்களோ? அட, ஆண்டவனே, இந்த நரகத்திலிருந்து எனக்கு விடுதலையே கிடையாதா...?

கடனேயென்று பெற்றுப்போட்ட மாத்திரத்தில் விலகிக்கொண்டுவிட்ட, யாரென்றே தெரியாத, தாய் தகப்பன்மீது அடங்காத கோபம் பொங்கியது. கடுமையான கையாலாகாத்தனமும் ஓங்கியது. கண்களில் நீர் கரகரவென ஊறி வழிந்தது. உங்களுடைய திருட்டு சந்தோஷத்துக்காக என்னை வாழ்நாள் முழுவதும் அடிமைப்படச் செய்துவிட்டீர்களே, கழிசடை நாய்களே...

அதன் பிறகு சிவராஜ் அண்ணாவைப் பார்க்கும்போதெல்லாம் இனம் புரியாத அச்சம் ஊற ஆரம்பித்தது. ரகசியத் திட்டம் ஒன்றின் பகுதியாகத்தான் அவர் இங்கே ஆசிரியராக வந்திருக்கிறார். அதன் காரணமாகவே மாணவர்களிடத்தில் ரொம்பப் பிரியமாக நடந்துகொள்கிறார். குறிப்பாக விடுதி மாணவர்களிடத்தில் அநியாயத்துக்குப் பிரியமாய் இருக்கிறார். என்றாலும் கறுப்பாக இருக்கிற மாணவர்களிடத்தில் அவர் பிரியமாக இருப்பதில்லை. கோவர்த்தனம் நல்ல கறுப்பு என்பதும் ஒருவகைக்கு நல்லதாகப்

போயிற்று. அண்ணாவின் அன்பை அனுபவிக்கும் வாய்ப்பு அவனுக்குக் கிடைக்கவில்லை.

ஆனால், நல்லவேளை, பிரம்மச்சாரிகளைத் தயார்ப்படுத்தி வெளியில் அனுப்பும் திட்டம் செயல்பட ஆரம்பிப்பதற்கு முன்பாக சிவராஜ் அண்ணாவையே ஒருநாள் வெளியில் அனுப்பிவிட்டார்கள். வேலையைவிட்டும் நீக்கிவிட்டார்கள். விடுதி மாணவர்கள் சிலரைப் பெண்கள் மாதிரி அவர் நடத்தியதாகப் புகார்கள் குவிந்துவிட்டனவாம்...

போதும், சும்மா இப்படி மனத்தை அலையவிட்டால் படித்த மாதிரிதான். இன்றைக்கு ஃபிஸிக்ஸை முடித்துவிடுவதாகத் திட்டமிட்டிருக்கிறான். புத்தகத்தைத் திறக்கிறான். நூலக வராந்தா விளக்கு சடாரென்று அணைந்து காவல்கார நாகராஜன் கையில் நீண்ட பிரம்புடன் இருளின் பகுதியாய் உதயமானார்.

எந்திரி, எந்திரி. இங்கெல்லாம் பயகளெ ஒக்கார விடக்கூடாதுண்டு சாமி உத்தரவு போட்டுருக்காக.

இல்லண்ணே. படிக்கலாம்னுதான் வந்தேன்.

நீ படிக்க வந்தயோ, தனியா ஒக்காந்து கெட்ட வளக்கம் செய்ய வந்தயோ. யாரு கண்டது.

நாகராஜனின் சிரிப்பொலி விகாரமாக இருந்தது. அந்த ஆளைக் கொன்றுபோட வேண்டும் என்று வெறி எழுந்தது கோவர்த்தனத்துக்கு. மூச்சை இறுக்கிப்பிடித்துக்கொண்டு கெஞ்சினான்.

அண்ணே, படிக்கணும்ணே. லைட்டுப் போடுங்கண்ணே.

எலெட்ரி பில்லு ங்கொப்பனா கட்டுறான். ஆஸ்டல்லெ ஒக்காந்து படிச்சா ஏறாதோ தொரைக்கி. பெரிய விஞ்சானி மசுரு...

இப்படித்தான், விடுதியில் பணிபுரிகிற எல்லாருமே கெட்டவார்த்தையால் திட்டுவார்கள். சாமியாரிடம் புகார் செய்தால் விசாரணை நடக்கும். அப்படியொரு சொல் இருப்பதே தெரியாதவர்கள் என்பது மாதிரி முகத்தை வைத்துக்கொள்வார்கள். சில பேர் அழுததுகூட உண்டு. வெளியில் வந்தவுடனே இன்னும் உக்கிரமான வார்த்தைகள் வந்து விழும்.

அண்ணே... அண்ணே...

காதில் விழாத மாதிரி நகர்ந்தார் நாகராஜன். போகிற போக்கில் முனகுகிற தொனியில் வீசிப்போன வார்த்தை நெருப்புப்போலப்

பிரகாசமும் வெம்மையும். கொண்டு அந்த இடத்தைப் பொசுக்கியது.

அநாதைத் தாயளி...

சோர்ந்த மனத்துடன் எழுந்து விடுதி நோக்கி நடந்தான் கோவர்த்தனம். இவர்களையெல்லாம் யாரும் எதுவும் செய்ய முடியாது. நாம் விலகிவிடலாம். அதுதான் உத்தமம். விடுதியை, இந்த வளாகத்தை, இந்த நிறுவனத்தை விட்டு வெகுதூரம் போய்விட வேண்டும். இன்னும் மூன்றே மாதங்கள்தாம். கண்காணாத இடத்துக்குப் போய்விட வேண்டும்.

நினைத்த மாத்திரத்திலேயே மயிர்க்கூச்செரிந்தது, வெளியேறிவிடலாம். என்னவாவது செய்து பிழைத்துக்கொள்ளலாம். வெளியே... வெளியே... வெளியே...

உப்புக்கடலை தீர்ந்துவிட்டது. சட்டைப்பைக்குள் நாலைந்து பொக்குகள் மட்டும் கிடந்தன. பையிலிருந்து வெளிவந்த வெறுங்கையை உதறினான் கோவர்த்தனம். இருட்டு இன்னும் வேகமாய் இறங்கி வருகிறது. கொசுக்கூட்டம் ஆயத் தொடங்கிவிட்டது. எதிர்க்கரைத் தென்னந்தோப்பு மர்மமானதாக ஆகிறது.

நள்ளிரவில் விடுதி அறையிலிருந்து பார்க்கும்போது, முழுக் கருந்திரையாகத் தெரியும் அந்தத் தோப்பு. உறுத்துப் பார்த்து ஒவ்வொரு மரத்தின் கோட்டுவடிவத்தையும் மானசீகமாக வரைந்துகொள்ள முயல்வான் கோவர்த்தனம். சில சமயம் நாலைந்து மரங்களைக்கூட வரைந்து முடிப்பான். கண்கள் கடுமையாகச் சோர்ந்துவிடும். இதெல்லாம்கூட, கள்ளத்தனமாகத்தான் நடக்கும். எட்டு மணிக்குமேல் விடுதி ஜன்னல்கள் திறந்திருக்கக் கூடாது என்று ஒரு சட்டம் உண்டு.

இரண்டாவது மாடியில் உள்ள அறைகளில் பெரும்பாலும் இறுதி வகுப்பு மாணவர்கள்தாம். தேர்வு முடிவுகள் வந்த அன்று இரவில் அநேக ஜன்னல்கள் திறந்திருந்தது ஞாபகம் வந்தது. கோவர்த்தனம் தனக்குத்தானே புன்னகைத்துக்கொண்டான்.

அன்று காலை ஒன்பது மணிக்குப் பொதுத்தேர்வு முடிவுகள் வந்திருந்தன. பள்ளி அறிவிப்புப் பலகையின் முன்பு நின்றிருந்த கோவர்த்தனத்தை மூத்த சாமியார் கையோடு அழைத்துவரச் சொன்னாரென்று அலுவலகப் பணியாள் வந்து சொன்னார். மெற்றாஸிலிருந்து வந்திருந்த தலைமைச் சாமியாரும் அந்த அறையில்தான் இருந்தார். இவர்கள் இருவரும் பேசும்போது, குறுக்கிடாமல் அமைதியாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்.

தலைமைச் சாமியாரின் குரல் கணீரென்று இருக்கும். குருகுலப் பள்ளிக்குப் பலமுறை விஜயம் செய்திருக்கிறார். ஒவ்வொருதடவை வரும்போதும் எல்லா வகுப்பு மாணவர்களையும் பிரார்த்தனை அரங்கத்தில் குழுமச் சொல்லி உரை நிகழ்த்துவார். அங்கே பேச்சாளர்களாக வருகிற பலரும் மாணவர்களுக்குப் புரியாத விதத்தில் பேசுவார்கள். ஆன்மா அது இது என்று பெரிய வார்த்தைகளைப் போட்டுப் பேசுவார்கள்.

தலைமைச் சாமியார் அப்படியல்ல. பல்விளக்குவதன் அவசியம், விரல் இடுக்குகளில் சிரங்கு தொற்றாமல் பார்த்துக்கொள்வது, சாப்பாட்டின் அளவு எப்படி நன்றாகப் படிக்கவைக்கவோ மார்க்குகளைக் குறைக்கவோ செய்யும், பிரார்த்தனைக் கூட்டத்தில் மனசைக் குவித்து ஒழுங்காக வைத்துக்கொண்டால் அது பரிட்சை எழுதும்போது எப்படிப் பிரயோசனமாக இருக்கும் என்கிற மாதிரித் தினசரி விஷயங்களைத்தான் பேசுவார்.

என்ன, நாலைந்து உரைகளைக் கேட்ட பிறகு சலிப்புத் தட்டி விட்டது, இவர் ஏன் ஒரே விஷயத்தைத் திரும்பத் திரும்பச் சொல்கிறார் என்று. ஆனால், எவ்வளவு சொன்னாலும் பயல்கள் கேட்க மாட்டேனென்கிறார்கள் என்பதும் வாஸ்தவம்தான்.

உரையின் கடைசியில் பாரதியார், நாமக்கல் கவிஞர், பெரியசாமித் தூரன், சுத்தானந்த பாரதியார் போன்றவர்களின் பாடல் எதையாவது உரத்துப் பாடுவார். இயற்றியவர் பெயரையும் பாடல் எழுதப்பட்ட சந்தர்ப்பத்தையும் கதைபோல விரித்துச் சொல்லிவிட்டுப் பாடுவார். நாடகத்தில் நடிக்கிற மாதிரிக் கைகால்களையும் தலையையும் ஆட்டி ஆட்டி கணீரென்று பாடுவார். உரையைவிடவும், சரளமான வங்காளி உச்சரிப்புள்ள தமிழ்ப் பாடல்கள் மனத்தை மிகமிக ஈர்க்கும்...

மதறாஸில் குருகுலத்தின் கல்லூரி இருக்கிறது. 'அங்கே பி யூ ஸி சேர்த்துவிடட்டுமா' என்று கேட்டார் மூத்த சாமியார். படிப்பு இலவசம். விடுதி வசதியும் உண்டு. இங்கே இருப்பதைவிட அங்கே இன்னும் சவுகரியமாக இருக்கும்... 'சாமி இதோ வந்திருக்கிறார்கள். இவர்களிடம் இப்போதே நேரடியாகப் பேசி ஏற்பாடு செய்துவிடுவேன், நீ வளர்ந்த பையனாகிவிட்டாய், உன்னைக் கேட்காமல் முடிவெடுக்கக் கூடாது என்றுதான்.'

வழக்கம்போல அமைதியாக நின்றான் கோவர்த்தனம். வழக்கம்போல வெறுமையாக இருந்தது மனம். பள்ளியின் முதல் மாணவனாக வந்தும் தனக்குள் ஏதோ ஒன்று நிறையாமல் கிடப்பதைப் பற்றி சாமியாரிடம்

சொன்னால், அவருக்குப் புரியுமா? இரண்டாவது இடம்பெற்ற சோழவந்தான் ஆண்டியப்பனின் அப்பா அறிவிப்புப் பலகையின் முன்புவைத்தே அவனை இறுக்கிக் கட்டிக்கொண்டாரே, அந்தச் சமயத்தில் தனக்குக் கண்ணீர் கோத்ததையும், மற்றவர்களுக்கு தெரியாமல் துடைத்துக்கொண்டதையும் இவர்களிடம் எதற்காக எடுத்துச்சொல்வது? பிரியமாய் ஒரு சொல் பேசி அறியாத வறட்டுச் சாமியார்களிடம்...

நான் மெற்றாஸ் போகலே சாமி.

சாமியார் சிரித்தார்.

புது ஊராச்சே, பெரிய ஊராச்சேன்னு பயப்புடுறியாக்கும்? எல்லா ஊரையும் தெரிஞ்சுக்கிட்டா ஒருத்தன் பிறக்க முடியும்? தெரியாத ஊர்லெ போயிக் கொஞ்சநாள் இருந்தோம்னாத் தன்னாலே தெரிஞ்ச ஊராயிருது. என்ன...?

மறுபடியும் சிரித்தார். கோவர்த்தனம் சிலைமாதிரி நின்றான்.

...மதுரை, திருச்சி இந்த மாதிரி ஏதாவது ஏற்பாடு செய்யட்டுமா? என்ன, அந்த மாதிரி வேற ஊர்கள்லே படிக்கிறதுன்னா குருகுலம் படிப்புச் செலவை மட்டும்தான் பாத்துக்கும். தங்கறது சாப்பாடெல்லாம் பிரச்னையாகும். ஆனாலும், பரவாயில்லே. அந்தந்த ஊர்கள்லே எனக்குத் தெரிஞ்ச உபகாரிகள் பலபேர் இருக்குறாங்க. நான் சொன்னாத் தட்டமாட்டாங்க.

மேல் படிப்புக்கு எனக்கு ஆர்வமில்லே சாமி.

என்று தயங்கிய குரலில் சொன்னான்.

ஏன் அப்பிடி...?

சாமியார் அதிர்ந்துவிட்டார் என்பது அவர் குரலில் வெளிப்படையாகத் தெரிந்தது. ஆனால், ஒரு கணம்தான், சுதாரித்துக்கொண்டு விட்டார். துறவியில்லையா? நிதானமான குரலில் கேட்டார்:

...வேறெ என்ன செய்யிறதா உத்தேசம்?

கோவர்த்தனத்துக்கு இதற்குள் கொஞ்சம் தைரியம் ஊறிவிட்டிருந்தது.

பெரிசாத் திட்டம் ஒண்ணுமில்லே சாமி. ஆனா, படிக்கப் பிடிக்கலே...

அப்பறம்? சேவை செய்யணும்னு நினைக்கிறியோ?

இந்த இடத்தில் தலைமைச் சாமியார் சிரித்தார். மூத்த சாமியார் அவரை நோக்கித் திரும்பினார்.

என்ன சாமி சிரிக்கிறீங்க?

சின்னப் பையன் சாமி. அவன் என்னத்தெக் கண்டான்? நம்ம வார்த்தைகள்லெ முக்கால் திட்டத்துக்கு அர்த்தமே தெரிஞ்சிருக்காது...

கோவர்த்தனத்தை நோக்கித் திரும்பினார்.

வேற என்ன செய்யலாம்னு நெனைக்கிறே தம்பீ?

குரலில் அபரிமிதமான கனிவு ஊறியிருந்தது.

சொல்லத் தெரியலே சாமி. ஆனா, எதுவுமே பிடிக்கலே.

தலைமைச் சாமியார் சிரித்தார். கிட்டே வரும்படி சைகை செய்தார். கோவர்த்தனம் அவரை நெருங்கினான். இவன் தோள்மீது தன் வலதுகையைப் போட்டுக்கொண்டு பேசினார்.

நான் ஸ்கூல் படிப்பை முடிச்சப்ப எனக்கும் இதேமாதிரித்தான் இருந்தது. ஜல்பைகுரி குருகுலத்திலெ ஹெட்மாஸ்டரா இருந்த சாமி என்னைக் கூப்புட்டுப் பேசுனப்ப இதையேதான் சொன்னேன். அவரு என்ன செஞ்சாரு தெரியுமா?

பேச்சை நிறுத்தி மூத்த சாமியாரைப் பார்த்தார். கோவர்த்தனம் ஆவலாக அவர் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

என் கையிலே ரெண்டு பத்து ரூபாய்த் தாளைக் குடுத்தாரு. 'ஒரு மாசம் ஒனக்கு வேணுமிங்கிற மாதிரி இருந்துட்டு திரும்ப என்னை வந்து பாரு. அப்ப நாம முடிவெடுப்போம்'ன்னாரு. அந்தக் காலத்திலே இருபது ரூபாங்குறது பெரிய தொகெ. தொளாயிரத்திப் பதினாறுலெ. எங்கெங்கெயோ சுத்தித் திரிஞ்சேன். பிஞ்சுக் குருவிக்கு ஆகாசத்தெவிட வளக்குறவங்க வீட்டுக் கூண்டு ரொம்பப் பாதுகாப்பான இடம்னு தெரிஞ்சிருச்சு. மறுபடி குருகுலத்துக்கு வந்துட்டேன். அப்பறம்தான் இப்பொப் பாக்குறியே...

தலைமைச் சாமியார் சிரித்தார். மூத்தவரும் சிரித்தார். சிரிக்காமல் நின்றான் கோவர்த்தனம். அந்த ஒரு மாதத்தில் இவர் எங்கெல்லாம் போனார் என்று கேட்க ஆசைப்பட்டான் அந்த மாதிரி இடங்களுக்குப் போகாமல் கவனமாகத் தவிர்க்க வேண்டும் என்பதற்காக!

...அதைத்தான் ஒனக்கும் சொல்லப் போறேன். ஒன்னோட சர்ட்டிஃபிக்கேட் எல்லாம் இங்கேயே இருக்கட்டும். ஒன்கிட்டெ நூறு

ரூபா தர்றேன். ஒரு மாசம் டைம். நீ உன் விருப்பப்படி இருந்து வெளியுலகத்தைப் பாத்துப்புட்டுத் திரும்பி வந்து சேரு. இதைவிட நல்ல இடம் ஒண்ணை உன்னாலே கண்டுபிடிக்க முடியாதுன்னுதான் எனக்கு உறுதியாத் தோணுது. ஒருவேளை கண்டுபிடிச்சுட்டா ஒரு கார்டு போடு. உன் சர்ட்டிஃபிக்கேட்டையெல்லாம் பத்திரமா அனுப்பித்தர்றேன். இல்லே, நேர்லெயே கொண்டுவர்றேன். அந்த இடம் எனக்கும் பிடிச்சுப் போச்சுன்னா, உன்னோடெயே நானும் தங்கிறலாமால்லியா! என்ன சொல்றே...? சாமி, இந்த முடிவெ நான் எடுக்கலாம்தானே?

முகம் மலர்ந்து புன்னகைத்தார். மூத்த சாமியார் வேகமாகத் தலையசைத்து ஆமோதித்தார். தலைமைச் சாமியாரின் மேடைத்தமிழைத்தான் இதுவரை கேட்டிருந்தான் கோவர்த்தனம். அவருடைய கொச்சைப்பேச்சு மிகவும் பிடித்திருந்தது. அதைவிடவும் அவர் சொன்ன யோசனை பிடித்திருந்தது திரும்ப இங்கே வரவே போவதில்லை என்ற உறுதியான தீர்மானத்தோடு தலையாட்டினான். சர்ட்டிஃபிக்கேட்டாவது, மண்ணாவது. அதெல்லாம் யாருக்கு வேண்டும்...

ஆ னால், நம்முடைய தீர்மானங்களையெல்லாம் ஆசை ஆசையாக முறிக்கும் ஒரு பிரம்மாண்டம் ரகசியமாகச் செயல்பட்டுக் கொண்டே இருக்கிறது ஸார்...

கோவர்த்தனம் சிரிக்கும்போது கன்னத்தில் மிக அழகாகக் குழி விழுகிறது. முப்பது வயதுமட்டுமே மதிக்கலாம் அந்த முகத்தையும் உடம்பையும். சிறு புடைப்பும் இல்லாமல் படிந்த வயிறு. அகல விரிந்த தோள்கள். கரும் பளிங்கு மாதிரி நிறம். நரையின் ரேகைகூடத் தெரியாத கருகருவென்ற சுருள்முடி. முடியின் பளபளப்பு இல்லையென்றால், நெற்றி முடிந்து மயிர்ப்பரப்பு தொடங்கும் இடம் எது என்று கண்டுபிடிப்பது கடினம் என்று தோன்றியது. சந்தானத்துக்கு உள்ளூற ஒரு குறுஞ்சிரிப்பு பூத்து மடங்கியது.

நாவல்பழம் மாதிரி ஊதாநிறம் கனிந்த உதடுகள் கோவர்த்தனத்துக்கு. சிரிக்கும்போது தன்னிச்சையாக விரிந்து சுருங்கும் அழகிய ரோமானிய நாசி. அம்மா அடிக்கடி ஒரு பழமொழி சொல்வாள் கறுப்பு ஒரு அழகு, காந்தல் ஒரு ருசி. 'ஒரு ஆண்பிள்ளையை இப்படி ரசிக்க முடியும் என்று இரண்டு வாரங்களுக்கு முன்னால் நினைத்துக்கூடப் பார்த்திருக்க மாட்டேன்' என்று தனக்குள் மீண்டும் புன்னகைத்துக் கொண்டான் சந்தானம்.

...அதற்குக் கடவுள் என்றெல்லாம் அவசரப்பட்டுப் பெயர்

கொடுத்துவிட வேண்டியதில்லை. நடைமுறையாகப் புழங்கும் குட்டித் தர்க்கங்களையெல்லாம் தன் அங்கங்களாகக் கொண்ட ஒருவித மகா தர்க்கம் என்று சொல்லலாம். க்வாண்டம் தியரியின் முந்தாநாள் கண்டுபிடிப்பு, ரோஜர் பென்ரோஸ் முன்வைக்கும் செயற்கை அறிவு, நோம் சோம்ஸ்கி மாதிரியான சமகால ஞானிகளின் தத்துவ உச்சம், சக்கரத்தைக் கண்டுபிடித்தானே அந்த மகா ஞானியின் தரிசனம், இதெல்லாம்கூட நான் சொன்ன குட்டித் தர்க்கங்களில் ஒன்றுதான். நான் சொல்லும் மகா தர்க்கம் ஒரு ஆப்பிரிக்க யானை என்றால் அதன் நகத்தின்மேல் ஏறிச் செல்லும் சிற்றெறும்பு மாதிரி இந்தக் குட்டித் தர்க்கங்கள்...

தன்னுடைய பேச்சை மிகவும் ரசித்துக்கொள்கிறவர் மாதிரி கோவர்த்தனம் தொடர்ந்து சிரித்தார். அவர் உற்சாகமாக இருக்கிறார், தற்போதைய உற்சாகம் மட்டுமில்லை அது, நிரந்தரமாக கோவர்த்தனத்தைச் செலுத்திவரும் சக்தி என்கிறமாதிரிப் புரிந்துகொண்டாரே தவிர, அவர் என்ன பேசுகிறார் என்று புரியவில்லை சந்தானத்துக்கு. சிவராமனின் அலங்காரமான ஆங்கிலம் போலின்றி, மிகமிக நேரடியான ஆங்கிலம் இவருடையது. சிவராமன் சாதாரண விஷயத்தைச் சொன்னாலும், இரண்டாவது முறை அசைபோட்டுப் புரிந்துகொள்ள வேண்டியிருந்தது. இவர் கனத்த விஷயங்களாகப் பேசுகிறார். விஷயம் புரியவில்லையே தவிர, மொழி இயல்பாகத்தான் இருக்கிறது, தீர்த்தபதியின் ஆங்கிலம் மாதிரி சிடுக்குகள் இல்லாதது.

...விடுங்கள். உங்கள் முகம் குழம்பி இருக்கிறது. பெயர்களாக உதிர்த்துக்கொண்டு போகிறானே என்று தவறாக நினைத்து விடாதீர்கள்... நீங்கள் என்னைப் பார்க்கக் கிளம்புகிறீர்கள். உங்கள் பண வசதி, உடல் நலம், பிரயாணத்துக்கு ஆகும் நேரம், உங்கள் நோக்கத்தின் அவசரம், என்னோடு உங்களால் ஒதுக்க முடிந்த நேரம் என்று பல்வேறு அம்சங்களைக் கணக்கிலெடுத்துக்கொண்டு பயணம் துவங்குகிறீர்கள். எல்லாம் சரியாகப் போய்க்கொண்டிருக்கிறது. கரூருக்கருகில், முன்னால் செல்லும் லாரிக்காரன் சடன்பிரேக் போட்டதில், உங்கள் பேருந்து நேரே ஒரு லாரியின் பின்புறத்தில் சென்று மோதி விடுகிறது. ஓட்டுநருக்கும் முன்வரிசைப் பயணிகளில் நாலைந்து பேருக்கும் பலமான அடி.

...நீங்கள் கணக்கிலெடுக்காத ஒரு அம்சம் செயல்பட்ட தருணம் அது. யாராவது புள்ளியியலாளன் இதையும் குறித்து வைத்திருப்பான். ‘இந்தியாவின் நெடுஞ்சாலைகளில் இத்தனை ஆயிரத்துக்கு ஒன்று என்றும், இத்தனை மணிநேரத்துக்கு ஒன்று என்றும் சாலைவிபத்துக்கள்

நேரிடுகின்றன, ஒரு வருடத்தில் விபத்துக்குப் பலியாகிறவர்களின் எண்ணிக்கை இது, இதில் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் சதவீதம் இன்னது' என்று.

...ஆப்பிரிக்க யானை பிளிறத் தொடங்கும் தருணம் அது. பிளிறுவதோடு நிறுத்திக்கொண்டதால் வெறும் அடி மட்டும். அதற்கு மதம் பிடிக்கும் தருணங்களில் அணைகள் உடைந்துவிடுகின்றன, பூமி குலுங்குகிறது, பெருநெருப்பும் சூறாவளியும் பேயாட்டம் போடுகின்றன. குறைந்தபட்சம் ஏதேனும் அயல்நாட்டுத் தூதரகத்தின் வாயிலில் குண்டு வெடிக்கிறது! பேருந்து விபத்தில் இறந்தவர்களில் நீங்களும் ஒருவராய் இருக்கிறீர்கள்!

...லேசுப்பட்ட யானை அல்ல அது. பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன்பிருந்தே தென்னோலை மென்றுகொண்டு அப்பிராணி மாதிரி நிற்கும் கபட உருவம்...

கோவர்த்தனம் மீண்டும் சிரித்தார்.

அடுத்த அறையில் தொலைபேசி ஒலித்தது. பார்வையால் அனுமதி வாங்கிக்கொண்டு எழுந்து சென்றார் கோவர்த்தனம். உரத்த குரலில் அவர் கூறிய 'ஹலோ'வுக்குப் பதில்போல, சுவர்க்கடிகாரம் பதினொன்றரைக்காக ஒற்றை மணி அடித்தது.

தலைமுழுக்க நரைத்திருந்த ஒரு முதிய பெண்மணி தேநீர் கொண்டுவந்து வைத்தார். கோவர்த்தனம் இல்லாததைக் கண்டு அவருடைய கோப்பையை டீப்பாயில் வைத்தார். எதிரிலிருந்த கண்ணாடி அலமாரியைத் திறந்து, அட்டைப் பெட்டி ஒன்றைத் திறந்து, பாலித்தீன் உறைக்குள் இருந்த தந்தநிற மூடியை எடுத்து மூடி வைத்துவிட்டுப் போனார்.

'யாரும் கேட்காமல் எப்படித் தேநீர் வந்தது' என்று ஒரு கணம் ஆச்சரியப்பட்டார் சந்தானம். ஒரு கணம்தான். பிறகு மனம் தெளிந்தது.

இங்கே உள்ள இயக்கம் எல்லாவற்றிலும் ராணுவ ஒழுங்கு இருக்கிறது. காலையில் சந்தானம் வளாகத்தின் வாயிலுக்கு வந்துசேர்ந்தபோது, கால்மணிநேரம் கேள்விகளாகக் கேட்டுத் தள்ளிவிட்டு அனுமதி பெற்றுவருவதற்காக உள்ளே சென்ற காவலாளிப் பெரியவர் இரண்டாள் மட்டம் உள்ள இரும்புக்கிராதிக் கதவில் பாதி உயரம்வரை இருந்த திட்டிவாசலை ஓசையெழாமல் சாத்திவிட்டு சென்றார். உட்புறம் தாழிடும் சப்தம் கேட்டது.

பின்னர் சந்தானம் வளாகத்துக்குள் நுழைந்தபோது இவரைத்

தாண்டிப்போன குழந்தைகளில் ஒன்றுகூட ‘ஒரு அந்நியன் வந்திருக்கிறானே’ என்று ஆச்சரியத்துடன் நிமிர்ந்து பார்க்கவில்லை. அலுவலகத்துக்கு இட்டுச் செல்லும் நடைபாதையின் இரு புறமும் கரைகளாய் நின்றிருந்த, புல்போல இலைகொண்ட செடிகளின் உச்சி நீண்ட மேடையாகக் கச்சிதமாகவும் பிசிறுகளின்றியும் கத்திரித்துவிடப்பட்டிருந்தது.

வரவேற்பறையில் தி ஹிந்து படித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தவர் அவர்தான் இந்த அமைப்பின் நிறுவனர் கோவர்த்தனம் என்பது பிறகு தெரிந்தது சந்தானத்தைப் பார்த்தவுடன் கையிலிருந்த தாளை மடித்து வைத்த பாங்கு. அறிமுகம் ஆன பின்னர், விருந்தினர் அறைக்கு நடத்திச் சென்று, ‘குளித்துத் தயாராகுங்கள், காலை உணவுக்குப் பிறகு பத்தரைமணிக்குப் பேச உட்காரலாம்’ என்று சொன்ன விதம். சந்தானம் தயாரான மறுநிமிடம் அறைக்கதவைத் தட்டி உணவறைக்கு அழைத்துச் சென்ற, ஒரு வார்த்தைகூட உபரியாகப் பேசாத முதியவர். சுவர்க்கடிகாரம் பத்தரை என்று ஒற்றை மணி அடித்தபோது அறைக்குள் சிரித்த முகத்துடன் நுழைந்த கோவர்த்தனம்.

சந்தானத்துக்கு எத்தனை மணிக்குப் பசியெடுக்க வேண்டும் என்பதைக்கூட விடுதியின் தானியங்கி அட்டவணை முடிவுசெய்யுமோ என்னவோ. சந்தானம் மறுபடி உள்ளூறப் புன்னகைத்துக்கொண்டார். ஆனால், ஒரு விஷயம், சமீபத்தில் பார்த்த மற்றவர்களிடம் இருந்ததை விட, கோவர்த்தனத்தோடு மிகவும் சரளமாகப் பேசிக்கொண்டிருக்க முடிகிறது.

இங்கே உள்ள சகலத்தையும் நிர்வகிக்கும் மாயப் பிரம்பு கோவர்த்தனம் கிடையாது அந்தப் பிரம்புதான் அவரையும் இயக்கி வைக்கிறதே. மற்றவர்கள் அதனிடம் பயந்து பணிகிறார்கள். கோவர்த்தனமும் பணிகிறார் என்றாலும் தன் மனத்தின் ஒரு பகுதியைப் பிரம்பின் ஆளுமைக்கு வெளியில் வைத்துக்கொண்டிருக்கிறார்...

பேசி முடித்துத் திரும்பிவந்தவர், ஆடை படிந்து மூடி ஆறியிருந்த தேநீரை எடுத்து வழக்கமான நிதானத்துடன் பருகினார். தொண்டைக் குழிப் புடைப்பு சீராக ஏறியிறங்கி ஓய்ந்ததும், புதிதாக ஏதோவொன்று நினைவு வந்துவிட்ட வேகத்துடன் சொன்னார்:

...அதற்காக, நான் முன்பு சொன்ன பிரம்மாண்டம் எதிர்மறையானது, முறிவுகளை மட்டும்தான் கொடுக்கும் என்று கற்பிதம் செய்துகொள்ள வேண்டியதில்லை. அநுகூலங்களும், விசித்திரங்களும்கூட விளைந்து உயரும் புதிர்ப் புலம் அது. அதன்

கணிப்புகளையும் கணக்கீடுகளையும் முழுக்க அறிந்துகொள்வதில் ஒரு சாமானிய மனித மனம் ஒருபோதும் வெற்றிபெறாது. பாருங்களேன், ஃபிப்ரவரி என்பது இன்னொரு மாதம்தானே யாருக்கும்? என் வாழ்வின் போக்கில் அது நிகழ்த்தியிருக்கும் குறுக்கீடுகள் மிக ஆச்சரியமானவை.

...காவலாளி ஸ்ரீ நாகராஜனின் சொல்லால் புண்பட்டு நான் குருகுலத்திடமிருந்து அறுபடத் தீர்மானித்தது ஒரு ஃபிப்ரவரியில்தான். மைசூரிலிருந்து ஸ்ரீ முகர்ஜியிடம் திரும்பிவிடலாம் என்று முடிவெடுத்ததும் அதே மாதத்தில்தான். ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி இறந்ததும், அவருடைய பரம தாசரான ஸ்ரீ முகர்ஜி இறந்ததும் ஃபிப்ரவரியில்தான். இந்த விடுதிக் கட்டடம் என் பாத்தியதைக்கு வந்து சேர்ந்ததும் ஃபிப்ரவரியில்தான். இதோ, நீங்கள் வந்திருக்கிறீர்கள் இதுவரை நான் நடந்து வந்த சாலையை முழுக்கத் திரும்பிப் பார்க்கும் விதமாக உங்கள் சந்திப்பு நிகழ்ந்திருக்கிறது மனத்தின் மேல்தளம் உங்களுடன் பேசிக்கொண்டிருக்கும்போதே, இன்னொரு தளத்தில் என் கடந்த காலம் பற்றி வெகு தீவிரமாக மறுபரிசீலனை ஓடிக்கொண்டிருக்கிறது எவ்வளவு மகத்தான நிகழ்வு இந்த சந்திப்பு என்று நினைக்கிறீர்கள்! இதுவும் பிப்ரவரியில்தானே.

கோவர்த்தனத்தின் பார்வை இயல்பாக சுவருக்குப் போனது. கைகட்டி, மார்புயர்த்தி, உடையின் நிறத்திலேயே தலைப்பாகையும் அணிந்திருந்த விவேகானந்தரின் படத்துக்கு கீழ் கொட்டை எழுத்தில் அறிவித்தது நாட்காட்டி 06.02.2006.

ஏயப்பா, ஊரை விட்டுக் கிளம்பிப் பனிரெண்டு நாட்கள் ஆகிவிட்டது. வியப்பு ஒரு உறைபோல மூடியது சந்தானத்தை. தொடர்ந்து, ஃபிப்ரவரி மாதம் தனக்கும் முக்கியமானதாக ஆகிவிடுமோ, அதன் முதல் அறிகுறியாகத்தான் இந்த மாதத்தில் தான் இப்படி ஊர்ஊராக அலைந்துகொண்டிருக்கிறோமோ என்று ஒரு எண்ணம் ஓடி மறிந்தது. முதுகுத்தண்டு சிலிர்த்தடங்கியது.

...தலைமைச் சாமியார் இறந்தவுடன், பூமியோடு தம்மைப் பிணைத்திருந்த ஒரு வேர் அறுந்துபோன மாதிரி உணர்ந்தாராம் கோவர்த்தனம். மதறாஸ் நகரத்தின் விஸ்தீரணத்துக்குள் வெளியேறிக் காணாமல் போவதற்கான சகல பாதைகளும் திறந்திருந்தன. சிறப்பாக ஒரு பாதையும் ஈர்க்காதபோது, எங்கே செல்வதென்று முடிவெடுக்க இயலாமல் சற்றுத் தடுமாற்றமாகத்தான் இருந்தது.

சதா ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியைத் துணைக்கு அழைத்துக்கொண்டு, நடப்புக்கணத்தை நிறைவாகக் கழிப்பது எப்படி என்பதுபற்றியே

சாமியார் பேசிக் கேட்டுக்கேட்டு, கிழவரின் மறைவுக்குப் பிறகு என்ன செய்வது என்றுகூட யோசிக்காமல் இருந்தாகிவிட்டது. எந்தத் தருணத்திலும் தீட்சை வழங்குவதற்குச் சித்தமாகத்தான் இருந்தார் அவர். ஆனால், கோவர்த்தனத்துக்குத் துறவியாகும் உத்தேசம் சற்றும் இல்லை. ஜிட்டுகளும், மஹராஜ்களும் கவனிக்கத் தவறும் ஒரு துளி ஈரம் வாழ்வின் வேறொரு மூலையில் உலராமல் நசநசத்துக் கிடக்கிறது என்பது கோவர்த்தனத்தின் நம்பிக்கை.

‘அறிந்தவற்றிலிருந்து விடுதலை பெறு’ என்கிறார் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி. ‘அறிந்தவற்றுக்கு நீ எஜமானன், நீ அறியாதவைதாம் உன்னை அடிமை கொள்பவை. அவற்றிலிருந்து விடுதலை பெறுவதுதான் முக்கியம், அதை நோக்கி முனை’ என்கிறார் நிஸர்க தத்த மஹராஜ். அறிந்தவையும் அறியாதவையும் ஜோடிசேர்ந்து சொடுக்கும் சவுக்கிலிருந்து தப்பிக்க மார்க்கமறியாது திகைத்து மறுகும் ஜனங்களிலிருந்து கசியும் நிணமும் ரத்தமும் கொண்ட ஈரம்தான் அது. அது என்ன என்பது உணர்வுபூர்வமாகத் தெரியத்தான் செய்கிறது. வார்த்தையாகத் திரள மறுக்கிறது அதன் காரணமாக, புரியாதமாதிரிக் குழப்பமாக இருந்து தொலைக்கிறது.

அடையாரில் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியின் உரை ஒன்றை நேரில் கேட்கக் கிழவர் அழைத்துச் சென்றார். அங்கே பார்க்கக் கிடைத்த வெள்ளைக் குர்த்தாக்களும், ஜோல்னாப் பைகளும், நரைத்த தலைகளும், கலம்காரிச் செருப்புகளும், நிலவிய அமைதியும், அந்தச் சூழ்நிலை உருவாக்க முயன்ற பவித்திரமும் மனத்தில் சாந்தத்தை உருவாக்குவதற்குப் பதிலாக, பாரதம் முழுவதும் அலைந்த சந்தர்ப்பங்களில் பார்க்கக் கிடைத்து ஞாபகத்தின் நிலவறையில் புதைந்துகிடந்த கழிவுகளையும் துர்வாடைகளையும் தந்திரங்களையும் வஞ்சகங்களையும் உக்கிரமாகக் கிளர்த்திவிட்டன.

கிருஷ்ணமூர்த்தியைக் குற்றம் சொல்வதற்கில்லை. அவர் இருந்து பார்க்கும் கோணத்திலிருந்து தென்படும் விதமாக வாழ்க்கையையும் அதன் செயல்மூலங்களையும் விளக்குகிறார். ‘சுபிட்சத்தை நோக்கித் தனிமனித மனம் திரும்பாதவரை¬ சமூகமனத்திற்கு விமோசனமில்லை’ என்பது அவருடைய கருத்து. அதை நிறுவுவதற்கு அவர் கட்டமைக்கும் தர்க்கமும் நேர்த்தியானதுதான்.

ஆனால், எதிர்த் தர்க்கம் கிருஷ்ணமூர்த்தியை எப்படிப் பார்க்கிறது என்பதும் முக்கியம்தானே அவரது சிஷ்யகோடிகள் இந்தக் கேள்வியையே தவிர்க்கிறார்கள் என்று தோன்றுகிறது

கோவர்த்தனத்துக்கு. அசாதாரணமான தான்தோன்றித்தனம் கொண்ட வாழ்க்கை ஒரு தனிமனித தரிசனம் என்ற சிமிழுக்குள் எப்படி அடங்கமுடியும் என்ற கேள்வியின் நியாயத்தை உணர மறுக்கிறார்கள். ஒரே சுவையும் பதமும் கொண்ட ஏகப்பட்ட பூந்தித் துணுக்குகளை ஒன்றாக இறுக்கிப் பிடித்த லட்டு அல்ல சமூகம் என்ற குளறுபடி அமைப்பு என்பது அவர்களுக்குப் புரியவில்லை.

அடையாரில் இருந்து திரும்பியபிறகு, நள்ளிரவுவரை சாமியாருக்கும் இவருக்கும் கடுமையான வாக்குவாதம். மறுநாளும் அங்கே செல்வதற்கு சாமியார் அழைத்தார். கோவர்த்தனம் மறுத்தார். கிழவர் தான் மட்டும் புறப்பட்டுப்போனார். கிழவருக்கும் ஜிட்டு கிருஷ்ணமூர்த்திக்கும் அப்படியென்னதான் உறவோ, அவர் காலமாகி சரியாக ஒரு வருஷம் முடியும்போது இவரும் புறப்பட்டுவிட்டார்...

கண்ணுக்கெட்டியவரை விரிந்த கடல்நீலத்தில் மனத்தைக் கரையக் கொடுத்து நின்ற கோவர்த்தனத்தை, காரமான நெடியாகத் தாக்கிய சுருட்டு மணம் மீட்டது. அவசரமாகப் பார்வையைத் திருப்பினார். கன்னங்கள் இரண்டிலும் பள்ளம் தோன்றச் சுருட்டை இழுத்த கிழவரின் தோள்பட்டைகள் சீசாப் பலகைபோல ஒன்றுக்கொன்று சமமற்று இருந்தன. சரிந்திருந்த இடதுபுறத்தின் திசையில் ஆந்திரத்தை நோக்கிச் செல்லும் தேசிய நெடுஞ்சாலை. அதன் பளபளக்கும் கருமையும் ஏகாந்தமும் கோவர்த்தனத்தை 'வா, வா' என்று கூப்பிடுகிற மாதிரி இருந்தது. சாவகாசமாக மல்லாந்து கிடந்த சாலையில் நடக்கத் தொடங்கினார்.

ஒரு மணிநேரம் போல நடந்திருப்பார். சற்றுத் தொலைவில் எதிர்த்திசையிலிருந்து ஒரு மனித உருவம் நடந்து வருகிறது. பாவைக்கூத்து பொம்மையின் சாயலில் கால்களும் கைகளுமான குச்சிகள் அசைவது தெரிகிறது. வெறுமையான மேலுடம்புடன், வேஷ்டி மட்டும் தரித்த உருவம். சுற்றிலும் பிரகாசிக்கும் வெளிச்சத்தில் கறுப்பாக முன்னேறி வரும் உருவம், வெறும் நிழல் மட்டும் நடந்து வருகிற மாதிரித் தென்படுகிறது.

விரையும் வாகனங்கள் தவிர்த்து, வேறு ஜன நடமாட்டம் இல்லாத பகுதி. நெடுஞ்சாலையிலிருந்து ஏதோவொரு சிற்றூர் நோக்கிச் சாலை கிளை பிரிகிற முனையில் கோவர்த்தனத்துக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது.

சாலையோரம் மண்டிய புதரின் விளிம்பில் ஒரு குழந்தை கிடந்தது. பிறந்து மூன்று அல்லது நான்கு மாதங்களே ஆன குழந்தை. துணியில் சுருட்டிக் கிடந்த உடம்பு. முகமும், கைகால்களை உதைத்ததால் துணி

விலகிய இடுப்பும் மட்டும் வெளியில் தெரிகிறது. பெண்குழந்தை. ஆழ்ந்த உறக்கத்துக்குப் பின் தற்போதுதான் விழித்திருக்கிறது போல. மிளகுக் கண்கள் ஆகாய வெளிச்சத்துக்குக் கூசி இடுங்கியிருந்தன. அழுவதற்காக யத்தனம் கூட்டிக்கொண்டிருந்தது.

பக்கத்தில் இரண்டு தெரு நாய்கள் கடும் விரோதத்துடன் ஒன்றையொன்று எதிர்த்து நின்று உறுமிக்கொண்டிருந்தன. குழந்தை யாருக்குச் சொந்தம் என்பதில் ஏற்பட்ட தாவாவோ என்னவோ. குழந்தையை நெருங்கி இரண்டு கைகளாலும் அள்ளினார் கோவர்த்தனம். வேற்றுக் கைச் சூட்டை அறிந்த மாதிரி உடனடியாக அழ ஆரம்பித்தது குழந்தை.

வந்த வழியே திரும்பி நகரத்தைப் பார்த்து நடந்தார். குழந்தையிடமிருந்து ஊற்றுப்போலப் பீய்ச்சிய சிறுநீர் வலது கொடுங்கையில் பட்டு வழிந்தது. அந்த வெதுவெதுப்பு மிகவும் இதமாக இருப்பதும், தமக்கு அது பிடித்திருக்கிறது என்பதும் கோவர்த்தனத்துக்கு வியப்பாய் இருந்தது.

அதோ, அந்தப் போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும்தான் தங்கமே உனக்கும் எனக்கும் உறவு.

என்று செல்லமாய்க் குழந்தையிடம் சொன்னார். அது அலறலின் வீச்சை அதிகப்படுத்தியிருந்தது.

புறநகர்க் காவல் நிலையத்தில் இவர் பேசுவதை முழுக்கக் கேட்டுக்கொள்ளக்கூட மறுத்துவிட்டார்கள்.

குழந்தை எந்த ஏரியாவில் கிடந்தது என்பதற்கு ஏதாவது நிரூபணம் இருக்கிறதா?

எந்த ஏரியாவில் கிடைத்ததோ அந்த ஏரியா ஸ்டேஷனில்தான் புகார் கொடுக்க வேண்டும்.

பெரியாளுகளெ அரெஸ்ட் பண்ணினாலே வச்சுச் சமாளிக்கிறதுக்குள்ளெ தாலி அந்துருது. இதெ வச்சிக்கிட்டு என்னா செய்யுறது? அந்தா பாரு, தொப்புளே சரியாக் காஞ்சு உதுரலே இன்னம்.

இது என்னா போலீஸ் ஸ்டேசனா, அனாதெ ஆசிரமமா?

பெத்தவளே போட்டுட்டு ஓடீட்டா, ஒனக்கென்ன அக்கறெ மசுரு?

ஒளுங்கா வெளியே போறியா, இல்லெ ஒம் மேலெயே கேஸ் போடட்டுமா? எங்கேர்ந்து கடத்துனே இந்தச் சனியனெ? ம்?

பேசாமெ இருந்த எடத்துலெயே கொண்டுபோய் விட்டுரு. ரொம்ப அக்கறை இருக்கா, நீயே வளத்துக்கோ.

இவ்வளவையும் கோவர்த்தனத்துக்கு விநயமாக எடுத்துக்கூறியவர் ஒரு பெண் காவலர் என்பதுதான் இதன் சிறப்பே. நிரந்தர கர்ப்பிணி போன்று கீழ்வயிறு புடைத்திருந்த ஆண் காவலர் ஆமோதிப்பாய்த் தலையாட்டிப் புன்னகைத்துவிட்டு, வலது மேல்புறப் பாக்கெட்டிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்து உதட்டில் பொருத்தியவாறு நிலைய வாசலுக்கு நடந்தார்.

பெண்காவலர் கூறிய கடைசி வாக்கியத்தில் தனக்குள் ஒரு பொறி தொற்றியதை உணர்ந்தார் கோவர்த்தனம்.

நிலையத்தைவிட்டு வெளியேறினார். எதிரில் நின்றிருந்த ஆசாமியை எங்கேயோ பார்த்திருக்கிறோமே?... ஆ, குழந்தையைத் தூக்கிக்கொண்டு நடந்துவந்தபோது பின்னோடே வந்த பாதசாரியல்லவா இவர்? இங்கே எதற்காகக் காத்துக் கொண்டு நிற்கிறார்?... அவர் கோவர்த்தனத்தை நெருங்கி வந்தார்.

ரொம்ப அழுறாளோ?

பெண்குழந்தை என்று இவருக்கு எப்படித் தெரியும்?

அதான் ஒண்ணுக்கடிச்சப்பப் பீய்ச்சலையே. வழியத்தானே செஞ்சது?

பாதசாரி சிரித்தார். தான் நினைத்தது இவருக்கு எப்படித் தெரிந்தது?

இது பசி அழுகையில்லே. கொண்டாங்க.

தன் கையில் வாங்கி குழந்தையின் அடிவயிற்றை வருடினார். சில கணங்களுக்குப் பின் காற்றுப் பிரிந்தது. குழந்தையின் அழுகை நின்றுவிட்டது. நாடோடி மாதிரி இருக்கிறார், குழந்தை வளர்ப்பு பற்றி இவருக்கு எப்படித் தெரிகிறது?...

எ ழும்பூர் நிலையத்தில், திருநெல்வேலி செல்லும் ரயிலில் குழந்தையுடன் ஏறினார்கள். தாயின் மடியில் கிடப்பதுபோன்ற சௌகரிய உணர்வுடன் குழந்தை பெரியவரின் மடியில் கிடந்தது. ஃபிளாஸ்க்கில் வெந்நீர், பால்பவுடர் டப்பா, டபரா டம்ளர், டீஸ்பூன், மாற்று உடுப்புகள், சின்னதும் பெரியதுமாக நாலைந்து கைத்தறித் துண்டுகள், நீண்ட டர்க்கிஷ் டவல் ஒன்று என நிலையத்தின் எதிரில் உள்ள கடைகளில் விசாரித்து விசாரித்து வாங்கிய சாமான்கள் ஒரு பை நிறையத் தேறிவிட்டன. பெரியவரின் தோள் பை, குழந்தையின் பை,

தன்னுடைய பை என்று மூன்றையும் தூக்கிவரவும், பத்திரமாக வைத்துக்கொள்ளவும் நேர்ந்தது கோவர்த்தனத்தின் மனதுக்குள் வெவ்வேறு விதமான அலைமாற்றங்களை உண்டுபண்ணியவாறு இருந்தது.

ஒரே நாளில் தன் வாழ்வின் சுமை பலமடங்கு அதிகரித்துவிட்ட மாதிரித் தோன்றியது. தம்மைவிட்டால் வேறு யாரும் சுமக்க முன்வராத சுமை அது என்றும் தோன்றிக்கொண்டேயிருந்தது...

அன்ரிஸர்வ்ட் பெட்டியின் நெரிசலில் பயணம் முழுக்கத் தம் இடத்துக்காக அடிபிடி நடத்திக்கொண்டிருந்த சகபயணிகள், கைக்குழந்தையுடன் பிரயாணம் செய்யும் இரண்டு ஆண்கள் வசதியாக இருக்கும் விதமாக தாம் ஒதுங்கிக்கொண்டு இடம் கொடுத்தவாறிருந்ததைக் கவனித்தார். அந்தப் பெட்டியில் இருந்த சகலருக்கும் இந்த ஒரு விஷயத்தில் அபாரமான கருத்தொற்றுமை தன்னியல்பாகவே உருவாகிவிட்டது பேராச்சரியமாக இருந்தது. குழந்தையைக் கைமாற்றும் சமயங்களில் யாராவது பெண் பிரயாணிகள் வாங்கிக் கொஞ்சநேரம் மடியில் வைத்துக்கொண்டார்கள்.

பெரியவருடன் பேசிக்கொண்டும், ஜன்னல்வழி விரையும் காட்சிகளை மௌனமாக வெறித்துக்கொண்டும் நேரத்தைக் கடத்தினாலும், பின்புலமாக என்னென்னவோ திட்டங்கள் வளர்ந்துகொண்டே இருந்தன அடிமனத்தில்.

இன்று காலைதான் அறிமுகமானவர் என்பதற்கான தடயமே இல்லாது, நெருங்கி அமர்ந்திருந்தார் அந்தப் பெரியவர். வெகு சரளமாகப் பேசிக்கொண்டு வந்தார். கோவர்த்தனத்தின் தகப்பனார் வயது இருக்கும் அவருக்கு. தமது உடம்போடு உரசியபடி அமர்ந்திருக்கும் அவரது உடம்பின் வெம்மை கோவர்த்தனத்தின் மனத்தில் ஏதோ ஒரு உள்மூலையில் சலனமற்றுக் கிடந்த ஏக்கங்களைத் தட்டியெழுப்புவதையும், அதேசமயம் அவற்றுக்கு ஆறுதலாக இருப்பதையும் உணர்ந்தவாறு தலையாட்டிக் கேட்டுக்கொண்டு வந்தார் கோவர்த்தனம். பிரயாணம் முழுக்க கோவர்த்தனத்தின் மனத்தில் ஊற்றெடுத்தவாறிருந்த சந்தேகங்களை ஒவ்வொன்றாகத் தீர்த்துக்கொண்டு வந்தார் பெரியவர்.

பெரிய பெரிய காரியங்கள் எல்லாம் சின்னச் சின்ன செயல்களில் ஆரம்பித்தவைதான் என்று அடித்துச் சொன்னார் அவர்.

...கு ருகுல விடுதியிலிருந்து வெளியேறிய நாள்முதல் நான் யாரிடமும் தலைவணங்கியதில்லை ஸார். அது என்னுடைய பெருமை என்று நினைக்கவில்லை. என் வாழ்முறை அந்தவிதமாக அமைந்துவிட்டது. வேறு சந்தர்ப்பங்களில் படுமோசமான அடிமை வாழ்வுக்குள் நான் சிக்கியிருக்கவும் வாய்ப்பிருக்கிறது. நான் முன்பு சொன்ன மகாதர்க்கம் காரணமேயின்றி சில தனிமனிதர்களை ஆயுள்பூராவும் வதைத்துத் தீர்க்கிறது. என்னைப் பொறுத்தவரை காரணமேயில்லாமல் அது என்னை அபரிதமான கருணையுடன் நடத்தியிருக்கிறது என்றுதான் நம்புகிறேன்.

...இதுமாதிரி நேரடியாக அடையாளம் காணமுடியாத சந்தர்ப்பங்களில் நாம் செய்வதற்கு எதுவுமேயில்லை. அதனால்தான், பெயராவது சூட்டி வைப்போமே என்று கடவுள், விதி, தலையெழுத்து என்றெல்லாம் சொல்லுகிறோம். ரொம்பப் பகுத்தறிவான சொல் என்று நினைத்துக்கொண்டு 'இயற்கை' என்கிறோம் ஏதோ மனிதப் பிராணிகளெல்லாம் இயற்கையின் பகுதி கிடையாது; அதை வேடிக்கை பார்ப்பதற்காகவும் கையாளவும் ஏற்படுத்தப்பட்ட உபரி ஜீவன்கள் என்கிற மாதிரி...

கோவர்த்தனம் சிரித்தார். அநுசரணையாக சந்தானமும் சிரித்து வைத்தார்.

...யாரிடமும் எதனிடமும் நான் நெருக்கமாய் உணர்ந்ததும் கிடையாது. உஜ்ஜயினியில் ஒரு வாரம்போல என்னைப் பீடித்திருந்தது ஒரு உணர்ச்சி. நல்லவேளை, அந்தப் பெண் நிர்த்தாட்சண்யமாக அதை நொறுக்கிவிட்டாள். நபருக்கு நபர் மாறக்கூடியவை என்பதாலேயே, பாசமாகட்டும் குரோதமாகட்டும், எல்லா உணர்ச்சிகளுமே மிகையுணர்ச்சிகள்தாம்...

இந்தமுறை கோவர்த்தனம் சிரித்தபோது, சந்தானம் பங்கேற்கவில்லை. கோவர்த்தனத்தை உறுத்துப் பார்த்துக்கொண்டிருந்தார். இந்த வளாகத்தின் ராணுவக் கெடுபிடிக்குப் பொருத்தமான சிரிப்பு அது என்று தோன்றியது.

...அதேபோல, யாரையுமே மீண்டும் சென்று பார்க்கவேண்டும் என்று விரும்பியதுமில்லை. தற்செயல் சந்திப்புகளும், காரியார்த்தமான சந்திப்புகளும் தவிர, யாரையும் விருப்பத்தின் பேரில் சென்று பார்க்கவேண்டும் என்று முனைந்ததில்லை. இரண்டே இரண்டு விதிவிலக்குகள் தவிர. நான் முன்பே குறிப்பிட்ட தலைமைச் சாமியார்

ஸ்ரீ ஸவ்யசாசி முகர்ஜி. இரண்டாவது, பெரியவர் ஸ்ரீ வேதமூர்த்தி. இவர்களுடன் மட்டும்தான் பிணக்கில்லாமல் என்னால் தொடர்ந்து மாதக்கணக்காக உடனிருக்க முடிந்திருக்கிறது.

...ஸ்ரீ முகர்ஜி ஒருகையால் சேவைப் பணிகள் செய்துகொண்டே, மறுகையால் அறிவார்த்தத்தின் கயிறைப் பற்றி மேலேற முயன்றவர். அவரிடம் திரும்பப் போகவில்லை என்றால், இன்றைக்கு நான் பேசும் மொழி எனக்குக் கைவந்திருக்காது. இவ்வளவு வாசிப்பும், யோசனையும், பத்திரிகைகளில் எழுதுவதும் எல்லாமே அவர் எனக்கு அளித்த கொடை என்றுதான் சொல்வேன்... பெரியவர் ஸ்ரீ வேதமூர்த்தி எனக்கு அளித்த கல்வி முழுக்கமுழுக்க வேறு... என்ன, ஆச்சரியமாகப் பார்க்கிறீர்கள்?

இல்லை, பழனியில் வைரவன் என்று ஒருவரைப் பார்த்தேன் அல்லவா?

ஆமாம், சொன்னீர்களே?

பெரியவரின் பெயரை நான் அநாயாசமாகச் சொன்னேன் என்று என்னை அவர் கடிந்துகொண்டார். நீங்களானால்...

பெரியவர் ஸ்ரீ வேதமூர்த்திக்கு அணுக்கமானவர்கள் இவ்வளவுபேர் இருக்கிறார்கள் என்பதே நீங்கள் சொல்லித்தான் எனக்குத் தெரியும். தாம் வாழ்ந்து கழிக்கும் தருணங்களைத் தடயம் எதுவும் மிஞ்சாமல் நீத்துச் செல்கிறவர் என்றுதான் அவரை இதுகாறும் நம்பியிருந்தேன்...

தொண்டை அடைத்த மாதிரி கோவர்த்தனத்தின் பேச்சு தடைப்பட்டது. புதிதாக வந்தவர்போல அந்த அறை முழுவதும் பார்வை ஓட்டினார். வெளியில் தெரிந்த விளையாட்டு மைதானத்தையும், அப்பால் அகலவசமாக தளத்துக்கு இருபது அறைகளுடன் இருந்த இரண்டு மாடிக்கட்டத்தையும் வெறித்துப் பார்த்தார். கட்டடத்தை ஒட்டியிருந்த ஒற்றை அறையின் கூரைத்தளத்தில் பதிந்த கூம்பு வடிவத்திலிருந்து வெண்ணிறமாகப் புகை கசிந்துகொண்டிருந்தது.

...இந்த வளாகத்துக்கு வந்து பத்து வருஷமாகிறது. அதற்கு முன்னால் நகருக்குள் ஒரு சிறு ஓட்டு வீட்டில், பத்துக் குழந்தைகளுடன் இருந்தேன். மாதாமாதம் குற்றாலிங்கம் அரிசிமூட்டையும் தானியங்களும் கொடுத்தனுப்புவார். சில மாதங்கள் அவரே எடுத்து வருவார். திடீரென்று ஒருநாள் பெரியவர் ஸ்ரீ வேதமூர்த்தி வந்தார். அவருடன் இன்னொருவரும் வந்தார். ஈரோட்டுக்காரர். தொழிலதிபர். ஸ்ரீ சுத்தானந்தம் என்று பெயர் சொன்னார். இருவருமாக என்னை இந்த

வளாகத்துக்கு அழைத்து வந்தார்கள். எனக்கு மூச்சடைத்துவிட்டது. கடையில் கிடைக்கிற அரிசியை வாங்கி சுலபமாகச் சமைத்துவிடுகிறோம். உழுவதிலிருந்து அறுவடை வரை எத்தனை கைகள் நமக்காக உழைத்திருக்கின்றன... என்றோ நாம் சாப்பிடவிருக்கும் ஒரு கவளம் சோற்றுக்காக இந்த நிமிடம் எத்தனை உயிர்களும் நுண்ணுயிர்களும் வேலை பார்த்துக்கொண்டிருக்கின்றன...

கோவர்த்தனத்தின் குரல் இளகியிருந்தது.

...கடையில் கிடைக்கிற அரிசி மாதிரி இந்த மொத்த வளாகமும் என் கைக்கு வந்து சேர்ந்தது. அதற்குப் பிறகு ஸ்ரீ சுத்தானந்தத்தை இன்றுவரை நான் பார்த்ததில்லை. இந்த வளாகத்தில் உபயோகமில்லாத ஒரு மூலைகூடக் கிடையாது. அவ்வளவு நேர்த்தியான கட்டட அமைப்பு. நானே திட்டமிட்டிருந்தால்கூட, என்னுடைய தேவைகளை இப்படிப் பூர்த்தி செய்துகொண்டிருக்க முடியாது. வடிவமைத்தவர் சிவராமன் என்ற என்ஜினீயராம். மெற்றாஸ்காரர் என்று சொன்னார்கள். அவரை நான் பார்த்ததே கிடையாது. பெரியவர் ஸ்ரீ வேதமூர்த்தியின் நிஜமான ஆகிருதியை நான் சந்தித்த தருணம் அது. மகா மனிதர் அவ்...

கொஞ்சநேரம் கண்களை மூடியிருந்தார்.

...ஆனால், அவர் சம்பந்தமாக எனக்குள் இருக்கிற ஞாபகம் மாதிரி வேறு சிலருக்கும் இருப்பது இயல்புதானே. மற்றபடி, அவர், அதுதான் நீங்கள் சொன்ன வைரவன், ஸ்ரீ வேதமூர்த்தியை என்னவாகப் பார்க்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. நான் எந்த உறவையுமே பவித்திரம் என்று கருதுகிற நபர் இல்லை. பெரியவர் ஸ்ரீ வேதமூர்த்தி என் வாழ்வின் ஓட்டத்தைத் தடம் திருப்பிய, இன்றைக்கு நான் இருக்கிற ஸ்திதிக்கும் என் பணிகளுக்கும் என்னை உந்தித் தள்ளியவர் என்ற விதத்தில் அவர்மீது பெரும் மதிப்பு இருக்கிறது. அது பக்தி அல்ல. நான் எதன்மீதும் பக்தி செலுத்துகிற ஆசாமியும் அல்ல... பார்த்தீர்களா, பேச்சு எங்கோ போய்விட்டது. நான் சொல்ல வந்தது பெரியவர் ஸ்ரீ வேதமூர்த்தி எனக்களித்த கல்வி பற்றி...

ஆமாம்.

அவரைச் சந்தித்த நாள்வரை எனக்குள் ஊறி வளர்ந்திருந்த விருப்பங்கள் வெறுப்புகள் எல்லாமே என் பால்யகாலம் உருவாக்கித் தந்தவைதாம். அதாவது, நான் பிறந்த சந்தர்ப்பத்திலிருந்து ஆரம்பிக்கும் என்னுடைய சொந்த வரலாறு எனக்குத் தந்த கொடை அவை. விருப்பத்தின் அளவு அதிகமாய் இருந்திருந்தால் திரும்பத் திரும்ப அதே

சூழலைத் தக்வைத்துக்கொள்ளவும் தொடரவும் முயன்றிருப்பேன். வெறுப்பு அதிகம் இருந்த பட்டியல் அது என்பதால், வெளியேற வேண்டும் என்ற துடிப்பு அதிகம் இருந்தது. என்னுடைய வாக்கியங்கள் சிடுக்காகவோ குழப்பமாகவோ இல்லையே?

இல்லை, மேலே தொடருங்கள்.

ஸ்ரீ வேதமூர்த்தி, வேறு கோணத்திலிருந்து அணுகக் கற்றுக்கொடுத்தார். உதாரணமாக, நீங்கள் திருநெல்வேலியில் சந்தித்தீர்களே, ஸ்ரீ குற்றாலிங்கம், அவருடைய பூர்விகம் உங்களுக்குத் தெரியுமல்லவா?

ஆமாம். மிக விரிவாகச் சொன்னார்.

சிந்துபாத்தின் தோள்மீது உட்கார்ந்த கிழவன் மாதிரி, அளவுக்கடங்காத பசிதான் அவருடைய வாழ்வை ஆக்கிரமித்திருந்தது. பசியிடமிருந்து ஸ்ரீ குற்றாலிங்கத்தை விடுவித்தார் ஸ்ரீ வேதமூர்த்தி. தெய்வ வரம்போல அதைப் பாவிக்கிறார் ஸ்ரீ குற்றாலிங்கம். நான் அப்படி நினைக்கவில்லை, பொருளாதாரம் படித்திருக்கிறீர்களா நீங்கள்...?

இல்லையென்று தலையசைத்தார் சந்தானம்.

...Diminishing marginal utility என்று ஒரு கோட்பாடு உண்டு. ஒரே தடவையில் தொடர்ந்து உண்ணும்போது முதல் ஆப்பிள் வழங்கும் அதே ருசியை மூன்றாவது ஆப்பிள் வழங்காது. எண்ணிக்கை கூடிக்கொண்டே செல்கையில், வெறுப்பாகவும், நஞ்சாகவும்கூட அது எதிர்மறையாகத் திரும்ப வாய்ப்பிருக்கிறது. ஸ்ரீ குற்றாலிங்கம் கொண்டை ஊசி வளைவில் திரும்புவதற்கான பதநிலையை அடைந்திருந்த அதே விநாடியில் ஸ்ரீ வேதமூர்த்தியின் சந்திப்பு நடந்திருக்கலாம். பலமுறை ஸ்ரீ குற்றாலிங்கத்தைச் சந்தித்திருக்கிறேன். பெரியவரைச் சந்தித்த நாளைப் பற்றிப் பேசும்போதெல்லாம் அவர் கண் மல்குவார். ஆனால், ஸ்ரீ வேதமூர்த்தி நிகழ்த்திய அற்புதமே வேறு என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். தன்னுடைய பசியுடன் மட்டுமே போராடிக்கொண்டிருந்த ஸ்ரீ குற்றாலிங்கத்தை, பசி என்ற மாபெரும் வியக்தியுடன் போர்தொடுக்கும் வீரனாக மாற்றினார் அல்லவா, அதுதான் அற்புதம். நடைமுறைத் தர்க்கத்துக்குத் தன்வயமாக ஸ்ரீ வேதமூர்த்தி கொடுத்த மரண அடி. என் சம்பந்தமாக நடந்ததும் இதேதான். ஆதரவற்றவன் என்ற சுய பச்சதாபத்தில் ஒட்டிக்கொண்டிருந்த என்னை ஆதரவற்றோரின் புரவலனாக மாற்றினார் ஸ்ரீ வேதமூர்த்தி.

பார்க்கப்போனால், பசி பற்றி ஸ்ரீ குற்றாலிங்கமும் அநாதரவு பற்றி நானும் சேர்த்துவைத்திருக்கிற அனுபவத் தொகுப்பு சாமானியமானதா என்ன...?

ஆவேசமாகப் பேசிவந்த கோவர்த்தனம், அதன் தொடர்ச்சிபோலவே சிரித்தார்.

...ஸ்ரீ முகர்ஜியும், ஸ்ரீ வேதமூர்த்தியும் ஒரு பார்வைக்கு முற்றிலும் ஒன்றுக்கொன்று தொடர்பே அற்ற ஆளுமைகள். இன்னொரு பார்வையில், திறக்கப்படாத சிமிழின் ஒருபுறம் இவரும், இன்னொரு புறம் அவரும் நெம்பிக்கொண்டு இருக்கிறார்கள். புறங்கள்தாம் வேறு. சிமிழ் ஒன்றுதான். நான் அப்படித்தான் பார்க்கிறேன்.

அறை வாசலில் நிழலாடியது. கோவர்த்தனத்தின் உதவியாளர். உள்ளே வரும்படி சமிக்ஞை செய்தார். அந்த இளைஞன் வாய்க்கு மூடிபோல வலதுகையை வைத்துக்கொண்டு சந்தானத்துக்குக் கேட்காதபடி கோவர்த்தனத்தின் செவியில் எதையோ சொன்னான். கோவர்த்தனம் தலையசைத்துக் கொண்டார்.

அவர்களை அழைத்துவா, கிரி.

என்றார். அவன் பின்வாங்கி வெளியேறி, பிரதான வாசல்நோக்கி வேகமாக நடந்தான். கோவர்த்தனம் சந்தானத்தை நோக்கித் திரும்பினார்.

...உங்களிடம் சொல்ல விட்டுப்போய்விட்டது. இங்கே குழந்தைகளைப் பத்துவயதுவரைதான் பராமரிக்கிறோம். அதாவது, ஐந்தாம் வகுப்புப் படித்து முடிக்கும்வரை. அதன் பிறகு, கோயம்புத்தூரிலுள்ள ஒரு கிறிஸ்துவ மிஷனரியிடம் ஒப்படைத்துவிடுகிறோம். இங்கே உள்ள குழந்தைகளில் ஆறு பேரைப் பெற்றுக்கொள்வதற்காக இரண்டு சகோதரிகள் வந்திருக்கிறார்கள். குழந்தைகள் ஆயத்தமாக இருக்கிறார்கள். ஆனாலும், சில நடைமுறைகள் உள்ளன. சில படிவங்களிலும் பேரேடுகளிலும் கையெழுத்து வாங்குவது, போடுவது என்கிற மாதிரி. ஒரு மணிநேரம் எடுக்கலாம். நீங்கள் அதுவரை காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை. நம்முடைய வசதிக்காக அவர்களைக் காத்திருக்க வைப்பது முறையும் இல்லை.

அட, நீங்கள் தாராளமாகப் போய் அனுப்பிவிட்டு வாருங்கள். நான் காத்திருக்கிறேன்.

அவர்கள் குழந்தைகளோடு கொஞ்சநேரம் இருந்துவிட்டு

மாலையில்தான் கிளம்புவார்கள். நடைமுறைகளை மட்டும் முடித்துவிட்டு வந்துவிடுகிறேன். அதன்பிறகு நாம் மதிய உணவுக்குச் செல்லலாமல்லவா? இன்னொரு கோப்பை தேநீர் வேண்டுமானால் அருந்துகிறீர்களா...?

‘வேண்டாம்’ என்று சந்தானம் தலையசைத்தார்.

...இருங்கள், நீங்கள் வீணாகக் காத்திருந்த மாதிரி ஆகவேண்டாம். உங்களுக்குப் படிப்பதற்கு ஒரு சங்கதி தந்துவிட்டுச் செல்கிறேன்.

கோவர்த்தனம் எழுந்து தன் புத்தக அலமாரியின் அருகில் சென்றார். சற்றுநேரம் ஏதோ யோசிப்பவர்போல வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தார்.

கா லையில் உரையாடத் தொடங்கியபோதும் இப்படித்தான், ஏதோ காரணமாக கோவர்த்தனம் பத்துநிமிடம் வெளியில் சென்றுவந்தார். சந்தானம் எழுந்து புத்தக அலமாரியைப் பார்த்துக்கொண்டிருந்தார். விதவிதமான புத்தகங்கள். தமிழுக்குத் தனியாக இரண்டு தட்டுகள். ஆங்கிலத்துக்கு மூன்று தட்டுகள். தொண்ணூற்றொன்பது விழுக்காடு நூல்களும் ஆசிரியர் பெயர்களும் சந்தானம் கேள்வியேபட்டிராதவை.

அந்த நூல்களையும் ஆசிரியர்களையும் பற்றிய அறிமுகங்களும் விமர்சனங்களும் மதிப்புரைகளும்தான் தாம் ஆங்கில சஞ்சிகைகளில் எழுதி வருவதாக முதுகுப்புறமிருந்து சொன்னார் கோவர்த்தனம். ‘நூலாசிரியர்களின் பெயர்களில் பலவும் ஆங்கிலப் பெயர்கள் மாதிரியே இல்லையே’ என்று சந்தானம் ஆச்சரியப்பட்டார். ஆங்கில மொழி பெயர்ப்புகள்தாம் அவை எல்லாம். ஆனால் மூல ஆசிரியர்கள் ஆங்கிலேயர் அல்ல. ரஷ்ய, ஜெர்மானிய, ஃப்ரெஞ்ச்சு, லத்தீன் அமெரிக்கப் பெயர்கள் அவை என்று விளக்கினார் கோவர்த்தனம்.

...படிக்கப் பிடிக்கவில்லையென்று மூத்த சாமியார்களிடம் சொன்னவன். இன்றைக்கு தினசரியும் இரண்டு மணி நேரமாவது படித்தபிறகுதான் தூக்கமே வருகிறது. இப்படித்தான், என் வாழ்நாள் முழுக்க நான் செய்ய வேண்டாம் என்று நினைத்திருந்த ஒவ்வொன்றாகச் செய்துகொண்டிருக்கிறேன். பிரம்மச்சாரியாய் இருக்கக்கூடாதென்று நினைத்தேன். இன்றுவரை தனிக்கட்டை. குருகுலப்பணிக்குப் போகக்கூடாதென்று நினைத்தேன், குருகுலத்துக்கு நிகராக ஆதரவற்றோர் விடுதி நடத்தி வருகிறேன். இவ்வளவு ஏன், உங்களுடன் உரையாடல் ஆரம்பிக்கும்போதுகூட, சுருக்கமாகப் பேசி உங்களை அனுப்பிவிட வேண்டும் என்றுதான் நினைத்தேன்...!

என்று சொல்லிக்கொண்டே திரும்பி சந்தானத்தைப் பார்த்தார் கோவர்த்தனம். முகத்தில் பெரிய சிரிப்பு மலர்ந்திருந்தது.

ஒரு கணம் அவர்மீது பொறாமையாக இருந்தது சந்தானத்துக்கு. காற்றில் மிதப்பவர்போல கனமற்று இருக்கிறார். மிகமிக வெளிப்படையாய் இருக்கிறார். அதைவிட, தன்னுடைய நேரத்தை முழுக்க முழுக்கத் தன்னிடமே வைத்துக்கொண்டிருக்கிற மனிதர் என்று பட்டது. ஆனால், அவர் தரப்புக்கு வேறு ஏதாவது நிர்ப்பந்தங்கள் இருக்குமோ என்னவோ.

என்றாலும், கோவர்த்தனத்திடம் ஒரு சிறப்பம்சம் இருக்கத்தான் செய்தது. சந்தானம் இதுவரை சந்தித்தவர்கள் அனைவரும் தீவிரமான தொனியில், பலசமயங்களில் தழுதழுத்த குரலில்தான் தங்கள் பூர்விகத்தை விவரித்தார்கள். கோவர்த்தனத்திடம் தன்னியல்பான ஒரு நகைச்சுவை உணர்ச்சி இருக்கிறது. வாழ்வை மெனக்கெட்டுக் கடினமான விஷயமாக ஆக்கிக்கொள்ளாதவர் என்று தோன்றியது...

கோவர்த்தனம் முடிவுக்கு வந்துவிட்டார். அரக்கு நிறக் காலிக்கோ அட்டையிட்ட புத்தகம் ஒன்றை எடுத்து சந்தானத்தின் கையில் கொடுத்தார். உடனடியாக எதிர்ஜன்னலைப் பார்த்தார்.

அதோ அவர்கள் வருகிறார்கள். தற்காலிகமாக விடைபெற்றுக் கொள்கிறேன் நண்பரே.

எதிர் ஜன்னலில் கிரியுடன் இரண்டு கன்னியாஸ்திரிகள் நிதானமாக நடந்து வந்துகொண்டிருந்தார்கள். சுள்ளென்ற எதிர்வெயிலில் அவர்களின் வெண்ணிற உடைகளைப் பார்க்கக் கண்கள் கூசின. எதிர்கொண்டு வரவேற்பதற்காக வெளியேறி நடந்தார் கோவர்த்தனம்.

இரண்டாவது நிமிடத்தில் நால்வரும் சந்தானத்தைக் கடந்து அலுவலக அறைக்குச் செல்லும் வராந்தாவில் நுழைந்தனர். முன்பின் தெரியாத ஆள் உட்கார்ந்திருக்கிற மாதிரி இவரை ஒரு பார்வை பார்த்துவிட்டு அவர்களோடு சென்றார் கோவர்த்தனம்.

அ து புத்தகம் அல்ல. கோடுபோட்ட நோட்டுக்கள் இரண்டு மூன்றை ஒன்றாகச் சேர்த்து பைண்டு செய்த மாதிரி இருந்தது. அச்சுக் கோத்ததுபோலக் கையெழுத்து. சச்சதுரமான ஆங்கில எழுத்துக்கள். ஒன்றோடொன்று ஒட்டாமல் மிகச் சீரான இடைவெளியில் அமர்ந்திருந்தன. சந்தானத்தின் கையெழுத்து அழகாக இருக்கிறதென்று பலபேர் சொல்லிக் கேட்டிருக்கிறார். முக்கியமான படிவங்களைப் பூர்த்திசெய்வதற்கு இவரைத்தான் நாடுவார்கள், சக ஊழியர்கள் பலரும்.

இருந்தாலும் கோவர்த்தனத்தின் கையெழுத்து அதைவிடவும் திருத்தமாகவும் அழகாகவும் இருந்தது. இடையில் பாரதியாரின் கவிதை வரிகள் மேற்கோளாக வரும் இடங்களில் தமிழ் எழுத்து அச்செழுத்து போலவே இருந்தது.

‘எந்தக் கோணத்தில் பார்த்தாலும் தன் பொறாமைக்குரியவராகத்தான் இருக்கிறார் கோவர்த்தனம்’ என்று எண்ணியவாறு அந்த நோட்டைப் படிக்க ஆரம்பித்தார் சந்தானம். தேதியற்ற நாட்குறிப்பின் சாயல் கொண்டிருந்தது அது. ஆனால், நாட்குறிப்புப் படிக்கிற உணர்வேயில்லை. நாவல் ஒன்றின் பகுதியைப் படிக்கிற மாதிரித்தான் இருந்தது. பின்னாட்களில் யாரோ படிக்கப்போகிறார்கள் என்ற முழுப் பிரக்ஞையுடன் எழுதப்பட்டது மாதிரி மொழி ஒழுங்கும், உரத்த தன்மையும், தர்க்கபூர்வமான சிந்தனையின் தடயமும் படிந்த எழுத்து.

இன்னொரு விஷயமும் தென்பட்டது, தன் பூர்விகத்தைப் பற்றிச் சொன்னபோதும், இதர விஷயங்களைப் பேசும்போதும் கோவர்த்தனத்திடம் நிலவிய லகுத்தன்மை இந்த எழுத்தில் இல்லை. இதுவரை சந்தித்த மற்றவர்கள் அவ்வப்போது சிரிக்கத்தான் செய்தார்கள். ஆனால், அவர்களிடம் உள்ளூற ஒரு இறுக்கம் இருந்தது. இவர் மட்டும்தான் தமது உள் ஆழத்திலும் லகுவாய் இருக்கிறார் என்று நினைத்தது முழுக்கச் சரி அல்ல. இந்த எழுத்தில் ஒருவித அடர்த்தி இருக்கிறது. அந்த நாட்களில் கோவர்த்தனத்துக்கு இருந்த குழப்பமும் நிம்மதிக் குறைவுமான மனநிலை துல்லியமாகப் பதிவாயிருக்கும் எழுத்து.

தொடர்ச்சியாக இல்லாமல், மனத்துக்குப் பட்ட தாளைப் புரட்டிப் படிக்க ஆரம்பித்தார் சந்தானம்:

...பண்ணாரியிலிருந்து திம்பம் வழியாக மைசூர் செல்லும் மார்க்கத்தில்...

✠

இடைமுகம்

நம்மோடெ ஆயிரம் வருசம், தேவகணங்களுக்கு ஒரு நிமிச காலமாம். அப்ப நம்மளோடெ ஆயிரக்கணக்கான மைலு அவங்களுக்கு எட்டிப் பாக்குற தூரம்னுதானே அர்த்தம்?...

27.1.2006 - வெள்ளிக்கிழமை - காலை 5.30 மணி

அதிகாலையிலேயே விழிப்புத் தட்டியது. இருக்கும் இடம் எது என்று நிதானப்படச் சில கணங்கள் ஆனது. 'நார்மெத்தையில் படுத்திருக்கிறோம்' என்பதை உணரும்போதே விடுதி அறையில் என்பதும் தெளிவாகிறது. முந்தின நாள் வந்து சேர்ந்த அறையும் தான் எந்தப்புறம் தலைவைத்துப் படுத்திருக்கிறோம் என்பதும் உள்ளூறக் காட்சியாகிறது...

கண் விழித்தார் சந்தானம். அதிகாலையின் வெளிச்சத்திலும், புற ஓசைகளிலும் ஒருவித சாந்தம் படர்ந்திருக்கிறது. அறை குளிர்ந்திருந்தது. கீழே, சாலையில் ஒரு ஆட்டோ போகிறது. அது வேகமாகச் செல்லவில்லை என்பது ஓசையிலேயே தெரிகிறது.

சாலையை வெறித்துக்கொண்டு நேற்று நள்ளிரவுவரை சுவரில் சாய்ந்திருந்த பக்கத்து அறைக்காரர் உடனடியாக சந்தானத்தின் நினைவில் வந்தார். எழுந்து ஜன்னலருகில் போனார். பகீரென்றது.

அதே கோலத்தில் அதே இடத்தில் நின்றிருந்தார் அந்த மனிதர். சராசரி உயரம். மாநிறம். ஒரு முடி பாக்கியில்லாமல் வெளுத்துவிட்ட தலை. அதே அளவு வெளுத்திருந்த அடர் மீசை. சலனமில்லாமல் நிலைகுத்தி நின்ற விழிகள். அவரைப் பார்க்கப்பார்க்க சந்தானத்துக்குப் பயமாக இருந்தது. பல்துலக்கத் திரும்பினார், அவசரமாக...

அந்த மனிதர் சும்மா நிற்கவில்லை. எதற்காகவோ காத்திருக்கிறார். வெகுமுக்கியமான விஷயம். இல்லாவிட்டால் இரவு முழுவதும் ஒருத்தரால் அப்படி நிற்க முடியாது... காரணத்தைத் தேடி, இலக்கில்லாமல் ஓரிரு கணங்கள் சந்தானத்தின் சிந்தனை ஊசலாடியது.

பற்பசையையும் ப்ரஷ்ஷையும் எடுத்துக்கொண்டு குளியலறைக்குள் நுழைந்தார். முகம் கழுவித் தோள்த்துண்டால் துடைத்தபடி வெளியேறியபோது மனம் சற்று நிதானப்பட்டிருந்தது. அறைக்கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தார். வராந்தா இன்னும் அதிகக் குளிர்ச்சியுடன் இருந்தது.

வராந்தாமுனையில் கீழிறங்கும் படிக்கட்டின் உச்சியில் ஒரு சிறுவன் வெளிப்பட்டான். கம்பிகளை வட்டவட்டமாகக் கோத்து இன்னொரு வட்டத்தைக் கைப்பிடியாக்கியிருந்த தூக்கை வலது கையில் பிடித்திருந்தான். நாலைந்து கண்ணாடித் தம்ளர்களில் தேநீர். சந்தானம் ஒன்றை எடுத்துக் கொண்டார். மற்றவரும் எடுத்துக்கொண்டார். தாம் நின்றிருந்த நிலையிலிருந்து அவர் மாறியதே ஒரு சங்கேதம்தான் என்று சந்தானத்துக்குப் பட்டது. அவரை நெருங்கினார்.

குட் மானிங் ஸார்.

குட் மாணிங்குங்க.

நைட்டு முழுக்க இப்பிடியேவா நிக்கிறீங்க?

இல்லையே. ஒரு மணிக்கெல்லாம் படுத்துட்டனே. இப்பத்தான் செத்தெ முன்னாடிதான் எந்திரிச்சேன்.

குரல் சற்றுக் கலங்கித்தான் இருந்தது. உறக்கமில்லாததன் விளைவு அல்ல. மனத்தின் கனம்தான் காரணம் என்று நினைத்துக்கொண்டார் சந்தானம்... தேநீரில் சர்க்கரையை அள்ளிப் போட்டிருக்கிறான்...

எதுக்காக இப்பிடிக் காத்திருக்கீங்கன்னு எங்கிட்டப் பகுந்துக்கலாமா நீங்க தப்பா எடுத்துக்கிறலேன்னா...

அட, இதெச் சொல்றதுலெ என்னாங்க இருக்கு? பாக்கப்போனா அது நீங்களாவேகூட இருக்கலாமோன்னு நேத்துத் தோணுச்சு எனக்கு.

சந்தானம் குழம்பினார். மற்றவர் இவர் முகத்தில் ஊன்றிய பார்வையைக் கொஞ்சமும் விலக்காமல் பதித்திருந்தார்.

நீங்க சொல்றது என்னான்னு புரியலே.

அவர் வறட்சியாகச் சிரித்தார். ஆட்கள் போய்க்கொண்டும் வந்து கொண்டும் இருந்த தெரு ஒரு நிமிடம் ஆளற்றுக் காலியானது. ஒரே நிமிடம்தான். வெறிச்சோடிய தெருவின் தனிமை பயமுறுத்தித் துரத்திய மாதிரி தடதடதடவென்று ஒரு மோட்டார் பைக் ஓடியது. தொடர்ந்து பாதசாரிகள் நாலைந்துபேர் காட்சிக்குள் வந்தார்கள். வெற்றுடம்பின்மேல் துண்டு போர்த்தியிருந்தார்கள். கோபுர வாசலை நோக்கிப் போனார்கள்.

எனக்குமே ஒண்ணும் புரியாமெத்தாங்க காத்திருக்கேன்... வாங்க உள்ளாறெ போயி உக்காருவம்.

என்றார் மற்றவர். காலித் தம்ளர்களை கைப்பிடிச் சுவர்மீது

வைத்துவிட்டு அறைக்குள் போனார்கள் இருவரும். சந்தானத்துக்கு நாற்காலியைச் சுட்டிக்காட்டிவிட்டு தாம் மெத்தையில் அமர்ந்து சுவரில் சாய்ந்துகொண்டார் அவர். சந்தானம் மௌனமாக அமர்ந்தார். உரத்துப் பெருமூச்சு விட்டார் மற்றவர்.

ஒங்க பேரென்னா சொன்னீங்க?

'இதுவரை சொல்லவில்லையே' என்று நினைத்துக்கொண்டவாறு,

சந்தானம்.

என்றார் இவர்.

அ வருடைய பெயர் கணபதி. மதுரை மாவட்டம் வத்தலக்குண்டைச் சேர்ந்தவர். சிறு அளவில் ஒரு ஜவுளிக்கடை நடத்திவருகிறார். எட்டு ஊழியர்கள் வேலை பார்க்கும் கடை. திருவண்ணாமலைக்கு வருவது இதுதான் முதல்தடவை. இல்லை, சாமி கும்பிட வரவில்லை. வேறு ஒரு காரியமாக வந்திருக்கிறார். இன்ன காரியம் என்று சொன்னால் மற்றவர்களுக்குப் புரியாது.

சந்தானத்துக்குமே புரியாதுதான். நேற்றிலிருந்து தனியாக இருந்து அந்தப் படபடப்பை அனுபவித்துக்கொண்டிருக்கிறார் இப்போது சந்தானம் கேட்பதால் சொல்கிறார்.

முன்பின் பார்த்தறியாத ஒருவரைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறார் கணபதி. பார்க்கவேண்டியவரின் புகைப்படத்தைகூடப் பார்த்ததில்லை இவர். அவர் அந்நிய நபரும் கிடையாது. கிட்டத்தட்ட இருபத்தைந்து வருடமாகப் பழக்கமுள்ள ஒருவர்தான். அவர் இவருடைய வீட்டுக்குப் பலமுறை வந்திருக்கிறார். கணபதியின் மனைவிக்குத் தகப்பனார் மாதிரி. இவர்கள் குடும்பத்துக்குக் கடவுள் மாதிரி. அந்தப் பெரியவர் இவருடைய வீட்டில் சாப்பிட்டிருக்கிறார், ராத் தங்கியிருக்கிறார். இவ்வளவு ஏன், ஒருதடவை பூஜைகூட நடத்தியிருக்கிறார்.

தற்செயலாகக்கூட ஒருவரையொருவர் சந்திக்க முடியாமல் போனது அவ்வளவு தற்செயலான விஷயமில்லை என்று இப்போது நினைக்கிறார் கணபதி. இந்தச் சந்தர்ப்பத்திலும்கூட, கணபதி பிடிவாதம் பிடித்ததால்தான் நேரில் சந்திக்க அவர் அனுமதி கொடுத்திருக்கிறார். இருபத்தைந்து வருடங்களாகத் தன் குடும்பத்தைப் பாதுகாத்து வரும் அபூர்வ மனிதரை நேரில் பார்த்து ஆசீர்வாதம் வாங்கிக்கொள்ள வேண்டும். இப்போது தவறவிட்டால் இனி எப்போதுமே அவரைப் பார்க்க முடியாமல் போய்விடும், அப்புறம் தன் வாழ்நாள் முழுவதும் ஏங்கியே மறுக வேண்டி வரும் என்பதால் கணபதி மிகமிக மன்றாடி

அனுமதி வாங்கியிருக்கிறார். வாஸ்தவத்தில் மன்றாடியது மட்டும்தான் கணபதி. அனுமதி வாங்கித் தந்தது இவருடைய மனைவி.

ம்ஹூம். அவருடைய இடத்தில் சென்று பார்க்க முடியாது. அவர் எந்த இடத்தில் இருப்பார் என்று யாருக்குமே தெரியாதே. இங்கே ஒரு மடம் இருக்கிறதாம். ஆனால், அதன் விலாசத்தைச் சொல்வதற்கு யாருக்குமே உத்தரவு கிடையாது.

இன்ன வேளை என்று எதுவும் இல்லை. கணபதி திருவண்ணாமலைக்கு வந்துவிட வேண்டியது. இன்றைக்கு வெள்ளிக்கிழமை அல்லவா. இன்றைக்கு கணபதியைப் பார்த்துவிடுவதாக அவர் சொல்லியிருக்கிறார். கணபதி தேடி அலையவேண்டியதில்லை. அவரே இவரைப் பார்ப்பார். எப்போது எப்படி என்றெல்லாம் ஒரு தகவலும் கைவசம் கிடையாது. அவரைப் பற்றித் தோராயமாக ஒரு வர்ணனை செய்துதான் அனுப்பியிருக்கிறார் கணபதியின் மனைவி. அந்த அடையாளங்கள் உள்ள இருபத்தேழு பேரை இதுவரை பார்த்துவிட்டார் கணபதி. எல்லாரும் சும்மா தாண்டிப் போகிறார்கள். அவ்வளவுதான். தவிர, அவரைப் பற்றி விரிவாகச் சொன்னால்தான் தெரியும், அவர் எந்த ரூபத்திலும் வரக்கூடியவர் என்று.

அ வரு ஒங்கள நேர்லெ பாத்துருக்காரா?

யாருக்குங்க தெரியும்...?

எதிர்புறம் திறந்திருந்த ஜன்னலுக்கு வெளியில் சதுரமாக வெட்டுப்பட்ட ஆகாயத்தை வெறித்தார். களங்கமற்ற அதிகாலை நீலம் விரவியிருந்த ஆகாயம்... கீழ்ப்பகுதி தரிக்கப்பட்ட முக்கோண வடிவத்தில் ஒரு பறவை வரிசை போகிறது. ஆகாயத்தின் சாந்தத்தைக் கொஞ்சம்கூடக் குலைக்காமல் கடந்து சென்று மறைகிறது.

...இன்னைக்கி என் சம்சாரம் உசிரோட இருக்கான்னா அது அந்த மகராசன் புண்ணியம்தான்.

ஏன் அவங்களுக்கு என்ன ஆச்சு?

அதையும்தான், சொன்னாக்க யாரும் நம்ப மாட்டாங்க...

கணபதி தலைகுனிந்திருந்தார். இடதுகைக் கட்டைவிரல் அர்த்தமில்லாமல் மெத்தைவிரிப்பை நீவிக் கொண்டிருந்தது. வசதியான மனிதர்தான் போல. இரண்டு கைகளிலும் மோதிரங்கள். கழுத்தில் கயிற்று வடம் பருமனில் சங்கிலி ஒன்று. மேஜைமீது கிடந்த தோல் பெட்டி. பக்கத்தில் சார்ஜ் போட்டிருந்த செல்ஃபோன். அதுவும் விலை

உயர்ந்ததாகத்தான் தென்பட்டது... கணபதி விசையுடன் நிமிர்ந்தார்.

...நல்லா விளைஞ்ச பொம்பளே, ஒரு எடத்துக்கு வாக்கப்பட்டு வந்தவ, காலையிலே எந்திரிச்சதும் பச்சைக் கொளந்தெ மாதிரித் தவள்ந்துதான் வீடுமுளுக்க நடமாடணும்ன்னா அது எம்புட்டுக் கொடுமெ. யோசிச்சுப் பாருங்க. நடுவிலெ கொஞ்ச நா, தவளவும் முடியாமெப் போச்சு. கக்கூஸ் போறதுன்னாக்கூடத் தூக்கித்தான் கொண்டுபோயி விடணும். அப்பறம் கொஞ்ச நாள்லெ, தொட்டுத் தூக்குனாலும் ஒடம்பு எரியுதுன்னு மொனக ஆரமிச்சா, இருந்த எடத்துலயேதான் சகலமும்னு ஆயிருச்சு. டாக்டர்க, வைத்தியர்க, ஜோசியக்காரர்க எல்லாருமே கையை ஒதறிட்டாங்க 'நம்மாலெ முடியாது'ன்னு. ஏதோ, எங்க ஆத்தா நல்லமனசுக்காரப் பொம்பளையா இருக்கக்கொண்டு சரியாப் போச்சு. அது கொஞ்சம் ஏறுமாறா இருந்துருந்தா என்னவெல்லாம் நடந்துருக்குமோ. யார் கண்டது?

இப்பொ ஒங்க ஒய்ஃப் சுகமாயிட்டாங்களா?

எம்புட்டோ தேவலே... நாம பிடிச்சுக்கிட்டா எம்புட்டுத் தூரம்ன்னாலும் பையப் பைய நடப்பா. ஆனா, கால் ரெம்பச் சோர்ந்துரும். மலையேறுன மாதிரி மூச்சுவாங்கும். ஆனா, மனசு உறுதி ரெம்ப சாஸ்தி. வெளியூரு எதுவும் போகணும்ன்னா விசுக்குன்னு கிளம்பீருவா. கூட்டிட்டுப்போற நமக்குத்தான் கொஞ்சம் சிரமம். அதுக்கு என்னா பண்றது? அவ மனசையும் யோசிக்கணுமால்லியா? கெடந்த எடத்துலெயே கெடக்குறதுன்னா கல்லு செடிகொடி இதுகளுக்கும் உசிர்ப்பிராணிக்கும் அப்பறம் என்னாங்க வித்தியாசம் இருக்கும்?

அந்தக் கஷ்டத்திலேயிருந்து இவர்தான் காப்பாத்தினாராக்கும்?

அப்பிடியும் நேரடியாகச் சொல்றதுக்கில்லேங்க. அவர் தலையிட்டு இந்த வேலையெச் செய்தாருன்னு சொல்றமாதிரி வெளிப்படையாத் தடயம் ஒண்ணும் கெடையாது. ஆனா, அவராலெதான் இதெல்லாம் நடந்துச்சுங்குறதுலே எங்களுக்குச் சந்தேகமும் கெடையாது.

நீங்க சொல்றது புரியலையே.

இப்ப, நேத்துலேர்ந்து தனியாத்தான் உக்காந்து ஏங்கிக்கிட்டிருக்கேன். நீங்க வந்து பேச்சுக் குடுத்தீங்க. நெஞ்சுலெ கனம் கொறையிற மாதிரி ஒரு நெனெப்பு. இப்பிடி ஆகுறதுக்குன்னு நீங்க மெனக்கிட்டு ஏதாச்சும் செஞ்சீங்களா? இல்லேல்ல? நாளைக்கி ஊருக்குப்போயி எஞ் சம்சாரத்துக்கிட்டெச் சொல்லும்போது நான் என்னா சொல்லுவேன்? 'இன்ன மாதிரி, இன்னாரு வந்தாரு,

அவருகிட்டெப் பேசிக்கிட்டிருந்ததாலே நான் கொஞ்சம் சுமுகமானேன்’னு சொல்லுவனா இல்லியா? அதுமாதிரித்தான்.

சந்தானத்துக்கு அவர் சொல்வது புரிகிற மாதிரியும் இருந்தது. முழுக்கப் புரியாதமாதிரியும் ஒரு குழப்பம்.

எதிரில் உட்கார்ந்திருக்கும் மனிதரின் சித்தசுவாதீனத்தைச் சந்தேகப்படுகிற மாதிரியும் எதுவும் தென்படவில்லை. கிட்டத்தட்ட எட்டு மணிநேரம் நின்றிருந்த மனிதர். இதுவரை சொன்னதைவிடவும் ஆழமான காரணம் ஏதாவது இருக்கத்தான் செய்யும். ‘அவராகச் சொல்லட்டும்’ என்கிற மாதிரி அமைதியாக இருந்தார் சந்தானம்.

...விளக்கமாவே சொல்லுறனே. பெரியவரை மொதோத் தடவை எஞ் சம்சாரம் பாக்கக் கிடைச்சதே விநோதம்தான். ஒரு நா விடியக் கருக்கல்லே எங்க ஆத்தா திடீர்ன்னு சொல்லுது, ‘கணவதி, என்னெயத் தேனிக்கி பஸ்ஸேத்தி விடுறா. எம் மக வூட்டுலெ பத்துநா இருந்துட்டு வாறேன். நேத்து ரவெ முளுக்க ஒறக்கமேயில்லே. திருஞானம் யாவுகமாவே இருந்துச்சு’. திருஞானம்ங்குறது எங்க ஆத்தாவோடெ சொந்தத் தம்பி. அவருக்குத்தான் என் மூத்த தங்கச்சியெக் கட்டிக் குடுத்தது. இதுவானா, நேத்துவரைக்கி பேதியாயி, பாயிலெ படுத்துக் கெடந்த பொம்பளெ. எப்பிடி எந்திரிச்சுச்சு. எப்பிடி இந்த மாதிரி ஒரு தெம்பு வந்துச்சு. எதுக்குத் தனியாப் பஸ்ஸேர்றேங்குது? எனக்கு ஒண்ணும் புரியலே. வளக்கமா, தேவதானப்பட்டி காமாச்சியம்மன் கோயிலுக்குக்கூடத் தனியா போயி அறியாத பொம்பளெ இவ. தங்கத்துக்கு, அதான் என் சம்சாரத்துக்கு, நேத்துலெருந்து ரெம்ப முடியாமெக் கெடக்கா. ‘ஏத்தா, ரெண்டு நாப் போகட்டுமே. நானே கொண்டி விடுறனே’. ம்ஹூம். பிடிச்ச புடியா நிக்கிது கெளவி. பஸ் ஸ்டாண்டு வாசல்லெ ஜட்காலெ போயி எறங்கறோம், ஈரோடு வண்டி எங்களைத் தாண்டி உள்ளாறே போகுது. நிக்கிற பஸ்ஸுலேருந்து சுத்தானந்தம் எறங்கி வாராரு, சிரிச்சுக்கிட்டே.

அவரு யாரு, சுத்தானந்தம்?

நம்ம சிநேகிதருதான். ஈரோட்டுக்காரரு. தொளிலதிபரு. அவரு மூலியமாத்தான் பெரியவருகிட்டெ நாங்க போயிச் சேந்ததே. சுத்தம் எங்க வீட்டுக்கு வர்றது புதிசில்லே. முன்னமே நாலஞ்சு வாட்டி வந்திருக்காரு. ஆனா, போன் பண்ணாமே வரமாட்டாரு. ‘இப்பிடிச் சடார்ன்னு வந்து எறங்குறாரே’ன்னு யோசிக்கிறதெப் புரிஞ்சிக்கிட்ட மாதிரி, ‘ஒங்களெப் பாக்கணும்னு தோணுச்சு, மறு நிமிசமே பொறப்புட்டுட்டேன். ‘நேத்துலேருந்து ஒங்க வீட்டு போனு ஒர்க்

பண்ணலையா. ரிங் போச்சு, யாரும் எடுக்கலையே'ங்குறாரு. இதென்னய்யா ஆச்சரியம், இப்பத்தானே எந் தங்கச்சிக்கி போனெப் போட்டுச் சொல்லீட்டு வர்றேன். 'இந்த மாதிரி, ஆத்தாளெ ஏத்தி வுடுறேன். பஸ்ஸ்டாண்டுக்கு ஆளனுப்பி பிக்கப் பண்ணிக்க'ன்னு? யோசிக்கிறேன். ஒண்ணும் பிடிபடலே. 'போகுது விடுங்க. பயணம் பண்ணி வந்த ஆளு, நீங்க வீட்டுலே போயி இருங்க, நான் இந்தா பின்னாடியே வந்துர்றேன்'னு அவரெ அனுப்பிச்சேன். கால் மணிநேரம் காத்திருந்தா தேனிக்கி பஸ்ஸு கெடைச்சுரும் பாத்துக்கங்க. அன்னைக்கு, ரெண்டு மணி நேரம் காத்துக் கெடக்கோம். பஸ்ஸே வரல்லே. வீட்டுக்கு போன் போட்டா, சுத்தம் சொன்ன மாதிரியேதான். தாக்கல் சொல்லிவிடுறதுக்கும் தெரிஞ்ச மூஞ்சி எதுவும் தட்டுப்பட மாட்டேங்குது. 'சரி, வாத்தா. நாமளும் வீடு திரும்புவோம். விருந்தாளி வேற வந்து காத்துருக்காரு. நாளைக்கி இதே நேரம் ஒன்னெ பஸ்ஸேத்திவிடுறேன்'ன்னு சொன்னா, 'அதெல்லாம் கெ¬டையாது. முன்னெ வச்ச காலெப் பின்னெ வைக்க மாட்டேன்'ன்னு அடம் புடிக்கிது எங்காத்தா. அதுலெயும் ஒரு சூச்சமம் பாருங்க. இது போயி அங்கெ எறங்குது. அடுத்த ஒண்ணாவது மணி நேரத்திலெ எந் தங்கச்சி வீட்டுக்காரரு தவறிப்போறாரு. அவருதான், எங் கடேசித் தாய்மாமன். 'கணபதிப் பய சம்சாரம் சீக்காளியாயிட்டா. இவனுக்கு வேற பொம்பளையெக் கட்டி வச்சிற வேண்டியதுதான்'னு அக்காக்காரிகிட்டெத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கிட்டிருந்த மனுசன். சாயங்காலம் காப்பி குடிக்கிம்போது, நெஞ்செப் பிடிச்சாராம். ரெண்டாவது மடக்கு எறங்குறதுக்குள்ளெ பிராணன் போயிருச்சு...

நீண்ட பெருமூச்சு விட்டார் கணபதி. அவர் சொன்ன கதையின் சுவாரசியம் சற்றுக் குறைந்துவிட்ட மாதிரி உணர்ந்தார் சந்தானம். தவிர, கணபதி சொல்லும் கதையில் பாத்திரங்கள் வரும் வேகமும், பூர்வோத்திரம் எதுவும் தெரியாமல் வெறும் பெயராக அவர்கள் நுழையும் விதமும், எந்தப் பெயருக்கு எந்தப் பிராயத்து உடம்பை அனுமானித்துக் கொள்வது என்ற சிக்கலும் ஒருவிதமாக மூச்சுத் திணறச் செய்தன.

எழுந்திருந்து குளிக்கப் போவதற்கான இடைவெளி வந்துவிட்ட மாதிரிப்பட்டது. முகூர்த்தம் முடிவதற்குள்ளேயாவது கல்யாண மண்டபத்துக்குப் போய்ச்சேர வேண்டாமா? இன்னும் ஓரிரு கணங்கள் இந்த இடைவெளி நீண்டால் எழுந்துவிடலாம்... கணபதி தொடர்ந்தார்.

...காக்கா ஒக்காந்துச்சு. பனம்பளம் விளுந்துச்சுன்னுதானே யாருக்கும் தோணும். என்னோடெ வாள்க்கையிலே விளுந்த

பனம்பளத்துக்குக் கணக்கேயில்லேங்க.

ஓ.

ஆத்தாவெ ஏத்திவிட்டுட்டு வீடு திரும்புறேன். வாசக்கதவை எஞ் சம்சாரம் சிரிச்சுக்கிட்டே வந்து தெறந்துவிடுறா. எனக்குத் தூக்கிவாரிப் போட்டுச்சு. நாம் போகும்போது சுருண்டு கெடந்த பொம்பளே. வாசலுக்கு நேரே ஜமக்காளத்துலே ஒக்காந்துருக்குற சுத்தானந்தம் சிரிக்கிறாரு. ரெண்டுபேருமா மாறி மாறிக் கதெ சொல்லுறாங்க. அப்பறம்தான் தெரிய வருது, அவரு எங்க தெருமுக்குலெ திரும்புறாராம், அவருக்காகக் காத்திருந்த மாதிரிப் பெரியவரு நின்னுக்கிட்டிருந்திருக்காரு...

சந்தானம் மறுபடி குழம்பினார். அவர்கள் இருவரும் தற்செயலாகக்கூட சந்தித்திருக்கலாம். யாரோ இரண்டு பேர் சந்தித்துக்கொள்வதில் இவ்வளவு ஆச்சரியம் கொள்வதற்கு என்ன இருக்கிறது?

...ரெண்டுபேருமா வீட்டுக்குப் போயிருக்காங்க. அப்ப சமையல் ஒத்தாசைக்கி இருந்த சுசீலா ஜமக்காளத்தெ எடுத்துப் போட்டுருக்கா. ஒக்காந்தாங்களாம். படுத்துக் கெடந்த எஞ் சம்சாரம் எந்திரிச்சு ஒக்காந்திருக்கா. பெரியவரு கால்லெ விளுந்து கும்புணுடம்னு இவ நினைக்கிறாளாம். கால் தானா எளும்புது. சொல்லிச் சொல்லி மாளலே இவளுக்கு. பெரியவரு இவ கையெப் பிடிச்சு நாடி பாத்துருக்காரு. அதுக்கப்பறமே அவ படுற கஸ்டமெல்லாம் கொறெஞ்சு போச்சு. மறு வருசம் எம் மகளெ உண்டாயிட்டாளே...

அற்புதம் போன்ற எதுவோ நிகழ்வதற்காகக் காத்திருந்த சந்தானம் ஏமாற்றத்தை விழுங்கிக்கொள்ள சிரமப்பட்டார். கணபதி, தம்முடைய வாழ்க்கையில் நிகழ்ந்த ஏதோ ஒரு விஷயம் சம்பந்தமாய் ஒருவித பிரமிப்பில் இருக்கிறார். அதே பிரமிப்பைத் தனக்குள்ளும் விளைவிக்க முயற்சிக்கிறார். பின்னணி அனுபவம் எதுவும் இல்லாமல் ஒருத்தரால் பிரமிக்க முடியுமா என்ன...?

சந்தானத்துக்கு இருப்புக்கொள்ளவில்லை. எச்சிலைக் கூட்டி விழுங்கினார். தயங்கிய குரலில் கணபதியிடம் சொன்னார்:

நான் இங்கெ ஒரு கல்யாணத்துக்காக வந்திருக்கேன். ஏழரை மணி முகூர்த்தம். இப்பொப் பொறப்புட்டா சரியா இருக்கும். நீங்க இங்கேயேதானே இருப்பீங்க? நான் ஒரு மணிக்கெல்லாம் திரும்பிருவேன். நைட்டுத்தான் மதுரைக்கித் திரும்புறதா இருக்கேன்...

கணபதியின் முகம் கூம்பியது. பார்வை கவிழ்ந்தது. மெத்தை விரிப்பைக்

கைவிரல் வேகமாக நீவியது. அவருடைய பதிலுக்காகக் காத்திருந்தார் சந்தானம். கணபதி முகத்தை உயர்த்தினார்.

நீங்க தப்பா எடுத்துக்கிறலேன்னா...

சொல்லுங்க ஸார். சும்மாச் சொல்லுங்க.

இல்லே. ஒங்ககூடப் பேசிக்கிட்டிருந்ததுலெ படபடப்பு கொஞ்சம் கொறைஞ்சிருக்கு. நாம சந்திச்சதுலகூட ஏதோ விசயம் ஒளிஞ்சிருக்கோன்னு தோணுது. ஒங்களுக்கு ஆட்சேபணையில்லேன்னா...

அட, சொல்லுங்க.

ஒங்ககூட நானும் வரட்டுமா?

தாராளமா வாங்க. என்னோடெ நெருங்கின சிநேகிதர் மகளுக்குத்தான் கல்யாணம். அப்ப நான் குளிச்சு ரெடியாறேன். நீங்களும் ரெடியாயிர்றீங்களா? மணி என்ன, ஆறரை ஆகுது. ஏழு மணிக்கி எறங்கிருவமா?

ரொம்பத் தாங்ஸுங்க ஸார்.

கணபதி தலையாட்டியவாறு எழுந்தார். சந்தானத்தின் கையை இறுகப் பற்றினார். குளிர்ந்திருந்த காலை வேளையிலும்கூட கணபதியின் உள்ளங்கை அவ்வளவு வியர்த்திருந்தது சந்தானத்துக்கு ஆச்சரியமாய் இருந்தது.

கு ளியலறைக் குழாயில் காற்றுத்தான் வந்தது. துண்டை எடுத்துப் போர்த்திக்கொண்டு கீழ்த் தளத்தில், வரவேற்பில் இருந்த இளைஞனை விசாரிக்கப் போனார் சந்தானம். மோட்டார் ரிப்பேராம். சரிசெய்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் அரைமணிநேரத்தில் தண்ணீர் ஏற்றத் தொடங்கலாம். அதற்கடுத்த கால் மணிநேரத்தில் அறையில் தண்ணீர் வந்துவிடும்.

திரும்ப மாடியேறும்போது மலையேறுகிற மாதிரிச் சோர்வாக இருந்தது சந்தானத்துக்கு. உடம்பு திடீரென்று கனத்துவிட்டமாதிரி. பல் தேய்க்கும்போதே குளித்திருந்தால் நேரத்துக்குப் போய்ச் சேர்ந்திருக்கலாம். சித்ரா பலமுறை எச்சரித்திருக்கிறாள் பேச்சில் இறங்கிவிட்டால் கவனம் பிசகிவிடுகிறது உங்களுக்கு. நேரத்தை நிர்வாகம் செய்யத் தவறிவிடுகிறீர்கள்... அவள் சொல்வது சரிதான். ஆனால், என் தொழிலுக்கே பேச்சுத்தானே மூலதனம்?

வராந்தாவின் கைப்பிடிச்சுவரில் பழைய இடத்தில் பழைய மாதிரியே நின்றிருந்தார் கணபதி. தன் அறைக்குள் நுழைந்த சந்தானம் காற்றாடியைச் சுழலவிட்டார். ஜன்னல்வழியாகத் தெரிந்த கணபதியின் முகத்தைப் பார்க்கச் சங்கடமாக இருந்தது. தனிமையும் எதிர்பார்ப்பும் துக்கமாகப் பெருகி வழிந்த முகம்.

உள்ளே வாங்களேன் ஸார்.

என்று அழைத்தார். உடனடியாக வந்துவிட்டார் கணபதி.

...இன்னும் முக்கா மணிநேரம் ஆகும்போலருக்கே. அதுவரைக்கும் பேசிக்கிட்டாவது இருக்கலாம்.

நானும் அப்பிடித்தான் நினைச்சேன். ஒங்களுக்குத் தொந்தரவா இருந்துறக் கூடாதென்னுதான்...

சேச்சே, அதெல்லாம் ஒண்ணுமில்லே.

எ ன்னமோ பேசிக்கிட்டிருந்தோம்...

விட்ட இடத்தை நினைவுகூர முயல்கிற மாதிரி நெற்றிப்பொட்டைச் சுட்டுவிரலால் தட்டிக்கொண்டார் கணபதி. உண்மையில், சந்தானத்துக்குமே மறந்துதான் போயிருந்தது. மிஞ்சிப் போனால் பத்துநிமிஷம் இருக்கும். எவ்வளவோ காலத்துக்கு முன்னால் பேசி நிறுத்தினமாதிரி உணர்வு. ஆரம்பத்தில் கேட்ட அளவு ஆர்வத்துடன் கடைசிவரை கேட்காததுதான் காரணமோ?

...விடுங்க. பெரியவர் சொன்னாருன்னு ஏகப்பட்ட கோயில்களுக்குப் போயிருக்கோம். அவரு சொல்றதெல்லாம் நமக்கு சிரமமேயில்லாத பரிகாரங்களெப் போலத்தான் இருக்கும். பளனிக்கிப் போயி போகர் சந்நிதியிலே ஒரு முகூர்த்தகாலம் ஒக்காந்து எந்திரிச்சு வாங்க. சங்கரங்கோவிலுக்குப் போயிட்டு வாங்க. காளஹஸ்தியிலே ஒரு ராத்திரி போயித் தங்குங்க, இன்ன கோயிலுக்குப் போயி பதினோரு சுத்து பிரதச்சணம் செய்துட்டு வாங்க ங்கிற மாதிரி. ஆனா, செய்யணும்னு எறங்கீட்டா, லேசிலெ செய்யவிடாது, நமக்கு வந்திருக்கிற வினெ அம்புட்டுப் பலமானதாம்.

ம்.

இப்பிடித்தான், மாவூத்து வேலப்பர் கோயிலுக்குப் போயிட்டு வாங்கன்னு ஒரு உத்தரவு.

அவரெ நீங்க பாத்ததே கிடையாது. வீட்டுக்கும் அதிகத் தடவை

வந்ததில்லேங்கிறீங்க? அப்பறம் எப்பிடி இந்த மாதிரி உத்தரவெல்லாம் வந்துசேரும்?

அது இன்னோரு ஆச்சரியம். பெரியவரெப் பாக்குறதுக்கு முந்தின வருசமே வீட்டுலெ ஃபோனு வச்சிட்டமால்லியா? திடீர்னு போனு வரும். 'இன்ன இடத்துக்குப் போயிட்டு வாங்க'ன்னு. காலையிலே எதாவது நடந்து மனசு ரெம்பக் கலங்கியிருப்போம். அடுத்த ஒண்ணாவது மணிநேரத்திலே போன்லெ ஆறுதல் வரும்... நமக்கு மனசு லேசாயிரும். ஆச்சரியம் மட்டும் அடங்கவே செய்யாது. அதாவது, நாம நெனைச்சப்போ அவரெக் கூப்பிட முடியாது. ஆனா, நமக்கு எப்பத் தேவையோ அப்ப ஆட்டோமேட்டிக்கா அவரு கூப்பிட்டுருவாரு...

ம்.

ஒரு தபா, ஒரு வாரம்போல வெளியூர் போயிட்டு வீடு திரும்புறோம். சாயங்காலம் ஆறுமணி இருக்கும். பூட்டுன வீட்டெத் தொறந்து உள்ளெ நொளையிறோம். நடு வீட்டுலெ, நம்ம கண்ணுலெ படுற மாதிரி, ஒரு பாம்புச் சட்டெ கெடக்கு.

என்னது?

பாம்புச் சட்டெ. துளி அளுக்கு இல்லாம, பெட்றோமாக்ஸ் மாண்டிலு மாதிரி அவ்வளவு புதூசா. ஒரு பாகம் நீளம் இருக்கும். நாங்க அரண்டுபோனோம். வீட்டுக்குள்ள பாம்பு இருக்குன்னு தெரிஞ்சதுக்கப்பறம் என்னான்னு படுத்துக் தூங்குவீங்க.

பின்னே?

'இந்த சணமே வெளியே போனாத்தான் ஆச்சு. யார் வீட்டுக்காவது போயிறலாம்'ங்குறா தங்கம். நான் 'அதெல்லாம் முடியாது, நடு ராத்திரியிலே ஒனக்கு ஒடம்பு படுத்தீருச்சுன்னா ஊரு பூராத் தெரிஞ்சு பெரிய சங்கடமாப் போகும். அதுக்கு பஸ்ஸ்டாண்டுப் பக்கமா ஏதாச்சும் ஓட்டல்லெ போயித் தங்கீறலாம். விடியக் கருக்கல்லே யாராச்சும் பாம்பாட்டியெத் தேடிப் பிடிச்சு கூட்டியாறலாம்'னு சொல்லிக்கிட்டேயிருக்கேன்... போனு வருது. யாருங்கிறீங்க...?

சந்தானம் நிமிர்ந்து உட்கார்ந்தார். கணபதியின் முகத்தில் இதுவரை இருந்த இறுக்கம் தளர்ந்து நெகிழ்வாகிறது. கவலையின் சுருக்கங்கள் நீங்கிய நெற்றி முன்பிருந்ததைவிட அகலமானதாகத் தோன்றுகிறது.

...சுத்தானந்தம். உபசாரமா ரெண்டு வார்த்தெ பேசிட்டு, 'ஒரு நிமிசம். அண்ணிகிட்டெக் குடுங்க'ங்குறாரு. வாங்கி ரெண்டு வார்த்தெ

பேசுறா, இவ மொகம் மலர்ந்து போச்சு. மறுமொனையிலே பேசுனவரு பெரியவரேதான். ரெண்டு மூணு நிமிசம் பேசுனாங்க. பெறகு சுத்தானந்தம் போனெ வாங்குனாரு போலருக்கு. நாலைஞ்சு வார்த்தெ பேசிட்டு வச்சிட்டாங்க. இவ தீர்மானமாச் சொல்லுறா. 'எங்கெயும் போகவேணாம். வளக்கம்போல நம்ம வீட்டுலெயே ஒறங்குவோம்.'

பெரியவரு என்ன சொன்னாராம்?

இருங்க வர்றேன். முக்கியமான விசயத்தெ விட்டுட்டேன். இந்தப் பாம்புச் சட்டையேப் பாத்ததோட மெரண்டு நின்னமா, எங்க வீட்டுக் கொல்லெப்புறக் கதவு தெறந்து கெடக்குறதெக் கவனிக்கலே. போனு வந்ததுக்கப்பறம்தான் பாக்குறோம். ஆஹா... இப்பச் சொல்லும்போதும் கைமயிரெல்லாம் நட்டமா நிக்கிது போங்க...

கணபதியின் கண்கள் சற்று ஈரப்பதம் கொண்ட மாதிரித் தென்பட்டன. காது மடல்கள் கனிந்து சிவந்திருந்தன. கண்களை இரண்டு மூன்று தடவை வேகமாக இமைத்தார்.

...போன்லெ பெரியவரு புட்டுப்புட்டு வைக்கிறாராம். நம்ம சாலாச்சியம்மன் கோயில் மதிலுக்கு வெள்ளையும் காவியும் அடிக்கிற வேலெ நாலைஞ்சு நாளா நடக்குது. அதுலெ ரெண்டு பயக நம்ம வீடு நாள்க் கணக்காப் பூட்டிக் கெடக்குறதெப் பாத்து நோங்கீட்டான். கொல்லெக் கதவெத் திறந்தவன்க பறந்தடிச்சு ஓடீட்டானுக போலருக்கு. வச்ச சாமான் வச்சபடி இருக்கு வீட்டுல. பெரியவரு இவகிட்டேக் கேக்குறாராம், 'காவக்காரனெப் பாத்து நீங்க பயப்புடலாமா தங்கம்? கள்ளனெப் பயமுறுத்துறதுக்காக வந்தவன் இல்லையா அவன்?'னு கேட்டுப்புட்டுச் சிரிச்சாராம்.

சந்தானமும் புன்னகைத்தார். காலையில் வந்த சிறுவன் அறைக்கு வெளியில் நடந்துபோவது தெரிந்தது. அவசரமாக எழுந்து வெளியில் பார்த்தார்.

...டே தம்பீ. இங்கெ வா. ஸார், ஒங்களுக்கும் டீ சொல்லட்டுமா?

குடிப்பமே...

என்றவாறு எழுந்த கணபதி தோல்பெட்டியைத் திறந்து மணிப்பர்ஸை எடுத்தார். பையனிடம் தானே காசு கொடுத்தனுப்பினார்.

சரி, காவலுக்கு வந்த பாம்பு சட்டையை எதுக்காக உரிச்சுப் போடணும்?

அளகாக் கேட்டீங்க. இவ கேக்குறக்கு முன்னாடியே பெரியவர்

சொல்லீட்டாராம். காவலுக்கு ஆள் இருக்குன்னு எங்களுக்குத் தெரிய வேணாமா? அதுக்கோசரம், காவக்காரன் வந்த இடத்திலேயே நின்னுக்கிட்டிருந்தான்னா மாரடைச்சுருக்காதா எங்களுக்கு...?

கணபதி புன்னகைத்தார்.

...ஆனா, அன்னைக்கி ராத்திரி நாங்க தூங்கவேயில்லே. பேசிக்கிட்டெ கெடந்தோம். எங்கேயோ ஈரோட்டுப் பக்கம் ஒக்காந்துருக்குற ஒருத்தருக்கு இங்கே வத்தலக்குண்டுலே இருக்குற நம்ம வீடு உள்ளங்கை மாதிரி தெரியுதுன்னா, அதெ என்னான்னு புரிஞ்சுக்கிர்றது? எங்க ஆத்தா ஒரு கணக்குச் சொல்லும். நம்மோடெ ஆயிரம் வருசம், தேவகணங்களுக்கு ஒரு நிமிச காலமாம். அப்ப நம்மளோடெ ஆயிரக்கணக்கான மைலு அவங்களுக்கு எட்டிப் பாக்குற தூரம்னுதானே அர்த்தம்...? தெகைச்சுப் போனோம் நாங்க. ஏதோ, எங்களாலெ முடிஞ்சது. அந்தப் பாம்புச்சட்டையை ஒடனடியா எடுத்துப் பூசை ரூம்பிலே வச்சிட்டம். இன்னெவரைக்கும் புதுக் கருக்கு அளியாமெ அப்பிடியே இருக்கு அது... யாரோ நம்மளெப் பத்திரமாப் பாத்துக்கிறாங்கங்குற நெனைப்பே பெரிய ஆறுதல்தானே. என்னா சொல்றீங்க?

பையன் தேநீர் கொண்டுவந்தான். கூடவே, விடுதியின் வரவேற்பு மேஜையில் இருந்த இளைஞனும் வந்தான். அவன் முகத்தில் சுரத்து இல்லை.

ஸாரி ஸார். மோட்டாரைக் களத்திக் கொண்டுபோயித்தான் பாக்கணுமாம். தண்ணி லாரிக்குச் சொல்லீட்டேன். இன்னம் அரைமணி நேரத்துலெ கொண்ணாந்துர்றேன்னிருக்கான்...

சரி விடுங்க, நீங்க என்னா செய்வீங்க பாவம்...

என்றார் கணபதி. அவன் அடுத்த அறைக்குத் தகவல் சொல்ல நகர்ந்தான். முதல் தேநீர் அளவு ருசியாக இல்லை இப்போது வந்தது. கொடுத்துவிட்டு ஓடிய பையனைத் திரும்பக் கூப்பிடுவோமா என்று யோசித்தார் சந்தானம். 'சரி விடு, இவன் என்ன செய்வான், பாவம்' என்று ஒரு வாக்கியம் தானாக ஓடியது. உள்ளூறச் சிரித்துக்கொண்டார்.

...நீங்க முகூர்த்தத்துக்குள்ளே போகணும்ன்னீங்களே?

அதான் மணி ஏழரை ஆயாச்சே? இனிமே எப்பப் போனாலும் ஒண்ணுதான். நீங்க சொல்லுங்க. ஏதோ கோயிலுக்குப் போனதைப் பத்திச் சொல்லிக்கிட்டிருந்தீங்க.

இப்பிடித்தான் பேசப் பேச வளந்துருது. எந்தக் கோயிலுக்குப் போனதெச் சொல்ல ஆரமிச்சேன்னு நெனைவில்லையே...

ஏதோ வேலப்பர் கோயில்ன்னீங்க.

ஆங். மாவூத்து வேலப்பர் கோயில். ஆண்டிபட்டிக்கி அங்கிட்டு ஆறேளு கிலோமீட்டர் தூரத்திலே இருக்கு. அங்கே இவளெக் கூட்டீட்டுப் போகச் சொல்லி இவளுக்கு உத்தரவு வந்துருச்சு. நாங்களும் கிளம்பிப் போயிட்டம். சின்ன மலைதான். நம்ம திருப்பரங்குண்டம் சைஸு இருக்கும். நூத்திச்சொச்சம் படிக. அதெ ஏறிப் போயி தரிசனம் பண்ணுறதுக்குள்ளெ இவ உண்டு இல்லேன்னு ஆயிட்டா.

ஏன், என்னாச்சு?

இவளுக்குத் தரையிலே நடக்குறதே முடியாத விசயமாயிருந்த சமயமில்லையா அது? படியேற ஆரமிக்கும்போதே கால் பின்னல் போடுது. நான் கைத்தாங்கலாப் பிடிச்சு ஏத்திட்டுப் போறேன். முக்காத் திட்டம் ஏறியிருப்பம். திடீர்ன்னு கால் பெரண்டுருச்சு. எனக்கும் பேலன்ஸ் தவறீருச்சு. என் கையிலேர்ந்து நளுவீட்டா. அந்த ஒரு சணத்திலே என் உசிரே போச்சு. அம்புட்டுத்தான் கபால மோச்சம்தான்னு மின்னல்மாதிரி நெனைப்பு ஓடுது. 'தங்கோ...ம்'னு வாய்விட்டு அலறீட்டென். அப்பத்தாங்க அந்த ஆச்சரியம் நடந்துச்சு...

சந்தானத்தின் முகத்தை உற்றுப் பார்த்தார் கணபதி. தான் சொல்லும் சம்பவத்தின்மீது இந்த ஆளுக்கு முழு நம்பிக்கை இருக்கிறதா என்று பார்க்கிறவர் மாதிரி. சந்தானம் இருக்கையின் சாய்மானத்திலிருந்து விலகி நெட்டுக்குத்தாக நிமிர்ந்திருந்தார்.

...மல்லாந்து விளுறவ மாதிரி, இந்தா... இப்பிடி, செவுத்திலெ சாத்தி வச்ச பலகா மாதிரிச் சாஞ்சிருக்கா. ரெண்டு பாதமும் படியோடெ மொகனையிலே இப்பிடிச் சரிஞ்சிருக்கு. ஆனா, விளலே. வருசக்கணக்கா அதே போஸ்லெ சும்மா நின்னுட்டிருக்கிறவளாட்டம் மொகம் சாவகாசமா இருக்கு. விளுந்து உருளப் போறோம்ங்குற பீதியே இல்லே மொகத்திலே.

ம்.

அப்பறம் நான் சுதாரிச்சு இவளெ மறுபடி தாங்குனேன். இவ 'தண்ணி வேணும்'னு கேக்குறா. ஜனங்கள்லே பலபேரு கீளேருந்து தண்ணிக்கொடம் கொண்டு போயிக்கிட்டுருக்காங்க. எல்லாம் அபிசேகத்துக்குக் கொண்டு போறாங்க. குடிக்கிறதுக்கு வேணும்னு அவங்ககிட்டெக் கேக்க முடியுமா? திரும்பி எறங்கி வாறதெல்லாம்

காலிக் கொடம்.

நீங்க தண்ணி பாட்டில் ஒண்ணும் எடுத்துட்டுப் போகலியா?

வளக்கமாக் கொண்டு போறதுதான். சரி, இதென்னா கால் மணிநேரம் ஏற, கால்மணி நேரம் எறங்க. உச்சிலே தண்ணி வசதி இல்லாமலா இருக்கும்? இதெப் போயி என்னாத்துக்கு சொமந்துக்கிட்டுன்னு நெனைச்சிட்டோம். இதெக் கேளுங்க. இவ தண்ணி குடிச்சாலே ஆச்சுன்னு அல்லாடுறாளா? அம்புட்டுக் கூட்டத்திலே மேலேயிருந்து ஒருத்தர் தண்ணிக்கொடத்தோட எறங்குறாரு. ஒரு ஆள் குடிக்கத் தக்கன தண்ணியிருக்கு அதுலே...

வாழ்நாள் முழுவதையும் தற்செயல்கள் வழியாகவே கழித்து வந்திருக்கும் நபராகத் தென்பட்டார் கணபதி. இன்று சந்தானத்தைச் சந்தித்ததுகூடத் தற்செயல்தானே. விஸ்வநாதனின் பெண்ணுக்கு ஒருவாரம் முந்தியோ பிந்தியோ கல்யாணம் என்றால் இருவரும் சந்தித்திருக்க முடியுமா. கணபதியின் குரல் தொடர்ந்தது.

...இதெல்லாம் கூட யாருக்குமே நடக்கக் கூடியதுதாங்க. ஆச்சரியம் வேறெ எடத்துலெ இருக்கு.

சொல்லுங்க.

சொஞ்சம் நிதானப்பட்ட பெறகு தங்கத்துட்டெக் கேட்டேன். 'அது எப்பிடித்தா, மல்லாந்து நின்னே?' அவ என்னா சொன்னாங்கிறீங்க?

ம்.

சிலம்பக் கம்பு மாதிரி ஒண்ணு முட்டுக்குடுத்துத் தாங்குச்சாம் அவளெ. 'எங் கண்ணுக்கு அப்பிடியொண்ணும் தட்டுப்படலேயேத்தா'ன்னேன். 'இந்தா பாருங்க, இந்த எடத்துலெதான் அது ஊணுச்சு'ன்னு தொட்டுக் காட்டுறா. ரவிக்கெ விளிம்புக்குக் கொஞ்சம் கீளே நடு முதுகுலெ ஏதோ அளுத்தின மாதிரிச் செவப்பாத் தடம் பதிஞ்சிருந்துச்சு. எனக்கானா ஆச்சரியம் தாங்கலே. விபரீதமா ஏதோ நடக்குது போலருக்கே...ன்னு பயமாவும் இருக்கு. உச்சிக்குப் போனதுக்கப்பறம்தான் 'நான் பயந்தது வீணு. எந்நேரமும் நம்மளைக் கவனிச்சிக்கிட்டே இருக்குற சக்தி ஒருபோதும் நம்மளை விட்டுக்குடுத்துறாது'ன்னு ஒரு தைரியம் உண்டாச்சு.

ஏன், உச்சிலெ என்ன நடந்துச்சு?

ஒண்ணும் நடக்கலேங்க. சாமி தரிசனம் நல்லபடியா முடிஞ்சது. ஆனா, நீங்களே சொல்லுங்களேன், முருகனோட ஆயுதம் எதுங்க?

வேல்தானே?

பாத்தீங்களா. இப்பிடித்தான் நானும் நெனைச்சேன். அந்த ஸ்தலத்துலே, சிலம்பக் கம்புமாதிரி ஒரு கோலெத்தான் கையில புடிச்சி நிக்கிறாரு வேலப்பரு. நான் ஆடிப் போனேன்.

கணபதி பெருமூச்சு விட்டார். அறை வாசலில் நிழலாடியது. வரவேற்பு இளைஞன்தான். பின்னால் கருநீலச் சீருடையில் நின்ற வேலையாள் இரண்டு கைகளிலும் பெரிய பிளாஸ்டிக் வாளிகளில் நீருடன் நின்றிருந்தார்.

ஒன்றை வாசலில் வைத்துவிட்டு மற்ற வாளியைக் குளியலறைக்குள் கொண்டு வைத்தார். பிறகு வெளியிலிருந்த வாளியை எடுத்துக்கொண்டு கணபதியின் அறையை நோக்கி நகர்ந்தார்.

இந்த ஒருவேளைக்கி அட்ஜஸ்ட் பண்ணிக்கங்க சார். ஸாரி.

என்று நயந்த குரலில் சொல்லிவிட்டுப் பின்தொடர்ந்தான் இளைஞன்.

நானும் போயிக் குளிச்சிட்டு ரெடியாயிர்றேன்.

என்று வெளியேறினார் கணபதி.

குளியலறைக்குள் நுழைந்த சந்தானத்துக்கு விசித்திரமான ஒரு உணர்வு ஏற்பட்டது. தரை நெளிகிற மாதிரியும், துணிகளைக் களையும் தன்னை ஒரு மாயப் பார்வை வேடிக்கை பார்க்கிற மாதிரியும். சிறு நடுக்கம் உடல் முழுவதும் ஓடி இறங்கியது.

உள்ளாடை நனைந்தால் பரவாயில்லை என்று தண்ணீரைக் கோரித் தலையில் ஊற்றிக்கொண்டார். நாலைந்து குவளை நீர் வீழ்ந்து தலை குளிர்ந்ததும் உடம்பும் மனமும் சமனமாகின.

அ ரைமணி நேரத்துக்குமேல் கல்யாண வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை. சாப்பிட்ட கையின் ஈரம் காய்வதற்குள் இருவரும் கிளம்பிவிட்டார்கள். அறையில் போய்க் காத்திருப்பைத் தொடர்வதற்கு முன்னால் கோயிலுக்குள் ஒரு நடை போய்விட்டு வரலாமே என்று சந்தானம் ஆலோசனை சொன்னார். கணபதி உடனடியாக ஏற்றுக் கொண்டார்.

கோயிலில் நுழைவதற்கு முன்னால் ஒரு பழக்கடையின் வாசலில் தயங்கி நின்றார் கணபதி. இவர்களைக் கடந்து சென்ற ஒரு வயோதிகரை வெறித்துப் பார்த்துக்கொண்டே இருந்தார். எல்லாரையும்போலக் கடந்துபோய்விட்டார் கிழவர். தலையை உதறிக்கொண்டு நடந்தார்

கணபதி. அவருடைய முகத்தில் ஒரு கணம் கருமை அடர்ந்து பிறகு வெளிறியதைக் கவனித்தார் சந்தானம். கணபதி ஆப்பிள் கூடையிலிருந்து பழம் பொறுக்கத் தொடங்கினார். நாலைந்து பழங்களைக் கையில் ஏந்தியபடி,

கொஞ்சம் பழம் வாங்கிக்கிறலாம்னு நெனைக்கிறேன்...

என்றார். சந்தானம் தலையாட்டினார். கடைக்காரன் கொடுத்த பிளாஸ்டிக் தட்டில் ஆப்பிள்களை வைத்துவிட்டு, சாத்துக்குடிப் பழங்களை ஆராயத் தொடங்கினார்.

...ஒரு தபா ஊருக்கு வந்திருந்தப்ப எஞ் சம்சாரம் அவருக்குக் கைமுறுக்கு குடுத்திருக்கா. சீர் முறுக்கு சைஸு இருக்கும். இன்னொரு முறுக்கும் கேட்டு வாங்கிச் சாப்புட்டாராம். அன்னைக்கி மதியச் சாப்பாடு அவ்வளவுதான். நடுத்தெருவிலே ஒரு ஐயர் வீட்டம்மா செய்து விக்கிது. கைமுறுக்கும் கொஞ்சம் பலகாரமும் வாங்கிக் குடுத்துவிட்டிருக்கா தங்கம். நான் அவருக்காக ரெண்டு வஸ்திரம் கொண்ணாந்திருக்கேன். பெசலா ஆடர் குடுத்து வாங்குனது. பழங்களைப் பாத்ததும் கொஞ்சம் வாங்கலாமேன்னு தோணுச்சு...

ஒரு பருத்த அன்னாசியும், ஒரு கிலோ கருந்திராட்சையும் சேர்த்துப் போடச் சொன்னார். சிட்டையில் எல்லாவற்றையும் எழுதிக் கூட்டி தொகையைச் சொன்னான் கடைப்பையன். சட்டைப்பையிலிருந்து கணபதி பர்ஸை எடுக்கும்போது, திடீரென்று சந்தானம் சொன்னார்:

பழத்துக்கு நான் காசு தர்றேனே...

வியந்த கண்களால் சந்தானத்தைப் பார்த்தார் கணபதி.

...என்னமோ, நானும் அவருக்கு ஏதாவது குடுக்கணும்னு தோணுச்சு.

சந்தோசமாக் குடுங்க. ஒங்களுக்காத் தோணி நீங்க குடுக்குறதெ வேணாம்னு சொல்ல நான் யாரு?

ச ந்நிதியை விட்டு வெளியேறிக் கோபுர வாசலை நோக்கி நடந்தார்கள். பாதாள லிங்கம் சந்நிதிக்கு அருகில் வந்ததும் கணபதி சொன்னார்:

இங்கெ செத்தெ நேரம் உக்காரணும்போல இருக்குங்க. இதுக்கு மேல நடக்க மனசு வல்லே. கால் பின்னுற மாதிரி இருக்கு.

உள்ளே போயி சாமியெப் பாத்துட்டு வந்து உக்காருவமா?

அதுவும் சரிதான்.

ஏழெட்டுப் படிகள் மேலேறியதும் கம்பி அழிகளால் வேலிகட்டப்பட்ட ஒரு மண்டபம். அங்கிருந்து பத்துப் பனிரெண்டு படிகள் உள்ளே இறங்கியதும் இருள் மண்டிய கருவறையில் பாதாள லிங்கம் வீற்றிருந்தது. பக்தர்கள் இறங்கிக்கொண்டும் ஏறிக்கொண்டும் இருந்தார்கள். மேல் மண்டபத்தில் இல்லாத ஒரு பரபரப்பு சந்நிதிக்குள் இருந்ததைக் கவனித்தார் சந்தானம்.

இருவருக்கும் அர்ச்சகர் தீபாராதனைத் தட்டை நீட்டி, விபூதியும் வழங்கினார். லிங்கத்தின் முன்பு நிற்கும்போது கணபதி கண்களை மூடிக்கொண்டார். சந்தானம் பிரார்த்தனையை முடித்துவிட்டு, சக பக்தர்களையும் அர்ச்சகரையும் வெறித்துக்கொண்டிருந்தார்.

பட்டையான ஃப்ரேம் உள்ள கண்ணாடி போட்டிருந்தார் அர்ச்சகர். வெள்ளெழுத்துக் கண்ணாடியின் பின்னால் பெரிதாகப் புடைத்துத் தெரிந்த விழிகள். மோவாயில் அடர்த்தியாகவும் கன்னங்களில் வெறும் தீற்றலாகவும் முளைத்திருந்த வெண்தாடி கோரைகோரையாக நீண்டு பிசிறாக இருந்தது. ஒவ்வொருமுறை லிங்கத்தின் அருகில் சென்றுவிட்டுத் திரும்பும்போதும் இவர்கள் மீது ஒருமுறை பார்வை பதித்தார். கடந்து சென்ற பக்தர்கள் ஓரிருவரும் கணபதியை உறுத்துப் பார்த்தார்கள். மூடிய கண்களிலிருந்து கரகரவென்று நீர் வழிய கணபதி நின்ற கோலம் யாரையும் திரும்பிப் பார்க்க வைக்கும். தொடர்ந்து அவருடன் நின்றுகொண்டிருப்பதை அசவுகரியமாக உணர்ந்தார் சந்தானம்.

நல்லவேளை, கணபதி கண்திறந்தார். இன்னொருமுறை தீர்க்கமாக லிங்கத்தைப் பார்த்துத் தலைக்குமேல் கைகளை உயர்த்திக் கூப்பிவிட்டு மேலேறத் திரும்பினார்.

பாதாள லிங்கம் சந்நிதிக்கு எதிரில் இன்னொரு மண்டபம் இருந்தது. அதுவும் கம்பி அழிகளால் மூடப்பட்டிருந்தது. அதன் படிகளில் சென்ற இருவரும் அமர்ந்தார்கள்.

ரொம்ப தூரம் ஓடிட்டுத் திரும்பின மாதிரி ஆயாசமா இருக்குங்க.

ஒங்களுக்கு மனசுதான் தளர்ந்து இருக்கு. வேறொண்ணும் இல்லே.

அதுவும் வாஸ்தவம்தான். நாம என்ன தப்புப் பண்ணினமோ, இப்பிடிக் காக்க வைக்கிறாரு. ஆனா, நானெல்லாம் மனசறிஞ்சு யாருக்கும் எந்தக் கெடுதலும் செஞ்சதில்லேங்க...

கடைசி வாக்கியத்தைச் சொல்லும்போது கணபதியின் குரல் லேசாகக் கமறியது. சொல்வதற்கு இன்னும் ஏதோ பாக்கி இருக்கிற மாதிரியும்,

எதிரெதிராகக் கோயிலுக்குள்ளும் வெளியிலுமாகப் போய்க்கொண்டிருந்த பக்தர் கூட்டத்தில் அதைத் தேடிக் கண்டுபிடிக்க விரும்புகிறவர் மாதிரியும் ஒவ்வொரு முகமாக அலைந்தது அவரது பார்வை. தாளமுடியாத வேதனையை விழுங்கிக்கொள்கிற தீனமான முகபாவம். சந்தானம் அவருடைய முன்னங்கையை ஆறுதலாகப் பிடித்தார். கணபதியின் கண்களில் நீர்கோத்தது.

...ஆனா, எந்தெந்தப் பிறவியிலே என்னென்ன செஞ்சிருக்கமோ.

என்று முடித்தார்.

தொடர்ந்து, ஆழ்ந்த பெருமூச்சு. அமைதியாகிவிட்டார். அடுத்த ஒரு மணிநேரத்துக்கு அவரிடமிருந்து ஒரு சொல்லும் பெயரவில்லை. பிடித்திருந்த கையை அவராக விலக்கிக்கொண்டாரா, சந்தானம்தான் விட்டுவிட்டாரா என்று விண்டு சொல்ல முடியாதபடி எப்போதோ கைகள் பிரிந்தன. தனித்தனியாக இருவரும் வெறித்துப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். அன்ரிஸர்வ்டு ரயில்பெட்டிப் பலகையில் பக்கத்தில் பக்கத்தில் நெருக்கமாக அமர்ந்திருக்கும் வேற்று மொழி அந்நியர்கள் மாதிரி.

வெயில் நன்கு கனத்துவிட்டது. கோயிலுக்குள் நடமாட்டம் வெகுவாகக் குறைந்துவிட்டது. தலையில் பட்டு எதிரொளிக்கும் வெயில் கூசியதில் ஆயாசமுற்று சந்தானம் கண்களை மூடினார். சில நிமிஷங்கள் ஓடியிருக்கும். எதையோ உள்ளுணர்ந்து கண்திறந்தபோது, இவர்களுக்கு எதிரில் ஒரு கிழவர் நின்றிருப்பதைக் கண்டார்.

யாசகர். தலைமீது ஒரு அழுக்குத் துணிமூட்டை. தோளில் அழுக்குப் பை தொங்கியது. விசித்திரமாக, ரத்தச் சிவப்பில் ஜிப்பாவும் அதே நிற வேஷ்டியும் அணிந்திருந்தார். சராசரி உயரத்தைவிடக் குள்ளம். காக்காய்க் கறுப்பு நிறம். கண்களில் பீழை ஒதுங்கியிருந்தது. கடைவாயோரம் தந்த நிறத்தில் ஏதோ சாப்பாட்டுத் துணுக்கு ஒட்டியிருந்தது.

கணபதியும் அந்தக் கிழவரும் வெகுநாள் பிரிவுக்குப் பின் சந்திக்கும் காதலர்கள் மாதிரி ஒருவரையொருவர் பார்வையால் அருத்திக் கொண்டிருந்தார்கள். கிழவரின் விழிகளில் குழந்தையின் விழிகள் மாதிரி அவ்வளவு சுத்தமான வெண்மை. இன்னும் ஓரிரு கணங்களில் குமுறி அழ ஆரம்பித்துவிடுவார் என்பதுபோல கணபதியின் முகம் கோணியிருந்தது.

நல்லவேளை. அப்படி எதுவும் நடந்துவிடாமல் கிழவர் காப்பாற்றினார்.

கணபதியைப் பார்த்துக் கை நீட்டினார். முன்னங்கைச் சருமத்துக்குப் பொருந்தாத வகையில் உள்ளங்கை வெளுத்திருந்தது. சோகையான வெளுப்பு. அவசரமாக ஒரு சிரிப்பு விரிந்ததும் அவருடைய மேல்வரிசை முன்னம்பற்கள் எல்லாமே உதிர்ந்துவிட்டன என்பது விகாரமாகத் தெரிந்தது.

இதற்குள் வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்துவிட்டிருந்தார் கணபதி. தான் சேகரித்திருந்த பொருட்கள் அத்தனையையும் கிழவரிடம் நீட்டினார். கிழவரின் முகத்தில் அலாதியான ஒளி நிரம்பிவிட்டது. சந்தானம் தன் கையில் வைத்திருந்த பழப் பையையும் நீட்டினார். இரண்டு கைகளிலும் பொருட்களுடன் நின்றிருந்த கிழவர் தோளில் தொங்கிய பையை மோவாயால் சுட்டினார்.

நுனி விரல்களால் அந்தப் பையின் வாயைத் திறந்து பழப்பையை வைத்தார் சந்தானம். காலங்காலமாக அழுக்குச் சேர்ந்திருந்த பையைத் தொடுவதற்கு அருவருப்பாக இருந்தது. இப்படியெல்லாம் உணர்வது தவறோ என்ற குற்ற உணர்ச்சியும் உடனடியாக எழுந்தது. கணபதி தேடிவந்தது இந்தக் கிழவரைத்தானா, இவர்தான் இன்று காலைமுதல் ஒரு அற்புத புருஷராகத் தமக்குள் ஓங்கி உயர்ந்து வந்தவரா என்றெல்லாம் சந்தேகமும் குழப்பமும் சுழற்றியடித்தன.

ஆனாலும், கையில் இருந்த சுமையை இடம் மாற்றியதும் பெரும் ஆறுதல் தம்முள் நிரம்புவதை உணர்ந்தார் சந்தானம். பாதாள லிங்கம் சந்நிதியில் கை மணிச் சத்தம் கேட்டது. எழுந்து நின்ற கணபதி, சந்தானத்திடம்.

இன்னொரு தபா சாமி கும்புட்டுட்டுப் போவமே.

என்றார். படிகள் ஏறி பத்தடி நடந்து படிகள் இறங்கிக் கருவறை நோக்கிப் போனார்கள். நெளியும் ஜ்வாலை மிளிர்ந்த கற்பூரத் தட்டை நீட்டிய அர்ச்சகரை வெறித்தார் சந்தானம். இவர் வேறு ஒரு இளைஞர். முன்பு வந்தபோது இருந்த தாடிக்காரர் இல்லை.

இ ருவரும் கோயிலை விட்டு வெளியே வந்தார்கள். காலணிகளை விட்டிருந்த பெட்டிக்கடை வாசலுக்கு வரும்வரை எதுவுமே பேசிக்கொள்ளாமல் அவரவர் மௌனத்தில் மூழ்கியிருந்தார்கள்.

ஒரு டீ குடிப்பமா?

என்றார் கணபதி.

ஓ.

கொதிக்கும் கண்ணாடித் தம்ளரை இறுக்கிப் பிடித்தபடி அதனுள் உற்றுப் பார்த்தார் கணபதி. சடாரென்று சந்தானத்தை நோக்கி நிமிர்ந்தார்.

இவருதான் அவர்னு ஒங்களுக்குப் படுதா?

என்ன பதில் சொல்வது என்று ஒரு கணம் தயங்கினார் சந்தானம். பிறகு, இல்லையென்று தலையசைத்தார்.

அதேதான் எனக்கும் நெனைப்பு...

என்று கலங்கிய குரலில் சொன்னார் கணபதி.

...என் வீட்டம்மா இவரெ வர்ணிச்சதுக்கும் இப்பப் பாத்த உருவத்துக்கும் சம்பந்தமே இல்லே. தேடி வந்தவரெப் பாத்துட்டோம்ங்குற நிறைவும் இல்லே மனசுலெ...

புலம்புகிற மாதிரிக் கம்மியது குரல். கல்லாவில் இருந்தவரிடம் சில்லறையைக் கொடுத்துவிட்டுத் திரும்பிய சந்தானத்திடம்,

ஏங்க, நானென்ன அப்பிடியாக்கொத்த பாவியாங்க? இவ்வளவு தூரம் தேடி வந்திருக்கேன். அவரெப் பாக்கக்கூடக் குடுத்து வைக்கலீங்களே?

கணபதியின் குரல் சற்று உயர்ந்தது. பக்கத்தில் நின்று தேநீர் குடித்த ஓரிருவர் திரும்பிப் பார்த்தார்கள். சந்தானத்துக்கு தர்மசங்கடமாக இருந்தது. கணபதியின் தோளில் ஆறுதலாகக் கைபோட்டு மெல்ல நடத்தினார்.

அதுக்குள்ளெ ஏன் அவசரப் படுறீங்க. இன்னும் ஒரு நாள் முழுக்க இருக்கே.

தனக்குள்ளிருந்த அவநம்பிக்கை தன்னையும் மீறிக் குரலில் சொட்டித்தான் விட்டது என்றே பட்டது சந்தானத்துக்கு.

இன்னமே எங்கேங்க? அம்புட்டுத்தான். ரூமுக்குப் போயி பொட்டியெக் கட்ட வேண்டியதுதான். நான் என்னங்க ஒங்ககிட்ட வரமா கேட்டேன்? ஒரு தடவெ ஒங்களெ என் கண்ணாரப் பாத்துக்கிறலாம்னுதானே ஆசெப்பட்டேன். அது தப்பாங்க? இம்புட்டுத் தூரம் வர வச்சி, காக்க வச்சி, இப்பிடித் தவதாயப் பட வச்சி... இப்பிடியாங்க? இப்பிடியா, சிங்காரிச்சி மூக்கறுப்பீங்க?

கடைசி வாக்கியம் அழுகையில் முடிந்தது. தோள் துண்டால் முகத்தை மூடிக்கொண்டார்.

சரி. இந்தவாட்டி இல்லாட்டி அடுத்த வாட்டி பாத்துக்கிர்றது. நாம என்ன ஓடியா போயிறப் போறோம். இல்லே, அவருதான் ஓடீறப் போறாரா?

ஆறுதலாகச் சொன்னார் சந்தானம். மூடியிருந்த முகத்தை வேகமாய்த் திறந்தார் கணபதி.

ஓடீருவாருங்க. இன்னம் பதினாறு நாள்தான் கெடு. அந்த மஹான் அடங்கீருவாரு. அப்பறம் நாம மட்டுமில்லே, யாருமே தரிசனம் பண்ண முடியாது அவரெ.

என்று படபடத்தார். சந்தானம் அதிர்ந்தார்.

என்ன சொல்றீங்க?

ஆமாங்க. காசியிலெ போயி நிஸ்டையிலே உக்காரப் போறாரு. தானா விரும்பி சமாதியாகப் போறாரு. அதுக்குள்ளே அவரெக் கண்ணாரக் கண்டுறணும்தானே நான் அல்லாடுனேன்?

ஏனோ, தான் மிகவும் பலவீனமாகிவிட்ட மாதிரி உணர்ந்தார் சந்தானம். தொய்ந்துவிட்ட குரலில் கேட்டார்:

கெடு வச்சது யாரு?

அவரே வச்சிக்கிட்ட கெடுதாங்க அது. இதுக்கான வேலைகள் கிட்டத்தட்ட ஒரு வருசமா நடந்துக்கிட்டிருக்கு. நானும் ஒரு வருசமா என் ஆசையெச் சொல்லிக்கிட்டிருக்கேன், தங்கம் மூலியமா. இதுநாள்வரெ உத்தரவு வல்லே. அறுவடையன்னைக்கி அம்புட்டு நெல்லும் சாவியாக் கெடக்குற மாதிரி ஆயிப் போச்சு, போங்க...

விடுதி வாசலுக்கு வந்திருந்தார்கள். மேற்கொண்டு எதுவும் பேசாமல், அறைச் சாவியை வாங்கிக்கொண்டு படியேறத் தொடங்கினார்கள். எதிரில் இறங்கி வந்த பொறுப்பாள இளைஞன்,

மோட்டார் சரியாயிருச்சு ஸார்.

என்று அறிவித்தவாறு பதிலை எதிர்பார்க்காமல் இறங்கிப் போனான்.

கூ ரைவிசிறியைச் சுழலவிட்டுவிட்டு, காலையில் அமர்ந்திருந்த அதேவிதமாக உட்கார்ந்தார்கள். உடனடியாக எழுந்த கணபதி வேகமாகக் கழிவறைக்குள் போனார். அவர் வெளிவருவதற்காகக் கதவு திறந்தபோது கணபதியின் செல்ஃபோன் குரல் கொடுத்தது. எடுத்துப் பேச ஆரம்பித்த மாத்திரத்தில் அவர் முகத்தை மூடியிருந்த கருந்திரை விலகத் தொடங்குவதை ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்

சந்தானம்.

அப்பிடியா... அட... ஆமா... அதுவேறயா... அடேயப்பா... போதும்த்தா. இந்த பாக்கியம் போதும்... நம்ம என்னா கூடவே இருக்கணும்னா ஆசைப்பட முடியும்... அது சரிதான். ஏதோ, நம்மாலான காணிக்கெ... அப்பிடியாமா... சரி, சொல்லுறென்... சரி.. சரி.. ஆமா... எப்பிடியும் ஒம்போது பத்தாயிரும்... சரி... சரி...

கண்களை மூடிக்கொண்டு சுவரில் சாய்ந்தார். முகம் அண்ணாந்திருந்தது. மூடிய இமைகளுக்குள் விழிகள் நிலைகொள்ளாமல் உருண்டன. மெல்லக் கண் திறந்தார் கணபதி. சந்தானம் அவர் முகத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். கணபதி திடீரென்று கேட்டார்:

ஏன் ஸார், ஒங்களுக்கு ஞாபகமிருக்கா?

எதெக் கேக்குறீங்க?

இல்லே, பாதாள லிங்கத்தெப் பாக்கப் போனோமில்லெயா?

ஆமா. ரெண்டு தடவெ போனோமே.

மொதோவாட்டி போனப்ப இருந்த அர்ச்சகரு மொகம் ஞாபகமிருக்கா?

இருக்கே. நல்லா ஞாபகமிருக்கு.

ஆஹா. இதெத்தான் குடுப்பினே ண்றது.

என்ன சொல்றீங்க?

பின்னே, அவரெப் பாக்கணும்னு கோடிச்சிக்கிட்டு வந்து காத்துக்கிடந்தவன் நானு. எனக்கு அந்த மொகம் மனசிலேயே பதியலே. அகஸ்மாத்தா வந்தவரு நீங்க. ஒங்களுக்கு தரிசனம் குடுத்துருக்காரு. என்னன்னு சொல்றது இதெ?...

சந்தானத்துக்குத் தம் உடலுக்குள் ஒருவித மின்சாரம் பாய்வது போலக் குறுகுறுத்தது.

அதுலே பாருங்க. நாம கொண்ணாந்த சங்கதி ஒண்ணுவிடாமெச் சொல்லியிருக்காரு தங்கத்துக்கிட்டே. கூட நீங்க வந்துருக்கீங்கன்னும் சொல்லியிருக்காரு. இப்பத்தான் போனு வந்துச்சாம். இவ கேட்டுருக்கா, அவரு ஒங்களெப் பாக்கணும்னு ரொம்ப ஏங்கினாருங்களே ன்னு. ‘அவரு என்னெப் பாக்குறதா முக்கியம்? நாந்தான் அவரெப் பாத்துக்கிட்டே இருக்கேனே, பத்தாதா?’ என்னு கேட்டுச்

சிரிக்கிறாராம்... அம்புட்டுத்தாங்க, வந்த காரியம் நல்லவிதமாக முடிஞ்சுபோச்சு...

கணபதியின் முகம் முழுதாக மலர்ந்துவிட்டது.

...என்னா அப்பிடிப் பாக்குறீங்க. ஒரு நிமிசம்கூடப் பாக்கலெயே. இவன் ஏன் இப்பிடிச் சலம்புறான்னுதானே? திருப்பதி போயிருக்கீங்கல்லே? சந்திதியிலே நிம்மதியா நின்னு கும்பிட விடுவானா? 'ஜருகண்டி ஜருகண்டி'ன்னு தொரத்திற மாட்டான்? அம்புட்டுத்தான். அந்த நிலை வாசலெத் தாண்டி உள்ளாறெ போயித் திரும்புனமா. அம்புட்டுத்தான். அந்த ஒரு ஸெக்கண்டுக்காகத்தானெ மணிக்கணக்கா நாள்க்கணக்கா ஜனம் காத்துக் கெடக்குது...

சந்தானம் அமைதியாக இருந்தார். காணாமல் போன பொம்மை திரும்பக் கிடைத்த குழந்தை மாதிரி கணபதியின் சலனங்களில் பரபரப்பு வந்து சேர்ந்துவிட்டதைப் பார்த்துக்கொண்டிருந்தார். ஏனோ, அந்த வேளையில் தம்முடைய மனத்திலும் ஒருவிதக் குதூகலம் பொங்குவதை உணர்ந்தார்.

ஏங்க, தங்கம் ஒங்களை வீட்டுக்குக் கூட்டியாரச் சொல்லுறா. எங்கூட வர்றீங்களா?

உடனடியாகத் தலையாட்டினார் சந்தானம்.

அப்பன்னா, போயி ஒரு தூக்கம் போடுங்க. நானும் ராத்திரிப் பூராத் தூங்கலையா, ரெம்ப அசதியா இருக்கு. பொழுதுசாயப் பொறப்புட்டம்னா, விளுப்புரம் போயி ஏதாச்சிம் ரயிலெப் பிடிச்சிறலாம். நேரா திண்டுக்கல்லெ எறங்கி வத்தலக்குண்டுக்குப் போயிருவம். மதியம் நம்ம வூட்லெ சாப்பிட்டுட்டு, சாயங்காலமா ஊர் திரும்பீறலாம், என்னா?

சம்மதமாகத் தலையசைத்தார் சந்தானம். எழுந்து தன்னுடைய அறைக்குக் கிளம்பியவர், கணபதியைத் திரும்பிப் பார்த்தார்.

அப்ப நாம பாத்த அந்த செவப்பு ட்ரஸ்ஸு கிழவனாரு?

என்று கேட்டார்.

யாரு கண்டா, அவரு அனுப்பின ஆளோ, இல்லே அவரேதானோ...

என்று சொல்லிவிட்டு சந்தோஷமாகப் புன்னகைத்தார் கணபதி.

✠

யாத்திரை

...மிகச் சில தருணங்கள் மட்டுமே ஒலி ஒளி மணம் சீதோஷ்ணம் என்று அப்போது நிலவிய சகலத்தோடும் நமக்குள் நிரந்தரமாகக் குடியமர்கின்றன...

தங்கம்

ஆ மா, விஸ்வநாதன்தான் பேசுறேன்.

...

ஓ, மேடமா? வணக்கம் மேடம். வணக்கம். கல்யாணத்துக்கு நீங்களும் வருவீங்கன்னு நெனைச்சனே மேடம்.

...

ஆமாங்க மேடம். ரொம்ப சிறப்பா நடந்தது.

...

ஸாரா? முகூர்த்தம் முடிஞ்சதுக்கப்பறம்தான் வந்தாரு, ஒரு அரைமணிநேரம் போல இருந்தாரு. சாப்புட்டாரு, ஒடனே பொறப்புட்டுட்டாரே.

...

இல்லேங்க மேடம். அவர்கூட ஒருத்தரு வந்திருந்தாரு. நடு வயசுக்காரருதான் அவரும். ரெண்டு பேருமாத்தான் சாப்புட்டாங்க. ஒடனே கிளம்பீட்டாரே.

...

ம். ம்...

...

வளக்கமான நிதானம் இல்லே. கொஞ்சம் பதட்டமாத்தான் இருந்தாரு. ஈரக்கையோட வந்து தாம்பூலப் பை வாங்கிட்டுப் போனாரு. நான்தான் எடுத்துக் குடுத்தேன். ரெண்டுபேரும் ஏன் இப்பிடி அவசரப்படுறாங்கன்னு தோணுச்சு.

...

இல்லே. அந்தாளெ நான் பாத்ததில்லே. சந்தானம் ஸார் அவரெ

எனக்கு அறிமுகப்படுத்திக்கூட வய்க்கலே. எங்கெங்க, ரெண்டுபேரும் றெக்கையெக் கட்டிக்கிட்டுல்ல பறந்தாங்க? சின்ன வயசு சிநேகிதர்ன்னு தோணலே மேடம். போங்க வாங்கன்னுதான் பேசிக்கிட்டாங்க.

...

இல்லயே மேடம். நான் கவனிக்கலையே.

...

கட்டாயம் மேடம். கட்டாயம் செய்யுறேன். நீங்களும் தகவல் எதும் கெடைச்சா ஒடனே எனக்குச் சொல்லுங்க மேடம்.

...

கவலைப்படாதீங்க மேடம். பயப்புடுற மாதிரி ஒண்ணும் இருக்காது. அதெல்லாம் அண்ணாமலையார் பாத்துக்குவாரு.

...

ஓக்கே மேடம். ஓக்கே மேடம்.

✠

யா ரோ உலுக்குகிறார்கள். கண் திறந்து பார்த்தேன். தரை நகர்ந்து கொண்டிருக்கிறது. இடமும் வேளையும் துலங்கவில்லை, ஒரு கணம். பிறகு தெரிந்தது, கணபதிதான். வத்தலக்குண்டு பேருந்து நிலையத்துக்குள் நுழைந்துகொண்டிருக்கிறோம் என்பதையும் உணர்ந்தேன். நிலையத்தின் சந்தடிக்குள்ளும், வழக்கத்தைவிடச் சற்று முன்னதாகவே ஆரம்பித்துவிட்ட கோடையின் எச்சரிக்கைபோல எரிக்கும் வெயிலுக்குள்ளும் நுழைந்து மறுபுறம் என் பால்ய நாட்களுக்குள் வெளியேறியது மனம்.

கிட்டெத்தான். நடந்தே போயிரலாமா? காப்பி வீட்டுக்குப் போயி சாப்பிடலாம். திண்டுக்கல்லுலெ சாப்புட்ட டிபன் வகுத்திலெ கல்லு கணக்கா ஒக்காந்திருக்கு இன்னம்.

என்று கணபதி சொன்னது எங்கோ வெகுதொலைவில் கேட்டது.

சரியென்று தலையசைத்துவிட்டு என் ஞாபகங்களுக்குள் தொடர்ந்து நடந்தேன். எனக்கு சிரமம் தராதபடி, கணபதியும் மௌனமாக நடந்து வந்தார்.

இந்த ஊருக்கு நான் வந்திருக்கிறேன். நாற்பது வருடங்களுக்கு முன்.

அதற்கு முன்பும் பலமுறை வந்திருக்கலாம். ஆனால் விவரம் தெரிந்து நான் வந்தது அந்த ஒருமுறைதான். அதுவே பூர்வஜென்ம ஞாபகத்தின் தொலைவில் இருக்கிறது. அப்போது கண்முன்னால் திறந்து கிடந்த வத்தலக்குண்டுக்கும் இப்போது மலர்ந்திருக்கும் காட்சிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லாது ஊர் தலைகீழாகப் புரண்டிருக்கிறது. திசைகளும், கோயில் தெருவுக்குச் செல்லும் மார்க்கமும் மட்டுமே மிச்சமிருக்கும் இது அல்ல, என் ஞாபகத்தில் பதிந்திருக்கும் வத்தலக்குண்டு. என்னுடையது வேறு கிரகத்தில் வேறு நூற்றாண்டின் கண்ணாடிப்பேழையில் பத்திரமாய் இருக்கிறது...

அப்போது எங்கள் சித்தப்பா இங்கே குடியிருந்தார். என் அப்பாவின் தம்பி. புரோகிதராக இருந்தார். பையன்கள் ஒவ்வொருவராக வெளியூர்களில் வேலைக்குச் செல்லச் செல்ல வத்தலக்குண்டில் சித்தப்பாவின் வேர்கள் பிடிப்பு இழந்து வந்தன. கடைசிப் பையன் பம்பாய்க்குப் போனான். சித்தப்பா குடும்பம் ஊரைக் காலி செய்துவிட்டது. இதெல்லாம் தகவல்களாக எங்களுக்கு வந்து சேர்ந்தவை. அப்பா இறந்தபிறகு சித்தப்பாக்கள் அத்தைகளுடன் எங்கள் குடும்பத்தின் தொடர்பு சிறுகச் சிறுகத் தேய்ந்து, பொது இடங்களில் மட்டும் சந்தித்துக் கொள்கிற வகையில் வந்து நின்றுவிட்டது.

பம்பாயில் கொஞ்சநாள் தொழில் புரிந்தார் சித்தப்பா. பிச்சாண்டி சாஸ்திரிகள் என்று சொன்னால் மாதுங்காவில் பிராமணார்த்தம் சாப்பிடும் அனைவருக்கும் தெரியும் என்பார்கள். வத்தலக்குண்டில் சம்பாதித்ததுபோலப் பலமடங்கு சம்பாதித்துவிட்டு, ஐந்தாறு வருடங்களுக்கு முன்னால் இறந்துவிட்டார் சித்தப்பா. பத்தாவது நாள் காரியத்துக்கு நான் மட்டும் சென்று வந்தேன்.

கடைசியாக நான் வத்தலக்குண்டுக்கு வந்தது ஜாம்ஷெட்பூர் உருக்காலையில் பணிபுரிந்த பெரிய சித்தப்பாவின் குடும்பம் விடுமுறைக்கு வந்திருந்தபோது. அவர்கள் குடும்பத்துடன் எங்கள் குடும்பமும் வத்தலக்குண்டு வந்து சேர்ந்திருந்தோம். உடல்நலம் சீர்கெட்டிருந்த அப்பாவைப் பார்த்துக்கொள்வதற்காக அம்மா ஊரிலேயே இருந்து விட்டாள். நாங்கள் குழந்தைகள் மட்டும் இங்கே வந்தோம்.

அந்தச் சமயத்தில் இங்கு ஏதோ உற்சவம் நடந்துகொண்டிருந்தது. இதோ, நானும் கணபதியும் கடந்து செல்கிறோமே, மந்தை மாரியம்மன் கோயில், இந்த அம்மனுக்குத்தான் உற்சவம் என்கிற மாதிரி நினைவு. கோயில் முன்பாக உள்ள மைதானம் விளிம்புகளில் மட்டும் மாற்றம்

கண்டிருந்தது. மையம் இன்னும் அடையாளம் கெடாத வெட்டவெளியாகத்தான் இருக்கிறது.

ஆனாலும், என் பால்ய ஞாபகத்தில் சமுத்திரம்போல விரிந்து கிடந்த மைதானம் இப்போது உள்ளங்கை அகலத்துக்குச் சுருங்கியிருக்கிறது அரண்மனை வாசல் யாசகனிடம் பிச்சைக்குக் கைநீட்டுகிற பட்டத்து யானை மாதிரி.

அந்த நாளில் இந்த மந்தையில் தினமும் அம்மன் புறப்பாடும், அது முடிந்தபின் கலைநிகழ்ச்சிகளும் நடந்தன. மயிலாட்டம் மாடு ஆட்டம் கரகாட்டம் பொம்மலாட்டம் என்று எல்லாவற்றையும் நான் முதல்தடவையாகவும் ஒருசேரவும் பார்த்த சந்தர்ப்பம் அதுதான்.

கோயில்தெரு பிராமணர்கள் சேர்ந்து ஒருநாள் உபயமாக நாடகம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். மெற்றாஸிலிருந்து வந்திருந்த பெரிய நாடகக் குழு அது. என்ன கதை என்றெல்லாம் ஞாபகமில்லை. மகாபாரதக் கதையில் ஏதோ ஒரு கட்டத்தை நாடகமாகப் போட்டார்கள். பளீரென்று அன்றைக்குத் தெரிந்த மேடைவெளிச்சம் ஞாபகத்தில் மங்கிக்கொண்டே வந்து மஞ்சள் நிற ஒளியாக இப்போது மீந்திருக்கிறது.

சரிகை அடர்ந்த உடைகளும், கில்ட் கிரீடங்களும் நகைகளும், அதிகமான ரோஸ் பவுடர் பூச்சும், அடிவயிற்றிலிருந்து 'அண்ணா, அண்ணா' என்று கதறி நடித்த பாண்டவர்களும், விம்மிப் புடைத்துப் பூரித்த மார்புகளைக் கச்சையால் இறுக்கிக் கட்டியிருந்த நடிகையரும் என்று சில்லறை ஞாபகங்கள்தாம் இருக்கின்றன. நடிக முகங்களோ வசனங்களோ கதைப்போக்கோ எதுவும் நினைவில் இல்லை.

நாடகம் முடியும் தறுவாயில் எங்கோ ஒரு மூலையில் கலவரம் ஆரம்பித்தது. சாந்தமாக இருந்த சபை திடீரென்று பொங்கி உயர்ந்தது. கூட்டம் உயிருக்குப் பயந்து ஓடத் தொடங்கியது. அப்போது கிளம்பிய புழுதி மணமும், மேடையில் ஏதோ வெடித்த மாதிரி ஓசையும் நன்றாக மனத்தில் பதிந்திருக்கின்றன. இரண்டுபுற இறக்கைக்குள்ளும் அடைத்துக்கொண்ட குஞ்சுகளோடு, இடம்போதாமல் சூழ ஓடிவரும் குஞ்சுகளுமாக பருந்துக்குப் பயந்து ஓடும் கோழிபோல வீட்டுக்குச் செல்லும் பாதைநோக்கி எங்களைப் பாதுகாப்பாக இழுத்துச் சென்ற சித்தப்பாவும் நினைவில் இருக்கிறார்...

வா சலில் கம்பி அழிபோட்ட திண்ணையுடன் இருந்த பழங்கால வீடு அது. நூ வடிவத்தை இடவலமாகத் திருப்பிப் போட்ட மாதிரி அமைந்த தெரு. இடைக்கோடு மட்டும் செங்குத்தாய் உள்ள நூ. அதன் கீழ் வெளி

முனையில் வீடு. திண்ணைக்கு வெளிப்புறம் இரண்டாள் படுக்குமளவு அகலமான பட்டியக்கல், வெளித்திண்ணையாக. சாணத் தண்ணீர் தெளித்த வாசலில் புதுக்கருக்கு மங்காத, மிகப்பெரிய இரட்டை இழைக்கோலம்...

என் அம்மா இருந்தவரை வீட்டு வாசலிலும் அரிசிமாவால்தான் கோலம் போடுவாள். கோலத்தைத் தின்னும் சிற்றெறும்புகள் தாங்கள் வயிறாறிய தகவலை எங்கள் பிதுர்க்களுக்குத் தெரிவிக்குமாம்.

மதுரையில் எங்கள் வீடு புறநகர்ப் பகுதியில்தான் இருக்கிறது. வாசலில் கோலத்துக்குப் போதுமான இடம் இருக்கிறது. சித்ரா நாள்தவறாமல் சிறிதாக ஒன்று போடவும் செய்கிறாள். ஆனால், இந்தக் கோலத்தைப் பார்க்கும்போதுதான் தெரிகிறது, எங்கள் வீட்டு வாசல் மூளியாக இருப்பது. பிரம்மாண்டமான கோலங்களையெல்லாம் மறந்துவிட்ட தலைமுறையைச் சேர்ந்தவர்கள் நாங்கள்.

வாசல் கம்பிக்கதவின் தாழ்ப்பாளை இருமுறை ஓசைப்படுத்தி விட்டுக் காத்திருந்தார் கணபதி. கவிழ்ந்த ட வடிவத் தெருமுக்கில் பகலில் விரித்த குடையுடன் வழுக்கைத் தலைக் கிழவர் ஒருவர் தோன்றினார். ஒரு விநாடி நின்று, உறுத்தும் பார்வையால் எங்கள் இருவரையும் கவனித்துவிட்டு, மறுசிறகில் நுழைந்து மறைந்தார்.

உள்ளெ வாங்க சார்.

என்றார் கணபதி.

ஒரு சிறுபெண் வந்து கதவைத் திறந்துவிட்டு நின்றுகொண்டிருந்தது. என்னை உற்று ஆராயும் அதன் பார்வையில் சற்றுக் கூச்சமாக உணர்ந்தேன்.

என்னா மலரு, அத்தெ எப்பிடி இருங்காங்க?

என்று கேட்டவாறு வீட்டுக்குள் நுழைந்த கணபதியைப் பின் தொடர்ந்தேன்.

நல்லா இருக்காங்க மாமா.

என்று பதிலளித்தவாறு என்னையும் தொடர்ந்து பார்த்தபடி மூன்றாவதாக வந்தாள் அந்தச் சிறுமி. நான் இன்னாரென்று ஒரு வார்த்தை கணபதி அவளிடம் சொல்லிவிட்டால் சமனமாகி விடுவாள், பாவம்.

நடு ஹாலில் சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருந்த பெண்மணி

என்னைப் பார்த்துக் கைகூப்பினார். கணபதி என்னிடம் கூறியிருந்த தகவல்கள் காரணமாய் அந்த அம்மாள் சக்கர நாற்காலியில் இருந்ததும், கணபதியைவிட வயதில் மூத்தவர் மாதிரித் தோற்றமளித்ததும் எனக்கு ஆச்சரியம் தரவில்லை. ஆனால், இடது பாதத்தில் வெளித்தெரிந்த மாவுக்கட்டு ஆச்சரியமாய் இருந்தது. அதன் பருமனைப் பார்த்தால் குறைந்த பட்சம் முழங்கால் வரையாவது உயர்ந்திருக்கும் என்று தோன்றியது. இதைவிட, கணபதி விவரித்ததன் பிரகாரம் உடல்வாதையால் மிகவும் சீர்குலைந்த பெண்மணியை எதிர்பார்த்திருந்த எனக்கு அந்த அம்மாளின் முகத்தில் இருந்த தெளிவு பேராச்சரியமாய் இருந்தது.

ஒக்காருங்க.

என்று என்னிடம் சொல்லிவிட்டு பிரயாணப்பையுடன் உள்ளறைக்குச் செல்லுமுன் ஓரிரு நொடிகள் தயங்கி நின்று,

தங்கம், ஸாருதான் சந்தானம். எல்லைஸியிலே வேலை பாக்குறாரு. நீ கூட்டிட்டு வரச் சொன்னேன்னு சொன்னவொடனே வர்றேன்னுட்டாரு. அண்ணாமலையிலே இவர் மட்டும் கூட இல்லாட்டின்னா ரெம்பத் தவிச்சுப் போயிருப்பேன்.

அறிமுகம் செய்துவிட்டு நகர்ந்தார் கணபதி. அவருக்கும் எனக்குமான முப்பத்தாறு மணிநேரப் பழக்கம் நாலே வாக்கியங்களில் முடிந்து போனது எனக்குள் மீண்டும் ஆச்சரியம் உண்டாக்கியது. ஆனால், ராமாயணத்தை என் அம்மா நாலே வாக்கியங்களில் சொல்லி முடிப்பதும் ஞாபகம் வந்தது. அது ஒரு பாட்டு மாதிரி இருக்கும். முழுவதும் நினைவில்லை.

ராமக் கோனான் பொண்டாட்டியை ராவணக் கோனான் தூக்கிக்கொண்டு போனான்...

என்று ஆரம்பிக்கும்... அந்த அம்மாள் செருமிக்கொண்டார்.

ஒக்காருங்க ஸார்...

என்று நாற்காலியைச் சுட்டிக் காட்டினார். உட்கார்ந்தேன். வெகு இனிமையான குரல் அந்த அம்மாளுக்கு. என் ஸி வசந்த கோகிலத்தினுடையது மாதிரி கணீரென்றும் ரகசியமாகவும் ஒரே சமயத்தில் இருக்கும் குரல்.

...மலரு, ஸாருக்குக் காப்பி எடுத்தா...

காபித் தம்ளருடன் வந்த சிறுமியின் முகத்தில் முன்பு இருந்த குழப்பம்

இல்லை இப்போது. தங்கத்திடம் கணபதி சொன்ன வாக்கியங்களே அவளுக்கும் போதுமானதாய் இருந்திருக்க வேண்டும்.

...ஸாரு பையையும் கொண்டுபோய் உள் ரூம்புலே வையி.

நான் அவசரமாகப் பையைத் திறந்து துண்டு, சோப், மாற்று உள்ளாடைகள் என்று வேண்டியவற்றை எடுத்துக்கொண்டேன்.

...க லியாணமான மறு வருசம் நாங்க வைத்தீசுவரன் கோயிலுக்குப் போயிருந்தோம். அதுவும், ஒரு இருபத்தஞ்சு வருசம் இருக்குமே. எனக்கு உடம்பு மோசமாக ஆரமிச்சிருந்த சமயம் அது. எங்கே, கலியாணமான ஆறாம் மாசமே மொதொத் தடயம் விளுந்திருச்சே. காலையிலே விடிஞ்சுசவொடனெ காலு ரெண்டும் நடுங்க ஆரமிச்சுருச்சுன்னா, அப்பறம் என்னாத்தே வீட்டு வேலெ பாக்குறது. புதுப்புருசன் மனசு கோணாமெ என்னான்னு நடந்துக்கிறது...? எங்க அய்யங்காரு கிட்டெப் போயிக் கேட்டோம். 'வைத்தீசுவரனெ ஒரு தபா போயிப் பாத்துட்டு வா பாப்பா, எல்லாம் நல்லா ஆயிரும்'ன்னாரு. நமக்கு வந்திருக்கிறது வியாதியில்லே, செய்வினைக் கோளாறுங்குறது அங்கெ போனபிற்பாடுல்லெ தெரிய வருது?

ஆனா, நம்மளெவிடவும் கேவலமாக் கஸ்டப்படுறவுங்க எம்புட்டோ பேரு இருக்கத்தானே செய்யுறாங்க? பிராகாரத்திலே அம்புட்டுக் கூட்டத்தையும் விட்டுத் தள்ளி ஒரு ஆம்பளையும் பொம்பளையும் இருந்ததைக் கவனிச்சோம். தீக்குச்சி கணக்கா இருந்தா அவ. அந்தப் பொண்ணெக் குளத்திலே குளுப்பாட்டித் தூக்கியாந்திருப்பாரு போல அந்தாளு. ஈரத்துணியெ மாத்தி வேற துணி உடுத்திவிட செரமப்பட்டாரு. பொது எடமாயில்லியா?

நாங் கிட்டெப் போனேன். 'நவருங்க, நான் மாத்தி விடுறேன்'ன்னு சொன்னேன். அப்பத்தான் தெரியிது, அது கொஞ்சம் சித்த சுவாதீனமில்லாத பொம்பளைன்னு. மரப்பாச்சி மாதிரி ஒடம்பெக் காட்டிக்கிட்டுக் கெடக்கு. அது எங்கிட்டெச் சொல்லுது, 'அய்யோ, நானே எந் தம்பியெக் கொன்னுட்டனே'. கொரல்ல எம்புட்டு நடுக்கம்ங்கிறீங்க? இப்பத்தான் செத்த முன்னே கொலையெச் செஞ்சுட்டு வந்த மாதிரி.

எனக்கு கை ஒதற ஆரமிச்சது. கொஞ்சம் பின்வாங்குனேன். 'இதெ மட்டும்தாம்மா சொல்லிக்கிட்டேயிருப்பா. மத்தபடி ஒரு பிரச்னையும் பண்ண மாட்டா. சும்மாக் கிட்டே போங்க'ன்னாரு அந்த ஆம்பளெ.

சாயங்காலம் அவுங்க ரயிலுக்குப் போறவரைக்கிம் நாங்களும் கூட

இருந்தோம். அந்தக் கொடுமையெல்லாம் பாத்தா, நம்மள்ளாம் எம்புட்டோ ஆரோக்கியமா இருக்கோம். நம்ம செம்ம விரோதிக்கிக்கூட அப்பிடியாக்கொத்த கஸ்டமெல்லாம் வரக்கூடாதுங்க.

அவருபேரு சுத்தானந்தம். ஈரோட்டுலெ பிஸினெஸ் செய்யுறாரு. ஊத்துக்குளியிலே வீடு. எங்க சாதிக்காரருதான். நாங்க கைக்கோளரு. செங்குந்தருன்னும் சொல்லுவாங்க. அவுங்க தொண்டெமண்டலம். அந்தப் பொம்பளை இருபத்திச் சொச்சம் வருசமா ஒடம்பும் மனசும் சரியில்லாமெக் கெடக்காம். ஒடம்பென்னா ஒடம்பு, வெறும் எலும்புக்கூடுதான் அது. வெளியே தெரியாமக் கொஞ்சம் தோலாலெ மூடியிருந்தது, அம்புட்டுத்தேன். எங்க மலரு இருக்காள்லெ, இவ அந்தப் பொம்பளையெத் தூக்கி இடுப்புலெ வச்சிறலாம்ன்னாப் பாருங்களேன்?

சுத்தானந்தத்தோட அக்கா அது. தாய் தகப்பன், கூடப் பெறந்தவுங்கன்னு யாருமே கெடையாது அவுங்க ரெண்டு பேத்துக்கும். ஒறவுகாரங்களும் அண்டுறதில்லே. இப்பிடிச் சீக்காளியா ஒரு பொம்பளைப் பிள்ளெ இருக்குற வீடுன்னா, சொந்தக்காரவுங்க யாரும் படியேறி வருவாங்களா சொல்லுங்க? எங்க வீட்டையே எடுத்துக்கங்களேன், ஆள் போக்குவரத்து எம்புட்டுக் கொறைஞ்சு போச்சுண்றீங்க? எம் மக்க வந்தா உண்டு. அவுங்களும் அடிக்கடி வர்ற தூரத்திலெயா இருக்காங்க.

சுத்தானந்தம் சொந்தமா ஒரு கெமிக்கல் கம்பேனி வச்சிருக்காரு. தறிநூலுக்குப் போடுற சாயமாம். வீட்டுலெ இப்பிடி ஒரு சீக்காளியெ அதுவும் வயசுக்கு வந்த பொம்பளையே, தனியா விட்டுப்புட்டு எம்புட்டு நேரம்தான் தொளிலைப் பாக்க முடியும் ஒரு ஆம்பளே? ஏதோ, நம்பிக்கையான ரெண்டு மூணு வேலையாளுக இருந்ததாலெ பொளைப்பு ஒருமாதிரி ஓடிக்கிட்டிருந்தது. இதெல்லாம் நம்மளுக்கெப்பிடித் தெரியும் ண்றீங்க? தரிசனம் முடிஞ்சு வெளியே வந்து சாவகாசமா ஒக்காந்திருக்கும்போது அவரு சொல்லத்தான் கேள்வி.

அவுங்க அம்மா இருக்கும்போதே அந்தப் பிள்ளைக்கி முடியாமெப் போயிருச்சாம். தம்பி பள்ளிக்கூடம் கடோசி வருசம் படிக்கிறான். இது சமைஞ்ச புள்ளே. படிப்பெ நிறுத்தியாச்சு. வீட்டுலெ இருக்கு. தம்பின்னா உசிராம் பாத்துக்கங்க. எங்க பெரியவரு அந்தப் பிள்ளையைப் பத்திப் பேசையிலெ ஒருக்கா சொன்னாரு, ‘வெறுமனெ இந்தப் பிறவியிலெ மட்டும் கூடப் பெறந்தா அந்தப் பாசம் வந்துறாது தங்கம். முந்தின பெறவி எதுலெயாவது ஒரு வயித்திலெ தங்கியிருக்கணும்.’ அதாவது, பூர்வ செம்மங்கள்லே நாயாப் பெறந்தாலும் நரியாப் பெறந்தாலும்

ஒண்ணாப் பெறந்து ஒரு கொட்டில்லெ வளந்திருக்கணும். இந்தப் பிள்ளைக்கித் தம்பி சம்மந்தமா இப்பிடி ஒரு பாசம் மனசிலே வேர் விட்டுருந்ததுன்னா, அது ஏதோ தெய்வ சங்கல்பம்தான்.

ஆச்சா, சுத்தானந்தம் பள்ளிக்கூடத்திலே எங்கேயோ சுத்துலா கூட்டிக்கிட்டுப் போயிருந்தாங்களாம். அங்கிட்டுத்தான், அண்ணாமலைப் பக்கந்தான். செஞ்சிக்கோ, எங்கெயோ. ரெண்டு நாள் டூரு. ரெண்டாவது நா காலையிலேயெ வெனெ சுத்தீருச்சு.

எவனோ தெருத்தெருவாப் போயி ரேகெ பர்த்து சோசியஞ் சொல்லுறவன் ஒருத்தென் இவுங்க வீட்டு வாசல்லெ நின்று சத்தம் குடுத்திருக்கான். இவுங்க அம்மா கொஞ்சம் சோசியப் பைத்தியம். அவனெக் கூப்புட்டுக் கையெக் காமிச்சிருக்கு. எங்க அப்பாரு பளமொளி சொல்லுற மாதிரி, வீதியோடெ போற விருதுபட்டிச் சனியனெ 'வீட்டுவரைக்கும் வந்துட்டுப் போ' ம்பாங்களா யாராவது?

இந்தம்மா தனக்குப் பாத்தது பத்தாமெ, மக கையவும் பாக்கச் சொல்லியிருக்கு. அவென் சொல்லியிருக்கான், 'இந்தப் பிள்ளைக்கி ஒடம்பொறப்பு எதுவும் இருக்கக் கூடாதே.'

இந்தம்மா சிரிச்சிக்கிட்டே சொல்லியிருக்கு, 'இல்லீங்களே, இவ தம்பி ஒருத்தன் இருக்குறானுங்களே.' அவுங்க ஈரோட்டுக்காரவுங்கல்லாம் அப்பிடித்தான், ரெம்ப மரியாதையாப் பேசுவாங்க. அந்த வீணாப் போறவன் அத்தோடெ விட்டுருக்கப்படாதா? 'இல்லெயே, ரேகெ சொல்லுதே. இருந்தாலும் அடிச்சிருமே. ஒண்ணு ஒடம்பெறப்பே அடிக்கும். இல்லாட்டி ரேகெதாரியெ அடிச்சுருமே'ன்னு சொல்லிப்புட்டு உண்டான காசையும் வாங்கீட்டுப் போய்ச் சேந்துட்டான் புண்ணியவாளன்.

இந்தப் பிள்ளெ கண்ணு கலங்கீருச்சாம். அம்மாக்காரி எம்புட்டோ சமாதானம் சொன்னாலும் கேக்க மாட்டேங்குது. சோசியன் வந்துப்போனது காலையிலே பத்துமணி சுமாருக்கு. சாயங்காலம் வரைக்கும் இந்தப் பிள்ளெ கொலெப்பட்டினியாக் கெடக்கு. பச்செத்தண்ணி பல்லுலெ படாம அம்புட்டு வைராக்கியம். 'எந் தம்பி வரட்டும். அவெங் கூடத்தான் சாப்புவேன்'னு ஒரே புடிவாதம். ஒரு வார்த்தெ சொன்னாலும் கொடங் கொடமாக் கண்ணீர் கொட்டுற பிள்ளெயெ என்னா செய்வீங்க?

இருட்டினப் பெறகுதான் இடி விளுந்தது. அங்கிட்டுத்தான், ஏகப்பட்ட பாளையங்க உண்டுல்லெ? ஏதோ ஒரு பாளையத்திலெருந்து

இவுங்களுக்குத் தெரிஞ்ச பொம்பளை ஒண்ணு ஓடியாருதாம். 'நாகம்மா நாகம்மா, கேட்டியா விசயத்தே? நம்ம பிள்ளெக போன பஸ்ஸு மரத்துலெ மோதி, மோதுன எடத்திலெயெ நாலு பிள்ளெக தவறிப் போச்சாம், ரேடியொ நூஸ்லெ சொன்னான். வா பள்ளிக்கூடத்துலெ போயி வெசாரிப்போம்.'

அம்புட்டுத்தான், அக்காக்காரி அடிவகுத்திலேருந்து அலறினாளாம். 'அய்யோ, எந் தம்பியெ நானே கொன்னுட்டேனே,' எத்தனெ வயசு அவளுக்கு, பதினேழு பதினெட்டு வயசு இருக்கும். போய்ச்சேரும்போது நாப்பது வயசுக்கிட்டெ இருக்கும். அதுவரைக்கும், இந்த ஒரு வாக்கியம் தவுத்து வேறெ எதுவுமே பேசுனது கெடையாது அந்தப் பொம்பளெ. மொகம் எம்புட்டு லெச்சணமான மொகம்ண்றீங்க? சுத்தானந்தம் அவரு மணிப்பர்ஸுலெ வச்சிருக்குற போட்டாவைக் காட்டுனாரு, தம்பியெ இறுக்கி அணைச்சிக்கிட்டு நிப்பா அக்காக்காரி. சாவித்திரி மாதிரி இருப்பா. பொப்புனு பூரிச்ச மொகம்.

ஆத்தாக்காரி என்னா செய்யும் சொல்லுங்க? ஊருக்குப் போன புள்ளெயெப் பத்தி வெசாரிக்கப் பள்ளிக்கூடத்துக்கு ஓடுமா, மயக்கம் போட்டு விளுந்த பொம்பளைப் பிள்ளெயெப் பார்க்குமா?

சேதி கொண்ணாந்த பொம்பளெ, 'நாம்போயி வெசாரிச்சுட்டு வர்றேன்'னு போச்சாம். பாவி மக, எந்த வெசக்கடி வேளையிலே இவுங்க வாசப்படியெ மிதிச்சாளோ? பஸ்ஸு மோதுனதும் வாஸ்தவந்தான், நாலு பிள்ளைக தவறுனதும் வாஸ்தவந்தான். ஆனா, அது இவுங்க பள்ளிக்கூட பஸ்ஸு இல்லே. பக்கத்துலெ வேறெ ஏதோ கிராமத்துப் பள்ளிக்கூட பஸ்ஸாம். எம்புட்டுச் சொல்லி என்னா, இங்கெ ஒடெஞ்ச கலயம் ஒடெஞ்சதுதான்.

ராத்திரிப் பன்னெண்டு மணிக்கு ஊருக்குத் திரும்பிவந்த தம்பிக்கி, அக்காவுக்குக் கிறுக்குப் பிடிச்சிருக்குன்னு தெரிஞ்சா, அதுவும் இப்பிடி ஒரு காரணத்துனாலே ன்னு தெரிஞ்சா, எப்பிடி இருக்கும் சொல்லுங்க? பாவி மக, இவங்கிட்டெயே சொல்லுறாளாம், 'எந் தம்பியெ நானே கொன்னுட்டனே'ன்னு.

நல்ல நிதானமான மனுசனுங்க சுத்தானந்தம். பதறாத மனசு. நாலு வார்த்தைக்கி ஒரு வார்த்தெதான் பேசுவாரு. அவரே இதெ எங்ககிட்டெச் சொல்லும்போது தன்னய மீறி விசும்பீட்டாருன்னாப் பாருங்களேன். அஞ்சாறு வருசம் களிச்சு தாயார்க்காரியும் காலமாயிட்டா. சாப்பாடு வேறெ ரெம்பச் சொணங்கீருச்சா, இந்தப் பொண்ணு படுத்த படுக்கையாயிருச்சு.

முப்பத்திச் சொச்சம் வயசாயும் இவரு கல்யாணம் செஞ்சுக்கலே. ஒத்தெ ஆம்பளையா இருந்து படுக்கைலெ கெடக்குற பொம்பளையெ என்னான்னு கவனிக்கிறது? வசதியான குடும்பந்தாங்கிறதாலே, ஒரு பொம்பளை நரஸம்மாவெ வேலைக்கி அமத்திக்கிட்டாராம். வைத்தீசுவரன் கோயிலுக்கு வரும்போது, நரஸம்மாவுக்கே ரத்தக் கொதிப்பு அதிகமாயி ஆஸ்பத்திரியிலே சேத்திருக்காங்க. அன்னைக்கி ஒருநாளைக்கி மட்டும் நான் அந்தம்மாவுக்கு நரஸம்மாவா இருந்தேன்...

இ வ்வளவு நேரமும் இறுக்கமான குரலில் பேசிவந்த தங்கத்தின் முகத்தில் மெல்லிய புன்முறுவல் வந்து உட்கார்ந்தது. புத்தாடை உடுத்திய சிறுமியைப்போல எந்நேரமும் ஒருவிதப் பெருமிதம் உள்ள முகம் அது. மழலை பேசுகிற குழந்தை மாதிரி மேலுதடு சற்று மேல்நோக்கி மடிந்திருக்கும்.

இன்னோரு காப்பி குடிக்கிறீங்களா?...

சரியென்று தலையசைத்தேன்.

ஏங்க, ஒங்களுக்கு?

கணபதியும் சம்மதித்தார். சிறு சலனமுமில்லாமல் உடன் உட்கார்ந்து கதை கேட்டுக்கொண்டிருந்த மலர் தானே எழுந்து சமையலறைக்குப் போனாள். நுரை பொங்கும் மூன்று தம்ளர்கள் வைத்த தட்டுடன் அவள் வருகிற வரை பேசாமல் இருந்தார் தங்கம்.

இன்ஸ்ட்டன்ட் காஃபியின் மணம் எழுந்தது. புதுப்பாலும் புது டிக்காக்ஷனும் கொண்டு சித்ரா கலக்கும் காஃபியின் ருசி எனக்கு நினைவு வந்தது. இந்த மணம் நாசியில் படரும்போது இன்னொரு ருசியின் ஞாபகம் வருகிறதே, தற்சமயம் அதைச் சுவைப்பது எந்த நாக்கு என்று எனக்குள் ஒரு ஆச்சரியம் உதித்தது.

புள்ளெ நல்லாத்தான் சமைப்பா. காப்பி மட்டும் சரியாப் போட வராது. ஏண்டி மலரு?

என்று அவளைப் பார்த்துச் சிரித்தார் தங்கம். மற்றவர்களும் சிரித்தோம், மலர் உட்பட.

...அ ந்த வருசம்தான் எங்க வீட்டுக்கு போன் வந்துச்சு. இந்த ஊர்லெயே மொதமொதல்ல வீட்டுல போன் வச்சது அஞ்சாறு குடும்பந்தான். அதுல நாங்க ஒண்ணு. எங்களுக்கு வந்த மொதோ வெளியூர் போனு எது ண்றீங்க...?

தங்கம் என் முகத்தை நேரே பார்த்துச் சிரித்தார். இந்த அம்மாளிடம் விசேஷமாய் இருக்கும் இன்னொரு அம்சம் இது. இவ்வளவுநேரம் பேசும்போதும், என் முகத்தில் ஊன்றிய பார்வையை நகர்த்தாமல்தான் பேசிவந்தார். அதாவது, என்னுடைய கவனம் ஒரு நொடிகூட விலகுவதற்கில்லை.

...அந்தம்மா, சுத்தானந்தத்தோடெ அக்கா காலமான சேதிதான். எப்பிடி ஒரு ராசி பாத்தீங்களா? இவரு செல்போனு வாங்குனப்பவும் இப்பிடித்தான். காலையிலே ஒறவுகாரவுங்களையெல்லாம் கூப்புட்டு நம்பர் குடுத்தோம். மத்தியானம் இவுங்க தாய்மாமன் மூத்தவரு போய்ச்சேந்த போனு வந்துருச்சு. போன வாரம்கூட இவரு, 'ஒனக்கும் ஒரு போனு வாங்கித்தாரேன், நீ நாற்காலியெ நகத்திக்கிட்டு ஏன் அல்லாடுறே'ன்னாரு. நான்தான் 'வேணாஞ்சாமி, யாராச்சும் பொட்டுனு மண்டெயெப் போட்டுறப் போறாங்க'ன்னுப்புட்டேன்...!

மீண்டும் எல்லாரும் சிரித்தோம். தங்கத்தின் முகம் மறுபடி தீவிரம் கொண்டது.

...இவரு ஈரோடுக்கு ஒடனே பெறப்புட்டுப் போனாரு. கோயில்லெ நாங்க பாத்ததெவுடவும் அந்தம்மா இன்னமும் மெலிஞ்சிருந்துச்சாம். அந்தம்மாவைப் பாடையிலே தூக்கி வச்சவுங்க ரெண்டே பேருதான்னாப் பாத்துக்கங்களேன்.

இவ்வளவு நேரமும் அமைதியாகக் கதைகேட்டு வந்த கணபதி இந்த இடத்தில் மறித்தார்.

நம்ம கூட்டாளின்னா, ஏதோ ஒரு சுமெ எறங்கிச்சுன்னுதானே நினைப்போம்? அந்த மனுசன் ரெம்ப ஒடைஞ்சு போயிருந்தாரு. 'வீடு வெறிச்சுன்னு போகுமுங்களே'ன்னு திரும்பத் திரும்பப் பொலம்புனாரு. நான் அவருகிட்ட ஆறுதலாச் சொன்னேன். 'விடுங்க, ஒங்களுக்குன்னு ஒரு கலியாணம் ஆயிருச்சுன்னா வீடு திரும்பவும் கலகலப்பாயிரும்.' அவரு என்னா சொன்னாருங்கிறீங்க?

ம்.

'இல்லீங்க. வைத்தீசுவரன் கோயில் போயிட்டு வா, ஒனக்கு விமோசனம் கிடைக்கும்'னு ஒரு பெரியவர் எங்கிட்டெச் சொன்னாரு இல்லீங்களா? அப்ப நானு மனசுக்குள்ளே நேந்துக்கிட்டேன், 'எங்கக்காவுக்கு மட்டும் சொகமாயிருச்சுன்னா, அவளுக்காகவே, நான் ஆயுசு முச்சூடும் பிரம்மச்சாரியா இருந்துர்றேன்'னு. இப்பிடி ஒரு விமோசனம்னு நான் நெனக்கலீல்லங்க'. எனக்குப் பகீர்ன்னது.

சுத்தானந்தம் மேக்கொண்டு சொன்னாரு, 'அதுக்காக நான் சாமியாரெல்லாம் ஆக மாட்டேங்க. இப்பச் செய்யிற தொளிலைச் தொடர்ந்து செய்யுவேன். இருக்கிற வரைக்கும் செயலாயிருந்துட்டு, மிச்சம் எதுவும் வைக்காமெப் போயிச் சேந்துருவேன். போதும்ங்க, ஒறவுன்னு வந்துருச்சுன்னா, எவ்வளவு ஆளமாச் போயித் தைக்குதுன்னு ரொம்பப் பாத்தாச்சு.'ன்னாரு. நாம என்னா சொல்ல முடியும் சொல்லுங்க.

இதுவரைக்கும் சொன்னதெல்லாம்கூட வயித்தெரிச்சல் இல்லேங்க. அந்தப் பொம்பளே, அதான் இவங்க அக்கா, தவறிப்போச்சே, அது இவரு கூடப்பெறந்த பெறப்பு இல்லையாம்.

என்றார் தங்கம். இதை நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லையா, சடாரென அடிவயிற்றில் ஒரு பந்து உருண்டது.

என்ன சொல்றீங்க?

ஆமாங்க, இவங்க அம்மா ஒரு பத்துநாளெப் போல ஆசுபத்திரியிலெ கெடந்துதானே செத்தாங்க? அப்ப சுத்தானந்தத்துக்கிட்டெச் சொன்னாங்களாம், 'ஒடம்பெறப்பு, ஒடம்பெறப்பு'ன்னு இம்புட்டு வாதைப்பட்டுதே அந்தப் பொம்பளே, நாகூர்லெ சந்தனக்கூடு திருளாப் பாக்கப் போயிருந்தப்ப, கூட்டத்திலே பெத்தவங்களைப் பிரிஞ்சு தனியா நின்னு அளுதுக்கிட்டுருந்த புள்ளெயாம். ஒண்ணரை ரெண்டு வயசிருக்கும் அப்ப. ஏதோ பேகம்ங்கிற மாதிரி பேரு மட்டும் மள¬லையாச் சொல்லத் தெரியும். அம்புட்டுத்தான். இவுங்க தூக்கீட்டு வந்து வளத்துருக்காங்க. பெரியவர் சொன்னது வாஸ்தவம்தானேங்க? முந்தின பெறவி எதுலெயோ இதுக ரெண்டும் ஒரு வகுத்துலே குடியிருந்திருக்கும்...

அந்த அம்மாள் பெருமூச்சு விட்டார். எனக்குள்ளும் ஒரு பெருமூச்சு உயர்ந்தது.

...இ ப்போ நான் முடியாமெக் கெடக்குறேனே, ஆரம்பத்திலே இம்புட்டு வேகம் கெடையாது. அப்ப அய்யங்காரு சொன்னாரு, இதுக்கு என்னோட பூர்வ செம்மத்திலே நான் வாங்குன சாபம்தான் காரணம் ன்னு. 'சரி, யார் வகுத்திலே எதுக்காக அடிச்சமோ'ன்னு நானும் நெனைச்சிக்கிட்டேன். என்னாடா, இவ அய்யங்காரு அய்யங்காருன்றாளே, அது யாருன்னு ரோசிக்கிறீங்கள்ளெ?

எங்கூரும் ஒங்க ஊருப் பக்கம்தான். துவரிமான். திருவேடகத்துலெ ஒரு அய்யங்காரு சோசியம் நல்லாப் பாப்பாரு. அனுமார் உபாசனெ

உள்ளவரு. ஆரூடமும் சொல்லுவாரு. மலெயாளத்துக்காரவுக மாதிரி சோவியெ உருட்டிப்போட்டுப் பிரசன்னம் பாப்பாரு.

எங்க வீட்டுலெ ஒரு செம்மண் கோலம் போடுறதுன்னா, மொதோ வேலையாக் கொலதெய்வத்துக்கு மஞ்சத்துணியிலே ஒத்த ரூவாயே முடிஞ்சு வைக்கும் எங்க ஆத்தா. ரெண்டாவது வேலையா, வண்டியெக் கட்டிக்கிட்டு அய்யங்காரெப் பாக்கக் கௌம்பீருவோம்.

எனக்கு முடியாமெப் போச்சா, எங்க அப்பன் ஆத்தா வந்து கூட்டிட்டுப் போனாங்க. அய்யங்காருகிட்டெ இவுங்க போயிக் கேட்டப்ப, 'பாப்பாவெக் கூட்டியாந்தாத்தான் சொல்ல முடியும்'ன்னுட்டாராம்.

ஆனா, இன்னோண்ணு சொல்லணும்ங்க. எங்க அத்தெ இருந்துச்சே, அதான் இவுங்களெப் பெத்த அம்மா அப்பிடிப் பொம்பளையெல்லாம் பாக்கவே முடியாது. அம்புட்டும் தங்கம். ஒவ்வொரு வீட்டுலெ, கலியாணப் பொண்ணுக்கு சீக்குன்னா, 'மறைச்சுவச்சு நம்ம தலெயிலெ கட்டீட்டாங்க, அது இது'ன்னு எம்புட்டு ரகளெ ஆயிரும்? எங்க அத்தெ ஒரு சொல்லு பேசலையே. ஒறவுகாரவுக கேக்கும்போதெல்லாம், 'பாப்பா எனக்கு மருமக இல்லே, மக'ன்னு வாய்க்குவாய் சொல்லும். அப்பிடியாக்கொத்த மகராசிக்கிப் பீமூத்தரம் அள்ளக்கூட எனக்குக் குடுப்பினெ இல்லாமெப் போச்சே?

ஆனா, எனக்கு வந்த சீக்கு இல்லேங்க இது. நாடி சோசியரு அடிச்சுச் சொல்லீட்டாரு. இவரு பொண்டாட்டியா யாரு வந்திருந்தாலும் அவுங்களுக்கு இந்தச் சீக்கு வந்திருக்குமாம். நாடி அப்பிடித்தான் பேசுச்சாம். அய்யங்காரு வேற மாதிரிச் சொன்னாரேன்னு கேட்டோம். அவரு தெளிவா எடுத்துச் சொல்லீட்டாரு.

பொம்பளை பூர்வசெம்மத்துக்காகச் சீப்படுறதுன்னா, கலியாணத்துக்கு முன்னாடியே தொத்திருமாம். இப்ப சுத்தானந்தத்தோடெ அக்கா சாகலே? அது மாதிரி. கலியாணத்துக்குப் பெறகு ஒண்ணு வந்து சேருதுன்னா, அவ வாக்கப்பட்ட குடும்பத்திலே உள்ள பரம்பரெ வில்லங்கம்தான் காரணமாம்.

இன்னொரு நூத்தம்பது ரூவா கட்டி இவரு நாடியெ எடுத்துப் பாத்தோம். அதுலெதான் தெரிய வருது. இவரு பாட்டனோடெ பாட்டனோடெ பாட்டன் காலத்துலெ செய்வினெ வச்சிருக்காங்களாம். எத்தனையோ தலெமொறேன்னு நாடி சோசியரு கணக்கு வாசிச்சாரு. சோள ராசா காலத்துலெயாம். ஒட்டக்கூத்தருன்னு ஒரு பொலவரு இருந்தாருல்லே, அவரு வம்முசமாம் எங்க வீட்டுக்காரரு. ஒட்டக்கூத்தருக்கும்

ராசாங்கத்திலெ இருந்த மத்தப் பொலவருகளுக்கும் ஆகாதாமே? எதிர்க்கோஸ்டிக்காரவுங்க என்னாத்தையோ ஏவி விட்டுட்டாங்க. இவங்க வம்சத்துலெ பொறக்குற தலைச்சம் புள்ளெகளெ நிம்மதியா இருக்க விடாது.

‘சரி அய்யா, இவருக்குத்தானே செய்வினெ இருக்கு, நான் ஏன் கஸ்டப்படணும்’னு அந்த சோசியரெக் கேட்டேன். அப்பல்லாம் நான் நல்லா வெடிப்பாப் பேசுவேன். அந்த ஆளும் சின்னவயசுக்காரருதான், அவரு சொல்றாரு, ‘நீங்க கேக்குறது வாஸ்தவம்தாம்மா, ஆனா எங்கெ அடிச்சா வலிக்குமோ அங்கேதானெ அடி விளுகணும்?’

ஆக, எங்க பொலவருக்குப் பாட்டெளுதுற பகுமானந்தான் வரலே, பரம்பரெ சாபம் தானா வந்து தொத்தீருச்சு அவரு சம்சாரத்து ஒடம்புலே...

எ ல்லாரும் மறுபடியும் சிரித்தோம். வாசலில் நிழலாடியது. தொடர்ந்து, ‘ஸார், கூரியர்’ என்று சப்தம் கேட்டது. மலர் எழுந்து ஓடினாள். இருந்த இடத்திலிருந்து எட்டிப் பாக்க முயன்றார் தங்கம். கையிலே ஒரு உறையுடன் திரும்பி வந்தாள் மலர். தடிமனான வெளிநாட்டுத் தபால் உறை. தங்கத்திடம் கொடுத்தாள். தங்கத்தின் கண்கள் மினுங்கியபோது, முகம் வெகுவாகப் பொலிவு கொண்டது.

எம் மக எளுதீருக்கா. ஏங்க நாஞ் சொல்லலே, ரெண்டு நாளாப் பச்சி சொல்லுது, கலா கடுதாசி வரும்ன்னு...?

கணபதியும் மலரும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

ஒங்களுக்குக் கேலியாத்தான் இருக்கும். பெரியவுங்க சும்மாவா சொல்லிவச்சிருக்காங்க? பல்லியும் பச்சியும் சும்மாச் சொல்லாதுன்னு...

பதனமாகத் தங்கம் கிழித்த உறைக்குள் கடிதமும், இரண்டு புகைப்படங்களும் இருந்தன. கைக்கொன்றாகப் படங்களை வைத்துக்கொண்டு மாறி மாறி முத்தமிட்டார் தங்கம். கண்கள் கலங்கிச் சிவந்தன.

அவ பேரன் போட்டோ. அதுதான்...

என்று தர்மசங்கடமாகச் சொன்னவாறு எழுந்தார் கணபதி. மனைவியின் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றார். மலரைப் பார்த்தார். அவள் மெல்லத் தங்கத்தின் அருகில் சென்று தோளோடு உரசிக் கொண்டு நின்றாள்.

...ஏத்தா மலரு, சோறு வைக்கிறியா? அதென்னா அப்பிடிப் பாக்குற? இவுகல்லாம் நம்ம வீட்டுலெ கைநனைப்பாகளான்னா? அதெல்லாம் மொதல்லெயே கேட்டுட்டேன். இவரு அப்பிடியாக்கொத்த ஆளில்லே. நீ எலெயெப் போடு.

பின்புறம் சென்று கை கழுவிக்கொண்டு வந்தேன். வீடு முழுவதும் ஒருவிதமான சுத்தமும் நேர்த்தியும் நிரம்பிப் படர்ந்திருக்கிறது. எல்லா இடத்திலும் ஏதாவது இறைந்து கிடக்கும், தூசு படிந்து கிடக்கும் என்னுடைய வீடு ஞாபகம் வந்தது. இது ஒரு சின்னப் பெண்ணின் பராமரிப்பில் இருக்கிற வீடு என்று யாராலும் சொல்ல முடியாது.

மலரின் சமையலும் அலாதியான ருசியுடன் இருந்தது.

இப்பிடியே கொஞ்சதூரம் நடந்துட்டு வருவமா? ஒங்களுக்கொண்ணும் அசதியா இல்லேல்ல?

என்று கணபதி கேட்டார். முகம் கழுவிய பின்னரும் குட்டித் தூக்கம் முற்றாகக் கலைந்திருக்கவில்லை எனக்கு. காஃபி குடித்துக்கொண்டு இருவரும் வாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்தோம்.

சேச்சே அதெல்லாமில்லே. போகலாம்.

ராத்திரி தங்கீட்டுக் காலையிலெ ஊருக்குப் போய்க்கிறலாமில்லே? அவசர வேலெ ஒண்ணும் இல்லையே?

அதெல்லாம் ஒண்ணும் கெடையாது. நாளைக்கிக் காலையிலெ கிளம்பினாப் போதும்.

மாமா, கடைக்கா போறீங்க?

காலித் தம்ளர்களை எடுத்துப்போக வந்த மலர் கேட்டாள்.

இல்லத்தா, இங்கிட்டு சாலாச்சியம்மன் கோயில் பக்கம். கடைக்கி நாளைக்கித்தான் வருவேன்னு ராசப்பன்கிட்டெச் சொல்லியிருக்கேன். ஒனக்கு எதுனாச்சிம் வாங்கிட்டு வரணுமா?

இல்லே, அத்தைக்கி மருந்து வாங்கணும். அதான். பரவால்லே, நாளைக்கி வாங்கிக்கிறலாம்.

வெயில் வெகுவாகத் தணிந்து விட்டது. விசாலட்சியம்மன் கோயில் முகப்பு நிலையின் மூன்றாள் உயரக் கதவை அர்ச்சகரும் காவலாளியும் சேர்ந்து தள்ளித் திறந்துகொண்டிருந்தார்கள். கோயில் வாசலுக்கு நேராக நீண்ட தெரு ஒரு சிறு கால்வாயில் சென்று முடிந்தது. கால்வாய்

வறள ஆரம்பித்துவிட்ட நாட்கள். மறு கரை வயல்வெளியாகப் படர்ந்திருந்தது. கட்டாந்தரையில் மஞ்சள் நிறக் குச்சங்களும், புல் கருகிய வரப்புகளும் என அறுவடை முடிந்த வயலின் வெறுமை முகத்தில் அறைந்தது.

குத்த வைத்த முழங்கால் வடிவத்தில் வேர்கள் முறுக்கிப் பதிந்திருந்த, பரட்டையாகத் தலை விரிந்திருந்த, சுற்றிலுமிருந்த வெட்டவெளியின் அமானுஷ்யத்தை அதிகரித்து நின்றிருந்த பெயர்தெரியாத மரத்தினடியில் ஆளுக்கொரு வேர்மீது அமர்ந்தோம். வேர்களின் இடையில் உருவாகியிருந்த இடைவெளி கால் விரிந்து அமர்ந்த மனிதக் கவட்டின் சாயல் கொண்டிருந்தது. எனக்கு அடுத்திருந்த வேரின் உடம்பில் குறுமணல் பரத்தி அரிவாள் தீட்டிய தடம் காய்ந்து வறண்டிருந்தது.

தங்கம் சும்மாச் சளசளன்னு பேசிக்கிட்டே இருக்காளோ?

என்று கேட்டுவிட்டுப் புன்னகைத்தார் கணபதி.

அது ஏன் அப்பிடிச் சொல்றீங்க? அவங்க எவ்வளவு விஷயம் சொல்றாங்க. எவ்வளவு ஞாபகம் வச்சிருக்காங்க. எனக்கெல்லாம் நாம நேத்துத் தங்கின லாட்ஜ் பேரே சட்டுன்னு ஞாபகத்துக்கு வராது. இதே, எங் கிட்டெ ஒருத்தர் பாலிஸி போட்டுருக்காருன்னு வைங்க, அவரு எந்த மாசம் போட்டாரு, எவ்வளவு ரூபாய்க்கி, ப்ரீமியம் எம்புட்டு, என்ன தவணையிலே கட்டணும்... எல்லாம் ஞாபகமிருக்கும். தொழில் சம்பந்தமான ஞாபகம் மட்டும்தான் ஸ்ட்ராங்கா இருக்கும். மத்தது எல்லாம் ஒடனெக்கொடனே மறந்துபோயிரும்...

இந்தப் பேச்சு மட்டும் இல்லேன்னா, ஒடம்பு முடியலையேன்னு நெனைச்சு நெனைச்சே அலண்டு போயிருவா, இல்லே? அதுனாலெதான் நானும் அவளெ நல்லாப் பேச விட்டுக் கேக்குறது.

ம்... ஆனா, இம்புட்டு விஷயம் சொன்னவுங்க, பெரியவரோட உங்களுக்கு எப்பிடிப் பழக்கமாச்சுன்னு சொல்லலியே.

வந்துருப்பா, அந்தக் கடுதாசி வராட்டி நீங்க நெனைச்ச எடத்துக்கு வந்து சேந்துருப்பா... அதெ அவ என்னா சொல்லுறது, நானே சொல்லுவேனே. நான் ஜவுளிக்கடைதானே வச்சிருக்கேன். கொள்முதலுக்காக அடிக்கடி கரூர் ஈரோடு ன்னு போவேன். எப்பொ கரூர் போனாலும் அப்பிடியே நெரூருக்கும் போயிட்டுத்தான் திரும்புவேன். அங்கெ பிரும்மேந்திரரு சந்நிதியிலே போயிக் கொஞ்சம்நேரம் உக்காந்திருந்தா மனசுக்குக் கொஞ்சம் இதமா

இருக்கும். இவரு சுத்தானந்தத்தெ வைத்தீசுவரன் கோயில்லெ வச்சுப் பாத்தமா. அதுக்கு மறுவாட்டி நெரூர் சந்நிதியிலே உக்காந்திருக்கேன். இவரும் அங்கே வர்றாரு. நீங்களே அடுத்தவாட்டி என்னைய மதுரைலே பாக்குறீங்கன்னு வச்சிக்கங்க. சும்மா சிரிச்சுட்டுப் போயிருவீங்களா. நின்னு நாலு வார்த்தெ பேச மாட்டீங்க?

ஆமா.

அந்தச் சமயத்திலெயெல்லாம் எனக்குப் பேசுறதுக்கு ஒரே விசயம்தாங்க இருந்துச்சு. எம் புதுப் பொண்டாட்டி இப்பிடிச் சொகமில்லாம இருக்கா. எங்க ஆத்தா வேற, பேரப் புள்ளையெ எப்படா பெத்துக் குடுக்கப் போறீங்கன்னு சொம்மா அரிச்சிக்கிட்டே இருக்கு. அதென்னா, செடி வளத்துக் காய் புடுங்குற சமாச்சாரமா? என்னா கடவுளே, ஒரு வளியும் விடமாட்டேங்குறியேன்னு போற கோயில்லெயெல்லாம் மறுகிக்கிட்டே இருப்பேன்.

இவுங்களுக்கு அப்பிடி என்னதான் ஆச்சு?

சொன்னா யாரும் நம்ப மாட்டாங்க சார். காலையிலே எந்திரிச்சா மொகமும் ஒடம்பும் பெரிசா வீங்கிரும். இவ ஆளு வேற நல்லா செவப்பா? சீமெப் பன்னி கணக்கா ஆயிருவா. வெயில் ஏற ஏற ஒடம்பு வத்தீரும். செல நாள், கைகால் விரலெல்லாம் முறுக்கிக்கிரும். நெசமாவே முறுக்கீரும்ங்க, தாம்புக் கயிறு கணக்கா. சாப்பாடு எடுக்காது. வலுவந்தமா ஒரு வாய் முளுங்கினா, வாந்தியாயிரும். திடீர்னு மாறுகண்ணு காட்டும். ஒரு காலு மட்டும் யானெக்காலு சைஸுக்குப் பெருத்துரும். நடு ராத்திரிலே எந்திரிச்சு உக்காந்து அளுக ஆரமிச்சான்னா, விடியவிடிய அளுவா. சில நேரம் இவ கொரல் மாதிரியே இருக்காது. நாயோ நரியோ ஊளையிடுற மாதிரி இருக்கும். திடீர்ன்னு வெறி பிடிச்சுரும். ரவுக்கையெக் கிளிச்சுக்கிருவா. நம்ம துணிமணியெக் கிளிச்சுருவா. விடிஞ்சதும், அதே பொம்பளெதானா இதுன்னு நமக்கு ஆச்சரியமாயிரும். அம்புட்டு சாந்தமா இருப்பா.

ஏயப்பா, கேக்கவே பயம்மா இருக்கே.

நம்மளெ மாதிரி ஆளுக்கு அப்பிடித்தானே இருக்கும். உள்ளூர்லெ எங்க குடும்ப டாக்டர் ஒருத்தர் இருந்தாரு. அவரும் காலமாயி பத்து வருசம் ஆச்சு இப்ப. நல்ல கைராசிக்காரரு. அவருகிட்டெக் கூட்டிட்டுப் போவேன். 'இந்த மாதிரிப் பண்ணுது'ன்னு சொன்னா ஒடனே சிரிக்க ஆரமிச்சுருவாரு. டெஸ்ட்டெல்லாம் எடுத்துப் பாத்தாரு, 'ஒண்ணும் ப்ராபளமே இல்லியே கணபதி'ம்பாரு. மதுரைலெயே பெரிய

சைக்காலஜி டாக்ட்டர்ட்டெக் காட்ட எளுதிக் குடுத்தாரு. ரொம்பப் பெரிய டாக்டரு அவரு. ஒரு தடவை சும்மாப் பாக்குறதுக்கே ஐநூறு ஆயிரம்னு வாங்குறவரு. நாலைஞ்சு தடவெ போனோம். அவரு பப்பும் ஒண்ணும் வேகலே.

ம்.

இது அம்புட்டையும் சுத்தானந்தத்துக்கிட்டெ சொல்லிப் பொருமினேன். நாஞ் சொன்னதெ ஸீரியஸாக் கேட்டு நம்புன மொதோ ஆளு அவருதான். 'நான் ஒரு வளி சொல்லுறேன், அது பிரகாரம் செஞ்சு பாக்குறீங்களா?'ன்னு கேட்டாரு. எத்தெத் தின்னாப் பித்தம் தெளியும்னு நொந்துபோயில்ல கெடக்கோம். இதென்னா கேள்வி. அவரு கையெப் பிடிச்சுக்கிட்டேன். 'தாராளமாங்க. ஒங்க மூலியமா இது தீரணும் னு இருக்கோ என்னமோ'ன்னு சொல்லும்போது எனக்கு அளுகையே வந்துருச்சு.

ம்.

அப்பத்தான் பெரியவரைப் பத்திச் சொல்லுறாரு. அதுவும் உறுதியாச் சொல்லலே. 'நான் கேட்டுப் பாக்குறேன். அவரு ஒத்துக்கிட்டாருன்னாப் பாக்கச் சொல்லலாம்'ன்னாரு.

ம்.

பெரியவர்கிட்டெ இவளைப் பத்திச் சொன்னதும், 'அந்தம்மாளுக்கு நாம உபகாரம் செஞ்சே ஆகணுமேப்பா'ன்னு சொல்லிப்புட்டாராம். அதுக்கு என்னா காரணமாம்ங்கிறீங்க?

சொல்லுங்க.

தங்கத்தோட குடும்பம் பரம்பரை பரம்பரையா சிவபக்தி உள்ள குடும்பம். குஞ்சு குளுவான்லெருந்து கிளடுகள்வரெ எல்லாருமாச் சேந்து பிரதோச விரதம் இருப்பாங்க. அந்தப் புண்ணியம் பூரா இவ கணக்குலெ வந்து உக்காந்துருக்கு. அதுனாலெதான் இப்பிடி ஒரு பாதுகாப்பு கிடைச்சதுன்னு தங்கம் சொல்றா. ஊர் ஊரா அலெஞ்சு வைத்தியம் பாத்தமா? சின்னாளப்பட்டியிலெ ஒரு லெப்பைகிட்டெப் போனோம். அவரு பெரிய ஆளுன்னு ரெம்பப் பேரு சொன்னாங்க. லெப்பை அடிச்சுச் சொல்லீட்டாரு. 'பூர்வ செம்ம வினைங்கிறதெல்லாம் புளுகு. இந்த செம்மத்திலெதான் செய்வினை வச்சிருக்காங்க. இன்னாருன்னு சொல்றதுக்கு எனக்கு அதிகாரமில்லே. ஆனா, ரொம்ப சுளுவாத் திருப்பீறலாம். சொல்லுங்க, வச்சவுங்களுக்கே திருப்பி விட்ருவமா?'ன்னாரு.

ம்.

நாங்க ரெண்டுபேருமே வேகமாத் தலையாட்டிட்டோம். அந்தக் கருமத்தே நாம செய்வானேன்? லெப்பெ என்னா சொன்னாருங்கிறீங்க?

ம்.

‘இப்பிடி எங் கையெக் கட்டிப் போடுறீங்களே? திருப்புறதுண்டா நிமுசமாச் செய்துருவேன். எடுக்குறது ரெம்பக் கஸ்டமாச்சே? மலெயெப் பொரட்டுறது மாதிரியாச்சே?’ன்னு லெப்பெ பொலம்புனாரு. நாங்க வச்ச ரூபா நோட்டெத் தீண்டக்கூட மாட்டேன்னுட்டாரு. ‘செய்யாத வேலைக்கி என்னாத்துக்குத் தச்சணெ? போயிட்டு வாங்க. நல்லா இருப்பீங்க’ன்னாரு. நாங்களும் பிடிவாதமா நின்னு திரும்பி வந்துட்டோம். சுத்தானந்தம் இதெத்தான் காரணம்ங்குறாரு. பெரியவரானா, வேறெ மாதிரிச் சொன்னாராம். ‘மனுச வாழ்க்கைலே காரண காரியம் சொல்ல முடியாத விஷயங்கள் எவ்வளவோ இருக்கு’. இப்பிடித்தான் அவரோடெ குருநாதரு அடிக்கடி சொல்வாராம்.

நான் கேக்குறேன்னு தப்பா எடுத்துக்கிற மாட்டீங்களே?

அட, நீங்க என்னாங்க. இந்த ரெண்டுநாள் பளக்கத்திலே இதுகூடவா புரியாமெப் போகும்? சும்மாக் கேளுங்க.

ஒங்க வீட்டம்மாவுக்கு முளுசாக் குணமான மாதிரித் தெரியலையே. இன்னமும் வீல்ச்சேர்லெதானே இருக்காங்க?

நீங்க கேக்குறது முளுக்க நாயங்க. ஆனா, இப்பிடி யோசிச்சுப் பாருங்க. மாசத்திலே பாதிநாள் கொளந்தெ மாதிரித் தவள்ந்துக்கிட்டிருந்த பொம்பளெ. இன்னதுதான் செய்யும்னு ஒரு கணக்கில்லாமெ வாதைப்பட்டவ. இன்னைக்கிச் சிரிச்ச மொகத்தோடெ உக்காந்திருக்கா. ரெண்டு பிள்ளெ பெத்திருக்கா. ரெண்டும் ஆரோக்கியமான பிள்ளெக. ரெண்டும் வெளிநாட்டுலெ இருக்குது. வீட்டுலெ வசதிக்கு ஒரு கொறைவுமில்லே. இம்புட்டும் நடந்துருக்கு. ஒரு மருந்துண்டா, மாயமுண்டா? பளைய தங்கத்தெப் பாத்திருந்தீங்கன்னா ஆச்சரியத்திலெ உங்களுக்குப் பேச்சே நின்னிருக்கும் இன்னைக்கி. வீல்ச்சேர்லெ இருக்குறது இப்பத்தான் ஒரு ரெண்டு மாசமா. ஊர்லெ இவங்க வீட்டெ மாடி எடுத்துக் கட்டுறாங்க. அதெப் பாக்குறேன்னு போனவ, புதுச் சொவத்திலே சாஞ்சிட்டா போல. ஈரம் காயாத செவுரு. கீளெ விளுந்து தொடையிலெயும் முன்னங்கால்லெயும் எலும்பு முறிஞ்சு போச்சு. வயசாகுதால்லியா, கொணமாகுறதுக்கு இன்னம் நாலைஞ்சு மாசமாகுமாம். இல்லாட்டி, நடமாட்டமெல்லாம் நம்மளெ மாதிரித்தான்.

அப்பிடிச் சொல்றீங்களோ...? எனக்கு இன்னோண்ணு கேக்கணும்னு தோணுதுங்க.

கேளுங்க.

இந்த ரெண்டு நாள் அனுபவத்துலே பாக்குறேன். நீங்க ரெண்டு பேருமே யாருக்கும் தீங்கு நெனைக்காதவங்களாத் தெரியிறீங்க. இது நானா நெனச்சிக்கிறதில்லேங்குறதுக்கு, சுத்தானந்தமே சாட்சி. இருபத்தைஞ்சு வருஷமா சிநேகிதம்ங்கிறதெல்லாம் எவ்வளவு பெரிய விஷயம்? ஒங்களுக்குப் போயி யாருங்க செய்வினை வச்சிருப்பாங்க?

அந்த ஆச்சரியம்தானே எங்களுக்கும் தீராமெ இருக்கு?

லெப்பைகிட்டெக் கேட்டுருக்கலாமே?

கேக்காமெ இருப்பமா? அதெச் சொல்றதுக்கு அவருக்கு அதிகாரம் கெ¬டையாதாம். சின்ன வயசிலே புருசனெத் தவறவிட்ட பொம்பளென்னு ஒரு அடையாளம் மட்டும் சொன்னாரு.

ஒங்க ஒறவுலே அப்பிடி யாராவது இருக்காங்களோ?

இதென்னாங்க கேள்வி? எல்லார் வம்சத்திலெயும் அப்பிடி யாராவது இருக்கத்தான் செய்வாங்க. எங்க அப்பா வளியிலே ரெண்டு பொம்பளைக. ஆத்தா வளியிலே நாலுபேரு இருக்காங்க. தங்கம் வீட்டுலெயும் நாலைஞ்சு கிளவிக இருக்கு. அந்தக் காலத்துலே ரெண்டு வயசிலெயும் மூணு வயசிலெயும் கல்யாணத்தெப் பண்ணி வச்சு, அஞ்சு வயசிலெயும் ஆறு வயசிலேயும் தாலியறுக்குறது சகஜம்தானெங்க. அவுங்கள்லெ யாரென்னு நெனைப்பீங்க?

அது சரிதான்.

இப்பிடிச் சந்தேகப்பட ஆரமிச்சா, அவுங்கள்லெ ஒர்த்தருகிட்டேயும் சாதாரணமாப் பேச முடியாதில்லையா? ஏற்கெனவே பாவப்பட்ட சென்மங்க, ஆம்பளை வாசனெ தெரியாமலே ஆயுசு முளுசையும் களிச்சிருக்காங்க. நாம வேற விரோதம் பாராட்டணுமா...? ஏதோ, இந்தமட்டுக்கு, நம்ம பிள்ளெக நல்லா ஆரோக்கியமா வசதியா இருக்கால்லியா? அதெப் பாத்து நிம்மதிப்பட்டுக்கிற வேண்டியதுதான்...

மண்வெட்டியைத் தோளில் சுமந்துகொண்டு நாலைந்துபேர் கடந்து சென்றார்கள். எதிர்க்கரையின் விளிம்பில் புதைவதற்காக இறங்கிக் கொண்டிருந்த சூரியன் பிரம்மாண்டமான ஆரஞ்சுப் பழமாக விரிந்திருந்தது. எரிக்கும் ஆரஞ்சு நிறத்தில் கனிவும் சேர்ந்திருந்தது. எவ்வளவு நேரம் தொடர்ந்து பார்த்தாலும் கண் கூசவில்லை.

பொறப்புடுவமா? இருட்டிறப் போகுது.

என்றவாறு எழுந்தார் கணபதி. சந்தானமும் எழுந்தார். வரும்போது நடந்ததைவிடச் சற்று வேகமாகவே நடந்தார்கள். இரண்டு சாரியிலும் வாசலில் திண்ணையும் கூரையைத் தாங்கும் மரத் தூண்களும் கொண்ட பழைய கால வீடுகள். அந்தி முற்றிவரும் வேளையில் பழமை இன்னும் அதிகரித்த மாதிரித் தோன்றியது. பஜனை மடம் அருகில் வந்தபோது சடாரென்று நடு வீதியில் நின்றார் கணபதி.

நீங்க ஊத்துக்குளியிலே போயி, அவரையும் பாக்கணும்ங்க. அப்பிடியாக்கொத்த மனுசங்களையெல்லாம் பாக்குறதே புண்ணியம்தான்.

யாரே?

அவரெத்தான். சுத்தானந்தத்தெ. நான் போன் நம்பர் தாரேன். ஊர்லெ இருக்காரான்னு கேட்டுக்கிட்டு ஒரு தபா போயிப் பாருங்க.

அவசியம் பாக்குறேன். நாளைக்கிக் காலையிலே மதுரைக்கிப் போறேனா... வீட்டுலெ சொல்லிட்டு, தொழிலுக்கு வேணுங்கிற ஏற்பாடுகளெச் செஞ்சுட்டு, கூடிய சீக்கிரம் அவரெப் போயிப் பாக்குறேன்.

எதுவும் பேசிக்கொள்ளாமல் நடந்தோம். எதிரில் வந்த ஓரிருவர் கணபதியைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு போனார்கள். நேரெதிரே, தெரு சென்று முட்டுமிடத்தில், விசாலாட்சியம்மன் கோயில். சந்நிதியில் எரிந்த மின்விளக்குகளின் வெளிச்சத்துக்கு அப்பால் கறுப்பான இருட்டு மையமும், அதில் இரண்டு மூன்று சுடர்கள் கனிந்திருப்பதும் தெரிந்தது. சக்கரச் சுழற்சியில் உயர்ந்து தாழும் தூபத் தட்டு. கைமணியின் ஒலி. தீபாராதனை ஆகிறது... கோயிலைத் தாண்டி வீடு நோக்கித் திரும்பும்போது, சற்றுத் தணிந்த குரலில் சொன்னார் கணபதி.

...நீங்க கேட்டது பரவால்லேங்க. இவளோடெ சித்தப்பன் ஒருத்தரு வீட்டுப் படியேறி வந்து கேட்டாரு. 'ஏந் தங்கம், வியாதி கொணமாகுறதுக்கு இப்பிடிப் பூசெ வெரதம்னு செஞ்சாப் போதும்னா டாக்ட்டர்களே வேணாமெ ஒலகத்துலெ?' தங்கம் மொகரேலெ அடிச்ச மாதிரிப் பதில் சொன்னா. 'ஆமாங்க சித்தப்பா... வியாதி ஒடம்புக்குள்ளெ இருந்துச்சுன்னா டாக்டருக போதும், ஒடம்புலெ இல்லாத வியாதி வந்து தொத்தீருச்சுன்னா என்னா செய்யுறது சொல்லுங்க'. அவளெ மாதிரிப் படக்குன்னு பதில் சொல்ல வராதுங்க நமக்கெல்லாம்.

வீடு வந்துவிட்டது.

...பெரியவரைப் பத்தித் தெரியாதவுங்களுக்கு அவரைப் புரிஞ்சுக்கிர்றது ரெம்பக் கஸ்டம்ங்க. பளக்கமாயி ரெண்டு மூணு வருசம் களிச்சு, இப்பிடித்தான் ஒருநா, வாசலுக்கு நேரெ ஒக்காந்திருக்கேன். வகுத்துலெ எங்க கலா எட்டு மாசம் முடிஞ்சு ஒம்பது பெறந்திருச்சு. எந்நேரமும் எங்கிட்டாவது ஒதச்சுக்கிட்டே கெடப்பா. எங்க மாமியா மகராசி காலமாயி ஒரு நாலைஞ்சு மாசம் இருக்கும். பேரப்புள்ளெ மருமக வகுத்துக்குள்ளே வந்து சேந்துட்டான்னு தெரிஞ்சதுக்கப்பறம்தானே பொறப்புட்டுச்சு அந்தப் பெரிய மனுசி.

இந்த மலரு வர்றதுக்கு முன்னாடி நாலஞ்சு பேரு எனக்கு ஒத்தாசைக்கு இருந்தாங்க. ஆனாலும், இந்தப் பிள்ளைக்கி ஒறே போடக் காணாது அந்தப் பொம்பளைகளெல்லாம். இவ என்ன மூணாவது கொளந்தெ மாதிரியில்லே இருக்கா. அப்ப, சுசிலான்னு ஒரு கொமரிப்பொண்ணு இருந்தா எங்களோடெ. பாருங்க, என்னாத்தையாவது சொல்லப் போக, யாவுகம் எங்கிட்டோ இளுத்துக்கிட்டு ஓடீருது...

வாசலுக்கு நேரெ ஒக்காந்துருக்கனா. கோயில் தெரு முக்குலெ ஒரு ஆள் நொளையிது. உத்துப் பாக்குறேன். பெரியவரேதான். எனக்குப் பரபரன்னு ஆயிருச்சு. வாசல்லெ போயி 'வாங்க'ன்னு சொல்ல வேணாமா? இந்தப் புள்ளெ சுசீலா கொல்லெப்பொறம் இருந்தவளெ அவசரமாக் கூப்பிட்டேன். 'ஏத்தா ஓடியா, வாசக் கதவெத் தெறந்து வையி'ன்னு சத்தம் குடுத்தேன். அவ சாவியெ எடுத்துக்கிட்டு ஓடியாறா.

நான் தட்டுத் தடுமாறி எந்திரிச்சு செவுத்தெப் பிடிச்சுக்கிட்டு வாசலுக்கு வந்தேன். கண்ணுக்குக் கண்ணு பாக்குற தூரத்துக்கு வந்துட்டாரு. எம் மொகத்தெயே பாத்துக்கிட்டு வீட்டெத் தாண்டிப் போறாரு. முன்னெப் பின்னெத் தெரியாதவுங்களெப் பாக்குற மாதிரி ஒரு பார்வெ. அப்பிடியே போயே போயிட்டாரு. எனக்கு ரெம்பச் சங்கட்டமாயிருச்சு. இவுகளுக்கு போனெப் போட்டு அளுதேன். கடையெ ராசப்பன்கிட்டெ விட்டுட்டு இவரு ஓடியாந்தாரு. என்னென்னமோ ஆறுதல் சொல்றாரு. எனக்கு அடங்கலே. அன்னைக்கிப் பூராம் அளுதுக்கிட்டெ இருந்தேன்.

இது நடந்தது செவ்வாக்கிளமெ. அந்த சனி விட்டு அடுத்த சனிக்கிழமை அதே நேரத்துக்கு வாசக் கதவெத் தட்டுற சத்தம் கேக்குது. பெரியவரேதான். வாசல்லெயே அவரு காலல விளுந்து அளுதேன். 'இப்பிடிப் பண்ணிட்டீங்களேப்பா. எந் தெய்வம் என்னெக் கைவிட்டுருச்சுன்னுல்ல பயந்துபோனேன்'னு குமுறினேன். அவரு

சாவகாசமாச் சொல்லுறாரு. ‘ஒன்னெப் பாக்கலாம்னுதான் வந்தேன் தங்கம். என்ன செய்ய, தெரு முக்கு திரும்பும்போது உத்தரவு ரத்தாயிருச்சு. அன்னைக்கி வேற என்ன நடந்துச்சுன்னு நெனைச்சுப் பாரு’ங்குறாரு.

நான் ஆடிப் போயிட்டேங்க. அந்தச் செவ்வாக்கிளமெ மதியச் சாப்பாடு முடிச்சு எங்க வீட்டுக்காரரு ஒறங்கிட்டுருந்தாரா, அப்பத்தான் தந்தி வந்தது. அருப்புக்கோட்டையிலெ இவரொட சொந்தச் சித்தப்பா தவறிப் போனாருன்னு. பங்காளிகளில்லே, கருமாதி வரைக்கும் தீட்டு உண்டா இல்லெயா?

இதுலெ ஆச்சரியம் என்னான்னா, பெரியவரெ நான் பாத்தனே, அதே சமயத்துக்குத்தான் அங்க தலெ சரிஞ்சிருக்கு.

அப்பறம் என்ன செய்ய, இன்னொரு தபா அவரு கால்லெ விளுந்து எந்திரிச்சேன். எந் தெய்வம் ஒரே வார்த்தெ சொல்லீருச்சு. ‘ஒன்னெப் போயி யாராவது விட்டுக்குடுப்பாங்களா தங்கம்?’ அந்த ஒரு சொல்லு போதும்ங்க. நான் செம்மமெடுத்த பலன் கெடெச்சுப் போச்சு. இன்னமே எதெ வேணும்னாலும் தாங்கிக்கிருவேன்.

த ங்கம் அமைதியானார். கண்கள் வெகுவாகக் கலங்கியிருந்தன. நன்கு இருட்டிவிட்டது. தெரு விளக்கின் மங்கலான ஒளி இருளின் அழுத்தத்தை அதிகரிக்கத்தான் செய்தது. கம்பி வரிசைக்கு பின்னாலிருந்த உள்த்திண்ணையில் நிலவிய தீர்க்கமான மௌனத்தைப் பிடிவாதமாகக் கீறிக்கொண்டிருந்தது சுவர்க்கோழியின் குரல்.

போன வாரம்வரை, இந்தச் சமயம் எனக்கு மிகவும் பரபரப்பான வேளையாக இருந்தது. வாடிக்கையாளர்களைச் சந்திப்பதற்காக மதுரையின் கசகசத்த வீதிகளில் இருசக்கர வண்டியில் பறந்துகொண்டிருப்பேன். விளக்கு வைத்த நேரத்தில், தொழிலுக்குச் சம்பந்தமில்லாத ஒரு உரையாடலில், அந்நிய மனிதர்களோடு இப்படி உட்கார்ந்திருப்பது நானேதானா என்று சந்தேகம் வருகிறது.

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் துர்க்கை சந்நிதிக்கு அருகில் சித்தர் சந்நிதி இருக்கிறது. ஆளுயரம் உள்ள அமர்ந்த நிலைச்சிற்பம். அபூர்வமான திருத்தமும் தீர்க்கமும் வாய்ந்த விக்கிரகம். அவரைப் பார்க்கும்போதெல்லாம் தனக்கு உடம்பெங்கும் புல்லரித்துவிடுவதாகச் சொல்வாள் அம்மா. நிரந்தரமான தியானத்தில் இருக்கிறாராம் அவர். ‘தியானத்தின் உச்சத்தில் நிலைகொள்ளும்போது உண்டாகும் ஆனந்தத்தில்’ என்று சித்ராவின் தாய்மாமா திருத்தினார் ஒருமுறை.

இன்றைய சாயங்காலத்தில் அந்த சித்தரின் முகபாவம் போன்ற ஒன்று சேர்ந்திருக்கிறது. இந்தவிதமான தியானத் தன்மை போன்ற ஒரு பொழுது இதுவரை நான் அனுபவித்திராதது. வழக்கமான என் சாயங்காலங்களை ஒரே வீச்சில் காலி செய்துவிட்டு புத்தம் புதிய சாயங்காலம் ஒன்றுக்குள் தஞ்சம் புகுந்துவிட்ட மாதிரி உணர்ந்தேன். இன்னும் இன்னும் என்று இதை ஓயாமல் குடித்துக்கொண்டே இருக்க வேண்டும்போல அடங்காத ஆசை உயர்ந்தது எனக்குள்.

சம்மணமிட்டு செங்குத்தாகச் சுவரில் சாய்ந்து இரண்டு உள்ளங்கைகளையும் மடியில் புதைத்துக் கண்மூடி அமர்ந்திருந்தார் கணபதி. தங்கம் மறுபடி பேசத் தொடங்கினார்.

...இ ப்பிடித்தான் ஒரு தபா இங்கே வந்துருக்காரு. இதே எடத்துலே உக்காந்து பேசிக்கிட்டிருக்கோம். அப்ப நான் எங்க மகனெ உண்டாயிருக்கேன். அதுலெ, ஒரு ஆச்சரியம் பாருங்க, வருசம் பூரா விதவிதமாக் கஸ்டப்படுவேனே, ரெண்டு கொளந்தெகளும் வகுத்துலே இருந்தப்ப சர்வசாதாரணமா மத்த பொம்பளைக மாதிரித்தான் இருந்தேன்... துவரிமான்லே எங்க வீட்டுக்குள்ளாறெ நல்லபாம்பு வந்து நடுவீட்டுலெ படமெடுத்து ஆடுன கதெயெச் சொல்லிக்கிட்டிருந்தேன் அவர்ட்டெ.

சிரிச்ச மொகத்தோடெ சாவகாசமாக் கேட்டுக்கிட்டெ இருந்தவரு. திடீர்னு ஸீரியஸாயிட்டாரு. 'ஏம்மா தங்கம், உளுந்து இருக்கா நெறையா?'ன்னாரு. 'இருக்குங்களேப்பா'ன்னேன். ஒடனே எந்திரிச்சிட்டாரு. பின்னோடெயே நானும் எந்திரிச்சேன். 'முக்காப் படி எடுத்து ஊற வையி'ன்னு சொல்லிப்புட்டு வெளியே போனாரு.

ஒரு மணிநேரம் களிச்சுத் திரும்பி வந்தவரு, நேரா கொல்லெப்பொறம் போனாரு. தலையிலெ நாலு சொம்பு தண்ணியெ ஊத்திக்கிட்டு வந்தாரு. அடுப்பு முன்னாடி உக்காந்து உளுந்தங் களி கிண்ட ஆரமிச்சுட்டாரு. நல்லபடியாக் கிண்டி முடிச்சு ஒரு எவர்சில்வர் சம்படம் முளுக்க நெரப்புனாரு. அம்புட்டுத்தான், சட்டையெ மாட்டிக்கிட்டுக் கெளம்பீட்டாரு. நல்ல உச்சி வெய்யிலு. அக்னி நச்சத்திரம் அப்ப. மனுசரு செருப்பும் போடமாட்டாரு. நான் தாங்க மாட்டாமெக் கேட்டேன். 'என்னப்பா, வெய்யில் தாளப் பொறப்புடக் கூடாதா?' 'சமயம் தப்பீரும் தங்கம். பச்செ ஒடம்புக்காரியெ அப்பிடிக் காயப் போடலாமா?'ன்னாரு. 'ஒரு தம்ளர் மோர் குடு. குடிச்சுட்டுக் கிளம்புறேன்'ன்னாரு. அப்பறம் அவராச் சொன்னாரு. 'ஒன்னெ மாதிரித்தான் தங்கம், மதுரெ கோசாகுளம் புதூர்லெ எனக்கு ஒரு

பொண்ணு இருக்கா. அவளும் அப்பான்னுதான் கூப்புடுவா. வசந்தான்னு பேரு. தலைச்சங் கொழந்தெ பெறந்து இப்பத்தான் ஒரு நாழி ஆகுது. தாயும் சேயும் சவுகரியமா இருக்காங்க'ன்னாரு.

இவரு நம்மகூடத்தானே பேசிக்கிட்டு இருந்தாரு. இந்தத் தாக்கல் எப்பிடிக் கெடைச்சிச்சு? எனக்கு ஒண்ணும் புரியலே. 'சித்தெப் பொறுங்களேன், கடைக்கி போன் போட்டு இவுங்களெ ஒரு ஜட்கா அனுப்பச் சொல்லுறேன்' அப்பிடீன்னேன். 'அதெல்லாம் எதுக்கு தங்கம், குதிரெ மட்டும் நிழல்லெயா நடந்து போகுது. நாம செயலாத்தானே இருக்கோம்'னு சொல்லீட்டு விறுவிறுன்னு நடந்துட்டாரு...

அந்த வீட்டுக்கும் நேரெப் போயிருக்க மாட்டாரு. விருத்தியும் சூதகம்தானே? மதுரைக்கிப் போயி எப்பிடியாச்சம், யார் மூலியமாச்சும் அந்த வசந்தாகிட்டெச் சேர்ப்பிச்சுருப்பாரு.

கோ யிலில் அர்த்தஜாமம் நடக்கிறது. ஆலாட்ச மணியின் நாதம் பகலைவிடப் பல மடங்கு ஓங்கி ஒலிக்கிறது. நாங்கள் நால்வருமே, கோயில் மணியோசையின் பின்புலம்போலத் தெருவில் படர்ந்திருந்த பேரமைதியைப் பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தோம். மணியோசை ஓய்ந்த பிறகும் ரீங்காரம் நீடித்தது. அதுவும் ஓய்ந்தபிறகு நாதம் இன்னும் கேட்கிற மாதிரி சில கணங்கள் பிரமை தட்டியிருந்தது எனக்கு.

கோயிலின் நிலைக் கதவை இழுத்துச் சாத்தும் ஓசை மிகப் பெரிதாகக் கேட்டது. அர்ச்சகரின் கையில் சாவிக் கொத்து குலுங்கும் சப்தமும், திட்டிவாசல் கதவைக் காவலாளி உள்பக்கம் தாழிடும் ஒலியும் கேட்டன.

அத்தே, மணியாச்சே, சாப்புட வேணாமா?

என்று மலர் கேட்டாள்.

ஆமத்தா, அவிச்சு வச்ச இட்டிலி ஆறிக் குளுந்தே போயிருக்கும். போ, தட்டு எடுத்து வையி. பாலெக் காச்சீட்டீல்ல?

அது அப்பவே காச்சிட்டேன்த்தே.

நாவுகமா ஒறெ ஊத்தீரு. சாரு காலையிலெ வெள்ளனக் கெளம்புணுமாம். நாலு தோசையெ ஊத்திக்குடுத்து அனுப்பலாம். அவுங்கல்லாம் தயிரு இல்லாமெச் சாப்புட மாட்டாங்க.

இல்லேம்மா. காலையிலே சாப்பிட்டுக்கிட்டெல்லாம் இருந்தா நேரமாயிரும்.

அட நீங்க வேற. அதெல்லாம் வெறும் வகுத்தோட படி எறங்கப்

படாது. ரெண்டு தோசையெப் பிச்சுப் போட எம்புட்டு நேரமாயிரப் போகுது? மதுரை போயிச் சேர்ற வரைக்கும் வகுறு சும்மாக் கெடக்குமா. வாய்வு கிர்ருன்னு ஏறிருமே... ஏங்க, அவரு சுத்தானந்தம் கிட்டெப் பேசணும்னீங்களே?

அட, ஆமத்தா. பேச்சுவாக்குலே மறந்தே போச்சு பாரு.

அவசரமாக எழுந்து தொலைபேசியை நோக்கிப் போனார் கணபதி.

ரொம்ப அன்ட்டைமாயிருச்சே. காலையிலே பொறப்புடுறதுக்கு முன்னாடி வேணும்னாக் கூப்பிட்டுப் பேசலாம்.

என்றேன். தங்கம் சிரித்தார்.

இவுங்களெ மாதிரித் தொளில்காரவுங்களுக்கெல்லாம் நடுச்சாமம்தாங்க ஓய்வொளிவா இருக்குற நேரம். மத்தியானத்துலெதான் தொந்தரவு செய்யக் கூடாது. லேசா ஒரு செல்லத்தூக்கம் போட்டு எந்திரிப்பாங்க, பாவம்.

தங்கம் மறுபடியும் சிரித்தார். உள்ளே மலர் பாத்திரங்களை உருட்டும் ஒலி கேட்டது. கணபதியின் குரல் ஓங்கி ஆரம்பித்தது. பொருள் விளங்காமல் சப்தம் மட்டும் கேட்டது. மெல்லத் தணிந்துகொண்டே போய் நின்று, ரிஸீவரை லொடக்கென்று வைக்கும் ஒலி கேட்கும்வரை நாங்கள் மௌனமாக இருந்தோம்.

அத்தே, சாப்புட வரலாம்.

மலர் திண்ணையின் அருகில் வந்து அறிவித்தாள். திண்ணையிலிருந்து சக்கர நாற்காலிக்குத் தங்கம் இடம் பெயர்வதற்கு உதவினாள். மெல்லத் தள்ளிக்கொண்டு ஹாலுக்குப் போனாள். நான் பின்தொடர்ந்தேன். நான் பின்புறம் சென்று கைகழுவிக்கொண்டு வரும்வரை காத்திருந்த கணபதி.

ஸார். நீங்க ஈரோடு போகலே.

என்றார். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. வெகுதூரப் பிரயாணத்துக்குப் பெட்டி படுக்கையெல்லாம் கட்டிக் கொண்டு நிலையத்துக்குப் போனபிறகு ரயில் ஓடாது என்று தெரியவந்தமாதிரி ஏமாற்றமும் ஏக்கமும் உடனடியாக எனக்குள் நிரம்பின.

ஆனா, ஒங்களுக்கு விருப்பம் இருந்தா, மாயவரம் போகலாம்.

அங்கே போயி என்னாங்க செய்யப் போறாரு, பாவம். ஏன், சுத்தானந்தம் இவரெ வர வேணாம்னுட்டாரா?

என்று பதட்டமாகக் கேட்டார் தங்கம்.

அட, இவ ஒருத்தி. அப்பிடி மொகரையிலே அடிச்சமாதிரி பேசுற மனுசனா அவரு? 'பெரியவரைப் பத்தி சொல்லுற அளவுக்கு நானென்ன அம்புட்டுப் பெரிய மனுசனாங்கண்ணா?'ன்னு கேட்டுச் சிரிக்கிறாரு.

நீங்க ஒடனே 'சரீ'ன்னுட்டீங்களாக்கும்?

இல்லத்தா, 'பெரியவரெப் பத்திச் சொல்லாட்டிப் போங்க. ஒங்களெப் பத்திச் சொல்லலாமே'ன்னேன். 'அதான் என்னெப் பத்தி மதினி நல்லா விலாவாரியாச் சொல்லியிருப்பாங்களே, அதெவிடக் கூடுதலா நான் என்னங்கண்ணா சொல்லீறப் போறேன்'ங்குறாரு.

அவர்கள் இருவருமே மனமாரச் சிரித்தார்கள். சற்று நிதானப்பட்டவுடன்,

அப்பறம் எதுக்கு இவரெ மாயவரம் போகச் சொல்றீங்க?

மாயவரம் பக்கத்துலெ பந்தநல்லூர்னு ஒரு ஊர் இருக்கு. நம்ம ஹரிஹர சுப்ரமணியம் இன்னம் பதினஞ்சு நாளைக்கி அங்கெதான் ஜாகையாம். 'அவரெப் பாக்கச் சொல்லுங்க, பிரயோசனமா இருக்கும்'ன்னாரு சுத்தம்.

இதெச் சொல்லுங்க, நூத்துலெ ஒரு வார்த்தெ. நல்ல உருப்படியான ரோசனெங்க. அந்தத் தம்பியெ நீங்க கட்டாயம் பாத்தே ஆகணும். ஏங்க, பாத்தீங்களா, நமக்கு இந்த ரோசனெ வல்லியே. ஆயிரந்தான் சொல்லுங்க, சுத்தம் சுத்தம்தான். என்னா சொல்றீங்க?

மீண்டும் சிரித்தார்கள்.

அதுனாலேதான் நானும் ரொம்ப அளுத்தலே. சரீன்னுட்டென்.

அவரு யாரு, ஹரிஹர சுப்ரமணியம்?

நேர்லெ போயிப் பாருங்க. அசந்துருவீங்க. அதெல்லாம் வேற பெறவி. விளாம்பளம் பாத்திருக்கீங்கல்லே?

என்று தங்கம் கேட்டார்.

பாத்திருக்கேன்.

நல்லாக் கனிஞ்சிருச்சுன்னா, ஓடு தனியா, உள்ளாறெ இருக்கிற சதெ தனியா ஆயிருமில்லே?

ஆமா, குலுக்கிப் பாத்தாக் கொடகொடங்கும்.

அதுதாங்க நம்ம அரி. அப்பிடிப் பிள்ளெ ஒண்ணு பெறந்தாப்

போதுமே. அந்தத் தாயாருக்குக் கோயில் கட்டிக் கும்புடலாமே.

தங்கத்தின் முகம் மலர்ந்திருந்தது. கண்களில் குபுக்கென்று அடர்த்தியாக நீர் கட்டி நின்றது.

அ திகாலையில் தூக்கம் அமட்டிவிட்டது. தாமதமாக எழுந்து, தங்கத்தின் வற்புறுத்தல் தாங்காமல் நாலைந்து தோசைகளையும் தின்றுவிட்டுப் புறப்பட்டு வந்தபோது பேருந்து நிலையத்தின் பரபரப்பு சூடுபிடித்திருந்தது.

கணபதி உடன் வந்து பஸ்ஸேற்றிவிட்டார். ராத்திரி ஆழ்ந்த உறக்கம் என்று சொல்ல முடியாது. ஏகப்பட்ட கனவுகள் குறுக்கும் மறுக்கும் திரிந்து கீறிய தூக்கம்தான். என்றாலும் உடம்பில் சோர்வு இல்லை. பேருந்து நிலையத்துக்கு நடந்து வந்தது மனத்தையும் உடம்பையும் புதுப்பித்துவிட்ட மாதிரி உணர்ந்தேன். மதுரை பஸ் கிளம்பத் தயாராக இருந்தது. ஜன்னலோர இருக்கை. கணபதி கையசைத்து விடை தந்தார்.

ஊர் எல்லையைத் தாண்டுமுன் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டேன். உறக்கத்தின் ஆழத்தில்தான் முடிவெடுத்திருப்பேன் போல.

வாடிப்பட்டி வரும்போது உச்சி வேளை. என் மனம் ஆயத்தமாய் இருந்தது. தூக்கத்தின் இயல்பான பகுதி மாதிரி படி இறங்கி எதிர்த்திசை நோக்கி உறுமிக்கொண்டு நின்றிருந்த தஞ்சாவூர் வண்டியில் ஏறி அமர்ந்தேன். எழுந்து சென்ற பறவை மீண்டு வந்து அமர்ந்ததுபோல, விட்ட இடத்திலிருந்து தூக்கம் கவிந்தது.

✠

ஹரிஹர சுப்ரமணியம்

அடுப்பு மேடைக்கு நேர் மேலே இருந்த பல்லி தன்னையே உற்றுப் பார்க்கிறது என்று தோன்றியது சித்ராவுக்கு. சொந்தமாகக் கட்டிக் குடிவந்த ஓரிரு வருடங்களுக்குப் பூச்சி பொட்டு எதுவும் கிடையாது வீட்டில். புதிய டிஸ்ட்டெம்ப்பர், பெயிண்ட் மணங்களின் அழுத்தமான நெடியில் சில நாட்கள் மனிதர்களுக்கே மூச்சுத் திணறலாய் இருக்கும்.

வீட்டின் இடது பக்கம் இருந்தது வயல். பசுங்கதிர்கள் தலை உயர்த்தி நின்றன. ஆனால், உரிமையாளர் விலைபேசிவிட்டார். பெரியாஸ்பத்திரியில் கம்பவுண்டராக இருப்பவரிடம் அட்வான்ஸ் வாங்கிவிட்டார் என்று சொன்னார்கள். தற்போதைய போகத்தை அறுவடை செய்தவுடன் ரெஜிஸ்ட்ரேஷன் செய்யப் போகிறார்களாம்.

வயலிலிருந்து விதவிதமான பூச்சிகள் வீட்டுக்குள் வந்துவிடும். விளக்கு வைத்தவுடன் வீடு பூச்சிகளால் நிறைந்துவிட்ட மாதிரி பிரமை தட்டும். சந்தானம் ஒவ்வொரு விளக்கினடியிலும் எண்ணெய் தடவிய காகிதத்தை மாட்டுவதற்குப் பெரியவள் முக்காலியைத் தூக்கிக்கொண்டு பின்னோடே ஓடுவாள். சின்னவன் தவழ்கிற பருவத்தில் இருந்தான். அசல் சந்தானத்தின் ஜாடை அவன். கைக்குக் கிடைக்கும் பூச்சிகளையெல்லாம் எடுத்து அவன் வாயில் போட்டுக் கொள்ளாமல் பார்த்துக்கொள்வதே சித்ராவுக்குப் பெரும் வேலையாக இருக்கும்.

அறுவடை முடிந்து கம்பவுண்டர் அண்ணா வாணம் தோண்டினார். இந்த வீட்டில் ரசாயன மணம் அறுதியாகத் தீர்ந்து, வீட்டின் மணம் மட்டுமே மீந்திருந்தது. வயல் பூச்சிகளின் வருகை அறுதியாக நின்றுவிட்டது. ஆனால், கரப்பான் தவளை பாச்சை தேள் நட்டுவாக்காலி அபூர்வமாகச் சில சமயங்களில் தண்ணீர்ப் பாம்புகள் என்று யாராவது விஜயம் செய்துகொண்டேயிருப்பார்கள். குறிப்பாகப் பல்லிகள். சின்னஞ்சிறு குட்டி முதல் இரண்டு விரல் பருமன்வரை ஏகப்பட்ட பல்லிகள் திரிந்தன வீட்டில்.

‘அவா இடத்திலேயாக்கும் நாம குடிவந்திருக்கோம், விரட்டப் படாது’

என்று சந்தானத்தின் தாயார் கறாராகச் சொல்லிவிட்டார். இவையெல்லாம் 'வாழும் பல்லிக'ளாம். நம் வீட்டில் குடியிருப்பதற்கு சன்மானமாக ஆரூடம் சொல்கிறவர்களாம்.

சந்தானத்தின் வம்சத்தில் ஜோசியர்கள் வைத்தியர்கள் சமையல்காரர்கள் புரோகிதர்கள் என்று என்னென்னவோ தொழில் பார்த்தவர்களெல்லாம் பிறந்திருக்கிறார்கள். நாலைந்து தலைமுறைக்கு முன்னால் ஒருவர் சாமியாராகப் போனாராம். அவரும் கல்யாணத்துக்குப் பிறகுதான் சாமியார் ஆனவர். இதையெல்லாம், மாமாவுடன் நேற்றுப் பார்க்கப்போன அனுப்பானடி ஜோசியர் சந்தானத்துடைய ஜாதகத்தைப் பார்த்துச் சொன்னார்.

ஒருவேளை, சந்தானமும் அதே மாதிரிக் கிளம்பிவிட்டாரோ?

கேள்வி முடிவதற்கு முன்னாகவே சுவர்ப்பல்லி ச்சு ச்சு ச்சூ என்று விடாமல் சூள் கொட்டியது. சித்ராவின் அடிவயிற்றில் சடாரென்று ஒரு பள்ளம் குழிந்தது. கண்கள் உடனடியாக நிரம்பிக் கன்னத்தில் வழிந்தது.

✠

நா ன்தான் கடைசி.

என்றார் ஹரிஹர சுப்ரமணியம். அப்படியா என்கிற மாதிரித் தலையாட்டினேன்.

...எனக்குத் தெரிஞ்சு எனக்கு மின்னாடியும் அதிகப் பேர் இல்லே. கூடவே இருந்தவா, பக்தி செலுத்தினவா சில பேர் இருக்கான்னு தெரியும். மாமாவோடெ பாதையிலே பின்தொடர்ந்தவா அதிகம் பேர் இல்லே. எனக்கு மின்னாடி ஜய்ராம் மாமா, வைத்தியர் அண்ணா ரெண்டே பேர்தான். நான் மூணாவது... வேறெ யாரும் இருக்காளான்னு ஜய்ராம் மாமாட்டெக் கேட்டேன். அவர் சிரிச்சார். என்னோடெ ஏன் நிறுத்திண்டுட்டார் இவர்ன்னு தெரியலே. என்னோட பட்ட சிரமத்தாலே அப்பிடி முடிவெடுத்தாரா, இல்லே அவருக்கே போதும்னு தோணிடுத்தான்னு தெரியலே...

தானே சிரித்துக்கொண்டார்.

...நான் ஒருக்காக் கேட்டேன். 'எனக்கப்பறம் சிஷ்யர்கள் யாரையும் எடுத்துக்கலையே மாமா, ஏன்?' அவரும் வெறுமனே சிரிச்சுட்டு விட்டுட்டார். ஆரம்பத்திலேர்ந்தே அப்பிடித்தான். அவங்க சொல்றதை நாம கேட்டுக்கலாம். நாமளா ஏதாவது கேட்டா, சிரிப்புத்தான் பதில்.

அப்பறம் கொஞ்சநாள் கழிச்சு நமக்கே தெரியவரும், நாம கேட்டது உப்புப்பெறாத கேள்வின்னு.

மீண்டும் சிரித்தார்.

...மேல்க்கொண்டு சிஷ்யர்கள் வர்றதினாலெயோ, வராததினாலேயோ எனக்கென்ன ஆச்சு, சொல்லுங்க?

இருவருக்கும் இடையில் மௌனம் வந்து அமர்ந்தது. திண்ணையை ஒட்டியிருந்த விளக்குக் கம்பத்தில் ஒரு வாலாட்டிக் குருவி உட்கார்ந்திருந்தது. இந்தப் பறவையைப் பார்த்து எவ்வளவு காலமாகிறது?

இரும்பாடியில் அம்மாவோடு இருந்த நாட்களில் பார்த்தது. மதுரைக்குக் குடிவந்தபிறகே பறவைகள் கண்ணில் தட்டுப்படுவது குறைந்துவிட்டது. காக்காயைத் தவிர, பறக்கிற ஜீவன் எதையும் பார்க்கக் கிடைத்ததில்லை. இரும்பாடியில் எத்தனைவிதமான பறவைகள்... சிட்டு, தவிட்டுக் குருவி, கௌதாரி, கரிச்சான், புறா, பருந்து...

ஊர் எல்லையில் வயல்வெளி ஆரம்பிக்கிற இடத்தில் பிசாசு மாதிரித் தலைவிரித்து நிற்கிற ஆலமரத்தில் நூற்றுக் கணக்காகக் கிளிகள் கூடு கட்டியிருக்கும். சாயங்காலம் ஆனவுடன் பழந்தின்னி வவ்வால்களின் நடமாட்டம் ஆரம்பிக்கும். வீட்டுக்குப் பின்னால் உள்ள கொன்றை மரத்தில் நாலைந்து மைனாக்கள் குடியிருந்தன. மரங்கொத்திகள் அவ்வப்போது தட்டுப்படும். சோழவந்தான் சங்கர மடத்தில் ஆவணி அவிட்டத்துக்குப் பூணூல் மாற்றிக்கொள்ளப் போகும்போது வைகையின் கரையில் ஏகப்பட்ட மீன்கொத்திகளைப் பார்த்திருக்கிறேன். இதுபோக, களத்து மேட்டில் அடிக்கடி தென்படும் ஒரு பறவை. அதன் பெயர் தெரியாது. அடிவயிறும் உடம்பும் பஞ்சுமாதிரி வெள்ளையும், இறக்கைகளும் அலகும் அடர்த்தியான கறுப்பும், சிட்டுக்குருவி பருமனும் கொண்டது...

வாலாட்டிக்குருவியைப் பார்த்து மயங்கிட்டீங்களாக்கும்...?

ஹரிஹரனின் குரல் கேட்டது. இரும்பாடியிலிருந்து மீண்ட அதே கணத்தில் அதிர்ந்தார் சந்தானம். வந்ததிலிருந்து இப்படித்தான் அதிர்ச்சி கொடுத்துக்கொண்டேயிருக்கிறார் இந்த மனிதர். இவருடைய விழிகளைப் பார்த்தாலே தெரியும் பார்வையில்லாதவை என்று. அதிலும் இடது கண்ணின் பாப்பா வெள்ளை நிறத்தில் இருக்கிறது பூ விழுந்தது மாதிரி. ஓரிடத்தில் குவியாமல், லயமற்று சதா அலைகிற விழிகள். ஆனால், எல்லாவற்றையும் பார்க்கிறவர் மாதிரித்தான் உரையாடுகிறார்.

...அதுதான் ஓயாமல் சத்தம் போடறதே!? ஜலப் பிரவாகம், அக்னிக் கொழுந்து, மரவட்டை, பக்ஷி... இதெல்லாம் பாக்கப் பாக்கத் திகட்டாது. அதுக்கும் ஒரு காரணம் இருக்கு, இதுகளைப் பாக்கும்போது நம்மளோட பிராயம் நமக்கு மறந்து போறது. சிசுக்களாயிடறோம். இன்னும் பாஷையே லபிக்காத சிசுக்களா...

நான் இருந்த திக்கில் ஸ்திரமாக முகத்தை நிறுத்திக்கொண்டார். விழிகள் மட்டும் தன்னிச்சையாகச் சுழன்றன. பார்வையில்லாதவர்கள் அநேகம் பேரைப் பார்த்திருக்கிறேன். நம்முடைய முகத்தை நோக்கி அவர்களுடைய செவிகள்தாம் திரும்பியிருக்கும். எப்போதுமே பக்கவாட்டு முகத்தைப் பார்த்துத்தான் நாம் பேசவேண்டி வரும். இவர் அப்படியில்லை. முகத்தைப் பார்த்துப் பேசுகிறார். ஆனால், கண்களை நேரடியாகப் பார்ப்பதைத் தவிர்க்கிறார்... திடீரென்று அடிவயிறு கனத்துவிட்ட மாதிரி உணர்வு தட்டியது.

எனக்கு பாத்ரூம் போகணுமே.

ஒண்ணுக்குத்தானே?

ஆமா.

கிணத்து மேடைக்குப் பின்னாடி உள்ள வெட்டவெளி அவ்வளவும் பாத்ரூம்தான். அந்தப் பக்கம் மேக்காலே ஒரு தகரக் கொட்டாய் இருக்கில்லியா, அது கக்கூஸ். இங்கெல்லாம் எடுப்புக் கக்கூஸ்தான். ஒங்களை மாதிரி டவுன்காராளுக்குத் தோதுப்படாது.

ஹரிஹரன் சிரித்தார். நான் எழுந்தேன். இரும்பாடியில் எங்கள் வீட்டில் கழிப்பறை என்ற ஒன்றே கிடையாது. ரெட்டியார் தோப்புக்குப் போகும் பாதையின் இருபுறமும் உள்ள புதர்கள்தாம் கதி. ஆணும் பெண்ணும் எதிரெதிர் திக்கில் போவார்கள். வெளியூரிலிருந்து விருந்தாளிகள் வந்தால் சிரமப்பட்டுப்போவார்கள். உள்ளூர்வாசிகளுக்கும் சிரமம்தான் விருந்தினருடன் துணைக்குப் போக வேண்டும். அவரவரைப் பொறுத்து எந்தத் திக்கில் போக வேண்டும் என்று கைகாட்டிவிட்டுக் காத்திருக்க வேண்டும்.

...கிணத்துமேடைலே பச்சைக் கலர் வாளி ஒண்ணு இருக்கும். அதுலெ உள்ள ஜலத்தை மட்டும் தொட வேணாம். இந்த வீட்டுல உள்ள பாட்டி வச்சிருக்கிற மடி ஜலம் அது. அதுமேல நாம பட்டுட்டோம்னு தெரிஞ்சா மனசு ரொம்பப் புழுங்கிடுவா, பாவம்.

ஹரிஹரன் மறுபடியும் சிரித்தார். வாளியின் நிறம் இவருக்கு எப்படித் தெரியும் என்று யோசித்துக்கொண்டே கொல்லைப்புறம் சென்றேன்.

ஆறுகட்டு வீடு அது. ஒற்றைப்படைக் கட்டுகளின் கூரையில் மட்டும் கண்ணாடி பதித்திருந்ததில், வெளிச்சத்திலும் இருட்டிலும் மாறிமாறிக் கடந்து செல்லவேண்டியிருந்தது. பக்கவாட்டில் உள்ள அறைகளின் கதவுகள் சாத்தியிருந்தன. அவற்றுக்குள் மனிதர்கள் இருக்கிற அறிகுறியே இல்லை.

பின்கட்டில் துளசி மாடத்தினருகில் ஒரு கிழவி உட்கார்ந்திருந்தாள். முன்னால் ஒரு சிறு பித்தளைத் தம்ளரில் தண்ணீர். ஓயாமல் எதையோ முணுமுணுத்துக்கொண்டிருந்தாள். நார்மடிதான். ஆனால், சிகை மழிக்காத, முழுக்க நரைத்த, தலை. வெள்ளை நிற ரவிக்கை. கனத்த பவழங்கள் கோத்த மாலை அணிந்திருந்தாள். அமர்ந்த நிலையிலேயே கூன் நன்கு தெரிந்த உடம்புக்குச் சம்பந்தமின்றி அது ஊசலாடியது. நுனியில் நாலைந்து ஸேஃப்டி பின்கள். எவர்சில்வர் சாவி ஒன்று.

அவளைக் கடந்தபோது, அணில்போலப் பார்வையை என்புறம் திருப்பினாள். ஒரே கணம். பழைய நிலைக்குத் திரும்பிவிட்டது பார்வை. வெகுதொலையில் எதையோ பார்க்கிற மாதிரிக் குறிப்பற்று உறைந்திருந்தது முகம். இந்த இடத்துக்கும் தனக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது என்கிற மாதிரி அப்படியொரு அந்நிய பாவம் நிரம்பிய முகம்.

துளசிமாடமும் அதன் முன்னால் இருந்த செம்மண் கோலமும் விட்டேற்றியான கிழவியும் பித்தளைத் தம்ளரும் சாணம் மெழுகிய தரையும் கொடிக்கம்பியில் வரிசை கோத்திருந்த ஈரத்துணிகளும் விநோத வடிவங்களில் காரை பெயர்ந்திருந்த மதில்சுவரும் அதன் வெளியே உச்சந்தலையை மட்டும் காட்டிக்கொண்டு நிற்கும் வேம்பும் இந்த நூற்றாண்டுக்குள் இன்னும் வந்துசேரவேயில்லை என்று பட்டது எனக்கு. இனியும் வருவதாக இல்லை என்ற பிடிவாதமும் தென்பட்டது அவை அனைத்திலும்.

இந்த ஊரே அப்படித்தான் இருக்கிறது. நடைமுறைக் காலத்துக்குள் வந்து சேர்வதற்கு இன்னும் நூறு வருடங்களும் ஆகலாம், வராமலே போகவும் செய்யலாம்...

‘அதனாலெ எனக்கென்ன ஆச்சு?’ என்று ஹரிஹர சுப்ரமணியத்தின் த்வனியில், ஓசையில்லாது, ஒரு வாக்கியம் மனத்தில் உதித்து மடங்கியது. உள்ளுக்குள் குதூகலமாக உயர்ந்த புன்னகையை மென்றபடி மீண்டும் மேடைக்கு ஏறினேன்.

காலையில் நான் குளிக்க வந்தபோது இப்போதுபோல வறண்டிருக்கவில்லை இந்த மேடை. ஹரிஹரன் உட்கார்ந்து ஜபம்

செய்துகொண்டிருந்த ஓரம் தவிர, மீதி இடங்களில் ஈரமாக இருந்தது. மார்பை மூடிய தோள்துண்டுக்குள் கைகள் இரண்டையும் நுழைத்து, கண்களை மூடி நெட்டுக்குத்தாக அமர்ந்திருந்தார் அவர். துண்டின் உட்புறம் விரல்கள் துரிதமாக அசைவது தெரிந்தது.

கால்களைச் சுத்தி செய்துகொண்டேன். கிணற்றுமேடை சரேலென நனைந்தது. எல்லாப்புறமும் திறந்திருக்கும் சிமெண்ட் மேடையில் தனக்கென்று ஒரு தடம் உருவாக்கி நகர்ந்த தண்ணீர், பக்கவாட்டிலும் கொஞ்சம் பரவியது. வாளிக்குள் முடங்கிக் கிடந்த தண்ணீர் தன் சுதந்திர யாத்திரையைத் தொடர்ந்துவிட்டது என்று பட்டது.

கடந்த பத்துப் பதினைந்து நாட்களாகவே இப்படித்தான். பார்க்கிற எல்லாவற்றிலும் வேறு ஏதோவொன்றும் உள்ளூற நிலை கொண்டிருப்பது சதா தென்பட்டவாறிருக்கிறது... அல்லது, அப்படி ஒன்றை மனம் தேடியவண்ணமிருக்கிறது.

நேற்றிரவு இதே கிணற்றுமேடைக்கு வந்தபோது பேய்வீடு போலத் தெரிந்த சுற்றுப்புறம், இப்போதைய வெளிச்சத்தில் பலவருடங்களாகப் பழகிய இடம் மாதிரி சுவாதீனம் கொண்டிருக்கிறது. இதேமாதிரி, எனக்குள்ளும் ஏதாவது ரசவாதம் நடந்துகொண்டிருக்கிறதா என்ன? ஏதும் நடக்கிறதோ இல்லையோ, சற்றும் மாற்றமில்லாது இத்தனை வருடங்களாகத் தொடரும் அன்றாடத்தின்மீது மிகப் பெரிய சலிப்பு தட்டியிருக்கிறது...

போ கும்போது கடந்து சென்ற இருட்டில் வெளிச்சம் இப்போது அதிகரித்துவிட்ட மாதிரி இருந்தது... திண்ணையில் வெள்ளைநிற நிழல்போல ஹரிஹர சுப்ரமணியம் உட்கார்ந்திருப்பது பார்வைக்குள் நுழைந்தது. அவர் இன்னும் ஒரு வாரம்தான் இங்கே இருப்பார். பிறகு கிளம்பிச் சென்றுவிடுவார். இந்த வீட்டின் உரிமையாளர் சக்தி உபாசனை உள்ளவராம். இவரிடம் சில விஷயங்கள் பாடம் கேட்க வந்திருக்கிறார் ஹரி. கற்றுக்கொள்ள மட்டும்தான் உத்தரவு. பிரயோகித்துப் பார்க்கக்கூடாது என்று பெரியவர் நிபந்தனை விதித்திருக்கிறார்.

காஞ்சிபுரத்தில் உள்ள ஒரு நெசவாளரிடம் நாலுநாட்கள் இருந்து நெசவு கற்றுக்கொண்டதாகவும் சொன்னார் ஹரி. திருவண்ணாமலையிலேயே ஒரு குயவரிடம் பாண்டம் செய்யக் கற்றிருக்கிறார். கொஞ்சநாள் வீணை வாசிக்கக் கற்றிருக்கிறார். எட்வர்டு என்று ஒரு இங்லீஷ்காரர் திருவண்ணாமலையில் வந்து நாலைந்து வருஷங்கள் தங்கியிருந்தாராம். அவரிடம் முறையாக இங்லீஷ் படித்திருக்கிறார் ஹரிஹரன்.

எதற்கு என்று கேட்டுக்கொள்ளாமலே என்னென்னவோ கற்று வந்திருப்பதாகவும், கற்றதில் ஒரு இம்மிகூட மறந்து போகவில்லை என்றும் சொன்னார். அடுத்து இவர் கற்றுக்கொள்ள வேண்டியது என்ன என்பதைப் பெரியவர் சொல்வார். எங்கே யாரிடம் சென்று கற்கவேண்டும் என்பதையும் அவரே சொல்வார்...

நெட்டுக்குத்தாக அரை பத்மாசனத்தில் உட்கார்ந்திருந்தார் ஹரிஹர சுப்ரமணியம். திண்ணையில் தன் அருகில் தட்டிக் காட்டினார். நான் எதிரில் அமர்ந்து கூரையைத் தாங்கித் திண்ணையில் நிற்கும் தூணில் முதுகை அண்டக்கொடுத்து அமர்ந்தேன்.

நீங்க உள்ளெ போனப்போ ஒரு யோசனை ஓடித்து.

ம்.

இப்பிடியெல்லாம் யோசிச்சதேயில்லே. இன்னிக்குத்தான் மொதல் தடவையா இப்பிடித் தோணறது...

சொல்லுங்க.

...ஆரம்பத்திலேர்ந்தே எதையாவது கத்துக்கச்சொல்லி அனுப்பிண்டேயிருக்காரா, எனக்குப் பார்வை கிடையாதுங்கறதே ரொம்ப காலத்துக்கு ஞாபகத்திலே இல்லாமல் போய்ட்டது. இப்போ என்னாலே பாக்க முடியும். ரொம்பத் தெளிவு கிடையாது. சாயங்காலத்திலே இன்னும் மங்கலாயிடும். பகல்லேயுமே, ஓரளவு பாக்க முடியும். மீதியை யூகிச்சு நிரப்பிக்க வேண்டியதுதான். ஆனா, எப்போலேர்ந்து பார்வை திரும்ப ஆரமிச்சது ன்னு கேட்டா, சொல்லத் தெரியாது. அதைப் பத்தி நினைவில்லாமெ இருந்த காலத்திலே...

பூர்த்தியாகாத வாக்கியத்தில் நிறுத்திக்கொண்டார். முள்த்தாடி மண்டிய மோவாயை வலதுகைவிரல்களால் லேசாகச் சுரண்டுவது மாதிரி வருடினார். மலர்ந்திருந்த வலதுபாதத்தில் இடதுகை ஆள்காட்டி விரல் தாளம் போட்டது. வீட்டுக்குள்ளிருந்து விர்ர்ர்ரென்ற ரீங்காரத்துடன் வெளியேறிவந்த கருங்குளவி ஹரிஹரனின் தலையை ஒருமுறை பிரதட்சிணம் செய்துவிட்டுத் தெருவில் போய் மறைந்தது.

...திருப்பனந்தாள்லே என்னோட தாயார் காலமாயிட்டான்னு தகவல் வந்தது. பெரியவர் என்னை உடனடியா அனுப்பிச்சார். பொதுவா, இந்த மார்க்கத்திலே ஈடுபடறவாளுக்குக் குடும்பம்தான் இறுதிக் கிரியைகள் பண்ணி அனுப்பியாகணும். யாசகத்துக்குப் போகும்போது தவிர, நமக்கும் பூர்விக ஸ்தலத்துக்குப் போறதுக்கு அனுமதி கிடையாது. ஆனா, ஏனோ எனக்கு இதுக்கெல்லாம் அனுமதி

குடுத்தார் பெரியவர். தாயாருக்குக் கர்மம் பண்றதுக்கேகூட அனுமதிச்சார். ஏதானும் காரணத்தோடெதான் இப்பிடிப் பண்ணியிருப்பார்... ஆனா, அதுவரைக்கும் எனக்கு தீட்சை குடுக்கலே...

...இடையிலே நாலைஞ்சு தடவை அம்மா என்னைப் பாக்க வந்தப்பொல்லாம் அம்மாவுடைய முகத்தைப் பாத்த நினைவில்லே. பிரேதமாப் படுத்துண்டிருக்கச்சே, உடம்போட வடிவம் பார்வைக்குப் பட்டது. ஈரத்துண்டோடெ மடியிலே அவ தலையை எடுத்து வச்சிண்டு காதுக்குள்ளே கர்ண மந்திரத்தெச் சொல்றேன். 'அம்மா, அம்மா'ன்னு மூணு தடவை கூப்பிடச் சொல்றார் சாஸ்திரி. காதுமடல் துல்லியமாத் தெரியறது. அவ காதிலே மோதி என் குரல் என்கிட்டேயே திரும்பி வர்ற மாதிரி ஒரு பிரெமெ.

...அம்மாவோட முகத்தைப் பாத்தேன். அடேயப்பா, எவ்வளவு மாறிடுத்து? பார்வை போறதுக்கு முன்னாடி நான் பாத்த அம்மா முகம் எவ்வளவு லட்சணம். இது எவ்வளவு விகாரமா மாறியிருக்கு? ஆயுசு முழுக்க துக்கப்பட்டுண்டே இருந்தா முகம் இப்பிடி மாறிடுமோ...? விதவிதமா யோசனை ஓடறது. இன்னொரு யோசனையும் ஓடித்து...அட, இப்போ நான் பாக்கறேன்ங்கறதே பிறத்தியாருக்குத் தெரியாதே?

...சொல்லப்போனா எப்பவுமே அப்பிடித்தானே? என் கண்ணு எல்லார் கண்ணு மாதிரியும் இருந்து, நான் பாக்கறேன்ங்கறது தெரிஞ்சாலுமே, நான் என்னவாப் பாக்கறேன்னு மத்தவாளுக்கு எப்பிடித் தெரியும்? ஆக, நான் பாக்கறதை நான் மட்டும்தான் பாக்கறேன். ஒங்களுக்கும் அதேதான். அப்புறம் வார்த்தையாலே பகிர்ந்துக்கறோம். ஒரே மாதிரி வார்த்தைகள் ங்கறதாலே, நான் பாத்ததைத்தான் நீங்களும் பாக்கறதா அனுமானிச்சுக்கறோம். ஒரே காட்சியைத்தான் பாத்தோமா ங்கறதையெல்லாம் எங்கேயுமே ருசுப்படுத்திக்க முடியாது. மெஜாரிட்டி ஜனங்கள் ஒப்புத்துக்கறாங்கறதாலே, நிஜமாவே வெளியிலே காட்சி இருக்கிறதா ஒரு ஐதீகம் உருவாயிடறது. ஐதீகம்தான். வெறும் ஐதீகம். மத்தபடி, நீங்க பாத்ததைத்தான் அடுத்தவர் பாத்தார்ங்கறதுக்கு ஒரு உத்தரவாதமும் கிடையாது. காட்சின்னு ஒண்ணு வெளியிலே இல்லே. இங்கே இருக்கு...

தன் தலையைத் தொட்டுக் காட்டினார் ஹரிஹரன்.

...என்னோட காட்சி இங்கே. ஒங்களோட காட்சி அங்கே.

பாவனையாக என்னுடைய தலையைச் சுட்டினார். ஹரிஹரனின்

முகத்தையே பாத்துக்கொண்டிருந்தேன். என்னை விடப் பதினைந்து வருஷம் இளையவர். ஆனால், பேசும் மொழியிலும், சொல்லும் விஷயங்களிலும் பல தலைமுறைகள் மூத்தவர்போல ஒரு கனம். நிதானம். தீர்க்கம். இவர் பேசுகிற விஷயங்களில் பாதியும் எனக்குப் புரியவில்லை. ஆனால், கவனத்தை விலக்க அனுமதிக்காத ஒரு ஈர்ப்பும் இருக்கிறது.

அந்த அம்மாள் தங்கம் பேசும்போதும் இப்படித்தான் இமை கொட்டாமல் கேட்டுக்கொண்டிருந்தேன். ஆனால், அரவை மில்லில் நெல் இறங்குகிற மாதிரி அந்த அம்மாள் சொன்ன ஒவ்வொன்றும் சரளமாக எனக்குள் இறங்கியது. உடனுக்குடனே அர்த்தம் பிரிந்து எனக்குள்ளே சேகரமாகிக் கொண்டிருந்தது. இவர் பேசும்போது அப்படியில்லை, நின்று நிதானமாகப் பிழிந்து சாறெடுக்கிற மாதிரிக் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஒரு வாக்கியம் இப்படிப் புரிவதற்குள் பத்துப் பதினேழு வாக்கியங்கள் ஹரிஹரன் பேசி விடுகிறார். சில வாக்கியங்கள் காதில் விழுந்தும் மனத்தின் தரையில் படாமலே ஆவியாகிக்கொண்டிருக்கின்றன.

...ஆக, வஸ்துக்களாலெ ஆன உலகம் ஒண்ணு இருக்கு. Material world. அதை என் புலன்களாலே நான் அறிஞ்சிக்கறேன். ஒங்க புலன்களாலே நீங்க. அவங்கவங்க புலன்கள் இருக்கற ஸ்திதியைப் பொறுத்து அவங்கவங்க அறிஞ்சிக்கறோம். இப்பிடி அறிஞ்சிண்டதைப் புரிஞ்சிக்கறதுக்கு வசதியா, நமக்குள்ளே உள்வயமான புறவுலகம் ஒண்ணு இருக்கு. எல்லா வார்த்தைக்கும் அர்த்தம் சேமிச்சு வைச்சிருக்கற டிக்ஷனரி மாதிரி. ஒரு internalised outer world. இதன் அடிப்படையிலேதான் நான் தற்சமயம் பாக்காத ஒண்ணை நீங்க வர்ணிக்கும்போது, நான் பார்த்துடறேன். நீங்க 'மரம்'னு சொன்ன ஒடனே எனக்குள்ளே உறைஞ்சு கிடக்கற மரத்துக்கு உசிர் வந்துடறது. உள்ளுக்குள்ளே அந்த மரத்தைப் பாத்துண்டே, நீங்க சொல்ற மரத்தைப்பத்திக் கேட்டுக்கறேன். துளிக்கூட சந்தேகமே இல்லாமெ. நீங்க புளிய மரம்னு குறிப்பாச் சொல்லாட்டா, நான் நெனைச்சிக்கறது ஆலமரமாவும் இருக்கலாம். ஆக, இந்த உள் உலகம் இருக்கால்லியா, பார்வையைப் பொறுத்தமட்டிலே, ஒங்களோட உள் உலகத்துக்கும் என்னோட உள் உலகத்துக்கும்தான் குடுக்கல் வாங்கல்.

...பெரியவர் மாதிரி மகான்களோடே உத்தேசமே வேறே. நமக்கு தரிசனமாகற இந்த வஸ்து உலகம், உள் உலகம் ரெண்டுக்கும் வெளியில் இருந்துண்டு தன்னுடைய இருப்பை உணர முடியுமாங்கறது. அதெல்லாம் ராஜாளிகள் சுத்தற ஆகாசம். நம்மளை மாதிரிச்

சிட்டுக்குருவிகள் வெறுமனே பாக்கத்தான் முடியும் அந்த உசரத்தையெல்லாம். இதுக்கே விலாவெல்லாம் நோகறது...

ஹரிஹரசுப்ரமணியம் சிரித்தார். தெருவில் படர்ந்திருந்த வெயிலை வெறித்தார்.

நான் பார்க்கிற வெயிலையும் புழுதியையும், கண் கூச மினுங்கும் எலக்ட்ரிக் கம்பியையும், வாலாட்டிக் குருவி அமர்ந்து எழுந்துபோன இடத்தில் காலியாக மீந்திருக்கும் குருவித் தடத்தையும், ஹரிஹரனும் பார்க்கிறாரா என்று சந்தேகம் வந்தது எனக்கு. வாய்விட்டுக் கேட்கத் தயக்கமாக இருந்தது. அவர் 'ஆமாம்' என்று சொல்லிவிட்டால் பிரச்னையில்லை. 'இல்லை, இதெல்லாம் வேறு சமாசாரங்கள், வேறுவிதமாய் இருப்பவை' என்று சொல்லி, வர்ணிக்கவும் செய்தால் என்ன ஆகும்? மனம் முழுக்கக் குழப்பமும் சந்தேகமும் நிரம்பி விடாதா? அப்போது எதைச் சந்தேகிப்பது, ஹரிஹரனின் வார்த்தைகளையா, என்னுடைய பார்வையையா?

குழம்பிக் கிறுகிறுத்தேன் ஒரு கணம். நல்லவேளை, ஹரிஹரன் தொடர்ந்து பேசினார்.

...ஆனா, பார்வை இருந்தது கொஞ்சகாலம். பார்வை இல்லாமெ இருந்தது கொஞ்சகாலம். அதுக்கப்பறம் பார்வை திரும்பக் கிடைச்சது. மூணும் மூணு காலகட்டம். மொதல்லே வெறுமனே பாக்க மட்டும் செஞ்சேன். ரெண்டாவதா, 'பாக்கமுடியலையே'ங்கறதை மட்டும் பாத்துண்டிருந்தேன். மூணாவது காலகட்டத்திலே, பாக்கறேன், நான் பார்க்கறேன் ங்கறதையும் பார்க்கறேன். பார்க்கறது ன்னா என்ன ங்கறதையும் சேத்துப் பார்த்துண்டிருக்கேன்...

நான் திகைத்துப்போய் உட்கார்ந்திருந்தேன். நான் கேட்கிறேனா, ஏதாவது புரிகிறதா என்கிற யோசனை எதுவும் இல்லாதவர் மாதிரி, தனக்குத்தானே பேசிக்கொள்கிறவர் மாதிரி, தான் கடந்து வந்த காலகட்டங்களில் கைக்குக் கிடைப்பதை மீண்டும் மீண்டும் எடுத்து நுகர்ந்து பார்க்கிறவர் மாதிரி, மறந்துவிடுவதற்கு முன்னால் வாக்குமூலம் கொடுத்து முடித்துவிட நினைப்பவர் மாதிரி, சந்நதம் வந்தவர் மாதிரி, பேசிக்கொண்டே போனார் ஹரிஹரன்.

...இப்போத் திரும்பிப் பாத்தா, இந்த மாதிரி யோசனைகளெல்லாம் ஆரம்பத்திலேயே எனக்குள்ளே இருந்துண்டிருந்திருக்குன்னு தோணறது.

...மொதல்மொதல்லே திருவண்ணாமலைக்குப் பெரியவரோடெ

போனேனில்லையா, அப்பொல்லாம்தான் எனக்குப் பார்வை அறுதியாக் கிடையாதே, நாங்க வந்த பஸ்ஸு அதுபாட்டுக்குப் போயிண்டிருக்கு. எந்த ஊரைத் தாண்டறோம், ஒரு ஊர் முடிஞ்சு அடுத்த ஊர் எப்போ வருது... ஒண்ணுமே தெரியாது எனக்கு. என்னோடெ ஒலகத்துலெ அப்போ சத்தமும் வாசனையும் ருசியும் மட்டும்தான் முழுக்க முழுக்க நிரம்பியிருந்தது. ஓடற பஸ்ஸிலே ஒரு குண்டூசி விழுந்தாக்கூட எனக்குக் கேட்டுரும். காதுலெயும் மூக்கிலெயும் இருந்த கூர்மைலேதான் என் உசிர் ஒட்டிண்டிருக்குங்கற மாதிரி ஒரு நம்பிக்கை. கொஞ்சம் அசந்து கவனம் பிசகினாலும் பிராணன் உடனடியாப் போயிடும்னு ஒரு பயம். மோப்ப நாய் மாதிரி சதா ஒரு தயார் நிலையிலேயே மனசு இருக்கும்.

...பின் ஸீட்டுலெ ரெண்டு குரல் தொடர்ந்து கேட்டுண்டிருக்கு. தகப்பனும் மகனும் போலே. பொடியன் ஓயாமெ ஏதாவது கேட்டு நச்சரிக்கிறான். தகப்பனார் பாவம், ரொம்பப் பொறுமைசாலி. நிதானமா பதில் சொல்றார். பையன் கேக்கறான், 'அப்பா திருவண்ணாமலை எப்போ வரும்?' அப்பா சொல்றார், 'வந்து சேந்தாச்சே நாம. அதோ கோபுரம் தெரியறதே.' இவன் கேக்கறான், 'இன்னும் ஊர் வரலியேப்பா.' 'இன்னும் பத்து பதினைஞ்சு நிமிஷத்திலே வந்துரும் பாரு.'

அப்புறம் அவங்க ஏதோ தொடர்ந்து பேசிண்டே போனாங்க. எனக்கு ஞாபகமில்லே. என்னோடெ யோசனை தானாக் கிளம்பினது ஞாபகமிருக்கு. வார்த்தைகள்தான் இன்னிக்கு உள்ள வார்த்தைகளே தவிர, யோசனை அந்த நாள் யோசனைதான்.

...இங்கேருந்து பார்க்கும்போதே அண்ணாமலை தெரியறது. மனம் பரபரக்கறது. ஆனால், போய்ச் சேர குறைஞ்சது கால் மணி நேரம் ஆகும். கண்ணோடெ அனுபவத்திலே 'இப்போ'வா இருக்கிற ஒண்ணு, ஒட்டுமொத்த உடம்போடெ அனுபவத்திலே 'இன்னும் சித்தெப் பிந்தி'ன்னு இருக்கே. இதை என்னன்னு சொல்றது? ஒர்த்தர் மனசுக்கும் உடம்புக்கும் இடையில் உள்ள தூரம் ன்னா? இல்லே, அந்த ஒரு க்ஷணத்தில் அவரோடெ கண்களுக்கும் உடம்புக்கும் தொடர்பு அத்துப் போச்சுதுன்னா? பாக்கற நான் நானா, இல்லே பஸ்ஸுலே உக்காந்து கால் மணிநேரம் மேல்க்கொண்டு பிரயாணம் பண்ண வேண்டியிருக்கறது நானா? இல்லே, இந்த ரெண்டு நானையும் வேடிக்கை பார்த்துண்டு கேள்விகளா உற்பத்தி பண்றானே அந்த மூணாவது ஆளும் நானேதானா? எனக்குள்ளயேதான் இந்த மூணு நானும் இருக்கா? இல்லே, ஏகப்பட்ட நான்கள் சேந்துதான் 'நான்'ங்கிற நெனைப்பாய் உள்ளே வந்து உக்காந்திருக்கா?

...முந்திக் காலத்திலேல்லாம் மாட்டு வண்டியிலேதானே பிரயாணம் பண்ணியிருப்பா? செம்மண் பாதை இருந்திருக்கும். அந்த இடத்திலே தார் ரஸ்தா வந்தாச்சு. வில் வண்டி ஓடற வேகம் ஜாஸ்தியாயாச்சு. செஞ்சியிலேர்ந்து அண்ணாமலைக்கு நாலு மணி நேரத்திலே போயிடலாம். அப்புறம் மோட்டார் வண்டி வந்தது. இன்னும் சீக்கிரமாப் போக முடிஞ்சது. ஆனால், அண்ணாமலை இருந்த இடத்திலேயேதான் இருக்கு? ஆக, காலத்தைச் சுருக்கிறலாம். அல்லது, சுருங்கின மாதிரித் தோண வைக்கலாம். இடத்தைச் சுருக்க முடியுமோ? அப்போ, இடம் சரீரமாகவும், காலம் மனசுங்கற ஸ்தலமாகவும் இருக்கோ என்னவோ? சரீரம் காலமாயிட்ட பிற்பாடும், மனசுங்கற பிரதேசம் நீங்காதோ என்னவோ...

...ஆக, என்னோடெ மனசுன்னு நான் நினைச்சிண்டிருக்கற ஒரு ஸ்தலம், யோசனைகளும் ஞாபகங்களும் வந்துவந்து போற வெளி இடம்னுதான் சொல்லணும்.

எனக்குத் தலை கிறுகிறுக்கிற மாதிரி இருந்தது. ஹரிஹர சுப்பிரமணியம் என்னை யார் என்று நினைத்து இவ்வளவும் பேசுகிறார்? எதிரில் இருப்பவன் லவுகீகக் கவலைகள் தவிர்த்து வேறு எதுவுமே நாளது தேதிவரை அறியாதவன் என்பது அவருக்குத் தெரியாதா? அல்லது, இன்றிலிருந்து அவனும் இதையெல்லாம் அறிந்துகொள்ளட்டும் என்று வழங்குகிறாரா?

இந்த மாதிரி யோசனைகளெல்லாம் எல்லாருக்குமே வரும்னு சொல்றீங்களா?

பின்னே, மேலேமேலே நெரிசலாயிர்ற வாழ்க்கை முறையெ உருவாக்கிக்கறதுனாலெ இப்பிடி யோசிக்கறதுக்கான சாவகாசம் இல்லாமெப் போயிர்றது. எங்களை மாதிரி லௌகீகத்துக்கு வெளியிலெ இன்னொரு மார்க்கத்தைக் கண்டுபிடிச்சுப் போறவங்க, ஒடம்பைப் பழக்கற மாதிரி மனசையும் பழக்கிக்கறோம்...

என்ன மாதிரியான பயிற்சிகள்னு சொல்லலாமா?

சிலதைச் சொல்லலாம். சிலதைச் சொல்ல முடியாது. சொன்னாப் புரியவும் செய்யாது. ஒங்களுக்குப் புறங்கையிலே ரத்தக்கட்டி வந்திருக்குன்னா என்கிட்டெக் காட்டிற முடியும். தலைவலியைக் காட்ட முடியுமா? அதையெல்லாம் பாக்கறதுக்கு விசேஷ சாதனங்கள், விசேஷமாப் பயிற்சி எடுத்த ஆசாமிகள் இருக்காளால்லியா?

ஹரிஹரன் சிரித்தார்.

...உங்க முகம் தர்மசங்கடமாயிடுத்தே. சொல்லக்கூடியதுகளைச் சொல்றேன், போதுமா...?

‘அதையெல்லாம் தெரிந்துகொண்டு எனக்கென்ன ஆகப் போகிறது’ என்று மறுபடியும் எனக்குள் அந்த வாக்கியம் உதித்து மடங்கியது. இந்தக் கேள்வியைத் தரித்த நான் யார், பஸ்ஸேறிக் கிளம்பி வந்த அதே சந்தானம்தானா? கிறுகிறுப்பு அதிகரித்தது. ஹரிஹர சுப்ரமணியம் இயல்பாகத் தொடர்ந்தார்:

...அடிப்படையா ஒரு விஷயம். உடம்பு என்னென்ன சவுகரியத்தையெல்லாம் கேட்கிறதோ, அது அத்தனையும் தாட்சண்ணியமில்லாமெ மறுத்துடணும். ஆரம்பத்துலெ ரெண்டு வேளை சாப்பாடு. கொஞ்ச நாள் கழிச்சு ஒருவேளை ஆக்கிடனும். பிற்பாடு மாசத்திலே பாதிநாள் உபவாசமாத்தான் இருக்க வேண்டி வரும். செய்ய வேண்டிய பயிற்சிகள் எல்லாத்தையுமே வெறும் வயித்திலெதான் செஞ்சாகணும். அமாவாசையும் ஏகாதசியும் ரொம்ப முக்கியமான உபவாச நாள்கள். வெளிச்சாப்பாடு கூடவே கூடாது. தன் கையாலே, அல்லது, இந்த மார்க்கத்திலெ இருக்கறவங்க கையாலே சமைச்சதைத்தான் சாப்பிடணும். கட்டுச் சாதம் கூடவே கூடாது.

...கோயில்களுக்குப் போகும்போது, தன் பெயராலே அர்ச்சனையோ பிரார்த்தனையோ கூடாது. விக்கிரகத்துக்கு வெத்து நெஞ்சைத்தான் காட்டணும். அதுனாலே, மேல் வஸ்திரம் கூடாது. மாத்து உடுப்பு ஒண்ணே ஒண்ணுதான் வச்சுக்கலாம்.

...போர்வை கூடாது. தலைகாணி கூடாது. வேண்டியவங்க வேண்டாதவங்க ன்னு உள்ளுக்குள்ளே பட்டியல் கூடாது. எல்லாரையும் சம தூரத்திலெ இருக்கற அந்நியர்களாப் பாக்கணும்.

...எதிராளியைக் கண்ணுக்கு கண் பார்த்துப் பேசக் கூடாது. எல்லாரையும் சந்திச்சுப் பேசக்கூடாது. உள்ளுணர்வு சொல்லும், இன்னாரைப் பார்க்கலாம். இன்னாரோடெ பேசலாம்ன்னு. பேசும்போதும் களகளகளன்னு நெறையப் பேசக் கூடாது. இப்பொ நான் பேசற மாதிரி...

சிரிக்க விரிந்த ஹரிஹர சுப்ரமணியத்தின் உதடுகள் உடனடியாகப் பழைய நிலைக்குத் திரும்பின.

...உங்கள்ட்டெ நெறையப் பேசலாம்ன்னு நீங்க வர்றதுக்கு மின்னாடியே உத்தரவாயாச்சு. பெரியவரோடெ நான் வந்த காலத்திலே நெறையச் பேசச் சொல்வார். அம்மாவைப் பத்தி, பள்ளிக்கூட

ஞாபகங்களைப் பத்தி, இன்னும் நான் பாக்கக் கிடைச்ச, கேக்கக் கிடைச்ச, தின்னக் கிடைச்ச எல்லாத்தையும் பத்தி ஓயாமெப் பேசிண்டே இருக்கச் சொல்வார். பேசிப் பேசி மனசைக் காலியாக்கறதுதான் தாத்பரியம். அடுத்த கட்டத்துலெ நுழையும்போது பேச்சு தானாய்க் குறைஞ்சுடும்.

...பிராணாயாமமும், ஹட யோகமும் பயிற்சி செய்ய ஆரமிக்கறத்துக்கு உகந்த கட்டம் இது. இதையெல்லாம் வெறும் வயித்திலே, நாலாம் ஜாம ஆரம்பத்திலே செய்யப் பழகணும்.

...இதுக்கு அடுத்த கட்டம், யாசகத்துக்குப் போகணும். தெரிஞ்ச ஊர்லே, தெரிஞ்சவங்க கிட்டே யாசகத்துக்குப் போய் நிக்கணும். நியாயத்துக்கு, திருப்பனந்தாள்லே, தாயார் கையாலெ பிசைஷ வாங்கப் போயிருக்கணும் நான். ஆனா, அவ காலமானதுக்கு அப்புறம்தான் எனக்குத் தீட்சை கிடைச்சது. குருநாதர் சொல்ற வரைக்கும் பிக்ஷாடனத்திலேதான் காலம் கழிக்கணும்.

ஹரிஹர சுப்ரமணியம் மௌனமானார். சைக்கிளைத் தள்ளிக்கொண்டு கூவிக்கூவி உப்பு விற்கிற இளைஞன் வீட்டு வாசலில் வந்து நின்றான். வீட்டுப் பெண்மணி இழுத்துப் போர்த்திய முந்தானையும், மாக்கல் மரவையுமாக வாசலுக்கு வந்தாள். பிறந்ததிலிருந்தே பேசி அறியாதவள் மாதிரி அப்படியொரு மௌனம் பூண்ட பெண்மணி. அபூர்வமான கைப்பக்குவம் உள்ளவள். நேற்றிரவு அவள் பரிமாறிய உப்புமாக் கொழுக்கட்டை, தேங்காய்ச் சட்டினியின் அபரிமிதமான ருசி, இன்னமும் அடிநாக்கில் மீந்திருக்கிறது... வெறுந்தரையில் தான் நடந்து வந்த பாதத் தடங்களைப் பரிசீலிப்பவள் மாதிரிக் குனிந்த தலை நிமிராமல் உள்ளே திரும்பிப் போனாள்.

...இந்த வீட்டோடெ சொந்தக்காரர் இருக்காரே, பஞ்சநதம் சாஸ்திரி, அவரும் இந்த மார்க்கத்துலே நுழைஞ்சவர்தான். எல்லாம் சரியாய்ப் போயிண்டிருந்தது. பிசைஷக்கு இறங்கினப்போதான் மனசோடெ நிஜ ஸ்வரூபம் தெரிய வந்தது... ஒண்ணுமில்லே, இதே ஊர்லெ, இதே தெருவிலே, இந்த வீட்டைப் பார்த்து பிசைஷக்கு வர்றார்.

...அப்யாசத்திலே இறங்கினப்பறம், சில காலத்துக்கு சிகை வளக்கணும். சில காலத்துக்கு மழுங்க முண்டனம் செய்துடணும். அதெல்லாம் குருநாதர் உத்தரவைப் பொறுத்தது. இவருக்கு ரோமக் கட்டு அதிகம். கண்ணும் மூக்கும் காதும் மட்டும்தான் தெரியும், அவ்வளவு அடர்ந்து கிடக்கு கேசம். தெருவுக்குள்ளெ நொழையறார், நாய் தொரத்த ஆரமிக்கறது. பிசைஷக்குப் போகும்போது அதெல்லாம்

ரொம்ப சகஜம். சும்மாத்தான், வன்மமில்லாமெத்தான் குரைக்கறது ன்னு நமக்குப் புரியும். ஆனா, குரைக்கறது வெறும் நாயா இருந்தால்தானே...

ஹரிஹர சுப்ரமணியம் சிரித்தார்.

...இந்த மனுஷர் ஓட ஆரமிச்சார். நாய் விரட்டறது. இவர் நேரேத் தன்னோடெ வீட்டுக்குள்ளே படியேறி தடதடன்னு ஓடி, நீங்க பாத்தேளே கெணத்துமேடெ, அங்கே போய் நின்னு மூச்சு இரைக்கிறார். பின்னாடி ஜெபம் பண்ணிண்டு ஒக்காந்திருக்காளே ஒரு பாட்டி, இவரோடெ தாயார், 'அப்பனே பஞ்சூ, வந்துட்டெயாப்பா, இன்னிக்கி நாளைக்கின்னு நான் எதிர்பார்த்துண்டேதானே இருக்கேன்'னு சொல்லிப் பிள்ளையை அணைச்சுண்டாளாம். கர்ம காரியம் பண்ணி, எள்ளும் ஜலமும் இறைச்சுப் பிள்ளையைத் தத்தம் செஞ்ச அதே தாயார். ஆக, ஒரேயொரு நிலைவாசலைத் தாண்டினதும் மறுபடி கிரஹஸ்தனாயிட்டார் பஞ்சநதம்.

நானும் சிரித்தேன்.

...இதுலெ ஒரு பெரிய சங்கதி என்னன்னா, தாயாரும் பிள்ளையும் திரும்ப வாசலுக்கு வந்து பாக்கும்போது, அதுவரைக்கும் குரைச்சிண்டிருந்த நாயைக் காணோமாம்... இவரைப் பத்திரமா வீட்டுலெ கொண்டுவந்து விட்டுட்டுத் திரும்பிப் போயிடுத்து போல.

...அதுதான் விஷயம். இதுவரைக்கும் சொன்ன அப்பியாசங்களெல்லாம் யாரும் செய்துட முடியம். இதுக்கப்பறம் உள்ள அகாத சாதகங்களெ அதுக்குன்னே பிறவியெடுத்த ஜென்மங்களாலெதான் செய்ய முடியும்...

புன்னகைத்தார் ஹரிஹர சுப்ரமணியம்.

...அதுலெயும், இதுவரைக்கும் சொன்ன நிபந்தனைகளெல்லாம் குருநாதர் எனக்கு விதிச்சது. இதேதான் எல்லாருக்கும்ங்கறது கிடையாது. குடும்பஸ்தர்கள் எல்லாரும் ஒரே மாதிரியாவா குடும்பம் நடத்தறாங்க?

முகம் நிரம்பிய சிரிப்பாக மலர்ந்தது அவருடைய புன்னகை. நானும் கலந்துகொண்டேன்.

நா ன் உங்களை ஒண்ணு கேக்கலாமா?

தாராளமா. அதுக்காகத்தானே இவ்வளவு தூரம் வந்திருக்கீங்க?

இருவரும் சிரித்தோம்.

நீங்க சந்நியாசியா?

அவர் ஒரு கணம் யோசித்தார்.

நிச்சயமா இல்லே. சந்நியாசம்ங்கறதெல்லாம் மகோன்னதமான உசரம். றெக்கை பலவீனமான பக்ஷிகள் நெனைச்சுக்கூடப் பாக்க முடியாது. பேதங்களை முழுக்கத் தாண்டின மனசு சித்திக்கும்போதுதான் அந்த மாதிரி உசரத்தை எட்ட முடியும். இவ்வளவு பேசறேனே, எனக்குள்ளெ ஏத்த இறக்கம் இல்லாமல் இருக்குங்கிறீங்களா? இதே ஜய்ராம் மாமாவுடன் உரையாடுகிற மாதிரி சகஜமாக வேறு ஒருத்தருடன் என்னாலெ உரையாட முடியாது. அது எதுக்கு, மன்னாதி அண்ணா இல்லாத திருவண்ணாமலை எனக்குத் திருவண்ணாமலை மாதிரியே தெரியாது. அம்மாவுக்குப் பிறகு நான் அடைக்கலமாக நினைக்கிற ஒரே இடம் அவர்தான். இந்த மாதிரி பேதாபேதங்கள் வழியாகத்தான் நாம் இருக்கிறோம் என்பதையே தெரிஞ்சுக்க முடியறது. ராத்திரி இல்லாட்டா பகல் எப்படித் தெரியவரும்?

...இவ்வளவு நாள் இந்த மார்க்கத்தில் இருந்ததுலே, நான் கத்துண்ட பெரிய பாடம், எதையுமே நிரந்தரமானதா, மாற்ற முடியாததா வெச்சிக்க வேண்டியதில்லேங்கறதுதான். ஆனா, இந்தப் பாடத்தை நான் பெரியவர்கிட்டெக் கத்துக்கலே. நானாத் தெரிஞ்சிண்ட முதல் பாடம் இது. அதுக்காக, என்னுடைய நடைமுறை வாழ்விலேருந்து படிச்சதுன்னும் சொல்ல முடியாது. எல்லாரோடெ வாழ்க்கையிலும் இந்தப் பாடம் ஒளிஞ்சிருக்கு. ஏன், என் குருவோடெ வாழ்க்கையிலும் இதுக்கு நிரூபணம் இருக்கு.

...உதாரணமா, வேதமூர்த்தி மாமாவுடைய குருவின் குரு பாரதம் முழுக்க நடந்து மட்டுமே சுத்தினார். குருவானா, நடந்தும் தேவைப்பட்ட சமயங்களில் மாட்டுவண்டியில் ஏறியும் பிரயாணம் செஞ்சார். வேதமூர்த்தி மாமா ஆரம்ப காலங்கள்லே முழுக்க முழுக்க நடந்தும் பின்னாட்கள்லே பஸ் ரயில் உள்பட எல்லாவிதமான வாகனங்களிலெயும் பயணம் செய்யறார். இதெல்லாம் புறவயமான மாறுபாடுகள். யாருக்கும் தெரியக்கூடியவை. உள்வயமாக அவங்க மேற்கொண்ட அநுஷ்டானங்கள்லேயும் நபருக்கு நபர், காலத்துக்குக் காலம் ஏதாவது மாற்றங்கள் இருந்திருக்கத்தானே செய்யும்? அதெல்லாம் அவரவருக்குத்தான் தெரியும். மத்தவங்களுக்கு எப்பிடித் தெரியவரும்?

...அதுனாலெதான் சொல்றேன், நீங்க என்னை மாதிரி ஆட்களைப் பார்த்துப் பேசறதைவிட, மன்னாதி அண்ணா மாதிரி எளிமையான மனங்களைப் பாத்தா இன்னும் தெளிவான, நெருக்கமான சம்பாஷணை

நடக்கும். நீங்க எதைத் தெரிஞ்சிக்க வேண்டியது அவசியமோ, அது தெரியவரும்னு தோணறது.

மன்னாதி என்ற பெயர் முதல்தடவை காதில் விழுந்தபோதே, அவரை நேரில் சென்று சந்திக்க வேண்டும் என்று எனக்குள் ஒரு எண்ணம் தோன்றியிருந்தது. இப்போது, ஹரிஹர சுப்ரமணியம் மறைமுகமாக உத்தரவு வழங்குகிறார் என்று பட்டது.

அவசியம் போய்ப் பார்க்கிறேன். அவர் திருவண்ணாமலையில் இருக்கார்னுதானே சொன்னீங்க?

ஆமா, நான் இடம் சொல்றேன். போய்ப் பாருங்க.

அத்தோடெ இன்னும் ரெண்டு பேர் பேர் சொன்னீங்க?

ஆமா, சொன்னேனே. ஜய்ராம் மாமா, வைத்தியர் அண்ணா.

அவங்களையும் எனக்குப் பாக்கணும்போல இருக்கே.

ஞாயமான ஆசைதான். ஆனா ரொம்பக் கஷ்டம்.

ஏன்?

ஜய்ராம் மாமா காத்து மாதிரி. எப்பொ எந்தத் திக்கிலே வீசும்னு கணிக்க முடியாது. பாக்கியம் இருந்தாப் பாக்கலாம். வைத்தியர் அண்ணா அப்பிடி இல்லே. அவரைப் பாக்க பாக்கியமே வாய்க்காது. பிறத்தியாரை சந்திக்க விரும்பறதில்லே அவர். மேலே குகைலேதான் இருப்பார். எப்பவாவது இறங்கி வருவார். அவ்வளவுதான்...

✠

மன்னாதி

எத்தனையோ முறை அந்தக் கட்டடத்தைத் தாண்டிப் போயிருக்கிறாள் சித்ரா. தபாலாஃபீஸுக்குப் பக்கத்தில் உள்ள கட்டடம் அது. சிவப்பு நிறத்தில் பெயிண்ட் அடிக்கப்பட்ட வெளிச்சுவர்கள். செங்கல் வடிவத்தில் வெள்ளைக் கோடுகள் கட்டம் கட்டமாகச் சுவர் முழுக்க ஓடும். கட்டடத்தைத் தாண்டும்போது தன்னையறியாமல் கால்கள் விரைந்து கடக்கும்.

தானும் ஒரு நாள் அதற்குள் நுழையவேண்டி வரும் என்று நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. மாமாதான் வற்புறுத்தி அழைத்து வந்தார். உரிமையாளர் வந்து புகார் கொடுக்காமல் வேலை நடக்குமா என்ன?

வாசலில் துப்பாக்கியைத் தரையில் ஊன்றி நின்றிருந்த காவலரின் கண்கள் வெகுவாகச் சிவந்திருந்தன, இரவு முழுவதும் தூங்காமல் இருந்த மாதிரி. உள்ளே மேஜைக்கு மறுபுறம் இருந்த இளைஞரின் சீருடை சலவை விறைப்புடன் இருந்தது. நாற்காலியில் அவர் அமர்ந்திருந்த விதத்திலும் இவர்களை உள்ளே வரும்படி சமிக்ஞை செய்த முகத்திலும் ஒருவித மிடுக்கு இருந்தது.

இவர்கள் சொல்வதைப் பொறுமையாகக் கேட்டுக்கொண்டார். கடந்த நான்கு நாட்களாக விதவிதமான ஆட்களிடத்தில் கவலையாக இந்த விஷயத்தைப் பகிர்ந்துகொள்ளும் போதெல்லாம், ஏதோ ஒரு இடத்தில் மளுக்கென்று கண்களில் நீர் கோத்துவிடும். கேட்கிறவர்கள் ஆறுதலாக ஓரிரு வார்த்தைகள் சொன்ன மாத்திரத்தில் உடைப்பெடுத்துக் கொள்ளும். விசும்பாமல் சொல்லி முடிக்க முடியாது.

இந்த இளைஞரிடம் சொல்லும்போது ஒருவித அவசரம் தனக்குள் தொற்றுவதை உணர்ந்தாள் சித்ரா. சீக்கிரம் சொல்லி முடித்துவிட்டு இந்த இடத்தைவிட்டு வெறியேறிவிட்டால் தேவலை என்று மனம் பரபரத்தது. அனுசிதமான கேள்வி எதையோ அந்த ஆள் கேட்டுவிடப்போகிறார். விரசமாய் உணர்ந்து கூசப் போகிறோம் என்று

அச்சம் நிரம்பியிருந்தது. மாமாவின் முன்னிலையில் பதில் சொல்ல முடியாத ஏதோ ஒரு கேள்வியைச் சிந்திப்பதற்காகத்தான் அந்த ஆள் இவ்வளவு பொறுமையாகக் கேட்கிறான் என்று இனம் புரியாத ஓர் உணர்வு தொடர்ந்து எச்சரித்தது.

ஆனால், தர்மசங்கடமான கேள்வி எதுவும் அவர் கேட்டுவிடவில்லை. மழுப்பலான பதில் மட்டுமே சொன்னார்.

இந்தா பாருங்கம்மா. நான் என்னாலெ முடிஞ்ச உதவியைச் செய்யறேன். ஆனா, எஃப் ஐ ஆரெல்லாம் ஒடனே போட முடியாது. மதுரை ஊர்லெ காணாமப் போகுறவங்களுக்கெல்லாம் ஆளுக்கொரு எஃப் ஐ ஆர் போட்டு ஃபைல் மெய்ன்ட்டெய்ன் பண்ணுனா இந்தக் கட்டடம் முளுக்கக் காயிதமாத்தான் இருக்கும். நாங்க ஒக்கார எடம் இருக்காது...

அவர் சொன்ன எஃப் ஐ ஆர் போடுவதால் நமக்கு என்ன அனுகூலம் என்று சித்ராவுக்குப் புரியவில்லை. மாமாவுக்குத் தெரிந்திருக்கும். வெளியில் போனபிறகு கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

...தவுர, அந்தாளு கடேசியாக் காணாமப் போனது திருவண்ணாமலைலேங்குறீங்க. கேஸை எங்கெ புக் பண்றதுங்குறதை யோசிச்சுத்தான் சொல்லணும்.

கட்டின புருஷனை 'அந்தாளு' என்கிறான். சித்ராவுக்குள் அழுகையின் குமிழ் வெடித்தது.

✠

ஆ னா, ஒண்ணு, அந்தம்மா நமக்குச் செஞ்ச நன்மையை மறந்தா இந்தப் பிறவிக்கான புண்ணியம் பூராவும் காணாமெப் போயிரும்...

மன்னாதியின் முகம் கனத்துச் சிவந்திருந்தது. பேச்சின் வேகம் வெகுவாகக் குறைந்துவிட்டது. எங்கள் இருவருக்குமாகப் படுவேகமாய் விசிறிக்கொண்டிருந்த கைவிசிறி எப்போதோ ஓய்ந்துவிட்டிருக்க வேண்டும். தனக்கு ஒரு பிடிமானமாக இருப்பதற்காக மட்டுமே இப்போது அதைக் கையில் வைத்திருந்தார் என்று தோன்றியது.

...இப்ப இருக்கிற மன்னாதிக்கு அந்தப் பையன் வேற யாரோ ஒருத்தன் மாதிரித் தெரியிறான். இந்த மன்னாதி பாக்கிற விதமாத்தான் ஒங்கள்ட்டெச் சொல்றானே தவிர, அன்னைக்கி ராத்திரிக் கிளம்பின அந்தப் பயலுக்கு உலகம் தெரியாது. வெறும் சின்னப் பிள்ளே, பாவம்.

மன்னாதியின் கண்கள் எங்கோ அத்துவானத்தில் ஊன்றியிருந்தன. கடந்து வெகுதூரம் போய்விட்ட நாட்களின் ஏதோ ஒரு புள்ளியில் சென்று நிலைத்த பார்வை காட்சிகள் எதுவுமே தென்படாத மாதிரி வெறித்திருந்தது. முகத்தில் பாவம் எதுவும் துலக்கமாகத் தெரியாததால், விழிகளை முழுக்கத் திறந்து வைத்துக்கொண்டு தூங்குகிற மாதிரிப் பட்டது. வழக்கமாகச் செவேரென்று இருக்கும் முகம் அவருடையது, இப்போது வெளிறிவிட்டதாகத் தோன்றியது. அது நிஜம்தானா, எனது பிரமையா என்று குழப்பமாக இருந்தது எனக்கு. நிசப்தத்தை உலுக்கிவிட்டால் எல்லாம் சரியாகி விடும்.

விருத்தாசலம் பஸ்ஸுல ஏறினீங்க, அப்புறம் திருவண்ணாமலைக்கி எப்பிடி வந்து சேர்ந்தீங்க?

உடம்பைச் சிலிர்த்துக்கொண்டார் மன்னாதி.

அவ்வளவு சுளுவா இங்கே வந்து சேந்துற முடியுங்களா நமக்கு. சும்மா பஸ்ஸேறி வந்து சேர்ற ஸ்தலமா இது? இல்லே, நாமதான் வேடிக்கை பாத்துட்டுப் போக வந்த ஆளா?

தம்முடைய வழக்கமான சிரிப்புக்குள் புகுந்தார் மன்னாதி. எனக்கு மிகுந்த ஆறுதலாக இருந்தது. உடல் குலுங்கக் கொஞ்ச நேரம் சிரித்து ஓய்ந்த பிறகு பழைய சிவப்பு முகத்தில் வந்து அமர்ந்திருந்தது. ஆனாலும் குரலின் தீவிரம் மட்டும் அப்படியே இருந்தது.

ஆனா, ஒண்ணு மட்டும் முந்தின நாளே உறுதியாத் தெரிஞ்சது நம்பளுக்கு. திண்டுக்கல் பஸ்ஸு சேலத்தைப் பாத்து ஓட ஆரமிச்சதா? திண்டுக்கல் ஊரு மட்டும் பின்தங்கலே, நம்ம குடும்பமும் பளைய வாழ்க்கையும்கூட வேகமா விலகி ஓடுதுன்னு தோணுச்சு. நாம் இனிமே ஒருபோதும் அவங்கள்லெ யாரையும் பாக்கப் போறதில்லேன்று மனசுக்குப்பட்டது. இருட்டுக்குள்ளே வெறிச்சுப் பாத்துக்கிட்டு ஒக்காந்திருந்தேன். நம்ப அம்மா மொகம் நெனைவு வந்துச்சு. டக்குனு மனசும் கண்ணும் கலங்கீருச்சு. பட்டினத்தடிகள், ஆதிசங்கரர்ன்னு எப்பேர்க்கொத்தவங்களும் தப்பிக்க முடியாத கட்டு இல்லீங்களா அது, தொப்புள்கொடி?

மன்னாதி மறுபடி சிரித்தார். இது வேறு மாதிரிச் சிரிப்பு. பொருக்கைப் பிய்த்ததும் லேசாக ரத்தப் புள்ளி காட்டும் பலநாள் காயத்தைப் போன்றது.

முப்பத்திச் சொச்சம் வருடங்களுக்கு முன் ஒரு பின்னிரவில் மன்னாதி ஏறி உட்கார்ந்திருந்த பேருந்து, விட்ட இடத்திலிருந்து ஓட

ஆரம்பித்தது...

ம ன்னாதி நந்தவனத்திற்கு வெளியிலுள்ள சாலையை வெறித்துக்கொண்டிருந்தார். பார்வையில் படுகிறவற்றைத் தவிர்த்துவிட்டு வேறேதோ சூட்சுமமான ஒன்றைப் பார்க்கிற மாதிரி வெறுமை படர்ந்திருந்தது விழிகளில். அறைக்குள் நிரம்பியிருந்த அமைதியில் இரண்டு பேருமே வெகுநேரம் அமிழ்ந்திருந்தோம்... முதலில் மீண்டவர் மன்னாதிதான்.

...அவ்வளவு பெரிய குடும்பத்துலெ பிறந்துப்புட்டு, பொறுப்புகள் எல்லாத்தையும் தட்டிக் கழிக்கிறதுக்காகத்தானே ஓடிவந்துட்டோம், எவ்வளவு பெரிய சுயநலமி நாம்ப என்று ஆரம்ப நாட்கள்லெ ஒரு குத்தவுணர்ச்சி சதா பிறாண்டிக்கிட்டிருக்கும். ஆனாக்கெ, வீட்டைவிட்டு ஓடுறதுங்குறது நாம் எடுத்த முடிவில்லே, கழுத்தெப் பிடிச்சுத் துரத்தின விதி செய்ஞ்ச தீர்மானம் அதுங்குறது தெரிஞ்சதுக்கப்புறம் நிம்மதியாயிட்டேன்.

நீங்க சொல்றது புரியலையே?

நாம்ப வீட்டைவிட்டு ஓடிவந்த ஆறு மாசத்துலெ பேப்பர்லெ சேதி. திண்டுக்கல் நாகல்நகர் பஜ்ஜி ராஜப்பையர் குடும்பத்திலெ எல்லாரும், நம்ப அக்கா உட்பட எல்லாரும், கூட்டா விஷம் சாப்பிட்டுத் தற்கொலை செஞ்சுக்கிட்டாங்களாம் கடன் தொல்லை தாளாமெ.

அக்காதான் கல்யாணமாயிப் போயிருந்தாங்களே?

அவுங்க வீட்டுலெ, எந்நேரமும் பிறந்தவீட்லெ போய்ப் பணம் வாங்கிட்டுவரச் சொல்லி அடிப்பாங்களாம். இவுங்க டாம்பீகமாகக் கல்யாணம் நடத்தினதையும், நம்ப அப்பா சதா பேசிக்கிட்டிருந்த பரம்பரைப் பெருமையையும் பாத்து, இவுங்க நிஜமாகவே வசதியானவுங்க, பிறத்தியாரை ஏமாத்துறதுக்காகப் பராரி வேஷம் போடுறாங்கன்னு சம்பந்தி வீட்டுலெ சந்தேகப்பட்டுட்டாங்களாம். பேப்பர்க்காரன் எல்லாத்தையும் விலாவாரியாப் போட்டுருந்தான்...

மன்னாதி பேச்சை நிறுத்திச் செருமிக்கொண்டார். அருகிலிருந்த தாமிரச் செம்பிலிருந்து நாலைந்து மிடறு தண்ணீர் குடித்தார்.

...ஆனா, நம்ப தலையெழுத்து இப்பிடி இருக்கும்போது அந்த வீட்லெயே தொடர்ந்து இருக்க விடுமா கிரகம்?

என்ன சொல்றீங்க?

பின்னே என்னாங்க? ஒண்ணு எல்லாருக்கும் தெரிஞ்சு ஓர்த்தர்

கையிலேர்ந்து மத்தவுங்க வாங்கிச் சாப்புட்டுருக்கணும். இல்லே, ஒர்த்தருக்கு மட்டும் தெரிஞ்சு மத்தவங்க எல்லாரும் தெரியாமெயே சாப்பிட்டு மாண்டுருக்கணும். எப்பிடியா இருந்தாலும் நாம்ப தப்பிச்சிருக்க முடியாதில்லையா...

நான் பதில் சொல்லாமல் இருந்தேன். பெரியவரைப் பற்றி விசாரித்ததோடு நிறுத்திக் கொண்டிருக்கலாம். மன்னாதியின் பூர்வீகத்தைப் பற்றிக் கிளறியிருக்க வேண்டியதில்லை என்று தோன்றியது. முழுப் பரிட்சை லீவு தொடங்கும் நாளுக்கு முந்தின நாள் வீடு திரும்பும் குழந்தை மாதிரிக் குதூகலமாக இருந்த மனிதரை மிகப் பெரிய பாறாங்கல்லைச் சுமக்க வைத்துவிட்ட குற்றவுணர்ச்சி எனக்குள் மேலோங்கியது. மன்னாதி தொடர்ந்தார்:

...ஆனா, நாங்க விரும்பிப் பிறக்கறதில்லேங்க. நாங்களா விரும்பி முடிச்சுக்கிர்றது மட்டும் எப்பிடி நியாயமாகும்...?

மன்னாதி மீண்டும் மௌனமானார். நந்தவனத்துக்கு வெளியில் குறிப்பற்று எங்கோ பார்வை நிலைகொண்டு விட்டது. தனக்குள் ஏதோ ஒரு ஆழத்துக்குள் சென்று புதைந்துவிட்டார் என்று பட்டது. கிட்டத்தட்டக் கால் மணி நேரமாக அவர் சிரிக்கவேயில்லை என்பது சுள்ளென்று எனக்கு உறைத்தது. தழைந்த குரலில் கேட்டேன், நிஜமாகவே அவரை மீட்டெடுக்கும் விருப்பத்தில்தான்.

பெரியவரை நீங்க எப்பிடிச் சந்திச்சீங்கன்னு சொல்லவேயில்லையே?

என்னாங்க இது, இம்புட்டு நேரமும் நாம்ப என்னாத்தைச் சொன்னோம்?

புரியலையே?

அந்தம்மா நம்பளை ஒப்படைச்சுட்டுப் போனது யாருகிட்டேன்றீங்க?

மன்னாதி தன் வழக்கமான சிரிப்பை மலர்த்தினார். நானும் ஆசுவாசமானேன்.

ந ந்தவனத்துக்குள் பூச்செடிகளின் ஆதிக்கம் அதிகம். கதம்பமான மணம் வெவ்வேறு திசைகளிலிருந்து அவ்வப்போது எழுந்தது. காற்றின் போக்கைப் பொறுத்து மணத்தின் தன்மை மாறியது. மன்னாதிக்கு நீரிழிவு வியாதி இருக்கிறதாம். நான் அவருடன் பேசிக்கொண்டிருந்த சில மணி நேரத்தில் பலதடவை எழுந்து கழிவறைக்குச் சென்று வந்தார்.

சுற்றிலும் இவ்வளவு வெட்டவெளி இருக்கும்போது வளாகத்தின் இன்னொரு கோடியில் இருக்கும் கழிவறைக்குச் சென்று திரும்ப, நானானால் மெனக்கெட்டிருக்க மாட்டேன் என்று தோன்றியது. மன்னாதி அவ்வளவு கறாரான ஒழுக்கசீலர் என்று நினைத்துக்கொண்டேன். அப்படிப்பட்டவர்தாம் என்பது இன்னொருவிதமாகவும் உறுதிப்பட்டது. நாங்கள் பேசிக்கொண்டிருந்த நேரம் முழுக்க அவர் என் கண்களை நேருக்கு நேராகப் பார்த்துப் பேசினார்.

ஆரம்பத்தில் அவருடைய தமிழ்ப் பேச்சில் இடம் குறிக்கும் சுட்டு வழக்கு சம்பந்தமாக ஒரு விநோதம் கிடந்து தொந்தரவு செய்தது. பொதுவில் 'நாம்' என்கிற இடத்திலெல்லாம் 'நாங்கள்' என்றும், நம்முடையவற்றை 'எங்களுடைய' என்றும் 'நாங்கள்' என்கிற இடத்திலெல்லாம் 'நம்ம' என்று உரிமை கொண்டாடியும் அவர் பேசுவது எரிச்சலூட்டியது. சற்று நேரத்தில் பழகிவிட்டது.

உண்மையில், அவரிடம் பேசிக்கொண்டிருப்பது மிகமிக சுவாரசியமான விஷயம். அவருடைய ஞாபக சக்தியின் துல்லியம் யாரையும் மிரள வைக்கக் கூடியது.

இப்பிடித்தாங்க 72 லெ ஒரு தபா...

என்று ஆரம்பித்து, அது என்ன மாதம், அன்று என்ன கிழமை, என்ன பொழுது, அன்று இவர் அணிந்திருந்த சட்டையின் நிறம் என்ன என்று தகவல்கள் வரிசையாக வந்து தாக்கும். இவ்வளவு துல்லியமான ஞாபகசக்தி எப்படிக் கைகூடியது. இதற்கென்று தனியாக பயிற்சிகள் எதுவும் உண்டா என்று அவரைக் கேட்டேன். அவர் சிரித்தார்.

அது ஒண்ணுமில்லீங்க, நம்பளுக்குக் குடும்பம் குட்டின்னு எதுவும் கெடையாதா? கவனத்தை இளுக்குற மாதிரித் தனிப்பட்ட கவலைகளும் எதுவும் கெடையாதுங்க. லவுகீகக் கவலைகள்தானேங்க ஞாபகத்தைப் பூச்சி அரிக்கிற மாதிரி அரிச்சுருது...

அவருடைய சிரிப்பில் ஒரு சிறப்பு இருந்தது. வாயை முழுக்கத் திறந்து அண்ணாந்து அவர் சிரிக்கும்போதும், ஒரு துணுக்கு ஓசைகூடக் கேட்காது. உடம்பு மட்டும் விடாமல் குலுங்கும்.

...இதுக்கெல்லாம் தனியாப் பயிற்சி ஒண்ணும் கெடையாது. நாம்ப என்ன அஷ்டாவதானமோ சதாவதானமோ செய்யிறமா. என்ன, பழைய நாள் ஒன்னைப் பத்திப் பேசும்போது உடம்பு மட்டும்தானே இந்த நாள்லெ இருக்குது, மனசு அந்த நாள்லெ போயி ஒக்காந்துக்குதா

இல்லியா. பெறகென்ன, கண்ணு முன்னாடி தெரியிறதை மானசீகமாப் பாத்துக்கிட்டுத்தானே பேசுறோம்?

நான் தலையாட்டினேன். அவர் தொடர்ந்து என் முகத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். சட்டென்று அசவுகரியமாக உணர்ந்தேன். அவரிடமிருந்து பார்வையை விடுவித்துக்கொண்டு அறைக்குள் சுற்றுமுற்றும் பார்த்தேன்.

ஜன்னலருகே கிடந்த ஓரடி உயர மர முக்காலியின்மீது சுமார் ஒரு சாண் நீளமும் முன்னங்கைப் பருமனும் உள்ள குட்டிச் சிற்பம் நின்றுகொண்டிருந்தது. மரம் போலவும் உலோகம் போலவும் மெழுகு போலவும் ஒரே சமயத்தில் தென்பட்டது. அரக்கு நிறம். முதல் பார்வைக்கு அது என்ன சிற்பம் என்று புலப்படவில்லை. கழுத்தை நீட்டி கவனமாகப் பார்த்தேன். அட, விசித்திரமாக இருக்கிறதே?

என்னாங்க, அந்த பொம்மையைப் பார்த்து அசந்துட்டீங்களோ?

மன்னாதி சிரித்தார். நானும் அசட்டுச் சிரிப்பு ஒன்றை உதிர்த்து வைத்தேன்.

ஒங்க தாத்தா என்ன தொளில் செஞ்சாரு?

தொடர்பேயில்லாமல் எங்கிருந்தோ வந்து குதித்த கேள்வியின் பொருளை வாங்கிக்கொள்ள ஓரிரு கணங்கள் பிடித்தது.

தாய்வழித் தாத்தாவுக்குக் கொஞ்சம் நிலம் இருந்ததுன்னு சொல்வாங்க. அப்பாவழித் தாத்தா ஜோஸியரா இருந்தாராம். ஆனா, ரெண்டு பேரையுமே நான் பாத்ததில்லே.

நானும்தான் என்னோட தாத்தாவைப் பார்த்ததில்லே...

பிரமாதமான நகைச்சுவைத் துணுக்கை உதிர்த்துவிட்ட பெருமிதத்துடன் விழுந்துவிழுந்து சிரித்தார் மன்னாதி.

ஜன்னல் வழியே வெளியில் பார்த்தேன். நந்தவனத்தின் கம்பிவேலிக்கு வெளியில் நீண்டிருக்கும் தெருவில் ஒரு கிழவர் நடந்து செல்கிறார். அவருடைய கையைப் பிடித்துக்கொண்டு ஒரு குட்டிப் பெண் போகிறாள். இவள் கேட்பது அவர் காதில் சரியாக விழவில்லை போல. அவள் மட்டத்துக்குக் குனிந்து கேட்டுக்கொள்கிறார். தொடர்ந்து இருவரும் நடக்கிறார்கள். குழந்தை தலையை வேகமாக ஆட்டுகிறாள்.

...இந்த ஒண்ணுதான் எங்களுக்குள்ளெ இருக்கிற ஒத்துமெ...

மன்னாதி கொசுறாகக் கொஞ்சம் சிரித்தார்.

...ஆனா, நம்பளை மாதிரி இந்த மார்க்கத்திலே இறங்கினவங்களுக்கு ரெண்டெல்லாம் கிடையாது. ஒரே தாத்தாதான் நம்ப குருநாதனோட குருநாதன்.

மன்னாதி மீண்டும் சிரித்தார். இப்போது எனக்குமே சிரிப்பு வந்தது. மன்னாதி திரும்பவும் பேசத் தொடங்கியபோது குரல் கொஞ்சம் தீவிரமடைந்திருந்தது.

...பிராமணங்க அவுங்களை 'துவிஜனன்'னு சொல்லிக்கிருவாங்க. ஸவுராஸ்ட்ர பிராமணங்களும்தான். 'ரெண்டு தடவை பிறந்தவன்'னு அர்த்தம். தாயார் வயித்திலேருந்து வெளியே வரும்போது ஒருதடவை பிறக்கிறதாகவும், பூணூல் மாட்டுற சடங்கப்பொ இரண்டாம் தடவை பிறக்கிறதாகவும் ஐதீகம். பட்சிகளும் இப்பிடித்தான். தாயார் வயித்திலேருந்து முட்டையா முதல் தடவை. முட்டைக்குள்ளேருந்து இன்னொரு தடவை பிறக்குதுக. இல்லியா?

சரிதான்.

இந்த மார்க்கத்திலே இறங்கினவன் நிஜம்மாவே என்னைக்கோ ஒருநாள், பட்சிராசிகள் மாதிரி, ரெண்டாவது பிறப்பை எடுக்கத்தான் செய்யிறான். அதுக்குப் பெறகு நீங்க பார்க்குற கேக்குற எல்லாமே வேறயாத் தோண ஆரமிச்சுருது. 'வேற ஒரு புது உலகத்துக்குள்ளே வந்து சேந்திருக்கமோ'ன்ற மாதிரி எல்லாமே புத்தம் புதுசாயிருது. நான் பூர்விகத்திலே ஸவுராஸ்ட்ரப் பிராமணனா இருந்தவனாச்சா? அந்தக் கணக்குக்கு நான் மூணாவது பிறவி எடுத்தவன். ஆனா, பிறந்ததோடெ சரி. அதுக்கப்பறம் வளரவேயில்லே...

மன்னாதியின் சிரிப்பில் இந்தமுறை லேசான கேலி இருந்தமாதிரிப்பட்டது.

...என்னோட தாத்தா இருந்தாரே, அதாவது நம்மளோட மூணாவது பிறவிப் பாட்டனார், நம்ப பெரியவரோட குருநாதர், இவரு வடக்கே சுத்தப் போனபோது அவர்ட்டெ ஐக்கியமானாரு. அவரு பெரிய மகான். 'ஸாது பாபா'ன்னு அவரெ ஜனங்க கூப்பிடுவாங்க. நெனைச்ச மாத்திரத்திலே கையெச் சுழத்தி எதையும் வரவழைக்கக் கூடியவரு. நாங்க செடியிலெருந்து பறிக்க மாட்டோம்? அதுமாதிரிக் காத்திலேருந்து பறிப்பாராம். சிவலிங்கம் சீனி தீப்பெட்டி மரவள்ளிக்கிழங்கு, இப்பிடி. நம்ப பெரியவரோடெ குருநாதரு அதுதான் நம்ப தாத்தா சின்ன வயசிலே ரொம்ப வெடிப்பான ஆளு. ஒரு நா தன்னோட குருகிட்டக் கேட்டாராம். 'ஜீ, இந்த மாதிரி மந்திரத்திலே வரவளைக்கிற

சங்கதியெல்லாம் மூணே முக்கால் நாழிதான் இருக்குமாமே, அப்புறம் காணாமெப் போயிருமாமே, வாஸ்தவமா?ன்னு.

ம்.

ஸாது சிரிச்சாராம். 'சரி விடு, என்னென்னைக்கும் இருந்துக்கிட்டேயிருக்கிற ஒண்ணை வரவளைச்சுட்டாப் போச்சு. நீயே சொல்வேன். எதைச் சொல்றியோ அதை வரவளைச்சுடலாம்'ன்னாராம். 'ஆனா, ஒரு கண்டிஸன். பூமியிலே இதுவரைக்கும் இல்லாத வஸ்துவாச் சொல்லணும்... அப்பத்தானே நானே உருவாக்கி வரவளைச்சதுன்னு நீ நம்புவே'ன்னு சொல்லிப்புட்டு கபகபகபன்னு சிரிச்சாராம்...

மன்னாதி திரும்பவும் சிரிக்க ஆரம்பித்தார்.

...நம்ப தாத்தா மொகமும் சிரிச்ச மொகம்தான், பெரியவர் சொல்லியிருக்காரு. ஆனா, இங்க வர்றவங்க இந்த பொம்மையைப் பத்திக் கேட்டதும் பெரியவரோட சிரிப்பு மர்மமா ஆயிரும்... ஆச்சா, ஸாது பாபா அந்த மாதிரிச் சொல்லீட்டாரா? இவரு யோசிச்சாராம். யோசிச்சுக்கிட்டே இருக்காரு... அதுக்குள்ளெ, பாபாவோட கை காத்துலெ சுழண்டுச்சாம். மூணாவது சுத்து முடியிற சமயத்துலே ஒரு சுண்டு சுண்டி இளுக்கிறாரு. இந்தப் பொம்மை வந்துருச்சு. அப்பொச் சின்ன வயசுதானே இவருக்கு. குருநாதரு மெரண்டு போய்க் கண்ணு கலங்கீட்டாராம்.

ம்.

நம்பகிட்ட பெரியவரு மொதோத் தடவை சொன்னது நல்லா ஞாபகமிருக்கு. 'சின்ன வயசுலே ஏதோவொரு இங்லீஷ் புஸ்தகத்திலே குதிரை உடம்பும் மனுஷத் தலையும் உள்ள பொம்மை ஒண்ணு பாத்திருக்கேன் வேதம். அதுக்கு ஸென்ட்டார்னு பேரு. அதுவும் பிள்ளையாரும் எனக்குள்ளே கலந்து ஓடினாங்க. பிள்ளையாருக்கு யானைத்தலையும் மனுஷ உடம்பும் இருக்கால்லியா. நான் யானை உடம்பும் மனுஷத் தலையும் உள்ள பொம்மை ஒண்ணு வேணும்னு கேக்கலாம்ன்னு யோசிச்சு முடியலே, பாபா வரவழைச்சுட்டாரு. நான் அரண்டு போயிட்டேன். கொஞ்ச நேரம் களிச்சு மனசு கொஞ்சம் சுதாரிச்சதும் சிரிப்பு வந்துருச்சு வேதம். அப்பொ எனக்கு என்னா தோணிச்சுங்கிறே?'ன்னு பெரியவர்ட்டே கேட்டாராம். நீங்களும்தான் சொல்லுங்களேன். அவருக்கு என்னா தோணீருக்கும்?

ஒண்ணும் யூகிக்கத் தெரியலையே?

'நல்லவேளை, நாம்ப இதே வடிவத்தில இருக்கிற உசிர்ப்பிராணி

வேணும்னு நெனைக்கலே. ஸாது அதையும் வரவளைக்கக் கூடியவர்தான். செஞ்சு குடுத்திருந்தா நம்ப கதி என்னாயிருக்கும்?'னு குருநாதருக்குத் தோணிச்சாம். இதெச் சொல்லும்போதெல்லாம் பெரியவரு கொளந்தெ மாதிரிக் குலுங்கிக் குலுங்கிச் சிரிப்பாரு.

மன்னாதி விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தார். ஆசைதீர அவர் சிரித்து முடிக்கும்வரை கையாலாகாமல் பார்த்துக்கொண்டிருந்தேன். அவரைத் தனியாக விட்டுவிடக்கூடாதென்று நானும் சிரிக்கிற மாதிரி முகத்தை வைத்துக்கொண்டேன். ஏதோ ஒரு கணத்தில் அசட்டுத்தனமாக உணர்ந்தேன்.

சிரித்து முடித்த மன்னாதி, என் முகத்தை உறுத்துப் பார்த்தார். பிறகு வெளியில் விழுந்தது பார்வை. கொஞ்சநேரம் தரையைப் பார்த்துக்கொண்டிருந்தார். சிரிப்புக்கு அடுத்ததாக மன்னாதியிடம் என் கவனத்தை மிகவும் ஈர்த்த இன்னொரு சங்கதி இது. காக்காய் மாதிரி சதா தலையை இப்படியும் அப்படியும் ஆட்டியும் சரித்தும் மாளவில்லை அவருக்கு.

இந்த மாதிரி அங்கெ கொஞ்சம் இங்கெ கொஞ்சம்னு சொன்னா ஒண்ணும் பிடிபடாது. பெரியவரு, அவருடைய குருநாதரெப் பத்தி எங்கிட்டெ விலாவாரியாச் சொல்லியிருக்காரு. அதெ மொதல்லெ சொல்றேன். வரிசையா வந்தா எதுவும் விட்டுப் போயிறாமெச் சொல்லலாமா இல்லியா. நம்ம கதையெச் சொன்ன மாதிரி, இதெ மேம்போக்காச் சொல்ல முடியாதுல்லெ? பெரியவுங்க விஸயம், அக்கறையாச் சொல்ல வேணும். என்னா சொல்றீங்க...?

'சரிதான்' என்கிற மாதிரித் தலையாட்டினேன். தரையில் கை ஊன்றாமல் ஸ்பிரிங் போல எழுந்தார் மன்னாதி.

இருங்க வந்துர்றேன்...

என்று சொல்லி எழுந்து வளாகத்தின் மறுகோடியில் உள்ள கழிவறையைப் பார்த்து நடந்தார். விசுக் விசுக்கென்று துரிதமான நடை. என்னைவிட ஐந்தாறு வயது மூத்தவராய் இருப்பார். உடம்பு வேகமாகச் சோர்வடைகிற பிராயம். ஆனால் என்னைவிடப் பல வயது இளைஞர்போலச் சுறுசுறுப்பாக இருக்கிறார். மிதமான நரையில் தவிர வேறெங்கும் அவர் முதுமை காணக் கிடைக்கவில்லை. ஒடிசலான உடல்வாகு ஒரு காரணம். இதைவிடவும் அவர் சொன்ன இன்னொரு காரணம் மிகச் சரி என்று படுகிறது; லௌகீகக் கவலைகள் அரிக்கவில்லை என்பது.

அறையைவிட்டு எழுந்து வெளியில் வந்து நின்றேன். வெயில் இதமாக இருந்தது. தெருக்கோடியில் ஒரு சைக்கிள் உதித்தது. சிறு பையன். ஒரே கணத்தில், ஆள் நடமாட்டமற்று வெறித்த தெரு முழுவதும் அந்த சைக்கிள் நிரம்பிவிட்ட மாதிரி பட்டது. அந்தப் பையனுமே அப்படித்தான் உணர்ந்திருப்பான் போல. இரண்டு கைகளையும் ஹாண்டில் பாரிலிருந்து எடுத்துவிட்டு உடம்பால் பாலன்ஸ் செய்து ஓட்டி வருகிறான். பார்த்துக்கொண்டிருக்கும்போதே என்னை நெருங்கி வந்து கடந்து செல்கிறது சைக்கிள். மறு கோடியில் சென்று மறைந்துவிட்டது. எண்ணெய் போடாத பெடலின் கீச் கீச் சப்தம் இன்னமும் என் காதில் மீந்திருக்கிறது...

...உள்ளாறெ போயி உக்காருவமா...?

என்றார் மன்னாதி. இப்போது அந்த அறை எனக்கு மிகவும் சுவாதீனமாகி விட்டது. சுவரில் சாய்ந்து கால்களை நீட்டிக்கொண்டேன். மன்னாதி வீரமண்டியிட்ட கோலத்தில் அமர்ந்து படிந்தார்.

...பெரியவரோட குருநாதர் அதான், எங்க தாத்தா கதையெச் சொல்றதுக்கு முன்னாடி, இவுங்க ரெண்டுபேரும் சந்திச்சதெப் பத்திச் சொல்லுறேன். வரிசையா வந்தாக்கெ ஒங்களுக்கும் வாங்கிக்கிற சவுரியமா இருக்கும். என்னா சொல்றீங்க?

...பெரியவருக்கு அன்னைக்கித்தான் கல்யாணம் நடந்துருக்கு. தாலி கட்டி முடிச்சு சின்னச் சின்ன சம்பிரதாயங்களெல்லாம் நடந்து ஓய்ஞ்ச பெறகு, காலாற வெளியே போகலாம்னு திருச்செந்தூர்க் கோயில் நடைக்கு எதுத்தாப்பிலே கடக்கரையிலெ போயி ஒக்காந்தாராம்.

ஓரே மூச்சில் நீண்டுகொண்டே போனது அந்தக் கதை. கடைசியாக, எழுந்து பறந்த கொக்குகளின் மாறா வெண்மையைப் பெரியவர் வேதமூர்த்தி வியந்த சந்தர்ப்பத்தில் வந்து முடியும்போது, மன்னாதியின் கண்கள் அபாரமாக மினுங்கின.

பொதுவாகவே, மன்னாதியின் பேச்சில் இன்னொரு அம்சமும் இருக்கிறது. நிகழ்வுகள் எல்லாவற்றையும் ஒதுங்கியிருந்து வேடிக்கை பார்க்கும் மனிதர்போல விட்டேற்றியாகச் சொல்வதில்லை அவர். முதல் தடவையாகச் சொல்கிற, அல்லது, இப்போதுதான் அதை முதன்முறையாகப் பார்க்கிற மாதிரி அப்படி ஒரு குதூகலமும் விறுவிறுப்பும் கொள்கிறார். 'ஹரிஹர சுப்பிரமணியம் கனிந்துவிட்டார்' என்று அந்த அம்மாள் தங்கம் குறிப்பிட்டாரில்லையா, மன்னாதி நேர் எதிர். வயது இவ்வளவு ஆகியும் உள்ளுக்குள் துளியும் முற்றாத ஒரு

குழந்தை உட்கார்ந்திருக்கிறது. பெரியவர்களின் விஷயங்களை பெரியவர்களின் மொழியில் பேசிவிட்டு, ‘அட, நமக்கு இப்படியெல்லாம் பேச வருகிறதே!’ என்று தானே ஆச்சரியமும் பட்டுக்கொள்கிறது.

...ந ம்ப பெரியவரைப் பாக்க ஒரு வெள்ளைக்காரன் வந்தான். இவருக்கு ஒரு பிரபல்யமும் கிடையாது. என்னெ மாதிரிக் கொஞ்சம் பேருக்குத் தவிர வேற யாருக்கும் இவரு அருமெ தெரியாது. இன்னுங் கொஞ்சப் பேருக்குத் தெரிஞ்சிருக்கலாம், இங்கெ ஆட்கள் போக்குவரத்து இருக்குற சீரெப் பாத்தா அப்பிடித்தான் தோணுது. ஆனா, நமக்கு அதிகமா வெவரம் தெரியாது.

நாஞ் சொன்ன வெள்ளைக்காரன் வந்தது ரமணாசிரமத்துக்கு. அங்கே பார்த்துட்டு, கோயிலுக்குள்ளே சுத்திக்கிட்டிருந்தப்போ இவரைப் பார்த்திருக்கான். எங்களோட கண்ணு மாதிரி இல்லை பெரியவரோட கண்ணு. அவர்ட்ட ஒரு வார்த்தையாவது பேசிடணும்னு ஆசை உண்டாக்குற கண்ணு அது.

யானெக்கொட்டடிக் கிட்டே உக்காந்திருக்கோம் நானும் பெரியவரும். அவன் வந்தான். என்னென்னமோ பேச்சு ஓடுது. பெரியவரு இங்லீஸ் பேசுனா இன்னைக்கிப் பூராக் கேட்டுக்கிட்டே இருக்கலாம். அம்புட்டு நயமாப் பேசுவாரு. அந்தக் காலத்துப் படிப்பால்லியா. நமக்கு இங்லீஸ் பேச வராது. நாம்ப வெறும் ஒம்போதாப்போடெ நிறுத்தின ஆளுதானே. பேசுனாப் புரியும். அம்புட்டுத்தான்.

‘பெறந்ததிலிருந்து பிரம்மச்சாரியாவா இருக்கீங்க? அது இயற்கைக்கு விரோதமில்லையா?’ ன்னு ஆச்சரியமாக் கேட்டான் அவன். இவரு சிரிச்சாரு.

‘பட்சிராசிகளும் மிருகராசிகளும், ஏன் தாவரங்கள்கூட இனவிருத்தி பண்ணத்தானே செய்யிது? உசிரோட இயற்கை இல்லையா இணை சேர்றது?’ன்னெல்லாம் கேட்டுக்கிட்டே போனான். பெரியவரு அமைதியாய் இருந்தாரு. கோயிலுக்குள்ளாறே போற வர்ற ஜனங்களைப் பாத்துக்கிட்டிருந்தாரு. அப்பறம் அவன்கிட்டே பதில் சொன்னாரு.

நீங்க சொன்னீங்களே, அந்த ஜாப்தாவிலே உள்ள ஜீவராசிகளெல்லாம் வருஸம் முழுக்கவா இணை சேருது?

அவன் யோசித்தான்.

இல்லே, சீஸனைப் பொறுத்துத்தான்.

மனுஸஜாதி அப்பிடியா சேருது?

அவன் சிரிச்சுட்டான்.

ரெண்டாவது, மத்த ஜீவராசிகளெல்லாம் பொது இடத்திலே பலரும் பாக்கத்தானே சேருது? உடம்பு மீறுறப்போ சுத்துப்புறம் மறந்துபோகுதால்லியா? மனுஸன் மட்டும் ஏன் மறைவிடம் தேடுறான்?

அவன் சாமியோட கண்ணையே உறுத்துப் பார்த்தான்.

அப்ப என்ன அர்த்தம்? மிச்ச ஜீவராசிகளுக்கெல்லாம் அதுங்க உடம்புல மட்டுமா இருக்கிற சங்கதி, மனுஸனுக்கு மட்டும் மனசோட தவிப்பா ஆயிருச்சால்லியா? மனசைக் கட்டுப்படுத்துறது எங்களை மாதிரி ஆளுங்களுக்கு அவ்வளவொண்ணும் சிரமமில்லேன்னாரு.

வெள்ளைக்காரன் எந்திருச்சு நின்னான். இவர் காலைத் தொட்டுக் கும்பிட்டான். 'சாமியை ஒரு போட்டோ பிடிக்க உத்தரவு வேணுமே'ன்னு கேட்டான்.

இவரு 'அதெல்லாம் எதுக்கு, வேணாம்'னுட்டாரு...

...இ ன்னொரு தபா சீனாக்காரன் மாதிரி ஒர்த்தன் வந்து சேர்ந்தான். நமக்கு இந்தச் சீனாக்காரங்களைப் பார்க்கும்போதெல்லாம் ஒரு ஆச்சரியம் வந்துரும். 'நல்லா உருண்டை பிடிச்சு, மூக்கு முளி ஒதடு நெத்தி எல்லாம் நேர்த்தியாச் செதுக்கி முடிச்சப்பறம், உள்ளங்கையால மூஞ்சிலே சப்புனு அடிச்சுச் சப்பட்டையாக்கிப்பிட்டாரே எங்க பிரம்மா'ன்னு வேடிக்கையாத் தோணும்.

அவன் கிளம்பிப் போன பெறகு பெரியவர்கிட்டேச் சொல்லிச் சிரிச்சேன். இவரு அதெ ரசிக்கலெ. அத்தோட என்னைக் கண்டிக்கவும் செஞ்சாரு. நாம்ப வந்து சேந்த ஆரம்பக் காலமில்லியா, அன்னாடம் இதுமாதிரி ஏதாச்சம் தப்புப் பண்றதுதான். அவரு கண்டிச்சவுடனே மனசுக்குள்ளே 'புத்தி புத்தீ'ன்னு கன்னத்துலே போட்டுக்கிர்றதுதான்.

பெரியவர் என்ன சொல்லிக் கண்டிச்சாரு?

வைவாருன்னு நெனச்சீங்களா? கோவம்ன்னா இன்னதுன்னே தெரியாத பிறவில்லையா அது? நாம்ப சொன்னதுலெ இருக்குற தப்பெ விளக்கிச் சொல்லுவாரு. அதுவே எங்களுக்கு வலிக்கத்தானே செய்யும்? 'இத பாரு மன்னாதி, வந்த ஆளு மொதல்ல சீனாக்காரரு கெடையாது. அவரு ஊரு கொரியா. ரெண்டாவது, பாஸை ரூபம் நெறம் இதுலெல்லாம் இருக்குற கொறைபாடுகளைச் சொல்லிக் கேலியாப்

பேசுறது, நெனைக்கிறதுகூட எங்களை மாதிரிப் பிரயாணத்திலே இருக்குறவங்களுக்குச் சரி கெடையாது. பாக்கப்போனா, இதெல்லாம் வேகத்தை மட்டுப்படுத்தத்தான் செய்யும். யாருக்காவது நாஞ் சொன்ன மூணுலெயும் அவுங்களா விரும்பித் தேர்ந்தெடுக்குறதுக்கு அதிகாரம் இருக்கா?ன்னாரு.

ஓ.

ஆனாக்கெ, பெரியவர் இதை மட்டும் சொல்லி நிறுத்திக்கிற மாட்டாரு. அன்னைக்கி வரம் குடுத்த பாடம் மாதிரி இன்னொண்ணும் சொல்லித்தான் முடிப்பாரு. அன்னைக்கிச் சொன்னது இன்னமும் பசுமையா ஞாபகம் இருக்கு.

ம்.

'உசிர்லெ சின்ன உசிரு பெரிய உசிரு ன்னு ஏதாவது இருக்கா மன்னாதீ'ன்னாரு. எனக்குச் சொரேல்ன்னுச்சு. கண்லெ தண்ணி வந்துருச்சு.

அந்தச் சீனாக்காரரு, ஸாரி. கொரியாக்காரரு இவர்ட்டெ என்ன கேட்டாரு? இவரு என்ன பதில் சொன்னாரு?

சொன்னா ஆச்சரியப்படுவீங்க...

என்று சொல்லிவிட்டு மன்னாதி சிரிக்கத் தொடங்கினார். இடையில் கொஞ்சநேரமாகச் சிரிக்காமல் இருந்த ஏக்கத்தைத் தீர்த்துக்கொள்கிற மாதிரி சற்று நீளமாகவே சிரித்தார். நான் மௌனமாக நந்தவனத்தைப் பார்த்தேன். அங்கிருந்து ஒரு வண்ணத்துப் பூச்சி கிளம்பி வருகிறது. நாங்கள் இருந்த அறைக்குள் ஒவ்வொரு சுவரருகிலும் சென்று எல்லாம் சரியாக இருக்கிறதா என்று மேற்பார்வை பார்த்துவிட்டு வெளியேறுவதுவரை அதைப் பார்வையால் பின்தொடர்ந்தேன். 'பறந்து வந்து சென்றது வெறும் பூச்சியில்லை, என்னளவு பரிமாணம் கொண்ட ஒரு உயிராக்கும்' என்று எனக்குள் ஒரு வாக்கியம் உதித்தது...

...'இறப்புக்குப் பின்னாலெ என்ன நடக்குது, இங்கேர்ந்து வெளியேறி எங்கே போறோம்'ங்குற மாதிரிக் கேட்டான். அதுக்கு இவரு என்ன சொன்னாருங்கிறீங்க?

சொல்லுங்க.

'பிறக்குறத்துக்கு முன்னாடி எங்கே இருந்தோமோ அங்கேதான்' னாரு. அவன் கொஞ்சநேரம் தரையைப் பாத்து யோசிச்சுக்கிட்டிருந்தான். இதுலே இம்புட்டு யோசிக்கிறதுக்கு என்னா

இருக்கு, சாதாரண தர்க்கம்தானே இதுன்னு நமக்குத் தோணுச்சு. அவன் தலை நிமிந்து இவரைப் பாத்தான். இவரு கேக்குறாரு, 'பிறந்து வர்றதெ உள்ளே வர்றதுன்னும், செத்த பின்னாடி வெளியேறுறோம்னும் நாங்க நினைக்கிறதுக்கு என்ன அடிப்படே இருக்கு?'

அந்தக் கேள்விக்கு ஒரு நிரந்தரத் தன்மை இருக்கிற மாதிரித் தோன்றியது. மன்னாதி பாமரனைப்போல நடந்துகொள்கிறார். பாமர தொனியில் பேசுகிறார் என்றாலும் உள்ளுக்குள் வெகு சுதாரிப்பான ஒரு மனிதர் இருந்துகொண்டுதான் இருக்கிறார் என்பது அவர் தேர்வு செய்து சொல்லும் சம்பவங்களிலிருந்தும் அவருடைய ஞாபகத்தின் வழி பெருக்கெடுக்கும் சிந்தனா காரியங்களிலும் தெரியத்தான் செய்கிறது என்றும் பட்டது.

எங்களுக்கு இந்த பூமியும், இதுலே நடக்கிற சரீர வாழ்க்கையும்தான் நிஜம். 'இங்கே, இப்போ'ங்கிறதுதான் உள்ளே இருக்கிறதுக்கான அடிப்படை விஸயம்'னு கற்பிதம் பண்ணிக்கிறோமால்லியா? இப்போ பஸ்ஸ்டாண்டுக்கு ஒரு பஸ் வருது. எதுக்கு வருது...?

மன்னாதி என் பதிலை எதிர்பார்த்து ஒரு இடைவெளி விட்டார். எனக்கு பதில் சொல்லத் தோன்றவில்லை. மௌனமாக இருந்தேன். மன்னாதி தொடர்ந்தார்.

...ஸ்டாண்டுக்குள்ள நிக்கிறதுக்கா அதெச் செஞ்சு விட்டிருக்கான்? அது சும்மா ரெஸ்ட் எடுக்குறதுக்காக வருது. இல்லாட்டி தன்னோடெ உத்தியோகம் காரணமா ஜனங்களெ ஏத்திட்டுப் போறத்துக்காக வருது. மத்தபடி, அதோடெ படைப்பு நியாயம்ங்குறது ரோடுதான். ஓட்டம்தான். அதுக்குள்ளேருந்து வெளியேறித்தான் பஸ் ஸ்டாண்டுக்குள்ளே வருது. என்னா அமைதியா இருக்கீங்க. இந்த உதாரணம் நம்பளுதில்லே, எங்க பெரியவர் அந்தக் கொரியாக்காரர்ட்டெச் சொன்னதுதான்.

ம்.

'ஆக, எறந்துபோறவுங்க வெளியேர்றதில்லே, உள்ளேதான் நொளையிறாங்க. விட்ட எடத்திலேர்ந்து கர்மத்தைத் தொடர்றதுக்காக'ங்குறது புரியிதான்னு கேட்டாரு. வந்த ஆளு வேகமாக் கேட்டான். 'அந்தக் கர்மம்ங்குறதுதான் என்ன?' இவரு நிதானமாச் சொன்னாரு. 'அதெத்தானங்க நாம்ப தேடிக் கண்டுபிடிச்சாகணும்' உத்தியோகத்தைக் கண்டுபிடிச்சிட்டா அது நடக்கிற ஸ்தலத்தையும் சுளுவாக் கண்டுபிடிச்சிறலாமே? கடேசியாச் சொன்னதை பெரியவர் சொல்லலே, நாம்ப சொல்றதுதான் இது.

மன்னாதி மறுபடி சிரிக்கத் தொடங்கினார்.

இ வ்வளவு நாள் அவரோடெ இருந்திருக்கீங்களே, நீங்க தீட்செ வாங்கிக்கலையா?

மன்னாதி என் முகத்தையே பார்த்தார். நான் கேலி செய்யவில்லை என்று உறுதிப்பட்டதோ என்னவோ, பார்வையைத் திருப்பிக்கொண்டு யாருக்கோ சொல்கிற மாதிரி பதில் சொன்னார்.

இதென்னா, மளே பெய்யிதுன்னு பிறத்தியார்ட்டெக் கொடை இரவல் வாங்குற மாதிரி சமாசாரமா...?

தன்னுடைய நகைச்சுவையை மெச்சிக் கொஞ்ச நேரம் சிரித்தடங்கினார்.

...தீட்செ குடுங்க குடுங்கன்னு பலதடவை பெரிவர்கிட்டெக் கேட்டுருக்கேன். ஆரம்பத்துலே. 'கொஞ்ச நாள் போகட்டும், ஆகட்டும் பாக்கலாம்'ங்கிற மாதிரிப் பதில் சொல்வாரேயொளிய 'மாட்டேன்'னு ஒரு வாட்டியும் சொன்னதில்லே. அப்பறம் சிறுகச் சிறுக தலையை மட்டும் ஆட்டிக்கிட்டுக் கேப்பாரு. சில சமயம் என் கண்ணெப் பாத்துச் சிரிப்பாரு. நாலைஞ்சு வருஸம் களிச்சு கேக்குறதெயே நிறுத்தீட்டேன். 'சரி, குடுக்கும்போது குடுக்கட்டும்'னு விட்டாச்சு. அதெப் பத்திப் பேச்சே வராமெ இத்தனெ வருஸம் ஓடிப் போச்சு. ஆனா, இப்பப்ப அவரு குடுக்காமெ விட்டது சரிதான்னு தோணுது. பாருங்களேன், கண்ணு கலங்காட்டியும் மனசு கலங்கத்தானே செய்யிது? அப்பறம் நாம்ப என்னாத்தெத் துறவியாறது? இருந்தாலும், தீட்சென்னு ஒண்ணு வாங்கலெயே தவுர, அவரு கூடவெ இருக்குற பாக்கியம் லவிச்சதா இல்லியா? இப்பத்தான் நாலைஞ்சு வருஸமா இங்கிட்டே தங்கீட்டெனே தவுர, ரொம்ப வருஸம் அவரோடெ நெணல் மாதிரிக் கூடப் போய்க்கிட்டிருந்தேன். சில சந்தர்ப்பங்கள்லெ என்னைத் தனியா இங்கெ இருக்கச் சொல்லீட்டு அவரு மட்டும் போவாரு. எங்கெ போவாரு, என்ன செய்வாரு எதுவும் நம்பளுக்குத் தெரியாது. தவுர, அவரு செய்யிற அப்பியாசங்களும் எதுவும் நமக்குத் கெடையாது. எல்லாப் பறவையும் ஒரே ஒசரத்துல பறக்க முடியுமா? அப்பிடி மட்டும் நடந்துச்சுன்னு வைங்க. பறவைக்கூட்டமெல்லாம் சேந்து திரெ மாதிரி ஆயிரும். சமயத்துலே மேகம் மறைக்கிற மாதிரி சூரியனையேகூட மறெச்சிரும். என்னா சொல்றீங்க?

மன்னாதி மீண்டும் சிரித்தார். நானும் சிரித்தேன்.

எனக்குத் தெரிஞ்சு அவர் தீட்செ குடுத்தது மூணே பேருக்குத்தான். ஹரிஹரன், அதான் நீங்க பாத்தீங்களே, அவரு ஒண்ணு.

இன்னோர்த்தரு ஐய்ராம் சாமி. அவருக்குக் கிட்டத்தட்ட நம்ம பெரியவரு வயசு இருக்கும். பெரியவரோடெ மொதமொதல்லே வந்து ஐக்கியமானவரு. மூணாவது, வைத்தியரு.

அவங்கல்லாம் எந்த ஊர்க்காரங்க?

என்னா கேள்வி கேட்டீங்க போங்க. தலைக்கி மேலெ போற மேகத்தெ நிறுத்தி 'யப்பா, ஒனக்கு ஊர் எது'ன்னு கேட்டா, அது என்னாத்தெச் சொல்லும்? இவுங்களுக்கெல்லாம் ஊரே கெடையாதுங்க. ம்ஹூம். அப்பிடிச் சொல்றதுகூடத் தப்புதான். எல்லா ஊர்லெயும் தன்னோட ஊர் மாதிரியே இருப்பாங்க இவுங்கள்லாம். நானெல்லாம் பெரியவரோடெ எத்தனெ ஊருக்குப் போயிருக்கேன். ஒரு ஊர்லெயாவது ஒர்த்தர்ட்டெ நின்னோம், ஒரு எடத்துக்கு வளி கேட்டோம்னு கெடையாது. எல்லா ஊர்லெயும் எல்லாத் தெருவும் சந்தும் உள்ளங்கை ரேகெ மாதிரித் தெரியும் அவருக்கு. அந்தந்த ஊர்லெயே பெறந்து வளந்தவரு மாதிரி...

மூணாவது ஒர்த்தரெச் சொன்னீங்களே, அவரு யாரு?

அவருதான், வைத்தியரு. வருஸத்திலே ஒரு தடவை ரெண்டு தடவை எறங்கி வர்றவரு. மித்தப்படி, முளுக்க மலையிலேதான் வாசம்.

அவுங்களையெல்லாம் நான் சந்திக்கணுமே.

ஐய்ராம் சாமியெச் சந்திச்சுரலாம்ங்க. ஒரே கண்டிஸன், அவரு இருக்குற நேரத்திலெ நீங்க இங்க வரணும். அம்புட்டுத்தான். அடுத்தவரு இருக்காரே, அதான் வைத்தியரு. அவரெப் பாக்க முடியாதுங்க.

ஏன் அப்பிடி?

அவரு தன்கூட மட்டும்தான் பேசிக்கிருவாரு. எந்த ஊருன்னு கேட்டீங்களே, வைத்தியருக்கு அந்தப் பக்கம் சேத்தியாத் தோப்பு பக்கத்திலே ஏதோ கிராமம்னு சொல்வாங்க. என் வயசுதான் இருக்கும். அந்தக் காலத்திலே, பேர்பெத்த வைத்தியர் குடும்பமாம். பரம்பரையா வந்த சுவடிகளெ வச்சு வைத்தியம் பாத்துக்கிட்டிருந்துருக்காங்க. ஒரு சமயம் இவரு வெளியூர் போயித் திரும்புறாரு. பஸ்ஸைவிட்டு எறங்கி கிராமத்தைப் பாத்து நடக்குறாரு. வண்டிப் பாதெ. இவரு வந்த பஸ்ஸுலெ இவர் கூடவே எறங்கி ஒரு ஆள் நடந்து வர்றாரு. கிராமத்துக்கு இன்னம் அஞ்சாறு பர்லாங் இருக்குறப்ப இவரெத் தடுத்து நிறுத்தி, 'யப்பா, அங்கே பாத்தியா'ன்னுகூட வந்தவரு காட்டுறாரு. வைத்தியருக்குத் தெகைப்பா இருக்கு. அங்கெ ஆகாயத்துலெ கறுப்பாப் பொகெ ஒசந்து மண்டுது. இன்னம் இன்னம்னு ஒசந்துக்கிட்டே இருக்கு.

இவுங்க வீடு கிராமத்துக்குள்ளெ மையத்துலெ இருக்கு. ஆனா, தொளில் நடத்துற குடிசெ பொக வர்ற லெக்குலெதான் இருக்கு. 'அதென்னாது, புரியலயே'ங்குறாரு இவரு. ஒரு பொம்பளெ பேரெச் சொல்லி, 'அவ கொளந்தே உண்டாயிருக்கான்னு நீ வைத்தியம் பண்ணுறியால்லியா, அந்தக் குடும்பத்துக்காரங்கதாம் ஒன் குடிசைக்கித் தீ வச்சுருக்காங்க.'ன்னு அவரு சொல்லியிருக்காரு. 'அய்யோ, எஞ் சுவடியெல்லாம் எரிஞ்சிருச்சா. அம்புட்டும் போச்சே'ன்னு தலையெப் பிடிச்சுக்கிட்டு இவரு நடுப் பாதெயிலெ ஒக்காந்துட்டாராம். கொஞ்சம் தெளிச்சிப் பட்டதும், 'அது சரி, நீங்க யாரு, எங் கூடத்தானே பஸ்ஸுலெ வந்து எறங்குனீங்க, ஒங்களுக்கு இம்புட்டு வெவரமும் எப்படித் தெரியும்'னு ஆச்சரியமாக் கேட்டாராம்...

எனக்கும் அதே ஆச்சரியம்தான்.

என்றேன்.

இதுலெ ஆச்சரியப்பட என்னாங்க இருக்கு. அவரு யாருங்குறீங்க? மன்னாதி சிரிக்க ஆரம்பித்தார். தாமாக அவர் ஓய்வதற்காகக் காத்திருந்தேன்...

அ வரு, ஹரிஹர சுப்ரமணியம் ஒங்களெ விட ரொம்பச் சின்னவரு இல்லியா?

ஆமா. நான் பெரியவர்ட்டெ வந்து சேந்தப்ப அவரு பெறந்திருக்கவே மாட்டாரு.

மன்னாதி கொசுறாகக் கொஞ்சம் சிரித்தார்.

அவருக்கெல்லாம் தீட்செ குடுத்துருக்காரு, நமக்குக் குடுக்கலெயேன்னு ஒங்களுக்குச் சங்கடமாயில்லையா?

மன்னாதி என் முகத்தைக் குறுகுறுவென்று பார்த்தார். கண்களில் தென்பட்ட தீவிரம் ஓரிரு கணங்கள் நின்று, பின் மறைந்தது. பழையபடி சகஜமானார்.

ஒரு தபா, பெரியவரோடெ நானும் மலைக்கிப் போனேன். இப்ப மாதிரி அப்பல்லாம் மலை மேலெ ஆட்கள் நடமாட்டம் கிடையாது. அவ்வளவு ஏன், கிரிவலம் சுத்துறேன்னு திருவிளா மாதிரி ஜனம் கூடுதே இப்பல்லாம், அந்த நாள்லெ பௌர்ணமி நெலா சவலெக் கொளந்தே மாதிரித் தனியாக் கெடக்கும் ஆகாயத்துலே. சரி அதெ விடுங்க, மலைக்கிப் போனமா. ஒத்தெயடிப் பாதெ மாதிரி மேலே போகுது. எதுத்தாப்பல ஒரு கொரங்குக் கூட்டம். பெரியவரு வந்தது

அவுங்களுக்கெல்லாம் ஒரே கொண்டாட்டமாயிருச்சு போல. எங்கே, இவருதான் தோள் பையிலெ சீப்பு சீப்பா வாழப்பழம் வச்சிருக்காரே. அதுலெ ஒண்ணுக்கு என்ன தோணுச்சுன்னு தெரியலே, இந்தா இப்பிடி, எடது கையிலெ பிடிச்சுக்கிட்டு வலது கையாலெ உரிச்ச வாழப்பழத்தெ நம்பளெப் பாத்து நீட்டுது, 'இந்தா ஒனக்கும் வேணுமா'ன்னு. சரிதான், மூஞ்சியெப் பாத்தா எங்காளு மாதிரி இருக்குன்னு தோணுச்சோ என்னவோ...

கண்களில் நீர்வரச் சிரித்தார் மன்னாதி. அந்தச் சிரிப்பின் குழந்தைத்தனம் என் மனத்தை நிரப்பியது. நானும் சேர்ந்து சிரித்தேன்.

...மத்தக் கொரங்குக குதிச்சுக் கும்மாளம் போடுது. சடார்ன்னு ஒரு கொரங்கு நின்ன போஸு திருவிதாங்கூர் சகோதரிகள் புடிக்கிற அடவு மாதிரிக் கண்ணுக்குப் பட்டுது. அது தற்செயலா நடந்ததுதான். பாவம் அந்தக் கொரங்குக்கு இதெல்லாம் தெரியாது. தாம் அப்பிடி நின்னோம்னு கூடத் தெரியாது...

என்று சொல்லி நிறுத்திவிட்டுக் கடகடவெனத் தொடர்ந்து சிரித்தார் மன்னாதி. எனக்கு குழப்பமாக இருந்தது. நான் என்ன கேட்டேன், இவர் என்ன பதில் சொல்லத் தொடங்கினார், எங்கே வந்து நின்றிருக்கிறார், எல்லாமே குழப்பம்தான்.

...எதுக்குச் சொல்றேன். நம்பளை மாதிரி ஆளுக்குத் தீட்செ குடுத்தார்ன்னே வச்சிக்கிருவோம். நம்பளுக்கென்ன ஹரி மாதிரியோ, ஜய்ராம் சாமி மாதிரியோ கற்பூர புத்தியா? இல்லை, வைத்தியர் மாதிரிப் பரம்பரெ ஞானமா? நாட்டியக் கொரங்குல்லெ நாம்ப...?

இரண்டுபேரும் சிரித்தோம்.

...ஆனாக்கே, தீட்சென்னு குடுத்து வேற பயிற்சியிலெல்லாம் ஈடுபடுத்தலெயே தவிர, சம்பிரதாயமா என்னெத் தன்கூட எணைச்சுக்கிடத்தான் செய்தாரு.

அது எப்பிடி, ஒரு விசேஷம் மாதிரி நடந்ததோ?

இதென்னாங்க, கல்யாணமா? பத்திரிகை அடிச்சு ஊரெக் கூட்டி விருந்து வைக்க... அஞ்சே நிமுசத்துலெ முடிஞ்சுபோன சங்கதிங்க...

என்ன செஞ்சாருன்னு சொல்லலாமா?

சொல்றதுலெ என்னாங்க இருக்கு? ஒங்கள்ட்டெச் சொல்றதுனாலெ, மறுபடி நாம்ப கிருஹஸ்தனாயிறப் போறமா...? இல்லே, நாம்ப சொன்னதெ வச்சு ஒங்களாலெ எதுனாச்சிம் பண்ணிற முடியுமா,

சொல்லுங்க?

மன்னாதி மறுபடியும் சிரித்தார்.

...தாம்பாளம் மாதிரி அகலமான தாமிரப் பாத்திரத்திலே தண்ணி நிரப்பினாரு. அதுலே வில்வம், துளசி, வெள்ளெப்பூன்னு சில சங்கதிகளெப் போடச் சொன்னாரு. பாத்திரத்துக்கு அந்தப் பக்கம் அவரு. இந்தப்பக்கம் என்னெ ஒக்காத்துனாரு. என்னோடெ வலது கட்டெ விரலெ, இந்தா இப்பிடி, அவரோடெ வலதுகை ஆள்காட்டி விரலையும் கட்டெ விரலையும் வெச்சு இடுக்கியிலே பிடிச்ச மாதிரிப் பிடிச்சு தண்ணிக்குள்ளாறெ அமுக்கினாரு. பெறகு வெளியே எடுத்து, இந்தா இப்பிடி, மூணு தடவெ என் கையெத் தண்ணிப் பரப்பெச் சுத்த வைச்சாரு. அவரா ஒதட்டுக்குள்ளெ ஒரு மந்திரம் உச்சாடனம் பண்ணினாரு. அப்புறம் என் காதோடெ ஒரு சுலோகம் சொல்லி வச்சாரு. ஒரு நாளைக்கி இத்தனெ தடவெ சொல்லணும்னு கணக்கு. மத்தவங்க யார்ட்டெயும் அதெச் சொல்லக் கூடாதுன்னு உத்தரவு. எந்திரிச்சு ரெண்டுபேருமாக் கோயிலுக்குப் போயிட்டோம். அம்புட்டுத்தான். மத்தபடி, அதுக்கு முன்னாடி இருந்த அதே மன்னாதிதான் அதுக்கப்பறமும்...

சிரிக்கத் தொடங்கினார். மன்னாதியென்னும் பெரும் சிரிப்பு பொங்கிப் பீறியவாறிருந்தது.

சா யங்காலமாயிருச்சே. படுத்து எந்திரிச்சுக் காலைலெ கிளம்ப வேண்டியதுதானே? நீங்க மெற்றாஸ் போய்ச் சேரும்போதே மணி ஒம்பது ஒம்பதரை ஆயிருமே? எங்கே போயித் தங்குவீங்க, பாவம்?

அதுனாலெ பரவாயில்லே. ஏதாவது லாட்ஜ்லெ தங்கிக்கிறலாம். ராத்திரியே போயிட்டா, நாளைக்கி அவரெக் கொஞ்சம் சீக்கிரமே போய்ப் பாக்கலாமாயில்லியா?

அதுவும் சரிதான்.

நீங்க சொன்னீங்களே, மிஸ்ட்டர் சிவராமன், அவரெ நாளைக்கி வீட்லெ போய்ப் பாக்கலாமில்லையா?

தாராளமா. அவரு சரியான கூட்டுப் பறவெ. ஆபீஸெயே வீட்டு மாடியிலேதானே வச்சிருக்காரு. எங்கேயும் போக மாட்டாரு.

என்னடா இது, வேலை நாள்லெ நிம்மதியா இருக்க விடாமெ வேத்து மனுஷன் வந்து கழுத்தறுக்குறானேன்னு நெனச்சிட மாட்டாரே?

என்னாங்க இது, கொளந்தெ மாதிரிக் கேக்குறீங்க. ஒரு தபா

அவரெப் பாத்துட்டீங்க, அப்பறம் விடவே மாட்டீங்க. சந்தர்ப்பம் கிடைக்கிறப்பல்லாம் ஓடீருவீங்க, அவரெப் பாக்க. அவரளவு அறிவும் செல்வமும் உள்ள ஆட்கள் அவரளவு எளிமையா, சுபாவமா இருக்குறதெ எங்கெயுமே பாத்துக்கிற முடியாது.

என் பிரயாணப் பையை எடுத்துக்கொண்டேன். எழுந்தேன்.

வர்றேங்க.

வாங்க. அவசியம் வாங்க. எப்பிடியும் இன்னொரு தபா நீங்க வருவீங்கன்னுதான் படுது. தோணும்போதெல்லாம் வாங்க.

வாசல் படலைத் திறந்து வெளியேறி நடந்தேன். நந்தவனத்துக்குள் புகுந்த காற்று பூச்செடிகளின் தலைகளை அலையாக வருடிச் சென்றது. தெருவின் முனையில் நான் திசை மாறும்போது திரும்பிப் பார்த்தேன். மன்னாதி நின்ற இடத்திலேயே நின்று என்னைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

✠

சிவராமன்

தல்லாகுளம் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயில். ஆஞ்சநேயர் சந்நிதியின் எதிரிலிருந்த தூணில் சாய்ந்து கண்மூடி அமர்ந்தாள் சித்ரா. இவர் வரப்பிரஸாதி. நடராஜ மாமாவுக்குத் தெரிந்தவரான அனுப்பானடி ஜோஸியர் சொல்லித்தான் இவரை வந்து சேவிக்க ஆரம்பித்தது. சித்ராவுக்கு ஜாதகத்தில் ஏதோ தோஷம் இருக்கிறது. ஆறு சனிக்கிழமைகள் இங்கே வந்து இவர் சந்நிதியை ஒன்பது பிரதட்சணம் செய்து சேவித்துவிட்டுப் போவதுதான் ஒரே வழி என்று அந்த ஜோஸியர் பரிகாரம் சொன்னார்.

பொண்ணுக்குக் கலியாணம் செய்யணுன்னு ஜாதகத்தை எடுத்திருக்கிறீங்கோ. நல்லவேளை, ஆறு மாஸம் பிந்தி வந்திருந்தால் அப்புறம் நாலு வருஸத்துக்கு அப்புறம்தான் குரு தசை வந்து சேருதூ.

என்றார் அவர்.

நாலாவது சனிக்கிழமை வந்து ஆஞ்சநேயரைப் பிரதட்சணம் செய்துவிட்டு வீடு திரும்பினால், இவளுடைய ஜாதகத்தை அனுப்பச் சொல்லி சந்தானம் வீட்டாரிடமிருந்து தபால் வந்திருந்தது.

முதல் இரவில் சந்தானத்திடம் இதைச் சொல்லி, இந்த ஆஞ்சநேயருக்கு வடைமாலை சார்த்த நேர்ந்துகொண்டிருப்பதையும் சொன்னாள். ஸீரியஸாகக் கேட்டுக்கொண்ட இளம் சந்தானம் தலையாட்டி சம்மதித்தவன், தான் ஒரு விஷயம் சொன்னான்.

அவனுடைய சொந்தக்காரர் ஒருத்தரின் மனைவி காணாமல் போய்விட்டாளாம். அந்த ஊரில் ஒரு பிரசித்தி பெற்ற ராமர் கோயில் உண்டு. அங்கேபோய் முறையிட்டாராம் அவர். ராமர் பிரத்யட்சமானார்.

இந்தத் தெருக்கோடியில் இன்னொரு கோயில் இருக்கு. அங்கே போய்க் கம்ப்ளெய்ன் பண்ணு அப்பனே. என் பொண்டாட்டி காணாமெப் போனப்போ அவர்தான் தேடிக் குடுத்தார்.

என்றாராம். சொல்லிமுடிக்கும்போது அவன் குரலில் அநியாயக் குறும்பு

சேர்ந்திருந்தது. குலுங்கிக் குலுங்கிச் சிரித்தபடி இவளை... மானசீகத்தில் உயிர்பெற்ற காட்சியை இடைவெட்டி ஒரு குரல் புகுந்தது.

என்ன மாமி, தனியா வந்திருக்கேள், காலங்காத்தாலே...

அர்ச்சகர் சேஷாத்ரி.

நாளைக்கி வடைமாலை சாத்தணும்ண்ணா. அதான் பணம் குடுத்துட்டுப் போலாம்னு வந்தேன்.

குடுங்களேன். ஆபீஸ் திறந்ததும் கட்டி, ரசீது வாங்கி வச்சிர்றேன்.

கோயிலை விட்டு வெளியேறும்போது, பூக்காரக் கிழவி,

பூ வாங்கு கண்ணு, நூறு ரெண்டு ரூவாதான்.

என்றாள். இவ்வளவு நேரம் அடக்கி வைத்திருந்த குமுறல் உடனடியாகக் கிளம்பியது. கால்கள் துவள, கோயில் மதிலை ஒட்டிய டவுன்பஸ் நிறுத்தத்தை நோக்கி நடந்தாள் சித்ரா.

✠

செ ன்னையின் மையமான ஆழ்வார்ப்பேட்டைப் பகுதி. ராஜா அண்ணாமலைபுரம் மந்தைவெளிக்குப் போகும் சாலையிலிருந்து வலதுபுறம் கிளைத்து டிடிகே சாலை நோக்கிச் செல்லும் குறுக்குச் சாலையில் ஆட்டோ நுழைந்தது. கொஞ்சதூரம் சென்றபின், வலது பக்கம் இன்னொரு சந்து திரும்பியது. முட்டுச் சந்து. வலதுபுறக் கோடியில் கடைசிவீடாக பிரம்மாண்டமான மாளிகை ஒன்று நின்றது. அதன் நெற்றியில் அதி நவீனமான எழுத்துக்களில் வத்ஸலா பவனம் என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. வாசலின் இடதுபக்கத் தூணில் பதிக்கப்பட்ட பித்தளைப் பலகையில் கே.சிவராமன், ஆர்க்கிடெக்ட் என்ற கறுப்பு எழுத்துக்கள் செதுக்கப்பட்டிருந்தன.

இந்த வீடுதான்.

என்று ஆட்டோவை நிறுத்தச் சொல்லி இறங்கினேன். அறிமுகமில்லாத மனிதர் ஒருவரைப் பார்க்கப் போகிறோம் என்ற சிறு குறுகுறுப்பு மனத்தில் எழுந்தது. அவரிடம் என்ன கேட்கப் போகிறோம் என்பதே தெளிவாக இல்லை. காரணமில்லாமல் வந்து தொந்தரவு செய்கிறோம் என்று நினைப்பாரோ? காரணமே இல்லை என்று சொல்ல முடியுமா என்ன? ஒருவேளை, இந்தக் காரணம் போதாது என்று அவர் நினைத்துவிட்டால்?

கடைசி நிமிடப் பதற்றமும் கேள்விகளும் வியர்வையும் ஊறிக்கிளம்பியதில், ஆட்டோக்காரருக்கு வாடகை கொடுத்ததும், அவர் கொடுத்த பாக்கித் தொகையை மணிப்பர்ஸில் வைத்துக்கொண்டதும் எல்லாம் என் கவனத்துக்கு வெளியிலேயே நடந்து முடிந்தன.

ஆட்டோ வந்து நின்ற ஓசை கேட்டு ஓடிவந்த இளம்பெண் வாசல் கதவை அகலமாகத் திறந்துவிட்டாள். உடனடியாக உள்ளே செல்ல வேண்டியதாகிவிட்டது. வாசலின் மறுபக்கத் தூணில் மாட்டியிருந்த பித்தளைப் பெயர்ப்பலகையைச் சரியாகக் கவனிக்க அவகாசமில்லை. அந்தப் பெண் வீட்டின் பின்புறம் போய்விட்டாள்.

நகரில் மாளிகை அமைந்திருக்கும் பகுதியும், அதன் முகப்பும், உள்ளே கார் நிறுத்தும் இடத்தில் அந்த இடமே என்னுடைய வீடு அளவுக்கு விஸ்தாரமாக இருந்தது நின்றிருந்த இரண்டு கார்களும் என அந்தஸ்தின் உரத்த குரல் ஒலிக்கிற இடம் அது. கார்களில் ஒன்று கறுப்பு நிற இன்னோவா, மற்றது வெள்ளை நிற மாருதி 800. இடதுபுறம் வீட்டின் வாயிற்கதவு. பூவேலைகள் செய்த கம்பிக் கதவுக்கு முன்னால் மூன்று படிகள்.

அழைப்பு மணியை அழுத்தினேன். வீட்டுக்குள் நாற்காலிபோல எதையோ நகர்த்தும் ஒலியும், தொடர்ந்து யாரோ நடந்துவரும் ஒலியும் கேட்டது. கதவைத் திறந்தவர் கைவைத்த பனியன் போட்டிருந்தார். பளிச்சென்று துவைத்த பனியன். சலவையிலிருந்து அப்போதுதான் திரும்பிய மாதிரி வெளுத்திருந்த வேஷ்டி. முகத்தில் தெரியும் வயதுக்குப் பொருத்தமில்லாமல் முழுக்க நரைத்த பஞ்சுத் தலை. மழுமழுவென்ற முகம். தீர்க்கமான நாசி.

நீங்கள்?

என்று ஆங்கிலத்தில் கேட்டார்.

சந்தானம். மதுரையைச் சேர்ந்தவன். மிஸ்ட்டர் சிவராமனைப் பாக்க வந்திருக்கிறேன்.

என்றேன். வரவேற்றவர் உடனடியாகக் கைநீட்டினார்.

நான்தான் சிவராமன். உள்ளே வாருங்கள்.

ரோஜா இதழ்போல நிறம்கொண்ட மிருதுவான உள்ளங்கையைப் பற்றிக் குலுக்கினேன். அவரது ஆங்கில உச்சரிப்புக்குப் பொருத்தமில்லாமல் எனது உச்சரிப்பு இருப்பது பற்றி லேசாகத் தாழ்வுணர்ச்சி துளிர்த்தது.

உட்காருங்கள். நான் உங்களுக்கு என்ன உதவி செய்யக்கூடும்?

நான் திருவண்ணாமலையிலேர்ந்து வர்றேன். பெரியவர் வேதமூர்த்தி சம்பந்தமா...

ஒரு திடீர்த் தீர்மானத்தில் தமிழுக்கு மாறிக்கொண்டேன்.

சிவராமனின் முகம் உடனடியாகக் கனிந்தது. வீட்டின் உள்புறம் பார்வையைத் திருப்பிக்கொண்டார். சற்று நேரம் பார்வை நிலைத்தே இருந்தது இதற்குமுன் பார்த்தறியாத இடத்தைப் பார்க்கிற உன்னிப்புடன். பிறகு என் பக்கம் திரும்பினார்.

எதற்காக என்று நான் தெரிந்துகொள்ளலாமா?

குறிப்பா நோக்கம்னு ஒண்ணும் இல்லே. சதா சர்வகாலமும் தொழில் பாத்து, பணம் சம்பாதிச்சு, யோசிச்சு செலவு பண்ணி, இல்லாட்டி பத்திரப்படுத்தின்னு ஒரு வட்டத்துக்குள்ளேயே சுத்திட்டுருந்துருக்கோமே, தன்னைப் பத்தி யோசிக்காத பரோபகாரிகள் மகான்கள் பத்திக் காதாலேயாவது கேட்டுத் தெரிஞ்சுக்கிறலாமேன்னுதான். இத்தனை வருஷம் பூமியிலெ இருந்ததுக்கு ஏதாவது ஒரு அர்த்தம் வேணாமா?

தாங்கள் ஒரு பிராமணரோ...?

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. எதற்காக இந்த மனிதன் ஜாதியைப் பற்றி விசாரிக்கிறான். நான் தேடி வந்த நபர் இந்த சிவராமன்தானா என்ற ஒரு சந்தேகம் துளிர்விட்டது. தலை அனிச்சையாக 'ஆமாம்' என்று ஆடியது.

...இல்லை, உங்கள் பொதுக் கொச்சை சற்று அபத்தமாக இருந்தது. அதனால்தான் கேட்டேன். அது சரி, உங்களை இங்கு வருமாறு ஆற்றுப்படுத்தியது யார்...?

என்று சுவாதீனமாகப் புன்னகைத்தார் சிவராமன். வெகுநாள் பழகிய நபரின் புன்னகை மாதிரி இருந்தது. நான் ஆசுவாசமானேன்.

மிஸ்டர் மன்னாதி.

ஓ. உடம்பு வீங்கிய குழந்தை அது. என் வாழ்க்கையில் நான் மிகவும் நெருக்கமாக உணரும் நபர்களில் ஒருவர். அவரிடம் நீங்கள் எதை வேண்டுமானாலும் நம்பிப் பகிர்ந்து கொள்ளலாம்...

நான் மௌனமாய்த் தலையாட்டினேன், வாஸ்தவம்தான் என்கிற மாதிரி.

...நாம் நிறையப் பேசலாம். இன்று புதன்கிழமைதானே. எனக்கும் குறிப்பாக வேலையொன்றும் இல்லை. முதலில் என்ன சாப்பிடுகிறீர்கள். வஸந்த்தீ... வஸந்த்தீ...

சிவராமனின் குரலுக்கு எதிரொலிபோல சடுதியாக வரவேற்பறைக்குள் வந்து நின்ற பெண்மணிக்கு இவரைவிட வயது சற்று அதிகமிருக்குமோ என்று தோன்றியது. விழிகளின் கீழ் படிந்த கருவளையங்கள் அடர்த்தியாக இருந்தன. கருகருவென்ற தலைமுடிக்குப் பொருத்தமற்று வறண்டிருந்த முகம். அந்த முகத்தை எங்கோ பார்த்திருக்கிறேன். சட்டென்று நினைவு வரமாட்டேனென்கிறது.

என்னுடைய மனைவி. வஸந்த்தீ, இவர் ஸ்ரீ சந்தானம். நமது மாமா பற்றிக் கேட்டுத் தெரிந்துகொள்வதற்காக வந்திருக்கிறார்...

சிவராமன் தன்னிடம் பேசவில்லை என்கிற மாதிரி பாவமேயில்லாமல் தலையை மட்டும் ஆட்டினார் அந்த அம்மாள். என்னை உறுத்துப் பார்த்தார். அவ்வளவு பணக்கார ஸ்தலமாக இருக்கிறது, அந்த அம்மாளின் கழுத்தில் வெறும் தாலிச்சரடு மட்டும் இருக்கிறதே, கைகளிலும் ஒற்றை வளையல் தவிர வேறில்லையே என்று எனக்குள்ளே வரிசையாக உயர்ந்த கேள்விகளை அடக்கினேன்.

தவிர, இருவருடைய பார்வையிலும் ஒருவிதமான துக்கம் இருக்கிற மாதிரித் தோன்றியது. அல்லது எனக்குத்தான் அப்படித் தோன்றுகிறதோ என்றும் சந்தேகமாய் இருந்தது.

...சொல்லுங்கள் ஸார். என்ன அருந்துகிறீர்கள்.

இல்லே, ஒண்ணும் வேண்டாம்.

பரவாயில்லை. நாம் காஃபி குடிப்பதில் தங்களுக்கு ஆட்சேபமில்லை அல்லவா? வஸந்த்தீ, எனக்கும் ஒரு அரை கப்...

ஏதாவது ஒரு கட்டத்தில் சிவராமன் தமிழுக்கு மாறிவிட்டால் தேவலையே என்று இருந்தது எனக்கு. உள்ளே திரும்பிப் போகும் மனைவியைப் பார்த்துக்கொண்டிருந்தவர், சடாரென்று தானும் எழுந்து வீட்டுக்குள் போனார். அது ஒருவிதத்தில் நல்லதாயிற்று. திரும்பி வந்தபிறகு தமிழுக்கு வந்துவிட்டார்.

...மன்னாதி இருக்கிற இடத்திலெ இருந்திருக்க வேண்டியவன் நான்.

ஆரம்பத்தில் இருந்த உற்சாகம் இன்றி குரல் சற்று கனத்திருந்தது.

...பெரியவர் வேணாம்னுட்டாரே.

இருவரும் மௌனமாக இருந்தோம். வீட்டினுள் கூரைக் காற்றாடி விசையுடன் ஓடும் சப்தம் கேட்டது. சுழற்சியின் கதியில் சீரான இடைவெளியில் கிச்கிச் என்று உராயும் ஒலி கேட்டது. மிகக் கச்சிதமான தாள ஒழுங்கு அந்த உராய்வில் இருந்தது. ஆஹா. ஞாபகம் வந்துவிட்டது. சிவராமனின் மனைவி கர்நாடக சங்கீத உலகில் இரண்டாம் வரிசைப் பாடகி திருமதி வசந்தா சிவராமன்.

...ஒருமுறை, கடும் மழைக்காக கிருஷ்ணாராயர் தெப்பக்குளத்தெரு ஆஞ்சநேயர் கோயிலில் நானும் சித்ராவும் ஒதுங்கினோம். உள்ளே ஒரு பாடகி பாடிக்கொண்டிருந்தார். யாரோ இவர் யாரோ என்ன பேரோ அறியேன்... அந்த அம்மாளின் குரல் கே பி சுந்தராம்பாள் மாதிரி வெண்கலக் குரல். சித்ராவுக்கு உடனே பிடித்துவிட்டது. பைரவி ராகம் மிகச் சுத்தமாக இருக்கிறது என்றாள். மறுவாரம் மீனாட்சியம்மன் கோயிலுக்குப் போய்த் திரும்பும் வழியில், டவுன்ஹால் ரோடில் உள்ள ஒரு ஸி டி கடையில் இந்த அம்மாளின் பெயர் சொல்லி விசாரித்து வாங்கிவந்துவிட்டாள். ஒரே ஒரு ஸி டிதான் வெளியாகியிருக்கிறதாம். நேரில் கேட்ட அளவு பிரமாதமாக இல்லை என்று அபிப்பிராயம் சொன்னாள் சித்ரா.

ஆனால், ஸி டி உறையில் இருந்த புகைப்படத்தில் இவ்வளவு மூளியாக இல்லை அந்த அம்மாள். உதட்டுச் சாயமும், காசுமாலையும், கோபித் திலகமுமாக டாம்பீகமாக இருந்த முகம். அதனால்தான் எனக்கு உடனடியாக அடையாளம் தெரியவில்லை போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டேன்...

வாசல் கதவைத் திறந்துவிட்ட இளம்பெண் காஃபிக் கோப்பைகள் கொண்ட தட்டுடன் வந்தாள்.

கௌரீ, இன்னிக்கி க்ளையண்ட்ஸ் யாராவது ஃபோன் பண்ணினா ‘அப்பாயின்மென்ட் கேன்ஸல்ட், ஸண்டே வாங்கோ’ன்னு சொல்லிடு... எடுத்துக்கொள்ளுங்கள் மிஸ்ட்டர் சந்த்தானம்.

என்றவாறு தாமே உபசாரமாக ஒரு கோப்பையை எடுத்து நீட்டினார். நல்ல ஸ்ட்ராங் காஃபி.

...அ ன்று காலையிலேயே டாக்டர்கள் சொல்லிவிட்டார்கள், மன்னி உயிர்பிழைத்திருப்பது தொடர்பான சகல நம்பிக்கைகளையும் தாங்கள் இழந்துவிட்டதாக. எங்கள் வீட்டில் வைத்து அவள் இறப்பதுதான் உசிதம் என்று நாங்கள் எண்ணினால், வீட்டுக்கு அவளை எடுத்துச்

செல்வதில் தங்களுக்கு ஆட்சேபம் இல்லை என்றும் தெரிவித்தார்கள்...

மறுபடி ஆங்கிலத்துக்கு மாறிவிட்டார் சிவராமன். தமிழைவிட ஆங்கிலத்தில்தான் அவர் நிம்மதியாக இருக்கிறார் என்று பட்டது. பிற விஷயங்கள் பேசும்போது மாதிரி இல்லை, தன் பூர்விகம் பற்றிப் பேசும்போது நீண்ட இடைவெளிகள் விடுத்துத்தான் பேசுகிறார் சிவராமன். பேச்சு நிற்கும்போது கண்களை மூடிக்கொள்கிறார்.

...வெங்குட்டு அண்ணாவின் சிநேகிதரிடம் இரவல் வாங்கி வைத்திருந்த காரில் மன்னியை வீட்டுக்குக் கொண்டுவந்தோம். ராஜு அண்ணா முன் ஸீட்டில் ஏறிக்கொண்டான்.

...சும்மாவே ஒல்லியான உடம்பு. வியாதியும் முற்றியதில் வெறும் எலும்புக்கூடு மாதிரித் தக்கையாக ஆகியிருந்தாள் மன்னி. பின் ஸீட்டில் ஒருபுறம் ரங்கசாமி அண்ணாவும், மறுபுறம் நானும் ஏறிக்கொண்டோம். மன்னி நடுவில். என் தோளில் சாய்த்துக் கொண்டேன். மூன்று பகல்கள் மூன்று இரவுகளாக நினைவு தப்பி இருந்தவளின் முகத்தில், அன்று காலை ஒரு தெளிவு திரும்பியிருந்தது. அணைவதற்கு முந்தைய பிரகாசம் அது என்று பிற்பாடு பலதடவை தோன்றியிருக்கிறது.

...தோளில் கிடந்த தலை காரின் வேகத்தில் சற்றே அசைந்தபோது, கண் திறந்தாள் மன்னி. எதிரில் கணவர். முன்னிருக்கையில் ஒரு கொழுந்தன். 'அவள் கண்கள் தேடுகிற மாதிரி ஏங்குகிறது. குரல் கொடு' என்று பெரியண்ணா சொன்னார். 'மன்னி இங்கே இருக்கிறேன், என்மேல்தான் சாய்ந்திருக்கிறாய்...' என்று சொன்னேன்...

சிவராமன் மௌனமானார். மாடியறையில் நாங்கள் மட்டுமே இருந்தோம். அவருடைய கம்ப்யூட்டர் திரையில் ஸ்க்ரீன் ஸேவராக இருந்த மீன் தொட்டிக்குள் சித்திர மீன்கள் சலிப்பில்லாமல் போய்ப்போய்த் திரும்பின. தொட்டித் தரையிலிருந்து கிளம்பி வரிசையாய் மேலேறும் நீர்க்குமிழிகளின் களகள ஒலி சீராய்க் கேட்டது.

...திரும்பக் கண்களை மூடிக்கொண்டுவிட்டாள் என்று அண்ணா சொன்னார். ஆஸ்பத்திரியிலிருந்து வீடு கால்மணிநேரத் தொலைவுதான். அந்தக் கால்மணி நேரத்துக்குள்தான் அவள் உயிர் அடங்கியிருக்க வேண்டும். என்மீது சாய்ந்திருந்த உடம்பின் எடையிலோ, வெதுவெதுப்பிலோ எந்த ஒரு வித்தியாசத்தையும் நான் உணரவில்லை. இப்போது யோசித்தால், என் பிரச்னைகளுக்கு அதுதான் காரணம் என்று தோன்றுகிறது. காரில் இருந்து இறக்கும்போது தலை துவண்டிருந்தவிதம் வேறு மாதிரியாக இருந்தது.

நாலைந்து வீடுகள் தள்ளி ஒரு நர்ஸ் குடியிருந்தாள். மலையாளிப் பெண். ஓடிப்போய் அவளை அழைத்து வந்தேன். அவள் நாடி பார்த்து உறுதி செய்தாள்...

சிவராமன் மறுபடி மௌனமானார். அறையின் ஜன்னல்வரை உயர்ந்திருந்த மரத்தில் ஒரு அணில் குத்திட்டு நிமிர்ந்திருக்கிறது. முன்னங்கால்களில் எதையோ கவ்வியிருக்கிறது. அவ்வப்போது வாலைத் தட்டிக் குரல் கொடுக்கிறது. கம்ப்யூட்டரின் நீரொலிக்கும் அணில் குரலுக்கும் ஒருவிதமான ஒத்திசைவு சேர்ந்திருக்கிறது.

...கிட்டத்தட்ட முப்பது வருடம் ஆகப்போகிறது. அன்றைக்கு நான் இருந்த மனநிலை இப்போதும் பசுமையாக நினைவிருக்கிறது. உயிருடன் என் தோளில் சாய்ந்திருக்கிறாள் என்று நான் நினைத்துக்கொண்டிருக்கும் பெண்மணி வாஸ்தவத்தில் பெண்மணி இல்லை. பிரேதம் என்று சொல்கிறாள் அந்த நர்ஸ். என் மனம் இரண்டாகப் பிளந்துவிட்டது. ஒரு பகுதிக்குத் தெரிகிறது, 'நர்ஸ் சொல்வதுதான் சரி, மன்னி இறந்துவிட்டாள்' என்று. இன்னொரு பகுதி, பிடிவாதமாக அவளை உயிரோடு பராமரித்தது. ஆஸ்பத்திரியில் துணைக்கு இருந்த நாட்களில் அவ்வப்போது ஒரு பிரமை வந்துபோகும் மன்னி இறந்துவிடுகிற மாதிரியும், நாங்களெல்லாம் சுற்றி நின்று அழுவது மாதிரியும். தத்ரூபமான காட்சி போலவே இருக்கும். அதே பிரமைதான் இப்போதும் நிகழ்ந்துகொண்டிருக்கிறது, இது கலையும்போது, நான் ஆஸ்பத்திரியில், மன்னியின் கட்டிலருகில் முக்காலியில் உட்கார்ந்திருப்பேன் என்று மனத்தின் இந்தப் பாதி நம்பியது...

வழக்கத்தைவிடவும் அதிகமான இடைவெளி விட்டார் சிவராமன். மிகத் தீவிரமாக எதையோ யோசிக்கிறமாதிரி அவரது கனத்த புருவங்கள் நெரிந்தன. நெற்றி மேட்டில் அழுத்தமான மூன்று வரிகள் ஓடின. தேடிய விஷயம் பிடிபட்டுவிட்ட மாதிரித் தலையை ஆட்டிக்கொண்டார்.

...இப்போதுகூட, நாம் இருவரும் பேசிக்கொண்டிருப்பதுகூட, என்னுடைய பிரமையாக ஏன் இருக்கக்கூடாது சொல்லுங்கள்...?

நான் திடுக்கிட்டேன். என்ன கேட்கிறார் இவர்? அப்படியென்றால், நான் நிஜமில்லை. இவருடைய கற்பிதம் என்றல்லவா ஆகிறது? இந்தக் கேள்வியைக் கேட்கும் சிவராமன் உட்கார்ந்திருப்பது எங்கே? ஒருவேளை, என்னுடைய பிரமையில்தான் சிவராமன் என்பவர் எதிரில் உட்கார்ந்திருக்கிறாரோ. ஒருவர் பிரமையில்தான் மற்றவர் இருக்கிறோம் என்றால், நிஜம் என்று ஒன்று கிடையவே கிடையாதா?

சீச்சி. இந்த சிவராமன் சொல்லும் சம்பவங்களில் எதுவுமே எனக்கு முன்னர் தெரியாதே... இருக்கட்டுமே, 'தெரிந்த, நடந்த, சம்பவங்கள்தாம் பிரமையின் பரப்பில் வந்துபோகலாகும்' என்று நிபந்தனை எதுவும் இருக்கிறதா என்ன... ஒரே நொடியில் குழப்பத்தின் உச்சத்தை எட்டிவிட்டது மனம். தலையை உதறி அதைச் சமனப்படுத்த முயன்றேன்.

...வஸந்தியைக் கல்யாணம் செய்துகொண்டபிறகு, மன்னி நாள் தவறாமல் கனவில் வர ஆரம்பித்தாள். ஒரு கணம் எங்கள் வீட்டுப் படியில் என்னோடு உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பாள். மறுகணம் சுடுகாட்டில் சாம்பலும் எலும்புமாக இறைந்து கிடப்பாள். 'உயிரோடு இருந்தவளை எரித்துவிட்டாயே சிவராமா' என்ற குரல் மட்டும் கேட்கும். அவ்வளவுதான். தூக்கிவாரிப் போடும் எனக்கு. உள்ளூற ஒரு நடுக்கம் கிளம்பிவிடும்.

...பதறிப்போய் உட்கார்ந்திருப்பவனின் முதுகையும் நெஞ்சையும் முகத்தையும் டவலால் துடைத்துவிடுவாள் வஸந்த்தி. அவ்வளவு வியர்த்திருக்கும். சிலநாள் வாய்விட்டு அலறவும் செய்வேனாம். இங்கேதான் மைலாப்பூரில் ஒரு டாக்டரிடம் போனோம். கிட்டத்தட்ட ஆறு மாதம் கவுன்ஸலிங், மாத்திரைகள் அது இது என்று ஓடி அப்புறம்தான் கொஞ்சம் கொஞ்சமாக என் கனவுகளில் வருவதை நிறுத்தினாள் மன்னி...

இந்தமுறை வெகுநீண்ட மௌனத்தில் ஆழ்ந்தார் சிவராமன். பின்புறம் ஏதோ அசைவு தென்படுவது மாதிரி உள்ளுணர்ந்தேன். திரும்பிப் பார்த்தேன். பின்னாலிருந்த ஸோஃபாவில் திருமதி. வசந்தா சிவராமன் உட்கார்ந்திருந்தார். இந்த அம்மாள் எப்போது வந்தார் என்று குழம்பினேன். அவர் அமர்ந்திருந்த சீரைப் பார்த்தால் வெகுநேரமாக அங்கே இருக்கிறவர் மாதிரித்தான் தெரிகிறது... மௌனத்திலிருந்து வெளியேறிய சிவராமன் ஒருவிதக் கைப்புடன் சிரித்தார்.

...இப்போதும் வெகு அபூர்வமாகச் சில நாட்கள் வரத்தான் செய்கிறாள். ஒரேயொரு வித்தியாசம், என் ஒரே மகனைத் தன் தோளோடு சேர்த்து அணைத்துக்கொண்டு நிற்கிறாள். 'கடவுளுக்குப் பிரியமானவர்கள் சிறுவயதில் இறந்துவிடுகிறார்கள்' என்று ஒரு பழமொழி உண்டல்லவா? நானும் கடவுளும் நெருங்கிய நண்பர்கள். எனக்குப் பிரியமானவர்கள் எல்லாம் அவருக்கும் பிரியமானவர்கள்...

முதுகுப்புறம் விசிக்கும் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். வசந்தா தன் முந்தானையால் முகத்தை மூடிக்கொண்டிருந்தார். உடம்பு

சன்னமாகக் குலுங்கியது.

...போன வருஷம், சுதந்திர தினத்தன்னிக்கி அவன் போய்ச்சேர்ந்தான் ஸார்...

என்றார் வசந்தா. சிவராமன் முகம் கோண எழுந்து கழிவறைக்குள் சென்றிருந்தார். வாய்விட்டு மனம்விட்டு அழுவதற்காகத்தான் கழிவறைக்குள் புகுந்துகொண்டிருக்கிறார் என்று எனக்குத் தோன்றியது.

...சாயங்காலம் பீச்சுக்குப் போய்ட்டுவரேன்னு கிளம்பின பிள்ளை. ஒம்பது மணி வாக்கிலே, நல்ல மழை பிடிச்சுட்டது. பத்து மணிக்கிமேல எனக்கு இருப்புக் கொள்ளலே. அவனை மொபைல்லே கூப்பிட்டேன். 'பெஸண்ட் நகர் பீச்சுக்கு ஒரு ஃப்ரண்டோட வந்திருக்கேம்மா, மழைக்கு ஒதுங்கியிருந்தேன். இப்பத்தான் மழை விட்டது, இதோ பொறப்புட்டாச்சு. இன்னும் அரைமணிநேரத்திலே வந்துருவேன்'னான்...

எந்த நிமிடமும் குமுறி வெடிக்கும் பதநிலைக்கு வந்திருந்தார் அந்த அம்மாள். மூக்கு நுனி அநியாயத்துக்குச் சிவந்திருந்தது. நான் சற்று அசவுகரியமாக உணர்ந்தேன். எதிராளியின் துக்கம் ஒருபோதும் புரியாமல் போவதில்லை. ஆனால், எனதாக அதை உருமாற்றிப் பகிர்ந்துகொள்ளத் தெரியாது.

சித்ரா இதற்கு நேர்மாறு. டி.வி ஸீரியலிலோ, சினிமாவிலோ யாராவது கண்கலங்கினால்கூட, அவளும் சேர்ந்து அழத் தொடங்கிவிடுவாள். இப்போது, இந்த நிமிடத்தில்கூட, காணாமல்போன புருஷனை நினைத்து அழுதுகொண்டிருக்கிறாளோ என்னவோ. ஒரேயொரு ஃபோன் கால் போதும். அவள் நிம்மதியாகி விடுவாள். ஆனால், கூடாது. பிறகு, இப்போது சுதந்திரமாய் அலைகிற சந்தானம் காணாமல்போய், பழைய எல்லைஸி ஏஜண்ட் பொறுப்பேற்றுக் கொண்டு விடுவான்... கழிவறைக் கதவு திறந்து சிவந்த முகத்துடன் சிவராமன் வெளிவந்தார்.

...பதினோரு மணிவரை காணலை. மொபைல்ல கூப்ட்டா, ரிங் போயிண்டேயிருக்கு, ரெஸ்பான்ஸ் இல்லை.

வசந்தா விரிவாகச் சொல்வதை விரும்பாதவர் மாதிரி எதிர்ப்புற ஜன்னலை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார் சிவராமன். அவருடைய சிலைத்த முதுகையும் வசந்தாவின் துக்கம் கனன்ற முகத்தையும் விசித்திரமான வடிவங்கள் நெளியும் வளைகோடுகள் கொண்ட, ரோஜா நிற வழுவழு ஓடுகள் பதித்த தரையையும் ஓசையில்லாமல் இந்தக் கோடிக்கும் மறுகோடிக்கும் உள் முகத்தைத் திருப்பும்

குளிர்சாதனத்தையும் அதைப் பொருட்படுத்தாமல் வியர்க்கத் தொடங்கியிருந்த என் உள்ளங்கையையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன்.

...இந்திரா நகர்லே ஒரு திருப்பத்தில் வண்டிச் சக்கரம் வழுக்கிட்டதாம். இந்தப் பிள்ளைகிட்டே எத்தனை தடவை மன்னாடியிருக்கேன், 'பெட்ரோல் டாங்க் மேலே வச்சிக்காதேடா ஹெல்மெட்டெ, தலேலெ மாட்டிக்கோடா'ன்னு. மல்லாந்து விழுந்திருக்கான். விழுந்த இடத்திலே ஒரு கல் கிடந்ததாம். யோசிச்சுப் பாருங்க, மெட்ராஸ் ஊர்லே, நடுரோட்லெ ஒரு பெரிய சைஸ் கல் கிடக்கறதுக்குக் கொஞ்சமாவது சாத்தியம் உண்டா? என் பிள்ளெ சறுக்கின இடத்திலே மெனக்கெட்டு வந்து கிடந்திருக்கு அது.

அது கல்லில்லே வஸந்த்தீ, ஒம் பிள்ளையோடெ தலைவிதி.

சிவராமனின் குரல் கனமாக ஒலித்தது. கடைசிச்சொல் அநியாயத்துக்குத் தேய்ந்திருந்தது. உடல் குலுங்கியது. வசந்தா தொடர்ந்தார்.

விழுந்த இடத்திலேயே ஒரு மணிநேரம்போலக் கிடந்திருக்கான். யாரோ ஒரு புண்ணியவான் பாத்து இவனைக் கார்லெ தூக்கிண்டுபோய் மலர் ஹாஸ்பிட்டல்லே சேத்திருக்கார். இந்தப் பிள்ளையாண்டான் ஆஸ்பத்திரி வரைக்கும் போறதுக்காகக் காத்திண்டிருந்திருக்கான் போலருக்கு. அவங்க இவன் மொபைல்லே வீட்டு நம்பரைப் பார்த்து எங்களுக்குச் சொல்லும்போது மணி பன்னண்டரைக்கு மேலே ஆயாச்சு. அலறியடிச்சுண்டு பொறப்புட்டுப் போனோம். எம் புள்ளையோட ஒடம்பெ வாங்கிண்டு வர்றதுக்காக...

தொண்டைப்புடைப்பு இரண்டுதடவை வேகமாக ஏறியிறங்கியது. அசந்தர்ப்பமாக ஊறிவிட்ட எச்சிலோடு சேர்த்து துக்கத்தையும் விழுங்கப் பிரயாசைப்படுகிறாரோ என்னவோ. நாசித்துவாரங்கள் இரண்டும் துடித்தன.

...எங் கண்ணான பிள்ளையைப் பறிகுடுத்துட்டேனே தவிர, எது நின்னது? தலைக்கி டை அடிச்சுக்கலையா, பவுடர் போட்டுக்கலையா, தவறாமெ ஃபேஷியல் பண்ணிக்கலையா... நானொரு மானங்கெட்டவ.

நெற்றியில் உள்ளங்கையால் ஒருமுறை சன்னமாக அறைந்துகொண்டார் வசந்தா.

'இதையெல்லாம் செய்துகொள், தவறில்லை. போனவன் நம் வாழ்க்கைக்கு முக்கியமானவன் இல்லையா? நாம் சதா அழுதுகொண்டேயிருப்பதை அவன் விரும்ப மாட்டான். நிரந்தரமாக

நம்மைவிட்டு நீங்கியிருக்கவும் அவன் மனம் சம்மதியாது. எந்த ரூபத்திலும் எந்த நாளிலும் அவன் வருகை நிகழலாம். பழைய தாய் தகப்பனைப் பார்த்து அவன் மனம் குளிரட்டும்' என்று நான்தான் இவளை வற்புறுத்திச் சம்மதிக்க வைத்தேன்.

தனது கம்பீரமான ஆங்கிலத்துக்குத் திரும்பிவிட்டார் சிவராமன். சுழல்நாற்காலியை என் புறமாகத் திருப்பிக்கொண்டார். வசந்தா எழுந்து நின்றார்.

ஸாரி. நீங்கள் ஏதோ பேசிக்கொண்டிருந்தீர்கள், நான் குறுக்கே புகுந்து உங்கள் மூடை ஸ்பாயில் பண்ணிவிட்டேன். ஸாரி.

வசந்தாவின் ஆங்கிலமும் நேர்த்தியாகத்தான் இருக்கிறது. நான் அவசரமாகச் சொன்னேன். தமிழில்தான்:

அதெல்லாம் ஒண்ணுமில்லே. நீங்க அப்படி ஃபீல் பண்றதே தப்பு.

நான் கீழேபோய்க் காஃபி அனுப்பட்டுமா...? கௌரீ... கௌரீ...

இருவரும் லேசாகத் தலையசைத்தோம். மரப்படிகளில் வசந்தா இறங்கிச் செல்லும் ஓசையோடு, அவர் விளிக்கும் குரலும் மெல்லத் தேய்ந்துகொண்டே போனது. முற்றாக ஓய்ந்த பிறகு, தணிந்த குரலில் சிவராமன் சொன்னார்:

'கச்சேரி செய்யப் போவதானால், இதையெல்லாம் செய்துகொண்டுதான் ஆகவேண்டும்'என்றேன். இசையைத் தவிர அவளுக்குப் புகலிடம் வேறொன்றும் இல்லை என்பதுதான் உண்மை. கச்சேரிக்காக ஆயத்தம் செய்துகொள்வதும், முடித்துவிட்டுவந்த கச்சேரியைப் பற்றி மறுபரிசீலனை செய்வதும் அவளைப் பெருமளவு மீட்டு வந்திருக்கின்றன. எனக்குமே இசைதான் சரணாலயம். இதோ பாருங்கள். ஹிந்துஸ்தானி, கர்நாட்டிக் என்று என் கம்ப்யூட்டரில் ஏகப்பட்ட சங்கீதம் டவுன்லோட் செய்து வைத்திருக்கிறேன்...

ஏதோ ஒரு தந்திவாத்தியம் அறைக்குள் உரத்து நிரடத் தொடங்கியது. அதன் கம்பிகளிலிருந்து ஸ்வரங்கள் மட்டுமில்லை, துயரமும் பாய்கிற மாதிரிப் பட்டது எனக்கு. அந்த அறையில் நிரம்பியிருக்கும் துக்கத்தின் அடர்த்தியை சுபாவம் மாறாமலே நீர்க்கச் செய்வதற்காகப் பாய்கிற திரவம்தான் அந்த ஒலி என்றும் தோன்றியது.

...இப்படித்தான் ஏதாவது செய்து நார்மல் ஆக வேண்டியிருக்கிறது. ஏதாவது செய்து நார்மல் ஆகியும் விடுகிறோம் இல்லையா? மன்னி இறந்த மறுநாளே வீட்டில் சிரிப்புச் சத்தம் கேட்டபோது எனக்கு

பகீரென்றது. எனக்கு விபரம் தெரிந்து, வீட்டில் நிகழ்ந்த முதல் துக்கம் அது. நேற்றுக் கதறி அழுதவர்கள் எல்லாம் இன்றைக்கே இப்படிச் சிரிக்கிறார்களே என்று அருவருப்பாய் இருந்தது. ஆனால், வேறு மார்க்கம் கிடையாது என்பது புரிவதற்குப் பல வருஷங்கள் ஆனது.

சரிதான்.

எனக்கு எஸ்ஸெஸ்ஸெல்ஸியில் தமிழ் எடுத்தவர் நம்பெருமாள் கோனார் என்ற தமிழாசிரியர். அப்போதெல்லாம் ஜாதிப் பெயர்களைப் போட்டுக் கொள்வது சர்வசாதாரணம். அவர் பாடப் பகுதிக்கு வெளியிலும் ஏகப்பட்ட பாட்டுக்கள் சொல்லித் தருவார். பட்டினத்தடிகளும் தாயுமானவரும் கடவுள்கள் அவருக்கு. அதிலும் அடிகள் பற்றிப் பேசாமல் ஒரு வகுப்புகூடக் கழிந்ததில்லை...

திடீரென்று சிவராமனின் குரல் தழைந்தது. சந்தத்துக்காகத் தன் முழங்காலில் வலதுகையால் மெலிதாகத் தட்டியபடி தொடங்கினார்:

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு

பேரினை நீக்கிப் பிணமென்று பெயரிட்டு

சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு

நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே...

பாட்டு முடிந்ததும் ஒரு பெருமூச்சு வடிந்தது. ஓரிரு கணங்கள் அமைதியாய் இருந்தார். பிறகு தாமாகவே எதையோ ஆமோதித்துத் தலையசைத்துக்கொண்டார்.

...வத்ஸலா மன்னி என்று ஒருத்தி இருந்தாள் என்ற நினைப்பை யாரும் ஒழிக்கவில்லை. அவள் இறந்துவிட்டாள் என்ற நினைப்பை மட்டும்தான் ஒழித்துவிட்டார்கள். சூட்சும உருவில் தங்களுடனே அவள் இருந்துகொண்டிருக்கிறாள் என்று நம்ப வைப்பதற்காகத்தான் அவ்வளவு சடங்குகள், சம்பிரதாயங்கள் எல்லாம்...

காஃபித் தம்ளர்கள் வைத்த தட்டோடு கௌரி வந்து அறைக்குள் நுழைவதற்குள்ளாகவே அபாரமான மணம் வந்து சேர்ந்தது.

கா ர் கிளம்பிச் செல்லும்வரை பார்த்துக்கொண்டு வாசலில் நின்றோம். வசந்தா எங்களைத் தாண்டிச் சென்றபோது வருடி விலகிய பட்டுப்புடவை வாசனை கொஞ்சநேரம் மிச்சமிருந்தது. அதற்குப் பின்னணி கோக்கிற மாதிரி அவர் விட்டுச்சென்ற கொலுசொலியும் மீந்திருந்தது.

உள்ளே திரும்பிய சிவராமன் வாசல் நிலைப்படிக்கு நேர் எதிரே, சுற்றுச்சுவரின் உட்புறத்தை ஒட்டி இருந்த கிரானைட் பெஞ்ச்சில் அமர்ந்தார். பக்கத்தில் அமரச் சொல்லித் தட்டிக் காட்டினார். விட்ட இடத்திலிருந்து பேசுகிற பாவத்துடன் சரளமாகத் தொடர்ந்தார்:

...ஸ்ரீவத்ஸன் இருக்கும்வரையிலும்கூட சொத்து சேர்ப்பதில் பெரிய பிடிப்பெல்லாம் இல்லை. அதுவாகச் சேர்ந்துகொண்டிருந்தது. என்னுடைய வேலையில் எனக்கு சிரத்தை ஒருநாளும் குறைந்ததில்லை என்பதால், எங்கள் ரங்கசாமி அண்ணா ஆசீர்வதித்த மாதிரி, அமோகமாகவே சேர்ந்தது. உரிய விகிதத்தில் வெளியேறிக்கொண்டும் இருந்தது. புண்ணியம் சேர்க்கிறோம், தானதர்மம் செய்கிறோம் என்றெல்லாம் யோசித்து நான் செலவழிக்கவில்லை. எனக்கு எந்தவிதமாகச் செலவழிக்கப் பிடித்ததோ, அப்படிச் செலவழித்தேன். அவ்வளவுதான்.

...ஆனால், அவன் இறந்த பிறகு, எல்லாவற்றிலும் பிடிப்பு குறைந்துவிட்டது. ஏதோவொரு மாபெரும் அபத்தத்தின் மத்தியில் சிக்கிக்கொண்ட மாதிரி உணர்கிறேன். எந்தப் பாதையில் வெளியேறி நகர்ந்தாலும் அது ஒரு முட்டுச் சுவரில் போய் முடிந்துவிடுகிறது. பின்வாங்கி இன்னொரு பாதையில் போவதற்கும் விருப்பமில்லை. ஆனால், ஒரே இடத்தில் எப்படி நிற்க? அடுத்த பாதை, அடுத்த முட்டுச் சந்து, இப்படியே நடக்கிறது சமாசாரம். சரி, விடுங்கள். இப்படி ஒரு த்வனியில் தொடர்ந்து பேசினால் உங்களுக்கும் எல்லாவற்றின் மீதும் அவநம்பிக்கை வந்துவிடப் போகிறது.

அந்தி கொஞ்சம் கொஞ்சமாகக் கனத்து வருகிறது. வளைகூரையாக அமைந்த கம்பி வரிசையின்மீது கிடத்தப்பட்ட பச்சைக்கொடிகளின் அடர்த்தியான பசுநிறம் மேலும் அடர்ந்து கறுப்பாகி வருகிறது. கம்பியின் உட்புறம் வந்து உட்கார்ந்திருந்த சிட்டுக்குருவி எங்களைச் சற்றுநேரம் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தது. பிறகு, பறந்து வெளியேறியது. அது காலி செய்த இடத்தில் வேகமாக இருள் வந்து நிரம்புகிறது.

அப்படியெல்லாம் யோசிக்க வேண்டியதில்லை. என்னுடைய வாழ்க்கை மட்டும் திருப்பங்கள் இல்லாமல் நேராக ஓடி வந்திருக்கிறதா என்ன?

நீங்கள் சொல்வது சரிதான் மிஸ்ட்டர் சந்தானம். யாருடைய வாழ்க்கையில்தான் திருப்பங்கள் இல்லை? ஆனால், நமக்குப் பிடித்த மாதிரியான திருப்பங்கள் என்றால் முதுமையை நோக்கி நாம் நகர்வது

அவ்வளவு வேகமெடுக்காது. எதிர்மறையான திருப்பங்கள் காரணமாக வாழ்க்கையின் ருசியே கசப்புதான் என்று ஆகிவிடுகிறது...

கொஞ்சநேரம் மௌனமாக இருந்தார் சிவராமன்.

அது சரி, நீங்கள் பெரியவரிடம் எப்படி அறிமுகமானீர்கள் என்று சொல்லவில்லையே...

ஞாபகம் இருக்கிறது. என்னுடைய பூர்விகத்தைச் சொல்லாமல் நேரே அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தால் தலையும் புரியாது காலும் புரியாது; அந்தச் சமயத்தில் எனக்குள் இருந்த அழுத்தத்தின் கனமும் புரியாது என்பதால்தான் மற்ற விஷயங்களையெல்லாம் இவ்வளவு விரிவாகச் சொல்லிவந்தேன்...

மறுபடியும் மௌனமானார். கண்களை மூடிக்கொண்டார். என்றோ விட்டுவிட்டு வந்த ஒரு நாளை மீட்டு, முழுசாக நினைவில் கொண்டுவந்து, நேரடியாகப் பார்த்துச் சொல்வதற்குத் தயாராகிறார் என்று தோன்றியது எனக்கு.

...பிரியமே வெறுத்துத்தான் குடும்பத்தை விட்டு விலகினேன் ஆனால், அது அவ்வளவு சுலபமாக விலகிவிடக்கூடிய இடமல்ல, எல்லாரும் விலகவேண்டியதும் இல்லை என்றும் அறிவுறுத்தியவர் பெரியவர்...

இருட்டுக்குள் பார்த்துக்கொண்டிருந்தார். கொஞ்சநேரம் ஒரு பெருமூச்சு.

...வீட்டைவிட்டு வெளியேறி மதுரை ஜங்ஷனுக்கு வந்தேன். மெற்றாஸ் போகும் உத்தேசத்தோடுதான் புறப்பட்டேன் அல்லவா. அதிகாலை நேரத்தில் மெற்றாஸுக்கு ரயில் ஏது? நான் நியாயமாகப் போயிருக்க வேண்டிய இடம் பேருந்து நிலையம்தானே? இதெல்லாம் அப்போது தோன்றாத கேள்விகள். இந்த மாதிரி ஒரு விஷயம் நடந்துமுடிந்தவுடன் மனம் மீண்டுமொரு தடவை உறுதிப்படுத்திக் கொள்கிறது நாம் சுதந்திரமான மனிதர்கள் இல்லை. யாரோ ஆட்டுவிக்கிற விதமாக ஆடுகிற பொம்மைகள்தாம் என்று.

சிவராமனின் குரல் வழக்கமான இடத்துக்குத் திரும்பிக்கொண்டிருப்பது புலப்பட்டது. மதியம் முழுக்க அந்தக் குரலில் படிந்திருந்த துயரத்தின் ஈரம் மெல்லமெல்ல உலர்ந்து வருகிறது.

...தெற்கே போகும் வண்டி ஒன்று இன்னும் கொஞ்ச நேரத்தில் வரவிருக்கிறது என்று போர்ட்டர் ஒருத்தர் சொன்னார். யாரோ இட்ட உத்தரவின்படி நடக்கிற மாதிரி நேரே டிக்கட் கவுண்ட்டருக்கு ஓடினேன்.

திருநெல்வேலி போகிற வண்டிதான் வரப்போகிறதாம். அன்ரிஸர்வ்ட் பெட்டியில் ஏறினேன். இப்போதிருக்கும் அகல ரயில் பெட்டிகளோடு ஒப்பிட்டால், அன்றைய பெட்டிகள் சோப்பு டப்பா மாதிரி இருக்கும்...

பால்ய காலத்தின்மீது சிவராமனுக்கு அதீதமான பிரியம் இருக்கிறது. பழைய நாட்களைப் பற்றிப் பேசத் தொடங்கும்போது ஒரு ரகசியக் குதூகலம் குரலில் தொற்றுகிறது.

...ரயிலில் ஏறுவார் அதிகம் இல்லை. நிறையப்பேர் இறங்கினார்கள். அன்ரிஸர்வ்ட் பெட்டியில் ஏறினேன். ரயில் ஓடத் தொடங்கிய பிறகுதான் சுயநினைவு மீண்ட மாதிரி இருந்தது.

...விடிந்தும் விடியாத பொழுதல்லவா? பெட்டிக்குள் இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்தார்கள். ஜன்னலோரமாய் உட்கார்ந்திருந்த ஓர் இளைஞன் விழித்திருந்தான். அவனருகில் விறைப்பாக உட்கார்ந்திருந்த நடுவயதுக்காரர் தோள் துண்டை முந்தானை மாதிரிப் போர்த்தியிருந்தார். மூடிய துண்டுக்குள் கைகள் இரண்டும் மறைந்திருந்தன. இமைகளை அழுந்த மூடியிருந்தார். அவருடைய முகத்தில் என் பார்வை ஊன்றி நிலைத்தது. அதுவரை எனக்குள் படபடவென ஊறிக்கொண்டிருந்த பதற்றம் தணிய ஆரம்பிப்பதை உணர்ந்தேன்.

...தொடர்ந்து கவனித்தபோது புரிந்தது. அவர் வெறுமனே கண்களை மூடிக்கொண்டிருக்கவில்லை. ஏதோ ஜெபத்தை உருப்போட்டுக்கொண்டிருக்கிறார். முதல்பார்வைக்கு சாதாரண முகம்தானே அது. ஆனால், இரண்டாம் தடவை பார்க்காமல் இருக்க முடியாது. அதற்கப்புறம் பார்வையை அகற்ற இயலாது. வெளிப்படையான வசீகரம் அல்ல அவருடையது. மிக ஆழமான ஈர்ப்பு.

...காலியாக இருந்த எதிர் இருக்கையில் உட்கார்ந்தேன். அவர் கண் திறப்பதற்காகக் காத்திருந்தேன். விருதுநகர் வந்தது. வண்டி நின்று கிளம்பியது. அவர் இன்னமும் கண் மூடி இருந்தார். துண்டுக்குள் மெலிதாகச் சலனமுற்ற கரங்களில் வேகம் அதிகரித்திருந்தது. விரல்கள் மட்டும் விசையாக அசைகின்ற போலும்.

...துலுக்கபட்டிக்குச் சற்று முன்பா, பின்பா என்று இப்போது ஞாபகமில்லை. ஏதோ காரணத்தால் எங்கள் ரயில் நின்றுவிட்டது. கிட்டத்தட்ட கால்மணிநேரம். அவர் அருகில் இருந்த இளைஞன் வெளியில் விரவிக் கிடந்த கட்டாந்தரையில் ஒரே புள்ளியில்

பார்வையை ஊன்றி வெறித்துக்கொண்டிருந்தான். அவன் பார்வையோடு சேர்ந்து என் பார்வையும் வெளியில் பாய்ந்தது.

...ரயில் பாதையை ஒட்டி ஒரு வேலி மாதிரி இருக்கிறது. அதற்கு உள்ளே அங்கும் இங்குமாக அடர்த்தியான கருவேலமரங்கள் தவிர வேறு தாவரம் எதுவும் இல்லை. சற்று தாமதமாகத்தான் கவனித்தேன், ஒரு மரத்தில், அதிலேயே பூத்துப் பழுத்த மாதிரி நாலைந்து மயில்கள். ஆஹா, மரத்துக்கு மரம் மயில்கள் அமர்ந்திருக்கின்றன. சலனமேயின்றி, வசியத்துக்குக் கட்டுப்பட்ட மாதிரி, ஏகப்பட்ட மயில்கள், ஒட்டிவைத்த காகிதக்கூழ் சிற்பங்கள் மாதிரி.

...கொஞ்சநேரம் பார்த்துவிட்டுப் பெட்டிக்குள் பார்வை திரும்பியது. மறுபடி அவர் முகத்தில் நிலைத்தது. வாழ்வில் எவ்வளவோ தருணங்களைத் தாண்டி வரத்தான் செய்கிறோம் மிஸ்ட்டர் சந்தானம். மிகச் சில தருணங்கள் மட்டுமே ஒலி ஒளி மணம் சீதோஷ்ணம் என்று அப்போது நிலவிய சகலத்தோடும் நமக்குள் நிரந்தரமாகக் குடியமர்கின்றன. ஞாபகத்தின் ஆழத்திலிருந்து அவை மேலெழும் போதுதான் தெரியவருகிறது, நாம் அவற்றை மீட்டெடுக்கவில்லை, அந்தத் தருணத்தின் மையத்துக்குள் சென்று சேர்ந்துவிடுகிறோம் என்பது. அப்படிப்பட்ட ஒரு அதிகாலைப் பொழுது அது.

...அவர் கண் திறந்தார். அதே சமயத்தில், மயில்கள் ஏக காலத்தில் அகவின. கிட்டத்தட்ட நூற்றிச் சொச்சம் மயில்கள். அமானுஷ்யமான ஓசை அது. ரயிலின் வெளியிலும் உள்ளும் நிரம்பி, எனக்குள்ளும் இடைவெளியில்லாமல் நிரம்பிப் பிதுங்கியது. எனக்கு மயிர்க்கூச்செரிந்தது. இருக்கையிலிருந்து சரிந்து அவருடைய பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டேன். வீட்டை விட்டு இறங்கியதிலிருந்து எனக்குள் நீடித்திருந்த தத்தளிப்பு முற்றாக அடங்கிவிட்டது அந்த ஒரு கணத்தில்...

சிவராமன் தன் முன்னங்கைகள் இரண்டையும் மாற்றி மாற்றி அழுத்தித் தடவிக்கொண்டார். நாங்கள் இருந்த இடத்தில் மங்கலான வெளிச்சம்தான் இருந்தது. சிவராமன் வேறு இருண்டிருந்த தெருவின் புறமாக முகம் திருப்பியிருந்தார். அவர் பெரும்பாலும் இருட்டைப் பார்த்தபடிதான் பேசினார். ஆனால், குரலின் ஏற்ற இறக்கங்கள் அவர் முகத்தைத் துல்லியமாகக் காட்சிப்படுத்தியவாறிருந்தன. இப்போது, வெளியேறிய குரலை வைத்துப் புரிந்துகொண்டால், ஒருவேளை, இப்போதும் அவருக்கு மயிர்க்கூச்செரிந்திருக்கக் கூடும்.

...திருநெல்வேலி வருவதற்குள் அவரிடம் என்னுடைய பூர்விகச்

சங்கதிகளை முழுசாக ஒப்பித்து முடித்துவிட்டேன். அவருடன் இருந்த இளைஞன் சலனமேயில்லாமல் எங்கள் இருவரையும் பார்த்துக்கொண்டிருந்தான். முன்னுதாரணமான கிராமிய முகம் அவனுக்கு. கண்கள் வெகுவாகச் சிவந்திருந்தன. பெரியவர் அவனுடைய பெயரைக் கூறி அறிமுகப்படுத்தினார்தான். தற்போது ஞாபகமில்லை. எத்தனை வருஷம் ஆகிவிட்டது? ஆனால், அவனும் மதுரை ஜில்லாக்காரன். என்னை மாதிரித்தான் வீட்டைவிட்டு வெளியேறியவன் என்பது மட்டும் ஞாபகமிருக்கிறது. வெறும் பார்வைக்கே, வலுவான ஆளாகத் தெரிந்தான். அவனுடன் ஒப்பிட்டால் என் முன்னங்கைகள் வற்றின முருங்கைக்காய் மாதிரித் தென்பட்டன...

சிவராமனுடைய குரலில் ஒரு புன்னகை ஒலித்தது.

...திருநெல்வேலியில் இறங்கினோம். என்னைக் கொண்டுபோய் ஸ்ரீ குற்றாலிங்கம் என்கிறவரிடம் ஒப்படைத்துவிட்டு அவர்கள் இருவரும் நாகர்கோவில் போனார்கள். இரண்டு நாள் கழித்துப் பெரியவர் மட்டும் திரும்பி வந்தார். அந்த இளைஞன் என்ன ஆனான், இருவரும் ஏன் பிரிந்தார்கள் என்பதெல்லாம் இன்றுவரை எனக்குத் தெரியாது. ஏனோ, அவரிடம் கேட்க வேண்டியதில்லை என்று மட்டும் தோன்றியது. அவனுடைய சிவந்த கண்களை இன்றுவரை மறக்க முடியவில்லை என்பது வேறு விஷயம்.

நீங்கள் வேறு ஏதோ பெயர் சொன்னீர்கள்.

ஓ. ஆமாம். ஸ்ரீ குற்றாலிங்கம். அவரும் என்னை மாதிரித்தான், பெரியவரிடம் வந்து அடைக்கலமானவர் என்று அவருடன் தங்கியிருந்த இரண்டு நாட்களில் தெரிந்துகொண்டேன். அவருடைய முழுநேர வேலை என்ன என்று சொன்னால் நீங்கள் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்.

சொல்லுங்களேன்.

அநாதரவாகத் தெருவில் கிடக்கிறவர்கள், வியாதி பீடித்தவர்கள் யாசகர்கள் என்று ஒரு கூட்டமே அவரை நம்பி இருக்கிறது. காலையில் பதினொரு மணி சுமாருக்கு சுமார் நூறுபேருக்குக் குறையாமல் அவருடைய ஸ்தலத்துக்கு வந்து வரிசை கட்டுவார்கள். ஒவ்வொருவருக்கும் இரண்டு பொட்டலம் சாப்பாடு வழங்குவார் இவர்.

அட.

ஆமாம். இந்த விநியோக வேலைகள் முடிந்த பிறகு, இரண்டு மூன்று கோணிகளும் ரசீதுப் புத்தகமும் எடுத்துக்கொண்டு தெருத்தெருவாக

யாசிக்கக் கிளம்பிவிடுவார். அவரவர் மனமுவந்து அரிசியோ தானியமோ வழங்கலாம், பணமும் கொடுக்கலாம். சாயங்காலம்வரை இதே வேலைதான். ஒரே ஒருநாள் நானும் அவருடன் வசூலுக்குப் போனேன். அபரிமிதமான அர்ப்பணிப்பு உணர்வு இருந்தால் மட்டுமே அந்த மாதிரிப் பணிகளைச் செய்ய முடியும். மனிதர்கள் ஸ்ரீ குற்றாலிங்கத்தின் பாஷையில் கொடையாளர்கள் எப்படியெல்லாம் சாக்குச் சொல்வார்கள், அவமதிப்பார்கள் என்று நீங்கள் கற்பனையே செய்ய முடியாது மிஸ்ட்டர் சந்தானம். நாங்கள் இருவரும் வெறும் கையுடன் படியிறங்கித் திரும்பிய பிறகு எங்கள் காதில் விழுகிற மாதிரிக் காறித் துப்பிய கனவானிடமும் நாங்கள் சென்று இறைஞ்சியது ஞாபகம் வருகிறது...

சற்று முன்னர்தான் அந்த அவமானம் நிகழ்ந்து முடிந்த மாதிரி சிவராமனின் குரல் சற்று விலகி மீண்டது. இரண்டு கைகளாலும் முகத்தைத் துடைத்துக்கொண்டார். நான் கவனமாகப் பழைய இடத்துக்குப் பேச்சை திருப்பினேன்.

அப்புறம் பெரியவருடனே இருக்காமல் எப்படித் தனியாக மெற்றாஸில் வந்து ஸெட்டில் ஆனீர்கள்?

திருநெல்வேலியை விட்டுக் கிளம்பினோமில்லையா? நான் அவரிடம் மிக வெளிப்படையாக என் விழைவைத் தெரிவித்தேன். ரங்கசாமி அண்ணாவிடம் எனக்கு அளவுகடந்த பிரியம் உண்டு. ஆனால், அவரை நான் தகப்பனாக எண்ணியதில்லை. நெருக்கமான நண்பனாக, கண்டிப்பாக எதையும் சொல்லிச் செலுத்த முடியாத தமையனாகத்தான் உணர்ந்திருக்கிறேன். ஆக, எனக்குள் தகப்பனாரின் அருகாமை சம்பந்தமாக நிரந்தரமாக இருந்து வந்த வெற்றிடத்தில் இந்தப் பெரியவர் மிக இயல்பாக வந்து பொருந்தினார். இன்னும் கச்சிதமாகச் சொல்வதென்றால், எங்கள் வத்ஸலா மன்னியின் ஆண் வடிவமாக இவர் தென்பட்டார். மன்னியை நான் மன்னியாக ஒருபோதும் நினைத்தில்லை. என்னுடைய தாயாரேதான் அவள்...

சிவராமனின் பேச்சில் ஒரு நீண்ட இடைவேளை வந்து படிந்தது. கொஞ்ச நேரம் கழித்து எழுந்து உள்ளே போய்த் திரும்பினார். கையில் தண்ணீர் சீசா இருந்தது.

ஐஸ்வாட்டர். குடிக்கிறீர்களா?

சம்மதமாய் வாங்கி ஒரு மிடறு பருகிவிட்டு அவரிடமே நீட்டினேன். அவர் வாங்கித் தொடர்ந்து குடித்தார்.

நீங்கள் தெரிவித்த விழைவு என்னவென்று சொல்லவில்லை...

வேறென்ன. அவருடனே நிரந்தரமாக இருந்துவிடுவது, அவருடைய சிஷ்யனாக ஆகிவிடுவது என்பதுதான்.

அவர் என்ன சொன்னார்?

சிவராமன் சிரித்தார்.

பெரியவர் இருக்கிறாரே, அவரை மாதிரி ஸீரியஸான ஆளை நீங்கள் பார்க்கவே முடியாது. இத்தனை வருடங்களில் அவர் சிரித்து நான் பார்த்ததில்லை என்றால் பாருங்களேன். ஆனால், நான் என் விருப்பத்தைத் தெரிவித்த மாத்திரத்தில் அவர் சிரித்தார். 'சரியாப் போச்சு' என்றார். 'இரண்டு பேர் வேலையும் உருப்படியாக நடக்காது' என்று மறுபடியும் சிரித்தார். 'அப்படியென்றால் ஒன்று செய்யலாம் சிவராமா. கட்டடங்கள் வரைகிற வேலையை நான் பார்த்துக்கொள்கிறேன். என்னுடைய அப்பியாசங்களையெல்லாம் நீ கவனித்துக்கொள்கிறாயா' என்று கேட்டார். அவர் எங்கேயோ படித்தாராம், யாரோ ஒரு வெள்ளைக்கார அறிஞர் பற்றி. பெயர்கூடச் சொன்னார். மறந்துவிட்டது. அந்த ஹாஸ்யத்தை நீங்கள்கூடப் பகிர்ந்துகொள்ளலாம்.

சிவராமன் வெகு சந்தோஷமாகக் கலகலவென்று சிரித்தார். இன்று காலையில் அவரைப் பார்த்ததிலிருந்து இப்போதுதான் அவர் முதன்முறையாக மனம்விட்டுச் சிரிக்கிறார்!

சொல்லுங்கள்.

அறிஞரின் மேஜை வெறுமையாக இருந்ததாம். பேட்டிக்கு வந்த நிருபர் கேட்கிறார். 'நீங்கள் ஏன் பூச்சாடி வைத்துக்கொள்ளவில்லை? உங்களுக்குப் பூக்கள் என்றால் பிடிக்காதா?' அறிஞர் நிதானமாகச் சொன்னாராம். 'எனக்குக் குழந்தைகளைக் கூடத்தான் ரொம்பப் பிடிக்கும். நாலு குழந்தைகளின் தலையைக் கொய்து மேஜைமீது வைத்துக்கொள்ளட்டுமா...?'

சிவராமன் விழுந்துவிழுந்து சிரித்தார். இவ்வளவு சிரிப்பதற்கு இதில் என்ன இருக்கிறது என்று எனக்குக் குழப்பமாக இருந்தது. ஆனால், மனம்விட்டுச் சிரிப்பதற்குக் கிடைத்திருக்கும் ஒரு வாய்ப்பை முழுசாக அனுபவித்துத் தீர்க்க விரும்புகிறார் சிவராமன் என்றும் தோன்றியது.

...'என்னோடு இல்லாமலேயே என்னோடு நீ இருக்க முடியும் சிவராமா. தவிர, உன்னால் சமூகத்துக்குக் கிடைக்கவேண்டிய

உபகாரமே வேறே. அதை அவ்வப்போது நான் ஞாபகப்படுத்துகிறேன். நீ செய்துகொடு போதும். மற்றபடி, நான் செய்ய நினைக்கிற கைங்கரியம் வேறு மாதிரியானது. இதற்கென்றே பிறவி எடுத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் செய்தால் போதும் இந்த மாதிரி வேலைகளை. நான் மனுஸ்மிருதிபோல வர்ணம் பிரிக்கவில்லை, சிவராமா. வர்ணம் என்றெல்லாம் எதுவும் இல்லை என்றே நம்புகிறேன் பரம்பரை அந்தணரான என் தகப்பனாருக்குள் கறாரான வைசியர் புகுந்திருக்கவில்லையா? செயற்கையாக உருவாக்கப்பட்ட எல்லாப் பிரிவுகளுமே ஏதோ ஒரு தவறான சௌகரியத்துக்காக உருவாக்கப்பட்டவைதாம்...' என்று குழந்தைக்கு விளக்குவது மாதிரி விளக்கிச் சொன்னார் அவர்... ஆக, நான் கற்ற கல்வியைப் பயன்படுத்தி தார்மீகமாகத் தொடர்ந்து வேலை செய்தால் மட்டுமே போதும் என்று அறிவுறுத்தினார்.

பிறகு எப்போதாவது நீங்கள் செய்ய வேண்டிய உபகாரத்தை ஞாபகப்படுத்தினாரா?

நீங்கள் பிரமாதமாகப் பின்தொடர்கிறீர்கள் மிஸ்ட்டர் சந்தானம்.

ஸாரி. உங்கள் பேச்சின் போக்கில் தடங்கல் செய்கிறேனோ?

அட, இவ்வளவு கவனமாகக் கேட்கிறவரைப் போய்க் குற்றம் சொல்லத் தகுமா?

சிவராமன் என் முகத்தைப் பார்த்தபோது அவர் குரல் மிகவும் மலர்ந்திருந்தது. பகல் முழுக்கச் சுமந்திருந்த மானசீகச் சுமையை இறக்கிவைத்துவிட்ட மாதிரி இளகியிருந்தது.

திருவண்ணாமலைக்கு மாதாமாதம் போவேன். மனதுக்குப் பட்டதை வாங்கிக்கொண்டு போவேன். பெரும்பாலும் பெரியவரைத் தரிசிக்க முடிந்ததில்லை. மன்னாதிதான் இருப்பார். அவரிடம் கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுத் திரும்புவேன். மற்றபடி நான் செய்கிற தர்மகாரியங்களைப் பற்றி நாம் பேசுவது முறையல்ல. அவற்றை தர்ம காரியங்கள் என்று குறிப்பிடுவதற்கே எனக்குக் கூச்சமாகத்தான் இருக்கிறது. அது எல்லாமேகூட மானசீகமாக அவர் கை சுட்டும் இடங்களுக்குப் போய்ச் சேர்கிறவைதாமே.

இல்லை, பெரியவர் ஏதாவது குறிப்பான வேலைகள் சொன்னாரா?

அட, பிடிவாதமாக இருக்கிறீர்களே...

சிவராமன் சிரித்தார். நானும் சிரித்தேன்.

என்னிடம் விளையாட்டாகச் சொன்னார் அல்லவா. ‘கட்டடத்துக்குப் படம் வரைகிற வேலையை நான் செய்கிறேன்’ என்று?

ஆமாம்.

ஈரோட்டுக்குப் பக்கத்தில் ஒரு அநாதை ஆசிரமம் கட்டுவதற்கு என்னிடம் வரைபடம் தயார் செய்யச் சொன்னார். காகிதத்தில் கோடுகள் போட்டது மட்டும்தான் நான். யோசனைகள் முழுக்க முழுக்க அவருடையது. இந்தியாவின் மிகச் சிறந்த ஆர்க்கிட்டெக்ட் கூட அவ்வளவு அற்புதமான, விரயமில்லாத, சிக்கனமான, அழகுணர்ச்சியிலும் குறையாத டிஸைன் தயார் செய்ய முடியாது... செய்து கொடுத்தேன். அந்தக் கட்டடம் கட்டப் பணம் தருகிறேன் என்று நான் முன்வந்தபோது கறாராக மறுத்துவிட்டார். அது வேறு ஒருத்தரின் கைங்கரியமாம். அவர் யார், என்ன என்று இன்றுவரை எனக்குத் தெரியாது...

அந்தக் கட்டடத்தைப் பார்க்கவேண்டும் என்று எனக்கு ஆசையாக இருக்கிறது.

நியாயமான ஆசை. தேடிப்போய்ப் பார்க்கவேண்டிய கட்டடம்தான் அது.

வேறு உபகாரம் எதுவும் கேட்கவில்லையா?

கேட்டாரே. ராமலிங்கம் என்று ஒருத்தருக்குப் பெட்டிக்கடை வைக்கப் பண உதவி செய்யவேண்டும் என்று கேட்டார். உபகாரம் கேட்பது என்ன, அவருடைய சாதாரண வார்த்தைகளைக்கூட உத்தரவாக அல்லவா நான் சிரமேற் கொள்வேன். என்னுடைய சம்பாத்தியத்துக்கு மிகச் சிறிய தொகைதான் அது. ராமலிங்கம் யார், அவருடைய பூர்வீகம் என்ன, எதுவுமே எனக்குத் தெரியாது. ஆனால், அந்த மனிதன் கடுமையான உழைப்பாளி, நாணயமானவன் என்பது மட்டும் எனக்கு நன்றாகத் தெரியும்.

ஓ.

நான் கொடுத்த சொற்பத் தொகையை வைத்து முன்னேறி இன்று ஒரு கட்டணக் கழிப்பறைக் குத்தகை எடுத்து வசதியாக இருக்கிறார். என்னை மாதிரியே பெரியவர் சம்பந்தமாக அவருக்கும் ஒருவிதக் கடப்பாடு இருக்கிறது என்றுதான் யூகிக்கிறேன்.

அவர் நாணயமானவர் என்றும் குறிப்பிட்டீர்கள்.

ஆமாம். வஸந்த்தி தன்னுடைய கைப்பையைத்

தொலைத்துவிட்டாள் ஒருமுறை, கொஞ்சம் நகைகளும் கொஞ்சம் பணமும் இருந்த பை. அன்றைக்கு எங்கெங்கோ சென்று திரும்பியிருந்தோம். குறிப்பாக இன்ன இடத்தில் பையை மறந்திருப்போம் என்று நினைவுகூர இயலவில்லை. எங்களிடம் ஒரு கார்தான் இருந்தது அப்போது. அதுவும் சர்வீஸுக்குப் போயிருந்தது. திடீரென்று முடிவெடுத்து, ரயில் பஸ் ஆட்டோ என்று எங்கள் வழக்கமான பாணியில் இல்லாமல் செலவழித்த நாள் அது. சரி, போனது போகட்டும் என்று அந்தப் பையை மறந்தேவிட்டோம்...1

தண்ணீர் சீசாவை எடுத்து நாலைந்து மிடறு அருந்திவிட்டு, என்னிடம் நீட்டினார் சிவராமன். இரண்டு கைகளாலும் வாங்கிக்கொண்டேன்.

...ஆறுமாதம் கழித்து மறுமுறை திருத்தணிக்குப் போனோம் ஸ்ரீவத்ஸனுடைய பிறந்த நாளையொட்டி என்று நினைக்கிறேன் இந்த மனிதர் ராமலிங்கம் கைப்பையைப் பத்திரமாக எடுத்து நீட்டுகிறார். ‘வறுமையில் செம்மை’ என்று தமிழில் ஒரு சொற்றொடர் உண்டு அல்லவா! ‘விலாசம் தெரியாது, தெரிந்திருந்தால் மறுநாளே கொண்டுவந்து கொடுத்திருப்பேன்’ என்று மன்னிப்பு வேறு கேட்கிறார். அந்த மனிதனிடம் என்னுடைய விலாசத்தைக்கூடச் சொல்லாமல் உதாசீனப்படுத்தியிருக்கிறேன் என்பதற்கு மனப்பூர்வமாக நானல்லவா மன்னிப்புக் கேட்க வேண்டும்? பிறகென்ன, அந்தத் தம்பதியை எங்கள் வீட்டிற்கு வரவழைத்து விருந்துகொடுத்து ஆறுதல் தேடிக்கொண்டோம். அவர்கள் இங்கே முதன்முறையாக வந்திருந்த அன்று யதேச்சையாக வந்தவர் மாதிரிப் பெரியவரும் விஜயம் செய்தார். அது யதேச்சையாக இருந்திருக்க வாய்ப்பே இல்லை என்றுதான் இன்றுவரை நான் நம்புகிறேன்.

சிவராமன் சிரித்தார்.

நீங்கள் அவரை விட்டு நீங்கி மெற்றாஸ் வந்து சேர்ந்த கதையைச் சொல்லவில்லை.

அது பெரிய கதை ஒன்றும் இல்லை நண்பரே. திருநெல்வேலியிலிருந்து கிளம்பினோமா, தஞ்சாவூர் ஜில்லாவுக்கு என்னை அழைத்துச் சென்றார். நவக்கிரக க்ஷேத்திரங்கள் ஒன்று விடாமல் சென்று தரிசனம் செய்தோம். ஒவ்வொரு கோயிலிலும் என் பெயரும் நட்சத்திரமும் தம் வாயால் சொல்லி அர்ச்சனை செய்துவித்தார். ‘எதற்காக இவ்வளவும்’ என்று திருவெண்காடு கோயிலில் வைத்து அவரிடம் கேட்டேன். ‘தகப்பனார் பொறுப்பு என்றால் சும்மாவா’ என்று கேலி செய்தார். ஆனால், அந்த யாத்திரையிலும் எனக்கு மறக்க முடியாத

சம்பவம் ஒன்று நிகழ்ந்தது...

சிறு இடைவெளி. பிறகு தலையை ஆட்டிக்கொண்டார். தொடர்ந்தார்.

...கஞ்சனூர் என்ற ஸ்தலத்தில் அக்னீஸ்வரர் ஆலயம் இருக்கிறது. அங்கே நாங்கள் போய்ச் சேர்ந்தபோது உச்சிகால பூஜை நடந்துகொண்டிருக்கிறது. அர்ச்சகர் சங்கீதம் படித்தவர் போல. அஷ்டோத்திரத்தை வெறும் மந்திரமான உச்சாடனம் செய்யாமல் கீர்த்தனம் போலப்பாடியவாறே அர்ச்சனை செய்கிறார். என் கோத்திரம் பெயர் நட்சத்திரம் சொல்லி கையிலிருந்த அர்ச்சனைத் தட்டை நீட்டினார் பெரியவர். இப்போது வேறு ராகத்தில் தொடங்குகிறது அஷ்டோத்திரம். எனக்கு சங்கீதத்தில் ஆழ்ந்த பரிச்சயம் உண்டானது வஸந்த்தியைக் கல்யாணம செய்துகொண்ட பிறகுதான் என்றாலும், எங்கள் வத்ஸலா மன்னிக்குக் கர்நாடக சங்கீதத்தில் அபாரமான ஞானமும் ஆர்வமும் உண்டு. அவள் வாசனையால் எனக்கும் முன்பே கொஞ்சம் ராகங்கள் அறிமுகம் உண்டு. அன்று அர்ச்சகர் ஆரம்பித்தது சுபபந்துவராளி. துக்கமயமான ராகம். அவர் பாடப்பாட எனக்குள் ஆழத்திலிருந்து ஏதோ ஒரு ஊற்றுப் புறப்பட்டது. வத்ஸலா மன்னி இறந்த நாள் முதல் அன்றுவரை நான் அடக்கி வைத்திருந்த அத்தனை துக்கமும் ஒரே நேரத்தில் உடைப்பெடுத்தது. நின்ற இடத்திலேயே தடாரென்று உட்கார்ந்து குமுறிக் குமுறி ஆழ ஆரம்பித்தேன்...

தண்ணீர் சீசாவை வேகமாகக் காலி செய்தார் சிவராமன்.

...அர்ச்சகர் பதறிப்போனார் என்பது ஸ்வரம் பிசகியதிலிருந்தே தெரிந்தது. ஒரு கணம்தான். இயல்பாகத் தொடர்ந்தது அஷ்டோத்ரம். ஒரு சொல்லுமின்றி என் தலையை வருடிக்கொண்டிருந்தார் பெரியவர். கண் திறந்து பார்த்தேன். வருடுவது பெரியவர் அல்ல. என் மன்னியேதான். என் குமுறல் ஜாஸ்தியானது. தீபாராதனைத் தட்டு எங்கள் அருகில் வரும்வரை அழுதுகொண்டேயிருந்தேன். கோயிலை விட்டு வெளியேறும்போது, என் சக்தியையெல்லாம் யாரோ முற்றாக உருவியெடுத்துவிட்ட மாதிரித் துவண்டிருந்தது நினைவிருக்கிறது.

...அவ்வளவுதான். இரண்டுபேருமாக மெற்றாஸ் வந்தோம். முன்பே திட்டமிட்டிருந்தபடி என் நண்பனின் அறைக்கு நானும், தம்முடைய மாற்று வாழ்க்கைக்கு அவரும் போய்விட்டோம்...

வா சலில் கார் வந்து நின்றது. திருமதி வசந்தா இறங்கினார். போகும்போது இருந்ததைவிட உற்சாகமாகவே இருந்தார்.

கச்சேரி பிரமாதமோ வஸந்த்தீ?

பின்னே. அதுசரி, இப்பிடியா, வாசல் விளக்கைக்கூடப் போடாமல் பேசிக்கொண்டிருப்பீர்கள்? கௌரி உங்களைச் சாப்பிட அழைக்கவில்லையா? சரி சரி, வாருங்கள். எனக்குக் கடும் பசி. முதல் வேலையாகச் சாப்பிட்டுவிடுவோம்.

மூவருமாக உள்ளே சென்றோம். சாப்பாட்டு மேஜை தயாராக இருந்தது. சப்பாத்தியும் பாசிப்பருப்பு மசியலும் செய்திருந்தாள் கௌரி. சித்ராவின் கைப்பக்குவம் மாதிரியே இருந்தது. சாப்பிடும்போது ஓரிரு தடவை புரையேறியது எனக்கு.

யாரோ நினைச்சுக்கிறாங்க ஒங்களை.

என்றார் வசந்தா.

வேறு யாராக இருக்கப் போகிறது? சந்தானத்தின் மனைவிதான். புருஷன் எங்கேயிருக்கிறாரோ, வயிறாரச் சாப்பிட்டாரோ இல்லையோ என்று கவலைப் பட்டுக்கொண்டிருப்பார் அவர். நான் சொல்வது சரிதானே மிஸ்ட்டர் சந்தானம்?

'நானல்லவா அவளை நினைத்துக்கொண்டேன்' என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன்.

கை கழுவிவிட்டு சாப்பாட்டு மேஜை அருகிலேயே உட்கார்ந்து கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்தோம். கச்சேரியைப் பற்றி விரிவாக எடுத்துச் சொன்னார் வசந்தா. 'அகிலாண்டேஸ்வரீ' என்ற கீர்த்தனையைப் பிரமாதமாகப் பாடினாராம் பாடகர். அவருடைய பிரத்தியேகமான சில பிடிகளைப் பாடியே காண்பித்தார். ஸி டி யில் கேட்டதைவிடவும் சிறப்பாக இருந்தது குரல்... எங்கெங்கோ நகர்ந்து சென்ற உரையாடலின் இறுதியில்,

நான் குற்ற உணர்ச்சியில் நிரம்பியிருக்கிறேன்.

என்று தெரிவித்தேன்.

எதற்காக?

என்று இருவரும் ஏக காலத்தில் கேட்டார்கள்.

உங்களுடைய முழு நாளைத் துன்பமயமான ஞாபகங்களால் நிரப்பிவிட்டதற்காக.

சிவராமன் அவசரமாகப் பதிலளித்தார்:

என்ன வார்த்தை சொல்கிறீர்கள்? பழைய நாட்களைப் பற்றி

உங்களிடம் இவ்வளவு விரிவாக விவரித்ததில் நான் என் மனத்தின் பாரமெல்லாம் இறங்கிவிட்ட மாதிரியல்லவா உணர்கிறேன். நியாயத்துக்கு நாங்கள் உங்களுக்கு மனப்பூர்வமாக நன்றி சொல்ல வேண்டும்... தயவுசெய்து வேறுவிதமாக யோசிக்காதீர்கள் என்று வேண்டிக்கொள்கிறோம் நாங்கள்... தவிர, நண்பர்களுக்குள் உபசார வார்த்தைகள் எதற்கு...? வஸந்த்தீ, கேட்டாயா? ஸாரிடம் நம்முடைய ராமலிங்கத்தைப் போய்ப் பார்க்கச் சிபாரிசு செய்திருக்கிறேன்.

என்று முடித்தார் சிவராமன்.

அவசியம் போய்ப் பாருங்கள். மாமாவிடம் அதீதமான பக்தி உள்ளவர் அவர்.

என்றார் வசந்தா.

✠

ராமலிங்கம்

பஸ் ஸ்டாப்பில் வந்து நின்றபோது மனத்தில் புழுக்கம் இன்னும் ஜாஸ்தியாகியிருந்தது. மாமாவுக்கும் கடுமையாக வியர்த்திருந்தது. 'பாவம், வயதான மனிதரை அலைக்கழிக்கிறோமே' என்று சங்கடமாக உணர்ந்தாள் சித்ரா.

உண்மையிலேயே பெரிய மனிதர்தான் மாமா. அவருடைய இரண்டாவது பையன் முரளிக்குச் சித்ராவைப் பெண்கேட்டு வந்த நாளில் அப்பா பாராமுகமாக இருந்து அவமதித்ததும், சொந்த அண்ணனிடமே பிடிகொடுக்காத வாக்கியங்களில் அம்மா பேசியதும், வேறு பெண்ணை மணந்துகொண்ட பிறகும் முன்போலவே நாள் தவறாமல் முரளி குடித்துக்கொண்டிருந்ததும், ஓரிரு வருடங்கள் குடித்தனம் நடத்திவிட்டு அவள் பிரிந்துபோனதும், திருச்சி மண்ணச்ச நல்லூரில் அவள் வீட்டு வாசலிலேயே ஒரு அதிகாலையில் சாராயத்தில் விஷம் கலந்து குடித்துவிட்டு அவன் பிணமாகக் கிடந்ததும் என்று ஒரு முழுநீளத் திரைப்படம் ஓசையற்ற காட்சிகளாக ஓடி மறைந்தது.

சந்தானத்தின் ஜாதகத்தை வாங்கிக் கொண்டுவந்து கொடுத்து 'சிலாக்கியமான பையன்' என்று சான்றிதழ் கொடுத்தவரும் இதே நடராஜ மாமாதான். தங்கமான மனிதர். சித்ராமீது தனிப் பிரியம் உள்ளவர்.

மாமா வேஷ்டி மடிப்பிலிருந்து பொடிமட்டையை எடுத்தார். ஒரு சிட்டிகை எடுத்துக்கொண்டு மட்டையை முதலில் இருந்த விதமாகவே பத்திரப்படுத்தினார். பொடியை இறுக்கிய விரல்களில் சின்முத்திரையைத் தலைகீழாகத் தொங்கவிட்டு கொஞ்சநேரம் சாலையை வெறித்துப் பார்த்தார். திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தவர் மாதிரி அவசரமாகப் பொடியை இரண்டு துவாரங்களிலும் செலுத்தி வேகமாக உறிஞ்சினார். வெற்று விரல்களை உதறும்போது காற்றில் சிதறிய ஓரிரு துகள்கள் சித்ராவின் கண்களில் சென்று தஞ்சமடைந்தன. கண்களைக் கசக்கிக்கொண்டாள்.

நீ அழாதே கொழந்தே. இவன்கள் இப்பிடித்தான் பேசுவான்கள். நான் இதுக்கு வேற ஒரு வழி வச்சிருக்கேன். நாளைக்கி வியாழனா? காத்தாலே பத்து மணிக்கா வரேன். கொழந்தைகள் ஒம்பது மணிக்கெல்லாம் ஸ்கூலுக்குப் போயிருவால்லியோ. நீ ரெடியா இரு. நாம்ப போயி இன்னொருத்தரைப் பாத்துப் பேசலாம். அப்பறம் நம்மகிட்டெக் கதறிண்டு வந்து நிப்பன்.

'யார் வந்து நிற்பார் என்கிறார், சந்தானமா, இன்ஸ்பெக்டரா, இல்லை அந்த இன்ஸ்பெக்டரைவிட வழுக்கலாகப் பேசிய, இரண்டே நிமிடத்தில் உரையாடலை முடித்துக்கொண்ட உயர் அதிகாரியா?' என்று வரிசையாகக் கேள்விகள் ஓடின. மெல்லிதாகப் புன்னகை கிளர்ந்ததில் மனம் சற்று லேசானது. மாமாவின் முன்னங்கையைப் பற்றிக்கொண்டாள். மிருதுவாகக் கொழகொழத்திருந்த சதையில் விரல்கள் பதிந்தபோது இதமாக இருந்தது.

✠

ர யில் நகரும்வரை இருந்துவிட்டுதான் கிளம்பினார் சிவராமன். பார்வை மறையும்வரை நடைமேடையில் வலதுகையை உயர்த்தி ஆட்டிக்கொண்டு நின்றார். ரொம்பப் பிரியமான மனிதர். 'ராத்திரி தங்கி விட்டுத்தான் போகவேண்டும்' என்று சாயங்காலமே கறாராகச் சொல்லிவிட்டார். 'பஸ்ஸில் போகக்கூடாது, ரயில்தான் சவுகரியமாக இருக்கும், இவ்வளவு அலைகிற மனுஷர், சிரமத்தையாவது குறைத்துக்கொள்ள வேண்டும்' என்று வற்புறுத்தினார். கார் டிரைவரிடம் சந்தானத்தின் பயணச் சீட்டுக்காக அவரே பணம் கொடுத்து அனுப்பினார்.

மன்னாதிக்கும் இவருக்கும் கணிசமான வித்தியாசம் இருந்தது. மன்னாதி உணர்ச்சிப் பெருக்கெடுத்த குரலில் பேசினார். ஆனால், உணர்ச்சிகரமான விஷயங்கள் அல்ல. சிவராமன் சொன்னவை உணர்ச்சிகரமானவை. ஆனால், இவரிடம் அசாத்தியமான நிதானம். எதைச் சொன்னாலும் தனக்குள் ஒருதடவை ஒத்திகை பார்த்துவிட்டுத்தான் சொல்லுகிறாரோ என்ற சந்தேகம் வருகிற அளவுக்கு.

ஆனால், ஒருவிதத்தில், மன்னாதி ஆசைப்பட்ட இடத்துக்கு வந்து சேர்ந்தவர் சிவராமன்தான் என்றும் தோன்றியது. மன்னாதிக்கு பால்யத்தில் பணத்தின்மீது வந்த வெறுப்பு அது தம்மிடம் இல்லாததால் வந்ததுதானே. அம்பாரமாய்த் தம்மிடம் குவிந்த பணத்தின்மேல் சற்றும்

பற்று இல்லாமல் இருக்கிறார் சிவராமன்.

நேற்றிரவு இரண்டு மணிவரை பேசிக்கொண்டிருந்தார். இப்போதும் ரயில் கிளம்பும்வரை பேச்சுதான். குழந்தைகளின் படிப்பு சம்பந்தமாக எந்த உதவி எப்போது வேண்டுமானாலும் செய்வதாக வாக்களித்திருக்கிறார். மேற்படிப்புக்கு, அதுவும் வெளிநாடுகளுக்கு அனுப்புவதென்றால் லட்சக்கணக்கில் செலவு பிடிக்குமே.

அபூர்வமான மனிதர். ஒவ்வொரு அசைவிலும் நான் தமக்கு மிகவும் நெருங்கிய நண்பர் என்று உணர வைத்தார். நேற்றுக் காலைதான் அறிமுகமாகிய மனிதனிடம் இவ்வளவு நெருக்கமாக எப்படி இருக்க முடிகிறது?

அவருடைய மனைவியுமே அலாதியான மனுஷிதான். ஆரம்பத்தில் சற்றுப் பாராமுகமாக இருந்த மாதிரித் தோன்றியது. அந்நியர் என்பதாலும், ஆண்பிள்ளை என்பதாலும் சற்றுப் பின்வாங்கி இருந்தார் போல. மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு என்னுடன் வெகு சரளமாகப் பேசினார் அந்த அம்மாள். அந்தத் தம்பதிக்குள் இருந்த அந்நியோன்யத்திலும் எனக்கு ஒரு செய்தி இருக்கிறது என்ற நினைத்துக்கொண்டேன்.

நேற்று சாயங்காலம் ஒரு நாலு நாலரை இருக்கும். அந்த அம்மாள் அதுதான், வசந்தா சிவராமன் நாங்கள் இருந்த அறைக்குள் வந்தார். கௌரியிடம் அவர் கொடுத்தனுப்பியிருந்த பட்சணங்களைத் தின்றவாறு, சிவராமனின் கம்ப்யூட்டரைக் கிளறிக்கொண்டிருந்தோம் நாங்கள் இருவரும்.

இன்னிக்கு கிருஷ்ணகான சபாவிலே கச்சேரி இருக்கு. வர்றேளா? ஸாருக்கு சங்கீதத்தில் ஈடுபாடு உண்டோ?

நான் அவசரமாக மறுத்துத் தலையாட்டினேன். சிவராமன் சிரித்துக்கொண்டே சொன்னார்:

இவ பாடலே. கேக்கறதுக்குத்தான் கூப்பிடறா. தைரியமாப் போகலாம்... யாரு கச்சேரிம்மா?

அந்த அம்மாள் சிவராமனின் தோளில் செல்லமாக ஒரு அடி கொடுத்துவிட்டுச் சிரித்தார்.

எஸ் பி ராம்னு ஒரு யங்ஸ்டர். லால்குடி சிஷ்யர். நன்னாப் பாடுவார் ஸார்.

இல்லே... சங்கீதத்திலே எனக்குப் பெரிசா ஆசையொண்ணும்

கிடையாது.

என்று தயங்கிய குரலில் சொன்னேன்.

நான் ஸாரோடெ இருக்கேன். நீ போய்ட்டு வா வஸந்த்தி.

கணவருடைய தலைமுடியை லேசாகக் கையால் அளைந்துவிட்டு அலமாரியின் அருகில் சென்றார். ஏதோ ராகத்தை முனகுகிறார். பேசும்போது இருக்கும் குரல் இல்லை பாடும்போது. அதற்காகக் கள்ளக் குரலும் இல்லை. பாடும் குரலில் ஒருவிதமாக அழுத்தம் அதிகரித்துவிடுகிறது. கீல் ஓசையெழாமல் மூடியது அலமாரிக் கதவு. அந்த வீட்டின் ஒவ்வொரு அம்சத்திலும் ஒரு நாசூக்கு விரவியிருந்தது. அறையை விட்டு வெளியேறும்போது புருஷனுக்கு இன்னொரு புன்சிரிப்பை வழங்கிவிட்டுப் போனார்...

சித்ராவுக்கும் அதே மாதிரி இணக்கம் என்னிடம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், அதில் கணிசமான விகிதத்தில் பயமும் கலந்திருக்கும். ஊருக்குத் திரும்பியதும் முதல் வேலை, அவளுடைய பயத்தை வேரோடு களைவதுதான் என்று ஒரு தீர்மானம் என் மனத்தில் உதித்தது...

நீண்ட கொட்டாவி வெளியேறியது. உடம்பு வெகுவாகச் சோர்ந்திருக்கிறது. மனமுமே களைத்திருக்கிறது. சிவராமன் வீட்டு மாடியில் உள்ள அவரது தனியறையும், அவருடைய சேகரிப்பில் இருந்த எல்ப்பி ரெக்கார்டுகள், கேஸட்டுகள், ஸிடிக்களின் அடுக்கும், கம்ப்யூட்டரில் அவர் இறக்கி வைத்திருந்த இசைத் தொகுப்புகளும், இரவில் அவருடைய மனைவி கச்சேரி முடிந்து திரும்பிவரும்வரை கார் நிறுத்துமிடத்தில் ஒருவர் முகம் மற்றவருக்குத் தெரியாத இருட்டில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்ததும், சம்பந்தமேயில்லாமல் குறுக்கே ஓடி வந்த சித்ராவின் முகமும், மன்னாதியின் சிரிப்பும், திருவண்ணாமலைக் கோபுரமும், கணபதி சம்சாரத்தின் சக்கர நாற்காலி கிறீச்கிறீச்சென்று நகரும் ஓலியும், அவர்கள் வீட்டுச் சிறுமி மலரின் ஆச்சரிய முகமும் என்று குழம்பிக் கலைந்த சித்திரங்களின் மத்தியில் புதைந்து உறங்கிப் போனேன் போல...

ஸார், ஸார்.

யாரோ உலுக்கினார்கள். பக்கத்து இருக்கைக்காரர். உதறி விழித்துக்கொண்டேன்.

திருத்தணி நெருங்குது. சொல்லச் சொன்னீங்களே.

தாங்க் யூ. தாங்க் யூ.

இ ருங்க, கூட்டம் கொஞ்சம் கொறைஞ்சிக்கிறட்டும்.

என்று சொல்லிவிட்டு வியாபாரத்தில் மும்முரமானார் ராமலிங்கம். கோயிலின் வெளிமதில் சுவரை ஒட்டிப் போகும் சாலை அது. இந்தப்புறம் உள்ள கட்டணக் கழிப்பறையின் வாசலில் ராமலிங்கத்தின் கடை. நான் அவரைப் பார்க்க வந்தபோது, ஒரு பேருந்து நிறைய பக்தர்கள் வந்து இறங்கியிருந்தார்கள்.

பற்பசை, துண்டு, சோப்பு, சிகரெட், பீடி என்று வியாபாரம் பரபரப்பாக நடந்தது. கழிப்பறைக்குள் சென்றுவருகிறவர்களைக் கவனித்தவாறு, காசுவாங்கிப் போட்டுக்கொண்டிருந்த பெண்மணியின் கண்கள் வசீகரமானவை. மின்னல்போல அங்குமிங்கும் வெட்டித் திரும்பிய பார்வை. இந்தப் பக்கம் உள்ள பெண்கள் உடுத்துவது மாதிரி இன்றி, கண்டாங்கியாகச் சேலையைக் கட்டியிருந்தாள். 'அங்கிட்டு, இங்கிட்டு' என்று உரத்த குரலில் பேசினாள். மதுரையில் கலைநகரில், என்னுடைய வீட்டுக்கருகில் உள்ள பெட்டிக்கடையில் நிற்பது மாதிரி ஒரு கணம் உணர்ந்தேன்.

இதற்குள், ஒரு பையனை அனுப்பி, தேநீர் வரவழைத்திருந்தார் ராமலிங்கம். நிதானமாகக் குடித்து முடித்தேன். கூட்டம் கலைந்து கடை வெறிச்சோடிய பிறகு,

ஏத்தா, கடையெப் பாத்துக்கிர்றியா. நான் செத்தெ நேரம் ஸாரோடெ பேசிட்டு வந்திர்றேன்.

என்றவாறு இறங்கினார். இவர் இறங்கக் காத்திருந்து கடைக்குள் குனிந்து ஏறியவள்,

கோயில் பெரகாரத்திலெ போயி ஒக்காருங்க.

என்று சொன்னாள். என்னைப் பார்த்து வெகுநாள் பழக்கம்போலப் புன்சிரித்தாள். வசீகரமான சிரிப்பு. அரிசிப் பற்கள். கடையை விட்டுச் சிறிது தொலைவு நடந்து வந்த பிறகு,

கோயிலுக்குள்ளெ போனாத்தான் பிடி கொறையுமாம். எந்நேரமும் எதாவது சாக்குச் சொல்லி என்னெயெக் கோயிலுக்குள்ளாறெ அனுப்பிச்சிருவா. நமக்கும் நம்மளை இப்பிடி யாராவது பாத்துக்கிட்டா நல்லாத்தானே இருக்கு...?

என்று சிரித்தார் ராமலிங்கம். நானும் சிரித்தேன்.

...சிவராமன் சாரு எப்பிடி இருக்காரு?

நல்லா இருக்காரு. நேத்து ராத்திரி அவரு வீட்லெதான் தங்கினேன்.

ஏயப்பா. அது மாளிகையாச்சே. அம்புட்டுப் பெரிய பணக்காரருண்ற தோரணெ கொஞ்சங்கூட இருக்காது அவருகிட்டெ. இங்கே கோயிலுக்கு வரும்போது, ரோட்டுலெ நின்னு நம்ம வாங்கிக் குடுக்கிற டீயெக் குடிப்பாரு. அந்தம்மாவும்தான், ரொம்பப் பிரியமா இருக்கும். நம்ம கடையிலேதான் கைப்பையெ வச்சிட்டுப் போகும். பையன் தவறுனதுக்கப்பறம்தான் இங்கிட்டு அதிகம் வர்றதில்லே. நாயம்தானுங்களே, நம்ம தலைலெ இடி வுளுந்தப் பெறகு, சாமியாவது ஒண்ணாவதுண்டு தோணத்தானே செய்யும்?

ஒங்களுக்கு எத்தனெ கொழந்தைக?

நமக்கு அந்தப் பாக்கியம் இல்லேங்க. நாங்கதேன் ஒருத்தருக்கொருத்தரு கொளந்தே...

ராமலிங்கம் சிரித்தார். எனக்கு தர்மசங்கடமாய் இருந்தது.

...இப்பிடி ஒரு வாழ்க்கெ அமெஞ்சதே போனசு மாதிரித்தேன். இதிலே, எல்லாச் சொகுசும் வேணும்ன்னு நோங்கலாங்களா? எல்லாத்துக்குமே ஒரு குடுப்பினெ வேணும்ங்க. நம்ம சிவராமன் ஸாரையே பாருங்க. மகாராசா மாதிரி. ஊருக்கே படியளக்குறாரு. ஒத்தப் பிள்ளெ. தக்காமெப் போச்சில்லெ. அம்புட்டுத்தாங்க. உள்ளாறெ ஒருத்தன் நிக்கிறானே, அவன் செய்யிற எல்லாத்திலெயும் ஏதோ ஒரு கணக்கு இருக்கும். நமக்குத்தேன் புரியாது. கடோசிவரை புரியாது...

நீளமாய் பெருமூச்சு விட்டார் ராமலிங்கம். மௌனமானார். கோயில் பிரகாரத்தில் ஜன நடமாட்டம் அதிகம் இல்லை.

...வகுத்துலெ பெறந்த புள்ளெதான் இல்லே. நாங்க வந்த மறுவருசம், இங்கெ தைப்பூசக் கூட்டத்துலெ தவறிப் போன ஆம்பளைப் பிள்ளெ ஒண்ணெ நாங்கதான் வளக்குறம். அவனும் இந்தா இம்புட்டு ஒசரம் வளந்துட்டான். ஆச்சே, நாங்க வந்தே பதினஞ்சு வருசம் ஓடிப்போச்சே...

...அ ந்த மரத்தடியிலே வச்சே எங்கதெ முளுக்கவும் சொல்லி முடிச்சன். கதெயென்னா, ஊத்தெக் கதெ... எம்ஞ்ஜாரு நடிச்ச நாடோடி மன்னனா. இங்கெ நாறுனென், அங்கெ நாறுனென்ண்ற மாதிரி அம்புட்டும் அளுக்கு. சொல்லக்கூடியதெச் சொன்னேன். அவரு பொறுமையாக் கேட்டுக்கிட்டாரு. அதுலெ பாருங்க. நாம் பாட்டுக்கு

ஓடிக்கிட்டிருந்தப்ப ரத்தத்தோடெ வேகந்தேன் பெரிசா இருந்துச்சு. 'சரி, தப்பு'ண்டெல்லாம் ஒண்ணும் தட்டுப் படலே. இதே பெரியவர் முன்னாடி இருந்தப்ப, அதுவரைக்கும் நாஞ் செஞ்ச காரியங்களெ நெனச்சு எனக்கே அருவருப்பா இருந்துச்சு. என்னாதேன் இருபத்துநாலு மணி நேரமும் பீடி குடிக்கிறவண்டாலும் சாமி சந்நிதியிலெ பத்தவைக்க மனசு வருமா?

அப்பிடியே அவரோட பொறப்புட்டுட்டீங்களாக்கும்?

யதேச்சையாகக் கேள்வி உதிர்ந்ததற்குப் பிறகு அபத்தமாக உணர்ந்தேன். ராமலிங்கத்தின் பூர்வ கதையைக் கேட்டபிறகு, அந்தச் சுழலிலிருந்து அப்படி உடனடியாக வெளியேற முடியும் என்று ஒருவர் எப்படி நம்பலாம். ராமலிங்கத்தின் வியாதி எப்படிக் குணமாயிற்று, திரும்ப விஜயகுமாரியை எப்படிச் சந்தித்தார், அந்த அம்மாள் தன் தொழிலையும் இடத்தையும் விட்டுவிட்டு வருவதற்கு எப்படிச் சம்மதித்தாள், அதற்குத் தூண்டுதலாக நடந்த விஷயம் எது என்று இடைப்பட்ட கண்ணிகள் ஏகப்பட்டது இருக்கிறதே.

அதெப்பிடிங்க, கரைக்ட்டாக் கேட்டீங்க. திருமங்கலம் வரைக்கும் நடந்து வந்தமா? அதுக்குள்ளாறெ பெரியவர் முடிவெடுத்துட்டாரு போலருக்கு. எனக்கு என்னா தெரியும்? நான் அன்னைக்கும் கூமுட்டெ. இன்னைக்கும் கூமுட்டெ. அதெ விடுங்க, நாங்க பஸ்டாண்டுக்கு வந்து சேர்றம். சொல்லி வச்ச மாதிரி சம்முகம் வந்து நிக்கிறான். அவங்கிட்ட, 'இந்த மாதிரி, அய்யாவோட வெளியூர் போறேன், திரும்பி வர்றதுக்கு நாலைஞ்சு நாளாவும், விசயாட்டெ என்னையத் தேட வேண்டாம்ண்டு சொல்லீரு'ண்டு தாக்கல் சொல்லி முடிக்கிறேன். நாகரோவில் வண்டி வந்து நிக்கிது. 'ஏறு'ண்டு சொல்லிக்கிட்டே பெரியவரு பஸ்ஸேறப் போறாரு. நானும் நாய்க்குட்டி மாதிரிக் கூட ஓடுறேன். சம்முகம் பய அசந்துபோயிப் பாக்குறான். அப்பல்லாம் பெரியவரு மொரட்டுத் தாடி வச்சிருப்பாரு. தேன்கூடு மாதிரித் தாவாங்கட்டையிலெ மொளைச்சுத் தொங்கும்...

எதையோ நினைத்துக்கொண்டவர்போல ராமலிங்கம் சிரித்தார். சற்றுநேரம் மனப்பூர்வமாகச் சிரித்து ஓய்ந்த பிறகு,

...அந்தப் பய நானும் சாமியாராயிருவேண்டு நெனைச்சிட்டான் போல, அதுக்கெல்லாம் யோகம் வேணாமாங்க? நம்மளெ மாதிரித் துக்கிரிகளுக்கு இது கெடைச்சதே பெரிய வரம் மாதிரி. என்னா சொல்றீங்க?

ராமலிங்கம் மௌனமாக இருந்தார். வலதுகை தன்னிச்சையாக ஜிப்பாப்

பைக்குள் போனது. தீப்பெட்டியும் பீடிக்கட்டும் உரசும் ஓசை கேட்டது. தொண்டையைச் செருமிக்கொண்டார்.

...தெக்கே நான் சாஸ்தி போனதில்லேங்க. பெரியவரோடெ போறனா, பாக்குறதெல்லாம் புதுசாத்தேன் இருந்துச்சு. திருநெல்வேலியிலே எறங்கீட்டம். நேரா குத்தாலிங்கம் பிள்ளேண்டு ஒருத்தரெப் போயிப் பாத்தம். நம்மல்லாம் நல்லது பொல்லதுக்கு அன்னதானம் செய்வமால்லியா, அவரு வருசம் முளுக்க அன்னதானம் செய்யிறவரு. 'செத்தெ நேரம் ஒக்காந்திரு, நான் இந்தா வந்திர்றேன்'ண்டு சொல்லிப் போட்டு பெரியவர் வெளியே போயிட்டாரு. இவரு, குத்தாலிங்கம் என்னெயெப் பத்தி விசாரிச்சாரு. நான் நல்லா விலாவாரியாச் சொன்னேன். அவரு சொன்னாரு, 'சரிதான், என்னெய மாதிரித்தாம் போல. நீங்களும் பசியிலெ அலெஞ்சவரு தானா'ண்டாரு.

...எனக்குப் பதக்குண்டு ஆயிருச்சு. கொளுப்பெடுத்து அலெஞ்சிருக்கோம்ண்டுல்ல நம்ம நெனைச்சோம். பசியிலெ திரிஞ்சதுதானா அது? சொன்னா நம்ப மாட்டீங்க. இவரு இப்பிடிச் சொல்லிப்புட்டாரா, அந்த நிமுசம் பொம்பளையை நெனைச்சாலே மனசு முளுக்க எதுக்களிச்சு வந்துச்சு. கலியாண வீட்டுலெ நல்லா வகுறு முட்டச் சாப்புட்ட பெறகுட்டு அண்டா நெறையப் பாயசத்தெப் பாத்தா ஒரு மாதிரித் தெகட்டுமே, அது கணக்கா...

ராமலிங்கம் சிரித்தார்.

...ஆனாக்கெ, தெகட்டுனா என்ன ருசியா இருந்தாத்தான் என்ன, நம்ம இருக்கப்போறது இன்னம் கொஞ்சநாள்தானேண்டு ஒரு நெனப்பு. நானெல்லாம் எதுக்கும் கண்ணு கலங்க மாட்டேங்க. நான் வளந்த வளப்பு அப்பிடி. அது என்னமோ தெரியலே, அந்த வைத்தியனெப் பாத்துப்புட்டு வெளிய வந்ததுலெருந்து 'எதுறா சாக்கு'ண்டு கண்ணு ஊறிக்கிட்டுருந்துச்சு.

...அன்னைக்கி ராத்திரி குத்தாலிங்கம் பிள்ளெ மடத்துலெ தங்கீட்டம். மக்யாநா நாகரோவில் பஸ்ஸுலெ போயிக்கிட்ருக்கோம். நூல் புடிச்சது கணக்கா நெட்டுக்காக் கெடக்குது ரோடு. 'நம்மா வாள்க்கெயும் இப்பிடி ஒரு ராசபாட்டையா இருந்துருந்தா எம்புட்டு நல்லா இருந்திருக்கும். சந்து பொந்துலெயே திரிஞ்சிக்கிட்டு இருந்துருக்கனே, நானென்னா மனுசனா எலியா'ண்டு மனசு குமுறுது. வெளியே தெரியிற கட்டாந்தரை தெளிவில்லாமெத் தெரியுது. கண்ணு சதா நெரம்பிக்கிட்டே இருக்கால்லியா?

...பஸ்ஸு 'ரும்ம் ரும்ம்' முண்டு உறுமிக்கிட்டுப் பாயுது. பசி தாங்காமெ வேட்டைக்கி எறங்கீட்ட காட்டு மிருகம் மாதிரிக் கேட்டது அந்தச் சத்தம். கட்ட அறுத்துக்கிட்டு நாவுகம் எங்கிட்டெங்கிட்டோ ஓடுது. குத்தாலிங்கம் பிள்ளெ சொன்னது சரிதான். நான் என்னா வேணுமின்னா அலைஞ்சேன். பசி அலைய விட்டுருச்சு. அந்த நாட்டு வைத்தியன் என்னா செஞ்சானோ இல்லையோ, ஒரு வார்த்தெ சொல்லி என் பசியை அமத்திட்டானால்லியா?

...திடீர்ன்னு பெரியவர் எங்கிட்டெக் கேட்டாரு, 'அது சரி ராமலிங்கம், அடுத்து என்ன செய்யிறதா உத்தேசம்?' எனக்குப் புரியலே. இன்ன எடம்ண்டே சொல்லாமெக் கூட்டிக்கிட்டுப் போறாரு. நானும் வளப்பு நாக்குட்டி மாதிரிக் கூடவே ஓடுறேன். இப்ப இப்பிடி ஒரு கேள்வி. ஊருக்குத் திரும்பப் போகக் கையிலெ காசு இருக்குண்டு வச்சிக்கங்க. அது ஒரு பெரச்சினெ இல்லே. ஆனா, எதுக்கோசரம் கூட்டியாந்தாரு. ஏந் திரும்பிப் போகச் சொல்லுறாரு. ஒரே கொளப்பம்.

...அவரு அதுக்குள்ள திருப்பியும் கேக்குறாரு. 'என்னாப்பா, நாங் கேக்குறது புரியலையா?'. இது என்னா கம்ப சூத்திரமா, கஸ்டப்பட்டுப் புரிஞ்சிக்கிற? அவரு சொல்ற அடுத்து என்னாது? அடுத்த நிமிசமா, அடுத்த வருசமா? அந்த வேதனையிலெயும் எனக்குச் சிரிப்பு வந்துருச்சு. அடக்கிக்கிட்டென். அவரு கேள்வியெ மாத்திப் போட்டாரு. 'இப்ப ஒன் ஒடம்பு சொஸ்தமாயிருச்சுன்னு வையி, அடுத்து என்னா செய்யப்போறே?'

...ஆஹா, அந்த நெனப்பே எப்பிடி இருந்துச்சுண்றீங்க? யோசிக்காமெ பதில் சொன்னேன். 'இம்புட்டு நா இருந்த மாதிரி இருக்க மாட்டெஞ் சாமி'. அவரு சிரிச்சுட்டாரு. அப்பறம் வளக்கம்போலத்தான். ஊர் வந்து சேர்றவரைக்கி ரெண்டுபேரும் பேசிக்கிறலே.

...ஆசானோடெ எடத்தெப் பாத்து நடந்து போகையிலே, ஒரு தபா கேட்டாரு, 'ராமலிங்கம், பஸ்ஸுலெ வரும்போது என்ன சொன்னேன்னு நாவகம் இருக்குல்லே?' 'இருக்கு சாமி. நான் வாக்குத் தவற மாட்டேன் சாமி.' இப்ப ரோசிச்சாத் தெரியுது, நான் வாக்கு எங்கேங்க குடுத்தேன்? அவரு கேட்டாரு, நான் பதில் சொன்னேன். ஆக, நான் எனக்கே குடுத்துக்கிட்ட வாக்குத்தானேங்க அது?

...ஆசான் கூட இன்னொரு பையன் இருந்தான். அவனும் மருதெக்காரன்தேன். வயசு இருபதுக்குள்ளாறெதேன் இருக்கும். நல்ல தாட்டியமான பையன். ஒரு வார்த்தெ பேசலையே. நாங்க நாலைஞ்சு நா தங்கியிருந்தோம். காலையிலே எந்திரிச்சு கஸரத் போடப்

போனாண்டா, அங்கிணயே கெடப்பான். அவெங் கையிலே செலம்பக் கம்பு சுத்துற வேகம் இருக்கே, காத்தாடி சுத்துற மாதிரி இருக்கும்.

...அந்தப் பய பக்கத்திலெ நிக்யும்போதுதேன் தெரியுது, நான் எம்புட்டு ஒடுசலா இருக்கேண்டு. ஆசான் கேட்டாரு. 'வே வேதம் இந்த ஈர்க்குச்சியெ எங்க புடிச்சேரு?' பெரியவரு சிரிச்சாரு. 'இந்தப் பயவள்ளாம் ஒம்ம கண்ணுலெ எப்பிடித்தாம் சிக்குதாவளோ?'ண்டு ஆசானும் சிரிச்சாரு. என் ஒடம்பெப் பத்தி யாரும் பேசுனா எனக்கு சுருக்குண்டு கோவம் வந்துரும்ங்க. சப்புண்டு அறெஞ்சிருவேன். ஆனாக்கெ, அவுக ரெண்டுபேரும் கேலி செய்யுறாக, எனக்கும் சிரிப்பு வருது. என்னாத்தெச் சொல்ல?

...துணியெ வெலக்கச் சொல்லி என் கவட்டெ ஆசான் பாத்தாரு. 'ஒனக்குப் பொம்பளெச் சீக்குன்னு எவண்டே சொன்னது?' 'ஊர்ஊராப் போற வைத்தியரு ஒருத்தரு'ண்டு அவரு பேரெச் சொன்னேன். 'அவிங்யல்லாம் களவாணிப் பயக. ஆம்பளெ தல வலிக்கிதுன்னு போயி நிண்டாலும் பொம்பளெதாம் காரணம்ண்ருவாங்ய. எல்லாத்துக்கும் ஒரே மருந்துதான் குடுக்கவும் செய்வான். ஒனக்குச் சீக்குமில்லெ, மண்ணுமில்லே. இது வெறும் ஆனெக்காலு ஆரம்பம். அம்புட்டுத்தான். நல்லவேளெ, சீக்கிரமே வந்துட்டெ. பயப்புடாதடே. நாஞ் சூரணமும் தைலமும் தாரேன். நாலைஞ்சு மாசம்போலச் சாப்புடு. செரியாயிரும்டே'ண்டாரு. அவரு என்னெய 'மக்கா, மக்கா'ண்டு கூப்பிட்டது எனக்கு அம்புட்டு சந்தோசமா இருந்துச்சு பாத்துக்கங்க. அவங்கல்லாம் அதேன் தெக்கெ உள்ளவுங்க நம்மளெ மாதிரி 'அடா புடா'ண்டு பேச மாட்டாங்க. 'போலே வாலே'ண்டுதான் பேசுவாங்க...

ராமலிங்கம் சிரித்தார். தனது வேஷ்டியை விலக்கி வலது காலைக் காட்டினார். மேல் பாதமும் கணுக்காலும் சிறு மெத்தை மாதிரி லேசாக அதைத்திருந்தன. கணுக்காலில் ஒரு திறந்த ரணம். வெண்ணிறத்தில் ஏதோ களிம்பு தடவி, அது விளிம்பில் மாத்திரம் சேகரமாகி, கொதகொதவென்று சிவந்திருந்த ரணம்.

...ஆசான் பார்த்த பார்வெ, இந்த மட்டோடெ நின்னுக்கிருச்சு, இல்லேண்டா, காலு தலகாணி கணக்கா வீங்கியிருக்கும். அப்பறம் இளுத்து இளுத்து நடக்க வேண்டியதுதேன். ஒடம்பெப் பத்தின பயத்தெ ஆசான் தீத்து வச்சாரு. மனசெ நிம்மதியாக்குனது குத்தாலிங்கம் பிள்ளெ. அவரு அப்பிடியொரு வார்த்தெ சொல்லலேண்டு வைங்க, 'இப்பிடிப் போயிச் சீருகெட்டுப் போனமே'ண்டு புளுங்கிப் புளுங்கியே மண்டையெப் போட்டுருப்பேன், நானெல்லாம். ஆக, பசி தொரத்துச்சு,

அலெஞ்சோம். பசி நின்னுபோச்சு, அலைச்சலும் நின்னுபோச்சு. அம்புட்டுத்தான். இதுலெ மேல்க்கொண்டு ‘தப்பு, ரைட்டு’ண்டெல்லாம் என்னாத்துக்கு ரோசிச்சுக்கிட்டு...

ராமலிங்கத்தின் கண்களில் ஒருவிதமான தீவிரம் கூடியிருந்தது. மோவாயிலும் கன்னத்திலும் சிம்பு சிம்பாக மண்டியிருந்த ஏழெட்டு நாள்த் தாடியை வறட்வறட்டென்று சொறிந்துகொண்டார். பேசும்போது அடிக்கடி கோதியதால் வெகுவாகக் கலைந்திருந்த தலைமுடிக்குள் விரல்களை நுழைத்துத் துழாவிக்கொண்டார். ஐம்பத்தொன்று முடிந்துவிட்டது என்கிறார். அதற்குள்ளேயே தலையில் வெகுவாக நரையாடியிருக்கிறது. இன்னும் நாலைந்து வருடங்களில் முழுக்கப் பஞ்சுப் பொதியாகிவிடும். நரைத்தாலும் அடர்த்தி சற்றும் குறையாத கேசம்.

...ஆனா, நாகரோவில் போன ஆளு இல்லே, மருதைக்கித் திரும்புனவன். ஒரு நா ராத்திரி அங்கிணெ தூங்கி மக்யாநா எந்திரிச்சப்பவே எல்லாம் புதுசாயிருச்சு. அங்கிட்டெல்லாம் காத்து குளுகுளுண்டு இருக்குமா? விடிஞ்செந்திரிச்ச வொடனே, விசயாவெப் பாக்கணும், ‘எனக்கு ஒரு சீக்குமில்லே புள்ளே’ண்டு சொல்லணும்ண்டு ஒரு பரபரப்பு. ’ராமலிங்கம், அடங்குடா’ண்டு எனக்கு நானே சொல்லிக்கிட்டேன். நான் கூமுட்டெதாங்களே. அதுகிட்டெ ‘எனக்கு சீக்கு இருக்கு’ண்டே நாஞ் சொல்லலயே, இப்ப ‘சொஸ்தமாயிருச்சு’ண்டு எப்பிடிச் சொல்றது?

ஊருக்குத் திரும்பி எவ்வளவுநாள் கழிச்சு இங்கே திருத்தணியிலே வந்து ஸெட்டிலானீங்க?

ஒரே வாரம்தேன்.

ஒரே வாரமா?

பின்னே? பெரியவரு அப்பிடித்தானே சொல்லிட்டுப் போனாரு?

அதெப்பிடிங்க, பிறந்து வளந்த ஊரெ விட்டுக் கிளம்ப மனசு வந்தது?

தெரிஞ்ச எடம்ங்கிறதெத் தவிர, வேறென்னாங்க இருக்கு? நாம என்ன எடத்தோடெ சேந்தா பெறக்குறோம்? பாக்கப்போனா, நம்மகிட்டே அத்தனெ வருசமா வந்துசேந்திருந்த அளுக்கு அம்புட்டும் பெறந்த ஊர்லெ சம்பாரிச்சதுதானே? எந்த மூஞ்சியை வச்சிக்கிட்டு அதே ஊர்லெ வேற வாள்க்கே வாள்றது? இதே புது ஊருக்கு வந்தம்னு வையிங்க, நாமளும் புதுசாப் பெறந்த மாரி ஆயிருதால்லியா?

இந்தம்மா, விஜயகுமாரி, ஒங்க முடிவுக்கு எப்பிடி ஒத்துக்கிட்டாங்க?

அதாங்க, இன்னக்கிவரைக்கும் எனக்கும் புரியாத ஆச்சரியம். விசயாவெ நான் எத்தனெ வருசமாப் பாத்துக்கிட்டுருந்தேன். யாரு என்ன சொன்னாலும் காதுலெயே வாங்காத வணங்காமுடி அது. நுப்பது வருசமா அப்பிடியே வளந்திருக்கு. தாம் புடிச்ச புடியே சரிண்டு ஒத்தெக்கால்லெ நிக்கும். குடிச்சுப் போட்டு வந்து நானெல்லாம் என்னா மாத்து மாத்தியிருப்பேன். ரத்தம் கொட்டுனாலும், தன் பேச்சுலெ பின்வாங்காது. அந்தப் புள்ள ஒரே சணத்துலெ மாறிப் போச்சுண்டா, நான் பெரியவரெச் சொல்லுவனா, அந்த வேளையெச் சொல்லுவனா, இல்லே எங்க கெரகத்தெச் சொல்லுவனா?

ம்.

நாங்க ரெண்டுபேரும் வந்து வீட்டுக்குள்ளாறெ மொளையிறோம். இவ பாயெ எடுத்துப் போடுறா. ஒங்ககிட்டெச் சொல்றதுலே என்னாங்க இருக்கு. இந்தப் பொம்பளெ தொளில்காரிதானே, புது ஆளு யாராச்சும் வந்தா, மாராப்பு தானா வெலகீரும். வர்றவனும் காணாததெக் கண்ட மாதிரி உத்து உத்துப் பாப்பான்ண்டு வையிங்க...

ராமலிங்கம் சிரித்தார். நானும் சிரித்தேன்.

...பெரியவரு பாயிலெ ஒக்காந்திருக்காரு. 'இருங்க, காளிமார்க்கு வாங்கியாறேன்'ண்டு இவ பெறப்புடுறா. பாப்பார வீட்டுப் பொம்பளைக படம் காட்டுற மாரி, இந்தா இப்பிடி, இளுத்துப் போத்தியிருக்கா முந்தாணியெ. நம்ம விசயாதானாண்டு ஆயிருச்சு எனக்கு.

தோள் துண்டை முந்தானைபோல இழுத்துப் போர்த்தி விளிம்பைப் பல்லால் கடித்தவாறு தொடர்ந்து சிரித்தார் ராமலிங்கம். நான் அவர் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

...ஆனா, அதுதேன் பொம்பளெ மனசோட சூச்சுமம். நமக்கு இன்னார்ன்னு புரியறதுக்கு ரெண்டுமூணு நாள் புடிச்சிருச்சு, அவுகளுக்கு ஒரே ச்சணத்துலெ பிடிபட்டுப் போச்சு... இருங்க, வெளியே போயி ஒரு பீடி புடிச்சுட்டு வந்தர்றேன். இல்லே, நீங்களும் என்னோடெ வர்ரீங்களா...?

இருவரும் எழுந்து நடந்தோம். எதிரில் வந்த யாரிடமோ ஓரிரு வார்த்தைகள் பேசுவதற்காக நின்றார் ராமலிங்கம். வரும்போது இருந்ததைவிட, பிரகாரத்தின் நீளம் குறைந்துவிட்ட மாதிரிப் பட்டது எனக்கு. தெரியாத இடத்தின் நீள அகலங்களுக்கும், பழக்கமாகிவிட்ட

இடத்துக்கும் வித்தியாசம் இருக்குமோ என்னமோ என்று நினைத்துக்கொண்டேன். உச்சிப் பொழுதின் வெயிலில் கொஞ்சமும் கடுமை இல்லை. ஆகாயம் நிர்மலமான இளநீலமாக விரிந்து கிடந்தது. வெகு தொலைவில் ஒரு ரயில் வண்டித்தொடர் புறமுதுகிட்டு ஓடுகிறது.

...அ ந்த மனுசரு மகான்ங்க. படக்குனு விசயாவெப் பாத்து, 'எனக்கு மஞ்சப்பொடி போட்டு ஒரு டம்ளர் பால் குடும்மா'ண்டாரு. இந்தப் பொம்பளெ கிறுகிறுத்துப் போனா. மூஞ்சி என்னாமா வேர்த்துருச்சுண்றீங்க? குருவி சேத்தமாதிரிக் காசு சேத்து, குடிசெ வீட்டெக் காரெக் கட்டடமா எடுத்துக் கட்டியிருந்தோம்ண்டாலும், பெரியவரு கூட்டாளிக வரக்கூடிய எடமா அது? எங்க வீட்டுக்குள்ளாறெ அவரு வந்ததையெ பெரிய புண்ணியமா நெனச்சுக்கிட்டிருக்கேன். அவருக்குப் படையல் வைக்கிற பாக்கியமும் கிடைச்சதுன்னா, என்னாத்தெச் சொல்ல? விசயா, 'இந்தா வாங்கியாரேன் சாமி'ண்டு வெளியே ஓடுச்சு. நல்லவேளை, அன்னைக்கிக் கவுச்சி எதுவும் சமைக்கலே.

...ஒரு வாரத்துக்குள்ளாறெ மதுரெயிலெ உள்ள சங்காத்தங்களையெல்லாம் முடிச்சுக்கிட்டு, திருணாமலேலெ வந்து பாருங்க'ண்டு சொல்லிப்புட்டு பெரியவரு பெறப்புட்டுப் போயிட்டாரு.

அடுத்த ஒரு வாரமும் என்னென்னமோ வேலைக. சம்முகம் பயதேன் ரெம்பக் கலங்கிப் போனான். அவனெச் சமாதானம் செய்யிறதுக்கே ஒரு ராவும் ஒரு பகலும் ஓடிப்போச்சு. சின்னப் புள்ள மாதிரி அளுகுறானே, பேசாமெ இவனையும் கூட்டிக்கிட்டுப் போயிருவமாண்டு ரோசிச்சன். மணி பெருசாச் சத்தம் போட்டான்.

ஒனக்குக் கொஞ்சமாச்சும் கூறு இருக்காடா? கட்டுக்சோத்துக்குள்ளெ பெருச்சாளியை வச்சுக் கட்டுறேங்குற? சம்முகம் அவெம் பொஞ்சாதி அவெம் வீட்டு நாக்குட்டி இப்பிடி மொத்தப் பளங்கானத்தத்தையும் கூடக் கூட்டீட்டுப் போறதுக்கு, பேசாமெ இங்கிணயே கெடந்துறலாமே. தாயா புள்ளையாப் பளகீட்டம். வாஸ்தவம்தேன். அதுக்கோசரம்? பளக்கம்தானடா. ஒட்டிக்கிட்டா பெறந்தோம். இந்தா பஸ்ஸேறினா, எட்டாவது மணி நேரம் கொண்ணாந்து விட்டுர்றான். ஏத்தா, விசியா, நாங்க வந்தா சோறாக்கிப் போடமாட்டே? இந்தப் பிள்ளெ குடும்பம் வைக்கணும்னு நெனச்சிருச்சில்ல? அதுக்காண்டியாவது நீங்க கெளம்பித்தாண்டா ஆகணும்...

அப்பிடி இப்பிடீண்டு ரெம்பப் பேசிப்புட்டான். நாயம்தானேண்டு

தோணுச்சு எனக்கு.

கடம் கப்பிகெல்லாம் அடைக்கணும், விசயா கொஞ்சம் துட்டு வெளியே வட்டிக்கு விட்டுருந்துச்சு அதையெல்லாம் தண்டல் பண்ணணும், 'வெளியூர்லே போயி வாளப் போறோம், துணிமணிக கொஞ்சம் புதூசா வாங்கிக்கிறணும்'ண்டா விசயா.

அப்பறம் அவளுக்கு ஒரு போலீசுக்காரரு ரொம்பப் பளக்கம், ஏட்டய்யா அவரு. நாங்க கெளம்புற சமயம் பாத்து இனுசுபெட்டரா ஒசந்தாரு. 'இன்ன மாதிரி விசயம், நாங்க ஊரெ விட்டு போறம்'ண்டு இந்த புள்ள அவருகிட்டெச் சொல்லியிருக்கு. அவரு ஒடெஞ்சு போனாராம். 'சரி புள்ளெ, போறதே போறெ, எங்கூட ரெண்டு நாள் இருந்துட்டுப் போ'ண்டு சொல்லி கொடைக்கானல் கூட்டிட்டுப் போயிட்டாரு. விசயாவுக்குக் கொஞ்சம் சங்கட்டம்தேன். 'தொளிலெ விட்டுர்றம்'ண்டு பெரியவருகிட்டெ வாக்குக் குடுத்து இன்னம் நாலுநாக்கூட முளுசா ஆகலியே, இப்பிடி இந்தாளு கூப்புடுறாரே'ண்டு கலங்குச்சு. நான்தேன் சொன்னேன், 'பளைய பாக்கியெல்லாம் முடிச்சுட்டு வரச் சொல்லியிருக்காரால்லியா, இந்தாளு தொடுப்பும் ஒரு பாக்கிதானே. சும்மாப் போயிட்டு வாத்தா. இத்தோடெ எல்லாம் முடிஞ்சிருச்சூண்டு நெனைச்சிக்க'ண்டு ஆறுதல் சொன்னேன். ஆனா, அந்தாளு ரெம்ப நல்ல மனுசன் பாத்துக்கங்க. கைநெறைய அள்ளிக் குடுத்தாரு.

இந்தப் புள்ள வாயி சும்மா இருக்காது. 'அந்தாளுக்கென்ன, நொட்டாங்கையில வாங்குறதெ சோத்துக் கையாலெ நம்மகிட்டத் தட்டுறாரு. இல்லாட்டியும் பெரிய வள்ளல் பாரு அவரு'ண்டு நொடிச்சிச்சு... பாருங்க நான் என்னமோ சொல்ல வந்துட்டு எங்கிட்டோ போயீட்டன். ஆனாக்கெ, பெறந்து வளந்த எடத்தெ விட்டு ஒரேடியாப் பெறப்புடுறது ண்றது அம்புட்டு லேசில்லங்க.

பொதங்கெளமெ ஊருக்குக் கெளம்புறமா. செவ்வாக் கெளமெ ரவையிலெதான் எங்க ரெண்டுபேத்துக்கும் ஒடம்புண்டு ஒண்ணு இருக்குறதே ஒறெச்சுச்சு. ஒங்ககிட்டெச் சொல்றதுக்கென்ன, அதுக்கு முன்னாடி எம்புட்டுப் பொம்பளைக்கிட்டெ எத்தனெ வாட்டி போயிட்டு வந்துருக்கேன். இந்தப் புள்ளெகிட்டெயும் அதே மாதிரித்தானே கெடந்து எந்திரிப்பேன்.

அன்னைக்கி விசயா புதூசாத் தெரிஞ்சா, அவளுக்கும் அதே மாரித்தான் நான் தெரிஞ்சனாம். மக்யாநா சொல்லுறா. ஆயிரந்தேன் சொல்லுங்க, தொளில்காரிக்கும் பொண்டாட்டிக்கும் வித்தியாசம் தெரியாமயா போகும்?

ஆக, எல்லாவிதத்திலெயும் புத்தம் புதுசா ஒரு வாள்க்கெ அமெஞ்சு போச்சு எங்களுக்கு. வேறென்னாத்தெச் சொல்ல? அதெவிட, இந்தக் கூத்தெக் கேளுங்க, நம்ம விசயாவோட பளைய ஓனரு இருந்தாரால்லியா, அவருதாங்க நீலமேகம், பிற்பாடு ஒயின் சாப்பெல்லாம் வச்சுப் பெரிய மொதலாளியாயிட்டாரு. சாத்தமங்கலத்துலெ ஒரு நெலம் கைமாத்திவிட்டதுல பெரிய தொகெ ஒண்ணு கைக்கு வந்துச்சு எனக்கு. அந்தாள்ட்டெ அதெக்குடுத்து இவளெ வெளியே கொண்ணாந்தேன். பெறகுதேன் இவ தனியாத் தொளில் செய்ய ஆரமிச்சது, நாங்க வீட்டெ எடுத்துக் கட்டுனது, எல்லாம்.

ஓனருகிட்டப் போயி ஒரு வார்த்தெ சொல்லிட்டு வந்துறணும்னு விசயா ஒரே புடிவாதம். 'அதாங் களுதெயே வெட்டிவுட்டு வருசக்கணக்காச்சுல்ல, பெறகென்னா'ண்டா, 'அதெல்லாம் இல்லீங்க, அந்தாளு எனக்குத் தகப்பன் மாதிரி, அவரு மட்டும் இல்லேண்டா, நா ஒங்க ஏரியாவுலெ குடிவந்துருப்பனா, நீங்க எனக்குக் கெடெச்சிருப்பீங்களா'ண்டு ஒரு வார்த்தெ கேட்டுப்புட்டா. ஆயிரந்தேன் சொல்லுங்க, அந்தாளு மேலெ எனக்கு என்னைக்குமே மருவாதி கெடையாது. 'பொம்பளையெ வாடகைக்கிவிட்டுப் பொளைக்கிறவன்தானெ'ண்டு ஒரு நெனெப்பு.

ஆனா, பெரியவரு வந்துட்டுப்போன பெறகு இந்தப் புள்ளெ ஆளே மாறிப்போனாண்றதைப் பாத்துக்கிட்டுத்தானே இருந்தேன்? எங்க குச்சு வீடு சும்மா கஷ்டமரு வந்து படுத்தெந்திரிச்சுப் போற எடமில்லே, சம்சாரிக குடியிருக்கிற வீடுண்டு ஆயிப்போச்சால்லியா, அந்த ஒரு நிமிசத்திலெ? விடுங்க, பேசப் பேச என்னென்னமோ ஊறிக்கிட்டேயிருக்கு...

ஆரப்பாளையம் நானஒளிவுபுரத்திலே அந்தாள் வீட்டுக்குப் போனமா. எனக்கு உள்ளூற ஒரு ஒதைப்புதான். அவன் எதாச்சிம் சொல்லி இந்தப் புள்ள மனசெக் கலைச்சுருவானோண்டு. ஆனாங்க, நாம நெனைக்கிறதெல்லாம் நம்ம சுபாவத்தோட விசயம்தான். நெசம் இருக்கே, அது அதுபோக்கில திரியுதுங்க. நாஞ் சொல்றது சரிதானே?

பின்னே? அந்தாளு நீலமேகம் விசயம் தெரிஞ்சவொடனே, எளகிப் போனாரு. நல்ல வசதியான ஆளு. எந்நேரமும் திமிராப் பேசுற மனுசன். அவரு கண்ணு கலங்குறதெப் பாத்ததும் எனக்கே சங்கட்டமாயிருச்சு. டக்குன்னு எந்திரிச்சு உள்ளாறே போனாரு. திரும்பி வாராரு, கூடவே அவரு பொஞ்சாதியும் வருது. அது கையிலெ ஒரு தாம்பாளம். ஒரு

சேலை, பூவு, பளம், வெத்தெலை, பாக்குண்டு சீர் வைக்கிற மாதிரியில்ல வர்றாரு.

இந்தப் புள்ள அவங்க கால்ல விளுந்து கும்புட்டுச்சு. புருசனும் பொஞ்சாதியும் இவ நெத்தியிலே திருநீறு பூசறாங்க. 'அடிக்கடி வந்து பாத்துட்டுப் போகணும் புள்ளே'ண்டு பாசமாச் சொல்றாரு. வெவரம் தெரியாமெப் பாக்குறவுகளுக்கு, தகப்பனும் மகளும் போலருக்குண்டு தோணியிருக்கும்.

திரும்பி வரும்போது ஒருத்தருக்கொருத்த பேசிக்கிறலே. எனக்கு என்னென்னமோ ரோசனெ ஓடுது. இப்பிடித்தேன் குடும்பம் குட்டிண்டு உருப்படியா வாள்றதுக்குத்தேன் எல்லாருக்கும் ஆசெ போல. எங்காத்தா எங்கப்பன்கூட ஓடியாந்ததுக்கும் இந்த ஆசெதானே காரணம்? ஆனாக்கெ, வேற எதுனாச்சிம் காரணம் குறுக்க வந்து சீரளிச்சுப் போடுது. 'போ களுதெ, குடும்பமாவுது மண்ணாங்கட்டியாவுது'ன்னுட்டு வெளியேறிர்றான்.

குடும்பம்ண்றது லேசுப்பட்ட விசயம் இல்லேங்க. ஆயிர ஆயிரம் வருசமா சனங்க வாள்ந்து பளகின விசயம் இல்லேங்களா? தனியா இருந்து ஒருத்தனும் ஒண்ணுத்தெயும் களட்டிற முடியாது.

நாகரோவில்லெ தங்கப்பன்ண்டு ஒரு ஆசானெப் போயிப் பாத்தமால்லியா? அவரு சொன்னது நல்லா நாவகமிருக்கு. மனுச ஒடம்புக்குள்ளாறே ரெண்டு சூடு இருக்குங்களாம். 'ஒண்ணு உசிரோட சூடு. இன்னோண்ணு, ஒடம்போட சூடு. அதான், சேர்க்கைக்கி அலையிற சூடு. மொதச் சூட்டெத் தணிக்கிறதுக்குச் சாப்பாட்டுக்கு அலையிற மாதிரி, ரெண்டாவது சூட்டெத் தணிக்க சோடி தேடி அலையுறோம்'ண்டாரு ஆசான். பிற்பாடு இதெப் பலதடவெ ரோசிச்சிருக்கேன். இந்த ரெண்டு சூடும் மனுசனுக்கு மட்டுமா இருக்கு? நாயி பன்னி யானேண்டு உசிரு இருக்குற எல்லாப் பிராணிக்கும் உள்ளதுதானேங்க.

சோடியிலெயும் இன்னதுதாண்டு ஒண்ணு இருக்கா, இந்த மணி இருந்தானே, ஊர்லெ அவெம் போகாத பொம்பளை கெடையாது. அம்புட்டும் போக, எல்லிசு நகர்லெ ஒரு பொண்டுகனெ வச்சிருந்தான். 'அது என்னாடா கருமம்'ண்டு கேட்டா, 'ஒனக்கு இதெல்லாம் புரியாது'ண்ருவான். அம்புட்டு ஏன், எங்க ஆத்தாளும் லெச்சுமியக்காவும் கட்டிப்பிடிச்சு ஒறங்குறதெ என் கண்ணாலெ பாத்துருக்கேன். ஆனா, எல்லாத்தையும் பாக்க, ஆம்பளையும் பொம்பளையும் சேந்து வாள்றதுதான் பொருத்தம்ண்டு தோணுதுங்க. நாம சந்தோசமா

இருக்கது மட்டுமில்லாமெ, இன்னொரு உசிரு வர்றதுக்கும் வளிவிடுறமா இல்லயா?

வீட்டுக்கு வந்தவொடனே, வேற ஒண்ணு தோணுச்சு. அட, இம்புட்டு ஆயிப்போச்சு, அது ஒண்ணெ விட்டு வைப்பானேன்?

‘நீலமேகம் சீரு குடுத்த சேலையைக் கட்டுத்தா, இந்தா வந்துர்றேன்’ண்டு வெளியேறுனேன். வேகமாப் போயி, சம்முகத்தையும், மணியையும் ஒரு ஜட்கா வண்டியிலே அள்ளிப் போட்டுக்கிட்டுத் திரும்புனேன். சம்முகம் சம்சாரமும் கூட வந்துச்சு. அந்தப் பொம்பளை, அங்கிட்டுத்தான், ஒரு கோயில் வாசல்லெ பூ விக்கிது. ‘ஒரு பந்து பூவையும் எடுத்துக்கத்தா’ண்டு அதுகிட்டெச் சொன்னன். வர்ற வளியிலே இன்னொரு ஜட்காவையும் அமத்திக்கிட்டேன்.

விசயாவுக்கு ஒண்ணும் புரியலே. திருதிருண்டு முளிக்கிது. மஞ்சக் குளிச்சு கோடிச் சேலெ கட்டியிருக்கா, வயசு வேற ஏளெட்டு கொறைஞ்சு போச்சு. அந்தக் களுதெ காலையிலெ என்னைக்கிக் குளிச்சது. சாயங்காலம் ஆறு மணிக்கிமேலதானெ பொளுதே விடியும் அதுக்கு! அஞ்சலைகிட்டெ ‘அந்தப் பூவெ இவ தலை நெறைய வையித்தா’ண்டேன். மண்டெயிலெ பூ ஏறுனதும் இவ கொமரிப்புள்ளெ கணக்காக் கொணட்டுறா. மூஞ்சியெல்லாம் எம்புட்டு அளகாயிருச்சுண்றீக? நாலு பேரு கூட நிண்டாகளோ, தப்புத் தண்டா எதுவும் நடக்காம இருந்துச்சோ..

ராமலிங்கம் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார். எனக்கு அவர் எதற்காகச் சிரிக்கிறார் என்று புரியவில்லை. ஆனாலும் உள்ளூற ஒரு குதூகலம் பொங்கியது. காரணமில்லாமல் தொற்றிய சிரிப்பில் இருவரும் கொஞ்சநேரம் சிக்கியிருந்தோம். சற்று அடங்கிய பிறகு ராமலிங்கம் கேட்டார்:

ரெண்டு ஜட்காவும் நேரெ எங்கெ போச்சுண்றீங்க?

சொல்லுங்க.

திருப்பரங்குண்டத்துக்கு.

ஓ.

‘சரி, ஊரெ விட்டுப் போறாங்க, கோயிலுக்குப் போயிட்டு வரணும்ண்டு கோடிச்சிருக்காங்க. நம்மளையும் கூட்டிக்கிட்டு வந்துருக்காங்க’ண்டுதான் மத்தவுக எல்லாரும் நெனைச்சிருப்பாக.

ம்.

அய்யிரு சூடத்தட்டெக் கொண்டாந்தாரா, நான் சட்டைப் பைக்குள்ளெருந்து மஞ்சக் கவுத்தெ எடுத்துக் குடுத்து, 'சாமி பாதத்திலெ வச்சு எடுத்துத் தாங்க சாமீ'ண்டேன்.

ம்.

பெறகென்ன, முருகஞ் சாச்சியா நானும் விசயாவும் புருசம் பொஞ்சாதியாயிட்டோம்.

ராமலிங்கம் சிரிப்பைத் தொடர்ந்தார். நாலைந்து விநாடிகள்தாம். சிரிப்பதற்காக மலர்ந்த முகம் சட்டென்று கூம்பியது. நனைந்த குரலில் சொன்னார்.

இப்ப ஒங்ககிட்டெப் பேசிக்கிட்ருக்குறப்ப, எம் பளைய கூட்டாளிகளெயெல்லாம் நெனச்சா, 'ஐயோ'ண்டு மனசு பொங்குதுங்க. சம்முகம் பய அந்த அளுகெ அளுதது எம்புட்டு நாயம் ண்டு புரியுது...

ராமலிங்கத்திடமிருந்து நீண்டதொரு பெருமூச்சு வெளியேறியது. நடந்து நடந்து நாங்கள் வந்து சேர்ந்திருந்த இடத்திலிருந்து வெகுஆழத்தில் தரை தெரிந்தது. சற்று அகலமான நாடாபோலத் தொலைவில் தெரிந்த சாலையில் வாகனங்கள் விரைவதை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ராமலிங்கம், சடாரென என் பக்கம் திரும்பினார்.

...ஆனாக்கெ, யாருக்குமே இருக்கிற எடம் பிடிக்காமெத்தாங்க போயிருது. யோகமுள்ளவன் வேற எடத்துக்கு நகந்துர்றான். நான் ஊரெ விட்டுப் போறதெ மட்டும் சொல்லலேங்க. இப்பப் பாருங்களேன், நான் நாகரோவில்லெ பாத்தனே பால்பாண்டி, அந்தாளு மதுரெ சில்லாவுலேர்ந்து நாகரோவில் வரைக்கும் ஓடித் தாண்டுன தூரத்தெ, நம்ம குத்தாலிங்கம் பிள்ளெ உள்ளூர்லெ இருந்துக்கிட்டே தாண்டீட்டாரால்லியா. உள்ளாறெ நகந்தா என்னா, ஊரு மாறிப் போனா என்னா. எல்லாம் ஒண்ணுதானே. நகந்துட்டோம்ங்குறதுதாங்க விசயம்...

ராமலிங்கம் இதைத் தமக்குத்தாமே சொல்லிக் கொள்கிறார், என்னிடம் சொல்லவில்லை என்று தோன்றியது.

பெரியவர் நாகர்கோவில்லெ கொண்டுபோய் விட்டுட்டு வந்த ஒரு ஆளெப் பத்தி சிவராமன் சார் சொன்னாரு. நீங்க சொல்ற பால்பாண்டி அவருதானோ என்னமோ. அவரு குத்தாலிங்கம் பிள்ளெயெப் பத்தியும் சொன்னாரு.

பெரியவரோடெ நாகரோவில் போய்ட்டுத் திரும்புற வளியிலெ குத்தாலிங்கம் பிள்ளையையும் பாத்துட்டுத்தானே வந்தம்? அவுங்க ரெண்டுபேத்தையும் நீங்க போயிப் பாக்கணும்ங்க. இது இந்தக் கோடீண்டா அது அந்தக் கோடி. குத்தாலிங்கம் பிள்ளெ ஓயாமெப் பேசுவாரு. பால்பாண்டி அப்பிடியில்லே. ஒரு சொல்லு வாங்கணும்ண்டா, நாம ஏளு சொல்லு வீசணும். எந்தத் தூண்டிக்கும் டேக்காக் குடுத்துர்ற விலாங்கு மீனு அது.

சிரித்தார். ராமலிங்கம் மீண்டு வந்துவிட்டார் என்று நினைத்துக் கொண்டேன்.

அவங்களையும் பாக்கணும்னுதான் திட்டம். ஒங்ககிட்டெ அட்ரஸ் இருக்குல்லே.

இருக்குங்க. நாந்தேன் ஒண்ணுலெ ரெண்டுலே அவுங்களைப் பாத்துக்கிட்டுத்தானே இருக்கேன். வளியும் சொல்லித்தாறேன். நீங்க என்னா பண்ணுங்க. நேரே நாகரோவில் போயிருங்க. திரும்பி வர்ற வளியிலே திருநவேலியில எறங்கிக்கிறலாம். என்னா...? வாங்க, இந்த ஓட்டல்லெ சாப்புட்ருவோம். இங்க சாப்பாடு கொஞ்சம் உருப்படியாயிருக்கும்...

பேருந்து நிலையத்தில் கசகசவென்று கூட்டம். வெயில் தாழ்ந்துவிட்டது. ஆனால் இருளின் ஒரு சொட்டுகூட இன்னும் இறங்கவில்லை. கைக்கடிகாரத்தைப் பார்த்தேன். அட, நாலரைதான் ஆகிறது. பேசிக்கொண்டே இருந்ததில் நேரப் பிரக்ஞை¬ தவறிவிட்டிருக்கிறது. இல்லை, அது மட்டும் காரணமில்லை என்கிற மாதிரி ஒரேயொரு மழைத்துளி மணிக்கட்டில் வீழ்ந்தது.

ராமலிங்கமும் விஜயகுமாரியும் வழியனுப்ப வந்திருந்தார்கள். கடையை ரத்தினவேலுவிடம் விட்டுவிட்டு வந்திருந்தார்கள். நடந்து வரும்போது ஒருமுறை ரத்தினவேலுவை அவர்களுடைய 'வளர்ப்பு மகன்' என்று குறிப்பிட்டேன். இருவருமே வேகமாகத் தலையாட்டினார்கள். அந்த அம்மாள் படபடவென்று சொன்னாள்:

அதெல்லாம் எதுங்குங்க பெரிய வார்த்தே. அந்தப் பய நம்மகிட்டெ வளர்றான். அம்புட்டுத்தேன். வந்து சேந்த மாரியே நாளைக்கிப் போகப்போறேண்றானா, 'இந்தாப்பா, ஏதோ நம்மளாலெ ஆனது'ண்டு அவனுக்குள்ளதெக் கையிலெ குடுத்து அனுப்பீற வேண்டியதுதான். என்னா அப்பிடிப் பாக்குறீங்க, இந்தப் பெறவிக்கிப் புருசன் கொளந்தெ எல்லாமே நமக்கு இப்பிடி வந்து சேர்றதுதான். நம்ம என்னா, ஊர்

ஒலகத்துலெ மத்தவங்க வாள்ற மாதிரியா வாள்ந்திருக்கோம்?

அந்த அம்மாள் பாடக்கூடியவள் என்று ராமலிங்கம் ஆரம்பத்தில் குறிப்பிட்டது நினைவு வந்தது எனக்கு. குரல் வசீகரமாகத்தான் இருக்கிறது. அறுபது வயதை நெருங்குகிறவளா அவள்? முகமுமே உடம்புக்கும் வயதுக்கும் பொருந்தாத குழந்தைத்தனத்தோடுதான் இருக்கிறது. முதுமையின் பாதையில் நடந்துவரும்போது, ஏதோ ஒரு இடத்தில் வயது ஸ்திரமாக நின்றுவிட்ட மாதிரி இருக்கிறாள்.

அந்தா, நாகரோவில் வண்டி நிக்கிது.

என்று சொல்லிக்கொண்டே வேகமாக நடந்தார் ராமலிங்கம். மற்ற இருவரும் ஓட்ட நடையில் பின்தொடர்ந்தோம்.

✠

பால்பாண்டி

வீ ட்டு வாசலில் மிகப்பெரிய கொட்டகை போட்டிருந்தது. ஒரு ஓரத்தில் வீட்டுத் திண்ணையில் வைக்கப்பட்ட மிகப் பெரிய தாமிர பாய்லர். சரியாக மூடாத அதன் குழாயிலிருந்து சன்னமான நூல் கோடுபோல ஒழுகிய தண்ணீர் ஓடையாகிச் சென்று சேர்ந்த இடத்தில் கருங்கல் ஜல்லிகள் பெரும் குவியலாகக் கிடந்தன. விளாம்பழ பருமன் உள்ள கற்கள்.

பந்தலுக்குள் எதிர் ஓரத்தில் சாலையை ஒட்டி ஒரு பெஞ்ச். அதில் நாலைந்து இளைஞர்கள் உட்கார்ந்திருந்தார்கள். சாலையில் போகிற வருகிறவர்களைக் கவனித்துக்கொண்டு தங்களுக்குள் ஏதோ பேசிச் சிரித்துக்கொண்டு இருந்தார்கள். சாவகாசமாகத்தான் இருந்தார்கள் என்றாலும், எந்த நேரமும் எழுந்து பாய்வதற்குத் தயாராக ஒரு ஆயத்த நிலை அவர்களின் உடம்புகளில் இருந்தது என்று சித்ராவுக்குத் தோன்றியது.

சுற்றுச் சுவரைத் தாண்டி உள்ளே நுழையும்போது தன்னை அந்த இளைஞர்கள் பார்த்த விதத்தில் தன் உடல் முழுவதும் கூசி அடங்கியதும், ‘நல்லவேளை, கனகாவையோ சின்னவனையோ கூட்டிக்கொண்டு வரவில்லை’ என்று ஆறுதல் கொண்டதும் இன்னொருமுறை ஞாபகம் வந்தது. இதுபோன்ற முரட்டுக் கூட்டம் வயதுக்கு வந்த பெண்குழந்தையையும், முகம் ஆற்றாத ஆண் குழந்தையையும் ஒரேவிதமாகத்தான் பாதிக்குமா என்று ஒரு கேள்வியும் உதித்தது.

இவளை நாற்காலியில் உட்காரவைத்துவிட்டு உள்ளே வராந்தாவில் உள்ள மேஜையருகே இருந்த, சீருடை அணிந்த பணியாளிடம் ஏதோ கேட்கப் போயிருந்த மாமாவுக்கு அவனிடம் இவ்வளவு நேரம் பேச என்ன இருக்கிறது என்று தன்னையே கேட்டுக்கொண்டாள். அனிச்சையாக மணிக்கட்டில் பார்வை படிந்தது. மாமா போய் நாலைந்து நிமிஷங்கள்தாம் ஆகிறது.

வீட்டினுள் இருப்பவர் தேசியக்கட்சி அரசியல்வாதியின் வலதுகரம். அவருடைய மனைவி வழி உறவினராம். ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் காரியங்களை நடத்தித் தரக்கூடிய வல்லமை உள்ளவர் என்று மாமா சொன்னார். போலீஸ்காரர்களை வழக்குப் பதிய வைக்கவும் இன்னும் முனைந்து தேட வைக்கவும் செய்வதற்கு அவருடைய சிபாரிசு கிடைக்க இவர் சிபாரிசு செய்வார் என்று சொல்லி அழைத்து வந்திருந்தார்.

...எங்கேதான் ஒளிந்துகொண்டிருக்கிறாய் மனுஷா? இப்படித் திடீரென்று காணாமல் போவதற்கா இருபது வருஷமாக நீ இழுத்த இழுப்புக்கெல்லாம் வந்து உன்னோடு வாழ்க்கை நடத்தினேன். ஒரு சொல் எதிர்த்துப் பேசியிருப்பேனா? ரிஷிபத்தினியாட்டம் உன் காலடியில் விழுந்து கிடந்தேனே. அதுக்கு இதுதான் சன்மானமா? என் வயசில் பாதி வயசுள்ள சின்னப் பையன்கள் விரசமாய்ப் பார்த்து மானசீகமாக என்னை சட்டையுரிக்கிற இடத்தில் வந்து காக்க வைத்துவிட்டாயே? நியாயமா இது?

சித்ராவின் கண்கள் கசிந்தன. முந்தானையை உயர்த்தி வழக்கம்போலத் துடைக்கப் போனவள் பெஞ்ச்சில் இருந்த இளைஞர்களை உத்தேசித்துக் கையை மறுபடி இறக்கிப் பழைய மாதிரி மடியில் வைத்துக்கொண்டாள். நீர் நிறைந்ததால் பார்வை மங்கிய விழிகள் தன்னியல்பாகச் சுழன்றபோது, திண்ணையின் கம்பி அழிகளுக்குப் பின்னால் கிடந்த இரும்புச் சாமான்கள் பார்வையில் பட்டன. உள்ளங்கையால் கண்களை அழுத்திப் பிழிந்துவிட்டு உற்றுப் பார்த்தவள் அதிர்ந்து போனாள்.

அத்தனையும் வீச்சரிவாள்கள்.

✠

ஆற்று மணல் பரப்பிய தரையில் பாதம் பதிந்து இருப்பது இதமாக இருந்தது. பயிற்சிக் களத்திலும், பால்பாண்டியின் குடிசைக்குள்ளும் தரைமுழுக்க ஆற்று மணல் பரப்பியிருந்தது. மணலில் கால்கள் புதைந்த கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்திருந்தேன். கட்டிலின் நார் நாளானதால் தொய்ந்திருந்தது. சற்றுக் கூன் போட்டுத்தான் உட்கார வேண்டிவந்தது.

என்னை வரவேற்று உட்காரச் சொல்லிவிட்டு இளைஞர்களின் பயிற்சியை மேற்பார்வை பார்க்கச் சென்றார் பால்பாண்டி.

ஒரு மணிநேரம் போலக் கடந்திருக்கும். காலையில் ஒன்பதரை மணி சுமாருக்கு வந்து சேர்ந்தபோது அங்குமிங்குமாகப் பயிற்சி

செய்துகொண்டிருந்த இளைஞர்கள் ஒவ்வொருவராக வெளியேறத் தொடங்கியிருந்தார்கள். புறப்படும்போது இவரைப் பார்த்து தலையை மட்டும் அசைத்துவிட்டுச் சென்றார்கள். ஒரே ஒரு பையன் மட்டும் 'ஆசானே' என்று வெறுமனே விளித்துவிட்டுப் போனான். கடைசிப் பையனும் கிளம்பிப் போனபிறகு வந்து நிதானமாகப் பேச அமர்ந்தார் பால்பாண்டி.

இன்னைக்கி வெள்ளிக் கிளமையில்லே. அதுனாலெதான் இம்புட்டு நேரம் ஆயிருச்சு. இங்குட்டெல்லாம் வெள்ளிக் கிளமைதான் வாராந்தர லீவு. மத்த நாள்லெ இன்னம் சீக்கிரமே கெளம்பிருவாங்ய.

என்றார். பிறகு தயங்கித் தயங்கி ஆரம்பித்து, தன் போக்கில் பேசிக்கொண்டிருந்தார்.

வெயில் நன்கு கனத்துவிட்டது. களத்தின் மணல்பரப்பைப் பார்க்கும் கண்கள் கூசின. இந்த ஊரின் உச்சிவெயில் மதுரைவெயில் மாதிரித் தகிக்கவில்லை. ஆனாலும், பால்பாண்டியின் பூர்விகக் கதையை அவரே சொல்லக் கேட்டபோது எனக்குள் வெம்மை சேர்ந்துகொண்டே போனது. யாருமே காரணமில்லாமல் ஏதேதோ நிகழ்ந்து முடிந்த மாதிரிப் பிரமை தட்டியது. மதியச் சாப்பாடு பற்றிய நினைவே இல்லாமல்தான் பேசிக்கொண்டிருந்தோம். தன் போக்கில் வளர்ந்து சென்ற பேச்சு ஓய்ந்து, தானாய்க் கவிந்த இடைவெளியை நிரப்பும் விதமாக பால்பாண்டி சொன்னார்.

போயிச் சாப்புட்டுட்டு வந்து பேசலாமில்லெ. நீங்க வந்ததுங்காட்டியும் நான் சமைக்கலே. இல்லாட்டிண்டா கைப் பக்குவம்தேன். இங்கே பக்கத்துலே ஒரு மெஸ்ஸு இருக்குது. வீட்டுச் சாப்பாடு மாதிரி இருக்கும். வகுத்தெக் கெடுக்காது.

வளாகத்தை விட்டு வெளியேறி நடக்கத் தொடங்கியதும் வெயிலின் உறைப்பு தெரிந்தது. அமைதியாக நடந்து போனோம். முதன்முதலாக இந்த இடத்துக்கு வந்தபோது, இப்போதுள்ள அளவு விட்டேற்றியாகத்தான் அவரது மனநிலை இருந்ததா, அல்லது எதையோ பறிகொடுத்து விட்ட ஏக்கம் இருந்ததா என்று பால்பாண்டியைக் கேட்க ஆசையாக இருந்தது. ஏனோ, அது உசிதமான கேள்வியில்லை என்றும் உடனடியாகத் தோன்றியது.

சுற்றிலும் தென்னந்தோப்புகள். கிட்டத்தட்டப் பத்துநிமிட நடைத் தொலைவுக்கு வீடுகளே கிடையாது. சுற்றுச்சுவருக்கு வெளியில் போகும் செம்மண் பாதை இடதுபுறம் சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்தில்

இருந்த சிவன் கோயிலில் சென்று முடிவதாகச் சொன்னார் பால்பாண்டி. பழைய காலக் கோயிலாம். கடைசிக்கட்டப் பாண்டிய ராஜாக்களில் கைநொடிந்த யாரோ கட்டிய சிறு கோயில் என்றார்.

தென்னைமரங்களின் உச்சிக்கு வெளியில் பிடிவாதமாகத் தலை உயர்த்தி நின்றது கோபுரம். அந்தப் பாதையில் எப்போதாவது ஓரிரு சைக்கிள்கள் மட்டும் போய் வருகின்றன. மற்றபடி ஆள் நடமாட்டமே கிடையாது. மிகுந்த மனதைரியம் உள்ள ஆள் என்றால்தான் இந்த இடத்தில் தனியாக வசிக்க முடியும்.

நாகர்கோயிலிலிருந்து சுமார் இருபது நிமிடங்கள் நகரப்பேருந்தில் பயணம் செய்தால் பாம்பன்விளை வருகிறது. அங்கே இறங்கி, இடதுபுறம் நீண்டு கிடக்கும் வறண்ட கால்வாயின் இருபுறமும் உள்ள வண்டிப் பாதையையொத்த கரையில் நடக்க வேண்டும். சுமார் இருபது நிமிடம் நடந்தபிறகு வலதுபுறம் திரும்பினால் பால்பாண்டி நடத்தும் சிலம்பக்கூடம் வருகிறது.

ஆசாரிப்பள்ளம் ரோட்டில், காலையில் நான் வந்திறங்கிய பஸ் நிறுத்தத்தின் அருகில் இருந்தது அந்த மெஸ். சாப்பாடு ருசியாக இருந்தது. நடத்துபவர் கேரளாவைச் சேர்ந்தவராம். சமையலும் கேரளச் சமையல்தான். செந்நிறப் பருவட்டு அரிசிச் சோறு. பதார்த்தங்களில் தேங்காயெண்ணெயின் மணம் தூக்கலாக இருந்தது.

திரும்பி வந்ததும், சற்று ஓய்வெடுக்கச் சொல்லி, என்னை வற்புறுத்தினார். கட்டிலில் படுக்கச் சொல்லிவிட்டு, அவர் மட்டும் எங்கேயோ வெளியில் போனார். நான் அசட்டு வெளிச்சத்தில் சூழ்ந்த அரைக்கனவுகளில் மூழ்கி உறக்கத்தில் அமிழ்ந்து கிடந்தேன்... விழிப்புத் தட்டியபோது, பயிற்சிக்களத்தில் ஓசைகள் கேட்டன.

எழுந்து வெளியில் வந்தேன். தென்னங் கிடுகால் மூடிவைத்திருந்த தகர ட்ரம்மிலிருந்து தண்ணீரை மொண்டு முகம் கழுவினேன். வெயில் தாழ்ந்திருந்தது. ஏழெட்டு இளைஞர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தார்கள். கையில் ஆளுயர சிலம்பக் கம்புடன் அவர்களுக்கூடே திரிந்தும், செய்து காட்டியும் மும்முரமாக இருந்தார் பால்பாண்டி.

கயிற்றுக் கட்டிலை வெளியில் எடுத்துக் காலையில் நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது கிடந்த அதே இடத்தில் போட்டுக்கொண்டு அமர்ந்தேன். பயிற்சி நடப்பதைப் பார்க்கலானேன். அந்த நேரம் முழுவதும் சிந்தனைகள் எதுவுமில்லாமல் வெறுமனே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தேன் என்பது பால்பாண்டி எனக்கெதிரில் இருந்த

மடக்கு நாற்காலியில் இரண்டு கண்ணாடித் தம்ளர்களுடன் வந்து உட்கார்ந்த பிறகுதான் புலனானது.

வந்திருந்தவர்களெல்லாம் வெளியேறி, நானும் பால்பாண்டியும் மட்டும் மிஞ்சியிருக்கிறோம். சுமார் ஐம்பதடிக்கு ஐம்பதடி விஸ்தீரணம் உள்ள அந்த பயிற்சிக்களம் பிரம்மாண்டமான மைதானம்போலத் தோற்றம் கொண்டது. இருள் கவிந்தபிறகு இன்னமும் அமானுஷ்யமாக மாறிவிடக்கூடும். இடதுமூலையில் நாங்கள் அமர்ந்திருந்த குடிலிலிருந்து பார்க்கும்போது களத்தின் சுற்றுச்சுவர்க் கதவு வெகுதூரத்தில் இருக்கிற மாதிரித் தென்பட்டது. பால்பாண்டி தானே போட்டு எடுத்துவந்த கட்டஞ்சாயா கையில் பிடித்த கண்ணாடித் தம்ளரில் தளும்பியது. ஆவியோடு அது வெளியேற்றிய மணம் எனக்குப் பிடித்திருந்தது.

பால்பாண்டியின் பக்கம் திரும்பினேன். பருத்த முன்னங்கைகள். பனியனுக்கு இருபுறமும் வெளியில் பிதுங்கிய தோள்த்தசைகளும் புஜங்களும் வெறும் பார்வைக்கே இறுக்கமாக இருந்தன. வஸ்தாது போன்ற உடல் தோற்றத்துக்குச் சற்றும் பொருத்தமின்றி சாந்தம் தவழ்ந்த முகத்தில் மண்டிய தாடியும் மீசையும். வயதுக்குப் பொருத்தமின்றி வெளேரென்ற வெண்படலம் கொண்ட கண்களும், பேசும்போது சிலசமயம் குழந்தைகளுக்குப்போல நாக்குத் தட்டுவதும், அவருக்குள் பிடிவாதமாக உட்கார்ந்திருந்த சிறுவனுக்குப் பொருத்தமின்றி அவர் உடுத்தியிருந்த காவிநிறச் சாய வேட்டியும், வெள்ளை நிற முண்டா பனியனும். அவர் சொன்ன பூர்விகக் கதைக்குப் பொருத்தமின்றி தற்போதைய அவரது வாழ்க்கை.

எ ன்னா, அமைதியாயிட்டீங்க? சாயா நல்லாயிருக்கா?

என்றார் பால்பாண்டி.

ரொம்ப நல்லாயிருக்கு... அது சரி, அப்புறம் கரட்டுப்பட்டி போனீங்களா?

அங்கெ எதுக்காண்டிப் போறது?

அங்கெதானே ஒங்க அம்மாவும் தங்கச்சியும் இருந்தாங்க? அவங்க அப்புறம் என்ன ஆனாங்க?

அவங்களுக்கென்ன. நல்லாத்தான் இருப்பாங்க. ஆகுறதென்னங்க ஆகுறது. மனுசனாப் பொறந்த எல்லாருக்கும் ஆகுறது ஒண்ணுதான். ஒரு கொட்டாயிலெ எல்லாரும் ஒரே சினிமாதானே பாக்குறோம். எடெவேளெ விடும்போது நீங்க கலர் சாப்புடுவீங்க இன்னொரு ஆளு

சீரெட் பிடிப்பாரு மூணாவது ஆளு கக்கூஸைப் பாத்து ஓடுவாரு. திரும்ப வந்தா ஒரே படத்தைப் பாக்குறதுதானே.

பால்பாண்டி சொன்ன உதாரணம் பொருத்தமானதாகப் படவில்லை எனக்கு. என்றாலும், வீட்டைவிட்டு வெளியேறும் அளவுக்கு அதிலும் அவருடைய வார்த்தைகளின் பிரகாரம், அவ்வளவு அன்பு காட்டிய தாயையும் தங்கையையும் பிரிந்து வெளியேறுகிற அளவுக்கு என்ன நடந்தது என்று தெரிந்துகொள்ளாமல் அவருடைய கதை பூர்த்தியாகாது என்று தோன்றியது.

அப்ப அந்தத் தகராறோடெ ஊரெவிட்டு வெளியேறினதுதானா?

இல்லெயே. வெட்டு வுளுந்தது புதன் கிளமெக் காலையிலெ. வியாளன் வெள்ளி ரெண்டு நாள் போக சனிக்கிளமெ இருட்டின பெறகு வீட்டுக்குப் போனனே.

ஓ.

அன்னைக்கி வெளியேறுன கால்தானே இம்புட்டுத் தூரம் வந்து ஓய்ஞ்சிருக்கு.

ம்.

என்னா, அந்த முடிவெடுத்த அன்னைக்கி மனசு முளுக்க ஆத்தரம் நெரம்பிக் கெடந்துச்சு. இப்போ ஆத்தரம் முளுசா வடிஞ்சு போச்சு. மனசு சாந்தமா இருக்கு. போய்ப் பாக்குறதும் பாக்காததும் ரெண்டு வேறவேற விசயங்க கெடையாது ண்டு இருக்கு. நாம போயி என்னா செய்துறப் போறோம்? நெளிஞ்சதையெல்லாம் நிமித்துற வல்லமை இருக்கா நமக்கு?

நான் வந்தபோது பால்பாண்டி பையன்களுக்குப் பயிற்சி அளித்துக் கொண்டிருந்தார். சிலம்பக்கோல் அதன் நீளத்தையும் பருமனையும் இழந்து கூறைவிசிறியின் சிறகுபோல வெகுவேகமாகச் சுழன்றதை ஆச்சரியமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தேன் கொஞ்சநேரம். ஆனால் பால்பாண்டிக்கு சிலம்பம் கைவந்த அளவுக்குப் பேச்சில் தெளிவு கூடவில்லை என்று தோன்றியது.

தத்துவார்த்தமாகப் பேச வேண்டும் என்ற ஆசை மட்டும் நெஞ்சு முட்ட இருக்கிறது என்றும் தோன்றியது. மன்னாதியின் பேச்சில் இருந்த நிதானமும் பரிவும் ஞாபகம் வந்தன. அது சரி, ஒரே கொட்டாயில் சினிமாப் பார்க்கும் எல்லாரும் ஒரே மனிதராகிவிடுவார்களா என்று நானே சமாதானப் படுத்திக்கொண்டேன். நெஞ்சிலிருந்து பீறிட்டுக்

கிளம்பிய சிரிப்பைச் சிரமப்பட்டு அடக்கியும் கொண்டேன்.

சனிக்கிளமெ வீட்டுக்குப் போனப்ப என்னா நடந்துச்சுண்டு கேக்கலியே?

சொல்லுங்க.

வாசத் திருணெயிலெ யாரு ஒக்காந்துருந்தாகண்றீங்க?

வாசல் மூங்கில் படலைக் கொஞ்சநேரம் வெறித்துப் பார்த்தார் பால்பாண்டி. அரசிலையால் மூடிவைத்திருந்த எவர்சில்வர் செம்பிலிருந்த தண்ணீர் முழுவதையும் ஒரே மூச்சில் குடித்துக் காலி செய்தார். தொண்டையில் நீர் இறங்கும் சப்தம், மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு ஒருநடை போய்விட்டு வந்த பாண்டியராஜா கோயிலில் அலகு பிரியாமல் களகளத்த புறாக்களின் குரலை நினைவூட்டியது.

ஒங்களாலே ஊகம் பண்ணவே முடியாது. அந்தப் பய அதான், சேர்மக்கனி ஒக்காந்திருந்தான்...

இத்தனை வருடம் கழித்தும் அந்தப் பெயரை உச்சரிக்கும்போது பால்பாண்டியின் முகத்தில் ஒருவிதமான எதிர்மறை உணர்வு ஒளிர்ந்து விலகியதைக் கவனித்தேன். வெறுப்பா, அருவருப்பா, ஆதங்கமா, கோபமா என்று நிர்ணயிக்க அவகாசமில்லாத அளவு மின்னல்போலக் கீறி மறைந்தது அது.

...நான் வாசல் படலைத் திறக்குறேன், அவன் எந்திரிச்சு நிண்டான். ‘வாங்கண்ணே’ண்டான்...

தலையைக் கவிழ்ந்துகொண்டார் பால்பாண்டி. மாறாத சித்திரமாக மனத்துக்குள் உட்கார்ந்திருக்கும் ஒரு சம்பவத்துக்கு இப்போது, இன்றுதான் அறிமுகமான அந்நியனிடம், மன்னிப்புக்கேட்பதுபோலக் கவிழ்ந்திருந்தது தலை. முழுக்க மண்டியிருந்த நரைமுடிக் கூட்டத்தில் அசந்தர்ப்பமாக ஓரிரு கறுப்பு முடிகள் தெளித்துக் கிடந்தன.

...அவன் சொல்லிக்கிட்டிருக்கையிலெயே, எனக்கு ஆத்தரம் தலைக்கேறிச்சு, யார் வீட்டுத் திருணெயிலே ஒக்காந்துக்கிட்டு யாரெ யாரு வாங்கண்றது...? மூஞ்சியிலெ அடிச்ச மாதிரிப் பதில் சொல்ல வாயெடுக்குறேன், வீட்டுக்குள்ளெருந்து எங்காத்தா கொரல் வெளியே வருது. ‘செத்துப் போன நாயி எங்கிட்டு வந்துருக்குண்டு கேள்றா. வந்த வளியே போகச் சொல்லு அந்த நாயெ. நம்மளெ நம்பி ரெண்டு பொட்டச்சிக இருக்காகளேண்ற பொறுப்பு இல்லாத நாயி. மானங்கெட்ட நாயி, எந்த மொகரெயோடெ திரும்பி வந்துருக்குண்டு

கேள்றா...'

பால்பாண்டிக்கு மேல்மூச்சு வாங்கியது. கடந்த பல வருடங்களில் இதையெல்லாம் யாரிடமும் கூறியிருக்கவே மாட்டாரோ என்னவோ. ஆனாலும், மௌனமாக உள்ளே கிடந்த சித்திரங்களுக்கு, வார்த்தையாக வெளியேறும்போது நிறமும் அழுத்தமும் கூடிவிட்டது போல. சுமை தாங்க முடியாமல் சிரமப்படுகிறார் என்று தோன்றியது.

...மூஞ்சியெப்பாத்து ரெண்டு வார்த்தெ பேசுனா சமாதானமாயிரும்ண்டு ஒரு எட்டு முன்னாடி வச்சேன். அது இன்னம் ஆங்காரமாக் கத்துச்சு, 'ஏளா பூங்கா, அந்த வெளக்கமாத்த எடுறீ. எலே, வீட்டுக்குள்ளாறெ மொளைஞ்சா அந்த நாயி காலெ வெட்டிப்புருவண்டு சொல்றா. இன்னமெ அந்த நாயெ உள்ளே சேக்க மாட்டன். எந்தச் சிறுக்கிக்காக அருவாளெத் தூக்குச்சோ அங்கிணெயே போயி மோளச் சொல்லு அந்த நாயெ...' அது இதுண்டு ரெம்பக் கேவலமாப் பேசுது. பூங்காவனமாவது எட்டிப் பாக்கும்னு நெனச்சேன். அது வெளியவே வல்லே.

ஆச்சரியமா இருக்கே. அவ்வளவு பிரியமா இருந்தவுங்க எப்பிடி இந்த மாதிரிப் பாராமுகமானாங்க?

இதுக்கெல்லாம் காரணம் தேடக் கூடாதுங்க. நிலக்கரியா இருக்கும்போது லேசா அடுப்பெரிச்சுர்றோம். அதுவே வைரமாகும்போது, நெருப்புப் படாமெப் பாதுகாக்குறோமா இல்லியா? ரெம்ப நாள் மனசுக்குள்ளாறெ பொதைஞ்சு கிடக்குற அன்பும் அப்பிடித்தாங்க வெறுப்பாகவும் வைராக்கியமாகவும் மாறிருது...

தான் சந்திக்க நேர்ந்த யாரையோ நகலெடுத்த மாதிரிப் பேச முயல்கிறார் பால்பாண்டி என்று தோன்றியது. இதுவரை சந்தித்தவர்களிடம் இல்லாத ஒரு கனத்த தன்மை இவரிடம் இருக்கிறது என்றும் பட்டது. முக்திக்கான பாதை தேடி வந்த தன்னை, ஆயுதங்கள் வேண்டாம் என்று வெறுத்து வந்த தன்னை, மறுபடி ஆயுதங்களின் மத்தியில் உட்கார வைத்துவிட்ட பெரியவரின் மீதான ஆதங்கம்தான் காரணமோ...? மேற்கொண்டு யோசிக்க விடாதபடி பால்பாண்டி பேசினார்.

...அன்பும் விரோதமும் ஒண்ணுக்கொண்ணு எதிரானது. இது இந்தக் கோடீண்டா அது அந்தக் கோடிண்ற மாதிரி நாமளா நெனைச்சுக்கிர்றோம். அது அப்பிடி இல்லேங்க. ரெண்டு முனையையும் கோத்த வளையம் மாதிரி. அதிகபச்ச அன்புக்கு அடுத்த ஸ்டெப்பு அதிகபச்ச குரோதம்தாங்க. அதிலயும் 'எனக்கு ஒன்னெப்

புடிக்கலெடா'ண்டு வர்ற ஆத்தரத்த விட, 'ஒன்னெ எனக்கு எம்புட்டுப் புடிச்சிருக்கு. அது புரியாம நடந்துக்கிட்டியேடா'ண்ற ஆத்தரத்துக்கு வீரியம் அதிகம் பாத்துக்கங்க.

இதுவரை பேசியதற்கெல்லாம் ஈடுகட்டி விடுகிறமாதிரி ஒரு விஷயம் கூறிவிட்டார் என்று பட்டது. தொடர்ந்து பேசிக்கொண்டே போகும்பட்சத்தில், பால்பாண்டி மற்றவர்கள் அளவுக்கே பிரமாதமாகவும் அர்த்தக்கேடு இல்லாமலும் பேசுவதற்கான உத்தரவாதமும் தென்பட்டது. இப்படி மனம் சமாதானம் கொண்ட மாத்திரத்தில் மன்னாதியின் நினைவு வந்தது. அதிலும் அவர் சொன்ன மலைக் குரங்கு உதாரணம்.

தூக்கிவாரிப்போட்டது எனக்கு. என்னென்னவோ யோசிக்கிறேனே, அவருக்கும் இவருக்கும் உள்ள வித்தியாசம் இதுதான்...பால்பாண்டிக்குள் பிராயம் முற்றாமல் இருந்து கொண்டிருக்கும் சிறுவன்தான் தனது அனுபவங்களை முற்றிய மொழியில் சொல்லிக்கொண்டிருக்கிறான். மன்னாதிக்குள் இருக்கிறவன் முற்றிய சிறுவன்... அதுதான்...

பால்பாண்டி இத்தனை வருடங்கள் மலையாள வாசனையுடன் வாழ்ந்தும் அவரிடம் இருந்த மதுரைத் தமிழ் கொஞ்சமும் குலையாமல் இருக்கிறதே. வெளியில் எல்லாம் அதனதன் போக்கில் வேகம் கொண்டு விரையும்போது, உள்ளுக்குள்ளே எதுவோ ஒன்றுமட்டும் பிடிவாதமாக, தான் நிலைகொண்ட இடம் விட்டு நகர மறுக்கிறதோ என்னவோ.

திரும்ப ஊருக்குப் போனனாண்டு கேட்டீகளே? இங்கெ வந்து ஒக்காந்து பத்துப் பதினஞ்சு வருசம் களிச்சு ஒருநாள் நமெச்சலெடுத்திருச்சு. ஒண்ணுமில்லெ, இங்கெ பக்கத்திலெ ஒரு காவா ஓடுதுல்லெ, ரெண்டு முளுக்குப் போட்டு எந்திரிக்கிறேன், எதுத்தாப்புலெ தண்ணிப் பரப்புலெ எங்காத்தா உருவம் நிக்கிது. நம்மல்லாம் நிண்டோம்னா தரையிலெ நிப்போம். எம்புட்டு ஆளம் இருக்கோ அம்புட்டுக்கு நம்ம ஒடம்பு மறைஞ்சிருக்குமா இல்லையா?

ஆமா.

எங்க ஆத்தா தண்ணிமேல தரையிலே நிக்கிற மாதிரி நிக்கிது. அது வெறும் பெரமையில்லேண்டே நெனைச்சுக்கிட்டேன். அதெத் தொடணும்ண்டு கொஞ்சம் முன்னே நகந்து கையை ஆட்டுனா, காத்துல கை அந்த உருவத்தை ரெண்டா வெட்டிக்கிட்டுப் போய் வருது. கிளிஞ்ச தண்ணி சேந்துக்குர்ற மாதிரி உருவம் மறுபடி முளுசாயிருது.

கொஞ்சநேரம் வெளாட்டுக் காட்டீட்டு, வந்த மாதிரியே கலைஞ்சும் போயிருச்சு.

ம்.

தொவட்டிக்கிட்டுத் திரும்பும்போது பிடிபட்டுருச்சு. தாயார்ண்ற ஒறவு அப்பிடியாக்கொத்தது. பட்டணத்தடிகளுக்கு அவுக ஆத்தா தவறுனது உள்மனசுக்குள்ளாறெ பிடிபட்டுச்சால்லியா? அந்த மாதிரி மகான்களுக்கு மட்டுமில்லெ, நம்மளெ மாதிரி சாமானியங்களுக்கும் அது தட்டுப்படத்தான் செய்யும்...

பால்பாண்டி தானாகச் சிரித்துக் கொண்டார்.

...என்னா ஒண்ணு, அடிகளுக்கு ஒடனெக்கொடனே கெடைச்சிருச்சு. நமக்கு அந்த உறுத்தல் வந்து சேர்றதுக்கு அஞ்சாறு வருசம் பிந்திருச்சு.

மீண்டும் சிரித்தார். பால்பாண்டி உடல் அதிராமல் சிரிக்கிறார். அளவுக்குமீறிச் சிரித்துவிடக் கூடாது என்பதில் மிகக் கவனமாக இருப்பவர் மாதிரி.

என்ன சொல்றீங்க?

அன்னைக்கிச் சாயங்காலமே பஸ்ஸேறிட்டென்ல. மருதெ போயி பஸ்ஸு மாறி கரட்டுப்பட்டி போயிச் சேரும்போது நல்லா விடிஞ்சுருச்சு. சூரியன் தென்னங்கன்னு ஒசரத்துக்கு வந்துருச்சு. எங்க வீடு இருந்த எடத்துலெ இடி விளுந்தது கணக்காக் குட்டிச் செவுருக நிக்கிது. அய்யரு வீடு பூட்டிக் கெடக்கு. எங்க வீட்டுக்குள்ளாறெ போனேன். எங்காத்தா வளக்கமாப் படுத்துக் கெடக்கிற ஓரத்தைப் பாத்தேன். பொதரு கணக்காப் புல்லு மொளச்சுக் கெடக்கு.

அடடே...

இத்தனெ வருசம் களிச்சு நீங்க எதுக்காக இப்பிடி வருத்தப்படுறீக? எனக்கு அதையெல்லாம் நேர்லெ பாத்தப்பவே வருத்தமா ஒண்ணும் இல்லே. என்னா, மனசு ஒரு மாதிரி வெறுமையா இருந்துச்சு. அக்கம் பக்கத்திலெயும் விசாரிக்கப் பிடிக்கலே. நானும் எளந்தாரியா இருந்தப்ப ஊரெ விட்டுப் போனவன், இப்ப அரெக் கெளவனா வந்துருக்கனா, சட்டுண்டு பாத்தா அடையாளம் தெரியாது. சரி, திரும்பீறலாம்ண்டு பஸ்ஸு நிக்கிற எடத்துக்கு வந்தேன். சோளவந்தான் பஸ்ஸுக்குக் காத்துருந்தேன். பஸ்ஸு வந்து நின்னது. ஒரு காலெத் தூக்கிப் படியிலெ வச்சீட்டன். என்னமோ, ஒரு தடெ, பின்வாங்குனேன். கண்டக்டரு சத்தம்

போடுறாரு. ‘என்னாய்யா நாயி மோள்றதுக்கு நிக்கிற மாதிரி ஒத்தக் காலெத் தூக்கீட்டு நிண்டா எப்பிடி. ஒண்ணு ஏறு, இல்லேண்டா எறங்கு.’

அந்த உதாரணம் பால்பாண்டியின் பேச்சில் கூடி வந்த மர்மத்தைச் சற்று இளக்கிய மாதிரி உணர்ந்தேன். ஏனோ எனக்குள் ஒரு பெருமூச்சு ஊறியது.

வாடிப்பட்டி வரைக்கி ஆத்துக் கரையோரமா நடந்து போகலாம்ண்டு தோணுச்சு. வேற காந்தம் இளுத்திருக்கு ண்டு அங்கெ போனதுக்கப்பறம்தானே தெரியிது...?

என்னைக் கூர்ந்து பார்த்தார். அக்கறையாகத்தான் கேட்டுக்கொண்டிருக்கிறேன் என்ற நம்பிக்கையை என் முகம் தந்திருக்க வேண்டும். தொடர்ந்தார்.

...சந்தைக்கி உள்ளாறே போயி மெயின் ரோட்டுலெ பாதை ஏறுற எடத்திலெ ஒரு டீக்கடெ. காலையிலெயிருந்து சாப்புடலேண்றது அந்தக் கடையெப் பாத்ததும் யாவுகம் வந்துருச்சு. கல்லாவுலெ இருந்தவருக்கு வலது கை மொண்ணெ. நொட்டாங்கையாலெ காசு வாங்கிப் போட்டாரு. அவருக்குப் பின்னாடி ஒரு சாக்குத் திரெ இருந்துச்சு. அதெ வெலக்கிக்கிட்டு ஒரு பொம்பளை வெளியெ வந்தா. ‘என்னாங்க’ ண்டு சத்தமாச் பேசிக்கிட்டு. கடெக்காரரு பொஞ்சாதிபோல ண்டு நெனச்சுக்கிட்டு நகந்தேன்.

ம்.

என்னமோ தெரியலே. அந்தப் பொம்பளையெ இன்னொரு தபா பாக்கணும்போல இருந்துச்சு. பாத்தேன். சட்டுண்டு தொலங்கீருச்சு. ஒடம்பு ஒரு ச்சணம் ஒதறிப் போட்டது. அவளெ நாம் பாத்துத் தெகெச்சு நிக்கறதெ புருசம் பொஞ்சாதி ரெண்டுபேரும் கண்டுட்டாக. அவளும் என்னெக் குறுகுறுண்டு பாக்குறா. நெதானம் பிடிபடலே. ஆத்த மாட்டாமெ, நான் ‘ஏம்லா பூங்கா’ண்டேன். அந்தப் பிள்ளெக்கித் தூக்கிவாரிப் போட்டுருச்சு. ஓடியாந்து எங்கையப் பிடிச்சுக்கிட்டு அளுகுது. புருசனெப் பாத்து, ‘எங்கண்ணெங்க, எங்கண்ணென் வந்துருக்குங்க’ண்டு பொலம்புது. எங்காத்தா தவறிப்போயி ஆறு வருசம் ஆச்சாம். வவுத்த வலி பொறுக்காம நாண்டுக்கிட்டுத்தான் செத்துப்போச்சாம். பாவம்...

பால்பாண்டி இடம் பெயர்ந்துவிட்டார் என்று தோன்றியது. எங்கோ வெகுதூரத்தில் பின்தங்கிக் கிடக்கும் ஒரு நாளில் சென்று அமர்ந்து

விட்டார். அந்த நாளில் இருந்துகொண்டு, இங்கே எதிரில் உட்கார்ந்திருப்பவனுடன் பேசுகிற மாதிரித் தொலைவும் ஆழமும் ஏறிவிட்ட குரலில் தொடர்ந்து பேசினார்.

...ஒரு வேளை கை நனைச்சிட்டுக் கௌம்பீட்டன். இந்தப் பக்கமெல்லாம் சாயவேட்டி கட்டுறதுதான் வளக்கமா? அவுக என் வேட்டியெப் பாத்துட்டு நான் சாமியாராயிட்டேண்டு நெனைச்சுக்கிட்டாக. பூங்காவனம் அது மகெங்கிட்டெச் சொல்லுது, 'மாமனெ விளுந்து கும்புட்டுக்கடா. துன்னூறு வாங்கிப் பூசு.' நான் சொன்னேன், 'ஏலா, நாஞ் சாமியாருமில்லெ ஒரு மண்ணுமில்லெ.' அதுக்கு அது சொல்லுது, 'பெறகென்ன, இங்கிணக்குள்றயே இருந்துக்கிற வேண்டியதுதானே. நாங்க எதுனாச்சும் தொளில் வச்சுத் தர்றோம்...' மச்சானும் அதையேதான் சொன்னாரு. 'அதெல்லாம் சரி வராது'ண்டு கௌம்பீட்டேன். சொன்னா நம்ப மாட்டீக, பூங்காவெப் பாத்த அந்தச் சணத்திலெ ஒரு மின்னல் மாதிரி ஒடம்புக்குள்ளெ ஓடுச்சா. மின்னல் மாதிரியே அது மறைஞ்சும் போச்சு. நமக்கு நல்லாத் தெரிஞ்சவங்களெ ரெம்ப வருசம் களிச்சுப் பாத்தா எப்பிடி இருக்கும்? அம்புட்டுத்தேன். அதெத் தாண்டி ஒண்ணுமில்லே...

வெளியில் ஒரு பாரவண்டி போகிறது. சரிவிலிருந்து மேலேறும் காளைகளைத் தார்க்குச்சியால் குத்தியும் குரலுயர்த்திக் கத்தியும் நகர்த்திக்கொண்டு போகிற வண்டிக்காரனை இருவரும் அமைதியாகப் பார்த்துக்கொண்டிருந்தோம். வண்டி பார்வையிலிருந்து மறைந்த பிறகு நான் கேட்டேன்.

ஒருவேளை அவுங்களோட தங்கியிருந்தீங்கன்னா நீங்களும் குடும்பம் குட்டீன்னு ஆயிருப்பீங்களோ?

அதெல்லாம் நம்ம மனசிலேயிருந்து விட்டுப்போயி ரெம்ப வருசமாச்சுங்க. தவுர, நான் அவுகளோட இருக்கிறதெல்லாம் சரிப்பட்டு வந்திருக்காது. ஒரு நா இல்லேண்டா ஒரு நா பளைய விசயமெல்லாம் வரத்தானே செய்யும், நம்ம மேலே பகெ உண்டாகத்தான் செய்யும்.

ஒங்க தங்கச்சிக்கி ஒங்ககிட்டெப் பகெ வர்ற மாதிரி ஒண்ணும் நடந்துறலியே?

அதென்னா அப்பிடிச் சொல்லிட்டீக? மறந்துட்டீகளா, அவ புருசன் மொண்ணைக் கையனானதுக்கே நான்தானே காரணம்?

நான் அதிர்ந்தேன்.

என்ன சொல்றீங்க?

பின்னே? நாம் போட்ட வெட்டுலெ கை போனவனுக்குத்தானே எந்
தங்கச்சியெக் கட்டிக் குடுத்திருக்கு. அட, ஒங்ககிட்டெ அந்த விசயத்தெச்
சொல்லாமெ விட்டுட்டனோ...?

இந்தச் செய்தியை எந்த இடத்தில் நின்று வாங்கிக்கொள்வது என்று
குழப்பமாக இருந்தது. இதுவரை சொன்ன கதையில் இருந்த சமச்சீரான
ஏதோவொன்று இந்த இடத்தில் செமர்த்தியாகக் குலைந்துவிட்ட
மாதிரிப் பட்டது.

...கை வெட்டானதுக்கப்பறம் ரெண்டு ஊர்ப் பெரியவுகளும்
ஒக்காந்து பேசுனாகளாம். 'போலீசுக்குப் போறது நம்ம ரெண்டு
ஊருக்கும் அசிங்கம். அதெவிட நம்ம சாதிக்கு அசிங்கம். வெட்டுனவன்
தலெ மறெவாப் போயிட்டான். இருக்குறவுகதான் பரிகாரம்
செய்யணும்'ண்டெல்லாம் பேசியிருக்காக. பஞ்சாயத்து மாதிரித்தான்.
எங்காத்தா நிர்க்கதியா நிக்கிற பொம்பளெ, என்னாத்தெச் சொல்லும்?
'பெரியவுக பாத்து எப்பிடிச் சொன்னாலும் கேட்டுக்கிர்றமுங்க'ண்டு
சொல்லீருச்சாம்.

ம்.

இவுக பொம்பளையாளுகளெத் தனியாக் கொண்டுபோயி
நிறுத்தீறக் கூடாதுண்டு சேம்மக்கனிதேன் கூடப் போயிருக்கான்.
கீநாச்சிகொளத்துக்காரவுகளுஞ் சரி, எங்க வீட்டுப் பொம்பளைகளும்
சரி, இவனெக் கண்டுக்கிறலயாம். அவுக ஊருப் பெரியவுக 'ஒரு
கையில்லாதவனெ எவ கட்டுவா ரோசிச்சுப் பாரு'ண்டு
கேக்கும்போதுதான் இந்த பய மொதோத் தடவையா
வாயெவிட்டுருக்கான். 'அதெல்லாம் பெரச்சனையில்லேங்க, எந்
தங்கச்சி கட்டிக்கிருவா' ண்டானாம்.

ஒங்க அம்மாவுக்கு அந்த சேர்மக்கனியெப் பிடிக்காதுல்ல?

அதெயேங் கேக்குறீக? இந்தக் களுதெ பூங்கா அவனெப்
பொளுதன்னைக்கும் 'அண்ணன் அண்ணன்'ண்டுதானெ
சொல்லிக்கிட்டு அலெயும்? வெட்டு விளுந்த மக்யாநா நா ஓடீட்டனா,
இது அவனெப் போயிப் பாத்துருக்கு. 'வெட்டு வாங்குனவரு மேலெ ஒரு
குத்தமுமில்லே. அவரு வெலக்கிவிட வந்தவருதானே,' அது இதுண்டு
பேசியிருக்கு. அந்தப் பய இது மனசெக் கப்புண்டு பிடிச்சுக்கிட்டான்.
பாருங்களேன். ஒரு வீட்டுலெ பெறந்து ஒண்ணா வளந்திருக்கோம்.
எனக்கு அது மனசெ இப்பிடிப் புரிஞ்சுக்கிறத் தெரியாது. ஆக, ஒரு
வகுத்துலெ பொறக்குறதாலே மட்டும் ஒடம்பெறப்பு ஆயிராது போல.

இப்பொப் பாருங்க, இதுவரைக்கும் யார்ட்டயும் சொல்லாததெயெல்லாம் ஒங்ககிட்ட இப்பச் சொல்லிக்கிட்டிருக்கேனில்லெ? நீங்க வாசப் படலெத் தொறந்து உள்ளே வர்றப்பவே என் வாள்க்கைக்குள்ளாறயும் வந்துட்டீக ண்டு தோணுச்சு. இதெல்லாம் ஒரு பார்வையிலெ பிடிபட்டுரும் பாத்துக்கங்க.

நீங்க சொல்லிட்டிருந்ததுலேர்ந்து தள்ளிப் போயிட்டீங்க.

அவ்வளவுதேன். அதுலெ என்னா பாக்கியிருக்கு? பஞ்சாயத்துப் பேச வந்தவுக சம்பந்தகாரவுக ஆயிட்டாக. சேர்மக்கனி நல்லாப் படிக்கிற பையன். ரயில்வேலெ வேலெ கெடச்சது. எங்க ஆத்தாளெ அவன்தான் கடைசிகாலத்துலெ பாத்துக்கிட்டானாம். அவுக ஆத்தாளும் எங்க ஆத்தாளும் திருச்சியிலெ ஒரே வீட்டுலெ இருந்துருக்காக. எங்க ஆத்தாளுக்குக் கொள்ளிபோட்டதும் அவன்தானாம். இப்பச் சொல்லுங்க, வவுத்துலெ பெறக்குறத வச்சா தாய் மகண்றதெல்லாம்...?

திடீரென்று பால்பாண்டியின் கண்களில் ஒரு சோர்வு இறங்கிவிட்ட மாதிரித் தோன்றியது. சில கணங்கள்தாம். நான் முன்னால் உட்கார்ந்திருந்ததால் என்று நினைக்கிறேன், உடனடியாக சுதாரித்துக்கொண்டார்.

...வாக்கப்பட்டு வந்த காலத்துலெ எங்காத்தா ஒரு நா எங்க அய்யாகிட்ட மல்லுக்கட்டுச்சாம். 'ஒண்ணு நான் இருக்கணும், இல்லாட்டி அவ இருக்கணும்'ண்டு.

ம்.

எங்கய்யா சொன்னாராம், 'தீத்து விடுறது ண்டா ஒன்னயத்தேன் விடணும். அவ ஒனக்கு முன்னாடியே வந்தவ. அவ அருமெ ஒனக்கு இப்பத் தெரியாது. ஒருநா இல்லாட்டி ஒருநாப் புரியும். அவ என்னா ஒனக்கும் எனக்கும் நடுவுலெயா வந்து படுத்துக்கிர்றா. இன்னமே அவளெப் பத்திப் பேச்செடுக்காதே'ண்டு. எங்கய்யா எளவுக்கு அவரு சின்னாத்தா மக ஒருத்தி வந்துருந்தா. கருமாதிக்கு முந்தின நா அவகிட்டெ எங்காத்தா சொல்லிப் பொலம்புனப்ப எங் காதுலயும் விளுந்தது...

நான் மௌனமாக இருந்தேன். வெகுநேரம் ஒரே நிலையில் உட்கார்ந்திருந்ததில் கால் லேசாக மரத்துவிட்டிருந்தது. கடுமையாக இல்லை என்றாலும், பின்மதிய வெய்யிலின் கனம் நன்கு இளகிவிட்டாலும். ஒருவித இறுக்கம் இன்னும் இருந்ததன் காரணமாகச் சற்று வியர்த்திருந்தது. பசியின் ஆரம்பச் சலனங்கள் வயிற்றில்

உதித்தன.

வேறு ஒரு இடத்தில் தொடங்கி, தன் பால்யக்கதையைத் தொடரத்தான் செய்வார் பால்பாண்டி என்று தோன்றியது. பூர்விக விஷயங்களைப் பேசுவதில் அவருக்கே சற்று ஆசை இருப்பதாகவும் தோன்றியது. ஆனால், என் மனத்தைப் படித்தவர் மாதிரி, உடனடியாகக் கவிழ்த்துவிட்டார் அவர்.

...விடுங்க. புத்துலயிருந்து ஈசல் வர்ற மாதிரி ஒவ்வொருத்தரா வர ஆரமிக்கிறாக மனசுக்குள்ளே. இது சரியில்லெ. ஒரு எடத்துலெ செத்து மறு எடத்திலே மொளச்சு ரெண்டு மாமாங்கத்துக்குமேல ஓடீருச்சு. அப்பறம் இம்புட்டுக் காலம் இப்பிடியெல்லாம் களிஞ்சதுக்கு ஒரு அர்த்தமும் இல்லாமெப் போயிரும்...

என்று சிரித்தார். காற்றில் நிலவிய வறட்சி அவருடைய சிரிப்பிலும் இருந்ததாகப் பட்டது. அல்லது, நான்தான் அப்படி நினைத்துக்கொண்டேனோ என்னவோ.

...இதுக்கு மேலே என்னயப் பத்திச் சொல்லுறதுக்கும் ஒண்ணுமில்லே. அதான் எல்லாத்தையும் கொட்டீட்டெனே. மெனக்கெட்டு ஊர் விட்டு ஊரு வந்து கேக்குறவர்ட்டெச் சொல்லாமெ, வேற யாருகிட்டெச் சொல்றது...

அவர் மறுபடியும் சிரித்தார். கைப்பு நிறைந்த சிரிப்பு.

...இருந்தாலும் ஒரு தாவந்தம் இருந்துக்கிட்டேதேன் இருக்குங்க...

நான் அமைதியாய் இருந்தேன்.

...நம்ம தலைமொறையோட வெட்டுக் குத்தெல்லாம் காணாமப் போயிறணும், ஒடனொத்தவங்க மாதிரி நம்மளும் மாசச் சம்பளத்திலெ போயி ஒக்காந்திரணும்னு நான் கனாக் கண்டேன். நேர்மாறா, ஒர்த்தன் கையெ வெட்டிப்போட்டுப்புட்டு ஓடியாந்துட்டேன். அதெல்லாம் தலையெளுத்திலே உள்ள சமாச்சாரம் போலருக்கு. அம்புட்டு லேசிலே போகாது. ஆனா, நம்மளோடெ நம்ம தலெமொறை முடிஞ்சுருதுங்குறதும் ஒருவகைக்கி நல்லதுதானேங்க? அம்புட்டுத்தான்... பால்பாண்டீன்னு ஒர்த்தன் இருந்தான், வளந்தான், போயிச் சேந்தான். இதுக்கெல்லாம் ஒரு தடயமும் பாக்கி இருக்காது... எல்லாத்தையும் சொல்லி முடிச்சாச்சுங்க. சட்டி காலியாயிருச்சு.

பால்பாண்டி மறுபடியும் சிரித்தார். பழைய ஈரம் மறுபடியும் வந்துவிட்டது. நான் ஏன் இப்படிக் கணத்துக்குக் கணம் அவரை வேவு

பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறேன் என்று உறுத்தியது. அடிமனத்திலிருந்து பொங்கிய அவமான உணர்ச்சியை மறைக்கும் விதமாக நானும் சிரித்தேன்.

ஆனா, இன்னும் ஒரு விஷயம் பாக்கியிருக்கே.

அது என்னாது?

பெரியவர்கிட்டெ நீங்க எப்பிடி வந்து சேந்தீங்க ங்குறதெச் சொல்லலியே.

அட, ஆமா. அதெக் கேக்கத்தானே நீங்க இம்புட்டுத் தூரம் வந்ததே? ஆனா, நேரம் ரெம்ப ஆயிருச்சே. ஒங்களுக்குப் பசி வந்துருக்குமே. மதியம் சாப்புட்ட அதே லக்குலெ போயிச் சாப்புட்டுட்டு வந்துருவமா?

நன்றாக இருட்டி விட்டிருந்தது. குடிலுக்குள் ஒரேயொரு குண்டுபல்பு எரிந்தது. முதலில் அந்த வெளிச்சம் கண்ணுக்குப் போதவில்லை. பொருட்களெல்லாம் இருட்டில் இருந்ததைவிட மங்கலாகிவிட்ட மாதிரிப் பிரமை தட்டியது. போகப்போகப் பார்வை பழகிவிட்டது. நான் மணிக்கட்டை வெளிச்சத்துக்குத் திருப்பிப் பார்த்தேன். அடேயப்பா, மணி ஆறரை. தொலைவில் தனியாக நின்ற கோபுரத்தினருகில் வந்து சேரும் பறவைகள் ஓரிரண்டு மட்டும்தான் புலப்படுகின்றன. புறப்பட்டு விலகும் பறவைகளைக் காணவில்லை.

விடிஞ்சதும் நாரோயில்ல வந்து ஒங்களைப் பஸ்ஸேத்தி விடுறேன். என்னா? இன்னமேப் பொறப்புட்டா அகாலமாயிரும். காலைலே ஏளு மணிக்கி வண்டியேறுனா திருநவேலியிலெ வேலெய முடிச்சுக்கிட்டு மதியம் மூணு மணிக்கு வண்டியேறுனாப் போதும். எட்டரை ஒம்பதுக்கெல்லாம் பளனி போயிச் சேந்துரலாம். துரூ பஸ்ஸே கெடைக்கும்...

ஆமோதிப்பாகத் தலையசைத்தேன்.

...கவலெப்படாதீங்க. வரும்போது கொசுவத்தி வாங்கீட்டு வந்துறலாம். நீங்க இப்பிடிக் கட்டில்லெ படுங்க. நான் வெளியே களத்துலே படுத்துக்கிருவேன்...

சா ப்பிட்டு வந்த பிறகு விட்ட இடத்தில் பேச்சைத் தொடங்கினேன். ஒரு பகல்முழுவதும் நான் ஆவலாகக் காத்திருந்த விஷயத்தை வெகு சுருக்கமாக, இரண்டே நிமிஷத்தில் சொல்லி முடித்துவிட்டார் பால்பாண்டி.

அதென்னா, நம்ம வேர்லெ வெந்நியை ஊத்திப்போட்டு வந்துப்புட்டோம். இங்குட்டும் அங்குட்டுமா நாலைஞ்சு நா திரிஞ்சுப்புட்டு நேராப் பளனிக்கிப் போயிச் சேந்தேன். மலைமேலெ பெரியவரைப் பாத்தேன். ஒரே சமயத்திலே ரெண்டு சாமியைத் தரிசனம் பண்ணுற பாக்கியம் எல்லாருக்கும் வாய்க்குமா? நமக்கு விதிச்சிருந்தது... ஒரே நிமிசந்தேன், 'நம்ம எடத்துக்கு வந்துசேந்துட்டோம்'னு ஒரு நெறைவு மனசுக்குள்ற. படிக்கட்டுலெ உக்காந்து எங் கதை முளுக்க அவர்ட்டெச் சொன்னேன். பொறுமையாக் கேட்டுக்கிட்டாரு. எந் தங்கச்சி பூங்காவெப்பத்திப் பேசும்போது அளுகெ வந்துருச்சு சமைஞ்ச புள்ளையால்லியா, என்ன கதியாச்சோன்னு. அவரு என்னெத் தோளோடெ சேத்து ஆசுவாசப்படுத்துனாரு. அன்னைக்கிக் கெடைச்ச தைரியம்தேன் இப்பிடி ஒரு அத்துவானத்திலெ குடியிருக்க வச்சிருக்கு. எனக்குப் பெரியவரு கூடவே இருந்துறணும்தேன் ஆசெ. அவரு அனுமதிக்கணும்ல.

சில கணங்கள் கண்மூடி அமர்ந்திருந்தார் பால்பாண்டி. அவரது மூடிய கண்களுக்குள் இரண்டு பெரிய கோலிக்காய்கள் உருண்டன.

...அன்னைக்கி நைட்டு, அங்கிணயே நகரத்தார் சத்திரத்திலே போயித் தங்குனோம். அங்கேதான் நாஞ் சொன்னனே, வைரவஞ் செட்டியாரு, அவரு பளக்கப்பட்டது. அவரையும் நீங்க பாக்கணும்ங்க. பெரியவரோடெ ரெம்ப வருசம் கூடவே சுத்தினவரு அவரு. நான் வளி சொல்லுறன்... ஆச்சா, பளனியிலேர்ந்து ரெண்டுபேரும் பஸ்ஸேறி திருநவேலி வந்தம். நாளைக்கு நீங்க பாக்கப் போறீகள்லே, குத்தாலிங்கம் பிள்ளெ, அவருகூட ஒரு ராத்திரி தங்குனம். மக்யா நாளு கெளம்பி ஒரு வருசம் ஒண்ணரை வருசம் போலப் பெரியவரோடெ வால் மாதிரிக் கூடவே சுத்துனேன். ஒருவாட்டி, என்னா நெனெச்சாரோ, நேரெ இங்கிட்டு நம்ம ஆசாங்கிட்டெக் கூட்டியாந்து விட்டுப்பிட்டாரு. அப்பிடிக் கிளம்பி வர்றயிலேதான் நீங்க சொன்ன மெற்றாஸ்காரரெப் பாத்தது. அவரும் நம்மளெ மாருதித்தேன். முணுக்குண்டா அளுதுர்றவரு கணக்கா இருந்தாரு. அய்யிரு வீட்டுப் பையண்டு நெனைக்கிறேன். அவுரு பேரென்னா சொன்னீங்க, செயராமனா, சிவராமனா. எங்கெங்க, யாவுகமெல்லாம் ஒண்ணொண்ணாக் களண்டுக்கிட்டுத்தானே போகுது. அதும் ஒருவகைக்கி நல்லதுதாண்டு வைங்க.

அதுக்கப்பறம் இங்கெயெ தங்கீட்டீங்களோ?

ஆமா? வந்த எடத்துலயே வேர் விட்டாச்சு. அம்புட்டுத்தேன், நம்ம வண்டி சீரா ஓட ஆரமிச்சிருச்சு.

பால்பாண்டி சிரித்தார். கைகள் இரண்டையும் முழுக்க உயர்த்திச் சோம்பல் முறித்தார். ஒரு முடிவுக்கு வந்துவிட்ட உணர்வு ஏற்பட்டது எனக்கு. பால்பாண்டி சிரிப்பின் மிச்சம்போலத் தொடர்ந்தார்.

...நம்ம ஆசான் இருந்தாரே, பேருக்குத் தக்கனெ தகதகன்னு தங்கப் பளம் மாதிரி மினுங்குவாரு. அவுக சாதியிலெ அம்புட்டுக் கலரான ஆம்பிளெகளெ லேசிலெ பாக்க முடியாது. கரணை கரணையா, ஒடம்பா அது? எல்லாம் வருசக் கணக்கா கசரத் போட்டதும், ரெம்பக் கறாரா பிரம்மச்சாரியா இருந்தும்தேன் காரணம். அனுமார்ன்னு சொன்னாலே உசிரெ விட்டுருவாரு. அப்பிடியொரு பக்தியெல்லாம் சாமானியமா வந்துறாது.

நீங்க கல்யாணம் செஞ்சுக்காம இருக்கிறதுக்கும் அவர்தான் காரணமோ?

அப்பிடிச் சொல்ல முடியாதுங்க. இன்னதுக்கு இன்னதுதேன் காரணம்னு நாம எப்பிடித் தீர்மானமாச் சொல்றது? ஒரு யூகத்திலே சொல்லலாம். நாலுக்கு ரெண்டு கரெக்ட்டாவும் இருந்து போகும். ரெண்டு பேரும் கல்யாணம் செய்துக்கிறலே, அம்புட்டுத்தான். மத்தபடி அவருக்கு இருந்த காரணம் வேறெ. நமக்கு இருந்த காரணம் வேறெ. இவ்வளவு பேசுறமே, எங்க பெரியவரு கலியாணம் செய்துக்காமெத்தானே இருக்குறாரு? யாருக்காவது அதுக்குக் காரணம் தெரியுமா? இல்லே, யாரும் கேட்டுறவாவது முடியுமா? அம்புட்டு ஏன், நம்மகூட்டாளி மாதிரி சாதாரண மனுசந்தேன் வைரவஞ் செட்டியாரு, அவருந்தேன் ஒத்தே மரமா நிக்கிறவரு. இன்னதுதான் காரணம்னு யார்ட்டெயாவது சொல்லியிருப்பாருங்கிறீங்க?

ஆசான்கிட்டெப் பெரியவர்தான் ஒங்களைக் கொண்ணாந்து விட்டார்னு சொன்னீங்களே, இவுங்க ரெண்டுபேருக்கும் எப்பிடி சிநேகிதமாச்சுன்னு தெரியுமா?

அது தெரியாதுங்க. நம்ம ஆசான் தூத்துக்குடிக்காரருதான். பெரியவருக்குத் திருச்செந்தூரு. அது தெரியுமில்லே? பாலியத்துலேயே ரெண்டுபேருக்கும் சிநேகமாயிருக்கும்னு நெனைக்கிறேன். ஒருத்தருக்கொத்த 'போ சாமி, வா சாமி'ண்டுதேன் பேசிக்கிருவாக.

ஓ.

கொஞ்சநேரம் இருவரும் மௌனமாக இருந்தோம். என்னிடம் சொல்வதற்கென்று பால்பாண்டியிடம் இருந்த விஷயங்கள் முழுக்கக் காலியாகிவிட்டன என்று தோன்றியது. இருளுடன் போராட முனைந்த

மாதிரிப் பிடிவாதத்துடன் உச்சி விளக்கினடியில் மட்டும் வெளிச்சம் தக்கவைத்திருந்த கோபுரத்தின் அருகில் ஓரிரு பறவைகள் நடமாட்டம் கரும்புள்ளிகளாகத் தெரிந்தது... பால்பாண்டி மீண்டும் தாமாகச் சிரித்துக்கொண்டார்.

ஆசான் ஏன் கல்யாணம் செஞ்சுக்கிறலேன்னு கேட்டீகளே...

எனக்கு அப்படியெதுவும் நான் கேட்ட மாதிரி ஞாபகமில்லை. ஆனாலும், பால்பாண்டி சொல்வதைத் தவறவிடாமல் கேட்டுக் கொள்ள ஆசையாய்த்தான் இருந்தது.

ஆசானின் பூர்விகப் பெயர் தங்கப்பன். ஊருக்குள் கோல்க்கார அண்ணாச்சி என்று செல்லமாகக் குறிப்பிட்டு வந்தார்களாம், தாடிச்சாமி என்று பெயர் உண்டாகும்வரை. அந்த நாட்களில் சிலம்பம், திருக்கைவால் வீச்சு, மான்கொம்பு வீச்சு, சுருள் கத்தி ஆட்டம் என்று எந்நேரமும் ஏதாவது பயிற்சி செய்துகொண்டேயிருப்பாராம்.

அப்போதெல்லாம் ஆசான் கடுமையான முன்கோபி. நாலைந்து தலைமுறையாகவே செழுமையான பணப் புழக்கம் உள்ள குடும்பம். தாத்தா ஒருத்தர், கருவாடு வியாபாரம் செய்து சம்பாதித்ததையெல்லாம் நிலமாகவும் உப்பளங்களாகவும் மாற்றியிருந்தார். இவர் உழைத்துத்தான் சாப்பிட வேண்டும் என்பதில்லை. எல்லாமாகச் சேர்ந்து தங்கப்பன் ஆசான் கோயில்காளை மாதிரித் திரிந்தாராம். ஆனால், முன்கோபம் தவிர வேறு கெட்ட பழக்கம் எதுவும் இல்லாதவர் என்பதால், எல்லாருக்குமே இவர்மீது மரியாதை உண்டு.

நிமிர்ந்த நெஞ்சும் நேரான பார்வையுமாய் ஊருக்குள் திரிந்த மனிதருக்கு வினை ஒரு பெண்பிள்ளை வடிவத்தில் வந்து சேர்ந்தது. வந்தவள் தக்கலைக்காரி. உள்ளூரில் ஒரு பலசரக்குக் கடைக்காரர் மகனுக்கு வாழ்க்கைப்பட்டு வந்தவள். சுண்டினால் ரத்தம் தெறிக்கும் நிறமாம். புட்டத்தைத் தாண்டி இறங்கி ஆடும் தலைமுடி. எண்ணெய்க் குளி முடிந்து திண்ணையில் நின்று முடிகோதினால் மோகினி அவதாரம் மாதிரி இருக்குமாம். யட்சி என்றுதான் ஊருக்குள் பேசிக்கொள்வார்கள். தட்டை நெற்றி, கூர் மூக்கு, கோயில் கருவூலத்திலிருந்து இறங்கிவந்த உற்சவர் சிற்பம் மாதிரி அவ்வளவு நேர்த்தி. தெருவில் அவள் நடந்து போவதே அம்மன் உலாப் போகிற மாதிரித்தான் இருக்குமாம்.

இப்பிடி அம்மன் மாதிரி ஒரு பொம்பளை இருந்தா, தேங்கா உடைச்சு தூபம் காட்டீட்டுப் பேசாம வீட்டுக்குத் திரும்பிர்றதுதானே மரியாதெ? அவகூடப் படுத்தெந்திரிக்கணும்னு நெனச்சா? 'போ சவமே,

ஒனக்கு இந்தச் செம்மத்திலெ பொம்பளை வாடையே கெடையாது'ன்னுருச்சு விதி.

என்று சொல்லிச் சிரித்தாராம் ஆசான், இந்தச் சமாசாரங்களைப் பால்பாண்டியிடம் விவரித்த நாளில்.

அண்ணாச்சிக்கு எந்நேரமும் அவள் நினைப்பாகவே ஆகி விட்டது. சிலம்ப சகாக்கள் எவ்வளவோ எடுத்துச் சொன்னார்கள். அவள் ஊரான் பொண்டாட்டி. ஏதாவது தப்புத்தண்டாவாக நடந்துவிட்டதென்றால், ஊரே இரண்டுபட்டு விடும் வாய்ப்பிருக்கிறது. அவள் புகுந்த குடும்பமும் லேசுப்பட்டது இல்லை. ஆனால் அவர்கள் மட்டுமல்ல, யாருமே சொல்லிப் பார்க்கலாம், அவ்வளவுதான். வர்மத்திலிருந்து களரிவரை சகல போர்க்கலைகளும் பிரமாதமாகக் கற்றிருந்த, கண்மண் தெரியாத முரட்டுக் கோபம் கொண்ட ஆளை வேறு என்ன செய்ய முடியும்?

அண்ணாச்சியும் விடுவதாக இல்லை. அவள் தெருமுனையில் இருந்த டீக்கடையில் நிரந்தரமாக உட்கார ஆரம்பித்தார். வீட்டு வாசலில் அவள் தென்பட்டால் இவர் பரபரப்பாகிவிடுவார். அவளுடைய கவனத்தை ஈர்க்கத் துடிப்பார். இல்லாத சேட்டையெல்லாம் செய்வார். இத்தனைக்கும் அவள் வசித்த தெரு ஆள் நடமாட்டம் அதிகம் உள்ள தெரு.

ஒருமுறை, அவள் ஏதோவொரு கோயிலுக்குப் போய்விட்டு வெய்யில் ஏறிய வேளையில் தனியாகத் திரும்புகிறாள். வழி மறித்துவிட்டார். என்னத்தையோ சொல்லவோ கேட்கவோ செய்தாராம். அவள் மூஞ்சியைச் சுளித்துக்கொண்டு ஒதுங்கித் தாண்டிப் போனாள்.

மறுநாள் நேரே அவள் வீட்டு வாசலுக்குப் போய்விட்டார். கையில் சிலம்பக் கம்பு. போகிற வருகிற ஜனங்கள் இவரிடம் இரண்டு வார்த்தை பேசிவிட்டுப் போகிறார்கள். ஆளுக்கொரு காரணத்தைச் சொல்லியவாறு தெருவின் எதிர்ச் சிறகில் சும்மா நின்றுகொண்டே இருந்திருக்கிறார். இன்னும் தரிசனம் கிடைக்கவில்லை. உள்ளேயிருந்தவள் இவர் மணிக்கணக்காக நிற்பதைப் பார்த்திருக்க வேண்டும். குப்பை போடுகிற சாக்கில் வெளியில் வந்தாள். இவரை ஒரு பார்வை பார்த்துவிட்டு, அழுத்தமாகக் காறித் துப்பினாள். இவர் பதிலுக்கு ஏதோ கோணங்கித்தனம் செய்திருக்கிறார்.

அவள் விறுவிறுவென்று உள்ளே திரும்பினாளாம். அவள் திரும்பி வந்த கோலத்தைப் பற்றி விவரித்தபோது, இத்தனை வருடங்கள் கழித்தும், ஆசானின் கைகள் நடுங்கின என்றார் பால்பாண்டி.

சாதாரணமா ஒரு குடும்பஸ்திரீ அப்பிடியெல்லாம் செய்யமாட்டா பாண்டி. அது நம்ம பாதையெ மாத்தி விடுகதுக்குன்னே அவதாரம் எடுத்துவந்த அம்மனேதாம்.

என்று தழைந்த குரலில் சொன்னாராம் ஆசான்.

இந்தாடே, இதுக்குத்தானே சுத்திச் சுத்தி வாறே. நல்லாப் பாத்துக்கோ. என்னமும் செய்யணும்னாலும் செய்துக்கோ.

என்று நிறை அம்மணமாகத் திண்ணையில் வந்து நின்று அலறினாளாம். ஓரிரு வினாடிகள்தாம். தெருவில் போகிறவர்களெல்லாம் நின்றுவிட்டார்கள். கூட்டம் மெல்லச் சேர்கிறது. பித்துப்பிடித்தவள் மாதிரி கூச்சலிடுகிறாள். வீட்டுக்குள்ளிருந்து சேலையை அள்ளிக்கொண்டு வந்து இவள்மேல் போர்த்திவிட்ட பெண்மணிகளால் அமுக்கிச் சமாளிக்க முடியாத ஆவேசம் அவளிடம்.

ஆசான் மெல்ல நகர்ந்து அந்தத் தெருவைவிட்டு வெளியேறினார். அதே நடையில் ஊரை விட்டும் வெளியேறிவிட்டார்.

என்னோடெ பூர்விக வாழ்க்கையெ விட்டும் அன்னைக்கித்தான் வெளியேறினேன் பாண்டி.

அப்போது ஆசானின் முகம் ஆசானின் முகம் மாதிரியே இல்லை என்றார் பால்பாண்டி. கொஞ்ச நேரம் மௌனமாய் உட்கார்ந்திருந்தாராம். எச்சிலைக் கூட்டி விழுங்கிவிட்டு, இன்னொரு செய்தியும் சொன்னாராம்.

எங்கெங்கெயோ சுற்றி அலைந்துவிட்டு ஆசான் ஊருக்குத் திரும்பினாரல்லவா? அப்போதுதான் கேள்விப்பட்டாராம், இவர் ஊரை விட்டுப்போன அன்றைக்குச் சாயங்காலமே கிணற்றில் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டாளாம் அந்தப் பெண். அவள் ஏற்கெனவே சித்தம் பிறழ்ந்தவள், ஏர்வாடிக்கெல்லாம் அழைத்துப்போய் மந்திரித்திருக்கிறார்கள் என்கிற தகவலெல்லாம் பிற்பாடுதான் தெரிய வந்திருக்கிறது.

எப்பிடியொ, பளைய தங்கப்பன் இருந்தாம்லா, அவனெக் கெடத்தின சவப்பெட்டிக்கிக் கடைசி ஆணியும் அடிச்சு இறுக்கியாச்சுடே.

என்றாராம் ஆசான்...

கு டிலுக்கு வெளியே படுத்திருக்கும் பால்பாண்டியிடமிருந்து சீரான குறட்டையொலி கிளம்பியது. குடிலுக்குள் நுழைந்து நிரம்பி வழிந்து

பயிற்சிக் களம் முழுவதிலும் வியாபித்தது அது. புது இடம் என்பதால் எனக்குத் தூக்கம் வர மறுத்தது. கடந்த ஒரு வாரமாகப் புது இடங்களிலோ, வாகனங்களிலோதான் தூங்கக் கிடைக்கிறது. முன்னிரவுகளில் தூக்கம் பிடிக்காமல் புரண்டுகொண்டிருப்பதும், அதிகாலை வேளைகளில் அயர்ந்துவிடுவதுமாக எல்லாமே குலைந்துவிட்டது. நெஞ்சை அடைத்து ஒரு பெருமூச்சு வெளியேறியது.

குடிலின் மூலையில் பால்பாண்டி ஏற்றி வைத்திருந்த கொசுவத்திச் சுருளின் நெடி காட்டமாக இருந்தது. சின்னவனுக்குக் கொசுவத்தி மணம் அலர்ஜி. சாயங்காலம் அலுவலகம் விட்டு வந்ததும், சித்ரா சாம்பிராணி போடுவாள். வீடு முழுவதும் புகையும் நறுமணமுமாக நிரம்பிவிடும். சில நாட்கள் இரவில் சின்னவன் கதை சொல்லச் சொல்லி நச்சரிப்பதும், ‘அம்மாவிடம் போய்க் கேளு. அப்பாவுக்குக் கதையெல்லாம் சொல்லத் தெரியாது’ என்று நான் பதில் சொல்வதும் நினைவு வந்தது.

அவர்களுக்குச் சொல்வதற்கு ஏகப்பட்ட கதைகள் சேகரித்திருக்கிறேன்... ஆனால், இந்தக் கதைகளெல்லாம் குழந்தைகளிடம் சொல்லக் கூடியவையா...?

நானும்தான் என்ன செய்துகொண்டிருக்கிறேன். தத்தமது பாதையில் நிம்மதியாகச் சென்றுகொண்டிருப்பவர்களை மறித்து நிறுத்தி, அவர்கள் பலகாலம் முனைந்து ஆழப் புதைத்திருக்கும் ஞாபகங்களைத் தோண்டியெடுக்கச் செய்து, அவர்களிடமே ஒப்படைத்துவிட்டு விலகி வருகிறேன். இதற்கெல்லாம் எனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? தவறுக்குமேல் தவறாக இழைத்துக்கொண்டே போகிறேனோ? இதன் மூலமாக எனக்குக் கிடைக்கும் பலன் என்ன? பலன் கருதாத செயல் என்றால் இதைச் செய்வதற்கு என்னை ஊர்ஊராய்ச் செலுத்தும் விசை எது? குடும்பத்துக்குத் தகவல் சொல்லாமல் பரபரக்க வைத்துவிட்டு அசட்டுத்தனமாக இப்படி அலைந்துகொண்டிருப்பது விவேகமான செய்கைதானா...?

வரிசையாக எழும் கேள்விகளின் அழுத்தத்தில் சற்று மூச்சுத் திணறியது. ஆனாலும், இந்த மனிதர்கள் சொல்லும் வாழ்க்கைக் கதைகளில் ஒரு வித்தியாசம் இருக்கிறது. சாமான்ய வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் பிறர் சொல்பவையெல்லாம், பிறவியின் வழியாக அவர்கள் உள்ளே வந்த கதைகள். இவர்கள் சொல்வது தாங்கள் பாத்திரமாக இருந்த ஒரு கதையிலிருந்து இவர்கள் வெளியேறிய விதங்கள். தற்போது இருக்கும் சுழல்மையத்தின் அழுத்தத்தில் வருடக்கணக்காகச் சிக்கிச் சோர்ந்திருக்கும், அதன் விலங்குப் பிடியிலிருந்து வெளியேற வேண்டும்

என்று உள் ஆழத்தில் துடித்துக்கொண்டிருக்கும், என்னுடைய நாடிக்கு இதமாக இருப்பவை. அவர்களுடைய கதைகள் ஆரம்பிக்கும்போதே, நான் அவர்களாகி விடுகிறேன், பெரும் ஆறுதல் என்மீது கவிகிறது.

அதுதான் காரணம் போல...

ம றுநாள் காலையில் பஸ்ஸேற்றிவிடுவதற்காக நாகர்கோயில் வரை உடன்வந்தார் பால்பாண்டி. நகரப் பேருந்தில் பெரும்பாலும் மௌனமாகத்தான் வந்தார். அதிகாலையில் பச்சைத் தண்ணீரில் குளித்ததால் உள்ளேறிய புத்துணர்வின் காரணமாக உடம்பு எடையற்றதாகிவிட்ட மாதிரி உணர்ந்தேன்.

நேற்றுப் பாம்பன்விளைக்கு வரும்போது வழித்தடயங்களாக மனத்தில் பதிந்திருந்த நிறுத்தங்களும், கடைகளும் எதிர்த்திசையில் கடக்கின்றன. நேற்றுப்போல அந்நியமாக இல்லாது, பரிச்சயமானவையாகத் தென்படுகின்றன அவை. முதன்முறையாக வந்து திரும்பும் ஊர், ஒரே ஒரு ராத்திரி தங்கிய காரணத்தால் ரொம்பநாள் பழகிய இடமாக மாறித் தோன்றுவதன் மாயத்தை வியந்துகொண்டே வந்தேன்... இறங்கிப் பேருந்து நிலையத்தினுள் நுழையும்போது பால்பாண்டி கேட்டார்.

என்னா முடிவெடுத்தீக? இப்பொ நேரெ திருநெல்வேலி. அதுக்குப் பெறகு? மருதையா, பளனியா?

எனக்குச் சற்றுக் குழப்பமாகத்தான் இருந்தது... பெரிய தேர்வு எதுவும் செயல்படவேண்டாத விஷயம் என்றும் தோன்றியது. அதனாலேயே எந்தவிதமாகத் தேர்வது என்பதையும் முடிவுசெய்ய முடியாமல் இருப்பது வேடிக்கையாக இருந்தது.

...ரெம்பக் கொளப்பிக்கிற வேண்டாங்க. எந்தூருக்குப் போறதுண்டாலும் திருமங்கலத்துலெ எறங்கி பஸ்ஸு மாறியாகணும். இப்பத்தேன் பஸ்டாண்டெ ஊருக்கு வெளியெ மாட்டுத்தாவணிக்கிட்டெ கொண்டு போயிட்டாகளாமே? பேசாமெ மருதெ வண்டியேறுங்க. திருமங்கலத்திலெ எறங்கிக் காலாத்திக்கிட்டு ஆரப்பாளையம் பஸ்டாண்டுக்கு வண்டி பிடிக்கலாம். அங்கிணெ போய் எறங்கிக்கூட நீங்க முடிவெடுத்துக்கிறலாம்...

பால்பாண்டி சிரித்தார்.

...நாமளா நினைச்சுக்கிர்றோம், இந்த ஊரு அந்த ஊருண்டு. எல்லாம் ஒரு ஊருதானெங்க?

அதுவும் சரிதான், எந்த ஊராயிருந்தால் என்ன? நானும் சிரித்தேன்.

பள்ளியில் ஏதோ ஒரு வகுப்பில் பாடப் பகுதிக்குள் வந்துபோன கணியன் பூங்குன்றனார் ஞாபகத்தில் வந்தார். அடிமனத்தில் குறுகுறுத்தது.

மதுரை செல்லும் பேருந்து வந்தது.

✠

குற்றாலிங்கம்

அன்புள்ள கணவருக்கு,
உங்களைப் பார்க்காமல் குழந்தைகள் இருவரும் தவிக்கிறார்கள்.
நாங்கள் ஏதாவது தவறு செய்திருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள்.
உடனடியாக வீடு திரும்பவும்.

உங்கள் அன்பு மனைவி,
...

கீ ழேயிருந்த பெண்ணின் பெயர் மனத்தில் பதிவதற்கு முன்பே இடைவெட்டிய குரல் கேட்டு நிமிர்ந்தார் குற்றாலிங்கம் பிள்ளை.

காலையிலே வந்த பேப்பரெ இப்ப ஒக்காந்து நெட்டுருப் போடுதீரே, என்ன விசயம்?

என்று வினவிய குரலின் ஸ்தூல வடிவமாக நின்றிருந்தார் கோமதிநாயகம். ரிட்டையர்டு தாசில்தார். யாராவது இரண்டுபேர் பேசிக்கொண்டிருந்தால், தாமும் குறுக்கே புகுந்து ஒரு வார்த்தை சொல்லாவிட்டால் ஒருவிதமான மனப்புழுக்கத்துக்கு ஆளாகிறவர்.

இவரை மாதிரி ஆட்களுடன் பேசும்போது ஒருவிதக் குறுகுறுப்பு அடிமனத்தில் ஓடத்தான் செய்கிறது. அதையும் அடக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். ம்ஹூம். 'தோன்றுவதும், அதற்குப் பிறகு அடக்குவதும் சரியல்ல' என்று பெரியவர் சொல்வார். ஊற்றுப் பெருகும் சுனையைத் தூர்த்துவிட வேண்டுமாம்... இவரிடம் பதில் வாங்காமல் நகர்வதில்லை என்று அடமாக நிற்கிறார் கோமதி. குற்றாலிங்கம் அசட்டுச் சிரிப்புடன் பதிலளித்தார்.

ஓட்டல்காரரு 'நாலு மணிக்கு மேலே வா'ன்னிருந்தாரு. வந்தேன். அவரு வெளியே போயிருக்காராம். காத்திருக்கந்தன்னியும் பேப்பரைப் புரட்டுதேன்.

இவரெப் பெறகு வந்து பாரும். அங்கே சத்திரத்திலே ஒம்மெப் பாக்க

ஒரு ஆள் வந்து காத்திருக்கு.

பேப்பரை பெஞ்ச்சில் வைத்து அதன்மேல் ஒரு செங்கல் துண்டையும் கனமாக வைத்துவிட்டு, மடம் நோக்கி நடந்தார் குற்றாலிங்கம்.

காத்திருந்தவரைப் பார்த்து அதிர்ந்தார். காணவில்லை என்று சற்றுமுன் பேப்பரில் பார்த்த புகைப்படத்தில் இருந்தவர். வந்தவர் குற்றாலிங்கத்தைப் பார்த்துப் பிரியமாய்ச் சிரித்தார். எச்சில் முழுங்கிவிட்டுச் சொன்னார் குற்றாலிங்கம்:

இரிங்க.

✠

தெருவை நோக்கித் திறந்திருந்த மூன்று பாந்து ஜன்னல் செவ்வகத்தில், சற்று முன்பிருந்தே கேட்ட மணிச்சத்தத்தைத் தொடர்ந்து ஒரு யானை நுழைந்தது. யானையின் முழங்காலுக்குச் சற்று அதிக உயரம் இருந்த சிறுவன் கையில் கோலுடன் நடத்திச் சென்றான். எதிர்ப்பட்ட பெண்மணியைத் துதிக்கையால் தொட்டு யாசகம் கேட்டது யானை. அந்த அம்மாள் பயந்து ஒதுங்கினாள். யானை சென்று மறைந்த இடத்தில் அதன் உருவம் இன்னும் நிரம்பியிருக்கிற மாதிரி பிரமை தட்டியது எனக்குள்... குற்றாலிங்கம் தொடர்ந்தார்:

...கொஞ்ச நாளைக்கு மனசு மெதப்பாத்தான் இருந்துச்சு. நான் என்னமோ அச்சயபாத்திரம் மாதிரி, அன்னம்னு கேட்டு வந்தவியளுக்கெல்லாம் அருள் பாலிக்கிறவன், புராண காலத்து முனிவருக சாடெ ன்னெல்லாம் ரெம்பப் பெரிய நெனைப்பு. மனுசனாலே ஒரு நாளும் செயிக்க முடியாத பிறவிக்கோளாறுக்கு அப்பப்பவாச்சும் வைத்தியம் செய்ற மகான்னு என்னை நெனைச்சுக்குவேன்... அதுலெ ஒரு நாள் அடி வுளுந்துச்சு. வெறும் அடியில்லே, எனக்குள்ளெ திமிரா அடைச்சுக்கிட்டிருந்தான்லெ ஒரு ஆளு, அவனெச் சவமாப் பெரட்டிப் போட்ட சங்கதி அது...

அன்றைக்கு வள்ளியூர்ப் பாதையில் போகும் வேனில் சென்றுவரத் தீர்மானித்திருக்கிறார் குற்றாலிங்கம். காலையில் பத்து மணிக்குக் கிளம்பியவர் ஊரெல்லாம் சுற்றி விநியோகம் செய்துவிட்டுத் திருநெல்வேலிக்குத் திரும்ப முனைந்தபோது மத்தியானம் மூன்று மணி இருக்கும். அன்று வெக்கை சற்று அதிகமாகவே இருந்தது. சரியான வெயில். சீக்கிரமாக ஊருக்குத் திரும்பி ஒரு குளியல் போடவேண்டும் என்று நினைத்துக்கொண்டார். மிக விசித்திரமாக, வெகு நாட்களுக்குப்

பிறகு, ஏதோ பூர்வஜென்ம வாசனை மாதிரி, அன்றைக்கு அடிவயிற்றில் கதகதவென்று லேசாகப் பசியும் கிளம்பியதாம்.

வேனுக்குள் இருந்த சாப்பாட்டுப் பொட்டலங்கள் அநேகமாகத் தீர்ந்துவிட்டன. இன்னும் நாலைந்து பொட்டலங்கள்தாம் பாக்கி. நெல்லையப்பர் கோயில் வாசலில் யாராவது இருப்பார்கள், கொடுத்து முடித்துவிடலாம் என்று முடிவெடுத்து வண்டியைத் திருப்பச் சொன்னார். ஆறுமுகம் பின்னிருக்கையில் கிடந்த பொட்டலங்களைப் பார்த்தான்.

அதெ ஊர்லெ பாத்துக்கிடலாம்.

என்றார் குற்றாலிங்கம். வண்டி திசைமாற்றிக்கொண்டு சீராக விரைய ஆரம்பித்தது.

ஆறுமுகம் வாய்பேச இயலாதவன். இளம் வயதிலேயே தாய் தந்தையை இழந்தவன். குற்றாலிங்கத்திடம் வந்து சேர்ந்தபோது வயது எட்டோ பத்தோ. குற்றாலிங்கம் அவனைப் பள்ளிக்கு அனுப்பிப் பார்த்தார். படிப்பு ஏறவில்லை, பள்ளிக்கூடத்துக்கு மட்டம் போட்டுவிட்டு, தாமிரபரணிக் கரையிலோ, ரயில்வே ஜங்ஷனிலோ, ஏதாவது அல்வாக் கடை முன்பாகவோ பொழுதைக் கழித்துக்கொண்டிருந்தான். பயலை இப்படியே விட்டால் வீணாய்ப் போய்விடுவான் என்று தன்னுடனே உதவிக்கு இருக்கச் சொல்லிவிட்டார்.

துருதுருவென்று இருப்பான். காய்கறி மார்க்கெட்டிலும் மளிகைக் கடைகளிலும் தானம் வேண்டிப் போகும்போது தோளில் கோணியைப் போட்டுக்கொண்டு உடன் வருவான். கொஞ்சம் பெரியவனானதும் காய்கறி நறுக்குவது சோற்று அண்டாவை அடுப்பில் ஏற்றவும் இறக்கவும் ஒத்தாசை செய்வது தேங்காய் துருவுவது என்று சமையலில் கூடமாட ஒத்தாசை செய்யத் தொடங்கினான். அறக்கட்டளையோடு சேர்ந்து தானும் வளர்ந்து இன்றைக்கு வேன் டிரைவாகியிருக்கிறான்.

திருக்குறுங்குடி விலக்கைத் தாண்டி வந்துகொண்டிருக்கிறது வேன். எதிர்த்திசையில், தொலைவில், ஒரு கறுப்புப் புள்ளி உதித்தது. வேன் இன்னும் கொஞ்சம் நெருங்கியதும் அது நடந்து வந்துகொண்டிருக்கிற ஒரு மனிதன் என்று புலப்பட்டது.

இந்தக் கோடை வெயிலில் இப்படியொரு நேரத்தில் கனகாரியமாக நடந்து வந்தகொண்டிருப்பது யார் என்று கிளம்பிய ஆச்சரியம், வேன் அவனை நெருங்கியதும் பொசுக்கென்று அவிந்துவிட்டதாம். வேனை நிறுத்தச் சொல்லிக் கையமர்த்தினார் குற்றாலிங்கம்.

யாரோ பித்தன். கந்தல் ஆடையும் சீரற்றுக் குலைந்த தலைமுடியும்

தாறுமாறாக வளர்ந்திருந்த தாடி மீசையும் என்று அவன் முகத்தை மயிர்க்கற்றைகளுக்குள் துழாவித்தான் கண்டுபிடிக்க வேண்டும். கண்கள் மட்டும் வெகு கூர்மையாக இருந்தன. அவனுடைய பார்வை தம்முடைய கண்களைத் துளைத்துப் பின்மண்டையில் வெளியேறுகிற மாதிரி இருந்ததாம் குற்றாலிங்கத்துக்கு.

கீழ்ப் பித்தான்கள் உதிர்ந்த சட்டை விலகி அவனுடைய வயிறு நன்கு தெரிந்தது. ஆலிலை போல ஒட்டிப் படிந்த வயிறு. தொப்புளைச் சுற்றி அடர்ந்து தொடங்கிய ரோமப் புதர் கீழ்நோக்கிச் சென்று மேலும் அடர்த்தி கூடும் இடம்வரை இறங்கியிருந்தது லுங்கி. அதன் அகலம் ஒரு சாணுக்கும் சற்றுத்தான் கூடுதலாக இருக்கும். ஈர்க்குச்சிபோலத் தெரிந்த கால்களில் நரம்புகள் புடைத்துத் தெரிந்தன.

பாரதம் முழுவதும் இந்த மாதிரி நெடுஞ்சாலைகளில் நடந்து செல்கிற பித்தர்கள் இருக்கிறார்களாம் கோவர்த்தனம் சொல்லியிருக்கிறார். பல்வேறு ஊர்களில், பல்வேறு சந்தர்ப்பங்களில், பல்வேறு வயதுகளில் இந்த மாதிரி ஆசாமிகளைத் தாம் பார்த்திருப்பதாகச் சொன்னார் அவர். இவர்கள் மைல் கணக்காக நடந்துகொண்டேயிருப்பார்கள். வெயிலும் மழையும் தங்குமிடமும் சாப்பாடும் ஒரு பொருட்டேயில்லை. வலசை போகிற பறவை மாதிரி பருவத்துக்குப் பருவம் பிரதேசங்களை மாற்றிக் கொள்கிற நடைமன்னர்களும் உண்டாம். இவர்களில் அநேகர் புத்தி சுவாதீனம் இல்லாதவர்கள். குடும்பம், சமூகம், அரசாங்கம் போன்ற அமைப்புகளால் கைவிடப்பட்டவர்கள். அதற்காக எல்லாரையும் அப்படிச் சொல்வதற்கில்லை. முழுமையான போதத்தோடு, தாமாக விரும்பி வெளியேறியவர்களும் உண்டுதான். இப்பிடி வெளியேறியவர்கள் உலகம் முழுவதும் இருக்கிறார்கள் என்றுகூடச் சொல்லலாமாம்.

நானே அப்படிப்பட்ட ஒருத்தன்தானே?

என்று சொல்லிச் சிரித்தார் கோவர்த்தனம். அமெரிக்காவில் ஜனாதிபதியாக இருந்தவரின் சிநேகிதர் ஒருத்தர் இந்தமாதிரித்தான் வெளியே காட்டுக்குள் சென்று உட்கார்ந்துகொண்டுவிட்டாராம். வரி கட்டவில்லை என்று போலீஸ் பிடித்து ஜெயில் போட்டுவிட்டது. ஜனாதிபதி ஜெயிலுக்கு வருகிறார், சிநேகிதரைப் பார்க்க. கம்பிக்கு இந்தப்புறம் நின்றுகொண்டு கேட்டாராம்.

என்னலே, உள்ளாறெ வந்து ஒக்காந்திருக்கே?

அதெயேங் கேக்கே, எல்லாம் நீ வெளியிலெ இருக்கிறதாலெதான்.

என்று இவர் பதில் சொல்ல, இரண்டுபேரும் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்களாம். விறுவிறுப்பான கதை மாதிரி விரிவாகச் சொன்னார் கோவர்த்தனம். பெயர்களெல்லாம்கூடச் சொன்னார், மறந்துவிட்டது.

ஆனால், இதெல்லாம் ரொம்பப் பிற்பாடு. நடப்பு சம்பவம் நடந்து பத்துப் பதினோரு வருசம் கழித்து. முதல் தடவையாக கோவர்த்தனம் வந்து திரும்பி, அடுத்தடுத்த தடவைகள் சந்தித்து நண்பர்களாகி ஒருத்தருக்கொருத்தர் பூர்விகத்தைப் பகிர்ந்துகொள்ளும் நெருக்கம் உருவான பிறகு...

பின் இருக்கையில் கிடந்த சாப்பாட்டுப் பொட்டலங்களில் இரண்டை எடுத்துக்கொண்டு இறங்கினார் குற்றாலிங்கம். அவனிடம் சென்று நீட்டினார். சித்த சுவாதீனமில்லாதவனோ, இவ்வளவு நெருங்கிச் செல்வது சரிதானா என்றெல்லாம் ஒரு கணம் பயமும் தட்டியதாம்.

அவன் இவரைப் பார்த்துச் சிரித்தான். சாப்பாட்டுப் பொட்டலத்தைத் தொட்டு ஆசீர்வதிப்பது மாதிரி கை உயர்த்தினான். பிறகு புறங்கையால் அதை மறுத்து ஒதுக்கினான். பித்தனுக்குத் தான் நீட்டுவது சாப்பாடு என்று புரியவில்லையோ என்று சந்தேகம் வந்துவிட்டது இவருக்கு. ஒரு பொட்டலத்தைப் பிரித்து நீட்டினார். புளியோதரை மணம் கும்மென்று உயர்ந்தது.

அவன் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான். பொட்டலத்தை மறுபடியும் புறந்தள்ளினான். எட்டி இவர் தலைமீது உள்ளங்கையைப் பதித்து ஆசீர்வதித்தான். பிறகு தன் போக்கில் நடக்கத் தொடங்கிவிட்டான். இப்போதுதான் வேகம் எடுத்த மாதிரி இருந்தது. ஆனால், அடுத்த நாலைந்து கணங்களில், அவனை வேனில் சென்றால்கூடப் பிடிக்க முடியாது என்கிற மாதிரி வெகுசீக்கிரம் பார்வையிலிருந்து மறைந்து விட்டான்.

உச்சந்தலையில் அவன் கை பட்ட இடம் பனிக்கட்டி தீண்டியது மாதிரிக் குளிர்ந்திருந்ததாம். அவன் உள்ளங்கையின் வியர்வை ஈரம் படிந்ததால் இருக்குமோ என்று தொட்டுப் பார்த்துக்கொண்டார் குற்றாலிங்கம். இவ்வளவு நேரமும் வெயிலில் நின்றதால் முடியில் கடுமையாக உஷ்ணம் படிந்திருந்தது. தலைக்குள்ளானால் குளிர்கிறது.

குழம்பிய மனநிலையுடன் திருநெல்வேலி வந்து சேர்ந்தார்.

வந்து அரை மணிநேரம்தான் ஆகியிருக்கும். அலைந்த அலுப்புத் தீரக் குளித்துத் தலை துவட்டிக்கொண்டு முன்னறைக்கு வருகிறார். தொலைபேசி அழைத்தது. ஸ்ரீவைகுண்டம் காவல் நிலையத்திலிருந்து

அழைத்தார்கள். உரத்த குரலில் பேசிய அதிகாரியின் குரலில் பதட்டம் இருந்தது. உடனடியாகப் புறப்பட்டு வரச் சொன்னார்.

சென்ற வாரம் பேட்டையில் ஒரு வீட்டின் கொல்லைப்புறத் தோட்டத்தில் இரண்டு சாக்கு நிறைய வேல்க்கம்புக் கூர்கள் பிடிபட்டதிலிருந்து காவல்துறையின் தூக்கம் வெகுவாகக் கெட்டுவிட்டது. ஆனால், பழிவாங்குவதற்காக இவர்களேதான் அந்த மூட்டைகளைக் கொண்டு வைத்துவிட்டு, கைப்பற்றிய மாதிரி நாடகமாடுகிறார்கள் என்று வீட்டு உரிமையாளர் பத்திரிகைகளில் பேட்டி கொடுத்திருந்தார். சமூகத்தில் முக்கியஸ்தர் என்பதால் அவரைக் கைது செய்யக் காவல்துறை தயங்கியது...

விதவிதமான யோசனைகளுடனும், குழப்பங்களுடனும், தலையின் ஈரம் உலராமலே புறப்பட்டுப் போனார் குற்றாலிங்கம்.

காவல் நிலையத்தினுள் நுழையும்போது பதட்டத்தில் கால் இடறி விழத் தெரிந்தார். உள்ளே, அதிகாரியின் முன்னால் நாற்காலியில் உட்கார்ந்திருந்தவனைப் பார்த்ததும் பதட்டம் பலமடங்கு அதிகரித்தது. திருக்குறுங்குடி விலக்கில் பார்த்த பித்தன். 'இவனுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம் என்று கூப்பிட்டுவிட்டிருக்கிறார்கள்' என்று சற்றுக் குழப்பமாக இருந்தது. அதைவிட, இவனை நாம் பார்த்தது நாகர்கோவில் சாலையில். இப்போது இவன் உட்கார்ந்திருப்பது திருச்செந்தூர் மார்க்கத்தில். அந்தப்பக்கம் ஒரு முப்பது, இந்தப்பக்கம் ஒரு முப்பது அறுபது கிலோ மீட்டர் தொலைவு. என்னுடைய நேரக்கணக்கில் போகவும் வரவும் கார்ப்பிரயாணம். இவன் பாதசாரி அல்லவா...? தலைசுற்றியது குற்றாலிங்கத்துக்கு.

அதிகாரியைப் பார்த்து அனிச்சையாக வணக்கம் சொன்னார். அவர் சுட்டிய நாற்காலியில் முதுகு படியாமல் அமர்ந்தார்.

அவன் இரண்டு கால்களையும் தூக்கி நாற்காலியின் தரைப்பலகைக்குள் பொருத்தி வைத்துக்கொண்டு சிறு பொட்டலம்போலக் குந்தியிருந்தான். கைகளால் கால்கள் இரண்டையும் கட்டிப்போட்டிருந்தான். பார்வை நிலையற்று இடம் மாறி அலைந்து திரிந்தது. சாலையில் பார்த்தபோது இல்லாத ஒரு குறுஞ்சிரிப்பு தற்போது அவன் முகத்தில் ஒளிந்துகொண்டிருந்தது. அல்லது, தமக்குத்தான் அப்படித் தோன்றுகிறதோ என்று நினைத்துக்கொண்டார் குற்றாலிங்கம்.

ஒங்களுக்குத் தெரிஞ்ச ஆளாங்க இவென்?

என்றார் அதிகாரி. குற்றாலிங்கத்துக்கு தூக்கிவாரிப் போட்டது. இவனை

என்னவென்று சொல்வது. ஏற்கெனவே பார்த்திருக்கிறேன் என்பதால் தெரிந்த ஆள்தான். ஆனால் இவனைப் பற்றி எதுவுமே தெரியாதே. கொஞ்சம்கூடத் தெரியாத தெரிந்த ஆளைப் பற்றி என்ன சொல்வது?

ஒங்க பேரும் விலாசமும் சொன்னான். நீங்க இப்பிடி யோசிக்கிறீங்களே? அப்ப நாங்க சந்தேகப்பட்டது சரிதாம்போல.

குற்றாலிங்கத்தின் ஆச்சரியம் அதிகரித்துக்கொண்டே போனது. மூச்சு முட்டுகிற மாதிரி இருந்தது. எனக்குத் தெரியாத, ஆனால் என்னைத் தெரிந்த ஆளா இவன்? திருநெல்வேலியில் விசாரித்திருப்பானோ? முதலில், இவனுக்குத் தமிழ் பேசத் தெரியும் என்பதையே நம்புவதற்குக் கடினமாக இருந்தது. வடக்கத்திக்காரன் என்றல்லவா நினைத்தோம்? குற்றாலிங்கம் தொடர்ந்து குழம்பிக்கொண்டிருந்தபோது அதிகாரி மேலும் சொன்னார்:

ஒங்களைப் பத்தி மட்டுமில்லே, ஒங்க அப்பா தாத்தான்னு பல தலைமுறைகள் விசயம் சொல்றான். அதுனாலதான் வரச்சொன்னேன்.

இப்போது அவன் வாய் திறந்தான். உருவத்துக்குப் பொருத்தமில்லாத கனத்த குரல்.

இந்தா பாருங்க சிவனாண்டி, இதுக்காகவா பாவம், இவரெ இவ்வளவு தூரம் வரவளெச்சீங்க? அதான் நீங்க இங்கெ இருக்கீங்களே?

என்னாப்பா சொல்றே?

நா ஒங்க அப்பன் தாத்தன் முத்தாத்தன்னு ஆறேளு தலெமொறெ விசயம் சொல்வேனே...

சுத்தமான உள்ளூர் உச்சரிப்பில் அவன் தமிழ் பேசியது குற்றாலிங்கத்தின் அதிர்ச்சியை அதிகரிக்கச் செய்தது. அதிகாரியை நோக்கிப் பேசி முடித்துவிட்டுத் தனக்குத்தானே ஏதோ சொல்லிக்கொண்டான். சற்று உரத்த குரலில் முனகுவதுபோல ஒலித்தது. ஹிந்தி மாதிரித் தொனித்த ஏதோ வடக்கத்தி மொழியேதான். அதிகாரி அவனை முறைத்தார். அவன் தொடர்ந்தான்:

ஒங்க அப்பா முத்துச்சாமி திர்னவேலி முன்சீப் கோர்ட்லெ குமாஸ்தாவா இருந்தவரு. முதுகுலே ராச பிளவெ வந்து அல்பாயுசிலே போனாரு. அவுக அப்பா வேலாண்டி சீலிப்புத்தூர் கோயில்லே பூக்கட்டுறவரு. பண்டார சாதியில்லே நீங்க...

அதிகாரி எழுந்து நின்றார். விசாரணைக்காக என்று வந்து சுவரோரமாகத் தரையில் உட்கார்ந்திருந்த இரண்டு ஆண்கள் ஒரு பெண்

ஆகியோர்மீது அவன் பார்வை பதிந்தது.

...அந்த மஞ்சச்சட்டைக்காரரு மாஞ்சோலெ எஸ்டேட்டுலெ கங்காணியா இருக்கிறவரு. மூணு தலெமொறையா அங்கயேதான் இருப்பு. அந்தம்மா இவரு பொஞ்சாதி. சிலோன்லெருந்து கள்ளத் தோணியிலெ வந்தவுக. சர்க்கார் போசணெயிலெ இருந்தவுக. மனசு விரும்பி ரெண்டுபேரும் கட்டிக்கிட்டாக... அடுத்தவரெப் பத்திச் சொல்லட்டா. இல்லே, அந்தா பாரா நிக்கிறாரே அவரெப் பத்திச் சொல்லட்டா...?

அதிகாரியின் முகம் பிரமிப்பில் ஆழ்ந்திருந்தது. குமுறி வெடித்து நிலைகுலைவதற்கு இன்னும் ஒரு கணம்தான் இருக்கிறது என்கிற மாதிரி இளக்கம் கொண்டிருந்தது.

பித்தனின் முகத்தைப் பார்ப்பது வேறு ஒரு அனுபவமாக இருந்தது குற்றாலிங்கத்துக்கு. அவனுடைய முகத்தைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. ஓரிடத்தில் நிலைக்காமல் சலிக்கும் கண்கள் அவனுடையவை. ஒரு நிமிடம் சித்தம் பிறழ்ந்தவன் மாதிரியும், மறுநிமிடம் கபடமற்ற குழந்தையுடையது போலவும் மாறிமாறித் தோற்றம் தந்த கண்கள். கண்ணுக்குக் கண் சந்திக்கும்போது துரப்பணம்போலக் குடைகின்றன.

...சின்னப் புள்ளெக பலூன்லெ காத்தப்பிடிச்சு அடைக்கிற மாதிரி என்னெ இந்த கட்டடத்துக்குள்ளாறே ஒக்கார வச்சிருக்கீக.

அவன் சிரித்தான். அதிகாரி நின்ற இடத்திலேயே உறைந்து போயிருந்தார். முகத்தில் பீதியும் அசட்டுத்தனமும் பொங்கி வழிந்தன. குற்றாலிங்கத்தைப் பரிதாபமாகப் பார்த்தார். குற்றாலிங்கம் அவரை நோக்கித் தலையாட்டினார். அதிகாரி வாய்திறந்தார்:

நீங்க போங்க சாமி. நம்மாளுக அறியாமெப் பிடிச்சுக் கொண்ணாந்துட்டாவ. நான் மாப்புக் கேட்டுக்கிடுதேன்.

குரல் கம்மியிருந்தது. அவன் எழுந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். இருந்தவர்கள் அனைவருக்கும் பொதுவாக அபயஹஸ்தம்போல வலது உள்ளங்கையைக் காட்டிவிட்டு வாசலை நோக்கி நடந்தான். காவல் நிலைய வாசலில் இடதுபுறமாகத் திரும்புவதுவரைதான் கண்ணுக்குத் தெரிந்தான்.

வாசலைப் பார்த்து எழுந்து ஓடினார் குற்றாலிங்கம். காவல் நிலையச் சுற்றுச்சுவருக்கு வெளியில் இவனுக்காகக் காத்திருந்ததுபோலக் குழுமியிருந்த பத்திருபது உள்ளூர் நாய்கள் வாலாட்டிக்கொண்டு

அவனைப் பின்தொடர்ந்தன.

போஸ்ட்டர் தின்றுகொண்டும், குப்பைத் தொட்டியை முகர்ந்து கொண்டும், சாவகாசமாய்ப் படுத்து தீனியையும் ஏதோ ஞாபகத்தையும் அசைபோட்டபடி நடுத்தெருவில் படுத்துக்கொண்டும் இருந்த தெருமாடுகள் நாலைந்து அவசரமாய்க் கிளம்பிச் சேர்ந்துகொண்டன. அவனது தலைக்கு இரண்டு மூன்றடி உயரத்தில் ஏழெட்டுக் காக்கைகள் இறக்கை அசைக்காமல் தொடர்ந்தன தானாய் உடன்செல்லும் குடை மாதிரி. தெருவில் நடமாடிய ஜனங்கள் பிரமை தட்டி வெறித்த கண்களுடன், பாதங்களில் வேர்பிடித்த மாதிரி, அங்கங்கே நின்றுவிட்டார்கள்.

ஊர்வலம் தொலைவுக்கு நகர்ந்து துலக்கம் கெடுகிறவரை பார்த்துக்கொண்டேயிருந்தார் குற்றாலிங்கம். கண்கள் சுரந்து திரை படிந்தது. அரைத்த சந்தன வாசனை திடீரென்று எழும்பியது. உடம்பு விதிர்த்துக் கைகூப்பி வணங்கியபடி நின்றார்.

நிலையத்துக்குள் திரும்பியபோது, ஒரு செம்பு நிறையத் தண்ணீரை மடக்மடக்கென்று குடித்து முடித்துவிட்டு மூச்சு வாங்கினார் அதிகாரி.

நல்லவேளைங்கய்யா. தப்பிச்சேன். நான் ஒண்ணும் தப்பாப் பேசிறலையே.

சேச்சே. அதெல்லாம் இல்லேங்க. இவாளெ மாதிரிப் பெரியவுக நாம தப்பாப் பேசினாலுமே கோவிச்சிக்கிற மாட்டாவொ. பாக்கப்போனா ஒங்களுக்கு பாக்கியம் இருந்துச்சு. இல்லாட்டின்னா இவாளெயெல்லாம் ஸ்டேசனுக்குள்ளாறெ கொண்ணாந்துக்கிற முடியுமா. ஒங்க புண்ணியத்திலே நானும் வந்து தெரிசனம் பண்ணுனேன்... அப்ப நான் உத்தரவு வாங்கிக்கிடுதேன்.

தலையசைத்தார் அதிகாரி. வாசலில் நின்றிருந்த வேனில் ஏறிக் கிளம்பினார் குற்றாலிங்கம். உடம்பும் மனமும் வெகுவாகத் தளர்ந்திருந்தன. ஆனால், அந்த நாளின் விநோதங்கள் இன்னும் முடிந்தபாடில்லை.

ஊரைவிட்டு வெளியேறும் இடத்தில் ஒரு மரத்தடியில் அவன் உட்கார்ந்திருந்ததைக் கண்டார். காவல்நிலைய நாற்காலியில் இருந்தது மாதிரியே இப்போதும் குத்தவைத்து அமர்ந்திருந்தான். வண்டியை நிறுத்தி இறங்கி அவன் காலில் விழுந்து ஒருமுறை வணங்க வேண்டும் என்று தோன்றியது. தாண்டி வந்திருந்த வண்டியை நிறுத்தச் சொல்லி இறங்கினார். பின்திரும்பி நடந்து மரத்தடியை நெருங்கினார்.

அதற்குள் மரத்திலிருந்து படபடவெனச் சிறகடித்துக் கீழிறங்கிய காக்காய் அந்தப் பித்தனுடைய குத்திட்ட முழங்காலில் அமர்ந்தது. அவன் அதனிடம் விசித்திரமாக ஒரு சொல் உதிர்த்துவிட்டுச் சிரித்தான். இறக்கைகளைப் படபடவென அடித்தவாறு சில கணங்கள் அந்தரத்தில் நின்றது காக்காய். பிறகு அவன் முகத்தை நெருங்கி அவனுடைய பல்லிடுக்கைத் தன் அலகால் தீண்டியது. தன் கந்தல் சட்டையின் வலது புறப் பையிலிருந்து எதையோ எடுத்து உள்ளங்கையில் ஏந்தினான். ஒரே ஒரு வேர்க்கடலை.

இதற்குள் மறுபடியும் அவனது முழங்காலில் உட்கார்ந்துவிட்ட காக்காய் கடலையைக் கொத்தியெடுத்து விழுங்கியது. அமர்ந்த இடத்திலேயே பறப்பதுபோல இறக்கைகளை அசைத்தது. அலகைத் திறந்து குழறியது. அவன் சிரித்தான். குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான்.

காக்காய் எழுந்து தலைக்கு நாலடி உயரத்தில் பறந்தது. அவனுக்கும் மரத்தண்டுக்கும் இடையில் ஐந்தாறு தடவை போய்வந்தது. அவனுக்கு விளையாட்டுக் காட்டுகிற மாதிரி விசித்திரமான கரணங்கள் சிலவற்றைப் போட்டுக் காண்பித்தது. அந்தரத்திலிருந்து கவ்விய சுள்ளியைத் தரையில் உதிர்த்தது. உடனடியாக அதன் அலகு நுனியில் இன்னொரு சுள்ளி. அதையும் உதிர்த்தது. இப்படி ஏழெட்டுச் சுள்ளிகள். சரேலென்று மரத்தின் உச்சியைத் தாண்டி உயர்ந்து இறக்கைகளை உடம்போடு ஒடுக்கிக்கொண்டு தரையில் மோத வீழ்கிற மாதிரிக் கிறுகிறுவென்று பாய்ந்து தரைக்கு அரையடி இடைவெளியில் இறக்கை விரித்துப் பறந்தது. அவன் தொடர்ந்து சிரித்துக்கொண்டிருந்தான்.

இருவருமாகச் சேர்ந்து தம்மைக் கேலி செய்கிறார்களோ என்று சிறு சந்தேகம் குற்றாலிங்கத்தின் மனத்தில் உதித்தது. உடனடியாகப் பயமும் பீதியும் எழும்பி அடிவயிற்றைச் சுருட்டின. அந்த இடத்தில் படர்ந்திருந்த அமானுஷ்யத்தின் பிடியிலிருந்து உடனடியாகத் தப்பித்து விலகிவிட வேண்டும் என்றும், வாழ்நாள் முழுவதும் விலகாமல் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டேயிருக்க வேண்டும் என்றும் மனம் இரண்டாகப் பிளந்துகொண்டது. எவ்வளவு நேரம் அதே நிலையில் நின்றுகொண்டிருந்தார் என்பதைக் குறிப்பாகச் சொல்லத் தெரியவில்லை.

அவன் எழுந்தான். காக்காய் அவனுடைய வலதுதோளில் உட்கார்ந்துகொண்டது. குற்றாலிங்கம் நிற்பதைக் கவனிக்காதவன் மாதிரி தாண்டிப் போனான். விசுக்விசுக்கென்று மின்னல் மாதிரி நடை. நாலே எட்டில் அவன் கடந்த தொலைவைப் பார்க்க மலைப்பாய்

இருந்தது. மறுபடியும் கைகூப்பினார் குற்றாலிங்கம்.

அ வரு எங்கெருந்தோ வந்த சித்தருன்னு நெனைக்கேன்? ஒங்களுக்கு எப்பிடிப் படுது...?

என்று என்னைக் கேட்டார். பதில் எதுவும் சொல்லாமல் இருந்தேன்.

...அவுகல்லாம் நம்ம ஒலகத்துல இருக்குதவுங்கதாம். ஆனா, வேற ஒரு மடிப்புக்குள்ளாற இருக்குதாங்க. அங்கேருந்து பார்க்கும்போது நம்ம சமாசாரம் முளுக்க அவுகளுக்குத் தெரியும். நமக்குத்தான், அவுகளெத் தெரியிற மாதிரி இருக்கும்; ஆனாத் தெரியாது. முளுக்கத் தெரிஞ்சிக்கிறப் பல சென்மம் எடுக்கணும். இந்த சென்மத்திலே செய்யிற கைங்கரியத்தோட புண்ணியம்தான் ஏதோ இந்தமட்டுக்கு இப்பிடியாக்கொத்தவங்க சாடையாவது பாக்கக் கிடைச்சது... அவரைப் போயி யாசகர்ன்னு நெனைச்சிட்டேனே...

குற்றாலிங்கத்தின் குரல் கம்மியது. வாக்கியத்தின் இறுதியில் வந்த சொற்கள் தேய்ந்து இறங்கின. வெறும் எண்ணம்தானே, தவறாக ஒன்றும் செய்துவிடவில்லையே, இதற்குப்போய் எதற்காக இவ்வளவு புழுங்குகிறார் என்று உள்ளூற ஆச்சரியப்பட்டேன்.

...ஆனா, அந்த ஒருதடவை அடிவாங்கியும் புத்தி வரலையே. கொஞ்சநாள் பொறுத்து பின்னே அதே மாதிரி மெதப்பு ஏறத்தாம்லா செஞ்சது. பெரியவரு புண்ணியத்திலே கோவர்த்தனம் ஐயா பளக்கமானாரா, அதுக்குப் பொறவுதான் கண்ணு தொறந்தது. நானெல்லாம் ஒரு சாப்பாட்டுப் பொட்டலத்தெக் குடுத்தமா, திரும்புனமான்னு கைங்கரியத்தெ முடிச்சிக்கிர்றேன்ல்லா. அவரு பாருங்க, ஆதரவில்லாமெக் கெடக்கிற சீக்காளிப் புள்ளெகளே எடுத்தாந்து சீராக்கி வளத்து, ஆளாக்கி அனுப்பி வக்யாரே. இருவத்நாலு மணித்தேரமும் அதுக கூடவே இருந்து அல்லாடுதாரே, அதுக்கெல்லாம் எப்பிடியாக்கொத்த குடுப்பினெ வேணும்...?

அவரு யாருங்க கோவர்த்தனம்? முன்னமே ஒருவாட்டி அவரு பேரெச் சொன்னீங்க. குறுக்கெ பாய வேணாம்னு சும்மாயிருந்துட்டேன்.

நீங்க அவசியம் அவரெப் பாக்கணும்ங்க. நான் வெலாசம் தாரேன். போய்ப் பாருங்க. கொடுமுடியிலே இரிக்யாரு. கைப் புள்ளெயோடெ இங்க வந்தவரு. நமக்கு நல்ல சிநேகமாயிட்டாரு. அவரு எடத்துக்கு நான் பத்துப் பதினஞ்சு மட்டம் போயிருக்கேன். பெரிய அறிவாளி. தங்கமான மனுசன். நம்ம பெரியவரு சிஸ்யப் புள்ளெதான்.

சாயங்காலம் தயங்கி விலகுகிறது. அது நீங்கிய இடத்தில் இருட்டு வந்து அமர்கிறது. தன்னுடைய இடம் என்கிற மிதப்பு அதற்கு. சுவாதீனமாகவும் அழுத்தமாகவும் நிரம்புகிறது. இருட்டின் அடாவடிக்குப் பயந்துதான் சாயங்காலமே விலகியதோ என்னவோ. சற்றுத் தள்ளியிருக்கும் ஏதோ கோயிலிலிருந்து கண்டாமணி ஒலிக்கிறது. அதற்கு விளிம்பு கட்டிய மாதிரிக் கைமணியின் கிணுகிணுப்பும் சேர்ந்து கொள்கிறது. காற்றில் ஊதுபத்தியின் மணம் மிதந்தது. இந்த மணம் கோயிலிலிருந்து வரவில்லை, பக்கத்தில் உள்ள வீடு எதிலிருந்தோ வருகிறது.

பெரியவரு சொல்லீட்டாருன்னு இதிலெ இறங்கீட்டேன். வெளாட்டுப்போல முப்பத்தஞ்சு வருசத்துக்குமேலெ ஓடீருச்சு. ஆனா, இது சாதாரணக் காரியமில்லேங்க. பெரியவரு மாதிரியான ஒரு தெய்வாம்சத்தோட அருள் இல்லாமெ இதெல்லாம் நடந்துக்கிறாது...

புதியவொரு வேகத்தில் தொடர்ந்து பேச ஆரம்பித்தார் குற்றாலிங்கம்.

ஆ ரம்பத்தில், தானம் கேட்டுச் செல்கிற இடங்களில் முகம் சுளிப்பதைப் பார்த்து இவருக்குக் கூசுமாம். கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் ஆகியிருக்கிறது, நம் சொந்தப் பிரயோசனத்துக்காக மேற்கொள்ளும் காரியங்களில்தான் மான அவமானமெல்லாம் பார்க்கவேண்டும். இது பிறத்தியாருக்காகச் செய்கிற கைங்காரியம். இதில் நல்லதும் நடக்கும், பொல்லாததும் நடக்கத்தான் செய்யும். அதையெல்லாம் கனமாக எடுத்துக்கொள்ளக்கூடாது, என்ற விவேகம் கூடுவதற்கு.

தவிர, இல்லையென்று சொல்கிறவரிடம் நாம் அவமானமாய் உணர்ந்தால், நம்மிடம் வாங்கிச் சாப்பிடுகிறவர்களை நம்மைவிடத் தாழ்ந்தவர்கள் என்று நினைக்கிறதாகத்தானே அர்த்தம்...?

இது பரவால்லேங்க. பிரமநாயகம்னு நமக்கு ஒரு சிநேகிதன் உண்டு. செகப்புக்கொடிக்காரன். நாம எது சொன்னாலும் ஏட்டிக்கிப் போட்டியாப் பேசுவான். இப்பம் அவுங்க கச்சியிலெ ஜில்லா லெவல்லெ ஏதோ போஸ்ட்டிங்கிலே இருக்குதான். ஆரம்ப நாள்லே நான் வசூலுக்குப் போவனா, இவன் என்னெத் தெரு முக்குலெ நிறுத்திப்போடுவான். 'ஏம்லே, குத்தாலம், ராப்பகலா இப்பிடி மெனக்கெடுதியே, இதுலே ஒனக்கு என்னலே கெடைக்கி?'ம்பான். 'நீ நாள் பூரா சீரெட் ஊதுதியே, ஒனக்கு என்னா கெடைக்கி?' 'அது குடிச்சுப் பாத்தால்லா தெரியும்?' 'இதுவும் மெனக்கெட்டுப் பாத்தால்லா தெரியும்?' அந்தானைக்கி, ரெண்டு பேருக்கும் சிரிப்பாணி பொங்கும்.

‘ஒங்க சாமியார்க் கூட்டாளிக இம்புட்டு அதிசயம் செய்யிறாகளே, பசிச்ச வகுறு எல்லாத்தையும் நெப்புறதுக்கு ஒரு சூஸ்தரம் வுட வேண்டியதுதானலே’ன்னான் ஒரு நா. நான் என்னா சொன்னேங்கிறீய...?

குற்றாலிங்கத்தின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன். குற்றாலிங்கத்தின் மனம் மிக எளிமையானது, மிகத் தெளிவானது என்று தோன்றியது. சற்றும் கபடமற்ற மனமாக இருந்தாலொழிய இவ்வளவு சரளமான நேரடியான பாஷை சாத்தியமில்லை. வந்ததிலிருந்தே கவனித்துக்கொண்டுதானிருக்கிறேன், சிடுக்கான விஷயங்கள் எதையுமே குற்றாலிங்கம் பேசவில்லை. பெரிய பெரிய காரியங்களில் ஈடுபடுவதற்கு இந்த மாதிரியான மன அமைப்புதான் தேவையோ என்னவோ என்று நினைத்துக்கொண்டேன்.

...தெகைச்சுட்டீய பாத்தேளா? நான் மண்டேலெ அடிச்ச மாதிரிப் பதில் சொல்லீட்டன்லா... ‘யெப்பா பிரமு, மெற்றாஸ்லெ ராமமூர்த்தின்னு நரம்பு வியாதிக்கிப் பேர்போன டாக்டர் ஒர்த்தர் இருக்காருல்லா’ன்னேன். ஆமான்னு தலையாட்டினான். ‘நம்ம தச்சநல்லூரு ரோட்டுலெ தையல் கடை வச்சிருக்கானே, சிவப்பெரகாசம், அவந் தலெ ஒரு லெக்குலெ நில்லாமெ சதா ஆடிக்கிட்டேயிருக்கால்லியா, அவரு ஏன் இதெ சொஸ்தப்படுத்தலே?’ ‘அட ஆக்கங்கெட்ட கூகெ, இவம் போயி அவரெப் பாத்தால்லா காரியம் நடக்கும்?’ நான் அந்தாலே அவனெ மடக்கினேன், ‘என்னடே பிரமு, டாக்டருக்கு ஒரு நாயம், சாமியாருவளுக்கு ஒரு நாயமா?’ அவன் சிரிச்சுட்டான். ‘ஓங் கிட்டப் போயி நின்னு பேசுதேம் பாரு நாந்தாம்லெ கூகெ’ன்னு என் தோள்லெ தட்டிப்புட்டுப் போனான்...

சிரித்தேன். குற்றாலிங்கமும் சிரித்தார். ஒரு கணம்தான். குற்றாலிங்கத்தின் முகம் மீண்டும் தீவிரம் கொண்டது.

...ஆனா, ஒவ்வொரு நிமிசமும் நடக்கிற ஒவ்வொண்ணும் சும்மா நடந்துறலே. நாம உன்னிப்பாக் கவனிச்சா அதுலே ஏதோ ஒரு சேதி ஒளிஞ்சிருக்கத்தான் செய்யும். பாக்கியம் இருந்தா நமக்குப் பாக்கக் கிடைக்கும்...

மடத்தின் வாசலைப் பார்த்தார். தலையை ஆட்டிக்கொண்டார். பிறகு மிக சாந்தமான குரலில் தொடர்ந்தார்.

...அன்னைக்கி பிரமுப் பய கிட்டெப் பேசிட்டுத் திரும்பிட்டேன். சாயங்காலம் அதையே யோசிச்சிக்கிட்டு ஆத்துக்குக் குளிக்கப்

போனனா, சரேல்ன்னுச்சு. அதுநா வரைக்கி மடத்து வாசலுக்கு வந்து சேர்றவுகளுக்கு மட்டும்தான் அன்னதானம் நடந்துச்சு. மறு வாரத்திலெ ரெண்டு வேன் வாங்கினோம். சாப்பாட்டெப் பொட்டலம் போட்டுக்கிட்டு தெருத்தெருவா ஊர்ஊராப் போறது, ஏலாதவொ, யாசகம் பண்ணிக்கிட்டுத் திரியுற வயசானவொ கையிலே தேடிப்போய்க் குடுக்குறதுன்னு கிளம்பீட்டென். இப்போ நாலு வேன் ஓடுது. இந்தப் பக்கம் ஸ்ரீவைகுண்டம் வரைக்கி, இன்னொண்ணு ஆலங்குளம் வரைக்கி, மத்தது சங்கரங் கோவில் வரைக்கி, நாலாவது அம்பாசமுத்திரம் வரைக்கி.

குற்றாலிங்கம் மௌனமானார். எனக்குப் புறப்படலாம் என்று தோன்றியது. மதுரையில் சென்று பழைய நடைமுறைக்குத் திரும்புவதற்கு முன்னால், இவர் சொன்ன கோவர்த்தனத்தையும் பார்த்துவிட வேண்டும். கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். இங்கேயிருந்து மதுரைக்கு மூன்றரை மணிநேரமாவது ஆகும். அங்கிருந்து கரூர் ஒரு மூன்று மணிநேரம். பிறகு கொடுமுடி போய்ச்சேரும்போது காலையில் நன்றாக விடிந்துவிடும். சரியாக இருக்கும்.

என்னா, ரோசனையிலே எறங்கிட்டீய?

பொறப்புடலாம்னு நெனைக்கிறேன்.

நல்லாச் சொன்னேளே. அன்னதான மடத்துக்கு வந்துப்புட்டு வெறும் வகுத்தோடெ போறேளாக்கும். இருங்க, வீட்டுலெருந்து சாப்பாடு எடுத்தாறச் சொல்லியிருக்குதேன். சாப்புட்டுட்டுப் பொறப்புடலாம். அஞ்சு நிமிசத்துக்கு ஒரு வண்டி இரிக்கி மதுரைக்கி. நான் பஸ்டாண்டுலெ கொண்டி ஏத்தி விடுதேன்.

ம்.

சாப்புட்டுட்டுச் சொல்லுங்க. பஸ்டாண்டு நடக்குற தூரம்தான். ஒங்களால முடியும்ன்னா நடந்து போகலாம். இல்லாட்டி ஆட்டோவுலெ போகலாம்...

என் பார்வை பக்கவாட்டு முற்றத்தில் தகரக் கூரைக்குக் கீழ் நின்றிருந்த வேன்களின்மீது தன்னிச்சையாய்ப் பதிந்தது. குற்றாலிங்கம் சிரித்துக்கொண்டே சொன்னார்.

...வேனெல்லாம் கைங்கரியத்துக்கு மட்டும்தான். சொந்த வேலைக்கி எடுத்துக்கிர்றதில்லே. அது நாயமில்லே பாருங்க. இவ்வளவு அண்டா அண்டாவா சமையல் செய்யிறமே, நமக்குச் சாப்பாடு வீட்டுலெயிருந்துதான். நம்ம காணியிலேர்ந்து வர்ற தானியம். மேலே

உக்காந்து கணக்குப் பதியுதவன் நம்மளெக் கைசுத்தமில்லாதவன்னு எளுதீறப் படாதுல்லா...?

மறுபடியும் சிரித்தார் குற்றாலிங்கம். என்னுடைய ஒவ்வொரு அசைவையும் அவர் எவ்வளவு நுட்பமாய்க் கவனிக்கிறார் என்று வியப்பாய் இருந்தது எனக்கு. 'கெட்டிக்கார மனிதர்தான்' என்று மெச்சிக்கொண்டேன். இவர் விலாசம் கொடுத்திருக்கிற கோவர்த்தனம் எப்படிப்பட்டவரோ என்று ஒரு நினைப்பு ஓடியது.

...அவரு கோவர்த்தனம் ஐயாவும் இதே மாதிரித்தான். ஒரு பொஸ்தகம் வாங்குனாலும் சொந்தக் காசுலெதான். தன்னோட செலவுகளுக்குன்னு ஹிண்டு மாதிரி இங்லீஸ் பத்திரிகைகள்லே வாராவாரம் பொஸ்தகங்களைப் பத்தி எளுதுதாருல்லே. அவரு பெரிய படிப்பாளி. நீங்க என்ன வேணும்னாலும் அவர்ட்டெக் கேக்கலாம். பொறுமையாப் பதில் சொல்லுவாரு. நீங்க இங்லீஸ்லேயேகூட அவர்ட்டெப் பேசலாம்...

தீர்த்தபதியின் ஆங்கிலமும், சிவராமனின் ஆங்கிலமும் எனக்கு ஞாபகம் வந்தது. என் கைவசம் உள்ள ஆங்கில வாக்கியங்கள் அதிகபட்சம் போனால் நாற்பது ஐம்பது தேறும், ஐயா. ஏதோ என் தொழிலுக்குப் போதுமான அளவு. மற்றபடி தமிழுக்கு என்ன குறைச்சல்? கோவர்த்தனத்துக்குத் தமிழ் நன்றாகப் பேச வருமில்லையா? தொண்டைவரை வந்த கேள்வியைக் கஷ்டப்பட்டு விழுங்கினேன். இடையில் எதையோ நினைத்துக்கொண்டு குலுங்கிக் குலுங்கிச் சிரித்து முடித்திருந்த குற்றாலிங்கம் தொடர்ந்தார்.

...நமக்குத்தான் இங்லீஸ் சரியா வராது. பள்ளிக்கொடத்திலே படிச்ச காலத்திலேயே குச்சி டி குண்டு டி ன்னுதாம்லா படிச்சது. இட்டு வந்தா தட்டு போடுன்னுதான் எங்க வாத்தியே இங்லீஸ் எலக்கணம் படிப்பிச்சாரு. கோவர்த்தனம் ஐயா வெள்ளெக்காரங்கணக்கா இங்லீஸ் பேசுவாரு. அவருக்கும் நமக்கும் இன்னொரு ஒத்துமையும் உண்டும். நாங்க ரெண்டுபேருமே அந்தக் காலத்துலே ஸ்கூல் பஸ்ட்டு வந்தவோ. என்னா ஒண்ணு, நாந் தமிழிலெ மட்டும், அவரு எல்லாப்பாடத்துலயும்...

வாசலில் ஓர் ஆள் சைக்கிளில் வந்து இறங்கினார். பின் இருக்கையில் பெரிய சாப்பாட்டுக் கேரியர் ஒன்றைக் கயிறால் கட்டியிருந்தது. இவர்கள் இருவரும் சிரித்துக்கொண்டே எழுந்தார்கள்.

...நாஞ் சொன்னம்லா, ஆறுமொவம். இவந்தாம் அது.

கேரியரைக் கட்டியிருந்த கயிறை அவிழ்க்க முனைந்திருந்த அந்த

இளைஞன், இரண்டு கைகளையும் பதியக் கூப்பி எனக்கு வணக்கம் சொன்னான்.

பே ருந்து நிலையத்துக்கு நடக்கும்போது குற்றாலிங்கம் பேசிக்கொண்டு வந்தார். ஊர் மெல்ல மெல்ல அடங்க ஆரம்பிக்கிறது. பல கடைகளில் முகப்பிலுள்ள உருட்டுக் கதவுகளை இறக்கிவிடுகிறார்கள். இருட்டுக்கு ஒத்தாசையாக ஒருவிதமான அமைதி பரவிக்கொண்டிருக்கிறது. அதன் பின்னணியில் குற்றாலிங்கத்தின் குரல் இன்னும் உரத்துக் கேட்கிறது. பத்துப் பதினைந்தடி தள்ளி ஆறுமுகம் நடந்து வருகிறான் திரும்பிப் போகும்போது குற்றாலிங்கத்துக்குத் துணையாகச் செல்வதற்காக.

எனக்குள் ஒரு சித்திரம் உதயமானது... மானசீகமான ஒரு கயிற்றில் ஒவ்வொரு மணியாகக் கோத்துக்கொண்டு வருகிறேன். வட்டம் பூர்த்தியாகிற இடத்தில் பருவட்டான ஒரு பதக்கம் இருக்கிறது பெரியவர். சரி, அவரைச் சந்திக்கும்போது என்ன செய்வேன்? என்ன கேட்பேன்?

லௌகீகமான உதவிகள் எதையும் கேட்க வேண்டியதில்லை. இப்போதே, பெரிய புகார் எதுவும் இல்லாமல்தான் வண்டி ஓடிக்கொண்டிருக்கிறது. சிரமங்கள் என்று பார்த்தால், யாருக்கும் வரக்கூடியவைதாம். சந்தோஷங்கள் எல்லாமே நாங்கள் திட்டமிடாமல் கிடைத்தவை. லௌகீகமல்லாத வேறு ஏதாவது கேட்க வேண்டும் என்றால், அப்படி என்னவெல்லாம் இருக்கிறது என்றே எனக்குத் தெரியாது. ஆக, கேட்பதற்கென்று ஒன்றும் இல்லை... சும்மா அவர் இருக்கும் இடத்தில் இருந்தாலே போதும்...

திடீரென்று காரணம் புரியாத ஒரு உற்சாகம் எனக்குள் நிரம்புவதை உணர்ந்தேன். சருகுபோல லகுவாக மிதக்கின்றன உடம்பும் மனமும். கரை சேர்வது, அல்லது கரையை நீங்குவது என்று இலக்கேதும் இல்லாமல் மிதக்கும் சுகத்துக்காகவே மிதந்துகொண்டிருக்கின்றன.

நாஞ் சொன்னதெத் தவற விட்டுட்டீய போல.

என்று உரத்து ஒலித்தார் குற்றாலிங்கம். உபரியாக என் இடது முன்னங்கையை அழுத்தி ஒரு முறை பிடித்தார். அவர் கரம் விலகிய பிறகும் அந்த அழுத்தம் என் சதையில் மீந்திருந்தது. சன்னமான குரலில்,

ஸாரி.

என்றேன்.

இதுல என்னா இருக்கு. ஒரே ஓர்மையா இருக்குறதுக்கு நாம என்னா வண்டிக் குதுரையா?

என்று சிரித்தார்.

சொல்லுங்க. என்ன சொன்னீங்க?

இல்லே, 'பெரியவரோடெ கௌம்புனதெச் சொல்லீட்டேன்... இந்தக் கைங்கரியத்துக்குள்ளே எப்பிடி வந்து சேந்தேன்னு ஒங்க கிட்டேச் சொல்லலயே. நீங்களும் கேக்கலே...'ன்னேன். நீங்க உள்ளுக்குள்ளெ முங்கிக் கெடந்தீய...

குற்றாலிங்கம் மறுபடியும் சிரித்தார்...

கொஞ்ச நாளாகவே மனத்துக்குள் ஒரு நமைச்சல் ஆரம்பித்திருந்ததாம் குற்றாலிங்கத்துக்கு. தாம் செய்ய வேண்டிய வேலையே வேறு. அதை விட்டுவிட்டு என்னென்னமோ செய்துகொண்டிருக்கிறோம் என்று ஒரு லேசான பதட்டம். ஆனால், தமக்கு விதிக்கப்பட்ட அந்த வேலை இன்னது என்று சற்றும் தெளிவில்லை. யாரோ அல்லது எதுவோ அழைப்பதற்காகக் காத்திருக்கிற மாதிரி அடிமனத்தில் ஒரு படபடப்பு.

அந்தச் சமயத்தில்தான் பெரியவர் வந்து சேர்ந்திருக்கிறார். உடனடியாகத் தம்முடன் வருமாறு அழைத்திருக்கிறார்.

அந்தானைக்கி ஊர் ஊரா அவரோடெ திரியப் போயிட்டேன். கைங்கரியத்திலே எறங்கி பல வருசம் களிச்சுத்தாம்லா புரியிது, வீட்லெ சொல்லப் போயிருந்தா அதகளமாயிருக்கும். கொஞ்ச நாக் காணாமெப் போயிட்டுத் திரும்புனதாலெ, நாம என்ன செஞ்சாலும் சரீன்னு, நம்மளெ ஒரு கேள்வியும் கேட்டதில்லே. 'எதோ, இந்த மட்டுக்குத் திரும்பி வந்தானே, புள்ளெ திருநவேலியிலதாம் இரிக்யான்'னு ஒரு நிம்மதி அவியளுக்கு. சந்யாசியாப் போறதுன்னாத்தானே பெத்தவொ சம்மதம் வேணும். நாமதான் எதுலெயும் சேர்த்தியில்லேல்லா...

என்று சிரித்தார் குற்றாலிங்கம்.

எங்கெங்கோ சுற்றிவிட்டு சங்கரன்கோவில் வந்திருக்கிறார்கள். அன்றைக்கு ஆடித் தபசு. கடுமையான கூட்டம். பெரியவர்களே ஒருவருக்கொருவர் கைகோத்துக்கொண்டுதான் நடமாட முடிந்தது. கைவிலகினால் கூட்டம் தள்ளிக்கொண்டு போய்விடும். அவ்வளவு நெரிசல்.

ஒருவழியாக தரிசனம் முடித்துவிட்டு, கூட்டத்தைத் தாண்டி வந்திருக்கிறார்கள். திருநெல்வேலி செல்லும் சாலையில் நடக்கத்

தொடங்கினார்கள். இரண்டு மூன்று மைல் தொலைவு நடந்திருப்பார்கள்...

அப்பல்லாம் எங்கெ போனாலும் நடெதாம். பெரியவரோடெ நடக்கும்போது ஒடம்பே லேசாயிரும். நடக்குறோம்ங்குறதே பாவிக்காது. ஏதாவது சுலோகத்தெச் சொல்ல ஆரமிச்சு விரிவாக் கதெ சொல்லிக்கிட்டே வருவாரு. ஊர் வந்து சேந்ததே நமக்கு ஒறைக்காது. அப்பிடி ஒரு சுவராசியம்.

முன்னமே ஒரு தடவை எதற்காகவோ ராமாயணத்தைக் குறிப்பிட்டபோதும் குற்றாலிங்கம் 'ராமயாணம்' என்றுதான் சொன்னார்.

கூட்டமெல்லாம் அடங்கி, சாலை வெறிச்சோடிய இடத்தில் தலைவிரித்து நின்றிருந்த மரத்தினடியில் ஒரு வயோதிகர் கிடந்திருக்கிறார். ஆள் நடமாட்டமே இல்லாத இடத்தில் கிடந்த கிழவர், இவர்களைப் பார்த்ததும் வயிற்றில் ஓங்கி ஓங்கி அறைந்துகொண்டாராம். பசிக்காக யாசகம் கேட்கிறாரா, தொடர்ந்து வயிற்றில் அறைந்து தற்கொலை செய்துகொள்ள முயல்கிறாரா என்று குழப்பம் உண்டாகிற அளவு ஆவேசம். பேச இயலாதவர் போல. குழறலாக, 'கபா கபா' என்கிற மாதிரி, அகலத் திறந்த பொக்கைவாயிலிருந்து ஏதோ சத்தம் மட்டும் கேட்டது.

'இந்த லெக்குலெ இப்பிடிக் கெடக்குதாரே, தேடி வந்து யாரு பிச்செ போடுவா'ன்னு பெரியவர்ட்டெக் கேட்டேன். 'நாமதான் போடணும்'னு சிரிச்சாரு. 'நாம துட்டுல்லா போடுவம். அதெச் சாப்பாடாக்குறது எப்பிடி'ன்னு நான் வேகமாக் கேட்டேன். அப்பிடியெல்லாம் பெரியவர்ட்டெ நான் வேகமாப் பேசுனதே கெடையாது பாத்துக்கோங்க. பெரியவரு நிதானமாச் சொன்னாரு, 'அதுவும் நாமதான் செய்யணும்...'

குற்றாலிங்கம் மௌனமானார். பேருந்து நிலையம் வந்துவிட்டது. வளாகத்துக்கு வெளியில் இரவாகவும், உள்ளே பிரகாசமான விளக்குகளின் அடியில் பட்டப்பகல் போலவும் இருந்தது நிலையம். வெளியில், பூட்டிக் கிடந்த ஒரு கடையின் படிக்கட்டில் உட்கார்ந்தோம். குற்றாலிங்கம் பெருமூச்சு விட்டார்...

இவருடைய கேள்விகளுக்கு பதில் சொல்லியபடியே தொடர்ந்து நடந்திருக்கிறார் பெரியவர். குற்றாலிங்கத்தால் வழக்கம்போலப் பின்தொடர முடியவில்லை. கால்கள் பின்னுகின்றன. சட்டென்று

உடம்பு முழுக்க வியர்க்கிறது. இவர்கள் தாண்டி வந்ததும் அந்தக் கிழவரின் அரற்றல் ஓய்ந்துவிட்டது. தள்ளியிருந்து பார்க்கும்போது, மரத்தடியில் கிடப்பது உயிருள்ள மனிதன் மாதிரியே தெரியவில்லை. அநாதரவான இடத்தில் ஒரு மனிதனைச் சாகவிட்டுவிட்டு கண்டு கொள்ளாமல் விலகிப் போன பாவம் ஏழேழு பிறவிக்கும் தம்மைத் துரத்தப் போகிறது என்று பயம் துளிர்த்ததாம் இவருக்குள்.

கையில் சல்லிக் காசு கிடையாது. பெரியவருடன் வந்த பிறகு இவருடைய சமாசாரங்கள் அத்தனையையும் அவர்தான் பார்த்துக் கொள்கிறார். இத்தனை நாட்கள் அவருடன் திரிந்ததில் பெரியவரிடம் கை நீட்டிக் காசு கேட்டதே கிடையாது. அந்தா இந்தா என்று ஒரு மாதம் போல ஆகிவிட்டது. பெரியவரின் ஜிப்பாப்பைக்குள் எப்படிக் காசு வந்து சேர்கிறது என்பதே பெரிய மர்மம்தான். ஆனால், நடந்தே அலைகிற, தானம் கிடைத்த இடத்தில் ஒரு வேளையோ இருவேளையோ சாப்பிட்டுக்கொண்டும், மற்ற சமயங்களில் உபவாசம் இருந்துகொண்டும், வாய்த்த இடங்களில் உறங்கிக்கொண்டும் திரிகிற, சஞ்சாரிகளுக்குக் காசு எதற்கு?

பெரியவரைத் தொடர்ந்து நடப்பதற்குக் கால்கள் கூசுகின்றன. மரத்தடிக் கிழவரைத் திரும்பித் திரும்பிப் பார்க்கத் தோன்றுகிறது. தொலைவு அதிகரிக்க அதிகரிக்க மரத்தடியில் கிடப்பது சவம் என்றே தோன்றத் தொடங்குகிறது. தயங்கித் தயங்கிப் பெரியவரிடம் 'கொஞ்சம் துட்டு வேணுமே' என்று கேட்டாராம். தன் போக்கில் பேசிக்கொண்டு நடக்கிறவர், 'எதுக்கு' என்று விசாரித்தாராம். 'அந்தக் கிளவனாருக்குச் சோறு வாங்கிப் போட' என்று இவர் பதில் சொன்னார். 'எப்பிடி?' என்று அவர் கேட்கிறார்.

இந்தாதானே இருக்கு. கோயில் வாசலுக்கு ஒரு நடை ஓடித் திரும்பீருதேன்.

என்று சொன்ன மறுகணம் பெரியவர் கொடுத்த ஐந்து ரூபாய்த் தாளுடன் சங்கரன்கோவிலை நோக்கி ஓடத் தொடங்கியிருந்தார் குற்றாலிங்கம்.

இரண்டு தயிர்சாதப் பொட்டலங்களுடன் திரும்பி வந்தபோது, கிழவரின் தலையைத் தமது மடியில் கிடத்தி மேல்துண்டால் விசிறிக்கொண்டிருந்தார் பெரியவர்.

தொயந்து நடக்கோம். பெரியவரு கேக்காரு, 'என்னாப்பா என்னமும் பேசமாட்டங்கே?' 'மனசு இப்பத்தாங்கய்யா நெறஞ்சு

கெடக்கு'. அவரு சொல்லுதாரு, 'ஏ குத்தாலோம், நீ பெரிய ஆளப்பா.' நம்மளெக் கேலி பேசுதாரு போலயேன்னு ஒரு சம்சயம். நாஞ் சும்மாயிருந்தேன். 'ஒரே ஒரு ஆளுக்குச் சோறு வாங்கிக் குடுத்தவொடனே மனசு நெரம்பிருதே. சின்ன எடம்தான் போலருக்கு. சீக்கிரம் நெரம்பிருது.' அவரு சிரிக்க ஆரமிச்சுட்டாரு. எனக்கானா, பொடதீலே அறெஞ்ச மாரி ஆயிருச்சு...

திருநெல்வேலியில் அப்போதுதான் புதிதாக ஆரம்பித்து கனஜோராக நடந்துகொண்டிருந்த ஜவுளிக்கடைக்கு இவரை அழைத்துப் போனாராம். முதலாளி பெரியவரைப் பார்த்தும் நடுக்கடையில் வைத்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்திருக்கிறார். இவரை அறிமுகப்படுத்தி வைத்து அவரிடம் விஷயத்தைச் சொன்னாராம் பெரியவர். அவர் உடனடியாகக் கல்லாவிலிருந்து முன்னூறு ரூபாய் எடுத்துக் கொடுத்தார்.

தொளாயிரத்தி எளுபதுலெ உள்ள மின்னூறு, பாத்துக்கோங்க. இது நடந்தது திங்கெக் கிளமெ. பொதங் கிளமெ பிரம்புக்கூடையெ ரெண்டு கையிலெயும் தூக்கிக்கிட்டு விநியோகத்துக்குக் கிளம்பீட்டென். மொதப் பொட்டலத்தெ என் வீட்டு வாசல்லெ ஒக்காந்து ரெண்டு கையையும் ஏந்தி வாங்கிக்கிட்டாரு பெரியவரு. நான் குமுறிக் குமுறி அளுதுட்டேன்...

குற்றாலிங்கத்தின் குரல் நடுங்கியது. இரண்டு பேருந்துகள் தொடர்ந்து வெளியேறின நிலையத்திலிருந்து. சட்டென்று அந்த இடத்தின் ஓசைகள் யாவும் ஓய்ந்துவிட்டதுபோல உணர்வு தட்டியது எனக்கு. ஒரே கணம்தான். சகலமும் மீண்டுவிட்டன.

நம்மூர்க்காரரு பாட்டு எளுதியிருக்காருல்லா. 'அக்கினிக் குஞ்சு'ன்னு. அதேதாம். சங்கரங்கோயில் ரோட்டுலெ பெரியவரு நமக்குள்ளெ ஒரு அக்கினிக் குஞ்செ ஊணிட்டாரு. இன்னைய வரைக்கி அதும் வேகம் அடங்கலே... செரி வாங்க, ரெம்பத் தேரமாயிருச்சு. மணி என்னா பன்னெண்டு இரிக்குமா...?

எனது கைக்கடிகாரம் மின்னணு வெளிச்சத்தில் 'ஆமாம்' என்றது. குற்றாலிங்கம் எழுந்தார். நிலையத்துக்குள் நுழைந்தோம். ஆறுமுகம் என்ற ஒரு நபரும் எங்களுடன் இருப்பதே அப்போதுதான் உறைத்தது எனக்கு.

...என்னைக்காச்சும் மனசு கொஞ்சம் சொணங்கிச்சுன்னு வைங்க, ஒட்டிப் படிஞ்ச வகுத்துலெ பட்டுப் பட்டுப் பட்டுன்னு அடிக்கிற மாதிரிச்

சத்தம் கேக்கும். அந்தாலெ சுதாரிச்சிருவேன். இதுவரைக்கி எத்தனையோ ஆயிரம் பேருக்குக் கைங்கரியம் பண்ணியாச்சு. ஆனாலும், அந்த மரத்தடியிலெ கெடந்த கிளவனாரு மொகம் இன்னமும் மறக்கலே. பெரிய பெரிய மஹான்களுக்கு மட்டுமில்லே, நம்மளெ மாதிரிப் பாமரங்களுக்குக்கூட மரத்தடியிலெ ஞானம் பொறந்துரும் போல. செரிதானே... அது சரி, கேக்கணும்னே இருந்தேன், அயத்துப் போச்சு. நீங்க பத்து மணிக்கெல்லாம் திருநவேலி வந்துட்டேன்னேளே, என்னெப் பாக்க வந்தப்ப சாயங்காலம் நாலு நாலரெ இருக்கும்லா. அதுவரைக்கி எங்கிண இருந்தீய?

நெல்லையப்பரெ தரிசனம் பண்ணினேன். குளக்கரையிலே துண்டெ விரிச்சு ஒரு தூக்கம் போட்டேன். எந்திரிச்சு மொகத்தெக் கழுவிக்கிட்டு நேரே ஒங்களெத் தேடி வந்துட்டேன்.

அடடே, நேரே நம்ம எடத்துக்கு வந்திருக்கலாமே?

கோயிலுக்குள்ளே இருந்தது ரொம்ப இதம்மா இருந்ததுங்க. தூங்கி எந்திரிச்சவொடனே மனசெ நல்லாக் கழுவிவிட்ட மாதிரி மனசு அவ்வளவு நிம்மதியா இருந்தது.

பின்னே. சும்மாவா நெல்லையப்பனெத் தேடி இம்புட்டு சனம் அம்முது. ஆனாலும் நீங்க நேரே நம்ம எடத்துக்கு வந்திருக்கலாம்.

சிவராமன் சார் சொன்னதெ வச்சு, நீங்க விநியோகத்துக்கோ வசூலுக்கோ போயிருப்பீங்கன்னு நெனெச்சேன்.

வளக்கமாப் போறதுதான். இன்னைக்கிப் போகல்லே. பிரதோசம்லா. விரதம் இருக்கிற நாளுலெ அலைய ஏல்றதுல்லே. வயசு? அது பாட்டுக்கு ஏறிக்கிட்டுல்லா போகுது? அரெ நூத்தாண்டு தாண்டியும் ஏளெட்டு வருசம் ஓடிருச்சே. எப்பிடியோ, நம்ம புண்ணியத்திலே பிரதோசத்தன்னைக்கி ஒங்களுக்கும் சிவபெருமான் தரிசனம் கெடைச்சிருச்சு.

என்று சந்தோஷமாகச் சிரித்தார் குற்றாலிங்கம். நானும் சிரித்தேன். நாங்கள் பேசுவது கேட்காத தொலைவில் நின்றிருந்த ஆறுமுகமும் சிரித்தான்.

✠

வைரவன்

செம்பட்டியில் காலைச் சாப்பாட்டுக்காகப் பேருந்து நின்றது. தீர்த்தபதி இறங்கினார். தாராபுரம் நோக்கிச் செல்லும்போது இருக்கும் மனநிலை மதுரைக்குத் திரும்பும்போது இருப்பதில்லை. ஊரைவிட்டு வெளியேறி முப்பது வருடம் ஆகியும் பிறந்த ஊரின்மீது இருக்கும் காதல் சற்றும் குறையவில்லை. சிரித்துக்கொண்டார்.

சாதாரண விலையைவிட ஐம்பது காசு அதிகமாகக் கொடுத்து ஒரு சிகரெட் வாங்கிப் பற்றவைத்தார். பக்கத்தில் சஞ்சிகைகள் விற்கும் கடை. தினந்தோறும் காலையில் காஃபி குடித்துவிட்டு, தி ஹிந்து படிக்காவிட்டால் அந்த நாள் விடிந்த உணர்வே இருக்காது தீர்த்தபதிக்கு. ஒரு ஹிந்து வாங்கலாம் என்று கடையை நெருங்கினார். ம்ஹூம், ஓடும் பஸ்ஸில் வாசிக்க இங்கிலீஷ் பேப்பர் லாயக்கில்லை. தமிழ் வாங்கலாம்.

ஒரு தினமணி குடுப்பா.

மீதிச் சில்லறையை வாங்கிக்கொண்டு திரும்பும்போது, முன்னமே வந்து நின்றிருந்த பேருந்து புறப்படுவதற்காக உறுமியது. பழனி செல்வது. எழும்பவிருக்கும் புழுதியை மறைப்பதற்காக நாசியின் அருக்கில் தடுப்பாக தினமணியை வைத்துக்கொண்டார் தீர்த்தபதி. கண்கள் பஸ்ஸுக்குள் ஊடுருவின. கணத்துக்கிரண்டு முகமாகப் பார்வை பட்டு விலகி வந்தது. ஒரேயொரு முகத்தில் பதிந்து ஊன்றியது.

தெரிந்த முகம் அது. ஜன்னலோர இருக்கையில் முளைத்திருந்தது. தூக்கம் முழுக்க விலகாத கண்கள். இலக்கில்லாமல் வெறித்துக் கொண்டிருந்தது. நாள்க்கணக்காக வளர்ந்த தாடி முகத்தின் கீழ்ப்பகுதியில் கருமை சேர்த்திருந்தது. கண்களில் கீழ்ப்புறம் அடர்த்தியான கருவளையங்கள். ஞாபக அடுக்கில் வேகமாகத் தேடினார் தீர்த்தபதி. பிடிபட மாட்டேனென்கிறது.

பேருந்து மெல்ல நகர்கிறது. ஓட்டுநர் ஓடிவந்து ஏறினார். உரத்த விசில் ஒலியிலிருந்து பிரிந்தது மாதிரி ஒரு தகவல் சட்டென்று உயர்ந்தது. அட,

மதுரை ரயில் நிலையத்தில் காத்திருந்தபோது அறிமுகமான எல்லைஸி முகவர். அவருடைய பெயர் ஞாபகம் வர மறுக்கிறதே.

ஹலோ.

என்று கூவிக் கையாட்டினார் தீர்த்தபதி. அவர் கவனிக்கவில்லை. நிலையத்திலிருந்து வெளியேறி வேகமெடுத்தது பேருந்து... ஆ, ஞாபகம் வந்துவிட்டது!

சந்தானம். ஆமாம், சந்தானம்தான் அவர்.

இன்னொரு சிகரெட் வாங்கிக்கொண்டு கையிலிருந்த தினமணியைப் பிரித்தார். மூன்றாம் பக்கத்தில் காணவில்லை என்ற தலைப்புடன் அச்சாகியிருந்த புகைப்படத்தைப் பார்த்ததும் அதிர்ந்தார்.

அட,! இதுவும் சந்தானம்தான்!

✠

திருவாவினன்குடிக் கோயிலுக்குச் சற்றுத் தள்ளி இருந்தது நகரத்தார் சத்திரம். நான் அங்கே போய்ச் சேரும்போது மத்தியானம் மூன்று மணி ஆகிவிட்டது. அதிகாலையில் வந்திறங்கி, லாட்ஜ் அறை பிடித்து பிரயாணப்பையைப் போட்டுவிட்டு, சரவணப் பொய்கையில் போய்க் குளித்துவிட்டு வந்தேன். முதலில் மலையேறி இறங்கிவிடுவதாகத் திட்டம். தொடர்ந்த பிரயாணத்தின் காரணமாக மலையேறுவது வழக்கம்போல எளிதாக இல்லை.

அதனாலென்ன, அவ்வளவாக நெரிசலில்லாத சந்நிதியில் நின்று, ராஜ அலங்காரத்தில் நின்ற கோவணாண்டியை தரிசித்தபோது உடம்பும் மனமும் சொடக்கெடுத்த மாதிரி இருந்தது. என் மனம் முழுக்கக் கவிந்திருக்கும் ஏகாந்தத்தைப் பகிர்ந்துகொள்கிறவன் மாதிரிப் புன்முறுவலுடன் நின்றுகொண்டிருக்கிறான், தாய் தகப்பன்மீது கோபித்துக்கொண்டு ஓடிவந்த சின்னஞ்சிறுவன்... மலையிறங்கி ஒரு சிறு தூக்கம்.

வழி விசாரித்து நகரத்தார் சத்திரத்தைக் கண்டுபிடிப்பது கடினமாக இல்லை. சத்திர வாசல் வெறிச்சோடிக் கிடந்தது. பழைய காலத் தகரப் பலகையை சுவரில் பொருத்தியிருந்த ஆணிகளிலும் எழுத்துகளிலும்கூடத் துரு ஏறியிருந்தது.

முன்பு சத்திரத்தின் திண்ணையாய் இருந்திருக்கக்கூடிய மேடையில்

மரத்தடுப்பு எழுப்பி இப்போது பெட்டிக்கடை நடந்து வருகிறது. கடைக்காரச் சிறுவன் குறுந்தூக்கத்தில் கிறங்கியிருந்தான்.

நல்ல பசி. காலையில் பேருந்து நிலையத்திலிருந்து அடிவாரம் நோக்கி நடக்கும்போது வரிசையாக ஓட்டல்களைத் தாண்டி வந்த போதும், சாப்பிட மனம் எழவில்லை. தரிசனம் முடிந்து சாப்பிட்டுக் கொள்ளலாம் என்று ஒரு மெத்தனம். மலையிறங்கிய அலுப்பில் உடனடியாகத் தூங்கவேண்டும் என்று ஆசையாக இருந்தது. விழித்தபோது மந்தித்திருந்த இரைப்பை இப்போது சுதாரித்துவிட்டது போல. பெட்டிக்கடையில் தொங்கும் வாழைப் பழத்தாரைப் பார்த்ததும் வயிறு நமநமவென்றது. பையன் விழிக்கட்டும் என்று காத்து நின்றேன்.

சீரற்று ஆடும் ஊசல்போல முன்னும் பின்னும் தயங்கி அசைந்த சிறுவனின் தலை சடாரென்று உதறிக்கொண்டது. எதிரில் நின்ற என்னை மிரண்டு பார்த்தான். அவனுடைய கனவுக்குள் நான் நின்று கொண்டிருக்கிறேன் என்று சந்தேகித்தானோ என்னவோ.

பழம் எப்பிடி?

ரெண்டு மூணார்ரூவாதான்.

என்றான். கண்ணைக் கசக்கிக்கொண்டான். மீண்டுவிட்டான். கடை உயரம் இருந்த ஸ்டூலைவிட்டு எழுந்து வாழைத் தாரின் அடித்தண்டைப் பிடித்தபடி,

எத்தனே?

ரெண்டு குடு. நகரத்தார் சத்திரம் இதுதானே?

ஆமா.

இங்கெ வைரவஞ் செட்டியார்ன்னு...

இருப்பாரே...

அவன் கடையின் பலகைச் சுவரைப் பற்றிக்கொண்டு எட்டிப் பார்த்தான். பிறகு கடைக்குள்ளிருந்த மேசைக் கடிகாரத்தைப் பார்த்தான்.

...எந்திரிச்சிருப்பாரு பாருங்க.

முன்புறம் அவன் வைத்திருந்த பிரம்புக் கூடையில் தோலைப் போட்டுவிட்டு, சத்திரத்தினுள்ளே போனேன். கட்டப்பட்ட காலத்திற்குப் பிறகு பூச்சு எதையும் கண்டிராத மாதிரி அழுக்கும் இருட்டும் மண்டிய

சுவர்கள். இரண்டு பக்கமும் அறைகளைக் கொண்ட தாழ்வாரம் குகைபோல நீண்டிருந்தது. ஒரு சாரிக்குப் பத்துப் பன்னிரெண்டு அறைகளாவது இருக்கும். முதல் அறைக் கதவு திறந்திருந்தது. வெளியில் அலுவலகம் என்று நீல நிறத் தகர போர்டு.

கட்டடத்தின் பிடிவாதமான பழமையுடன் ஒத்துப் போகிற கணக்குப்பிள்ளை மேஜைக்குப் பின்னால் உட்கார்ந்திருந்தவர்,

வாங்க.

என்றார். வழக்கத்தைவிடத் தாழ்வான நிலைப்படி. தலைகுனிந்து உள்ளே நுழைந்தேன்.

எந்தூருலேருந்து வர்றீக?

எனக்குக் குழப்பமாக இருந்தது. சொந்த ஊரைச் சொல்வதா, இப்போது திருநெல்வேலியிருந்து நேரே வருகிறேனே, அதைச் சொல்வதா?

ஏந் தெகைக்கிறீக? ரூம்புதானே வேணும்?

இங்கே வைரவஞ் செட்டியார்ன்னு...

நாந்தேன். ஒக்காருங்க...

மேஜைக்கு முன்புறம் விரித்திருந்த பாயைக் காட்டினார். விடுதி அளவுக்குப் பழைய பாய்தான் அதுவும். விளிம்பில் கோரைகள் பிய்யத் தொடங்கியிருந்தன. ஒரு ஓரத்தில் எண்ணெய்க் கறையால் பழுப்படைந்த தலையணை கிடந்தது. அதன் அடியில் மடித்து வைக்கப்பட்ட போர்வையும் கறுப்பு ஜமுக்காளமும்.

என்னா விசயம்?

நாகர்கோவில் பால்பாண்டி பாக்கச் சொல்லி விலாசம் குடுத்தாரு.

அடடே, அங்கேருந்தா வர்றீக? இருங்க ஒரு காப்பி வாங்கியாறச் சொல்லுறென். தம்பீ, அடேய்... தம்பீ...

என்று உரத்துக் குரல் விடுத்தார்.

இருக்கட்டும். இப்பத்தான் பழம் சாப்பிட்டேன்.

அப்பச் செத்தெ நேரம் போகட்டும் ங்குறீக. சரிதேன். இந்தப் பயலெ வேறெ காணம்.

அவர் சமனமானார். வாசலில் நிழலாடிய மாதிரி உணர்வு. திரும்பிப் பார்த்தேன். அறைகளை நோக்கி ஒரு மொட்டைத் தலைக் குடும்பம்

போகிறது. அவர்களைப் பின்தொடர்ந்த சந்தன மணமும் சலசலப்பும் கொஞ்ச நேரம் நீடித்தன.

சொல்லுங்க, பால்பாண்டி என்னா தாக்கல் சொல்லியனுப்பிச்சாரு?

பெரியவர் வேதமூர்த்தி சம்பந்தமா...

வைரவன் முகம் இறுக்கம் கொண்டது.

அதென்னா, பொசுக்குன்னு பேரெச் சொல்றீக? பெரியவர்ன்னு மாத்திரம்தேன் சொல்லணும்...

குழந்தையைக் கண்டிக்கிற பாவம் இருந்தது அவருடைய குரலில். நான் தழைந்த குரலில்,

ஸாரி.

என்றேன்.

அவுகளெல்லாம் நம்மளை மாதிரிச் சாமானியமானவுக இல்லே. இப்பிடியா, திரும்பத் திரும்பப் பெறந்து சீரளிஞ்சு... பிறவிப் பெருங்கடல்ன்னு கேள்விப்பட்டிருப்பீகல்லே...?

ஆமென்று தலையாட்டினேன்.

...அதெத் தாண்டி நீஞ்சி வந்தவுக அவுக. மறுபெறப்பே கெடையாது. இதுதான் கடோசிப் பெறப்பு. அதுனாலதான் இப்பிடி ஒரு ஒசரம் சித்தியாகியிருக்கு. மேலேருந்து குடுக்குறவன் லேசுப்பட்டவனில்லே. பாத்திரம் அறியாமெப் போடமாட்டான்...

உத்தரத்தை நோக்கிப் பார்வையை உயர்த்தினார். சற்றுநேரம் அங்கேயே லயித்திருந்தது அவருடைய கவனம்.

முன்வழுக்கை வெகுவேகமாக உச்சந்தலையை நோக்கி விரைந்துகொண்டிருந்த தலை அவருக்கு. பின்னந்தலையில் அடர்ந்திருந்த முடியிலும் பாதிக்குமேல் நரை கண்டிருந்தது. மழுங்க மழிக்கப்பட்ட முகம். அகலமான, அண்ணாந்தபோது ரோமம் நிறைந்து தெரிந்த, இரட்டைக் குழாய் மூக்கு. வெகு சீராக வரிசை கட்டிய வெளெரேன்ற பற்கள். ஆரோக்கியமான ஈறுகள். நிரந்தரமான புன்சிரிப்பு பூண்ட முகம். குரல் தீவிரம் அடையும்போது மட்டும் மறைகிற புன்சிரிப்பு.

...வீட்லெ கோவிச்சுக்கிட்டு வந்து மலையேறிக் கோமணத்தோடெ நிற்கிறானே, அவுக அப்பாவெச் சொல்லலே நானு. அவரையும் அவரு

கூட்டாளிக ரெண்டுபேத்தையும் படைச்சுவிட்ட ஈசுவரனெச் சொல்லுறென். நம்ம பெரியவரைப் படைச்சது பிரம்மா இல்லே. அவரு நம்மளை மாதிரி மறுசெம்மம் உள்ள பெறவிகளெத்தாம் படைச்சு விடுவாரு. நம்மல்லாம் பச்செக் களிமண்ணு. சரியா வல்லேன்னு இன்னொரு தபா பெணைஞ்சு உருவமாக்கலாம். பெரியவரெல்லாம் பளிங்குக் கல்லு...

மானசீகமாக யாரையோ வணங்குகிற மாதிரிக் கைகளைக் கூப்பி, கண்களை ஓரிரு கணங்கள் மூடித் தியானித்தார் வைரவன்.

...சொல்லுங்க. நானே பேசிக்கிட்டிருக்கேன். அவுக, அதேன் நம்ம பால்பாண்டி, என்னா சொல்லியனுப்பிச்சாக?

பெரியவரெப் பத்தி ஒங்கள்ட்டயும் விசாரிச்சுக்கச் சொன்னாரு.

பெரியவுகளெப் பத்தி நாம சொல்லுறதுக்கு என்னாங்க இருக்கு? அக்கினிக் குண்டத்தோட மகுமெயெ விட்டில்பூச்சி கிட்டெக் கேக்குற மாதிரி.

கண்களை மறுபடியும் ஒரு கணம் மூடிக்கொண்டார்.

அதில்லேங்க. நீங்க அவர்கிட்டெ எப்பிடி வந்து சேந்தீங்க, ஏன் வந்தீங்கங்கிற மாதிரி...

ஓ. அதுவா...? அதெச் சொல்லலாமே. எம்புட்டு வேணும்னாலும் சொல்லலாம்... அது சரி...

மீண்டும் தீவிரம் கொண்டது வைரவனின் முகம். புன்சிரிப்பு மறைந்த முகத்தின் வெறுமையைப் பார்ப்பதற்கு வெகுவாகச் சங்கடப்பட்டேன்.

...அதெல்லாம் ஒங்களுக்கு எதுக்கு?

திருவண்ணாமலையில் தற்செயலாக கணபதியைப் பார்த்ததிலிருந்து தொடங்கி இப்போது வரையிலான பட்டியலை மூச்சுவிடாமல் ஒப்பித்தேன்.

சொல்லி முடித்தபோது எனக்கு லேசாக மூச்சிறைத்தது. குற்றாலிங்கம் கோவர்த்தனத்தைப் பார்க்கச் சொன்னதை விட்டுவிட்டோமே என்பது ஞாபகம் வந்தது. போகட்டும், ஒருவர் விட்டுப் போனதால் தவறொன்றும் ஆகிவிடாது என்று நானாக ஒரு சமாதானமும் செய்துகொண்டேன்.

பெயர்கள் ஒவ்வொன்றாக உதிர உதிர வைரவனின் முகம் இளகிவந்ததையும் புன்சிரிப்பு மறுபடி வந்து அமர்ந்ததையும் கவனித்து

ஆசுவாசமானேன். வைரவன் பழைய குரலுக்கு மீண்டார்.

ஏயப்பா! நம்ம பெரியவரெ அண்டினவுக இம்புட்டுப்பேரு இருக்காகளா? நான் அவரு பால்பாண்டி ஒருத்தரெத்தான் பாத்திருக்கேன். அதுவும் பெரியவுக இங்கிட்டுக் கூட்டியாந்தாக அவரெ. இல்லாட்டி அப்பிடியொருத்தரு இருக்குறதுகூடத் தெரிஞ்சிருக்காது.

அப்பிடியா!

ஆமாங்க. நான் வருசம் ஒரு தபா பெரியவரெ திருணாமலெலே போய்ப் பாத்துட்டு வருவேன். அங்கிண மன்னாதி மட்டும்தேன் இருப்பாரு. அவருதேன் எந்நேரமும் பெரியவரோட இருக்குறவரு. சரி, அவரு வாங்கிட்டு வந்த வரம் அப்பிடி... அதெல்லாம் எல்லாருக்கும் வாய்ச்சுறாது. பெரியவரு ஸ்பொடம் போட்டுல்லே பாப்பாரு. அதுலெயும், பெரியவரு மடத்திலே இருக்குறாரே, அதான் நீங்க பாத்தீகளே, மன்னாதி, அவரு தீக்கோளி மாதிரி. ஆளெப் பாத்தாத் தரைக்குள்ளே தலையெப் பொதைச்சுருக்கிருமாமே அது, அப்பிடித்தேன், யாருகிட்டெயும் சரியாப் பேசமாட்டாரு. மத்தபடி இம்புட்டுப் பேரு இருக்காகண்றது எனக்கே ஆச்சரியமாத்தேன் இருக்கு...

மன்னாதி என்னிடம் மிகவும் விலாவாரியாகப் பேசினாரே என்று உள்ளூற வியந்துகொண்டேன். ஏனோ வைரவனிடம் அதைச் சொல்ல வேண்டுமென்று தோன்றவில்லை.

...அது சரி, இன்னின்னாரைப் பார்த்தேன்னு பட்டியல் சொன்னீங்களே தவுர, நாங் கேட்ட கேள்விக்கி பதில் சொல்லலையே...?

என்று சிரித்தார் வைரவன். நான் பதில் சொல்ல வாயெடுக்கும் முன்பே, கையால் அமர்த்தினார்.

...சொல்லாட்டிப் பரவாயில்லே, விடுங்க. இம்புட்டுப் பேரு ஒங்களை நம்பிப் பேசியிருக்காக. அடுத்தடுத்த ஆளைப் பத்திச் சொல்லி விலாசம் குடுத்து விட்டுருக்காக. அவுகளையெல்லாம் விடப் பெரிய ஆளா நானு? அதுலெயும் பால்பாண்டியெல்லாம் ரெண்டு வார்த்தெ சாஸ்தியாப் பேசிக்கிற மாட்டாரு. நீங்க என்னா வேணும்னு சொல்லுங்க. நான் எனக்குத் தெரிஞ்சதெப் பகுந்துக்கிர்றேன்.

ஐ யாவைத் தேடி மொதமொதல்ல போன ஆளு நாந்தேன். அவரோடெ ஊர்ஊராச் சுத்தியிருக்கேன். பதினாரு வருசம். கடோசியா இங்கெ பளனிக்கி வந்து சேர்ந்தம். என்னா நெனைச்சாரோ தெரியலே,

‘வயிரவா, நீ இங்கிணயே இருந்துக்க. ஒனக்கு இதுதேன் எடம்.’ன்னு விட்டுட்டுப் போயிட்டாரு. நம்ம வேற கணக்குப் போட்டு வச்சிருந்தம். இந்தக் காசு பணம் சாப்பாடு போக்குவரத்து இதெல்லாம் இல்லாமெ, காவி வேட்டியெக் கட்டிக்கிட்டு ‘எஞ் செவனே’ன்னு கெடக்குறதாத்தானே திட்டம். பெரியவரு இப்பிடிச் சொல்லீட்டாரு. என்னான்னு மறுத்துப் பேச?

எதுனாலே இந்த ஊர்லெ விட்டுட்டுப் போனாரு?

நம்மகூட்டாளிக்கி அதெல்லாம் என்னான்னுங்க புரியும்? நாள் முளுக்கக் கூடவே அலையுறம். சொன்ன வேலையெல்லாம் தப்பாமெச் செய்யிறம். என்னமோ ஒண்ணெக் கத்துக் குடுக்கப் போறாருன்னுதானே நம்பிக்கிட்டிருக்கம்? திடீல்னு தெய்வவாக்கு இப்பிடிச் சொல்லுது. அம்புட்டுத்தேன். ஒடனே மடங்கீற வேண்டியதுதேன். ஆனாலும், மனசு கேக்குமா? ரெம்ப நாளைக்கி யோசிச்சுக்கிட்டுத்தேன் கெடந்தேன். எதோ வாக்குச் சனியாலெதான் இப்பிடி விடுபட்டுட்டமோன்னு ஒரு ஆத்தாமே.

ஏன், எதாவது தப்பாச் சொல்லிட்டீங்களோ?

அட நீங்க ஒண்ணு. தப்பு ரைட்டெல்லாம் நம்மளெ மாதிரி சாமானிய செம்மங்களுக்குத்தேன். பெரியவரு மாதிரி மஹான்களுக்கு நாம சொல்லுற வார்த்தெயிலே ஏதாச்சும் குறிப்பு கெடைக்கும். நம்மளெ அறியாமெச் சொல்லுறமா, நெசம்மா நம்ம சொல்லுற சொல்லாயிரும் அது.

அந்தச் சமயத்திலே நீங்க என்ன சொன்னீங்க அவர்ட்டேன்னு ஞாபகம் இருக்கா?

அதெல்லாம் எப்பிடி மறக்கும்? இங்கெ பளனி வந்து எறங்கினதுலேயிருந்து என்னெல்லாம் பேசுனம் னு மனசுக்குள்ளெ அளுத்தமாப் பதிஞ்சு கெடக்கால்லியா? இம்புட்டுக்கும் எம்பதாம் வருசம் பொரட்டாசி மாசத்துலே நடந்த சங்கதி. நேத்துத்தேன் நடந்த மாதிரி அம்புட்டுப் பச்சையா யாவுகமிருக்கு...

இவர்கள் முந்தின நாள் இரவு பழனி வந்து சேர்ந்திருக்கிறார்கள். மறுநாள் காலை ஊரே துக்கத்தில் ஆழ்ந்துவிட்டது. கே பி சுந்தராம்பாள் காலமாகிவிட்டார். கிட்டத்தட்ட இவர்கள் வந்திறங்கிய அதே நேரத்தில். வைரவனுக்குக் கே பி யெஸ்ஸிடம் அபாரமான பக்தி.

அந்தம்மா பாட்டுன்னா எனக்கு உசிருங்க. ‘தண்டபாணித்

தெய்வமே'ன்னு அந்தம்மா உருகுறதெக் கேக்கும்போது, நம்ம மட்டும் கேக்கலே சாச்சாத் முருகனும் அந்த எடத்துலெ நம்ம கூடவே இருந்து கேட்டுக்கிட்டிருக்குறான்னு தோணும். அப்பிடியொரு சாந்நித்தியமெல்லாம் பாட்டுக்காரவுக எல்லாருக்கும் வாச்சிறாது...

என்றார்.

வைரவன் குடும்பத்துக்கு இஷ்ட தெய்வம் பழனி முருகன்தான். தாயார் ரஞ்சிதம் ஆச்சி நினைத்தபோதெல்லாம் பழனிக்குப் புறப்பட்டுவிடுவார். சிறுவன் வைரவன்தான் அவருக்கு ஆண்பிள்ளைத் துணையாக வருவான். அடிவாரத்தில் கேபியெஸ் கறுப்பு நிற அம்பாஸிடரில் வந்து இறங்குவதை இளம் வயதில் பல தடவை பார்த்திருக்கிறாராம் வைரவன்.

அந்தம்மா பளீர்னு வெள்ளெச் சேலெ கட்டி, நெத்தியிலே பளீர்னு விபூதிப் பட்டெ போட்டிருக்கும். கார் நெறம் கறுப்புங்களா, ராத்திரியெ விட்டு பகல் பிரிஞ்சு வர்றதுமாதிரி இருக்கும்.

என்று சிரித்தார்.

அன்று பகல் முழுவதும் கேபியெஸ் பற்றியே பெரியவரிடம் பேசிக்கொண்டிருந்திருக்கிறார். பெரியவர் தலையை ஆட்டி மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தாராம். ஒருபுறம், ஓயாமல் பேசிக்கொண்டே இருந்தாலும், இன்னொருபுறம் மனத்துக்குள் ரஞ்சிதம் ஆச்சியின் கையைப் பிடித்தபடி தாம் பழனிக்கு வந்துபோன ஒவ்வொரு சந்தர்ப்பமாக நினைவு வந்தவாறிருந்தது.

அத்தனெ வருசமா எங்க ஆத்தா இல்லாத ஒலகத்துலெதானே திரிஞ்சிக்கிட்டிருந்தன்? அன்னைக்கி என்னமோ, அவுக எங்கூடவே இருக்கிற மாதிரித் தோணுச்சு.

என்று சொன்னபோது, வைரவனின் கண்கள் பிரகாசமாக ஒளிர்ந்தன அறுபது வயதை நெருங்கிவிட்ட சிறுவனின் கண்கள்.

மாலைத் தினசரி ஒன்றில் கேபியெஸ் திருவிளையாடல் படத்தில் ஒளவையாராக நடித்த காட்சியின் புகைப்படம் வெளியாகியிருந்தது. வைத்த கண் வாங்காமல் அந்தப் படத்தையே பார்த்துக்கொண்டிருந்தார் வைரவன். அந்தத் திரைப்படத்தைப் பார்க்கிறவர்களுக்கு கேபியெஸ் உயிருடன்தானே இருப்பார்? என்ன, தொட முடியாது. நாம் ஒன்று கேட்டால் பதில் வராது. அவ்வளவுதானே. நடமாட்டமெல்லாம் இருக்கத்தானே செய்யும்?

அம்புட்டுத்தேன். தேன்கூடு கலைஞ்ச மாதிரி ஒரே கேள்வியா வந்து சுத்திக்கிருச்சு. தோணத் தோண பெரியவர்கிட்டேக் கேட்டுக்கிட்டே யிருந்தன். அவரு ஒரு வார்த்தெகூட பதில் சொல்லலே.

ஆக, திருவிளையாடல் படத்தின் கடைசிப் பிரதி இருக்கும் வரைக்கும் கேபியெஸ்ஸுக்கும் அழிவில்லை. அதாவது கேபியெஸ் என்ற உருவத்துக்கு. அவர் நடித்த ஏதாவது ஒரு படத்தைப் பார்த்தவர்கள் மனத்தில் கேபியெஸ்ஸின் பிம்பம் பதிந்திருக்கும் அல்லவா? அப்படியென்றால், அந்த பிம்பத்தைச் சுமந்திருக்கும் ஒரேயொரு மனம் இருக்கும் வரைக்கும், கேபியெஸ்ஸின் உருவமும் அழியாமல்தானே இருக்கும்?

கிறுக்கு எதுவும் பிடிச்சிருச்சோன்னு பயந்துட்டன். அம்புட்டு வேகமா ஓடுது மனசு. மேலே, நவ பாஷாணத்துலெ கட்டி வச்சிருக்கே, அதுவும் ஒரு உருவம்தானே? உள்ளுக்குள்ளாறே, என் அப்பன் இருக்குறானா இல்லியா? எல்லாக் கண்ணுக்கும் தட்டுப்படுவானா அவன்? வேணுமிங்குற ஆளுக்குத் தெரிவான். வேணாமுங்குறவனுக்கு? சரி, முருகனெப் பிடிச்சு வச்சாரே, போகரு சாமி, இவன் உருவம் இருக்குறவரைக்கும் அவரும் இருக்கத்தானே செய்வாரு?

வைரவனின் குரல் வெகுவாகக் குழைந்துவிட்டது. ரகசியம் பேசுகிற தோரணையில் சொன்னார்.

வந்தவுக யாருமே திரும்பிப் போகலேன்னு தோணீருச்சுங்க. பயமாயிருச்சு. உசிரோட இருக்குறவுக நிரம்பின உலகமால்லியா இது? ஒரு ஒடம்புக்கும் இன்னொரு ஒடம்புக்கும் இடைவெளியிலே, ஒடம்பில்லாதவுக நூத்துக்கணக்கான பேரு நிரம்பி இருக்கிற மாதிரி பெரமெ.

இரவு முழுவதும் ஒருவிதமான பீதியில் கழிந்திருக்கிறது.

நகரத்தார் சத்திரத்தின் இலவச வாடிக்கையாளர்களாக பெரியவரும் வைரவனும் படுத்திருந்தார்கள். அறை முழுவதும் நிரம்பியிருந்த காற்றுவெளியில் ஏகப்பட்ட உயிர்கள் நிரம்பியிருக்கின்றன. ஏதேதோ உருவங்கள் நகர்கிற மாதிரி, பேச்சரவங்கள் கேட்கிற மாதிரி, கண்ணை மூடினால் முகத்துக்கு அருகில் ஏதோ வனமிருகம் வந்து மோந்து பார்க்கிற மாதிரி...

ஒரு நிமுசம்னா ஒரு நிமிசம்கூட ஒறங்கலேங்க. கண்ணெ இமைச்சாத் தொலெஞ்சோம், நம்மளெ யாரோ தூக்கீட்டுப் போயிருவாகன்னு ஒரு பயம். ராத்திரி எப்படா முடியும்னு ஆயிருச்சு.

சேவல் கூவும் ஒலி கேட்டதாம். அப்போதுதான் நிம்மதியாக உணர்ந்திருக்கிறார் வைரவன். தொடர்ந்து, சத்திர வாசலைக் கடந்து செல்லும் பால்வண்டியின் மணிச்சத்தம். இன்னும் இருள் பிரியவில்லை. ஆனாலும், தம்முடைய பூமிக்கு வந்து சேர்ந்துவிட்ட ஆறுதல் உணர்வு பொங்கியதாம் வைரவனுக்கு.

விடிந்து, பகல் பொழுதின் பரபரப்புகள் வேகமெடுத்தபோது, வேறு சில கேள்விகள் பிறாண்ட ஆரம்பித்தன.

1. ராத்திரி மூச்சுத் திணற வைத்த முகங்களில் எந்த முகத்தின் அடையாளமும் இப்போது நினைவில் இல்லையே, அது ஏன்?

2. அந்த முகங்களில் அம்மாவின் முகம் இருக்கிறதா என்று நான் ஏன் பார்க்கவில்லை?

3. பேசுவதற்கும் தொடுவதற்கும் உடம்பில்லாமல் இருக்கும் என் அம்மா, பழைய அம்மாவாகத்தான் இருந்திருப்பார்களா?

4. உடம்பு இல்லை என்பதால், முகமும் இல்லாமல்தானே இருந்திருக்கும்? பிறகு எதை வைத்து அவர்களை அம்மா என்று இனம் காணுவது?

5. அம்மா இருந்தபோது நான் இருந்த பிராயத்தில் இல்லையே இப்போது, திரும்ப அம்மா வந்திருந்தால் அவர் என்ன பிராயத்தில் இருந்திருப்பார்? உடம்பு இல்லாதவர்களுடைய வயசை எதை வைத்து முடிவு செய்ய?

6. இன்னும் பத்திருபது வருடத்துக்குப் பிறகு அம்மா திரும்பி வந்தால், அவரைவிட வயசில் மூத்தவனாக நான் ஆகியிருப்பேன் இல்லையா?

இந்தக் கேள்விகளையும் சேர்த்துப் பெரியவரிடம் கேட்டாராம். அப்போது இவர்கள் இருவரும் இடும்பன் சந்நிதிக்கு வெளியில் இருந்த கல்மேடையில் உட்கார்ந்திருந்தார்கள்.

பெரியவரு நிதானமான ஆளுங்க. நாம எட்டு வாக்கியம் பேசுனா அவரு 'ம்' னு ஒரு சொல்லுல பதில் குடுப்பாரு. நான் பொங்கிப் பொங்கிப் பேசுறதெக் கேட்டுட்டு, அவரு நீளமா ஒரு கேள்வி கேட்டாரு. 'வைரவா, நீ பாத்த உருவங்களெ ஒன்னாலெ தொட முடியாதில்லையா?' ன்னாரு. நான் தலையாட்டுனென். 'அப்ப அவுங்களாலேயும் ஒன்னைத் தொட முடியாதே?' வாஸ்தவமான கேள்விதானங்க. 'அப்புறம் எதுக்காக பயந்தே?'

நீங்க என்ன சொன்னீங்க?

அப்ப இன்னும் சின்ன வயசு இல்லேங்களா? துடுக்கா பதில் கேள்வி போட்டேன். ‘செத்துப் போனவங்களெத் திரும்பப் பாத்தா பயமா இருக்காதா சாமீ?’ பந்தடிச்ச மாதிரி அவரு பதில் கேள்வி போட்டுட்டாரு. ‘சரி, ஒங்கம்மா வந்திருந்தா பயந்திருப்பியா, சந்தோஷப்பட்டிருப்பியா?’

அட. இதுக்கு என்ன பதில் சொன்னீங்க?

பதில் என்னான்னு சொல்ல. பேச்சு நின்னவன் மாதிரித் தலையெக் குனிஞ்சுக்கிட்டேன். பொடனியிலே அடுத்த அடி விளுந்துச்சு, ‘இதென்னப்பா இது, ங்கொம்மாவுக்கு ஒரு நாயம், மத்தவங்களுக்கு இன்னொண்ணா...?’ எனக்குப் பட்டுன்னு கண்ணு தொறந்த மாதிரி ஆயிருச்சு...

ஜன்னல் வழியாக வெளியில் தெரிந்த தெருவைக் கொஞ்சநேரம் பார்த்துக்கொண்டிருந்தார். சுழலும் கூரைவிசிறியின் க்ரீச்சொலி திடீரென்று ஓயத் தொடங்கியது. மின்சாரம் போய்விட்டது போல. வைரவனின் கவனம் அறைக்குள் திரும்பியது. கைவிசிறியை அனிச்சையாக எடுத்துக்கொண்டார்.

...எல்லாம் கணக்காத்தான் நடக்குதுங்க. அததுக்கு ஒரு நாயம் இருக்கு. நமக்குப் புரியலே, பிடிக்கலேன்னாத்தான் பிரச்னையாயிருது. ஏ தம்பீ, திருநாவுக்கரசு...

அறையைக் கடந்து ஓடிய பையன் திரும்பி வந்து,

என்னாங்க பெரியய்யா?

என்றான்.

புதுப் பால் வந்துருச்சா?

வந்துருச்சு.

நீங்க என்னா சாப்புடுறீக, காப்பியா சாயாவா?

எது வேணாச் சாப்பிடலாம்.

ராசா, நல்லதா ரெண்டு காப்பி கொண்டா. தம்ளரெ நல்லாக் களுவி எடுத்தா, என்னா?

வாக்கியத்தின் இரண்டாம் பகுதி ஆரம்பிக்கும் முன்பே பையன் பறந்துவிட்டிருந்தான்.

இருங்க, வந்தர்றேன்.

என்று எழுந்து சென்றார் வைரவன். கட்டிடத்தின் பின்புறம் நோக்கிப் போனார்.

கணக்குப் பிள்ளை மேஜையின்மீது கிடந்த திருமண அழைப்பிதழில் என் கவனம் பதிந்தது. தலை கிழிக்கப்பட்ட உறை பக்கத்தில் கிடந்தது. அழைப்பிதழை எடுத்துப் பார்த்தேன். மணமகன் பெற்றோர் பெயர் தெய்வத்திரு. கரு உ முத்தையா செட்டியார் தெய்வானை ஆச்சி. மணமகள் பெற்றோர் நா வே அழ வீரப்பன் செட்டியார் உண்ணாமலை என்ற ரஞ்சிதம்.

அ வரு என்னெய இங்கே விட்டுட்டுப் போயிட்டாரா, தண்ணிக்குள்ளாறெ சொகுசாக் கெடந்தவனைத் தரையிலே தூக்கிப்போட்ட மாதிரி ஆயிருச்சு.

ஈரக் கால்களை அறைவாசல் நார்விரிப்பில் உதறித் தேய்த்தபடி சொன்னார் வைரவன்.

...ஆனா, அதும் ஒரு வகைக்கி நல்லதாத்தேன் போச்சு...

அவர் என்ன சொல்கிறார் என்று புரியவில்லை எனக்கு. பேச ஆரம்பித்தபோது, நிரந்தரமாகப் பெரியவருடன் தங்க இயலாமல் போனது பற்றி வைரவனுக்கு வருத்தம் இருக்கிறது என்றுதான் புரிந்துகொண்டிருந்தேன்.

...பெரியவரோடெயே இருந்திருந்தன்னா, அவரு கைகாட்டுற எடத்தெ மட்டும்தேன் பாத்திருப்பேன். இப்பப் பாருங்க, என் இஸ்டத்துக்குப் பாக்குறன். அப்பிடிப் பாக்குறதாலெதேன் பெரியவரோடெ அருமையும் இம்புட்டுன்னு தெரியிது...

வைரவன் சிரித்தார்.

...ஒரு வாரம் பத்து நாளெப்போல ரொம்பத் தெகைச்சுப் போயிக் கெடந்தேன். ஒரு நா காலையிலே எந்திரிச்சுப் பல் விளக்கிட்டுருக்கேன்... அன்னைக்கிக் கோயில்லெ எதோ விசேசம். இன்னம்பொளுதே முளுக்கா விடியலே. அதுக்குள்ளாறே, எறும்புக் கூட்டம் மாதிரி சனம் நெரியிது. குளிச்சுட்டு, நாமளும் தரிசனத்துக்குப் போகலாம்னு வெளியே வாரேன். அடிவாரத்திலே ஒரு பொம்பளெ மயங்கி விளுந்துட்டா. அந்த எடமே பரபரன்னு ஆயிருச்சு. யாரோ ஒரு பொம்பளெ பக்கத்திலே ஒக்காந்து முந்தாணியாலெ விசுறுறா. யாரோ ஒரு ஆளு சோடா வாங்க ஓடுறான். இன்னம் நாலைஞ்சுபேரு கூட்டத்தெ வெலகி விசாலமா நிக்கச் சொல்றாக. கூட்டமும் வெலகி, காத்தோட்டமா

ஒரு வட்டத்த உண்டாக்குது. இத்தனைக்கும் அந்தப் பொம்பளெ கூட வந்தவரு மலைச்சுப் போயி, அளுதுக்கிட்டு நிக்கிறாரு. புருசங்காரரு போல...

ம்.

...அஞ்சே நிமுசம்தான். யாரோ ஜட்கா பிடிச்சாறாக. இந்தம்மாவெ எடுத்துப் போட்டுக்கிட்டு ஆசுபத்திரிக்கி நகந்துட்டாக. கூட்டம் பளையபடி 'முருகனுக்கு அரோகரா'ன்னு பெறப்புட்டுருச்சு. நான் மலையேறுனேன். அன்னைக்கு மனசு ஒரு நெலையிலே இல்லையா. யானெப் பாதையிலே போயிட்டேன். மயங்கி விளுந்தவளுக்கு விசிறினாளே, அவ என்னா இவளெப் பெத்த தாயா? யாரோ ஒருத்திதானே? அம்புட்டுத்தேன், ஒரு நிமிசம் கிறுகிறுத்துருச்சு. பாதி வளியிலெ நின்னு கீளே அடிவாரத்தெப் பாக்குறன். வெறும் தலைகளாத் தெரியிது. ஒண்ணோட ஒண்ணு இறுக்கித்தெச்ச கறுப்பு சமுக்காளம் மாதிரி. அம்புட்டுக் கூட்டமும் ஒர்த்தனுக்கொத்தன் ஒறவுகாரனா ரொம்பிக் கெடக்குற மாதிரித் தோணீருச்சு.

ஆஹா.

...அத்தனெ வருசமும் ஒரு வலி மாதிரி நெஞ்சுக்குள்ளாறெ ஒதுங்கிக் கெடந்ததுல்லே எங்க ஆத்தா? அந்த நாவுகம் அப்பிடியேதான் இருக்கு. வலி மட்டும் காணாமெப் போயிருச்சு...

வைரவன் மீண்டும் சிரித்தார். நானும் கலந்துகொண்டேன்.

...இன்னொரு பாடமும் கிடைச்சது. இந்த ஒரு நாக் கூட்டமே இப்பிடி நெரிசலா இருக்கே. இன்னம் வந்தவுங்களெல்லாம் இங்கிணயே தங்கிட்டா பளனி என்னாகும்? இதே கதெதானே பூமிக்கும்?

பித்தளை டபரா தம்ளரில் டிக்காக்ஷன் காஃபி வந்து சேர்ந்தது. நான் சட்டைப்பைக்குள் கைவிட்டேன். பையன் சிரித்துவிட்டு வெளியில் ஓடினான்.

...விருந்தாடி வந்துட்டு, அதென்னா பளக்கம்? சோப்புக்குள்ளாறே கை விடுறது? நமக்கு இங்கெ அக்கவுண்ட்டு இருக்கு. காசெ வைங்க. நா மதுரைக்கி வரும்போது பாத்துக்கிருவம்!

கட்டாயம். எங்க வீட்டுலெயே நீங்க வந்து தங்கலாம்.

தங்கிட்டாப் போச்சு... எங்கெயோ விட்டனே? ஆ...ங். வந்தவுக தங்குறதெப் பத்தி. ஆனா, இதுகூட நானாக் கண்டுபிடிச்சதில்லையாம். சினிமாவுலெ ஒருத்தர் பாட்டெளுதிட்டாராம்.

அப்பிடியா?

அவரும் எங்கூர்க்காரருதானாமே. உண்ணாமலெ பாடியே காட்டீட்டா. 'வந்தவரெல்லாம் தங்கிவிட்டால் இந்த மண்ணில் நமக்கே இடமேது?'

தாளம் இன்றி, அபஸ்வரமாகப் பாடினார் வைரவன். ஆனால், சும்மா சொல்லக்கூடாது. ஓதுவார்களுக்கு இருக்கிற மாதிரி கணீரென்ற குரல். அவர் பாடியவிதத்தில் அந்தப் பாட்டும் ஏதோ பதிகம் போலவே தொனித்தது.

எந்த உண்ணாமலெ?

அதாங்க, எங்க அண்ணன் மக.

நீங்க ஊரெ விட்டு வந்தப்ப அவ சின்னக் கொழந்தேன்னு சொன்னீங்கல்லே?

வைரவன் சிரித்தார்.

வாஸ்தவம்தேன். அதெச் சொல்லாமெ விட்டது பெசகுதேன். பதினாறு வருசம் அலெஞ்சிட்டு, இங்கே வந்து பெரியவர் என்னெப் பதியம் போட்டாரா. சத்திரத்தெ மேல்பார்வெ பாத்துக்கிட்டு நாம் பாட்டுக்கு இருந்தேன். இது நகரத்தார் சத்திரம்தானே. எங்கூர்க்காரரு ஒருநா குடும்பத்தோடெ எடம் கேட்டு வந்தாரு. என்னெ அவருக்கு அடெயாளம் தெரியலே. சின்ன வயசிலெ பாத்ததில்லே? எனக்கும் மூஞ்சி முத்தி, முடி கொட்ட ஆரமிச்சிருந்தது. ஆனா, அவரெப் பட்டுன்னு தெரிஞ்சிருச்சு எனக்கு. மனுசங்களுக்கு ஒரு வயசுக்கப்பறம் வயசாறதில்லேல்லங்க...?

வைரவன் கடைசி மிடறு காஃபியைக் குடித்து முடித்தார். மேல் துண்டால் உதடுகளை மெலிதாக ஒற்றிக்கொண்டார். ஜன்னலின் புறமாகச் சென்று பதிந்தது பார்வை.

...ஏகப்பட்ட விசயம் சொன்னாரு அவரு. எங்க அப்பச்சி காலமாயிட்டாகளாம். லேனா அண்ணனுக்கு யாவாரத்திலே கொஞ்சம் கை சொணக்கம். எங்க பெரியக்கா வீட்டுக்காரரு ஏதோ கையாடல் பண்ணி செயில்லே இருக்காராம். உண்ணாமலெ சடங்காயிப் பெரிய பொம்பளெயாயிருக்காம்...

மறுபடியும் என் முகத்தில் பார்வையைக் கொண்டுவந்து நிறுத்தினார்.

...இதெயெல்லாம் விட, எங்க அண்ணமுண்டி, அவுகதேன் வள்ளி

மதினி, அவுகளுக்குத் தலைக்குள்ளாறே எதோ கட்டியாம். தலைமுடியெ முளுக்க எறக்கிட்டாகளாம்...

பெருமூச்சு விட்டார் வைரவன்.

...மிச்ச விசயமெல்லாம் என்னெ ஒண்ணும் செய்யலே. மதினியெப் பத்தி அவரு சொன்னதும் உள்ளுக்குள்ற ஒரு நடுக்கம். வள்ளி மதினி நல்ல பித்தளெ நிறம். நல்ல ஒசரம். தீர்க்கமான மூக்கு. கோயில் உற்சவரு எறங்கி நடந்து வாரது மாதிரி இருப்பாக. பாக்குற யாருக்கும் விளுந்து கும்பிடணும்னு தோணும்... தலெ முடி அம்புட்டு நீளம். எங்க ஆத்தா இருந்தவரைக்கும் தெனோமும் மருமகளெ உக்காத்திவைச்சு தலையெக் கோதிச் சிக்கெடுத்துச் சீவிவிடும். எங்க ஆத்தாளுக்கப்பறம் நான் தாயார்ன்னு நெனைச்சது மதினியெத்தேன்... தாக்கல் கேட்டதிலேயிருந்து மனசுக்கு ரெம்பக் கஸ்டமாயிருச்சு.

இன்னொரு பெருமூச்சு. நாசி விடைத்து ஒடுங்கியது.

...அந்த வாரக் கடைசியிலே ஊருக்குப் போனேன். அண்ணன் என்னெப் பாத்தவொடனே அளுதாரு. எப்பிடியாக்கொத்த தைரியசாலி. நிமுந்த மனுசன். ஆத்தா செத்தப்பக்கூட அரளாதவரு. எனக்குத் தாங்கலே. நானும் கொஞ்சம் கலங்கீட்டென்...

அமைதியாய் இருந்தார். எதையோ விழுங்குகிற மாதிரிக் குரல்வளைப் புடைப்பு இரண்டு மூன்று தடவை ஏறித் தாழ்ந்தது.

...பெறகென்ன, ஒண்ணுலெ ரெண்டுலெ போய்க்கிர்றதுதேன், வந்துக்கிர்றதுதேன்.

ம்.

ரெண்டு விசயம் தெளிவாயிருச்சுங்க.

சொல்லுங்க.

ஒண்ணு, காவி கட்டிக்கிட்டு, சொந்தபந்தத்தெ விட்டு வெலகியிருந்தாத்தேன் சாமியாருங்கிறதில்லே. ஊரார் வீட்டு சாவுலெ போய் நின்னு துக்கம் கேக்குறமா இல்லியா? எங்க விளுந்தாலும் சாவு ஒண்ணுதானே? அடுத்தவன் வீட்டு சாவுக்கு அளவும் செய்யலாம். நம்ம வீட்டு சாவெ வேத்தாள் மாதிரி வேடிக்கையும் பாக்கலாம்... ரெண்டாவது, இம்புட்டுத் தவதாயத்தெ வச்சிக்கிட்டு பரதேசியாப் போகணும்னு நெனெச்சா நடக்குமா? பெரியவரு மகான் இல்லியா, நம்ம உள்மனசு தெரிஞ்சுதேன் தீச்செ குடுக்காமெ விட்டுப்புட்டாரு...

வைரவன் சிரித்தார். நான் சும்மாயிருந்தேன்.

...இந்தா, அடுத்த மாசம் உண்ணாமலெ மகளுக்குக் கல்யாணம் வச்சிருக்காக. நம்ம ஒறமொறெப் பையன்தேன். சாமியார்த் தாத்தனா லச்சணமாப் போயி நின்னு ஆசீர்வாதம் பண்ணீட்டு வர வேண்டியதுதேன்.

வைரவன் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்...

அறைக்குத் திரும்பி ஒரு குளியல் போட்டுவிட்டு, பக்கத்தில் இருந்த ஓட்டலில் இரவுணவை முடித்துக்கொண்டு வந்தபோது ஆழ்ந்த, நிலை மறந்த உறக்கம் எனக்காகக் காத்திருந்தது. கலங்கலாய் என்னை மொய்த்த கனவுகளில், இனம் காண முடியாத வெவ்வேறு ஊர்களில் வெவ்வேறு நபர்களுடன் நான் உட்கார்ந்து உரையாடிக்கொண்டிருந்தேன். முகமற்ற யாரோ ஒருவரின் கதையை நான் மனமொன்றிக் கேட்டுக் கொண்டிருந்தபோது, முதுகைத் தட்டியது ஒரு கரம். திரும்பிப் பார்த்தேன். வைரவனேதான். அப்போதும் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார் அவர்.

✠

கோவர்த்தனம்

மீனாட்சியம்மன் தரிசனம் முடித்துப் பேருந்துக்குத் திரும்பும் சுற்றுலாக் குடும்பங்கள் பெரும் ஓசையுடன் தெலுங்கில் கலகலத்துக் கடந்தன. தன்னுடைய மனநிலைக்கு நேர் எதிராய் அவர்கள் சிரித்துக்கொண்டு நடப்பதை ஆர்வமின்றிப் பார்த்தாள் சித்ரா. அவர்கள் கூட்டம் மேலப் பட்டமார் தெருவில் திரும்பியது. மேலாளர் அறை ஜன்னலில் கோபுரம் மட்டும் மீந்து நிரம்பியது.

இந்தக் கிளைக்கு இவள் அதிகம் வந்ததில்லை. ஏ ட்டி எம் மில்தான் பணம் எடுப்பது. சம்பளம் நேரடியாகக் கணக்கில் சேர்ந்து விடும். ஓரிரு மாதங்களுக்கொருமுறை சந்தானத்திடம் பாஸ் புத்தகத்தைக் கொடுத்தனுப்பிப் பதிந்துகொள்வாள். அவர்மீது இந்தக் கிளை ஊழியர்களுக்கு நல்ல மரியாதை உண்டு. அவர்களில் பலரும் சந்தானத்தின் பாலிஸிதாரர்கள்.

பதிவாகிவந்த பாஸ் புத்தகங்களைப் பிரித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள் சித்ரா. வங்கி மேலாளர் வரவழைத்த குளிர்பான சீசாவைக் கையில் இறுக்கிப் பிடித்தபடி, நினைவுக்கு வந்த பெயர்களையெல்லாம் விசாரித்து மேலாளரைச் சித்ரவதை செய்துகொண்டிருந்தார் மாமா. மேலாளர் ஷெனாய் நகர் கார்ப்பரேஷன் பள்ளியில் இவரிடம் கணக்குப் பாடம் படித்தவராம்.

எறும்பு கடித்ததுபோல சுதாரிப்புத் தட்டியது சித்ராவுக்கு. சந்தானம் கணக்கில் ஆயிரம் ரூபாய் குறைகிறதே. நேற்றுத்தான் எடுத்திருப்பதாகப் பதிவு சொல்கிறதே. உள்ளுணர்ச்சி விம்மித் ததும்ப, தலைப்புக்குள் கைவிட்டு ரகசியமாகத் திருமாங்கல்யத்தைத் தொட்ட விரல்களைக் கண்களில் ஒற்றிக்கொண்டாள். மேலாளரிடம் பாஸ்புத்தகத்தை நீட்டினாள். கை நடுங்கியது.

ஸார், இது ஏட்டியெம்லே பணம் எடுத்த என்ட்ரிதானே?

ஆமா, ஏது புதுசாக் கேக்குறீங்க? ஒங்ககிட்டெயும் கார்டு இருக்கில்லே.

அவ தன்னோட பதட்டத்திலெ என்ன வேணாக் கேப்பாடா ரஹீமு.

இது எந்த ஊர்லெ உள்ள ஏட்டியெம்லெ எடுத்ததுன்னு பாத்துச் சொல்ல முடியுமா ஸார்?

ஓ. சொல்லலாமே.

கம்ப்யூட்டர் திரையில் தேடிப் பார்த்துச் சொன்னார். பழனியில் எடுக்கப்பட்டிருக்கிறது. உணர்ச்சி வெளியில் சிந்தாமல் அடக்கச் சிரமப்பட்டாள் சித்ரா... திரும்பும்போது மாமா கேட்டார்:

கொழந்தே, ஒன் புருஷன் கார்டையெல்லாம் பத்தரமா வச்சிப்பானில்லையோ? பணம் எடுக்கிற ரகசிய நம்பரை எங்கேயும் எழுதிக்கிழுதி வச்சிருக்க மாட்டானே?

அவரா, ஆள் ரொம்பக் கெட்டி மாமா. அவரேதான் எடுத்திருக்கார். சந்தேகமேயில்லே.

மனத்துக்குள் இறங்கி உட்கார்ந்திருக்கும் ஆறுதலை மாமா பிய்த்துப் போட்டுவிடுவாரோ என்று பயமாக இருந்தது.

✠

1

...ப ண்ணாரியிலிருந்து திம்பம் வழியாக மைசூர் செல்லும் மார்க்கத்தில் நடந்துகொண்டிருந்தேன். நாலாம் ஜாமத்தில் எழுந்து நடப்பது, வெய்யில் முற்றத் தொடங்கும் நேரத்தில் எங்காவது உட்கார்ந்துவிடுவது, திரும்பவும் வெய்யில் தாழ்ந்ததும் நடக்கத் தொடங்குவது என்று நாட்கணக்காக நடந்து வந்துகொண்டிருக்கிறேன்.

தவிர, அடுத்தடுத்த வேலைகளின் பளு என்ற ஒன்று இல்லாமலிருக்கும்போது, காலம் ஒரு உறுத்தலாக உங்களிடம் கிடப்பதில்லை. அதன் காரணமாகவே, தொலைவு பற்றிய பிரமைகளும் உண்டாவதில்லை. நடந்து அளக்க முடியாததல்ல பூமி என்பது தெரிவதற்குப் பெரிய ஞானமெல்லாம் தேவைப்படாது. சும்மா நடந்து பார்த்தால் போதும்!

அந்த நாட்களில் நான் செய்த ஒரே வேலையும் அதுதான்.

எனக்குத் தொடர்பேயற்ற ஒரு எந்திரம் தன் கால்களை முன்நீட்டிச் சென்றுகொண்டேயிருப்பது போன்ற அனுபவம் அது.

இறைக்கும்தோறும் ஊறும் கிணறுபோல நடக்கும்தோறும் என் திராணி கூடிக்கொண்டே போகிற மாதிரி உணர்வேன்.

நடக்க நடக்க என்முன்னால் பாதை நீண்டுகொண்டு போகும். விளிம்பில்லாமல் விரிந்துசெல்லும் மைதானம்போல உலகம் தட்டுப்படும். 'தனியாக இருக்கிறோம்' என்ற உணர்வு ஒருபோதும் என்னைத் தொற்றியதில்லை. ஒரு மரம்போல இன்னொரு மரம் இல்லை, ஒரு பொழுதுபோல இன்னொரு பொழுது இல்லை. வேடிக்கை பார்ப்பதை ஒரு வேலையாகச் செய்யத் தொடங்கிவிட்டால், முடிவற்று வேடிக்கை பார்த்துக்கொண்டே இருக்கலாம்.

குறிப்பாக ஒரு மலைச் சாலையில் சுழன்று சுழன்று மேலேறும்போது, பள்ளத்தாக்கின் ஓங்கி உயர்ந்த மரங்களும் உங்கள் பாதத்துக்கு வெகு கீழே செடிகள்போலத் தலை காட்டி நிற்குமா, பூலோகத்துக்கும் ஆகாய லோகத்துக்கும் இடையில் அந்தரத்தில் கால்பதித்து நிற்கிற மாதிரித் தோன்றும். சீதோஷ்ணமும் மேற்கொண்டு நடந்துகொண்டே இருக்கத் தூண்டும். விசுவாமித்திரர் திரிசங்கு சொர்க்கம் என்று ஒன்று உருவாக்கினாராமே, அதில் வசிக்கும் அனுபவம்தான். ஆனால், பூலோகத்தை நோக்கித் திரும்பும் ஆசை மட்டும் துளிக்கூட என் மனத்தில் இல்லை, அந்த நாட்களில்.

அதிகாலை முதல் நடந்து கால்கள் ஓய்ந்த முற்பகல் பொழுது சற்று ஓய்வெடுக்கலாம் என்று ஒரு மரத்தடியில் அமர்ந்தேன். முதுகுக்கும் கொஞ்சம் ஓய்வு தேவைப்பட்டது. மல்லாந்து படுத்தேன். ஆகாயம் காட்டிய இளநீலம் மிருதுவாகப் படர்ந்திருந்தது...

லே சாகக் கண் அயர்ந்திருப்பேன் போலும். யாரோ தொட்டு எழுப்புகிற மாதிரி ஒரு உணர்வு. கண் திறந்து என் உடம்பு அசைந்ததில் மிரண்டதுபோல சற்றுத் தொலைவுக்குத் தத்தி நகர்ந்தது அந்தக் குரங்கு. என்னை உறுத்துப் பார்த்தது. கர்ப்பிணிக் குரங்கு. அதன் கண்களையே பார்த்துக்கொண்டிருந்தேன். அதன் பார்வையிலும் உடற்சலனங்களிலும் இறுக்கம் குறைந்து வருவது தெரிகிறது. கண்கள் நிதானமுறுவதும் தெரிகிறது.

யதேச்சையாகப் பக்கத்தில் வரும் பறவைகளை இப்படிக் கவனித்திருக்கிறேன். பார்வையால் மட்டும் தீண்டும்வரை பிரச்னை இல்லை, ஒரு யுகம் கூட பரஸ்பரம் பார்த்துக்கொண்டேயிருக்கலாம். உடலில் லேசாக ஒரு அசைவு தென்பட்டுவிட்டால் போதும், உடனடியாக மிரண்டு எழுந்து பறந்துவிடும்.

பொதுவாகக் குரங்குகள் இப்படித் தனியாக வருவதில்லை. நாலைந்து பேர் சேர்ந்துதான் வருவார்கள். ஆளுக்கொருபக்கம் தாவிக்கொண்டும், தொற்றிக்கொண்டும், குதித்துக்கொண்டும், ஓடிக்கொண்டும் இருப்பார்கள். முதல் பார்வைக்கு, வெளித்தெரியாத ஒரு ஒத்திசைவு அவர்கள் இயக்கத்தில் இருப்பது புலப்படாது. பரவசமானாலும், பயந்து ஓடினாலும், தாக்குவதற்கு முன்னேறினாலும், சூட்சுமமானதொரு ஒற்றைக் கட்டளையின் பிரகாரம் அவர்கள் நடந்துகொள்வது மெல்லமெல்லத்தான் தெரியவரும். ஒன்று, எல்லாரும் கூடி நண்பர்களாவார்கள். அல்லது எல்லாருமாகச் சேர்ந்து நம்மைத் துரத்துவார்கள்.

மெல்ல மெல்லத் தயங்கித் தயங்கி என் வலதுகையை நீட்டினேன் படுத்தவாறேதான். அது கொஞ்சநேரம் நீட்டிய கையையும் என் முகத்தையும் மாறி மாறி வெறித்தது. நீட்டிய கையை மடக்காமலே எழுந்து உட்கார்ந்தேன். அது சற்று நகர்ந்தது என்னை நோக்கி. தலைக்கடக்கமாக வைத்திருந்த தோள்பையை எடுத்துத் திறந்தேன். அது உடனடியாகத் தத்திப் பின்வாங்கி, தன் பழைய இடத்தில் சென்று அமர்ந்துகொண்டது.

பைக்குள் இருந்த வாழைப்பழத்தை எடுத்து நீட்டினேன். பழத்தையும் என்னையும் மாறிமாறிப் பார்த்தது. சலனமுற்ற பார்வை சமனப்பட்டு, என் முகத்தில் ஸ்திரமாக நிலைத்ததும் ‘வா’ என்கிற மாதிரித் தலையசைத்தேன்.

அருகில் வந்தது. இடது கையை நீட்டிப் பழத்தை வாங்கிக்கொண்டது. தைரியத்தைக் கூட்டிக்கொண்டு முன்னேறி வந்துவிட்டாலும், அது இன்னமும் ஆசுவாசமாகவில்லை என்பது அதன் வயிறும், கறுத்த மார்க்காம்புகளும் ஏறித் தாழ்வதிலிருந்தே புரிந்தது. என்றாலும் இருக்கும் இடத்தைவிட்டு நகராமல் பழத்தை சாவகாசமாக உரித்துத் தின்றது.

நான் மறுபடியும் கைநீட்டினேன்.

பழம் தந்த தைரியமோ என்னவோ, இந்த முறை குரங்கும் தன் வலதுகையை நீட்டியது. இயல்பாகவே என் உள்ளங்கை கொஞ்சம் அகலமானது. குரங்கின் கை என் கையின் பாதிக்குள் அடங்கிவிட்டது.

அதன் கையில் மெல்லிய நடுக்கம் ஓடிக்கொண்டிருப்பதை நான் உணர்ந்த அதேவேளையில் என் கையில் இருந்த ஆதுரத்தைக் குரங்கும் உணர்ந்திருக்க வேண்டும். என் கையைப் பிடித்தவாறே வேறு

திசைகளிலும் சாதாரணமாகப் பார்க்கத் தொடங்கியது.

எவ்வளவு நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தோம் என்பது தெளிவில்லை. ஆனால், அதன் உடம்புக்குள் மின்சாரம்போல ஒரு துடிப்பு ஓடிக்கொண்டிருப்பதையும், தன் இனத்துக்கு வெளியில் கிடைத்த உறவை அந்தக் குரங்கு ஆனந்தமாக ஏந்திக்கொண்டிருக்கிறது என்பதையும் அறிந்தபோது, என் மனம் உருகிய மெழுகின் பதத்தை எட்டியிருந்தது. குரங்கின் உள்ளங்கையில் துடிப்பது அதன் உயிர்தானா, வயிற்றுக்குள் முடங்கிக் கிடக்கும் மற்றொரு உயிரின் துடிப்பா. என் முன்னங்கையின் ரோமக்கால்கள் குத்திட்டு எழுந்தன.

தொலைவில் லாரி ஏறிவரும் ஓசை உரத்துக் கேட்டது. சடாரென்று குரங்கின் கைக்குள் நடுக்கம் அதிகரித்தது. கையை இழுத்துக்கொண்டு பின்வாங்க முயன்றது. என் பிடியைத் தளர்த்தி அதை விடுவித்தேன். அருகிலிருந்த மரத்தை நோக்கி அது ஓடும் என்றுதான் எதிர்பார்த்தேன். நிதானமாகத்தான் நடந்து சென்றது.

மரத்தில் ஏறி ஒரு கவையில் சென்று உட்கார்ந்துகொண்டு என்னை மீண்டும் பார்த்தது. அந்த ஒரு கணத்தில் நாங்கள் இரண்டு உடம்புகள் கொண்ட ஒரே உயிர் என்பதை உணர்ந்தேன்.

நானும் எழுந்து நடக்கத் தொடங்கினேன். வழக்கத்தைவிடவும் விசை கூடிய நடை. கண்ணில் படும் செடிகொடிகளில், தலையுயர்த்திப் பார்க்கும் ஓணானிடத்தில், நாலைந்து செடிகளின் உச்சிமீது சாவகாசமாக நீண்டு படுத்திருந்து காலடியோசை கேட்டதும் சரசரசரவென ஓடி மறையும் பச்சைப்பாம்பினிடத்தில், உச்சிகளை உரசிக் கொஞ்ச முனையும் பாக்கு மரங்களில் என்று எங்கெங்கும் உயிரின் நாதம் ஒலித்தவாறிருப்பதையும், தன்னைத் தக்கவைத்துக்கொள்ளும் தவிப்பாக அது எங்கெங்கும் மௌனமாய் நிரம்பியிருப்பதையும் கண்டேன்.

உச்சமாக, சாலையோரத்தில் சிதறிக் கிடக்கும் கூழாங்கற்களிலும் உயிரின் துணுக்கு ஒட்டியிருப்பதைக் கண்டேன்.

பள்ளிக்கூடத்தில் ஏதோவொரு போட்டிக்குப் பரிசாகக் கிடைத்த பாரதியார் கவிதைகளில் நான் படித்து இதுநாள்வரை சற்றும் புரியாமல் இருந்த கவிதையொன்று மின்னல்போலப் பொருள் கொண்டது.

வையகத்தே சட வஸ்துவில்லை...

ஒருவிதமான சிலிர்ப்பு உடலெங்கும் வியாபித்து அடங்கியது. அடுத்த இரண்டு நாட்களுக்கு மனம் கட்டுக்குள் அடங்காமல் திமிறியது.

பறிகொடுக்கவிருந்த பொருள் பத்திரமாகக் கையில் தங்கிவிட்டதுபோல ஒரு பரவசம். சலனம் கொள்ளும் எதைப் பார்த்தாலும் பரபரப்பு. நிறங்களும் வடிவங்களும் கூடுதல் அழுத்தத்துடன் என் மனத்தில் ஏறி ஏறி அமர்ந்து கொள்கின்றன. ராஜ்யத்தை விடுத்துப் போகவும், போதிமரம் என்றெல்லாம் தேடி அலையவும் வேண்டியதில்லை போலும். ஒரு கர்ப்பிணிக் குரங்கின் கைகுலுக்கல் போதும்.

இப்படி உச்சிக்குப் பறந்தேறுவதுபோலவும், அதலபாதாளம் நோக்கித் தலைகீழாக வீழ்ந்துகொண்டேயிருப்பது போலவும் ஸ்திரமின்றி மனம் ஊசலாடுவது எனக்கு சகஜம்தான்.

சில நாட்கள், விடிந்ததிலிருந்தே மனத்தில் அழுத்தமான கனம் ஏறி அமர்ந்திருக்கும். பல் துலக்க எடுத்த வேப்பங்குச்சியிலிருந்து, மூன்றாவது கை மாதிரி உடன் தொங்கிவரும் தோள்பை, காலைப் பொழுதின் இளங்குளிர்காற்று, புலரியைக் கொண்டாடும் பறவையொலிகள் என சகலமும் ஒரு மாபெரும் அபத்தத்தின் வீச்சாகத் தென்படும்.

கசப்பின் கூண்டுக்குள் சிக்கிக்கொண்ட மாதிரி உணர்வேன். இத்தனை காலமும் என்ன செய்துவந்திருக்கிறேன்? கிட்டத்தட்ட இருபத்தைந்து வருடங்கள் பூமியில் வாழ்ந்திருக்கிறேன். சாப்பிடக் கிடைத்தது. தங்குமிடம் கிடைத்தது. உடுத்தக் கிடைத்தது. படிக்கக் கிடைத்தது. ஆனாலும், உள்ளுக்குள் ஒரு நிறைவின்மை சதா அலையாடிக்கொண்டுதான் இருந்து வந்திருக்கிறது.

எனக்கென்று யாருமில்லை. நானும் யாருக்காகவும் இருந்ததில்லை. காற்று அடித்துச் செல்லும் திசையில் உருளும் குப்பைக் காகிதம்போல, தனியாகக் கிடந்திருக்கிறேன். பிரியம் அன்பு என்றெல்லாம் புத்தகங்களில் வாசிக்கும்போது, அது என்ன மாதிரியான உணர்வு என்று அறிந்துகொள்ள எவ்வளவெல்லாம் துடித்திருக்கிறேன்.

போகட்டும், இனி அந்த வேதனை கிடையாது. சுற்றியிருக்கும் சகலத்திலும் அன்பின் ரசம் பூசியிருக்கிறது. கடந்த வருடங்களில் திசையறியாமல் தேசாந்திரியாய்த் திரிந்து இந்தியா முழுவதும் சுற்றியதில், தொடர்ந்து வாழ்ந்து கழிப்பதற்கான வலுவான காரணம் என்று எதுவும் தட்டுப்படாதிருந்தது. கர்ப்பிணிக் குரங்கின் மூலம் மாபெரும் செய்தியொன்று என்னை வந்தடைந்திருக்கிறது.

எல்லா உயிரும் தனிதான். தாயாரின் வயிற்றில் இருக்கும்வரைதான் இரண்டறக் கலந்திருக்க முடியும். வெளியேறிய பிறகு, எல்லா உயிரும்

தனித்தனிதான். ஆனால், உயிர் தனி வஸ்துவில்லை. அது ஒரு தாதுமண்டலம். அதற்குள் நுழைந்தவர் எவரும் ஒருவருக்கொருவர் நிகரானவர்கள்தாம். விரும்பியோ விரும்பாமலோ ஒரே நியதிக்குள் கட்டுப்பட்டவர்கள்தாம். அல்லது, ஒரே நியதிக்குள் சுதந்திரமானவர்கள்தாம். தன்னந்தனியனாகவும், நினைவுகொள்ளாத காலத்திலிருந்து தொடர்ந்துவரும் முடிவற்ற சங்கிலித்தொடரின் பிரிக்கமுடியாத கண்ணியாகவும் ஒரே சமயத்தில் உணர்ந்தேன்.

கழற்ற முடியாத பெரும் சுமையாகிவிட்டது உடம்பு, தேவையில்லாமல் சுமந்துகொண்டிருக்கிறேன் என்று அடிக்கடி தோன்றியதே, அது மாபெரும் பிசகு. எப்போது வேண்டுமானாலும் இறக்கிவைத்துவிடக்கூடிய சுமைதான் அது. உடம்பு வெறும் கற்பிதம்தான். அதை விட்டு வெளியேறுவது சுலபம் என்பதில் சந்தேகமில்லை. எப்போது வேண்டுமானாலும் வெளியேறிவிடலாம்.

ஆனால், உடம்புக்குள் புகுந்து உடம்பென வடிவெடுத்து வெளிப்போந்து உலவுவது, இயற்கையின் மாபெரும் மர்மம் என்று தோன்றுகிறது. புலப்படாத சூட்சுமத்தின் பல்லாயிரக்கணக்கான ரேகைகள் எனக்குள்ளும், ஒரு குரங்குக்குள்ளும், வாடிக் கருமை கொள்ளத் தொடங்கிவிட்ட வாழைப்பழத்தினுள்ளும், மௌனசாட்சியாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த சாலையோரக் கூழாங்கல் முதல் பருக்கைக்கற்கள் புழுதித் துகள்கள் என சகலத்திலும், சமமாக நிரவியும் விரவியும் கிடப்பதை உணர்ந்தபோது என் உடம்பெங்கும் ஒரு பரபரப்பு. யாருக்குமே பார்க்கக் கிடைக்காத ஒன்றைப் பார்க்க வாய்த்துவிட்ட மாதிரி தேகமெங்கும் மனமெங்கும் பரபரப்பு.

வெயில் ஏற ஏற, பரபரப்பின் தீவிரம் வலுத்து வருகிறது. மரையில் பொருந்தாத ஆணி மாதிரி எல்லா இடத்திலும் தொடர்பற்றவனாக என்னைக் கருதிக்கொண்டது பிசகு. என்னைச் சுற்றி நிகழும் சகலமும் என்னை அச்சாணியாகக் கொண்டே சுழல்கிறது...

ச ற்றுத் தூரத்தில் தெரிந்த கிராமம் நெருங்கி வந்திருந்தது. உடல் லேசாகிவிட்டமாதிரி இருந்தது. நான் நடக்கவில்லை, மிதந்து வந்திருக்கிறேன்...

நான் நினைத்ததுபோல அது கிராமமல்ல. சிறு நகரம். கிராமத்தின் தன்மையை முழுக்க இழந்துவிடாத நகரம். முற்றிய முற்பகல் பொழுதிலும் சாவதானமாக உட்கார்ந்து தேநீர் குடித்துக் கொண்டிருந்தவர்களின் எண்ணிக்கை பத்துக்குக் குறையாது. ஆனால், பேச்சொலியே கிடையாது. மௌனத்தின் வழி தொடர்பு

கொள்கிறவர்கள் மாதிரி அவரவருக்குள் ஆழ்ந்து கிடந்தார்கள்.

புகையடித்த பாலில் கலந்த, சீனிக்குப் பதிலாக நாட்டுச் சர்க்கரை சேர்த்த, வெறும் வெந்நீர்ப் பதத்திலிருந்த தேநீர் அமிர்தம்போல ருசித்தது. 'வாழ்வின் ருசி' என்று கற்பிதம் செய்துகொண்டேன். அடடா, பூமிதான் எவ்வளவு திறந்திருக்கிறது. முன் உச்சிப்பொழுதின் வெளிச்சம்தான் என்னமாய் ஒளிர்கிறது. பார்க்கும் ஒவ்வொன்றும் எவ்வளவு பேரழகாய்ப் பொலிகிறது... அப்போதும் ஒரு கவிதைதான் நினைவில் வந்தது.

பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா

நின்றன் பச்சைநிறம் தோன்றுதையே நந்தலாலா

கேட்கும் ஒலிகளெல்லாம் நந்தலாலா

நின்றன் கீதம் இசைக்குதடா நந்தலாலா...

எழுந்து நின்று வேட்டியைச் சரிசெய்துகொண்டேன். மைசூர் நோக்கி நடக்கக் கிளம்பினேன்.

கால்கள் வழக்கத்தை விடவும் துரிதமாக இயங்கின. முழங்கால் மீண்டும் சோரும்வரை நடந்து தீர்த்தபோது வெயில் நன்கு முற்றி வடியத்தொடங்கியிருந்தது. பொதுவாக, பகல் வேளைகளில் நான் நடப்பதில்லை. அதிகாலைகளிலும் சாயங்காலங்களிலும் மட்டுமே நடை. பகல் பொழுதில் எங்காவது ஓய்வாகக் கிடப்பேன். ஆனால், இந்த நாள் வழக்கமான நாள் இல்லையே.

எங்காவது ஒதுங்கலாம் என்று இடம் பார்த்தேன். தார்ச்சாலையின் இடதுபுறம் மிகப்பெரிய ஏரிக்கரை தொடங்கியது. கோட்டைச் சுவர்போல உயர்ந்து நின்ற மண்கரையின் உச்சிக்கு ஏறுவதற்கு அங்கங்கே ஒற்றையடிப்பாதைகள் இருந்தன.

கரைமீது ஏறி நின்றபோது சமுத்திரம்போல அலைபுரண்ட ஏரி இரண்டு கண்கள் கொள்ளாமல் விரிந்து கிடந்தது. எனக்கு நீச்சல் தெரியும். நன்றாகவே நீந்தக் கூடியவன். நீர்நிலையைக் கண்டால் இயல்பாகவே உடல் பரபரக்கும். உடனடியாக இறங்கிவிடுவேன். அதிலும், அந்த வெயில்நடைக்குப் பிறகு தண்ணீருக்குள் விழுந்து கிடப்பது எவ்வளவு இதமாக இருந்திருக்கும்?

ஆனால், நீருள் இறங்கும் ஆசை அறவே அற்று ஏரியை வெறித்துக் கொண்டிருந்தேன். நான் இறங்கினால் ஏரியின் நீர் மட்டுமல்ல, அதன் தனிமையும் கலங்கிவிடும் என்று தோன்றியது. நீருக்குள் வாழும் உயிர்க்

கூட்டத்தின் தனிமைக்கும் தொந்தரவு, நீர்ப்பரப்பின்மீது வளையங்கள் எழுப்பும் காற்றுக்கும் தொந்தரவு... சாலையை நோக்கிக் கரை சரியுமிடத்தில் முளைத்து உயர்ந்து ஓங்கி நின்ற மரத்தின் பாதத்தில் அமர்ந்தேன்...

தனிமை அது இது என்றெல்லாம் பெரிதாக யோசித்தவன் இல்லை நான். பிறந்ததிலிருந்தே தனியாகத்தான் வளர்ந்துவந்திருக்கிறேன். ஆசிரியர்கள், சக மாணவர்கள், வெளிமனிதர்கள் என்று எத்தனையோ பேர் மத்தியில் வளர்ந்தாலும் 'நான் தனியாய் இருக்கிறேன்' என்ற உணர்வு என்னைவிட்டு நீங்காதிருந்தது.

ஆனாலும், அதுபற்றி யோசித்ததில்லை. மற்றவர்களிடமிருந்து ஒரு இம்மி பரிவு அதிகமானாலும், ஒரு இம்மி உதாசீனம் அதிகமானாலும் அது நான் அநாதை என்பதன் காரணமாகத்தான் என்பது எனக்குத் தெரியும். ஆனால், அதைப்பற்றியெல்லாம் பெரிதாக அலட்டிக்கொண்டதில்லை. முட்டைக்கருவை மூடிய உறைபோல என்னைப் போர்த்திய தனிமை எனக்குக் கிடைத்த வரமா சாபமா என்று யோசித்ததில்லை. அது சம்பந்தமாக மகிழ்ச்சியோ துக்கமோ கொண்டதில்லை.

கடந்த ஒரு மாதமாகத்தான் தொடர்ந்த யோசனையும் அலைக்கழிப்பும். பால்ய நாட்களின் ஆழத்துக்குள் நினைவறியாமல் புதைந்து கிடந்த எதுவெல்லாமோ மேற்பரப்புக்கு வந்து என்னை அல்லாட வைத்தன. இனிமேல் என்னால் சிரிக்கவே முடியாதோ என்றெல்லாம் தோன்றியது.

அத்தனைக்கும் காரணமான அந்தச் சம்பவம் மிகமிகச் சாதாரணமானது. வேறொரு நாளில் நானே பார்த்திருந்தால்கூட அதிர்வு எதையும் எனக்குள் விளைவித்திருக்காது, ஒருவேளை, யாருடைய திட்டப்படியோ நிகழ்ந்து கழிந்த அந்தப் பாழ் தினத்தில் நான் இருந்த பதநிலைதான் காரணமாக இருக்க வேண்டும்...

அ ன்றும் வழக்கம்போல ஒரு டீக்கடையில் நின்றிருந்தேன். ஆந்திர மாநிலத்தில் உள்ள மாச்செர்லா என்ற சிற்றூர் அது. முந்தின நாள், அமராவதியில் சென்று புத்த ஸ்தூபியைப் பார்த்துத் திரும்பியிருந்தேன். ராஜ்யத்தைவிட்டு ஒரு ராத்திரியில் கிளம்பிய அரசகுமாரன், அழிவற்ற சாம்ராஜ்யம் ஒன்றை நிறுவப் புறப்பட்டதுவும், அதன் ஸ்தூலச் சின்னங்களான ஸ்தூபங்களும் பல்கலைக்கழகங்களும் சிதிலமாக மிச்சமிருப்பதையும் பார்த்தபோது ஏற்கெனவே சதா மனத்தில் நிரம்பியிருக்கும் வெறுமைக்கு அடர்த்தி அதிகமாகிவிட்டது.

சாயங்கால வேளை. பகல் பொழுதின் பரபரப்புகள் அனைத்தும் படிப்படியாக முறுக்கிழந்து இருட்டுக் குழிக்குள் முடங்க ஆயத்தமாவதை வேடிக்கை பார்த்துக்கொண்டு டீக்கடை பெஞ்ச்சில் அமர்ந்திருந்தேன். தியானம் போன்ற அமைதி மெல்ல இறங்கிக்கொண்டிருந்தது.

அந்தப் பொழுதில் நிரம்பியிருந்த சாந்தத்தின் ஒருமையைக் குலைக்கும் விதமாக ஓர் அலறல் கேட்டது. ஊரிலிருந்து வெளியேறும் பாதையில் ஊரை நோக்கி சிறு கும்பல் வருகிறது. பத்திருபது பேர்வரை இருப்பார்கள். அதில் ஒரு பெண் குரல் ஓங்கிக் கேட்டது. கூட்டத்தின் முன்னணியில் ஓடி வந்துகொண்டிருந்தவனுடைய மடித்து நீட்டிய முன்னங்கைகளில் நீளமானதொரு வஸ்து கிடந்தது. சுமை பொறுக்க முடியாமல் கால் இடற இடற அவன் ஓடி வருகிறான். அவன் கையில் இருப்பது ஜடப் பொருள் இல்லை, ஒரு பாலகன். சிறுவனுடைய கால்களும் தலையும் தரை நோக்கித் தொங்கி ஊசலாடின.

என்னருகிலும் எதிர்பெஞ்ச்சிலும் சாவகாசமாக அமர்ந்திருந்தவர்கள் துள்ளி எழுவதைப் பார்த்தேன். கும்பல் என் அருகில் வந்து கடக்கும்போது, சுமையுடன் ஓடியவனின் விழிகள் சிவந்திருப்பதையும் முகம் முழுவதும் கண்ணீரா வியர்வையா என்று நிதானிக்க முடியாத ஈரம் படர்ந்திருப்பதையும் கவனித்தேன். பின்னால் மாரிலும் தலையிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு கதறியவாறு தொடரும் பெண்ணோடு இணையாக இரண்டு மூன்று பெண்கள் ஓடினார்கள்.

என்னருகில் நின்றிருந்த முதியவர், கும்பலின் வாலாக ஓடிவந்தவனை நிறுத்தி, ‘என்ன விஷயம்’ என்று கேட்டார். எனக்கு அரைகுறையாகத் தெலுங்கு புரியும்.

அந்தப் பையனைப் பாம்பு கடித்துவிட்டது, தகப்பனும் தாயும் உள்ளூர் ஆஸ்பத்திரியை நோக்கி ஓடுகிறார்கள். நாங்கள் துணைக்குப் போகிறோம்.

பதிலளித்தவாறே ஓடியவனைத் தொடர்ந்து கேள்விகேட்ட கிழவரும் ஓடத் தொடங்கினார். டீக்கடையில் இருந்த பலரும் தொடர்ந்து ஓடக் கிளம்பினார்கள். அனிச்சைச் செயல் மாதிரி நானும் பின் தொடர்ந்தேன்.

ஆஸ்பத்திரி வளாகத்துக்குள் அவர்கள் நுழைந்தார்கள். தாயும் தகப்பனும் கட்டடத்துக்குள்ளே ஓட, நாங்களெல்லாம் வெளியிலிருந்த மரத்தடியில் நின்றுகொண்டோம். ஓடிவந்த வேகமும், அந்தப் பையனின் நிலைமை பற்றி மருத்துவர் என்ன சொல்லியிருப்பார் என்ற பதட்டமும் எனக்குள் ஒருவிதமான வெக்கையைக் கிளர்த்தின.

மற்றவர்கள் அடிவயிற்றிலிருந்து உரத்த குரலில் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். நான் பேசுவதற்கு மொழியும் ஆளும் இன்றித் தனியாக நின்றேன்.

தனியாக நிற்பதன் வலி விஷம்போல எனக்குள் ஏறத் தொடங்கியது. விதவிதமான கேள்விகள் ஊறின. என்னைப் பாம்பு கடித்திருந்தால் யார் கவலைப்பட்டிருப்பார்? பாலகனாக இருந்தபோது கடித்திருந்தாலும் யார் தூக்கிக்கொண்டு ஓடியிருப்பார்? கதறுவதற்கு யார் இருந்தார்கள்? உடன் ஓடிவரத்தான் யார் முன்வந்திருப்பார்கள்?

அதுசரி, டீக்கடையில் நின்றவர்கள் எதற்காக உடன் ஓடிவர வேண்டும்? அந்தத் தாய் தகப்பன் தங்களைச் சேர்ந்தவர்கள், தங்களைப் போன்றவர்கள், என்ற ஒருமை உணர்வுதானே? என் சம்பந்தமாக இந்த உணர்ச்சி உள்ளவர்கள் யாரேனும் ஒருவராவது இருக்கிறார்களா?

கண்களுக்குள் உறுத்தியது. மனத்தில் விசித்திரமான ததும்பலை உணர்ந்தேன். இதைவிடவும் விசித்திரமான ஒரு உணர்வு அதுதான் இந்த மலைப்பாதைக் குரங்குடன் மௌன உரையாடலைத் தொடங்க வைத்ததோ என்னவோ அந்தப் பையனுக்கு குணமாகிவிட வேண்டும் என்று எனக்குள் ஒரு ஆசை பிறந்தது. சாதகமான செய்தி கிடைப்பதுவரை அந்த இடத்தைவிட்டு நகரக்கூடாது என்று தீர்மானமும் உதித்தது.

விடுதியில் இருந்த நாட்களில் தினந்தோறும் அதிகாலையிலும், இரவில் சாப்பாட்டுக்கு முன்பும் பிரார்த்தனைக் கூட்டம் நடக்கும். மனம் ஒட்டாமல் அவற்றில் கலந்துகொள்வேன். நான் பிறப்பால் எந்த மதத்தைச் சேர்ந்தவன் என்று யாருக்குத் தெரியும்? விடுதியில் இந்து மத வழிபாடுகள்தாம் இடம்பெறும்.

வருடக்கணக்காகத் தொடர்ந்த நிர்ப்பந்தத்தால் உண்டாகாத பக்தி, அந்த ஆஸ்பத்திரி வாசலில் என்னுள் நிரம்பிப் பொங்கியது. மூச்சுத் திணறத்திணற பிரார்த்திக்கத் தொடங்கினேன். வரித்துக் கொள்ள ஓர் உருவமும் இல்லாத இடத்தில் எங்கள் பள்ளியின் பிரார்த்தனைக் கூடத்தில் இருந்த ஓவியங்களும் படங்களும் சிற்பங்களும் வரிசை கட்டி வந்து என்னிடம் இறைஞ்சுதலைப் பெற்றுக்கொண்டன.

கடவுள் எவ்வளவு குரூரமானவர் என்கிறீர்கள்? அல்லது, பாவம், அவருடைய கையையும் மீறித்தான் விஷயங்கள் நடக்கின்றனவோ என்னவோ? என் பிரார்த்தனை ஆரம்பித்த சில நிமிடங்களில், பெற்றவர்கள் இருவரும் வெளியில் வந்தார்கள். மரத்தடியில் வந்ததும்

அந்த அம்மாள் மயக்கம் போட்டு விழுந்தாள். தகப்பன் மரத்தின் தண்டில் தலையை மோதிக் குமுறினான். அந்தப் பையனை உள்ளே சென்று பார்க்கத் துடித்தேன். ஆஸ்பத்திரிச் சிப்பந்தி வந்து அறிவித்தான், போஸ்ட்மார்ட்டத்துக்கு ஆயத்தம் செய்துகொண்டிருக்கிறார்களாம். ஒரு மணி நேரத்தில் உடம்பைக் கொடுத்துவிடுவார்கள்.

வெளியேறி நடந்தேன். கால்கள் துவண்டன. மனம் இன்னும் அதிகமாகத் துவண்டிருந்தது. 'அபத்தம், அபத்தம்' என்று உச்சாடனம்போல எனக்கு நானே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு நடந்தேன். அன்று இரவு நான் வெளிப்பிராகாரத்தில் படுத்துறங்குவதற்காகப் பார்த்துவைத்திருந்த கோயில் பல நூறு மைல்கள் தொலைவில் பல நூறு வருடங்களுக்கு அப்பால் இருக்கிற மாதிரித் தோன்றியது. ஆனால், வேறு வழியில்லை. அங்கேதான் சென்றாகவேண்டும்...

பாம்பு கடித்து இறந்த சிறுவனிலிருந்து வாழைப்பழம் வாங்கி உண்ட கர்ப்பிணிக் குரங்கு வரையிலான தொலைவுதான் இதை எழுதுகிற கோவர்த்தனத்தை உருவாக்கிய மூலப் பொருள்.

மை சூர் நகரத்திற்குள் நான் நுழைந்தது நான்காவது முறை. நவீன காலத்திற்குள் வந்து சேர்ந்த பிறகும், தனது சரித்திர காலப் பழமையையும் கம்பீரத்தையும் சற்றும் விட்டுக்கொடுக்காத ஊர் அது என்று தோன்றும் எனக்கு. மைசூரின் அகலமான வீதிகளில் நடக்கும்போது திப்பு சுல்தான், சிக்கவீர ராஜேந்திரன் போன்றவர்களின் பாதங்கள் பதிந்த வீதியில் நடக்கிறோம் என்று நினைத்துக்கொள்வேன். மன்னர்கள் எதற்காகத் தெருவில் இறங்கி நடக்கப் போகிறார்கள் என்று திருத்தியும் கொள்வேன்.

நகரத்தின் பிரதான சாலைகளில் செல்லும்போது, பெரும்பாலும் நடந்துபோக மாட்டேன். வாகனங்கள் வெளியேற்றும் கரும்புகையில் மூச்சுத் திணறுகிற மாதிரி இருக்கும். அன்றும் அப்படித்தான், நகரப் பேருந்தில் ஏறிப் போய்க்கொண்டிருந்தேன். வழக்கத்துக்கு விரோதமாக, சாலையில் வாகன எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்திருந்ததாகப் பட்டது. மரண ஊர்வலம்போல மந்தமாக நகர்ந்துகொண்டிருந்தன வண்டிகள்.

போக்குவரத்து சிக்னலில் பேருந்து நின்றது. பாய்வதற்கான இடைவெளி கிடைக்காது, வெறுமனே உறும மட்டுமே இயன்ற வனமிருகங்கள் மாதிரி, சூழ்ந்து நின்ற வாகனங்கள் அடித்

தொண்டையில் ஓசையெழுப்பின.

திடீரென்று ஒரு சைரன் ஒலி. நெரியும் வாகனங்களை விலக்கிக் கொண்டு நீந்தி வரும் ஆம்புலன்ஸ், பேருந்தின் பின்கண்ணாடி வழியாகத் தெரிந்தது. வலதுபுறம் வந்து சேர்ந்துவிட்டது. மேற்கொண்டு விரைய இயலாதபடி பேருந்தின் பக்கத்தில் நிற்க வேண்டியதாகி விட்டது. எதிரில் குறுக்குச் சாலையில் ஏகப்பட்ட வாகனங்கள் கடக்கின்றன.

நிற்கும் ஆம்புலன்ஸின் ஓயாத சைரன் ஒலி அவலச் சப்தமாக இருந்தது. ஆம்புலன்ஸ் ஜன்னலின் உட்புறம் இருந்த வெண்திரை சற்றே விலகி இருந்தது. அந்த இடைவெளி போதுமானதாக இருந்தது. உள்ளே நடக்கும் உயிர்வாதையைப் பார்ப்பதற்கு.

நடுவயது இளைஞன்தான். விபத்தில் அடிபட்டிருப்பான்போல. மூடிய வெள்ளைத் துணியில் அங்கங்கே பச்சைக் குருதித் தடங்கள். கடுமையான ரத்தச்சேதம் ஆகியிருக்கவேண்டும். உடலுக்குள் ஓடும் ரத்தக்குழாய்களுக்கு நிகராக வெளியில் அவன் உடம்புடன் பிணைந்திருந்த குழாய்கள் தென்பட்டன. பிராண வாயு செலுத்தும் முகமூடி, ரத்தம் ஏறும் குழாய், வேறு மருந்து ஏதோ ஏறும் குழாயின் மறுமுனையில் கோட்டான்போலத் தொங்கும் வெண்ணிற சீசா, இருதயத் துடிப்பை அளக்கும் கருவியில் தொடர்ச்சியாய் நகரும் பச்சைநிற வளைகோடு... இளைஞனின் முகம் நிச்சலனமாக இருந்தது. சாந்தம் வெளிறிய முகம்.

இடைவெளியில் தாதி தெரிந்தாள். சூரியகாந்திப் பூக்கள் மாதிரி பேருந்திலிருந்து ஏகப்பட்ட முகங்கள் ஆம்புலன்ஸின் ஜன்னலையே வெறித்துக் கொண்டிருப்பதைக் கவனித்தவள், அவசரமாகத் திரையை இழுத்து மூடினாள்.

இவ்வளவு விவரிக்கிறேனேயொழிய, இதெல்லாம் ஓரிரு விநாடிகளுக்குள் நடந்திருக்கவேண்டும். சிக்னல் விழுந்து அசாத்திய வேகத்தில் முன்னால் பாய்ந்தது ஆம்புலன்ஸ். பார்வைக்கு மறையும்வரையும் அதற்குப் பிறகும் உரத்துக்கேட்ட சைரனின் ஓலம் மெல்லத் தேய்ந்தது. அந்த இளைஞனின் உயிர் கதறும் ஓலம்தான் அது என்று தோன்றியது எனக்கு.

சைரன் ஒலி முழுதாக மறைந்துவிட்ட பிறகும் என் பிரமையிலிருந்து கொண்டு ஒலித்தவாறிருந்தது. சட்டென்று ஒரு கணத்தில் அது நின்றுவிட்டது. மிகச் சரியாக அதே நேரத்தில் அந்த இளைஞனின் உயிர்

பிரிந்துவிட்டது என்றே பட்டது எனக்கு. துக்கம் கனத்த மனத்துடன் பேருந்தைவிட்டு இறங்கி நடந்தேன்.

அவ்வளவுதான். அந்த நாளை என்னிடமிருந்து பறித்துக்கொண்டு போய்விட்டது அந்த ஆம்புலன்ஸ்.

அ ன்று இரவில், தூக்கமின்றிப் புரண்டுகொண்டிருந்தேன். எட்டாத் தொலைவில் இருந்த ஒன்றை எட்டிப் பிடிக்கும் தினவு மனமெங்கும் நிறைந்திருந்தது. எதுவும் செய்யாமல் இப்படி தேசாந்திரம் திரிவது சரியல்ல. ஏதோ ஒன்று செய்தாக வேண்டும். வழிகாட்டக் கூடியவர் வேறு யார் இருக்கிறார்கள்? பேசாமல், தலைமைச் சாமியாரைச் சென்று சந்தித்துவிட வேண்டியதுதான் என்று முடிவெடுத்தேன்.

அதுசரி, கிட்டத்தட்டப் பத்து வருடங்கள் ஓடிவிட்டதே, அவருக்கு என்னை ஞாபகமிருக்குமா என்று ஒரு சந்தேகம் உதித்தது. தென்னிந்தியா முழுக்கக் குருகுலத்தின் பள்ளிகள் எத்தனை இருக்கிறது? எத்தனையெத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள்? நான் குருகுலத்தைவிட்டு விலகும்போதே அவருக்கு சுமார் எழுபது வயதிருக்கலாம். இத்தனை வருடங்களில் ஞாபகத்தின் கூர்மை குறைந்திருக்காதா என்ன?

ஆனால், மனத்தின் இன்னொரு பகுதி இந்தக் கேள்விகளை எல்லாவற்றையும் வேகமாக நிராகரித்தது. அத்தனை மாணவர்களிலும் என்னை அவரால் மறக்க முடியாது. குருகுல மாணவர்களில் இரண்டே வகைகள்தாம் உண்டு. வாழ்நாள் முழுவதும் குருகுலத்தையும் சாமியார்களையும் நன்றியோடு நினைவுகூர்பவர்கள். இனி ஒருபோதும் அந்தத் திசையிலேயே தலைவைத்துப் படுக்கமாட்டேன் என்று சபதம் கொள்பவர்கள். இரண்டு தரப்புமே தன்னியல்பாகப் படித்து முடித்து வெளியேறுபவர்கள். நான் அப்படியா? தலைமைச் சாமியாருக்கு விசேஷமானவன் அல்லவா?

எண்பத்திச் சொச்சம் வருடத் துறவு வாழ்க்கையில், அவருடைய நம்பிக்கையைக் குலைத்தவர்கள் வெகுசிலர்தான் இருப்பார்கள். தனக்கு இழைக்கப்பட்ட துரோகத்தைக்கூட நினைவில் வைத்திருக்காவிட்டால், அது எப்படி மனித மனமாகும்!

மதறாஸ் நோக்கி மறுநாள் புறப்பட்டேன்.

கிழவர் என்னை ஞாபகம் வைத்திருந்தார். வெகு அழுத்தமாக அவருடைய நினைவில் நான் பதிந்திருந்தேன். ‘பார்வையாளர்கள் யாரையும் அனுமதிப்பதில்லை’ என்று கறாராகக் கூறி ஆஸ்பத்திரி

வராந்தாவுடன் என்னைத் திருப்பியனுப்ப முயன்ற செவிலியிடம் வெகுவாக வாதாடித்தான் அவரைப் பார்க்க முடிந்தது என்னால். ‘அவர் பிரக்ஞையுடன்தானே இருக்கிறார். என் பெயரைச் சொல்லுங்கள். அவர் வேண்டாமென்று சொல்லிவிட்டால், பிறகு உங்களை வற்புறுத்த மாட்டேன்’ என்று வாதிட்டேன்.

என்னுடைய த்வனியைவிட என் ஆங்கிலத்துக்கு அவள் கட்டுப்பட்டாள் என்றுதான் இப்போது, இதை எழுதும்போது, தோன்றுகிறது. குருட்டாம்போக்கில் எறிந்த கல்தான், மற்றபடி அவருக்கு என்னுடைய பெயரெல்லாம் நினைவிருக்கும் என்று நான் நம்பவில்லை. ஆச்சரியம், அவள் விரைந்து வெளியில் வந்து ‘உன்னை உடனடியாக உள்ளே அனுப்பச் சொன்னார்’ என்றாள்.

படுக்கையில் வாழைமட்டை போல வதங்கிக் கிடந்த அவருடைய பேச்சு சாதாரணமாகத்தான் இருந்தது. பேச இயலாதவர்போலச் சிரமப்படவில்லை. லேசாக மூச்சிரைப்பதுபோலத் தெரிந்தாலும் அது சுறுசுறுப்பாக இயங்கிய ஒருவரை நோய்ப்படுக்கையில் பார்ப்பவரின் பிரமையாகக்கூட இருக்கலாம். என்றாலும், வயோதிகம் அவரை வேகமாகத் தின்றுகொண்டிருப்பது வெளிப்படையாகத் தெரிந்தது. கன்னச் சதைகளிலும் நெற்றிமேட்டிலும் ஏகப்பட்ட சுருக்கங்கள்.

கட்டிலருகே ஒற்றைக்காலில் நின்றுகொண்டிருந்த கம்பியின் தோளிலிருந்து நீண்டு கொக்கியில் தொங்கிய ஒரேயொரு வவ்வால் தவிர, வேறு மருத்துவ சாதனங்கள் எதுவும் அருகில் இல்லை. வவ்வால் அலகிலிருந்து கீழிறங்கும் குழாயில் சொட்டுக்கள் படு நிதானமாக உதிர்ந்தன. குழாயின் மையத்தில் இருந்த குப்பியில் சற்றுத் தேங்கி, பிறகு உடலை நோக்கிச் சென்றன.

பச்சைநிறத் திரைகள் ஊடாக அறைக்குள் கசிந்த வெளிச்சம் அவருடைய முகத்தில் பச்சை சார்த்தியிருந்தது. வேரோடு பிடுங்கிப் போட்ட தாவரம்போலத் தென்பட்டார் சாமியார். என்னைப் பார்த்து வாஞ்சையுடன் முகம் மலர்ந்தார்.

வந்துவிட்டாயா? நான் எதிர்பார்த்ததைவிட அதிகக் காலம் எடுத்துக்கொண்டுவிட்டாய். ஆனாலும் உன்னைப் பார்க்காமல் என் ஆயுள் முடியாது என்று நான் அனுமானித்து வைத்திருந்தேன்...

என்று புன்சிரித்தார். வழக்கமான வங்காளித் தமிழ் இல்லை. முழுக்க ஆங்கிலம். படுக்கையின் அருகிலிருந்த முக்காலியைப் பார்வையால் சுட்டி உட்காரப் பணித்தார். கிஸ்மிஷ் பழம்போலச் சுருக்கம் கண்டிருந்த

முன்னங்கையைத் தொட்டேன்.

ஜீ...

முழு இளைஞனாக வளர்ந்துவிட்டாய். முன்பே வந்திருந்தால் உன்னை ஒரு பட்டதாரியாக்கிப் பார்த்திருப்பேன்...

நான் தர்மசங்கடமாகத் தலைகுனிந்தேன். இவரை வந்து பார்த்திருக்கவேண்டாமோ. அந்திம காலத்தில் தன்னுடைய தோல்வி ஒன்று முழு ஆகிருதியுடன் அவருக்குத் தரிசனம் கொடுத்திருக்க வேண்டியதில்லையோ.

...ஆனால், அது ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை. வெறும் பட்டதாரியாவதைவிட நீ இப்போது ஆகியிருப்பது சற்று மேலான ஒரு ஸ்தானம்தான்...

எனக்குப் புரியவில்லை. நான் இன்னும் ஒருவார்த்தைகூட அவரிடம் பேசவில்லை. என்ன ஸ்தானத்தைக் கண்டார்? ஒருவேளை, எங்களுக்கெல்லாம் அவர் தந்த தோற்றம் மிகமிக மேலோட்டமானதோ? உள்ளுக்குள் வேறு தரிசனங்கள் காணக்கூடிய ஸித்தபுருஷர் இருக்கிறாரோ? அப்படியானால், இந்த ஏழெட்டு வருஷங்கள் நான் அலைந்து திரிந்ததை அவர் காட்சிகளாகவே கண்டிருப்பாரா என்ன? அப்படியானால், இந்த இடைக்காலத்தைப் பற்றிச் சொல்வதற்கு என்ன இருக்கிறது? சொல்வதற்கேதான் என்ன இருக்கிறது? பாதம் தொட்டு வணங்கிவிட்டு வெளியேற வேண்டியதுதான்...

...குழப்பமாக இருக்கிறது அல்லவா? கைகூப்பி வெறும் வணக்கம்தானே சொன்னோம்? இவர் நம்மைப்பற்றி முழுமையான அபிப்பிராயம் ஒன்றை உதிர்க்கிறாரே என்று தோன்றுகிறதோ? ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி படித்திருக்கிறாயா?

‘இல்லை’யென்று தலையசைத்தேன்.

உன் வயதில் ஒருத்தன் படித்தாகவேண்டிய ஆளுமை அவர். பால்யத்தின் முடிவில் கொந்தளிக்கத் தொடங்குகிற ரத்தத்தில் வெம்மையும் ஏறுகிற பிராயம் உனது. இந்தக் கட்டத்தைத் தாண்டும்போதும், தாண்டிய பிறகும் ஒருவித சமனம் மனத்தில் நிலவுவதற்கு அவர் உதவுவார்...

ஸ்ரீ ஸவ்யசாச்சி முகர்ஜி மிகப்பெரிய வாசகர் என்பது எனக்கு முன்பே தெரியும். ஆஸ்பத்திரிப் படுக்கையில் கிடந்தபோதும், தலை மாட்டில் இருந்த சிறு மேஜையில் சீராக அடுக்கப்பட்டிருந்த புத்தகங்களின்மேல்

என் பார்வை சென்றது. மேலாக இருந்த புத்தகத்தின் அட்டையும், அதன் தலைப்பும் இன்னமும் எனக்குள் பசுமையாக நினைவிருக்கிறது. I am That. எழுதியவர் நிஸர்கதத்த மஹராஜ்.

...அவர் வழங்கிய தாரக மந்திரம் என்று நான் பெற்றுக்கொண்டது ஒன்றே ஒன்றுதான். Pay attention. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எல்லாக் காலங்களிலும் எல்லாத் தேசங்களிலும் செலாவணியாகக் கூடிய ஒரே கரன்ஸி அது...

சாமியார் சிரித்தார்.

...வெகு சுலபம். எளிமையான தர்க்கம்தான் கடைசியாக உன்னை நான் வழியனுப்பிய தருணத்தில் இருந்த அதே வேட்கையும், கனிவும் உன் விழிகளில் இருக்கிறது. மனத்தை முழுவதுமாகக் காட்டக்கூடிய ஜன்னல்தாம் கண்கள். மனித உடல் உருவானபோது கடைசியாக உதித்த புலன் பார்வைதான், தெரியுமா? அதனால்தான் வெளிப்படையான சிறு குழந்தைபோலச் செயல்படுகிறது அது...

மௌனமானார். கொஞ்சநேரம் ஜன்னல் திரைகளை வெறித்துக்கொண்டிருந்தார். தர்மசங்கடமான அமைதியை அனுபவித்தேன். சுவாசம் சீர்படுவதற்காகக் காத்திருந்தவர் மாதிரி, அந்த இடைவெளிக்குப்பின் இயல்பாகத் தொடர்ந்தார்.

...அதைவிட முக்கியமாக, வருடக்கணக்காகத் தொடர்ந்து இடம்விட்டு இடம் காணாமல் போய்க்கொண்டே இருந்தவன், இந்தக் கிழவன் ஞாபகம் வந்து கடமை தவறாமல் பார்க்க வந்திருக்கிறாய் அல்லவா? என்னை நோக்கி உன்னை அனுப்பிவைத்திருக்கிற அந்த அனுபவத் தொகுப்பைவிடப் பெரிய பாடத்தையா பட்டப் படிப்பு தந்துவிடப் போகிறது? நீ கற்று வந்திருக்கும் இந்தப் படிப்பில் இன்னொரு அனுகூலமும் இருக்கிறது. இது உன்னைக் குமாஸ்தாவாகவோ, அதிகாரியாகவோ மாதச் சம்பளத்தில் அமர்த்தப் போவதில்லை. என்ன பார்க்கிறாய், நீ இன்னும் பணி எதிலும் அமரவில்லை என்பது உன் உடையையும் பாவனையையும் கவனமாகப் பார்க்கும் யாருக்கும் தெரியக் கூடியதுதான். ஜிட்டு... ஜிட்டு...

குழந்தைபோலச் சிரித்தார். குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார். ஓசைகேட்டு எட்டிப்பார்த்த செவிலி தானும் புன்னகைத்தாள்.

...ஒன்றுமில்லையம்மா. பல வருஷங்கள் கழித்து இந்தப் பிள்ளையைப் பார்க்கிறேனா, சந்தோஷம் தாங்க முடியவில்லை...

செவிலி தலையை இழுத்துக்கொண்டாள்.

...நானே அவருடைய சில புத்தகங்கள் உனக்குத் தருகிறேன். நீயும் படிக்கலாம். போகட்டும், நீ வந்ததிலிருந்து நானே பேசிக்கொண்டிருக்கிறேன். சொல்லு, எங்கேயெல்லாம் போனாய்? என்னவெல்லாம் நடந்தது? சொல்லு, விரிவாகச் சொல்லு. உன்னைப் பேசச் சொல்லி நிதானமாகக் கேட்பதற்காகத்தான் என்னை இந்த ஆஸ்பத்திரியில் கொண்டுவந்து சேர்த்திருக்கிறதோ என்னவோ? இல்லாவிட்டால் இவ்வளவு சாவகாசம் எங்கே கிடைக்கப் போகிறது...?

தாங்கள் செலவுக்காகக் கொடுத்திருந்த பணத்தைச் சாப்பாட்டுக்காகத் தவிர வேறெதற்கும் செலவழிப்பதில்லை என்று சங்கல்பம் எடுத்துக்கொண்டேன் முதலில்...

மந்திரவாதியின் கையில் ஆடும் மாயக்கோலை வைத்தகண் வாங்காமல் பார்க்கும் குழந்தையின் ஆர்வம் பொங்கும் முகத்துடன் என்னையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார் சாமி. மதிய உணவுக்காக ஒரு கோப்பையில் கஞ்சியும், ஓரிரு ஆப்பிள் துண்டுகளும் கொண்ட வெண்ணிறப் பீங்கான் தட்டுடன் வந்த செவிலி,

போதுமே, மதியம் ஒரு இரண்டுமணிநேரம் அவர் உறங்கட்டும். சாயங்காலம் உங்கள் உரையாடலைத் தொடரலாமே.

என்று நயமாக வேண்டிக்கொள்ளும்வரை நான் சொல்லியும் தீரவில்லை அந்தக் கதைகள்.

சாமியாரின் உச்சரிப்பில் வங்காளியாக மாறியிருந்த ஆங்கிலம் செவிலியின் உச்சரிப்பில் மலையாளமாக ஆவதை வியந்தவாறு வெளியேறி எதிரிலிருந்த சிற்றுண்டிச் சாலையை நோக்கி நடந்தேன்.

உணவகத்தின் எவர்சில்வர் தட்டு செவிலியின் கையிலிருந்த பீங்கான் தட்டின் நீலநிற விளிம்பை ஏனோ நினைவுபடுத்தியது.

சாயங்காலம் இரண்டாவது சுற்று உரையாடல் தொடங்கியது. இந்தமுறை கவனம் வேறுபக்கம் திரும்பிவிட்டது. மதியத் தூக்கத்திற்குப் பிறகு கிழவர் இன்னமும் தெம்பாக இருந்தார். நூறாண்டுகளைத் தாண்டியும் உயிரோடிருக்கும் தெம்பு உள்ளவர் என்று எனக்குத் தோன்றியது...

அடுத்த ஒரே வருடத்தில் அவர் இறந்து போனார். கல்லூரியின் அரங்கத்தில் ஒற்றை மாலையுடன் கட்டிலில் கிடத்தியிருந்தார்கள் குருகுலத்தின் வெளியூர்க் கிளைகளைச் சேர்ந்தவர்கள், பொதுமக்கள் வந்து அஞ்சலி செலுத்துவதற்காக. ஆஸ்பத்திரிப் படுக்கையில் அவர்

உற்சாகமாகப் படுத்திருந்தது எனக்குள் திரும்பத்திரும்ப ஓடிக்கொண்டேயிருந்தது அந்த நாள் முழுவதும்... அன்று சாமியார் கேட்டார்:

நான் கொடுத்திருந்த பணம் வெகுசீக்கிரமே தீர்ந்திருக்குமே? அதன் பிறகு என்ன செய்தாய்?

நான் செய்த வேலைகளின் பட்டியல் ஓட ஆரம்பித்தது...

ஓட்டலில் மேஜை துடைத்திருக்கிறேன். கல்யாணச் சமையலில் காய்கறி நறுக்கிக் கொடுத்திருக்கிறேன். தையல்காரரின் பாதத்தை ஒட்டி அமர்ந்து காஜா எடுத்திருக்கிறேன். வாரச்சந்தைகளில் ஏலக்காரனின் பக்கத்தில் நின்று கூவியிருக்கிறேன். திருவிழாக் கூட்டத்தில் பலூன் விற்றிருக்கிறேன். ராஜமுந்திரிக்கு அருகில் இரண்டாகப் பிளந்த கோதாவரியின் மையத்தில் விவசாய வேலைகள் பார்த்திருக்கிறேன். ஒரிஸ்ஸா கடற்கரையின் மீன்பிடி படகுகளில் உதவியாளனாகச் சென்றிருக்கிறேன். பாட்னாவின் புறநகர்ப்பகுதிகளில் தலைச்சுமையாகச் சுமந்து வீடுகளில் காய்கறிகள் கொண்டு விற்றிருக்கிறேன். மத்தியப் பிரதேசத்தின் உட்பகுதிப் பேரூர் ஒன்றில் அந்த ஊரின் பெயர் மட்டும் எவ்வளவு முயன்றும் நினைவு வரவில்லை ரயில்வே பால அடிவாரத்தில் காத்திருந்து, மேலேறச் சிரமப்படும் கைவண்டிகளைப் பின்னிருந்து தள்ளிச் சென்று, கொடுக்கும் கூலியை வாங்கிக்கொண்டிருக்கிறேன். பஞ்சாபின் குருத்வாராக்களில் தரை கூட்டிக் கழுவிச் சாப்பாடு வாங்கிச் சாப்பிட்டிருக்கிறேன். ஆஜ்மீர் தர்ஹாவில் மனநிலை பிறழ்ந்தவர்களைச் சமாளிக்கச் சிரமப்படும் உறவினர்களுக்கு உதவிசெய்து சன்மானம் பெற்றுக்கொண்டிருக்கிறேன். கட்ச் பகுதியின் இனிப்புப் பலகாரக் கடையில் அடுப்படியில் நின்றிருக்கிறேன். கல்கத்தாவின் அழுக்குத் தெருக்களில் வேலையே செய்யாமல் பத்துப் பன்னிரண்டு நாட்கள் நடந்து திரிந்திருக்கிறேன். ஜம்முவிலிருந்து உதம்பூருக்கு ரயில் பாதை போடும் பணியில் சிற்றாளாக வேலை செய்திருக்கிறேன். பத்தான்கோட்டில் சேர்ந்தாற்போல் ஒரு வாரம் வரைக்கும் பட்டினியாகக் கிடந்திருக்கிறேன்...

சொல்லும்போதுதான் எனக்கே தெரிந்தது, அத்தனை வேலைகள் நான் பார்த்திருக்கிறேன் என்பது. சற்று மலைப்பாகத்தான் இருந்தது.

ஓரிரண்டு மாதங்களுக்கு அதிகமாக ஓர் இடத்திலும் வேலை பார்க்கவில்லை என்பதும், இடமோ நபர்களோ சலிக்கத் தொடங்கிய மாத்திரத்தில் உடனடியாக இறக்கையை விரித்துப்

புறப்பட்டிருக்கிறேன், அடுத்தவேளைச் சாப்பாட்டுக்கான உத்தரவாதத்தைப் பற்றி எப்போதுமே யோசித்ததில்லை என்பதுமெல்லாம் இதை எழுதும்போது எனக்கே ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

இன்று அந்த அளவு தைரியம் கிடையாது. வேறு ஒரு தினசரி நியமத்துக்கும் வசதிக்கும் ஒழுங்குக்கும் உடம்பும் மனமும் பழகி விட்டிருக்கின்றன. இதைவிட, அந்தப் பத்து வருடங்களும் வேறு யாருக்கோ நடந்தவைபோல தொலைதூரக் காட்சிகளாக இருக்கின்றன வெறும் ஞாபகங்கள் தவிர, அவற்றின்மீது எனக்கு எந்த ஒரு பிடிமானமும் இல்லை...

எப்போதாவது திருடியிருக்கிறாயா?

என்று சாமியார் கேட்டார். அப்போதுதான் எனக்கும் உறைத்தது. ஒரு சந்தர்ப்பத்தில்கூட அந்தப் பட்டினி வாரத்தில்கூட திருடும் உத்தேசம் எனக்குள் உதிக்கவில்லை. இவ்வளவு ஏன், இந்தியா முழுவதும் திரிந்திருக்கிறேனே, ஒருமுறைக்கூடக் கள்ள ரயில் ஏறிப் பயணம் செய்ததில்லை. கூலியாகக் கிடைத்த காசு கையிலிருந்தால் ரயிலோ பஸ்ஸோ, கிராமப்புறமென்றால் போக்கு வண்டிகளில் இலவசப் பயணம், எதுவும் இல்லையா, இருக்கவே இருக்கிறது நடை. ஆயிரக்கணக்கான மைல்களை நடந்தே கடந்திருக்கிறேன்.

இவரது முன்னிலையில் இன்னொன்றும் தோன்றுகிறது, சட்டத்தின் அல்லது சமூகத்தின் பார்வையில் குற்றமாகத் தோன்றக்கூடிய எதையுமே செய்யாமல் என்னால் உயிர்வாழ முடிந்திருக்கிறது. குறிப்பாக, அந்நியப் பெண்களுடனான உறவு. தேசாந்திரியாகத் திரிந்த நாட்களில் அநேகவிதமான பெண்களைச் சந்திக்கக் கிடைத்தது. ஒரு பெண்ணுடனும் படுக்கையைப் பகிர்ந்துகொள்ளத் தோன்றியதில்லை.

உஜ்ஜயினியில் ஒரு சிவன் கோயில். அங்கே கூட்டிப் பெருக்கும் பணியில் இருந்த பேரழகியின்மீது ஒருவித ஈர்ப்பு உண்டானது. பதினெட்டு இருபது வயதிருக்கலாம். காலையிலும் மாலையிலும் இடுப்பில் கவ்விய பிரப்பங்கூடையில் துடைப்பத்துடன் அவள் வருவதைப் பார்ப்பதற்காகவே நேரம் தவறாமல் அந்தக் கோயிலில் ஆஜராவேன்.

அதிகாலைச் சூரியன் போலவும், அஸ்தமன சூரியன் போலவும் ஆரஞ்சுநிறமாக அவள் உதயமாவாள். நட்ட நடு நெற்றியில் அவள் வைத்திருக்கும் ஒரு ரூபாய் அகலப் பொட்டும் சூரியன் மாதிரியே

இருக்கும். வெற்றிலைச் சிவப்பேறிய சீரான பல்வரிசையை லேசாக வெளிக்காட்டும் புன்சிரிப்பு நிரந்தரமாக ஒட்டிய முகம். பூமிக்கு வலிக்கக்கூடாதென்ற கரிசனம் தெரியும் நலுங்காத நடை. தலை தாங்க முடியாத பாரம் தெரியும் கொண்டை. ஒருமுறை அவள் கூந்தல் அவிழ்ந்தபோது கவனித்தேன், நடக்கும்போது ஒயிலாக அசைந்து வரும் புட்டத்தைத் தாண்டி நீண்டிருந்தது.

தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, ஒரு சாயங்காலம் பணிமுடித்துத் திரும்பியவளை மடக்கி என் உத்தேசத்தைச் சொன்னேன். 'அவள் சம்மதித்தால், என்னுடைய துணைவியாக்கிக் கொள்ள விரும்புகிறேன். தற்சமயம் நான் தேசாந்திரி. அவளைத் திருமணம் செய்துகொண்ட மாத்திரத்தில் நிரந்தரமாக ஒரு வேலையில் அமர்ந்துவிடுவேன், ஆயுள் முழுவதும் சீமாட்டிபோல வைத்துக் காப்பாற்றுவேன்' என்றெல்லாம் சொன்னேன். சற்றுப் பதட்டமாகத்தான் இருந்தேன் என்பதால், கோவையாகப் பேச வரவில்லை. ஓரிரு இடங்களில் உளறியும் இருக்கலாம்.

அவள் சிரித்தாள். உறுதியாக மறுத்தாள். மனம் நொறுங்கித்தான் திரும்பினேன் என்றாலும் தோற்றம் சம்பந்தமான மயக்கங்கள் சகலமும் ஒரே கணத்தில் உதிர்ந்த சந்தர்ப்பம் அது. தவிர, முக்கியமான இரண்டு தரிசனங்களை எனக்கு வழங்கிய சந்தர்ப்பம்... ஒன்று, அழகாக இருக்கும் எல்லாப் பொருட்களையும் சொந்தமாக இருத்திக்கொள்ள வேண்டும் என்று விழைவது ஆரோக்கியமான விஷயமல்ல. பார்த்தோ துய்த்தோ விலகிவிடுவதே போதுமானது. அந்தப் பெண்ணும் அதைத்தான் சொன்னாள்.

பகல் நேரத்தில்தான் இந்தப் பணி செய்கிறாளாம். இரவில் அவளுடைய தொழிலே வேறு. அவளை எனக்கு அவ்வளவு பிடித்திருக்கும் பட்சத்தில் அவளோடு ஓரிரு இரவுகள் நான் தங்கிப் போகலாம். தேசாந்திரி என்கிறேன் அல்லவா, பணம் எதுவும் கொடுக்க வேண்டியதில்லை. மற்றபடி, நான் அவள் சம்பந்தமாக உணர்ச்சிவசப்பட்டுச் சொன்ன பல வாக்கியங்களும், அவளிடம் முதன்முதலாக வரும் வாடிக்கையாளர்கள் பலரும் சொல்லக்கூடியதுதான். பதின்மூன்றாவது வயதில் தொழிலுக்கு இறங்கினவள் அவள். எட்டு வருடம் முழுவீச்சுடன் தொழில் புரிந்துவிட்டு, ஒரே ஆளுடன் குடித்தனம் நடத்தப் புறப்படுவது சரிப்பட்டு வராது. அதெல்லாம் நீண்ட காலத்துக்கு ஒப்பேறாது...

அவள் தன் முகவரியைக் கூறிவிட்டுத்தான் போனாள். என்னை விட்டு விலகிச் செல்லும்போது அசைந்த அவளது புட்டம் முன்புபோல

அவ்வளவு வசீகரமானதாக இல்லை. எதிர்த்திசையில் நடந்தேன்.

அவள் மறுத்தபிறகும் என் மனத்தில் ஏன் துக்கம் படரவில்லை? ஒருவேளை அந்த விழைவு என் அந்தரங்கத்தின் ஆழத்தில் துளிர்த்தது கிடையாதோ? சும்மா சாவித்துவாரம் வழி எட்டிப் பார்க்கும் மேலோட்டமான ஆசைதானா? கேள்விகளின் வழியாக உஜ்ஜயினியை விட்டு வெளியேறும்போது, இரண்டாவது தரிசனம் சித்தித்தது.

குடும்பம் என்ற அமைப்புதான் நான் பிறக்கும்போதே என்னை வெளியே தள்ளிவிட்டதே, மீண்டும் அதன் குறுவடிவத்தை என்னளவில் ஸ்தாபிக்க ஏன் மெனக்கெடுகிறேன்...?

தலைமைச் சாமியார் மிகுந்த சிரமப்பட்டு எழும்பினார். தலையணைகள்மீது முதுகைப் பதித்து சரிவாக உட்கார்ந்த நிலைக்கு நிமிர்ந்தார். என்னுடைய வலதுகையைக் கோரினார். நான் நீட்டினேன். இறுகப் பற்றிக்கொண்டார். அதே நிலையில் ஓரிரு நிமிடங்கள் இருந்தோம். பிறகு நிதானமாகக் கேட்டார்:

என்னுடைய உதவியாளனாக இருப்பதற்கு உனக்குச் சம்மதமா கோவர்த்தனம்?

சரியென்று தலையசைத்தேன்...

2

க ன்னியாஸ்திரீகள் இருவரும் நான் இருந்த அறைக்குள் மீண்டும் நுழைந்தார்கள். எழுந்து நின்றேன். என்னை நோக்கி ஸ்தோத்திரம் சொல்லிவிட்டு அவர்கள் வெளியேறினார்கள். தொடர்ந்து வெளியேறிய குழந்தைகள் அறுவரும் வலது கையில் ஆளுக்கொரு பெட்டியும், சுருட்டிக் கயிறால் கட்டியிருந்த படுக்கையை இடது கையிலும் வைத்திருந்தார்கள். நாலு பையன்கள். இரண்டு பெண்குழந்தைகள். ஆறுபேரும் நான் நின்றிருந்த திசையில் பார்வையையே செலுத்தாமல் தளர்ந்த நடையில் பின்தொடர்ந்தனர்.

கடைசியாக கோவர்த்தனம் வந்தார். 'இதோ வந்துவிடுகிறேன்' என்று என்னைப் பார்த்துத் தலையசைத்துவிட்டுச் சென்றார்.

அமர்ந்திருந்த நிலையிலேயே, எதிர் ஜன்னலில் அவர்கள் விடுதியின் வாயில் நோக்கிச் செல்வது தெரிந்தது. துக்கம் அனுஷ்டிக்கும் மௌன

ஊர்வலம் மாதிரித் தென்பட்டது. இரண்டாள் உயர இரும்புக் கதவின் சரிபாதி உயரத்தில் உள்ள திட்டிவாசல் திறக்கிறது. கன்னியாஸ்திரீகள் முதலிலும், பையன்கள் நால்வரும் அவர்களைத் தொடர்ந்து ஒரு சிறுமியும் வெளியேறுகிறார்கள். அதற்கு முன், பின்னால் திரும்பி எதிர்த் திசைக்குக் கையசைக்கிறார்கள். நானும் பார்த்தேன். எதிர்க் கட்டடத்தின் மாடிவராந்தாவில் வரிசையாக முளைத்திருந்த பிஞ்சு முகங்கள். கனவில் தென்படும் காட்சிபோலக் கையசைத்துக்கொண்டு நின்றன. என்னுடைய நெஞ்சு சட்டென்று கனத்தது. கண்ணில் நீர் முட்டியது.

கடைசியாய் நின்ற சிறுமி சடாரென்று சுமைகள் இரண்டையும் தரையில் வைத்தாள். கோவர்த்தனத்தின் முன்னால் மண்டியிட்டு அமர்ந்து அவர் கால்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

அவசரமாகக் குனிந்து அவள் தலையைத் தொடுகிறார் கோவர்த்தனம். அவள் எழுகிறாள். உரத்து ஏதோ கூறியபடி அவரை இறுக்கிக் கட்டிக்கொள்கிறாள். அவளுடைய குரல் கேட்டது. சொல் புரியவில்லை. விசித்து விசித்துக் குலுங்கும் அவளது தலையை ஓரிருமுறை வருடிவிட்டு, அவள் கைகளைத் தன் உடம்பிலிருந்து பிரித்து விலக்குகிறார் கோவர்த்தனம். அவளது சுமைகளை எடுத்துக் கைக்கொன்றாகத் தருகிறார். மறுபடியும் அவள் உச்சந்தலையில் கை பதிக்கிறார்.

அவள் தயங்கி வெளியேறியபிறகு, திட்டிவாசல் கதவு அடைத்துக் கொள்கிறது. வரவேற்பறை நோக்கித் திரும்பும் கோவர்த்தனத்தின் முகம் சாயங்கால வெயிலில் பளபளக்கிறது. முகத்தை அழுத்தித் துடைத்துக்கொள்கிறார். குறிப்பாகக் கண்களை. மாடிக்கட்டடத்தின் திசையில் திரும்பிப் பார்க்காமலே வருகிறார்.

வரவேற்பறை வாசலுக்கு வந்து சேர்வதற்குள் நாலைந்துமுறை கண்களைத் துடைத்துக்கொண்டுவிட்டார்.

அப்பாடி. மனிதன்தான். காலையிலிருந்து கோவர்த்தனம் சம்பந்தமாக எனக்குள் உருவாகியிருந்த முரட்டு பிம்பம் முழுக்கக் கனிந்துவிட்டதையும், அந்த மனிதரிடம் எனக்கு ஒருவித வாஞ்சை

ஊறுவதையும் உணர்ந்தேன். கோவர்த்தனம் செருப்பைக் கழற்றும் மெல்லிய ஒலி கேட்டது. நோட்டுப்புத்தகத்தில் பார்வையைப் பதித்துக்கொண்டேன்.

ஸா ரி. எதிர்பார்த்ததைவிடக் கொஞ்சம் தாமதமாகிவிட்டது.

அதனாலென்ன.

நீங்கள் இரவு தங்குவதற்கு விருந்தினர் அறையைச் சுத்தம் செய்யச் சொல்லியிருக்கிறேன். நீங்கள் நாளையே கிளம்பித்தான் ஆகவேண்டும் என்பதில்லை. ஓரிரு நாட்கள் இங்கே தங்கிச் செல்லலாம் நீங்கள் விரும்பினால்.

நன்றி ஸார். இன்னொருமுறை வரும்போது அவசியம் தங்குகிறேன்... உங்கள் பதிவுகள் வெகு சுவாரஸியமாக இருந்தன. முழுக்கப் படிக்கவில்லை. விட்டுவிட்டுப் படித்துக்கொண்டிருந்தேன். ஆனால், எந்தப் பகுதியைப் படித்தாலும் முழுமையாகத்தான் இருக்கிறது.

அப்படியா சொல்கிறீர்கள்.

பின்னே, எழுதித் தேறிய கையல்லவா.

கோவார்த்தனம் புன்சிரித்தபடி ஜன்னலுக்கு வெளியில் பார்த்தார்.

இதைப் படித்தபிறகு, நானும்கூட கடந்த ஒன்றரை வாரங்களில் நான் எதிர்கொண்ட மனிதர்களைப் பற்றி எழுதிப் பார்த்தால் என்ன என்று தோன்றுகிறது.

ஆகா, தாராளமாகச் செய்யலாம்.

என்று உற்சாகமாகச் சொன்னார் கோவர்த்தனம்.

என்ன, உங்களை மாதிரித் தேர்ச்சியுடன் எழுதத் தெரியாது எனக்கு.

தேர்ச்சியென்றெல்லாம் விசேஷமாக எதுவும் கிடையாது நண்பரே. உண்மையின் வெளிச்சம் இருக்க வேண்டும். அவ்வளவுதான். மற்றபடி, நீங்கள் நின்று அனுபவித்த புள்ளியிலிருந்து நீங்கள் மட்டும்தான் அனுபவம் கொண்டிருக்கிறீர்கள். 'பக்கத்திலேயே நின்று அனுபவித்தேன்' என்று இன்னொருத்தர் கோரினாலும், அது பக்கத்துப் புள்ளிதான். நீங்கள் நின்றது அல்ல. தவிர, நீங்கள் கட்டாயம் அதை எழுதவேண்டும், அதை நான் படித்துப் பார்க்க வேண்டும் என்றும் ஆவலாய் இருக்கிறேன்...

கோவர்த்தனம் வாய்விட்டுச் சிரித்தார். நான் குழம்பினேன்.

எதற்காக?

ஸ்ரீ கணபதி கூறியதால் பெரியவர் ஸ்ரீ வேதமூர்த்தியைப் பற்றித் தெரிந்துகொள்ளக் கிளம்பினீர்கள். இவ்வளவு நீளமான சங்கிலி இணைப்புக்குள் உங்களைச் செலுத்தியது யார்?

ஸ்ரீ ஹரிஹர சுப்ரமணியம்.

பார்த்தீர்களா, இப்படி ஒருவர் இருப்பதே எனக்குத் தெரிந்திருக்காது, உங்களைச் சந்தித்திருக்கா விட்டால். அவரைப் பற்றியும் முழுக்கத் தெரிந்துகொள்ள ஆவலாகத்தான் இருக்கிறது. பெரியவர் ஸ்ரீ வேதமூர்த்தியிடம் கடைசியாக வந்து சேர்ந்தவரைத்தான் நீங்கள் முதலாவதாகச் சந்தித்திருக்கிறீர்கள். இதில் ஒரு நகைமுரண் இருக்கிறது அல்லவா? எழுதுவது என்று ஆரம்பித்தால், சாதாரண உரையாடலின்போது நினைவுக்கு வராத விஷயங்களெல்லாம்கூடத் துல்லியமாகக் கவனப்படும். அதைவிட முக்கியமான இன்னொரு சங்கதி இருக்கிறது...

என்ன அது...!

என்னுடைய கதையில் நான் இருக்கும் விதம், இன்னொருவரின் கதையில் என்னவாகப் பதிவாகிறது என்று பார்ப்பதற்காகத்தான்...

கோவர்த்தனம் தொடர்ந்து சிரித்தார். நானும் சேர்ந்துகொண்டேன். சிரிப்பு அடங்கியபின், கேட்டேன்.

இன்னும் ஒரு விஷயம் மட்டும்தான் உறுத்திக்கொண்டிருக்கிறது ஸார்.

சொல்லுங்கள்.

பெரியவரோடு தொடர்புடையவர்களாக நான் இதுவரை சந்தித்த அத்தனைபேருமே உயர்சாதிக்காரர்கள்...

அவசரப்படுகிறீர்கள் மிஸ்டர் சந்தானம். உண்மையில், பெரியவர்மீது உள்ளன்பும் மரியாதையும் கொண்டவர்களும், அவருக்கு அணுக்கமானவர்களும் எத்தனைபேர் இருக்கிறார்கள் என்று யாருக்கும் தெரியாது. காரணம், அவர் ஒரு நிறுவனம் அல்ல. பாருங்களேன், ஹரிஹர சுப்ரமணியம், பால்பாண்டி என்றெல்லாம் பெயர் சொல்கிறீர்கள். அவர்கள் இருப்பதே இன்றுவரை எனக்குத் தெரியாது. இப்படி எங்கெங்கே யார்யார் இருக்கிறார்களோ...? வேறொன்றும்

சொல்வேன், நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ளவில்லையென்றால்...

அட, நீங்கள் எது வேண்டுமானாலும் சொல்லலாம்.

...இவ்வளவு பேரைப் பார்த்து வந்திருக்கிறீர்கள். பெரியவர் ஸ்ரீ வேதமூர்த்தி பற்றி விதவிதமான செய்திகள் கிடைத்திருக்கின்றன. மேலோட்டமாகவாவது அவர் சம்பந்தமாக உங்களுக்குள் ஒரு பிம்பம் உருவாகியிருக்கும்... அதனுடன் ஒத்துப் போகிறதா உங்கள் கேள்வி...?

'இல்லை' என்று தலையசைத்தேன்.

...ஆக, சாதிகள் தொடர்பாக உங்களுக்குள் வேர் ஓடியிருக்கும் ஆழத்திலிருந்து வரும் கேள்வியை, சாதி அமைப்பென்ன, இப்போதிருக்கிற விதமான சமூக அமைப்பையே கடந்து வாழ்கிற ஒருவர்மீது குற்றச்சாட்டாகச் சுமத்த விழைகிறீர்கள்?

நான் குற்றமெல்லாம் சாட்டவில்லை...

எதிர்வரும் மனிதர்கள் அனைவர் சம்பந்தமாகவும் நமது மனம் மதிப்பீடுகளை உற்பத்தி செய்தவண்ணம்தான் இருக்கிறது. நம்மை மாதிரிப் பாமர மனம் சாதி என்ற அளவுகோலையும் விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருக்கிறது. அது ஒரு அளவுகோலே அல்ல என்பதை உணராமல்...

இந்த வாக்கியம் புரியவில்லை எனக்கு. ஆனால், வேறொன்று புரிந்தது. ஒரு பகல் முழுவதும் உரையாடியதில் கோவர்த்தனம் உணர்ச்சிமயமாவது இதுதான் முதல் தடவை. 'தேவையில்லாமல் கேள்விகேட்டு அவரைத் தொந்தரவு செய்துவிட்டோமே' என்று எனக்குள் நெருடியது.

...இவ்வளவு ஏன், நீங்கள் திருத்தணியில் சந்தித்தீர்களே, ராமலிங்கம். அவர் எந்த சாதியைச் சேர்ந்தவர் என்பது உங்களுக்குத் தெரியுமா...? இந்த இல்லத்தில் இவ்வளவு குழந்தைகள் இருக்கிறார்களே, இவர்கள் எனக்குக் கிடைத்த இடங்களில் சாதிச் சான்றிதழும் கிடந்தது என்றா நினைக்கிறீர்கள்...?

கடைசி வாக்கியத்திற்கு வந்தவுடன், கோவர்த்தனத்தின் கண்களில் பழைய சிரிப்பு வந்து சேர்ந்துவிட்டது. ஆசுவாசமாக உணர்ந்தேன்.

...என்றாலும் கேட்டுவிட்டீர்கள். நேரடியான சான்று இல்லாமல் மனம் சமாதானமாகுமா? திருவண்ணாமலையில் ஸ்ரீ மன்னாதி இருக்கும் அதே இடத்தில் ஸ்ரீ ஜய்ராம் என்று ஒரு மராட்டியர் இருக்கிறார். அவரையும் நீங்கள் சந்திக்கலாம்... யதேச்சையாக அவரை

ஒருமுறை சந்திக்கக் கிடைத்தது. சாதாரணமாகக் கேட்கிற மாதிரி அவருடைய பூர்விகம் பற்றிக் கேட்டுத் தொலைத்தேன். அவர் சொன்ன பதில் என் முகத்தில் அறைந்தது...

என்ன சொன்னார் அவர்?

என்னுடைய கேள்வி காதில் விழாதவர் மாதிரித் தொடர்ந்தார் கோவர்த்தனம்.

...அடுத்த சில நாட்களுக்கு என்னால் நிம்மதியாக உறங்க முடியவில்லை. மனிதர்களுக்குள்ளான பகுப்புகள் தொடர்பாக என் மனத்தில் என்னையறியாமல் எஞ்சியிருந்த கசடுகளும் கொழுந்துவிட்டு எரிந்து பொசுங்கித் தீய்ந்த நாட்கள் அவை. வாஸ்தவத்தில், மிஸ்டர் சந்தானம், அன்பால் நிரம்பிய உலகம் உங்கள் முன்பாகத் திறந்து கிடக்கிறது. வரப்புகளும் பிரிவுகளும் அற்ற சமவெளித் தரை அது. பாக்கியம் இருப்பவர்களுக்குப் பார்க்கக் கிடைக்கும்... ஸ்ரீ ஜய்ராமின் ஒற்றை வாக்கியம் தந்த அதிர்வில், ஏகப்பட்ட விபரங்கள் சேகரித்து, Economic and Political Weekly என்ற பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறேன்... அதன் பிரதி இங்கே அலமாரியில் கிடந்தால் தேடி எடுத்துத் தருகிறேன். இரவு உணவுக்குப் பிறகு ஞாபகப்படுத்துங்கள்...

அமர்ந்த நிலையிலேயே அலமாரியில் அடுக்கியிருந்த புத்தகங்களைக் கண்ணால் ஒருமுறை மேய்ந்தார். கீழ்த்தட்டில் அடுக்கியிருந்தவை அனைத்துமே சஞ்சிகைகள் என்பதைக் கவனித்தேன்.

...முடிந்தால் இரவு படித்துப்பாருங்கள்.

‘கட்டுரை என்ன, ஸ்ரீ ஜய்ராமை நேரிலேயே சென்று சந்தித்துவிட்டால் போகிறது’ என்று நினைத்துக்கொண்டேன்.

இரவுச் சாப்பாட்டுக்கான மணி ஓங்கி ஒலித்தது. இதுவரை தளர்வாக அமர்ந்து பேசிக்கொண்டிருந்த கோவர்த்தனம் சடாரென நிமிர்ந்து உட்கார்ந்தார்.

சாப்பிடப் போகலாமா. குழந்தைகளைக் காக்க வைக்கக் கூடாது.

என்றவாறு எழுந்தார். தாழ்வாரத்திலிருந்து படியிறங்கி மைதானத்தின் குறுக்காக நடந்தபோது ஒரு கேள்வி உதித்தது.

ஸார், இன்னும் ஒரே ஒரு கேள்வி பாக்கியிருக்கிறது...

கோவர்த்தனம் பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தபோது முகத்தில்

விளக்கு வெளிச்சம் படிந்தது. அகலமான முகம்.

சொல்லுங்கள்.

முதன்முதலில் நீங்கள் கண்டெடுத்த அந்தக் குழந்தை என்ன ஆயிற்று?

பெரிய பெண்ணாக வளர்ந்துவிட்டது...

என்று சொல்லிக் கடகடவென நகைத்தார் கோவர்த்தனம். என் முதுகில் செல்லமாகத் தட்டினார். நானும் சிரித்தேன்.

...தவறாக எடுத்துக்கொள்ளாதீர்கள். இங்கே வருகிற குழந்தைகள் பற்றி எந்த விபரமும் கேட்டுக்கொள்வதில்லை என்கிற மாதிரியே, இங்கிருந்து வெளியேறியவர்கள் பற்றியும் எந்தத் தகவலையும் கசிய விடுவதில்லை நாங்கள். அப்படி ஒரு விதி உருவாக்கி வைத்திருக்கிறோம். என்றாலும் நீங்கள் கேட்டது எனக்கே மிகவும் திருப்தியாக இருந்தது. இன்னார் என்று சொல்ல மாட்டேன், ஆனால், அந்தக் குழந்தை இப்போது மிகப் பிரசித்தி பெற்ற நடனமணியாக இருக்கிறாள். உலகமெங்கும் பறந்து பறந்து நாட்டியமாடுகிறாள். திருமணம் முடிந்து, ஒரு குழந்தைக்கும் தாயாகியிருக்கிறாள்...

கோவர்த்தனத்தை ஆவி சேர்த்து அணைத்துக்கொள்ள வேண்டும் போல எனக்குப் பரபரத்தது. முன்னங்கை ரோமங்கள் குத்திட்டு நிற்பதை உணர்ந்தேன். தாமும் அதை உணர்ந்தவர் மாதிரி என் வலதுகையைப் பற்றிக்கொண்டார் கோவர்த்தனம். இறுக்கமான பிடி. கோவர்த்தனம் தொடர்ந்தார்:

...இதைவிடவும் மிகப் பெரிய செய்தி ஒன்று உண்டு மிஸ்டர் சந்தானம். இன்றுவரை தான் பெறும் சன்மானங்களில் பத்து சதவீதத்தை மறக்காமல் இந்த இல்லத்தின் வங்கிக் கணக்குக்கு அனுப்பி விடுவாள். முந்தாநாள்கூட கனேடியன் டாலரில் ஒரு தொகை வந்து விழுந்திருக்கிறது. மாதம் ஒரு தடவையாவது என்னைக் கூப்பிட்டுப் பேசுவாள். நான் 'வேண்டாம், வேண்டாம்' என்று தடுத்தாலும், அவள் பிடிவாதமாக என்னை 'அப்பா' என்றுதான் கூப்பிடுகிறாள்...

ஒரு கணம் நின்றார் கோவர்த்தனம். நானும் நின்றேன். சாப்பாட்டு அறை வாசலை நெருங்கியிருந்தோம். தரையை உற்றுப் பார்த்தார்.

...உங்களிடம் சொல்வதற்கென்ன, சிலவேளைகளில் அவள் அப்படி அழைப்பது எனக்கும் பிடித்துத்தான் இருக்கிறது!

'விருந்தினர் அறையில் வேண்டாம், தமது தனியறையிலேயே

இருவரும் படுத்துக்கொள்ளலாம்' என்றார் கோவர்த்தனம். 'உறக்கம் வரும்வரை பேசிக்கொண்டிருக்கலாமே. எனக்கும் நாளைக்கு முக்கியமான வேலை ஒன்றும் இல்லை' என்று சொன்னார்.

விடுதியின் வரவேற்பறைக்கும் உணவறை போன்ற இதர இடங்களுக்கும் சம்பந்தமேயில்லாத எளிமை கொண்ட அறை அது. மெத்தை இல்லாத ஒற்றை இரும்புக் கட்டில் ஒன்று. பழையதாகி விட்ட கம்ப்யூட்டர் வைத்திருந்த மரமேஜை. ஒயர் பின்னிய மர நாற்காலி. இவை போக ஒருவர் விசாலமாகப் படுத்துறங்க இடம் கொண்டது. எதிர்ச்சுவரில் குழிந்த அலமாரியில் பத்து இருபது புத்தகங்கள் இருந்தன. மிதமான வேகத்தில் சுழலும் மின்விசிறி. கட்டிலுக்கருகில் இருந்த மூன்று பத்தி ஜன்னல், தங்கும் அறைகள் கொண்ட கட்டடத்தைப் பார்க்கத் திறந்தது. கழிவறை வசதி இல்லாத அறை.

என்னைக் கட்டிலில் படுத்துக்கொள்ளச் சொன்னார் கோவர்த்தனம். கட்டிலில் இருந்த விரிப்பு போர்வை தேசலான தலையணை எல்லாவற்றையும் என்னையே பயன்படுத்திக் கொள்ளவும் சொன்னார். தாம் வெறுந்தரையில் படுத்துக்கொண்டார். 'கட்டிலில் படுத்துக்கொள்கிறவனுக்கு விரிப்பெதற்கு' என்று நான் வற்புறுத்திய போதும், வெறுந்தரையில் படுப்பது தமக்குப் புதிய விஷயம் அல்ல, பிடிக்காத விஷயமும் அல்ல என்று பிடிவாதமாக மறுத்துவிட்டார்.

உறக்கம் கண்ணை அழுத்தும்வரை ஏதேதோ பேசிக்கொண்டிருந்தோம். பகலில்போல இல்லை. இப்போது நான்தான் அதிகம் பேசினேன். யாரையெல்லாம் பார்த்தேன், என்னவெல்லாம் கேள்விப்பட்டேன் என்று விலாவாரியாகக் கேட்டு ரசித்துக்கொண்டிருந்தார் கோவர்த்தனம்.

சரி, தூங்குவோமா.

என்று அவர் கேட்டபோது கம்ப்யூட்டருக்கு அருகில் இருட்டில் ஒளிந்திருந்த அலாரம் கடிகாரம் இரண்டரை மணி என்று பச்சை நிறமாய் ஒளிர்ந்தது. அறையின் வாசலிலிருந்து நீண்ட வராந்தாவின் மறுகோடியில் இருக்கும் கழிவறைக்குச் சென்று நான் சிறுநீர் கழித்துத் திரும்பியபோது இளம் குறட்டை வெளிவந்து கொண்டிருந்தது அவரிடமிருந்து.

திறந்த கதவின் வழியாகவும், ஜன்னலின் வழியாகவும் உள்ளே நுழைந்து நிரம்பியிருந்த மைதான விளக்கின் வெளிச்சம் ஜமுக்காளம்போல விரிந்திருக்க, வலதுகையைத் தலைக்கணையாக

வைத்து ஒருக்களித்துப் படுத்திருந்தார் கோவர்த்தனம். வழிதவறி சம்சாரத்தில் மாட்டிக்கொண்ட துறவிபோல ஒரு கணம் தென்பட்டார்.

பகல்பொழுதில் மாட்டிக்கொண்டிருந்த கவசங்கள் யாவும் குலைந்து உறக்கத்தின் மடியில் தம்மை ஒப்புக்கொடுத்த பச்சைக்குழந்தையாக, வெகுளியாக இருந்தது முகம்.

உறங்க வரும் முன், உணவறையில் ஐம்பது அறுபது குழந்தைகளின் மத்தியில் உட்கார்ந்து சாப்பிட்டது நினைவு வந்தது எனக்கு...

வித்தியாசமான அனுபவம் அது. அத்தனை குழந்தைகள் இருக்கும் இடத்தில் சிறு ஒலிகூட எழும்பாதது லேசாக அச்சமூட்டியது. ஆனால், தாம் காட்டிக்கொள்ளும் அளவுக்குக் கடினமான மனிதர் இல்லை இந்த கோவர்த்தனம் என்பது இப்போதே எதற்காகத் தெரியவேண்டும் இந்தக் குழந்தைகளுக்கு என்றும் தோன்றியது...

கோவர்த்தனத்தின் பக்கத்துத் தட்டுக்கு நேரே அமர்ந்திருந்த பிஞ்சு இவருடைய தட்டிலிருந்து ஒரு சப்பாத்தியை எடுத்துத் தன் தட்டில் போட்டுக்கொண்டது. கோவர்த்தனம் அதைக் கவனிக்காதது மாதிரிப் பிரார்த்தனைப் பாடலை ஆரம்பித்தார். குழந்தைகள் ஒரே குரலில் பின்தொடர்ந்தனர்.

கடைசிவரி முடியும்போது பாதிச் சப்பாத்தியைக் காலி செய்திருந்தது அந்தப் பிஞ்சு.

இரவின் அடர்பின்னணி உருவாக்கிய அமானுஷ்யத்தில், பெரும் ஆறுதல்போல அந்தப் பிரார்த்தனைப் பாடல் எனக்குள் உயர்ந்தது. சுருதியைப் பற்றியோ ஸ்வரத்தைப் பற்றியோ கவலைப்படாத அறுபது எழுபது சின்னஞ்சிறு குரல்கள் பாடலின் ஒவ்வொரு வரியையும் இரண்டிரண்டு தடவை பாடின...

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே

காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே

வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே

மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதி கொடுக்கும் மதியே

நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே

நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலம் கொடுக்கும் நலமே

எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்ற சிவமே
என்னரசே யான் புகலும் இசையுமணிந்தருளே...

✠

ஐய்ராம்

நள்ளிரவில் விழிப்புத் தட்டியது. ஏதோ துர்க்கனவு என்று மட்டும் நினைவிருக்கிறது. நடுத் தெருவில் அநாதரவாக நிற்கும் சித்ராவை யாரோ புடவையை உருவிப் போட முயல்கிறார்கள் என்று ஒரு காட்சி மிச்சமிருக்கிறது. கனவில் நடுங்கத் தொடங்கிய மனம் இன்னமும் படபடக்கிறது. எழுந்து கழிவறைக்குப் போனாள்.

திரும்பியபோது மனம் சற்று சமனமாகிவிட்டது. விடிவிளக்கின் வெளிச்சத்தில், கனவில் கண்ட ஸ்தலம் மாதிரி மர்மமாகவும் அந்நியமாகவும் இருக்கிறது படுக்கையறை. ஒருவரையொருவர் நெருக்கிக்கொண்டு தூங்கும் குழந்தைகளை நின்று வெறித்தாள். இவர்கள் இப்படி ஆழ்ந்து உறங்குகிற நேரத்தில்தான் சந்தானம் இவளை மெல்லத் தட்டி எழுப்புவார்.

ஓசை எழுப்பாமல் ஆளுக்கொரு கழிவறைக்குச் சென்றுவிட்டு, ஆயத்தமாகத் திரும்பி வருவார்கள். அதிகரித்து வரும் வயதின் காரணமாகப் பகல் பொழுதில் ஆட்சி செய்யும் உடல் உபாதைகள் அத்தனையும் கண்காணாத் தொலைவுக்குப் போய்விடும். முதன்முதல்நாள் இருந்த அதே வேகத்துடன் ஒருவரில் மற்றவர் புத்தம் புதிதாக முயங்குவார்கள் பாக்கி இருக்கும் ரகசியங்களைத் தேடி எடுக்கிறவர்கள் மாதிரி. விடியும் போது உடம்பில் சோர்வு மிச்சமிருக்கும். மனம் அநியாயப் புத்துணர்ச்சியுடன் இருக்கும்... அதெல்லாம்கூட, போன ஜென்மத்துக் கனவுபோல வெகுதூரத்தில் தென்பட்டது.

ஆவேசமாய் நடந்து விளக்கைப் போட்டாள். அலமாரியைத் திறந்தாள். புடவைகளுக்கு அடியில் இருந்த கல்யாண ஆல்பத்தை எடுத்து வந்தாள். வெள்ளெழுத்துக் கண்ணாடியை மாட்டிக்கொண்டு ஒவ்வொரு படமாகப் பார்க்கத் தொடங்கினாள்.

வர்ணப் படங்களைவிட கறுப்புவெள்ளைக்குத்தான் ஆயுள் அதிகம் என்று தனிக் கேமராவில் எடுக்கச் சொன்ன படங்கள். தன்

பால்யத்தையும் புருஷனின் கட்டுடலையும் ரசித்துக்கொண்டே வந்த கவனம் எப்போது வேறு பட்டியல் எடுக்கத் திரும்பியது என்று தெரியவில்லை கல்யாணத்துக்கு வந்த நெருங்கிய சொந்தங்களில் எத்தனைபேர் இப்போது உயிருடன் இல்லை என்று கணக்கு ஓடத் தொடங்கியது. அடேயப்பா! எத்தனை பேர்.

பார்த்துக்கொண்டே வந்தபோது, கல்யாணமே ஒரு துர்க்கனவுதான் என்று தோன்றியது. குறைந்திருந்த படபடப்பு மீண்டும் வந்து தொற்றியது.

✠

ஜ் யராம் ஆங்கிலத்தில்தான் பேசுகிறார். 'தமிழ் பேச வராதா' என்று கேட்டபோது 'குஞ்சம் குஞ்சம் தரியும்' என்று மழலையாகச் சொன்னார். 'இத்தனை வருஷமாகத் தமிழ்நாட்டில் இருக்கிறீர்களே, தமிழ் பேசக் கற்றுக்கொள்ளவில்லையா' என்று கேட்டேன். 'இந்தப் பயல் இங்கே வந்தது தமிழ் கற்றுக்கொள்ள அல்ல' என்று அழுத்தமாகச் சொன்னார்.

'பாஷைக்கு வெளியில் இருக்கிற விஷயங்களில்தானே பெரும்பாலும் புழங்குகிறான் எந்த பாஷை சரளமாக வருகிறதோ அதில்தானே யோசனையும் ஓடும்?' என்றார். நான் விடவில்லை. 'உங்கள் தாய்மொழி ஆங்கிலம் இல்லையே' என்று கேட்டேன். 'ஒரு மொழியின் உயிரான சங்கதிகளை மறப்பதற்கு முப்பத்திரண்டு வருஷம் என்பது போதுமான காலம்தான்' என்று சிரித்தார். 'தொடர்ந்து மொழிப்போரில் மட்டும்தான் ஈடுபடப்போகிறீர்களா?' என்று கேட்டுவிட்டு இன்னும் பெரிதாகச் சிரித்தார்...

ஆனால், ஒன்று. அவரோடு பேசும்போது எனக்கும் ஆங்கிலம் சரளமாகிவிடுகிறது. அவ்வளவு எளிமையான ஆங்கிலம் ஜய்ராமுடையது. நான் திசை திரும்பினேன்.

இதில் ஈடுபட்டவுடனே நீங்கள் மேற்கொண்ட அநுஷ்டானங்கள் பற்றி எனக்குச் சொல்வீர்களா? உங்களைப் போன்றவர்களும் என்னைப் போன்றவர்களும் வேறுபடும் புள்ளி எது என்று தெரிந்துகொள்ள ஆவலாய் இருக்கிறது. உங்களுக்கு ஆட்சேபம் இல்லையென்றால் சொல்லலாம்.

ஜய்ராம் சிரித்தார். நன்கு தட்டையான நெற்றி அவருக்கு. சிரிக்கும்போது புருவங்கள் உயர்கின்றன. நெற்றியில் வசீகரமான கோடுகள் ஓடுகின்றன.

தாராளமாகச் சொல்லலாமே. இது என்ன வியாபாரிகள் வைத்திருக்கிற தொழில் ரகசியம் மாதிரியான விஷயமா என்ன?

இல்லை. இது ஒரு விசேஷமான பிராந்தியம் அல்லவா? ஹரிஹர சுப்ரமணியம் சில விஷயங்கள் சொன்னார். ஆனால், அவை அறுதியானவை கிடையாதாமே. நபருக்கு நபர் மாறுபடக்கூடியது என்றார். என்னை மாதிரிப் பாமரர்களுக்கு...

பாமரன் அறிஞன் என்றெல்லாம் பேதம் கிடையாது நண்பரே. இதெல்லாம் அளவுகோல்களால் உண்டாகிற வித்தியாசங்கள். இன்னொரு அளவுகோலில் எல்லாரும் மனிதப் பிறவிகள்தாம். வேறொரு அளவுகோலில் கொசுவும் ஒட்டகச்சிவிங்கியும் விட்டில் பூச்சியும் மஹாத்மா காந்திஜியும் எல்லாருமே உயிர்ப்பிறவிகள்தாம்.

அதற்கில்லை, பழனியில் வைரவன் என்று ஒருவரைப் பார்த்தேன். தீட்சை வாங்காதவர்களுக்கு இதைப்பற்றியெல்லாம் கேட்டுக் கொள்வதற்கே அருகதை கிடையாது என்று சொன்னார். அதனால்தான் பெரியவர் அவருக்கு ஒரு உத்தியோகம் அமர்த்திக் கொடுத்ததாகவும் சொன்னார்.

பெரியவர் அவருக்கு ஏன் தீட்சை வழங்கவில்லை என்பது இவனுக்குத் தெரியாது. ஆனால், சில விஷயங்கள் இவன் மனத்துக்குப் படுகிறது. ஒன்று, தீட்சை வேண்டுமென்று நீங்கள் சொன்ன நபர் கேட்டு, பெரியவர் மறுத்தாரா? இரண்டாவது, இவன் கேட்டா இவனுக்கு தீட்சை வழங்கினார்? இல்லை, ஸ்ரீ ஹரிஹர சுப்ரமணியம் தீட்சை வேண்டும் என்று இறைஞ்சினாரா?

ஜய்ராமின் பேச்சில் ஒரு விசித்திரமான சங்கதி இருந்தது. தன்னை ‘நான்’ என்று அவர் குறிப்பிடுவதில்லை. ‘இவன்’ என்றுதான் சொல்லிக்கொள்கிறார். பூர்விக நாட்களைப் பற்றிச் சொல்லும்போது, ‘அவன்’ என்கிறார் எந்த ஒரு நேரத்திலும், என்னிடம் பேசுகிற ஆளுக்கும் நான் தேடிவந்த ஜய்ராமுக்கும் ஒட்டுறவே இருந்ததில்லை என்கிற மாதிரி. ஆனால், ஜய்ராம் சார்பாக என்னிடம் பேசுகிற, அவரைப் பற்றிய அந்தரங்கம் சகலமும் தெரிந்த, அந்த உடம்புக்கு வெளியில் அந்தரத்தில் வாசம் செய்கிற, தனி இருப்பு மாதிரி ஒரு த்வனி.

அவரைச் சந்தித்தபோதும் கேட்டேனே. அநுஷ்டானங்கள் சிலவற்றைப் பற்றிச் சொல்வதற்கு இல்லை குருவின் உத்தரவு இருந்தாலன்றி அவற்றைச் சொல்லக்கூடாது என்று அவர் சொன்னார்.

குருவை ஒருவர் என்னவாகப் பார்க்கிறார் என்பதைப் பொறுத்தது

அது. குரு தம்மைவிட உயர்ந்த அதிகார பீடம் என்று நினைத்தால்தான் அவரிடம் அனுமதி கோரவேண்டும் என்று சொல்வார். அவரை ஸஹிருதயர் என்று எண்ணினால், ஏதொன்றுக்கும் அவரிடம் அனுமதி கேட்க மாட்டார். மனமும் சரீரமும் சேர்ந்த தொகையான தான், ஞானமும் அஞ்ஞானமும் விரவியிருக்கும் ஒரு திறந்தவெளி என்று அறிந்துகொண்டால் குருவும் இதுபோன்ற ஒரு வெளிதான் என்பதை அறிவார். குரு சிஷ்யன் என்று ஆகும்போதே, இவரில் ஒரு பகுதி குருவாகிறது. அவரில் ஒரு பகுதி சிஷ்யனாகி விடுகிறதே...

ஜய்ராம் சிரித்தார். நான் பேச்சற்று அமர்ந்திருந்தேன். மிக எளிதாகச் சொல்லிக்கொண்டு போகிறார் இவர். ஆனால், இதில் ஏதோ கனமான விஷயம் பொதிந்திருக்கிறது. மூடன் என்பதால் எனக்கு அது புரிய மாட்டேனென்கிறது. இவரிடம் கேட்டால் மூடன் மேதை என்றெல்லாம் எதுவுமில்லை என்று உடனடியாகச் சொல்லக்கூடும் தலையை உதறி யோசனையின் ஓட்டத்தை நிறுத்த முயன்றேன்.

...அதுசரி, வாழ்நாள் முழுவதும் ஒருவன் தீட்சை வாங்காமல் இருந்துவிட முடியுமா என்ன? பிராயத்தில் இருக்கிற வேகங்கள் எல்லாம் முதுமை நெருங்கும்போது ஒவ்வொன்றாய்ப் பின்வாங்கவில்லையா? காமம், பசி, ருசி, ஏன், உறக்கம் இதெல்லாமே வேகமும் அளவும் குறைந்துகொண்டேபோய், ஒருவிதத் துறவு நிலைக்கும் ஆணும் பெண்ணும் நகர்கிறார்களா இல்லையா? உங்களுக்கு வேண்டுமோ வேண்டாமோ, தீட்சை கிடைக்கத்தான் செய்யும். மனித சரீரத்தின் இயற்கை நியதி அது.

ஜய்ராம் மறுபடியும் சிரித்தார். பிறகு மௌனமானார்.

ஊர்ஊராகத் திரிந்து இதுவரை பார்த்துவந்த அத்தனை பேரிடமும் ஒருவிதமான கிறுக்குத்தனம் இருப்பதைக் கவனித்து வந்திருந்தேன். குடும்பம் குட்டி என்று வழக்கமான சமூக வாழ்க்கை அமையாததன் விளைவுபோல என்று சமாதானமும் கொள்வேன். அவர்கள் அனைவரிலும் ஜய்ராம் மிக விசேஷமாகத் தெரிந்தார்.

பொதுவாக, மன்னாதியிடம் இந்த இரண்டு தடவைகளாகப் பேசும்போதும், அவர் என்னிடம் சிரித்துக்கொண்டிருக்கிறார், ஊடே கொஞ்சம் பேசவும் செய்கிறார் என்று பட்டது. அதே உணர்வுதான் இவருடன் பேசும்போதும். இவரிடம் இன்னொரு விசேஷமும் இருக்கிறது. புருவங்கள் இரண்டும் இமைகளுடன் ஏதோ மனத்தாங்கலில் இருப்பவைபோல அதிகபட்ட உயரத்தில் சென்று நிலைகொண்டுவிட்டிருந்தன. கண்ணுக்குத் தெரியாத நிரந்தர ஆச்சரியம்

ஒன்றை இடையறாது தரிசிக்கும் பாவம் கொண்ட கண்கள்.

நாங்கள் இருவரும் படுத்திருந்த அறையில் இருட்டும் நிசப்தமும் நிரம்பியிருந்தது. எனக்கு விரித்துக்கொள்ள ஒரு பழைய கோரைப்பாயும், தலைக்கு உயரமாக மணைப்பலகை போன்ற ஒன்றும் கொடுத்திருந்தார் மன்னாதி. பக்கத்து அறையில் உறங்குகிறார் அவர். மன்னாதியின் சுவாசம் துல்லியமாகக் கேட்குமளவு நிசப்தமாக இருந்தது எங்கள் அறை. கொஞ்ச நேரத்தில் ஜய்ராமின் சுவாசமும் உரத்து ஒலித்தது. ஆழமாகவும் சீராகவும் இருந்த ஒலி ஏனோ ஒருவிதமான பீதியையும் தனிமை உணர்வையும் எனக்குள் கிளப்பியது. முக்காலியின்மேல் இருந்த விநோதச் சிற்பம் ரேடியம் மாதிரி ஒளிர்வது நிஜம்தானா, என்னுடைய பிரமையா என்று எழும்பிய சந்தேகம் வேறு...

ஜ ய்ராம் கோதுமை நிறம். கறுப்பாக இருந்து பழுப்பாகத் தொடங்கியிருக்கும் சருமம் போல. முகத்திலும் உடம்பிலும் அடர்த்தியான ரோமக்கட்டு. வெட்டிச் சீராக்கப்படாத தாடியும் பிடரியில் புரளும் கேசமும் புடைத்த விழிகளும் அகலமான நெற்றியும் ஒருவித முரட்டுத் தோற்றத்தை உருவாக்கி வைத்திருக்கின்றன. எழுபது வயது என்கிறார். நம்ப முடியவில்லை. அவ்வளவு கருமையான முடி. பேருக்குக்கூட நரையின் கீற்றுத் தட்டுப்படவில்லை. பளீரென்ற, பார்வைக்கே உறுதியாகத் தெரியும் பற்கள். இயல்பாகவே உரத்த குரல்.

கறாரான, விட்டேற்றியான மனிதர் மாதிரிப் பேசுகிறாரே தவிர, மிகுந்த பரிவு உள்ள மனிதர். சாயங்காலம் நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது,

நீங்கள் இப்படி மாறி உட்காருங்களேன்.

என்று தாம் அமர்ந்திருந்த இடத்திலிருந்து தள்ளி உட்கார்ந்தார். நான் நகர்ந்து அமர்ந்தபிறகுதான் உறைத்தது, இவ்வளவு நேரமும் சூரிய வெளிச்சம் என் முகத்தில் அடித்துக்கொண்டிருந்திருக்கிறது.

இரவு உணவுக்குப் பழங்களை வெட்டித் துண்டுபோடுவதற்காக மன்னாதியும் ஜய்ராமும் உட்கார்ந்தபோது நானும் சேர்ந்துகொண்டேன். பப்பாளியையும் அன்னாசியையும் வெட்டவேண்டாம் என்று சொல்லிவிட்டார் ஜய்ராம்.

நண்பர் தொடர்ந்து பிரயாணம் செய்து தேவைக்கும் அதிகமான உஷ்ணத்தை உடம்பில் ஏற்றிக்கொண்டிருக்கிறார். சாப்பிட்டு வேறு ஜாஸ்தியாக்கிக்கொள்ள வேண்டாம். மாதுளையை அதிகமாக உதிர்த்துச் சேர்க்கலாம்.

இரவு உணவாக வெறும் பழங்களை மட்டும் சாப்பிட்டதில், உடம்பு

வழக்கமான கனத்தோடு இல்லாமல் தக்கை மாதிரி எடையற்று இருக்கிறது.

கோயிலுக்கு அருகில் உள்ள ஒரு பழக்கடையிலிருந்து தினமும் காலையில் சிறு கூடை நிறையப் பழங்கள் வந்து சேருமாம். அன்றைக்கு இருப்பில் உள்ள பழங்கள் சகலத்திலும் இரண்டிரண்டோ, மும்மூன்றோ. மன்னாதி சொன்னார். இவர்களுடைய உடைத்தேவைகளை கடைத்தெருவில் உள்ள ஜவுளிக்கடை ஒன்று நிரந்தரக் கைங்கரியமாக எடுத்துக்கொண்டிருக்கிறது.

குளுருக்கும் வெய்யிலுக்கும் பழகிப்போன உடம்பு. வெறுந்தரையிலே படுக்கெ. வருஸத்துக்கு ஏழெட்டு வேஸ்டி. நாலஞ்சு துண்டு. அவ்வளவுதானே. போன வருஷ வேஸ்டி இந்த வருஷம் துண்டாகுது. அடுத்த வருசம் கௌபீனமாயிருது. வேறென்ன வேணும் சொல்லுங்க?

என்று சிரித்தார் மன்னாதி.

வேறேதும் தேவையென்றாலும் உதவுவதற்கு உபகாரிகள் இருக்கிறார்கள். வெளியூர்ப் பிரயாணங்கள் என்று வரும்போது பணமாகவோ பொருளாகவோ வேண்டியதைக் கொடுத்து உதவுவார்கள். மாதம் ஒருதடவை வரும்போது சிவராமன் அவருடைய காரில் மளிகைச் சாமான்களும் அரிசியும் கொண்டுவந்துவிடுவார்.

மடம் என்ற பெயரே தவிர, வெளியில் இருந்து பார்க்கிறவர்களுக்கு சாதாரண வீடு போலத்தான் தெரியும். சற்று விஸ்தாரமான நந்தவனத்தின் மையத்தில் அமைந்த வீடு. ஒன்றுக்கொன்று பக்கவாட்டில் அமைந்த மூன்றே அறைகள். முதல் இரண்டு அறைகளுக்கும் பொதுவாக ஒரு வராந்தா. பிரத்தியேக நிலைவாசலுடன் தனித்திருக்கும் மூன்றாவது அறையில் சிறு சிவலிங்கம் வீற்றிருக்கிறது.

சிவலிங்கத்துக்குத் தினசரிப் பூஜைகள் நடத்தும் பொறுப்பு மன்னாதியுடையது. இதுபோக அன்றாடம் வந்து போகிற பக்தர்கள் நாலைந்து பேர் இருக்கிறார்கள். கையில் புஷ்பக் கூடையுடன் வருகிறார்கள். மன்னாதியின் அன்றாடப் பூஜையில் பார்வையாளர்களாக உட்கார்கிறார்கள். நைவேத்தியம் ஆன பழங்களில் ஓரிரண்டைப் பிரசாதமாகப் பெற்றுக்கொண்டு போகிறார்கள். சிறுசிறு வார்த்தைகளில் பேசிக்கொள்கிறார்கள். என்றாலும் நிரந்தரமாக ஒருவித அமைதி நிலவுகிற இடம்.

இதுபோக, தினமும் அதிகாலையில் ஒருவர் வருகிறார். நேரே உள்ளே

வந்து சிவலிங்கத்தை நமஸ்கரிக்கிறார். வாசலில் வந்து கிழக்கு நோக்கித் தரையில் சம்மணமிட்டு அமர்கிறார். கண்களை மூடி ஒருமணி நேரம்போல இருந்துவிட்டு எழுந்து சென்றுவிடுகிறார். பத்து வருடங்களாகத் தினசரி வந்து போகிறவராம் இவர். அவருடைய பெயரோ, என்ன செய்கிறார் எங்கிருந்து வருகிறார் போன்ற தகவல்களோ யாருக்கும் தெரியாது. அவருடைய குரல் எப்படி இருக்கும் என்றே தெரியாது என்று சொன்னார் மன்னாதி.

பெரியவர் வருடம் முழுக்கப் பிரயாணத்தில்தான் இருப்பார். திருவண்ணாமலைக்கு எப்போது வருகிறார், எவ்வளவு நாள் இருப்பார், எப்போது கிளம்புவார் என்பதெல்லாம் யாராலும் யூகிக்க முடியாத சமாசாரங்கள்.

அவருக்கேகூடத் தெரியும்னு தோணலே எனக்கு. காத்து என்ன திட்டம் போட்டா வீசுது?

என்று தம் வழக்கமான சிரிப்பைப் பொங்கினார் மன்னாதி.

மற்றபடி, மடத்தில் நிரந்தரமாக உள்ளவர்கள் மன்னாதியும் ஜய்ராமும் மட்டுமே. இருவரிலும் மன்னாதி மட்டும்தான் மடத்திலேயே இருப்பார். ஜய்ராம் திடீர் திடீரென்று புறப்பட்டு மலையேறிவிடுவாராம். அங்குள்ள குகைகள் ஏதாவதொன்றில் நாட்கணக்காக இருந்துவிட்டு இறங்கி வருவார்.

ஒவ்வொரு தபா எறங்கி வர்றையிலயும் இன்னம் கொஞ்சம் தேஜஸாயிருவாரு. இன்னம் கொஞ்சம் சாந்தமாயிருவாரு.

என்றார் மன்னாதி.

என்றாலும், உள்ளூரிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் வந்துசெல்கிறவர்கள் இருந்துகொண்டேதான் இருப்பார்களாம். சாப்பாட்டு வேளையில் வருகிறவர்களுக்கு உபசாரமும் நடக்கும். ஒருவேளைக்கு மாத்திரம் சிறு சமையல். மன்னாதியே சமைத்துவிடுகிறார். இன்று மதியம் அவர் கைப்பக்குவத்தைச் சாப்பிட்டேன். உப்பு உறைப்பு புளிப்பு எண்ணெய் என்று எல்லாமே மிதமாக இருந்த சமையல். பத்தியச் சமையல் மாதிரி ருசி. தினசரியும் காலையில் உபவாசம்தான். இரவில் பழங்கள்.

பலவீனமாகவோ, ஒல்லியாகவோ இல்லை மன்னாதி. சற்றுக் கெச்சலாக இருக்கிறார். அது தாம் பிறந்த வம்ச வாகு என்று சொல்லிக்கொண்டார். ஆனால், ஜய்ராம் நன்கு அகலமாக இருக்கிறார். கொஞ்சம்கூடப் புடைப்பில்லாத, ஒட்டிய வயிறு. ஒருக்களித்துப் படுத்திருக்கும்போது,

தடிமனான பலகைபோலத் தெரிகிறார்...

இருளின் நிசப்தத்தையும், தன்னிச்சையாகப் பின்திரும்பி ஓடிக்கொண்டிருந்த ஞாபகங்களையும் கீறுகிற மாதிரி உரத்துச் செருமினார் ஜய்ராம். இருள் நன்கு பழகிவிட்டிருந்த கண்களுக்கு கோட்டுவடிவம் எழுந்து உட்கார்வது தெரிகிறது. பக்கத்து அறையில் சீராக வந்துகொண்டிருந்த சுவாசம் ஓரிரு மாத்திரைகள் சுருதி பிசகி ஓய்ந்தது. உடனடியாகத் தொடர்ந்தது, விட்ட இடத்திலிருந்து.

... சந்தானம்... சந்தானம். தூங்கிவிட்டீர்களா?

இல்லை. விழித்துக்கொண்டுதான் இருக்கிறேன். சொல்லுங்கள்.

தியானம் பண்ணுவதைப்பற்றிக் கேட்டீர்களல்லவா சாயங்காலம்...?

நானும் எழுந்து உட்கார்ந்தேன். கோட்டுருவம் எழுந்து ஓரிரு தப்படிகள் வைத்தது. வாசல் கதவைத் திறந்தது. ஜய்ராமாகியது. வாய் கொப்பளித்துக் களகளக்கும் ஒலி கேட்டது. சாயங்காலம் ஏதோ பேசிக்கொண்டிருந்தபோது, மதுரையில் பல வருஷங்களுக்கு முன்னால் யதேச்சையாகப் பழக்கமான சாமியார் ஒருத்தர் தியானம் பழகச் சொல்லி அறிவுரைத்ததைச் சொல்லியிருந்தேன்.

...நாலைந்து வினாடிகள்கூட மனத்தை ஒருமுகப்படுத்த முடியவில்லை எனக்கு. அதெல்லாம் என்னை மாதிரி லௌகீகத்தில் அமிழ்ந்த மனிதர்களுக்குச் சரிப்பட்டு வராதோ என்று தோன்றி, அப்போதே விட்டுவிட்டேன். 'மூச்சுப் பயிற்சி மட்டும் கொஞ்சநாள் பழகினேன். அப்புறம் அதுவும் நின்றுவிட்டது' என்று சொல்லிக்கொண்டிருந்தேன்... ஜய்ராம் தாம் படுத்திருந்த இடத்தில் வந்து உட்கார்ந்தார்.

...அவர், அதுதான் உங்களுக்கு முகம் மறந்துவிட்ட அந்தச் சாமியார், வழங்கிய ஆலோசனை என்ன என்று சொல்லலாமா?

விளக்கின் சுடரை நினைத்துக்கொள்ளச் சொன்னார். அதன் மையத்தில் கவனம் முழுவதையும் குவிக்கச் சொன்னார். என்னால்தான் முடியவில்லையே.

வேறென்ன நடந்தது?

என்னென்னமோ காட்சிகள் குறுக்கும் மறுக்குமாக ஓடித் தொந்தரவு செய்தன.

அதுதான்... திரும்பத் திரும்ப வந்த காட்சி என்னவென்று சொல்ல முடியுமா?

நான் கொஞ்ச நேரம் யோசித்தேன். இந்த மாதிரி சங்கதிகளெல்லாம் என் வாழ்க்கையில் சித்ரா வந்து சேர்வதற்கு முன்னால். இருபது வருஷங்களுக்குமேல் ஆகிவிட்டது.

ம்ஹூம். நினைவில் இல்லை.

சரிதான். வருடக்கணக்காகிவிட்டது என்றீர்களே...

சில கணங்கள் நிதானித்தார். பிறகு மறுபடியும் உரத்துச் செருமினார்.

...ஆரம்பத்தில் அவனும் அதே கஷ்டம்தான் அனுபவித்தான். பெரியவர் சாதாரணமாகச் சொல்லிவிட்டார், 'கொஞ்சநேரம் கண்ணை மூடி உட்கார்ந்து பழகு, ஜய்ராம்' என்று. தியானம் என்ற வார்த்தையைக்கூட அவர் உச்சரிக்கவில்லை. ஆக, அவன் தியானம் பழகவில்லை. கண்ணை மூடி உட்கார்வதற்குத்தான் பயின்றான். வெறும் இருபத்திச் சொச்சம் வயதுதானே. அந்த வயது மனம் முழுக்கப் பெண்கள் நிரம்ப வேண்டிய வயதல்லவா. அது உடம்பின் நியதி. நிரம்பிவிட்ட பெண் பிம்பங்களை எப்படிக் கையாள்வது என்பது சம்பந்தமாக மனத்தைப் பழக்கவேண்டியது அவரவர் பொறுப்பு. இதெல்லாம் இப்போது தெரிகிற விதத்தில் அந்த வயதில் தெரியுமா. பெரும்பாலானவர்களுக்கு எந்த வயதிலுமே தெரியாமல் போவதற்கும் வாய்ப்பிருக்கிறதே...

தலையைக் கோதிக்கொண்டது கோட்டுருவம்.

...அவன் பட்ட மேற்படிப்புப் படித்த நாட்களில் வகுப்புத்தோழி ஒருத்தி இருந்தாள். வீணா ராவ்ளே என்று பெயர். சற்று நெருக்கமாகவே அவனுடன் பழகியவள். ஜாதிபேதம் பார்க்காத தெளிவான மனம் கொண்டவள். மதிய உணவை சேர்ந்துதான் சாப்பிடுவார்கள். இவன் ஆதியிலிருந்தே சைவ உணவுப் பிரியன் என்பது கூடுதல் அனுகூலம். வீணாவுக்கு சாஸ்திரீய இசையில் மிகுந்த ஆர்வமும் ஞானமும் உண்டு. ஓய்ந்த நேரங்களில் சர்வகலாசாலை மரத்தடியில் உட்கார்ந்து தும்ரிகள், பஜன்கள், அபங்கங்கள் பாடிக் காட்டுவாள். சாதாரணமாகவே அழகான முகம், பாடும்போது பேரழகாகப் பொலியும். ஆரோக்கியமான நட்பு இருந்தது அவர்களுக்குள்.

...படிக்கிற காலத்தில் தோழியாக மட்டும் இருந்தாள். மராட்டியத்தை விட்டு வெகுதூரம் வந்து, திருவண்ணாமலையின் சாயங்கால ஏகாந்தத்தில், குளிர்ந்து கிடக்கிற பாறைமீது சம்மணம் கூட்டி உட்காரும்போதுதான் தெரிகிறது உள்ளே ஒரு ஆள் ரகசியமாக உட்கார்ந்து தானும் வீணாவைப் பார்த்துக்கொண்டிருந்திருக்கிறான்.

அவளைக் கிடந்த கோலத்தில் மட்டுமே பார்க்கிறவன் அவன். மூடிய கண்களுக்குள் வீணாவின் பிம்பம் வருகை தந்தவுடனே ஆடைகளைக் களையத் தொடங்கி விடுவான் அவளுடைய ஆடைகளை!

...அதிலும், முதலில் வீணாவின் முகம்தான் நினைவில் வரும். அதை விலக்க வேண்டுமென்று முயற்சி பண்ணப் பண்ண நெஞ்சு புட்டம் தொடை தொடையிடுக்கு என்று ஞாபகத்தின் பார்வை மேய ஆரம்பிக்கும். மேற்கொண்டும் அடக்கினால், இன்னும் விபரீதமான கோலங்களுக்கு நகர ஆரம்பித்துவிடும். இப்படியே ஒரு பத்து நாட்கள்போலக் கழிந்தது. ஒரு சாயங்காலம் அவனுக்கு உறைத்தது, ஒரேயொரு பிம்பத்தில் மனம் குவிய வேண்டும் என்றுதானே அவன் விரும்புகிறான், அது வீணாவாக இருப்பதில் என்ன தவறு? எந்தக் கோலமாக இருந்தால்தான் என்ன?

...அவ்வளவுதான், வீணா சற்றுத் தொலைவில் காட்சிதரத் தொடங்கினாள். அவளுடைய பிம்பத்தின்மீது கவனம் குவியக் குவிய அவள் விலகி நகர்வதை உணர்ந்தான். உடைகளைக் களைவது அறுதியாக நின்றுவிட்டது. நாள் செல்லச் செல்ல வீணாவின் பிம்பம் மங்க ஆரம்பித்தது. அவனுடைய சுவாசம் பதட்டமாக ஏறித்தாழ்வது குறைந்து சீராவதும் அவனது கவனத்தில் உறைத்தது.

...கண்ணை மூடுவதற்கு முந்தைய கணத்தில் பார்க்கும் காட்சி ஒரு நிலைப்படம் மாதிரிக் காட்சியளிக்கத் தொடங்குவதும் கொஞ்சநேரத்தில் அந்தக் காட்சியும் விளிம்பு குலைந்து வெறும் வெளிச்சமாக மீந்துவிடுவதும் பழக்கமாகிய காலகட்டமும், இதில் எந்த இடத்தில் வீணா ராவ்ளே நிரந்தரமாகக் காணாமல் போனாள் என்பதும் குறிப்பாக அவனால் சொல்ல முடியாது.

...இதன் அடுத்த பகுதிதான் இன்னும் ஆச்சரியமானது. அவன் அந்த நிலைக்கு வந்துசேர்ந்தது பெரியவருக்கு எப்படித் தெரிந்தது? தன்னியல்பாக அடுத்த பயிற்சியில் அவனை ஈடுபடுத்தினார். இன்றுவரை அவருக்கும் இவனுக்குமான தகவல் தொடர்பில் இப்படி ஒரு பூடகமான அம்சம் இருந்துகொண்டுதான் இருக்கிறது...

சில நிமிடங்கள் மௌனமாகக் கழிந்தன.

சுவரில் மாட்டியிருந்த பழையகாலச் சுவர்க்கடிகாரத்தின் ஊசல் ஆடுகிற க்ளிக்டிக் ஓசை ஸ்திரமாகக் கேட்டது. அதை அன்பளிப்பாக வழங்கிய குஜராத்தி ஒருவரின் கதையை போனதடவை வரும்போதே மன்னாதி என்னிடம் சொல்லியிருந்தார். கடிகாரம் சம்பந்தமாகவும் காலம்

சம்பந்தமாகவும் கேலியாகப் பெரியவர் ஏதோ சொன்னதையும் எனக்கு விவரித்திருந்தார். மறந்துவிட்டது. ஆனால், அவர் கிட்டத்தட்ட அரைமணிநேரம் சொன்ன கதையின் காட்சிவடிவம் போன்ற ஒன்று முழுசாக எனக்குள் ஓரிரு விநாடிகளில் ஓடிக்கடந்த மாதிரி உணர்ந்தேன். இதில், முகமற்ற குஜராத்தியர் வெண்ணிறப் பைஜாமா குர்த்தாவுடன் இந்தக் கடிகாரத்தை முகமற்ற பெரியவரின் பாத கமலங்களில் சமர்ப்பிப்பதை நான் கண்ணாரக் கண்டேன் என்பது இன்னும் பெரிய வேடிக்கை...! தொடர்ந்து, ஞாபகம் சம்பந்தமாக ஜய்ராம் பொழிந்து தள்ளியது ஞாபகம் வந்தது...

பாரதத்தின் முதல் ஜனாதிபதி யாரென்று உங்களுக்குத் தெரியுமல்லவா? அமெரிக்க ஜனாதிபதி கென்னடி மரணத்தைச் சந்தித்தவிதம் பற்றியும் நினைவிருக்கிறது. சந்திரனில் இறங்கி நடந்த முதல் மனிதர் இன்னார் என்பதும் உங்களுக்குத் தெரியும். இன்னொரு மனிதருக்கு இதே மாதிரியான வேறு நூறுநூறு விஷயங்கள் ஞாபகத்தில் இருக்கின்றன. இந்த ஞாபகப்பொதி அடைத்துக் கொண்டிருக்கும் இடத்தை ப்ரக்ஞைபூர்வமாக ஒருவர் சுத்தம் செய்ய முடியும். அதில் வேறு மாதிரியான சமாசாரங்களை இட்டு நிரப்ப முடியும். இதைத்தான் ஸ்ரீ வேதமூர்த்தி போன்றவர்கள் செய்ய முயல்கிறார்கள். அதில் ஓரளவு வெற்றியும் கண்டிருக்கிறார்கள்.

...இதெல்லாம் கேட்கத்தான் பெரிய விஷயங்கள்போல, பயிற்சி செய்யக் கடினமானவைபோலத் தெரிகின்றன. நீங்கள் இரு சக்கர வாகனம் ஓட்டுகிறவரல்லவா, உங்களுடைய வாகனமோட்டும் திறனை நீங்கள் எந்த இடத்தில் நினைவு வைத்திருக்கிறீர்கள்? ஒவ்வொரு தடவை வண்டியை ஸ்டார்ட் செய்யும்போதும் 'இன்னின்ன செய்யவேண்டும்' என்று வரிசையாக உங்களுக்கே போதித்துக் கொள்கிறீர்களா என்ன?

மானசீகமாகத் தனக்குத்தானே வெகுநேரம் பேசிச் சலித்ததுபோலத் தொண்டை வறண்டிருந்தது எனக்கு. இருளில் தூழாவித் தண்ணீர்ச் செம்பை எடுக்கும் பிரயத்தனம் முதலில் மனத்தில் உதித்தது. ஆனால், அதைப் படுக்கையின் அருகில் பார்த்த ஞாபகம் இல்லையே?

மின்சார வசதி இல்லாத வீடு இது. கொசுத் தொந்தரவு சமீபகாலமாக இருப்பதாகவும், அதன் காரணமாகத்தான் கதவையும் ஜன்னல்களையும் சாத்த வேண்டி வருகிறது என்றும், முன்பெல்லாம் இருபத்து நாலு மணிநேரமும் கதவு திறந்தேதான் கிடக்கும் என்றும் சொன்னார் மன்னாதி. கூரை விசிறி இல்லாவிட்டால் நான் தூங்க முடியாது என்கிற

அளவுக்குப் பழகியிருப்பவன் நான். இந்த அறைக்குள் புழுக்கம் எதையும் நான் உணரவில்லை என்பது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

புழுக்கமும் இல்லை, வெளிச்சமும் அறுதியாக இல்லை. எழுந்து கதவைத் திறந்தால் கொஞ்சம் வெளிச்சம் உள்ளே வரும். சுவரோரம் உள்ள தண்ணீர்ச் செம்பை எடுக்கலாம். என் யோசனை நிறைவடைவதற்கு முன்பாகவே கோட்டுருவம் எழுந்து சுவரை நோக்கி நகர்ந்தது.

இந்தாருங்கள்.

என்ற சொல்லின் நீட்சியாக என் கையில் தண்ணீர்ச் செம்பு தட்டுப்பட்டது. 'தற்செயல்தான், தற்செயல்தான்' என்று அடக்கிக் கொள்ள முயற்சித்தேன்.

நாலைந்து மிடறுகள் நான் குடித்து முடிப்பதற்கு முன்னால் கோட்டுருவம் மீண்டும் கிடைநிலைக்குப் போயிருந்தது. ஜய்ராமின் சுவாசம் வெகு சீராக ஏறித் தாழ்வது கேட்டது. இதற்குப் பதில் சொல்கிற மாதிரி மறு அறையிலிருந்து மன்னாதியின் சுவாசம் கேட்டது.

'தற்செயல்' என்ற சொல், என் மனத்தின் மேற்பரப்பில் வந்து குதிக்கத் தொடங்கியது. ஓடும் தண்ணீரில் மழைத் துளிகள் எழுப்புகிற குமிழ்கள் மாதிரி நர்த்தனமாடியது.

சாயங்காலம் பேசிக்கொண்டிருந்தபோது, கணபதியின் வரலாற்றை நான் அறிந்தவரை விரிவாக எடுத்துச் சொன்னேன் ஜய்ராமிடம். அப்போதும் ஒரு உச்சாடனம்போல இந்தத் 'தற்செயல்' என்ற வார்த்தை நடுவில் கிடந்து உருண்டது. அதன் தொடர்ச்சியாக ஜய்ராம் படபடவென்று கேள்விகளை எழுப்பிக் கொண்டே போனார்.

உங்கள் செயல் என்னுடைய செயல் என்கிற மாதிரி தற்செயல் என்று ஒன்று இருக்கிறது என்றால், அது யாருடைய செயல்? அதாவது, அந்தத் 'தான்' யார்?

நீங்கள் சொன்ன கணபதியையே எடுத்துக் கொள்ளுங்கள். அவருடைய வாழ்வில் தர்க்கவிரோதமான காரியங்கள் தொடர்ந்து நடந்துவந்திருப்பதாகச் சொல்கிறீர்கள். ஏன் அப்படி நடக்கிறது? இவ்வளவு தற்செயல்கள் ஒரே மனிதனின் அனுபவத்தில் இடம் பெறுவது தற்செயலான ஒன்றுதானா?

வாழ்க்கையில் தற்செயலைத் தவிர வேறெதுவும் நடப்பதற்கில்லை என்றே தோன்றுகிறது. நிகழ்வுகளின் தொடர்ச்சி காரணமாக ஆதித் தற்செயல், முன் தீர்மானிக்கப்பட்ட ஒன்றுபோலத் தென்படுகிறது.

இதுவரைக்கும் மனிதகுலம் அனுபவித்து வந்திருக்கும் தற்செயல்கள் எல்லாவற்றையும் ஒன்றாகக் கோக்கும் பட்சத்தில், வரலாறு என்று நாம் தொகுத்து வைத்திருக்கும் சங்கதி இப்போது இருக்கிற மாதிரியே இருக்குமா?

தொடர்ந்து மனத்தின் நாவு திரும்பத் திரும்ப உச்சரிக்கும்போது, தற்செயல் என்ற சொல் வெறும் ஒலியாக, பொருள் எதையுமே சுமக்காத அபத்தமான சப்தக்குறிப்பாக வெறுமை கொண்டது.

மூச்சடைப்பதுபோல நெஞ்சுக்குள் எதுவோ முட்டி வருவதைத் தாங்க முடியாமல் எழுந்தேன். கதவைத் திறந்து வெளியில் வந்தேன்.

தனித் தனிக் குடைகள்போலத் தெருவிளக்குகள் பரப்பிய வெளிச்சத்தின் பின்திரையாகப் படர்ந்திருந்த இருள் கண்ணுக்குத் தெரிந்தது. குடையின் தலைக்கு மறுபுறம் ஆகாய மார்க்கமாகச் சிறிது தூரம் தரையின் வெளிச்சம்போல ஒரு பிரகாசம் இருக்கிறது. அதற்கப்பால் கும்மென்று அடர்ந்திருந்த இருட்டு திடப்பொருள்போலக் காட்சியளித்தது. நட்சத்திரங்களின் ஒளியால் சற்றும் குலைவுபடாத இருட்டு.

இருளிலிருந்து விடுபட்டு இறங்கித் தரையில் அமர்ந்த வரைகோட்டு வடிவம் மாதிரித் தொலைவில் திருவண்ணாமலை தென்பட்டது. அமைதியின், நிச்சலனத்தின், எண்ணிலடங்காத ரகசியங்களின் ஸ்தூல உருவம்போல அமர்ந்திருந்தது அது.

சற்றுநேரம் நின்றுவிட்டு, உள்ளே திரும்பினேன். ஓசையெழாமல் கதவை அடைத்துவிட்டு, என்னுடைய இடத்தில் படுத்துக்கொண்டேன். கண்ணை மூடும்போது இமைகளின் கனம் அதிகரித்திருக்கிற மாதிரித் தோன்றியது. உடனடியாகத் தூங்கிவிட்டேன் போல...

அதிகாலைப் பொழுது பறவைகளின் உற்சாகக் குரல்களால் நிரம்பியிருந்தது. சாம்பல் நிறமாய்ப் படர்ந்திருந்த மிருதுவான வெளிச்சம். பல வருடங்களாக அதே அறையில் படுத்துத் தூங்கி எழுந்து அதே காட்சிக்கு விழிப்பவன் மாதிரி ஒரு சாவதானம் எனக்குள். எழுந்தேன். தலைமாட்டில் கழற்றி வைத்திருந்த கைக்கடிகாரம் மணி ஆறரை என்றது. பின்புறம் மன்னாதி குளிக்கிற ஓசை கேட்டது. தண்ணீரை மொண்டுமொண்டு ஊற்றிக்கொள்ளும் வேகம் விசித்திரமாக இருந்தது. ஜய்ராமைக் காணவில்லை. தினசரி மூன்று மணிக்கெல்லாம் எழுந்து கிரிவலம் செய்யப் போய்விடுவார் அவர் என்று முன்னரே மன்னாதி சொல்லியிருந்தது ஞாபகம் வந்தது.

வாசலுக்கு வந்தேன். படிக்கட்டின் அணை மாதிரி நீண்டிருந்த சிறு திட்டில் ஒருக்களித்து அமர்ந்தவன், இடதுபுறம் சற்றுத் தொலைவில் விநோதமான காட்சி ஒன்றைக் கண்டேன். ஜய்ராம் வந்துகொண்டிருக்கிறார். அவரைத் தொடர்ந்து பத்து இருபது நாய்கள் ஊர்வலம் மாதிரி வருகின்றன. ஒன்றோடொன்று இடித்துக்கொள்ளாமல், ஓசையெதுவும் எழுப்பாமல், ஓயாமல் வால்களை ஆட்டிக்கொண்டு, சீரான அணிவகுப்பு மாதிரி, லேசான ஓட்ட நடையில்...

ஜய்ராம் வாசலில் வந்து நின்றார். நாய்கள் பட்டாளத்தைத் திரும்பிப் பார்த்தார் ஒரு கணம். அந்தப் பார்வையை அத்தனை நாய்களும் நிமிர்ந்து பார்ப்பதைக் கண்டேன். ஓடி வந்த களைப்பில் அவற்றின் நாக்குகள் நீளமாகத் தொங்கிக் கிடந்தன.

கச்சிதமான ராணுவக் கட்டளையைப் பெற்றுக்கொண்ட மாதிரி மௌனமாகக் கலைந்து சென்றன நாய்கள். கொஞ்ச தூரம் கடந்ததும் முதலில் ஓரிரண்டு ஓடத் தொடங்கின. மற்றவையும் ஓடித் தொடர்ந்தன. அவ்வளவுதான். தெரு தன் வெறுமைக்கு மீண்டுவிட்டது.

ஜய்ராம் பின்புறம் சென்று கால்களைக் கழுவிவிட்டு வந்தார். செருப்பணியாமல் நடக்கிற பாதங்கள்தாம். ஆனாலும் அவற்றில் கருநிறமாக அழுக்குச் சேராமல் இருப்பதைக் கவனித்திருக்கிறேன். எதிரில் வந்து உட்கார்ந்த மாத்திரத்தில் பேசினார்:

வரலாற்றுக்கு வெளியில் நின்றுவிடுவதற்கு ஒரு மார்க்கம் இருக்கிறது, சந்தானம். சந்ததியற்றுப் போகும்போது வரலாறு, நம்முடன் நின்றுவிடும். நம்முடைய வரலாறு மட்டுமல்ல, வரலாறு என்று நாம் சொல்கிற ஞாபகத் தொகுப்பும் நின்றுவிடும். எப்போதுமே மிச்சமிருப்பது, சந்ததிகள் மீட்டெடுத்துப் பேசிக்கொள்கிற வரலாறுதான். அறுதியாக வெளியேறியவர்களுக்குத் தடயம் எதுவும் மிஞ்சாது...

நான் புரியாமல் கேட்டுக்கொண்டிருந்தேன்.

...இன்னும் பிறக்காதவர்களுக்கு வரலாறு இல்லை என்கிற மாதிரி. ஆனால், பிறக்காதவர்களுக்கு நிஜமாகவே வரலாறு கிடையாதா? ‘இந்தக் கேள்விக்கு பதில் தேடுவது ஒரு ஆயுள்கால வேலை. வாய்ப்பிருந்தால் நாலைந்து ஆயுட்காலம் தேடவும் செய்யலாம்’ என்று ஒரு பழைய நூலில் வாசித்திருக்கிறேன். அதாவது, இந்தப் பிறவியில் தையல்காரராக இருந்து மரணமடைகிற ஒருவர், அடுத்த பிறவியெடுத்து,

அதுவும் தையற்காரராகவே பிறந்து, தைப்பதற்காகத் தாம் முந்தைய பிறவியில் வாங்கி வெட்டி வைத்த துணிமணிகளைத் தைக்கத் தொடங்குகிற மாதிரி...

ஜய்ராம் சிரித்தார். நானும் சிரித்து வைத்தேன் இந்த உதாரணத்தின் அசாத்தியமும் அபத்தமும் வெளிப்படையாகத் தெரிந்ததால்.

...நாம் சிரிக்கிறோமே தவிர, இந்த இடத்தில் வேறு ஒரு கேள்வி வருகிறது. இறந்தவர்கள் உலகம் ஒன்று இருக்கிறது என்றால், இன்னும் பிறக்காதவர்களும் அதே உலகத்தில்தானே இருந்தாக வேண்டும். பிறப்பதற்குத் தன்முறை வருவதற்காகக் காத்துக்கொண்டு இருக்கத்தானே செய்வார்கள். இரண்டு தரப்பும் ஒருவரையொருவர் எவ்விதம் அடையாளம் காண்பார்கள்?

ஜய்ராமின் முகம் சிறுகச் சிறுகத் தீவிரமடைந்தது. அவர் சொல்கிற தர்க்கம் எனக்குப் புரிகிறது. சொல்கிற விஷயம் புரியவில்லை. அதாவது அதைக் காட்சிப்படுத்திக்கொள்ள முடியவில்லை. காட்சியாகிற விதத்தில் மனத்தின் வசம் உருவங்கள் தேறவில்லை.

...இந்தக் கேள்வியை ரயிலில் வரும்போது ஸ்ரீ வேதமூர்த்தியிடம் கேட்டேன். அவர் நிதானமாகத் தன் பூர்வ கதையைச் சொல்லத் தொடங்கினார்... சொல்லுங்கள் மன்னாதி...

தேங்காய் எண்ணெய் மணக்க நிலைச்சுவரில் சாய்ந்து நின்றிருந்தார் மன்னாதி. ஜய்ராம் இடைவெளி விடுவதற்காகக் காத்து நிற்பவர் போலிருந்தார். என்னைப் பார்த்துக் கேட்டார்,

சந்தானம்ஜீ, நீங்க காலையிலே ஆகாரம் பழகினவர் இல்லே? ஒங்களுக்கு வெண்பொங்கல் செஞ்சாப் பரவாயில்லையா?

எனக்கு மட்டும்னு எதுவும் செய்ய வேணாம். ஒரு நா காலைச் சாப்பாட்டெ ஒத்திப் போட்டால் ஒண்ணும் கெட்டுப்போகாது.

சபாஷ்.

என்றார் ஜய்ராம். மூவரும் சிரித்தோம். தொடர்ந்து தாளகதியுடன் சில மராத்தி வாக்கியங்கள் பேசினார் ஜய்ராம்.

ஊதா விளக்கின் அடியில் உள்ள சகலமும்

ஊதா நிறம் பூணுகின்றன.

மஞ்சள் நீரில் அமிழ்ந்த வெள்ளைத் துணி

மஞ்சள் நிறத்தை அணிகிறது.

ஆனால் ஏனோ சூரியனே,

உன் கீழுள்ள சகலமும்,

உன் ஒளியில் அமிழ்ந்த சகலமும்

உந்தன் நிறத்தைக் கொள்ளாமல்,

தன் நிறம் கொள்ளும் மாயமென்ன?

இதுவரை தணிந்திருந்த குரல், இரண்டாம் பகுதியில் சற்று உரத்தது.

பழுப்பு இறகும் வெள்ளை வயிறும்

கருநீல அலகும் மினுங்கும் பட்சியே,

உந்தன் நிறமும் என் நிறமே.

நானற்ற உலகின் நிறம் எதுவென்று

உறங்கும் ஆந்தையை எழுப்பிக் கேள்.

என்றோ ஒருநாள் பூத்துதிரும்

வானவில் சுமப்பவை யார் நிறங்கள்?

சொல்லி முடித்துவிட்டுத் தானே புன்னகைத்துக்கொண்டார். மராத்தியில் உள்ள பழம்பாடல் இது என்று எங்களுக்கு விளக்கினார். அதுவரை மௌனமாய் இருந்த நாங்களும் சிரித்தோம்.

ஆக, இங்கே வந்ததால் இவர் உபவாசம் இருக்கிறார் என்று எடுத்துக்கொண்டுவிட வேண்டாம் மன்னாதி. இவருக்குள் அசலாகவே உள்ள பட்டினிக்காரன் இன்றைக்கு வெளியே வருகிறான், அவ்வளவுதான்.

ஆஹா, நல்லாச் சொன்னீங்க. இதுவரை இந்த சுலோகத்தைக் கேட்டதில்லையே?

இவனும் கேட்டதில்லையே.

என்னா சொல்றீங்க?

பின்னே, இயற்றும்போதுதானே தெரியவருகிறது இவனுக்கும்?

எனக்கு ஜய்ராம் மீது அபரிதமான பிரமிப்பு உண்டானது. மன்னாதி சிரித்துக்கொண்டே நகர்ந்தார். அவர் தமிழிலும், ஜய்ராம்

ஆங்கிலத்திலும் மாறிமாறி பேசி உரையாடும்போது இரண்டும் வெவ்வேறு மொழிகள் கிடையாதோ என்றே தோன்றுகிறது.

...அ திகம் பேசக்கூடியவர் அல்ல அவர். அபூர்வமாக ஓரிரு வார்த்தைகள் மட்டும்தான். சிலவேளைகளில் வெறும் தலையசைப்போடு நின்றுவிடும். அவரைப் பார்க்கிறவர்களுக்கு மௌனம் மனித உரு எடுத்து நடமாடுகிறது என்று தோன்றும். ஆனால், பேசுவது என்று தொடங்கிவிட்டால், அசாத்தியமான ஞாபகசக்தி இருப்பதும், தேடுவதற்கான அவசியம் இன்றிப் பொருத்தமான சொற்கள் பொருத்தமான இடங்களில் தாமாக வந்து அமர்வதும் கேட்பவரை பிரமிக்கச் செய்யும்...

'நீங்கள் பேசுவதும் அதேவிதமாகத்தான் இருக்கிறது.' என்று நினைத்துக்கொண்டேன். சொல்லவில்லை.

...அன்றைக்கும் அப்படித்தான், குறுக்கிடுவதற்கான அவசியம் எதுவுமேயில்லாமல், சாட்டையின் முடுக்கைத் தன்னுள் முற்றாக வாங்கிக்கொண்ட பம்பரம் மாதிரிக் கதைச் சுருள் விரிந்துகொண்டே போனது. பெரியவர் காரணமில்லாமல் சொல்ல ஆரம்பித்திருக்க மாட்டார். பூர்விகத்தில் வேறு ஜய்ராமாக இருந்த இவன், இப்படியொரு ஜய்ராமாக இருந்து உங்களிடம் பேசிக்கொண்டிருக்கிறானே, இதுதான் காரணமோ என்று பின்னர் பலமுறை யோசித்துப் பார்த்திருக்கிறான்...

ஜய்ராம் கொஞ்சம் இடைவெளி விட்டார். தலைகுனிந்திருந்த என் பார்வையில் இவ்வளவு நேரமும் வேஷ்டியின் மறைப்பிலிருந்த அவரது பாதங்கள் பட்டன. அட, கால்கள் இரண்டிலும்கூட ஆறு ஆறு விரல்கள் இருக்கிறதே. அவரது இரண்டு கைகளிலும் தலா ஆறு விரல்கள் இருப்பதை ஏற்கெனவே கவனித்திருந்தேன்... ஜய்ராம் தொண்டையைச் செருமினார்.

...பெரியவர் முழுக்கச் சொல்லி முடித்தார். அவன் தான் மேற்கொள்ள வேண்டிய பயிற்சிகளை எப்போது கற்றுக்கொடுக்க ஆரம்பிக்கப் போகிறார் என்று கேட்டான். அவர் சிரித்தார்... ஆறு மாதங்கள். வழக்கமான நியமங்களிலிருந்து சற்றும் விலகாமல், சாப்பாடு, ஊர் சுற்றல், உறக்கம் என்று பொழுது கழிந்துவந்தது. திடீரென்று ஒருநாள் அவனைக் கூப்பிட்டு, 'ஜய்ராம், இன்று உன்னுடைய நாள்' என்று அறிவித்தார். அவன் சற்றும் எதிர்பார்த்திராத நாள் அது. நட்சத்திரப் பிரகாரம் அவனது பிறந்த நாள். ஆக, கனவில் நடந்த சம்பவம் மாதிரித் தனக்கு தீட்சை வழங்கப்பட்டதை அவனே

வேடிக்கை பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

ஜய்ராம் லேசாகப் புன்னகைத்தார். நான் சற்றுத் தயங்கிய குரலில் கேட்டேன்.

அவருடைய பூர்வகதையை உங்களிடம் சொன்னார் அல்லவா. நீங்கள் எனக்கு அதைச் சொல்லலாமா? தடை எதுவும் உண்டென்றால் சொல்லவேண்டாம்.

இதில் தடைக்கென்ன அவசியம் வந்தது? அவர் என்ன, சட்டத்தால் தேடப்படும் குற்றவாளியா? அவன் கேட்டான் அவர் சொன்னார், நீங்கள் கேட்கிறீர்கள் இவன் சொல்கிறான். அவ்வளவுதான். மற்றவர்களிடம் அவர் சொல்லவில்லையே என்றால், அவர்கள் கேட்கவில்லை; அவரும் சொல்லவில்லை. அவர்களுக்கெல்லாம் அவ்வளவு பயம் அவரிடம். வெளிப்பார்வைக்கு பக்தி மாதிரித் தெரியும்...

வாய்விட்டே சிரித்தார்.

...இவன் ஆரம்பத்தில் சொன்ன மாதிரித்தான், மனிதார்த்தத்தின் வரையறைகளைப் பெருமளவு மீறிவிட்ட அபூர்வ வியக்தி அவர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அவர் அடைந்த இடம் எந்த ஒரு மனிதப்பிறவியும் செல்ல முடிந்த இடம்தான். பிறர் முயல்வதில்லை அவரானால் சென்றே சேர்ந்திருக்கிறார். அவ்வளவுதான். மற்றபடி, நீங்களே கேட்காவிட்டாலும் இவன் சொல்வதாகத்தான் இருந்தான்.

ஏன்!

நதியின் திசைக்கு எதிர்த்திசையில் கரையோரமாக இவ்வளவுதூரம் கடந்து வந்திருக்கிறீர்கள். உற்பத்தி ஸ்தானத்தைப் பார்க்காமல் யாத்திரை பூர்த்திபெறுமா...

ஜய்ராம் மறுபடியும் சிரித்தார். கோவர்த்தனம் மாதிரித்தான் இவரும், நியமங்களுக்குக் கட்டுப்பட்டு இருக்கிற மாதிரி வெளியில் தெரிகிறதே தவிர, உள்ளூற சுதந்திரத்தின் வாசனை நிரம்பியிருக்கிறது.

...தவிர, அந்தக் கதையைக் கேட்டுக்கொள்வதற்கான தகுதி உங்களுக்கு இருக்கிறது...

புரியாமல் பார்த்தேன்...

...கடும் வேகத்தில் விரையும் ரயிலை லெவல் க்ராஸிங்கில் நின்று பார்க்கிறவருக்கும் அந்த வேகம் ஒரு கணம் அனுபவம் ஆகத்தானே செய்கிறது...

ஜய்ராம் என் முகத்தை ஆழ்ந்து பார்த்தார். ஏதோ குறிப்புக் கிடைத்தவர் மாதிரி, தொடர்ந்தார்.

மரணப் படுக்கையில் கிடந்த குரு ஒருநாள் பெரியவரை அழைத்தாராம், 'வேதம், இக்கட ரா...'

தொடர்ந்து ஜய்ராமின் சரளமான வார்த்தைகளில் பெரியவருடைய குருவின் கதை ஓடத் தொடங்கியது.

முதல் தடவை வந்தபோதே மன்னாதி சொல்லக் கேட்டிருந்த கதைதான். ஆனால், ஒரு நுட்பமான வித்தியாசம் இருந்தது. மன்னாதி சொன்ன கதையில் சம்பவங்களுக்கு அதிக அழுத்தம் இருந்தது என்றால், ஜய்ராம் சொன்ன வடிவத்தில் நின்று யோசிப்பதற்கு நிறைய விஷயங்கள் இருந்தன.

உதாரணமாக, 'இந்த இடத்திலே நம்ப பெரியவருக்கு என்னென்னமோ கேள்விகளெல்லாம் உள்ளே ஓடுச்சாம்' என்று மன்னாதி விட்ட இடைவெளியில், அந்தக் கேள்விகளின் பட்டியலை நிதானமாகக் கோத்தார் ஜய்ராம்.

இன்னுமொரு வித்தியாசம், மன்னாதியின் குரலில் தாம் விவரிக்கும் சம்பவங்களைப் பற்றி மிகப் பெரும் ஆச்சரியம் நிரவியிருந்தது. ஜய்ராமின் குரல் வழக்கத்தைவிடவும் வறண்டிருந்தது.

மீ ண்டும் மன்னாதி உதித்தார். நான் இதுவரை பார்த்த ஆண்களிலேயே ஜய்ராம் அளவுக்கு தீர்க்கமாக முகவெட்டு அமைந்தவர்கள் யாருமே கிடையாது. இத்தனை கூரான ரோமானிய மூக்கு பொதுவாக ஆண்களின் முகத்தில் அமைவது கிடையாது. அமைந்தாலும் இவ்வளவு பொருத்தமாக இருக்காது என்றெல்லாம் யோசித்தவாறு நான் அவர் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன். ஜய்ராம் எங்கோ பார்வையை அலையவிட்டிருந்தார்.

சாப்புட்டுறலாமா?

என்று கேட்டார் மன்னாதி.

ஆளுக்கொரு வாழையிலை. அளவான சாப்பாடு. நேற்றிருந்த அதே ருசி. பல வருடங்களாகத் தொடர்ந்து வருகிற, இன்னும் பல வருடங்களுக்கு நீடித்திருக்கப் போகிற, ஒற்றை ருசி என்று தோன்றியது எனக்கு. ஒருவருக்கொருவர் எதுவும் பேசிக்கொள்ளாமல் சாப்பிட்டு முடித்தோம்.

தட்டு நிறையச் சாதம் நிரப்பி, குழம்பு ரசம் தயிர் என்று மூன்று வகையாகப் பிசைந்து சாப்பிடும் வழக்கம் உள்ளவன் நான்.

அதிகாலையில் எழும் சித்ரா, எல்லாவற்றையும் சாப்பாட்டு மேஜையில் கச்சிதமாக மூடி வைத்துவிட்டு அலுவலகம் கிளம்புவாள். அவளைக் கொண்டுபோய் விட்டுவிட்டு, பார்க்க வேண்டிய வாடிக்கையாளர்களைச் சென்று சந்தித்துவிட்டு, தேவைப்பட்டால் வங்கிக்குச் சென்று விட்டு, வீடு திரும்பும்போது வயிற்றில் கபகபவெனப் பசி சுரந்திருக்கும். சித்ரா சமைத்து வைத்திருப்பது எதுவானாலும், அமிர்தமாக ருசிக்கும். அதுவும் வருடக்கணக்காகத் தொடர்ந்து வரும் ஒரே ருசிதான். ஆனால், பதார்த்தங்களைப் பொறுத்து உப்பும் உறைப்பும் புளிப்பும் ஏறித் தாழும். மாறாமல் தொடர்வது சித்ராவின் கைமணம்தான். என் அம்மாவின் கைச் சமையல் போன்று அதே ருசி.

மன்னாதியின் கைப் பக்குவத்தில் அரை வயிற்றுக்கு மட்டுமே சாப்பிட்டு எழுந்தபோதும், வீட்டில் உணர்கிற மாதிரியே நிறைவாக உணர்ந்தேன் என்பது எனக்கே விசித்திரமாகத்தான் இருந்தது. வயிற்றில் மிச்சமிருந்திருக்க வேண்டிய காலி இடத்தை ஜய்ராமின் பேச்சு நிரப்பிவிட்டதுதான் காரணமோ என்று நினைத்து எனக்குள் சிரித்துக்கொண்டேன்.

மேல் துண்டில் கையைத் துடைத்தவாறு வந்து பழைய இடத்தில் உட்கார்ந்துகொண்டார் ஜய்ராம். இவரிடமும் மன்னாதியிடமும் ஒரு ஒற்றுமையைப் பார்க்கிறேன். இருவருமே எதிலும் சாய்ந்து அமர்வதில்லை. நட்டு வைத்த கோல்போல நெட்டுக்குத்கதாகத்தான் உட்கார்கிறார்கள். மணிக்கணக்காக அதே விறைப்புடன் இருக்கவும் செய்கிறார்கள். பயிற்சிதான். ‘பயிற்சியினால் மனிதர்கள் அதிமனிதர்கள் ஆகிவிட முடியும் போல...’ என்று தானாய் உதித்த வாக்கியம், ‘...அவரவர் துறையில்’ என்று முடிந்த விதம் எனக்குள் ஆச்சரியம் விளைவித்தது. பிரமிப்பில்லாமல் இப்படிப் பார்ப்பதுதான், ஜய்ராம் எனக்கு வழங்கியிருக்கும் கொடையோ என்றும் தோன்றியது.

என்ன யோசனை?

நேற்றுத் தற்செயல் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோமில்லையா?

ஆமாம்.

ஸ்ரீ கணபதியும் நானும் சந்தித்ததே தற்செயலான விஷயம்தானே.

பின்னே?

இதோ உங்கள் முன்னால் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறேன். இதுவரை அந்தத் தற்செயல் நீண்டிருக்கிறதே, இதன் உட்கிளைகளாக எத்தனை தற்செயல்கள் நான் என்றைக்கு எந்த ஊரில் இருக்கிறேன்

என்பதே முன்கூட்டித் தெரியாத அளவு...

சிரித்தேன்.

நீங்கள் சொல்வதில் ஒரு தர்க்கம் இருக்கத்தான் செய்கிறது நண்பரே. என்றாலும், அது முழுமையானது அல்ல. ஸ்ரீ கணபதியை நீங்கள் சந்தித்தது உங்கள் தரப்புக்கு மிகத் தற்செயலான விஷயம் என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால், நேற்றுப் பேச்சில் வந்து சேர்ந்தமாதிரி, தற்செயல்களின் வரலாற்றில், இதெல்லாம் முன் கூட்டித் திட்டமிடப்பட்ட ஒன்றாகத்தான் இருக்கும். திட்டகர்த்தா யார் என்று கண்டடைவதுதான் சிக்கலே...

ஜய்ராமும் சிரித்தார்.

...ஆனால், இன்னொரு விஷயமும் நீங்கள் கவனிக்க வேண்டும். கடவுளின் பிரதிநிதியாக இருந்து நற்காரியங்கள் நிகழ்த்தி வரும் மகான்களில் ஒருவர்தான் ஸ்ரீ வேதமூர்த்தி என்று நீங்கள் கேள்விப்பட்டிருந்தால் இவ்வளவு தூரம் மெனக்கெட்டிருக்க மாட்டீர்கள். ஆரோக்கியமாக இருக்கிற ஒரு மனிதர், தனக்கென்று வியாகூலங்கள் எதுவும் இல்லாதவர், 'உடல் வாழ்க்கை போதும்' என்று முடிவெடுத்துத் தாமாக மரணத்தைத் தழுவ இருக்கிறார் என்ற செய்திதான் உங்களைத் தூண்டிவிட்டிருக்க வேண்டும். சரிதானே...?

ஜய்ராமின் சொற்களில் பட்டவர்த்தனமாக வெளிப்பட்டது என்னுடைய அந்தரங்கமேதான் என்பதில் துளியும் சந்தேகமில்லை எனக்கு. என்னுடைய பதிலுக்காகக் காத்திராமல் அவர் தொடர்வார் என்று தோன்றியதால் அமைதி காத்தேன்.

...இதுதான் உண்மையான காரணம் என்னும் பட்சத்தில், அவர் நடமாடித் திரிகிற வளையத்தில் அவரை நீங்கள் சந்திப்பதைவிட அவர் மரணமடைகிற ஸ்தலத்தில் சென்று அந்த நிகழ்வு எந்தவிதமாக நடந்தேறுகிறது என்பதைக் கண்ணாரக் காண்பதுதான் மனத்தைச் சமனப்படுத்தும். இது மாதிரியான அசாதாரண நிகழ்வுகளில் சுவாரசியம் என்ற அம்சமும் சற்றுத் தூக்கலாக இருக்குமல்லவா...?

ஜய்ராமின் குரலில் இதுவரை இல்லாத ஒரு ஆழம் உருவாகியிருந்தது. 'ம்' கொட்டுவதைக்கூட நான் நிறுத்தியிருந்தேன். சட்டென்று என்னிடமிருந்து வெகுதூரம் விலகி வேறெங்கோ அவர் நகர்ந்துவிட்டார் என்று அவர் முகம் குறிப்புணர்த்திய மாதிரிப் பட்டது.

...ஒருவேளை ஸ்ரீ வேதமூர்த்தியுமே அதுபோன்ற ஒரு சுவாரசியம் கருதித்தான் இப்படி ஒரு முடிவு எடுத்திருக்கிறாரோ என்னவோ...?

நான் அதிர்ந்து போனேன். பெரியவரைப் பற்றி நான் கேள்விப்படும் முதன்முதல் எதிர்மறை வாக்கியம் இது. ஆனால், ஜய்ராமின் விட்டேற்றித் தன்மை இவ்வளவு கனமாகக் கல்லெறியும் என்று நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லையே.

...இவன் அவரை அவமரியாதையாகப் பேசுகிறானே என்று தோன்றிவிட்டதோ...?

சராலென்று பழைய பாவத்துக்குத் திரும்பியிருந்தது ஜய்ராமின் முகம். நான் பதில் சொல்லாமல் இருந்தேன். என்றாலும் கொஞ்சம் சாந்தமாக உணர்ந்தேன்.

...வாழ்நாளில் மிகப்பெரிய பயிற்சிகளை மேற்கொண்டு, மிக உயரமான ஸ்தானத்தை அடைந்தவர்கள் விழையும் சுவாரசியமும்கூட மிக அபூர்வமானதாகத்தானே இருக்கும்.

ஜய்ராம் சிரித்தார். நான் இன்னும் கொஞ்சம் ஆசுவாசமானேன்.

...இவன் ஸ்ரீ வேதமூர்த்தியைக் குற்றம் சொல்லவில்லை. உலகின் பல்வேறு பிராந்தியங்களில் இதுபோன்று மரணத்தைத் தேடிப்போய்த் தழுவுகிற மரபு இருக்கிறது. ஜப்பானிய ஸாமுராய்களின் ஹராகிரி பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களல்லவா?

தலையாட்டினேன். எங்கோ படித்திருக்கிறேன். ஜப்பானியப் போர் வீரர்கள், ஜனங்களைக் கூட்டி வைத்து, தம் தலையைத் தாமாகவே உடைவாளால் கொய்துகொள்ளும் உற்சவம் அது.

...அவ்வளவு ஏன், மதுரை ஜில்லாவில் உள்ள ஒரு கோயிலில் தன்னுடைய கழுத்தைத் தானே வெட்ட முனைந்திருக்கும் வீரனின் சிற்பத்தைப் பார்த்திருக்கிறேன். அவர்களுக்கு வீரத்தின் அடையாளம். இவர் போன்றவர்களுக்கு ஆன்மிகப் பிரயாணத்தின் உச்ச நிலை. இவனுக்கு இரண்டிலுமே ஒப்புதல் கிடையாது. உங்கள் பிறப்பை நீங்கள் நிர்ணயிக்க முடியும் என்றால் மட்டுமே உங்கள் மரணத்தையும் நீங்கள் நிர்ணயிக்க உரிமை உண்டு...

சிறு இடைவெளி. கொஞ்சநேரம் மௌனமாக இருந்தார். இடையில், சமைத்த பாத்திரங்களைக் கழுவிக் கவிழ்த்தியிருந்த மன்னாதி எங்களுடன் வந்து அமர்ந்திருந்தார். அவருடைய முகம் கடுமையாகச் சிவந்திருந்தது. தலை குனிந்திருந்தார். ஜய்ராம் தொடர்ந்தார்.

...ஆனால், இந்த வாக்கியத்தைச் சொல்லும்போது, வேறொன்றும் தோன்றுகிறது. மற்றவர்களைப் போலில்லாமல், தம்முடைய

பிறப்பையும் தாமே நிர்ணயித்துக் கொண்டவர்தாமோ என்னவோ ஸ்ரீ வேதமூர்த்தி. பிறரைப் போலவே அவரையும் நினைக்க இவனுக்கு என்ன உரிமை இருக்கிறது?

அவரும் கல்யாண வயசு வரைக்கும் மத்தவங்க மாதிரி இருந்தவருதானே சாமீ?

என்றார் மன்னாதி. பொதுவாக, ஐய்ராம் விசையுடன் பேசும்போது இவர் குறுக்கிடவே மாட்டாரே என்று எனக்கு நினைவு வந்தது.

தான் யார் என்று ஞாபகம் வருவதற்கு ஏதாவது கெடுவும் நிர்ணயித்துக்கொண்டு பிறந்திருப்பார்கள். ஜாம்பவான் எடுத்துச் சொல்கிறவரை ஆஞ்சநேயருக்குத் தம் அவதார மகிமை தெரியாதே...

மன்னாதி பேசினார் என்ற தைரியத்தில் நானும் ஒரு கேள்வி கேட்க முடிவெடுத்தேன்.

உங்களிடம் ஒன்று கேட்கலாமா?

இவனிடம் எது வேண்டுமானாலும் பேசலாம், கேட்கலாம் நண்பரே. உங்களுக்குள் பேசிக்கொள்கிற அளவு சுதந்திரமாக உணரலாம். பீடிகை எதுவும் தேவையில்லை.

இல்லை... நீங்கள் காசி செல்கிறீர்களா?

இவன் போகவில்லை. இரண்டு காரணங்கள். ஒன்று, நடக்கப் போகிற விஷயத்தில், இவன் ஏற்கெனவே சொன்ன மாதிரி, இவனுக்கு முழு ஒப்புதல் கிடையாது. இரண்டாவது, இன்னும் முக்கியமானது. சடங்குகள் எதன்மீதும் இவனுக்கு உடன்பாடு கிடையாது. ஸ்ரீ வேதமூர்த்தியின் மகோன்னதமான அப்பியாசத்தை நீங்கள் பார்க்கத்தானே போகிறீர்கள்? அப்போது, இவனை நினைத்துக் கொள்வீர்கள். அது ஒரு மாபெரும் சடங்காக நடக்கும்போது...

மீண்டும் அமைதியானார். வாசலையே பார்த்துக்கொண்டிருந்தவர், மன்னாதியின் புறம் திரும்பி,

மன்னாதி, இவனுக்கு இரவு போஜனம் வேண்டியதில்லை.

என்று எழுந்து எங்கள் இருவரிடமுமே விடைபெற்றுக் கொள்ளாமல் விசுக்கென்று வெளியேறினார்.

அம்புட்டுத்தான். காத்து கிளம்பீருச்சு. போற வேகத்தெப் பாத்தா மாசக் கணக்கிலெ திரும்பாது போலருக்கே.

என்று என்னை நோக்கிச் சொன்னார் மன்னாதி.

ஜ ய்ராம் சொல்லும்வரை எனக்குள் அந்த முடிவு இருந்ததென்றே தெரியாது எனக்கு. நான் காசி கிளம்புவதற்குத் தயாராக இருந்தேன்...! முன்பின் அறியாத இடம். வெளிமாநிலம் வேறு. யாருடனாவது சேர்ந்து செல்வது பாதுகாப்பல்லவா? மன்னாதியைப் பார்த்துக் கேட்டேன்:

நீங்க என்னிக்கிக் காசி கிளம்புறீங்க...? ஒங்களுக்கு ஆட்சேபணை இல்லேன்னா, நானும் ஒங்ககூட வரலாமா?

மன்னாதி தம் வழக்கப்படி குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார். எனக்குப் புரியவில்லை.

நம்பளுக்கு உத்தரவில்லேங்க. அதுலெ ஒரு நாயம் இருக்கு.

என்ன?

இந்தப் பிறவியிலே நம்பளுக்கு ஒரு உறவும் மிஞ்சக்கூடாதுன்னு சாபமில்லீங்களா? குரு உறவு மட்டும் எப்பிடீங்க கடேசிவரை மிஞ்சும்?

புகாரே இல்லாத குரலில்தான் இதைச் சொன்னார் மன்னாதி. தொடர்ந்து சிரிக்கவும் செய்தார். ஆனால், அவருடைய விழிகளில் பளபளப்பு அதிகரித்திருந்த மாதிரித் தோன்றியது. அது நிஜம்தானா, எனது பிரமையா என்று நிதானிக்க முடியவில்லை. அதற்குள் அவரே தொடர்ந்தார்.

ஒங்களுக்குத் தெரிஞ்ச ஆட்கள்லே ஹரிஹர சுப்பிரமணியமும் வைத்தியரும் மட்டும்தான் போவாங்கன்னு நெனைக்கிறேன். ஆனாக்கெ, அவங்களோடெ நீங்க போக முடியாது. அவங்க என்னைக்கிப்போவாங்க, எப்பிடிப் போவாங்கன்னு அவங்களுக்கே தெரியாது. இப்பப் போச்சே காத்து, இதெவிட வேகமான காத்து அதுகள்லாம். இத்தனெ வருஸம் கூடவே இருந்துருக்கேன், வைத்தியரெ நானே ஒரு தடவைதான் பாத்திருக்கேன். சும்மா ஒரு பத்து நிமிஸம். அதுக்குப் பெறகு ஒரு ஆறு மாசம் களிச்சு, பெரியவர் இங்கே வந்திருந்தப்பச் சொன்னாரு, அவர்தான் வைத்தியருன்னு...

தன் வழக்கமான சிரிப்புக்குள் உற்சாகமாகப் புகுந்துகொண்டார் மன்னாதி. நான் தெருவைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அடங்கப் போகும் சிரிப்பின் பகுதிபோல மன்னாதி சொன்னார்:

...போங்க, சும்மா தனியாவே போங்க. எல்லாம் மனுசங்க பொழங்குற எடம்தானே...

மன்னாதி எழுந்தார். அவர் எனக்கு விடைகொடுக்கிறார் என்று புரிந்துகொண்டேன்.

அடுத்த அறைக்குள் சென்று சிவலிங்கத்தை வணங்கினேன். வெகு சாந்தமாக வீற்றிருந்தது அது.

✠

சங்கமம்

...செத்தவுகளுக்கு நீர்க்கடன் குடுக்கத்தான் பண்டா வேணும்.
கடவுளெ நாமளே நேரெத் தொட்டுக் கும்புடலாம், பூப் போடலாம்...

வாசல்

வாசல் படியில் உட்கார்ந்திருந்தாள் சித்ரா. காற்றின் சலனமே இல்லை. வேனல்போலக் கசகசக்கிறது. அசுர சந்தி வேளையில் வாசல்படியில் உட்கார்ந்தால் அம்மா சத்தம் போடுவாள். அதிர்ந்து பேசக்கூடாது. வாய்விட்டுச் சிரிக்கக்கூடாது. எந்நேரமும் ஜன்னல் பக்கம் நின்று ஆள் நடமாட்டம் அற்ற தெருவை வேடிக்கை பார்க்கக் கூடாது. ஓசை வருகிற மாதிரி சாப்பிடக்கூடாது. தம்ளரை எச்சில் பண்ணிக் குடிக்கக்கூடாது. தாவணி ஒரு இம்மிகூட விலகக்கூடாது. 'அவ்வளவு கண்டிப்பாக வளர்த்தது இப்படி நிர்க்கதியாக நிற்கத்தானா அம்மா...?" கண்ணில் நீர் கோத்தது.

விளக்கேற்றுமுன் பூஜையறைக்குள் கொளுத்தி வைத்த தசாங்க மணம் வாசல்வரை வருகிறது. சந்தானத்துக்குப் பிடித்த மணம்... இப்படியா ஒரு மனுஷன் காரணமேயில்லாமல் காணாமல் போவான்? அல்லது, ஏதாவது காரணம் இருந்து, எனக்குத்தான் தெரியாமல் போய்விட்டதோ. எங்கே இருக்கிறாரோ என்ன செய்கிறாரோ. இந்த இருபது நாளில் புருஷனின் அருமை எத்தனைவிதமாய்த் தெரிந்துவிட்டது... கன்னத்தில் நீர் வழியும் உணர்வு தட்டியது. முந்தானையால் முகத்தை அழுந்தத் துடைத்துக்கொண்டாள். குழந்தைகள் முன்னால் கண்கலங்காமல் இருக்க பகீரதப் பிரயத்தனம் வேண்டியிருக்கிறது.

சின்னவன் வாய்விட்டு உரத்துப் பாடம் படிக்கிறான். சமையலறைக்குள் கனகா எதையோ உருட்டும் ஒலி. சந்தானம் இருக்கும்வரை இவள் ஒரு விஷயமாகவே தெரியவில்லை. சடாரென்று மிகப்பெரிய சுமையாக மனத்தில் அழுத்துகிறாள்...

முந்தாநாள் மாமா வந்திருந்து கொஞ்சநேரம் ஆறுதல் சொல்லிவிட்டுப் போனார். நாராயண சாஸ்திரிகளை நாளைக்கு வீட்டுக்குக் கூட்டி வருகிறேன் என்றிருக்கிறார். சாஸ்திரிகள் ப்ரஸ்னமும் பார்க்கக் கூடியவர். அவர் சொல்லும் ஆரூடம் நல்ல செய்தியாய் இருக்க வேண்டுமே என்ற பதட்டம் அடிவயிற்றில் பிசைகிறது.

சித்ராவின் தாய்வழியில் யாரோ தூரத்து உறவினர் இப்படித்தான் காணாமல் போனாராம். போகும்போது அவருக்கும் வயது ஐம்பது. அவர் மனைவி அதற்கப்புறம் முப்பது வருடம் உயிரோடு இருந்தாள். பூவும் பொட்டும் வைத்துக்கொண்டு சுமங்கலியாகத்தான் வளைய வந்தாளாம். மாமா விலாவாரியாகச் சொன்னார். இதையெல்லாம் கேட்கப் பிடிக்கவில்லை என்பதை எவ்வளவு குறிப்புணர்த்தினாலும் மாமாவுக்குப் புரியாது. ஆரம்பித்த விஷயத்தைச் சொல்லித்தான் முடிப்பார்...

சித்ராவின் செல்ஃபோன் ஒலித்தது. பெரியவள் எடுத்துக்கொண்டு வேகமாக வந்தாள். 'ஏதோ வெளியூர் நம்பர்ம்மா' என்றவாறே நீட்டினாள். குரல் தெளிவில்லாமல் கேட்டது. ஒரு கணம்தான். தெளிவுபட்ட மாத்திரத்தில் சித்ரா நெஞ்சை அழுத்திப் பிடித்துக்கொண்டாள். மூச்சு அடைத்தது. பேச்சு எழவில்லை. கண்கள் கரகரகரவெனப் பொழிந்தன.

பெரியவள் 'அம்மா... அம்மா...' என்று பதறி இவள் நெஞ்சை நீவிவிட்டாள். சின்னவன் புத்தகத்தைக் கீழே போட்டுவிட்டு ஓடி வந்தான். தெருவில் போன கிழவர் ஒரு நொடி தயங்கி நின்று பார்த்துவிட்டு நடையைத் தொடர்ந்தார்.

சித்ராவின் மடியில் கிடந்த செல்ஃபோனில் 'ஹலோ... ஹலோ...' என்று ஒரு ஆண் குரல் அரற்றுவது வெகு தீனமாக வெளியில் கேட்டது.

✠

11.02.2006 - சனிக்கிழமை - காலை 6.30 மணி

இந்த ரயில் பெட்டிக்குள்ளும் கூட்டம் அதிகமில்லை. ஒருவருக்கொருவர் நெருக்காமலே வழி நெடுக உட்கார்ந்து வர முடிந்தது. புதன்கிழமை சென்னையில் ஏறிய ரயிலிலும் இதே மாதிரித்தான். ஆனாலும், பக்கத்தில் இருந்த வயோதிகர் நாக்பூரில் இறங்கும்வரை பெரும்பாலும் என்மீது சாய்ந்து கிடந்தே பயணம் செய்தார். மராட்டியர். 'இந்த ரயிலில் அன்ரிஸர்வ்ட் பெட்டி இவ்வளவு காலியாக இருந்து ஒருநாளும் பார்த்ததில்லை' என்று சொல்லிச் சொல்லி மாய்ந்தார். ஆறேழு தடவை சொல்லிவிட்டு என் தோளில் தலை பதித்து உறங்கிவிட்டார்.

நான் என் ஞாபகங்களோடும், தொலைபேசியில் வைரவன் கூறிய ஆதரவு வாக்கியத்துடனும் தனியாகப் பிரயாணம் செய்தேன்...

சந்தானம் சார். முன்வச்ச காலைப் பின்வைக்காதீக. அதெல்லாம் சௌரியமாப் போயிட்டு வருவீக பாருங்க... பெரியவர் விசயமாப் போறீக. அவரு கைவிட்டுருவாரா?

நல்ல வார்த்தை சொல்லி உற்சாகப்படுத்த வேண்டும் என்று உபசாரமாகச் சொல்கிறார் என்றுதான் எனக்குப் பட்டது அப்போது. ஆனால் நிஜமாகவே யாரோ பார்த்துக்கொள்கிற மாதிரித்தான் இருக்கிறது.

காசிக்குப் போவது என்று முடிவெடுத்ததை வைரவனிடம் மாத்திரம் சொல்லவேண்டும் என்று எனக்குத் தோன்றியதேன்? யதேச்சையாகத் தோன்றிய எண்ணமாகவும் இருக்கலாம். ஒரு சத்திரத்து மேலாளர், இன்னொரு க்ஷேத்திரத்தில் ஏதாவது சத்திரம் பற்றித் தகவல் சொல்வார் என்ற எளிமையான தர்க்கம்கூட ரகசியமாகத் தூண்டி இருக்கலாம். எது எப்படியோ, அடுத்த ஐந்தாவது மணி நேரத்தில் ரயிலேற முடிந்துவிட்டது.

நேரே வாரணாசிவரை டிக்கெட் எடுக்க வேண்டாம், நாக்பூர் வரை சென்று அங்கிருந்து ரயில் மாறிப் போகலாம் என்று சென்ட்ரல் நிலைய

வரிசையில் எனக்கு முன்னால் நின்ற மீரட்காரர் ஆலோசனை சொன்னார். படிக்கிற காலத்தில் மத்யமா வரை இந்தி படித்திருந்தது எவ்வளவு உபயோகமாய் இருக்கிறது என்று நினைத்துக்கொண்டேன்.

தோளில் சாய்ந்து உறங்கிய பெரியவர், நாக்பூரில் இறங்கியதும் எனக்குச் சாப்பாடு வாங்கிக் கொடுத்தார். இந்த மார்க்கத்தில் புதிதாகப் பயணம் செய்கிறவன், சனிக்கிழமைக் காலை வாரணாசியில் இருக்க வேண்டியவன் என்று தெரிந்ததும், தமக்குத் தெரிந்த விடுதி ஒன்றில் ஓரிரவு தங்கிச் செல்வதற்கு ஏற்பாடு செய்து தந்தார். எனக்கும் ஓர் இரவு தரையில் படுத்து உறங்கினால் தேவலை என்று பட்டது. வெள்ளிக்கிழமை சாயந்திரத்துக்கு மேல் வண்டியேறினால் போதும் என்று யோசனை கூறிவிட்டு, எதுவும் தேவையென்றால் தம்மை அழைக்கும்படி சொல்லிச் சென்றார். போகுமுன் மறக்காமல் அவருடைய செல்ஃபோன் எண்ணை எழுதிக் கொடுத்தார்.

இப்படி வழிநெடுக, பார்வைக்குத் தெரியாத யாரோ ஒருவரின் கரிசனமான மேற்பார்வையில் வந்தது மாதிரித்தான் உணர்ந்தேன்.

ஆனால் மனம் ஒருவிதமான பீதி கலந்த பரபரப்பில் ஆழ்ந்திருந்தது. கழிவறை செல்லும்போது யாராவது காலை ஒதுக்கி வழிவிட்டால்கூட, எனக்கென்றே செய்யப்பட்ட ஏற்பாடோ என்று சந்தேகம் தட்டியது. எந்த நிலையத்தில் எந்த நடைமேடையில் ரயிலுக்காகக் காத்து நிற்பவர்களைப் பார்த்தாலும், காசிக்குப் போகிறவர்கள் மாதிரியே தோன்றியது. எல்லாருமே நான் போகிற அதே காரியமாகத்தான் போகிறார்கள் என்றும் பட்டது.

ஜய்ராமிடம் பேசிக்கொண்டிருந்தபோது நான் கேட்ட கேள்வியும் அவருடைய பதிலும் நினைவு வருகிறது.

ஜீ, பெரியவரின் சீடர்களாக நான் பார்த்த அத்தனைபேரும் தமிழ்நாட்டுக்காரர்களாகவே இருக்கிறார்கள். நீங்கள் மட்டும்தான் விதிவிலக்கு. மற்றவர்களிலும் அநேகர் தென்தமிழ்நாட்டுக்காரர்கள்...

நீங்கள் சொல்வது சரிதான்.

ஜய்ராம் கொஞ்சநேரம் யோசித்தார்.

...ஒருவர் சொல்லித்தானே மற்றவரிடம் போய்ச் சேர்ந்தீர்கள்? தமக்குத் தெரிந்தவர்களைத்தானே அவர்கள் உங்களுக்குச் சிபாரிசு செய்திருப்பார்கள்...?

இந்தக் காரணம் எனக்குப் போதவில்லை. ஜய்ராமும் அதேவிதமாக

உணர்ந்திருக்கலாம். மறுபடியும் சிறு யோசனை.

...ஒருவேளை, உங்கள் யாத்திரை முழுவதும் சுவாதீனமானதாக இருப்பதற்கான ஏற்பாடாக இருக்கலாம்...

யாருடைய ஏற்பாடு? எதற்காக? இப்படி ஒவ்வொரு தனிமனிதனுக்காகவும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மெனக்கெட்டு ஏற்பாடுகளைச் செய்வது என்றால் செய்பவரின் ஆகிருதி என்ன? ஒருவராக இருந்து இவற்றைச் செய்யவில்லை என்றால், சம்பந்தப்பட்ட நிறுவனம் எது? அதற்கு என்மீது என்ன அக்கறை? அந்த நிறுவனத்தின் அடிப்படை அக்கறைகள்தாம் என்ன...? கொத்துக் கொத்தாகப் பூத்து என் மனத்தின் தரையில் உதிர்ந்த கேள்விகளால் மூச்சடைக்கிற மாதிரி உணர்ந்தேன்.

ஜய்ராம் என் முகத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். நான் இன்னும் சமாதானமடையவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்ததோ என்னவோ.

...ஸ்ரீ வேதமூர்த்தியுடன் நான் புறப்பட்டு வந்தபோதும் இதே மாதிரித்தான் உணர்ந்தேன். நான் பார்க்கிற, சந்திக்கிற, இவருடன் தொடர்புடைய நபர்கள் எல்லாருமே மராட்டியர்களாக இருந்தார்கள். எதிர்ப்படுகிறவர்களை அடையாளம் காண்கிற பழக்கம் என்னிடமிருந்து கழன்று விழுகிறவரை இதே மாதிரித்தான் நடந்தது... அதற்கப்புறம் எல்லாம் சகஜமாகிவிட்டது. இதோ, நீங்கள் மராட்டியர் அல்லவே...

ஜய்ராம் விழுந்து விழுந்து சிரித்தார். எனக்கும் சிரிப்பதைத் தவிர வேறு வழியில்லை. அப்போதைக்குச் சிரித்து வைத்தேன்.

நான் பார்த்தறியாத பெரியவர் விசுவரூபமெடுத்து மேகக் கூட்டங்களுக்குள் எங்கோ உயரத்தில் உடல் முழுவதும் மறைய நிற்கிறார், கால் சுண்டுவிரலின் நக நுனி ஒரு மாநிலத்தின் மீது குடையாக விரிந்து கிடக்கிறது, என்கிற மாதிரிச் சித்திரம் ஒன்று உண்டானது எனக்குள். மற்ற மாநிலங்களின்மீது கவிந்த விரல்கள்?

இந்தச் சித்திரத்தை உறுதிப்படுத்துகிற மாதிரி வந்து சேர்ந்தார் ஆனா ரூனா...

கா சி ரயில் நிலையத்தில் தாமாகவே வந்து என்னைப் பொறுப்பேற்றார் அவர். 'நாந்தேன் ஆனா ரூனாச் செட்டியாரு' என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். காசியில் வழிகாட்டியாக இருக்கிறாராம். யாரோ அடையாளம் சொல்லி அனுப்பிவைத்த மாதிரி, அன்ரிஸர்வ்டு பெட்டியை விட்டு இறங்கி நான் நின்ற அதே இடத்தில் வந்து என் முன்

நின்றார்.

தமிழாளு தானே...?

என்று விசாரித்தார்.

...அதான் நம்மாளுன்னு மூஞ்சியிலே எளுதி ஒட்டியிருக்கே.

என்று சிலாகித்துக்கொண்டார். என் சம்மதத்துக்காகக் காத்திராமலே என்னை நிலையத்தைவிட்டு வெளியே நகர்த்திச் சென்றார்.

வெற்று மேலுடம்பு முழுக்க விபூதிப் பட்டைகள். கனத்த ருத்திராட்ச மாலை. மேளகாரர் மாதிரிக் கோணலாகக் கட்டிய வேஷ்டி. உச்சந்தலையில் அபாரமான வழுவழுப்பும், விளிம்பில் தீற்றலான கேசமும். முகம் முழுவதும் நிரம்பிய சிரிப்பும், இரண்டு பங்கு பரிமாணம் கொண்ட சோழிப்பற்கள் நிறைந்த வாயும் வாய்நிரம்பப் பேச்சும் எனக் கலகலவென இருந்தார் ஆனா ரூனா.

பார்த்த நிமிடம் முதல் பேசத் தொடங்கிவிட்டார். தமிழ்நாட்டைப் பற்றியோ, என்னைப் பற்றியோ அதிகம் கேட்டுக்கொள்வதற்கு எதுவும் இல்லை, அவரைப் பொறுத்தவரை. கர்மசிரத்தையாக ஓடும் ஒலிநாடா மாதிரிச் சளசளவென்று பேசிக்கொண்டே இருந்தார். மூன்றாவது நிமிடத்தில், நான் தேடி வந்த நிகழ்ச்சி நடக்கும் இடம் சிங்கூர் மடம் என்று தகவலும் தெரிவித்துவிட்டார். முன்னர் அவருமே அதே மடத்தில்தான் எடுபிடியாக இருந்தாராம். தம்முடைய வீட்டில் போய்க் குளித்துவிட்டு மடத்துக்குப் போனால் சரியாக இருக்கும் என்றார்.

அவருடைய வீடு ஐந்தாறு கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது. சாமான் மூட்டைதான் எதுவும் இல்லையே, எனக்கு நடக்கச் சவுகரியப்படும் அல்லவா என்று விசாரித்தவர், நான் பதில் சொல்வதற்கு முன்பாகவே நடக்கத் தொடங்கிவிட்டார்.

வண்டி வாகனங்களில் ஏறுவதில்லையாம் அவர். வெறுங்காலுடன் நடந்தே பழக்கப்பட்டவர். வசதிக் குறைவான வாழ்க்கைதான் காரணமோ என்று எனக்குத் தோன்றியது. மறுகணமே அந்த எண்ணத்தை முறிக்கிற விதமாகச் சொன்னார்:

அவனவன் காசியிலெ ஒருதடவை பாதம் படாதான்னு ஏங்கிக்கிட்டுருக்கான். எந்தப் பிறவிப் புண்ணியமோ, நம்மளுக்குக் காசியிலேயெ வசிக்கிற பாக்கியம் லவிச்சிருக்கு. செருப்புப் போட்டு நடக்கலாமா...?

எதிரில் வந்த ரிக்ஷாவில் ஒரு பிரேதத்தை அமர்ந்தவாக்கில்

கோணலாகக் கிடத்தியிருந்தது. சுவாதீனமாய் அதைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டு நடந்தார் ஆனா ரூனா.

...உசிர் போனப்புறம் ரிக்ஸாவுலெ போனா நியாயம். உக்காந்து போறதுக்கு வசதியா இருக்கும்.

என்று சிரிக்காமல் சொல்லிவிட்டு, விடுவிடுவென நடந்தவரின் வேகத்துக்கு ஈடு கொடுக்க ஆரம்பத்தில் சற்றுச் சிரமமாகத்தான் இருந்தது. கொஞ்ச நேரத்தில் என் கால்கள் பழகிவிட்டன.

ஆனா ரூனாவின் இயற்பெயர் அருணாசலம். வடக்கத்திக்காரர்களுக்கு, சுருக்கிய பெயரும் முழுப்பெயர் அளவுக்கே உச்சரிக்கக் கடினமாக இருந்ததாம். அவர்களுக்கு வெறும் ஆனாவாக ஆகிவிட்டார். சொந்த ஊர் சிவகங்கைக்கு அருகில் நாட்டரசன்கோட்டை. மீசை சரியாக முளைப்பதற்கு முன்பாகவே ஊரைவிட்டு ஓடிப் போய்விட்டாராம். ஒன்பதாம் வகுப்பில் ஃபெயிலானதற்குத் தகப்பனார் கொடுத்த தண்டனைதான் காரணம்.

இடுப்பு பெல்ட்டைக் கழற்றி வீறுவதற்காக ஓங்கினார் தகப்பனார்... ஏனோ தெரியவில்லை. ஓங்கிய கை தானாக இறங்கியது. பெல்ட்டைக் கீழே போட்டது.

அந்த நிமுசத்திலே அப்பிச்சியோடெ அன்பெ என் ரெண்டு கண்ணாலெ பாத்தேங்க. இவ்வளவு நல்ல மனுசன். நமக்கானாப் படிக்க ஒக்காந்தா மண்டைக்குள்ளெ நண்டு கொடையுது. பராக்குப் பாக்குறதுதான் விருப்பமா இருக்கு. தொடந்து அங்கேயே இருந்தா அவுங்க வாள்க்கை நரகமா ஆயிரும். நம்ம வாள்க்கெயும்தான். நைட்டோடெ நைட்டாக் கிளம்பீட்டேன். என்னா, கொஞ்ச நாளைக்கி வருத்தப்படுவாக. அப்புறம் நம்ம இல்லாத வீடு பளகீருமால்லியா...?

இன்னொரு பிரேதம் கடந்தது. இளம்பெண்ணின் பிரேதம். இந்தமுறை மனிதர் இழுத்துச் செல்லும் தட்டுவண்டியில் மல்லாந்து கிடந்தது. சூழ நாலைந்து பேர் நடந்து செல்கிறார்கள். யார் முகத்திலும் துக்கத்தின் சாயலே இல்லை. அதன் பாதத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டார் ஆனா.

...அப்பிடியேதான் ஆகவும் செஞ்சது. நாலைஞ்சு வருசம் களிச்சு நான் இங்கே இருக்கேன்னு கேள்விப்பட்டு அப்பிச்சியும் ஆத்தாளும் பொறப்புட்டு வந்தாக. அப்ப சிங்கூர் மடத்துலெ தங்கிக்கிட்டு சில்லறை வேலைக பாத்துக்கிட்டு இருந்தேன். நல்லா எளந்தாரியா வளந்துருந்தேன். அப்பிச்சி தோளுக்கு மீறியிருந்தேன்.

‘சந்தோசமாத்தான் இருக்கியாய்யா’ன்னு மட்டும் ரெண்டு மூணு தடவெ கேட்டாரு அப்பிச்சி. ‘ஆமா’ ன்னேன். ‘எங்ககூட ஊருக்கு வந்துரு’ன்னு ஒரு வார்த்தெகூடச் சொல்லலே. ‘அப்பப்பத் தாக்கல் சொல்லு அப்புச்சீ’ ன்னு மட்டும் சொல்லீட்டு ஊர் திரும்பிட்டாரு. ஆத்தா கொஞ்சம் கலங்குனாக. ‘விடுத்தா, நம்ம காலத்துலெ பெனாங்குக்கும் ரங்கூனுக்கும் பஞ்சம் பெளைக்கப் போகலயா. அதெவிடவா இது?’ ன்னு அடக்கிப் போட்டாரு. ஆத்தா காலமாயி ஒரு வருசத்திலே அவரும் போய்ச் சேர்ற வரைக்கும் தவறாமெக் கடுதாசி போடுவாரு. நானும் ஒரு கார்டு எழுதிப் போடுவேன். அதுக்கும் பெறகு நமக்கு வேரு சுத்தமா அறுந்துபோச்சு.

ஒரு டீக்கடையின் முன்னால் நின்றார் ஆனா. கல்லாவில் இருந்தவர் இவரைப் பார்த்துச் சிரித்தார். ஆனா உரத்த குரலில் கேட்டார்:

அண்ணாச்சீ, நேத்து வருவீகன்னு நெனெச்சேன்?

இன்னைக்கித்தாம்ப்பு வரணும்.

வீட்டுல கூட்டிட்டு வந்துறாதீக. பயந்துக்கிறப் போறாக.

அய்யா யாரு?

தமிள்நாட்டுலேர்ந்து வந்திருக்காக. ஆசீர்வாதம் வாங்கிக்கிறத்தான். மதுரெக்காரராம்.

அண்ணாச்சி என் புறம் திரும்பினார். கைகூப்பி முகமன் கூறிக்கொண்டோம். மண்குப்பிகளில் மிகச் சுவையான தேநீர் வந்தது. கடைக்காரர் காசு வாங்க மறுத்துவிட்டார்.

இவுக ஆறுமுக நைனாரு அண்ணாச்சி. பாத்தீகளா, பேச்சு மொம்மரத்திலே ஒங்க பேரெக்கூடத் தெரிஞ்சுக்கிறலே...

சந்தானம்.

என்றேன்.

சந்தானம் சார். அண்ணாச்சியும் நம்மூர்ப் பக்கந்தான். உத்தரகோச மங்கெ. கரைக்ட்டா நம்ம வயசிலெ ஓடியாந்தவரு. இந்த மாதிரிச் சேத்திரங்கள்லே இப்பிடி ஓடியாந்தவுக அநயம் பேரு இருப்பாக. ஊர்லெ நம்ம சனங்களெ விட்டுப்புட்டு வந்துட்டமே தவிர, வந்த ஊர்லெ எப்பிடியும் ‘நம்ம சனம்’னு ஒரு கோஸ்டி உண்டாயிரும். தனியா இருக்கணும்னு நெனச்சாலும் சரி வராது. அதுக்கெல்லாம் அந்தா அந்த மாதிரி இருந்தாத்தான் முடியும்...

பட்டைபட்டையாய்த் திரிந்த ஜடாமுடியை உச்சிக் கொண்டையாக்கி, நுனியை இடதுபுறத் தோளில் வழியவிட்டு, உடம்பு முழுவதும் சாம்பலும், கையில் சூலமும் கறுப்புநிற ஓடும் தரித்து, இடுப்பில் சாண் அகலத் துணி மறைப்புடன் கடந்து சென்ற ஸாதுவைச் சுட்டிக் காட்டினார் ஆனா. ஸாதுவின் மறு கையில் சுருட்டுப் புகைந்து கொண்டிருந்தது.

ஜய்ராம் சொன்னது சரிதான். நான் குஜராத்தியனாக இருந்து, வந்த இடத்திலும் குஜராத்தியரை சந்தித்திருந்தால், அவர் என்னை குஜராத்காரரின் கடைக்குக் கூட்டிச் சென்றிருக்க வாய்ப்பு உண்டுதானே?

...ஆனா, காசிக்கி வந்தா மரம் காய் கனி பூவுன்னு என்னத்தையாச்சும் விட்டுறணும்னு ஒரு ஐதீகம் உண்டாயில்லியா? அதெத்தான் எங்க அப்பிச்சியும் செஞ்சாரு. ரெண்டே ரெண்டு வித்தியாசம். மத்தவுக, திங்கிறது உங்கிறதெ விடுவாக. எங்கப்பிச்சி பெத்த மகனையே விட்டுட்டுப் போனாரு. ரெண்டாவது, மத்தவுகல்லாம் பிடிக்காத காய் கனியாப் பாத்து யோசிச்சு விடுவாக. இவருக்கு நானுன்னா ரெம்ப இஸ்டம்.

ஆனா நடையை நிறுத்திச் சிரித்தார்.

நடந்து நடந்து ஒரு சேரிப் பகுதிக்கு வந்து சேர்ந்திருந்தோம். கங்கையின் கரையோரமாகவே உள்ள பகுதி அது. இவ்வளவு தொலைவு தள்ளி வந்து கங்கையில் முழுக்குப் போடுகிறவர்களும் நிறையப் பேர் இருந்தார்கள். நதியோரமாகப் பார்வையை மிதக்கவிட்டபோது, விதவிதமான நிறங்களில் உடையணிந்த நாணல்கள்போல மனிதர்கள் முளைத்து நிற்பதும் சலனமுறுவதும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

ஆனாவின் மனைவி கைகூப்பி வரவேற்றார். கம்லா தேவி என்று பெயர் சொன்னார் ஆனா. காது மடலில் துளியும் இடைவெளியில்லாமல் துளையிட்டுக் கோத்த வெள்ளி ஆபரணங்களும், ஒரு ரூபாய் நாணய விட்டமுள்ள வெளிர் ஆரஞ்சு நிற ஒட்டுப்பொட்டும், வெற்றிலை தரித்து நிரந்தரமாகக் கறைபிடித்துப் பாதியாய்த் தேய்ந்த கீழ்வரிசைப் பற்களும், எண்ணெய்க் காப்பு சாத்திய பித்தளைச் சிற்பம் மாதிரி வழுவழுவென மினுங்குகிற, தேமல் படர்ந்த முகமும், கிள்ளியெடுக்கத் துளியும் சதையில்லாத உடம்புமாய் இருந்த அந்தப் பெண்மணிக்குத் தமிழில் ஒரு சொல்லும் பேச வராதாம். பேசினால்

ஓரளவு புரிந்துகொள்வார்.

தகரக் கூரையிட்ட ஒற்றை அறை வீடு. அந்தப் பிரதேசமே அழுக்கின் நிறம் பூண்டிருந்தது என்றாலும், வீட்டினுள் ஒருவிதமான நறுவிசு நிரம்பியிருந்தது. கம்லா தேவி பீஹாரைச் சேர்ந்தவர். முகம் முழுக்கப் படர்ந்த சிரிப்பு மங்காமல் எங்களுக்குத் தேநீர் தயாரித்து வழங்கினார். வெண்ணிறப் பீங்கான் கோப்பைகள் பளீரென்று துலங்கின. தேநீர் அநியாய ருசியுடன் இருந்தது. வாய்விட்டுச் சிலாகித்தேன்.

அதெல்லாம் நல்லா சமைப்பா. ஒரு நிமிசம் சும்மாயிருக்கமாட்டா. டவுனுக்குள்ளெ ஒரு பட்டுச் சீலைக் கடையிலே எடுபிடி வேலைக்கி இருக்கா. இன்னைக்கி என்னமோ தெரியலே, லீவு போட்டுருக்கா. விருந்தாளி வருதுன்னு உள்ளுணர்ச்சியிலெ பட்டதோ என்னமோ. இல்லாட்டி இந்நேரத்துக்கு பச்சி பறந்திருக்கும். இவ சம்பாத்தியம் இல்லேன்னா எங்க பொளைப்பு பெரும் நாத்தமா நாறீரும்...

அந்த அம்மாள் ஆனாவிடம் ஏதோ கேட்டார். இவர் ஆமோதிப்பாகப் பதில் சொல்லி வேஷ்டி மடிப்பிலிருந்து பணம் எடுத்துக் கொடுத்தார்.

...போஜ்பூரியிலே பேசுறா. சத்தமெல்லாம் இந்தி மாதிரித்தான் இருக்கும். கலியாணமான புதுசிலெ இவகிட்டெக் கெஞ்சிக் கூத்தாடி ஒண்ணு ரெண்டு கெட்ட வார்த்தெ கத்துக்கிட்டேன்... அத்தோடெ சரி. பெறகு, கொஞ்சங்கொஞ்சமாப் புரிஞ்சுக்கிறப் பளகிக்கிட்டேன். அவ பேசுனா எனக்குப் புரியும். போஜ்பூரி சாடையிலே நான் தமிள் பேசுனா அவளுக்குப் புரியும். மத்தபடி கோர்வையாப் பேசிக்கிற மாட்டோம். நாள் முளுக்கப் பேசிக்கிட்டேதானே திரியிறேன், பேச்சு ஓய்ஞ்சு கெடக்க இப்பிடி ஒரு எடமாவது இருக்கட்டுமே...

என்று சிரித்தார் ஆனா.

இவுங்களெ எப்பிடிக் கல்யாணம் செஞ்சீங்க?

அட நீங்க வேறெ. இதென்ன தாய் தகப்பன் சம்மதப்பட்டு சாதிசனமெல்லாம் கூடி பரிசம் போட்டுப் பத்திரிக்கெ அடிச்சு நடக்குறதா? இந்த மாதிரி ஓடி வந்தவுகள்ளெ பேர்பாதி அவுகவுகளா ஒரு சோடியெப் பிடிச்சு சேத்துக்கிர்றவுகதான். இவ சம்பரான் சில்லாவுலே ஏதோ பளைய கிராமத்துக்காரி. குடும்பம் ரொம்பப் பெரிசு. சோத்துக்கே கதியில்லாதவுக. இதுலெ, அப்பனுக்கு ரெண்டு தாரம், பதினாறு பதினேளு பிள்ளெகளாம். 'கோளிக்குஞ்சுக மாதிரித் திரியும்'னு சொல்லிச் சிரிப்பா கம்லா. மூத்தவ சீக்குலெ மண்டயெப் போட்டதும், இவளெக் கொண்டுட்டுப் போயி கயாவுலே ஒரு பொம்பளெ

யாவாரிட்டெப் பேரம் பேசியிருக்கா இவுக சின்னாத்தா. என்னமோ இவ யோகம், யாரோ நல்ல மனசுள்ள போலீசுக்காரன் கண்ணுல பட்டுருச்சு. இவளெ அவன் தப்பிக்க வச்சிருக்கான். அப்புறம் வயசு ஏற ஏற அவங்கிட்டெருந்து தப்பிக்கிறது இன்னம் பெரிய பாடாயிருச்சு, பாவம். ரயிலேறி ஓடியாந்துட்டா.

ரொம்பச் சின்ன வயசிலெயே வந்துட்டாங்களோ?

பின்னே. பதினேளு பதினெட்டு வயசிருந்தா சாஸ்தி. இப்பிடி முத்தின வயசுலயே ஈர்க்குச்சி கணக்கா இருக்கான்னா, அந்தப் பஞ்ச வயசிலெ எப்பிடி இருந்திருப்பா பாருங்க. அப்பிடியாப்பட்ட பொம்பளைக்கி ரேட்டுப் பேசினான்னா, அவிங்ய வட்டாரம் எம்புட்டுச் செறப்பானது பாருங்க... த்தூத்தேறி...

மறுபடியும் ஆனா சிரித்தார்.

இன்னைக்கி மாதிரித்தான், அன்னைக்கும் டேசன்லெ போயி நின்னுக்கிட்டிருந்தேன். ஏதாச்சும் தேட்டெ சிக்குமான்னு. ரயிலெ விட்டு எறங்கினவ, எம் மொகரெயிலெ என்னத்தைக் கண்டாளோ பாவம், நேர ஓடியாந்து எங் காலெப் பிடிச்சுக்கிட்டா. அப்புறம் என்ன, அவ கையிலெ நான் தேட்டையாச் சிக்கீட்டென். காசியிலே வந்து சந்நியாசி ஆனவுக அநயம் பேரு. நம்மள மாதிரி இங்கெ வந்து குடும்பஸ்தனானவுக சொல்பம். ஹா ஹா ஹா...

ஆனாவின் சிரிப்பு தேய்ந்து அடங்குவதற்கு முன்னாலேயே குடிசைக்குள் வந்து சேர்ந்திருந்த கம்லா அலுமினியத் தூக்கில் கொண்டு வந்த சரக்கை அடுப்பில் இளக்கத் தொடங்கினார். வனஸ்பதி மணம் சரேலென்று பொங்கி உயர்ந்தது. என்னைக் கைகாட்டி ஏதோ கேட்டார். ஆனா 'ஆமாம்' என்கிற மாதிரித் தலையாட்டினார்.

'அந்த மஹானெத் தரிசிக்கத்தான் வந்துருக்காரா'ன்னு கேக்குறா.

என்று என்னிடம் விளக்கினார்.

கங்கையில் நீராடப் போனோம். திரும்பி வந்தபோது, ஃபுல்கா ரொட்டியும் சப்ஜியும் தயார் செய்திருந்தார் கம்லா தேவி. பீங்கான் தட்டில் ஆவி பறக்க வந்த சப்ஜி அபாரமான ருசியுடன் இருந்தது.

முழங்காலுக்கு மேல் உயர்த்தித் தார்ப்பாய்ச்சிக் கட்டிய சேலை. கட்டைவிரல் பருமனுக்குக் கணுக்காலில் கிணுகிணுத்த வெள்ளித் தண்டை. வெண்கலக் குச்சிகள் மாதிரிக் கால்கள். துளி அழுக்கு இல்லாத சுத்தமான நகங்கள். எட்டடிக்கு எட்டடி இருந்த குடிசைக்குள் அவர்

ஓயாமல் நடமாடுவதை மேல்க்கண்ணால் பார்த்தபடி சாப்பிட்டேன்.

ஆ னாவும் நானும் முன்னால் நடக்க, ஏழெட்டடி தொலைவில் கம்லாதேவி பின்தொடர்ந்தார். படித்துறைகளை காட் என்கிறார்கள் காசியில். கட்டம் என்று பொருள். ஒவ்வொரு கட்டமாகத் தாண்டி நடந்தோம். தாழங்குடைக்குக் கீழ் கரையில் அமர்ந்திருக்கும் பண்டாக்கள், அவர்களின் முன்னிலையில் ஈரத் துணியுடன் குத்திட்டு உட்கார்ந்து முன்னோர்களுக்கு நீர்க்கடன் செலுத்தும் குடும்பஸ்தர்கள், நாலு பேருக்கு ஒருவராக தட்டுப்படும் ஸாதுக்கள் என இல்லறமும் துறவறமும் சம விகிதத்தில் கலந்த ஊராக இருந்தது காசி. ஆன்மீகமும் லௌகீகமும், சம காலமும் புராண காலமும், நம்பிக்கையும் ஏமாற்றும் சமச் சீராகக் கலந்த ஊர்.

உயிருள்ளவர்களுக்குச் சரி விகிதத்தில் பிதுர்க்களும் நடமாடும் ஊர் என்றும் தோன்றியது. முன்பு ஒருமுறை உறவினர் வீட்டுத் திருமணத்துக்காகக் கல்கத்தா சென்றிருக்கிறேன். ஹவுரா நிலையத்திலிருந்து வெளியில் வந்ததும் அந்த நகரத்தின் அழுக்கு ஆவேசமாய் முகத்தில் அறையும். காசியின் தோற்றத்தில் பழமையின் களிம்புதான் பிரதானமாக இருக்கிறது. நூறு நூறு ஆண்டுகளாய்ப் புழங்காமல் கிடந்த பித்தளைப் பாத்திரம் மாதிரி...

என் கண்களைத் தனியாக அலையவிட்டு, காதுகளை மட்டும் தன்வசம் ஈர்த்த அழுத்தமானதொரு குரலாக உடன் வந்தார் ஆனா. நான் கவனிக்கிறேனா இல்லையா என்று கவனிக்கவேயில்லை டீக்கடை ரேடியோ மாதிரிப் பேசிக்கொண்டே வந்தார்.

...அவர்களை ரயிலடியில் பார்த்தவுடனே இவருக்குத் தெரிந்து விட்டதாம், வழக்கமான யாத்ரீகர்கள் இல்லை என்று. மூன்று பேர். ஒருவர் கிழவர். மற்ற இருவரில் ஒருவர் மிகவும் இளையவர். முப்பத்திச் சொச்சம் வயதிருக்கலாம். அடுத்தவர் ஐம்பதை நெருங்குகிறவராகத் தெரிந்தார். தலைச்சுமையாக ஒரேயொரு மூட்டை. அபூர்வமாக ஓரிரு தமிழ் வார்த்தைகள் பேசிக்கொண்டார்கள்... அவர்களைத் தொடர்ந்து ஆனாவும் நிலையத்தைவிட்டு வெளியில் வந்தார். இன்று காலைவரை அவர்களுடனே இருந்தார்.

தொளில் கிடக்கு தொளில். வருசம் பூராவும்தான் செய்யிறோம். சம்பாதிக்கிறோம், லாவம், நஸ்டம். இப்பிடித் தன்னெ மறந்து கெடக்க எப்பனாச்சும்தானே வாய்க்கிது?

இப்படி ஒரு அந்நியர் தங்களுடன் வந்துகொண்டேயிருப்பதை

அவர்கள் கவனித்த மாதிரியே தெரியவில்லையாம். தங்கள் போக்கில் இருந்தார்கள்.

...கண்ணுக்குச் சாமியார் மாதிரித் தெரியாத சாமியார்கள்மேலே நமக்கு எப்பவுமே ஒரு கிறுக்கு உண்டுங்க. கிட்டெப் போயிக் கேட்டாலும், 'நானா, நான் சாமியாரெல்லாம் இல்லையேப்பா...'ன்னு விலகிக்கிருவாக. இப்பிடித்தான், எங்க அப்பிச்சி தவறுன தாக்கல் கெடைச்சு, கருமாதிக்கு ஊருக்குப் போனேன். அதான் கடேசித் தடவெ. அதுக்கும் பெறகு நமக்கு அங்கெ என்னா வச்சிக் கிடக்கு?

என்றார் ஆனா.

...காசிக்கித் திரும்ப முன்னே எங்கூர்ப் பெருசு ஒண்ணு சொல்லிச்சு, 'யப்பா ஆனா ரூனா, இம்புட்டுத் தூரம் வந்ததே வந்தே, இந்தாதானே கெடக்கு திருப்புவனம், அங்கே ஒரு நடெ போயிட்டு வந்துறேன்?' திருப்புவனத்திலே போயிக் கிரியெ பண்ணுறது காசியிலெ பண்ணுறதெவிட விசேசமாம்.

...சரின்னு போனேன். புஸ்பவன நாதர் கோயில்லெ தரிசனத்துக்குப் போனனா. நல்ல அளகான மூலவரு. புராண காலத்துலெ இப்பிடித்தான் ஒரு பூக்கட்டுற பொம்பளெ, 'அடடெ, எம்பூட்டு அளகு'ன்னு மூலவரெ மொகத்தெ வருடி திஸ்டி களிச்சிச்சாம். லிங்கத்துமேலெ நகக்குறி பட்டுருச்சு. அது இன்னமும் இருக்காம். பெரிய பெரிய ஞானிகள்லாம் தேடி வந்து சமாதியாயிருக்குற எடமாம் திருப்புவனம். ஒவ்வொரு சமாதி மேலெயும் ஒவ்வொரு லிங்கம் பிரதிஸ்டெ. திருநாவுக்கரசரு ஒருவாட்டி திருப்புவனத்துக்கு வாறாரு. 'அட சாமி, கால்படுற எடமெல்லாம் லிங்கமால்ல இருக்கு, அபச்சாரமாயிறப் போகுது, நான் இந்த ஊருக்குள்ளே நொளைய மாட்டனப்பா' ன்னு திரும்பிட்டாராம்.

இம்புட்டையும் சொன்னது யாருன்னு நெனைக்கிறீக? சம்சாரி மாதிரி வெள்ளெ வேஸ்டி கட்டி, கோயில் வாசல்லெ உக்காந்து பீடி பிடிச்சிக்கிட்டிருந்த கிளவனாரு. 'சரிதாம் போ, காசியிலெ நாம பாக்குற வேலெயே, உள்ளூர்லெ பாக்குற மனுசம் போல'ன்னு நெனெச்சு ஒரு அஞ்சு ரூவாயெ எடுத்து நீட்டுனேன். பார்வையிலெயே என்னெய எரிச்சுர்ற மாதிரி மொறைச்சாரே பாப்பம்.

...அப்புறம்தான் அக்கம்பக்கத்துலெ சொல்றாக. அவரு சந்நியாசியாம். சாப்பாடு மட்டும்தான் பிச்சை வாங்கிச் சாப்பிடுவாராம். அதுவும் ஒரு நாளைக்கி ஒத்தெ வேளெதான். காசெக் கையாலெயே தொடமாட்டாராம்... பெறகென்ன? அவரெத் தேடிப்போனேன்.

பஸ்டாண்டுலெ நின்னுக்கிட்டிருந்தாரு. அங்கிணயே அவரு கால்லெ விளுந்து ஆசீர்வாதம் வாங்கிட்டு வந்தேன். இங்கெ வந்த மறுவாரம் கம்லா தேவி வந்து சேந்தா என் வாள்க்கெயிலே...

...இம்புட்டும் ஏன் யாவுகம் வந்துச்சின்னா, முந்தா நா வந்தாகளே, இந்த மஹானும் அவரு சிஸ்யப் பிள்ளெகளும், நேரேத் திருப்புவனத்திலேர்ந்துதானாம்லெ வர்றாக. அங்கெ அந்தப் பெரியவரு தனக்கே தர்ப்பணம் செஞ்சுப்பிட்டுத்தான் காசிக்கி ரயிலேறுனாராம்... இப்பிடிச் செய்யிறவுகளுக்கு மறுபிறவி கிடையாதாம்.

...இவுகளெயெல்லாம், பார்வையெ வச்சி அளந்துற முடியாதுங்க... சந்யாசி மாதிரி இருப்பாக காவி கட்ட மாட்டாக. குடும்பஸ்தரு மாதிரி இருப்பாக குடும்பம் இருக்காது. சித்து வேலையெல்லாம் காமிப்பாக சித்தரு கெடையாது. இது ஒரு தனீ வகெ. நாம தடுக்கிலெ பாஞ்சா, கோலத்திலெ பாஞ்சு வளுக்கிட்டு ஓடீர்றவுக...

சிங்கூர் காட் வந்துவிட்டது.

தென் வடக்காகப் பாயும் கங்கையின் கரையில் கிழக்கு மேற்காக அமைந்த கோயில். அதன் முன்பாக, மிகப் பெரிய மைதானம் விரிந்து கிடந்தது. கோயில் வாசலையொட்டி ஷாமியானா அமைத்திருந்தார்கள். அதன் உட்புறம் சுமார் முன்னூறுபேர் வரை அமர்ந்திருந்தார்கள். பெரும்பாலானவர்கள் ஸாதுக்கள்.

ஜடாமுடிகள், முழுக்க மழித்த தலைகள், காவி நிறத்தின் விதவிதமான சாயைகளைக் கொண்ட ஆடைகள், விதவிதமான சரும நிறங்களில் சாம்பல் பூசியும் பூசாமலும் இருந்த வெற்றுடம்புகள், திறந்து நிலைகுத்திய, அரைக் கிறக்கமாகத் திறந்த, அல்லது இறுக்க மூடிய விழிகள் என்று ஸாதுக்கள் சம்மேளனம் நடக்கிற இடம்போல இருந்தது. கடைசி வரிசையின் ஒரு கோடியில் ஒற்றைக் காலில் நின்று இரண்டு கைகளையும் செங்குத்தாக உயர்த்திக் கூப்பிய தவக்கோலத்தில் நின்றிருந்தார் ஒரு ஸாது. தோல் போர்த்திய எலும்புக்கூடு போல, விலா எலும்புகள் வரிவரியாகத் துருத்திய உடம்பைப் பார்க்கப் பார்க்க எனக்கு அடிவயிற்றில் இனம்புரியாத பயம் ஊறியது.

மிகச் சில பெண்கள் வந்திருந்தார்கள். தனியாக, ஒரு கொத்தாக அமர்ந்திருந்தார்கள். அவர்களோடு சென்று சேர்ந்துகொண்டார் கம்லாதேவி. நானும் மெல்ல நகர்ந்து, ஸாதுக்களின் வரிசை முடிந்ததும் கிடந்த வெற்றிடத்தில் போய் உட்கார்ந்தேன். முன் வரிசையில் இருந்த யாரிடமோ விசாரிக்கச் சென்ற ஆனா திரும்பி வந்து என் அருகில்

அமர்ந்தார். காதருகில் கிசுகிசுத்தார்...

இப்பத்தான் விசுவநாதர் கோயிலுக்குக் கிளம்பிப் போறாகளாம். வாங்க நாமளும் போயித் திரும்புவோம்.

வேகமாக எழுந்து வெளியில் போனார். ஓட்ட நடையில் பின் தொடர்ந்தேன். கொஞ்சமும் மூச்சிரைக்காது பேசிக்கொண்டே நடந்தார் அவர். பேசுவதற்கென்றே பிறவி எடுத்தவர் மாதிரித் தென்பட்ட ஆனா.

முந்தா நாள் அவர்கள் வந்து இறங்கியது முதல் நடந்தவற்றைச் சொல்லிக்கொண்டே வந்தார்.

...ரயிலடியில் இவர் பார்த்தவர்கள் நேரே சிங்கூர் மடத்துக்குப் போனார்கள். கொண்டு வந்திருந்த ஒரே மூட்டையை மடத்தில் வைத்துவிட்டு உடனடியாக கங்கைக் கரைக்குப் போய்விட்டார்கள். பிற்பாடு மடத்தைச் சேர்ந்த ஒருத்தரிடம் ஆனா கேட்டுத் தெரிந்துகொண்டாராம் அந்த மூட்டையில் நாலைந்து வேஷ்டிகள் மட்டும் இருந்ததாம். எல்லாம் புது வஸ்திரங்கள். சாதாரணக் கைத்தறி வேஷ்டிகள்.

...கோடித் துணின்னா தோஸம் கிடையாது பாருங்க.

தலையாட்டிக் கேட்டுக்கொண்டேன்.

...இந்தப் பெரியவர் இன்னைக்கிக் கட்டுறதுக்காகத் தனியா ஒரு வேஸ்டி வச்சிருக்காக. அது சாமானிய வேஸ்டி இல்லையாம். சுமார் ஆறு மாச காலம் யாத்திரேலெ இருந்த வேஸ்டி. ஆவுடையார் கோயில், மதுரை மீனாச்சியம்மன் கோயில், திருவாப்புடையார் கோயில், திருப்புவனம்னு ஏகப்பட்ட கோயில்கள்லெ வச்சிப் பூசை பண்ணுனதாம். இவருக்கு இதுதான் கடேசிப் பிறவி, கட்டக் கடேசி வஸ்திரம்ங்கிறதாலே இம்புட்டு ஏற்பாடு செய்றாகன்னு நெனைச்சுக்கிட்டேன்...

பெரியவர் பிசிர்பிசிரான கேசத்துடன் இருந்தாராம். கங்கைக் கரையில் தலையை முழுக்க மழித்துக்கொண்டார். முன்னங்கைகளை, நெஞ்சுப் பகுதியை, அக்குள்களைக்கூட மழித்துக் கொண்டார். கங்கையில் முழுக்குப் போட்டுவிட்டு மேலேறி, தர்ப்பணம் செய்தார்.

...யாருக்குங்கிறீக? 'வேதமூர்த்தி, வேதமூர்த்தி'ன்னு சொல்லி, கோத்திரம் சொல்லி எள்ளும் தண்ணியும் எறைச்சாரா, பக்கத்திலெ நின்ன தம்பிகிட்டெக் கேட்டேன். 'அது யாரு பேருங்க?' அவரு சொல்றாரு, தர்ப்பணம் செய்யிறவரு பேரேதானாம் அது. இவுகல்லாம்

பேரு நச்சத்திரம் சொல்லிக் கோயில்கள்லெ அர்ச்சனெகூடப் பண்ண மாட்டாக. இப்ப தனக்கே அந்திமக் கிரியெ பண்ணிக்கிர்றாருன்னு பாக்க மனசு கொஞ்சம் சங்கட்டமாத்தான் இருந்துச்சு.

ஆனாவின் குரல் சற்று நனைந்திருந்தது. காலையில் வந்ததிலிருந்து செய்தி வாசிக்கிறவரின் குரலில், உணர்ச்சியின் ஏற்ற இறக்கமே இல்லாமல் பேசி வந்த ஆனா, ஒரு நிமிடம் நடையை நிறுத்தினார். அவர் முகத்தைத் திரும்பிப் பார்த்தேன். அவர் கங்கையைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

சாம்பல் நிறம் பூத்து முற்றிவிட்ட வேளையின் பிம்பம் கங்கையின் பரப்பில் பட்டு அலுமினிய நிறத்தில் பளபளத்தது. ஓரத்தில் சிறுபெண்ணின் குதூகலத்தோடும், நடுப்பகுதியில் ஓட்டம் புலப்படாது ஆயிரமாயிரம் வயது கடந்த மூதாட்டியின் சாந்தத்துடனும் நகர்கிறாள் கங்கை.

...அடுத்து விசுவநாதர் கோயிலுக்குப் போனாக. நம்மூரு மாதிரிக் கிடையாது இங்கெல்லாம். செத்தவுகளுக்கு நீர்க்கடன் குடுக்கத்தான் பண்டா வேணும். கடவுளெ நாமளே நேரேத் தொட்டு கும்புடலாம், பூப்போடலாம். ஆனா, இவரு கருவறெக்குள்ளாற போனாரேயொளிய, சாமியெத் தொடாமெத்தான் கும்புட்டாரு. நேத்து ரெண்டாந்தடவே போனாரே, அப்பவும் தொடலெ. இதுக்கெல்லாம் ஏதாவது அர்த்தம் இருக்கத்தான் செய்யும். நம்மளெ மாதிரிப் பாமரங்களுக்கு வெளங்காது...

ஸாதுக்களின் கோஷ்டியொன்று எதிரில் வந்து எங்களைக் கடந்து போனது. கசப்பான மணம் கவிந்து சில நிமிடங்கள் நீடித்தது. நான் கைக்குட்டையை எடுத்து நாசியை மூடிக்கொண்டேன். ஆனா என்னைப் பார்த்துப் பிரியமாகப் புன்னகைத்தார்.

...பச்செலெச் சாமியாருக கோஸ்டி. அதாங்க, கஞ்சா இளுக்குறவுக. நமக்கெல்லாம் அப்பன் பாட்டன் இருக்குற மாதிரி இவுகளுக்கும் வம்முசாவளி இருக்குது பாத்துக்கங்க. இவுக குருநாதருக வளியா வம்சமும் தொடரும். பரம்பரெ பரம்பரெயாக் கஞ்சா இளுப்பாக இவுக. ஆரம்பத்திலெ நான் ஒண்ணு ரெண்டு தடவெ இளுத்துப் பாத்திருக்கேன். கோட்டெச் செவுரு மாதிரி இந்த கங்கெ அப்பிடியே நட்டமா எந்திரிச்சு நின்னுச்சு பாருங்க. ஏயப்பா, மெரண்டு போயிட்டேன். எதுத்தாப்பில ஒரு நாயி நிக்கிது யானெ சைஸுக்கு வளந்திருக்கு. சுதி எறங்குற வரைக்கும் பயந்துபோயிக் கெடந்தேன். பெறகு, அந்தப் பக்கம் தலெவச்சுப் படுக்கக்கூடத் தைரியமில்லே...

ஆனா சிரித்தார்.

...ஆனாப் பாருங்க, அந்தச் சரக்கு இவுகளெ ஒண்ணுமே செய்யாது. இந்த மணம் மட்டும் இல்லாட்டின்னா மத்தவுக கண்டுபிடிக்கக்கூட முடியாது. ஒவ்வொருத்தர் ஒடம்பு அமைப்புதான் காரணம்ன்னு நம்ம டீக்கடெ நயினாரு அண்ணாச்சி சொல்றாரு. நான் ஒப்புக்கிற மாட்டேன். மனசோடெ அமைப்புதான் காரணம். இந்தா போற கோஸ்டிக்கி சாதாரண சைஸுல நாயெப் பாத்தா பயமா இருக்கலாம். யாரு கண்டா...?

சிரிப்பைத் தொடர்ந்தார் ஆனா.

கோயில்லெ வேறென்ன செஞ்சாரு பெரியவரு?

பாத்திகளா, அதெ விட்டுட்டு வேறெங்கெயோ போயிட்டென். பெறகென்ன, நேரே மடத்துக்குப் போயிட்டாக. அதுக்குள்ளெ, அங்கெ சாமியானா எளும்பியாச்சு. இவுக வந்த தாக்கல் எப்பிடித்தான் பரவிச்சுன்னே தெரியலே. தொடர்ந்து ஆளுக வர்றாக, ஆசீர்வாதம் வாங்கிக்கிர்றாக, போயிர்றாக. இந்த ரெண்டு நாள்லெ நாம் பாக்க ஆயிரத்திச் சொச்சம் பேராவது இருக்கும், மொதோ நா மதியத்துலேருந்து, வர்றவுகளுக்கு அன்னதானம் வேறெ ஆரமிச்சாச்சு. குடும்பஸ்தருக பிரசாதம் மாதிரிக் கையிலே வாங்கிக்கிட்டுப் போயிர்றாக. நாம பாத்தமே அந்த மாதிரி ஸாதுக்க மட்டும் பந்தலுக்குள்ளாறேயே தங்கிக்கிட்டாக. அவுக பிரசாதமும் வாங்கிக்கிறலே...

ஒத்தெக் கால்லெ ஒரு ஸாது நின்னாரு பாத்தீங்களா? அந்தக் காட்சி என் கண்ணுக்குள்ளேயே நிக்கிது.

வாஸ்தவம்தாங்க. முந்தாநா மத்தியானம் வந்தவரு. இவரெ வணங்கிட்டு அந்த இடத்தில போய் நின்னாரு. இப்ப வரைக்கும் காலெக்கூட மாத்தலெ. எல்லாம் ராச்சஸப் பெறவிக. கிட்டப் போயி சங்காத்தமே வச்சிக்கிற முடியாது...

பெருமூச்சு விட்டார் ஆனா.

...ஒரு மணிநேரம் போலத்தான். அப்புறம் வெளியேறிட்டாரு. காசி முளுக்க நடந்தே சுத்துறாரு. ஒரு கோயிலு, ஒரு கட்டம், ஒரு மடம் விடலே. மொத நாச் சாயங்காலம் ஒரு படகெ அமத்திக்கிட்டு அஞ்சு கட்டத்திலெயும் போயி ஸ்நானம் பண்ணினாரு. ராப்பூராப் பந்தல்லெ யாருமே ஒறங்கலெயாம். நேத்துக் காலைலே போனப்பச் சொன்னாங்க. நேத்து மதியம் ரெண்டாவது வாட்டி விசுவநாதரெத் தரிசிக்கப்

போனாரு. அப்பவும் சாமியெத் தொடலே. மதியம் திரும்புனவரு, வந்த சுருக்கிலே நிஸ்டையிலெ ஒக்காந்துட்டாரு. யாரையும் பாக்கவோ பேசவோ தொடவோ கெடையாது. ஒரு அசப்புலெ பாத்தா சதையாலெ செஞ்ச பொம்மை கணக்கா ஒக்காந்துருக்காரு. உத்துப் பாத்தாத்தான் தெரியும் உசிருள்ள மனுசந்தான், மூச்சு ஏறி எறங்கத்தான் செய்யிதுன்னு...

நிஷ்டையிலெ உக்காந்தது எந்த எடத்துலே?

முன்னாடி ஒரு குளி வெட்டி வச்சிருக்காகல்லே. அது கிட்டெத்தான்.

பந்தலுக்குள், முன் வரிசைக்கும் முன்னால், புதிதாக ஒரு பள்ளம் தோண்டப்பட்டிருந்தது ஞாபகம் வந்தது. அதன் மேட்டில் ஊஞ்சல் பலகையளவு நீளமான மணைப்பலகை கிடந்தது. புது மரத்தில் செய்த, வர்ணம் பூசாத பலகை...

காசி விஸ்வநாதர் கோயிலுக்குள் கூட்டம் அதிகமாகத்தான் இருந்தது. நாங்கள் ஒருவிதமாய் நீந்தி நீந்தி நெரிசலைக் கடந்து கருவறைக்கு அருகில் போனபோது, மழுமழுவென்ற தலை கொண்ட ஒருவர் கருவறைக்குள் நுழைவது தென்பட்டது.

உடன் வந்தவர்கள் வெளியிலேயே நின்றுகொண்டார்கள். உள்ளே நுழைந்தவர், மூலவரைத் தொட்டு வணங்கினார். பிறகு விக்கிரகத்திடமிருந்து எதையோ இடது கையால் பாவனையாக வாங்கினார். அதை வலது கைக்கு மாற்றினார். வலது உள்ளங்கையை நெஞ்சில் பதித்துக்கொண்டார்.

படுவேகமாகக் கருவறையை விட்டு வெளியேறினார். ஒரு கணம், ஒரேயொரு கணம் மின்னல்போலப் பார்வையில் பட்டுத் தீர்ந்தது அவருடைய முகம். நிஜமாகவே மின்னல் தீண்டிய மாதிரித்தான் உணர்ந்தேன். பரிச்சயமில்லாத முகம் அல்ல அது.

வழியெங்கும் அடர்ந்திருந்த கூட்டம் மந்திரத்தால் கட்டுப்பட்டது மாதிரி விலகி அவருக்கு வழிவிடுகிறது. யார்மீதும் தனது வஸ்திரம்கூடப் படாமல் கோயில் வாசலுக்கு வந்து சேர்ந்தார். அவருக்காக உருவாகிய இடைவெளியில் ஓடியவர்களோடு நாங்களும் ஓடி வந்தோம்.

தயாராகக் காத்திருந்த ரிக்ஷாவில் ஏறினார். சிங்கூர் காட்டை நோக்கி விரைந்தது ரிக்ஷா.

ஆனா ரூனா பேச்சை நிறுத்திவிட்டார். ரிக்ஷாவைத் தொடர்ந்து

நாங்கள் கிட்டத்தட்ட ஓடிக்கொண்டிருந்தோம் கடைசியாக. முன்னால் ஓடியவர்களில் ஒரு முகம் மட்டும் தெரிந்த முகம்தான். ஹரிஹர சுப்ரமணியம்.

பந்தலின் வாசலில் ரிக்ஷா நின்றது. பெரியவர் இறங்கி நுழைந்தார். ஸாதுக்கள் கூட்டம் அமர்ந்த நிலையிலேயே,

அரஹர மஹாதேவா...

என்றது, ஒரே குரலில். தொடர்ந்து 'அரஹர அரஹர அரஹர' என்று சன்னமாக அரற்றத் தொடங்கியது. நூற்றுக்கணக்கான ஆண் தொண்டைகளிலிருந்து அடிக்குரலில் கிளம்பிய உச்சாடனம் காரணமாக, பந்தலுக்குள் நிலவிய சூழ்நிலை அமானுஷ்யமாக மாறியது.

பெரியவர் மணைப் பலகைக்கு அருகில் சென்று அமைதியாக நின்றார். மற்றவர்கள் பலகையை இருபுறமும் பிடித்துத் தூக்கி, பள்ளத்துக்குள் இறக்கினார்கள். சுமார் ஒன்றரை அடி ஆழம் கொண்ட சிறு பள்ளம் அது. இதற்குள், என் காதருகில்,

வாங்க, முன்னாடி போவம்.

என்று கிசுகிசுத்தார் ஆனா.

வேணாங்க ஆனா. இங்கெயே இருப்போம்.

என்று ரகசியமாய்ச் சொன்னேன்.

அட, நீங்க ஒண்ணு. நம்ம என்ன கூத்துப் பாக்கவா வந்திருக்கோம். எம்புட்டுத் தொலெவுலேர்ந்து வந்திருக்கீக. நல்லாத் தொலக்கமாப் பாக்க வேணாம்?

என் கையைப் பிடித்துத் தரதரவென இழுத்துப் போனார்.

முன்வரிசையின் வெளி ஓரத்தில் நின்றிருந்த கொஞ்சப்பேருடன் நாங்களும் இணைந்துகொண்டோம். இதற்குள் வாசலில் ஒரு கார் வந்து நின்றது. வெற்று மேலுடம்பில் ஸ்ட்டெத்தாஸ்கோப்பை மாலையாக அணிந்த, வேஷ்டிக்கு மேல் ஒரு துண்டையும் அணிந்திருந்த ஒருவர் இறங்கிப் பந்தலுக்குள் வந்தார்.

அட, நம்ம மேத்தா டாக்டரு. உள்ளூர் ஆளுதான். காசியிலேயே ரொம்பப் பெரிய டாக்டருங்க இவரு.

என்று ஆனா என் காதோடு சொன்னார். டாக்டர் பெரியவரின் அருகில் சென்று சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார்.

மேலே பட்டுவிடாமல், மேலே பட்டுவிடாமல்...

என்று அவசரமாய்ச் சொன்னார் ஹரிஹர சுப்ரமணியம்.

எத்தனை நாழி ஆறது?

என்று கேட்டார் பெரியவர். அவருடைய குரலை முதல் தடவையாகக் கேட்கிறேன். அடேயப்பா, எவ்வளவு கனிவு. மயிர்க்கூச்செரிந்தது எனக்கு... யாரோ நேரம் சொன்னார்கள். பெரியவர் டாக்டரிடம் பேசினார். சுத்தமான ஹிந்தி.

மூன்று தடவை மூச்சிழுப்பேன். மூன்றாவது மூச்சை இழுத்து ஐந்து நிமிடம் ஆன பிறகு நாடி பாருங்கள். பிறகு மல்லாத்திப் படுக்க வைத்துவிடுங்கள். பதினைந்து நிமிடம் கழித்து மயானத்துக்குக் கொண்டு செல்லலாம்.

என்று சீரான குரலில் சொல்லி முடித்தார்.

ஹரி...

ஹரிஹர சுப்ரமணியம் முன்னால் வந்தார். வலது கை வாயைப் பாவனையாக மூடிக்கொண்டது. இடது கை மடங்கி வலது முழங்கையைத் தாங்கியது.

ஜய்ராம் மாட்டேன்னுட்டான். மன்னாதிக்கும் மத்தவாளுக்கும் நீதான் பொறுப்பு. தகனத்தையும் நீயே பாத்துக்கோ.

‘ஆகட்டும்’ என்கிற மாதிரித் தலையாட்டினார் ஹரி.

பெரியவர் குழிக்குள் இறங்கினார். கூட்டம் ‘அரஹர மஹாதேவா’ என்று உரத்துச் சொன்னது. அனிச்சையாக என் கைக்கடிகாரத்தைப் பார்த்தேன். மின்னணு எண்கள் முற்பகல் பதினொன்று இருபத்தைந்து என்று காட்டின.

நெஞ்சுக்கு மேல் வெளியில் தெரியும் விதமாகப் பலகையில் சம்மணமிட்டு அமர்ந்தார். முன்னால் கூடியிருந்தவர்களை ஒரு சுற்றுப் பார்த்தார். என்மீதும் படிந்து விலகியது பார்வை. பனியாலான மின்னல் தீண்டிய மாதிரி உணர்ந்தேன்.

கண்களை நிதானமாக மூடிக்கொண்டார். பந்தலுக்குள் அசாதாரணமான அமைதி நிலவியது. ஆனா ரூனா என் கையை அழுந்தப் பற்றியிருந்தார். ஆறுதல் தருவதற்காகவா, பெறுவதற்காகவா என்று தெரியவில்லை. படு இறுக்கமாக இருந்தது பிடி.

பெரியவர் மூச்சை உள்ளே இழுத்து இறுக்கிக்கொண்டார். இதுவரை சுவாசித்த விதமாக இல்லை வெகு ஆழமாக இழுக்கப்பட்ட மூச்சு. உள்ளே நுழைந்த காற்று உடல் முழுவதும் பரவுகிற மாதிரித் தென்பட்டது எனக்கு.

முதல் மூச்சு வெளியேறாமலே, இரண்டாவது மூச்சை இழுத்தார். இது நெஞ்சுடன் நின்றுவிட்டது தெரிந்தது.

மூன்றாவது மூச்சு. இது உள்ளே இறங்கவேயில்லை. தொண்டைக் குழியுடன் நின்றுவிட்டது...

கூட்டம் மிகப் பெருங்குரலில் 'அரஹர மஹாதேவா' என்று கூச்சலிட்டது. அடிவயிற்றில் ஒரு பள்ளம் உருவாவதை உணர்ந்தபடி பந்தலுக்குள் பார்வையைத் திருப்பினேன். கடைசி வரிசைக்குப் பின்னால் ஒற்றைக் காலில் நின்றிருந்த ஸாது, மடித்த காலை இறக்கினார். 'சம்போ, சம்போ' என்று அலறியவாறு பந்தலைவிட்டு வெளியேறி ஓடத் தொடங்கினார். உயரக் கூப்பிய கைகளை இறக்காமலே ஓடிக் காணாமல் போனார்.

மேத்தா டாக்டர் கைக் கடிகாரத்தைப் பார்க்கத் தொடங்கியிருந்தார்.

ஐந்தாவது நிமிடம் முடிந்தது, அவரும் ஹரிஹர சுப்ரமணியமும் இன்னொருவரும் அவர்தான் வைத்தியர் அண்ணாவோ என்று எனக்குத் தோன்றியது பள்ளத்தை நெருங்கினார்கள்...

எனக்குள் மீண்டும் மின்னல் சொடுக்கியது. ஆ!

அவர்கள் மல்லாத்திப் படுக்கவைக்கும் முகம் நான் பார்த்ததேதான். பாதாள லிங்கம் சந்நிதியில் நான் முதல் தடவை பார்த்த அர்ச்சகர் முகம்...!

க ங்கையின் கரையில், நதியை நோக்கி இறங்கும் படி வரிசையின் உச்சியில், ஜன சந்தடியின் மத்தியில் நீரோட்டம் நன்கு கண்ணில்படும் விதமாக உட்கார்ந்திருந்தோம். முன்னால், அரிச்சந்திர கட்டத்தின் மயானம் தன் இயல்பான பரபரப்பில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இடதுபுறம், எந்த அவசரமும் கொள்ளாது அபூர்வமான மந்தத் தன்மையுடன் நகர்கிறாள் கங்கை.

இத்தனை பேர் முழுக்குப் போட்டு நிமிர்கிறார்கள், கரை நெடுக 'ஹர்ஹர் மஹாதேவ்' என்றும் 'சம்போ மஹாதேவ்' என்றும் கூக்குரல்கள் அடிக்கடி எழுந்து தணிகின்றன. நேரம் தவறாமல் யாரோ செலுத்துவதுபோல சீரான இடைவெளியில் பிணங்களும் பூக்களும்

மிதந்து போகின்றன. நீரோட்டத்துடன் இசைந்தும் எதிர்க்கரை நோக்கிக் குறுக்காக வகிர்ந்தும் படகுகள் திரிகின்றன, ஆனாலும் தன்னுடைய ஏகாந்தம் சற்றும் குலையாமல் மெல்லப் புரள்கிறாள் கங்கை... தனது அந்தரங்கத்துக்கும் நடப்புக் கணத்துக்கும் யாதொரு தொடர்புமில்லை என்று அறிவிப்பவள் மாதிரி. இதுவரை கடந்து வந்த தொலைவையும், காலத்தையும் பற்றி அதிதீவிரமாக மறுபரிசீலனை செய்கிறவள் மாதிரி...

கிட்டத்தட்ட இரண்டு வாரங்களுக்கும் மேலாக என்னைப் பீடித்து ஊர்ஊராகத் துரத்திக்கொண்டிருந்த பூதம் வெளியேறிவிட்ட மாதிரி இருந்தது எனக்கு. என்னுடைய ஆதார மையத்தில் ஊடுருவியிருந்த ஆணிவேரை யாரோ உருவி எடுத்துவிட்டது மாதிரி உடம்பும் மனமும் களைத்து ஓய்ந்திருந்தன.

அமைதியின் திருவுருவாக அமர்ந்திருந்த ஆனா ரூனாவைத் திரும்பிப் பார்த்தேன். கண்களில் அசாத்தியமான வெறுமை படர்ந்திருக்க, நீர்ப்பரப்பின் மத்தியில் நிலையாக மிதந்த ஏதோ ஒரு புள்ளியில் பார்வையை நாட்டியிருந்தார். காலையில் பார்த்த துறுதுறுவென்ற முகம் இல்லை. தனக்குள் அமிழ்ந்த தீவிரத்தின் வெளுப்பு படர்ந்த முகம். என் பக்கத்தில் அமர்ந்து, எங்கோ வெகுதொலைவில், தமக்கு மட்டுமே அனுபவமாகும் புதைமணலுக்குள் ஆழ ஆழ
அமிழ்ந்துகொண்டிருக்கிறார் என்று தோன்றியது.

ஒரே நாளில் அவருடன் எவ்வளவு நெருக்கம் உண்டாகிவிட்டது. அவரும் அப்படித்தான் உணர்ந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்படி ஒரு அந்நிய மனிதனுடன், தன்னிலை தொலைத்து அமர்ந்திருக்க முடியுமா?

கழுத்தை எதிரே திருப்பி, பார்வையை மயானத்துக்குள் ஓட்டினேன். வந்தவர்களெல்லாம் அவரவர் போக்கில் கலைந்து சென்று வெகு நேரம் ஆகிவிட்ட பிறகும், இம்மியும் கலையாமல் உறைந்து அதே இடத்தில் நிலைத்திருந்தது அந்தக் காட்சி. மனத்தின் பார்வையிலிருந்து இனி என்றுமே அகலாது என்று எனக்கு உறுதியாகப் பட்ட காட்சி...

அரிச்சந்திர கட்டத்தில் பெரியவரைக் கிடத்திய சிதையின் முன்னால் ஒரு சிறு கூட்டம் நிற்கிறது. சந்தானம் ஆனா ரூனா ஹரிஹர சுப்ரமணியம் மேத்தா டாக்டர் என்று தெரிந்த முகங்களும், ஸாதுக்கள் வைத்தியர் அண்ணா என்று யூகத்துக்குப் பிடிபடும் முகங்களும், தத்தமது ரகசியப் பாட்டைகளில் யாராக இருக்கிறார்கள் என்றே பிடிபடாத இன்னும் பல முகங்களும்... ஒரே பாவத்துடன் இறுகி இருக்கின்றன.

அக்கம்பக்கத்து சிதைகள் சிலவற்றில் புகை கனன்று கொண்டிருக்கிறது. சிலவற்றில் ஜ்வாலைகள் ஓங்கி எழுந்திருந்து அலையாடுகின்றன. சொந்த ஊர் திரும்பிச் செல்லும் விருந்தாளியை வழியனுப்பும் விதமாகக் கையாட்டுகின்றன அவை...

ஆனா, இன்னைக்கே நான் ஊர் திரும்புறேங்க...

என்று ஆனாவிடம் தெரிவித்தேன். கவனம் என்னிடம் திரும்பாமலே உறைந்திருந்தார் அவர்.

கேட்டுக்கொள்ளச் செவிகள் இல்லாது போனதால், அந்தரத்தில் சிறகடித்து சற்றுத் தவித்த என்னுடைய வாக்கியம் காற்றில் நீந்தி நீந்தி ஏதோ ஒரு முடிவின்மையை நோக்கிப் போய்க்கொண்டேயிருப்பதைக் கண்டேன்.

மறுகணம், காட்சி உருமாறிவிட்டது. சுற்றிலும் நிரம்பிய வெளிச்சமும் ஓசைகளும் மணங்களும் அதே முடிவின்மையிலிருந்து பிதுங்கி வெளியேறி எதிர்வந்து கொண்டிருந்தன...

✠

பின்னுரை

என்னுடைய இளவயது ஆசைகளில் ஒன்று வீட்டைவிட்டு ஓடிப்போவது. நான் வளர்ந்த, வளர்க்கப்பட்ட சூழ்நிலை அப்படி. (திரும்பிப் பார்க்கும்போது, அந்த நாட்களில் எனக்கிருந்த குணநலன்கள் கொண்ட ஒரு சிறுவனைப் பட்டப்படிப்பு முடிக்கும்வரை ஆதரித்து வளர்ப்பதற்கு நானே விரும்ப மாட்டேன் என்றுதான் படுகிறது!)

ஆனால், ரகசியமாக எனக்குள் வேர்விட்டு வளர்ந்து படர்ந்திருந்த ஆசையை நிகழ்த்திப் பார்ப்பதற்கு தைரியமில்லை. உடல்வாகும் மனவாகும் அப்படி. இருக்கும் சொகுசு எதையும் இழக்காமலே சாகசங்களில் இறங்க வேண்டும் என்று நினைத்தால் முடியுமா?

வீட்டைவிட்டு ஓடிப்போய் என்ன செய்வது என்ற தீர்மானமும் ஏதும் கிடையாது. ஒருவேளை தெளிவான திட்டம் இருந்திருந்தால் ஓடியிருப்பேனோ என்னவோ. குடும்பம் என்ற அமைப்பின் பாதுகாப்பைவிட்டு இறங்கத் தைரியம் இல்லாமல், வெளியேறுவது பற்றிய மிகையுணர்ச்சியை மட்டும் அடைகாத்தபடி என் பால்யம் கழிந்து முடிந்தது.

ஆனால், சுதந்திரமான வெளியில், வேர் பிடிக்காமல் அலைகிற தனிமனிதனாக என்னை வனைந்துகொள்ளும் பகற்கனவுகள் வெகுகாலம் என்னுடன் இருந்தன. திருமணம் ஆகி, மனதிற்குகந்த மனைவியும் குழந்தைகளும் அமைந்த பிறகு மேற்படிக் கனவுகள் வெளிற ஆரம்பித்துவிட்டன. என்றாலும், வெளியேறியவர்களாகத் தென்படுகிறவர்களை வேடிக்கை பார்ப்பதும், அந்த நேரத்தில் மன ஆழத்தில் ஏற்படும் சிறு நமைச்சலை ஆனந்தமாய் உணர்வதும் நின்றபாடில்லை.

தனியர்களாய்த் திரியும் எவ்வளவோ பேரைப் பார்த்திருக்கிறேன். வெளிமாநிலப் பிரயாணங்களில், அத்துவானமான நெடுஞ்சாலைகளில், பித்தர்கள்போல நடந்துகொண்டேயிருக்கும் நபர்களைப் பார்த்திருக்கிறேன். ஒரேயொரு கணம் அவர்களுடன் என்னைப்

பொருத்திப் பார்த்துக்கொண்டு மகிழ்ச்சியும் மிரட்சியும் அடைந்திருக்கிறேன். அந்த ஒரு கணத்தில் காணக் கிடைக்கிற உலகம், பிற வேளைகளில் தென்படுகிற உலகம் அல்ல.

உடையிலும் பாவனைகளிலும் பழக்கவழக்கங்களிலும் துறவிகளாகத் தம்மை அடையாளம் காட்டி நடமாடுவோர் பற்றி (மடாதிபதிகள், பீடாதிபதிகள் என நிறுவனமாகி அமர்ந்திருப்பவர்களைச் சொல்லவில்லை) எனக்கு உள்ள அபிப்பிராயம் வேறுவிதமானது. பிற தேசாந்திரிகள் போல இவர்கள் தனியர்கள் அல்ல என்றே தோன்றுகிறது. கடவுள் நம்பிக்கை முதல், நடைமுறை வாழ்க்கையின் அலகுகள் வரை இவர்களை ஒருமிக்கும் சன்னமான, ஆனால் உறுதியான, இழைகள் கொண்ட சூட்சுமமான வலைப்பின்னல் ஒன்று இருக்கத்தான் செய்கிறது.

ஆக, இவர்கள் வேறொரு பெருங்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ரத்த உறவுகளுக்கு இருக்கும் மன அழுத்தங்கள் அனைத்திலிருந்தும் விடுபட்டு வேறு ஒருவித உறவுப் பின்னலுக்குள் தம்மை ஆட்படுத்திக்கொண்டவர்கள்.

ஏ ழு ஆண்டுகளுக்கு முன் என் முதல் நாவல் குள்ளச்சித்தன் சரித்திரம் பிரசுரமானது. ‘இந்துத்துவப் பிரதி’ என்பதில் ஆரம்பித்து விதவிதமான விமர்சனங்களும் ஏச்சுகளும் வந்தன. ஆனால், அந்த நாவலை எழுதியது குறித்து என்னை மறுபரிசீலனை செய்யத் தூண்டும் வலுகொண்ட ஒரு வாக்கியம்கூட வெளிவரவில்லை.

நடைமுறை வாழ்வின் வெளித்தெரியாத பரிமாணமொன்றைக் கீறிக் காட்டுவதுடன் ஓர் இலக்கியப் படைப்பின் வேலை முடிந்து விடுகிறது. மற்றபடி, அது ஒரு மைல்கல்லோ, வழிகாட்டிப் பலகையோ அல்ல. நம்பிக்கைகளையும் அவநம்பிக்கைகளையும் விதைப்பது அல்ல அதன் உத்தேசம்.

பொதுப் பார்வையில் வேர் பிடித்திருக்கும் மெய்ம்மை உணர்வின் மறுபக்கத்தைத் தீண்டிப் பார்ப்பதே குள்ளச்சித்தன் சரித்திரம் எழுதும்போது எனக்கிருந்த நோக்கம். மெய்ம்மை என்ற அறுதி நிலையின் வியாபகத்துடன் ஒப்பிடும்போது, தனிமனித வாழ்வோ, மனிதக் கூட்டத்தின் வாழ்முறையோ, யாவுமே வெறும் துகள்கள்தாம்.

காலம் இடம் என்ற இரட்டை வியக்தியை, அல்லது இரண்டெனத் தென்படும் ஒற்றை வியக்தியை, விவாதபூர்வமாக விசாரிக்கும் அக்கறை இரண்டே புலங்களுக்குத்தான் உண்டு. ஒன்று அறிவியல்;

பருவுலகத்தின் அலகுகளை ஆராய்ந்து தீரவில்லை அதற்கு. மற்றொன்று ஆன்மவியல்; மதங்களும், அவற்றின் தோற்றுவாய்களும், அவை முன்னிறுத்தும் சடங்குகளும், பக்தி நிலைகளும், பொக்கான தரிசனங்களும் என்னும் புறக் கசடுகளை வடிகட்டிய பிறகு எஞ்சும் தூய விசாரணை நிலையே அது.

நான் அறிவியலாளன் அல்ல. அத்துடன், தன்னுடைய விசாரணை முறையாக ஆன்மவியல் கைக்கொள்ளும் மாற்று மெய்ம்மை மீது ஆர்வம் உள்ளவன். அதன் முன்னிலையில், மிகமிக உறுதியாக நிற்கும் நடைமுறைத் தர்க்கம் வெகுகாலப் புழக்கத்தால் நெளிந்த அலுமினியப் பாத்திரம்போல உருக்குலைவதை வேடிக்கை பார்ப்பதில் விருப்பம் உள்ளவன்.

இலக்கியவாதிகள் உள்ளிட்ட பல்வேறு நண்பர்களிடத்தில் பேசும்போது பார்த்திருக்கிறேன் ஒவ்வொருவர் வசமும் ஒரு மாயக்கதை இருக்கிறது. அதை எழுத்தில் பதிய முடியாதபடி ஒருவித அரசியல் சிக்கல் அவர்களைத் தடுக்கிறது. அதைத் தவறு என்று நான் நினைக்கவில்லை. அவரவர் நிலைப்பாட்டைத் தக்க வைத்துக்கொள்ள யாருக்குமே உரிமை உண்டு.

தவிர, தமிழ் எழுத்தாளர்களுக்கு உள்ள நிர்ப்பந்தங்கள் அலாதியானவை. அவர்கள் முற்போக்காளர்களாக இருந்தே ஆகவேண்டும். சாதி மத மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டவர்களாக; பெண்ணினத்தின் காவலர்களாக; ஒடுக்கப்பட்டவர்களின் வழக்குரைஞர்களாக; சமூகத்தின்மீது வாஞ்சை உள்ளவர்களாக; மேற்கத்திய அறிவியல் வழங்கும் மனோபாவத்தைக் கட்டிக் காப்பவர்களாக; மிகமிகச் சிடுக்கான, பிடிகொடுக்காத வார்த்தைக் கோவைகளில் தமது மனக்குழப்பங்களைப் பதிவு செய்பவர்களாக... நடைமுறை வாழ்வில் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் அதையெல்லாம் யாரும் ஊன்றிக் கவனிக்க மாட்டார்கள். எழுத்தைப் பொறுத்தவரை ‘ஒழுங்காக’ நடந்துகொள்ள வேண்டும்.

இடதுசாரிகளாகத் தம்மை அறிவித்துக்கொண்டுவிட்டால் இன்னமும் உத்தமம். ‘உலகின் ஒரே வலதுசாரி எழுத்தாளர்’ என்று மரியா வர்கோஸ் லோஸாவின் புகழ் பாடிய தமிழ் வரி ஒன்று இன்னமும் என் நினைவிலிருக்கிறது. அந்த மாதிரியான சலுகைகளெல்லாம் அந்நியத் தோல் கொடுப்பினை உள்ளவர்களுக்கு மட்டுமே. மெய்யியல் என்ற புலமே, இந்தியச் சூழலில், இந்துத்துவம் மட்டும்தான். மற்றபடி, ‘சாரி எதுவுமில்லாமல் இருந்துவிட்டுப் போகிறேனே’ என்ற கோரிக்கையுடன்

அப்பிராணித் தமிழ் எழுத்தாளன் விண்ணப்பிக்க முடியாது, பாவம்.

ஆனால், மேற்சொன்ன மாதிரியான மாயக் கதைகள் தனிமனத்தின் பதிவுகள் அல்ல. கீழைத் தேசங்களின் பொதுமனத்தில் செதுக்கப்பட்ட புடைப்புச் சிற்பங்கள். கீழைத் தேசப் பொதுமனத்தின் ஆழ்தளத்தில் மரணத்துக்குப் பின்னான வாழ்வு பற்றி நிலவும் அதீதமான குழப்ப நிலையும் பதற்றமும்கூட இதற்குக் காரணமாக இருக்கலாம்.

'மரணத்துக்குப் பின்னான வாழ்வு என ஏதும் இல்லை' என்று மட்டையடியாக அறிவியல் மறுத்துவிடுகிறது. அப்படி ஒரு நிலைப்பாட்டை எடுத்தால்தானே அது அறிவியலாக இருக்க முடியும்? மாறாக, மரணத்துக்குப் பின் வழங்கப்படவிருக்கும் நீதிகளையும் தண்டனைகளையும் காட்டித் தன் வசம் இழுத்துப் பிடித்துக்கொள்ள மதங்கள் முனைகின்றன. இதன்மூலம், அன்றாட வாழ்வில் செயற்கையான ஒருவித அறப் பேணுதலை வலியுறுத்துகின்றன. வெவ்வேறு மதங்கள் வெவ்வேறு நியமங்களையும் நம்பிக்கைகளையும் நியாய அநியாயங்களையும் முன்வைத்தாலும், கொஞ்சமும் ஏற்றத் தாழ்வின்றி அவை அனைத்துமே ஒரேவிதமான அச்சிலிருந்து கிளைப்பவைதாம்.

அறிவியலாகட்டும், ஆன்மவியலாகட்டும், இரண்டுமே வரையறைகள் உள்ள, வெறும் நிலைப்பாடுகள்தாம். பொதுமனத்தை வசீகரிப்பதற்கான தர்க்கமுறைகளைத் தொடர்ந்து வளர்த்துவருபவை. இவ்விரண்டு புலங்களையும் சமமாகக் கணக்கிலெடுத்து, அல்லது சமமாக புறக்கணித்துவிட்டு, தம் போக்கில் நகர்ந்து செல்வதற்குக் கலை வடிவங்களுக்கு மட்டுமே திராணி உண்டு.

மற்றபடி, 'நான் நம்புகிற தர்க்கத்தின்படி நிரூபணமாகக் கூடியவை மட்டுமே வாஸ்தவத்தில் இருக்க முடியும்' என்று உறுதியாக நினைப்பது ஒருவகை வெகுளித்தனமே.

புனைவு என்னும் மாயப் பரப்பில், நடைமுறை உண்மைகளாகத் தெரியவந்தவையும்; பொது ஒப்புதலுக்கு, சராசரிப் புலன் அனுபவ ஒப்பீட்டுக்கு உகந்தவையும் மட்டுமே வந்து செல்ல வேண்டும் என்ற வற்புறுத்தலும் தந்திரமானதுதான். வெற்று அரசியல் நோக்கம் கொண்டதுதான்.

கு ள்ளச் சித்தன் சரித்திரத்தின் தொடர்ச்சியாகவே இந்த நாவலை எழுதத் திட்டமிட்டிருந்தேன். முதல் மூன்று நான்கு அத்தியாயங்களுக்குப் பிறகு நாவல் சுதந்திரமாக வளரத் தொடங்கியது. அதன் போக்கில் நானும்

சென்று, இப்போதுள்ள விதமாக எழுதி முடித்திருக்கிறேன்.

என்னுடைய நாவல்களுக்குப் பின்னுரை எழுதும்போது, நாவலின் முதல் விதை விழுந்தது எப்போது என்று நினைவுகூர முயல்வேன். இந்த நாவல் தொடங்கிய இடம் அழுத்தமாக நினைவிருக்கிறது.

ஆந்திரத்தின் வறண்ட பகுதிகளில் பிரயாணம் சென்று, பயணத்தின் உச்சமாக ஹம்பியின் சிதிலங்களைப் பார்த்துவிட்டுக் காரில் திரும்பிக் கொண்டிருந்தோம். கிட்டத்தட்ட நள்ளிரவு. எஞ்சிய நேரத்துக்கு, புட்டபர்த்தியில் ஏதேனும் விடுதியில் தங்கிவிட்டு மறுநாள் அதிகாலையில் சென்னை நோக்கித் தொடரலாம் என்று திட்டம்.

நண்பர் சண்முகசுந்தரம் கார் ஓட்டுகிறார். முன்னிருக்கையில் நண்பர் வசந்தகுமார். பின்னிருக்கையில் நானும் ஜெயமோகனும். சுமார் பத்து நாட்கள் ஓயாமல் நிகழ்ந்துவந்திருந்த பேச்சின் ஒரு பகுதியாக, ஓரிரு மாதங்கள் முன்பு நான் திருவண்ணாமலை சென்று வந்தது பற்றியும், அங்கு நிகழ்ந்தவை பற்றியும் விவரித்துக்கொண்டு வந்தேன். இந்த நாவலின் இறுதி அத்தியாயத்தில் தாமாக எதிர்சென்று மரணத்தை ஏற்ற ஒரு பெரியவர் பற்றிய செய்திகள் அவை.

அந்தப் பெரியவர் நிஜமாகவே காசியில் சென்று சமாதி அடைந்தார். தாமே குறித்த அதே நாளில், அதே நேரத்தில். நாவலில் வருகிற மாதிரியே, அது நிகழ்ந்த இடம் சிங்கூர் காட்தான்.

இந்த நாவலின் முதலாவது பகுதியான, ஊற்று என்ற அத்தியாயத்தில் திருவண்ணாமலையில் உள்ள ஒரு விடுதி இடம் பெறுகிறது. ஊரும் விடுதியும் நிஜமானவை. அவை மட்டுமல்ல, அங்கு காத்திருந்தவரும் உடன் துணைக்கு இருந்தவரும்கூட நிஜ மனிதர்கள்தாம்...

காத்திருந்தவன் என்னுடைய நண்பன் தண்டபாணி. அவனுடன் அவனுடைய தாயார், மைத்துனன் மற்றும் மிக நெருங்கிய ஒரு தம்பதி என்று நாலு பேர் வந்திருந்தார்கள். நான் என் மனைவி என் நெருங்கிய உறவினர் திரு எஸ்வியெஸ் மணி ஆகியோருடன் சென்றிருந்தேன். காத்திருத்தலின் தொடர்ச்சியாக, இடைமுகம் என்ற இரண்டாவது பகுதியில் வருகிற தகவல்கள் பலவும் நிஜமாகவே நடந்தவைதாம்.

பொதுவாக, என்னுடைய நாவல்களில் உண்மையும் புனைவும் தீர்மானமாகப் புலப்படாத விகிதத்தில் கலந்துதான் இருக்கும். ஒருவேளை, பிறர் எழுதுகிற நாவல்களிலும் இப்படித்தானோ என்னவோ. இந்த நாவலிலும் அதுவேதான் நடந்திருக்கிறது இன்னும் சற்று விசித்திரமான விதத்தில்.

இந்த நாவலில் வருகிற மாய நிகழ்வுகள் நடைமுறை சாத்தியத்துக்கு அப்பாற்பட்டவையாகத் தென்படுகிறவை அனைத்துமே நிஜமாக நிகழ்ந்தவை. வலுவான சாட்சியங்களும், சான்றுகளும் உள்ளவை. தன்னியல்பான, நடைமுறை சாத்தியம் உள்ள நிகழ்வுகள் அனைத்துமே கற்பனையானவை!

என்ன செய்ய, தனிமனித அகவுலகத்துக்கு இப்படி ஒரு பரிமாணமும் இருக்கத்தான் செய்கிறது நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்.

யுவன் சந்திரசேகர்
சென்னை
25.11.2009

இறுதிக் குறிப்புகள்

1. சேரி.

2. சுண்ணாம்பையும் புகையிலையையும் ஒன்றாக்கிக் கசக்கிய லாகிரித் துகள்.

3. ஜாதிப் பெயர். தோட்டி என்று பொருள்.

வெளியேற்றம் Veliyetram
யுவன் சந்திரசேகர் Yuvan Chandrasekar ©

e-ISBN: 978-93-5135-142-9

This digital edition published in 2015 by

Kizhakku Pathippagam

177/103, First Floor, Ambal's Building,

Lloyds Road, Royapettah,

Chennai 600 014, India.

Email: support@nhm.in
Web: www.nhmreader.in

First published in print in December 2014 by Kizhakku Pathippagam

All rights reserved.

Kizhakku Pathippagam is an imprint of New Horizon Media Private Limited, Chennai, India.

This e-book is sold subject to the condition that it shall not, by way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the publisher's prior written consent in any form of binding or cover other than that in which it is published. No part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means, whether electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of both the copyright owner and the above-mentioned publisher of this book. Any unauthorised distribution of this e-book may be considered a direct infringement of

copyright and those responsible may be liable in law accordingly.

All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the publisher of this book.